VRN. 21 ... 1159-11
61236

*Wednesday, 19th March 1958*—~~cont.~~


V Voting of Demands for Grants for the year 1958-59—Demand XVI—Medical, Demand XVII—Public Health and Demand XXXVI—Capital Outlay on Public Health .. .. .. .. 185–242

VI Papers laid on the table of the House .. .. .. .. .. 342


*Monday, 24th March 1958.*


I Questions and Answers .. .. .. .. .. .. 247–266

II Announcement by the Hon. Speaker *re* message from the Legislative Council .. .. .. .. .. .. .. 266

III Government Bill—The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958) .. .. .. .. .. 267

IV Budget for the year 1958-59—Voting of Demands for Grants for the year 1958-59 .. .. .. .. .. .. 267–350

V Papers laid on the table of the House .. .. .. .. 350


*Tuesday, 25th March 1958.*


I Questions and Answers .. .. .. .. .. .. 355–372

II Calling attention to a matter of urgent public importance under rule 40 of the Madras Assembly Rules *re* eviction of salt workers from the Government poramboke lands in Tiruchendur taluk .. .. .. .. .. .. .. .. 372–374

III Announcement by the Hon. Speaker *re* message from the Legislative Council .. .. .. .. .. 374

IV Government Motions—

(1) Election to the Committee of Privileges for the financial year 1958-59 .. .. .. .. .. .. 374–375

(2) Election to the House Committee for the financial year 1958-59 .. .. .. .. .. .. .. 375

(3) Election to the Committee on Estimates for the financial year 1958-59 .. .. .. .. .. .. 375–376

(4) Election to the Committee on Public Accounts for the financial year 1958-59 .. .. .. .. .. 376

V Budget for the year 1958-59—Voting of Demands for Grants for the year 1958-59 .. .. .. .. .. .. 377–432

VI Government Bills—

(1) The Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958) .. .. .. .. 432–457

(2) The Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958) .. .. .. .. 457–464

VII Papers laid on the table of the House .. .. .. .. 465




PAGES

*Wednesday, 26th March 1958.*


I Questions and Answers .. .. .. .. .. .. 407–486

II Calling attention to a matter of urgent public importance under rule 40 of the Madras Assembly Rules *re* difficulties experienced by the ryots in Tirunelveli district .. .. .. 487–488

III Budget for the year 1958-59—Voting on Demands for Grants for the year 1958-59—Demand No. VIII—Irrigation and Demand No. XXXV—Capital Outlay on Irrigation .. .. 488–551

Index .. .. .. .. .. .. .. .. .. 503–589

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, the 17th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: According to rule 22 of the Madras Assembly Rules, the first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. To-day we are meeting at 9-30 a.m. Therefore, one hour at least, that is, till 10-30 a.m., must be devoted to questions and answers. The time allotted for the discussion of the Demand to-day will then be reduced. Therefore, the House must either agree to postpone these questions to some other day or must agree to extend the time allotted for the discussion of the Demand till 2-30 p.m. I leave it to the House to come to a decision.

SRI K. VINAYAKAM: Sir, the question can be disposed of in as little a time as possible.

MR. SPEAKER: I cannot guarantee that. If hon. Members want to put supplementary questions, I cannot prevent them from doing so. These questions can be postponed to some other day, if agreed to.

SRI P. G. KARUTHIRUMAN: They may be postponed to some other day, Sir.

SRI M. JAGANNATHAN: The question-hour need not be cut short, Sir.

MR. SPEAKER: That means the House will be sitting till 2-30 p.m.

SRI M. JAGANNATHAN: We may sit, Sir.

MR. SPEAKER: I shall try to finish the questions early. The House will have to sit for four hours afterwards.

The Hon. the Minister for Local Administration has requested that her questions may be taken up first and I have agreed to it.

### *National Highways*

*347-B Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to repair the National Highways in the City of Madras?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: There are no roads in the City of Madras which are classed as National Highways. Repairs to the roads in the City of Madras are taken up

[17th March 1958

by the Corporation of Madras as and when necessary throughout the year.

SRI A. A. RASHEED : Is it not a fact that the Corporation is unable to repair the roads for want of necessary funds?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Prior to 1954–55, grants to the extent of Rs. 44,580 were being sanctioned annually from State funds to the Corporation of Madras towards the maintenance of certain roads and a number of bridges and culverts. The Government have also sanctioned an ex-gratia grant of Rupees five lakhs per annum with effect from 1954–55 for maintenance of roads. Again, a full grant in 1956–57 of Rs. 1,32,300 was sanctioned to the Corporation for superior surfacing G.S.T. Road (Mount Road). Still, more funds were asked for. But as funds are not available at the moment, the amount has not been sanctioned.

SRI K. VINAYAKAM : Does not the road leading from Fort St. George to Tiruchirappalli passing through Saidapett fall under the National Highways? If not, who undertakes the repairs to the Marmolong Bridge at Saidapet which is in a very dilapidated condition and which cannot now stand any heavy traffic that it has been accustomed to?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A separate question may be put.

*Village panchayat*

* 347-C Q.—SRI G. VAGHEESAM PILLAI (on behalf of Sri A. Vedarathnam) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have received recently any representation from the villagers of Ovarur, Tiruthuraipundi taluk, for constituting a panchayat for their village; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Yes, Sir.

(b) The Regional Inspector of Municipal Councils and Local Boards, Tanjore, will take action for the constitution of a separate panchayat for Ovarur village as early as possible.

SRI T. KARIA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, இதை பிரிக்கக்கூடாது என்று ஏதாவது மகஜர்கள் வந்திருக்கிறதா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி என்னிடம் தகவல் இல்லை.

*Vellore Municipality*

* 347-E Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there has been any misappropriation of funds in the Vellore Municipality;



17th March 1958]

(b) if so, the amount involved; and

(c) the action taken to recover the amount?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Yes, Sir.

(b) Rupees fifteen thousand nine hundred and fifty-seven, annas six and pies eleven.

(c) A sum of rupees five thousand nine hundred and sixty-nine, annas ten and pies two, remains yet to be recovered and action is being taken to recover this balance.

SRI A. A. RASHEED : May I know who is responsible for this misappropriation?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The persons held responsible for this are Sri P. T. Seshadri, Sri D. Ramakrishna Ayyar and Sri G. Lakshmanan.

*Kaduvetti-Sathamangalam Road*

* 347-F. Q.—SRI M. JAGANNATHAN (on behalf of Sri P. Veerappa Kounder) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the reasons for the delay in completing the village road between the villages of Kaduvetti and Sathamangalam in the Tindivanam taluk, South Arcot district?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Government have called for proposals from the South Arcot District Board for inclusion of the work of forming a road from Sathamangalam to Kaduvetti in the Village Road Programme of the District. The proposals are awaited. The work can be taken up for execution only after its inclusion in the Village Road Programme.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, காடுவெட்டி, சாத்தமங்கலம் கிராமங்களில் கிராமசாலை ஏற்படுத்துவதற்கு அந்த கிராமத்தி லுள்ள மக்கள், 500 ரூபாய் பங்குத்தொகையாக கொடுத்திருக்கிறார்கள். அந்த தொகை கொடுத்து ஐந்து வருடங்கள் ஆகியும் இதுவரை ரோடு அமைக்கப்படவில்லை. ஆகவே இனிமேல் உடனடியாக ரோடு அமைப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதைப்பற்றி டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரசிடன்டிடமிருந்து பிரபோஸல் வராததினால் தான் காலதாமதம் ஏற்படுகிறது, அதை கவனித்து வேண்டிய நடவடிக்கை சீக்கிரத்தில் எடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : ஜில்லா போர்டு தலைவரிடமிருந்து தகுந்த பதில் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது ஸ்பெஷல் ஆபீஸர் இருக்கிறார்கள், அதனால் துரிதமாக பதில் அனுப்புவதற்கு இலாகைக்கே ரிமைண்டர் அனுப்பப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஸ்பெஷல் ஆபீஸர் இருப்பதினால்தான் சீக்கிரத்தில் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறினேன்.

SRI M. JAGANNATHAN : காடுவெட்டி, சாத்தமங்கலம் கிராமத்திலிருந்து மக்கள் கொடுத்த நாலில் ஒரு பங்கு தொகையாகிய 500 ரூபாய் கொடுத்ததை, தென் ஆற்காடு ஜில்லா கலெக்டர் அவர்கள், இங்க

[17th March 1958

தொகையை வாபஸ் பெறுங்கள், ரோடு இப்போது போட முடியாது என்று சொல்லியிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி தகவல் இல்லே.

*Pattukkottai-Vadagudi Road*

* 347-H *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the work of laying the new road between Pattukkotttai and Vadagudi *via* Vandakkottai was taken up for execution; and

(*b*) the present stage of the work?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) The work was taken up for execution in the current year.

(*b*) The work is in good progress.

SRI A. R. MARIMUTHU : இந்த வேலை ஆரம்பத்திற்கு எடுத்துக்கொண்டு ஐந்து வருடங்கள் ஆகிறது. 1952-ல் ஆரம்பித்த வேலை இதுவரை சிறு சிறு பகுதிகளாக நடந்துவருவதினுல் இதுவரை பூர்த்தியாகாமல் இருந்து வருகிறது. இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதைப்பற்றி என்னிடம் இருக்கின்ற தகவலின்படி 1957-ம் ஆகஸ்ட் 31-ம் தேதி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. 1957-1958-ல் இந்த வேலை பூர்த்தியாகிவிடும் என்று தெரிகிறது.

SRI R. SRINIVASA IYER : ஏற்கெனவே இந்த ரோடு பூர்த்தி செய்யப் படாததற்கு காரணம் நடுவில் ஒரு வயல் நிலம் கொடுக்காமல் இருந்தது தான். இப்போது அது தீர்த்துவைக்கப்பட்டுவிட்டது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதை சரியாகக் கவனித்து சீக்கிரமாகவே புதுபாதை போடப்படும்.

SRI A. R. MARIMUTHU: தலைவர் அவர்களே, ஹைவேஸ் எஞ்சினியர் அவர்களிடத்தில் கேட்டதற்கு காண்ட்ராக்டர் சரியானபடி வேலை செய்யாததினுல்தான் காலதாமதத்திற்கு காரணம் என்று கூறுகிறுர்கள். ஆகவே அதன் பேரில் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லே. அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

*Bridge across Agniyar*

9-40 a.m. * 347-I *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazars recently that a bridge should be constructed across Agniyar in Sethu Road in the Pattukkottai taluk, Tanjore district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) The work of constructing a causeway across the Agniyar at M. 12/3 of Muthupet-Mimisal Road is included in the Second Five-Year Plan.



17th March 1958]

SRI R. SRINIVASA IYER : There is another such road between Pattukkottai and Sethuvachatram. I think there was a proposal to construct a bridge across the Agniyar. Is there any such proposal?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A separate question may be put.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சேது ரோடு என்பதை எல்லா ரோடுகளேயும் சேது ரோடு என்று சொல்கிறுர்கள். இப்போது பாலம் கட்டப்படவேண்டுமென்று கருதுவது எந்த சேது ரோடில் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நீங்கள் எதைப் பற்றி இப்போது விசாரித்தீர்களோ, அந்த ரோடைப்பற்றித் தான்.

*Village Officers*

* 347-A *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken by the Director of Harijan Welfare, Madras, on resolution No. 4 regarding the construction of houses free of cost for the Harijan village officers passed at the Public Meeting of the Coimbatore District Village Officers, on 14th November 1955?

THE HON. SRI P. KAKKAN : Resolution No. 4 passed at a Public Meeting of the Coimbatore District Village Officers on 14th November 1955 has not been received by the Director of Harijan Welfare.

SRI P. G. MANICKAM : ஹரிஜன கிராம உத்தியோகஸ்தர்கள் என்று அழைக்கப்படும் வெட்டியார்கள், தலேயாரிகள் ஆகியவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரவேண்டுமென்று மந்திரி சபை உப கமிட்டியார் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. 1947-ம் வருஷத்திலே ஹரிஜன நிதியிலிருந்து தனி பண்ட் ஒதுக்காததால் காரியம் நடைபெறவில்லே. நடப்பு வருஷத்தில் ஹரிஜனங்களுக்கு வீடு கட்ட 15 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் நிதியிலிருந்து தனியாக ஒதுக்கித் திட்டம் வகுக்க கவர்ன்மெண்டார் பரிசீலிக்க முன் வருவார்களா ?

MR. SPEAKER : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. மூலக் கேள்வி கோயம்புத்தூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றியது. அது வரவில்லே என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்களுக்கு இந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று எனக்கு செக்ரடரி அவர்களிடமிருந்து பதில் கிடைத்திருக்கிறது இன்று போடப்பட்ட கேள்வியிலிருந்து. தீர்மானம் அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, டைரக்டர் அவர்களுக்கு அனுப்பிய தீர்மானம் வரவில்லை என்றுதான் என்னிடம் உள்ள தகவல் இருக்கிறது. அந்த நகலே இப்போது அனுப்பினுலும் அது கவனிக்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்போது ஹரிஜனங்களுக்கோ அல்லது ஹரிஜன கிராம அதிகாரிகளுக்கோ கட்டப்படும் வீடுகள் . . .

MR. SPEAKER : இந்த ஸப்ளிமெண்டரி கேள்விக்கும் முதல் கேள்விக்கும் சம்பந்தமில்லே. மனு வந்திருக்கிறதா என்பது கேள்வி; வீடு கட்டிக் கொடுப்பதைப்பற்றிக் கேட்க முடியாது.

[17th March 1958

SRI S. NAGARAJA MONIGAR : ஹரிஜனச் சேரியில் கட்டப்படுகிறதா அல்லது வேறு இடத்தில் கட்டப்படுகிறதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தனியாகக் கேள்வி கேட்கலாம்.

SRI M. JAGANNATHAN : இந்த கிராம உத்தியோகஸ்தர்கள் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சர்க்காருக்கு வரவில்லை என்று கூறினார்கள். அப்படி வராவிட்டாலும், கனம் அமைச்சர் அவர்கள் முன் வந்து அந்த நகலை வரவழைத்து ஹரிஜன உத்தியோகஸ்தர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் பிரச்னையை கவனிப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். நகலை அனுப்பி வைத்தால் பரிசீலிக்கப்படும்.

*Harijan Welfare department*

* 347-D. Q.—SRI M. JAGANNATHAN (on behalf of Sri M. P. Sarathi): Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the number of Non-Gazetted Officers receiving a salary of more than Rs. 150 in the Harijan Welfare Department; and

(b) the number of Harijans among them?

THE HON. SRI P. KAKKAN : (a) 21.

(b) 2.

SRI K. VINAYAKAM : Is it binding or incumbent on the Government that they should appoint only Harijans to the Harijan Welfare Department or is it open to the Government to appoint anybody who deserves the appointment, other beings being equal, even to the Harijan Welfare Department?

THE HON. SRI P. KAKKAN : எந்த ஆட்களையும் நியமிக்கலாம். ஹரிஜனங்களை நியமிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

*Mettur Irrigation Scheme*

* 347-G Q.—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the extent of lands that can be irrigated in the Madras State under the agreement concluded between the Mysore and Madras Governments regarding the Mettur Irrigation Scheme; and

(b) the extent of lands irrigated at present?

THE HON. SRI P. KAKKAN : (a) 301,000 acres.

(b) 243,000 acres.

SRI A. R. MARIMUTHU : இப்போது காவேரி-மேட்டூர் பிராஜெக்ட் ஏரியாவிலே ஆயக்கட்டைச் சேர்ந்த நிலங்களுக்கு சரியான பாசன வசதி செய்துகொடுக்காத காரணத்தினால் சில இடங்கள் தரிசாகக் கிடப்பதால், ஆயக்கட்டிலிருந்து விலக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. சர்க்கார் ஒப்பந்தப்படி லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு தண்ணீர் கொடுக்கமுடியும். ஆகவே இதை ஆயக்கட்டிலிருந்து விலக்காமல் பாசன வசதிகள் நல்ல முறையில் செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?



17th March 1958]

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே சென்னை-மைசூர் ஒப்பந்தப்படி ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் எத்தனை ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற முழு விவரங்களை அறிய வேண்டுமென்று ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அதன் பிறகு முடிவு செய்யப்படும்.

SRI A. A. RASHEED : Has there been any representation to the Mysore Government recently regarding the letting-in of the water of the Palar river?

MR. SPEAKER : What has that got to do with the main question?

SRI R. SRINIVASA IYER : Mettur-Cauvery Agreement was entered into when Mysore was a separate State under the British Crown when Sir Marjoribanks was the Governor of Madras. Now that is a part of the Indian Union. Will the Government of Madras take steps to review the necessity for increasing the area to 301,000 acres now that all rivers belong to the Indian Union and there is a Central Water Power Commission?

THE HON. SRI P. KAKKAN : I think the hon. Member may put a separate question.

SRI K. VINAYAKAM : When does the agreement or contract which was entered into between the Mysore Government and the Madras Government expire? What is the date on which it becomes obsolete?

THE HON. SRI P. KAKKAN : A separate question may be put.

SRI A. R. MARIMUTHU : சர்க்கார் இப்போது கேட்டிருக்கும் ரிப்போர்ட் வருகிறவரையில் ஆயக்கட்டிலிருந்து விலக்குவதை நிறுத்தி வைப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN : அதற்கும் தனிக் கேள்விதான் வேண்டும்.

*Drainage Irrigation*

* 347-J Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the question of draining the waste water around Puthantharuvai in the Tirunelveli district into a tank and utilising it for irrigation purposes has been considered at any time; and

(b) if so, with what result?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The matter is under consideration and a report on the feasibility of the scheme is awaited from the Chief Engineer.

SRI M. K. SOMASUNDARAM : அந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கமுடியுமா?

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலில் என்ஜினீயரிடமிருந்து ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். ரிப்போர்ட் வந்த பிறகுதான் கவனிக்கமுடியும்.

MR. SPEAKER : கேள்விகள் முடிவுற்றன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT BY THE HON. THE SPEAKER *RE* RECOMMENDATION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER: I have to inform the House that the Business Advisory Committee has recommended the order in which the Demands for Grants for 1958–59 are to be taken up for voting. The recommendations of the Business Advisory Committee have already been circulated to the Members. The Hon. the Leader of the House will have to move a motion that this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up and the time allotted for each.

## III.—MOTION *RE* THE RECOMMENDATIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

THE HON. SRI C. SUBRAMANIAM: I move—

'That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up.'

MR. SPEAKER. The question is—

'That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up.'

The motion was put and carried.

MR. SPEAKER: Now, I have to make one statement. The time allotted for discussion is limited. Therefore, as normally done, I cannot allow all the Leaders of the Opposition Parties to have their right to speak for 20 minutes and 15 minutes. Therefore, I should make a request that the Leaders of all the Opposition Parties may meet together and then tell me who among them will concentrate on each particular Demand. Then I can give that particular gentleman more time than normal. Otherwise, within the short time available, it will not be possible to give each individual Leader the time that is normally given to Leaders because requests from Members for an opportunity to speak are too many. Therefore, by agreement among the Parties, they may tell me which of the cut motions they are going to support and which Leader is going to speak on each of them.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, we are prepared to bow to the ruling of the Chair.

MR. SPEAKER: It is only a suggestion. It is not a ruling.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I want to know whether four hours are allotted for the discussion on this Demand.

MR. SPEAKER: The House voted for it now. The order of the Demands and the time for discussion will be as agreed to at the Business Advisory Committee. I am only trying to accommodate more Members and give Members a little more time to speak.



Therefore, I say, 'Let the Party Leaders meet together and then tell me who will move the main cut motion, who will initiate the debate and who will wind up the debate on behalf of the Opposition.' Only on that basis, I can give extra time to the Leaders. Otherwise, it is not possible to give every Leader extra time as is usually done. I understand that Sri Govindaswami will initiate the debate on the current Demand.

It is now ten minutes to ten. Therefore, the debate on this Demand will continue up to ten minutes to two. The Hon. the Leader of the House will require half an hour for replying to the debate. Therefore, we will have to discuss the Demand till 1-20 p.m.

## IV.—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59.—DEMAND No. XXXI—COMMUNITY DEVELOPMENT PROJETCS, NATIONAL EXTENSION SERVICE AND LOCAL DEVELOPMENT WORKS.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாய நலத் திட்டங்கள், தேசிய அபிவிருத்தித் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள், இந்தத் தலைப்பின் கீழ் (மான்ய எண் 31) ரூ. 2,34,57,300-க்கு குறையாத தொகை ஒதுக்கப்படவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன். 9-50 a.m.

சமுதாய நலத் திட்டத்திற்கு ரூ. 55,58,800–ம் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்காக ரூ. 1,28,74,900–ம் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 50 லட்சமும், வேறு பொது இனங்களுக்காக ரூ. 23,600–ம் ஆக மொத்தம் 2 கோடியே 34 லட்சம் ஆகிறது. அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தால் நம்முடைய நாட்டில் பெருத்த கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை எல்லோரும் உணருவார்கள். அதன் காரணமாக தேசிய வாழ்வு பெரிய அளவில் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்தச் சீர்குலைவு முக்கியமாக கிராமங்களை அதிகமாகப் பாதித்தது என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். நகரப் புறங்களில் சில அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்குச் சில சௌகரியங்கள் அந்நிய ஆட்சியிலும்கூட ஏற்பட்டன. ஆனால் கிராமப்புறங்களிலே அநேகமாக அபிவிருத்தித் திட்டங்களே இல்லாமல் அதன் காரணமாக கிராம வாழ்க்கை தேங்கிப் போனது மட்டுமல்லாமல், தேய்ந்து வந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறோம். சுதந்திரம் பெற்ற பிற்பாடு கிராம மக்களுக்கு புதிய வாழ்வு ஏற்படுத்தவேண்டும், அதுதான் நாம் எடுத்துக்கொள்ளக் கூடிய முயற்சிகளிலெல்லாம் முக்கியமானது என்பதை எல்லோரும் உணர்ந்து, அதற்காக சுதந்திரம் பெற்ற காலத்திலே உடனடியாக பல திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்தோம்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், 1946–ம் வருஷத்திலேயே காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டவுடன் "பிர்கா" அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில், கிராம அபிவிருத்திக்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, உடனடியாக பலபகுதிகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. அந்த வேலை தொடர்ந்து நடந்து கொண்டு வந்தது. ஆனால், அதன் மூலம் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லையென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த பிர்க்கா அபிவிருத்தித் திட்டங்கள் அடிப்படையில் தான் பின்னாலே இந்த சமுதாய நலத் திட்டங்களும் அமைக்கப்பட்டன என்பது நமக்கு ஓரளவு பெருமை தரக்கூடியது என்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்த கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு நாம் வழிகாட்டியாக இருந்திருக்கிறோம் என்கின்ற காரணத்தினாலே. இந்தப் பல்வேறு

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT BY THE HON. THE SPEAKER *RE* RECOMMENDATION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER: I have to inform the House that the Business Advisory Committee has recommended the order in which the Demands for Grants for 1958–59 are to be taken up for voting. The recommendations of the Business Advisory Committee have already been circulated to the Members. The Hon. the Leader of the House will have to move a motion that this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up and the time allotted for each.

## III.—MOTION *RE* THE RECOMMENDATIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

THE HON. SRI C. SUBRAMANIAM: I move—

'That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up.'

MR. SPEAKER. The question is—

'That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up.'

The motion was put and carried.

MR. SPEAKER: Now, I have to make one statement. The time allotted for discussion is limited. Therefore, as normally done, I cannot allow all the Leaders of the Opposition Parties to have their right to speak for 20 minutes and 15 minutes. Therefore, I should make a request that the Leaders of all the Opposition Parties may meet together and then tell me who among them will concentrate on each particular Demand. Then I can give that particular gentleman more time than normal. Otherwise, within the short time available, it will not be possible to give each individual Leader the time that is normally given to Leaders because requests from Members for an opportunity to speak are too many. Therefore, by agreement among the Parties, they may tell me which of the cut motions they are going to support and which Leader is going to speak on each of them.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, we are prepared to bow to the ruling of the Chair.

MR. SPEAKER: It is only a suggestion. It is not a ruling.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I want to know whether four hours are allotted for the discussion on this Demand.

MR. SPEAKER: The House voted for it now. The order of the Demands and the time for discussion will be as agreed to at the Business Advisory Committee. I am only trying to accommodate more Members and give Members a little more time to speak.





Therefore, I say, 'Let the Party Leaders meet together and then tell me who will move the main cut motion, who will initiate the debate and who will wind up the debate on behalf of the Opposition.' Only on that basis, I can give extra time to the Leaders. Otherwise, it is not possible to give every Leader extra time as is usually done. I understand that Sri Govindaswami will initiate the debate on the current Demand.

It is now ten minutes to ten. Therefore, the debate on this Demand will continue up to ten minutes to two. The Hon. the Leader of the House will require half an hour for replying to the debate. Therefore, we will have to discuss the Demand till 1-20 p.m.

## IV.—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59. DEMAND No. XXXI—COMMUNITY DEVELOPMENT PROJETCS, NATIONAL EXTENSION SERVICE AND LOCAL DEVELOPMENT WORKS.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, 9-5
சமுதாய நலத் திட்டங்கள், தேசீய அபிவிருத்தித் திட்டங்கள், ஸ்தல a.m.
அபிவிருத்தித் திட்டங்கள், இந்தத் தலைப்பின் கீழ் (மான்ய எண் 31) ரூ. 2,34,57,300-க்கு குறையாத தொகை ஒதுக்கப்படவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

சமுதாய நலத் திட்டத்திற்கு ரூ. 55,58,800–ம் தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களுக்காக ரூ. 1,28,74,900–ம் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 50 லட்சமும், வேறு பொது இனங்களுக்காக ரூ. 23,600–ம் ஆக மொத்தம் 2 கோடியே 34 லட்சம் ஆகிறது. அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தால் நம்முடைய நாட்டில் பெருத்த கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை எல்லோரும் உணருவார்கள். அதன் காரணமாக தேசீய வாழ்வு பெரிய அளவில் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்தச் சீர்குலைவு முக்கியமாக கிராமங்களை அதிகமாகப் பாதித்தது என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். நகரப் புறங்களில் சில அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்குச் சில சௌகரியங்கள் அந்நிய ஆட்சியிலும்கூட ஏற்பட்டன. ஆனால் கிராமப்புறங்களிலே அநேகமாக அபிவிருத்தித் திட்டங்களே இல்லாமல் அதன் காரணமாக கிராம வாழ்க்கை தேங்கிப் போனது மட்டுமல்லாமல், தேய்ந்து வந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறோம். சுதந்திரம் பெற்ற பிற்பாடு கிராம மக்களுக்கு புதிய வாழ்வு ஏற்படுத்தவேண்டும், அதுதான் நாம் எடுத்துக்கொள்ளக் கூடிய முயற்சிகளிலெல்லாம் முக்கியமானது என்பதை எல்லோரும் உணர்ந்து, அதற்காக சுதந்திரம் பெற்ற காலத்திலே உடனடியாக பல திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்தோம்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், 1946–ம் வருஷத்திலேயே காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டவுடன் "பிர்கா" அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில், கிராம அபிவிருத்திக்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, உடனடியாக பலபகுதிகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. அந்த வேலை தொடர்ந்து நடந்து கொண்டு வந்தது. ஆனால், அதன் மூலம் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லையென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த பிர்க்கா அபிவிருத்தித் திட்டங்கள் அடிப்படையில் தான் பின்னாலே இந்த சமுதாய நலத் திட்டங்களும் அமைக்கப்பட்டன என்பது நமக்கு ஓரளவு பெருமை தரக்கூடியது என்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்த கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு நாம் வழிகாட்டியாக இருந்திருக்கிறோம் என்கின்ற காரணத்தினாலே. இந்தப் பல்வேறு

அபிவிருத்தித் திட்டங்களில் நமக்கு ஏற்பட்ட அனுபவம் என்னவென்றால், கிராம முன்னேற்றத்திற்காக, ஏதோ ஒரு துறையில் மட்டும் முன்னேற்றம் காண முடியாது. எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணும்போது தான் உண்மையிலேயே வாழ்வில் முன்னேற்றம் அடைய முடியும் என்கிற அடிப்படையான உண்மையைக் கண்டோம். உதாரணமாக துரித காலத்திலே அந்நிய ஆட்சியின் கீழே உணவு உற்பத்தி பெருகவேண்டு மென்பதற்காக "Grow More Food Campaign" என்ற திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவைகள் எல்லாம் வெற்றி பெற வில்லை. அதே மாதிரி, அதற்கு சம்பந்தமில்லாமல், கிராம சுகாதாரத் துறையிலே கொஞ்சம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவைகளும் வெற்றி அடைய வில்லை. அதேமாதிரி கல்வித் துறையிலும் தொழில் அபிவிருத்தித் துறையிலும் பல திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டும், அவைகள் வெற்றியடையவில்லை. ஒன்றுக்கொன்று இணைப்பு இல்லாமல், ஒரே பகுதியில் எடுத்துக்கொள்ளாமல் பல்வேறு பகுதிகளில் தனிப்பட்ட இந்த முயற்சிகளை எடுத்துக்கொண்டதன் காரணமாக, எந்த விதமான வெற்றியும் நம்மால் காணமுடியவில்லை என்ற படிப்பினையை நாம் தெரிந்து கொண் டோம். கிராமங்களிலே புது வாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் ஏதோ ஒரு பகுதியிலே மட்டும், அபிவிருத்தித் திட்டங்கள் என அமைத்து, அவைகளை அமுலுக்குக் கொண்டு வர முயற்சி செய்ததன் காரணமாக, நல்ல பலன் கிடைக்காது என்பதை உணர்ந்து எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணுவதற்காக, இணைக்கப்பட்ட ஒரு திட்டத் தை வகுத்து, அதை நாம் கிராமப் புறங்களிலே நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சி 1952-53-ல் முதன் முதலாக பரீட்சார்த்தமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. "கம்யூனிட்டி டெவலப்மெண்ட் பிளாக்குகள்" என்று சொல்லக் கூடிய சில பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. நம்முடைய ராஜ்யத்தில் அப்பொழுது ஆந்திராவும் சேர்ந்திருந்தது. மலபாரும், தென் கன்னடமும் சேர்ந்திருந்தன. ஆந்திராப் பகுதி போக எஞ்சியுள்ள பகுதியிலே 4 வட்டாரங்கள் அந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதும் தெரிந்திருக்கலாம். இப்பொழுது இருக்கக்கூடிய சென்னை ராஜ்யத்திலே இரண்டு திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஈரோடு பகுதியிலே ஒரு திட்டமும் காந்திக் கிராமத்தை அடுத்த மதுரை ஜில்லாவிலே ஒரு திட்டமும் அந்த இரண்டு திட்டங்கள் தான். இந்த இரண்டு திட்டங்களையும் எடுத்துக்கொண்டு, அதேமாதிரி நாடுமுழுவதும் பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதை நிறைவேற்று வதில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்துக்கொண்டு, அவ்வப்போது ஏற்படக் கூடிய குறைகளை நீக்கிக் கொண்டு, இந்தத் திட்ட அடிப்படையிலே கிராம புனருத்தாரணம் செய்து விடலாம் என்ற முடிவுக்கு வந்ததன் காரண மாக இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டது என்பதும் கனம் அங்கத்தினர்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் 135 வட்டாரங்கள் இந்த அபிவிருத்தி திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே 40 வட்டாரங்கள் "கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ஸ்கீம்கள்" என்று சொல்லக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், அதிக செலவு செய்து அதிலே முன்னேற்றம் காணுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டி ருக்கின்றன. மற்றவைகள் "தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள்" ஆக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் வந்திருக்கிற எல்லாப் பகுதிகளும் சமுதாய நலத் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்படும் என்பது இந்தத் திட்டத்தின் அடிப்படை. இந்த முறையிலே, இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் 1 கோடியே 17 லட்சம் மக்கள் இந்த அபிவிருத்தித் திட்டங்களின் பயனைப் பெற்று வருகிறார்கள். கிராமப்புறங்களிலே வாழக்கூடிய மக்கள் 2 கோடியே 55 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நான் முன்பு சொன்னது போல, எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணுவதற்காக அதற்கேற்ற முறையில் ஒரு



நிர்வாக அமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாக அமைப் புக்கு அத்தியாவசியமாக இருக்கக்கூடியவர்கள் கிராம சேவகர்கள். ஒரு வட்டாரத்திற்கு 10 கிராம சேவகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்தப் பத்து பேர்களில் ஒவ்வொருவரும் 4 அல்லது 5 கிராமங்களில் மேற் பார்வை செய்ய வேண்டும். இந்த கிராம சேவகர்கள், கிராமங்களில் நடைபெறவேண்டிய எல்லா வேலைகளுக்கும் கூடவே இருந்து மக்களுக்கு 10-00 a.m.
உற்சாகத்தை ஊட்டக்கூடியவர்களாகவும், வழிகாட்டக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலாக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ் வொரு பகுதியிலேயும் ஆலோசனை சொல்லுவதற்கு அதிகாரிகள் நியமிக்க பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள். விவசாயத் துறையைக் கவனிக்கும் பொருட்டு. "அக்ரிகல்சர் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்" என்று சொல்லக்கூடிய விவசாய அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். விவசாய அபிவிருத்திகளில் ஆலோசனை சொல்வதற்கும் அவைகளை நிறைவேற்றுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக 'கூட்டுறவு. இதுவும் மிக முக்கியம். இதற் கென்று ஒரு கூட்டுறவு எக்ஸ்டென்ஷன் ஆபிஸர் ஒருவர் இருக்கிறார். கால்நடை வளம் விவசாய முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம். ஆகையால் கால்நடை அபிவிருத்தியில் பயிற்சி பெற்ற அதிகாரியும் ஒரு வட்டாரத்திற்கு ஒருவராக இருக்கிறார். "ஸோஷல் எஜுகேஷன் ஆபிஸர்" என்ற கல்வி அதிகாரிகள் ஒரு வட்டாரத்திற்கு 2 பேர் இருக்கிறார்கள். கிராமங்களில் தொழில் அபிவிருத்தி செய்வதற்காக ஒரு எக்ஸ்டெஷன் ஆபிசர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ரோடு போடவும், கட்டடம் கட்டுவதற்கும் ஒரு என்ஜினியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறு ஒரு வட்டாரத்தில் பல்வேறு துறைகளிலும் நல்ல முறையில் வேலை நடக்க வேண்டும் என்று பல்வேறு துறைகளில் பயிற்சிபெற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்த நிர்வாக அமைப்புக்கு தலைமையாகத்தான், ஒரு பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரியும் வேலை செய்கிறார். பிளாக் டெவலப் மெண்ட் அதிகாரியின் மேற்பார்வையில்தான் எல்லா வேலைகளும் நடை பெறவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவருக்கு மேல் ஜில்லா கலெக்டர். கலெக்டரின் மேற்பார்வையில் இந்த வட்டாரத் திலுள்ள வேலைகள் எல்லாம் நடைபெறுகின்றன. அவர்தான் இந்த வேலைகளுக்கெல்லாம் பொறுப்பு. ஆகையால் அந்தந்த வட்டாரத்திலுள்ள பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸர்களின் கீழ் ஒவ்வொரு பகுதிக்கும் பயிற்சி பெற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களின் கீழ் ஒவ்வொரு கிரா மத்துக்கும் சென்று இந்த வேலைகளை செய்வதற்கு 4 அல்லது 5 கிராம சேவகர்கள் இருக்கின்றனர். இந்த அடிப்படையில்தான் இந்த நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வேலை செய்துவருகின்றது. இதில் பல குறைகளை சொல்வதும் நான் கேட்டிருக்கிறேன். இது வெறும் அதிகாரிகளை நியமிக்கக்கூடிய திட்டமாக இருக்கிறதே தவிர வேலைகள் ஒன்றும் நடை பெறுவதில்லை என்று சொல்லக் 'கேட்டிருக்கிறேன். சில இடங்களில் இவை உண்மையாகவும் இருக்கலாம். ஒரு திட்டத்தில் பல அதிகாரிகளை நியமிக்கலாம். ஆனால் அந்த திட்டம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு, அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் திறமையாக வேலை செய்தால்தான் அது நன்றாக வெற்றி அடைய முடியும். எந்த இடங்களில் ஆர்வமும், நல்ல உணர்ச்சியும் உள்ள அதிகாரிகள் இருக்கிறார்களோ அந்த இடங்களில் நல்ல முறையில் வேலை நடைபெறுகின்றன. இதில் இன்னொரு முக்கிய மான அம்சத்தையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த திட்டங்களில் உள்ள எல்லா வேலைகளையும் இந்த அதிகாரிகள் மட்டும் செய்யக்கூடியவை அல்ல. மக்கள் செய்ய வேண்டிய வேலைகளில் இந்த அதிகாரிகள் உதவி செய்வதற்காகவே நியமிக்கப்படுகிறார்கள். ஆகையால் எந்த இடங்களில் மக்கள் நல்ல முயற்சியில் பொறுப்பு ஏற்று, ஒத்துழைக் கிறார்களோ அந்த இடங்களில் திட்டம் வெற்றி அடைகின்றது. ஆகையால் இந்த இரண்டும் அமையவேண்டும். அதிகாரிகளும் திறமையாகவும்,

மக்களின் ஒத்துழைப்பைப்பெறும் சக்தி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மக்களும் இதிலே நல்ல பங்கு எடுத்துக் கொண்டு ஒத்துழைத்தால்தான் இந்த திட்டம் வெற்றி பெறுகிறது. இப்பேற்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தினால் எல்லா இடங்களிலும் திட்டம் வெற்றிபெறும். இதை ஏற்படுத்துவது மிகவும் அவசியம், என்பதுதான் இந்த திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருவதில் நாம் கண்ட அனுபவம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். தேசீய விஸ்தரிப்பு வட்டாரத்திற்கு பல்வேறு வேலைகளுக்காக 2,80,000 ரூபாயும், கடனாக கொடுப்பதற்கு 1,20,000 ரூபாயும் ஆக மொத்தம் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர சிறு தவணைக் கடனுக்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய நல திட்டத்திற்காக மொத்தம் 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 7½ லட்ச ரூபாய் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்காகவும், 4½ லட்ச ரூபாய் கடனாகக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேசீய நல திட்டமாக 3 வருஷங்களுக்கும் சமுதாய நல திட்டமாக 3 வருஷங்களுக்கும், ஆக மொத்தம் 6 வருஷங்களுக்கும் தொடர்ந்து வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் மொத்தமாக வெற்றி அடைய வேண்டுமானால் எல்லா துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டியது மிகவும் அவசியம். முதன் முதலாக நாம் விவசாயத் துறையை எடுத்துக்கொள்வோம். கிராமங்களில் மக்களுடைய முக்கியமான தொழிலாக இருக்கக்கூடியது விவசாயமே. விவசாயத்துறையில் முன்னேற்றம் அடைந்தால்தான் கிராமங்களில் புது வளம் ஏற்படும். ஆகையால் விவசாய அபிவிருத்திக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பு சொன்னது போல் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விவசாயத்துறையில் பயிற்சி பெற்ற, பட்டம் பெற்ற ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கீழே கிராம சேவகர்கள் இருக்கின்றனர். இந்த கிராம சேவகர்களுக்கு விவசாயத் துறையில் 18 மாதம் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு தான் விவசாய அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

விவசாயத்திற்கு நீர்பாசன வசதிகள் மிகவும் முக்கியம். நீர்பாசன வசதிகள் இருந்தால் தான் உற்பத்தி பெருகும். ஆறுகளில் பெரிய அணைகளைக்கட்டி தண்ணீரை வாய்க்கால் மூலமாக கொண்டுபோவது ஒரு புறம் இருக்க, அப்படிப்பட்ட புது அணைகள் கட்டக் கூடியது ஒரு சில தான் இருக்கின்றன. ஆகையினால் பெரும் பகுதிகளில் சிறிய திட்டங்களை வைத்துக் கொண்டு நீர் பாசன வசதிகளை செய்து கொடுப்பது அவசியம் ஆகிறது. அபிவிருத்தி திட்டங்களின் கீழ் ஆங்காங்கே நீர்பாசன வசதிகள் பெருகுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. குளங்கள் சீர் குலைந்திருக்குமேயானால் அவைகளை திருத்தி நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யபடுகிறது. சில புதிய குளங்களை வெட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது விவசாயிகளுடைய நிலங்களிலே கிணறுகள் வெட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்பொழுது பல கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்கிறது. ஆகையால் அதை உபயோகித்துக் கொண்டு தண்ணீர் இறைப்பதற்கான சாதனைகளை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். மின்சாரம் கிடைப்பதற்கு கொஞ்சம் காலம் ஆகும் என்று இருக்கும் கிராமங்களில், எஞ்சின் வைத்து தண்ணீர் இறைத்துக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளை எல்லாம் திட்டத்தின் நடைமுறையில் கொண்டு வரவேண்டும் என்பதுதான் முதல் அடிப்படை. நல்ல விதைகள் இருந்தால்தான் விவசாயத்தில் முன்னேற்றம் அடைய முடியும். ஆகையால் நல்ல விதைகளை உற்பத்தி செய்து எல்லா விவசாயிகளுக்கும் வினி



யோகிக்க ஏற்பாடு செய்வது திட்டத்தின் ஒரு முக்கியமான வேலை. அந்த அடிப்படையில்தான் விதைப்பண்ணைகள் சர்க்காரே எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு வட்டாரத்திற்கு வேண்டிய நெல்லோ புஞ்சை தானியமோ, அவைகளை கிராமவாசிகளுக்கு வினியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இதிலே நாமும் கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். இப்போது இந்த வருஷத்திலே 100-க்கு மேற்பட்ட விதைப்பண்ணைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் நல்ல முறையில் நடந்தால்தான் திட்டம் வெற்றிபெற முடியும். இவைகள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு நாமும் முக்கியமாக அங்கத்தினர்கள் அக்கறை காட்டவேண்டியது அவசியம். இதில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால், அவைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொன்னால் அவைகளைப் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக வேண்டியது உரம். நல்ல நீர்பாசன வசதி இருக்கக்கூடிய இடங்களில் நெல் பயிரிடுவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பெரும்பாலும் செயற்கை உப்பு உரத்தை உபயோகப்படுத்தி அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கிகொள்ளப்பார்க்கிறோம். இயற்கை உரம் நமக்கு வேண்டிய அளவில் இல்லாமல் இருப்பதால் நாம் செயற்கை உரத்தை உபயோகப்படுத்தக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். ஏனென்றால் இயற்கை உரம் நமக்கு போதிய அளவில் கிடைக்கவில்லை. அத்துடன் செயற்கை உரம்கூட போதிய அளவில் நமக்கு கிடைக்கவில்லை. ஒரு உர தொழிற்சாலையை அமைத்துக் கொண்டால் நமக்கு போதிய அளவு செயற்கை உரம் கிடைப்பதற்கு வசதி செய்து கொள்ளலாம். உப்பு உரங்களை அடிக்கடி நாம் உபயோகப்படுத்திக்கொண்டு வந்தால் அதனால் உற்பத்தி அதிகப்படியாக பெருக்கிக்கொள்ளலாம் என்றாலும், அதனால் நிலத்தின் வளம் சீக்கிரத்தில் குறைந்துபோய் விடுகிறது என்று பல விவசாயிகளும் சொல்லுகிறார்கள், விவசாய நிபுணர்களும் சொல்லுகிறார்கள். அதனால் உப்பு உரத்தை நாம் அதிகமாக உபயோகப்படுத்தவும் கூடாது. உப்பு உரம் அதிகமாக கிடைக்காத இக்காலத்தில் நாம் இயற்கை உரங்களாகிய பசுந்தாள் உரம், மாட்டு உரம், கிராமக் குப்பை கூளங்கள் உரம் போன்றவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுடியதாக இருக்கிறது உப்பு உரம் குறைவாக இருக்கக்கூடிய காலத்தில் இயற்கை உரங்களை எவ்வளவுக்கவ்வளவு உபயோகப்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்திக்கொள்ள நாம் முற்படவேண்டும். அதனால் இயற்கை உரங்களை அதிகமாக உற்பத்தி செய்துகொள்வதற்கு நாம் முற்படவேண்டும். நல்ல முறையில் இயற்கை உரங்களை தயாரிப்பதற்கும் உற்பத்தி செய்து கொள்வதற்கும் பல பயிற்சி பெற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பல இடங்களில் அவ்வாறு நியமிக்கப்பட்டு ஒவ்வொரு இடங்களிலும் எவ்வாறு கழிவு பொருள்களை உரத்திற்கு உபயோகப்படுத்தவேண்டும், அதன் மூலம் எப்படி உரத்தை உற்பத்தி செய்வது என்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கழிவு பொருள்களை எப்படி உரத்திற்கு பயன்படுத்திக்கொள்வது என்று இன்றைக்கு விரிவாக முயற்சி செய்யப்பட்டு வருகிறது. உலகத்திலுள்ள எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் அங்கேபோய் பார்த்தால் விவசாயம் எப்படி முன்னேற்றமடைந்திருக்கிறது என்று பார்த்தால் அங்கேயெல்லாம் கழிவு பொருள்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டிருப்பதுதான் காரணமாக இருக்கும். அங்குள்ள வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு நல்ல முறையில் முன்னேற்றமடைந்துகொண்டு வருவது நன்றாகத் தெரிய வரும். நாம் பல பொருள்களை கழிவு பொருள்கள் என்று அவைகளைத் தள்ளி விடுகிறோம். ஆனால் அவைகளையெல்லாம் அந்த
நாடுகளில் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். மல 10-10 a.m.
ஜலத்தை நாம் கழிவு என்று நினைத்து விடக் கூடாது. குப்பை கூளங்கள்
இவைகளையெல்லாம் நாம் கழிவு என்று தள்ளிவிடக்கூடாது. இவைகள்

எல்லாம் கிராமப்புறங்களில் பல இடங்களில் போடப்படுகின்றன. அப்படிப் போடுவது சுகாதாரத்திற்கு கெடுதல் விளைவிப்பதோடு அவைகளை நாம் தள்ளி விடுவதாகவும் இருக்கிறது. அவைகள் அப்படியே இருந்தால் அவைகளினால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. அவைகளையெல்லாம் நாம் ஒன்று சேர்த்து அவைகளை உரமாக உபயோகித்தால் அவைகளினால் நாம் உணவை உற்பத்தி செய்வதோடுகூட கிராம சுகாதாரத்தையும் நாம் நல்ல முறையில் காப்பாற்றுவதாக இருக்கும். அவைகளை ஒன்றுசேர்ந்து வைத்து அவைகளை உரமாக உபயோகப்படுத்திவந்தால் கிராமபுறங்களும் நல்ல சுகாதார முறையில் அமைவதோடு உரமாகவும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆகவே இன்றைக்கு உப்பு உரம் இருந்தால் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்கிற அடிப்படையில் நினைக்காமல் இயற்கை உரங்களை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஆகவே இயற்கை உரங்களை உற்பத்தி செய்வதற்கு, அதிலும் போதிய அளவில் உற்பத்தி செய்வதற்கு கிராமப்புறங்களிலுள்ள குப்பை கூளங்களை ஒன்று சேர்த்து உரமாகச் செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். கிராமப்புறங்களில் நமக்கு குப்பை கூளங்கள் கிடைப்பதுடன் மாட்டுச் சாணம் முதலியவைகளும் நமக்குக் கிடைக்கின்றன. அவைகளையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் திட்டம் வகுத்து அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். இதன் மூலம் நாம் வெற்றி காண்பது மிகவும் அவசியம். இந்த அடிப்படையில் நாம் வேலை செய்தால் கிராமங்களில் இரண்டு வித பலன்களை நாம் அடைவதற்கு வசதியாக இருக்கிறது. கிராமங்களில் குப்பை கூளங்கள் இல்லாமல் வைத்துக்கொண்டு நல்ல சுகாதாரமுள்ள கிராமமாக அமைத்துக்கொள்வது ஒன்று. மற்றொன்று அந்த கழிவு பொருள்களை ஒன்றுசேர்த்து அவைகளை உரமாக தயாரித்து தானியங்களை உற்பத்தி செய்துகொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்வது. ஆகவே இரண்டு விதமாக வசதிகளை நாம் இந்த கழிவு பொருள்களை சேர்த்து வைத்துக்கொள்வதன் மூலமாக அடைகிறோம். அதற்கு வேண்டிய திட்டங்களை அரசாங்கம் வகுத்திருக்கிறது.

அத்துடன் இன்றைக்கு பல்வேறு விவசாய முறையில் பல்வேறு முன்னேற்ற முறைகளைக் கையாளவேண்டியதாக இருக்கிறது. அதன் மூலம் நாம் நல்ல பயனை அடையவேண்டியதாக இருக்கிறது. அதற்காகத்தான் நாம் ஜப்பானிய முறையைக் கையாண்டு வருகிறோம். இத்துடன் நாம் நின்று விடக்கூடாது. மற்றும் யந்திரங்கள் மூலமாக நல்ல விவசாய முன்னேற்ற மடைவதோடு பல கருவிகளையும் நாம் உபயோகப்படுத்தவேண்டியதாக இருக்கிறது. விவசாயத்திற்கு நமக்கு பல கருவிகள் தேவையாக இருக்கின்றன. டிராக்டர்கள் போன்ற கருவிகளைப்பற்றி நான் சொல்லவில்லை. சாதாரண கருவிகள், சிறிய கருவிகள் எல்லாம் விவசாயத்திற்கு மிகவும் அவசியமாக இருக்கிறது. ஜப்பானியமுறையைக் கையாள்வதோடு பல விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார்கள் பல இடங்களிலிருந்து வருகின்றன. அதுவும் சில அவசியமான கருவிகள் கிடைக்கவில்லை என்ற புகார்கள் அநேகம் இடங்களிலிருந்து வருகின்றன. அந்தக் கருவிகளையெல்லாம் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய நல்ல கருவிகளையும், சிறிய கருவிகளையும் உற்பத்தி செய்து கொடுக்கும்படி பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கூடிய சீக்கிரத்தில் அவைகள் நடைமுறைக்கு வர இருக்கின்றன. விவசாயிகளுடைய தேவைகள் என்னென்ன என்பதையும் அனுபவ ரீதியில் தெரிந்துகொண்டு அவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனுபவத்தின் மூலம் விவசாயிகளுடைய தேவைகள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால் அதற்காக நிதி வசதி அவசியம்.

கருவிகளுக்கு வசதி செய்து கொடுத்தபிறகு அவைகளை வாங்குவதற்கும் இன்னும் மற்ற காரியங்களைச் செய்வதற்கும் விவசாயிகளுக்கு நிதி தேவையாக இருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு கடன் உதவி



செய்யவேண்டியதாக இருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து அவர்கள் கடன் பெற வேண்டுமானால் வட்டிக்கு வாங்க வேண்டியதாக இருக்கிறது. சில இடங்களில் அப்படி கடனாக வாங்கிய பணத்திற்குக் கொடுக்கக்கூடிய வட்டியை கவனித்தால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். உயர்ந்த வட்டிக்கு விவசாயிகள் கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுத்து கொண்டு வருகிறார்கள். அப்படி வட்டி கொடுப்பதாக இருப்பதால் அவர்கள் விவசாயத்தை நல்ல முறையில் நடத்தக்கூடிய நிலைமையில் இல்லை. சில இடங்களில் பார்த்தால் வட்டி கொடுத்தே பல விவசாயக் குடும்பங்கள் அழிந்து போயிருப்பது தெரியவருகிறது. இதைப் பொறுத்த அளவில் கனம் அங்கத்தினர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கும் என்றே நினைக்கிறேன். விவசாயிகள் எவ்வளவுதான் பாடுபட்டாலும் அவர்கள் சம்பாதிக்கும் பணம் எல்லாம் கடனுக்குக் கொடுத்து வருவதால், அவர்களுடைய பலன் முழுவதும் இன்னொருவர் எடுத்துக்கொண்டு போவதால் தொடர்ந்து அவர்கள் நல்ல முயற்சி செய்வதற்கு ஆர்வம் இல்லாமல் போய் விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை நம்முடைய குடியானவர்களிடத்திலிருந்து நீக்குவதற்குத்தான் கூட்டுறவு சங்கங்கள் அவசியம் என்று பல கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு கடன் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்படி எல்லா கிராமங்களுக்கும் கூட்டுறவு பாங்குகள் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதோடுமட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு வசதிகளையும் விவசாயிகளுக்குச் செய்ய முடியும் என்பதையும் நாம் பார்க்கிறோம். உரம் வாங்கிக் கொடுப்பது, நல்ல விதைகளை வாங்கிக் கொடுப்பது நல்ல வித்துக்களை வழங்குவது முதலியவைகளைச் செய்வதற்கு சங்கங்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டாரங்களிலும் அப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் இயங்கவேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டையும் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திற்கோ அல்லது இரண்டு மூன்று கிராமங்களை ஒன்றாகச் சேர்த்தோ எல்லா பகுதிகளுக்கும் வசதி அளிக்கும் அளவில் அந்த இயக்கத்தை நல்ல அளவில் விரிவாக பரப்ப வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் உணர்ந்து அதற்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கூட்டுறவு இயக்கத்தில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேர்ச்சி பெறுகிற காலத்தில் கிராம சேவக்குகளும் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு அவர்களும் தேர்ச்சி அடைந்து வருகிறார்கள். இதன் மூலமாக அவர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே விவசாயம் வளரவேண்டும் என்று சொல்லும்போது அதனுடன் கூட்டுறவு இயக்கமும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து நல்ல முறையில் நடைபெறும்போது அவைகளில் ஆங்காங்குள்ள கிராமவாசிகள்தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் பயனடையவேண்டும் என்று நினைத்தால் அங்குள்ள கிராம மக்கள் அதில் அங்கத்தினர்களாக சேரவேண்டும். அதற்கு அங்குள்ள அதிகாரிகள் ஓரளவு உதவி செய்கிறார்கள். கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து நல்ல முறையில் நடக்க வேண்டுமானால் கூட்டுறவு இயக்கத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்களாகவும், அதில் ஆர்வம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி தெரிந்து கொண்டவர்களாக இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று சொல்லும் போது கல்வி அறிவு இல்லாத மக்கள் நடத்துவதற்கும் கல்வி அறிவு படைத்தவர்கள் நடத்துவதற்கும் வித்யாசம் இருக்கிறது. அதனால் நல்ல முறையில் நடத்துவதற்கு அவர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுப்பதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். எந்த அளவிற்கு பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நாம் பார்க்க வேண்டியது மக்கள் எல்லோரும் நல்ல முறையில் விவசாயத்தில் ஈடுபட்டு அவர்கள் வாழ வேண்டும் என்று

[Sri C. Subramaniam] [17th March 1958

சொல்லும் காலத்தில் அவர்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான், நல்ல ஆரோக்கியமான உடம்பு படைத்தவர்களாக இருந்தால்தான், அவர்கள் நன்ருக உழைக்க முடியும். இன்றைக்கு விவசாயம் நன்ருக நடைபெற வேண்டும் என்று சொல்லும்போது பெருவாரியாக நோய்வாய்பட்டு பலம் இழந்தவர்களாக இருப்பார்களேயாளுல் எவ்வளவுதான் நாம் உதவி செய்தாலும் அவர்கள் நல்ல முறையில் உழைக்க முன் வரமாட்டார்கள். ஆகவே விவசாயத்திலோ அல்லது மற்ற தொழிலிலோ ஈடுபட்டிருக்கக் கூடிய மக்கள் தேக ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. ஏன் இதை நான் சொல்லுகிறேன் என்ருல் ஒன்றுக்கு ஒன்று பிணைப்பு உள்ளதாக இருக்கிறது. ஒவ்வொன்றும் பிணைந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் செய்ய வேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றும் தொடர்பு உள்ளன
0-20 a.m. வாக இருக்கிறது. ஆகையினுல், தனிப்பட்ட முறையில் இதை சாதிக்க முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். இதை தனிப்பட்ட முறையில் சாதிக்க முடியாது என்பதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். விவசாயம் வளர வேண்டும் என்று சொல்லும்போது கூட்டுறவு வளர வேண்டியதாக இருக்கிறது, நோய் இல்லாமல் மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதற்காகத்தான் பல இடங்களில் பல டாக்டர்களை அமைத்திருக்கிறோம். மக்களுக்கு நோய் வந்த பிறகு அதை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடுமட்டு மல்லாமல் அது வராமலேயே தடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மக்களுக்கு நோய் வராமல் இருப்பதற்கு கிராமங்களை சுகாதார நிலைமையில் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. ஆகவே நோய்கள் வருவதற்கு முன்னதாகவே அதுவராமல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பொருட்டு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. குடிதண்ணீர் வசதி செய்துகொள்வதற்கும், கிராமப்புறங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும், மற்ற இடங்களையெல்லாம் நன்ருக வைத்துக்கொள்வதற்கும் நோய் வராமல் தடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்றும் வீடுகளை நல்ல முறையில் வைத்துக் கொள்வதற்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டுவருகிறது. ஏனென்ருல், வீடுகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. வீடுகளையெல்லாம் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்படி சுத்தமாக வைத்துக்கொள்ளுவதின் மூலம் கழிவுப் பொருள்களை உரமாக உபயோகப்படுத்தும் திட்டமும் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினுல் சுகாதார வசதி பெறுவதற்கும் ஒவ்வொரு இடத்திலும் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. எவ்வளவு சுகாதார வசதி செய்து கொடுத்தாலும் நம்மையும் அறியாமல் சில சமயங்களில் நம்மையும் மீறி நோய் வந்துவிடுகிறது. நோய் வருமேயாளுல் அதற்கு சிகிச்சை அளிக்கவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் ஒவ்வொரு வட்டாரத்திலும் "பிரைமரி ஹெல்த் சென்டர்" ஒன்று ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. சுகாதார வசதிகளை ஏற்படுத்தியும்கூட, இந்த வசதிகளையும் மீறி மக்கள் நோய்வாய்ப்படுகிறர்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு இம்மாதிரி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. இவைகளுக்கெல்லாம் இந்தத் திட்டத்தில் இடம் அளித்திருக்கிறோம்.

இதற்கு அடுத்தபடியாக, விவசாயம் வளரவேண்டுமென்று சொல்லும் பொழுது கைத்தொழில்கள் வளரவேண்டியது அவசியமாகிறது. அதிகமாக மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள், ஒரு சிலர் தொழில் பகுதிக்கு மாறவேண்டும் என்று எல்லோரும் சொல்லுவதை நாம் கேட்கிறோம். அதளுல் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய தொழில்கள் வளர்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு தனி அதிகாரி



17th March 1958] [Sri C. Subramaniam]

நியமிக்கப்பட்டிருக்கிருர். பல்வேறு கிராமங்களிலுள்ள கைத்தொழில்களை, குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக அவர் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார். ஆங்காங்கு இப்பொழுது மறைந்துகொண்டிருக்கிற கிராமத் கைத்தொழில்களுக்கு புதிய ஆக்கம் கொடுக்கப்பட்டுவருகிறது. கொல்லன் வேலை ஒவ்வொரு கிராமத்திலும் மக்களுடைய வசதிக்காக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இப்பொழுது அந்தத் தொழில் ஓரளவுக்கு மறைந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு புதிய பயிற்சி கொடுத்து, புதிய கருவிகள் கொடுத்து, அவர்கள் திறமையாக நல்ல முறையிலே வேலை செய்து அதன் மூலம் அவர்களுக்கு அதிக சம்பாத்தியம் கிடைக்கும்படி செய்வதற்கும், மற்றவர்களுக்கும் அந்தத் தொழிலின் மூலம் பலன் ஏற்படும்படிச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதே மாதிரிதான், தச்சுத் தொழில், தோல் தொழில், பானைகள் செய்வது, இதுபோன்ற பல்வேறு கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. முக்கியமாக தொடர்ந்து விவசாயத் தொழில் செய்ய முடியாதவர்கள் இவைகளை உபதொழில்களாக வைத்துக்கொள்ளுவதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே விவசாயம், தொழில்கள் இவைகளெல்லாம் நல்ல முறையில் வளர்வதற்காக ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

நல்ல முறையிலே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அறிவு பெற்றவர்களாக இருக்கிருர்களோ, எவ்வளவுக்கு எவ்வளவு ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிருர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நன்மையாக இருக்கும். அவ்வளவுக்கு அவ்வளவு திட்டங்கள் நல்லமுறையிலே நிறைவேறும். ஆகையினுல் இன்றைக்கு கிராமத்தில் இருக்கக்கூடிய அறியாமையை போக்குவதற்காக கல்வியை அதிகமாக பரப்ப வேண்டியது அவசியம் என்ற அடிப்படையிலேதான் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்ட சபை அங்கத்தினர்கள் கொண்ட கமிட்டி பரிசீலனை செய்து மற்ற அபிவிருத்தி திட்டங்களுடன் கல்வி அபிவிருத்தித் திட்டத்தையும் எப்படி சேர்ப்பது, இணைப்பது என்பதையும் ஆராய்ந்து பார்த்து, அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தின்கீழ் கல்வி அபிவிருத்தி திட்டமும் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கல்வி வளருவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் பள்ளிக்கூடத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அபிவிருத்தி திட்ட வட்டாரங்களிலே ஒவ்வொரு பகுதியாக எடுத்துக்கொண்டு அந்த வட்டாரத்திலுள்ள கிராமங்களில் இருக்கக்கூடிய எல்லா குழந்தைகளும் குறைந்தது ஐந்தாவது வகுப்பு வரையாவது படிக்கும் நிலைமை 1965-ம் வருஷத்திற்குள்ளாக ஏற்படவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் அபிவிருத்தி வட்டாரங்களில் கல்வி அபிவிருத்தி திட்டம் நிறைவேற்றப்பட்டு வருஷம் ஒன்றுக்கு குறைந்தது 1 லட்சம் குழந்தைகளை அதிகமாக பள்ளியில் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அதற்கான புது வகுப்புகள் ஆரம்பித்திருக்கிறோம். குழந்தைகள் படித்து முன்னுக்கு வந்து அவர்கள் பொறுப்பேற்று நடத்தும்வரையில், இப்பொழுது இருக்கக்கூடிய முதியோர்களுக்கு, படிப்பு இல்லாமல் வளர்ந்துவிட்டவர்களுக்கு படிப்பு கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்திருக்கிறோம். இதற்காக "சோஷியல் எஜுகேஷன்" முதியோர் கல்வித் திட்டம் வகுத்திருக்கிறோம். மற்ற அபிவிருத்தித் திட்டங்களோடுகூட தொடர்ந்து கல்வி அபிவிருத்தியும் ஏற்படுவதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம். இந்த அடிப்படையில் எல்லாப் பகுதிகளும் முன்னேறுவதற்கு ஒரு அமைப்பு ஏற்படுத்தியிருக்கிறோம்.

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களெல்லாம் நல்லமுறையில் நடைபெறுவதற்கு கிராம மக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பது பற்றி நான் முன்பே சொன்னேன். கிராமங்களிலே பல்வேறு சௌகரியங்கள்

செய்துகொள்வதற்கு வெறும் அதிகாரிகள் மட்டும் இருந்தால் செய்துவிட முடியாது. என்பதை நாம் பார்க்கிறோம். அதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துகள் தேவை. ஒவ்வொரு கிராமத்திலும் அங்கு இருக்கக்கூடிய மக்கள் செயல்படும்படி பஞ்சாயத்து ஏற்படுத்தி அந்தப் பஞ்சாயத்தின் மூலம் கிராமத்திற்கு வேண்டிய எல்லா வேலைகளையும் செய்வது என்று ஏற்பட்டுவிட்டால், அந்தக் கிராமத்திற்கு வேண்டிய சௌகரியங்களை செய்துகொள்ளமுடியும். இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டும் என்கின்ற அடிப்படையிலே ஏற்பாடு நடந்துவருகிறது. அபிவிருத்தி திட்டங்களின்கீழ் வந்திருக்கக்கூடிய பகுதிகளிலே அக்டோபர் முதல் தேதிக்குள் எல்லா கிராமங்களிலும், ஒரு கிராமம் கூட பாக்கியில்லாமல், பஞ்சாயத்துகள் ஏற்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் துரிதமாக வேலைகள் நடந்துகொண்டு வருகிறது. அதைச் செய்து முடித்துவிடுவார்கள் என்று நம்புகிறேன். மற்றபடி அடுத்த வருடத்திற்குள்ளாக இன்னும் பல பகுதிகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்ட ஒரு வருஷத்திற்குள்ளாக ஒரு கிராமம் பாக்கியில்லாமல் அந்தப் பகுதியில் பஞ்சாயத்துகள் அமைக்கப்படவேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏதோ வேலையைச் செய்துவிட்டோம், அதற்கு பிற்பாடு கவனிப்பது இல்லை என்ற நிலை ஏற்படாமல், அந்தந்த கிராமத்திலுள்ள வேலைகளை தொடர்ந்து நடத்துவதற்கு இந்த பஞ்சாயத்துகள் உதவியாக இருக்கும். இன்னும் கிராமத்திற்கு வேண்டிய புது திட்டங்களையும் பஞ்சாயத்துகள் நிறைவேற்றி வைக்க முடியும். இந்த அடிப்படையில்தான் இன்றைக்கு கிராம பஞ்சாயத்துகள் நியமிக்கப்பட்டு வருகின்றன. இந்த அமைப்பின்கீழ் கிராமத்தில் ஒரு புதிய வாழ்வு ஏற்படுத்த முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த திட்டத்தை நிறைவேற்றுவதிலே நான் முன்பு குறிப்பிட்ட ஒரு முக்கியமான அனுபவத்தை மீண்டும் சொல்லுகிறேன். எங்கே மக்கள் நல்ல முறையில் ஒத்துழைக்கிறார்களோ, அந்த இடத்திலேதான் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதை நாம் பார்க்கிறோம். அப்படி வெற்றிகரமாக திட்டங்கள் நிறைவேறுவதை நாம் பார்க்கும்பொழுது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை நாம் உணர்கிறோம். எல்லா இடங்களிலும் அந்த ஒத்துழைப்பை எப்படி பெறுவது என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையை பரிசீலனை செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். எப்பொழுது நாம் பொறுப்பு கொடுக்கிறோமோ அப்பொழுதுதான் ஒத்துழைப்பும் அதிகமாக வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து இருப்பதுடன், ஒரு அபிவிருத்தி வட்டாரம் முழுவதற்கும், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தின் பிரதிநிதிகளைக்கொண்ட பஞ்சாயத்து யூனியன் ஏற்படவேண்டும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். இந்த பஞ்சாயத்து யூனியன் மற்ற அன்றாட வேலைகளோடு அபிவிருத்தி வேலைகளையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நடத்தினால், எல்லாப் பகுதிகளிலும் இந்த ஒத்துழைப்பை பெறமுடியும் என்ற அடிப்படையில்தான் இப்பொழுது ஊராட்சி, பஞ்சாயத்து ஆட்சி ஏற்படவேண்டுமென்ற ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்த சட்ட சபையில் இருக்கக்கூடிய எல்லா கட்சியின் அங்கத்தினர்களையும் கொண்ட கமிட்டியில் பரிசீலனையில் அந்தத் திட்டம் இருந்து வருகிறது. பார்லிமெண்டு மெம்பர் பல்வந்ராய் மேதா அவர்களின் தலைமையில் இயங்கிவந்த பார்லிமெண்டு அங்கத்தினர்கள் கொண்ட குழு இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஏற்படுத்துவதன் காரணமாக, யூனியனுக்கு அதிகாரம் கொடுக்கின்ற அளவுக்கு மக்களுடைய ஒத்துழைப்பை பெறமுடியும் என்கிற கருத்தை தெரிந்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அதற்கான நடவடிக்கைகள் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைக்கு நாம் பல திட்டங்களை வகுத்து



அதற்காக நிதியையும் ஒதுக்கிவைத்திருக்கிறோம். இந்தத் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு அதிகாரிகளின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பு மக்களுடைய கையிலே இல்லாத காரணத்தினால் ஒத்துழைப்பு குறைகிறது. ஆகவே, கூடியசீக்கிரம் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி அந்த அதிகாரத்தையும் பொறுப்பையும் மக்களிடம் ஒப்படைத்துவிட்டால், நல்லமுறையில் மக்கள் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறோம். திட்டங்களை தீட்டுவதற்கான பொறுப்பையும் அவைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பையும் மக்கள் கையில் கொடுத்துவிட்டு அவர்களுக்கே நிதியை திரட்டுவதற்கான அதிகாரத்தையும், அதை செலவழிப்பதற்கான அதிகாரத்தையும் கொடுத்துவிட்டால் இன்றைக்கு இருக்கக்கூடிய குறைகள் நீங்கிவிடும். பல திட்டங்கள் காகித அளவிலே இருப்பதை விட்டுவிட்டு செயல் அளவிலே அவைகள் ஏற்படுவதற்கு இந்த பஞ்சாயத்துகள் மிகவும் உதவியாக இருக்கும். மக்கள் பொறுப்பேற்றுக்கொள்வதால் குறைகள் மிகவும் குறைவாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவாகிக்கொண்டு இருக்கிறது. ஒரு திட்டம் போட்டுவிட்டால் அது கடைசிவரையில் மாற்றக்கூடாத ஒரு திட்டம் அல்ல. நாம் செயலிலே ஈடுபடும்பொழுது, நாம் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்பொழுது நமக்கு பல அனுபவங்கள் ஏற்படும். அதன் மூலமாக அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய குறைகளை நீக்கிக்கொள்வதன் மூலம்தான் இந்தத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். ஆகையினால்தான் பல்வேறு கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கமிட்டிகள் இப்பொழுது நிறைவேற்றப்படும் திட்டங்கள் எந்த முறையில் நடைபெறுகின்றன என்பதை ஆராய்ந்து பார்த்து, நடைமுறையில் என்னென்ன குறைகள் இருக்கின்றன, என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்ற அடிப்படையில் அவ்வப்பொழுது மாற்று யோசனைகளைச் சொல்லி, திருத்த வேண்டிய இடங்களிலே திருத்தி, மாற்றவேண்டிய இடங்களிலே மாற்றி இன்றைக்கு திட்டங்கள் பலப்பட்டுக்கொண்டே வருவதைப் பார்க்கிறோம். சமீப காலத்தில் இந்தத் திட்டத்தின் அடிப்படையையே பரிசீலனை செய்து திட்டத்தை இன்னும் நல்லமுறையில் நடத்துவதற்கான யோசனைகளைப் பெறுவதற்காக பல்வந்தராய் கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி சொல்லியுள்ள முக்கியமான யோசனை ஒன்றை நான் இப்போது குறிப்பிட்டேன். திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்களை அமைத்து அவைகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்துவிடவேண்டும் என்பது அந்த யோசனை. அந்தக் கமிட்டியினர் இன்னொரு யோசனையையும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அமலிலுள்ள திட்டப்படி, வட்டாரங்களில் முதலில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் மூன்று வருஷங்கள் நடக்கிறது. அந்த மூன்று வருஷங்களுக்கு முன்பே கூட அவ்வட்டாரங்களில் அபிவிருத்தி வேலைகளைச் செய்யலாம்; அது வேறு விஷயம். மூன்று வருஷ தேசிய விஸ்தரிப்புத் திட்ட வேலைகளுக்குப் பிறகு அந்த வட்டாரங்களில் சமுதாய நலத்திட்ட வேலைகள் நடக்கின்றன. சமுதாய நலத்திட்ட வேலைகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் மூன்று வருஷங்கள் நடக்கின்றன. சமுதாய நலத்திட்ட வேலைகள் செய்யப்படுவதற்கு முன்பு, மூன்று வருஷ தேசீய அபிவிருத்தித் திட்ட வேலைகள் பூர்த்தியான சில பகுதிகளில் "போஸ்ட் இன்டென்ஸிவ் ஸ்கீம்" என்ற அடிப்படையில் சில அபிவிருத்தி வேலைகள் நடக்கின்றன. இந்த முறையை மாற்றியமைப்பதற்கான யோசனை ஒன்றை அந்தக் கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட முறையில் அபிவிருத்தி வேலைகள் நடந்தால் நன்றாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய யோசனை பரிசீலனையில் இருந்துவருகிறது. அந்த யோசனையை சபை தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். எல்லாத் திட்ட வேலைகளும் முடிந்த பிறகு கிராமங்கள் சுயமாக இயங்கக்கூடியவையாக இருக்கவேண்டும், சாதாரண விஷயங்களுக்கு வெளி உதவியை எதிர்பார்க்கக்கூடியவையாக

இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் அவர்கள் அந்த யோசனையைக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இப்போதுள்ள காலவரையறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. அவர்கள், வட்டாரங்களை சமுதாய நலத்திட்ட வேலைகளுக்கு குறுகிய காலத்தில் தயார்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன், தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு இப்போதுள்ள மூன்று வருஷ காலவரையறையை ஒரு வருஷம் ஒன்பது மாதங்களாகக் குறைத்திருக்கிறார்கள் ; அதற்குப் பிறகு நிறைவேற்றப்படும் சமுதாய நலத்திட்டத்திற்கு ஐந்து வருஷக் கால வரையறையை நிர்ணயித்திருக்கிறார்கள் ; அதற்கும் பிறகு சர்க்கார் கொடுக்கும் நிதி வசதியைக் குறைத்து—திட்ட வேலைகளைக் குறைக்காமல்—தொடர்ந்து அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு ஐந்து வருஷ கால வரையறையை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு கிராமத்தில் குறைந்தபட்சம் 10 வருஷங்களாவது திட்ட அபிவிருத்தி வேலைகள் நடந்தால்தான் அதுபுது வாழ்வு பெற்று வெளி உதவியை எதிர்பார்க்காமல் சுயமாக இயங்கக்கூடிய பலத்தைப் பெறும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது திட்டங்களுக்கு நிர்ணயித்துள்ள காலவரையறையின்படி அவை நிறைவேற்றப்பட்டவுடன் போதிய பலன் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு கிராமமும் திட்ட வேலைகளின் விளைவாக முன்னேற்றமடைந்து கடைசியில் சாதாரண விஷயங்களுக்காவது வெளி உதவியை நம்பாமல் இயங்கக்கூடிய அளவிற்கு பலம் பெற்றால் தான் அது போதிய அளவு முன்னேறியதாகச் சொல்ல முடியும். நோயாளியாக இருக்கும் ஒருவன், அறவே மருந்தில்லாமல் இருக்கக்கூடிய நிலையை அடைந்தால்தான், அவன் பூரணமாக குணமடைந்து புது வாழ்வு பெற்றுவிட்டதாகச் சொல்லமுடியும். அதேபோல, வெளி உதவியை நம்பியிராமல்—பெரிய காரியங்களுக்கு வெளியிலிருந்து நிதி உதவியை எதிர்பார்த்தால் பரவாயில்லை, சாதாரண காரியங்களுக்காவது வெளி உதவியை நம்பியிராமல்—இயங்கக்கூடிய அளவிற்கு கிராமங்கள் அபிவிருத்தியடைந்தால்தான் அவை புது வாழ்வு பெற்று பூரண அபிவிருத்தியடைந்துவிட்டதாகச் சொல்லமுடியும். கிராமங்கள் அந்த நிலையை அடையவேண்டுமென்றால், இப்போதுள்ள திட்டம் போதிய அளவு பலனளிக்காது என்று கூறி, நான் முன்பு குறிப்பிட்ட மாற் யோசனையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு இப்போதுள்ள மூன்று வருஷக் கால வரையறையை ஒரு வருஷம் ஒன்பது மாதங்களாகக் குறைக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு நிறைவேற்றப்படும் சமுதாய நலத் திட்டத்திற்கு ஐந்து வருஷக் காலவரையறையை நிர்ணயிக்கவேண்டுமென்றும், அதற்கும் பிறகு தொடர்ந்து அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு சர்க்கார் கொடுக்கும் நிதி உதவியைக் குறைத்து காலவரையறையை ஐந்து வருஷங்களாக நிர்ணயிக்கவேண்டுமென்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனையை நம் சர்க்காரும் பரிசீலித்து வருகிறது, மத்திய சர்க்காரும் பரிசீலித்து வருகிறது. இது சம்பந்தமாக, கடைசியில் தேசிய அபிவிருத்திக் குழுவில் முடிவு எடுக்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது, அந்த யோசனையை நாம் ஏற்றுக்கொண்டால், நாம் முன்பு திட்டமிட்டுள்ளபடி வேலைசெய்ய முடியாது. அந்த யோசனையின்படி, நாம் இப்போது சமுதாய நலத் திட்ட வேலைகளுக்காக அதிகாரிகளை நியமிக்கும்போது எந்த எந்த அதிகாரிகளையும் எத்தனை எத்தனை அதிகாரிகளையும் நியமிக்கிறோமோ, அதே அதிகாரிகளையும் அத்தனை அதிகாரிகளையும் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும்போதே நியமிக்க வேண்டும். அவ்வாறு செய்யவேண்டுமானால், விவசாய சாஸ்திரத்தில் பட்டம் பெற்றவர்களும், கால்நடை வைத்தியத்தில் பட்டம் பெற்றவர்களும், எஞ்ஜினீரிங் பட்டதாரிகளும் தேவைப்படுகின்றனர். அவர்கள் இப்போது பற்றாக்குறையாக இருக்கிறார்கள். நிதி வசதிதான் பற்றாக்குறையாக இருக்கிறதென்று பலர் நினைக்கிறார்கள். கொஞ்சம் கஷ்டப்பட்டாவது நிதி வசதியைப் பெறலாம்.





ஆனால், தொழிற்கல்விகளில் பட்டம் பெற்ற அதிகாரிகளின் பற்றாக் குறையை சமாளிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதுதான் இப்போது பெரிய பிரச்னையாக இருக்கிறது. இப்போது எஞ்ஜினீரிங் கல்லூரிகளிலுள்ள மாணவர்களின் ஸ்தானங்களை 600 லிருந்து 1,100 ஆக உயர்த்தியிருக் கிறோம். அதேமாதிரி இந்த வருஷம் மருத்துவக் கல்லூரிகளிலும், கால்நடை வைத்தியக் கல்லூரிகளிலும், விவசாயக் கல்லூரிகளிலும் மாணவர் ஸ்தானங்களை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆனால், இந்த வருஷம் மாணவர் ஸ்தானங்களை அதிகப்படுத்தினால் விவசாயக் கல்லூரியிலிருந்து மூன்று வருஷங்கள் கழித்தும், மருத்துவக் கல்லூரியிலிருந்து 5—5½ வருஷங்கள் கழித்தும், எஞ்ஜினீரிங் கல்லூரியிலிருந்து 5 வருஷங்கள் கழித்தும்தான் பட்டம் பெற்றவர்கள் வெளிவருவார்கள். ஆகவே அந்தக் கமிட்டியின் யோசனையை ஏற்றுக்கொண்டால் உடனடியாக அதிகமான வட்டாரங்களில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கமுடியாது. ஏனென்றால் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அதிகமான அதிகாரிகள் தேவைப்படும்போது குறைந்த வட்டாரங்களில்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆகவே தேசிய விஸ்தரிப்புத் திட்ட வேலைகளுக்காக அடுத்த வருஷம் 51 வட்டாரங்களை எடுத்துக்கொள்ள முடியாது ; அதை விடக் குறைவான வட்டாரங்களைத்தான் எடுத்துக்கொள்ள முடியும். எவ்வளவு வட்டாரங்களை எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி இப்போது பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. நமக்கு எத்தனை விவசாயப் பட்டதாரிகளும், டாக்டர்களும், எஞ்ஜினியர்களும் கிடைக்கக்கூடும் என்பது தெரிந்தபிறகுதான் அடுத்த வருஷம் எத்தனை வட்டாரங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கமுடியும். அதற்கு முன்பு இப்போதைய திட்ட முறையை மாற்றியமைக்க முடியுமா என்பதுபற்றி முடிவுசெய்யவேண்டும். அடுத்த வருஷம் போதிய அளவு வட்டாரங்களை தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்காக எடுத்துக்கொள்ள முடியாவிட்டால், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் எல்லாப் பகுதிகளிலும் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று செய்யப்பட்டுள்ள முடிவை மாற்ற வேண்டியிருக்கும் ; அதற்குள் எத்தனை பகுதிகளுக்கு தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்திருந்தோமோ, அத்தனை பகுதிகளுக்குக் கொண்டுவர முடியாது ; அந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருக்கும். எல்லாப் பகுதிகளுக்கும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஒன்றிரண்டு வருஷங்கள் அதிகமாகலாம். திட்ட முறையை மாற்றியமைப்பதன் விளைவாக முன்பு வகுத்துள்ள திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டியிருந்தால், அவைகளைச் செய்யத்தான் வேண்டும். திட்டத்தை ஆரம்பித்து நடத்த வேண்டியது மட்டுமின்றி அதில் வெற்றியடைய வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. திட்டத்தினால் மக்கள் பலனடைவது, திட்டம் வெற்றியடைவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடைவதற்கு சபையிலுள்ள கனம் அங்கத்தினர்களின் ஏகோபித்த ஒத்துழைப்பும் அவசியம். ஸ்தலஸ்தாபன சபைகளின் ஒத்துழைப்பும் அவசியம். திட்டங்கள் வெற்றியடையச் செய்வதற்கு, சட்டசபை அங்கத்தினர்களும் ஸ்தல-ஸ்தாபன அங்கத்தினர்களும் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு உகந்த வகையில்தான் பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்படுகின்றன.

திட்டம் வெற்றியடையச் செய்வதற்கு, பஞ்சாயத்து யூனியன்களில் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொள்ள முடியும். நாமும் அக்கறை எடுத்துக்கொண்டால், அப்போது சொல்லப்படும் குறைகளை வெகு சுலபமாக நீக்கிவிட முடியும் என்று நம்புகிறேன். கிராமங்களுக்குப் புதிய வாழ்வளிப்பதுதான் நம் திட்டங்களின் முக்கியமான நோக்கம். கிராம அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வளவுக்கெவ்வளவு வெற்றியடைகின்றனவோ அதைப் பொறுத்துத்தான் நம் நாட்டின் முன்னேற்றம் இருக்கும்.

[Sri C. Subramaniam] [17th March 1958

கிராமங்கள் நிறைந்த இந் நாட்டின் நல் வாழ்வு கிராமங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவே கிராம அபிவிருத்தித்
10-50 a.m. திட்டங்களில் நாம் அக்கறை கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இதுவரையில் செய்திருக்கக்கூடிய பல வேலைகளைப்பற்றி புள்ளிவிவரங்கள் கொடுக்கமுடியும். அவைகளை முன்னரே கனம் அங்கத்தினர்கள் பார்த்திருக்கக்கூடும் என்று நம்புகிறேன். முக்கியமாக கிராமங்களில் எந்த விதமான வேலைகளும் நடக்காமல் இருந்தபோது தங்களுடைய தேவைகள் என்ன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளமுடியாமல் இருந்தார்கள். பத்து வருஷங்களுக்கு முன்பு கிராமங்களுக்குச் சென்று உங்களுடைய தேவை என்ன என்று கேட்டால் அவர்களுக்கு ஒன்றும் சொல்லத் தெரிந்திருக்காது. சொல்வதற்குச் சக்தி இல்லாமல் இருந்தார்கள். திட்டம் நிறைவேற ஆரம்பித்த உடனே ஒரு வேலை ஓரிடத்தில் செய்து முடிக்கப்பட்டவுடன் தங்களுடைய பிராந்தியத்தில் இன்ன காரியம் நடக்க வேண்டும் என்பதை வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். தேவை என்ன என்பதைச் சொல்லக்கூடிய சக்தி அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். அதை வரவேற்கிறேன்.

முதன்முதலாக என்றைக்கு நாம் நம்முடைய குறைகளை உணர ஆரம்பிக்கிறோமோ, நம்முடைய குறைகளை எல்லாம் எப்படி நிவர்த்தி செய்துகொள்வது என்று சிந்திக்க ஆரம்பிக்கிறோமோ அப்போதுதான் வளர்ச்சி ஏற்பட ஆரம்பிக்கும். ஒரு நோயாளி பசி, தாகம் இல்லாமல் அப்படியே படுத்துக்கொண்டிருந்தான் என்றால் படுத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். அப்படி நம் மக்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். ஆனால் நம் மக்களுடைய அடிமை நோய் இப்போது நீங்கிவிட்டதன் காரணமாக அவர்களுக்கு அதிகப்பசி ஏற்பட்டிருக்கிறது. இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்க ஆரம்பித்திருப்பதே நோய் தீர்ந்துவிட்டது என்பதற்கு அறிகுறி. அப்பேர்ப்பட்ட நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய அடிமை நோயை நாம் தீர்த்ததோடுமட்டுமல்ல, அவர்களுக்கு புதிய பலம் ஏற்பட வேண்டும் என்பதற்காகச் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த மானியத்தின் கீழ் ரொம்பவும் முக்கியமாக கவனிக்கவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. இவைபற்றி பல அங்கத்தினர்கள் நேரிடையாகப் பார்த்திருப்பார்கள். அத்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள கஷ்டங்களை உணர்ந்திருப்பார்கள். அவைகளை எடுத்துச் சொல்லி இந்தத் திட்டம் நல்ல முறையில் முன்னேறுவதற்கு வழிவகைகளைச் சொல்லவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு நான் இந்த மானியத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதாகப் பிரேரிக்கிறேன்.

**MR. SPEAKER**: சமூக நலத் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் முதலியவற்றின் கீழ் ரூ. 2,34,57,300 முப்பத்தோராவது மானியக் கோரிக்கை பிரேரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குவெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருப்பவர்களை அழைக்கிறேன். அவர்கள் தங்கள் பிரேரணைகளைப் பேசாமல் பிரேரிக்கவேண்டும். மானியக்கோரிக்கை, அதற்குப் பிரேரிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகள் இவற்றின் மேல் பின்னர் விவாதம் நடக்கும்.

I think the usual procedure is to allow everybody to move his cut motion. This is a procedure which I cannot adopt because if I am to give a chance to all Members who have given notice of cut motions, the time allotted for this Demand will not suffice. Therefore, I would have no objection to one of these two things. Either every Member must move his motion without any speech or the Opposition must select one Member whose motion they will support. The latter automatically means that those who have



17th March 1958] [Mr. Speaker]

given notice of cut motions except the one whose motion is moved do not move their motions. If the Opposition agrees to one Member, I have no objection. If it is the desire of the House that Mr. Govindasamy's cut motion should be discussed, it means all others are not before the House. Otherwise, every Member must move his cut motion.

SRI A. GOVINDASAMY: Sir, I move—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development, etc., be reduced by Rs. 100."

The cut motion was duly seconded.

SRI A. R. MARIMUTHU: Sir, I move—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development, etc., be reduced by Rs. 100."

The cut motion was duly seconded.

SR K. ANBAZHAGAN: Sir, I move—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development, etc., be reduced by Rs. 100."

The cut motion was duly seconded.

SRI K. ANBAZHAGAN: Sir I move—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development, etc., be reduced by Rs. 100."

The cut motion was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development, etc., be reduced by Rs. 100."

The cut motion was duly seconded.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR: Sir, I would like to make a submission. The Hon. Leader of the House was given half an hour to move the Demand. He took nearly an hour. While replying, he will take an hour more. Members of the ruling party may take an hour or an hour and a half, with the result no opportunity will be given to the Members of the Opposition to say anything on this Demand. I do not mean to say the entire time should be kept at our disposal. Sufficient opportunities should be given to Members on this side to have their say. Will the Hon. Speaker please see that the speeches of Ministers while moving Demands are circulated in advacne? That will save time.

MR. SPEAKER: According to rule 155 (1) of the Assembly Rules, the Minister who moves a Demand for a Grant may make a statement explaining the policy underlying the Demand. Whether he explains it in a written speech and supplies copies thereof to

Members or not, is not my concern. It is left to him to decide. Under rule 74, the mover of any resolution, whether he is a Minister or not, has got a right of reply. But the only thing I would insist upon is the provision under rule 154 (3) which says :

" At the expiry of the time allotted for the discussion of any demand, the Speaker shall put every question necessary for the disposal of that demand; "

I would do this unless the House agrees by a unanimous resolution to extend that time-limit. As far as the time-limit fixed for each Member is concerned, I feel, to reduce it from ten minutes to five minutes is very unreasonable and unfair. The intention is for every Opposition Member two Members of the ruling party should be given a chance unless by mutual agreement it is settled otherwise. In the absence of any direction from the House, I will follow the rules strictly.

THE HON. SRI C. SUBRAMANIAM : As I have made an exhaustive statement already, I shall just take fifteen minutes for the reply.

MR. SPEAKER : That means, he will begin his reply by 1-30 p.m. so that the Demand may be put to vote by 1-50 p.m. The Leader of the Opposition party who will reply on behalf of the whole Opposition will be given fifteen minutes. I will give other Members 10 minutes each.

**SRI A. GOVINDASAMY** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திற்கு இரண்டு கோடி முப்பத்துநாலு லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூறு ரூபாய் நிதி அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். இதற்கு நான் என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் 11-வது வெட்டுப் பிரேரணையும், 10-வது வெட்டுப் பிரேரணையும் பிரேரித்து வலியுறுத்த விரும்புகிறேன். சென்ற ஆண்டு இந்த மானியத்திற்கு இரண்டு கோடியே 62 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 28 லட்சத்து 52 ஆயிரம் சொச்சம் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் புரியவில்லை. இந்த ஆண்டு 51 பிளாக்குகள் நடைமுறைக்கு வரும் என்று சொல்லுகிறார்கள். இந்த 51 பிளாக்குகளும் உண்மையில் நடைமுறைக்கு வருகிற நிலைமையில் அமையுமா அல்லது இந்த மான்யத் தொகை குறைவு காரணமாக அதிலும் குறைவு ஏற்படுமா என்கிற சந்தேகம் எழுவதற்கு இடம் இருக்கிறது. அதுமாத்திரம் அல்லாமல் நிதிக்கமிஷன் கொடுத்த தொகைக் குறைவு காரணத்தினால் இதைக் குறைத்திருக்கிறார்
10-50 a.m. கள் என்பதைப்பற்றியெல்லாம் நிதி அமைச்சர் அவர்கள் இறுதி உரையில் பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகளுக்கு அதிகம் செலவு செய்யப்படுகிறது, அதைக் குறைத்து, கிராமங்களில் செலவினம் அதிகப்படுத்தப்படவேண்டும் என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையும் வலியுறுத்துகிறேன். இப்போது இதற்கு கிட்டத்தட்ட 27 அதிகாரிகள் இந்தப் பகுதியில் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவ்வளவு அதிகாரிகள் அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக அதிகாரிகள் இருக்கிற காரணத்தினால் யாரிடத்தில் எதைச் சொல்வது என்ற குழப்பம் ஏற்படுகிறது. அதிகாரிகளின் பெருக்கினால் இரட்டிப்பு வேலைதான் ஏற்படுகிறது. இதைக் குறைப்பதற்கு கோவாப்பரேட்டிவ்



டிப்பார்டுமெண்டில் இரண்டு மூன்று பிளாக்குக்குச் சேர்ந்து ஒருவர் போடலாம். அதேபோல் வெடர்னரி டிபார்டுமெண்டில் இரண்டுமூன்று பிளாக்குக்குச் சேர்ந்து ஒருவர் போடலாம். செலவினங்கள் குறையும். அதோடு பிளாக் ஆபீசர்களில் சிலர் கெஜட்டாகவும், சிலர் நான்-கெஜட்டாகவும் இருக்கிறார்கள். ஏன் இந்த பாகுபாடு இருக்கவேண்டும். எல்லோரும் நான்-கெஜட்டாகவே இருந்தால் வேலை ஒழுங்காக நடக்கும். இதற்கு கெஜட்-உத்தியோகஸ்தர்கள் அவசியமாக இல்லை.

பலவிடங்களிலும் என்.ஜி.ஓ.க்கள், அதாவது நான்-கெஸட்டட் ஆபீஸர்கள் திறமையாக வேலை செய்வதாக நாங்கள் பலவிடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து அந்தத் திட்டங்களைக் கவனித்துப் பார்க்குபோது எங்களுக்குக் கிடைத்த தகவல்களில் இருந்து இதைச் சொல்கிறேன். கெஜட்டட் ஆபீஸர்களைப் போடும்போது, அவர்களின் சம்பளம் 300ல் இருந்து 400 வரை போகிறது. ஆனால் நான்-கெஜட்டட் ஆபீஸர்களைப் போடும்போது அவர்களின் சம்பளம் 200 முதல் 300 வரை தான் போகிறது. ஆகவே செலவினங்களைக் குறைக்க இது ஒரு வழியாகும். அது மாத்திரமில்லாமல், இந்த அதிகாரிகளுக்கு ஜீப் கார்கள் கொடுக்கப்படுகிறது. அப்படி இந்த அதிகாரிகளுக்கு ஜீப் கார் கொடுக்கவேண்டியதில்லை. என்று நான் சொன்னால், அது, அத்திட்டங்களைப் பார்வையிட அவசியமில்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். பல்வந்தராய் மேத்தா அவர்களே சொல்லியிருக்கிறார்கள், **" To ensure efficiency and economy all jeeps should be withdrawn "** என்று. இந்தத் திட்டத்தின் கர்த்தா என்று போற்றப்படுகிற பல்வந்தராய் மேத்தா அவர்களே இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த யோசனையை இவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டம் போதுமான அளவு வெற்றி பெறவில்லை. நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும், கிராமங்களில் நல்ல அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இவைகள் கொண்டு வரப்பட்டாலும், அந்தத் திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகையின் அளவுக்கு நமக்கு பலன் ஏற்பட்டிருக்கிறதா? என்று பரிசீலனை செய்து பார்த்து பல்வந்தராய் மேத்தா அவர்களே சில குற்றங்குறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் இந்தத் திட்டங்களில் குறை கண்டு, இவைகள் கண்துடைப்பு வேலைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களிடம், இன்னின்ன வேலைகள் செய்கிறோம் என்று சொல்லும் அளவிற்கு திட்டம் வெற்றி பெறவில்லை என்கிறார்கள். திட்டங்களில் எவை எவை வெற்றி பெற்றிருக்கிறது என்று பட்டியல் கொடுக்காவிட்டாலும் அங்கத்தினர்கள் அவைகளைப் படித்து உணர்ந்திருப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமங்களில் சில பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. குழந்தைகள் விளையாட சில பார்க்குகள் கட்டப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில் கம்யூனிட்டி சென்டர்ஸ் கட்டப்பட்டிருக்கிறது. சில வைத்தியசாலைகள் கட்டப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் ரோடுகள் போடப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே சொன்ன காரியங்களுக்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்மந்தம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இதைக்கொண்டு வருகிறபோது, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்றும் திட்டமிடப்பட்டது. அதன்படி, உற்பத்தியைப் பெருக்குவதற்கோ அல்லது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக, ஏதோ விளம்பரம் செய்து கொள்வதற்காக சிலவிடங்களில் இன்னின்ன செய்திருக்கிறோம் என்று காட்டும் ஒரு விளம்பரப் பலகையாக இது இருக்கிறதே தவிர அரசாங்கம் இந்தத் திட்டத்தை எதற்காகக் கொண்டு வந்ததோ அக்காரியங்கள் நடைபெறவில்லை என்று நான் சொல்வது மாத்திரமல்ல, பல்வந்தராய் மேத்தா அவர்களே கூறியிருக்கிறார்கள். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனித்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக,

கிராம மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தால்தான் மக்களுக்கு இந்த "திட்ட உணர்ச்சி", "ப்ளானிங் கான்ஷியஸ்னஸ்" உண்டாகும். அந்த அளவிற்கு சர்க்கார் அதிகாரிகள் வேலை செய்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். அங்கு அதிகாரிகள் அதிகாரிகளாக நடக்கிற காரணத்தினால் தான் கிராம மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் உறவு ஏற்படாமல் திட்டம், நாம் எதிர் பார்த்தளவு வெற்றியடையவில்லை. ஆகவே, நாம் செலவு செய்திருக்கும் தொகையின் பலனை மக்கள் அடையவில்லை என்று சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, இதற்கான அதிகாரிகளை நியமிக்கும்போது கிராமப் புறங்களில் உள்ளவர்களைத்தான் போடவேண்டும். அவர்கள் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இத்திட்டம், பின்தங்கிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் நன்மை அடையவும், பின்தங்கிய பிராந்தியங்கள் முன்னேறவும், அந்தப் பகுதியில் உள்ள மக்களை அதிகாரிகளாக போட்டால் தான் அது முடியும். இந்நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு ஒன்று சொல்லிக் கொள்வேன். வெங்கடாஜலபதி அவர்கள் கிள்ளிப்பேட்டிப் பகுதியைச் சேர்ந்தவர். அதே போன்ற கிராமங்களில் உள்ளவர்களை அதிகாரிகளாக போட்டால்தான் அவர்கள் வேலையை நன்கு கூர்ந்து கவனிக்கும் ஒரு நிலை ஏற்படும். உற்பத்தியைப் பெருக்க இந்தத் திட்டம் வழி வகுக்கிறது. இந்த வருடத்தில் 51 பிளாக்குகள் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக எல்லாப் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கொண்டுவரப்படும் என்று ஏற்கனவே உத்தரவாதம் அளித்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக எல்லாப் பகுதிகளும் இதன் அடிப்படையில் வந்து விடுமா என்பது சந்தேகமே. மூன்றாவது திட்டத்தின் கீழ் போகும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு, அமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ தெரியாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முடித்து விடுகிறோம் என்று சொல்லி இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்குப் தள்ளிப்போட வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கள் மாவட்டத்தில் இதுவரையில் 11 ப்ளாக்குகள் தான் வந்திருக்கிறது. இன்னும் 20 ப்ளாக்குகள் வர வேண்டும். அவை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டதிற்குள் வருமா என்பது சந்தேகமே. விழுப்புரம் தாலூகாவில் இது அறவே வரவில்லை. 1947-ல் இருந்து 1958 வரை திட்ட வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆனால் அந்தப் பகுதிக்கு இது கொண்டு வரப்படவில்லை. ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சில பள்ளிக்கூடங்களும், ரோடுகளும் ஏற்பட்டிருக்கிறதே தவிர, அவைகளை தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவரவில்லை. கட்சி அடிப்படையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ள இடங்களில்தான் இதைக் கொண்டுவருகிறார்கள் என்று சொன்னால், அதைத் தவறாக எடுத்துக் கொள்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், என் தொகுதிக்கே வரவில்லை என்று. அப்பகுதி முன்னேற்றப் பகுதியாக இருக்கலாம். பின்தங்கிய பகுதிகளுக்கும், எங்கு உற்பத்தியை அதிகரிக்க முடியுமோ அந்தவிடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். அந்த பாகுபாட்டின்படி பார்த்தாலும், விழுப்புரம் தாலூக்காவில் வளவனூர்க்கு இது ஏன் விஸ்தரிக்கப்படவில்லை? ஒரு சமயம், முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கூறியபோது, அவர்கள் சொன்னார்கள், நாங்கள் எங்கு தோற்றிருக்கிறோமோ அங்கெல்லாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றார்கள் ஒரு கூட்டத்தில் வைத்து. ஆனால் அவர்கள் ஜெயித்திருக்கும் பகுதியில் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர அவர்கள் தோற்றிருக்கும் பகுதியில் கொண்டுவரவில்லை. அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு போதுமான அளவு கடன் வசதி போய்ச் சேருவதில்லை. பொறுக்கு விதையோ அல்லது உரமோ சரிவரக் கிடைப்பதில்லை. இந்த ஆண்டு விவசாயிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகக் குறைவு. சென்ற ஆண்டு ஐந்து லட்சம் ரூபாய் விவசாயத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் இந்த ஆண்டு ஒரு லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு உரத்திற்காக ஒரு தொகையும் ஒதுக்கியிருப்பதாக இந்த பட்ஜெட்டிலிருந்து தெரியவில்லை. அது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். ஜப்பானிய முறையை எல்லா கிராமங்களுக்கும் கொண்டுவரவில்லை. உரம், பொறுக்கு விதை கொடுக்கிற இடங்களில் அவைகளை ரோட்டில் போட்டு விளம்பரப்படுத்திக் காட்டுகிறார்களே தவிர, உண்மையாக விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் காரியங்கள் செய்வதில்லை. சிற்சில இடங்களில் கோழிப்பண்ணை மாத்திரம் வளர்க்கப்படுகிறது. அதனால் நமது பொருளாதாரப் பிரச்சனைத் தீர்ந்துவிடாது. இந்தத் திட்டங்களில் ஈடுபடுகிறவர்கள் எல்லோரும் கதர் உடை உடுக்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் கைத்தறி ஆடை உடுக்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுவதில்லை. அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்படுகிறது. எக்ஸ்டென்ஷன் ஆபீஸரைக் கேட்டபோது இரண்டு மூன்று சங்கங்கள்தான் நிறுவினோம், மக்கள் இதில் அக்கறை காண்பிப்பதில்லை என்று அவர்கள் சொன்னார்கள்.



**Sri K. L. RAMASWAMI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்று நிதியமைச்சர் அவர்கள், நாட்டின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களுக்காகக் கோரியிருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக விடுதலை பெற்ற நாட்டின் மக்களுக்கு பொறுப்பு அதிகம். நாம் அடிமைகளாக இருந்த நாட்களில் நம் முன்னேற்றத்தைக் குலைக்கக்கூடிய பிற்போக்குச் சக்திகள் அநேகம் இருந்திருக்கலாம். அப்பேர்ப்பட்ட தீய சக்திகளை வென்று முன்னேற்றத்திற்குரிய திட்டங்களைத் தீட்டுவது என்றால் அது ஒரு சாதாரண காரியமல்ல. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டி நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்ற பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள், பொதுவாக நாட்டின் முன்னேற்றம் என்று கூறும்போது அது கிராம மக்களின் முன்னேற்றத்தைத்தான் குறிக்கும். ஏனெனில் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். அதுவும் நாட்டின் தொழில்களை எடுத்துக் கொண்டால், முதலில் விவசாயமும், அதற்கு அடுத்தபடியாக வரும் தொழில், நெசவுத் தொழிலுமாகும். இந்த இரண்டு தொழில்களும் நாட்டில் சிறப்புற்றால், எல்லாத் தொழில்களும் அவைகளோடு இணைந்திருப்பதால், அவைகளும் சிறப்புறும். இத்தொழில்களை மேற்கொண்ட மக்களும் சிறப்புறுவார்கள். அவர்கள் சிறப்பாக வாழ்வார்கள் என்பதுதான் இத்திட்டத்தின் அடிப்படையான குறிக்கோள். ஆனால் நம் நாடு விடுதலை பெற்ற பிறகு திட்டங்களை தீட்டுவது என்பது நாட்டு மக்களின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகளுக்கு ஏற்றவாறு திட்டங்கள் அமைய வேண்டும். அத்தேவைகளை உணரும் போது மக்களோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு, மக்களின் அன்றாட வாழ்க்கையில், அவர்கள் நிரந்தரமான ஒரு வாழ்க்கை வசதியைப் பெற முடியாமல் சமூகத்திலும், வேறு துறைகளிலும் பல பிற்போக்கு சக்திகள் இருக்கின்றன, அத்தீய சக்திகளைக் கண்டு பிடித்து அவைகளைப் போக்க முதலில் முயற்சிக்க வேண்டும்.

ஆனால், சுதந்திரம் பெற்ற பிறகு அப்பேர்ப்பட்ட பிற்போக்குச் சக்திகளை 11-10
கண்டு பிடிப்பது இயலாத காரியமாக இருந்துவருகிறது. ஆனால் பொது a.m.
வான ஒரு திட்டத்தைப் பிளானிங் கமிஷன் தீட்டி நமக்குத் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டமானது சரியானபடி நிறைவேற வேண்டுமென்ற நோக்கத்துடன் தந்திருக்கிறார்கள். ஆனால், இந்த திட்டத்தை முதலில் பொதுமக்களுடைய நலனில் ஈடுபட்டிருப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உணர்ந்து கொண்ட பிறகு அது நிலை பெற வழி தேட வேண்டும். இப்பொழுது இந்தத் திட்டமானது, பலர் இதற்கு முன்னால் கூறிய பிரகாரம் மக்களுக்குரிய நல்ல முறையில் செயலாற்றும் வகையில் இருக்கிறதா ? என்பதை யோசனை செய்து பார்க்கவேண்டும். இது இன்று அதிகாரிகளுடைய பொறுப்பில் இருக்கிறது. இந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் மக்களுடைய பங்கைப் பெற்றுக் கொள்ளுவ

தற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் இன்று திட்டத்தில் பங்கு கொள்ளத்தான் உரிமை இருக்கிறதே தவிர மக்களுடைய பொறுப்பில் இன்று இல்லை. மக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாததற்கு காரணம் இந்த திட்டம் யாருக்காக பயன்படுகிறதோ, அப்பேர்ப்பட்ட மக்கள் இந்த திட்டங்களினுடைய நன்மைகளை உணர்ந்து கொண்டதாக தெரியவில்லை. ஆகவே பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதிகாரிகள் கிராம மக்களுடைய ஸ்தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி கொள்ளவேண்டும். இப்போது அவ்விதம் செய்வதில்லை. இப்போது உள்ள அமைப்பின்படி கிராம பஞ்சாயத்துக்கள் இந்த திட்டங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். என்று வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது கிராமங்களில் முக்கிய ஸ்தாபனமாக விளங்குவது கிராம பஞ்சாயத்து போர்டுகளே. அது போலவே மற்றுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள், கைத்தறி கூட்டுறவு ஸ்தாபனங்கள் இவைகளும் முக்கிய ஸ்தாபனங்களாக விளங்குகிறது. இப்போது இந்த ஸ்தாபனங்களுக்கும் இந்த முன்னேற்ற திட்டங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இந்த திட்டத்தில் குறிப்பாக கிராமங்களில் முக்கியமாகப் பங்கு கொள்ளக்கூடியவர்கள் கிராம சேவகர்கள் என்று மந்திரி அவர்கள் கூறினார்கள். அப்பேர்ப்பட்ட கிராம சேவக்குகள் அதிகமாக மக்களிடம் தொடர்பு கொண்டிருக்கவேண்டும். ஆனால் இப்போதுள்ள முறையில் தொடர்பு இல்லாத முறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பிளானிங் கமிஷன் போட்டிருக்கும் திட்டமானது, மக்களுடைய திட்டம். நாட்டு முன்னேற்றத்தினுடைய திட்டம் என்று மக்கள் உணர்ந்து கொள்ளும்படியாக அதிகாரிகள் பிரசாரம் செய்யவில்லை. இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்ற திட்டங்களுக்காக சிறு சேமிப்பு திட்டத்தின் மூலமாக வசூல் செய்து வருகிறோம். இன்றைக்கு நாட்டில் சிறு சேமிப்பு திட்டத்திற்கு சரியான விதத்தில் வசூல் செய்ய முடியாமல் இருப்பதற்கு காரணம், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைப் பற்றி மக்கள் முழு அறிவையும் பெற முடியாத நிலையில் தான் இருந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது நாட்டில் மக்களுக்கு பலவிதமான வசதிகளை சர்க்கார் செய்கிறார்கள். குறிப்பாக ஹரிஜன முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் இருக்கின்றன. நாட்டில் பழைமையாக இருந்து வருகிற தீண்டாமை போன்ற பிற்போக்கு சக்திகள் எல்லாம் மாறாமல் தான் இருந்துகொண்டு வருகிறது. இன்றைக்கு ஹரிஜனங்களுக்காக போடப்பட்டு வரும் திட்டங்கள் எல்லாம் சரியானபடி வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இன்னொரு கருத்தையும் நாம் பார்க்கவேண்டும். இந்த திட்டங்களுக்கு எல்லாம் பொதுமக்கள் ஆர்வத்தோடும், உணர்ச்சியோடும் இருந்தால் இப்பேர்ப்பட்ட திட்டங்கள் வெற்றிபெறும். இந்த திட்டங்களை சரியான விதத்தில் மக்களிடத்தில் புகுத்த முடியாவிட்டால் திட்டங்கள் சரியானபடி வெற்றி பெறாது. உதாரணமாக நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடியும். கோபிச்செட்டிபாளையத்தில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஹரிஜன காலனியில் வீடுகள் இன்னும் நல்ல விதத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது கட்டப்படுகின்ற ஹரிஜன காலனிகளில் வீடுகளுக்கு குடி போவதற்குள் இடிந்து விழுந்துவிடுகிறது. நான் இந்த திட்டங்களை குறைகூறுவதற்காகச் சொல்லவில்லை. திட்டம் வெற்றிகரமாக நடக்கவேண்டும் என்றால் அங்குள்ள மக்களுடைய ஒத்துழைப்புடன் நிறைவேற்றவேண்டும்.

அடுத்தபடியாக ஐயன் காந்தி அடிகள் கதர் திட்டத்தை ஆரம்பித்தார்கள். முதலாவது அகில பாரத சர்க்கா சங்கமாயிருந்தது; இப்போது அகில பாரத சர்வ சேவா சங்கம் என்ற பெயரிலும் இயங்கி வருகிறது. இப்போது சர்க்காரால் ஒரு கதர் திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியதுதான். ஆனால் இவ்விதம் போடப்பட்டிருக்கும்





திட்டம் அகில பாரத சேவா திட்டத்திற்குப் போட்டி போடக்கூடிய நிலையில் நடந்து வருகின்றதே ஒழிய ஒரு ஸ்தாபனம், மற்றொரு ஸ்தாபனம் செயலாற்றக் கூடிய வகையில் தனித்தனியாக நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிச் செயலாற்றக்கூடிய நிலையில் இல்லை. இதை நாம் அனுபவத்தின் மூலமாகத் தெரிந்து இருக்கிறோம். இவைகளை நாம் யோசித்து பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக நாட்டில் விவசாயிகளுக்கு முக்கியமாக எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லும்பொழுது, பொறுக்கு விதைகள் கொடுப்பதற்கு திட்டம் இருப்பதை போன்று நாட்டின் மண் வளத்தைக் காப்பாற்றுவதற்கும் திட்டம் அவசியம். நாட்டின் மண்வளம் மிகவும் இன்றியமையாதது. பொதுவாக என்னுடைய பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் புஞ்சை பிரதேசமாக இருந்துக்கொண்டிருக்கிறது. இந்த இடங்களில் மழைவரும்போது வேகமாக மண்ணை அரித்துக் கொண்டு போகும். இந்த நுண்ணிய மண் தண்ணீரினால் அடித்துக் கொண்டு போகப்படுகிறது. ஆகவே இதைத் தடுப்பதற்கு மண் அரிப்புத் திட்டம் அவசியமாக வேண்டும். வேளாண்மை செய்யும் போது பயிருக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அதற்கான வேலிகள் அவசியம். இவ்விதம் மண் அரிப்புத் திட்டமும் வேலி போட்டுக் கொடுப்பதும் விவசாயிகளுக்கு மிக அவசியம். மரங்கள் வளர்ப்பதைப்பற்றி சொன்னால், நாம் மர நாட்டு விழாவைக் கொண்டாடுகிறோம். அதோடு கிராமப் புறங்களில் மரங்களைப்பாதுகாத்தல் மிக முக்கியமான ஒரு நல்ல செயலாக இருக்கும். ஆகவே மரங்களைப் பாதுகாத்தல், மண் வளத்தை பாதுகாத்தல், வேலி போடுதல், அதே போன்றுதான் தண்ணீரையும் பாதுகாக்க வேண்டும். சில இடங்களில் மழை பெய்தால் தண்ணீர் பள்ளங்களின் வழியாகப் பாய்ந்து வீணாகப் ஓடி போகின்றது. உள்ளுக்குள் போகும் தண்ணீரையும் காப்பாற்ற வேண்டும். **Underground water rescuree** இது போன்ற திட்டங்களை அமைத்து நீரைக் காப்பாற்றுவது மிக அவசியம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக தனித்தனியாக எடுத்துச் சொல்வதற்கில்லை. நாட்டிலுள்ள பிற்போக்குச் சமுதாயத்தை காப்பாற்றி அவர்களிடையே நல்ல சமுதாய வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு எல்லோரும் ஒருமனப்பட்டு, ஒத்துழைத்து, இந்த மாதிரியான திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற உதவவேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த மான்ய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**Sri N. P. M. CHINNIAH KOVUNDER :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின் மானிய கோரிக்கையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விடுதலையடைந்து. நமது நாடு சுதந்திரம் அடைந்து சுமார் பத்து ஆண்டுகளுக்குள் நம்முடைய அரசாங்கமானது விவசாய மக்களுக்காக பல நன்மைகளை, பல திட்டங்களின் அடிப்படையில் செய்து வந்திருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மக்களுடைய வாழ்க்கை எவ்வளவு சீக்கிரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டுமோ அதற்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டு ஒவ்வொரு திட்டத்தின் அடிப்படையில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, அதற்காக நல்ல முறையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்த திட்டத்தின் மூலமாக மக்களுடைய முன்னேற்றத்திற்காக பல உயரிய காரியங்களையும் செய்து வருகின்றார்கள். குறிப்பாக விவசாய மக்களுக்கு விவசாயத்திற்கு அத்தியாவசியமானது விதை, "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்று சொல்லுவது போல விவசாயிகளுக்கு முக்கியமாக வேண்டிய விதை பொருள் உற்பத்திக்காக நூற்றுக்கணக்கான விவசாய பண்ணைகள், ஆயிரக்கணக்கான விதை பண்ணைகள் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தி அதன் மூலம் விதைகள் வழங்கப்படுகிறது. அதுபோலதான் விவசாயிகளுக்கு வேண்டிய உரமும் வழங்கப்படுகிறது. குழாய்க் கிணறு திட்டம் மூலம் 11-10 a.m.

[Sri N. P. M. Chinniah Kovunder] [17th March 1958

என்ஜின்கள் வழங்கப்படுகிறது. மின்சார ஏற்பாடுகள் மூலம் நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்யப்படுகிறது. இம்மாதிரி பற்பல வசதிகள் செய்யப்படுவதோடு, ஒவ்வொரு வட்டாரத்திலும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் கைத் தொழில்கள், விவசாயத்திற்கான எல்லா வசதிகள், ரோடுகள், ஆஸ்பத்திரிகள், குழந்தைகள் படிக்க பள்ளிக்கூடங்கள் போன்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களெல்லாம் அப்படியே மக்களுக்குப் பயன்படவேண்டுமானால், பொதுவாக மக்களிடையே ஒத்துழைப்பும், மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே நேரிடையான தொடர்பும் ஒத்துழைப்பும் ஏற்படவேண்டும். மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொடர்பு கிடையாது என்று சில அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகளாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, அரசாங்கம் ஈடுபட்டிருக்கும் திட்டங்கள் மக்களுக்குப் பயன்படும் முறையில், எனக்குத் தெரிந்த வரையில், செய்ய வேண்டியது மக்கள் பிரதிநிதிகளாகிய அங்கத்தினர்களுடைய கடமை என்று நினைக்கிறேன். அதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதுவே அங்கத்தினர்களுடைய கடமையாக இருக்கவேண்டும். இதற்கு முன்னே இருந்த அதிகாரிகளை விட இப்போது நம் அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகள் மக்களிடத்தில் நெருங்கிப் பழகுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். மக்களுக்கு அந்த அளவுக்கு அரசாங்கத்தினுடைய சலுகைகள் பயன்படவில்லையென்றால், மக்கள் மனதிலே குழப்பம் இருக்கிறது. எதனால் அரசாங்கத்தினுடைய திட்டம் பயன்படவில்லை என்று சொன்னால், மக்கள் உள்ளத்திலே சரியான பண்பாடு கிடையாது. ஒரு விதமான குழப்பம் இருந்து கொஞ்சம் தடையாக இருந்து வருகிறது. ஆகவே, எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைத்து, அதிகாரிகளும் முயற்சியெடுத்துக் கொண்டு, இருக்கும்படியான திட்டங்களை அப்படியே மக்களுக்குப் பயன்படும்படியாகச் செய்தால் பத்து ஆண்டுகளுக்குள்ளே, முற்போக்கு ஏற்பட்டு நல்ல முறையில் வளம் பெறக்கூடிய அளவுக்கு வந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாக தேசீய விஸ்தரிப்புத் திட்டம் 135 வட்டாரங்களில் அமுலில் இருக்கிறது என்று அமைச்சர் கூறினார். இன்னும் எல்லாப் பகுதிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வந்து விடும் என்று நமக்குத் தெரிகிறது. இந்தத் திட்டத்திற்கு எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைத்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைந்து விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியாகிய மணப்பாரைத் தொகுதியைச் சேர்ந்த துவரங்குரிச்சி, மருங்காபுரி, மிகவும் காடாரம்பமான பிரதேசம். (Sri M. D. Ramasami in the chair) மின்சார வசதியும் நீர்ப்பாசன வசதியும் இல்லை என்றாலும், அவைகள் வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அங்கு ஒருதேசீய விஸ்தரிப்பு வட்டாரம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பஞ்சப்பட்டி, கடலூர் ஜமீன். பிற்பட்டப் பிரதேசம். மிகவும் காடாரம்பமான பிரதேசம். சென்னை ராஜ்யத்திலேயே மிகவும் பிற்போக்கான பிரதேசம் எது என்றால், அது கடலூராகத்தான் இருக்கும். அங்கு ஒரு தேசீய விஸ்தரிப்பு பிளாக் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டு விராலிமலை, இலுப்பூர் முதலிய இடங்களில் மின்சார வசதி, தண்ணீர் வசதி, மற்ற விவசாய வசதிகள் கிடையாது. அந்தப் பகுதியிலும் ஒரு பிளாக் ஆரம்பித்தால் ரொம்ப நன்றாக இருக்குமென்று சொல்லிக் கொள்கிறேன். சென்னை மாகாணத்தில் எல்லாப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் வரும்போது, இந்தப் பகுதி மட்டும் பின் தங்கிவிடப்போவதில்லை. எல்லோரும் ஒத்துழைத்தால் நல்ல முறையில் நடக்கும். சில அங்கத்தினர்கள் பல குறைகளைச் சொல்லுகிறார்கள்.



17th March 1958] [Sri N. P. M. Chinniah Kovunder]

சர்க்கார் வழங்கும் பணங்கள் ஜனங்களுக்குப் பயன்படுவதில்லை என்பது ஓரளவு உண்மையாயினும், பயன்படக்கூடிய முறையில் அங்கத்தினர்கள் ஒத்துழைத்தால் நன்றாகப் பயன்படுமென்று கருதுகிறேன்.

பொதுவாக நம்முடைய மாகாணத்தில் ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு எந்தக் காரியத்தைச் செய்தாலும், மக்கள் மனதைக் குழப்பி விட்டிருக்கிறார்கள். பல கோளாறுகள் இருக்கின்றன. மக்கள் ஒத்துழைப்புக்குத் தடையாக மத்திய சர்க்கார் குறுக்கே இருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் நினைத்துக்கொண்டு, சரியாகச் செய்ய முடியாமல் சர்க்காருடைய பணம் அத்தனையும் மத்திய சர்க்காருக்குப் போகிறது. மத்திய சர்க்கார் தடையாக இருக்கிறார்கள்—,அதனால்தான் இந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை முன்னேற முடியவில்லை—என்று இப்படிப்பட்ட மனப்பான்மை கிராமங்களில் வளர்ந்து கொண்டே போகிறது. இந்த மாதிரி கெடுதல் மனப்பான்மை வளர்வதால்—ஒவ்வொரு குடும்பத்திலும் வளர்கிறது—ஒவ்வொரு குடும்பத்திலும் பிரிவினை மனப்பான்மை பெருகிக் கொண்டே போகிறது. உணவுப் பெருக்கம் ஏற்படவேண்டுமென்று சொல்லும்போது, பிளவு மனப்பான்மை வளர்ந்து, அந்தக் குடும்பத்தில் 100 மூட்டை நெல் அடிப்பது இன்றைய தினம் 25 மூட்டைக்கு மேல் அடிக்க முடிவதில்லை. குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் எனக்கு பாகம் வேண்டும், இல்லையென்றால் முடியாது என்று சொல்லி, குடும்பத்தில் ஒத்துழைப்பு இல்லாமல், விவசாயம் தடைப்பட்டுப் போயிருக்கிறது. எந்தக் குடும்பத்தை எடுத்துக்கொண்டாலும்—கிராமத்தில் கனம் அங்கத்தினர்கள் பழகி யிருப்பார்கள்—நான் இப்போது வரும்போது கூட 7, 8 பாகப் பிரிவினைத் தகராறுகள்—ஒரே பாகப் பிரிவினைகள். அதனால் விவசாயம் தடைபடுகிறது. இது ஒரு காரணம். ஜனங்கள் நன்மையை உணர முடியாமல் இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய திட்டங்களால் பயனடைய முடியாமல் இருக்கிறார்கள். பல கோடி மக்களை எடுத்துக்கொண்டு சர்க்கார் ஒரு காரியத்தை செய்து அவர்கள் திருப்தியடைவதென்றால், பொது மக்கள், பிரதிநிதிகள், அதிகாரிகள் எல்லோரும் ஒத்துழைத்தால் தான் நடைபெறும். " கூடிக் கெட்டவனும் இல்லை, பிரிந்து வாழ்ந்தவனும் இல்லை " என்று சொல்வார்கள். பிரிகிற மனப்பான்மை இருந்தால் என்ன காரியத்தைச் செய்தாலும் பயன் ஏற்படாது. " என்ன, சட்ட சபையில் போய் பட்ட பகலில் லைட் போட்டுக் கொண்டு, விசிறி போட்டுக் கொண்டு இருந்து விட்டு வருவதற்கா உங்களுக்கு ஓட்டுப்போட்டு வைத்திருக்கிறோம் " என்று சொல்கிறார்கள். நாங்கள் 8 மணி நேரம் வேலை செய்து $1\frac{1}{4}$ ரூபாய், நீங்கள் அப்படிப்பட்ட 5 மணி நேரம் வேலைக்கு $12\frac{1}{2}$ ரூபாய் " என்று சொல்கிறார்கள். என்ன பதில் சொல்லுவது. கவர்னருக்கு 10,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள், உங்களுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் படி கொடுக்கிறார்களே என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் பார்த்து, பிரதிநிதிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

*Sri K. GOPALA KOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, தேசீய விஸ்தரிப்புத் திட்டம் சம்பந்தமாக நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் முக்கியமானது விவசாயமே. அந்த விவசாயத்திலுள்ளபேருக்கு விளைந்த தானியத்தை, தங்கள் கிராமத்திலிருந்து வெளியே கொண்டுபோக முக்கியமானது ரோடு வசதி. இதுதான் மிகவும் அவசியமானது. ஆகவே, இந்த ரோடு வசதி விஷயத்திலே, ஏற்கெனவே பிளாக் டெவலப்மெண்டில் பாதி தொகை ரோடு போடுவதற்கு ஜில்லா போர்டில் கால் பாகமும், விவசாயிகள் கால் பாகமும் கொடுத்து ரோடு போடுவதுதான் ஏற்கெனவே இருந்த திட்டம். அந்தத் திட்டம் அப்படி இருக்கும்போதே கிராமங்களில் சரியானபடி ரோடு போட முடியவில்லை. இப்போது அரசாங்கம் கூறுவதானது மக்கள் ரோடு அமைத்துக் கொடுக்கவேண்டுமென்றும், பிறகு பிளாக் டெவலப்மெண்டில் மெடல் போட்டு கல்வெர்ட் போட பணம் கொடுப்பது என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

கிராமத்தில் அவர்கள் ரோடு போடும் விஷயத்திலே எவ்வளவோ கட்சித் தகராறுகள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் அப்படி திட்டமிட்டு வந்தால் ரோடுகளைப் போட முடியாது. ஆனால் எற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்ததைப் போலவே பாதி பிளாக் டெவலப்மெண்டில் பணம் கொடுத்தால் சில கிராமங்களில் ரோடுகள் போடமுடியும்.

11-20 a.m. அதோடு இந்த விவசாயத்திற்கு ஒவ்வொரு பிளாக்கிலும் விவசாயப் பண்ணை ஏற்படுத்தி, அந்த விவசாய பண்ணையை தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலமாக ஜனங்களுக்குப் பிரசாரம் செய்தால் அந்த விவசாயத்தில் ஜனங்கள் நல்ல முறையில் முன்னேறுவார்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதோடுகூட, இந்த ஆண்டிலே மழை இல்லாத காரணத்தால், கிணறுகள் வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வாங்குவதற்கும், இன்னும் எலெக்டிரிக் மோட்டார், அம்மோனியம் சல்பேட், பிண்ணாக்கு முதலியவைகள் வாங்குவதற்கும் கடன்கள் கொடுப்பதற்காக அரசாங்கத்தார் ஒதுக்கியிருக்கும் தொகை போதாது என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இவ்வாண்டிலே மழையில்லாத காரணத்தால் ரொம்ப ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கிணறுகள் வெட்டுவதற்காக கடன் கேட்டுகும் விவசாயிகளுக்கு 4-ல் ஒரு பங்கை மான்யமாகக் கொடுத்தால் நன்மை செய்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிளாக் டெவலப்மெண்ட் திட்டத்தை எடுத்துக் கொண்டால், கட்டிட வேலைகள் நடப்பதிலே சில தகராறுகள் ஏற்படுகின்றன. கட்டிட வேலை ஆரம்பிக்கும் நேரத்திலே சூப்பர்வைசர் வருகிறார். மறுபடியும் அவர் வந்து பார்ப்பதற்கு 20 நாட்கள் அல்லது ஒரு மாதம் ஆகிறது. கட்டிட வேலை செய்பவர் ஒரு விவசாயியாக இருக்கலாம். அந்த வேலையை விட்டுவிட்டு விவசாயத்தைப் பார்க்கும்பொழுது, சில தகராறுகள் ஏற்படுவதால் கட்டிடத்தை இடிக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. ஒரு நல்ல பயிற்சி பெற்ற சூப்பர்வைசரைப் போட்டால் அடிக்கடி அவர் கூட இருந்து அந்த வேலையை நல்ல முறையில் செய்து கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

பிளாக் டெவலப்மெண்ட் திட்டங்களிலே ரூபாய் 3,000 வரையிலும், கட்டிடங்களையோ, மற்ற வேலைகளையோ, பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரியே "செக் மெஷர்மெண்ட்" செய்து பணத்தைக் கொடுக்கவேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டால் துரிதமாக வேலை நடக்கும் என்று நினைக்கிறேன். அதோடு ஒவ்வொரு பிளாக் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அந்தந்த பிளாக்கில் என்னென்ன வேலைகளைப் பற்றி விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ, அந்த திட்டங்களை பிளாக் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்தில் வைத்து "சாங்ஷன்" செய்தால், துரிதமாக வேலைகள் நடக்குமென்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

***Sri N. K. PALANISAMI :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் கிட்டத்தட்ட 2 கோடியே 34 லட்சம் ரூபாய், சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள், இவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற வருஷத்தில் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காக 94 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருஷம் அதற்காக ரூபாய் 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாற்பத்தினான்கு லட்சம் குறைவாக இருக்கிறது. உண்மையிலேயே, இன்றைய தினம் தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் நீங்கலாக, பாக்கி இடங்களில் ஸ்தல அபிவிருத்தித் திட்டம் மூலமாக பலவிதமான அபிவிருத்திகள் குறைந்த செலவில் **(establishment charges)** நடைபெற்று வருகின்றன. இதற்காக குறைவாகப் பணம் ஒதுக்கியிருப்பதை நான் எதிர்க்கிறேன்.

இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் தேசத்தில் ஒரு பெரிய புரட்சிகரமான மாறுதலை உண்டுபண்ணும் என்று நினைத்தோம். கனம் நேரு அவர்கள் கூட, இந்தத் திட்டத்தை துவக்கி வைத்துப் பேசுகையில், இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமங்களிலே ஒரு பெரிய புரட்சி ஏற்பட





போகிறது என்று சொன்னார். கிராமத்தில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது, நவீன முறையில் புதிய கருவிகளைக் கொண்டு விவசாயம் செய்வது, மக்களுடைய வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவது என்ற அடிப்படையான கொள்கையை வைத்துக் கொண்டுதான் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்த பிறகும் விவசாயம் இன்றைய தினம் எந்த நிலைமையில் இருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் எந்த நிலைமையில் இருக்கிறது என்று பார்த்தால், பெரிய அளவுக்குத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அது மட்டுமல்ல. உண்மையாகவே விவசாய வளர்ச்சிதான் தேசத்தினுடைய முன்னேற்றத்திற்கு அறிகுறி என்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கூட்டத்தில் கனம் நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆனால், அவர்களே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள், தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக பொறுக்கு விதைகள் கொடுப்பதன் மூலமாகவும், "**Land Reclamation Schemes**" மூலமாகவும் தேசம் பூராவும் 10·8 சதவிகிதம் தான் விவசாயம் அதிகப்படியாக வளர்ந்திருக்கிறது என்று. தனிப்பட்ட மாகாணங்களை எடுத்துக் கொண்டால் 2·7 சத விகிதத்திலிருந்து 19 சத விகிதம் வரை அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு பொறுக்கு விதைகள் கொடுத்தும், இன்னும் பல லட்சக் கணக்கில் கடன்கள் கொடுத்தும், இந்த அளவுக்குத்தான் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்றால், அது ஒரு பெரிய ஏமாற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். தக்காவிக் கடன்கள், பொறுக்கு விதைகள், இன்னும் உரங்கள் போன்றவை எல்லாம், சாதாரணமாக, கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களில் 100-க்கு 75 பங்கு மக்களுக்குக் கிடைக்கவில்லையென்று ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் "**credit worthy**" யாக இருக்கக் கூடிய விவசாயிகளுக்குத்தான் இந்தக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஸெக்யூரிடி கொடுக்க முடியவில்லை என்றாலும் சரி, குத்தகை விவசாயம் செய்பவர்களாய் இருந்தாலும் சரி, அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட முறை இருப்பதனால், இதைமாற்றி அமைக்கவேண்டும். உரம் வாங்குவதற்கும், மற்றும் பொறுக்கு விதைகள் வாங்குவதற்கும் கடன் வாங்க வேண்டுமென்றால், ஒரு விவசாயி தாலூக்கா தலைமைக் காரியாலயத்திற்கு நான்கு அல்லது ஐந்து தடவை சென்றும் கடன் கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. தவிர, எந்தெந்த சமயங்களில் விதைகள் வேண்டுமோ, அப்பொழுது கொடுக்கப்படாமல், வேண்டாத காலங்களில் கொடுக்கப்படுகின்றன. அநேக விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள் கிடைப்பதேயில்லை. மேதா கமிட்டி எடுத்துச் சொல்லியிருப்பதுபோல் நெல்லுக்கு மட்டும்தான் பொறுக்கு விதை கொடுக்கப்படுகிறது. மற்ற விளைபொருள்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. எல்லாவற்றிற்கும் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் போன பல இடங்களில் விசாரித்ததில் "விதைக்கும் சமயங்களில் பணம் கிடைப்பதில்லை, பக்கத்திலே இருக்கக்கூடிய வியாபாரிகளிடமிருந்து வாங்குகிறோம், அறுவடை சமயத்தில் திருப்பிக் கொடுத்து விடுகிறோம், இதுதான் சௌகரியமாக இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். இதனால் நம்முடைய நோக்கம் ஈடேறாமல் போய்விடுகிறது. இதற்கு என்ன செய்யவேண்டுமென்றால், மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் "**grain doles**" என்று கொடுக்கிறார்கள். விவசாயிகள் விதைக்கக்கூடிய சமயங்களில், சர்க்காரே விதையாகக் கொடுத்து அறுவடை சமயத்தில் அந்தக் கடனை வசூல் செய்கிறார்கள். அந்த முறையைக் கொண்டுவந்தால் விவசாயிகள் பொறுக்கு விதைகள் வாங்குவதற்கு சௌகரியமாக இருக்கும்.

இன்னும் "ஸோஷல் எஜுகேஷன் ஆர்கனைசர்" என்ற அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். இந்த மாகாணத்தை மட்டுமல்ல, இதர மாகாணங்களையும் நாங்கள் சுற்றிப்பார்த்தோம். எந்த இடத்திலும் இந்த வேலை திருப்திகரமாக நடைபெறவில்லை. மேதா கமிட்டி என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். "கிராமத்தில் இருக்கக்கூடிய மககள்

விவசாயம் செய்பவர்கள். விவசாயத்திலே அவர்களுக்கு அக்கறை இருக்கிறது. விவசாயத்திற்குப் போகிறார்கள். திரும்பி வந்தவுடன் அக்கறை இருக்க மாட்டேன் என்கிறது. ஆகவே கல்விச் சலுகை 'கொடுக்க முடியவில்லை" என்று அந்தக் கமிட்டி ஒப்புக் கொள்கிறது. ஏதாவது ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி, இந்த ஆபீசரை அதில் சேர்த்து விடுவது தான் நல்லது. சர்க்காருக்கும் பணம் மிச்சமாய் இருக்கும். இவர்களால் கிராமங்களில் எந்தவிதமான மனமாற்றமோ காணப்படவில்லை.

கிராம கைத்தொழில்கள் மிகவும் முன்னேறியிருப்பதாக நாம் சொல்ல முடியாது. ஈரோடு பிளாக் டெவலப்மெண்டு பகுதியில் ஒரு வார்தா செக்கு 30 ரூபாய் விலை என்று சொன்னார்கள். அதை வாங்க யாரும் முன் வரவில்லை. இதை இனாமாகக் கொடுத்த போதும் அதை வாங்கிக் கொள்ளயாரும் முன் வரவில்லை. கிராமத் தொழில்கள் வளர வேண்டுமானால் அங்கு இருக்கக்கூடிய பொருளாதாரம் சீர்படவேண்டும். பஞ்சாபில் ஜரிகை போடுவது, பட்டன்கள் செய்வது போன்ற கைத்தொழில்கள் இருக்கின்றன. அதே போன்று நம் மாகாணத்திலும் சிறு கைத்தொழில்களை வைக்கமுடியும்.

நம் மாகாணத்தில் திண்டிவனத்தில் பூட்டு செய்யக்கூடிய தொழிற்சாலையும், ஈரோடில் பொம்மை செய்யக்கூடிய தொழிற்சாலையும் தவிர, வேறு எந்த விதமான லாபகரமான தொழிற்சாலையும் கிடையாது. ஈரோடில் செருப்பு தைக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையிருக்கிறது. முதன் முதலில் 45 பேர்களைக் கொண்டு ஆரம்பித்த தொழிற்சாலையில் 3 மாதங்கள் கழித்து 13 பேர் தான் வேலை செய்தனர். வெளியில் ஒரு நாளைக்கு கூலி 1½ ரூபாய். ஆனால் அந்த இடத்தில் கூலி 12 அணாதான். அங்கு தயார் செய்யும் செருப்பு அல்லது பூட்ஸின் விலையும் சாதாரணமாக வெளியில் கிடைக்கக்கூடியதைவிட விலை அதிகமாக இருக்கிறது.

கைக்குத்தல் அரிசி தயார் செய்ய 2,500 ரூபாய் மூலதனம் போட்டு பரிட்சித்துப் பார்த்ததில், 3 வருஷங்களுக்கு பிறகு 500 ரூபாய் தான் லாபம் கிடைத்ததாக தெரிய வந்தது. 15 பேர் வேலை செய்ய ஆரம்பித்த இடத்தில் 3 பேர் தான் இருந்தார்கள்.

பஞ்சாபில் உள்ள 'பாரிடாபாட்'-ல் கண்டக்டர்ஸ் செய்கிறார்கள். மற்றும் எலக்டிரிக்கல் சாமான்களும் செய்கிறார்கள். அந்த முயற்சியில் சர்க்கார் பாதிப் பணம் போடுகிறார்கள். தனிப்பட்டவர்கள் பாதிப் பணம் போடுகிறார்கள். மத்திய சர்க்கார் அதற்காக ஒரு கிராண்ட் கொடுக்கிறார்கள். அதேபோல் நமக்குத் தேவையான, எலக்டிரிக்கல் சாமான்களையும் செய்வதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸர்களின் வேலையைக் கவனிக்க தனியாக கலக்டருக்கு ஒரு பர்சனல் அஸிஸ்டெண்ட் நியமிக்க வேண்டும். 4 அல்லது 5 பிளாக்குகளை ஒன்றாகச் சேர்த்து பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸர்களின் வேலையை மேற்பார்வையிட 'ரீஜினல் டெவலப்மெண்ட் ஆபிஸர்கள்' என்பவர்களை நியமிக்க வேண்டும்.

11-34 a.m. ***Sri P. K. S. LAKSHMIPATHI RAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சமுதாய நல திட்டத்தின் மீது கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் கிராமங்கள் எந்த நிலையில் இருந்தன என்பதை சிந்தனையில் வைத்துக் கொண்டு நாம் இதை பரிசீலனை செய்து பார்த்தால் இந்த சமுதாய நல திட்டத்தைப் பற்றிய உண்மை நிலை நமக்கு விளங்கும். இப்பொழுது சிலர் இதை எதிர்த்து வாதிக்கின்றனர், குறை கூறுகின்றனர். கடந்த காலத்தில் விவசாயி புறக்கணிக்கப்பட்டிருந்தான். ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு வண்டியில் செல்வது என்றாலே, ஒரு நாள் பூராவும் பிடிக்கும். விவசாயியைப்பற்றி அரசாங்கம் எந்த விதமான கவலையும் கொண்டதில்லை. அவனுக்கு வேண்டிய கடன் வசதிகளை, பாசன வசதிகளை இவைகளைப்பற்றி அரசாங்கம் கவலைப்படாமல் இருந்த



காலம் இருந்தது. அதெல்லாம் மாறி, இப்போது அரசாங்கம் கிராமங்களில் கவனத்தைச் செலுத்தி, கிராமவாசியின் பக்கத்திற்கு சென்று அவனுக்கு வேண்டிய தேவைகளை கவனித்து வருகிறார்கள். கிராமவாசிக்கு வேண்டிய ரோடுகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், இன்னும் பல விதமான வசதிகள் இப்பொழுது செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த நேரத்தில் அரசாங்கம் சிறிது சோர்ந்திருந்தாலும், அவர்களுடைய கைகளை பலப்படுத்த வேண்டுமே தவிர, குறைகள் சொல்லிக் கொண்டிருந்தால் பலன் ஒன்றும் கிடையாது. கிராம சமுதாய திட்டத்தில் சில குறைகளைச் சொன்னார்கள். அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று தங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு பல வேலைகள் செய்கின்றனர். அவர்கள் கிராமவாசிகளை சரியான முறையில் அணுகி, அவர்களை தட்டி எழுப்பி, அவர்களுடைய ஒத்துழைப்பை பெற வேண்டும். ஆனால் அங்கே செல்லுகின்றவர்கள், தவறான கருத்தோடு சென்றால், அவர்களும் கெட்டு, கிராம வாசிகளின் நன்மையையும் கெடுத்துவிடுவது உசிதமானது அல்ல. இப்பொழுது, பொருளாதார புள்ளி விவரக்கணக்கை விட்டு விட்டு பார்ப்போம். ஆயிரக்கணக்கான மைல் ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பாலங்கள், நடைப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன, கிராமத்திலுள்ள விவசாயிகள் ஆடுமாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை வளர்ப்பு முதலியவைகளை தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் ஒரு கிராமத்திற்கும் இனனொரு கிராமத்திற்கும் செல்ல வேண்டும் என்றால் சரியான ரோடு வசதி கிடையாது. "ஹெலிகாப்டரில்" தான் போக வேண்டியிருக்கும். ஆனால் இப்பொழுது ரோடு வசதிகள் நன்றாக இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்த பிறகு அரசாங்கத்தைப் பாராட்டாமல், அரசாங்கம் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்பதைக் கேட்கும்போது கிராம பகுதிகளிலிருந்து வந்திருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நாம் மாயா ஜாலத்தால் முன்னேறி விட முடியாது. இன்றைக்கு பூலோக சுவர்க்கம் என்று சொல்லக்கூடிய சோவியத் ரஷியாவிலும் பல திட்டங்களை அமல் நடத்திய பிறகுதான் அவர்கள் முன்னேறி வர முடிந்தது. அதற்குள்ளாக அவர்கள் பல சங்கடங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. அவர்கள் கழுத்தில் உணவுக் கார்டுகளை கட்டிக் கொண்டு திரிந்துகாலம் ஒன்று இருந்தது. 270 அல்லது 300 ரூபாய் கொடுத்து பூட்ஸ் வாங்கின காலம் இருந்தது. ஆகையால் அவர்கள் பல திட்டங்களை வகுத்து அமல் நடத்தி வெற்றி கண்டிருக்கின்றனர்.

இந்த அபிவிருத்தி திட்டங்கள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு செல்ல ஜீப் வசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல ஒரு யுகம் மாறி மற்றொரு யுகம் வந்துவிடும்.

அரசாங்கம் இந்த சமுதாய அபிவிருத்தி வேலைகளை துரிதமாக செய்து நல்ல வெற்றி வாங்கி விடக்கூடாது என்று சிலர் மனதில் இருக்கிறது. அந்த மனப்பான்மையை விட்டு விடவேண்டும்.

யார் வேண்டுமானாலும் ஆளலாம். ஆட்சி பீடத்தில் இருந்தால்தான் மதிப்பு என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறான கருத்து. காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் இல்லாதபோது இப்பொழுதை விட 100 மடங்கு சக்தியும் பலமும் படைத்து இருந்தது. இதை என்னைப் போன்றி ஊழியர்கள் நன்றாக அறிவார்கள். ஆட்சிக்கு வந்ததனால், ஒரு சிலருக்கு சலுகை காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் இருப்பதால்தான் காங்கிரஸ்காரர்கள் சிலருக்கு தலை பணிய வேண்டியதாக இருக்கிறது. அது வேண்டாம் 11-40 a.m.
என்றுதான் நாங்கள் கருதுகிறோம். காந்திஜி கனவு கண்டதை இன்று தான் நாம் பார்க்கிறோம். அவர் காலத்தில் செய்யவேண்டும் என்ற காரியங்களைத்தான் நாங்கள் இப்பொழுது செய்து வருகிறோம். ஆங்கி

லேயர்களை எதிர்த்து போராடிய காலத்தில் அவர் சொன்னதைத்தான் நாம் இப்பொழுது செய்து வருகிறோம். கிராமத்திற்குத் "திரும்பிப்போ" என்று சொல்லி வந்தார். அவர் எழுப்பிய கோஷத்தின் பயன் தான் இப்பொழுது நடைபெற்று வருகிறது. அவர் காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று வைத்து விட்டுப்போன திட்டங்கள்தான் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவர் எழுப்பிய கோஷம் இன்று பயனடைந்து வருகிறது. இப்பொழுது நடைபெற்று வருவதைக் கண்டு கிராமங்களிலுள்ள மக்கள் எவ்வளவோ சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைக்கண்டு நமக்குக்கூட சந்தோஷமாக இருக்கிறது. கிராமத்திலுள்ள மக்கள் அரசாங்கம் பாதி கொடுக்கிறோம் என்று சொல்லும்போது தாங்களும் பாதிப் பணம் கொடுக்கிறோம் என்று சொல்லி அப்படிக் கொடுக்க முன் வருகிறார்கள். அதைப் பார்க்க ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. இந்த நிலைமையில் இப்பொழுது மக்களுடைய மனம் மாறுதல் அடைந்திருக்கிறது. இந்த முறையில் பல ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டும், ரோடுகள் போடப்பட்டும் வருகின்றன. இன்றைக்குப் பார்த்தால் கிராமங்களில் மக்கள் கட்சி பாகுபாடின்றி அவர்கள் நல்ல முறையில் எதிர் காலத்தை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேயே அவர்களும் நடந்துகொண்டு வருகிறார்கள். இந்த திட்டங்கள் நல்ல முறையில் எல்லா இடங்களிலும் நடந்து வருகிறது என்ற எண்ணம் அவர்களிடத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த திட்டம் சில இடங்களில் அமுலுக்கு வந்ததன் காரணமாக நாடு பூராவும் சுபிட்சமாக இருக்கும் என்ற காலத்தை அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த திட்டம் எந்த இடங்களில் இன்னும் அமுலுக்கு வராமல் இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் சீக்கிரத்தில் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவு துரிதமாகக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு துரிதமாகக் கொண்டு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். 75 பங்கு அரசாங்கமும் 25 பங்கு கிராமத்தார்களும் என்று இருப்பதை ஊர்ஜிதமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பாதிப் பணம் சர்க்காரும் பாதிப் பணம் கிராம மக்களும் கொடுக்க வேண்டும் என்று அமைக்கக் கூடாது. ஏனென்றால் கிராம மக்கள் இந்தப் பாதிப் பணத்தைக்கூட கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். பல கிராமங்களில் இந்தப் பாதிப் பணத்தைக்கூட கொடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் கடன்பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களை சரி பாதித் தொகை கட்டவேண்டும் என்று சொல்வது சரியல்ல என்பதை நான் அரசாங்கத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய பழனியில் சுமார் பத்து வருஷங்களாக மழையே கிடையாது. பத்து வருஷங்களாக மழை பெய்யாத பிரதேசமாக இருக்கிறது. இதைக் கேட்டால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். கோயம்பத்தூர் மதுரை ஜில்லாக்கள் சந்திக்கும் கிராமங்களில் மழை இல்லாமல் ஆடு மாடுகளுக்குக்கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிணற்றிலும் தண்ணீர் கிடையாது. வெள்ளாண்மை பல வருஷங்களாகக் கிடையாது. இந்த நிலைமையில் அங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மழை இல்லாத காரணத்தால் அங்கு உள்ள மக்கள் இந்த திட்டங்களை அந்தப் பிரதேசங்களுக்கு வரவேற்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் சர்க்காருக்கு பக்க பலமாக இருந்து இந்த திட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆகவே இந்தப் பிரதேசங்களுக்கும் இந்த திட்டங்களை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த திட்டங்களில் பல குறைபாடுகள் இருந்தாலும் அவைகளை நீக்கி நல்ல முறையில் இது பயன்படும்படியாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படி பயன்படுத்திக்கொண்டு நாம் முன்னேற வேண்டியதாக இருக்கிறது. குற்றத்லதைச் சொல்லிக்கொண்டே இருப்பதில் பிரயோசனம் இல்லை.



குற்றம் இல்லாமல் எந்தக் காரியமும் இருக்காது. குற்றம் சொல்ல வேண்டும் என்று நினைத்தால் எந்தக் காரியத்திலும் குற்றம் கண்டு பிடிக்கலாம். இதற்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் குற்றங்களைப் பற்றியேதான் பேசினார்கள். அப்படிப் பேசுவது சரியல்ல. குற்றம் சொல்லுகிறவர்கள் அந்தக் குற்றங்கள் நடைபெறாமல் இருக்க திட்டங்களையும் யோசனைகளையும் சொல்லவேண்டுமே தவிர குற்றங்களையே சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. குற்றத்தையே சொல்லிக்கொண்டிருந்தால் சமுதாய அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியாது. ஆகவே குற்றங்களைச் சொல்லாமல் இருந்தால், நல்ல யோசனைகளைச் சொல்லி வந்தால் இந்த திட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்தலாம் என்பதை சொல்லிக்கொண்டு சில குறைபாடுகள் இருப்பதை நீக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI P. G. MANICKAM: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து சில சங்கதிகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன். இந்த திட்டத்தின் கீழ் மூன்று வித திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவையாவது சமுதாய நல திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம் என்ற மூன்று வகை திட்டங்கள் நடைபெறுகின்றன. ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு பிரதேசத்தில் இந்த திட்டமானது நடைபெறுகிறது. இந்த திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டும். நாட்டில் 100-க்கு 80 பேர்கள் விவசாயிகளாக இருக்கின்றார்கள். அவர்களுடைய நலனைக் கருதி இந்த திட்டங்கள் நல்ல முறையில் நடை பெறவேண்டும். இவைகள் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதற்காக கவர்ன்மெண்ட் எந்தெந்த விதங்களில் உதவிகளைச் செய்யவேண்டுமோ அந்தந்த வகைகளில் உதவிகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி உதவி செய்யக்கூடிய முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த திட்டங்கள் சரிவர நடைபெறவேண்டும் என்பதற்காக பல யோசனைகளையும் கவர்ன்மெண்ட் கூறிக்கொண்டு வருகிறார்கள். விவசாயத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டால் விவசாயம் செய்வதற்கு சர்க்கார் என்ன உதவி செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டு வருகிறார்கள். முக்கியமாக விதை பண்ணைகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ரசாயன உரங்களை சப்ளை செய்கிறார்கள், கழிவு உர உற்பத்திக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். பூச்சி மருந்து வாங்கிக் கொடுத்து அவைகளைத் தெளிப்பதற்குவேண்டிய கருவிகளையும் வாங்கிக் கொடுத்து வருகிறார்கள். இவைகளுக்கு எல்லாம் ஏராளமாக தொகையும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் நல்ல முறையில் விவசாயக் காரியங்கள் நடைபெறவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இப்படி ஒரு முறைபாடு இருக்கிறது என்பதைக் கூட நமது நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார். பல அதிகாரிகளுடைய கவனக் குறைவால் பல விஷயங்கள் விவசாயிகளுக்கு தெரியவில்லை. போதுமான கவனம் அதிகாரிகள் அதில் செலுத்துவது இல்லை. இதற்கு சிறப்பாக அதிகாரிகள் முன் வரவேண்டும். ஒவ்வொரு காரியங்களைச் செய்வதற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பூச்சி மருந்தை எடுத்துக்கொண்டால் அவைகளை எப்படி, எப்பொழுது தெளிப்பது என்பதை அதிகாரிகள் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். போதுமான அக்கரை அதிகாரிகள் அதில் செலுத்தவில்லை. நெற்பயிரை அழிப்பதற்கு பூச்சி மருந்துகள் ஏராளமாக இருக்கின்றன. பூச்சிகள் நெற்பயிரை பெருவாரியாக அழிக்கும்போது அந்தப் பூச்சி மருந்துகளை எப்படி உபயோகப்படுத்துவது, கருவிகளை எப்படி உபயோகப்படுத்துவது என்பது கூட தெரியாமல் இருக்கிறார்கள். ஆனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? அந்த இடங்களுக்கு இந்த அதிகாரிகள் சென்று அவைகளை எப்படி உபயோகிப்பது என்று தெரிவிக்கவேண்டும். கவர்ன்மெண்ட் விவசாயிகளுக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறார்களே தவிர அதிகாரிகள் அப்படி இல்லை.

அதைக் போலவேதான் தக்காவி கடன் கொடுப்பதும். தக்காவிக் கடன்கள் கொடுக்கவேண்டும் என்றும் இன்னும் பலவசதிகளைச் செய்யவேண்டும் என்றுதான் கவர்ன்மெண்ட் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விஷயம் விவசாயிகளுக்குத் தெரியாமல் இருப்பதால் தான் அவர்கள் அதைக் கேட்டு வாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் வருஷக் கடைசியில் அந்தத் தொகையை திருப்பி சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகையினால் தான் பொது ஜனங்கள் விஷயங்களில் அதிகாரிகள் அக்கரை எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய முற்படவேண்டும். அரசாங்கத்தை குறை சொல்லக்கூடிய அளவில் அதிகாரிகளை வைத்துக்கொண்டிருந்தால் விவசாயம் அபிவிருத்தி அடையாது. இப்பொழுது இரண்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நாட்டிற்குத் தேவையான அளவில் உற்பத்தி செய்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஐந்தாண்டு திட்டத்தில் பத்து அல்லது பனிரெண்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்றுகூட சொல்லலாம். இந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் இன்னும் அதிகமாக கூட உற்பத்தி செய்யலாம். அந்த அளவில் உற்பத்தி செய்து நாம் வெளி நாட்டிற்குக் கூட அனுப்ப முடியும். போட்ட திட்டங்களை சரிவரநடத்தினால்தான் நாம் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் இருப்போம். ஆனால் விவசாயிகளுக்கு அரசாங்கம் போடும் திட்டங்கள், உதவிகள், தெரியாமல் இருந்தால் உற்பத்தியைப் பெருக்கவே முடியாது. ஒதுக்கிய பணம் செலவழிக்கப்படாமல் இருந்தால் அதன் மூலம் இந்ததிட்ட குறைந்துகொண்டே போகும்.

கிராமங்களை எடுத்துக்கொண்டால் அங்கே பல விதமான காரியங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. கிராம சுகாதார முறையை எடுத்துக் கொண்டால் அங்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. குடி தண்ணீர் வசதிகளுக்குப் போதுமான தொகை ஒதுக்கப் வில்லையா ? போதுமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது 36 லட்சத்தி சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாதம் வரையில் 5 லட்சத்தி சொச்சம் ரூபாய் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி இருக்கக்கூடிய ஆறு மாதங்களில் எவ்வளவு கிணறு வெட்டப்போகிறார்களோ என்னமோ ? இந்த விஷயம் சொல்ல முடியாமல் இருக்கிறது. பல இடங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. ஆனால் மக்கள் கிணறுகள் வேண்டும் என்று தெரிவிக்காமல் இருக்கிறார்களா ? நிறைய விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் காரியங்கள் திட்டப்பிரகாரம் நடைபெறவில்லை. இப்பொழுது நான் கேள்விப்பட்டேன். ஹரிஜன ஏழைகள், பின்தங்கிய வகுப்பினர்கள் கிணறு வெட்டிக்கொடுப்பதற்கு 25 சதவிகிதம் தொகை கூடி கட்ட வேண்டியதில்லை என்று ஒரு ஜி. ஒ. போடப்பட்டிருக்கிறது ஆனால் அந்த ஜி. ஒ. ஜனங்களுக்கு தெரியாது. ஹரிஜனங்கள் உள்பட எல்லோரையும் அதிகாரிகள் பணம் கேட்கிறார்கள். குறிப்பாக, தாளவாடியில் இம்மாதிரி கேட்பதாக நான் அறிகிறேன். இந்த உத்தரவுகளை கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுக்கு நல்ல முறையிலே தெரியப்படுத்தவேண்டும். கிணறு
11-50 a.m. வெட்டும் விஷயமாக முக்கியமாக கவனிக்கவேண்டியது Contract-க்கு கொடுக்கின்றன "லிஸ்டம்". ரூ. 2,000-க்கு கிணறு வெட்டுவதற்கு கண்டிராக்டர்கள் வரமுடியாது என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும். சிக்கல்கள் நீக்கப்படவேண்டிய முறையிலே கவனித்து செய்யவேண்டிய காரியங்களை துரிதமாகச் செய்வதற்கு கவர்ன்மெண்டார் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வீடுகள் கட்டும் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அது பல வித ரகங்களிலே இருக்கின்றன. எத்தனையோ விதங்களில் வீடு கட்டும் திட்டம் கொண்டுவரப்படுகிறது. சமுதாய நலத் திட்டப் பிரதேசங்





களில் மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு கவர்ன்மெண்டார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். லோயர் பவானி சமுதாய நலத் திட்ட பிரதேசத்தில் நீர்க்கசிவினால் பாதிக்கப்பட்ட வீடுகளை கட்டுவதற்காக கவர்ன்மெண்டார் ஏராளமான தொகையை ஒதுக்கினார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட வீடுகள் கட்டப்பட்டன. இந்த வீடுகளில் நிலைமை இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதை கவர்ன்மெண்டார் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். அந்த வீடுகள் கட்டப்பட்டு 2, 3 வருஷங்கள் ஆகின்றன. அதற்குள் அனேக வீடுகள் விழுந்துவிட்டன. இன்னும் ஒரு பெரிய காற்று அடித்தால் முக்கால் வாசி வீடுகள் விழுந்துவிடும்படியான நிலையில் இருக்கின்றன. ஆகவே, அதற்காக அதிகாரப் பற்று உள்ளவர்களையும், அதிகாரப் பற்றற்றவர்களையும் கொண்ட ஒரு தனிக் கமிட்டி கலெக்டர் தலைமையில் நியமித்து அதை கவனிக்கவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு வைத்திய வசதி மிகவும் அவசியம். இது சம்பந்தமாக கிராமங்களில் கவர்ன்மெண்டார் அனேக திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். பிரதம ஆரோக்கிய நிலையங்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு கவர்ன்மெண்டார் திட்டமிடவேண்டும். சமுதாய நல அபிவிருத்தி பிரதேசங்களில் எல்லா இடங்களிலும் கிராம ஜனங்கள் வைத்திய வசதி பெறுவதற்காக இந்த ஆரோக்கிய நிலயங்களை கூடிய சீக்கிரம் விஸ்தரிக்கவேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN:** 'பாயிண்டு ஆப் இன்பர்மேஷன்,' ஸார். கனம் அங்கத்தினர் பேசிய சமயத்திலே கீழ்பவானிப் பிரதேசத்தில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்ததைப் பற்றி புகார் செய்தார்கள். சர்க்காரால் அதற்கு ஒரு ஆலோசனைக் கமிட்டி நியமிக்கப்பட்டு அது நல்ல முறையில் நடந்துவந்து. அந்த சமயத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடன் ரிசர்வ் தொகுதியில் இருந்தார். அவர்கள் அப்பொழுது இது விஷயமாக நேரில் அக்கரை எடுத்துக்கொண்டார்களா ? உதாரணமாக கொடிவேரியில் ஹரிஜனங்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை வடநாட்டிலிருந்து வந்தவர்கள் பார்த்துவிட்டு மிகவும் சந்தோஷப்பட்டு பாராட்டியிருக்கிறார்கள். சமுதாய நலத்திட்டத்தின்கீழ் வீடு கட்டும் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்காக சட்டசபை அங்கத்தினர்கள் அதில் பூரணமாக நேரில் பங்கு எடுத்துக்கொண்டு அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நடக்குமே ஒழிய, புகார் சொன்னால் மட்டும் வெற்றிகரமாக நடைபெற முடியாது.

**Sri V. S. MANICKASUNDARAM:** Sir what is the point of information involved in this matter? An hon. Member cannot be allowed to raise a point of information without any information containing in it.

**Sri P. G. KARUTHIRUMAN:** I can do that கனம் அங்கத்தினர் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி புகார் சொல்லியதால், நான் அவர்களுக்கு இன்பர்மேஷன் தெரிவிப்பதற்காகச் சொன்னேன்.

**Sri P. G. MANICKAM:** நான் இதில் கலந்துகொள்ளவில்லை என்று என்மீது குற்றம் சுமத்தினார். இதற்காக நான் மெம்பர் அவர்களை "சாலென்ஜ்" பண்ணுகிறேன். இன்று இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தட்டும். இன்று பவானி தாலூகாவிலே ஒரு கிராமத்திலே எல்லா வீடுகளும் விழுந்துவிட்டன என்று ரிபோர்டு கிடைத்திருக்கிறது. இது கவர்ன்மெண்டுக்குத் தெரியும். . . .

***SRI A. R. MARIMUTHU:** கனம் தலைவர் அவர்களே, நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன். நம் நாட்டைப் பொறுத்த வரையிலே கிராமங்கள் தான் நம்முடைய பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படை என்பதை உணர்ந்து இந்த அபிவிருத்தித் திட்டங்களை எடுத்து சர்க்கார் நடத்தி வருவதை யாரும் ஆட்சேபிப்பதற்கு இல்லை. இருந்தாலும் அதில் உள்ள சில குறைபாடுகளை நாம் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. இன்றைக்கு கிராமங்களிலே இருக்கப்பட்ட விவசாயிகளின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அதிலும் குறிப்பாக நிலம் இல்லாத கூலி வேலை செய்து பிழைக்கும் விவசாயிகளுடைய நிலையோ சொல்லவேண்டிய அவசியமே கிடையாது. ஆகவே, நாம் எந்த அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, கிராமவாசியினுடைய வருவாய் எவ்வளவு தூரம் உயர்வதற்கு வழிவகை செய்திருக்கிறோம் என்பதை அடிப்படையாக கொண்டு தான் நம்முடைய தேசீய அபிவிருத்தி திட்டங்களின் அபிவிருத்தியைக் கணக்கிட முடியும். ஆகவே, இன்றைக்கு விவசாய அபிவிருத்தி என்று எடுத்துக்கொண்டோமானால், அந்த விவசாய அபிவிருத்தி செய்வதற்கு என்ன இடையூறுகள் இருக்கின்றன. அபிவிருத்திக்குக் குந்தகமாக என்ன இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு பார்த்தால், இன்றைக்கு விவசாயிகளுக்கு விவசாயத்தை காலத்தோடு செய்வதற்கான பண வசதி, விவசாயத்திற்கு வேண்டிய உர வசதி இவைகளையெல்லாம் நாம் செய்து கொடுப்பதோடு கூட, நவீன விவசாய முறையை கடைப்பிடிப்பதற்கான விவசாய கருவிகளையும் நாம் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக தேசீய அபிவிருத்தித் திட்டத்தில் இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளுக்கு அதிகப்படியான கடன் வசதி காலத்தோடு செய்வதற்கு முயற்சி எடுப்பதோடு கூட, நவீன விவசாய கருவிகள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். உதாரணமாக ஒரு கிராம சேவக் கிராமத்திற்கு சென்று விவசாய அபிவிருத்திக்காக நவீன முறையை கைகொள்ள வேண்டுமென்று பிரசாரம் செய்யும்போது, அதை வாயாலே சொல்ல முடிகிறதே தவிர, செயல் முறையில் செய்து காண்பிப்பதற்கு அவரிடத்தில் கருவிகள் கிடையாது. ஆகவே கிராமங்களில் நல்ல முறையில் பிரசாரம் செய்வதற்காக நேரிடையாக நவீன முறைகளை செயலில் காண்பிப்பதற்காக ஒவ்வொரு கிராம தேவைக்கும் தகுந்தபடி விவசாய உபகரணங்கள் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவையான விவசாய கருவிகளை அந்தந்தக் கிராமத்திலே உற்பத்தி செய்வதற்கான வழி வகை செய்யவேண்டும் அப்பொழுதுதான் அந்தக் கிராம மக்களுக்கு வேலை வசதி கிடைக்கும் கிராமத்திலுள்ள தொழிலாளிகளுக்கு உபகரணங்கள் செய்வதற்கான படிப்பினை பெற முடியும். அந்தக் கிராமத்திற்குத் தேவையான உபகரணங்களும் அந்த கிராமத்திலேயே கிடைக்கும். ஆகவே, அந்தந்த பிளாக்குகளில் இம்மாதிரி விவசாய கருவிகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று நான்
12-00 p.m. கேட்டுக்கொள்கிறேன். இன்று, விவசாயிகளின் சுபிட்சமும் முன்னேற்றமும் விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதைப் பொறுத்து மட்டும் இல்லை. அவர்களுடைய சிறு கைத்தொழில்களும் அபிவிருத்தியடைய வேண்டும். சிறு கைத் தொழில்களைப் பொறுத்தவரையில், சர்க்காருடைய திட்டம் சரியாக நடக்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். சென்ற ஆண்டு (1957–58-ல்) சிறு கைத்தொழில்களுக்காகவும் கிராமக் கைத்தொழில்களுக்காகவும் 2,15,000 சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது ஆனால் அந்தத் தொகையில் 27,000 ரூபாய் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? சிறு கைத்தொழில்களின் அபிவிருத்தி மிகக் குறைவான அளவில் தான் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறப்பது, பாலங்கள் கட்டுவது முதலிய காரியங்களைச் செய்வதால் மட்டும் கிராமங்கள் மிக்க சுபிட்ச நிலையடையும்படி செய்துவிட முடியாது. கிராமங்களிலுள்ளவர்கள் நல்வாழ்வு



பெறவேண்டுமானால், அவர்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டும். கிராம மக்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டுமானால், கிராமங்கள் தோறும் சிறு கைத்தொழில்கள் பரவலான முறையில் அபிவிருத்தியடையச் செய்வதற்கு சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு கிராமக் கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி செலவழிக்கப்படவில்லை. இந்த ஆண்டு கிராமக் கைத்தொழில்களுக்காக ரூ. 21,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு கைத்தொழில்களுக்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்றும், கிராமக் கைத்தொழில்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும், அவைகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தை சரிவரச் செலவழிக்க வேண்டுமென்றும், கிராமக் கைத் தொழில்களின் அபிவிருத்திக்கு பூர்ண முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு கால்நடை அபிவிருத்திக்காகவும் கணிசமான தொகை ஒதுக்கப்படவில்லை. சென்ற ஆண்டு இதற்கா ஒதுக்கப்பட்ட தொகையாகிய ரூ. 2,95,000-ல் 98,000 தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த தொகை தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் அபிவிருத்தியடைவதற்கும், கிராம மக்களின் பொருளாதார நிலைமை உயருவதற்கும், கால்நடைகள் அபிவிருத்தியடைய வேண்டியது மிகவும் அவசியம் ஆகவே கால்நடை அபிவிருத்தியிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் உள்ள தொழிலாளர்களில் விவசாயத் தொழிலாளர்களல்லாத கொல்லர்கள், தச்சர்கள் முதலிய தொழிலாளர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, அவர்களுடைய தொழில்களை அபிவிருத்தியடையச் செய்வதன் பொருட்டு, அவர்களுக்கு நவீன ஆயுதங்கள் கொடுப்பதற்கும் பொருளாதார வசதி செய்வதற்கும் திட்டத்தில் வகை செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலில் உள்ள இடங்களில், சர்க்கார் தரிசு நிலங்களும் புறம்போக்கு நிலங்களும் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் அவைகள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை சர்க்கார் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால், நாட்டு மக்களிடையே கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு உகந்த மனப்பான்மை வளரும். மேலும், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில், கிராம மக்கள் அவர்களாகவே பாடுபட முன்வரும் மனப்பான்மையை வளர்ப்பதற்கு திட்டத்தில் வழிவகை செய்யவேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் கருத்திற்கொண்டு சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராமங்களில் கட்டிடங்களைக் கட்டுவது மாத்திரம் திட்ட வேலையாக இருக்கக்கூடாது. விவசாயிகளின் பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்களை நிறைவேற்றினால்தான் கிராமங்களில் உண்மையான அபிவிருத்தியைக் காணமுடியும். கிராம வைத்திய வசதியைப் பற்றி நாம் கேட்கவோ சொல்லவோ வேண்டியதில்லை. இன்று கிராம மக்களுக்கு ஆங்கில வைத்திய வசதி கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. கிராம மக்கள் தங்களுக்கு வைத்தியம் தேவைப்படும்போது, சித்த முறையிலும் நாட்டு வைத்திய முறையிலும் தான் வைத்தியம் செய்து கொள்கிறார்கள். அவர்களை சித்த வைத்தியத்தையும், நாட்டு வைத்தியத்தையும் நம்பித் தான் வாழ வேண்டியிருக்கிறது. அவைதான் அவர்களுக்கு சுலபமாகவும் குறைந்த செலவிலும் பெறக்கூடியவையாக இருக்கின்றன. ஆகவே, இந்த வைத்தியங்களில் உபயோகிக்கப்படும் வேர்களையும் மூலிகைகளையும் ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை இந்தத் திட்டத்தின் கீழ் செய்யவேண்டும். இவைகளை உற்பத்தி செய்வது சம்பந்த

மான அதிகாரங்களை ஒவ்வொரு பிளாக் அதிகாரியிடமும் ஒப்படைக்கலாம். இதைச் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri A. E. CHANDRASEKARA NAYAGAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் இந்தத் திட்டங்கள் ஓரளவு பலன் கொடுத்திருந்தபோதிலும், நாம் எதிர்பார்த்த அளவு இவை பலனளிக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டங்களுக்கெல்லாம் பணம் ஒதுக்கப்படுகிறது. சில திட்டங்களை நிறைவேற்றும்போது ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்வதில் சர்க்கார் நிதானமாக இருந்திருக்கிறார்கள். அதன் காரணமாக சில திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் சர்க்கார் செலவழிக்காமல் இருந்திருக்கிறார்கள். இருந்தாலும் எல்லாப் பணத்தையும் என் தக்க முறையில் செலவு செய்யமுடியவில்லை என்று பார்த்து ஆண்டு தோறும் ஒதுக்கப்படும் எல்லாப் பணத்தையும் தக்க முறையில் செலவழித்து திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சர்க்கார் முயற்சிக்கவேண்டும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் முக்கியமாக ஜில்லாவை அடிப்படையான ரீதியில் ஆரம்பிக்கப்பட்டன. திட்டம் தயாரிக்கப்படும்போது ஆங்காகாங்குள்ள இயற்கை வசதிகளும், பல திட்டங்களுக்கான வாய்ப்புகளும் ஆராயப்பட்டு மக்களிடமிருந்து கேட்டறியப்படவில்லை. அதிகாரிகளுடைய யோசனைகளின் பேரில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. இவை மக்களுடைய நலனுக்காக, மக்களுடைய ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள். ஆகவே, இந்தத் திட்டங்களுக்கு மக்களுடைய யோசனைகளும், ஒத்துழைப்பும் பெறப்பட வேண்டும். திட்டங்களுக்கு நல்ல விளம்பரம் கொடுத்தால், மக்கள் அவைகளில் அக்கறை கொள்வார்கள் என்று நம்புகிறேன். மேலும், திட்டச் செலவிற்காக பணம் தேடுவதில் காட்டும் அக்கறையைவிட அதிகமான அக்கறையை ஒதுக்கப்பட்ட பணத்தை பூராவும் தக்க முறையில் செலவிடுவதில் காட்டவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, சாதாரணமாக, ஒரு அபிவிருத்தி வட்டாரத்தில் அபிவிருத்தி வேலைகள் எவ்வாறு நடக்கின்றன் என்று பார்ப்போம். முதலில், வட்டாரத்தை அபிவிருத்தித் திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கு சர்க்காரிடமிருந்து ஒரு நாள் முன்னதாக உத்தரவு வருகிறது. உத்தரவு வந்த பிறகு அதிகாரிகள் அந்த வட்டாரத்திற்கு வருவதற்கு 3-4 மாதங்கள் ஆகின்றன். அந்தப் பெரிய அதிகாரிகள் வந்த பிறகு எல்லா சிப்பந்திகளும் வருவதற்கு மேலும் மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆகவே அதிகாரிகளும் சிப்பந்திகளும் வருவதற்கே 6 மாதங்கள் ஆகிவிடுகின்றன. அவர்கள் எல்லோரும் வந்த பிறகு அந்தப் பிரதேசம் " ஸர்வே " செய்யப்படுவதற்கு 6 மாதங்கள் ஆகின்றன. ஸர்வே செய்யப்பட்ட பிறகு தான் திட்ட வேலைகள் ஆரம்பமாகின்றன. ஆகையால் அந்த வட்டாரம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சர்க்கார் உத்தரவு வந்து ஒரு வருஷம் ஆன பிறகு தான், திட்ட வேலைகள் ஆரம்பமாகின்றன.

மேலும், அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில், ஜில்லா ரீதியிலோ, ப்ளாக் ரீதியிலோ நடக்கும் கூட்டங்கள் சம்பிரதாயமான முறையில் தான் நடக்கின்றன. திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடனோ, மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனோ அக்கூட்டங்கள் நடப்பதில்லை. கூட்டங்களை எந்த முறையில் நடத்த வேண்டும் என்பது பற்றி எந்த விதிகளும் இல்லை என்று நினைக்கிறேன். அந்த விதிகள் இல்லாததால் அக்கூட்டங்களை சரியாக நடத்தவில்லை என்று நம்புகிறேன். அந்தக் கூட்டங்களில், அதிகாரிகள் தங்கள் ரிப்போர்ட்டுகளை வாசிக்கிறார்கள். நாங்கள் வாய்மொழியாகச்



சொல்லும் விஷயங்களை குறித்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான். அதற்கு மேல் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அந்தக் கூட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவைகளை எவ்வாறு நடத்தவேண்டும் என்பது குறித்து விதிகள் வகுக்கவேண்டும். அப்படிச் செய்தால் தான் அபிவிருத்தித்திட்டங்கள் நன்றாக நடக்கும் என்று நான் கருதுகிறேன். சாதாரணமாக அபிவிருத்தித் திட்ட வேலைகளில் கிராமங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எந்த வேலையும் கிராம ரீதியில் செய்யப்படவேண்டும். இப்போது இத்திட்டங்களினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறதென்பதை கிராம மக்கள் உணரவில்லை. கிராமங்களில் வீடு கட்டும் திட்டங்களையும், சுகாதாரத் திட்டங்களையும் நிறைவேற்றவேண்டும். திட்டங்களை எவ்வளவு திறமையாக வகுத்து நிறைவேற்றுவது என்பது குறித்து மத்திய சர்க்கார் அவ்வப்போது அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளும் அளவு அக்கறை நாம் எடுத்துக்கொள்வதில்லை. நாம் அதே அளவு அக்கறை காட்டி கிராம அடிப்படையிலும், ஜில்லா அடிப்படையிலும் ராஜீய அடிப்படையிலும் இத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப் டம்படி செய்யவேண்டும். இப்போது நம் ராஜ்யத்தில், சாதாரணமாக, எங்கள் ஜில்லாவைப் போன்ற ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் குச்சு வீடுகளும் சுகாதார வசதியற்ற வீடுகளும் தான் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் சுகாதார வசதியுடன் கூடிய நல்ல வீடுகளை கட்டிக் கொடுக்கவேண்டும். ஒரு கிராம திட்ட போர்டையாவது அமைத்து கிராமத்தின் அமைப்பும் கிராமங்களில் சுகாதார வசதியுள்ள வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தை வகுத்து நிறைவேற்ற வேண்டும். கிராமங் 12-10 p.m. களில் மூங்கில் கழிகள், பனை ஓலைகள் முதலியவைகளை உபயோகித்து நல்ல வீடுகளைக் கட்ட முடியும். இப்படி கிராமாந்திர வீடுகளை கட்டும் திட்டத்தை சுகாதாரத் துறையிலும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள நிபுணத்துவம் வாய்ந்த ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் நல்ல நிபுணர்கள், மற்றும் சட்டசபையிலே உள்ளவர்கள் ஆகியவர்களைக்கொண்ட கமிட்டிகள் அமைத்து, கிராமாந்திர வீடு கட்டும் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும். கிராமங்கள் தோறும் மற்ற ஐந்தாண்டு திட்டத்தில் உள்ள சுகாதாரத் திட்டத்தில் எல்லாமகூட நாம் அக்கறை கொள்ளவில்லை. இதற்காக 126 லட்ச ரூபாய் ஒதுக்கியும், 31 லட்ச ரூபாய் தான் செலவு செய்திருக்கிறோம். கிராமங்கள் தோறும் ஒரு பெரிய அடிப்படையான விஷயம் என்பதைக் கருதி ஒரு கிராம சுகாதாரத் திட்டத்தை வகுத்து கிராமாந்திரங்களில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாத் திட்டங்களையும் விட கல்வி முன்னேற்றம் மிக அவசியமானது. "மாஸ் எடுகேஷன்" என்ற முறையில் நாட்டு மக்கள் எல்லோரையும் கல்வியில் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும். கல்வி முன்னேற்றம் ஏற்பட்டால்தான் மற்ற துறைகளிலும் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை உணர்ந்து அதற்காக அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, சோஷல் எடுகேஷன் ஆபீசர்களாக இருப்பவர்கள் இந்த முறையில் ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெற முடியும் என்பதை எடுத்துச் சொல்லி, அந்த வேலைகளைச் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் அவர்கள் உற்பத்தி செய்யும் தானியத்தை நல்ல முறையில் பக்குவப்படுத்தி, சேமித்து வைக்க இந்தத் திட்டத்தில் வகை செய்யவேண்டும். உற்பத்தி செய்யும் தானியத்தைச் சேமித்து வைக்கவோ, பக்குவப்படுத்தவோ வசதி இல்லை. அவைகளை அபிவிருத்தி செய்யவேண்டும்.

கிராமச் சிறு தொழில்களாகிய தச்சுத் தொழில், கொல்லுத் தொழில முதலியவைகளை வளர்த்து, அந்தந்த கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்து, அந்தப் பிளாக்கிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயமாக இதை ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு முறையை நாம் செய்யவேண்டும். சிறு தொழில்கள் எல்லாவற்றிலும் அதிகக் கவனம் செலுத்தாமல் இருப்பதோடு, அதில் செலவழிக்கக்கூடிய தொகையும் மிகக் குறைவாக இருந்து வருகிறது. குறிப்பாக, குடிசைத் தொழில்கள், கதர் அபிவிருத்தி விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தும், அதிகாரிகள் மக்களோடு சரிவர ஒத்துழைத்து காரியங்களைச் செய்ய முயன்றும், மற்றும் சில சட்ட திட்டங்கள் எக்கச்சக்கமாக இல்லாமல் (flexible) ஆக இருந்து, நல்ல முறையில் திட்டத்தைப் பயன்படுத்தவேண்டுமென்று திட்டத்தில் இருந்தாலும், இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டானது அதற்கு மிகவும் குறுக்கே இருக்கிறது. ரோடுகள் அமைப்பது, கட்டிடங்கள் கட்டுவது முதலிய விஷயங்களில் அளவு எடுப்பது முதலிய எந்த வேலையிலும் அவர்கள் அதிகமாக ஊக்கம் எடுத்துக் கொள்வதில்லை. அம்மாதிரியான காரியங்களில் ஒத்துழைக்கக்கூடிய அளவுக்கு இன்ஜினீரிங் இலாகா அதிகாரிகளை அமைத்துக்கொண்டால் நாம் இந்தத் திட்டங்களில் வெற்றி காண முடியும்.

சிறு நீர்ப்பாசன வசதி விஷயமாக, இன்ஜினீரிங் இலாகாவானது எஸ்டிமேட் தயாரிப்பதில் மிகப் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. இம்மாதிரி சிறு நீர்ப்பாசனத் திட்டங்களும் அதிக ஊக்கமும் கவனமும் செலுத்த அந்த இலாகாவை மாற்றியமைத்தால் உணவு உற்பத்தியோ மற்ற காரியங்களோ நல்ல முறையில் நடந்து, அவைகளில் வெற்றி காண முடியும்.

கிராமங்களிலே உள்ள மக்கள் சிறு சேமிப்பு இயக்கத்தில் ஊக்கம் கொள்ளவேண்டுமென்றால், அதற்குச் சரியான திட்டம் இருக்கவேண்டும். ஏனென்றால், கிராமங்களில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் உண்டிகள் செய்து கொடுக்கிறார்கள். அப்படித் தரப்படும் உண்டிகளுக்குறிய துட்டும் மக்கள் கொடுக்கவேண்டியிருப்பதால், சேமிப்பு விஷயத்தில் நல்ல பலன் ஏற்படவில்லை. அந்தந்த பிளாக்குகளில் இம்மாதிரி உண்டிகள் இலவசமாக மக்களுக்கு வழங்குவதற்கும், மக்களுக்கு இவ்வியக்கத்தைப் பற்றி அதிகமாக உணர்த்துவதற்கும் அதிக அக்கறை காட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு பிளாக்கில் ஒரு லட்சத்து, 31 ஆயிரம் ஜனங்கள் இருக்கிறார்கள். ஒரு லட்சத்துதுக்குள்ளும் 75 ஆயிரத்துக்கு மேலும் ஜனத்தொகை மேற்கொண்டபகுதி தான் ப்ளாக் ஏரியாவாக எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. ஒரு லட்சத்து 31 ஆயிரம் ஜனத்தொகையுள்ள ஆற்காடு ப்ளாக்குக்கு, ஒவ்வொரு ப்ளாக்குக்கும் கொடுக்கக்கூடிய அவ்வளவு தான் கொடுக்கப்படுகின்றன. ஆனால், பக்கத்தில் வாலாஜா பிர்க்காவானது 45 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பிர்க்காவாக இருக்கிறது. அது எல்லாத் துறையிலும் பிற்போக்கான பிர்க்காவாக இருப்பதால், அதையும் இதோடு வேறு பிளாக் செய்து விட்டால் இந்தப் ப்ளாக்கில் செய்யும் காரியத்திற்கு பக்கத்தில் இடைஞ்சல் இல்லாமல் நல்ல முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி முறைகளில் நம் சர்க்கார் அதிக அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

12-25 p.m. **SRIMATHI KOLANTHAI AMMAL**: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செலவழிக்கப் போகிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.



முதன் முதலாக தேர்தல் முடிந்தவுடனே என்னுடைய தொகுதியானது, கடந்த அக்டோபர் மாதம் 2-ந்தேதி ப்ளாக் ஏரியாவிலே சேர்க்கப்பட்டதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையிலே பல்லடம் தாலூகாவிலே, தாலூகா முழுவதும் ப்ளாக் ஏரியாவாகி, அந்த மக்களுடைய ஒரு சிறந்த முயற்சியினால் ஓரளவு நல்ல வேலைகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி கிராம மக்களுடைய சிறந்த ஒத்துழைப்பு இருந்தால் தான் இந்தக் கிராம நல அபிவிருத்தித் திட்டம் பயன் அளிக்கும் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் எங்கள் கிராமத்தில் காணலாம். அப்படிப்பட்ட முறையிலே கடந்த அக்டோபர் மாதம் 2-ந்தேதி தான் ப்ளாக் ஆக பிரிக்கப்பட்ட எங்கள் தொகுதியிலே சில வேலைகள் முடிந்துவிட்டன. ஆனால், சென்ற ஆண்டிலே லோகல் டெவலப்மெண்ட் ஒர்க்கிலே நம்முடைய சூலூர் கிராமம் மட்டும் லட்சம் ரூபாய்க்கு மேல் பணம் வாங்கியிருக்கிறது என்பதற்காக இப்பொழுது ப்ளாக் டெவலப்மெண்டு என்ற முறையிலே வந்துகூட பணம் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம், "நீங்கள் அதிகப்படியான பணம் வாங்கிவிட்டீர்கள்; ஆகவே உங்களுக்குப் பணம் கொடுக்க முடியாது" என்று மறுக்கிறார்கள். மக்கள் முன் வந்து பணம் வாங்கி திட்டங்களை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், "முயற்சி இல்லை" என்று சொல்கிறார்கள். மக்கள் முன் வந்து, பணம் அதிகமாக வாங்கி வேலையை முடித்து விட்டவர்களைப் பார்த்து, "நீங்கள் லட்சம் ரூபாய்க்கு மேல் செலவழித்து விட்டீர்கள்; ஆகவே, உங்களுக்குப் பணம் இல்லை" என்று கூறுகிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதி மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "நாங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிக முயற்சியுடன் இருக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எங்களுக்கு நிறைய பணம் பெற்றுக்கொடுக்கவேண்டியது உங்கள் கடமை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே நாங்கள் ஒரு சில திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அந்த திட்டத்திலே ஒரு சோப் தொழிற்சாலையும், தீப்பெட்டித் தொழிற்சாலையும் இன்னொரு இடத்தில்—சூலூர் என்னும் பெரிய இடத்தில்—ஆட்டுரோமத்திலிருந்து கம்பளி நெய்யும் தொழிற்சாலையும் இருக்கின்றன. பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் கோயமுத்தூரில் வேலையை முடித்துக் கொள்ளலாம். அதிகப்படியாக இருந்தால், சென்னைக்கு வந்து வேலையை முடிக்கவேண்டியிருப்பதால், நீங்கள் தயவு செய்து பொதுமக்கள் ஒத்துழைக்கும்படியான எங்கள் ஏரியாக்கள் போன்ற பல இடங்களில் நிறைய பணம் கொடுக்கும்படியாக உங்களை நான் மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய மக்களுக்காக இருக்கக்கூடிய ஒரு சில சௌகர்யங்களை நல்ல முறையிலே பரிசீலனை செய்து அமைக்கவேண்டும் என்பதை உங்களிடத்தில் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன். எங்களுடைய பகுதியில் ஏராளமான மில் இருப்பதால் மில்லில் பணத்தைப் போட்டால் ஏழரை சத விகிதம் ஒரு ஆண்டுக்குக் கிடைக்கிறது. ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் வைத்திருக்கும் சாதாரண மக்கள் மில்லில் பணத்தைப் போட்டு சுலபமாக வட்டியைப் பெற்று இன்பமாக வாழ்கிறார்கள். ஆனால், ஏழை விவசாயிகளுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கடன் கிடைக்கவேண்டும் என்றால், நம்முடைய அரசாங்கம், பத்தாயிரம் ரூபாய் செய்திருந்தால், 1,500, 2,000 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். அந்த முறையிலே விவசாயிகள் மறுபடியும் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் தேவை என்றால் (கீழ்த்தர விவசாயிகளுக்கு) நடுத்தர விவசாயிகளைப் பற்றிக்கூட நான் கவலை கொள்ளவில்லை. இது போன்ற மில் ஏரியாக்களிலே அதிகமான பணங்களை கொடுக்கவேண்டும் என்பதற்காகவும், அதுவும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் உதவிகளை காலா காலத்தில் கொடுத்து விட வேண்டும் என்பதற்காகவும் நம்முடைய ப்ளாக் ஏரியாக்களிலே இம்மாதிரியான திட்டங்களில் ஓரளவு தனிப்பட்ட சலுகைகளைக் காட்டவேண்டும் என்று ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன். மில்லில் பணம் போட்டால் நல்ல லாபம் கிடைக்கும்

என்று மில் முதலாளிகளிடத்தில் இருக்கும் நம்பிக்கை கீழ்த்தர விவசாயிகளுக்கு பொது மக்களிடத்தில் இருக்கவில்லை. ஆகவே, சர்க்கார் தான் பொறுப்பாக இருந்து, அதற்கு என்று ஒரு தனிப்பட்ட தொகையை ஒதுக்க வேண்டும். கீழ்த்தர விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல முறையில் கடன் கிடைக்கும்படியான சலுகையைச் செய்யவேண்டுமென்று இந்த இடத்திலே ஞாபகப்படுத்துகிறேன்.

எனது தொகுதியிலே பாக்கியாக இருக்கும் சாமக்குளம் பகுதியை இந்த ஆண்டு எப்ரல் மாதம் நீங்கள் பிரிக்கப்போகும் ப்ளாக் ஏரியாவில் ஒன்றாகச் சேர்க்கவேண்டுமென்று நான் இந்த இடத்தில் ஞாபகப்படுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்று கேட்டால் ப்ளாக் ஏரியாவானதால் தான் நல்ல வேலை நடக்கிறது. பொது மக்களோடு நல்ல தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் திருப்திகரமாக நடக்கக் கூடிய அதிகாரிகள் அங்கே உள்ளார்கள். ஆகவே நல்ல சலுகை கொடுக்க வேண்டுமென்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

இன்னொரு முக்கியமான சலுகை அங்கே மறுக்கப்படுகிறது. அம்பர் சர்க்காக்களை மில் ஏரியாவில் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். காலதாமதமாக்குகிறார்கள். மில்லில் வேலைக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை குறைவு. எல்லோருக்கும் மில்லில் வேலை கிடைப்பது இல்லை. ஒரு வருஷத்திற்கு பத்து பதிமூன்று பேருக்கு மேல் மில்லில் சேர்க்க முடியவில்லை. அதுவே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அம்பர் சர்க்காவை அதிகமாக வைக்கவேண்டும் என்று நாங்கள் விரும்பினாலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால் நம் அரசாங்கத்திலிருலிருந்து அனுமதி கொடுப்பது மிகவும் தாமதமாகிறது. யார் யார் அதிகம் விரும்பிக் கேட்கிறார்களோ அவர்களுக்கு அவசியம் அம்பர் சர்க்கா வைப்பதற்கு வசதியும், சலுகையும் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். சில விவசாயிகள் புகையிலை வரியினால் பாதிக்கப்படுகிறார்கள். அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்தவர்கள் வரியினால் அதை விட்டு விட்டு வேறு வகையில் வருமானத்தைத் தேடிக்கொள்ள விரும்புகிறார்கள். நாள் ஒன்றுக்கு 1½ ரூபாய் வருமானம் உடையவர்கள் இருக்கலாம். உணவுக்கு வகை இருந்தாலும் உடைக்கு வீட்டில் உள்ள பெண்கள் அம்பர் சர்க்காவினால் வசதி பண்ணிக்கொள்ளமுடியும் என்கிற நம்பிக்கையில் எங்கள் பிராந்தியத்தில் உள்ளவர்கள் விரும்பி அம்பர் சர்க்காவைக் கேட்கும்போது அவசியம் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். சூலூர் தொகுதி மண் அரிப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுகிற நிலங்களில் இருந்து எதனால் எப்படி நன்மை உண்டாகிறது என்பதை அவ்வப்போது கண்டு பிடிக்கவேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதற்கு மேல் எங்களுக்கு போரிங் மெஷின் தொழில் இலாகாவினால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என் தொகுதியில் வேலை செய்கிறது. பாறைகளில் ஆழமான கிணறுகளை வெட்டுபவர்களுக்கு அது பயன்பட்டு வருகிறது. இந்தச் சமயத்தில் இன்னொரு தொகுதியையும் அதோடு இணைத்து அங்கும் கொடுக்கவேண்டும் என்பதாகச் செய்து விடாமல் எங்களுடைய தேவையை முதலில் பூர்த்தி செய்த பிற்பாடே அந்த மெஷின் அங்கிருந்து அனுப்பப்படவேண்டும் என்பதாக் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிராமப்புறங்களில் தேசீய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலை செய்கிறவர்களுக்கு 50 சதவிகிதம் கொடுக்கப்போவதாகச் சொல்கிறார்கள். முன்பு நூற்றுக்கு 75 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு ரூபாய் கொடுத்திருக்கிற இடங்களும் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. பஞ்சப் பிரதேசம் என்றும், வறுமை நிலையைக் கருதிக் கொடுப்பதாகவும் இரண்டு லட்சம் அளவுக்கு சில பகுதியில் நூற்றுக்கு நூறு கொடுத்திருப்பதற்காக நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன். ஆனாலும் இன்றைக்கு நூற்றுக்கு 50 தான் கொடுக்க முடியும்



என்று சொல்லாமல் நூற்றுக்கு 75-வது முன்போல கொடுப்பார்களேயானால் அங்குள்ள மக்கள் மிகவும் உற்சாகத்துடன் அவற்றில் ஈடுபடுவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராம நல அபிவிருத்தியே, நாட்டு நல அபிவிருத்தி என்கிற முறையில் சர்க்கார் இத்துறையில் அதிக கவனம் செலுத்தி எந்தப் பகுதி மக்கள் அதிக உற்சாகத்துடன் வேலை செய்ய முன் வருகிறார்களோ அவர்களுக்கு அதிக உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**Sri P. S. SANTHANAM** : தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கும் தேசிய வளர்ச்சித்திட்ட மானியக் கோரிக்கையின் கீழ் சில நல்ல திட்டத்தை ஆதரித்தும், குறைப்பாடுள்ள சில திட்டங்களை உடனடியாகத் திருத்தி அமைத்து அதனால் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் செய்யவேண்டும் என்பதாகவும் நான் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமானது கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரக்கூடியவையாக இருக்க வேண்டும் என்பது தான் அடிப்படையான கொள்கை. இவ்விஷயத்தில் சர்க்காருடைய நோக்கம் திட்டவட்டமாக இருந்தும், இந்தத் திட்டத்தின் கீழ் வேலை செய்கின்ற அதிகாரிகளுடைய மனப்பான்மையினால் ஏழை எளிய மக்களுடைய நன்மை கிடைக்கமல் போகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். திருவண்ணாமலை தாலுகாவில் ஏழை எளிய ஆதித்திராவிட விவசாயிகளுக்கு உரம் கொடுப்பது, விதை கொடுப்பது, அவர்களுக்கு வேண்டிய கிணற்று வாரம் கொடுப்பது முதலியவற்றில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன. இத்துறையில் சர்க்காருடைய நோக்கம் நம் எல்லோராலும் வரவேற்கவேண்டியதாக இருந்தும் இதனால் ஆதித்திராவிட மக்களுக்கு எவ்விதப்பயனும் ஏற்படாத வகையில் இதை சர்க்கார் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆண்டவன் ஏழை எளிய ஆதித்திராவிட மக்களை விவசாயம் செய்யவேண்டும் என்பதற்காகவே படைத்தான் போலிருக்கிறது. விவசாயியாகப் படைத்த பராபரமே என்று சொன்னாலும் அவர்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது? இன்றைய தினம் உண்மை விவசாயிகளாக இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்கள் எட்டளவில் விவசாயிகளாக ஆகவில்லை. மணிலா மார்க்கெட்டுக்கு வோட்டுப்போடவேண்டும் என்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வோட்டர் லிஸ்டில் ஆதித்திராவிட மக்களில் நூற்றுக்கு 5 பேர்கள்கூட இல்லை. அடிமையை நம்பி ஆண்டை வாழ்கிறான். ஆதித்திராவிட மக்களை நம்பி இன்றைக்கு நம் நாட்டு விவசாயம் வாழ்கிறது. அரிச்சந்திரன் காலத்தில் இருந்து பார்த்தால் தெரியும். ஆனால் ஆதித்திராவிட விவசாயிகளுக்கு உரம் கொடுப்பது இல்லை. விதை கொடுப்பது இல்லை. அவன் உழுது பயிரிடுகிற நிலத்தின் சொந்தக்காரராகிய ரெட்டியாரோ, முதலியாரோ பட்டா நம்பர் பெயரில் வாங்கிக்கொண்டு போய்விடுகிறார். இந்த நிலைமையை சீர்திருத்தி உண்மையிலேயே நிலத்தில் பாடுபடுகிற ஆதித்திராவிட மக்களுக்கு நேரிடையாக விதை, உரம் முதலியன கொடுக்கும்படியாகச் செய்யவேண்டும்.

மேலும் இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்குப் பாதை போட்டுக்கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சாதி இந்துக்கள் வாழக்கூடிய பகுதியில் உடனடியாக இம்மாதிரியாகச் சொல்லி மெயின் ரோடோடு சம்மந்தப்படுத்துகிற பாதைகள் போட்டுக் கொடுக்கப்படுகின்றனவே தவிர, ஆதித்திராவிட மக்கள் வாழக்கூடிய பகுதியை மெயின் ரோடோடு சம்மந்தப்படுத்தி உடனடியாகப் பாதை போட்டுக்கொடுப்பதே இல்லை.

மேலும் ஆதித்திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் உண்மையில் அந்த வீடுகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால் தெரியும். சுகாதாரத்தைப்பற்றிப் பேசுகின்ற சர்க்கார் பணக்காரர்கள் வீட்டில் கட்டப்படுகிற கக்கூஸ்களைவிடக் கேவலமான முறையில் சுகாதார வசதி எதுவும் இன்றியுள்ள வீடுகளைக் கட்டித் தருகிறார்கள்.

12–30 p.m. வீடுகள் கட்ட பச்சை மூங்கில் கொடுக்கப்படுகிறதனால், அவை காய்ந்து சுருங்கும்போது வீடு கோணலாகப் போகிறது. நான் சொல்வது தவறு என்றால் சொல்லட்டும். வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள காலனியைப் போய் பார்க்கட்டும். சர்க்காரானது, ஏழை எளிய மக்களுக்கு நல்லது செய்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது, அவைகள் நல்ல முறையில் செய்யப்படுகிறதா என்று நேரில் சென்று பார்க்கவேண்டும். உண்மையிலேயே சர்க்காரின் திட்டம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்தின் கீழ் உள்ள வசதிகள் விவசாயிகளுக்குப் போய் சேரும்போது அவர்கள் இலவு காத்த கிளி போல்தான் இருக்கிறார்கள். காரணம் என்ன என்று கேட்டால் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் வசதிகள் அவர்களுக்கு காலாகாலத்தில் சென்று கிடைப்பதில்லை. அவர்கள் உதவி வரும் வரும் என்று எதிர்பார்த்து கடைசியில் அது வராமல் அவர்கள் ஏக்கம் அடைகிறார்கள். உதாரணமாக, வட ஆற்காடு ஜில்லாவில் பகல் உணவிற்காக சர்க்காரில் இருந்து நாலரை லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் சர்க்கார் சிப்பந்திகள் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்துவிட்டு மீதி மூன்றரை லட்சம் ரூபாயை திருப்பி அனுப்பிவிட்டார்கள். அங்குள்ள பாமர மக்கள், ஏழைஎளிய மக்களுக்கு வயிறாரப் புடைத்து விட்டு மீதிப் பணத்தையா அனுப்பிவிட்டார்கள்? கேட்டால் பதில் இல்லை. ஹரிஜன வெல்பேர் ஆபீசரைக் கேட்டால், அது பற்றி பதில் கிடையாது. எங்கள் பிரதேசம் காடும், மேடுமான பிரதேசம். எல்லாயிடத்திலும் உள்ளவர்களுக்கு பகல் உணவு அளித்தது போகவா இவ்வளவு மீதம் வந்தது என்று கேட்டால் அந்த அதிகாரிகளிடம் இருந்து ஒரு வித பதிலும் கிடைப்பதில்லை. அடுத்தபடியாக சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பொறுக்கு விதை கொடுக்கிறார்கள். "பருவத்தில் பயிர் செய்" என்று பெரியவர்கள் சொல்வது போல், காலாகாலத்தில் பயிர் செய்வதற்கு காலாகாலத்தில் உரமோ, பொறுக்கு விதைகளோ கிடைப்பதில்லை. டெவலப்மெண்ட் அதிகாரிகளைக் கண்டு நான் இந்தக் கிராமத்தில் வாரத்திற்குப் பயிர் செய்கிறேன், எனக்கு ஒரு ஏக்கருக்கு வேண்டிய விதை கொடுங்கள் என்று கேட்டால், நிலம் படைத்தவரிடமிருந்து கையெழுத்து வாங்கி வா என்று சொல்கிறார்கள். உடனே அந்த விவசாயி நிலம் படைத்தவரிடம் சென்று கேட்டால், அவர் சொல்கிறார், நான் நான்கு ஏக்கருக்கு கையெழுத்துப் போட்டு வாங்கிவிட்டேன் என்று. பின் நான் எப்படி உனக்கு கையெழுத்து இட்டுக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார் நிலம் படைத்தவர். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் யார் யாருக்கு வாரத்திற்கு விடுகிறார்கள் யார்யாருக்கு குத்தகைக்கு விடுகிறார்கள் என்று ஒரு நகலை கிராம அதிகாரி அந்த டெவலப்மெண்ட் ஆபீசருக்கு அனுப்பவேண்டும். அப்படி யார் யார் குத்தகை செய்கிறார்கள், யார் யார் வாரத்திற்கு எடுத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பொறுக்கு விதை உரம் போன்றவைகள் கொடுக்க வேண்டுமென்று ஒரு கண்டிப்பான உத்தரவு இட வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு கண்டிப்பான உத்தரவு இட வேண்டும். என்றால்தான் ஏழை மக்கள், ஏழை விவசாயிகள், பாட்டாளி பாமர மக்கள் இத்திட்டத்தினால் பயன் அடைய முடியும். ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன், உரம், பொறுக்கு விதைகள் இவைகள் நிலம் படைத்தவர்களுக்கு கொடுக்கக்கூடாது. விவசாயம் செய்பவனுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு கட்டளை விதித்தால் விவசாயம் நன்கு அபிவிருத்தி அடைவதோடு விவசாயிகளும் நன்கு பயன் அடைவார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். நிற்க. இப்பொழுது அந்த வளர்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழிலை விருத்தி செய்கிறார்கள். அதை நான் வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன். இந்த நாட்டில் சிறு கைத்தொழில் பெருகினால், மேல் நாடுகளைவிட இந்நாடு தலைசிறந்து நிற்கும் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன. நம் நாட்டில் இரும்பு கொட்டிக் கிடைக்கிறது என்று கூறுகிறார்கள். இப்பொழுது செங்கம் தாலூகாவை எடுத்துக்கொள்வோம். இப்பொழுது காஷ்மீரில் இருந்து கம்பளங்கள் வரவழைக்கிறார்கள். எங்கள் வட்டாரத்தில் சந்தைப் புதுப்பாளையம் என்ற கிராமம் இருக்கிறது.



மாரியம்மன் கோவில் கிராமம் இருக்கிறது. அங்கு, உயர்ந்த ரக ஆடுகளை வளர்க்கிறார்கள். அங்கு ஆட்டு ரோமம் அதிகம் கிடைக்கிறது. அந்த ஆட்டு ரோமத்தைக் கொண்டு கம்பளங்கள் செய்து 7, 8 ரூபாய்க்கு விற்கிறார்கள். சர்க்கார் திட்டமிட்டு அந்த ரோமத்தைக் கொண்டு நல்ல முறையில் கம்பளங்கள் செய்தால் அக்கம்பளம் காஷ்மீர் கம்பளத்தை விடச் சிறந்ததாக இருக்கும். அவற்றை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். அதைக் கண்டு வெளி நாட்டார் புகழ்வார்கள். அது காஷ்மீர் கம்பளத்தை விட சிறந்ததாக இருக்கும். ஆகவே, அக்கிராமங்களுக்குச் சென்று, நல்ல திட்டம் ஒன்று வகுத்து, அந்த ரோமம் கெட்டுப் போகாமல் நவீன முறையில் கம்பளங்கள் செய்யப்படவேண்டும். அங்கு கிடைக்கும் ஆட்டு ரோமத்தை வைத்துக்கொண்டு நாம் கம்பளங்கள், ஸ்டாக்கின்ஸ், மப்ளோர்ஸ் முதலியவைகள் செய்யலாம். அப்படிச் செய்வதின் மூலம் நம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதோடுகூட, நம் நாட்டில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறையும். ஆகவே அங்குள்ள மக்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டும். அப்படிச் செய்தால் ஆட்டு வளர்ப்பில் அவர்கள் மிக்க தீவிர பங்கு எடுத்துக் கொள்வார்கள். அப்படி ஒரு திட்டம் அமைத்துக் கொடுப்பார்களேயானால் அத்திட்டத்தை எல்லோரும் புகழ்வார்கள். எந்தக் கட்சியினரானாலும் அதைப் புகழ்வார்கள். இத்திட்டத்தின் கீழ் இன்னும் சில குறிப்புகள் இருக்கின்றன. அடுத்தபடியாக, கோழி வளர்த்தல், மரச்சாமான்கள் செய்தல், இரும்புத் தொழில் செய்தல் போன்றவையாகும். இரும்புத் தொழில் என்பது ஆசாரிகளுக்கு மாத்திரம் தான், அவர்கள் பயன்படுத்தும்படிக்குத்தான் இதை உபயோகிக்கிறார்கள். அதாவது, இரும்பு வேலை செய்கிறவர்களுக்குத் தான் உதவி செய்கிறார்கள். அப்படிச் செய்து கொண்டு போனால் அது குலத்தொழிலாகி விடுகிறது. ஆகவே, யார் யார் இத்தனை வயது முதல் இத்தனை வயது வரையில், இத்தொழிலை செய்ய பிரியப்படுகிறார்கள் என்று பார்த்து 500 அல்லது ஆயிரம் ஜனத்தொகை உள்ள கிராமங்களில் இதை எடுத்துக்கொண்டு, ஆறு மாதம் அவர்களுக்கு போதனை அளித்து மாதம் 10 அல்லது 15 ரூபாய் ஸ்காலர்ஷிப் அளித்து அத்தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.) ஆகவே, இந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், போடக்கூடிய பாதைகள், மெயின் ரோடுகளில் இருந்து கிராமங்களுக்கு போகிறது. ஆனால் அந்தப் பாதைகள் கிராமங்களின் அப்புறத்தில் இருக்கும் ஹரிஜன மக்கள் வாழும் இடங்களுக்குப் போவதில்லை. அதை நிவர்த்தி செய்ய வேண்டும். அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் மெயின் ரோடுகளின் அருகில் கட்டிக்கொடுக்கப்படுகிறதே தவிர, காடு, மேட்டுப் பாங்கான இடங்களில் வசிப்பவர்களுக்கு அங்கு வீடு கட்டிக் கொடுப்பதில்லை. மக்கள் சாதாரணமாக போகிற பாதையில் வீடுகள் கட்டிக்கொடுத்தால் மக்கள் பிரமிப்பார்களே என்று கருதி, அவ்வீடுகளைக் கண்டு மக்கள் பூரிப்பு அடைய வேண்டுமென்று கருதித்தான் வீடுகள் கட்டப்படுகிறதே தவிர, மேடு, காடுகளில் ஹரிஜனங்கள் வாழும் இடங்களிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் திட்டம் வளர்ச்சி அடைய முடியும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. A. MUTHIAH CHETTIAR :** கனம் சபாநாயகர் அவர்களே, நம் நாட்டின் இந்த வருட வரவு செலவுத்திட்டத்தை நமது நிதிமந்திரி அவர்கள் நல்ல விதத்தில் கொண்டு வந்ததைப் பற்றி நிதிமந்திரி அவர்களையும், அமைச்சர் குழுவையும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிமந்திரி அவர்கள் அவர்களது ஆறு வருட அனுபவத்தைக்கொண்டு, அவர்கள் கூடுமான வரையில் அதிகம் வரி போடாமல் இதோடு விட்டு விட்டதைப் பற்றி அவர்களே ஓரளவு சந்தோஷப்பட்டிருப்பதைக் கண்டு நானும் சந்தோஷப்பட்டுக்கொண்டு அவர்களைப்பாராட்டுகிறேன். நான் இப்பொழுது பொதுவாக வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி பேசுவது சரியல்ல. ஆகவே, நான் அதைப்பற்றி ஜாஸ்தி பேச விரும்பவில்லை. நம் நாட்டின் நிதி இலாகாவை, பைனான்ஸ் டிபார்டுமெண்டை நிதி மந்திரி

யவர்கள் வெகு திறமையாக நிர்வகித்து வருவதைக் கண்டு நான் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் இவைகளைப்பற்றிப் பேசும்போது, இந்த இரண்டு திட்டங்களில் பல இடங்களிலும், ஏராளமான மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை. ஏதோ பணம் வேஸ்ட்டாகிறது என்று சிலர் சொல்கிறார்கள். வேஸ்டு ஆகிறது என்று சொன்னால் டெல்லி முதல் கன்னியாகுமரி வரையில் எவ்வளவோ பணம் வேஸ்டாகிறது. ஆனால் அவைகளைப் பற்றி யாரும் அதிகமாகப் பேசுவதில்லை. என்னைப் பொறுத்தளவில் நான் கூறுவேன், இந்த இரண்டு திட்டங்களினாலும் கிராம மக்களுக்கு அநேக விதத்தில் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. நான் பொதுவாகத்தான் பேசுகிறேன். இருந்தாலும் இந்தக் காலத்தில் அந்தந்தப் பகுதி அங்கத்தினர்கள் அந்தந்த பகுதியில் உள்ள குறைகளைச் சொல்லி நிவாரணம் தேடவேண்டியிருப்பதால் அப்படி நானும் ஒரு சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற தடவை சட்டசபையில் அங்கத்தினராக இருந்தபோது என்னுடைய தொகுதியாக இருந்த சிங்கம்புணரியில் தேசிய விஸ்தரிப்பு திட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் நான் மந்திரி அவர்களை பாராட்டி சொன்னது ஒரு புறமிருக்க, அந்த பகுதியில் மூன்று வருடத்தில் செய்யவேண்டிய வேலையை இந்த இலாகாவில் ஜாயிண்டு டயரக்டராக இருந்து வரும் வெங்கடாஜலபதி அவர்களுடைய முயற்சியினாலும் ஒன்றரை வருடத்திற்குள் வேலை பூராவையும் செய்து முடித்துவிட்டார்கள். ஆகவே இந்தமாதிரியான பிற்போக்கான பகுதிகளில் தான் சீக்கிரமாக வேலைகளை முடிக்க முடிகிறது. ஆகவே இந்த மாதிரி திட்டங்களை போடுவதற்கு பிற்போக்கான பகுதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். சில இடங்களில் சில ஆட்களுக்கு வேண்டி செய்து விட்டார்கள் என்று பல பேர்கள் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். அப்படியொன்றுமில்லாமல் இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கும் 51 இடங்களையும் பிற்போக்கு பகுதிகளாகப் பார்த்து தேர்ந்தெடுக்கவேண்டும். ராமனாதபுரம், முதுகுளத்தூர் பகுதியில் இந்த திட்டங்கள் மிகவும் அவசியம் என்று நான் இந்த இடங்களில் கலவரம் நடப்பதற்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். அங்கு முன்னமேயே சுமார் 3 கோடி ரூபாய் செலவு செய்து ஏதாவது திட்டங்களை ஏற்படுத்தியிருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்போது அங்கு இரண்டு கம்யூனிட்டி பிராஜக்டுகளும், ஆறு தேசிய விஸ்தரிப்பு திட்டங்களும் போட தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. அந்த பகுதியிலுள்ள நிலைமை எனக்கு நன்றாக தெரியாது. அந்த பக்கத்தில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் சிலருக்கு அங்குள்ள நிலைமைகளைப்பற்றி நன்றாகத் தெரியும். பொதுவாக அந்த பிரதேசத்திற்கு தேசிய விஸ்தரிப்புத் திட்டம் மாத்திரம் போதாது. பின்னால் கம்யூனிட்டி பிராஜக்ட் கொண்டு வரலாம் என்றிருப்பதே விட்டு விட்டு முதுகுளத்தூர் பகுதியில் அதிகமாக கம்யூனிட்டி பிராஜக்ட் திட்டங்களை ஏற்படுத்தவேண்டும். அந்த இடங்களில் மூன்று அல்லது நான்கு கோடி ரூபாய் செலவு செய்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும். அந்த இடங்கள் எல்லாம் பிற்போக்கான பகுதிகள் என்று நிதி அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. அந்த தொகுதி என்னுடைய தொகுதி இல்லை. அதைப்பற்றி அந்த தொகுதியிலுள்ளவர்கள் சொல்லக்கூடும். இன்னொரு விஷயம் சிங்கம்புணரி பகுதியில் தேசிய விஸ்தரிப்பு திட்டம் பூர்த்தியாகி விட்டதால் இனிமேல் அங்கு கம்யூனிட்டி பிராஜக்ட் திட்டத்தை ஏற்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். வெறும் கம்யூனிட்டி பிராஜக்டுகள் வைப்பதில் மாத்திரம் புண்ணியம் ஒன்றுமில்லை. நீர்பாசன வசதிகள் வேண்டியிருக்கின்றன. பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் அனேகமாக பூர்த்தியாயிருக்கின்றன. இன்னும் பரம்பிக்குளம் 36 கோடி ரூபாய் செலவில் நடத்த திட்டம் போடப்பட்டிருக்கிறது. இது தவிர ராஜபாளையம் பக்கத்தில் மேற்கு பக்கமாய் போகிற தண்ணீரை திருப்பி தண்ணீரைக்



கொண்டு வருவதற்கு ஒரு ஸ்கீம் போடப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். இது தவிர சிறிய ஸ்கீம்கள், மைனர் இறிகேஷன் என்று சொல்லப்படும்பொழுது கண்மாய் மராமத்து மாத்திரம் என்று சொல்லுவதற்கு இல்லை. பெரிய மராமத்துகளும் ஒரு கோடி ரூபாய் இரண்டு கோடி ரூபாய் என்று செலவிடப்படுகிறது. நான் ஆறு வருஷமாக கத்திக்கொண்டிருக்கிறேன். ராமனாதபுரம் ராஜா மந்திரியாக இருந்தபொழுது இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். அதாவது திருச்சிராப்பள்ளிக்கும் மதுரைக்கும் இடையில் கொட்டாம்பட்டி பகுதியில், பாலாற்றில் தண்ணீர் கொண்டு வருவதற்காக மேற்கேயுள்ள மலையில் ஒரு அணையை போட்டால் மழை பெய்யும்போது தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறேன். இதற்கு சுமார் ஒன்றரைக்கோடி ரூபாய் செலவாகும். தண்ணீர் இல்லாமல் தேசிய விஸ்தரிப்புத் திட்டமோ அல்லது கம்யூனிட்டி பிராஜக்ட் திட்டமோ கொண்டு வருவதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. மழை இல்லாததினால் இதுவரை அந்த வேலையைப்பற்றி ஒன்றும் கவனிக்காமல் விடப்பட்டிருந்தது. இப்போது மழை பெய்து விட்டது. இனிமேலாவது அதைப்பற்றி கவனிக்கவேண்டும். இந்த பட்ஜெட்டில் இதை உட்படுத்தவில்லை. அடுத்த பட்ஜெட்டில் அதாவது 59–60-வது பட்ஜெட்டில் உட்படுத்துவதற்காக இப்போதாவது இன்வெஸ்டிகேஷன் நடத்தினால் நலமாக இருக்கும். இந்த வருஷத்தில் சுமார் ஒன்று அல்லது ஒன்றரை லட்ச ரூபாய் ஒதுக்கி இன்வஸ்டிகேஷனவது உடனே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அந்த பகுதியிலுள்ள அங்கத்தினர் அல்ல. பொதுவாக ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்கள் தங்கள் தொகுதியைப்பற்றி மாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வேறு தொகுதியாக இருந்தாலும் இந்த திட்டம் மிகவும் அவசியம் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, ஆரம்பிக்கப்படவிருக்கும் திட்டங்களை எங்கே எல்லாம் பிற்போக்கு பகுதிகளாக இருக்கிறதோ அந்த இடங்களை கணக்கெடுத்து அந்த இடங்களில் 51 தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களையும் 17 கம்யூனிட்டி பிராஜக்டுகளையும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருவாடானை பகுதிகளில் பிற்போக்கான பிரதேசங்களால் இருக்கிறது. அந்த இடத்தில் எல்லாம் இந்த திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு விஷயம் வரவு செலவு திட்டத்தில் ஹவுஸிங் ஸ்கீம் போடப்பட்டிருக்கிறது. விவசாய அபிவிருத்திக்கும் திட்டம் போட்டிருக்கிறது. இந்த திட்டங்களை எல்லாம் பிற்போக்கான இடங்களில் போடும்பொழுது அங்குள்ள ஸ்தல அதிகாரிகளையும் கலந்து ஏற்பாடுகளை செய்தால் அதிகமான நன்மை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இந்த தடவை ஏற்படுத்தப்போகும் 51 தேசிய விஸ்தரிப்பு திட்டங்களையும் 17 கம்யூனிட்டி பிராஜக்டுகளையும் பிற்போக்கான பிரதேசங்களை தேர்ந்தெடுத்து அந்த இடங்களில் இந்த திட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம்முடைய வரவு செலவு திட்டத்தை பொதுவாக நன்றாக தயாரிப்பதற்கு நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** நான் அடுத்த அங்கத்தினரை பேசுவதற்கு அழைப்பதற்கு முன்னால், இன்று காலையில் கூடிய பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியின் தீர்மானத்தை சபைக்கு சொல்ல விரும்புகிறேன். அதாவது நாளை போலீஸ் மானியக் கோரிக்கையும், **Capital Outlay on Scheme of State Trading** கோரிக்கையும் விவாதத்திற்கு வர இருந்தது. அதை மாற்றி நாளைய தினம் நான்கு மணி நேரமும் போலீஸ் மான்ய கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறும். இதற்கு அமைச்சர் அவர்களும் சம்மதித்திருக்கிறார்கள். ஆதலால் இரண்டாவது மான்யக் கோரிக்கை நாளைக்கு எடுக்கப்படாமல் மாற்றப்படும். இன்னொரு விஷயம் என்னவென்றால் மந்திரிகள் மான்யக் கோரிக்கையை சபை முன் வைத்து பேசும்பொழுது பிரசங்கம் செய்யவேண்டியது அவசியம் இல்லை. அந்த பிரசங்கம் டைப் செய்து அன்றைய தினம் கேள்வி நேரத்தின்

போது அதாவது முக்கால் மணி நேரத்திற்கு முன்னால் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படும். அதன் பின்னால் கடைசியில் மந்திரி அவர்கள் அரை மணி நேரம் விவாவததிற்கு பதில் அளிப்பார். இந்த முடிவை நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள்.

அடுத்த தீர்மானம் என்னவென்றால், நான்கு மணி நேரம் விவாதம் நடைபெறுவாதாயிருந்தால் எதிர்கட்சி தலைவர்களில் இரண்டு பேருக்கு 15 நிமிட நேரமும் இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெறுவதாயிருந்தால் எதிர்கட்சித் தலைவர்களில் ஒருவருக்கு 15 நிமிட நேரமும், ஒரு மணி நேரம் விவாதம் நடைபெறுவதாயிருந்தால் எதிர்கட்சி தலைவர்களில் ஒருவருக்கு 10 நிமிட நேரமும் பேசுவதற்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது. மூன்று மணி நேரம் விவாதம் இருந்தால் எப்படி முடிவு செய்யவேண்டும் என்று அந்த கமிட்டியில் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அதற்கு ஒரு முடிவை தெரிவிக்கிறேன். மூன்று மணி நேரம் விவாதம் நடைபெறுவதாயிருந்தால் எதிர்கட்சித் தலைவர்களில் இரண்டு பேருக்கு 10 நிமிட நேரம் ஒதுக்கலாம். அடுத்ததாக இன்றைய தினம் வெட்டுப் பிரேரணைகளை கொடுத்த எல்லோரும் பிரேரேபிக்கலாம் என்று சொன்னேன். அது தவறு என்று தெரிகிறது. இனிமேல் எதிர்கட்சி எல்லாம் சேர்ந்து ஒரு வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்க வேண்டும். எந்த வெட்டுப்பிரேரணையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர் எனக்கு தெரிவிக்கவேண்டும். இந்த முடிவை எல்லாம் டைப் அடித்து அங்கத்தினர்கள் எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். எல்லோரும் இதை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன். அங்கத்தினர்கள் யாருக்காவது வேறு ஏதாவது அபிப்பிராயம் இருந்தால் என்னிடம் வந்து தெரிவிக்கலாம்.

12-50 p.m. **Sri K. P. PALANISWAMI**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கம்யூனிடி டெவலப்மெண்ட் சம்பந்தமாக 2,34,57,300 ரூபாய் ஒதுக்கப்பட்டதானது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த சமுதாய நலத் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்கள் நல்ல முறையில் பரவி மக்கள் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடும், மக்களோடு தொடர்பு இல்லாது இருந்தால் மக்கள் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் இந்தத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் இந்த மாதிரித் திட்டங்கள் கிராமங்களிலும், மற்ற ஏழைகள் விவசாயிகள் வசிக்கும் இடத்திலும் பரவவில்லை. ஆனால் இன்றைக்கு மக்களிடத்தில் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும், மக்கள் முன்னேற வேண்டுமென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல பேர் கூறுகிறார்கள், இந்தத் திட்டத்தினால் அநேக வீண்செலவுகள் ஏற்படுகிறது என்று. உண்மையாக எந்தத் திட்டத்தை ஏற்படுத்தினாலும், மக்கள் வீண்செலவு என்றுதான் சொல்வார்கள். வீண் செலவு என்று சொல்லாத திட்டமே கிடையாது. இந்தத் திட்டத்தினால் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால் செலவு அதிகமாக இருக்கிறது. ஆகையால் இந்த தேசிய விஸ்தரிப்புத்திட்டத்திலே மக்களிடத்திலேயுள்ள பல காரியங்களை நேரிடையாகச் சென்று தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. பல இடங்களுக்குச் சென்று விசாரிக்கும் போது ஊழியர்களாக வருபவர்கள் விசாரிக்கக்கூட சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது என்ற புகார்கள் வருகின்றன. இந்த விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலமாக லோகல் ரோடுகள், கல்வெர்ட்டுகள், குடி தண்ணீர் கிணறுகள் முதலிய விஷயங்கள் கவனிக்கப்பட்டு வருகிறது. அதிலே, முக்கியமாக குடி தண்ணீர் விஷயத்தை எடுத்துக்கொண்டு, எங்கெங்கு குடி தண்ணீர் வசதிகள் இல்லையென்று விசாரித்து, அவர்களுக்கு வேண்டியதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அநேக இடங்களில், அநேக கிராமங்களில் விவசாய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் கிணறு இல்லாமல் இருக்கிறார்கள். இப்போது இந்தத் திட்டத்தின் கீழ் ½ பாகம் மானியமாகக் கொடுக்கிறார்கள். மற்ற பாதி பாகத்தை [illegible]



யில்லாமல் பல இடங்களில் கஷ்டப்படுகிறார்கள். அந்த இடங்கள் விஷயத்திலே இர்ட்ட பிளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் முக்கியமாக குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்னென்றால் அரசாங்கத்தில் கலெக்டர் மூலமாக வரவேண்டுமென்கிறார்கள். கலெக்டரைக் கேட்டால் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாக வரவேண்டுமென்கிறார்கள். அங்கே கேட்டால் பிளாக் டெவலப்மெண்ட் மூலமாக வரவேண்டுமென்கிறார்கள். ஆகவே பிளாக் டெவலப்மெண்ட் மூலமாக அந்த வசதிகளை நேராகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **(Deputy Speaker in the chair.)** மேலும் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலே ஆங்காங்கு கல்வி சமூக நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் அநேக ஏழை மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் படிக்க வசதி ஏற்பட்டு, தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள நல்ல முறையில் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனால், இந்த விஷயத்தில் போதுமான வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஆங்காங்கு வசிக்கும் ஏழை விவசாயிகளுக்கும், குடியானவர்களுக்கும் மாடு வாங்க பணம் மானியமாகக் கொடுக்கிறார்கள். நல்ல முறையில் சென்ற ஆண்டிலே மாடுகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணம் மாடுகளை வாங்குவதற்காகப் பிரயோஜனப்படுத்தப்பட்டதா, ஏழைகளாக உள்ளவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று விசாரித்துப் பார்க்க வேண்டும். நல்ல முறையில் விசாரித்துக் கொடுக்க ஒரு அட்வைஸரி கமிட்டி ஏற்பாடு செய்து அவர்கள் மூலமாக, அந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியிருக்கிறதா என்று விசாரித்து கொடுக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தினால் நல்லதாக இருக்கும்.

மேலும் விவசாயத்தை நோக்கி வாழும் மக்களுக்கு எரு முதலியவைகள் வாங்குவதற்காக பணம் கொடுக்கப்படுகிறது. இது சரியான நேரத்தில் போவதில்லை என்று கூறுகிறார்கள். முன்பெல்லாம் 2 நாட்களில் கிடைக்கும். இப்போது ஒரு மாதம், 2 மாதம், 3 மாதம் போனாலும் பணம் கிடைப்பதில்லை என்று விவசாய மக்கள் கூறுகிறார்கள். அந்தந்த இடங்களில் ஒரு அட்வைஸரி கமிட்டியைப் போட்டு அந்தந்த காலங்களில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் அநேகம் பேர் வேலையை தேடிக்கொள்ள சந்தர்ப்பம் இருக்கிறது. கூட்டுறவு முறையில் கைத்தொழில் பண்ணைகள் போல பல பண்ணைகளும் மற்ற தொழில் வசதிகளும் ஏற்படுவதால் பல பல மக்களுக்கு வேலை தேடிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அநேக மக்கள், ஹரிஜன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த விஞ்ஞானத்தின் மூலமாக—பம்ப் செட்டுகள் வந்த பிறகு—ஆயிரக் கணக்கான மக்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுவது எல்லோருக்கும் தெரியும். கூட்டுறவு முறையில் பண்ணைகள் வைத்து, கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்தி இவர்களுக்கும் நல்ல முறையில் வாழ சந்தர்ப்பம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதலால் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் மூலமாக மக்கள் நல்லமுறையில் வாழ சந்தர்ப்பம் அளிப்பதோடு நல்ல தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள ஒரு சாதனமாக இருக்கிறது என்று கூறிக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI**: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சட்ட சபையில் கேள்வி கேட்கப்படும் கேள்வித் தாள்களை ஒரு நாளுக்கு முன்பாகக் கொடுக்கிறார்கள். இப்போது மறு நாள் காலையில் கொடுக்கிறார்கள். ஒரு நாள் முன்பு கேள்விகள் கொடுக்கப்பட்டால் உப கேள்விகள் தயாரித்துக் கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும்.

**DEPUTY SPEAKER:** முதல் நாள் மாலை ஸர்குலேட் பண்ணுகிறார்கள். ஒரு வேளை முடியவில்லையென்றால், மெம்பர்கள் இருக்கும் இடத்திற்கு அனுப்பிகிறார்கள் என்பது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI:** அதை இப்போதே கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**DEPUTY SPEAKER:** இதை ஸ்பீக்கர் ரூமில் கேட்கலாம். இங்கே இதைப் பற்றி " ரைஸ் " பண்ணவேண்டியதில்லை.

**SRI V. SUBBIAH:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் என்ற எல்லாத் திட்டங்களும் நம்முடைய ராஜ்யத்திலே பல பகுதிகளில் நல்ல முறையில் வேலை நடைபெற்று வருகிறது. அதை போற்றாமல் இருக்க முடியாது. இவ்வளவு நல்ல வளர்ச்சியான திட்டங்களின்கீழ் கரிக்குளம் பிளாக்கில் பல நல்ல காரியங்கள் எல்லா கிராமங்களிலும் ரோடு, குடி தண்ணீருக்காக கிணறு, வாசக சாலை போன்ற பல நல்ல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் ஆரம்ப உரையிலே நம் ராஜ்யத்திலே 2 கோடியே 57 லட்சம் ஜனத்தொகை கிராமங்களில் வசிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை ஒரு அளவாக எடுத்துக்கொண்டாலும், அந்த ஜனத்தொகை வீதாசாரத்தை வைத்துக்கொண்டாலும் கூட இந்த ராஜ்யத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மொத்தத் தொகை 62 கோடியாக இருக்கும் போது இந்த மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2 கோடியே 34 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ராஜ்ய அமைப்பிலே 62 கோடி ரூபாய் வரவு செலவிலே 2 கோடியே 34 லட்சம் ரூபாய் சமுதாய நலத்திட்டத்திற்காகவும், தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திற்காகவும், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பதானது கடலில் கறைத்த பெருங்காயம் போன்று தான் இருக்க முடியுமே தவிர இன்னும் பல திட்டங்களை அமைக்க இதைவிட அதிகத் தொகை ஒதுக்க வேண்டும், அந்த அளவு ஒதுக்கியிருந்தால் நலமாயிருக்கும். ஆனால், 1957-58-ம் வருஷ வரவு செலவுக் கணக்கையும், 1958-59-ம் வருஷ வரவு செலவுக் கணக்கையும் நாம் பார்க்கும் போது, குறிப்பாக கால்நடைகளுக்கும், விவசாயத்திற்கும் 63 ஆயிரம் ரூபாய் போட்டிருக்கிறது. 135 ப்ளாக்குகள் உள்ள ஒரு பெரிய பரந்த திட்டத்திலே 63 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கும் கால்நடைக்கும் என்றால் எவ்வளவு விகிதாசாரம் வருகிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். அதைப் பார்த்து, எவ்வளவு அதனால் கிராமங்கள் நன்மை அடையும் என்பதை அவர்கள் தான் அதற்கு ஓர் முடிவு கட்ட வேண்டும்.

அடுத்தப்படியாக, உரத்திற்காக 1957-58-ம் ஆண்டிலே 15 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷத்திலே கால்நடை, விவசாயத் துறைகள் விடப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டினுடைய பூசாரம் கெட்டிருக்கிறது. விவசாய உற்பத்தி பொருள்கள் எல்லாம் மேனியாகாத நிலையிலே இந்த நாட்டு பூசாரம் கெட்டிருக்கும்போது உரத்திற்காக இருக்கும் ஒரு பகுதியே 1958-59-ல் விடப்பட்டிருக்கிறதென்றால், அது பரிதாபகரமான விஷயம். நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் வெகு அழகாகச் சொன்னார்கள்: " இந்தத் திட்டத்திலே வளர்ச்சி அடையாததற்குக் காரணம் பொருளாதாரம் அல்ல; உத்தியோகஸ்தர்களுடைய தேர்தலைப் பொறுத்திருக்கிறது " என்று சொன்னார்கள். சென்ற காலங்களில் சமுதாய நலத்திட்டம் நல்ல முறையில் நடந்து வந்தது. இப்பொழுது சமுதாய நலத் திட்டம் அதிகாரிகள், ப்ளாக்



அதிகாரிகள் முதலியவர்களைத் தேர்ந்தெடுப்பதிலே பல தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று தான் என் போன்றவர்கள் நினைக்கிறோம். முன்னால் இருந்த பல உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வந்தார்கள். இன்றையதினம் ப்ளாக்குகள் ஜாஸ்தியாகப் பெருகி, அந்த நிலை மாறி இப்பொழுது ரெவினியு இலாகாவிலிருந்துகூட மக்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் என்ன நிலைமை வருகிறதென்றால், ப்ளாக்குகளில் கூட லஞ்சம் வரும் அளவிலே இன்று கிராமத்திலே பெருகிவிட்டது என்று பரவலாகப் பேசப்படக்கூடிய அளவிலே இருக்கிறது. ஸ்தல அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள், சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் அம்மாதிரி லஞ்சத்திற்கு ஆளாவதாக இன்று பரவலாக பேசக்கூடிய அளவு இருக்கிறது. இவ்வளவு குறைந்த அளவிலே தொகை ஒதுக்கப்பட்டிருந்தும்கூட, அங்கே குறை, பணத்தினால் அல்ல, நிர்வகிக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களைப் பொருத்தது என்று சொன்னார்கள்.

விவசாயப்பட்டதாரிகளை, கிராமத்தில் பிறந்தவர்கள், கிராம மக்களுடைய மனப்பான்மையை அறிந்தவர்களை உத்தியோகஸ்தர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துப்போட்டால் நல்ல முறையில் இன்றையதினம் வெற்றிகரமாக வர முடியுமே தவிர இப்பொழுது பின்புற்றக்கூடிய ரெவினியூ டிபார்ட்மெண்டிலிருந்து அல்லது வேறு அரசாங்க உத்தியோகத்திலிருந்து உள்ளவர்களை நீங்கள் ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசராகப் போடும் வரையிலும் இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயலாற்ற முடியாமல் போய்விடும் என்பதை அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராம சேவகர்கள் இன்று ஒரு சங்கடமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை முதல் கிரேட் என்றும், இரண்டாவது கிரேட் என்றும் வைத்திருக்கிறார்கள். இவ்விரு கிரேடினரும் செய்யக்கூடிய வேலை கிராம நலத்திலே ஒன்று தான். இருவருடைய வேலைத் தரமும், வேலையினுடைய பொறுப்பும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், முதல் கிரேடிலே உள்ளவர்களுக்கு 80 ரூபாயும், இரண்டாவது கிரேடிலே உள்ளவர்களுக்கு 45 ரூபாயும் சம்பள விகிதம் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்து, இதை நல்ல முறையிலே அவர்களுடைய திறமைக்கும் வேலைக்கும் தகுந்தபடி மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நல்ல திட்டத்திலுங்கூட, அவர்கள் செய்கிற வேலையைக் குறைபடச் சொல்வது மனதில் கவலையாக இருந்தாலும், சொல்லக்கூடாது என்று நினைத்தாலும் கூட, இன்றைய நிலையில் சொல்வதில் குறை அல்ல என்று நான் சொல்கிறேன். கிராம அபிவிருத்தித் திட்டங்களிலே பல கிராம ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகள் அமைக்கப்படுவதற்கு முன்னால் வண்டிகள் போகக்கூடிய நிலையில் இருந்தன. இன்றையதினம் ரோடுகள் போடப்பட்ட பிற்பாடு, இரவிலே, மக்கள் தனியாக நடந்து போக லாயக்கற்ற நிலையிலே அவைகள் அழிக்கப்பட்டிருக்கிறன. ஜில்லா போர்டுகள், ஹைவேஸ் இவைகளை எடுத்துக் கொண்டு பராமரிக்கலாம் என்று பார்த்தால், அவர்களிடத்தில் இன்றையதினம் பொருளாதாரம் இல்லாத நிலையில் கிராம ரோடு பாழ்பட்டு, சீர்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இதில் அரசாங்கம் உத்தரவிட்டு, ஹைவேஸிலே கிராம ரோடுகளைச் செப்பனிடும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ளாக்கிலே இன்றையதினம் பல ஊழல்கள் மலிந்துவிட்டன என்று சொல்லப்பட்டது. இன்றையதினம் நமது அரசாங்கத்தால் பல இலாகாக்களிலே, குறிப்பாக 'ஹைவேஸ்', பி. டபிள்யூ. டி. போன்ற இலாகாக்கள் லஞ்சத்திலே மிதந்துகொண்டிருக்கின்றன என்று மக்களால் பேசப்படுகிறது

கிறது. நம்மிலும் பலர் பேசுகிறோம். அதிலேயிருந்து வரக்கூடிய இன்ஜினீர்களை நம்முடைய ப்ளாக்கிலே போடுவதுதான் குறை என்று நாம் சொல்லவேண்டும். இதையெல்லாம் ஓரளவு பார்த்து, அவர்களுடைய சரித்திரத்தையெல்லாம் அறிந்து நேர்மையானவர்களையும், கிராம மனப்பான்மை உள்ளவர்களையும் கிராம மக்களுக்கு ஏதோ சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்களையும் பார்த்து நியமிக்க வேண்டும் என்றும் நான் இங்கே கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு பெரிய கஷ்டம் இருக்கிறது. குருவிக்குளம், கோயில்பட்டி ஆகிய இரண்டு ப்ளாக்குகளிலும் பல வேலைகள் நடைபெற முடியாத நிலையில் எஸ்டிமேட் தாமதப்பட்டு வருகின்றன. ப்ளாக் ஆபீசரைக் கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரு கலெக்டருக்குப் பல ஜில்லாக்களிலுள்ள அத்தனை பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதனால், சமுதாய நலத் திட்ட சம்பந்தமான பேப்பர்களெல்லாம் டிலே செய்கிறார்கள் என்றும், ப்ளாக் அதிகாரிகள் அங்கே போய் தங்கினாலும் கூட, இரண்டு தினங்கள் காத்திருக்க வேண்டிய நிலையில் இருப்பதாகவும், சொல்கிறார்கள். இதற்கு ஒரு மாற்று செய்தாக வேண்டும். ஜில்லாவில் சமுதாய நலத் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆகியவை சம்பந்தப்பட்ட வரையில் கவனிப்பதற்கு ஜில்லாக் கலெக்டரின் கீழே ஒரு தனிப்பட்ட இலாகாவாக, பர்ஸனல் அஸிஸ்டென்ட் அவர்களுடைய மேற்பார்வையில் இயங்கக்கூடிய முறையில் செய்தால், இது சம்பந்தப்பட்ட பேப்பர்கள் எல்லாம் கவனிக்கப்படக்கூடும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

1-06 p.m. **Sri P. R. SRINIVASA PADAYACHI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பிர்க்கா அபிவிருத்தித் திட்டமும், சமுதாய நலத் திட்டமும், தேசிய விஸ்தரிப்புத் திட்டமும், ஸ்தல அபிவிருத்தித் திட்டமும் சென்னை ராஜ்யம் பூராவும் நன்றாக வேலை செய்திருக்கிறது என்று நான் சொல்வதோடு அதற்கான சில அத்தாட்சிகளையும் சொல்ல விரும்புகிறேன்.

காடாம்புலியூர் பிர்க்கா ரொம்பவும் பிற்போக்காக இருந்த ஒரு பிர்க்கா. அது இன்று முன்னேற்றத்திற்கு வந்துவிட்டது என்று சொல்லலாம். அதிலே இரண்டு லட்சம் ரூபாய் செலவில் இப்பொழுது ஒரு கிராஸ்வே (நடைப்பாதை) அமைத்து அங்கு எல்லாவிதமான வண்டிப் போக்குவரத்துகளும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமான பிர்க்காவிலே எரு, தழை முதலியவைகள் போக முடியாத பிர்க்கா. அங்கு இப்பொழுது வீட்டு வாசற்படியிலே வந்து அவர்கள் சுகமாக வாழ்ந்துவருகிறார்கள். அதுமாதிரி குறிஞ்சிப்பாடி பிர்க்காவிலும் பல திட்டங்கள் அபிவிருத்தி செய்து இப்பொழுது முன்னேற்றம் அடைந்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால், வெகுவாக கிராமம் கிராமமாகச் சென்று, அரும்பாடுபட்டு திட்டங்களை மிகவும் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டத்தினால் நமது சென்னை மாகாணத்திலே மக்கள் எல்லோரும் வெகுவாக பயன் பட்டு வருகிறார்கள். இன்னும் அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைப்பாடுகளைச் சிலர் பட்டவர்த்தனமாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதே காடாம்புலியூர் பிர்க்காவிலே அவர்களுக்கு இன்னும் பத்து வருஷமாக அந்த பிர்க்கா அபிவிருத்தியில் எடுக்கப்பட்டும் இன்னும் அவர்களுக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், அங்கு தான் இந்த மனிதர்கள் மாடுகளாக உபயோகிக்கக்கூடிய நிலையிலே அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கிணற்றில் தண்ணீர் மொள்ள வேண்டுமென்று ஏரில் மாட்டைக் கட்டுவது போல், ஒரு கிணற்றிலே கயிற்றை கட்டிக்கொண்டு ஒரு பர்லாங்கு தூரம் வரை அவர்கள் இழுத்துக் கொண்டு போனால் தான் ஒரு குடம் தண்ணீர் மேலே கிடைக்கக்கூடிய





நிலைமையில் இருக்கிறது. ஆனால், ஒரு குடம் தண்ணீரை எடுப்பதற்கு மக்கள் எல்லோருமே வெகு கஷ்டப்படுகிறார்கள். அதுமாதிரி அந்தப் பிர்க்காவிலே காடாம்புலியூர், குறிஞ்சிப்பாடி, கடலூர், ஓ.டி. ஆகிய இந்த மூன்று பிர்க்காவிலும் அதுமாதிரி அல்லல் படுகிறார்கள். அந்தக் கஷ்டங்களை நமது அமைச்சர் அவர்கள் நிவர்த்திப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். குறிஞ்சிப்பாடி பிர்க்காவிலே மின்சார லைன்கள் இப்பொழுதுதான் சில கிராமங்களுக்கு வந்திருக்கின்றன. ஆனால், காடாம்புலியூர் பிர்க்காவிலே மின்சார லைன் அந்த வழியாக இன்னும் போகவில்லை. அந்தப் பகுதிக்கும் வேண்டிய மின்சார விஸ்தரிப்பு செய்து, அவர்களுக்கு தண்ணீர் வசதியையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த கிராமத்திலிருக்கக்கூடியவர்களுக்கு மின்சார வசதி கொடுத்து, தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன மூன்று பிர்க்காக்களும் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவிலே பல பகுதிகளில் மின்சார வசதிக் குறைவு இருப்பதினால், அவைகள் ரொம்பவும் பின் தங்கி இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதிகளுக்கு அதிகப் படியாக மின்சாரம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கடலூர் (என்.டி.) தொகுதியை அடுத்தாற்போலுள்ள பாண்டிச்சேரி ஒரு தனி பிர்க்கா ஆனபடியால் அளவு உள்ள அந்த தொகுதிக்கு பெருவாரியான பணத்தை அதற்கு ஒதுக்கி, ரோடு வசதிகளையும், மற்ற வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். பாண்டிச்சேரிக்குப் போகக் கூடிய சில பாதைகள் நமது இந்தியன் யூனியனிலே இருக்கின்றன. அவைகள் எல்லாம் மண் பாதைகள் ஆகவே இருக்கின்றன. புதுச்சேரியிலுள்ள ரோடுகள் எல்லாம் நன்றாக இருக்கும்போது, அதில் குறுக்கிடக்கூடிய ரோடுகள் மண் பாதைகளாக இருப்பதனால், சென்னை மாகாணத்தைப் பற்றிக் குறை கூறுகிறார்கள். ஆகவே கடலூர் (என்.டி.) பிர்க்காவையும் "பிர்க்கா டெவலப்மென்ட்" திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களையும், கனம் நிதி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த டிபார்ட்டிமெண்டிலே பல உத்தியோகஸ்தர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று சில மெம்பர்கள் குறை சொன்னார்கள். ஆனால் அந்த துறைகளில் உள்ளவர்கள் அந்த அந்த வேலைகளைத்தான் கவனிக்க முடியும். கால்நடை வைத்தியர் விவசாயத்தை கவனிக்க முடியுமா ? நூல் சம்பந்தப்பட்ட அதிகாரி வேறு வேலைகளை கவனிக்க முடியுமா ? எந்தெந்த வேலைக்கு எந்தெந்த உத்தியோகஸ்தர் என்று இருந்தால் தான், அந்த வேலைகளை யெல்லாம் கவனிக்க முடியும். ஆனால், அவர்கள் இன்னும் திறம்பட வேலை செய்ய ஒத்துழைக்க வேண்டும். அதே மாதிரி மெம்பர்களும் பிர்க்கா டெவலப்மென்ட் கமிட்டி மீட்டிங்களுக்கு வந்து யோசனைகளை எடுத்துச் சொல்லவேண்டும். இப்பொழுது காடாம்புலியூர் மிகவும் பின்தங்கிய பிரதேசம் ஆக இருக்கிறது. அங்கே பல குறைபாடுகள் இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவிற்கு போதுமான அளவு மின்சார வசதி இல்லாததனால், தஞ்சை, செங்கல்பட்டு ஜில்லாக்களைப் போல் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI**: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்டத்திற்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் தொகை ஒதுக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையைக் கேட்டு இருப்பதில், ஒதுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லுகின்ற தொகையின் அளவை கொஞ்சம் வெட்ட வேண்டுமென்று இந்தத் தரப்பிலுள்ள நாங்கள் சில காரணங்களைக் காட்டி விளக்கிக்

கொண்டு வருகிறோம். இந்த சமுதாய நலத் திட்டத்தை தத்துவ ரீதியிலே ஆராய்ந்து பார்ப்பது என்பது ஒன்று. நடைமுறையில் என்ன பலன்களைத் தந்திருக்கிறது என்று ஆராய்வது மற்றொன்று. நடை முறையில் சமுதாய நலத் திட்டங்களை ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் அது இந்த ராஜ்ய சர்க்காருக்கும் மற்ற ராஜ்ய சர்க்கார்களுக்கும் ஒப்புவமை பார்த்து, இந்த ராஜ்ய சர்க்காருடைய திறமையைப் பாராட்டுவது, சரியான வழியில் நடைபெறவில்லை என்று இந்த ராஜ்ய சர்க்காருடைய திறமைக் குறைவை கண்டிப்பது என்ற வகையிலே ஆராய்வது மற்றொன்று. நான் முதலிலே இந்த சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் என்று இருக்கிறதிட்டத்தை தத்துவ ரீதியாக ஓரளவுக்கு ஆராய்வதற்கு விரும்புகிறேன். ஏனென்றால் இந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லப்படுகின்ற திட்டத்திற்கு உயிரோட்டம் தரத்தக்கது என்றும், உலகத்திலே உள்ள பலநாடுகள் இதனை மிகக் கூர்மையாக கவனிக்கின்றன என்றும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்றன கிராமப்புறங்களிலே புத்துணர்ச்சியும், புத்துயிரும் இந்தத் திட்டத்தினால் வருகிறது என்றும் கொண்டாடப்படுகிறது. வெளி நாடுகளிலே இருந்து வருகிற பெரும் தலைவர்களும் சமுதாய நலத்திட்டங்கள் நடைபெறுகிற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்கள் எல்லாம் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் கண்டு, தங்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய சர்க்காரினாலே வெகுவாகப் புகழப்படுவதும் வெளி நாட்டினருக்கு வெகுவாகக் காட்டப்படுவதும், வெளி நாட்டுத் தலைவர்கள் பாராட்டி விட்டுப் போவதுமான இந்தத் திட்டம் சரியான தத்துவத்தின் பெயரால் சட்டப்பட்டிருக்கிறதா என்று ஆராயவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

இந்த மா நில சர்க்காருடைய வரவு செலவுத் திட்டத்தில் 63 கோடி ரூபாயை இந்த ஆண்டில் செலவழிக்க இருக்கிறார்கள். அதிலே, 2 கோடி ரூபாய் குறிப்பிடப்பட்டு இந்தத் துறையிலே செலவழிக்கப்பட இருக்கிறது. இந்த 2 கோடி ரூபாய் செலவழிக்கின்ற இந்தத் துறைகள் ஒன்றும் தனித்தனி துறைகள் அல்ல, புதுமையான துறைகள் அல்ல. மிச்சம் இருக்கிற 61 கோடி ரூபாயை எந்தெந்த துறைகளுக்குச் செலவழிக்க இருக்கிறார்களோ அதற்கு செலவழிக்கப்படும். உதாரணமாக விவசாயத்திற்கு என்று குறிப்பிட்ட தொகையை செலவழிப்பதில், அதிலே சமுதாய நல திட்டத்திலே கொஞ்சம் தொகையும், அது போலவே, கால்நடை பராமரிப்புக்கு என்று பட்ஜெட்டில் ஒதுக்கி இருக்கிற தொகையோடு இதிலேயும் கொஞ்சம் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அறுபத்தோரு கோடி ரூபாய் செலவழிப்பதின் மூலம் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள், நம்மை ஆளுகின்றவர்கள், என்ன பலனை செய்து காட்ட விரும்புகிறார்களோ, மேலும் 2 கோடி ரூபாய் செலவழிப்பதினால், மிக்க அதிக நன்மை செய்து விட முடியும் என்று அவர்களே வலியுறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு நாட்டை ஆளுகின்ற சர்க்காரின் தராதரத்தைப்பற்றி வலியுறுத்துகின்ற நேரத்தில், இந்த நாட்டைப் பொறுத்தவரை, காங்கிரஸ் ஆட்சியைப் பொறுத்தவரை இந்த அளவுக்கு வரி போட்டோம், இந்த அளவுக்கு அதிகாரத்தை கொடுத்தோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், இதற்கு முன்னர் வேறு ஒரு அமைச்சர் அவை இருந்தது இல்லை, மற்றொரு அமைச்சர் அவை என்ன காரியங்களை சாதித்தது, இது என்ன சாதிக்கவில்லை என்று ஒப்புவமை பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை. இனி வர இருக்கிற அமைச்சரவையைவிட இந்த அமைச்சர் அவை திறம்பட நடக்கின்றதா என்று பார்ப்பதற்கு எதிர் கால அரசியல்தான் பதிலளிக்க வேண்டும். இதற்கு முன்னாலிருந்த அமைச்சரவை இப்பொழுது நாம் வசூலிக்கின்ற வரிப் பணத்தில் 4-ல் ஒரு பாகமோ 10-ல் ஒரு பாகமோ மிகக் குறைந்த அளவிலே வரி வசூலித்துக்கொண்டிருந்தது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.



கிராமப் புறங்களிலே, சமுதாய நல திட்டத்தின் மூலம் நாங்கள் தான் அபிவிருத்திகள் செய்து இருக்கிறோம், மற்றவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதற்கில்லை. உண்மையிலேயே ஒப்பிட்டுப் பார்ப்பது சரியான முறையாகாது என்பதை இந்த மாமன்றத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சமுதாய நல திட்டங்கள் வகுத்திருக்கின்ற நோத்தில் 4 பெரிய பலன்களை எதிர்ப்பார்ப்பதாக அதனுடைய கர்த்தாக்கள் வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் புத்துணர்ச்சி, புத்துயிர், ஆங்கிலத்தில் "**Revolution in Rural India**" என்று சொல்வார்கள்—கிராமங்களில் ஒரு புரட்சியை நான் காண விரும்புகிறேன், என்று அதனுடைய கர்த்தா சொல்லியிருக்கிறார். இன்றைய தினம் கிராமப் புறங்கள் அத்தகைய உருவத்தை அடைந்து இருக்கின்றனவா என்பதை சமுதாய நல திட்டத்திற்கு பொறுப்பாக உள்ளவர்கள் நெஞ்சில் கை வைத்து உண்மையில் பதில் அளிக்க வேண்டும். கிராமப்புறங்களில் இன்றைய தினம் இருக்கும் நிலைமை, சமுதாய நல திட்டங்கள் மூலமாக இரண்டொரு புதிய கட்டிடங்கள் கட்டுவதும், பொறுக்கு விதைகளை தருவதும் இப்படிப்பட்ட காரியங்களை மட்டும் காட்டி, பெரிய புரட்சி மனப்பான்மை பரவி விட்டது என்ற எண்ணம் அல்லாது, தோற்றத்திலே பாவி விட்டது என்று சொல்வதில் பொருள் இல்லை. சமுதாய நல திட்டத்தின் மூலம் இல்லாவிட்டால் வேறு வகையில் இவை நடைபெறும். கிராமங்களில் பணம் படைத்தவர்கள் பஜனை கோயில் கட்டியிருப்பார்கள், இன்னும் அதிக பணம் படைத்தவர்கள் திருக்கோயிலை கட்டியிருப்பார்கள். பஜனை கோயில் கட்டியதாலேயே பக்தி வளர்ந்துவிடவில்லை. திருக்கோயிலை கட்டியதாலேயே திருத்தொண்டு வளர்ந்துவிடவில்லை என்பது போல இந்த சமுதாய நல திட்டப் பகுதிகளில் இரண்டொரு கட்டிடங்கட்டியதால் மட்டும், அங்கு இருக்கின்ற அலங்கோல நிலைமை மாற்றப்படவில்லை.

ஆகவே தான் இந்தத் திட்டக் கர்த்தாக்கள் கிராமப்புரங்களில் புரட்சி மனப்பான்மை வரவேண்டும் என்று சொன்னது மட்டுமல்ல கிராமப் புரங்களில் உற்பத்தி பெருகவேண்டும் என்றும் எடுத்துச்சொன்னார்கள். அந்த உற்பத்தி பெருகி இருக்கிறதா என்ற வினாவுக்கு, நாங்கள் அல்ல என்று சொல்லுகிறோம். அந்த திட்டம் சரியான முறையில் அமுலாக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கு போடப்பட்ட பல்வந்த்ராய் மேதா கமிட்டியினர் பல்வேறு இடங்களுக்குச் சென்று, சுற்றிப் பார்த்து பெருமைப் படக்கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை என்பதையும், உற்பத்தி பெருகினதாக தவறான கணக்கை மக்களுக்குக் கொடுத்து விட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டையும் இந்த கமிட்டியினர் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்த ராஜ்யத்திலே அது சரியான முறையில் நடைபெறவில்லை என்று அந்தக் கமிட்டியின் அறிக்கையில் ஒரு குறிப்பும் காணப்படுகிறது. அந்தக் கமிட்டியில் இருந்தவர்கள் பெரும்பாலும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் என்றோ, அல்லது செய்கின்ற காரியங்களுக்கு குற்றங்களைக் காணக்கூடியவர்களென்றோ, கிராமப்புரங்களுக்கே இது வரையிலும் போகாதவர்களென்றோ, அலட்சியப்படுத்தி விடமுடியாது. அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், நல்ல மதிப்பு அளிக்கக்கூடியவர்கள், ஆளும் கட்சியில் அக்கரை கொண்டுள்ளவர்கள், இவர்களே அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். "இந்த திட்டம் எதிர்பார்த்த பலனை தரவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து மற்றொரு தத்துவ ரீதியான விளக்கத்தையும் கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். உற்பத்தி பெருக வேண்டிய அளவில் பெருகவில்லை என்று பல்வந்த் ராய் மேதா கமிட்டி ஒப்புக்கொண்டிருக்கிறது. குறிப்பாக விவசாய உற்பத்தி பெருகினாலும் அதன் மூலமாக செல்வம் வளர்ந்து விடுமா என்பதைப்பற்றி என்னைப்போன்றவர்களுக்கு ஐயப்பாடு உண்டு. ஆனால் உற்பத்தி பெருகி, அந்த உற்பத்தியிலிருந்து கிடைக்கக்கூடிய லாபம், உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாய், பரவலாக நாட்டு மக்களிடத்தில் சென்று சேருவதற்கான வழி முறை இல்லாத காரணத்தால் உற்பத்தி பெருகுவதன்

[Sri C. N. Annadurai] [17th March 1958

மூலம் மட்டும் மறுபடியும் மறுபடியும், பொருளாதாரத் துறையில் பேதங்கள், வித்யாசங்கள் இருக்கத்தான் செய்யும் என்ற கருத்தை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

உற்பத்தி பெருகுவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வதற்கு ஒவ்வொரு ராஜ்ய சர்க்கார்களும், விவசாய அமைச்சர்களும் காஷ்மீர் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீநகரில் கூடி நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த அமைச்சர் அவைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே உற்பத்தி பெருக வேண்டுமென்றால் நிலத்தில் பாடுபடுகிறவர்கள்தான் நிலத்தின் சொந்தக்காரர் என்ற உரிமை உணர்ச்சி ஏற்பட்டாலொழிய உற்பத்தி பெருகுவது என்பதையும், இதற்கு உரிய சட்டத்தை நிறைவேற்றுவதில் ராஜ்ய சர்க்கார் தயக்கம் காட்டுகிறது, தாமதம் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஸ்ரீநகரில் கூடிய விவசாய அமைச்சர்கள் மகாநாட்டில் உடனடியாக விரிவான நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், அப்பொழுதுதான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் நாட்டு மக்களிடம் பரவலாக செல்வத்தை அளித்துவிடாது, என்பது ஒன்று. உற்பத்தியை பெருக்குவதற்கு ஊக்கத்தை அளிக்க தேவையான வகையில் அதில் உழைக்கிறவர்களுக்கு நிலத்தை உடைமையாக்க வேண்டும் என்ற இந்த இரண்டு கருத்துக்களையும் பலனையும் சுமந்து கொண்டுதான் சமுதாய நல திட்டம் இன்றையதினம் இருக்கிறது. இந்த திட்டத்தை நடை முறையில் கவனிக்கும்போது உண்மையிலேயே இதைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர்கள், ஆராய்ந்து பார்த்துவிட்டு வந்தவர்கள், எந்த இடம் ஏற்கெனவே வளம் பெற்று இருக்கிறதோ அந்த இடங்களில் தான் வளர்ச்சி இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை உறுதிப்படுத்தும் தன்மையில் ஸ்ரீமதி குழந்தை அம்மாள் அவர்கள் பேசும்போது "எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எங்களால் கொடுத்துவிட முடியும், அதை வாங்கிக்கொண்டு என் திட்டங்களை வளர்ச்சி செய்யாமல் இருக்கிறீர்களே" என்று கேட்டார். அவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள். அது பிற்போக்கான சில பகுதிகள் என்பதாலும், பொது மக்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு பணம் திரட்டித்தருவதற்கு இயன்ற அளவுக்கு அவர்களிடத்தில் பண நடமாட்டம் இருக்கிறது என்பதாலும், அப்படிச் சொல்லுகிறார். இத்தகைய மாவட்டங்களுக்குத்தான் இத்தகைய பலன் போய் சேருகிறதே தவிர நாங்கள் இருக்கும் செங்கற்பட்டு மாவட்டம் பொருத்த வரையில் அதிலும் குறிப்பாக காஞ்சிபுரத்தைப்பற்றி எங்களுடைய கட்சி மாச்சர்யத்தோடு பேசுகிறேன் என்று சொன்னாலும் கூட காய்ந்திருக்கிற காஞ்சியிலும் அநேகம் சமுதாய நல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தாலும், அதற்கு பொது மக்களிடமிருந்து அதிகப்படியான பணத்தைப் பெருவதற்கு இல்லை. அதிகப்படியான பணத்தை பொது மக்களிடமிருந்து பெருவதற்கு இல்லாத நேரத்திலே உழைப்பு மூலமாக அவர்கள் தானம் அளிக்கலாம் என்ற வாதத்தை எழுப்பப்படுகிறது. உழைப்பு மூலமாக தானம் அளிக்க வேண்டும் என்றால் அந்த உழைப்பை வைத்துக்கொண்டு தான் அவர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்லுகிறார்கள். மிச்சம் இருக்கும் காலத்தில் இதற்கு அந்த உழைப்பைத் தரவேண்டும் என்பது இயலாத காரியம். ஆகையினால் சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் அந்த இடத்தில் பணத்தைக் கேட்கிறபடியோ அல்லது உழைப்பை கேட்கிறபடியோ என்பதைக் குறிக்கோளாக பார்க்காமல் அந்த இடங்களில் அவசர அவசரமாக திட்டங்களை நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற குறிக்கோளை மனதில் வைத்துக்கொண்டு அவைகளை நிறைவேற்ற வேண்டும். இதில் அரசியல் கண்ணோட்டம் அடியோடு இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளும்போது உண்மையிலேயே நாம் இந்தப் பிரச்சினையிலிருந்து நழுவிக் கொள்ளுகிறோம். ஆளுகிற கட்சி எப்பொழுதும் தாங்கள் செய்கிற காரியம் அரசியல் கண்ணோட்டத்துடன் செய்யபடவில்லை என்றுதான் வாதாடுவார்கள். எதிர்க்கட்சியினர்கள் காங்க



17th March 1958] [Sri C. N. Annadurai]

கண்டவைகளை எடுத்துச்சொல்லி அரசியல் கண்ணோட்டம் இதில் இருக்கத்தான் செய்கிறது என்பதை எடுத்துக்கூறுவார்கள். ஒரு தொகுதியில்—அதனுடைய பெயரை குறிப்பிட விரும்பவில்லை—என்னுடைய கழகத்—தோழர் வெற்றி பெற்றிருக்கிறார். அங்கே நடைபெறுகின்ற எல்லா சர்க்கார் அலுவல்களிலும், சமுதாய நல திட்ட சம்பந்தமான எல்லா அலுவல்களிலும், அவரிடம் தோற்றுப்போன காங்கிரஸ் நண்பர் தான் அந்த இடத்திலேயே இடம் பெறுகிறார். வெற்றி பெற்ற என்னுடைய கழகத் தோழருக்கு அந்த இடத்திலே இடம் அளிக்கப்படவில்லை. அப்படி இடம் அளிக்கப்படாததுமட்டுமல்ல, நிறைவேற்றப்படும் திட்டங்களின் திறப்பு விழாக்கள் நடைபெறும்பொழுது "நாங்கள் இவைகளையெல்லாம் செய்திருக்கிறோம். இன்றைய தினம் நீங்கள் தேர்ந்தெடுத்தவர் என்ன சாதித்துவிட்டார்" என்று கேட்பதன் மூலம் அடுத்த தேர்தலுக்கு அச்சாரம் வைத்துவிடுவதாக நம்முடைய காங்கிரஸ் கட்சி பிரசாரகர்கள் கருதி கொண்டிருக்கிறார்கள். இதை நான் சொல்லுவதற்கு காரணம், இதில் அரசியல் கட்சி கண்ணோட்டத்தை புகுத்தவில்லை என்று எடுத்துச்சொல்லுவது, பிரச்னையை நழுவ விடுவதாகும். பிரச்னையை நழுவவிடுவது மாத்திரமல்ல, பெரிய தொகை செலவழிக்கிறோம், சமுதாய நல திட்டத்திற்காக பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஏறக்குறைய இந்திய துணை கண்டத்தில் ரூ. 100 கோடி செலவழிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். 100 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டத்தில் அரசியல் கட்சி மாச்சரியம் உள்ளே புகுந்தால் அதன் மூலம் பெறக்கூடிய பலனை நாம் நிச்சயம் பெறமுடியாது. நமது நிதி அமைச்சர் அவர்கள் முதலிலே கொடுத்த விளக்க உரையில் இவைகளெல்லாம் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். விவசாயம் வளரவேண்டுமானால், பொறுக்கு விதைகள் வேண்டும், பொறுக்கு விதைகள் கிடைத்தால் மட்டும் போதாது, நல்ல உரம் தேவை ; நல்ல உரம் மட்டும் கிடைத்தால் மட்டும் போதாது, செயற்கை உரம் மட்டும் கிடைத்தால் போதாது, இயற்கை உரம் தேவை ; இவைகளெல்லாம் மட்டும் கிடைத்தால் போதாது, இவைகளை ஒன்றுபடுத்த கூட்டுறவு தேவை ; கூட்டுறவு இருந்தால் மட்டும் போதாது, கிராமத்திலுள்ளவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றெல்லாம் எடுத்துக் கூறினார்கள். கடன் வசதியைப் பொறுத்த வரையில் ஒரு கூட்டுறவு நிபுணர் கொடுத்திருக்கிற கணக்குப்படி கிராமத்தில் 100-க்கு 69·7 பங்கு **professional money-lenders**, பணத்தை வட்டிக்கு கொடுக்கின்ற வட்டிக் கடைக்காரர்களை நமது கிராம மக்கள் நம்பியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். 100-க்கு 69 பங்கு கிராமத்தார்களுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கின்றவர்கள் **money-lenders** என்று இருக்கிற நேரத்திலே, நம்முடைய சர்க்கார் கொடுக்கின்ற கடனுடைய அளவு 3·3 என்று கணக்கு தரப்படுகிறது. கூட்டுறவு முறையில் கடன் கொடுப்பது மட்டுமல்லாமல் கருத்துக்களையும் தரவேண்டுமென்று நமது அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மற்ற மற்ற துறைகளைப்பற்றி அவர்கள் என்ன பாத்தியதைக் கொண்டாடிக்கொண்டாலும், கூட்டுறவைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட நாளைக்கு முன்பே இந்த மாநிலத்தில், இந்த ராஜ்யத்தில் கூட்டுறவு துறை மிகமிக போற்றத்தக்க முறையில் வளர்ந்துகொண்டிருந்தது. அப்படி போற்றத்தக்க முறையில் வளர்ந்துகொண்டிருந்த கூட்டுறவு மூலமாக இப்பொழுது இவர்களால் தரப்படுகின்ற கடன் 100-க்கு 3 பங்கு என்ற அளவிலே இருக்கிறது. வட்டிக்கு கடன் கொடுக்கின்றவர்கள் 100-க்கு 69 பங்கு. இந்த நிலையில் இவர்கள் எங்கே முன்னேற்றத்தை காட்டுகிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்கு பொறுக்கு விதைகளைத் தருவது ஆட்சியாளர் கண்ட புதுமை அல்ல. பொறுக்கு விதைகள் முன்னாலேயே நம் தாலூகா அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வந்தன. அதே மாதிரி பொலி காளைகள் வளர்ப்பதும் ஆட்சியாளரின் புரட்சிகரமான புதுமையான திட்டமல்ல. இதற்கு முன்னாலேயே இந்தத் திட்டங்கள் இருந்துகொண்டு

வருகின்றன. இந்தத் திட்டங்களுக்கு நாங்கள் செலவழிக்கும் பணம் அதிகம் என்று சொல்லலாம். அதை எப்படி ஏற்றுக்கொள்ளுவது ? நீங்கள் வசூலிக்கின்ற வரி அதிகம் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். இந்த மாநில சர்க்காரின் நிர்வாகச் செலவுக்காக முன்பு 6 கோடி ரூபாய் கிடைத்தது. இப்பொழுது 63 கோடி ரூபாய் கிடைக்கிறது. அந்த நிலையில் கொஞ்சம் அதிகம் செலவழித்து விட்டால் கீர்த்தியோ, கிதாப்போ அடைந்துவிடலாம் என்று நினைத்தால், அவர்கள் அடையவேண்டிய நல்ல புகழை அடைய வில்லை என்றுதான் கருதவேண்டும். எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் இது அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுகிறது என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் எங்களை வாயடைப்பதற்கு எதை வேண்டுமானாலும் பேசட்டும். அதுபற்றி நான் பொருள்படுத்த வில்லை. நான் கூறுவது நல்ல முறையில் உபயோகப்படுமானால் அதிலே நான் பெருமை அடைந்தவனாக கருதுவேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்பத்தூர், பூந்தமல்லி வட்டாரங்கள் நன்றாக வளர்ச்சி அடைந்து அம்மையார் அவர்கள் கூறியபடி மக்கள் திட்டங்களுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து மேலும் பணம் வாங்கிக்கொள்ளுவதற்கு முடியாத அளவில் அஜீரணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மதுராந்தகமும் அதுபோலவே நல்ல வளம் பெற்றிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய காஞ்சிபுரமும், உங்களுடன் (காங்கிரஸ்காரர்களுடன்) இருந்துவிட்டு இப்போது எங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியாரின் தொகுதியாகிய உத்திரமேரூரும் சர்க்காரால் மாற்றாந்தாயின் பிள்ளைகளைப்போல் நடத்தப்படுகின்றன. மாற்றாந்தாயின் பிள்ளைகளைப் போல் நடத்தப்படும் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் தொகுதிகள் அரசியல் கண்ணோட்டத்துடன் ஆட்சியாளர்களால் அவ்வாறு நடத்தப்படுவதாகச் சொல்லும்போது, அவ்வாறு நடத்தப்படுவதில்லை என்று வாதிக்கப்படுவதைத்தான் நான் காண முடிகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் பெருந்தொகை செலவில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் விஷயத்தில், அவை வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் அக்கறை காட்டுவதற்கும், அவை தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்களின் துவக்க கட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை ஆட்சியாளர்கள் கோரவேண்டும். துவக்க கட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோராததினால், இப்போது பல ஊழல்கள் தோன்றிவிட்டன என்பதை நான் எடுத்துச் சொல்வதைவிட, இந்த ஆட்சியாளர்களுடன் இருந்தவரும் சபையில் அங்கத்தினராக இருப்பவரும் காங்கிரஸ்காரராக இருப்பவருமான ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன். அவர் அண்மையில் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, கான்ட்ராக்டர்கள் கொழுப்பதற்கும் ஊழல்கள் அதிகமாவதற்கும்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் இப்போது வாய்ப்பளிக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர் கூறியதை ஆமோதிக்கும் தன்மையில்தான் நேற்று முன் தினம் பாரதத்தின் பிரதமராகிய பண்டித ஜவஹர்லால் நேரு, நம் திட்டங்களால் உணவு உற்பத்தியில் நாம் அதிக அளவு முன்னேற்றம் காண வேண்டுமென்றும், அம் முன்னேற்றத்தின் பலனை கிராம மக்கள் அடைய வேண்டுமென்றும், அம் முன்னேற்றத்தின் விளைவாக விலைவாசிகள் ஏறுமல் இருக்க வேண்டுமென்றும், நாம் வகுத்து நிறைவேற்றும் திட்டங்களால் இந்தப் பலன்கள் ஏற்படாதவரையிலும் அத்திட்டங்கள் உயிரற்ற நிலையில் (லைப் லெஸ்) தான் இருக்குமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

எங்களைப் பொறுத்தவரையில், சமுதாய நலத் திட்டங்கள், பழைய காலத்தில் பெருமைவாய்ந்திருந்த பஜனைக்காரர்கள் கட்டிய கோயில்களைப் போலவும் இடைக்காலத்தில் பெரிய பணக்காரர்கள் கட்டிய கோயில்களைப்





போலவும், தங்கள் விளம்பரச் சாவடிகளைக் கட்டிக்கொள்வதற்கு காங்கிரஸ்காரர்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கின்றன என்றும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தங்கள் விளம்பரச் சாவடிகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றும்தான் கருதுகிறோம். சமுதாய அபிவிருத்தித் திட்டங்களினால், கிராமங்கள் புத்துயிர் பெற்றுவிடவில்லை என்றும், நாட்டில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டு விடவில்லை என்றும், கிராம மக்களின் பொருளாதார நிலை உயர்ந்துவிடவில்லை என்றும் நாங்கள் வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நாங்கள் எவ்வாறு உதவமுடியும் என்று அமைச்சரவை கேட்குமானால், நான் மீண்டும் சொல்வேன். திட்டங்களிலும், திட்டங்களை நடத்துவதிலும் இருக்கக்கூடிய குறைகளை நீக்குவதற்கான எங்கள் யோசனைகளை ஆளும் கட்சி திட்டங்களின் துவக்க கட்டத்திலேயே பெறவேண்டும்.

1-40 p.m.

எதிர்த் தரப்பினரின் எல்லா வாதங்களையும் முறியடிப்பதில் மட்டும் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டக்கூடாது என்றும், அவ்வாறு செய்வது அரசியல் அறிவுடைமை ஆகாது என்றும், திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் கனம் அமைச்சர்களிடம் சொல்லிக்கொள்கிறேன். இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் வருங்காலத்தில் தக்கவாறு செலவழிக்கப்பட வேண்டுமென்று எதிர்த்தரப்பிலுள்ள நாங்கள் சொல்லிக்கொள்கிறோம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பட்ஜெட் விவாதத்தில், முக்கியமாக மானியங்கள் சம்பந்தப்பட்ட விவாதத்தில், நாங்கள் விவாதிப்பது, எல்லாக் காரியங்களையும் நாங்கள் நன்றாகச் செய்திருக்கிறோம் என்ற செர்டிபிகேட்டை வாங்குவதற்காக அல்ல. உண்மையிலேயே, எந்த எந்த துறைகளில் என்ன என்ன குறைகள் இருக்கின்றன என்று எல்லா கனம் அங்கத்தினர்களும் எடுத்துச் சொல்வதற்கும், அவ்வாறு எடுத்துச்சொல்லப்படும் குறைகளை நீக்குவதற்கு நாங்கள் முயற்சிசெய்வதற்கும் வாய்ப்பளிப்பதற்காகத்தான், இந்த விவாதம் நடத்தப்படுகிறது. ஆகையால் இந்த விவாதத்தின்போது குறைகள் கூறியதை நான் மிகவும் வரவேற்கிறேன். குறைகளை எடுத்துக்காட்டும்போது, ஒரேயடியாக, இந்தத் திட்டங்கள் காங்கிரசுக்கு ஒரு விளம்பர இலாகாவாக இருக்கிறது என்று சொல்லப்படுவதை, குறைகள் எடுத்துக்காட்டப்படுவதாக நாங்கள் எடுத்துக்கொள்ள முடியாது. எந்தக் காரியத்தையும் எதற்கும் உதவாதது என்றும், கவைக்குதவாதது என்றும் யாரும் வெகு சுலபமாகச் சொல்லிவிடலாம். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன ; அதிகாரிகளின் முயற்சியினாலும், சிப்பந்திகள் முயற்சியினாலும் மட்டும் செய்யப்படக்கூடிய காரியம் அல்ல இது ; இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் என்னென்ன குறைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்களிடமிருந்து சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்த விவாதத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டங்கள் சம்பந்தமாக இங்கே எடுத்துக்காட்டப்பட்ட சில குறைகளை குறிப்பிட்டு அவைகளை நிவர்த்திப்பதற்கு இப்போது அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது என்று தெரிவிக்க விரும்புகிறேன். முதன் முதலில், இந்த மானியத்திற்கு இந்த வருடம் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவானது என்றும் திட்டம் விரிவாவதற்கு பதிலாகத் சுருங்கிக்கொண்டிருக்கிறது என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அந்த அபிப்பிராயம் தவறானது என்று சொல்ல விரும்புகிறேன். சமுதாய நலத் திட்டங்களுக்கு சென்ற வருடம் 1 கோடியே 7 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருடம் அந்தத் தொகை

55,58,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், சமுதாய நலத்திட்ட வட்டாரங்களாக இயங்கிவந்த வட்டாரங்களில் 19 அடுத்த வருஷம் "ரிவெர்டெட்" ப்ளாக்குகளாக ஆகப் போகின்றன. அவைகளுக்கு பதிலாக இப்போது எடுத்துக்கொள்ளப்படும் சமுதாய நலத் திட்ட வட்டாரங்கள் 9 தான். இதனால் தான் திட்டங்கள் குறைவாக இருப்பதாகக் காணப்படுகிறதே தவிர, திட்டங்கள் சுருக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. அதே சமயத்தில், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு இந்த வருஷம் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு சென்ற வருஷம் ரூ. 1,03,83,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருஷம் அத்திட்டங்களுக்கு ரூ. 1,28,73,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கு சென்ற வருஷம் 65 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத் திட்டங்களுக்கு இந்த வருஷம் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களுக்கு இன்னும் செலவுசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பின்னர் பணம் ஒதுக்கிக்கொள்ளலாம் என்று தீர்மானித்து இப்போது 50 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் சுருங்கிவருகின்றன என்று சொல்வது தவறு.

அபிவிருத்தித் திட்ட வேலைகளை நல்ல முறையில் நடைபெறுவதற்கு, நம் நாட்டில் எல்லாத் துறைகளிலும் மேற்பார்வை செய்வதற்கான ஒரு அமைப்பு சரியான முறையில் அமைய வேண்டியிருக்கிறது. ஜெர்மனி நாட்டுக்குச் சென்று வந்துள்ள ஒருவரிடமிருந்து ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன். யுத்த காலத்தில் அந்த நாடு நாசமடைந்ததைப்போல் வேறு எந்த நாடும் நாசமடையவில்லை. இருந்தாலும், இந்த பத்து வருஷங்களுக்குள் ஜெர்மனி பொருளாதாரத் துறையில், யுத்த காலதிற்கு முன்பிருந்த நிலையைவிட உயர்ந்தநிலையை அடையும் அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்று அவர் சொன்னார், அதற்கான காரணத்தையும் நான் அறிந்தேன். அந்த நாட்டில் எந்த ஒரு தொழிலாளியின் கடமையையும் வேலையையும் மேற்பார்வை செய்ய வேண்டிய அவசியமில்லை. அங்கே எல்லோரும் தங்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து, மேற்பார்வை இல்லாவிட்டாலும் சரிவரப் பணியாற்றிவருகிறார்கள். அந்நாட்டில் மிக சாதாரணத் தொழிலாளி முதல் மிகப் பெரிய அதிகாரிகள் வரையில் ஒவ்வொருவரும் கடமையுணர்ச்சியுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் வேலைப்பார்க்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அந்நாட்டில் தொடர்ந்து அபிவிருத்தி ஏற்பட்டு இப்போது பொருளாதார நிலை மிகவும் உயர்ந்திருக்கிறது என்று அறிகிறோம். ஆனால் நம் நாட்டிலுள்ள நிலை மிகவும் வருந்தத்தக்கது. நம் நாட்டில் எந்த நிர்வாகத்திலும் மேற்பார்வைகள் மிகவும் தேவையாக இருக்கின்றன. கீழே இருப்பவர்கள் அவர்களுடைய வேலைகள் சரிவரச் செய்கிறார்களா என்று கண்காணிப்பதற்கு அவர்களைவிட ஒரு படி உயர்ந்த உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. அந்த உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று கவனிப்பதற்கு அவர்களை விட ஒருபடி உயர்ந்த அதிகாரிகளை நியமிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு படிப்படியாக பல அதிகாரிகளை நியமித்து எல்லா உத்தியோகஸ்தர்களும் அவரவர்களுடைய வேலைகளை சரிவரச் செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டியிருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலை. இப்படிப்பட்ட நிலை அரசாங்க உத்தியோகஸ்தர்களிடையே மட்டும் இருக்கிறதென்று சொல்லமுடியாது. இந்த நிலை எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. எல்லா மக்களுடைய மனப்பான்மையும் இப்படித்தான் இருக்கிறது. மக்கள் எல்லோரும் கடமை உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் உள்ளவர்களாக ஆகவேண்டும். காண்ட்ராக்டர்கள் எப்படி வேலைசெய்கிறார்கள் என்பது ஒரு புரம் இருக்கட்டும். மக்களுக்கும் பொறுப்பு உணர்ச்சியும் கடமை உணர்ச்சியும் இல்லை. காண்டிராக்ட்ர்களைப் பற்றி ஸ்ரீ அண்ணாதுரை குறிப்பிட்டார். அவர்களைப்பற்றி தாம் தெரிவித்த கருத்துக்கு, முன்னால் அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்தை சான்றாக எடுத்துக்காட்டினார்கள். இப்போது பல வேலைகள் காண்டிராக்டர்களிடம்



ஒப்படைப்படுவதில்லை. பல வேலைகள் அந்த அந்த கிராம மக்களிடமே ஒப்படைக்கப்படுகின்றன. அவ்வாறு வேலைகள் கிராம மக்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும், தவறுகள் ஏற்படுவதை நான் பார்த்திருக்கிறேன்; ஆனாலும், மக்களுக்கு பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் ஏற்படும்படி செய்துள்ள இடங்களில் வேலைகள் நன்றாக நடந்திருக்கின்றன. ஆகையால், பல திட்டங்களை ஆரம்பித்து, ஏராளமான பணம் செலவு செய்து அவைகளை நடத்தினால் மட்டும் அவை வெற்றியுற்று விடாது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கான கடமை உணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் எல்லோரும் பெற்றிருந்தால்தான் அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

அந்தக் கடமை உணர்ச்சியை எப்படி வளர்க்க முடியும் என்று பார்த்தால், ஒரேயடியாக இங்கே இருக்கும் நிர்வாகம் பூராவும் தப்பு, இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் லஞ்சம் வாங்கக்கூடியவர்கள் என்று ஒரே முறையில் தீர்ப்புக் கூறினால், அவர்களைத் திருத்துவதற்கான வழி அது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கெங்கே குற்றத்தைக் காண்கிறோமோ, எங்கெங்கே லஞ்சத்தைக் காணுகிறோமோ அங்கே கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். ஆனால், அதற்குப் பதிலாக எல்லோரும் எங்கு பார்த்தாலும் லஞ்ச ஊழல் என்ற அடிப்படையில் பேசினால், அதுவும் பொறுப்புள்ள சட்டசபையிலே வாதங்கள் கிளம்பினால், நியாயமாக இருக்கக்கூடியவர்கள் என்ன நினைப்பார்கள்? எல்லோருமே ஊழல் போல் இருக்கிறது, நாம் மட்டும் எதற்காக நியாயமாக இருக்க வேண்டும்? என்று நினைக்கக்கூடும். அந்த உணர்ச்சி கிளம்பினாலும் கிளம்பளாம். ஆகவே குற்றங்களைக் கண்ட இடத்தில் நன்றாகக் கண்டிக்க வேண்டும். அதற்காக எல்லோரும் தவறு இழைக்கிறார்கள் என்ற மனப்பான்மையில் பேசுவது தவறு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு அதிகாரிகளாக வரக்கூடியவர்கள் யார்? அவர்கள் எங்கே இருந்து வந்தவர்கள்? வட நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல. நம்மிடத்தில் இருக்கக்கூடியவர்கள், நம் கிராமத்திலிருந்து வந்தவர்கள் தான்; நம்முடைய ஜில்லாக்காரர்கள்தான்; நம்முடைய ராஜ்யக்காரர்கள் தான் இங்கே தெரிந்தெடுக்கப்பட்டு போடப்பட்டிருக்கிறார்கள். இவர்களிடத்தில் குறை இருந்தால், தனிப்பட்டு அவர்களை மட்டும் குற்றம் சொல்வது முறையல்ல. சமுதாயத்தில் இருக்கும் குறைகளைத்தான் அவர்கள் பிரதிபளிக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகையால், இன்றைக்கு முன்னேற்றம் காண வேண்டுமென்றால், சமுதாயம் முழுவதற்கும் முன்னேற்றம் காண வேண்டியது அவசியம் இருக்கிறது. அதற்காகத்தான் பல முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுதிருக்கும் நிலைமையிலே கண்காணிப்பு அவசியம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகையால், இவைகளுக்குப் பொறுப்பு, இன்றைக்கு எல்லாக் காரியங்களையும் சரியாக நடத்துவதற்காக யார் பொறுப்பு என்பதை ஆலோசனை செய்து இன்றைக்கு இருக்கும் அமைப்பிலே கலெக்டரைப் பொறுப்பாக வைத்தால்தான் இதிலே சரியான கண்காணிப்பு இருக்க முடியும் என்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும், அங்கு நேரக்கூடிய எல்லாக்காரியங்களுக்கும் பொறுப்பாக இருக்கக்கூடியவர் கலெக்டர் தான் என்று நிர்ணயித்திருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு இருக்கும் நிலைமையில் கலெக்டர் எவ்வளவு கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைக் கணக்கெடுத்தால் எப்படி பல மடங்காக வரி உயர்ந்திருக்கிறதென்று கனம் அண்ணாதுரை அவர்கள் சொன்னார்களோ, அதுபோல், கலெக்டர் செய்ய வேண்டிய கடமைகளும் முன்பு இருந்ததைவிட இன்றைக்குப் பல மடங்கு அதிகமாகி யிருக்கின்றன. அன்றைக்கு வெறும் சமாதானத்தை நிலவச் செய்வதோடு வரி வசூல் செய்தால் மாத்திரம் போதும் என்ற நிலைமை

இருந்தது. இன்றைக்கு அவ்வாறு இல்லை. அந்தந்த மாவட்டங்களில் நடக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் பொறுப்பாக அவர்கள் இன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் செய்யக்கூடிய வேலையும் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

அதன் காரணமாகத்தான் அவர்களிடத்தில் கண்காணிப்பை ஒப்புவித்ததாகும். அவர்கள் அதைச் சரியான முறையிலே செய்ய முடிவது இல்லை என்பதை இன்றைக்கு ஓரளவு நாம் பார்க்க முடிகிறது. இதை எப்படிச் செய்வது, யார் செய்வது என்பதுதான் இன்றைக்கு இருக்கும் பிரச்னை.

இன்றைக்குப் பல ஜில்லாக்கள் பெரிய ஜில்லாக்களாக இருக்கின்றன. இவ்வளவு பெரிய ஜில்லாவில் முன்பு இருந்த கடமைகளை ஒரு கலெக்டர் செய்தாலும், இன்றைக்கிருக்கும் நிலைமையில் இவ்வளவு பெரிய ஜில்லாவை வைத்துக்கொண்டு ஒரு கலெக்டர் நிர்வாகம் நடத்துவது கஷ்டமாக இருக்கிறதென்பதை மேலும் மேலும் உணர்ந்து வருகிறோம்.

ஆகையால்தான், இன்றைக்கு சில ஜில்லாக்களை உடனடியாகப் பிரித்து, இரண்டு கலெக்டர்களைக்கொண்டு நிர்வாகம் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாமா என்பதை பரிசீலனை செய்து பார்த்ததில், பரீட்சார்த்தமாக மூன்று நான்கு ஜில்லாக்களைப் போறுத்த மட்டில் அம்மாதிரி செய்யலாமா என்ற ஆலோசனை இன்றைக்கு பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அத்துடன் கலெக்டர்க்கு உதவி செய்வதற்காக நம்முடைய ராஜ்யம் முழுவதற்கும் எல்லா ஜில்லாக்களையும் இரண்டாகப் பிரிக்கும் வரையில், இரண்டாகப் பிரித்து நிர்வாகப் பொறுப்பைக் குறைக்கும் வரையில், அவர்களுக்கு உதவி செய்வதற்காக, ராஜ்யத்தை மூன்று நான்கு பிராந்தியங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் இந்த அபிவிருத்தி திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்காக என்று, கலெக்டருடைய தரத்திலே, மூன்று நான்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படலாம் என்பது இன்றைக்குப் பரிசீலனையில் இருந்து முடிவாகி, கூடிய சீக்கிரத்திலே அதைப்போல டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனர்கள் மூன்று நான்கு பேர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் ஒவ்வொரு இடமாகச் சென்று, அங்கே நடக்கக்கூடிய வேலைகளைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய முடிவாகி உத்தரவும் கூடிய விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

அந்த முறையிலே ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் இன்றைக்கு நடக்கும் வேலைகளை நல்ல முறையில் கண்காணித்து இதைப் பூராவும் நல்ல முறையிலே உபயோகப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு கோடி ரூபாய் செலவழித்தால், அந்த இரண்டு கோடி ரூபாய்க்கும் முழுப் பலன் ஏற்பட்டு விடுகிறது என்று சொல்வதற்கு இன்றைக்கும் தயாராய் இல்லை.

ஆகையால்தான், ஒவ்வொரு சமுதாயமும் வெவ்வேறு கமிட்டிகள் நியமித்து, பரிசீலனை செய்து பாருங்கள், ஒவ்வொரு இடத்திற்கும் சென்று ஆராய்ச்சி செய்து பாருங்கள், குறையைத் தெரிந்து சொல்லுங்கள். குறையைத் தெரிந்து சொல்வதோடு மட்டுமல்லாமல், குறையை நீக்குவதற்கும் யோசனை சொல்லுங்கள் என்ற முறையில்தான் பல்வந்தராய் மேத்தா கமிட்டி நியமிக்கப்பட்டது. அதிலும் எடுத்துச் சொல்லியிருப்பதைச் சொன்னார்கள். குறைகளை மூடி மறைக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணியிருந்தால் இந்தக் கமிட்டியை நியமித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. மூடி வைக்க வேண்டும் என்ற எண்ணம் எங்கள் கட்சிக்கு இருந்திருக்குமானால், "நன்றாக நடக்கிறது" என்று அறிக்கைவிடுங்கள் என்று அவர்களிடத்திலே நாங்கள் சொல்லியிருக்ககூடும். இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டதன் நோக்கம் அது அல்ல. உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்குகாகவும், தவறுகள் என்ன இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் கமிட்டி நியமிக்கப்பட்டதே தவிர, எங்களுடைய கட்சி



அடிப்படையில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த நிர்வாகம் சரியாக நடக்கிறதா, இந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதற்காக இன்னும் என்னென்ன மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் சென்றிருக்கக்கூடிய நிலைமைகளை உணர்ந்து அந்த அடிப்படையிலே மாறுதல் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இன்றைக்கு இந்தத் திட்டம் பூராவாக வெற்றிகரமாக, எந்த விதமான குறையும் இல்லாமல் நடந்து வருகிறது என்று யாரும் சொல்லவில்லை. "திட்டத்திலே என்ன குறைகள் இருக்கின்றன, அந்தக் குறைகளை எப்படித் தீர்த்துக்கொள்ள முடியும், அதற்கு உங்களுடைய ஆலோசனையைச் சொல்லுங்கள்" என்ற முறையிலே இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

திரு அண்ணாதுரை அவர்கள் பேசும்போது எதிர்கட்சியில் பேச வேண்டும் என்று அடிப்படையிலே காங்கிரஸ் விளம்பரச்சாலையாக பஜனை மடங்கள் கட்டுவது போல, கோயில் கட்டுவது போல இது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நடந்ததை கொஞ்சம் கூட நடக்க வில்லை என்று சொல்வார்களானால். அது நடந்ததை மறைக்கக் கூடியதாகும். "எல்லாம் நடந்து விட்டது" என்று நாங்கள் சொல்லிக்கொண்டாலும், நடக்காததை மறைப்பதற்கு ஆகும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன், அவர்களிடத்திலிருந்து இன்னும் உருப்படியான ஆலோசனையை நான் எதிர்பார்த்தேன். அதற்குப் பதிலாக அவர்கள் தங்களுடைய கட்சிக்கு விளம்பரம் செய்ய வேண்டும் என்று முறையில்தான் காங்கிரஸ் விளம்பரச்சாலை" என்று சொல்லி அதோடு நிறுத்திக்கொண்டார்கள். இந்த அடிப்படையிலே நாம் இந்தத் திட்டங்களை அணுகினால் கட்சிக்கு விளம்பரம் தேடுவதற்காகத்தான் நாம் பேசுகிறோமேயொழிய காரியங்கள் சரியாக நடைபெற வேண்டும் என்பதற்காக இந்த விவாதத்தில் கலந்துகொள்ள வில்லை என்ற அடிப்படையில்தான் முடியும் என்று நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வரும் மான்யங்களிலும் இதே அடிப்படையில் பேசாமல், திருத்துவதற்கு என்ன மாற்று யோசனை என்ற அடிப்படையிலே அவர்களுடைய அறிவுரையை வழங்கவேண்டும் என்று நான் மிகவும் வற்புறுத்துகிறேன். ஏனென்றால், அவர்களுடைய அறிவுத் திறமையில் எனக்கும் கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது. கட்சி விளம்பரத்திற்காகப் பேசுவதற்குப் பதிலாக கட்சிக்கு ஆதரவு தேடுவதற்குப் பதிலாக இருக்கும் நிலைமையை ஆராய்ந்து "இது எங்களுடைய மாற்று யோசனை" என்று சொல்ல முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri C. N. ANNADURAI** : கனம் அமைச்சர் அவர்கள் மாற்று யோசனையை நான் கூறவேண்டும்—மற்ற மான்யத்தின் மீது நான் பேசும்போது—என்று சொன்னவர் நான் பேசுவதற்கு சற்று அதிகமான நேரத்தை ஒதுக்கவேண்டும் என்ற முறையை அனுசரித்தால்..................

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நேரம் ஒதுக்குவது என்பது கனம் சபாநாயகர் அவர்களுடைய கையில் விடப்பட்டிருக்கிறது. எந்த விவாதத்திற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கவேண்டும் என்று கனம் சபாநாயகர் அவர்கள் முடிவு செய்கிறார்களோ அதை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். இந்த விவாதத்திற்கு நேரம் ஒதுக்கியது நான் அல்ல. எதிர்கட்சித் தலைவர்கள்தான் கூடிப்பேசி இது பற்றி முடிவு செய்கிறார்கள். அவர்கள் செய்யும் மாற்றம் எதுவாக இருந்தாலும் என்றைக்கும் நான் அதற்கு உடன்பாடு உடையவன் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு சின்ன உதாரணத்தை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். இரண்டு மூன்று நிமிஷங்களில் நான் முடிக்க வேண்டும். உதாரணமாக கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி சொன்னார்கள். கூட்டுறவு இயக்கம் பற்றிப் பேசும்போது, "முன் காலத்தில்" என்று அவர்கள் குறிப்பிட்டது அவர்கள் பூர்வீக கட்சி ஆரம்பித்தது என்ற முறையிலே அவர்கள் சொல்ல விரும்பினார் என்று நான் நினைக்கிறேன். ஆனால், வெளிப்படையாகச் சொல்ல அவருக்குப் பிரியம் இல்லை. இந்தத் திட்டங்களினால் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி என்ன என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கும் இதற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. என்று சொன்னார்கள். ஆகவே முன்பு இருந்த நிலைமை என்ன இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன என்பதை மட்டும் ஒரு பகுதியைப்பற்றி சொல்லிக் கொண்டு மற்ற பகுதிகளுக்குப் புள்ளிவிவரங்கள் வேண்டுமானால் அவர்களுக்கு நான் கொடுப்பதற்கு தயாராயிருக்கிறேன்.

ஆங்கிலத்தில் "நோட்" இருப்பதால், ஆங்கிலத்திலேயே படிப்பதற்கு தங்களுடைய அனுமதி கோருகிறேன்.

"The provision of credit for agricultural production is the major co-operative activity in the blocks. There are in the block areas 4,186 credit societies including 107 agricultural banks with 27·71 lakhs members—please note the number 21·71 lakhs—it is not a fiction, it is a fact—and they issued loans to the extent of Rs. 243 lakhs during the nine months from April to December 1957.

In the area under the Community Development Programme, 5,476 villages are now served by co-operatives. Though the overall target for the entire State is to cover 75 per cent of the villages by the co-operatives by the end of the Second Five-Year Plan period, steps are under way to cover all the villages in the blocks by co-operatives before the end of the year. Already 85·6 per cent of villages are served by co-operatives and these are catering to the needs of nearly 30 per cent—not 3 per cent—of the rural population in terms of families. The objective is to bring within the co-operative fold nearly 35 per cent of the rural population before the end of the year."

**Sri C. N. ANNADURAI**: கனம் தலைவர் அவர்களே, சர்க்கார் கூட்டுறவு இலாகா மூலம்—ப்ளாக் ஏரியாவில் 30 சத வீதம் கடன் வசதி கொடுப்பதாகச் சொன்னார்கள். மூன்று சத விகிதம் என்று நான் சொன்னது 100 ரூபாய் கடன் தேவைப்படுகிற இடத்தில் 3 ரூபாய் அளவுக்குதான் சர்க்கார் தருகிறார்கள் என்பது.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இது பழைய காலத்து கணக்கு, இந்த வருஷம் நாங்கள் செய்திருக்கும் திட்ட அடிப்படையிலே எவ்வளவு ரூபாய் கொடுக்கிறோம், எத்தனை பேருக்குக் கொடுக்கிறோம் என்று கணக்கு வைத்து, புள்ளி விவரங்களுடன் எடுத்துச் சொல்லுகிறேன். ஆகையால் இந்த ப்ளாக் ஏரியாவிலே 1·17 லட்சம் மக்கள் வாழும் பரப்பிலே 135 ப்ளாக்குகளிலும் டிசம்பர் வரைக்கும் செய்து இருக்கும் வேலைகளைச் சொல்லுகிறேன்.

அது அகில இந்தியாவுக்கும் நடந்ததாக இருக்கலாம். நான் நம் ராஜ்யத்தில் நடந்திருப்பதைச் சொல்லுகிறேன். நமது ராஜ்யத்தில் நூற்றுக்கு 85 கிராமங்கள் இப்போது கோவாப்ரேடிவ் ஏற்படுத்தப்பட்டு அதில்



இருக்கக்கூடிய நூற்றுக்கு 30 குடும்பங்கள் இன்றைக்கு இச்சங்கங்கள் மூலமாக கடன் வசதிகளைப் பெற்று வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமாதிரியே விவசாயத்திலே உற்பத்தி பெருகி இருக்கிறதா என்று கேட்டால் தைரியமாகச் சொல்வேன் பெருகியிருக்கிறது என்பதாக. இதைவிட அதிகமாகப் பெருக்க முடியாதா என்று கேட்டால் முடியும் என்றும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒன்றுமே இல்லை என்பதாகப் [பேசுகிறது என்றால் அது தம் கட்சியின் விளம்பர இலாகாகவாக இதை அண்ணாதுரை பயன்படுத்திக் கொள்ளப்பார்க்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது.

**Sri C. N. ANNADURAI**: உணவு உற்பத்தி [பெருகியிருக்கிறது உண்மையென்றாலும் ப்ளாக் ஏரியாவில் என்ன உற்பத்தி, ப்ளாக்கு இல்லாத ஏரியாவில் உற்பத்தி என்ன? எந்த இடத்தில் உற்பத்தி அதிகம் என்று சொல்ல முடியுமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: ப்ளாக் ஏரியாவில் நூற்றுக்கு 50 பங்கு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம். இதிலே இந்த இரண்டு வருஷங்களில் 20 பங்காவது உற்பத்தி அதிகப்பட வேண்டும் என்பது எங்கள் திட்டம். போட்ட திட்டத்திற்கு அதிகமாகவே ப்ளாக் ஏரியாவில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று கணக்குக் காட்டியிருக்கிறார்கள். இந்தக் கணக்கு இந்த அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டது இல்லை. கணக்குப் பிள்ளையிடமும் சென்று நான்கணா பயிர், பத்தணா பயிர் என்கிற ரீதியில் வாங்கப்பட்ட கணக்கும் இல்லை. தனியாக ஸ்டாடிஸ்டிகல் இலாகா இருக்கிறது. அறுவடை காலத்தில் நேரிடையாகச் சென்று அந்த ஸ்தலத்திலேயே நின்று எடுக்கப்பட்ட புள்ளி விவரம். இதே ரீதியில் மற்ற இடங்களிலும் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது. உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் நெல் விளையக்கூடிய பகுதி. ப்ளாக் திட்டப்படி நெல் விளையக்கூடிய பகுதியில் நாங்கள் செய்திருக்கும்படியான ஏற்பாட்டினால் நிச்சயமாக உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று சொல்லிக் கொள்வேன். வேண்டுமானால் எதிர்க்கட்சிக்காரர்களே அங்கு சென்று பார்க்கலாம். இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்றால் அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஒன்றுமே இல்லை என்றால் அது எங்களை உற்சாகப்படுத்தாது. எங்களை உற்சாகப்படுத்துவதனால் நாங்கள் எப்படி பின்னால் வரமுடியும் என்ற கொள்கையோடு பேசுவதனால்தான் அப்படிப் பேசலாம். இந்தத் திட்டத்தினால் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதல்களை புரட்சிகரமான மாறுதல்கள் என்றால் ஆம் புரட்சிகரமான மாறுதல்கள் என்று நான் சொல்லத் தயாராய் இருக்கிறேன். காஞ்சீபுரத்தில் இருந்து நேரே சென்னைக்கு வந்து விட்டு ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. ஏதாவது கூட்டத்தைப்பார்த்துவிட்டு எங்கள் மனதில் எவ்விதமான மாறுதலும் ஏற்படவில்லையே என்று சொன்னாலும் நான் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. கிராமங்களுக்குச் சென்று மக்களைப் பார்ப்பார்களானால் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று தெரியும். யாரும் மறுக்க முடியாது. வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்கிற மனோபாவத்தோடு பிரிவினையாகிய கறுப்புக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்ப்பவர்களுக்கு எல்லாம் கறுப்பு அடித்துத்தான் இருக்கும். மத்தியான வேலையில்கூட சூரிய வெளிச்சத்தைக் கறுப்பாகத்தான் காண்பார்கள். கண்ணாடியைக் கழட்டிவிட்டால் சூரியன், சூரிய வெளி, பசுமை, எல்லாம் காணமுடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் நம் மக்களுக்கு எந்த எந்த வகையில் எல்லாம் நன்மைகளைச் செய்யலாம் என்பதைத்தான் நாம் எல்லோரும் ஒன்று கூடி யோசித்தாகவேண்டும். குறிப்பாக அந்த வகையில்

உதவி செய்யாமல் கட்சிக்கண்ணோட்டத்தோடு, பிரிவினை மனோபாவத்தோடு பல கோளாறுகளைக் காட்டி சொல்ல வேண்டிய யோசனைகளைச் சொல்லாமல் விட வேண்டாம் என்பதாக குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். இது கட்சிக்கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டிய மானியம் இல்லாத காரணத்தினால் இதிலே வெட்டுகிற வேலை எதுவும் இல்லாமல், வெட்டுப் பிரேரணைகளை எல்லாம் வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மானியத்தை எகமனதாக எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member Marimuthu withdrawing his cut motion or is he pressing it?

THE HON. SRI C. SUBRAMANIAM : It has been generally agreed that except the cut motion moved by Sri Govindasamy, all the other cut motions will be withdrawn.

DEPUTY SPEAKER : Inasmuch as the Hon. Members have moved their cut motions, I will have to ascertain whether they are pressing their cut motions or withdrawing.

SRI A. R. MARIMUTHU : I am withdrawing my cut motion, Sir.

The cut motion moved by the hon. Member was, by leave, withdrawn.

The cut motions moved by hon. Members Sri M. Selvaraj, Sri K. Anbazhagan and Sri V. K. Kothandaraman were, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : Is the hon. Member Govindasamy pressing his cut motion or withdrawing the same?

SRI A. GOVINDASAMY : I am pressing my cut motion.

DEPUTY SPEAKER : I want to know which cut motion—either No. 10 or No. 11—the hon. Member is pressing.

SRI A. GOVINDASAMY : I am pressing my cut motion No. 11, Sir.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,34,57,300 under Demand XXXI—Community Development Projects, National Extension Service and Local Development Works be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall now put the original Demand to the vote of the House. The question is—

"That Government be granted a sum not exceeding Rupees 2,34,57,300 under Demand XXXI—Community Development Projects, National Extension Service and Local Development Works."

The Demand was put and carried and the Grant was made.



DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### B. Reports and other papers.

36. *The Madras Appropriation (Vote on Account) Bill*, 1958 (*L.A. Bill No.* 11 *of* 1958).

37. *The Indian Stamp (Madras Amendment) Bill*, 1958 (*L.A. Bill No.* 12 *of* 1958).

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 18th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Smallpox*

* 18 *S.N.Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பகுதியில் அம்மை அதிகமாக பரவி வருகிறதா ?

(ஆ) அம்மை நோயால் உயிரிழுந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அரசாங்கம் என்ன தடுப்பு நடவடிக்கை இது விஷயமாய் எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) None.

(*c*) Vaccination and revaccination are done by the Public Health staff.

SRI A. VEDARATHNAM : தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்யம் பகுதியிலும் இப்போது அங்கே புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ராமகிருஷ்ணபுரம் காலனியிலும் மற்ற இடங்களிலும் அம்மை நோயினால் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லையா ? பல உயிர்ச் சேதங்கள் ஏற்படும்வரையிலும்கூட அங்கே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற தகவலும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவருடைய கேள்வியில் குறிப்பிடும் விஷயம் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. தமது மூலக் கேள்வியில் வேதாரண்யம் சம்மந்தமாகத் தான் அவர் கேட்டிருந்தார். அந்தப் பகுதி சம்மந்தமாக விசாரித்ததில், யாரும் வைசூரி நோயினால் இறக்கவில்லை என்றும் ஒருவருக்கு வைசூரி நோய் கண்டதென்றும், அவர் இறக்கவில்லை என்றும், அவர் சிகிச்சை பெற்றார் என்றும் தகவல் வந்திருக்கிறது.

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அனேக கிராமங்களில் இவ்வாண்டு வைசூரி நோயினால் அதிகமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அந்த ஜில்லாவில் இந்த வருஷம் அதிகமான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்தார் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்விக்கு பதிலளிக்கும்போது அங்கே வைசூரி நோயினால் ஒரு உயிர்ச்சேதம்கூட ஏற்படவில்லை என்று கூறினேன். கனம் அங்கத்தினர் பொதுப்படையான ஒரு கேள்வியைப் போடுகிறார். கனம் அங்கத்தினர் கோரும் தகவலுக்கு, தனிக் கேள்வி போடவேண்டும்.

[18th March 1958

SRI A. VEDARATHNAM : எந்தத் தேதி வரை இருந்த நிலவரத்தைப்பற்றி தமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்று கனம் அமைச்சர் சொல்லவில்லை. ஆரம்பத்திலேயே, நான் முன்பு குறிப்பிட்ட அந்த ஒரு காலனியிலே மாத்திரம் பல உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மேலும் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே வைசூரி நோயினால் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்ற பதிலை கனம் மந்திரியிடமிருந்து கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் வேண்டிய கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 8-3-1958 வரை இருந்த நிலவரத்தைப்பற்றி எனக்கு தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலில், 16-11-1957-ம் தேதியுடன் முடிவடையும் வாரத்தில் ஒருவருக்கு வைசூரி கண்டதென்றும் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் வேறு விவரங்களை அறிய விரும்பினால், அதற்கு அவர் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI M. JAGANNATHAN : தஞ்சாவூர் ஜில்லாவில், குறிப்பாக வேதாரண்யம், மாயவரம் பகுதிகளில், அடிக்கடி காலரா, அம்மை போன்ற வியாதிகள் பரவுகின்றன என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கே அந்த நோய்களைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

* THE HON. SRI M. A. MANICKAVELU : வீண் புகார்களை நாம் கவனிக்கவேண்டியதில்லை. ஆதார பூர்வமாகப் புகார் கூறினால் அதை கவனிக்கலாம்.

MR. SPEAKER : Let us take short notice question No. 19 afterwards.

*Non-gazetted Officers*

* 20 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any memorandum was presented by the Government to the Planning Commission making prpoosals for improving the scales of pay and emoluments of Non-gazetted Officers and the last grade staff of the State Government;

(*b*) whether a copy of the Memorandum will be placed on the Table of the House; and

(*c*) what reply was received from the Planning Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM ; (*a*) A ' note on disparity in scales of pay and dearness allowance between Central Government employees and State Government employees holding comparable posts ' with suggestions for its removal has been submitted to the Planning Commission for their consideration.

(*b*) Relevant extracts* from the note are being placed on the Table of the House;

(*c*) No reply has so far been received.

SRI M. KALYANASUNDARAM : நம் ராஜ்ய நிதி அமைச்சர் அவர்கள் திட்டக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் இடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்று கூறியிருப்பது ஒரு புறம் இருக்க, ராஜ்ய அரசாங்க

* Printed as Appendix I on pages 159–162 infra.



18th March 1958]

ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 5 ரூபாய் சம்பள உயர்வு கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவியளிக்க வேண்டுமென்று கோரியிருப்பதை நான் பார்க்கிறேன். இடைக்கால நிவாரண கோரிக்கை சம்பந்தமாகவாவது திட்டக் கமிஷன் உடனடியாக தங்கள் முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தார் கோரினார்களா ? இந்த கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமானால், திட்டக் கமிஷன் மட்டும் முடிவுக்கு வந்து, தன் முடிவை அறிவித்தால் போதுமா? மத்திய சர்க்கார் நிதி இலாகாவும் முடிவுக்கு வந்து அந்த முடிவை அறிவிக்க வேண்டாமா ? அப்படியானால், மத்திய சர்க்கார் நிதி இலாகாவிற்கும் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டக் கமிஷனுக்கு அனுப்புவதற்காகத் தான் இந்த "நோட்" தயாரிக்கப்பட்டது. ஆனால் இது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணம் வருவது ஒரு புறமிருக்க, இந்த ஊழியர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு மாநில சர்க்கார் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய இந்த கோரிக்கைகள் குறித்து மத்திய சர்க்கார் ஒரு முடிவிற்கு வந்து அவை அறிவிப்பதற்கு முன், நாம் எந்த விதமான முடிவும் செய்வதற்கில்லை.

SRI K. VINAYAKAM : Sir, in the body of the note placed on the table of the House, some lines have ben mutilated or left out. May I know the significance of those missing sentences? In the absence of any reply received from the Central Government, are we—the State Government—in a very helpless attitude to go to the succour of the ailing non-gazetted officers?

MR. SPEAKER : I do not find mutilation in the paper before me.

THE HON. SRI C. SUBRAMANIAM : Only extracts have been placed. A few passages have been removed because I thought that it might not be necessary and relevant to the question to place those passages on the table of the House.

SRI K. VINAYAKAM : My question has not been answered, Sir?

MR. SPEAKER : Not necessary. Perhaps he is not willing to answer it.

SRI K. ANBAZHAGAN : கெஜட் பதிவுபெறாத அரசாங்க அலுவலர்கள் அடிக்கடி தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிக் குமுறிக்கொண்டிருக்கும் இந்த நிலையில், இந்த கோரிக்கை குறித்து திட்டக் குழுவினரின் முடிவு வெளி வருவதற்குக் காலதாமதமாகுமானால், அதைப் பொருட்படுத்தாமல் உடனடியாக இந்த அலுவலர்களுக்கு ஏதாவது நிவாரணமளிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பே சொன்னதுபோல், மத்திய அரசாங்கத்தின் முடிவு தெரிவதற்கு முன்பு, அதைப்பற்றி ஆலோசிப்பதற்கில்லை. என்.ஜி.ஓ.-க்களுடைய குமுறலைப் பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளை அவர்கள் பயன்படுத்திக்கொண்டாலோ அல்லது அரசியல் கட்சிகள் அவர்களுடைய குமுறலைப் பயன்படுத்திக்கொண்டாலோ, பிரச்னைக்கு முடிவு காணப்படுவதற்கு பதிலாக பிரச்னை நீடித்துக்கொண்டேயிருக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

*Primary Health Centre, Kadaladi*

* 348 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Primary Health Centre at Kadaladi in the North Arcot district; and

(*b*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The matter is under consideration.

SRI S. M. ANNAMALAI : சுமார் 10 மாதங்களுக்கு முன்பே இந்த யோசனை சிபாரிசு செய்யப்பட்டு சர்க்காருக்கு வந்திருக்கிறது. இதை நிறைவேற்றுவதற்கு இவ்வளவு காலதாமதமாவதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : யோசனையை முழுவதும் பரிசீலனை செய்து அது பற்றி முடிவு செய்வதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கலாம். அந்த சுகாதார நிலையத்தை சீக்கிரத்திலேயே திறப்பதற்கு உத்தரவு போடப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு 'ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்' திறக்கப்படுமா?

MR. SPEAKER : மூலக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர் போடும் உப-கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. மூலக் கேள்வி வட ஆற்காடு சம்பந்தமாக போடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கோரும் தகவலுக்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

*Mid-day meals to poor students*

* 349 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of High Schools which provide free mid-day meals to poor students, districtwar;

(*b*) the number of students who are thus benefited, districtwar; and

(*c*) whether the Government propose to grant subsidies to such schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No information is available. The scheme sanctioned by Government is for the supply of school-meals to poor pupils in *elementary schools only*.

(*b*) Does not arise.

(*c*) There is no proposal to grant subsidies to High Schools at present.

SRI M. D. THIAGARAJA PILLAI : அரசாங்கத்தால் இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் ஆரம்பப் பள்ளிகள் பயன்படுத்திக் கொண்டனவா ? அப்படி பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் எவ்வளவு பணம் பாக்கி இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அனேகமாக ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிக்கப்பட்டதாகத் தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. பாக்கி இருந்தால் அது எவ்வளவு என்று நான் உடனடியாகச் சொல்லமுடியாது.



SRI A. A. RASHEED : Sir, is it a fact that the Government are giving subsidy of 6 nP. per pupil? If so, will the Government consider increasing the subsidy for the mid-day meals?

THE HON. SRI C. SUBRAMANIAM : An upper limit has been fixed. The exact figure is not readily available. I am sorry it is not in my mind now.

SRI M. JAGANNATHAN : 'ஜில்லா வாரியாக எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு அளிக்கப்படுகின்றது' என்ற கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'தகவல் இல்லை' என்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SURAMANIAM : தகவல் இல்லாதது.

SRI K. VINAYAKAM : Is the Minister aware of the fact that elementary schools in the City of Madras which are run by the Corporation are being supplied with mid-day meals? What is the alternative arrangement that is meted out to the privately managed elementary schools in the City and what is the aid which the Government propose to give if the initiative comes from the managements?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

*Agrarian trouble*

* 350 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of 'nanjai' land that were not cultivated or could not be cultivated with kuruvai crop due to Agrarian trouble in Tirumangaam and Manachanallur areas in Lalgudi taluk, Tiruchirappalli district during the current year?

THE HON. SRI M. A. MANICKAVELU : The information is as follows :—

| | | |
|---|---|---|
| I Thirumangalam area— | | ACS. |
| (i) Thirumangalam village | ... ... | 17·55 |
| II. Manachanallur area— | | |
| (i) No. 2 Kariamanickam village | ... ... | 98·53 |
| (ii) Manachanallur village | ... ... ... | 15·91 |
| (iii) Kilianallur village | ... ... ... | 5·94 |
| (iv) Melaseedevimangalam village | ... ... | 134·74 |
| (v) Vengangudi village | ... ... ... | 135·00 |
| Total | ... | 407·67 |

SRI S. LAZAR : Sir, what is the nature of Agrarian trouble that we had in those areas and what are the steps taken by the Government to see that all these 438 odd acres are to be cultivated especially at a time when we are having shortage of food?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் பொறுக்குக் கமிட்டியின் அங்கத்தினராக இருந்தார். அவரே அதைப்

பற்றி இப்பொழுது விளக்கும்படி கேட்பதால் அவருக்குச் சொல்வது மட்டுமல்லாமல், இந்த அவையில் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். 'வாரம்' என்ற முறையிலே, பயிரிடுகிறவர்களுக்கு கொடுக்கவேண்டிய பங்கு விகிதாசாரத்தைப் பற்றி தகராறு ஏற்பட்டது. அதனால் அந்த முதல் குறுவை விவசாயம் நடக்கவில்லை.

**Sri V. K. KOTHANDARAMAN** : கிசான் தகராறின் காரண மாக குறுவைப் பயிர் சாகுபடி செய்யப்படாத நிலங்கள் எவ்வளவு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கிசான் தகராறின் காரணமாகத்தான் பயிர் செய்யப்படாமல் இருக்கின்றதா ? அல்லது மிராசுதார் தகராறின் காரணமாகத்தான் அப்படி பயிர் செய்யப்படாமல் இருக்கின்றதா ? சர்க்கார் இவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார் கள் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : தகராறை ஆரம் பித்தது கிசான்கள் தான். இதனால் அதற்குக் கிசான் தகராறு என்ற பெயர் வந்துவிட்டது.

**Sri S. LAZAR** : திருமங்கலம் பகுதியிலே இந்த வார முறை கிடையாது. ஆகவே, இந்தப் பிரச்னை அங்கு எழவில்லை என்பது சர்க் காருக்குத் தெரியுமா ? மனச்சநல்லூர் பகுதியிலே இப்பிரச்னை எழுந்தது என்பது உண்மை. ஆனால், இந்தத் தகராறு ஏற்பட்டதற்குக் காரணம் மாட்டுவாரம், கையேர்வாரம் என்ற முறையினால் அல்ல. ஆனால், நிலத் திலே வேலை செய்யக்கூடியவர்களை, பலாத்காரத்தை உபயோகித்து, வேலைக்குப் போகாமல் தடுத்தார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**Mr. SPEAKER** : கேள்வி கேட்கும்போது, சர்க்கார் போட்ட உத் தரவு தவறு என்று சொல்வது சரியல்ல. தாங்கள் தனிக் கேள்வி போட லாம். உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லக்கூடாது.

**Sri S. LAZAR** : I never said that we are in the wrong.

**Mr. S EAKER** : I heard, you said 'wrong'.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : திருமங்கலம் பகுதி யிலே 17.55 ஏக்கர்கள் சாகுபடியாகவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதை நான் சொன்னேன். கிசான்-மிராசுதார் தக ராறு அவர்களுக்குள்ளேயே இருந்தால் அது சுமுகமாக முடிந்து விட்டி ருக்கும். ஆனால், அரசியல் கட்சிகள் அதிலே பிரவேசித்து, அதற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பதால், அந்தத் தகராறு இன்னும் சிக்கலாகிவிடுகிறது.

**Sri S. LAZAR** : இதிலே தலையிட்ட அரசியல் கட்சி எது என்று சர்க்கார் குறிப்பிடமுடியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ஞாபகத்தில் இருக்கிறவரை சொல்லுகிறேன்—முக்கியமாக கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷ லிஸ்டுக் கட்சி, இன்னும்...........

**Sri M. JAGANNATHAN** : இம்மாதிரியான கிசான் தகராறுகளால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிற காரணத்தால், அம்மாதிரி தகராறுகள் இனிமேல் நடைபெறாத வண்ணம் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

**Mr. SPEAKER** : This is a general question.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : சர்க்கார் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், கனம் அங்கத்தினர் போன்றவர்கள் கூட இதிலே கொஞ்சம் பிரயாசை எடுத்துக்கொண்டால் இன்னும் சீக்கிரத்தில் சௌகரியமாக முடியும் என்று நினைக்கிறேன்.



**Sri A. GOVINDASAMY** : இந்தத் தகராறில் கம்யூனிஸ்டுக் கட்சியும், சோஷலிஸ்டுக் கட்சியும் ஈடுபட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிசான்கள் சார்பாக அவர்கள் ஈடுபட்டிருக்க, மிராசுதார்கள் சார்பாக காங்கிரஸ் கட்சி ஈடுபட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : காங்கிரஸ் கட்சி எப்போதும் நடு நாயகமாகத் தான் இருக்கிறது. (சிரிப்பு.)

### *Panchayat Union Conference*

* 351 Q.—**Sri A. GOVINDASAMY** : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the recommendations of the Panchayat Union Conference held in the first week of December 1957 at Madras; and

(b) whether the Government propose to implement these recommendations?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON** : (a) A copy* of the resolutions containing requests made to Government, of the Fifth Conference of the General Body of the State Union of Panchayats held on 1st and 2nd December 1957, is placed on the Table of the House.

(b) The requests contained in these resolutions are under consideration.

**Sri A. GOVINDASAMY** : பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இந்த மகாநாட்டில் கோரிக்கை இருந்ததே, அது குறித்து அரசாங்கம் என்ன கருதுகிறது ?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON** : இப்பொழுது பதில் சொல்லும்போது சொன்னேன்—அந்தத் தீர்மானங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஆலோசனை செய்து கொண்டி ருக்கிறார்கள் என்று.

**Sri V. K. KOTHANDARAMAN** : பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதைப் பொறுத்த மட்டில், சர்க்கார் ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டுக்கும் ஒரு சர்க் குலர் அனுப்பியதன்பேரில் எத்தனை பேர்கள் நேரடித் தேர்தல் நடத்த வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லமுடியுமா ?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON** : அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

**Sri A. GOVINDASAMY** : சமீபத்தில் நடக்கப்போகிற பஞ் சாயத்து போர்டு தேர்தல் டைரக்ட் எலெக்ஷன் முறையில் நடக்குமா ? இன்டைரக்ட் எலக்ஷன் மூலமாக நடக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Sir, we have passed a law in this Assembly that it should be done by indirect election. I don't think this question can arise now.

**Sri A. GOVINDASAMY** : இது ஆலோசனையில் இருப்பதாக ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆலோசனை முடிந்துவிட்டதாக நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

---

* Printed as Appendix II on pages 162–164 infra.

[18th March 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே முரண்பாடு ஒன்றும் இல்லை. மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களைப்பற்றி கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும், எல்லாவற்றையும் சேர்த்து இப்பொழுது லெஜிஸ்லேசர் கமிட்டி பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகவும் அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது நடைபெற இருக்கும் தேர்தலிலே பஞ்சாயத்துபோர்டு தலைவர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்று தீர்மானம் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் அவர்களுடைய தலைமையில் நிறைவேற்றப்பட்டதால், அதை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : காங்கிரஸ் கட்சித் தலைவர் அந்த மகா நாட்டுக்குத் தலைமை தாங்குவது அல்ல முக்கியம். நாம் எல்லோரும் சேர்ந்து இப்பிரச்னையில் என்ன முடிவு செய்கிறோமோ, அதைப்பொருத்துத்தான் இருக்கிறது. இந்தத் தீர்மானமும் அந்த கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசீலனை செய்து என்ன சிபார்சு செய்கிறார்கள் என்ற அந்த அடிப் படையிலே யோசித்து சட்டம் இயற்றப்படும்.

*Block Development Officers*

*352 Q.—SRI N. K. PALANISAMI AND SRI V. SUBBIAH : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the action taken by the State Government on the recommendation of the Central Government that the post of Block Development Officers in the Community Development areas and National Extension Service areas should be exclusively reserved for the graduates in Agriculture; and

(b) if so, the ratio between the number of Agricultural graduates and that of the other graduates holding the post of Block Development Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No such recommendation of the Central Government referred to by the hon. Member has been received.

(b) Out of the 143 existing Block Development Officers, 23 are Agricultural graduates.

SRI N. K. PALANISAMI : Since the Revenue Officers will have more rural outlook, why not the Government select Revenue Officers in preference to others?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the Block Development Officers are being recruited from all the departments and who would fit into the job, is always considered when selections are made.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ப்ளாக் டெவலப்மெண்ட் ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது. அதன்படிதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆகையால், விவசாயப் பட்டதாரிகளுக்கு அந்தச் சலுகை கொடுப்பது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதா? ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசரை நியமிக்கும்போது விவசாயப் பட்டதாரிக்கு முதல் ப்ரிபரன்ஸ் அளிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்ற காரியங்களைப் பார்ப்பதற்குப் போதுமான அளவு பட்டம்பெற்ற விவசாய அதிகாரிகள் இல்லாத காரணத்தால், இதற்கும் விவசாய அதிகாரிகளைப் போடுவது என்றால் போதிய அளவு நமக்கு அதிகாரிகள் இல்லை.



18th March 1958]

SRI S. LAZAR : What are the qualifications for the post of Block Development Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

SRI M. D. THIAGARAJA PILLAI : அரசியல் தியாகிகள் இதற்கு நியமிக்கப்படுகிறார்களா? அவர்களுக்குச் சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளை நியமிப்பதிலே அரசியல் தியாகிகளுக்கு என்று தனிச் சலுகை கிடையாது.

*Engineering College*

*353 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானப்படி அந்த ஜில்லாவில் ஒரு என்ஜினீரிங் கல்லூரி ஏற்படுத்த உத்தேசமா?

(ஆ) அப்படியானால் எங்கு, எப்போது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The Government have not received the resolution of the District Board, Tanjore, regarding the proposal for opening an Engineering College in Tanjore district. Certain particulars about the probable cost, etc., have however, been furnished to the Collector of Tanjore.

(b) Does not arise.

*354 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் எட்டு பொறி இயல் கல்லூரிகளில் சென்னை ராஜ்யத்தில் ஏதேனும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால் எங்கு, எப்போது?

THE HON. SRI C SUBRAMANIAM : (a) The Government have no information about the proposal of the Government of India to open eight more Engineering Colleges in the country.

(b) Does not arise.

SRI A. VEDARATHNAM : ஜில்லா போர்டின் கடைசிக் கூட்டத்தில் அங்கே ஒரு மெடிகல் காலேஜும், ஒரு இன்ஜினீரிங் காலேஜும், ஒரு அக்ரிகல்சரல் காலேஜும், இந்த மூன்றும் ஏற்படுத்த வேண்டும் என்றும் ரயில்வே செஸ் நிதியிலிருந்து இப்பொழுது கிடைக்கும் வருமானத்தை முக்கால் பங்காக உயர்த்தும்படி ரயில்வே இலாகாவைக் கேட்டுப் பெற்று, இம் மூன்று காலேஜுகளையும் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து, அந்தத் தீர்மானத்தைச் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா? கிடைத்திருந்தால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் பதில் சொன்னது : The Government have not received the resolution of the District Board, Tanjore, regarding the proposal for opening an Engineering College in Tanjore district.

[18th March 1958

SRI A. A. RASHEED: Is there any proposal to open an Engineering College in Tanjore, Sir

THE HON. SRI C. SUBRAMANIAM: There are vague proposals. I don't think they have taken any concrete shape yet.

SRI S. LAZAR: இன்ஜினீரிங் காலேஜோ வேறு எந்த டெக்னிகல் காலேஜோ இனிமேல் திறக்கப் போவதாக இருந்தால், இப்பொழுதிருக்கும் இடங்களைவிடுத்து வேறு நகரங்களையும் துவக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்காரே முன்வந்து இவைகளைத் திறப்பதாக இருந்தால் கனம் அங்கத்தினர் சொன்ன இந்த யோசனை கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும். வேறு தனிப்பட்டவர்கள் முன்வரும்போது, அவர்கள் எங்கு வைக்கவேண்டுமென்று இஷ்டப்படுகிறார்களோ அங்குதான் ஏற்பாடு செய்யவேண்டும்.

SRI V. SANKARAN rose—

MR. SPEAKER: The hon. Member need not rise, as by so doing, he is hiding everything behind him.

SRI V. SANKARAN: மதுரையில் ஒரு என்ஜினீரிங் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசித்து "ப்ரிப்ரொபெஷனல் கோர்ஸ்" ஏற்கெனவே ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆரம்பிக்கப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR: இம்மாதிரி தொழிற் கல்லூரி அல்லது மருத்துவக் கல்லூரி திறக்கும் விஷயத்தில் சேலம் ஜில்லா கவனிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: The question is out of order.

SRI K. VINAYAKAM: Sir, was there any proposal that the Central Government was about to start a Research Engineering Institution for the Southern Regions to be located in Madras City?

THE HON. SRI C. SUBRAMANIAM: Evidently, the hon. Member is referring to the Higher Technological Institute. I have already made mention of it in the Budget speech also and steps are being taken for implementing the same.

SRI A. VEDARATHNAM: தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த ரெயில்வே செஸ் நிதியில் இருந்து இந்த காலேஜ்களை அங்கு ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? அப்படியானால் எந்தெந்த காலேஜ் எப்பொழுது ஏற்படுத்துவார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: என்ஜினீரிங் காலேஜ் ஏற்படுத்துவதாக உத்தேசமில்லை.

SRI T. RAMASWAMY PILLAI: There was a reference about vague proposals. I would like to know whether the proposals are from the Government or from the district boards or from anybody else.

THE HON. SRI C. SUBRAMANIAM: The proposals are from private parties.



18th March 1958]

SRI R. SWAMINATHA MERKONDAR: தஞ்சை ஜில்லாவில் உள்ள பணத்தை தஞ்சை ஜில்லாவிலேயே செலவு செய்ய அபிப்பிராயமா அல்லது இதர ஜில்லாக்களுக்குச் செலவு செய்ய அபிப்பிராயமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கேள்வி இதில் எழவில்லை. இருந்தாலும் சொல்கிறேன், இதர ஜில்லாக்களுக்கு உபயோகப் படுத்தப்படமாட்டாது.

SRI A. VEDARATHNAM: என்ஜினீயரிங் காலேஜ் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் மற்ற இரண்டு கல்லூரிகளும் ஏற்படுத்தப்போகிறது என்று எடுத்துக்கொள்ளலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கேள்வி என்ஜினீரிங் காலேஜைப் பொறுத்தது. மருத்துவ காலேஜ் பற்றியும், அக்கிரிகல்ச்சரல் காலேஜ் பற்றியும் மற்ற மந்திரிகளிடம் கேள்வி போடவேண்டுமே தவிர அதற்குப் பதில் சொல்ல என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

*Medical Colleges.*

* 355 Q.—SRI A. VEDARATHNAM: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானப்படி அந்த ஜில்லாவில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த உத்தேசமா ?

(ஆ) அப்படியானால் எங்கு, எப்போது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) & (b) The matter is under consideration.

SRI A. VEDARATHNAM: இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனைக்கு வந்து ரொம்ப காலமாகிறது. இதுபற்றி எப்பொழுது ஒரு முடிவிற்கு வருவார்கள். இது அனுகூலமான முறையில் முடிவு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நீண்ட காலமாக இது சர்க்காரின் யோசனையில் இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. குறுகிய காலமாகத்தான் அது யோசனையில் இருக்கிறது. வைத்திய கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்றால் சர்வகலாசாலையின் அங்கீகாரம் வேண்டும். பணம் அதிகமாக வேண்டும். அதற்கு வேண்டிய உபாத்தியாயர்கள் எல்லாம் வேண்டும். ஆக, இத்தனை சிக்கல்கள் இருப்பதால் இதையெல்லாம் யோசனை செய்து எப்படியாவது அங்கு ஆரம்பிக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

SRI N. S. RAMALINGAM: டாக்டர் அழகப்பச் செட்டியார் டிரஸ்டில் இருந்து தஞ்சையில் ஒரு மருத்துவக் கல்லூரி வைப்பதாக இருந்ததே அது முடிவாகி விட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதெல்லாம் இப்பொழுது ஒன்றுமில்லை. அதெல்லாம் போய்விட்டது.

SRI A. A. RASHEED: Sir, does it mean that the University has not given the permission to open a Medical College?

THE HON. SRI M. A. MANICKAVELU: I think we have either applied or are applying for it.

SRI M. C. MUTHUKUMARASWAMY: குறுகிய காலம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த வருஷத்தில் இருந்து குறுகிய காலம் என்று சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாம் இரண்டு, மூன்று மாத காலமாக.

**Sri A. GOVINDASAMY** : யூனிவர்ஸிட்டியிடம் கேட்கப்பட்டதா என்று ரிக்கார்டைப் பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ரிக்கார்டில் ஒன்றுமில்லை. அவரை நேரடியாகப் பார்த்து அவரிடம் முதலில் சொன்னோம். சடங்குகள் எல்லாம் நடக்கிறது.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : தேவஸ்தானம் நிதியிலிருந்து பணம் கொடுக்கத் தயாராயிருக்கும் பழனி போன்ற யிடங்களில் காலேஜ் திறக்க அரசாங்கம் முன்வருமா ?

**Mr. SPEAKER** : தனிக் கேள்வி போடவேண்டும்.

**Sri M. D. THIAGARAJA PILLAI** : தஞ்சை ஜில்லா போர்ட், ரெயில்வே செஸ் நிதியில் இருந்து ஒன்றே முக்கால் கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு வருகிற வருஷம் இந்த மெடிகல் காலேஜை அங்கு ஆரம்பிக்க வற்பாடு செய்திருப்பதாக அறிகிறேன். அதற்குமுன் கட்டிடங்கள் போன்ற வசதிகள் எல்லாம் ஏற்பாடு செய்ய அரசாங்கம் என்ன, வற்பாடுகள் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : வைத்திய கல்லூரிக்காக ஜில்லா போர்ட் 30 லட்சம் அந்த நிதியில் இருந்து கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டடம் எல்லாம் கட்டி அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பது என்றால் அதற்கு பல வருஷங்களாகும். ஆகவே இப்பொழுது இருக்கும் கட்டிடத்தை எடுத்து உபயோகப்படுத்திக்கொண்டு பின்னர் பார்க்கலாம்.

**Sri A. VEDARATHNAM** : இந்தக் கல்லூரியை அங்கு ஏற்படுத்துவதற்கு பணம் வேண்டும், யூனிவர்ஸிட்டியின் அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ரெயில்வே செஸ் நிதியிலிருந்து பணம் கிடைக்கிறது. பூமியைப் பொறுத்த வரையில், அங்கு பெரிய ராஜா, மிராசுதார் ஆஸ்பத்திரிகள் போன்ற இடம், அதாவது இடவசதி இருக்கிறது. ஆகவே நம் அரசாங்கம், யூனிவர்ஸிட்டிக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறதா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : முதலில் இவ்வளவு பணம் ஜில்லா போர்டிற்கு வரும் என்று தகவல் இருந்தது. ஆனால் எப்பொழுது வரும் என்று சந்தேகமாயிருந்தது. அது மத்திய சர்க்காரிலிருந்து வந்து தஞ்சை கஜானாவில் இப்பொழுது பணம் இருக்கிறது. ஆனால் அதை எடுப்பதற்கு சில விதிகள் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, அவ்விதிகளை எப்படி மாற்றுவது என்பது பரிசீலனையில் இருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அங்கத்தினர்கள், இவ்விஷயத்தில் ஆத்திரப்படவோ அவசரப்படவோ அவசியமில்லை. எவ்வளவு. ஜரூராக நடவடிக்கைகள் எடுத்துவரவேண்டுமோ அவ்வளவு ஜரூராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வீண் கேள்விகளுக்கு அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri N. R. THIAGARAJAN** : தஞ்சையில் முன்பு குறுகிய கால கல்வி, அதாவது எல்.எம்.பி. கோர்ஸ் என்று மூன்று வருடப் படிப்பு கற்றுக் கொடுக்க ஒரு மெடிக்கல் ஸ்கூல் இருந்தது. அதை மீண்டும் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா ? அப்படிச் செய்தால் கிராமங்களுக்கு அதிக டாக்டர்கள் கொடுக்க முடியுமே ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : காலேஜ் ஆரம்பிக்கலாமா என்று யோசனை இருக்கும்போது ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கவேண்டுமென்று அங்கத்தினர் சொல்வது, கீழே போவதாக இருக்கிறது.

**Mr. SPEAKER** : Next question, No. 356.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : Sir, my question has been mutilated I do not want to put my question.

**Mr. SPEAKER** : The hon. Member is not putting his question. Then I shall pass on to the next question No. 357.



### *Village Officer*

* 357 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any Village Officer in North Arcot district was nominated either as a polling or counting agent by any candidate during the General Elections?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : No Village Officer was nominated as a polling agent by any candidate during the last General Elections in North Arcot district. But the headman of Kosapet, Vellore acted as a counting agent at Gudiyattam for a contesting candidate for election to the House of the People from Vellore Parliamentary Constituency. Disciplinary action was taken against the headman and he was punished suitably.

**Sri S. M. ANNAMALAI** : டிஸிப்பிளினரி ஆக்ஷன் என்றால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : டிஸிப்பிளினரி ஆக்ஷன் என்பது ஒழுங்கு நடவடிக்கை ஆகும், ஆனால் இங்கே அபராதம் போடப்படும்.

**Sri S. M. ANNAMALAI** : பதினைந்து ரூபாய் அபராதம் போடப்பட்டது என்று கேள்விப்பட்டேன். இந்த மணியக்காரர் யாரால், எந்தக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகரால் "கவுண்டிங் ஏஜெண்ட்" ஆக நியமிக்கப்பட்டார் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அந்தத் தேர்தலிலே—டில்லி பார்லிமெண்ட் தேர்தலிலே—யார் யார் நின்றார்கள் என்ற ஜாபிதாவைத் தேடிப் பார்த்தால் அதில் தெரியும்.

**Mr. SPEAKER** : அடுத்த கேள்வி 358. இந்தக் கேள்வியைப் போடவேண்டிய அங்கத்தினர் இப்போது சபையில் இல்லை. ஆகையால், இந்தக் கேள்வியும், அதற்கான பதிலும் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

### *Rural Development Project*

* 358 *Q.*—**Sri D. S. AUTHIMOOLAM** : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of grant received from the Government of India in (i) 1955–56 and (ii) 1956–57 towards Rural Development Projects; and

(*b*) the amount spent in each year?

**The Hon. Sri P. KAKKAN** : (*a*) The assistance received from India as grant and loan during the years 1955–56 and 1956–57 are as follows :—

| — | Grant. (in lakhs.) | Loan (in lakhs) |
|---|---|---|
| 1955–56 .. .. .. | 89·45 | 78·44 |
| 1956–57 .. .. .. | 87·30 | 80·59 |

(*b*) The total expenditure incurred on the Community Development Programme during these two years are as follows—

| — | Non-Loan (in lakhs.) | Loan (in lakhs.) |
|---|---|---|
| 1955–56 .. .. .. | 144·4 | 102·7 |
| 1956–57 .. .. .. | 150·2 | 104·9 |

[18th March 1958

*Mailam dispensary.*

* 359 *Q.*—SRI P. VEERAPPA KOUNDER : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the Government propose to open a dispensary at Mailam, Tindivanam taluk?

**THE HON. SRI M. A. MANICKAVELU : In 1957 there was proposal to open a regular Local Fund Dispensary at Mailam, but it was dropped by the District Board owing to its difficult financial position.**

SRI A. GOVINDASAMY : மைலம் ஸ்டேஷனுக்கு அருகே கூட்டேறிப்பட்டில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதை மைலத்திற்கு மாற்றவேண்டுமென்று பொது மக்கள் கோரிக்கை விடுத்தார்கள். அதன் பேரில் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி மாற்றுவதற்கு முன்பே அந்த ஆஸ்பத்திரியை எங்கு வைக்கவேண்டுமென்று ஜில்லாக் கலெக்டரை அதைப்பற்றிக் கேட்டிருக்கிறோம்.

SRI P. VEERAPPA KOUNDER : முதல் கேள்விக்கு பதிலை தமிழில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கே ஒரு ஆஸ்பத்திரியை ஆரம்பிக்காததற்குக் காரணம் போதுமான பணம் இல்லை ஜில்லா போர்டிலே. இப்போது மைலத்திலே ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தலாம் என்று உத்தேசித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள், பரிசீலனைகள், இவைகளெல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : மைலத்திற்கு சுற்றுப்புரத்தில் கிராமங்கள் ஏராளமாக இருப்பதாலும், மைலம் க்ஷேத்திரத்துக்கு அதிகமாக யாத்திரீகர்கள் வருவதாலும், தொத்து நோய் பரவுவதைத் தடுக்க ஒரு ஆஸ்பத்திரியைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU நான் முன்னமேயே சொன்னேன், மைலத்திலே ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

SRI P. R. SRINIVASA PADAYACHI: மைலத்திற்கும் கூட்டேறிப் பட்டு விற்கும் இடையே மூன்று மைல் தூரம் இருப்பதால், மைலத்தில் ஒன்று ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் அதற்குத்தான் சொன்னேன். இங்கே கூட்டேறிப்பட்டிலே இருப்பதை மாற்றி அதை எடுத்துவிட உத்தேசம் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : கூட்டேறிப்பட்டில் இருக்கிற மருந்து சாலையை மைலத்திற்கு மாற்றுவதால், கூட்டேறிப்பட்டு மக்களுக்கும், அதற்குச் சுற்றுப்புறத்தில் இருக்கிற கிராம மக்களுக்கும் அசௌகரியம் அதிகம் ஏற்படும். கூட்டேறிப்பட்டிலிருந்து மைலத்திற்கு மாற்றுவதைக் கைவிட்டு, மைலத்தில் தனியாக ஒரு மருந்துசாலை ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆஸ்பத்திரி என்பது முடியாத காரியம். எங்கு வைத்தால் அநேக ஜனங்களுக்கு வசதியாக இருக்குமோ, அதை யோசனை செய்ய வேண்டும். மைலம் க்ஷேத்திரத்திற்கு அநேகம் பேர் மொட்டை அடிக்கப் போகிறார்கள். (சிரிப்பு).

SRI K. VINAYAKAM : மைலம் ஒரு பாடல் பெற்ற ஸ்தலம். அங்கு சுப்பிரமணிய ஸ்வாமி கோவில் இருப்பதும், அங்கு பல ஆயிரக் கணக்கான பக்தர்கள் போய் மொட்டை அடிப்பதுடன், பிரார்த்தனை செலுத்த வருவது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால்,



18th March 1958]

ஒரு ஆஸ்பத்திரியைத் திறக்க முடியாவிட்டாலும் ஒரு மொபைல் மெடிகல் யூனிட் வான் அனுப்பி கிருத்திகை நேரத்தில் தொத்து நோய் பரவாமல் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றித்தான் சொன்னேன். அது பரிசீலனையில் இருக்கிறது. கலெக்டர், மெடிகல் ஆபீஸர்கள், இவர்களெல்லாம் சிரத்தை எடுத்துக்கொண்டு பரிசீலித்துக் கொண்டு வருகிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த இரண்டு ஊர்களிலே எது "வடக்கே" இருக்கிறது, எது "தெற்கே" இருக்கிறது ?

MR. SPEAKER : இது ஒழுங்கானதல்ல என்று நிராகரிக்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : ஸார் ஆங்கில கேள்வியில் "டிஸ்பென்ஸரி" என்று இருக்கிறது. அதுவே தமிழில் "மருந்து சாலை" என்று இருக்கிறது. "மருந்து சாலை" என்றால் மருந்துகள் விற்கக்கூடிய "மருந்து ஷாப்" என்றுதான் ஆகுமே, தவிர, அது "வைத்திய சாலை" என்று இருக்கவேண்டும். இதற்கு ஆட்சிச் சொல் அகராதியில் என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆம். நான் படிக்கும் போதே கவனித்தேன். அது தவறு என்று தான் நினைக்கிறேன்.

*Local Development Scheme*

* 360 *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any works for which people have paid their contribution have not been taken up under the Local Development Scheme in the Tanjore district;

(*b*) if so, the number of such works; and

(*c*) the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Six.

(*c*) Pending the decision of the Planning Commission on continuance of the Local Development Works Programme during the year 1957–58, the Government had permitted the Collectors to take up for execution only works for which the beneficiaries had remitted their cash contribution before 31st March 1957. One of the six works, for which cash contribution was remitted only in May, June and July 1957, could not, therefore, be taken up.

Of the remaining five works, four could not be taken up, as the required contribution from the District Board was not forthcoming, due to the unsatisfactory financial position of the Board. The remaining work was not taken up since the District Board decided to carry it out entirely from its funds. The Collector can, however, take up these works now.

SRI A. R. MARIMUTHU : அநேக குடி தண்ணீர் திட்டங்களுக்கு சில பஞ்சாயத்து போர்டுகளால் பணம் கொடுக்கப்பட்டு இப்போது ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டங்களுக்கு தொகை ஒதுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்து உத்திரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குத் தகவல் என்னவென்றால் ஆறு வேலைகள் தொடங்கப் படாமல் நிறுத்தப்பட்டு விட்ட அதிலே குடி தண்ணீர் திட்டம் ஒன்றையும் காணோம்.

[18th March 1958

**MR. SPEAKER** : சற்று முன்பு கிளப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றி ஒரு வார்த்தை. ஆட்சிச் சொல் அகராதியிலே "டிஸ்பென்ஸரி" என்பதற்கு "மருந்து சாலை" என்றுதான் போட்டிருக்கிறது. ஆகவே கனம் அமைச்சர் மருந்துசாலை என்று கூறுவதில் தவறில்லை.

**SRI K. VINAYAKAM** : Sir, I rise on a point of order. Is that Glossary the final word on the subject ? Is it the 'z' of the entire literature ? Is it not susceptible to changes ? It is a matter of opinion. Are we to stick to this Glossary that has not been prepared by an expert body ?

**MR. SPEAKER** : If the hon. Member does not believe in dictionaries, I feel sorry for him.

**SRI A. R. SUBBIAH MUDALIAR** : லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸுக்கு மற்ற ஜில்லாக்களில் இதே மாதிரி தொகை கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்கும் இப்படிப்பட்டதான ஒரு ஸர்குலர் அனுப்பப்பட்டிருக்கிறதா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இந்த லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸின் அடிப்படையே மக்களும் இதற்கு ஒரு பகுதி கொடுப்பதன் மூலமாக வேலை செய்ய வேண்டும் என்பது. கண்ட்ரிப்யூஷன் இல்லாமல் செய்யவேண்டுமென்றால், சர்க்கார், டிஸ்டிரிக்ட் போர்ட் மூலமாக நேரடியாகச் செய்ய வேண்டிய வேலை. இந்த திட்டத்தின் மூலம் வராது.

**SRI G. GOMATHISANKARA DIKSHITAR** : லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸுக்கு பணம் அரசாங்கத்திலிருந்து இந்த வருஷம் ஸாங்ஷன் இல்லை என்று திருநெல்வேலியில் சொல்லுகிறார்களே, இது வாஸ்தவம்தானா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** · இந்த கேள்வி தஞ்சை ஜில்லாவைபற்றியது இருந்தாலும் பதில் சொல்லுகிறேன். லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸுக்கு ஜனவரி மாதத்தில் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. ஜில்லாவாரியாக ஜனத்தொகை அடிப்படையில் 50 லட்சம் ரூபாய் பிரித்துக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. புதிய வேலைகள் எடுத்துக்கொள்ள கலெக்டர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

**SRI A. VEDARATHNAM** : லோகல் கண்ட்ரிப்யூஷனுக்கு ஜில்லா போர்டின் நிதி நிலைமை தற்சமயம் சரியில்லாதபோதிலும், ரெயில்வே செஸ் பண்டிலிருந்து இதற்கெல்லாம் போதிய நிதி கொடுக்கக்கூடும். ஆகையால், அந்த நிதியை உபயோகித்து குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ரெயில்வே செஸ் பண்டை எத்தனை திட்டத்திற்கு உபயோகப்படுத்துவதோ தெரியாது. அது எல்லாவற்றிற்கும் கொடுக்க காமதேனு இல்லை. அவர்கள் விவசாயக் கல்லூரி, என்ஜினீயரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி முதலியவைகளை இந்தத் ,தொகையிலிருந்து வைப்பதாக இருப்பதால், சாதாரண விஷயங்களுக்கு ஒதுக்காமல் இருப்பது நல்லது.

**SRI S. NAGARAJA MONIGAR** : தேசிய அபிவிருத்தித் திட்டமும், சமுதாய அபிவிருத்தித் திட்டமும் 3-வது திட்ட காலத்திற்குப் போகும் என்று சொன்னதால், நீண்ட நாள் பிடிக்கும் என்று சொன்னதால், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தைத் தொடர்ந்து இன்னும் கொஞ்ச நாளைக்கு பிளாக் இல்லாத ஏரியாக்களுக்கு திருப்தி அளிக்கும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAN** : அதுதான் சர்க்காருடைய உத்தேசம். பிளானிங் கமிஷனுக்கும் இப்போது எழுதியிருக்கிறது.



18th March 1958]

**SRI T. S. RAMASWAMY PILLAI** : Now that the District Boards are abolished, may I know who is paying the District Board's contribution

**THE HON. SRI C. SUBRAMANIAM** : District Boards have not been abolished, Sir.

**SRI M. KALYANASUNDARAM** : ஸார், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நம் ராஜ்யத்திற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், ஜில்லாக்களுக்குப் பிரித்துக் கொடுத்திருப்பதாகவும், கலெக்டருக்குப் புதிய வேலைகளை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுத்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், இந்தத் தொகை மார்ச் மாதம் 31-ம் தேதியோடு முடிந்து விடாமல் அடுத்த வருஷத்திற்கு நீடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஆம். அடுத்த வருஷத்திற்குள்தான் செலவழிக்கவேண்டுமென்று உத்தரவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**SRI A. GOVINDASAMY** : இந்த ஆண்டில் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூ. 50 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பல மாவட்டங்களுக்குப் பிரித்துக்கொடுக்கும்போது, அது குறைவான தொகையாக இருக்கும். எந்தெந்த மாவட்டங்களில் ரெயில்வே செஸ் நிதி இருக்கிறதோ, அந்தந்த இடங்களில் அதை உபயோகப்படுத்திக்கொள்ள அரசாங்கம் உத்திரவிடுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஸ்ரீ வேதரத்னம் அவர்கள் கேட்ட கேள்வியை கனம் அங்கத்தினர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். மக்களிடமிருந்து வரும் பங்கைத் தவிர ஜில்லா போர்டும் ஒரு பங்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. ஜில்லா போர்டு கொடுக்க வேண்டிய பகுதிக்கு ரெயில்வே செஸ் நிதியை உபயோகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்களே தவிர, மக்கள் கொடுக்கவேண்டியதற்கு அதை உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தமாதிரி உபயோகப் படுத்தவும் முடியாது.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : Will the district boards also be permitted to give the one-fourth contribution if their funds permit ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : It is a question of policy which will have to be decided. I think hereafter, we should insist that there should be 50 per cent contribution from the people. Otherwise, it may not be possible to provide sufficient funds to meet all the demands from the people.

**SRI N. MAHALINGAM** : இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டதிலே, வேலைகளை எடுத்துக்கொள்வது இந்த மார்ச் 31-ம் தேதிக்குள்ளே பூர்த்தி அடைந்து விடுமா அல்லது அடுத்த வருஷத்திலும் வேலைகள் தொடர்ந்து நடத்தப்படுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்பொழுது தான் இதற்குப் பதில் சொன்னேன், அடுத்த வருஷத்திலுந் தொடர்ந்து வேலைகளை நடத்துவதற்கு இந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று.

SRI M. D. THIAGARAJA PILLAI : அரசாங்கம் ரூ. 50 லட்சம் கொடுப்பதனுல், கிராமங்களிலும், பஞ்சாயத்துகளிலும் பகுதிப்பணம் கொடுத்து வேலைகளை ஆரம்பித்திருக்கிருர்கள். ஜில்லா போர்டு பகுதியைக் கொடுக்காததினுல், அநேக வேலைகள் தாமதப்படுகின்றன. இதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசாங்கம் என்ன ஏற்பாடுகள் செய்யமுடியுமென்று தெரியவில்லை. மக்கள் தான் மறு பகுதியைக் கூடத் தரவேண்டும்.

SRI P. S. CHINNADURAI : ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றிக்காக மக்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய பகுதியை கொடுத்து விடுகிருர்கள். ஆனுல் ஸ்தல ஸ்தாபனங்கள் கொடுக்கவேண்டிய பகுதி நின்று போய் விட்டிருக்கிறது. அதைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தினுல் வேலை நின்று போகுமானுல் மக்களின் உற்சாகம் குன்றி விடாதா ? அப்படிக் குன்றிவிடாமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிருர்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் மக்கள் பங்கை அதிகப்படுத்தி 25 சதவிகிதத்திற்குப் பதிலாக 50 சதவிகிதம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (சிரிப்பு).

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு மக்களும் சிறிது தொகை கொடுக்கவேண்டுமென்று சொன்னுர்கள். இன்றைக்கு இருக்கிற நிலையிலே அப்படிக் கொடுப்பவர்கள் எல்லாம் வசதியுள்ளவர்கள்தான். அப்படி உள்ள நிலையில் நமது சர்க்கார் நிலத்திற்கு ஸீலிங் கொண்டுவரப்போவதாலும், விவசாயிகளுக்கு அதிகமாக வாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதனுலும் அவர்களிடம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸீலிங், இன்னும் இது போன்றவைகள் இருக்கும் காரணத்தினுல்தான் அதிகமாகக் கொடுக்க முன்வருவார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In many cases, the district boards have committed themselves to this 25 per cent. In such cases, why not the Government ask the parties concerned to go ahead with the work without insisting on the 50 per cent contribution?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the 25 per cent contribution of the district boards also has ultimately to be borne by the Government. Thus, it works out to 75 per cent Government contribution and 25 per cent people's contribution. That is why we have now decided that in future 50 per cent contribution should come from the people.

SRI T. KARIA GOUNDER : ஜில்லா போர்டு நிதி அநேகமாகக் குறைவாக இருப்பதனுல், மத்திய சர்க்காரிடமிருந்து உதவி பெறவோ, அல்லது மாகாண சர்க்காரே ஜில்லா போர்டுகளுக்குக் கடனுகக் கொடுக்கவோ முன் வருவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 50 லட்சம் ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று கொடுக்கலாம் என்ற நம்பிக்கையின் பேரில் தான் இந்த தொகை ஒதுக்கி இருக்கிறேம் அங்கிருந்து இன்னும் அதிகமாக பணம் வாங்கினுலும் அதுவும் 50 சதவிகித அடிப்படையில் தான் வேலை செய்வதற்குக் கிடைக்குமே தவிர, பாக்கி இருப்பதற்கு கடனுகக் கொடுப்பதற்கு உதவி பெற முடியாது.



SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவிலே, திருவையாறு தொகுதியிலே வெள்ளாம்பெரம்பூர் கிராமத்திலே ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காக மக்களால் 6,000 ரூபாய் கொடுக்கப்பட்டு இன்றுவரையிலும் பாலம் கட்டும் விஷயமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனி மேலாவது துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த கிராமத்தின் பெயரை இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். அந்த கிராமத்தின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு குறிப்பை அனுப்பி வைத்தால் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

### *Poramboke lands*

* 361 *Q*.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of tenements built by Harijans in the Government poramboke lands on both sides of the Perumpallam odai from the Railway goods shed in Erode town to Marappalayam;

(*b*) for how many years they have been encroaching on these lands by building tenements;

(*c*) how many of them have represented that these lands may be assigned to them freely and pattas issued to them; and

(*d*) the action taken on their representation?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 46

(*b*) For the past five years.

(*c*) None of them has applied for assignment.

(*d*) Does not arise.

SRI V. S. MANICKASUNDARAM : Were the encroachments made with the permission of the Government as defined in the Act or without permission ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது " பெர்மிஷன் " இல்லாமல் நடக்கிற ஆக்கிரமிப்புத் தான். இதைப் பற்றி விசாரித்து, ஆட்சேபணை இல்லையென்றுல் வழங்கப்படும். ஆட்சேபணை இருந்தால் வழங்குவதற்கு இல்லை.

SRI K. PONNIAN : பொதுவாகவே ஹரிஜனங்கள் சர்க்கார் நிலங்களை ஆக்கிரமித்து வீடு கட்டிக் கொண்டு இருப்பதனுல், அவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். அமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றுல், பதில் அளிக்கலாம்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சாதாரணமாக அனுமதி கொடுக்க அரசாங்கம் முன்வருகிறது. ஆனுல் அந்தமாதிரி கொடுப்பதற்கு ஆட்சேபணை இருக்கக்கூடாது. " டாங்க் புறம்போக்கு, சானல் புறம்போக்கு " இடமாக இருந்தால் பொது மக்களைப் பாதிக்கிறது. ஆட்சேபணை எதுவும் இல்லாமல் இருந்தால் கொடுக்கலாம்.

[18th March 1958

SRI V. S. MANICKASUNDARAM: Eviction proceedings were started. May I know what happened to those proceedings?

THE HON. SRI M. A. MANICKAVELU: I am not aware of it. If the hon. Member puts a separate question. I can answer it.

SRI P. G. MANICKAM: இந்த இடத்திலே ஹரிஜனங்கள் மட்டுமல்ல, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 1,500 குடும்பங்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவசியம் வீடு தேவையாக இருப்பதனால், இந்த இடத்திலே வீடுகள் கட்டுவதற்கு சௌகரியம் இல்லாவிட்டாலும், பக்கத்திலே உள்ள புஞ்சை பூமியிலே இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இது விஷயமாக ஈரோடு முனிசிபாலிடி ஒரு குடியிருப்பு இடம் ஏற்படுத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

*Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.*

* 362 Q.—SRI G. ANNAMALAI MUTHURAJA: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the lands on which crops like sugarcane, plantain and betelvines are raised have been exempted from the provisions of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956); and

(b) whether it is a fact that, in spite of this exemption many lease-holders of lands on which these three crops are cultivated, in Tiruchirappalli district are refusing to relinquish their tenancy rights on the authority of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) There are no cases of refusal to relinquish tenancy rights in such lands.

SRI S. LAZAR: இவைகளுக்கு 55-வது பிரிவின்படி வெளியேறக் கூடிய சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறதா ? இவைகளோடு வாழை, கரும்பு, கொடிக்கால் பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சர்க்காருக்கு முறையிட்டு இருக்கிறார்களா ? நிவாரணம் கொடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த முறையீடுகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. பரிசீலனை முடிந்ததும் எந்த வகையிலே செய்யவேண்டும் என்பது கவனிக்கப்படும்.

*Salem Magnesite Syndicate*

* 19 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any large scale retrenchment of workers is threatened in the magnesite industry at Salem; and

(b) if so, what steps have been taken to avert the same?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) According to section 2 (a) of the Industrial Disputes Act, the "appropriate Government" to deal with the dispute in the Salem Magnesite Syndicate, Salem, is the Government of India. This Government have accordingly notified the dispute to the Government of India and have requested them to attend to the dispute.



18th March 1958]

SRI M. KALYANASUNDARAM: மத்திய சர்க்காரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதன் முடிவு என்ன என்று ராஜ்ய சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இது விஷயமாக மத்திய சர்க்கார் "கன்ஸிலியேஷன் ஆபீசர்" சேலத்திற்கு சென்றிருக்கிறார். அவர் என்னைப் பார்த்து விட்டுத்தான் போனார்.

MR. SPEAKER: Questions are over.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR rose—

MR. SPEAKER: Even the hon. Leader of the Opposition should be alert. All right, he may put his supplementary.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I do not want to put a supplementary question. I want to raise a point of order.

MR. SPEAKER: Let me hear what it is.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, during the question hour, when hon. Member Sri Sankaran was standing in his seat to put a supplementary question, you gave a ruling . . .

MR. SPEAKER: Not a ruling.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: All right, Sir, you made an observation that the hon. Member need not rise from his seat and hide the members behind by his standing in his seat. But, I find from the 'handbook for Members' that 'A Member who wishes to speak must rise in his place and present himself to the notice of the Speaker'. I want a ruling from you, Sir, whether a member must rise from his place or whether it is enough if he raises his hand.

MR. SPEAKER: We are having a convention in this House, viz., that whenever an hon. Member wants to put a supplementary question, he should raise his hand and not rise in his place and when he raises his hand and catches the Speaker's eye, he will be called upon to put his supplementary question and then he will stand and put it.

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* THE SITUATION ARISING OUT OF THE DISPUTE IN THE TEXTILE MILLS IN COIMBATORE REGARDING BONUS FOR 1956.

* SRI P. S. CHINNADURAI: சபாநாயகர் அவர்களே, கோவை ஜில்லா பஞ்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 1956-ம் ஆண்டுக்குரிய போனஸ் பிரச்னை சம்பந்தமாக மில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சென்ற ஆண்டு ஒரு விவகாரம் ஏற்பட்டது. மில் முதலாளிகள் நியாயமாக நடந்து கொள்ளாத காரணத்தால் சென்ற ஆண்டு தீபாவளியின் போது கிடைக்க வேண்டிய போனஸ் பூர்ணமாக கிடைக்கவில்லை. 4 ஆண்டுகளாக அவர்கள் "ஆர்பிட்ரேஷன்"-க்கு ஒத்துக் கொண்டிருந்தபோது எல்லாம் நல்லபடியாக நடைபெற்று வந்தன. தொழிலாளிகளுக்கு திருப்தி ஏற்பட்டு, தொழில் அமைதி ஏற்பட்ட போதிலும், சென்ற ஆண்டு மில் முதலாளிகள் ஒத்துழைக்க மறுத்து விட்டார்கள். ஆகையால் ஒரு இடைக் கால ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த இடைக் கால ஒப்பந்தத்தின்படி ஒரு சிறு தொகை தான் போனசாக கொடுக்கப்பட்டது. போனஸ் தகராறு தொழிற்கோர்ட்டிற்கு விடப்படுமென்று உட

[Sri P. S. Chinnadurai] [18th March 1958

பாடு ஏற்பட்டது. ஆயினும் பின்பு கனம் தொழில் அமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் இந்த போனஸ் சம்பந்தப்பட்ட தகராறை சமரச பேச்சுவார்த்தைக் கமிட்டிக்கு விடுவது என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஒத்துக்கொண்டு தென் இந்திய மில் முதலாளிகள் சங்கமும், தொழில் சங்கங்களும் பேசிய பின்பும் ஒரு உடன்பாடு ஏற்படவில்லை. பேச்சு முறிந்து விட்டது. 1956-ம் ஆண்டைச் சேர்ந்த போனஸ் பிரச்னை சென்ற ஆண்டிலேயே முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் முடிவு ஏற்படவில்லை. ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு மில் முதலாளிகள் ஒத்துழைப்பதும் இல்லை. ஆகையால் இதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, the dispute in the textile mills in the Coimbatore district regarding payment of bonus for the year 1956, was taken up for conciliation by the Commissioner of Labour in August 1957. During conciliation, an amicable settlement was reached according to which the parties agreed as to the payment of an interim bonus for the year 1956 pending settlement of final quantum. The parties also requested the Government to refer the question of fixation of final quantum of bonus for 1956 to a Special Industrial Tribunal for adjudication. Subsequently, the parties expressed willingness to start direct negotiations. A negotiating Committee was set up with the representatives of the South India Mill Owners' Association, Coimbatore and the three Unions with a view to arriving at a settlement on the issue before 31st March 1958. No settlement could, however, be brought about by the negotiating Committee. In view of the failure of the negotiations, the Government have since referred the dispute to the Industrial Tribunal, Madras, for adjudication in G.O. Ms. No. 994, Industries, Labour and Co-operation, dated 13th March 1958.

## III.—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59.

### DEMAND XIV—POLICE.

MR. SPEAKER : இன்றைய தினம் இந்த சபையில் போலீஸ் மானியத்தின் மீது 4 மணி நேரம் விவாதம் நடைபெறும். நேற்றைய தினம் நாம் எல்லோரும் ஏகமனதாக ஒத்துக்கொண்டபடி இரண்டு கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். ஆனால் எனக்கு கிடைத்த தகவல்படி அண்ணாதுரை ஒருவர் தான் 15 நிமிஷங்களுக்குப் பேசப்போகிறார். வெட்டுப் பிரேரணையை கொண்டு வந்திருக்கும் ஸ்ரீ கல்யாணசுந்தரத்திற்கு 15 நிமிஷம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் சொன்னதற்கு நான் சம்மதித்திருக்கிறேன். ஆகையால் வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கும் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்கள் 30 நிமிஷங்கள் பேசுவார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceding Rs. 5,76,95,400 under Demand XIV—Police".

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,76,95,400 under Demand XIV—Police".



18th March 1958]

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the allotment of Rs. 5,76,95,400 under Demand XIV —Police—be reduced by Rs. 100".

MR. SPEAKER : Motion moved—

"That the allotment of Rs. 5,76,95,400 under Demand XIV —Police—be reduced by Rs. 100".

According to the decision arrived at yesterday, I take it that other hon. Members who have given notice of cut motions do not move them. I find in the cut motions mention about certain items which have already been discussed by this House and decisions taken. Now that they have not been moved, I do not want to refer to them. But one thing I would like to point out. Any matter that is under judicial enquiry should not be discussed. So also any matter on which a decision has been taken already by the House should not be discussed. How long will the Hon. Minister for Home take for his reply?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Forty-five minutes.

MR. SPEAKER : So, I shall call him at 12·45 p.m.

SRI P. G. KARUTHIRUMAN : Voting?

MR. SPEAKER : I shall adjust the time. Mr. Annadurai will start at 12-30 p.m.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கை நம்முடைய ராஜ்ய அமைப்பிலேயே ஒரு முக்கியமான கோரிக்கை. இதில் பொறுப்பற்ற முறையில் செலவைக் குறைக்க வேண்டும் என்று சொல்லக்கூடியவன் அல்ல நான். போலீஸ் வேண்டியது அவசியம் தான். அதைத் திறமையாக நிர்வகிக்க வேண்டும். அதே சமயத்தில் அதைச் சிக்கனமாகவும் நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய யோசனை. 1957–58-க்கு புனர் ஆலோசனை செய்யப்பட்ட மதிப்பீட்டில் 74 லட்சம் ரூபாய் அதிகமாக கேட்டிருக்கிறார்கள். அதற்கு கடந்த வருஷத்தில் இருந்த சில சூழ்நிலைதான் காரணம் என்று சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அத்தகைய சூழ்நிலை ஏற்படாமல் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். போலீஸ் செலவில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கவேண்டும் என்பது முக்கியமாக கருதப்படவேண்டிய விஷயம். அந்த விஷயங்களைப் பற்றி எல்லாம் நான் பேசுவது உசிதம் அல்ல என்று நான் நினைக்கிறேன்.

சிக்கனம் எந்த முறையில் செய்யலாம் என்பதற்கு சர்க்கார் ஏதாவது 9-27
ஆலோசனை செய்திருக்கிறதா, சர்க்கார் நியமித்த கமிட்டிகள் சொல்லி a.m.
யிருக்கக்கூடிய சிபாரிசுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்பதை நாம் அறிவதற்கு இல்லை. கனம் அமைச்சர் அவர்கள் கூறக்கூடிய பதிலில் இவைகளைப் பற்றி சொல்லுவார் என்று நினைக்கிறேன்.

உதாரணமாக ஜீப் விசாரணை ஒன்று நடந்தது. இதை நடத்திய அதிகாரி போலீஸ் இலாகாவுக்கு தனியாக ஒரு அத்தியாயத்தையே ஒதுக்கியிருக்கிறார், என்பதைப் பார்க்க வேண்டும். போலீஸ் இலாகாவில் அதிகப்படியான செலவு கண்காணிப்பில்லாமல் நடைபெற்று உள்ளது என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்த விசாரணை நடத்தக்கூடிய அதே சமயத்தில் ஒவ்வொரு டி.எஸ்.பிக்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் தனியாக ஒரு "ஸ்டேஷன் வாகன்" வாங்கிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

என்பது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் சொந்தமாகக் கார் வாங்கிக் கொள்வதற்காக சர்க்கார் கடன் உதவி செய்கிறார்கள். ஜீப் வசதி இருக்கிறது. மற்றபடி போலீஸ் லாரிகள் இருக்கின்றன. டி.எஸ்.பி-யின் சொந்த உபயோகத்திற்காக 22,000 அல்லது 24,000 ரூபாய் பெறக்கூடிய ஸ்டேஷன் வாகன் வாங்கி எல்லா டி.எஸ்.பி-களுக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்பது தான் புரியவில்லை. சென்னை நகரில் போலீஸின் கீழ் சில ஸ்டேஷன் வாகன்கள் இருக்கின்றன.

–30 a.m. அதை வேண்டுமானாலும் புரிந்துகொள்ள முடிகிறது. வெளி நாடுகளிலிருந்தும் வெளி ராஜ்யங்களிலிருந்தும் மத்திய சர்க்காரிடமிருந்தும் முக்கியமானவர்கள் நம் ராஜ்யத்திற்கு வருகிறார்கள். அதற்கு வேண்டுமானாலும் அந்த வண்டிகளை உபயோகப்படுத்திக்கொள்வது சகஜமாக இருக்கலாம். ஆகவே சென்னையில் அந்த வண்டிகளுக்கு உபயோகம் இருக்கும் என்று சொன்னாலும் அவைகளுக்கு ஜில்லாக்களில் என்ன உபயோகம் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வண்டிகளுக்கு ஏற்படுகிற செலவைக் காட்டிலும், வண்டி ஓடுகின்ற செலவு இருந்தாலும் அதைப் பற்றி அக்கறை இல்லை. ஆனால் அந்த வண்டிகள் அங்கு இருப்பதன் மூலமாக பல செலவுகள் ஏற்படுகின்றன. அவைகளை சிக்கனமாக உபயோகப்படுத்துவதே இல்லை யாது அதைக் கட்டுப்படுத்துவதற்கும் சாத்தியமல்லாமல் இருக்கிறது. அவர்களுடைய குடும்பங்களுக்கு அவைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. மற்றும் இதர காரியங்களுக்கும் அவைகளை உபயோகப்படுத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட செலவுகள் அவசியம்தானா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது ஒரு புறம் இருக்க போலீஸ் நிர்வாகத்தை எப்படி அமைக்க வேண்டும் என்று சில யோசனைகளைக் கூறலாம் என்று நினைக்கிறேன். அந்த யோசனைகள் என்ன என்பதைச் சொல்வதற்கு முன்னதாக அந்த போலீஸ் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய நிலைமை, சூழ்நிலை, அவற்றைப் பற்றிய சில விஷயங்களை இந்த சபையின் கவனத்திற்குக் நான் கொண்டு வரவேண்டியது என் கடமை என்று நான் நினைக்கிறேன். மூன்று நான்கு வருஷங்களாக போலீஸ் நிர்வாகத்தில் ஒரு பிரத்யேகமான ஒரு சூழ்நிலை வளர்ந்துகொண்டிருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதைப்பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்ல முடியும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

போலீஸ்காரர்களுடைய கடமைகள் இப்பொழுது மாறி இருக்க வேண்டும். எந்த சர்க்கார் இருக்கிறதோ அந்த சர்க்காருடைய கொள்கைகளையும் அவர்கள் போடக்கூடிய திட்டங்களையும் நிறைவேற்றுவதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். போடப்படும் திட்டங்களை நிறைவேற்றும் போது மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். சர்க்கார் நிறைவேற்றும் சட்ட திட்டங்களை அவர்கள் நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு உதவியாக இருக்க வேண்டும். குறிப்பாக, மக்கள் எந்த விதத்திலும் அதன் மூலம் பாதிக்கப்படாமல், அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமையில் அவர்கள் தங்களுடைய நிர்வாகத்தை நடத்தவேண்டும். இவைகளுக்குத்தான் போலீஸ் அமைப்பு ஒரு கருவியாக இருக்க வேண்டும். வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை ஆண்டு வந்த காலத்தில், அவர்களிடம் ஜனங்களுக்கு பயம் இருந்தது. அதற்கென்று போலீஸ் படையை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள். நிர்வாகத்தை நடத்தும்போது ஜனங்களிடத்திலிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளை சமாளிப்பதற்கும், அவர்களிடம் இருந்த பயத்தை எதிர்ப்பதற்கும் போலீஸ் படையை அவர்கள் உபயோகப்படுத்தி வந்தார்கள். நாம் இப்பொழுது சுதந்திரம் அடைந்து விட்டோம். இப்பொழுதும் அதே நிலைமையில் போலீஸ் நிர்வாகத்தை நடத்த வேண்டுமா என்று கேட்கிறேன் நாம் நிறைவேற்றும் சட்டங்களை அமுல் நடத்த முடியாமல் அந்தச் சட்டங்களை மீறக்கூடியவர்களின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்





வதற்கு அவர்களை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். சர்க்கார் செய்யக்கூடிய திட்டங்களை அமுல் நடத்துவதிலும், அதை எதிர்க்கக்கூடியவர்களை அடக்கவும், விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கவும் நிலச் சீர்திருத்த சட்டத்தை அமுல் நடத்தவும்தான் அவர்களை உபயோகப்படுத்த வேண்டும். அவர்கள் மூலம் மக்களுடைய நலனை பாதுகாக்கவும்தான் அவர்களை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். பழைய மனப்பான்மையிலேயே அவர்கள் இருந்தால் அந்த நிர்வாகம் சரிவர நடைபெறாது. இந்த நிர்வாகத்தை சீர்திருத்தி அமைப்பது ஒரு சுலபமான காரியம் அல்ல. தனிப்பட்ட முறையில் ஐ. ஜி. போன்ற அதிகாரிகள் எந்த அளவு சேவை புரிந்திருக்கிறார்கள் என்றும், பல ஜில்லாக்களில் பல கிராமங்களில் புரிந்திருக்கக்கூடிய ஒவ்வொரு யூனிட்டும் அங்கே நடந்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகளை பாராட்டி சொல்லக்கூடிய அளவுக்கு நான் போகமாட்டேன். நிர்வாக உறுப்பினர்கள் பேரில் ஏதாவது குற்றம் குறைகள் வந்து அதை விசாரித்தால் அதன் மூலம் அவர்களுடைய கண்யமும் கௌரவமும் போய் விடுமோ என்று எண்ணுகிற முறையில் நிர்வாகம் இருக்கக்கூடாது. நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளை கவனித்து ஊழல்களை கவனித்து அவைகளை கவனிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களை மக்கள் புரிந்துகொள்ளும் முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நிர்வாகத்தின் மீது மக்கள் ஏதாகிலும் குற்றம் குறைகளைச் சொல்ல வந்தால் தனக்கே ஏதாவது தீங்கு வந்துவிடுமோ, அதனால் நிர்வாகத்திலுள்ள குற்றம் குறைகளைச் சொல்லக்கூடாது என்று மக்களிடத்திலுள்ள பயம் நீங்க வேண்டும். குற்றம் குறைகளைச் சொன்னால் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள், அதனால் பயமில்லாமல் குற்றம் குறைகளை சொல்லலாம் என்ற மனப்பான்மை மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்ற நிலைமையில் அந்த நிர்வாகத்தை திருத்தி அமைக்க வேண்டும். ஆகவே போலீசைப் பற்றி ஏதாவது புகார்கள் வந்தால் அதைப்பற்றி உடனே விசாரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே சில விசாரணைகளை பற்றி இங்கு பேசக்கூடாது என்று சபாநாயகர் அவர்கள் சொல்லி விட்டார். அது கோர்ட்டில் இருக்கிறது அதனால் அதைப்பற்றி பேசக்கூடாது என்று சொல்லி விட்டார். அது சரியான கோர்ட் விசாரணையோ அதாவது சரியான ஜுடிஷியல் விசாரணையா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம். அதில் என்ன குறை இருக்கிறது என்பதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம். அது ஒரு ஜுடிஷியல் என்குயரியா என்பதைப்பற்றி.

MR. SPEAKER: I now think it is a judicial enquiry.

SRI M. KALYANASUNDARAM: அதை நான் ஏற்றுக்கொள்கிறேன், அதில் என்ன விசாரணை நடக்கிறது, அதன் மூலம் என்ன வெளியே வரப் போகிறது என்பதைப்பற்றி பின்னால் தெரிந்து கொள்ளலாம். ஆனால், விசாரணையில் சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரியை டிரான்ஸ்பர் பண்ணி விட்டால் போதுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களை ஸஸ்பெண்ட் செய்துவிட்டு விசாரணையை நடத்தினால் அதன்மீது ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். விசாரணை நடக்கக் கூடிய அதிகாரி பதவியில் இருந்தால் எப்படிப்பட்ட விசாரணையின் முடிவு வரும் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். விசாரணைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரி பதவியில் இருந்தால் சரியானபடி முடிவுகளைக் கொடுக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டு விசாரிப்பது சரியல்ல. பல அதிகாரிகளைப்பற்றி பல புகார்கள் வருகின்றன. அப்பேர்ப்பட்ட அதிகாரிகளை பதவியில் வைத்துக்கொண்டு விசாரணை நடத்தினால் சரியான முடிவை நாம் எதிர்பார்க்க முடியாது. சமீபத்தில் மத்திய அரசாங்கத்தில் இன்ஷூரென்ஸ் கார்பொரேஷன் ஊழல் சம்பந்தமாக ஒரு விசாரணையை நடத்தினார்கள். அது சரியான விசாரணை, அது வரவேற்கத்தக்க விசாரணைதான். அந்த விசாரணையைக் கண்டு மற்றவர்கள் தலை குனிய வேண்டியதாக இருக்கிறது. விசாரணை நடத்தினால் அவர்களுடைய அந்தஸ்து குறைந்து போய்விடும் என்று நினைக்கிறார்கள். அப்படி அல்ல. புகார் வந்து அதன் பேரில் பகிரங்க விசாரணை நடத்தினால்

[Sri M. Kalyanasundaram] [18th March 1958

அதனால் அவர்களுடைய அந்தஸ்தும் கௌரவமும் உயரத்தான் செய்யுமே தவிர குறையாது. சரியான விசாரணை நடத்தா விட்டால் நிர்வாகத்தில் ஜனங்களுக்கு இருக்கும் நம்பிக்கை குறைந்து போய்விடும். போலீஸ் நிர்வாகம் சம்பந்தப்பட்ட மட்டில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை விசாரிக்க வேண்டும் என்று சொன்னால், அப்படிச் அவர்களின் பேரில் புகார்கள் வந்தால் அவைகளை விசாரிக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சாதாரணமாக சென்னை நகரில் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். ஏழை மக்களையும், தொழிலாளர்களையும், டாக்ஸி ட்ரைவர்களையும், ரிக்ஷா வண்டிக்காரர்களையும், ஜட்கா வண்டிக்காரர்களையும், சர்க்கார் உத்தியோகத்திலுள்ள சாதாரண ப்யூன்களையும் இழுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் அங்கு அவர்களை துன்புறுத்துகிறார்கள். அவர்களுக்கு கேஸ்கள் வேண்டும் என்பதற்காக யாரை வேண்டுமானாலும் இழுத்துக் கொண்டு ஸ்டேஷனில் அடைத்து வைத்து தங்களுக்கு வேண்டிய அளவுக்கு சாட்சியம் தயாரித்துக் கொள்ளுகிறார்கள். அப்படி இழுத்துக் கொண்டு போய் அவர்களுடைய உரிமைகளை பாதிக்கும் அளவில் அவர்களை ஸ்டேஷனில் நாலைந்து நாட்கள் அடைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான்கூட இதைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனில் பார்த்திருக்கிறேன். அங்கு அவர்களை அடிப்பதையும் துன்பப்படுத்துவதையும் பார்த்திருக்கிறேன். ஒரு விஷயம் சம்பந்தமாக கனம் மந்திரிக்கும் தெரிவித்திருக்கிறேன். அவருக்கும் அந்த விஷயம் நன்றாகத் தெரியும். நம்முடைய சர்க்கார் சிவில் சப்ளை இலாகாவில் வேலை செய்து வந்த ஒரு வாட்ச்மென்னை அவர்கள் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தி யிருக்கிறார்கள். அவரிடமிருந்து உண்மையைப் பெறுவதற்கு அதாவது போலீஸ்காரர்களுக்கு எது உண்மை என்று தோன்றுகிறதோ அந்த உண்மையைப் பெருவதற்கு அவரை அடித்து துன்புறுத்தி யிருக்கிறார்கள். போலீஸ்காரர்களுக்கு வேண்டிய சாட்சியத்தை தயாரிக்கும் அளவில் அவரிடமிருந்து ஒப்புதல் வாங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இன்னும் நம் நாட்டில் இருக்க வேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நாம் சுதந்திரம் அடைந்து பதினொரு வருஷங்களாகின்றன. இந்த பதினொரு வருஷங்களுக்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமை சென்னை நகரத்திலேயே இருந்தால் கிராமங்களில் இருக்கக்கூடிய ஸ்டேஷன்களில் என்ன நிலைமை இருக்கும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கிராமங்களில் என்ன அட்டூழியம் நடக்கும் என்பதையும் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு சம்பவமும் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதையும் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போனேன். விசாரணை நடத்தியதில் ஒன்றும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். ஒரு முஸ்லீம் அம்மையார் அவர்கள் வயதானவர்கள். அவருடைய மகன் டிங்கலர் வைத்துக்கொண்டிருந்தாராம். சந்தேகத்தின் பேரில் அந்த அம்மையாரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று துன்புறுத்தி யிருக்கிறார்கள். அதன் பிறகு அந்த அம்மையார் இறந்து போய் விட்டாள். அந்த அம்மையாரை உதைத்ததால் அவள் இறந்து விட்டதாக அந்த அம்மையாரைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் போலீஸைக் கண்டவுடனேயே ஷாக்கினால் அந்த அம்மையார் இறந்து விட்டதாக அவர்களுடைய முடிவு. விசாரணை செய்ய வேண்டும் என்று பல மனுக்கள் போயிருக்கின்றன. இப்படிப்பட்ட பல புகார்கள் சென்னை நகர ஸ்டேஷன்களிலேயே வந்து கொண்டிருக்கின்றன. போலீஸின் கௌரவம் அந்தஸ்து போய்விடும் என்பதைப் பார்க்காமல் ஏழைகள் சொல்வதில் என்ன உண்மை இருக்கிறது, புகார்கள் எவ்விதம் வருகின்றன என்பனவற்றைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீஸ் நிர்வாகத்தில் லஞ்சப் புகார்கள் பல வருகின்றன. அப்படி போலீஸ்காரர்மீது லஞ்சப் புகார்கள் வந்தால் அதை விசாரிக்கும் முறை ஒரு பிரத்யேகமான முறையாக இருக்கவேண்டும். வேலியே பயிரை



18th March 1958] [Sri M. Kalyanasundaram]

அழிக்கக்கூடிய அளவில் அந்த விசாரணை இருக்கக்கூடாது. சாதாரணமாக ரிவின்யூ டிபார்ட்மெண்டில் லஞ்சப் புகார் வந்தால் அதைப்பற்றி விசாரிப்பதோ அல்லது கண்காணிப்பதோ போலீஸ் இலாகாதான். அப்படிப்பட்ட நிலைமையில் போலீஸ்காரர்கள்மீது லஞ்சப் புகார் வந்தால் அதைப்பற்றி விசாரிக்க போலீஸ் இலாக்காக்காரர்களையே போடுவது என்பது முறையல்ல. லஞ்சப் புகார்களை கண்காணிக்கக்கூடியவர்கள் மீது லஞ்சப் புகார்கள் வந்தால் வேறு யாரையாவது விட்டுதான் விசாரிக்கச் சொல்ல வேண்டும். ஆகவே போலீஸ் அதிகாரிகளின்பேரில் லஞ்சப் புகார்கள் வந்தால் அவர்கள் பேரில் நடத்தப்படும் விசாரணைமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். ஐ. ஜி. யைப்பற்றி புகார் வந்தாலும் அல்லது வேறு யார் பேரில் புகார் வந்தாலும் அதாவது டி. எஸ். பி. போன்றவர்கள் மீது புகார் வந்தாலும் அவர்களைப் பற்றி விசாரணை நடத்துவது என்பது அந்த இலாகாவைச் சேர்ந்த சி.ஐ.டி டிபார்ட்மெண்ட் மூலம் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஐ. ஜி. யின் கீழ் உள்ளவரையே விசாரிக்கச் சொன்னால் எப்படி நியாயம் கிடைக்கும். ஐ. ஜி. என்ன விரும்புகிறாரோ, அவர் எப்படி விசாரணையின் முடிவு இருக்க வேண்டும் என்று கருதுகிறாரோ அந்த அடிப்படையில்தான் முடிவு காணலாம். ஆகவே உண்மையான முடிவு ஏற்பட முடியாது. ஆகவே அந்த இலாக்கா போலீஸ் இலாக்காவின் கீழ் இருக்கக்கூடாது. இலஞ்சத்தை அடியோடு நிர்வாகத்திலிருந்து ஒழிக்க வேண்டும் என்று கருதினால் அந்த இலாக்காவை போலீஸ் இலாக்காவிலிருந்து எடுத்து விட்டு, வேறு எந்த இலாக்காவுடனாகிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சர்க்காருடைய நேரடி பார்வையில் இருக்கக்கூடிய உள் விவகார இலாகாவுடனோ அல்லது நிதி இலாக்காவுடனோ சேர்த்து நிர்வாகத்தை நடத்தி வந்தால் அவர்கள் சரியானபடி உண்மையான முடிவுகளைக் கொடுக்க முடியும். அப்படி சேர்த்தாலும் அவர்கள் போலீஸ் அதிகாரிகளாகவே இருக்கலாம். அவர்கள் போலீஸ் ஐ. ஜி.-யின் கீழ் இருந்தால் அவர்களால் இலஞ்ச ஊழல்களைக் கண்டு பிடிக்கவே முடியாது, அவர்கள் நிதி இலாகாவுடனோ அல்லது உள் விவகார இலாக்காவுடனோ போலீஸ் அதிகாரிகளிடத்தில் விருப்பு வெறுப்பு இல்லாமல் தனியாக இயங்கமுடியும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்ற இலாக்காகளிலிருந்து புகார்கள் வந்தால் அவைகளை விசாரிக்க போலீஸ் இலாகாவை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அந்த போலீஸ் இலாக்கா சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் பேரில் புகார்கள் வந்தால் அதை விசாரிக்க தனிப்பட்ட முறையில் ஒரு இலாக்கா இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த மூன்று வருஷகாலத்தில் நமது போலீஸ் இலாக்காவைப் பற்றி 9-4 a.m.
என்னென்ன புகார்கள் வந்திருக்கின்றன என்பதைப் பற்றி என்னிடம் சில தகவல்கள் இருக்கின்றன. துரதிருஷ்டவசமாக நான் சென்ற பட்ஜெட் விவாதத்தின்போது இந்த சபையில் இருக்க முடியவில்லை. நான் வெளிநாடு சென்றிருந்தேன். அதற்குப் பின் எனக்கு இந்த விவரங்களை சபை முன்பு எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இன்றுதான் அத்தகைய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பழைய விவரங்களை நான் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கும். அதற்காக என்னை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கக் கூடிய ஐ. ஜி. இராஜரத்னம் அவர்கள் போலீஸ் இலாக்காவின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த காலத்திலே நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சில விவரங்களே போதுமானது என்று நினைக்கிறேன். எவ்வளவு என்று பார்க்கலாம். "காக்னைஸபிள் கிரைம்ஸ்" **percentage of detection of total cognizable offences** எவ்வளவோ நடந்து கொண்டிருக்கின்றன. அது போகட்டும். "காக்னைஸபிள் கிரைம்ஸ்" கண்டுபிடித்த சத விகிதத்தின் "ப்ரொகிரஸைப்" பார்க்கலாம். 1953—ல் 48.6 சதம், 1954—ல் 43·6/1955-ல் 41·3 சதம் நமக்கு கிடைத்திருக்கிற ரிபோர்டு 1955—ம் ஆண்டு வரைக்கும்தான். 1955—ம் வருஷத்திய ரிபோர்டு 1956—ல் அச்சடிக்கப்பட்டு 1957—ம் வருஷத்தில் நம் கைக்கு வந்திருக்கிறது. 1956—ம் வருஷத்திய ரிபோர்டு 1959—ல் தான் கிடைக்கும். அதற்கு முன்னால் வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த 3 வருஷ புள்ளிவிவரங்களே என்ன நிலைமையை காட்டுகிறது? போலீஸ்

இலாக்காவிற்காக அதிகமாக செலவு செய்தும்கூட, இவ்வளவு அதிகமான அதிகாரிகள் நியமித்தும்கூட, கொள்ளை, கொலை, திருட்டு முதலிய மக்களுடைய உரிமையை பாதிக்கக்கூடிய "காக்னைஸபிள்" குற்றங்களை கண்டுபிடிப்பதில் போலீஸின் திறமை குறைந்திருக்கிறது, நிர்வாகத்தின் தரம் குறைந்திருக்கிறது, ஜனங்களிடத்திலே நம்பிக்கை குறைந்திருக்கிறது, போலீஸாரிடம் புகார் செய்தால் தகுந்த அளவுக்கு பாதுகாப்பு கிடைக்கும், புகார்கள் கவனிக்கப்படும் என்ற நம்பிக்கை குறைந்துவிட்டது. சென்னை நகரத்தில் மட்டுமல்ல, வெளி ஜில்லாக்களிலும்கூட இந்த நம்பிக்கை குறைந்துவிட்டது. இதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. மக்களுடைய அபிப்பிராயத்தையும் நான் பிரதிபலிக்கிறேன் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அது போகட்டும். போலீஸ் அதிகாரிகள் சம்பந்தமாக இந்த சபையிலே எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய ஒரு அங்கத்தினர் கனம் அன்பழகன் சில புகார்கள் செய்தது இந்த சபைக்கு ஞாபகம் இருக்கும். அந்த விசாரணையின் மீது ஒரு விவாதம் வேண்டும் என்று கோரியவர்களில் நானும் ஒருவன். துரதிருஷ்டமாக அதற்குப் போதுமான அவகாசம் நமக்கு கிடைக்கவில்லை. ஆனால் ஐ. ஜி. இராஜரத்னம் அவர்கள் மீது அவர்கள் செய்த ஒரு சில புகார்கள் சபையின் ரிகார்டில் இருக்கிறது. விசாரணைக்கு நியமிக்கப்பட்ட ஜஸ்டீஸ் பி. என். இராமசுவாமி அவர்கள் ஐ. ஜி. இராஜரத்னம் அவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்ட விவரங்களை மட்டும் தான் விசாரிக்க வேண்டுமே தவிர, மற்றபடி போலீஸ் நிர்வாக அமைப்பு போன்ற விஷயங்களை விசாரணை செய்வதன் நோக்கம் தனக்கு கிடையாது என்று அவர்கள் கூறி, விசாரணையின் முகவுரையில் அதை எழுதியிருக்கிறார். அவர் கூறிய விவரங்கள் பற்றி தோழர் அன்பழகன் அவர்கள் விசாரணையில் சாட்சியம் கொடுக்க மறுத்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அது வேறு விஷயம். தோழர் அன்பழகன்தான் தயாராக இருந்ததாகவும், சாட்சியம் கொடுக்க முன்வந்ததாகவும், ஆனால் விசாரணை ரிகார்டின் பேரிலே நடக்கும் என்று கூறப்பட்டதாயும், சாட்சியம் கொடுப்பவர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உத்திரவாதம் கிடைக்கவில்லை என்றும், தன்னிடம் உள்ள விவரங்களை கொடுத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதனால் பாதகம் வராது என்ற உத்திரவாதம் அளிக்கப்படவில்லை என்றும் சொல்லுகிறார். அமைச்சர் அவர்களை கேட்டால் அன்பழகன் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்று கூறுகிறார். அன்பழகன் ஒத்துழைத்தாரா, இல்லையா என்பது பிரச்சினை அல்ல. சர்க்கார் கவனத்திற்கு அன்பழகனால் தரப்பட்ட சில விவரங்கள் வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். போலீஸ் இலாகா அமைச்சருக்கு தெரியும். ஐ. ஜி. இராஜரத்னம் அவர்கள் இந்த விஷயங்களில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பது நம்முடைய நிதி அமைச்சருக்குத் தெரியும். நம்முடைய முதல் அமைச்சர் காமராஜ் அவர்களுக்குத் தெரியும். இப்பொழுது போலீஸ் அமைச்சராக இருக்கக்கூடியவரும், மந்திரி சபையில் மிக செல்வாக்குள்ள மந்திரியுமான ஸ்ரீ பக்தவத்சலத்திற்கு இந்த விவரங்கள் தெரியாமல் இல்லை. அப்படியிருந்தும் என்ன நடவடிக்கை இது விஷயமாக எடுத்திருக்கிறார்கள்? கனம் அன்பழகனும் மற்றும் எதிர் கட்சி அங்கத்தினர்கள் தங்கள் காதுக்கு எட்டின விவரங்களை இந்தச் சபையில் அமைச்சர் முன்பு எடுத்துச் சொல்லலாம். அதையும் கண்யத்தோடு, பொறுப்போடு சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்களின் பொறுப்பு அதை நல்ல முறையில் தீர்க்கமாக விசாரிக்க வேண்டியது. ஐ. ஜி. இராஜரத்னம் அவர்கள் பென்ஷன் பாதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விசாரணை நடத்தப்பட்டதோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. முழு பென்ஷன் கொடுத்து அவர்களை கௌரமாக ரிடையர் செய்யவேண்டுமென்பதற்காக ஜஸ்டீஸ் பி. என். இராமசுவாமி அவர்களைக் கொண்டு இந்த விசாரணை நடத்தப்பட்டதோ என்று கருதவேண்டியிருக்கிறது. உண்மையிலேயே போலீஸ் டிபார்ட்மெண்டில் எங்கு ஊழல் இருக்கிறது, என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு இந்த விசாரணை நடந்திருந்தால், அன்பழகன் ஒத்துழைத்தாரா இல்லையா என்ற பிரச்சினைக்கே அவசியம் இருந்திருக்காது. நோயை அறிந்து அதற்கு தகுந்த மருந்து கொடுக்கவேண்டும். அப்படிச்செய்திருந்தால் தக்கா கமிஷன் விசாரணை நடந்ததுபோல் சரியான முறையில் இந்த விசாரணையும் நடந்திருக்கும். அதன் முடிவினால் போலீஸினுடைய தரமும் அந்தஸ்தும் உயர்ந்திருக்கும். ஏதோ புகார் சொல்லப்பட்டது, அதற்கு ஒரு விசாரணை நடத்தப்பட்டு முடிந்து விட்டது என்று பிரசாரம் செய்யும் நிலை, மனோபாவம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. மக்களிடையே மட்டுமல்ல, போலீஸ் இலாகாவில் இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும் "நமக்கு என்ன, யாரைப்பற்றி புகார் சொல்லவேண்டும், தேதி ஆனால் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போகலாம்" என்று மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் கடமை உணர்ச்சி குறைந்து வருகிறது. அதற்குப் பதிலாக ரிடையர் ஆகும் காலத்தில் நமக்கு வேண்டியதை கொஞ்சம் சம்பாதித்துக்கொள்ளலாம், டிபார்ட்மெண்டிற்கு கெட்ட பெயர் வந்தால் கவலையில்லை என்ற மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. என்னிடம் இதைப் பற்றி சில விவரங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்துக்காட்ட முடியும். இந்த இராஜ்யத்திலுள்ள சில டி. எஸ். பி. கள் சம்பந்தமாக, உதவி கமிஷனர்கள் சம்பந்தமாக என்னிடமுள்ள சில விவரங்களை சபை முன்பு எடுத்துக் கூற விரும்புகிறேன். இம்மாதிரி வந்திருக்கக்கூடிய புகார்களின்மீது முன்னாள் ஐ. ஜி. இராஜரத்னம் அவர்களின் கண்ணோட்டம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். இந்த புகார்களில் இராஜரத்தனம் அவர்களுக்கு நேரடியான சம்பந்தம் இருக்கலாம். அது போகட்டும். ஏனென்றால் அவருக்கு இதில் நேரடியான சம்பந்தம் உண்டு என்று சொல்லுவதற்கு சரியான ஆதாரங்கள் இருக்கவேண்டும். அத்தகைய ஆதாரங்கள் இல்லாதவரையில் அதைப்பற்றி நான் [illegible] விரும்பவில்லை. அம்மாதிரி அதிகாரிகளின்பேரில் அத்தகைய புகார்கள் வரக்கூடிய சமயத்தில் முன்னாள் ஐ. ஜி. இராஜரத்னம் என்ன செய்கிறார்? என்ன முடிவு எடுக்கிறார்? குற்றம் செய்தவர்களை கண்டுபிடித்து [illegible]க்கவேண்டுமென்ற மனோபாவத்துடன் வேலை செய்வதில்லை. அதற்குப் பதிலாக குற்றவாளி யாராக இருந்தாலும் அவர்களை மூடிவைக்கவேண்டுமென்ற மனோபாவத்தில் வேலை செய்கிறார். அவர் பதவி ஏற்றிருந்த காலத்தில் 3, 4 ஆண்டுகளில் இந்த புகார்களின்பேரில் அவர் எடுத்திருக்கக்கூடிய முடிவுகளை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக சேலம் டி. எஸ். பியாக இருந்து—இப்பொழுது அவர் சேலத்தில் இல்லை—அஸாமில் "ஸ்பெஷல் டியூடியில்" இருக்கிறார் என்று நினைக்கிறேன்—கே. எஸ். வெங்கடராமன் அவர்களைப் பற்றி ஒரு [illegible]தை குறிப்பிட விரும்புகிறேன். அவர் இங்கு இவ்வளவு திறமையாக வேலை செய்ததால், அவர் வெளிநாட்டிற்குப் போய் வேலை செய்வதன் மூலம் தமிழ் நாட்டின் கௌரவத்தை உயர்த்துவார் என்று கருதி, அவரை வெளி நாட்டிற்கு அனுப்பியிருக்கலாம். அது போகட்டும். அவரைப் பற்றி சில புகார்கள் வந்திருக்கின்றன. ரிசர்வ் போலீஸுக்குச் சொந்தமான யானை தந்தம் இருந்தது. அதை அந்தக் காலத்தில் யாராவது சேர்வராயன் மலையிலிருந்து கொண்டு வந்திருக்கலாம். அது விலை மதிப்புள்ளது என்று சொல்லுகிறார்கள். அந்த தந்தத்தை எடுத்து வீட்டிற்கு கொண்டுபோய் அதை சொந்த உபயோகத்திற்காக டி. எஸ். பி. வெங்கடராமன் அவர்கள் வைத்துக்கொண்டார் என்ற புகார் வந்திருக்கிறது. அது என்ன எடை, என்ன மதிப்பு, எங்கே போயிற்று, என்ன மிச்சம் என்பதுபற்றி புலன் விசாரிக்கப்படவில்லை. அது பற்றி அப்பொழுதே புலன் விசாரித்திருந்தால் வெங்கடராமன் அவர்கள் உபயோகப்படுத்தியது போக ஒரு துண்டு, அரை துண்டு மிச்சம் இருந்தால்கூட அதை இராஜரத்னம் பங்களாவிலேயோ அல்லது வேறு உயர்தர அதிகாரியினுடைய பங்களாவிலேயோ கண்டுபிடித்தாலும் கண்டுபிடித்திருக்கலாம். இப்போழுது 3 ஆண்டுகள் கழித்து விசாரணை செய்வதில் என்ன பிரயோசனம் ஏற்படப் போகிறது? 1954, 1955, 1956, 1957-ம் வருஷங்களில் இந்த மாதிரி பலவிதமான புகார்கள் வந்திருக்கின்றன. முன்னாள் ஐ. ஜி. இந்தப் புகார்களைப்பற்றி எந்த முறையில் விசாரணை நடத்தியிருக்கிறார் என்பதை கவனிக்கவேண்டும்? இம்மாதிரி விசாரணை நடத்தினால் ஸ்ரீ கே. எஸ். வெங்கடராமன் போன்ற உத்தியோகஸ்தர்களுக்கு என்ன மனோபாவம் ஏற்படும்? யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் செய்யட்டும், சொல்லட்டும், மந்திரி வேண்டுமானாலும் உத்தரவு போடட்டும், நம்முடைய

கையிலே ஐ. ஜி. இருக்கும் வரையில் யாரும் ஒன்றும் செய்துவிடமுடியாது என்ற மனோபாவம்தான் ஏற்படும். கே. எஸ். வெங்கடராமன் போன்ற போலீஸ் உத்தியோகஸ்தர்கள் மேலும் மேலும் இம்மாதிரி குற்றங்களை தொடர்ந்து செய்யும் மனோபாவம்தான் ஏற்படும். அதனால் நமக்கு எவ்வளவு ஆபத்து ஏற்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

9-50 a.m. அது போகட்டும். இலாகாச் சொத்துக்களை அவர் தனதாக்கிக்கொண்டார் என்பது ஒரு புகார். " கண்டெம் " பண்ணப்பட்ட ஒரு மோட்டார் சைகில் அவர் வீட்டில் இருந்தது. அவர் வீட்டிலிருந்து அது கிடைத்ததற்கு அவர் பொறுப்பாளி அல்ல என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால் அவைகளை கனம் அமைச்சர் கொடுக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, கல்யாணசுந்தரம் தன் இஷ்டம்போல் மாஜி ஐ. ஜி.-யின் பேரில் புகார்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால் நான் திருப்தியடையமாட்டேன். வேண்டுமானால், இது சம்பந்தமான பைல்களை என்னிடம் கனம் அமைச்சர் காண்பிக்கட்டும். அந்த பைல்களில் மாஜி ஐ. ஜி. ஸ்ரீ. இராஜரத்னம் போட்டுள்ள உத்தரவுகளின் அர்த்தம் என்ன என்பதை நான் கனம் அமைச்சருக்கு எடுத்துக் காட்டுவேன். அந்த உத்தரவுகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக அவைகளைப் படிப்பதற்கு கனம் அமைச்சருக்கு அவகாசம் இல்லை என்றால் நான் அவைகளைப் படித்து அவைகளிலுள்ள அர்த்தத்தை எடுத்துக் காட்டத் தயாராயிருக்கிறேன்.

சேலம் டி. எஸ். பி. ஆக இருந்த கே. எஸ். வெங்கட்டராமன் சம்பந்தமாக நான் மட்டுமின்றி வேறு பல அங்கத்தினர்களும் இந்த சபையில் கேள்வி போட்டார்கள். அப்போது கனம் நிதி அமைச்சர் என்ன பதில் சொன்னார்? அப்போது அவர், அந்த டி. எஸ். பி.-யின் பேரில் கனம் அங்கத்தினர்கள் அனாவசியமாக புகார் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டு ரோட்டரி க்ளப்பிற்கு அவர் பணம் வசூலித்தால் அது குறித்து கனம் அங்கத்தினர்கள் ஏன் புகார் செய்கிறார்கள் என்று கேட்டார். ரோட்டரி க்ளப்பில் சங்கீதக் கச்சேரி நடந்தது. அந்தக் கச்சேரிக்கு அவர் பணம் வசூலித்தார். சேலம் ஜில்லா பூராவிலும், மாக்னஸைட் சுரங்க முதலாளிகளிடமிருந்தும், எல்லா மில் முதலாளிகளிடமிருந்துமாக மொத்தம் ரூபாய் 10,000—18,000 அவர் வசூலித்தார். அந்தப் பணத்தை அவர் கையாடினார் என்று புகார் செய்யப்பட்டது. இந்தப் புகாருக்கு ரோட்டரி க்ளப் பொறுப்பாளி என்றால் அவரையாவது விசாரித்திருக்கவேண்டும். மொத்தம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்றும், எவ்வளவு ரசீதுகள் கொடுக்கப்பட்டன என்றும், எவ்வளவு தொகை பாக்கி இருந்தது என்றும் விசாரித்திருக்க வேண்டும். ஸ்ரீ வெங்கட்ராமன் பொறுப்பாளி என்றால் அவரையாவது விசாரித்திருக்க வேண்டும். ஸ்ரீ வெங்கடராமன் கையாட வில்லை என்றால், அதை நிரூபித்து அவர் கௌரவத்தை காப்பதற்காகவாவது விசாரணை நடத்தியிருக்க வேண்டாமா? அந்தப் புகார் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. ஸ்ரீ வெங்கடராமன்தான் உண்மையில் பொறுப்பாளி என்று வைத்துக்கொண்டால், ரோட்டரி க்ளப்தான் பொறுப்பாளி என்று சபையில் கனம் அமைச்சர் சொல்லிவிட்டால், ஸ்ரீ வெங்கடராமனுடைய பேச்சைக் கேட்டு பணம் வசூலித்துக் கொடுத்த எல்லா போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் என்ன மனோபாவம் ஏற்படும்? நாமும் அப்படிப்பட்ட காரியங்களை தைரியமாகச் செய்யலாம். நம்மை சர்க்கார் ஒன்றும் செய்துவிட மாட்டார்கள் என்ற மனோபாவம் தானே அவர்களுக்கு ஏற்படும்? இதைப்பற்றி கனம் அமைச்சர் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. அந்த அதிகாரியின் பேரிலுள்ள இந்தப் புகாரைக் குறித்து விசாரணை நடத்தப்பட்டதா என்று யாருக்கும் இதுவரையில் தெரியாது.

மாஜி ஐ. ஜி. ராஜரத்தினத்தின் பேரில் இன்னொரு புகார் இருக்கிறது. டெபுடி சூபரின்டென்டெண்டாக இருந்த ஸ்ரீ அச்சுத மேனனின் மூலம் பாலக்காட்டுப் பக்கத்திலிருந்து, நாணயமற்ற முறையில், மரங்களை வரவழைத்து அவைகளை தமக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு அவர் பயன்படுத்திக் கொண்டார் என்பது ஒரு புகார். அந்த டெபுடி சூபரின்டென்டெண்ட் ஆப் போலீஸ் இப்போதும் உத்தியோகத்தில் இருக்கிறார். அவர்





இப்போது ஊட்டியில் இருக்கிறார். இது சம்பந்தமாக சரியாக விசாரணை நடத்தப்பட்டதா? ஸ்ரீ ராஜரத்தினமே ஸ்பெஷல் பிராஞ்சு போலீசாரை விசாரணை செய்வதற்காக பாலக்காட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்தப் போலீசார் அங்கே போவதற்குள் டெலிபோனில் ஸ்ரீ அச்சுத மேனனைக் கூப்பிட்டு " விசாரணைக்கு ஸ்பெஷல் ப்ராஞ்சுப் போலீசார் வருகிறார்கள். ஜாக்கிரதையாக இரு. " என்று எச்சரிக்கை செய்திருக்க முடியாதா? இந்த மாதிரியாக கண் துடைப்பிற்காக விசாரணை நடத்தி விட்டு, கூறப்பட்ட புகார் ஆதாரமற்றது என்று சொல்வதா? ஸ்ரீ அன்பழகனின் புகாரும் சரியாக விசாரணை செய்யப்பட்டதா?

இன்னொரு, புகார். டாக்டர் பி. சுப்பராயன் வீட்டுச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டது அந்தப் புகார். டாக்டர் சுப்பராயனுக்கு நிறைய சொத்துக் கிடைக்க வேண்டுமென்பதில் எனக்கு அக்கறை இல்லை. அவருக்காக நான் பாடுபடவில்லை. அவர் என்னைவிட சாமர்த்தியசாலி. டாக்டர் சுப்பராயனுக்கும் கனம் முதல் அமைச்சருக்கும் தொடர்பு உண்டு. இந்தப் புகார் சம்பந்தமாக யார் விசாரணை நடத்தினார்கள்? யார் உத்தரவு போட்டார்கள்? டாக்டர் சுப்பராயன் விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னாரா? அதன் பேரில் விசாரணை நடத்தப்பட்டதா? அல்லது, அவர் அவ்வாறு சொல்லாமலிருக்கும்போதே விசாரணை நடத்தப்பட்டதா? அவருடைய மாளிகைக்குள் சொத்து இருந்ததாகச் சொல்கிறார்கள் கனம் மந்திரி சொல்லும் விஷயத்தைப் பார்த்தால் திருச்செங்கோடு மக்கள் என்ன நினைப்பார்கள்? சட்டசபை அங்கத்தினர்கள், மாஜி ஐ. ஜி. ஆகிய ஸ்ரீ ராஜரத்தினம், முதலிய எல்லோரும் சேர்ந்து ஏதோ "கோல்மால்" பண்ணி விட்டார்கள் என்றுதானே நினைப்பார்கள்? " விசாரணை செய்து விடுங்கள் " என்று டாக்டர் சுப்பராயன் அறிக்கை விட்டாரா? கனம் அமைச்சர் அவரை ஏன் அவ்வாறு அறிக்கைவிடச் செய்யவில்லை? கனம் அமைச்சர் விரும்பியிருந்தால் அவ்வாறு செய்திருக்க முடியும், பைல்களை எடுத்துப் பரிசிலனை செய்திருக்கலாம். இதுவரை கனம் அமைச்சர் தக்க நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்து விட்டாலும், இனிமேல் எதிர்காலத்திலாவது அந்த புகார்கள் குறித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கும் விஷயத்திலும், அதிகாரிகளை ஊர் விட்டு ஊர் மாற்றும் விஷயத்திலும் மாஜி ஐ. ஜி., ஸ்ரீ ராஜரத்தினம் எவ்வாறு நடந்துகொண்டார் என்று பார்க்க வேண்டும். அந்த விஷயங்களில் அவர் எவ்வாறு நடந்துகொண்டார் என்று பார்த்தால், மது விலக்குத் திட்டம் சம்பந்தமாகவும், சர்க்காரின் மற்ற திட்டங்கள் சம்பந்தமாகவும் அவர் நடந்து கொண்ட விதமும் அவர் கடைப்பிடித்த கொள்கையும் நமக்குப் புலனாகும். பருத்தி சூதாட்டம் மிகவும் அதிகமாக நடக்கிறது என்று புகார் கூறப்பட்டபோது ஸ்ரீ மொகம்மட் ஜான் என்ற உதவி போலீஸ் கமிஷனர் ஒருவர் இருந்தார். பருத்தி சூதாட்டங்களுக்குக் காரணமாக இருந்த திமிங்கிலங்கள் இவர் காலத்தில்தான் இருந்தன என்பது ஒரு புகார். அவர்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாஜி ஐ. ஜி. காலத்தில் கோரப்பட்டது. அந்த உதவி கமிஷனர் ஸஸ்பென்ஷனில் வைக்கப்பட்ட பிறகுதான் பருத்தி சூதாட்டம் குறைந்திருக்கிறது; இந்த உண்மை கனம் அமைச்சருக்குத் தெரியுமோ, தெரியாதோ; அவருக்கு இதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் மூந்திராக்கள் இல்லாமலில்லை. இரும்பு-எக்கு கண்ட்ரோலர் கொடுத்த பெர்மிட்டுகள் சம்பந்தமாக ஸெஷன்ஸ் கோர்ட்டில் இப்போது வழக்கு நடந்து கொண்டிருக்கிறது; ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் என்பவரும் அவருடைய சகாக்களும் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பேரில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோதே அவருக்கு மேலும் மேலும் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டன என்று தெரிகிறது; வழக்கு நடந்து கொண்டிருந்தபோது மொத்தம் ரூ. 10 லட்சம் வரை பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டன.

[18th March 1958

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் பெர்மிட் கொடுத்ததாகச் சொல்வது முற்றிலும் தவறு. இது சம்பந்தமாக முன்பே கேள்வி போட்டிருந்தால் நான் பதில் சொல்லியிருக்கமுடியும். ஆகவே இம்மாதிரி தவருன புகார்களை கனம் அங்கத்தினர் சொல்லவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : I was just thinking whether I should permit reference in this House to private individuals who have no one here to defend them. If it is a reference to officials, the Hon. Minister will reply to it.

**Sri M. KALYANASUNDARAM** : இதில் சம்பந்தப்பட்ட வியாபாரியைப்பற்றி நான் புகார் கூறவில்லை. பெர்மிட் கொடுத்த அதிகாரியைப்பற்றித்தான் நான் பேசுகிறேன். அதிகாரியின் அனுதாபம் இல்லாமல் அவர் அவ்வளவு பெர்மிட்டுகளை வாங்கியிருக்க முடியாது. அதிகாரி ஓய்வு எடுத்துக்கொள்ளும் வரை பொறுத்திருந்து விட்டு, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வியாபாரிக்கு, நிறைய ஆர்ட் ஸில்க் வியாபாரத்திற்கு பெர்மிட் கொடுக்கப்பட்டது,

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : எனக்குத் தெரிந்த வரையில், இந்தப் பெர்மிட்டுகள் மத்திய அரசாங்கத்தாரால் கொடுக்கப் படுகின்றன. இந்தப் பெர்மிட்டுகளைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை.

**Sri M. KALYANASUNDARAM** : குறிப்பிட்ட நபர் மீது ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் இருந்தபோது மேலும் மேலும் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டன என்பது புகார். சமீபத்தில் ரிடையரான ஸ்ரீ அருள்தாஸ் என்பவரால்தான் அந்த பெர்மிட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவர் மீது புகார் வந்ததும் அவர் ரிடையராகி விட்டார். மாஜி ஐ. ஜி., ஸ்ரீ ராஜரத்தினம் மீது புகார்கள் வந்ததும் அவர் ரிடையராகி விட்டார். அவரை ரிடையராக விட்டார்களே தவிர அவர் மீது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரெவின்யூ இலாகாவிலிருந்த ஸ்ரீ குடுவாவின் பேரில் புகார் வந்தவுடன் அவர் ரிடையராகி விட்டார். இந்த மாதிரி இருந்தால், லஞ்சம் எப்படி ஒழியும் ?

10-00 a.m. இரண்டு மணி நேரம் பேசுவதற்கு என்னிடம் விஷயங்கள் இருக்கின்றன நேரம் போதவில்லை. ஜூலை 21-ந் தேதி " ஸண்டே அப்ஸர்வர் " என்னும் பத்திரிகை என்னிடம் இப்பொழுது இருக்கிறது. அதிலிருந்து நான் பூராவும் படிக்க வில்லை. அதற்குப் பிறகு இப்பொழுதுதான் சந்தர்ப்பம் கிடைக்கிறது, இந்தச் சபை முன்னால் கொண்டுவருவதற்கு (பத்திரிகையை. சபைக்கு காட்டிக்கொண்டு) இந்தப் பக்கம் இருக்கக்கூடியவர் திரு. கே. அன்பழகன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் டெபுடி லீடர். அந்தப் பக்கம் இருக்கக் கூடியவர் திரு. எம். பக்தவத்சலம், போலீஸ் அமைச்சர். இரண்டுபேர் படத்தையும் போட்டு இந்தப் பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறது ? அன்பழகன் அவர்கள் இந்தச் சபையில் நடத்திய விவாதத்தைப்பற்றிக் குறிப்பிடுவதாகக் கூறி நம்முடைய அமைச்சரைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இதில் குறிப்பிட்டிருப்பதிலிருந்து பொறுப்போடு செய்திருப்பதாக நான் நினைக்கவில்லை. அவரைப்பற்றி எனக்கு அதிக விஷயம் தெரியாது. அடியோடு பொறுப்பு இல்லாதவராக இருந்தாலும் எலெக்ஷனிலே டி.டி.கே.ஐ. எதிர்த்து நின்று, டி.டி.கே.-க்கு அடுத்தபடி வோட்டு வாங்கியிருக்கிறார். அப்பேர்ப்பட்ட மனிதர் அவர். அவர் பத்திரிகையில் எழுதுகிறார். என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Is it in order to read from a newspaper?

**Mr. SPEAKER** : I was myself thinking about it. There is nothing wrong in giving an extract from a newspaper, because all members read newspapers. But to read it is not correct.



18th March 1958]

**Sri M. KALYANASUNDARAM** : I may just explain how it is relevant . . .

**Mr. SPEAKER** : If the name of the paper is known, giving an extract from it is in order, I think.

**Sri M. KALYANASUNDARAM** : I said it was from the ' Sunday Observer '.

" Sri M. Bhaktavatsalam is not above suspicion, as Ceaser's wife. He has a notriety of lacking all honesty . . . He has a nickname as Pathulaksham Mudaliar . . . . " என்று ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.

**Mr. SPEAKER** : The hon. Member is not correct in decrying any Member of this House . . .

**Sri M. KALYANASUNDARAM** : I am not saying . . .

**Mr. SPEAKER** : You are indirecty doing it. By reading it you are decrying a member . . .

**Sri M. KALYANASUNDARAM** : If you will please allow me . . .

**Mr. SPEAKER** : No, it is against rules. You cannot indirectly decry a member.

**Sri M. KALYANASUNDARAM** : No, I am not doing that the paper which decries . . . him, I am quoting.

**Mr. SPEAKER** : I am sorry that is no reason. My ruling is that the hon. Member cannot quote anything which decries a member of this House. He cannot directly do it; he cannot also do it indirectly by quoting an extract which disgraces him.

**Sri M. KALYANASUNDARAM** : Unfortunately that member happens to be a Minister.

**Mr. SPEAKER** : Does not matter who he is. Further, how can you raise it under Police Demand? That is an act of the Minister; it is not an action of the Police Department. How can you speak about it on the Police Demand? That is a question which you can raise when the Demand relating to Ministers' Salary is taken up.

**Sri M. KALYANASUNDARAM** : That was in connection with the Police Department.

**Mr. SPEAKER** : It is out of order.

**Sri M. KALYANASUNDARAM** : It was for the Police to have taken action against the editor of the paper. That is why I am perfectly in order in raising it now.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : That is not the law.

**Mr. SPEAKER** : Are you suggesting that the Police can act without the instructions of the Minister? You cannot discuss it under Police Demand.

Sri M. KALYANASUNDARAM : இது மந்திரி அவர்கள் கவனத்திற்கும் போலீஸ்காரர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் பத்திரிகை ஆசிரியர் மீது, பத்திரிகை அதிபர் மீதும் நடவடிக்கை எடுக்க தைரியம் இருந்ததா? இவ்வளவு கேவலமான முறையில் ஒரு அமைச்சர் மீது எழுதும்போது, அப்படி எழுதியவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டாமா? அவரை "ப்ராஸிக்யூட்" செய்ய வேண்டாமா? சொந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தாலும், இல்லாவிட்டாலும், அமைச்சர் என்ற முறையில், தாக்கக் கூடிய முறையில், ஒரு பத்திரிகை இந்தச் சபையின் நடவடிக்கையைப்பற்றி குறிப்பிட்டு எழுதியிருக்கிறதென்றால், அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது, அதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடியது போலீஸ் இலாகா. போலீஸ் இலாகாவானது அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படிப்பட்ட அந்த இலாகாமீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வராமல் இருக்கும்போது, பட்ஜெட்டில் எவ்வளவுதான் நிதி ஒதுக்கினாலும், அதெல்லாம் விரயமாகத்தான் போகக்கூடியது என்று நான் நினைக்கிறேன்.

அது இருக்கட்டும். அந்த டிமாண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு நம்பிக்கை ஊட்டினதற்குச் சந்தோஷம். நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால், எந்த டிமாண்டாக இருந்தால் என்ன?. அந்த டிமாண்டு வரும்போது பார்த்துக்கொள்ளலாம்.

இத்தகைய முறையில் போலீஸ் நிர்வாகம் நம்முடைய ராஜ்யத்தில் இருக்குமானால் போலீசாருடைய நிர்வாகத்தைப்பற்றி மக்களிடத்திலே எப்படி மரியாதை ஏற்படும்? எப்படி இத்தகைய போலீஸ் நிர்வாகம் நம்முடைய ராஜ்யத்திலே அமைதியை நிலைநாட்டி மக்களிடையே நம்பிக்கையை வளர்க்க முடியும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் இலாகா நிர்வாக முறையில் குறைபாடுகள் இருந்தாலும், போலீஸ் இலாகாவிலே திறமை இல்லை என்று சொல்ல முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். போலீஸ் இலாகாவினர் திறமையாக இல்லை என்று சொல்லமுடியாது என்றாலும், பழைய அதிகாரிகள் பழைய மனோபாவத்திலேயே இருக்கிறார்கள். புதிய அதிகாரிகளில் சிலர் நல்ல காரியங்கள் செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, மந்திரி அவர்கள் செய்யும் பிரசாரத்தை நம்பி, சில நல்ல காரியங்களைச் செய்ய நினைத்தாலுங்கூட பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்டு அவர்களும் மாறிவிடுகிறார்கள். போலீஸ் உண்மையிலேயே நம்முடைய ராஜ்யத்தையும் கௌரவத்தையும் உயர்த்தக் கூடியதாக இருக்கவேண்டுமானால், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ரிடையர் ஆகிவிட்டார் என்பதற்காக விட்டுவிட்டால் போதாது. இப்படிப்பட்ட விஷயங்களில் தீர விசாரணை செய்தால்தான் போலீஸ் இலாகா சீர்படுத்தவதற்குத் தக்க பரிகாரம் கண்டதாகச் சொல்ல முடியும் என்பதற்காகத்தான் விசாரணைக் கமிட்டி ஏற்படவேண்டுமென்று நான் சொல்லுகின்றேன்.

Sri R. SRINIVASA IYER : On a point of order, Sir.

Sri M. KALYANASUNDARAM : What is the point of order?

Sri R. SRINIVASA IYER : I will say what my point of order is. The construction of houses by the Inspector-General of Police was the subject-matter of discussion. In October and November last when the No-Confidence Motion was being moved out by the hon. Member who was just now on his legs, the Hon. Speaker ruled that if a separate motion was made on this matter, that can be discussed. We had a full discussion about it during the debate on the No-Confidence Motion. Are we to raise it over and over again?

Mr. SPEAKER : On that occasion no decision was taken. Therefore, the hon. Member is entitled to raise it now.



Sri M. JAGANNATHAN : Another point of order, Sir. Rule 92 says in connection with the reading of newspapers, under sub-rule (1) that no Member present at a sitting of the House, shall read any newspaper except in connection with the business of the House.

Sri P. G. KARUTHIRUMAN : That is 'while sitting.'

Mr. SPEAKER : The rule is that no person . . . not speaking . . . That only applies to a person who is not speaking.

Sri M. KALYANASUNDARAM : நான் கேட்கிறதெல்லாம், என்னுடைய கோரிக்கையின் சுருக்கம் : மாஜி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராஜரத்னம் அவர்கள்மீது வந்திருக்கும் எல்லா புகார்களையும் இன்னும் அவர்களோடு சம்பந்தப்பட்ட டி.எஸ்.பி. போன்றவர்கள் மீதுள்ள புகார்கள் அனைத்தையும் சரியான முறையில் விசாரணை செய்யவேண்டும். இரண்டாவது, போலீஸ் நிர்வாக அமைப்பை என்ன என்ன துறையில் மாற்றியமைக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து யோசிப்பதற்கு ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கவேண்டும் என்று கோருகிறேன். அதற்காக இந்த வெட்டுப் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களைக் கேவலப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல; அமைச்சர் அவர்களுடைய கௌரவத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காக "ஸண்டே அப்ஸர்வர்" பத்திரிகை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கோருகிறேன்.

Sri T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மான்யத்தின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே சில அபிப்பிராயங்களை நான் சொல்ல இஷ்டப்படுகிறேன். சற்றேறக்குறைய 11 ஆண்டுகள் ஆகின்றன நமது நாடு சுதந்திரம் அடைந்து என்று நாம் பெருமை பாராட்டுகிறோம். 11-வது ஆண்டிலேயாவது போலீஸ் நிர்வாக முறை ஏதாவது மாறியிருக்கிறதா என்று பார்த்தால், என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரை, "இல்லை" என்று தான் கூற வேண்டும். நிர்வாக முறை மாற்றம் எந்த அளவு இருக்கிறது என்பதை ஒரு பழமொழி மூலமாக சொல்ல இஷ்டப்படுகிறேன். பழைய கள்ளை புதிய மொந்தையில் ஊற்றியது மாதிரி, நிர்வாகம் அன்னிய ஆட்சியில் இருந்து, இன்று அந்த நிர்வாகம் நமது சுய கௌரவமாக நமது அமைச்சர் அவர்கள் மூலமாக இருக்கிறது என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த நடவடிக்கையில் எந்தக் கோணத்தைக்கொண்டு பார்க்கும் போதுகூட போலீஸ் நிர்வாகம் சீர்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக ஒப்புக்கொள்ளக்கூடிய அளவில் இல்லை என்றுதான் நான் கூற முடியும். அதற்குக் காரணம் என்ன என்பதைச் சற்று ஆராய வேண்டியதவசியம். சமீப கால நடவடிக்கையை எடுத்துக்கொண்டால், இன்றுள்ள மந்திரி சபை ஆட்சிக்கு வந்த பிற்பாடு நடந்த இரண்டு மூன்று காரியங்களைக் குறிப்பிட இஷ்டப்படுகிறேன். எங்கள் பிராந்தியத்தில் நடந்த படுகொலைகள், சமீபதத்தில் சென்னை நகரத்தில் நடைபெற்ற விசாரணையைப் பரிசீலனை செய்து பார்த்தால் போலீஸ்சாரை எந்த விதத்திலும் இந்த நாட்டு மக்கள் பாராட்ட முடியாது. போலீசாரைப் பெருமையாக பாராட்டுகிறவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு உதவிசெய்ய இருப்பதாகப் பெருமையாகச் சொல்லுகிறார்களே தவிர, போலீஸ் சம்பந்தமான அதிகாரிகளோ மற்ற அதிகாரிகளோ நமது பிரஜைகளுக்காக இந்த நாட்டு மக்களுக்காக இருக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்ள தயாராய் இல்லை என்பதைத் தான் நிச்சயமாக எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் கேட்கலாம், இம் 10-10 a.m.
மாதிரி ஒரு சில சம்பவங்களை வைத்துக்கொண்டு நிர்வாக முறை பூராவுமே இப்படி இருக்கிறது என்று அபிப்பிராயப்படலாமா என்று கேட்டால் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். எங்கள் பிராந்தியம் சம்பந்தப்பட்டமட்டில் நான் சொல்லிக்கொள்ள முடியும். போலீஸ் என்றால் எங்கள் பிராந்திய

மக்களுக்குக் குலை நடுங்குகிறது. போலீஸ் தொப்பியைக் கண்டாலும், போலீஸ் வானைக் கண்டாலும் இரண்டு காலைத் தூக்கிக் கொண்டு எங்கள் பிராந்திய மக்கள் வேகமாக ஓடுகிறார்கள். அமைதியாக இருந்து பார்க்க முடியவில்லை. நமது மாநில கவர்னர் மேதி அவர்கள் எங்கள் பிராந்தியத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர் அருங்குளம் என்ற ஊருக்கு வந்திருந்தார். அருங்குளம் என்ற ஊரில் அவரிடத்தில் மக்கள் தங்கள் குறைகளைச் சொன்னார்கள். ஒரு அம்மையாரும், வயது முதிர்ந்த பெரியவரும்—தேவர் குலத்து மக்கள் தாம்—நிதி அமைச்சர் கூறியபடி மிகவும் தைரியமான மக்கள்—அவர்கள் பயமின்றி நாங்கள் எங்கள் வீட்டில் இருக்க முடியவில்லை என்று சொன்னார்கள். பக்கத்தில் போலீஸ்காரர்கள் இருந்தார்கள். இவர்கள் இப்படிச் சொல்லக் காரணம் என்ன என்று ஸ்ரீ மேதி அவர்கள் கேட்டார்கள். "நாற்பது வீடுகள் நாங்கள் இருக்கிறோம். நூற்றுக்கு அதிகமான வீடுகள் இன்னொரு சாதியாருடையது. அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கினால், போலீஸ் உதவியினால்தான் நாங்கள் வீட்டில் இருக்கப் பயப்படுகிறோம்" என்றார்கள். இன்றைக்கு போலீஸ் நிர்வாகத்தில் அடிப்படையாக இருக்கக்கூடிய ஊழல் என்னவென்றால் எத்தனை தப்பு பண்ணினாலும் மேலதிகாரிகள் கேட்கமாட்டார்கள் என்கிற தைரியம் தான். நிச்சயமாகச் சொல்ல முடியும். ஹெட் கான்ஸ்டிபிள் தப்பு பண்ணினால் சப்-இன்ஸ்பெக்டர் கேட்கமாட்டேன் என்கிறார். சப்-இன்பெக்டர் தப்பு பண்ணினால் டி.எஸ்.பி. கேட்கமாட்டேன் என்கிறார். என்ன தப்பு பண்ணினாலும் நமக்கு மேலே இருக்கிற அதிகாரி நிச்சயமாகக் கண்டிக்கமாட்டார்கள் என்கிற காரணத்ததினால் என்ன தப்பு வேண்டுமானாலும் பண்ணலாம் என்பதாகப் பண்ணுகிறார்கள். வெள்ளையர் ஆட்சி காலத்தில் கூட கண்ணைக் கட்டி, கையைக் கட்டி நிற்கவைத்துச் சுட்டதில்லை. சாதாரணமாக நிற்க வைத்து அடித்துக் கொன்றிருக்கலாமே தவிர தலைகீழத் தொங்கவிட்டு அடித்துக் கொன்றதில்லை. காங்கிரஸ் ஆட்சியில் இவை எல்லாம் நடக்கின்றன என்பதை கண்டு பாராட்டி மகிழ வேண்டும் என்றால் மகிழ்கிறேன். இன்றைக்கு போலீஸ் ஆட்சியில் நடக்கப்படுகிற கொடுமைகள் கணக்கு வழக்கு இல்லாதன. எத்தனை புகார்கள் அனுப்பபட்டாலும் அவை பரிசீலிக்கப்படுவதில்லை. போலீஸ் நிர்வாகம் சம்பந்தப்பட்டிலும் எந்த விதமான மாறுதலும் செய்யப்படவில்லை. இதற்கு முக்கியமான காரணம் வேண்டியவர்கள், முக்கியஸ்தர்கள் யாவரும் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய காங்கிரஸ் ஆட்சியில் கேவலம் சாதாரண ஒரு மண்டலக் காங்கிரஸ்காரனைக் கண்டால் கூட போலீஸ்காரர் பயப்படுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்கிறேன். எங்கள் தொகுதியில் பெருநாளி போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. காங்கிரஸ்காரன் ஒருவன் ஆசாரி அம்மையார் ஒருத்தியை கற்பழித்துவிட்டான். இதனால் அவமானம் தாங்கமாட்டாமல் அந்த அம்மையார் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்துவிட்டாள். இது பற்றிய தகவல் போலீஸ் அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டது. அங்கே இருக்கக்கூடிய அதிகாரி மிகவும் நேர்மையானவர். உடனே சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டார். மண்டல காங்கிரஸ்காரன் தலையிட்டு அவ்வாறு எடுக்கத் துணிந்தால் அவரே அங்கிருந்து மாற்றப்படுவார் என்பதாக பயமுறுத்தியும் அவர் கேட்கவில்லை. அதன் விளைவு அவர் அந்தப் பிராந்தியத்திற்கு வந்து இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அவர் மாற்றப்பட்டுவிட்டார். அந்த அதிகாரியை மாற்றக்கூடாது, அவர் நேர்மையானவர் என்பதாக அந்தப் பிராந்திய மக்கள் நாநூறு பேர்களுக்குமேல் கையெழுத்திட்டு டி.எஸ்.பி.-க்கு அனுப்பினோம். நேரில் சென்றும் நான் அவரிடம் சொன்னேன். ஒன்றும் பண்ண முடியவில்லை.

கவர்னர் பெருமான் உரையின்மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் அரியதொரு பிரசங்கம் செய்தார்கள். அது ஒரு சிறந்த வேதாந்தப் பிரசங்கம். அவர் கொங்குநாட்டைச் சேர்ந்தவர். கொங்கணமுனிவர் என்ற மகாமுனி வாழ்ந்த நாடு. அந்தப் பரம்பரையில் வந்தவர்தானே இவர் என்பதாக எண்ணிக் கொள்ளும் வகையில் "நாம் எல்லோரும் ஒன்று. இங்குள்ள 205 அங்கத்தினர்களும் நிர்வாகத்தில் பொறுப்புடையவர்கள். ஆளும் கட்சியினருக்கு மட்டும் தான் நிர்வாகத்தில் பொறுப்பு என்பதில்லை" என்பதாகவெல்லாம்





அவர் பேசிய போது நான் சந்தோஷப்பட்டேன். மகிழ்ச்சியுற்றேன். ஆனால் அவர் நடவடிக்கை அப்படியில்லை. தொகுதி சம்பந்தப்பட்டமட்டில் நான் இதைப் பல உதாரணங்கள் மூலம் நிரூபிக்க முடியும். நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தாம். ராமநாதபுரம் கலவரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்தக் கலவரம் நடக்காமலேயே தடுத்திருக்க முடியும். நான் மட்டும் அல்ல. இந்தச் சபையைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பிரமணிய ராஜா அவர்கள், ஸ்ரீ கரியமாணிக்கம் அவர்கள் இது போன்று ஏழு அங்கத்தினர்களுக்குமேல் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து சென்று கலெக்டர் அவர்களைப் பார்த்துச் சொன்னோம். அந்தப் பிராந்தியத்தில் வேண்டுமென்றே ஒரு பெரிய கலவரத்தை உண்டுபண்ணுதவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் நான்கைந்து போலீஸ் அதிகாரிகளை உடனடியாக மாற்றுங்கள். இல்லாவிட்டால் வீணான கலவரம் உண்டாகிவிடும்போலிருக்கிறது என்று எழுத்து மூலமும் கொடுத்தோம் அவர்களை அன்றைய தினம் மாற்றியிருந்தால் இப்படிப்பட்ட கலவரம், இவ்வளவு உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்பட்டிருக்காது. மிக்க பொறுப்புடைய நாங்கள் சொல்வதைக் கேட்டு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க முன்வராதவர்கள் கேவலம் மண்டல காங்கிரஸ்காரன் சொல்கிறான் என்றால் பயந்து உடனே செய்கிறார்கள்.

Sri K. VINAYAKAM : On a point of order, Sir.

Mr. SPEAKER : I do not think he used it in a bad sense.

Sri K. VINAYAKAM : I did not catch the ruling of the Chair. He said there was something below his prestige.

Mr. SPEAKER : As I understood him, unless my friends will correct me, I don't think there is anything wrong. If the intention of the hon. Members is that he had committed wrong, I will ask him to correct it.

Sri T. L. SASIVARNA THEVAR : எதற்காகச் சொல்கிறேன் என்றால் பொறுப்புள்ளவர்கள் சொல்லக்கூடிய விஷயங்கள் கவனிக்கப்படுவதில்லை. நாங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உண்மையில் நாங்கள் எங்கள் பொறுப்பை உணர்ந்து இருக்கிறோம். அவர்களை விட எங்களுக்கு ஜாஸ்தியாக இருக்கிறது. எந்தக் குற்றச்சாட்டையும் நான் என் அளவில் வந்தவுடன் நேரில் பரிசீலனை செய்யாமல் அதிகாரிகளிடத்தில் சொல்வது கிடையாது. டி.எஸ்.பி. அவர்களிடத்தில் நான் சொல்லியிருக்கும்படியான குற்றங்களையோ, கலெக்டரிடத்தில் சொல்லியிருக்கும்படியான குற்றங்களையோ பரிசீலனை செய்தால் தெரியும். ஆதாரம் இல்லாமல் நான் சொல்லவில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். சமீபத்தில் கூட ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி எனக்குக் கொடுத்த சர்டிபிகேட் "மிஸ்டர் சசிவர்ண தேவர் நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளில் பூர்ணமாக ஆதாரம் இருக்கிறது. தவறு ஒன்றும் இருப்பதில்லை" என்பதுதான். வேண்டுமானால் நான் முன்பு சொன்ன விஷயத்தையும் பரிசீலனை செய்து பார்க்கட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அன்றாட நிர்வாகத்தில் காங்கிரஸ்காரர்கள் தலையிடுகிறார்கள். இல்லாவிட்டால் அந்த இன்ஸ்பெக்டர் ஏன் மாற்றப்படுகிறார்? அவர் பேரில் ஏதாவது லஞ்ச ஊழல் இருக்கிறதா? வேறு ஏதாவது புகார்கள் உண்டா? ஐந்து வருஷம், ஆறு வருஷமாக அங்கேயே இருந்துகொண்டிருக்கும்படியான அதிகாரிகள் எவ்வளவு பேர் இன்னமும் அங்கேயே இருக்கிறார்கள்? ஆளும் கட்சியினர்களுக்கு ஒரு வகையில் அவர்கள் வேண்டியவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன். அமைச்சர் அவையில் இருந்து போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு ரகசியத் தாக்கீது போய் இருக்கலாம். இல்லாவிட்டால் அவர்கள் ஏன் காங்கிரஸ்காரர்களைக் கண்டாலேயே பயப்படுகிறார்கள். இன்றைக்கு மண்டலக் காங்கிரஸ்காரன் நினைத்தால் கவர்னர் மேதி அவர்களையே இந்த மாநிலத்தைவிட்டு மாற்றிவிட முடியுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

[18th March 1958

SRI N. MAHALINGAM : On a point of order.

MR. SPEAKER : That is not correct. An ordinary Member has no power to change a Governor.

SRI N. MAHALINGAM : It is an insinuation.

MR. SPEAKER : It is not an insinuation.

SRI S. LAZAR : On a point of order, Sir. Rule 66 says, " A Member who is speaking must not use the Governor's or the President's name for the purpose of influencing a debate ". The hon. Member, Sri Sasivarna Thevar used the name of the Governor for influencing the debate. Therefore I would like to invite the Speaker's ruling on this matter.

MR. SPEAKER : I do not understand how the Governor's name in this context has been used to influence the debate. It has been used only to give as an example. I do not think there is anything wrong.

SRI T. L. SASIVARNA THEVAR : ஒரு ஐந்து நிமிடங்கள் கூட வேண்டும்.

MR. SPEAKER : ஒரு நிமிடத்தில் முடித்து விடவேண்டும்.

10-20 a.m. SRI T. L. SASIVARNA THEVAR : ஆகவே, போலீஸ் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், போலீஸ் இலாகாவிற்கு ஒரு ஒற்ற இலாகா போடலாம். ஜில்லா வாரியாக ஒற்றர்களைப் போட்டு இந்தப் போலீஸ்காரர்களை கண்காணித்து அவர்களை என்னென்ன அக்கிரமங்கள் செய்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு தண்டனை விதித்தால் இந்த லஞ்ச ஊழல்கள் போன்ற ஊழல்கள் ஒரு சிறிதளவாவது குறையும் என்று அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்ல நான் விரும்புகிறேன். அடுத்தபடியாக, மதுவிலக்கு சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்கள் நூற்றுக்கு நூறு பேர் லஞ்சம் வாங்குகிறார்கள். இந்த மதுவிலக்கு போலீஸ்காரர்களும், கள்ளக் காய்ச்சல் காரர்களும் சேர்ந்துகொண்டு இந்த கள்ளக் காய்ச்சல் வியாபாரத்தை நடத்திவருகிறார்கள். ஐந்து ரூபாய்க்கு சரக்கு வாங்கி கள்ளச் சாராயம் செய்து 80 ரூபாய்க்கு விற்கிறார்கள். 75 ரூபாய் லாபம் கிடைக்கிறது. கேஸ்கள் போடுவதில்லையா என்று கேட்கலாம். கேஸ்கள் போடுவது மாமூல்படி கேஸ்கள் போடுகிறார்கள். போலீஸ்காரர்களே சொல்கிறார்கள், அடுத்த வாரம் கேஸ் வருகிறது என்று. அதிலும், இரண்டு மூன்று வாரம் ஜெயிலுக்கு போய் வர அவர்கள் ஆட்களை வாடகைக்கு அமர்த்துகிறார்கள். மாதம் இவ்வளவு ரூபாய் என்று தருகிறேன், ஜெயிலுக்குப் போய் வா என்று சொல்கிறார்கள், அவர்களும் ரூபாய் கிடைக்கிறதே என்று ஜெயிலுக்குப் போகிறார்கள். வேண்டுமானால் இதை நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஏற்கனவே குடித்து வந்தவர்களில் 80 சத விகிதம் இப்பொழுது குடிக்காமல் இருக்கிறார்கள் என்று. எந்த புள்ளிவிவரத்தை வைத்துக்கொண்டு அதைச் சொன்னார்களோ, எனக்குத் தெரியாது. எங்கள் ஊரில் முன்பு 200 பேர்கள் குடித்து வந்தார்கள் என்றால் இப்பொழுது 500 பேர்கள் குடிக்கிறார்கள். இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பது இப்பொழுது ஒரு குடிசைத் தொழிலாகிவிட்டது. இது நிரந்தரமாகவே இருக்கிறது. இந்த மதுவிலக்குச் சட்டம் பரிபூர்ண தோல்விதான் அடைந்திருக்கிறது.

(இச்சமயத்தில் அடுத்த அங்கத்தினர் பேசுமாறு அழைக்கப்பட்டார்.)



18th March 1958]

SRI N. MAHALINGAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த போலீஸ் மான்யத்தை ஆதரிக்கும் முறையிலே நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உலகத்தில் எந்த நாட்டையோ அல்லது எந்த ராஜ்யத்தையோ எடுத்துக்கொண்டாலும் போலீஸ் இலாகா இல்லாமல் எந்த ராஜ்யத்தையும் நடத்த முடியாது. போலீஸ் இலாகாவின் அவசியம், மக்கள் மத்தியிலே, குற்ற மனப்பான்மையுள்ளவர்கள், தவறு செய்யக் கூடியவர்கள் இருக்கும் வரையில் போலீஸ் இலாகாவின் அவசியத்தை யாரும் கேள்விகேட்க முடியாது. ஆக, போலீஸ் இலாகா நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் வேலை செய்கிறது என்பது எதிர்கட்சியினர்கள் கேட்கும்போதே நிச்சயமாக தெரிகிறது. போலீஸ் இலாகாவானது தங்கள் கடமையை சரியான முறையில் செய்யும்போது, அக்கடமைகளை சரியாகச் செய்யவில்லை என்று சொல்வதற்கு ஒரு சாரார் இருக்கவே இருப்பார்கள். இன்றைய தினம், கூட்டங்கள், சங்கங்கள் இவைகளெல்லாம் ஜனநாயக காலத்தில் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஒரு குழுவைச் சம்மந்தப்பட்டவரோ அல்லது ஒரு கூட்டத்தை சம்மந்தப்பட்டவரோ அல்லது தனிப்பட்ட முறையில் க்ரிமினல் குற்றம் செய்பவரையோ போலீஸ் கூப்பிட்டு விசாரணை செய்தால், உடனே எதிர்கட்சிக்காரர்கள் எங்கள் அடிப்படை உரிமை பறி போய் விட்டது என்றும், நாங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதற்காக எங்களைக் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள் என்றும், நாங்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லாததால் எங்களை போலீஸ் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள் என்று குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் எதற்கெடுத்தாலும் போலீஸ் இலாகாவையும், ஆளும் கட்சியைப்பற்றியும் குற்றம் சொல்லவேண்டுமென்ற எதிர் கட்சியினரின் ஏகோபித்த ஒரு முடிவே தவிர உண்மையில் போலீஸ் இலாகா மீது குற்றம் இருக்கிறதா இல்லையா என்பதுதான் இப்பொழுது விவாதத்திற்குரிய விஷயம். போலீஸ் இலாகா மீது குற்றம் சொல்வது என்பது சர்க்கார் மீது குறை சொல்லவேண்டுமென்ற ஒரே காரணத்திற்க்காக குற்றங்கள் சொல்கிறார்களே தவிர உண்மையிலேயே அவர்கள் போலீஸ் இலாகாவின் வேலைகள் பற்றி சரியான முறையில் விமர்சனம் செய்கிறார்கள் என்று என்றால் ஒத்துக்கொள்ள முடியாது. அகிலஇந்தியாவில் உள்ள இதர மாகாணங்களோடு நம் மாகாணத்தை ஒப்பிட்டு பார்த்தால் நம் மாகாணத்தில் போலீஸ் இலாகாவானது மிகவும் சிறந்த முறையில் வேலைசெய்து வருகிறது என்பதை யாரும் ஒத்துக் கொள்வார்கள். நம் மாகாணத்தில் சென்ற காலம் போலீஸ் இலாகா தலைவராக இருந்தவரைப் பற்றி கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது பல குற்றச்சாட்டுகள் சொன்னார்கள். அவர் சென்ற இரண்டு ஆண்டு காலமாக நம் மாகாணத்தின் போலீஸ் இலாகா தலைவராக இருந்துவந்தார். தேர்தலுக்கு முன்னாலும் அவர்தான் இருந்துவந்தார். அந்தக் காலத்திலும் கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த சபையில் அங்கத்தினராகத்தான் இருந்தார். அப்பொழுது எல்லாம் கல்யாணசுந்தரம் அவர்களுக்கு இந்த அதிகாரியின்பேரில் உள்ள குற்றங்கள் தெரியவில்லை போலும். அப்போது அவர் (ஸ்ரீ கல்யாணசுந்தரம்) கலர் கண்ணாடி போட்டுக்கொண்டு இருந்தார்களோ—இப்பொழுது அந்த கலர் கண்ணாடியை நீக்கிவிட்டு அந்த அதிகாரியின் நடத்தையை பரிசோதனை செய்ய முன் வந்தார்கள் என்பதை அறிய எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதோடு இந்தச்சபையில் ஒரு கனம் அங்கத்தினர் பொதுவாக குற்றம் சாட்டினார்கள். அதாவது, அன்பழகன் அவர்கள் இந்த சபையில் போலீஸ் அதிகாரி ஒருவர்மேல் குற்றம் சாட்டியபோது, இன்ன அதிகாரி என்னகுற்றம் செய்தார் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால் ஒரு உயர்த்தர போலீஸ் அதிகாரி குற்றம் செய்துவிட்டார், தவறு செய்து விட்டார், வீடுகள் கட்டி விட்டார் என்று இதுபோன்று பேசினார்களே தவிர சரியான முறையில் அவர் பேரில் குற்றம்சாட்டி இந்த சபையில் சொல்லப்படவில்லை. ஆனால் நம் போலீஸ் அமைச்சர் அவர்கள் தன் இலாகா சரியான முறையில் நன்கு நடக்க வேண்டுமென்று நினைத்து அது சம்மந்தமாக ஒரு விசாரணை செய்ய முன்வந்தார்கள். அந்தக் குற்றச்சாட்டு ஐ. ஜி.யைப் பற்றியதாகும். அது சம்மந்தமாக விசாரணை செய்யப்பட்டது. அப்படி விசாரணை செய்யப்பட்ட நேரத்தில் கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் வந்து

கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டும்கூட அவர் வந்து கலந்து
கொள்ளவில்லை என்பதுதான் நமக்கு தெரியவருகிறது. அப்படி அவர்
ஏன் விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்பதைப் பற்றிய அவரது
எண்ணங்கள் அவரது சிந்தனைகள் அதெல்லாம் நமக்குத் தெரியாது.
ஆனால் அந்த விசாரணையில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது
நமக்கு தெரிய வந்திருக்கிறது. இன்னின்ன குற்றங்கள் செய்தார் அவர்
என்று பெயரிட்டு குற்றங்களை அவரால் சொல்ல முடியவில்லை. விசாரணை
நடந்தபோது கூட அவர் வந்து சாட்சியம் சொல்லவில்லை என்று சொன்னால்
இத்தகைய குற்றச்சாட்டுகளைக் குறித்து நாம் என்ன எண்ண முடியும்?
ஆகவே அதைப் பற்றி நான் அதிகமாக சொல்ல நினைக்கவில்லை. ஆகவே,
ஒரு அதிகாரியின் மேல் குற்றம் சாட்டும்போது அதை சரியான சாட்சியங்க
ளுடன் நிரூபிக்கத் தயாராயிருக்க வேண்டும். அப்படியில்லாமல் எந்த
அதிகாரியைப் பற்றியும் குற்றம் சொல்லலாம், எந்த அதிகாரியைப் பற்றி
யும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், இந்த சபையில் நாம் எதைச்
சொன்னாலும், யாரைப் பற்றிச் சொன்னாலும் நம் மீது நடவடிக்கை
எடுக்கமுடியாது என்பதற்காக நாம் எது வேண்டுமானாலும் யாரைப்
பற்றி வேண்டுமானாலும் நம் இஷ்டம்போல் சொல்லலாம் என்று நினைத்
தால் அது நியாயமில்லை என்று மட்டும்தான் நான் இப்பொழுது சொல்ல
நினைக்கிறேன். குற்றம் செய்கிறவர்களை போலீஸ் இலாகா பிடிக்கவேண்டும்,
அவர்களைத் தண்டிக்கவேண்டும். விசாரணை செய்யும்போது போலீஸ்
காரர்கள் பலாத்காரம் உபயோகிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான்
சொல்கிறேன், உலகத்தில் எந்த நாட்டிலாவது குறைந்தளவு பலாத்காரம்
இல்லாமல் விசாரணை செய்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக நம்
மாகாணத்திலும் போலீஸ் இலாகா அதேமாதிரிச் செய்யவேண்டும் என்று
நம் அமைச்சர் அவர்கள் போலீஸ் இலாகாவிற்கு உத்தரவிடத்தயார்.
உலகத்தில் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், மிகவும் முற்போக்காக
இருக்கக்கூடிய அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும் அல்லது ரஷ்ய
நாட்டை எடுத்துக்கொண்டாலும் போலீஸ் இலாகாவானது குறைந்தளவு
பலாத்காரம் உபயோகிக்காமல் விசாரணை செய்வது கிடையாது. ஆனால்
அங்கு, ஸயன்டிபிக் முறையில், பலாத்காரம் செய்வது வெளியே தெரியாத
விதத்தில், விசாரணை செய்யும்போது பலாத்காரம் உபயோகிக்கிறார்கள்.
ரஷ்யாவில் பல நாட்கள் ஒருவரைத் தூங்குவதற்கு விடாமல் விசாரணை
செய்கிறார்கள். இம்மாதிரி விசாரணை செய்யும்போது சிலருக்கு இன்ஜக்
ஷன்ஸ் போடப்படுகிறது. போலீஸ்காரர்கள் என்னவெல்லாம் சொல்கிறார்
களோ அவைகளையெல்லாம் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். விசாரணை
கள் பலவற்றில், அரசியல் துறையில் உள்ளவர்களை விசாரிக்கும்போது
அவர்கள் இவ்வளவு நாட்களெல்லாம் நாங்கள் செய்ததெல்லாம் தவறு
என்று பெரிய பெரிய புரட்சிகளுக்கெல்லாம் காரணஸ்தர்களாக இருந்த
வர்கள் சொல்கிறார்கள். ஆரம்பத்தில் இருந்தே நான் வெளி நாடுகளில்
10-30 a.m. ஏஜண்டாக இந்த தேசத்தின் விரோதியாக இருந்தேன் என்றும் சாட்சியம்
சொல்கிறார்கள். அதைப் பார்த்தால் நம்ப முடியாது, போலீஸ் இலாகா
பலாத்காரத்தை உபயோகித்தே அம்மாதிரி சாட்சியங்கள் சொல்லப்படு
கிறது. இதையெல்லாம் படித்திருக்கிறோம். இம்மாதிரியாக உலகத்தில்
எந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும் போலீஸ் இலாகாவில் விசாரணை
செய்யும்போது குறைந்த பட்ச பலாத்காரம் உபயோகபடுத்துகிறார்கள். நம்
நாட்டிலே செய்வது போல தடி கொண்டு அடிப்பதாக இருக்கலாம், அல்லது
ஸைகாலாஜிகல் முறையிலே—அவர்களுக்குப் பல தொந்தரவுகள் கொடுக்கக்
கூடிய முறையிலே—உபயோகிக்கிறார்கள். போலீஸ் இலாகாவில் குற்ற
வாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக தொந்தரவு கொடுக்காமல் இருந்தால்
திருடியவனும் திருடவில்லை என்றுதான் சொல்வான். போலீஸ் இலாகா
வின் முக்கிய கடமையானது மக்களில் நூற்றுக்கு 95 பேர்களில் அடிப்படை
உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதுதான். அதற்காகத்தான்
போலீஸ் இலாகா இருக்கிறது. ஒரு சிலருடைய உரிமைகள்—குற்றம் செய்
பவர்களுடைய உரிமைகள்—பறி போகிறது என்று கனம் அங்கத்தினர்கள்
சொன்னால், அதனால் குற்றம் புரிபவர்களின் உரிமை பறி போகக்கூடாது,
மற்றவர்களின் உரிமை பறி போனாலும் பரவாயில்லை என்று கூறுவது
போல் இருக்கிறது. இன்றைக்கு குற்றங்களைக் கண்டுபிடிக்க விசாரணை
அவசியம். குற்றத்தை நிரூபிப்பதற்கு சாட்சியம் கொடுக்கவேண்டும்.



பிரான்ஸ் தேசத்தைப் போல நம் தேசத்தில் இருந்தால் இந்தக் கஷ்டங்களுக்கு அவசியம் கிடையாது. பிரான்ஸிலே ஒருவரைக் குற்றவாளியென்று குற்றம் சாட்டி, கோர்ட்டிலே கொண்டு போய் நிறுத்தி விட்டால், அவர் குற்றவாளி அல்ல என்று நிரூபிப்பது அந்த தனிப்பட்ட நபருடைய பொறுப்பு. அப்படி ஏற்படுத்தி விட்டால் இன்று நம் நாட்டிலே போலீசார் குற்றவாளிகளை அடிக்க வேண்டியதில்லை, விசாரிக்க வேண்டியதில்லை, தொந்திரவு கொடுக்க வேண்டியதில்லை. அதிகாரிகளுக்கு யார் குற்றவாளி என்று மனதில் படுகிறதோ, அவர் மீது குற்றம் சாட்டி விட்டால், அவர் குற்றவாளியல்ல என்று நிரூபிப்பதற்காக சாட்சியம் தயார் செய்து கொள்வது அவருடைய கடமையாக ஆகிவிடும்—அதாவது சட்டத்தை மாறுதல் செய்தால் பிரான்சில் உள்ளது போல. பிரான்ஸில் உள்ளது போல மாற்றியிருந்தால் அவர்களுக்குக் கவலையில்லை. போலீஸ் விசாரணை செய்ய வேண்டும், சாட்சியம் தயாரிக்க வேண்டும், அதற்காக அடிக்கவேண்டும், பலவந்த படுத்த வேண்டும் என்ற அவசியம் இருக்காது. அம்மாதிரியான சட்டத்திற்கு நாம் தயாராக இருக்கிறோமா? இல்லை. இப்போது இருக்கக்கூடிய சட்டங்களின்படி, போலீஸ் இலாகா பரிபூரணமாக குற்றங்களை நிரூபித்தாக வேண்டும். கோர்ட்டுகளிலேயே இன்றைய தினம் நாம் பார்க்கிறோம். பல கொலை கேஸ்கள்—நிச்சயமாகத் தெரிகிறது கொலைச் செய்தவர்கள் என்று—கீழ் கோர்ட்டிலே தண்டனை கொடுத்து விடுகிறார்கள். அதற்கு மேல் ஹைகோர்ட்டில் அப்பீலில் விடுதலை ஆகி விடுகிறது. இதுபோல பல கேஸ்களைப் பார்க்கிறோம், நன்றாக கொலை செய்வதர்கள் என்று தெரிகிறது, ஆனாலும் விடுதலை செய்து விடுகிறார்கள். ஏனென்றால், கீழ் கோர்ட்டில் சாட்சியம் சொன்னதற்கும், செஷன்ஸ் கோர்ட்டில் சாட்சியம் சொன்னதற்கும் வித்தியாசம் இருக்கிறது, போலீஸ் 164 ஸ்டேட்மெண்டுக்குப் பிறகு கோர்ட்டில் கொடுக்கும் ஸ்டேட்மெண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்லி கீழ்கோர்ட்டில் தண்டனை கொடுத்திருந்தாலும் விடுதலை அடைந்து விடுகிறார்கள். அப்படி குற்றவாளிகள் விடுதலை அடைந்தால் என்ன ஆகிறது? பொது மக்கள் மத்தியில் அமைதிக்கு பாதகம் ஏற்படுகிறது. ஒரு சிலருடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் கவலை கொள்ளக்கூடியவர்கள், சமூகத்தின் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் மக்கள் பிரதிநிதிகள் சிந்திக்க கடமை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் சசிவர்ணத் தேவர், இதற்கு முன்னால் பேசும்போது குறிப்பிட்டார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் இவர்கள் ஆதரவு இருக்கிறது என்று பொதுப்படையாகக் குறிப்பிட்டார்கள். பொதுப்படையாகச் சொல்லாமல், இந்த அதிகாரி செய்கிறார் என்று அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு எழுதினால் நிச்சயமாக சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள். பொதுவாக, போலீஸ் இலாகா பேரில், இவ்வாறு பங்கு கேட்கிறார்கள், தவறு செய்கிறார்கள், என்று சொல்வது பொறுப்பை உணர்ந்து சொல்லவில்லை என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இன்னும், போலீஸ் இலாகாவிலே பல சிரமங்களுக்கிடையே—வசதிக் குறைவுடன்—வேலை செய்கிறார்கள். தற்காலத்தில் பல வசதிகள் இருக்கின்றன. திருடர்கள், கொலை செய்பவர்கள், தவறு செய்பவர்கள், இவர்களுக்குப் பல வசதிகள் இருக்கின்றன. ஒருவன் சென்னையில் ஒரு குற்றம் செய்தால் உடனே ரயிலில் ஏறியோ, அல்லது கார் வைத்துக் கொண்டோ திருநெல்வேலிக்குச் சென்று விடுகிறான். இல்லையென்றால் விமானத்தில் ஏறி சிலோன் சென்று விடுகிறான். போலீஸ் இலாகா அந்தக் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், நடவடிக்கை எடுப்பதற்காகப் பிடிக்கவேண்டுமென்றால் அவ்வளவு சுலபமாக முடிவதில்லை. டி.எஸ்.பி.க்கு "வேன்" கொடுக்கப்பட்டது என்றால், கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் "வேன்" எதற்காகக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். டி.எஸ்.பி.க்கு "வேன்" அவசியமில்லை என்றால் அவர் என்ன எண்ணுகிறார் என்று தெரியவில்லை. குற்றவாளிகள் இந்த விதமாக நவீன சாதனங்களை உபயோகித்துக்கொண்டு குற்றம் செய்ய வசதி இருக்கும்போது போலீசாருக்கும் சிறந்த வசதி கொடுத்தால் தான் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கமுடியும். அமைச்சரவையின் கவனத்திற்கு ஒன்று சொல்ல விரும்பு

[Sri N. Mahalingam] [18th March 1958

கிறேன். இப்போது அநேக இடங்களில் புதிதாக போலீஸ் ஸ்டேஷன்கள் ஆரம்பிப்பதாக இருக்கிறது. அதற்கு பதிலாக, போலீஸ் ஸ்டேஷன்கள் குறைவாக வைத்துக் கொண்டு, போலீஸ் அதிகாரிகளுக்கு வசதிகளை அதிகமாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப், ஒவ்வொரு ஸப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு மோட்டார் ஸைக்கிள், ஒவ்வொரு ஹெட் கான்ஸ்டபிளுக்கும் ஒரு ஸைக்கிள் கொடுக்கப்படவேண்டும். அம்மாதிரி கொடுத்தால் தான் ஒவ்வொருவரும் சுற்றுப் பிரயாணம் செய்து குற்றவாளிகளைச் சரியான முறையில் கண்டுபிடிக்க முடியும், அவர்களைத் தண்டனைக்குக் கொண்டுவர முடியும். போலீஸ் ஸ்டேஷன்களைக் குறைக்கலாம், கொஞ்சம் அதிகாரிகளைக் கூட குறைக்கலாம், ஆனால் அவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் அவசியம் கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன்.

1945-ம் வருஷத்திலே அட்வைசர் ஆட்சி நடந்த போது, போலீஸ் இலாகா சரிவர நடக்கவேண்டி, ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு ஜீப்பும், ஸப்-இன்ஸ்பெக்டருக்கு மோட்டார் ஸைக்கிளும், ஹெட் கான்ஸ்டபிளுக்கு ஸைக்கிளும் கொடுக்கவேண்டுமென்ற யோசனை இருந்தது. இது சம்பந்தமாக சர்க்காரில் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை. கூடிய சீக்கிரம் அம்மாதிரி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். போலீஸ் இலாகா மேலும் சிறந்த முறையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான வசதிகள் வேண்டும். வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் நல்ல முறையில் நடக்க முடியும். நம்முடைய மாகாணத்தில் போலீஸ் இலாகா நல்ல முறையில் வேலை செய்து வருகிறது. இன்னும் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்றால், இப்போது அநேக இடங்களில் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வீடுகள் இல்லை. போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு வீடுகள் இல்லை, அதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களை நீக்க வேண்டும். அப்போதுதான் போலீஸ் இலாகா நல்ல முறையில் வேலை செய்ய முடியும். மீண்டும் அவர்களுக்கு இந்த வசதிகளெல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஆன எ பாயிண்ட் ஆப் ஆர்டர், கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது டி. எஸ். பி. க்களுக்கு கார் கொடுக்கக்கூடாது என்று அப்போது சொன்னார். ஏற்கனவே ஜீப்களும், போலீஸ் வேன்களும் இருக்கும்போது, இவ்வளவு வசதி இருக்கும் போது. . .

DEPUTY SPEAKER : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பதில் சொல்வார்கள். அவர் இருந்திருந்தால் அது பாயிண்டு ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் ஆகுமே தவிர, இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல.

* SRI R. SRINIVASA IYER : Sir, while supporting the
3-30 a.m. Demand under 'Police', I desire to say a few words. No State can get on without the Police force. When we have recognized rights in property and when rights in property are invaded in whatever manner they be, we have got to have an efficient police. While criticising their action, we must consider the members of the society they have to deal with. Sometimes they have to deal with undesirables, thieves and those who break the law. The atmosphere that has now been created by political agitation is that whenever a man is sought to be apprehended, he says, "Mind you. I will report in the Press". We can know what is happening to-day in a recent enquiry about what has happened in the City. Of course, I do not deny that everyone has got a right to say that something wrong has happened. But at the same time all parties, the public and the community, must create an impression, an atmosphere that the police force is there for their benefit, for the



18th March 1958] [Sri R. Srinivasa Iyer]

security of peace and order, for maintaining law and order. But when people incite offence, incendiarism, rioting and what not, the police have got to take very severe action. We have got also to consider, in criticising their action, the quickness with which they have got to deal with a particular situation. Members of this House and the public would have been aware of several cases where they used peaceful means of advising a mob to go away.

Failing that they used the lathi. Failing that, they used the tear-gas. Failing all these, they have got to resort to shooting. From the innumerable cut-motions given notice of for this Demand, I find that lathi charges, shooting and all those things have been mentioned as grounds and reasons. These officers are to decide what they should do under the circumstances in which they are placed. They are not gentlemen lounging on easy chairs. They are the men on the spot and it is for them to decide the course of action. They have to take very quick decisions and they do it. It may not be out of place for me to mention that I was myself present in certain places when lathi charge was made and tear-gas was used. There were stone-throwing incidents and the Police wanted them to disperse and give up throwing stones at the crowd. All these were witnessed by me. What could an officer do under such circumstances except to open tear-gas? If in the muddle and in the process of the people dispersing, one or two persons get trampled or perhaps die of heart failure, immediately comes the charge that the Police have murdered them.

Sir, charges of corruption were made during the debate, against officers of the Police Department. One hon. Member referred to the Tamil proverb "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்". That is not correct. If one member of a particular community committed a mistake or offence, can we say that all the members of that community committed that offence? If there was corruption as was mentioned, I ask which particular member of this House or the public filed a regular complaint about it and demanded an enquiry under the Public Servants Enquiry Act. We have got legislation about it. Has anybody filed a complaint like that? Sir, the hon. Gentleman who initiated the discussion on this Demand said a lot about the reports against the retired Inspector-General of Police. I know the facts. There was an enquiry, as a result of a passing reference made during the budget discussion last year, which was ordered by the Home Minister. The person who made the charge was aware of the enquiry. Immediately the report on the enquiry was published, he rushed to the Press and published photographs of certain buildings, and also complaints to the effect that the enquiry was not properly conducted and his charges were not properly enquired into. The matter was not brought before the House. It was not discussed and no decision was taken as ruled by the Hon. Speaker. What is the subsequent step taken by the hon. Member who published photographs? Was he prepared to give evidence in the matter? No. Now, five months have passed. Surely, we cannot make charges on hearsay. They must be supported by facts and evidence. If we want to take action and convict an officer or even if you want to take disciplinary

action against the officer of the status of the Inspector-General of Police, there must be facts, there must be evidence. Now that the matter is over and has been shelved, it would not be proper to discuss that matter in the course of the discussion on the Police Demand.

Sir, much has been said about corruption in the Prohibition Department. From 1948 or so, the enforcement of the Prohibition law has been handed over to the Police. I do not deny that there are certain officers who have not been enforcing the provisions adequately and properly. But, is it not the duty of the public and the community of a particular place to point out such offenders? Those who complain about the Police being hand in hand with those engaged in the manufacture of illicit arrack and other things, must come forward to bring such instances to the notice of the higher authorities and must also be prepared to give evidence in such matters. Have they done it? There is no use of levelling a general charge against every officer of the Police Department. There are culprits in every department and action is being taken against them in proper cases if there is sufficient evidence. Simply because the Prohibition law has not been working well for several reasons, we cannot accuse the Police force as such. At the same time, I wish to say that if the public co-operate with the Police by pointing out the offences against the Prohibition law, certainly more action will be taken and we will succeed in that policy which we have adumbrated for the benefit of the poor. I do not for a moment say that every thing is efficient so far as the enforcement of the Prohibition law is concerned. As soon as the Hon. Minister for Home took charge of this portfolio last year, we all know what action he has taken in putting down these offences in the City. He has extended it to the neighbourhood and to some other places in the districts also. He can only expect the head of the Police Department in every district to see to it that their subordinates put down these offences against the Prohibition law with an iron hand. Sir, when the Prohibition (Amendment) Bill came up before the House recently for discussion, I appealed to the Police forces that they should not give room for this stigma against them in future.

So far as their position is concerned, it is said that they are low-paid and their conditions of service are very poor. That they are low-paid cannot be gainsaid. That such low-pay is also an inducement for corruption cannot also be denied. But, at the same time, we also find that the Government are taking steps to improve their lot and to provide for them all possible amenities. In the present budget, a sum of Rs. 24 lakhs has been set apart for constructing quarters for policemen. Only a few days ago, the Hon. Home Minister opened a Police Line in Coimbatore. I know that a Police Line has also been constructed in Shiyali for the policemen. A sum of Rs. 3 lakhs has been set apart for electric lights, water-supply, flush-outs, etc., for the Police quarters. A sum of Rs. 1 lakh has been set apart for improvements



to old Recruiting School building at Tiruchirappalli and a sum of Rs. 2 lakhs has been provided for electric lights, flush-outs, etc., for other quarters. There is also increased provision for uniforms being given once in three years instead of once in five years. Thus, the Government are taking steps for the purpose of ameliorating the condition of the policemen and it is but proper that their salary also should be such that they will discharge their duties efficiently and well.

We can be proud to say that on the whole, the Police forces in this State are behaving very well and keeping law and order in every way possible. The request of the hon. Member who opened the debate to-day, to appoint a Committee to enquire into the administration of the Police Department is not fair. If anybody has got complaints against one or two officers, they could be brought to the notice of the Government. Now, instances were quoted about particular individuals which I personally feel is not proper in a debate of the kind that we are having now. On that account, we cannot say that the entire Police force is inefficient or corrupt. In this connexion, mention was made about one Mr. Venkataraman. There may be one or two such individual cases. These could be brought to the notice of the Hon. Home Minister. Those who bring forward such cases of charges, must be prepared to give evidence also. Vague statements about individuals and a general characterisation that the entire Police force as inefficient and corrupt and all those things cannot hold water in an Assembly of this nature. Therefore, to appoint a Committee to enquire into the entire Police force, simply because one or two persons are alleged to have committed certain mistakes, is not proper.

Sir, to maintain law and order efficiently and maintain peace in the State, the co-operation of all parties is needed. In this connection, I am constrained to say that certain persons induce offences against property. Complaints were made that the Police force was taken for the purpose of helping the removal of paddy from the threshing floor. The Police force was taken under the orders of the High Court. A request was made before the High Court for the help of Police as certain persons prevented the removal of paddy from the threshing floor. Rightly or wrongly, the order of the High Court is there and the Police is bound to keep order. Sir, you must take the history of what happened into consideration. There was no record to show that a particular person was cultivating the land. That man tried to enter the land by force and create evidence that he was in actual possession of the land. What was the landowner to do in those circumstances? I am not pleading on behalf of the landowners only. Take the case of the cultivating tenant, or the lessee or the sub-tenant. He had to take the help of the Police to do his work, and to maintain his rights in property. So long as we have got rights in property, we must maintain them and it is only the Police that can help us in the process. No one can take advantage of that

situation. Of course, one political party says that it is there to safeguard the rights of the so-called cultivators or tenants or labourers. That is not correct. All parties should join together and create an atmosphere of peace. Then alone, we can expect efficient administration in the Police or in any other Department for that matter.

DEPUTY SPEAKER: The hon. Member has taken more time.

SRI R. SRINIVASA IYER: I will finish in a minute. There is another charge that the Police do not take immediate action when a complaint is lodged. When a complaint is made, the Police have to verify whether the facts stated in the complaint are correct or not. If they are correct, they do take action. What really happens is, when they arrest a person and on investigation find him innocent and let him off, he goes about saying, 'I have been unnecessarily put in the lock-up and harassed'. Investigation necessarily takes some time and we cannot say that the Police have exceeded their powers either in arresting or accosting or interrogating a person. We know the methods they follow—they are not cruel—and unless they are followed crime cannot be put down. Unless we, the public at large co-operate with the Police who are there for the benefit of mankind, they cannot efficiently perform their functions and continue the excellent work they are doing now to the satisfaction of all.

*DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தின் மீது பேசுகின்ற நான், அவர்கள் மீது குறை சொல்லும்போது, "அவர்கள் திறமையான வேலையன்றோ செய்கிறார்கள், அதனைப் பாராட்டாமல் தூஷிக்கிறீர்களே" என்ற முறையில் ஆளும் கட்சியினர் சொல்லலாம். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் "எதிர்கட்சியிலுள்ளவர்கள் பொதுவாக குற்றத்தைச் சாட்டுகிறார்களே தவிர, அதனை ஆதாரத்தோடு சொல்ல முடியுமா" என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் சொல்லஇருக்கிற குற்றச்சாட்டுகளையும், போலீஸ் இலாகாவிலே நடக்கின்ற ஊழல்களையும் ஆதாரத்தோடுதான் சொல்லுகிறேனே தவிர, ஆதாரம் அற்றவையாகச் சொல்லவில்லை. நேற்று பேசிய நிதி அமைச்சர் அவர்கள் "நீங்கள் எல்லோரும் கருப்புக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்த்தால், எல்லாம் கருப்பாகத்தான் தெரியும்" என்று சொன்னார்கள். நான் நினைக்கிறேன், இங்கே இருக்கின்ற எட்டு அமைச்சர்களும் பூதக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்க்கிறார்களோ என்று. பூதக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால்தான் அவர்கள் செய்யும் காரியங்கள் எல்லாம் பெரிதாகத் தெரியும். கருப்புக் கண்ணாடியாய் இருந்தால் என்ன, பூதக் கண்ணாடியாய் இருந்தால் என்ன? நன்மை தீமைகளைப் பூதக் கண்ணாடியால் பார்த்து. தீமைகளைக் களைந்தால்தான் நடப்பது நல்ல ஆட்சியாக இருக்கும். அதைத்தான் நாங்களும் சொல்கிறோம்.

போலீஸ் லாக்கப்பிலே பெண்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிற பெண்களுக்கு அங்கே பாதுகாப்பு இல்லாவிட்டால் அவர்களது நிலைமை எப்படியிருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நீங்கள் புரிந்துகொள்ளலாம். திராவிட முன்னேற்ற கழகத்தினருக்கு என்று, அவர்கள் மீது குற்றம் சாட்டி அந்தக் குற்றங்களை நிரூபிப்பதற்காக தனி ஒரு இலாகா இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது சரியாக இருந்தால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.



THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் சொல்வது எனக்குச் சரியாகப் புரியவில்லை. திருப்பிச் சொல்லும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது குற்றங்களைச் சாட்டி, அவர்களை லாக்கப்பிலே தள்ளி, அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பதற்காக தனி இலாகாவை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. இது சரியான முறையா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் இப்பொழுதே இதற்குப் பதில் சொல்லிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவ்வளவு ஆபத்தானவர்கள் என்று நாங்கள் கருதவில்லை. இதற்காக தனி இலாகாவும் இல்லை. பிரத்யேக கவனிப்பும் இல்லை.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவ்வளவு பயப்படவேண்டியவர்கள் அல்ல என்று சொல்லுகிறார். அப்படியில்லையென்றால், நேரு அவர்கள் சென்னை நகருக்கு வந்திருந்தபொழுது எங்கள் மீது தடை விதிக்கக் காரணம் என்ன? அதிலும் சென்னையைத் தவிர மற்ற ஊர்களில் தடை போட காரணம் என்ன? திருவண்ணாமலை, போளூர், செங்கம் போன்ற இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் ப. வு. சண்முகம், அண்ணாமலை, சந்தானம் ஆகியோர் இருப்பதினால் அங்கே "144" போட்டார்கள். அப்படி எங்கள் மீது பயம் இல்லாவிட்டால் ஏன் "144" போடவேண்டுமென்று கேட்கிறேன்.

இந்த போலீஸ் இலாகாவிலே பல ஊழல்கள் இருக்கின்றன. நான் சில தினங்களுக்கு முன்னர் வரவு செலவுத் திட்டத்தின் மீது பேசும்போது குறிப்பிட்ட ஒருவரைப்பற்றி சொன்னேன். எனக்கு அவர் மீது தனியாக விரோதம் கிடையாது. நான் அவரைப் பார்த்ததுகூடக் கிடையாது. பொதுவாக அவர் வட சென்னையில் இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்கள் பயப்படுகிறார்கள். பி-4 போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் தவறாக, தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நீதி மன்றங்களிலேகூட அவர் தொடுத்த பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. நாங்கள் இதை ஆதாரத்தோடு சொல்ல முடியும். அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுகளை அக்கிரமமாக பொது மககள் மீது சுமத்தி, அவர்களை அடித்துத் துன்புறுத்தி, பிறகு வழக்குகள் போடப்பட்டு, நீதி மன்றங்களிலே நிராகரிக்கப்பட்டு தள்ளுப்படியாகி இருக்கின்றன. "எங்கள் நீதி மன்றங்களிலே இருக்கிற நீதிபதிகள் திறமையானவர்கள். தவறான குற்றத்தைச் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார்? அடித்து துன்புறுத்தப்பட்டு அதனால் கண் பார்வை இழந்த பிறகு குற்றவாளி என்று நிரூபித்தால் என்ன, நிரூபிக்காவிட்டால் என்ன? வட சென்னையைச் சேர்ந்த பூபதி என்ற இளைஞன் மீது தவறான குற்றச்சாட்டைக் காட்டி, அவனை லாக்கப்பிலே வைத்து அடித்து, வழக்குத் தொடரப்பட்டு, அந்த வழக்கு தள்ளுப்படியாகி விட்டது. ஆனால் அந்த பூபதி இன்றைய தினம் கண்ணை இழந்த கபோதியாக இருக்கிறான். இது போன்ற பல குற்றச்சாட்டுகளைச் சொல்ல முடியும். குப்புசாமி, அப்பாவு என்பவர்களைப் பிடித்து அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். நாகாத்தா கோவிலைச் சேர்ந்த அந்தோணி, ஜான், சைமன், பாலு, குழந்தை ஆகியோர்கள் மாதா சர்ச் காம்பௌண்டில் பந்து விளையாடினார்கள் என்பதற்காக தவறான முறையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகள் அல்ல என்று நிரூபிக்கப்பட்டு வெளியே வந்திருக்கிறார்கள். அவர்கள் லாக்கப்பிலே வைத்து அடிக்கப்பட்டு பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. சொல்லவேண்டியது அவசியம் இல்லையென்றாலும்கூட, இந்த வழக்கும் தள்ளுப்படி செய்யப்படலாம் என்று கருதப்படுகிறது. நெ. 10, மணி

கண்ட முதலி 6-வது தெருவைச் சேர்ந்த ஜி. வெங்கடேசன் என்பவர் இந்த வட சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டரால் அபாயகரமான முறையில் அடிக்கப்பட்டு அவரது கை ஒடிக்கப்பட்டு, எக்ஸ்ரே போட்டோ எடுக்கப்பட்டிருக்கிறது. உங்கள் அனுமதியின் பேரில் அதை இங்கே காட்டுகிறேன். (அங்கத்தினர் எக்ஸ்ரே போட்டோவைக் காண்பித்தார்கள்.) இந்த வழக்கு கோர்ட்டில் இருக்கிறது.

**DEPUTY SPEAKER :** தயவு செய்து இதைப்பற்றிப் பேச வேண்டாம். இது சப்-ஜுடிஸ்.

10-50 a.m. **DR. SRIMATHI SATHIAYVANIMUTHU :** 54-வது செக்ஷன்படி நிரபராதிகளின் மேல் குற்றங்கள் சாட்டி, தவருக வழக்குகள் தொடர்வதுதான் போலீஸ் செய்யக்கூடிய அழகான ஒழுங்கான காரியமா என்று நாங்கள் கேட்டால் அதில் ஆச்சரியப் படவேண்டிய அவசியம் இல்லை.

போலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் பெண்களைத் தவருன வழிக்கு வரும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்று எனக்கு வெளி ஊர்களிலிருந்து தகவல் வந்திருக்கிறது.

அம்பத்தூரில் இருக்கும் எட்டி என்பவனை தவருக அடித்து, அவன் மேல் வழக்குத் தொடரப்பட்டு, அவன் கடைசியில் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி "நவ இந்தியா"வில் வந்திருக்கிறது. போலீஸ் பாதுகாப்பு மக்களுக்கா அல்லது காங்கிரஸ் ஆட்சிக்கா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட போலீஸ் இலாகாவை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட செக்ஷன்களை வைத்துக் கொண்டு நிரபராதிகளும், எதிர்க்கட்சிக்காரர்களும்கூட இந்த செக்ஷன் மூலமாக தண்டனை பெறுமாறு செய்வது முறையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

பல முறை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கருப்பு கொடி காட்டியதற்காக 54-வது செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டு சிறையிலே இருந்திருக்கிறார்கள். சிலர் "Lock-up"ல் அடைக்கப்பட்டு, தாறுமாருக அடிக்கப்பட்டு, இருக்கிறார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டால் தான் வெளியே விடுவோம் இல்லாவிட்டால் வெளியே விடமுடியாது என்று அங்கிருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, நிரபராதிகள் கூட இந்த வழக்குகளில் ஏதோ தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளலாம், அபராதம் வேண்டுமானாலும் செலுத்தி விடலாம் அல்லது சிறைக்குச் சென்று அவர்கள் கொடுக்கக் கூடிய ஆகாரத்தைச் சாப்பிட்டு விடலாம். ஆனால் போலீசாரால் கொடுக்கப்படும் அடியைப் பொறுக்க முடியாது என்று கூறுகிறார்கள். இவ்வாறு எல்லாம் நடப்பது முறையா என்று அமைச்சரையும் மற்றவர்களையும் கேட்க விரும்புகிறேன். போலீஸ் இலாகா அதிகாரிகள் மட்டும் அல்ல. சாதாரண கான்ஸ்டேபிள் கூட மதுவிலக்குச் சட்டத்தின் காரணமாக லஞ்சம் வாங்கிக் கொண்டு விட்டுவிடுவது என்று வழக்கம் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி நடைபெறுவது முறையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**Vigilance committee member**-களின் மூலமாக குற்றங்களை காட்டி தண்டிக்கப்படலாம் என்ற முறை இருக்கிறது. ஆனால் "**Vigilance committee**" மெம்பர்கள் தவருன முறையில், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். பணம் கொடுக்கிறவர்களை விட்டுவிட்டு, பணம் கொடுக்காதவர்களைப் பற்றி போலீசில் சொல்லுகிறார்கள். இவர்கள் ஏதாவது அக்கிரமம் செய்தால், சப்-இன்ஸ்பெக்டர் போன்ற அதிகாரிகளிடத்தில் சொன்னால், "Vigilance committee member" களைப்பற்றிச் சொல்லுவதற்கு நீ யார் என்று சொல்லுகிறார்கள். நான் இதைப் பற்றிப் பல அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இதை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் இருக்கும் எங்களுக்கு இவைகளை எல்லாம் சொல்லுவதற்கு திறமையும் நெஞ்சு உரமும் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





நிரபராதிகள், ஏழைகள், வாழ்க்கையில் அன்ருடம் போராடிக்கொண்டு இருக்கிறவர்கள் போலீஸ் அதிகாரிகளின் முன் வருவதற்கு பயப்படுகிறார்கள். இதனால், ஏழைகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆதார பூர்வமாக விஷயங்களை எடுத்துப் பேசவேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வதினால் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன்.

"கோடம்பாக்கம்" விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை. அதைப் பற்றி இப்பொழுது வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. அன்ருடம் போலீஸ் இலாகாவில் நடக்கின்ற செய்திகளைக் கேட்டு மக்கள் பீதி அடைகின்றனர்.

காங்கிரஸ் சர்க்கார் போலீஸ் இலாகாவைப் பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டு ஆட்சி நடத்துகிறார்கள். இதில் ஏழைகளுக்கு வாழ்வு கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு கிடையாது. தொழிலாளிகளுக்கு வாழ்வு கிடையாது.

என்னிடம் இருக்கும் தகவல்களை எல்லாம் மீண்டும் அமைச்சர் அவர்களிடத்தில் தர சித்தமாய் இருக்கிறேன். இதில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த வருஷத்தில் இந்தக் குறைபாடுகளை அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது என்பது தெரியவில்லை. ஆகையால், இந்தக் குறைகளை எல்லாம் உடனடியாக கவனித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI T. KARIA GOUNDER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 11 a.m.
போலீஸ் மான்யத்தை ஆதரித்துப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். போலீசார் ஒழுங்காக வேலை செய்கிறார்கள் என்று சர்க்காரைப் பாராட்டுகிறோம் ஆளும் கட்சியைச் சேர்ந்த நாங்கள். அவர்கள் சீராகவும், ஒழுங்காகவும் வேலை செய்யவில்லை என்று எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். எங்களுக்கு முன் வெள்ளைக்காரர்கள் ஆட்சி புரிந்தார்கள் என்பது எல்லோருக்கும் நன்ருகத் தெரியும்.

தாய்மார்களுக்கு ஜெயிலில் வசதி இல்லை, போலீசார் அக்கிரமங்கள் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். போலீசார் இருப்பது உங்கள் பாதுகாப்புக்காகவே தவிர, எங்கள் பாதுகாப்புக்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று பேசியபோது போலீஸ் இலாகாவில் சில குறைகள் இருப்பதாக ஒப்புக்கொண்டார். அந்தச் சட்டம் நான்கு நாட்களுக்கு முன்புதான் நிறைவேற்றப்பட்டது.

முன்பு எல்லாம் போலீசுக்கு இவ்வளவு வேலை கிடையாது. இப்பொழுது நாட்டிற்கு சுதந்திரம் வந்துவிட்டது. பேச சுதந்திரம் இருக்கிறது. எங்கு வேண்டுமானாலும் கூட்டம் போட்டு கொடியை நாட்டி விடுகிறார்கள். அந்த இடங்களுக்கு எல்லாம் போலீஸ்காரர்கள் போக வேண்டியிருக்கிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், கை வர், மாட்டு வர் பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது அங்கு போலீசார் போவதற்கு காரணம் என்ன என்று நான் கேட்கிறேன்.

இப்பொழுது சுதந்திரம் வந்து ஜனநாயக ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. யார் வேண்டுமென்ருலும், மேடையின் மீது ஏறி, அமைச்சர் அவர்களுக்கு நிர்வாகத் திறமை கிடையாது என்று கூடச் சொல்வதற்கு பேச்சு உரிமை இருக்கிறது. இதை நாம் நன்ருக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், இவைகளின் மூலமாக மற்றவர்களைத் தூண்டிவிடுகிறார்கள். அப்பொழுது தான் போலீஸ் வேண்டியிருக்கிறது.

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றிருக்கிற ஸ்ரீ ராஜரத்தினத்தைப் பற்றி குறைகள் சொல்லப்பட்டன. ஆனால் தற்போழுது ஐ.ஜி. யாக இருக்கும் அதிகாரியைப் பற்றி குறை ஒன்றும் சொல்லாமல் இருக்கிறார்களே என்று நான் பெருமைப்படுகின்றேன்.

கனம் அன்பழகன் அவர்கள் பேசும்பொழுது ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி சென்னையில் 4, 5 வீடுகள் கட்டியிருக்கிறார் என்று சொன்னார். கனம் அமைச்சர் அவர்கள் கூட முன்பு அதைப் பற்றி இந்த சபையில் குறிப்பிட்டார். ஆனால் அந்த போலீஸ் அதிகாரியே தன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று ஒரு அறிக்கை வெளியிட்டது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆனால், நீதிபதி விசாரணை வேண்டும், போலீஸ்காரர்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். உலகம் போற்றக் கூடிய நமது நேருஜி அவர்களின் பேரிலும் குற்றம் சாட்டுகிறார்கள். சென்னை அதிகாரிகளுடைய பொறுப்பு என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய புகழ் இங்கு மட்டும் அல்ல, அவர் அமெரிக்கா போகிறார், ரஷியா செல்லுகிறார், எங்கு பார்த்தாலும் அவருக்கு புகழ் இருக்கிறது. சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டும் என்று அவர் பாடுபடுகிறார். அப்படி பெருமைப்படக் கூடியவர் அவர். அவருடைய வருகைக்கு நீங்கள் கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்று சொன்னீர்கள். பிடிக்கக்கூடாது என்று போலீஸ் அதிகாரிகள் சொன்னார்கள். கருப்புக்கொடி பிடிப்போம் என்று சொன்னார்கள். அதைத் தடுத்தபோது எங்களைச் சிறையில் தள்ளிவிட்டார்கள் என்று குறை சொல்லுகிறார்கள். இந்தக் குறைகளை விசாரிக்க நீதிபதி விசாரணை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கேஸ் போடப்பட்டிருக்கிறது. ஆனால் விவாதத்திற்கு அவர்கள் என்ன பேசுகிறார்கள். ஓய்வு பெற்ற ஐ.ஜி. யைப் பற்றி விசாரித்தார்கள். அப்பொழுது என்ன சொன்னார்கள். அப்படி விசாரித்த நீதிபதியினிடம் நம்பிக்கை இல்லை, அது நீதிபதி விசாரணை இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி இருக்கும்போது இப்பொழுது ஏன் நீதிபதி விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதை அவர்களே நன்றாக யோசித்துப் பார்க்கட்டும். இதைப் பற்றி விசாரிக்க நீதிபதி அவசியம் இல்லை.

**Sri K. ANBAZHAGAN** : ஏற்கனவே நடந்தது நீதிபதி விசாரணை என்று கனம் அங்கத்தினர் தெரிவிக்கிறார். நீதிபதி என்ற முறைப்படி அவர்கள் விசாரித்தார் என்பதைப்பற்றி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் தெரிவிக்கவில்லை என்ற காரணத்தால் இவர் தெரிவிக்கிறார். இது ஒழுங்கல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. KARIA GOUNDER** : இதற்குப் பதில் கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் சொல்லுவார் என்று நினைக்கிறேன். போலீஸ் விசாரணையை பற்றிப் பத்திரிகையில் வந்தது. கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்று சொன்னபோது அவர்களைக் காட்ட விடாமல் செய்ததற்கு அவர்கள் பெட்ரோலை வைத்துப் பஸ்களைக் கொளுத்தினார்கள். அப்பொழுது போலீஸ் அதிகாரி சும்மா இருக்க முடியுமா ? என்பதை நான் கேட்கிறேன். அதனால் யாருக்கு நஷ்டம். அது உங்களுடைய சொத்து அல்லவா ? போலீஸ் மானியத்திற்குப் பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். போலீஸ்காரர்கள் எவ்வளவோ பேர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். அதைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள். அவர்களுடைய நிலையைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை சர்க்கார் கொண்டுவந்து அதற்காக சர்க்கார் அதிகப்படியாக வரி போட்டு வசூல் செய்தால் சர்க்கார் அதிகப்படியாக வரி போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். என்.ஜி.ஓ.க்களுக்கு என்று ஒரு பொதுக் கூட்டம் போடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி சென்னை சட்டசபையின் அருகில் கூட ஒட்டப்பட்டிருக்கிறது. பல கட்சித் தலைவர்கள் அதில் பேசுகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கூட





ஒருவர் பேசுகிறார். குறைந்த சம்பளம் பெற்று வாழ்க்கையை நடத்துகிறார்கள் அந்த போலீஸ்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். சாராயம் காய்ச்சுவதற்கு போலீஸ் அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சசிவர்ணத் தேவர் சொல்லுகிறார். அப்படி போலீஸ்காரர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தெரியப்படுத்தினால் ஆளும் கட்சியில் இருக்கக் கூடியவர்கள் கண்டிப்பாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். சில இடங்களில் தவறுகள் நடப்பது என்பது வாஸ்தவம்தான். சாராயம் காய்ச்சிக்கொண்டிருப்பது தெரியவருகிறது. அதற்காகத்தான் சமீபத்தில் கண்டிப்பான சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதுவும் கூடிய சீக்கிரத்தில் அமுலுக்கு வரப்போகிறது. ஒழுங்காக நடைபெறவில்லை என்று யாராவது தெரியப்படுத்தினால் அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அப்படித் தெரியப்படுத்த வேண்டும் என்றும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதற்கு அடுத்தபடியாக சண்டே அப்சர்வரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நடமாட முடியாத நிலைமையில் இருக்கிறார். அவர் பத்திரிகையில் எவ்வளவோ எழுதிக்கொண்டு வருகிறார். அவர் பத்திரிகையை ரொம்ப நாளாகவே நடத்திக்கொண்டு வருகிறார். அதை ஒழுங்காக நடத்தக் கூடியவர்தான். அவர் என்ன எழுதினாலும் நமது அமைச்சர்கள் அதைப் பற்றி ஒன்றுமே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது இல்லை. அமைச்சர்களுடைய பொருமையைக் கண்டு நாங்கள் அவர்களைப் பாராட்டுகிறோம். ஆளும் கட்சியின் சார்பாக அவரை நான் பாராட்டுகிறேன். அதுவும் பெருமையுடன் பாராட்டுகிறேன். எது வேண்டுமானாலும் எழுதலாம், எது வேண்டுமானாலும் பேசலாம், என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம் அமைச்சர்கள் தங்களுடைய வேலைகளைப் பார்த்துக்கொண்டு பொருமையாகத்தான் இருக்கிறார்கள். கிராமங்களில் எவ்வளவோ பேசுகிறார்கள். சுதந்திரம் வந்த பிறகுதான் இவ்வளவு பாதுகாப்புக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பற்றிப் பேசும்போது அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் இது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்று ஒருமுகமாகச் சொன்னார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னதையும் இந்த இடத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறைகள் இருந்தால் அவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதுதான். சபையிலுள்ள மெம்பர்கள் எல்லோரும் அந்த திட்டத்தைப் பற்றிப் பாராட்டித்தான் சொன்னார்கள். குறைகள் இருந்தால் சொல்ல வேண்டியதுதான். அப்படிச் சொன்னால் அதைத் திருத்திக்கொள்ளலாம். ஆனால் குறைகளைக் கவனிக்காமல் அவ்வளவு கீழ்த்தரமான அளவுக்கு ஒருக்காலும் போக மாட்டோம். போலீஸ்காரர்களுடைய கஷ்டங்களைப்பற்றி கனம் மகாலிங்கம் அவர்களும் குறிப்பிட்டார். அவர்களுக்கு வீடுகள் கிடைப்பது இல்லை என்று. போலீஸ்காரர்களுக்கு சம்பளம் குறைவாக இருந்தால் அதற்கு வாதாடுங்கள். அதற்கு எல்லோரும் ஒன்றாகச் சேருங்கள். என்.ஜி.ஓ.க்கள் சம்பளம் வேண்டும் என்று கேட்டால் அவர்கள் பக்கம் ஏன் நிற்கவேண்ட்டும். காலணா வரி போட்டாலும் இன்றைக்கு 15 கோடி ரூபாய் வரும். அப்படி வரி போட்டுவிட்டு அவர்களுக்குக் கொடுங்கள் என்று இங்கே சொல்லிவிட்டு வெளியில் மேடையில் போய் என்ன சொல்கிறார்கள் என்றால் “ காங்கிரஸ்காரர்கள் பாருங்கள் வரி போட்டுவிட்டார்கள் ” என்று சொல்லுகிறார்கள். மற்றும் குறை பட்ஜெட்டாகப் போட்டால் “ பாருங்கள் அவர்களுக்கு பட்ஜெட் தயாரிக்கத் திறன் இல்லை ” என்று சொல்லுகிறார்கள். உபரியாகப் பட்ஜெட்டைப் போட்டால் “ பாருங்கள் செலவுகளைக் குறைத்துக்கொண்டு பட்ஜெட்டை சரியாக தயாரிக்காமல் மிச்சம் காட்டுகிறார்கள் ” என்று சொல்லுகிறார்கள். ஆகவே நான் சொல்லுவது என்னவென்றால், எல்லோரும் ஒத்துழைத்து வேலை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சர்க்காரை ஒழுங்காக நடத்த முடியும். இன்னும் நான்கு வருஷங்களுக்கு எங்களுக்குப் பயம் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து எங்களை நீக்கிவிட முடியாது. கிராம மக்களுடைய வாழ்க்கையை நன்றாகக் கவனித்துப் பார்க்கவேண்டும்.

[Sri T. Karia Gounder] [18th March 1958

நாம் கொடுக்கும் பலன்களை அவர்கள் அடையவேண்டும். இப்பொழுது நாம் கொடுத்துவரும் பலன்களை அவர்கள் சரிவர அனுபவிக்க முடியவில்லை. ஆகவே இந்த மான்யத்தை எல்லோரும் ஆதரித்து நாடு முன்னேற்றம் அடையக் கூடிய அளவில் வேலை செய்ய வேண்டும். மணி அடிப்பதற்கு முன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRIMATHI HEMALATHA DEVI**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட போலீஸ் மானியக் கோரிக்கையை வரவேற்று சில விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். சகோதரி திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசியபோது நம்முடைய அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பயந்துகொண்டு சில இடங்களில் அதிகப்படியான பந்தோபஸ்தை நமது பிரதம மந்திரி அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்தபோது ஏற்படுத்தியுள்ளயதாகக்கூறினார். ஆனால், உண்மையில் நம்முடைய அரசாங்கம், கனம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டபடி அந்த இடங்களில், அதிகப்படியான பந்தோபஸ்து ஏற்படுத்திய காரணம் அங்கு கலவரங்கள் நடைபெருமல் இருப்பதற்குத்தான். அன்று ஒரு சிலர் கலவரங்களை ஏற்படுத்திஞல் அதனுல் பொதுமக்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள், எந்த விதமான கலவரமும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அங்கு பந்தோபஸ்து வைக்கப்பட்டது. கலவரம் நடந்தால் அந்த அளவுக்கு நாட்டின் குழப்பம் அதிகமாகிவிடும் என்பதற்காகத்தான் அந்த இடங்களில் அதிகப்படியான பந்தோபஸ்தை வைத்தார்களே ஒழிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பயந்துகொண்டு வைக்கவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

11-20 a.m. 'அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் சசிவர்ணத் தேவர் அவர்கள் போலீஸ் வானைப் பார்த்தாலே, போலீஸ்காரர்களைப் பார்த்தாலே மக்கள் ஓடி ஒளிகிறுர்கள் என்பதாகச் சொன்ஞர்கள். வெள்ளையர் ஆட்சி இருந்த காலத்தில் கிராமத்தில் இருக்கக் கூடிய பெரிய தனக்காரர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் சாதாரணமாக போலீஸ்காரர்களைப் பார்த்துவிட்டால் குடல் நடுக்கம், உடல் நடுக்கம், ஏற்பட்டு தலையில் இருக்கும் தலைப்பாகையை இடுப்பில் கட்டிக்கொள்ளுவதா அல்லது காலில் கட்டிக் கொள்ளுவதா என்று தடுமாறுவார்கள் என்பதை நாம் காதால் கேட்டிருக்கிறேம், கண்ணுல் பார்த்திருக்கிறேம். வெள்ளையர் இந்த நாட்டை விட்டுச் சென்ற பிற்பாடுகூட இப்பொழுது நம்முடைய அரசாங்கம் நம்முடைய பந்தோபஸ்துக்காக போலீஸ்காரர்களை வைத்திருக்கின்ருர்கள். திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு போலீஸ்காரர்கள் வேலை செய்யும்பொழுது எந்த நிலைமையையும் உணராமல் போலீஸ்காரர்களைக் கண்டு இன்னும் நடுங்குவது என்பது விந்தையாக இருக்கிறது.

சேலம் ஜில்லாவில் டி.எஸ்.பி. அவர்கள் சாராயம் காய்ச்சுவதை தடுப்பதற்காக விஜிலன்ஸ் கமிட்டிகள் மூலம் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிருர். கண்ணங்குறிச்சி என்ற இடத்தில் இம்மாதிரி ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அப்பொழுது சாராயம் காய்ச்சும் மக்கள் தாங்கள் காய்ச்சி வைத்திருந்த சாராயத்தை தாங்களாகவே கூட்டத்திற்கு முன்பு கொண்டுவந்து சமர்ப்பித்து, இனிமேல் சாராயம் காய்ச்சுவது கிடையாது என்று உறுதி கூறிஞர்கள். மேலும் சாராயம் காய்ச்சுபவர்களையும் காட்டிக்கொடுத்துவிடுவோம் என்று சொன்ஞர்கள். அவர்கள் மேலும் தொழில் இல்லாத காரணத்திஞல் தான் சாராயம் காய்ச்ச வேண்டியிருக்கிறது என்றும், அவர்களுக்கு ஏதாவது உப தொழில்கள் செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். கைத்தறி வேலை கொடுக்க வேண்டுமென்றும், அல்லது பக்கத்தில் இருக்கக்கூடிய மலைச்சாரல்களில் விறகு வெட்டிக் கொள்வதற்கு தடை இல்லாமல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இம்மாதிரி தாலூகாக்களில் பல செண்டர்களில் விஜிலன்ஸ் கமிட்டிகள் மூலம் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் வேலை



18th March 1958] [Srimathi Hemalatha Devi]

செய்து வருகிருர்கள். இதனுல் ஆங்காங்கு உள்ள மக்கள் தங்கள் நிலைமையை மாற்றிக்கொள்ளுவதற்கு வகை ஏற்படுகிறது என்ற உண்மையையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதோடு கூட ஜில்லா செண்டர்களில் போலீஸ் அதிகாரிகளுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் சாராயம் காய்ச்சுவதைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக இருக்கிறது. இம்மாதிரி தாலூகா செண்டர்களிலும் ஜீப் வசதி செய்து கொடுத்தால் இன்னும் அதிகமான குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தாலூகாக்களில் ஜீப் இல்லாத காரணத்திஞல், மலைப்பாங்கான இடங்களில் ரோடுவசதி இல்லாத இடங்களில் சாராயம் காய்ச்சுகிருர்கள் என்ற செய்தி வந்ததும் போலீஸ்காரர்கள் உடனே குற்றவாளிகளைப் பிடிப்பதற்குப் போவதாக இருந்தால் மலைப்பாங்கான இடத்தில் தட்டுத் தடுமாறிச் சென்று குறிப்பிட்ட இடத்திற்குப் போவதற்குள், சாராயம் காய்ச்சிவிட்டு அதை வேண்டிய அளவு பந்தோபஸ்தும் செய்துவிடுகிருர்கள். அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் முடிவதில்லை. ஆகவே தாலூகா செண்டர்களிலும் போலீஸ் அதிகாரிகளுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்தால், மேலும் சாராயம் காய்ச்சும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்தவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பத்திரிகைகளில் நாம் செய்திகளை படிக்கும்போது போலீஸ்காரர்கள் சாராயம் காய்ச்சுவது, கொலை, களவு முதலிய குற்றங்களை அதிகமாக கண்டுபிடிப்பதை நாம் பார்க்கிறேம். இது போலீஸ்காரர்கள் அதிகமாக சேவை செய்கிருர்கள், திறம்பட பணியாற்றுகிருர்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்ற சமயத்தில் ஒரு சிலர் ஏதாவது அட்டூழியம் செய்துவிட்டால், போலீஸ்காரர்களே இப்படித் தான் என்ற ஒரு வதந்தி ஏற்படுகிறது. ஆனுல் போலீஸ்காரர்கள் நல்ல முறையிலே சேவை செய்து வருகிருர்கள். உண்மையிலேயே அமைச்சர் அவர்களுக்கு பயந்து போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்து வருகிருர்கள். ஏதோ நடுவில் ஒரு சில சேவகர்கள் இம்மாதிரி குற்றங்கள் செய்துவிடுகிருர்கள். அவர்கள் போலீஸ் நிர்வாகத்திற்கே கெட்ட பெயரையும் தேடித் தருகிருர்கள். நான் தைரியமாக சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே காங்கிரஸ் பற்றுள்ள போலீஸ் சேவகர்கள், தேசப் பற்று இருக்கக் கூடியவர்கள் லஞ்சம் வாங்குவதோ அல்லது கைதிகளை கொடுமையாக அடிப்பதோ இம்மாதிரியான குற்றங்களை செய்வதற்கு முற்படமாட்டார்கள். மாற்றுக்கட்சியினராக இருந்தால் தான் இம் மாதிரியான அக்கிரமங்கள் செய்வதற்கு முற்படுவார்கள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

மேலும் அவர்களுக்கு வீட்டு வசதி போன்ற வசதிகளையும் பிள்ளைகளுக்கு கல்வி சலுகைகளையும் செய்து கொடுத்தால் இம்மாதிரி அவர்கள் லஞ்சம் வாங்குவதற்கு முற்படமாட்டார்கள். மதுவிலக்கு சட்டத்தை மீறுகிறவர்களுக்கு எப்படி கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் சட்டம் செய்திருக்கிறேமோ, அதேமாதிரி ஒரு போலீஸ் சேவகரோ அல்லது அதிகாரியோ ஒரு குற்றத்தை செய்தால் அவரை சஸ்பெண்டு செய்தால் மட்டும் போதாது, அல்லது அவனை வேலையிலிருந்து அறவே நீக்கி விட வேண்டும். (இந்த சமயத்தில் சபாநாயகர் தலைமை வகித்தார்.) அம்மாதிரி கடுமையான தண்டனைக்கு ஏற்பாடு செய்தால், போலீஸ்காரர்கள் குற்றங்களை கண்டுபிடிக்கும்போது ஜாக்கிரதையாக நடந்துகொள்வார்கள். அவர்கள் உஷாராகவும் நடந்து கொள்வார்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI S. R. MUNUSAMI**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் போலீஸ் மான்யக் கோரிக்கையின் பேரில் இரண்டோர் வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்ய போலீஸ் மிகவும் சிறப்பு வாய்ந்தது, பெயர் பெற்றது என்று பல முறை சொல்லப்பட்டிருக்கிறது இந்த அவையிலே. சென்னை ராஜ்ய போலீஸ் மிகவும் திறமைசாலிகள் தான். அப்படி திறமைசாலிகளாக

இருக்கக்கூடிய நம்முடைய ராஜ்ய போலீஸை உபயோகிக்காமல், மற்ற போலீஸாரை ஏன் உபயோகிக்கவேண்டுமென்றுகூட வாதம் செய்திருக்கிறோம். அதனால் நம்முடைய போலீஸ் படை ரொம்பவும் திறமை வாய்ந்தது தான். நாம் எப்பொழுதும் ஒரு சில இடங்களிலே போலீஸ் பற்றி புகார் சொல்லுகிறோம். போலீஸ் படை தன்னுடைய பணியை புரியும்போது அதுபற்றி புகார் சொல்லுகிறோம். ஏனென்றால் ஒரு கிளர்ச்சி நடந்துகொண்டிருக்கிறது என்றால், கிளர்ச்சியின் காரணமாக அடக்குமுறை செய்வது போலீஸ். அந்த நேரத்திலே அதனுடைய எதிர்க் கட்சியாக இருக்கக்கூடியவர்களுக்கு அது பாதகத்தை விளைவிக்கிறது. அதுதான் அங்கு இருக்கிற திட்டம். இந்த நிலையில் பார்த்தால் நம்முடைய ராஜ்ய போலீஸ் மிகவும் கடமைப்பட்டது என்று நான் சொல்லுவேன். தமிழ் நாட்டு போலீஸை நாம் குறை கூறிக்கொண்டு இருப்போமானால், அது ராஜவிசுவாசத்திற்கு அப்பாற்பட்டது என்று தான் நான் சொல்லுவேன். நாம் அடிக்கடி போலீஸ் மீது புகார்கள் சொல்லிக் கொண்டிருப்போமானால் போலீஸ் உத்தியோகஸ்தர்களை பிரிப்பவர்கள் ஆகிவிடுவோம். அப்படிச் சொல்லுவதுதான் நம்முடைய குற்றம் என்று எனக்கு படுகின்றது. ஏனென்றால், போலீஸ் தன் கடமையிலேயே மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். எங்கையோ ஒரு இடத்திலே ஒரு* சிலர் தவறு செய்கிறார்கள் என்பதற்காக போலீஸ் பூராவுமே அக்கிரமம் செய்கிறார்கள், போலீஸ் படையை நாம் வெறுக்கிறோம் என்று சொன்னால், போலீஸ் படை இல்லை யென்றால் எங்களுடைய நிலை என்ன ஆகும் என்பது என்னுடைய சிந்தனை. மாற்றுக் கட்சியில் இருக்கக்கூடியவர்களின் தலைவர்கள், பெரியார், 30 மைலுக்கு அப்பால் தும்பினால், இங்கு இருக்கக்கூடியவர்களுக்கு, முனியனுக்கு தொடை நடுங்கும். அந்த நிலையில் கட்சியினர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை ஒடுக்கப் பார்க்கிறார்கள். அப்படி ஒடுக்கித்தான் அவர்களைக் கொண்டு போய் பல சிக்கல்களில் விட்டுவிடுகிறார்கள். போலீஸ்படை எங்களுக்கு அனுசரணையாக இருக்கிறது என்று சொல்லுகிறேன். போலீஸ் மீது புகார் சொல்லுகிறேன் என்றால் அவர்கள் செய்வது அட்டூழியம். இரவு 2 மணி நேரத்தில் சேரிக்குள்ளே சூரையாடுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது சமயம் பார்த்து தான் திட்டத்தின் பேரிலே தான் என்றுகூட பிறகு உணர்கிறேன். கலகம் நடக்கிறது என்றால், கலகத்தை எப்படி அடக்கவேண்டுமென்ற திட்டத்தோடு செய்கிறார்கள். நாங்கள் அதுபற்றி மெச்சுகிறோம். இன்றைக்கு போலீஸில் சேர்ந்தால் போலீஸ் உத்தியோகத்திலிருந்து மேற்பட்ட உத்தியோகத்திற்கு போக முடியாமலே அதிலே இருந்து க்ஷீணித்து போய் ரிடையராகக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்டவகுப்பினர் தான், பிற்பட்ட வகுப்பினர் தான். அவர்கள் மீது குற்றம் சொல்லுவது என்றால், அதை நாங்கள் தவிர்க்க வேண்டியிருக்கும். போலீஸ் தங்களுடைய கடமையை கண்ணும் கருத்துமாய் செய்யும் காலத்தில் என்னுடைய தொகுதியில் நான் ஒத்துழைப்பு கொடுக்கிறேன். மதுவிலக்கு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அவர்கள் செய்யும் சேவையில் நானும் பங்கெடுத்துக்கொண்டு அவர்களோடு சேர்ந்து பல இடங்களில் சேவை செய்வேன்.

இந்த ராஜ்யத்தில் எல்லாக்கட்சிகளும் மதுவிலக்கு திட்டத்தை ஆதரிக்கின்றன. மதுவிலக்குச் சட்டத்தை மிகவும் திறமையாக போலீஸார் அமல் நடத்துகிறார்கள். நான் பேசும் விதத்தைப் பார்ப்பவர்கள், "இந்த மனிதன் என்ன இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக இடக்காகவே பேசுகிறானே" என்று நினைக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், நான் எல்லாக் கட்சியினருக்கும் எதிர்க் கட்சிகாரனாக இருக்கிறேன். இப்படிப்பட்டவனாக இருக்கும் நான் எதிர்க் கட்சியில் அமர்ந்திருக்கும் என் சகாக்களுக்கு சந்தேகத்தை உண்டாக்குகிறேன். அவர்களுடைய அந்த சந்தேகம் தெளிவதற்கு கொஞ்ச நாட்கள் ஆகும். மைனாரிடியினராக இருக்கும் எதிர்க்கட்சியினர் மெஜாரிட்டியினராக இருக்கும் கட்சியினருடன் அனுசரணையாக நடந்துகொள்ள
11-30 a.m. வேண்டும். அதுபோகட்டும். "எங்கள் அண்ணா யாருக்கும் கட்டுப்பட்டவர் அல்ல" என்று திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தினர்கள் சொன்னால்,





நான் சொல்வேன் : "எஸ். ஆர். முனுசாமி மக்கள் பிரதிநிதி. எஸ். ஆர். முனுசாமி யாருக்கும் கட்டுப்பட்டவர் அல்ல." எல்லோருக்கும் முதுகு கொடுத்து, எல்லோரையும், தூக்கிவிட்டு எல்லோரையும் முன்னேற்றமடைய செய்வது எங்கள் சமூகம். நான் தனித்து, நான் மட்டும் ஒரு கட்சியாக இங்கே இருக்கிறேன். சிலர் என்னை சுயேச்சையாளர் என்று சொல்கிறார்கள்: "இல்லை, இவரும் எதிர்க் கட்சிக்காரர், சுயநலமற்றவர்" என்று சில தலைவர்கள் என்னைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

மதுவிலக்குச் திட்டத்தைப் பற்றிப் பேசுவதற்கு இரண்டொரு நிமிஷங்கள் கொடுக்க வெண்டுமென்று கனம் சபாநாயகரை நான் கேட்டுக்கொண்டேன். மதுவை அருந்துகிறவர்களைத் திருத்துவதற்கு நாம் முயற்சிக்கிறோம். அவ்வாறு முயற்சிக்கும்போது, ஏழையாக இருப்பவர்கள் மதுஅருந்தும் குற்றத்தைச் செய்தால் அவர்களுக்கு அதிக அபராதத்தைப் போட்டு அவர்களைக் கஷ்டப்படுத்தக்கூடாது. மதுவிலக்குச் சட்டத்தை மீறும் குற்றத்தைச் செய்பவர்களை போலீசார் பிடிக்கிறார்கள். போலீசாரால் பிடிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்டவர்களாகவும் பிற்பட்ட இனத்தவராகவும் தான் இருக்கிறார்கள். சாராயம் காச்சுபவர்கள் பணக்காரர்களாக இருப்பார்கள். ஆனால் பிடிபடுவர்கள் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்பட்டவர்களும்தான். எங்களைப் பாதுகாப்பவர்கள் போலீசார் தான். போலீஸ் படை இல்லாவிட்டால் நாங்கள் எல்லோருக்கும் கைப்பிள்ளைகளாகத் தான் இருப்போம். ஆகவே நாங்கள் போலீஸ் படையை மிகவும் பராட்டுகிறோம். "இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்"? என்று எல்லா எதிர் கட்சிகளும் சிந்தித்தால் சிந்திக்கட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. கனம் அமைச்சரின் போலீஸ் மாணிய கோரிக்கையை ஆதரித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri P. S. CHINNADURAI :** கனம் சபாநாயகர் அவர்களே அன்னிய ஆட்சி நம் நாட்டுக்கு விட்டுச்சென்ற மிகத் திறமையான இலாகாக்களில் போலீஸ் இலாகாவும் ஒன்று என்று சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போதே நான் கூறினேன். அதனை இப்பொது மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நம் ராஜ்ய போலிஸ் இலாகா மிகவும் திறமையான இலாகாதான். அந்த இலாகா இன்னும் போற்றத் தகுந்த முறையில் திறமையானதாக ஆகவேண்டும். போலீஸார், நம் எல்லோரையும் விட மிகவும் நாணயமுள்ளவர்களாகவும் ஒழுங்கானவர்களாகவும் பண்பட்ட மனம்படைத்தவர்களாகவும் ஆகவேண்டும் என்ற எண்ணத்திலே தான் சில குறைகளை இங்கே எடுத்துககூற விரும்புகிறேன். போலிஸ் இலாகா திறமையானதாக இருந்தால்தான், எந்த ஆட்சியும் மக்களுக்கு திறம்பட சேவை செய்யமுடியும். மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். இந்தக் கண்ணோட்டத்துடன்தான் போலீஸ் இலாகாவை அணுக முற்படுகிறேன்.

போலீஸ் இலாகாவானது இப்பொழுது லஞ்சக் குற்றச்சாட்டுக்கோ ஊழல் குற்றச்சாட்டிற்கோ, கொடுமையிழைப்பதுபற்றிய குற்றச்சாட்டிற்கோ ஆளாகிறதென்றால், அந்தக் குற்றங்களைக் களைந்தெறிவதற்கு முயற்சிசெய்ய வேண்டியது இந்த ஆட்சியாளர்களுடைய கடமையாகும் ; அப்படிப்பட்ட குற்றங்களைக் களைந்தெறிவதற்கு முயற்சி செய்யவேண்டியது அவ்வப்போது இருக்கும் ஆட்சியாளர்களுடைய கடமை ஆகும். சிலபோலீஸ் அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றோ, சில இடங்களில் சில போலீஸ் அதிகாரிள் மக்களுக்குக் கொடுமை இழைத்துவிட்டார்கள் என்றோ குற்றம் சாட்டப்படுவதால் போலீஸ் இலாகா முழுவதும் தகுதியற்றதென்றோ ரொம்ப மோசமானதென்றோ முற்றிலும் கண்டிக்கத் தக்கது என்றோ நான் சொல்ல மாட்டேன். ஆங்காங்கு இரண்டொரு போலீஸ்காரர்கள் தவறான காரியங்களில் ஈடுபடத்தான் செய்கிறார்கள். இரண்டொரு போலீசார் திருடுகளில் பங்குகொள்வதிலோ லஞ்சம் வாங்குவதிலோ மற்ற தவறான காரியங்களிலோ ஈடுபடுகிறார்கள். அதே சமயத்தில் சில போலீஸ்காரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்துக்கூட கடமையைச் செய்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். என் அனுபவத்தில் அப்படிப்பட்ட சம்பவங்களை அறிந்தேன். சில போலீஸ்காரர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து கொலைக் கேஸ்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுடைய உயிர்கள் எந்த அளவிற்கு

[Sri P. S. Chinnadurai] [18th March 1958

பணயமாக வைக்கப்பட்டிருந்தன என்பது, அவர்கள் செய்த காரியங்களை நேரிடையாகப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும், மற்றவர்களுக்குத் தெரியாது. மொத்தத்தில், போலிஸ் இலாகாவால் நல்ல காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன, கெட்ட காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. போலீஸ் இலகாவால் கெட்ட காரியங்கள் செய்யப்படாமல் இருக்குமேயானல் அது மிகவும் பெருமைக்குரிய இலாகாவாக இருக்கும்.

இப்பொது நம் ராஜ்யப் போலிசார், கோரப்பட்டத்தின்பேரில், அஸ்ஸாமிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இவர்கள், உண்மையில் எந்தக் காரணத்திற்காகக் கோரப்பட்டிருந்தாலும் சரி, இவர்களுடைய திறமையின் காரணமாகத்தான் இவர்கள் கோரப்பட்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஹைதராபரத்தில் ரஜாக்கர்களின் அட்டகாசம் நடந்த காலத்திலும் நம் போலிஸார் கோரப்பட்டார்கள். அப்போது துனிச்சலுடன் பணியாற்றியவர்களும் நம் ராஜ்யப் போலீசார்தான். இவைகளெல்லாம் நம் ராஜ்யப் போலீசாரின் திறமைக்கு எடுத்துக்காட்டு. அதே நேரத்தில், நம் ராஜ்யப் போலீசார் அரசியல் மனப்பான்மையுடன் பிற கட்சிக்காரர்களை அடிக்கிறார்கள் என்றும், அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டால், நான் போலீஸ் இலாகாவின் மீதோ தனிப்பட்ட முறையில் போலிஸ்காரர்களின் மீதோ குற்றம் சாட்டமாட்டேன்; போலீஸ் இலாகாவின் பொறுப்பை வகிக்கும் போலிஸ் அமைச்சரின் மீது தான் நான் குற்றம் சாட்டுவேன். இந்த மானிய கோரிக்கையின்பேரில் இன்று பேசிய காங்கிரஸ் அங்கத்தினர்களில் பலருக்கு 16 ஆண்டுகளுக்கு முன்பு போலீசாரின் நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டிய அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். அவர்களில் எல்லோருக்கும் அந்த சந்தர்ப்பம் ஏற்பட்டதோ இல்லையோ, சிலருக்காவது ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். அவர்களில் பலருக்கு அந்த சந்தர்ப்பம் ஏற்படாமல் இருந்திருக்கலாம், அவர்கள் அப்போது ஆளும் கட்சி அங்கத்தினர்களாகக் கூட இருந்திருக்கலாம். அவர்களிடம் நான் ஒன்று சொல்லுவேன். அந்தக் காலத்தில் ஆட்சியாளர்களின் கொள்கைகளுக்குட்பட்ட போலீசார் காங்கிரஸ்காரர்களையும் கொடுமைப்படுத்தத் தயங்கவில்லை. அப்போது அவர்கள் போலீசாரால் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றால், அதற்காக தனிப்பட்ட போலீசாரைக்குற்றம் சொல்வதற்கில்லை; அதற்குக் காரணமாக இருந்தது அன்றைய ஆட்சியாளர்களின் கொள்கைதான். அதே மாதிரி, ஆட்சியாளர்களின் கொள்கை காரணமாக சமயங்களில் மிகப் பெரிய தவறுகள் நிகழ்கின்றன. சிறு சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமாட்டேன். கோடம்பாக்கம் சம்பவத்திற்குக் காரணமாக இருந்தது ஆட்சியாளரின் பொதுவான கொள்கை என்று நான் கூற மாட்டேன்; அத்தகைய சம்பவங்களுக்குப் பொறுப்பாளியாக இருக்கும் தனிப்பட்ட நபர்கள்பேரில் அரசாங்கத்தார் சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிகளைக் காண கனம் அமைச்சர் தீவிரமாக முயற்சிக்க வேண்டுமென்றும், அத்தகைய சம்பவங்கள் நடக்கக்கூடாது என்ற பொது ஜன அபிப்பிராயத்திற்கு ஆட்சியாளர்கள் மதிப்பளிக்க வேண்டுமென்றும் நான் கூறுவேனே தவிர, அந்த சம்பவத்திற்க்குக் காரணமாக இருந்தது ஆட்சியாளர்களின் பொதுவான கொள்கை என்று கூறமாட்டேன். போலீசார் கடைப்பிடிக்கவேண்டிய பொதுவான கொள்கையை அமைச்சரவை வகுக்கும்போது, கட்சிக் கண்ணேட்டத்துடனே, தாற்காலிகமாக தங்களுக்கு ஆதரவாக இருப்பதற்கான கொள்கையை வகுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே அதை வகுக்காமல், போலீஸ் இலாகா மக்கள் பாதுகாப்பிற்கான இலாகா என்பதையும், அந்த இலாகா நாணயமாகவும் நியாயமாகவும் ஒழுங்காகவும் இயங்க வேண்டுமென்பதையும், நிரந்தரமாக இருப்பதற்கான கொள்கையை வகுக்க வேண்டுமென்பதையும் மனதிற்கொண்டு அதை வகுக்க வேண்டுமென்று அமைச்சரவையை நான் கேட்டுக்கொள்வேன்: அத்தகைய பரந்த மனப்பான்மையுடன் அக்கொள்கை வகுக்கப்படவேண்டும்.

மேலும், போலீசாருக்கு முன்பு கொடுக்கப்பட்ட பயிற்சிக்கும் இப்பொழுது கொடுக்கப்படுகிற பயிற்சிக்கும் உள்ள வித்தியாசத்தைக்கூட நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் காலத்தில் இருந்த ஜபர்தஸ்து இந்தப் போலிசைப் பொறுத்தவரையில் இந்த ஜனநாயக



18th March 1958] [Sri P. S. Chinnadurai]

நாட்டில் கொஞ்சம் குறைந்துவிட்டால் நல்லது. நல்ல பிரஜைகள் அதைத்தான் விரும்புகிறார்கள். இந்த ஜபர்தஸ்து ஒழிக்கப்படவேண்டுமென்றால், அதற்கு தகுந்த முறையிலே பயிற்சி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பயிற்சி என்று பார்த்தால் போலீஸ் ட்ரெனியிங் ஸ்கூல் என்ற வகையிலே 1956–57-லே எந்த அளவு தொகை ஒதுக்கப்பட்டதென்று பார்த்தால் 4·55 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1958–59-லே 3·86 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி என்ற வகையிலே இந்த பட்ஜெட்டிலே குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கனம் அமைச்சர் அவர்கள்தான் காரணம் காட்டவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மலபார், தென் கன்னட ஜில்லாக்கள் குறைந்திருக்கின்றன. பயிற்சிக்கு எவ்வளவு தொகை ஒதுக்க வேண்டுமோ அவ்வளவு தான் ஒதுக்கவேண்டும்.

SRI P. S. CHINNADURAI : 1957–58-ல் 4·26 லட்சம் ரூபாய் ஒதுக்கப் 11-40 a.m.
பட்டிருக்கிறது. ஆனல், இப்பொழுது 3·86 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மலபார் ஜில்லா பிரிந்துபோனதினல் பயிற்சிக்குக் குறைந்த தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னலும், இந்த ஆண்டு பயிற்சிக்கான தொகை குறைந்த தொகை. தொகை உயர்ந்தாலே பயிற்சியின் தரம் உயர்ந்துவிடும் என்று நான் கூறமாட்டேன். பயிற்சியின் தரம் ஒருபுறம் இருக்க, தொகையிலுங்கூட போதியகவனம் செலுத்தப்படவில்லையோ என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

"டிஸ்ட்ரிக்ட் எக்ஸிக்கூடிவ் போர்ஸ்" என்ற வகையில் மலபார் சேர்ந்திருந்தபோது எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டதோ அதைவிட அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதுகுளத்தூர் கலவரம்கூட இப்போது இல்லை. இந்த நேரத்தில் அதிகப்படியான தொகை ஒதுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன என்று கனம் அமைச்சர்தான் சொல்ல வேண்டும். சென்ற ஆண்டிலே செலவான தொகை 374 லட்சம் 58 ஆயிரம் ரூபாய். இப்பொழுது 378 லட்சம் 83 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இவ்வாண்டு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தை பட்ஜெட் மெமொராண்டத்தைப் பார்த்ததில் சரியான தகவல் இல்லை. கனம் அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில் விளக்கம் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

போலீசாருடைய வாழ்க்கை வசதியைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சில தினங்களுக்கு முன்னல் இதே சபையில் பேசுகையில் கனம் அமைச்சர் பதில் சொல்லும்போது, போலிசார்களுக்கான வீடு கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் கூறினர்கள். அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து எனக்குச் சரியான புள்ளி விவரங்கள் ஞாபகத்தில் இல்லை. இருந்தபோதிலும், எவ்வளவு பேருக்கு வீடு கட்டிக் கொக்கப்பட்டிருக்கிறது? அதிகப்படியான பேர்களுக்கு இன்னும் வீடு கட்டிக் கொடுக்கபடாமல் இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் எப்பொழுது முடித்துக்கொடுக்க இயலும் என்று சொல்லவேண்டும். வீடுகள் கட்டிக் கொடுத்தாலும், அந்த வீடுகளுக்கு மின்சார விளக்கு வசதி இல்லை. மின்சார விளக்கு வசதி என்பது போலீஸ்காரர்களை பொறுத்தவரையில் அபூர்வமான பொருளாக இருக்கிறது. அதற்குரிய ஏற்பாடுகளும் சரிவரச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். கிராமத்திலும் சரி, நகரத்திலும் சரி, மின்சார வசதிகள் போலீஸ் லைன்களுக்கு வருவது ரொம்பவும் அபூர்வம், அந்தக் குறையை நிவர்த்திக்கவேண்டும்.

கிராமங்களில் செல்கிற போலீஸ்காரர்களுக்குச் சரியான பிரயாணப்படி வசதி கொடுக்கப்படுவதில்லை. அவர்களது சாதாரண உணவுக்கும்கூட போதுமான அளவில் இப்போதய படித்தொகை அமையவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [18th March 1958

கடைசியாக, நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பேன் ; முன்பெல்லாம் போலீசை ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு பயன்படுத்தி வந்தார்கள். அதே ஒருபோக்கிலே எந்த ஒரு சமயத்திலும் நாம் சென்றுவிடக்கூடாது என்று இந்த அமைச்சரவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது எதிர்க்கட்சியினருக்கு வரும் கடிதங்கள் போலீசாரால் தணிக்கை செய்யப்படுகின்றன. டெலிபோனிலும் ஒட்டுக் கேட்கப்படுகிறது போலீசாரால். எதிர்க்கட்சிக்காரர்களுடைய கூட்டங்களிலே போலீஸ் ரிப்போர்ட்டர்களை நான் காண்கின்றேன். எதிர்க் கட்சித் தலைவர்கள் பிரயாணம் செய்யும்போது அவர்கள் பின்னாலேயே போலீசில் முக்கியமானவர்கள் வருவதை நான் பார்க்கிறேன். இவைகளெல்லாம் அவசியம் இல்லாதவை என்று கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக நாடு இது. இன்று காங்கிரஸ் கட்சி பதவியில் இருக்கலாம். நாளை நாங்கள் வரலாம் அல்லது இன்னொருவர் வரலாம். ஆகவே, போலிஸ் இலாகாவைக் கட்சி விவகாரங்களுக்கு அப்பாற்பட்டவையாக வைத்திருக்கவேண்டும் என்றும், இம்மாதிரியான விவகாரங்களிலே அவர்களை இழுப்பதற்கு எந்த வகையிலும் இடம் கொடுக்காமல் இருக்கவேண்டுமென்றும் நான் வேண்டிக்கொள்வேன்.

ரயில்வே போலீசுக்கு நாம் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதற்காக செலவழிக்கும் தொகையிலே பாதித் தொகையை ரயில்வே இலாகாவிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். அவர்களிடமிருந்து இந்த வகையில் நாம் அதிகமான தொகையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள ஏன் முயற்சிக்கக் கூடாது ? ரயில்வேக்கு கோடானு கோடி ரூபாய் வருமானம் வருகிறது. நமக்கோ பற்றாக்குறை. இந்த நிலைமையிலே ஏன் கொஞ்சம் அதிகப்படியான தொகையை அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள நாம் முயற்சிக்கக்கூடாது என்பதை நான் இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக இந்த பட்ஜட்டைப் பார்த்தால் கல்வி மான்யத்திற்கு அடுத்தபடியாக போலீஸ் மான்யம் மிகப் பெரிய மான்யமாக இருக்கிறது. இந்த மான்யத்திற்கு இவ்வளவு அதிகப்படியான தொகை கோரும்போது, அந்த இலாகா மிகத் திறமையுள்ள இலாகாவாக இருக்கவேண்டும். அதே நேரத்தில் போலீஸ் இலாகாவுக்கு அதிகப்படியாக தொகை கோரப்படுவதைப் பார்க்கும்போது குற்றங்கள் அதிகரித்துவிட்டனவோ என்ற ஐயப்பாடு மற்றவர்களுக்கும் இந்த ராஜ்யத்திலிருக்கும் மக்களுக்கும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு ஒரு மணி நேரம் வேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் சில கனம் அங்கத்தினர்களும் பேசவேண்டுமென்று விரும்பியதால், அடுத்தபடியாக மூன்று அங்கத்தினர்களைக் கூப்பிடலாம் என்று இருக்கிறேன். அவர்களில், ஒருவர் காங்கிரஸ் அங்கத்தினராகவும், இன்னொருவர் டி.எம்.கே. அங்கத்தினராகவும், மற்றும் ஒருவர் என்.டி.வி. அங்கத்தினராகவும் இருப்பார்கள். மூன்று அங்கத்தினர்களும் ஐந்து நிமிஷங்கள் வீதம் பேசவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI A. GOVINDASAMY :** கனம் தலைவர் அவர்களே, போலீஸ்
11-45 a.m. இலாகா மான்யத்திற்காக அதிகத் தொகை ஒதுக்கியிருப்பதை நான் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. இன்றையதினம் இந்த அரசாங்கம் போலீசைத்தான் நம்பி வாழும்படியான நிலைமையில் இருப்பது பரிதாப நிலையாகும். இது நாம் வருத்தப்படவேண்டிய செய்தியாக இருக்கிறது. இப்பொழுது நடப்பது ராம ராஜ்யமா அல்லது போலீஸ் ராஜ்யமா என்ற கேள்வியும் கேட்க விரும்புகிறேன்.



18th March 1958] [Sri A. Govindasamy]

இந்தச் சபை அங்கத்தினர்களுடைய உரிமை கூட பறிக்கப்படுகிறது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபையைச் சுற்றிலும் அதிகமான ஸி.ஐ.டி. போலீஸ் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே, எனக்கு முன்னாலே வீற்றிருக்கும் கனம் அங்கத்தினர் திரு. ஜெயராஜ், எம்.எல்.ஏ. அவர்கள் கக்கூசுக்குப் போகும் நேரத்தில், அவரை ஒரு ஸி.ஐ.டி. போலீஸ்காரர் ஒரு வாரத்திற்கு முன்னால் மறித்துக்கொண்டார். இவரிடத்தில் தகராறு செய்துகொண்டிருக்கும் அந்த நேரத்தில் நான் அந்த இடத்திற்குத் தற்செயலாகப் போனேன். "அவர் ஒரு எம்.எல்.ஏ., எதற்காக அவரை வழி மறிக்கிறீர்?" என்று நான் அந்த நபரைப் பார்த்துக்கேட்க, அதற்கு அவர், "நான் ஸி.ஐ.டி.-யைச் சேர்ந்தவர்" என்று பதில் சொன்னார். அவர் அப்படிச் சொன்னவுடன், "நீங்கள் ஸி.ஐ.டி. என்று நாங்கள் எப்படித் தெரிந்துகொள்வது ? உங்களிடம் நாங்கள் ஏன் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் ?" என்று கேட்டுவிட்டு வந்தோம். இதோ உட்கார்ந்திருக்கிற திரு. ஜெயராஜ் அவர்கள் ஒரு சட்டசபை அங்கத்தினர் ; அவருடைய உரிமை பறிக்கப்படுகிறது என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் ; அதிலும் இந்தச் சபையில் ஒரு வருஷ காலமாக இருக்கிறார். அவரைப் புரிந்துகொள்ளக்கூட முடியாத ஒரு ஸி.ஐ.டி. இருக்கிறார் என்றால் அவர் இவ்வளவு திறமையாக வேலை செய்கிறாரே என்று நினைக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

இந்த ராஜ்யத்தில் அதிகமான கொலைகள் நடக்கின்றன. அந்தக் கொலைகளைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு விடப்படுகின்றன என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன். 27-2-1958-ல் நானும் அறிஞர் அண்ணா அவர்களும் என்னுடைய தொகுதியில் வடக்குச்சிப்பாளையத்தில் ஒரு கூட்டத்தில் பேசினோம். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த விழுப்புரம் தாலூகா, நன்னாடு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர், வரதராஜ உடையார் என்பவர் கூட்டம் முடிந்த பிறகு நடு இரவில் வீடு திரும்பிச் செல்லும் நேரத்தில், அவர் உயிரிழந்து ஒரு பாலத்திற்கு அடியில் காணப்படுகிற நிலைமையை அடுத்த நாள் காலையில் பார்த்தேன். அது கண்ராவியான ஒரு காட்சியாக இருந்தது. வாயிலும், மூக்கிலும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. போலீஸ் திறமையாக நடப்பவர்கள், தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தக் கேஸ் விடப்படுகிற நிலையை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக அவர் அதற்குப் பரிகாரம் தேடுவார், நீதி நிலைநாட்டப்படும் என்ற நல்ல நம்பிக்கையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பல திருட்டுக்கள் நடக்கின்றன. அவைகளைக் கண்டிபிடிக்க முடியாத அளவில் இன்றையதினம் போலீஸ் நிர்வாக அமைப்பு நடக்கிறது என்பது ஆச்சரியப்படத்தக்கது. 9-2-1953-ல் விழுப்புரம் தாலூகா மோட்சகுளம் என்ற இடத்தில் ரவணப்ப ரெட்டியார் வீட்டில் நாலாயிரம் ரூபாய் திருட்டுப் போனது. திருடினவர்கள் யார் என்று சந்தேகத்திற்குரிய பேர்வழிகளைக் கூறினார்கள். அப்பொழுது சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்த தாவுது என்பவர் ஒரு நோட்டீஸ் போட்டு, கண்டுபிடிப்பவர்களுக்கு நன்கொடை கொடுக்கமுடியும் என்று சொன்னார்.

இப்பொழுது எங்கள் மாவட்டத்தில் சத்யவாகீச அய்யர் என்பவர் டி.எஸ்.பி. ஆக வந்திருக்கிறார். அவர் மிகவும் திறமையானவர். இந்தக் கேஸைக் கண்டுபிடிக்க என்று 1-8-1957-ல் இந்தப் பிரச்னையைச்சொல்லி இப்பொழுது யார் யார் கூட்டாகத் திருடினார்களோ அவர்களைக் காட்டிக் கொடுக்க ஒருவன் தயாராய் இருக்கிறான் என்றும், வேண்டும் என்றால் அதற்காக தனி போலீசாரோ, போலீஸ் நாயோ அங்கே வரப்போகிற செய்தி கேட்டு, யார் திருடினவர்களைக் காட்டிக் கொடுப்பதாகச் சொன்னாரோ அவர் பயந்து ஊரை விட்டே ஓடிவிட்டதாகச் செய்தி வந்தது. விழுப்புரத்தில் வேலை பார்த்த செல்லையா என்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கேஸ் அனுப்பப்பட்டு, கீழ் அதிகாரி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கேஸை அமுக்கிவிட்டார். அவர்தான் கள்ளச் சாராயம் எடுத்துச் சென்றவருக்கு உடந்தையாக

இருந்து, மதுவிலக்குக் குற்றம் சாட்டப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். போலீசார் மதுவிலக்குக்கு எதிர்ப்பாக இருக்கிறார் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார் என்றால் ஆத்திரப்படுகிறார்கள். இங்கே ஒரு குறிப்பிட்ட கேஸ் நடந்தது. செல்லையா என்பவரிடம் ஜீப் இருக்கிறது. புதுச்சேரியிலிருந்து கள்ளச் சாராயத்தோடு போனவரைத் தொடர்ந்து மதுவிலக்கு ஸி.ஐ.டி. துரத்தி வரும்போது நடு வழியில் கார் கவிழ்ந்துவிட்ட காரணத்தால், புதுவையிலிருந்து சாராயத்தை எடுத்துச் சென்றவருடன் உடந்தையாகச் சென்ற செல்லையா என்னும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டு, இப்பொழுது வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். இம்மாதிரியான சமயங்களில் சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் போலீசாருடைய சம்பள உயர்வுக்காகப் பாடுபடவில்லை அவர்களுக்காகப் பேசவில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. கரிய கவுண்டர் பேசினார்கள். நாங்கள் அது சம்பந்தமாகப் பேசியிருக்கிறோம். போலீசாருடைய சம்பளம் உயர்த்தப்பட்டு, அவர்களுடைய அந்தஸ்து உயர்ந்தால், அவர்கள் நல்ல முறையில் நம் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பார்கள். இதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. அவர்களுக்கு கட்டிக்கொடுக்கும் வீடுகள் நல்ல முறையில், சுகாதார வசதிகளுடன் இருக்கவேண்டும் என்று நாங்கள் பல முறை வற்புறுத்திப் பேசியிருக்கிறோம். இப்போது பத்துப் பதினைந்து வருட காலமாக திறமை வாய்ந்த ஹெட்கான்ஸ்டபிள்கள் சப்-இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டு வந்தும், அவர்களுடைய பதவி இன்னமும் நிரந்தரமாக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஏழை சப்-இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். திறமைக்குக் காரணமாக இருக்கக் கூடியவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு சர்க்கார் எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இலாகாவின் திறமை பலவகையிலும் உயரவேண்டும் என்பதற்காக நாங்கள் இங்கே சொல்லப்படுகிற குறைகளையெல்லாம் குற்றச்சாட்டுகளாக கருதாமல் இவற்றுக்கும் எல்லாம் உடனடியாகப் பரிகாரம் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள்
11-50 a.m. என்ற நம்பிக்கையில் நான் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* **Sri S. RAMASAMI THEVAR :** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தின்மீது நான் பேசும்போது சில குறைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக எங்கள் மீது கோபப்படாமல் அவைகளைக் களைவதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதன்முதலாகப் போலீசாருக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கவேண்டும், அவர்களுக்கு நல்ல சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதை நாங்கள் தாம் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் அவர்களுக்குத் திறமை இல்லை, அவர்களுக்குத் திறமை குறைவாக இருக்கிறது என்று சொல்லவரவில்லை. திறமையோடு அவர்கள் இன்னும் நல்ல பணியாற்றவேண்டும் என்பதாகத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளையர் காலத்தில் போலீஸ்காரர்களுக்கு அதிகச் செலவு செய்து வந்தார்கள் என்று நாம் சொல்லிவந்தோம். அதைவிட இப்போது அதிகமான அளவில்தான் காங்கிரஸ் ஆட்சியில் செலவிடப்பட்டு வருகிறது என்று சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றியும் நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. போலீசார் தங்கள் கடமைகளைச் செய்யும்போது மக்கள் பயப்படவேண்டியதில்லை. ஆனால் இன்றோ போலீசாரைக் கண்டவுடன் மக்கள் பீதி அடைகிறார்கள். பயப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலை சீக்கிரமாக மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு போலீசாரைக் கண்டு பயம் இல்லாமலும், போலீசாரும் யாருக்கும் பயந்து தங்கள் கடமைகளைச் செய்யாமல் இருக்காமலும் நல்ல முறையில் பணியாற்ற தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக இன்றையதினம் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு வரக் கூடிய கடிதாசுகள், மற்ற தஸ்தாவேஜுகள் முதலியவற்றை போலீஸ்காரர்கள் தணிக்கை செய்கிறார்கள். ஆங்கில ஆட்சியில் அவ்வாறு செய்யப்பட்டது. இது தவிர்க்க வேண்டிய செய்கையாகும். நாங்கள் விரோதிகள் அல்ல. இந்த நாட்டை விரோதிகளுக்குக் காட்டிக் கொடுக்கக் கூடியவர்களும் அல்ல. இதை நமது அரசாங்கத்தார் நினைவில் வைத்துக்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக போலீசார் தங்கள் கடமைகளிலிருந்து பலபல சமயங்களில் தவறிவிடுகிறார்கள் என்பதுதான் பொதுவான குற்றச்சாட்டாகும். அவர்கள் இல்லாமல் நாடு பாதுகாக்கப்படமுடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்தப் போலீஸ் படை சரியான முறையில் தங்கள் கடமைகளை நன்கு உணர்ந்து பணியாற்றவேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

உதாரணமாக எமது தொகுதியில் விவசாய நிலத்தின் பேரில் ஒரு தகராறு எழுந்தது. போலீசார் ஒருதலைப்பட்சமாக—பணம் கொடுத்தவர்களுக்குப் பரிந்துகொண்டு பல அநீதிகளை இழைத்திருக்கிறார்கள். அந்த நிலத்தைச் சாகுபடி செய்தவன் அதில் தான் விளைத்திருந்த சோளத்தை அறுவடை செய்து கொண்டு போன காலத்தில் போலீசார் மற்றொருவர் கொடுத்த தகவலை வைத்துக் கொண்டு நடுவழியில் அவனை நிறுத்தி சோளத்தைப் பறிமுதல் செய்ததோடு நிலக்காரருடைய அனுமதியின்றியே ஏலத்தில் விட்டிருக்கிறார்கள். அதுவும் கூட இல்லாமல் அந்த நிலத்தைச் சுற்றி சாகுபடி செய்து கொண்டிருந்தவர்கள் நிலத்தில் சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயி இவன்தான், நிலம் இவனுக்குத்தான் சொந்தம் என்று சொல்லியபோதிலும் கேளாமல் அங்கிருந்த அவனுடைய மனைவி மக்களை அடித்துத் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். இதைப்பற்றி அந்த விவசாயி முறையிட்டுக் கொண்டான் என்பதற்காக அவன்மேல் பல பொய்யான கேஸ்கள் எல்லாம் போடப்பட்டு வருகிறது. கேஸ் விசாரணை நடக்கும் ஒவ்வொரு சமயமும் அவன் மனைவி குட்டிகளோடு செலவு செய்து கொண்டு போகவேண்டியிருக்கிறது. . . .

* **Sri A. MARIAPPAN :** கனம் தலைவர் அவர்களே, போலீஸ் இலாகா மானியக் கோரிக்கையை ஆதரிப்பதோடு கூட அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போலீசார்களைப் பற்றி அதிகமான புகார்களைச் சொல்லிக் கொள்வதோடு அவர்களைக் கண்டே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பயப்படுவதற்குக் காரணம் புரியவில்லை. ஏனெனில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களைப் பொறுத்தவரையில் பொதுக்கூட்டங்கள் நடந்தாலும், பாராட்டுக் கூட்டங்கள் நடந்தாலும் ஏங்கு பார்த்தாலும் கலைப்பதற்கே முயற்சி செய்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள்—குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் நடத்துகிற கூட்டத்தில் கலந்து கொள்ள விருப்பம் இல்லையென்றால் கூட்டத்திற்குச் செல்லாமல் இருக்கலாம். ஆனால் கூட்டத்திற்குப் போவது கூட்டத்தைக் கலைத்து கலாட்டா செய்வது, கற்களை எறிவது போன்ற தவறான முறையில் நடந்துகொள்கிறார்கள். அமைதியை உண்டுபண்ண போலீசார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறேன்.

குறிப்பாக சேலத்தில் ஒரு பொதுக்கூட்டம், பாராட்டுக் கூட்டம் நடந்தபோது அவர்கள் கல்லை எறிந்தார்கள், விசில் அடித்தார்கள். இது போன்ற பல காலித்தனங்களைச் செய்தார்கள். இந்தமாதிரியான பல காலித்தனங்களைச் செய்ததனால்தான் போலீசார்களைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பயப்படுகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** இந்த அவையில் "காலித்தனம்" என்று சொல்வது அவ்வளவு பொறுத்தமானதா என்று அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER :** இந்த வார்த்தையை இந்தச் சபையில் உபயோகிக்க வேண்டாம் என்பது என் அபிப்பிராயம்.

* SRI A. MARIAPPAN : இனி காலித்தனம் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறேன். அவர்களுடைய போக்கு இந்த நிலைமையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான் இதைச் சொன்னேன். ஆகவே தான் போலீஸ்காரர்களைக் கண்டு பயப்படுகிறார்கள். அமைதியை நிலைநாட்ட போலீஸ் இலாகா திறம்பட பணியாற்றி வருகிறது. ஒன்றிரண்டு இடங்களில் சில தனிப்பட்டவர்கள் தவறான முறையில் நடந்து கொண்டிருந்தாலும் அவர்கள் நல்லமுறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. சேலம் ஜில்லாவில் பல குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதோடு இன்னொன்று. அங்கே ஒரு இடத்தில் காங்கிரஸ்காரர்கள் கூட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிற போது எதிர்க்கட்சிக்காரர்கள் அன்றையதினமே அங்கேயே கூட்டம் நடத்தவேண்டும் என்று விரும்பினால் உடனே போலீஸ்காரர்கள் அவர்களுக்குச் சலுகை காட்டும் வகையில் தான் எங்களிடம் பேசி, "நீங்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், உங்கள் கூட்டத்தை அப்புறம் இன்னொரு நாள் வைத்துக் கொள்ளுங்கள்" என்பதாகச் சொல்லி அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். இப்படி இவர்கள் அவர்களிடத்தில் சலுகை காட்டுவது தான்தப்பு என்பதாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே சமயத்தில் போலீஸ்காரர்களுக்கு குடியிருக்க நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும். அதோடு போலீஸ் ஸ்டேஷன்களை இன்னும் சௌகரியமான இடங்களில் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். பலவிடங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்கள் நல்ல முறையில் இல்லை. ஆகவே, போலீஸ்காரர்கள் நல்ல முறையில் சேவை செய்ய ஸ்டேஷன்கள் நல்லவிடங்களில், சௌகரியமான இடங்களில் அமைக்கப் படவேண்டும். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மதுவிலக்குத் திட்டம் பொறுத்த வரையில், இன்னும் தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஒரு சமயம் எனக்குப் படுகிறது, இந்த போலீஸ் இலாகாவிலிருந்தே மதுவிலக்குத் திட்டத்தை எடுத்து விட்டால்தான் போலீஸின் திறமை இன்னும் உயரும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகவே, மதுவிலக்குத்திட்டம் பொறுத்தவரையில் போலீஸின் பேரில் பெரிய இழுக்கு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு மதுவிலக்கில் இன்னும் தீவிர சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டு, போலீஸ் கான்ஸ்டபிள்ஸ், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் செய்யும் குற்றங்கள் பெரிய அதிகாரிகளின் கவனத்திற்கு வரும்போது அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தயங்கக் கூடாது என்றும் சொல்லிக் கொண்டு போலீஸ் இலாகாவின் திறமையைப் பாராட்டிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI C. N. ANNADURAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை தரப்படுவதற்கு முன்னாலேயே
12-20 p.m. அதிலே ஒரு வெட்டு அமைத்து அவ்வெட்டின் மூலம் அத்துறையைப் பற்றி எதிர்தரப்பில் உள்ளவர்கள் அவர்களது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. போலீஸ் துறையின் பேரில் நடத்தப்படும் இந்த கருத்துறை வழங்கலில், போலீஸ் துறைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் இதனுடன் தொடர்புடையனவாகக் உள்ள விஷயங்களும் விவாதிக்கப்படுகின்றன. எதிர்தரப்பில் உள்ளவர்களானாலும் சரி, அல்லது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி, நம் மாநில போலீஸ் இலாகாவின் திறமையைப் பற்றி யாருக்கும் ஒரு துளி ஐயப்பாடும் இல்லை. போலீஸ் துறை மிக்க திறமையாக நடத்தப் படுகிறது. திறமையுள்ளவர்களால் நடத்தப் படுகிறது என்பதில் கருத்து மாறுபாடில்லை. ஆனால் இருக்கிற கருத்து மாறுபாடு அத்தனையும், இவ்வளவு திறமையுள்ள போலீஸ் துறையை ஆட்சியாளர்கள் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதில்தான் இருக்கிறது. திறமையுள்ளவர்கள், திறமையாக பணியாற்றுகிறவர்கள் என்று சொல்வது ஒன்று, அவர்களுடைய திறமை எதற்காக பயன்படுத்தப் படுகிறது என்பது மற்றொன்று. அந்த வகையில் பார்க்கும்போது, ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கே சிலவேளை போலீஸ் துறையின் மேல் அதிருப்தி ஏற்படக்கூடும்.



உதாரணமாக, எனக்கு முன்னால் பேசிய சேலம் அங்கத்தினர் மதுவிலக்கு இலாகாவையே போலீஸின் மேற்பார்வையில் இருந்து எடுத்துவிட்டால் தான் மதுவிலக்கு வெற்றிகரமாக நடக்கும் என்றும் போலீஸ் துறைக்கும் இழுக்கு இல்லாமல் இருக்கும் என்றும் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னதில் இருந்து போலீஸ் துறையின் திறமையில் அவருக்கு அதிருப்தி இருக்கிறது என்று தெரிகிறது. நாங்கள் இந்தப் பகுதியில் இருந்து எடுத்து வாதாடுவதெல்லாம்—போலீஸ் துறையில் உள்ளவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல—அவர்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள்—ஆளும் கட்சியினர் அவர்களை எந்த வகையில் பயன்படுத்துகிறார்கள்—என்பதைத்தான் பொறுத்திருக்கிறது. ஆளும் கட்சியினர், எப்பொழுதும் அதிகாரிகள் செய்கிற நடவடிக்கைகளை ஆதரித்தே தீர வேண்டுமென்ற அகராதி அரசியலில் நீண்ட நாட்களாக ஏற்பட்டு விட்டது. அந்த அகராதியை, ஆளும் கட்சியில் யார் அமர்ந்தாலும் பயன்படுத்துவதால், இவ்வளவு திறமையுள்ள போலீஸ் துறை நமக்கு இருந்தபோதிலும் அதனால் நாட்டு மக்களுக்குச் செய்யும் நற்பணிகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. கனம் அங்கத்தினர் கரிய கௌண்டர் அவர்கள் பேசும்போது—மிக்க ஆர்வத்தோடு—போலீஸ் துறையினர் சரியாக நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களது பேச்சை மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன். "ஆளும் கட்சியில் இருந்து பேசுகிறேன்", "ஆளும் கட்சியிலிருந்து பேசுகிறேன்" என்று அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்களுக்கு ஆளும் கட்சியில் இருந்து நீண்ட நாள் பழக்கம். ஆளும் கட்சி மாறியிருக்கிறதே தவிர கரிய கௌண்டர் அவர்கள் எப்பொழுதும் ஆளும் கட்சியில் இருந்து பழக்கப் பட்டவராவார். ஆகவே, "ஆளும் கட்சியிலிருந்து சொல்கிறேன், ஆளும் கட்சியிலிருந்து சொல்கிறேன்" என்று சொல்லி அவர் பழக்கப்பட்டு விட்டார்கள். நிற்க, இந்தத் துறையில் உள்ளவர்கள் சரியாக பணியாற்றவில்லை என்று நான் குறிப்பிடவில்லை. நம் மாநிலத்தில் மூன்று கோடி ஐம்பத்தேழு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். 31,000 பேர்கள்தான் போலீஸ் துறையில் பணியாற்றுகிறார்கள், என்று இந்த அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. ஆக, மக்களின் எண்ணிக்கையும் போலீஸ் துறையினரின் எண்ணிக்கையும் பார்க்கும்போது கடினமான ஒரு காரியத்தைத்தான் போலீஸ் துறையினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. சென்ற கிழமை என்று நான் கருதுகிறேன்—நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் கோவையில் பேசுகிற நேரத்தில் "டைட் ரோப் வாக்கிங்"—சர்க்கஸில் கம்பியில் நடப்பதைப் போல்—அவர்கள் நடக்க வேண்டியிருக்கிறது என்று அவர்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு ஆட்பட்டு பணியாற்ற வேண்டியவர்களை ஆளும் கட்சியினர் பயன்படுத்தும் வகையைத்தான் நாங்கள் மிக மிக வன்மையாக கண்டிக்கிறோம். ஆளும் கட்சியினர் இத்துறையில் உள்ளவர்களை தவறான முறையில் பயன் படுத்துகிறார்கள் என்று சொல்லும் போது அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்கக் கூடும். ஆதாரங்களை வைத்து நிரூபித்துக் காட்ட எதிர்தரப்பில் உள்ளவர்களுக்கு வசதி குறைவு என்பது ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். போலீஸ் அமைச்சராக இருக்கும் பக்தவத்ஸலம் அவர்கள் இம்மாமன்றத்தில் ஒரு முறை பேசும்போது சொன்னார்கள். "காங்கிரஸ் இயக்கத்தில் நான் ஈடுபட்டிருந்த போது என்னை ஒரு போலீஸ் அதிகாரி ஒருமுறைக்கு மூன்று முறை அடித்தார், அப்பொழுது எனக்கு வலிக்கக்கூட இல்லை, அதற்குப் பிறகு வலி எடுத்து இப்போது அவர் எங்கோ பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார் என்று....அதற்காக நான் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை" என்றும் குறிப்பிட்டார்கள். நாங்களும் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை. கனம் அங்கத்தினர் ஒருவர் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னது போல், போலீஸ் துறையை ஆளும் கட்சியினர் தங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதினால், அது உங்கள் கட்சிக்குத்தான் நாட்டில் எதிர்ப்பு உணர்ச்சியை வளர்க்குமே தவிர—ஆளும் கட்சியினர் போலீஸ் துறையை தங்களுக்காக பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று உங்களுக்குத்தான் அது ஒரு கெட்ட பெயரை உண்டாக்குமே தவிர—எதிர் தரப்பில் உள்ளவர்கள்—அவர்கள் போலீஸ் துறையினரால் துன்புறுத்தப்பட்டாலும், கொடுமைப்படுத்தப்பட்டா

லும், அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டாலும்—அதனால் அவர்களுக்கு இழுக்கு எதுவும் இல்லை—அதனால் அவர்களது செல்வாக்கு சிதைந்து போகப்போவதுமில்லை.

பொதுக்கூட்டங்களில் கலவரங்கள் குழப்பங்கள் ஏற்படுமானால், அதை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை, ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் இன்னொரு கட்சியைத்தான் பழி சொல்லிக் கொண்டிருப்பார். அப்படி பொதுக்கூட்டங்களில் கலவாம், குழப்பம் ஏற்படும்போது அதை அடக்குகிற முறையை விட்டுநம் போலீஸ் துறையினர் ஏதாவது ஒரு புது முறையைக் கண்டு பிடித்தேயாகவேண்டும். மேல் நாடுகளில் கிளர்ச்சிகள் அதிகமில்லை, ஆகவே இது தேவையில்லை என்று இம்மாமன்றத்தில் வாதாடப்பட்டது. மேல் நாட்டில், சென்ற திங்களில், அமைதிக்கு பெயர் போன பிரிட்டிஷ் நாட்டில்—சட்டத்தையும், ஒழுங்கையும் உலகத்திற்கே அறிவிப்பவர்கள் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டிருக்கும் பிரிட்டிஷ் நாட்டில்—கூட்டம் ஒன்றில் பேச வந்த அமைச்சர் ஒருவர், வீட்டு வாடகையை அதிகப்படுத்தலாம் என்று சொன்னதற்காக அவர் பேச அனுமதி கொடுக்காது, அவர் மேல் கோழி முட்டையை வீசினார்கள்—தக்காளிப்பழங்களையும் வீசினார்கள்—அப்பொழுது அந்தவிடத்தில் கண்ணீர் புகை வீசினார்களா ?—துப்பாக்கியால் சுட்டார்களா ?—அல்லது அவர்கள் பலமான தடியடிக்கு ஆளாக்கப்பட்டார்களா ?—அப்படி ஒன்றும் நடந்ததாக பத்திரிகைச் செய்தி கூறவில்லை—அமைச்சர் அவர்களை பந்தோபஸ்தாக அழைத்துச் சென்றார்கள் என்று மட்டும் கூறப்பட்டிருக்கிறது. அதோடு அவர் கூறியதென்ன ? நான் சொல்வது கேட்டு அதிருப்தி ஏற்பட்டு இப்படிச் செய்கிறீர்கள், பிறகோர் காலை நான் செய்தது சரி என்று உங்களுக்குப் படும்போது அப்பொழுது நீங்கள் என்னை ஆதரிப்பீர்கள் என்று சொன்னதாக பத்திரிகையில் பார்த்தேன். அமைச்சர் அவையில் அடிக்கடி மாறுதல் ஏற்பட்டாலும் அதையொட்டி போலீஸ் துறையில் மாறுதல் அடிக்கடி ஏற்படப்போவதில்லை. நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள், பெல்வந்த்ராய் மேத்தா கமிட்டியைப் பற்றி பேசும்போது நாங்கள் விரும்பியிருந்தால் அதை மூடி மறைத்திருக்க முடியும் என்றார்கள். அந்த மனப்பான்மைதான் இன்றைய தினம் போலீஸ் துறையை தவறான பாதையில் சிற்சில வேளைகளில் திருப்புகிறது. நாங்கள் பேச்சு உரிமை தந்து விட்டோம், அதனால்தான் இவ்வளவு கேடுகள் நடக்கிறது என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள்—கனம் மஹாலிங்கம் அவர்கள் என்று நினைக்கிறேன். மேல் நாடுகளில்—ரஷ்யா போன்ற நாடுகளில்—போலீஸ் துறையினர் குற்றத்தை ஒப்புக் கொள்ளவைத்தல் போன்ற காரியங்களில் மிகவும் கொடுமை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே முறையை இங்கு கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறீர்களா என்று ஆளும் கட்சியினரைக் கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் தங்களிடத்தில் இன்றையதினம் ஒப்படைக்கப் பட்டிருக்கிற போலீஸ் துறையை, தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற ஒரு இடைக்காலப் பொறுப்பு என்று கருத வேண்டுமே தவிர—நிரந்தரமான பொறுப்பு என்று அவர்கள் கருதுவார்களேயானால்—அது தவறாகும். போலீஸ் துறை நிரந்தரமானது—ஒரு அமைச்சரவை நிரந்தரமானது அல்ல. நிரந்தரமானது அல்லாத ஒரு அமைச்சரவை, நிரந்தரமான போலீஸ் துறையை, தங்கள் செல்வாக்கை நிரந்தரமானதாக ஆக்கிக் கொள்ளப் பயன்படுத்துகிறார்கள் என்பது தான் எனது பலமான குற்றச்சாட்டு. அதை, அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் அப்படிச் செய்யாமல் இருந்திருக்கலாம்—அமைச்சர்கள் கூட சில விஷயங்களில் தனிப்பட்ட முறையில் அவ்வகையில் தூண்டுதலாக இருக்கிறார்கள் என்று நான் ஐயப்படுகிறேன்.

12-10 p.m. எனது நண்பர் அன்பழகன் அவர்களும், சத்தியவாணி முத்து அவர்களும், இதற்கு முன்னாலே பேசிய நேரத்தில், சென்னையில் நடைபெற்ற போலீஸ் அட்டூழியங்களைப் பற்றி போலீஸ் அமைச்சரிடத்திலே முறையிட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் தாறுமாறான முறைகளிலே நடக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அப்படியானால் அவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? அப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாத நேரத்தில், அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் அல்ல, அவர்களை நத்திப் பிழைக்கவேண்டுமென்ற ஒரு அரசியல் கட்சி—எந்த அரசியல் கட்சி என்று நான் குறிப்பிட விரும்பவில்லை—போலீசாரை யாராலும் மாற்ற முடியாது, அவர்களை மாற்றவேண்டுமென்று திராவிட முன்னேற்ற கழகத்தினர் சொன்னால், நாங்கள் போய் போலீஸ் அமைச்சரிடம் சொல்லுகிறோம் என்று பகிரங்கமாக கடை வீதிகளிலே பேசிக்கொள்கிறார்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் போலீஸ் துறையைப் பயன்படுத்த முடியும் என்று பேசுவதனால்தான் சில போலீஸ் அதிகாரிகள் தாறுமாறாக நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.





போலீசாரின் திறமைக்கு ஐயப்பாடு சொல்லத் தேவையில்லை. உண்மையிலே திறமை படைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே தான் மிகக் குறைந்த போலீஸ் படையை வைத்துக்கொண்டு மிகப் பெரிய நாட்டைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள். இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை அலசலாம் என்று நான் கருதுகிறேன். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். போலீஸ் துறையினர் சட்டத்தையும் ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலை நாட்ட இருக்கிறார்கள். இந்த சட்டமும், ஒழுங்கும் எவ்வெப்போது குலைகின்றன, அப்படி குலைந்து போவதற்குக் காரணங்கள் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். எதிர் கட்சிக்காரர்கள் அப்படிச் சட்டங்களை குலைக்கிறார்கள் என்று சுலபமாகச் சொல்லிவிடுவதில் பயன் இல்லை. போடப்படுகிற சட்டங்கள் நாட்டு மக்களால் போற்றப்பட்டு வரவேற்கக் கூடிய சட்டங்கள் ஆகவும், நடத்தப்படுகிற ஒழுங்குமுறைக்கு எதிர்க்கட்சியாக இருந்தாலும் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற தன்மையிலே அந்த ஒழுங்குமுறை இருந்தால், போலீஸ் துறையினருக்கு, இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் "tight rope walking" ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலே ஏற்படுகிற கொந்தளிப்புகளை அமைச்சர்கள் கவனிக்க மறுக்கிறார்கள். நாட்டிலே ஏற்படக்கூடிய வேலை நிறுத்தங்கள், அந்த வேலை நிறுத்தங்களுக்கு முன்னால் அந்த வாடை வீசுகிற நேரத்திலே, அந்த வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கு அமைச்சர்கள் அவர்கள் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்வதில்லை. வேலை நிறுத்தம் நடைபெறுகிற நேரத்தில் அதனாலே கலகங்கள் ஏற்பட்டு விடும் என்ற பயத்தினாலே போலீஸ் துறையினர் மிக்க திறமையாகப் பணியாற்றவேண்டுமென்ற கடமை உணர்ச்சியினால் உந்தப்பட்டு, காலித்தனம் செய்கிறார்கள் என்று ஒரு சிலரைக் கருதி கடுமையான அடக்குமுறைகளை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு வருகிறது. இந்த மாகாணத்திலே மின்சாரத் துறையினர் வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ.வினர் தங்கள் குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். பி. அண்டு ஸி. மில்ஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இவைகள் எல்லாம், பொதுமக்களுக்கு மட்டுமல்ல, போலீசுக்கும் சோதனை காலம் ஆகும். உண்மையிலே சில போலீஸ்காரர்கள் அடிக்கிற நேரத்தில் யார் பேரில் அடி விழுகிறது என்று பார்ப்பதில்லை. போலீஸ் கான்ஸ்டேபிளின் அண்ணன் ஆக இருக்கலாம் அடிபடுகிறவர் அவருடைய தம்பியாக இருக்கலாம்—கற்பனையில் பேசுவதாக இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் கருதவேண்டாம். அப்படி வெளியில் ஓரிடத்தில் நடந்திருக்கிறது. அடித்தவர் போலீஸ்காரர், அடிப்பட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அடிபட்டவர் அடித்த போலீஸ்காரருக்குத் தம்பியாகவே இருந்திருக்கிறார். போலீஸ் துறையினரை நாம் தான் தவறான வழிக்கு இழுத்துச் செல்கிறோம் என்று ஆட்சியாளர்கள் அந்தப் பொறுப்பை தங்கள் பேரில் போட்டுக்கொள்ள வேண்டும். சட்டம் குலைக்கப்படும் என்ற வாடை வரும்போது, அதற்கான நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் இந்தப் பெரும் பொறுப்பு ஆட்சியாளரிடமிருந்து நீங்குகிற காரணத்தினால், இன்றைய தினம் போலீஸ் துறையினர் சில வேளைகளிலே தவறான வழிகளில் நடக்க நேர்ந்திருக்கிறது. அதற்கான புகார்களைச் சொல்லும் நேரத்தில், நம்முடைய ஆளும் கட்சியினர் "ஆதாரங்கள் காட்ட முடியுமா, ஆதாரங்கள் காட்ட

[Sri C. N. Annadurai] [18th March 1958

முடியுமா" என்று கேட்கிறார்கள். ஐ.ஜி. ஆக இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கும் ராஜரத்னம் அவர்களைப் பற்றி மறுபடியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்படும் என்று நான் கருதியதில்லை. இது விவாதிக்கப்பட்ட பிறகு எனது நண்பர் அன்பழகன் அவர்கள் அதற்கான விளக்கத்தை இங்கே சொன்னதில், காங்கிரஸ் அங்கத்தினரில் ஒருவர், "இதைப் போல ஆதாரம் அற்ற புகார்களைக் கொண்டு வந்து விட்டீர்களே, விசாரணை நடத்தினார்கள், ஒன்றும் பலன் ஏற்படவில்லை" என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொன்னவர் கனம் கரிய கௌண்டர் என்று நினைக்கிறேன். "நீதிபதி விசாரணை, நீதிபதி விசாரணை" என்று சொன்னார்கள். நீதிபதி விசாரணை "**Judicial enquiry**" என்பதற்கும், "**enquiry by judicial Officer**" என்பதற்கும் வார்த்தையிலே மட்டும் மாற்றம் இல்லை. தரப்படுகிற அலுவலிலும், அதிகாரத்திலும் மாற்றம் இருக்கிறது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்த விசாரணை "**Judicial enquiry**" அல்ல என்று அதற்காக யாரை நியமித்தார்களோ அவர்களே கனம் அன்பழகனுக்கு எழுதிய கடிதம் எங்களிடத்தில் இருக்கத்தான் செய்கிறது. அது மட்டும் அல்ல. ஏதோ, "ஆதாரம் காட்டுங்கள், ஆதாரம் காட்டுங்கள்" என்று எங்களை கேட்பது போலவும், நாங்கள் "இல்லை, இல்லை" என்று மறுத்தது போலவும் இந்த மாமன்றத்தில் பேசப்பட்டது.

இந்த புகார் சொல்லப்பட்ட நேரத்தில், கனம் அன்பழகன் "இந்த ஆட்சி சரியான முறையிலே நடந்துகொண்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை, இல்லை, இல்லை என்ற பதிலைத்தான் வலியுறுத்திச் சொல்வேன். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நிரூபிக்க முடியுமா? என்று கேட்டால், அப்படி நிரூபிக்கத் தேவையில்லை என்று கூட நான் சொல்வேன்" என்று சொல்லியிருக்கிறார்.

அதிகாரிகளைப் பற்றி வருகின்ற புகார்களை விசாரித்து பார்க்க வேண்டிய பொறுப்பு, பொறுப்புள்ள ஆட்சியாளரைச்சாருமே தவிர, என்ன என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் குவித்துக் கொண்டு போவது எதிர்கட்சியாளர்கள் இடத்தில் இல்லை. அப்படித்தான் ஆதாரங்களைச் சேகரித்துக் கொடுத்தால் அதற்குத் தான் நீங்கள் என்ன மதிப்பு அளிக்கிறீர்கள்? கனம் கல்யாணசுந்தரம் ஆதாரத்திற்கு மேல் ஆதாரமாக எடுத்துக் காட்டியபோது, ஆட்சியாளர்கள் என்ன பதிலைத் தந்தார்கள். விசாரணை நடத்தப்பட்டு, பிறகு கைவிடப்பட்டது என்ற வழக்கமான பதிலைத் தவிர வேறு என்ன பதிலை பெறுகிறோம்.

போலீஸ்காரர்களின் திறமைகளைப் பற்றி சேலத்திலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருக்கும் மோசடிகளைக்கூட போலீசார் திறமையாக கண்டு பிடித்திருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் திறமைகளை எந்தெந்த காரியங்களுக்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை நான் ஆராய விரும்புகிறேன். சட்டம், ஒழுங்கு—இவைகளை நிலைநாட்டுவதற்கு பொருப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சரவை போலீசாரை இக்கட்டான நிலைமையில் தள்ளுகிறார்களே என்று நான் அவர்கள் விஷயத்தில் பரிதாபப்படுகிறேனே தவிர ஆத்திரப்படவில்லை. மற்றொன்று, போலீஸ் இலாகாவில் செய்திருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி போடப்பட்டிருக்கும் அறிக்கையில் இந்த வாசகம் இருக்கிறது. இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் தவறான முறையில் இதை எப்படி புகுத்தினார்கள் என்பதை என்னால் யூகித்துக்கொள்ள முடியவில்லை.

"**On the same day, at Tirupapuliyur and Cuddalore N.T. a party headed by Sri A. Govindasamy, M.L.A., as a protests against the inclusion of Devikulam and Peermedu in the Kerala State observed hartal. They also demanded that all shops should be closed. While shops remained closed at Tirupapuliyur, the owners of one shop refused to do so. Eight persons including the M.L.A. attacked the shop-keeper and committed theft of cash Rs. 166 from the shop**".



18th March 1958] [Sri C. N. Annadurai]

இந்த வழக்கு போடப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு, அவர் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்கப்பட்ட பிறகு, ஒரு எம்.எல்.ஏ. ஒரு கடையில் 166 ரூபாய் கொள்ளை அடித்தார் என்று அறிக்கையில் போடப்பட்டிருப்பது, "எதிர் கட்சியிலிருக்கும் ஒருவர் 166 ரூபாய் திருடியிருக்கின்றார்" என்று அமைச்சர் படித்துப் படித்து சந்தோஷப்படுவதற்காகவே போடப்பட்டிருக்கிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். ஏன் இப்படிப் போட வேண்டும்? "**Alleged**" என்ற வார்த்தைகூட அதில் இல்லை. ஆகையினால், தவறு செய்கின்றவர், போலீஸ் துறையினரா, அல்லது ஆட்சியாளரா என்று பார்க்கின்றபோது, ஆட்சியாளர்கள் கொண்டுள்ள மனப்பான்மைதான் குறையுடையது என்பது தெரிகிறது.

ஜனநாயக முறையில், பேச்சு உரிமை தந்திருக்கிறது, கிளர்ச்சி செய்வதற்கு உரிமை தந்திருக்கிறது, அதனால் அக்கிரமங்கள் நடக்கின்றன என்று கனம் கரிய கௌண்டர் அவர்கள் ரொம்பவும் உருக்கத்தோடு சொன்னார்கள். அவர்கள் பழைய நினைவு வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே, ஒன்று மட்டும் நான் ஆட்சியாளருக்குச் சொல்லுவேன். ஆளும் கட்சி ஜனநாயகப் பாதையில் செல்லுகின்ற வரையில், இந்த உரிமைகளைத் தருவது என்பது அவர்களுடைய தலையாய கடமை. அதை அவர்கள் மறுக்க முடியாது. இந்த உரிமைகளை நீங்கள் மறுத்தால் ஜனநாயகத்தை மறைக்கிறீர்கள். ஜனநாயகம் மறுக்கப்பட்டால் என்ன நடைபெறும் என்பதை இந்தோனேசியா காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த உரிமைகள் தரப்படுகின்றன என்றால், அது உங்களைப் பாதுகாக்கவும் உங்களுடைய கட்சியின் கண்யத்தைப் பாதுகாக்கவும் தரப்படுகின்றதே தவிர, காலத்தை ஒட்டி தரப்படுகின்றதே தவிர, எந்த நாட்டிலும் தரப்படாத உரிமைகள் ஒன்றையும் நீங்கள் பிரமாதமாக எங்களுக்குத் தந்துவிடவில்லை. எஜமானன் மேஜையிலிருந்து எறியும் ரொட்டித் துண்டைப் பொறுக்கிக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களைப் போல் நாங்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டிருப்பது போலவும் ஆளும் கட்சியினர் கருதுகின்றனர். உங்களுக்கு சர்வாதிகார பாதையில் போவதற்கு ஆசையும் இருக்கிறது. ஆனால் அதை வெளிப்படையாக சொல்வதற்கும் வெட்கமாகவும் இருக்கிறது. வெளிப்படையாக "உங்களுக்கு இந்த உரிமைகளை மறுக்கிறோம்" என்று சொல்லிவிடுங்கள். "எதிர் கட்சிகள் கூட்டம் போடக்கூடாது, எழுதக் கூடாது" என்று சட்டம் செய்து விடுங்கள். அதற்குப் பிறகு என்ன நடக்கும். '**Guided Democracy**'-ஐ பல நாடுகளில் பார்க்கின்றோம். இதைச் சொல்லும்போதே அண்ணாதுரையும் வெளி நாட்டுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறாரோ என்று நிதி அமைச்சர் எண்ணிக்கொண்டு தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறார்.

பேச்சு உரிமை, எழுத்துரிமை எல்லா நாடுகளிலும் சர்வ சாதாரணமாக தரப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தில் இன்றைய தினம் மகாராணி ஆட்சி நடக்கிறது. அந் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி கூடி மகாராணி ஆட்சி ஒழிய வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறது. அரண்மனைக்கு எதிரில், திடலில், மகாராணியின் ஆட்சி நீக்கப்படவேண்டும் என்று பேசும் அளவுக்கு ஜனநாயக உரிமை அங்கு தரப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளில் இல்லாத ஜனநாயக உரிமைகளைத் என்ன நீங்கள் எங்களுக்குத் தந்து விட்டீர்கள்? ஜனநாயக உரிமை தரப்பட்டு அது நல்ல பலன் தந்து வருகிறது.

12-20 p.m.

கூட்டங்களில் குழப்பங்கள் நேர்ந்தால் அப்பொழுது எப்படி பக்குவமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி நான் எடுத்துச் சொல்லுவேன். சாதாரணமாக நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். மற்ற நாடுகளில் கூட்டங்களில் குழப்பங்கள் ஏற்பட்டால் அங்கு போலீஸ்காரர்கள் தங்களுடைய தடியால் அடிப்பது இல்லை, தங்களிடமுள்ள ரப்பர் ப்ளட்ஜனால்தான் அடிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி அடிக்கும் போது கலகக்காராகள் மயக்கமாக கீழே விழுந்து விடுவார்களாம். ஒரு விதமான ஆபத்தும் ஏற்படாத வகையில் ரப்பர் ப்ளட்ஜனால் அடிப்பார்களாம். எகிப்து நாட்டில் ஒரு விதமான முறையைக் கையாளுகிறார்களாம்.

[Sri C. N. Annadurai] [18th March 1958

அதாவது நெருப்புப் பிடித்தால் அதை அணைக்கக்கூடிய யந்தரங்களில் இருக்கும் தண்ணீரை உபயோகப்படுத்தி கூட்டத்தைக் கலைப்பார்களாம். அந்த தேசம் ஒரு குளிர்ந்த தேசமாதலால் அந்தப் பச்சை தண்ணீரைக் கண்டு பயந்து கொண்டு கூட்டம் கலைந்து விடுமாம். அதைப்போலவே இங்கும் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி இங்கு செய்தால், இது வெப்பம் அதிகமுள்ள நாடு, கலகக்காராகள் ஒரு அணாவுக்கு சன்லைட் சோப்பு வாங்கி வைத்துக்கொண்டு குளித்து விட்டுப்போய் விடுவார்கள். அப்படி இல்லாமல் காட்டுமிராண்டித்தனமில்லாத ஒரு முறையைக் கண்டுபிடித்து நடக்க வேண்டும். அப்பொழுது போலீஸ்காரர்கள் திறமையாக நடந்துகொள்ளுவார்கள்.

இப்பொழுது பார்த்தால் போலீஸ்காரர்களுடைய திறமை படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது என்பதை ஆட்சியாளர்களுக்கு பணிவுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெளியூர்களுக்கு நான் போகும் நேரங்களில் பார்க்கிறேன், ஒவ்வொரு புளிய மரத்தின் கீழும் யாராவது ஒரு போலீஸ்காரர் நின்று கொண்டிருப்பார். இம்மாதிரி மரத்துக்கு மரம் நின்று கொண்டிருப்பார்கள். இப்படி ஒரு நாளைக்கு மட்டும் அல்ல பல நாட்களுக்கு அப்படி நின்றுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். அப்படி நான் வெளியூருக்குப் போகும்போது அவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால்,—ஒன்றிரண்டு போலீஸ்காரர்கள் சொல்லாவிட்டாலும் சிலர் சொல்லுகிறார்கள்—ஒருபக்கத்தில் இந்நாட்டுத் தலைவர் வருகிறார் என்றும், இன்னொரு பக்கத்தில் மந்திரி வருகிறார் என்றும், அதற்கு நிற்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே மந்திரிகளுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்கும் மற்ற நாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு வரவேற்புக் கொடுப்பதற்கும் ஒரு தனிப்பட்ட போலீஸ் இலாகாவை அமைத்துக்கொள்ளலாம். மந்திரிகளுக்கு பாதுகாப்பு தர வேண்டும் என்பதற்காக போலீஸ் படையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்: திறமையான இப்படிப்பட்ட போலீஸ் படைகள் கொலை, கொள்ளை முதலிய குற்றங்களைக் கண்டுபிடிக்க இருக்கிறது. நாட்டிலுள்ள சட்டத்தை பாதுகாப்பதற்கும், நிறைவேற்றப்படும் சட்டங்களை அமுல் நடத்துவதற்கும் இந்த படைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட திறமையான படைகளை மந்திரிகளின் பாதுகாப்புக்காக பயன்படுத்திக்கொள்வதால் அவர்களுடைய திறமை குறைந்து போய் விடுகிறது. மற்றும் ஆட்சியாளர்கள் நடத்த வேண்டிய திரப்பு விழாக்கள் ஏராளம். அவைகளுக்கு போலீஸ்காரர்கள் நாள் தவறாமல் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்காக போலீஸ்காரர்களை உபயோகப்படுத்தினால் தங்களுடைய திறமையான காரியங்களாகிய கொலை, கொள்ளை முதலியவைகளை கண்டு பிடிப்பதற்கு, முடியாமல் போய்விடுகிறது. ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் நடத்துகிற கிளர்ச்சிகளை நல்ல முறையில் கவனித்து ஆட்சியாளர்களுக்கு கெட்ட பெயர் வராமல போலீஸ்காரர்கள் நடந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட துறைகளில் மேல் நாட்டில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து பயிற்சி பெற்று வருவதற்கு உயர்தர போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் அல்லது இருவரை மேல் நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் ஆட்சியாளர்களை விரும்பி கேட்டுக்கொள்ளுகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு இருக்கின்ற சில கஷ்டங்களைப்பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிரிக் கட்சியிலுள்ளவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று நான் திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். போலீஸ் துறையை ஆளும் கட்சியினர் தவறான முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்றக் குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கனம் சபாநாயகர் அவாகளே, போலீஸைப் பற்றி இந்த விவாதத்தில் பல அங்கத்தினர்கள் அக்கரையுடன் கலந்து கொண்டார்கள். எனினும் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் எல்லோரும் போலீஸ் சேவையின் அவசியத்தைப்பற்றி மறக்கவில்லை. போலீசார் மக்களுக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. மக்களுடைய



18th March 1958] [Sri M. Bhaktavatsalam]

பாதுகாப்புக்கு அவர்கள் வேண்டியிருக்கிறது என்பதை எல்லா கனம் அங்கத்தினர்களும் ஒப்புக்கொண்டார்கள். அதிலும் கடைசியில் பேசிய திராவிடக் முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் போலீஸாருடைய திறனையும் பற்றி பாராட்டி பேசியிருக்கிறார். முக்கியமாக இந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் அங்கத்தினாகள் திரு. சின்னதுரை, திரு. எஸ். ஆர். முனுசாமி அவர்கள் போலீஸாருடைய நடத்தையை பெரிதும் பாராட்டி பேசியிருப்பதற்கு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அப்படிச் சொல்லும்போது போலீஸாருக்கு நான் வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன் என்று நினைத்து கனம் வ. கோவிந்தசாமி அவர்கள் சிரிக்கிறார். இந்த சட்ட சபையில் எதிர்க் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்கள், கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காத அங்கத்தினர்கள், காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத அங்கத்தினர்கள், அவர்கள்கூட போலீஸாருடைய நடத்தையைப் பாராட்டிப் பேசுவது என்றால் அது கொஞ்சம் குறிப்பிடத் தக்க விஷயம்தான். அதனால் தான் நான் அதை எடுத்துச் சொன்னேன். ஆனால் கடைசியாக பேசிய திராவிட முன்னேற்றக்கழக தலைவர் அவர்களும் மற்ற சில அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். போலீஸ் திறமையாகத்தான் இருக்கிறது, ஆனால் அதை தங்கள் கட்சிக்கு ஆளும், கட்சியினர் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியில் இருக்கிற கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் போலீஸ்காரர்கள் அவர்களுக்கு எதிர்ப்பாகத்தான் இருந்தார்கள், அதிலும் கடுமையாக எதிர்த்தார்கள். அதன் காரணமாக எவ்வளவோ பேர் அடிபடக்கூடியதாகவும் இருந்தது. இதைப்பற்றி கனம் அண்ணாதுரை அவர்களும் குறிப்பிட்டார். போலீஸ்காரர்கள் அவர்களை எதிர்த்தது மட்டும் அல்ல, அப்பொழுது இருந்த ஆளும் கட்சியினருக்கு, இன்றைக்கு அரசாங்கத்தைக் குறைகூறுகின்ற கனம் அங்கத்தினர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் அரசாங்கத்திற்கும் அரசாங்க் போலீசுக்கும் ஆதரவு கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அது எல்லாம் இருந்தும் சர்வ வல்லமையுள்ள ஒரு பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து சுதந்தரப் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த சுதந்தரப் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெற்று சுதந்தரம் பெற்றிருக்கிறார்கள் என்றால் போலீஸ் எதிர்ப்பை கொடுமையைப் பொருட்படுத்தாமல் சுதந்தரப் போராட்டத்தில் வெற்றி அடைந்திருக்கிறோம் என்ற அந்த அனுபவம் இருக்கிறது, அந்த நினைவு இருக்கிறது மக்களுடைய பேராதரவு பெற்று இன்று ஆட்சியை நடத்துகிறோம். அப்பொழுதிருந்த போலீஸாருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வெள்ளைக்கார ஆட்சியையும் அந்தக் கட்சி வெளியேற்றியிருக்கிறது. போலிஸ் சேவை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் வேண்டியிருக்கிறதே தவிர அது காங்கிரஸ் கட்சிக்கு அடியோடு தேவையில்லை. போலீஸ்காரர்களை எங்கள் கட்சிக்கு பயன்படுத்திக்கொண்டு வருகிறோம் என்று யாராவது சொன்னால், கனம் அங்கத்தினர்கள் அவ்வாறு நினைத்தால் அது தவறு என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னார், கூட்டங்களில் கலகம் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக எல்லா பலாத்கார முறைகளையும் போலீஸார் உபயோகிக்கிறார்கள் என்றும் அது போலீஸார் குற்றம் இல்லை, அதற்கு அரசாங்கம்தான் காரணம் என்றும் சொன்னார். ஏதோ கட்சி உணர்ச்சியை வைத்துக்கொண்டு அவ்வாறு அரசாங்கம் போலீஸாரை உபயோகித்து கூட்டங்களில் நடைபெறுகின்ற கலவரங்களை அடக்குவதற்கு உபயோகிக்கிறார்கள் என்றும் சொன்னார். மற்ற நாடுகளிலுள்ள உரிமைகளைப் பற்றியும் சொன்னார். மற்ற நாடுகளில் உரிமை பாதுகாக்கப்படுவது இருக்கட்டும். நம்முடைய நாட்டில் இன்றைக்கு என்ன குறைவு இருக்கிறது ? பொதுக் கூட்டங்களில் பேசப்படுகிறது. அப்படி பேசப்படும் விஷயங்கள் தவிர்க்கப்படுகிறதா ? எவ்வளவோ ஆதாரம் அற்ற, ஆபாசமான விஷயங்கள் கூட எடுத்துப் பேசப்படுகின்றன. அத்தகைய கூட்டங்களில் போலீஸாருடைய தலையீடு இருக்கிறது, அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவா ? இல்லை. சில பேச்சுக்களை போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவைகள் அர

சாங்கத்தின் பார்வைக்கு வருகின்றன. ஆனால் சென்ற 6 அல்லது 7 அல்லது 8 மாத காலங்களில் அல்லது ஒரு வருஷத்தில் நடைபெற்ற பேச்சுக்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் அந்தப் பேச்சுக்களிலிருந்து ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்று அல்லது இரண்டு பேச்சுகளில் பேரில் தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் மற்ற பேச்சுக்கள் எல்லாம் ஆட்சேபகரமாய் இல்லாமல் பேசுகிறார்கள் என்ற அர்த்தம் இல்லை. எனக்குத் தெரியும், கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், போலீஸார் என்றால் பயம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு கனம் அங்கத்தினர் வெளியில் பேசும்போது, எனக்குத் தகவல் வந்திருக்கிறது, "செருப்பைக்கூட எறியலாம், இப்பொழுது ஜனநாயகம் நடக்கிறது, அதற்கு ஒரு ரூபாய் தான் அபராதம், அதற்கு மேல் ஒன்றும் இல்லை" என்று கூட பேசியிருக்கிறார். திட்டுவது பற்றி சொல்ல வேண்டியதில்லை. வசவு மொழிகளைக் கேட்டுக் கேட்டு ஊறிப் போய் விட்டோம் என்றும் சொல்லுவேன்.

**Sri M. KALYANASUNDARAM**: அந்த அங்கத்தினர் இங்கே இருக்கிறாரா, அல்லது வெளியில் இருக்கிறாரா?

12-30 p.m. **The Hon. Sri. M. BHAKTAVATSALAM**: ஒரு கனம் அங்கத்தினர் என்றுதான் நான் சொன்னேன். பேசும்போது ஆபாசமாகத் தாக்கிப் பேசுவதுடன் மாத்திரமின்றி, அவதூறாகவும் தாக்கிப் பேசுகிறார்கள்.

இங்கிலாந்து தேசத்தில் சமீபத்தில் நடந்த ஒரு கிளர்ச்சியைப்பற்றியும் அங்கே கூட்டத்தில் நடந்தவைகளைப்பற்றியும் கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அம்மாதிரியான கூட்டங்கள் எத்தனையோ இங்கிலாந்தில் நடக்கின்றன. அந்தக் கூட்டங்களில் தடியடிப் பிரயோகமோ கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ செய்யப்படுவதில்லை. அந்தக் கூட்டங்களில் பேசுபவர்கள் கைதுசெய்யப்படுவதும் இல்லை. இந்த ராஜ்யத்தில் பல கூட்டங்களில் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய பிரசங்கங்கள் எத்தனையோ நிகழ்த்தப்படுகின்றன. அவைகளைக்குறித்து இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில்லை. பலாத்காரக் கூட்டங்களை, கூடிய வரையில் கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ தடியடிப் பிரயோகமோ செய்யாமல் கலைப்பதற்குத்தான் அரசாங்கம் முயற்சிக்கிறது. பலாத்காரக் கூட்டங்களைக் கலைப்பதற்குப் போலீசார் எடுக்கும் நடவடிக்கைகள் கூடிய வரையில் பொதுமக்களைப் பாதிக்ககூடாது என்பது தான் சர்க்காரின் கொள்கை. இருந்தாலும் போலீசார் எடுத்துக்கொள்ளும் தடியடிப் பிரயோக நடவடிக்கையாலும் கண்ணீர் புகைப் பிரயோக நடவடிக்கையாலும் பொதுமக்கள் ஓரளவு பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே பலாத்காரக் கூட்டங்களை கலைப்பதற்கு இப்போது போலீசார் கையாளும் முயற்சிகள் பொதுமக்களை ஓரளவு பாதிக்கக் கூடியவையாகத்தான் இருக்கின்றன. பொதுமக்களை பாதிக்காமல் இருக்கக் கூடிய வேறு சிறந்த முறைகள் தெரியாததால்தான் இந்த முறைகளை போலீசார் கையாளுகிறார்கள். இப்போது கையாளப்படும் இந்த முறைகளுக்கு பதிலாக, பொதுமக்களுக்கு சிறிதும் பாதகம் விளைவிக்காத சிறந்த முறைகளை ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் கண்டுபிடித்துச் சொன்னால் அவைகளை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இது சம்மந்தமாக அதிகாரிகளுடனும் நிபுணர்களுடனும் கலந்தாலோசிக்கிறோம். ஆகவே பலாத்காரக் கூட்டங்களையும் சட்டவிரோதமான கூட்டங்களையும் கலைப்பதற்கு இப்போது கையாளப்பட்டுவரும் முறைகள் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும்தான்.

சமீபத்தில் சென்னை நகரில் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்யப்படுவதற்கான அவசியத்தை எற்படுத்திய சம்பவங்கள் குறித்து இந்த மன்றத்தில் விஸ்தாரமாக விவாதிக்கப்பட்டது. அந்த சம்பவங்கள் நிகழ்ந்தபோது காக்ஸ் சேரியில் சில காரியங்கள் செய்யப்பட்டன என்று சபையில் கூறப்பட்டது. எனக்கு வரும் புகார்களை நான் கவனிக்கத் தான் செய்கிறேன். என்னிடம் ஏதாவது அக்கிரமம் பற்றி புகார் கூறப்





பட்டால், எந்த இடத்தில் யார் எந்த அக்கிரமத்தைச் செய்தார்கள் என்று நான் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். ஆனால் பிரஸ்தாப சம்பவம் நிகழ்ந்தபோது ஏராளமான காலிகளின் கூட்டமும் பஸ்களைக் கொளுத்தும் முரட்டுக் கூட்டமும் ஒன்றாகச் சேர்ந்து பல அக்ரமங்களைச் செய்ததால், அவை மேலும் பல அக்ரமங்களைச் செய்யாமல் பார்த்துக்கொள்வதற்காகத் தான் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்யப்பட வேண்டியிருந்தது.

சில மாதங்களுக்கு முன்பு பக்கத்திலுள்ள ராஜ்யத்தின் அமைச்சர் ஒருவர் "எங்கள் ராஜ்யத்தில் போலீசார் தடியடிப் பிரயோகமோ கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ செய்யவேண்டிய அவசியமில்லை. எங்கள் ராஜ்யத்தில் போலீசாருக்கு அந்த வேலைகளே கிடையாது" என்று மிகப் பெருமையாகச் சொல்லிக்கொண்டார். ஆனால், "கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் தடியடிப் பிரயோகமும் செய்யாமலே நாங்கள் சமாளிக்க முடியும்" என்று அவ்வளவு தைரியமாகவும் பெருமையாகவும் அவர் சொல்லிக்கொண்டதற்குபிறகு, அந்த ராஜ்யத்தில் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் நடந்திருக்கின்றன என்பதையும் அவர்கள் மாணவர்கள் மீது கூட நடந்திருக்கின்றன என்பதையும் பத்திரிகைகளில் மூலம் நாங்கள் அறிந்தோம்.

மேலும் தொழிலாளர்களின் துயரங்கள் குறித்து கிளர்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் நடந்தால் மேலும் பல விபரீதங்கள் நிகழ்கின்றன. அந்த விபரீதங்கள் நிகழ்ந்த பிறகுக்கூட போலீசை உபயோகிக்கக்கூடாதென்றும் தொழிலாளர்களையும் பலாத்காரத்தில் இறங்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை சொன்னார். அவர் சொன்னபடி நடக்க வேண்டுமென்றால், தொழிலாளர்களின் எந்த கோரிக்கையையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டாக வேண்டும். அவர் சொன்ன யோசனையின்படி அப்படியே நடக்கவேண்டுமானால், யார் எந்தக் கோரிக்கையை விடுத்தாலும் அதை—அது பொதுமக்களை பாதிக்கக்கூடியதாக இருந்தாலும் பொதுமக்களை சுரண்டக்கூடியதாக இருந்தாலும்—அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய ஜனநாயகக் கொள்கை அது. அதன்படி, யாராவது நான்கு உத்தியோகஸ்தர்களாவது, நான்கு தொழிலாளர்களாவது ஒன்றுசேர்ந்துகொண்டு ஏதாவது கோரிக்கை விடுத்தால் அதை சர்க்கார் உடனே நிறைவேற்றிவிட வேண்டுமென்றும், அவ்வாறு நிறைவேற்றாவிட்டால்தான் கிளர்ச்சித் தகராறு வருகிறதென்றும், பின்னர் வரும் தகராறை சமாளிப்பதை விட முதலிலேயே, விடுக்கப்படும் கோரிக்கையை நிறைவேற்றிவிடுவது தேவை என்றும் அவர் சொன்னார். அவர் அவ்வாறு சொல்கிறபடி நாங்கள் எப்படி நடக்க முடியும்? கோரிக்கை எங்களால் நிறைவேற்றப்படக்கூடியதாக இருந்தால்தான் அதை நாங்கள் நிறைவேற்ற முடியும். யாராவது ஏராளமாக பணம் கேட்டால் யார் வீட்டுப் பணத்தை எடுத்து நாங்கள் அவர்களுக்கு கொடுக்கமுடியும்? தொழிலாளர்களின் பிரச்னைகளை இந்த அரசாங்கத்தார் மிகுந்த அனுதாபத்துடன் தான் கவனித்துவருகிறார்கள். குற்றம் சாட்டப்பட்ட முதலாளிகளின் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்குவதில்லை. ஆனால், பின்னர் தகராறு வரும் என்பதற்காக, தொழிலாளர்கள் கேட்பதையெல்லாம் அரசாங்கம் உடனே கொடுத்துவிட வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை, போலீசின் மீது குற்றம் சாட்டுவதற்கில்லை என்றும் இந்த அரசாங்கம் தவறான முறையில் போலீசைப் பயன்படுத்திக் கொள்கிறது என்றும் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அரசாங்கம் போலீஸ் செய்வதை யெல்லாம் எப்போதும், விடாமல் ஆதரிக்கிறது என்று சொன்னார். அரசாங்கத்தின் கொள்கையை பொறுத்தவரையில், நான் முன்பே சொன்னதை இப்போது மீண்டும் சொல்கிறேன். அரசாங்கத்தின் அனுமதியின்றி தனியாக ஒரு கொள்கையை போலீசார் அனுசரிக்க முடியாது, போலீசார் கடைபிடிக்க

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

வேண்டிய கொள்கையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பொறுப்பேற்று கொள்கிறது. ஆனால் அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படும் குறிப்பிட்ட நடவடிக்கைகள், ஆங்காங்கே இருக்கும் அந்த அந்த அதிகாரிகளைப் பொறுத்தவை.

பெரிய அதிகாரிகள் பேரிலும் சரி, சிறிய அதிகாரிகள் பேரிலும் சரி அதிகாரிகள் பேரில் புகார்கள் வந்தால் அவைகளை அப்போதைக்கப்போது விசாரணை செய்து மேல் நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்குவதில்லை. என்னைப் பொறுத்த வரையில் என்னிடம் புகார்கள் நேரிடையாகத் தெரிவிக்கப்பட்டாலும், கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டாலும், எதிர்க் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்டாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு புகாரின் பேரிலும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறேன். ஏதோ ஒரு கொலைக் கேஸ்பற்றி குறிப்பிடப்பட்டு போலீசார் அத்துமீறி நடந்துக் கொள்கிறார்கள் என்று ஒரு புறத்தில் கூறப்பட்டது. மற்றொரு புறத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி, கொலை கேஸ்கள் போலீசாரால் சரியாக கவனிக்கப்படவில்லை என்றும், இந்த விஷயத்தில் போலீசார் மேலும் தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்றும் கூறினார். என்னிடம் புகார் தெரிவிக்கப்பட்டவுடன் கனம் அங்கத்தினர் சொல்வதில் ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்று அறியும்படி சி.ஐ.டி. இலாகாவினரிடம் சொன்னேன். இதை நான் திருஷ்டாந்தமாகச் சொல்கிறேன். நான் அடிக்கடி அப்படித்தான் செய்கிறேன். இந்த மாதிரியான கேஸ்களில் வெளியிலிருந்து அதிகாரிகள் வந்து விசாரிக்கிறார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது, 75 சதவிகித கேஸ்களில் புகார் கூறியவர்கள் காணப்படுவதில்லை என்றோ, புகார் கூறுபவர்களாக தெரிவிக்கப்பட்டவர்கள் உண்மையில் அவ்வாறு புகார் கூறியதில்லை என்றோ தெரிகிறது. ஆனால், சில சமயங்களில் சில புகார்களுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. ஆதாரங்கள் இருந்தால், புகார்கள் பேரில் மேல்நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

லஞ்சம் இருப்பதாக சபையில் புகார் கூறப்பட்டது. லஞ்சப் புகார்கள் பேரில் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமானால், போலீசார் எவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. லஞ்சக் குற்றங்கள் பேரில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. 1956-ம் கெஜட்டட் உத்தியோகஸ்தர்களில் 3 பேர்கள் மீது லஞ்சக்குற்றம் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1957-ல் 4 கெஜட்டட் உத்தியோகஸ்தர்கள் மீதும் 45 நான்-கெஜட்டட் உத்தியோகஸ்தர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் இதுவரையில் 2 கெஜட்டட் உத்தியோகஸ்தர்கள் மீதும் 4 நான்-கெஜட்டட் உத்தியோகஸ்தர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

போலீசாரைப்பற்றி யார் புகார் கூறினாலும் ஒன்றும் கவனிக்கப்படவதில்லை என்று நினைப்பது தவறு. நான் இப்போது உறுதியாகச் சொல்கிறேன்: "காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எத்தனையோ பேர் என்னிடம் பல புகார்கள் கூறினார்கள். அவர்கள் கூறும் புகார்கள் ஆதாரமற்றவை என்று தெரிந்தால், அதை அவர்களிடம் உடனே தெரிவித்து விடுகிறேன், இருந்தாலும் பின்னர் புகார்களைப்பற்றி விசாரிக்கிறேன். அதே மாதிரி எதிர் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள் சொல்லும் புகார்கள் பேரிலும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம். ஆனால், கூறப்பட்ட புகார்களுக்கு ஆதாரமில்லை என்று தெரிந்தால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லை."

12-40 p.m. கனம் அங்கத்தினர்கள், குறிப்பாக கடைசியில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் முன்பிருந்த இன்ஸ்பெக்டர் ஜெனரல் பேரில் வந்த புகார்களைப்பற்றி விசாரணை ஒன்றும் சரியாக நடத்தப்படவில்லை என்று சொன்னார்கள். நான் முன்பே இதை விளக்கினேன். ஆனால் இன்னும் அதிகமாக விளக்கம்கேட்கக்கூடும் என்று எதிர்பார்த்தேன். இது பற்றி ஒரு கேள்வி இருந்தது. அந்தக் கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது பல உபகேள்விகள் வரும், பல கட்சி அங்கத்தினர்கள் உபகேள்விகள் கேட்பார்கள் என்று நான் அவைகளுக்கு பதில் சொல்லுவதற்கு தயாராக இருந்தேன். அப்பொழுது மேலும் சர்க்கார் நிலைமையை விளக்கலாம் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. ஒரு கனம் அங்கத்தினராவது ஒரு கேள்விகூட கேட்கவில்லை. அதன்பேரில் எத்தனையோ கேள்விகள் கேட்டிருக்கலாம்.



18th March 1958] [Sri M. Bhaktavatsalam]

**SRI C. N. ANNADURAI**: கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரியல்ல. அதனால் குறுக்கிடுகிறேன். இந்தப் பிரச்னை அதற்கு முன்னாலே நடந்த பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூட்டத்தில் எழுப்பப்பட்டு, இது பற்றி நாம் ஒன்றும் விவாதிக்கத் தேவையில்லை என்று முடிவு செய்தோம். அதனால்தான் இதுபற்றி பேசவில்லை.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்தில் கேள்வியைப் பற்றிய பிரச்னை வரவில்லை. நானும் அந்தக் கமிட்டியில் ஒரு அங்கத்தினர். அதிலே இதுபற்றி ஒருவித முடிவும் எடுக்கப்படவில்லை. கனம் சர்க்கார் கட்சி தலைவர் அவர்களும் இதுபற்றி சொல்லுவார்கள்.

**SRI C. N. ANNADURAI**: கேள்வி நேரத்திலே அதுபற்றி பேசவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி குறிப்பிட்டதனுடைய உட்கருத்து, அது சம்மந்தமாக அவர் விவாதத்தை எதிர்பார்த்தார், நாங்கள் விவாதத்திலே கலந்துகொள்ளவில்லை என்று கருதப்படுகிறது. "பிஸினஸ் அட்வைசரி" கமிட்டி கூட்டததில் இதுபற்றி பேசிய நேரத்திலே இது பற்றிய சர்க்கார் அறிக்கையை பார்த்துவிட்டால் போதும், அதுபற்றி பின்பு விவாதம் தேவையில்லை என்று முடிவு செய்தோம்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: எனக்குப் புரியவில்லை ஏன் விவாதத்தை நிறுத்தவேண்டுமென்று.

**SRI M. KALYANASUNDARAM** rose—தன்னுடைய ஆசனத்தில் எழுந்து நின்றார்.

**MR. SPEAKER**: How can you interrupt the Hon. Minister like this? இம்மாதிரி குறுக்கிடுவது சரியல்ல. இதை எல்லோருக்கும்தான் சொல்லுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: தாங்கள் அவ்விதம் சொன்னால் உட்கார்ந்துவிடுகிறேன். எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: நான் குறிப்பிட்டது என்னவென்றால் அந்தக் கேள்வி வந்தபொழுது அவர்கள் உபகேள்விகள் கேட்டிருக்கலாம் என்பதுதான். அதுபற்றி நான் ஒன்றும் புகார் கூறவில்லை. ராஜரத்னம் அவர்களைப் பற்றி புகார் கூறப்பட்டது. முன்பு அவர்கள் பெயரைச் சொல்லவில்லை என்றாலும், கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் ஒரு பெரிய உயர்தர போலீஸ் அதிகாரி என்று குறிப்பிட்டார். நான் அப்பொழுதே பதில் சொன்னேன். பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி, சிறிய அதிகாரியாக இருந்தாலும் சரி, கவலையில்லை, நாங்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள தயங்க மாட்டோம் என்று சொன்னேன். அடுத்த நாளே அப்பொழுது இருந்த ஐ.ஜி. க்கு "இம்மாதிரி சட்டசபையில் பேசப்பட்டது, அதுபற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்" என்று நான் கேட்டு எழுதினேன். அவர்கள் "என்னைப்பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இது தான் நிலைமை. இதுபற்றி உங்களுக்கு விசாரணை செய்யவேண்டுமானால் விசாரித்துக் கொள்ளலாம்" என்று சொன்னார். அதற்குப் பிறகு விசாரணை செய்வதற்கு ஒரு நீதிபதி நியமிக்கப்பட்டார். இது நீதிமன்ற விசாரணையா, நீதிபதி விசாரணையா என்றெல்லாம் விளக்கப்பட்டன. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். சுருக்கமாக விசாரணை நடத்துவதிலே எத்தனையோ முறைகள் உண்டு. எத்தனையோ அந்தஸ்துகள் உண்டு. கொலைக் குற்றம் செய்ததாக கையும் களவுமாக கண்டுபிடிக்கப்பட்டு குற்றத்தை குற்றவாளி ஒப்புக்கொண்டாலும்கூட, அது நேரடியாக விசாரணைக்கு

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

செஷன்ஸ் கோர்ட்டுக்கு வருவதில்லை. முதலிலே கமிட்டல் கோர்ட்டுக்கு பூர்வாங்க விசாரணைக்கு வருகிறது. அதற்கு மேல் விசாரணை செய்யவேண்டுமென்றால் எந்த வகையிலே எப்படிச் செய்வது என்பதை நிர்ணயிப்பதற்கு பூர்வாங்க விசாரணை வேண்டியிருக்கிறது. "பிரைமா பாஸியாக" ஏதாவது ஆதாரம் இருக்கிறதா, மேற்கொண்டு விசாரணை செய்வதற்கு இடம் உண்டா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு பூர்வாங்க விசாரணை வேண்டியிருக்கிறது.

**SRI C. N. ANNADURAI** : பூர்வாங்க விசாரணை தேவை என்ற முறையில் இந்த விசாரணை அமைந்திருந்தால், கனம் அன்பழகன் அவர்கள் கூறிய எல்லா குற்றச்சாட்டுகளும் இந்தப் பூர்வாங்க விசாரணைக்கு அனுப்பப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : கனம் கல்யாணசுந்தரத்திற்குச் சொன்னதைத் தான் தங்களுக்கும் சொல்லவேண்டும்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : பூர்வாங்க விசாரணை செய்வது என்றால், அவர் போலீஸ் இலாகாவின் தலைவர், ஆகையால் அவரைப் பற்றி புகார்களை பூர்வாங்க விசாரணை செய்வதற்கு ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை நியமிப்பதுதான் நலன் என்று அரசாங்கத்திற்கு பட்டது. ஆகவே இந்த விசாரணையை நடத்துவதற்கு பிரதம நீதிபதியின் அனுமதியின்பேரில் ஜஸ்டிஸ் பி. என். ராமஸ்வாமி அவர்கள் நியமிக்கப்பட்டார். சர்க்காரிடம் உள்ள தகவல்கள் எல்லாம், பேபர்களெல்லாம் அவரிடம் கொடுக்கப்பட்டன. அவர்கள் இன்னும் சில விவரங்கள் கேட்டார்கள். அவைகளும் அளிக்கப்பட்டன. அதற்குப் பிறகு நீதிபதியின் அறிக்கையில் இருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியது, அரசாங்கம் தெரிந்துகொண்டது என்னவென்றால், நீதிபதி அவர்கள் முதலிலே பேசிய கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்களை விவரங்கள் சொல்லவேண்டுமென்று கேட்டபொழுது, "இது ஓபன் என்கொயரி இல்லை, ஆகவே நான் சொல்ல முடியாது" என்று அவர்கள் மறுத்தார்கள். அதற்கு மேலும் நீதிபதி அவர்கள் சொன்னது என்னவென்றால், "நான் **fact finding mission** தான். இந்த விசாரணையை நடத்தியபிறகு எனக்கு மனதில்பட்டால் நானே மறுபடியும் சரியான விசாரணை செய்யவேண்டுமென்று சிபார்சு செய்வேன். அதற்கு வேண்டிய ஆதாரங்கள் தங்களிடமிருந்தால் கொடுங்கள்" என்று கேட்டபொழுது, கனம் அங்கத்தினர் அவர்கள் விவரங்கள் கொடுக்கவில்லை.

**SRI K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் என்னைப்பற்றி பேசுவதால் நான் குறுக்கிட்டு விளக்கம் தரவேண்டியிருக்கிறது. நான் ஆதாரம் கொடுக்கவில்லை என்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் அந்த நீதிபதியிடம் பேசும்பொழுது கேட்டேன் "நீங்கள் முழு நீதிபதியின் உரிமையோடு விசாரணை நடத்துகிறீர்களா. "? என்று. அவர் "இல்லை" என்று தெரிவித்தார். "என்றால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளெல்லாம் உங்களுக்கு கிடைத்திருக்கிறதா ? 4 குற்றச்சாட்டுகளை மட்டும் தெரிவித்துவிட்டு, மற்ற 2 குற்றச்சாட்டுகளை விட்டுவிட்டால் எப்படி முழு விசாரணையாகும்" என்று கேட்டேன். "நான் இதில் தலையிடுவதற்கு உரிமையில்லை. உங்கள் ஆதாரம் கேட்பதற்குகூட உரிமை இல்லை. நண்பர் என்ற முறையில் வேண்டுமானால் நீங்கள் கொடுங்கள். ஆபீசர் என்ற முறையில் நான் கேட்கவில்லை" என்று தெரிவித்தார்கள். "நண்பர் என்ற முறையிலே நான் உங்களிடம் பேசத் தயாராக இல்லை" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இம்மாதிரி என்னை தனிப்பட்ட முறையில் கேட்டாரே தவிர, அதிகாரி என்ற முறையில் கேட்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது, இது ஒரு விசாரணை ஆகாது என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : "பாயின்ட் ஆப் எக்ஸ்பளனேஷன்" என்றால் நடுவில் சொல்லக்கூடாது. கடைசியில்தான் சொல்லவேண்டும்.



18th March 1958]

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் எதை வேண்டுமானாலும் ஆத்திரத்தில் பேசலாம். நான் நீதிபதி எழுதியதிலிருந்து சொல்லுகிறேன். இந்த சமயத்தில் ஒரு பழமொழி ஞாபகம் வருகிறது. அதைச் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன்.

**SRI K. ANBAZHAGAN** : சொல்லுங்கள், சொல்லி விளக்குங்கள்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அந்த பழமொழி என்னவென்றால், நோகாமல் அடிக்கிறது, ஓயாமல் அழுகிறது என்று சொல்லுவார்கள். (ஸ்ரீ க. அன்பழகன் : அது நாங்கள் அல்ல.) புகார் சொல்லும் பொறுப்பு எங்களுடையது, அதை நாங்கள் எப்படி நிரூபிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் புகார் சொன்னால், அதற்குக் தகுந்த ஆதாரமும் கொடுக்கவேண்டும். என்னிடம் ஆதாரம் கிடைக்கவில்லை. உங்களிடம் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டும், கொடுக்கவில்லை. நீதிபதி அவர்களே, சங்கடங்களைச் சொல்லிவிட்டு, கனம் அங்கத்தினர் கொஞ்சம் இதில் "ஷிவல்ரஸாக" இருந்திருக்கலாம் என்று எழுதியிருக்கிறார்கள். அப்பொழுது ஒன்றும் சொல்லாமல், எத்தனையோ நாட்கள் கழித்து போலீஸ் டிமாண்டு விவாதத்தில் ஏதோ ராஜரத்தினம் அவர்கள் மீது சொல்லிய புகார்கள் பற்றி சரியாக விசாரணை நடக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. முன்பு ஒரு முறை கனம் அங்கத்தினர் அன்பழகன் பேசும்பொழுது இதை போலி விசாரணை, கேலி கூத்து என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு சட்டசபையில் எதை வேண்டுமானாலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. உரிமை உண்டு. வெளியிலும் பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் நிலைமை இதுதான். அரசாங்கத்தின்மீது குறை கூறுவதில் பயன் இல்லை. இந்த விஷயத்திலே வேறு ஒன்றும் அரசாங்கம் செய்திருக்க முடியாது என்று நான் சொல்லுகிறேன். இன்னும் சில போலீஸ் அதிகாரிகளைப் பற்றி விசாரணை ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லப்பட்டது.

குறிப்பாக ஒரு ஜில்லா போலீஸ் சூபரின்டென்டைப்பற்றிச் சொன்னார்கள். விசாரணை நடத்தவேண்டும் என்று புகார் வந்தாலும்சரி, ஏதோ லஞ்சமோ வேறு ஊழலோ இருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரிந்தாலும் சரி, அதை நன்றாக விசாரணை செய்து முறைப்படித்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதிலே தாமதம் ஏற்படுகிறது. அது நாங்கள் விரும்பாத தாமதம், நாங்கள் தவிர்க்கக் கோருகிற தாமதம் ஏற்படுகிறது.

இப்பொழுது கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன 12.50
சில விஷயங்கள் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு, மேலும் விசாரணைக்கு p.m.
ஏற்பாடு செய்யப்பட்டுதான் வருகிறது. ஆனால், "ஏன் நீங்கள் உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ?" என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் இந்த அதிகாரி மீது உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் அது சரி அல்ல. நன்கு விசாரித்துத்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ரொம்பக் கடுமையாக இருக்கும் கட்சி, கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களுடைய கட்சி. அந்தக் கட்சிக்குள்ளேகூட எத்தனையோ புகார் வருகிறது. அங்கேகூட உடனேயே எக்ஸ்-பார்டியாக முடிவு பண்ணித் தீர்த்துவிடுவதில்லை. ஏதோ நடந்தது இப்பொழுது விசாரித்து என்ன செய்கிறது? என்ற முறையில் இருந்துவிடுகிறார்கள். ரொம்பக் கட்டுப்பாடாக இருக்கும் கட்சியிலும் அம்மாதிரி நடக்கிறது.

சர்க்கார் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் ஏதோ அவசரப்பட்டால்கூட கோர்ட்டு தலையிடுகிறது. சில சமயங்களிலே கோர்ட்டு தலையிடுகிறது. தலையிட்டு "நீங்கள் செய்தது தவறு, இன்னும் சரியாக விசாரணை செய்ய வேண்டும்" என்று பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சொல்கிறது. சில சமயங்களில் நீதிமன்றம் சொல்லுகிறது. ஆகையால், இதற்கு உட்பட்டு முறைப்படி செய்வதிலே கொஞ்சம் தாமதம் ஆகிறது; ஆனால், அந்தத்

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

தாமதம் எவ்வளவு தூரம் தவிர்க்கப்பட முடியுமோ அவ்வளவு தூரம் தவிர்த்து, குறைப்பாடு இருக்கிறதாக புகார் சொல்லப்படும். அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

பொதுவாக போலீஸ் என்றாலே ஜனங்களுக்குப் பயம் என்று சொன்னார்கள். நல்ல ஜனங்களுக்குப் பயம் வேண்டியதில்லை; நிரபராதிகளுக்கும் பயம் வேண்டியதில்லை; சமூக விரோதிகளுக்குத்தான் பயம், அந்தப் பயம் இல்லையென்றால் இந்தப் போலீஸ் பயன் படாது, ஐந்து கோடி ரூபாய் வியர்த்தமாகத்தான் போய்விடும். சமூக விரோதிகளுக்குப் பயம் இருக்கவேண்டும். நிரபராதிகளுக்குப் பயம் இருக்கக்கூடாது. அந்தக் கொள்கை கண்டிப்பாக நிறைவேற்றப்பட்டு—என்னைப்பொறுத்தவரை—கவனம் செலுத்திவருகிறேன். அப்படி சமூக விரோதிகளுக்கு போலீசாரைக் கண்டு பயம் இருக்கத்தான் வேண்டும். ஆனால், சில சமயங்களில் இந்த சமூக விரோதிகள்கூட அரசியல் கட்சிகளுக்குப் பயன்படுகிறார்கள். ஆகையால், ஒரு தொடர்பு ஏற்படுகிறது. அதன்பேரில் கட்சிகளுக்கு போலீஸ் பேரில் விரோதம், பொதுவாகவே வெறுப்பு வளருகிறது. அதே வெறுப்பு அரசாங்கத்தின் மீதும் அவர்களுக்கு வருகிறது. நாங்கள் போலீஸாரைப் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. அரசாங்கத்தின்மீது ஆத்திரம் வந்தால், போலீசாரைத் தாக்கலாம், போலீசாரின்மீது ஆத்திரம் வந்தால் அரசாங்கத்தைத் தாக்கலாம் என்பது அவர்கள் நோக்கம். எப்படியாவது அரசாங்கத்தைக் குறைவுபடுத்தவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். சமூக விரோதிகள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்றால், போலீசார் மீது கோபம் வருகிறது. அந்த வகையிலே, சில சமயங்களிலே, அரசியல் கட்சிகளும் போலீசாரைத் தாக்கி அதை தங்கள் கட்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அது கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். பொது மக்களுடைய பாதுகாப்புக்காக போலீசார் இயங்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன், மன்றத்தில் உள்ள எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதற்குரிய வகையிலே எல்லோரும் நம்முடைய போக்கை அமைத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைப் பற்றி, உள்ள நிலையை எடுத்துச் சொல்லும்போது, எனக்குச் சில மாதங்களுக்கு முன்னே ஏற்பட்ட ஒரு அனுபவத்தினாலே ஒரு அச்சம் ஏற்படுவது உண்டு. முக்கியமாக, கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசி, நான் அதற்குப் பிறகு பேசுவது என்றால்—எதிர்க்கட்சிகள் இருக்கலாம்; வாதம் செய்யலாம்; பலமாகத் தாக்கலாம்; ஒரு கட்சி ரீதியிலும் கண்ணியமாகத் தாக்குவது என்பது இல்லையா? கட்சியிலே அனுபவப்பட்டவர்கள், அரசியலிலே அனுபவம் உள்ளவர்கள் யாரும் அதைப்பற்றி வருந்த மாட்டார்கள். அதை மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். ஆனால், அவர்களுக்கு உடனே ஒரு ஆத்திரம் வந்து விடுகிறது என்பதை நான் பார்த்திருக்கிறேன்; மற்ற அங்கத்தினர்களும் பார்த்திருப்பார்கள். இருந்தாலும் இருக்கிறதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். நிலைமையை விளக்கும் கடமையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது. அவர்களுடைய ஆத்திரத்திற்குப் பயந்து, நான் கூற வேண்டியவை கூறாமல் இருப்பதற்கில்லை. ஆனால், இன்று முதலில் பேசிய போது, அவர்கள், " நான் ஏதோ பேசப் போகிறேன் " என்று எதிர்ப்பார்த்து, என்னைத் தாக்க வேண்டுமென்று நினைத்தார்கள். முதலில் முடிவு செய்து கொண்டு எதை வைத்துத் தாக்கினார்?

கடைசியில், ஏதோ ஒரு பத்திரிகை—கண்ணியமாகச் சொன்னால்—மஞ்சள் பத்திரிகை என்று சொல்லலாம், அதற்கு மேல் எந்த வார்த்தையையும் இந்த மன்றத்தில் சொல்லத் கூடாது. ஒரு மஞ்சள் பத்திரிகை, சில மாதங்களுக்கு முன்பு என்னைப் பற்றி எழுதியது. அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். என்னைப்பற்றி அவர் தாக்க வேண்டுமென்றால், அவரே நேரிடையாகத் தாக்கியிருக்கலாம். எப்பொழுதோ சில மாதங்களுக்கு முன்பு எழுதிய அந்தப் பத்திரிகையை எடுத்து, சாமர்த்தியமாக, " இதை நான் சொல்லவில்லை; ஏன் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை



18th March 1958] [Sri M. Bhaktavatsalam]

எடுக்கவில்லை? என்று தான் கேட்டேன் " என்று பேசினார். அந்தப் பத்திரிகையில் உள்ளதைப் படித்துவிட வேண்டும் என்ற ஆசை அவருக்கு. என் மீது இருக்கும் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவ்வளவு கீழான ஒரு முறையை கையாண்டார்.

**Sri A. V. P. ASAITHAMBI:** நிச்சயமாக மந்திரி அவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார். "இம்மாதிரியெல்லாம் வெளியில் வருகிறது; விசாரணை பண்ணுகிறேன்" என்று மதுரையில் மந்திரி அவர்கள் பேசியிருப்பதாக ஒரு பத்திரிகையில் பார்த்தேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** ஆசைத்தம்பி அவர்கள் பேசுவதை எவ்வளவு ஆசையாக கவனித்தாலும் எனக்குப் புரியவில்லை.

ஏதோ ஒரு பத்திரிகையை கனம் அங்கத்தினர் எடுத்துக் காட்டாமல், தானே அந்த வார்த்தையை உபயோகப்படுத்தியிருந்தால், அது நேரடியாகவும், நேர்மையாகவும்கூட இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதேபோல, அந்தப் பத்திரிகை என்னைப் பாராட்டி எழுதியிருந்தாலும் நான் வருத்தம் அடைந்திருப்பேன், ஏமாற்றமாகவும் இருந்திருக்கும். அந்தப் பத்திரிகை என்னைப் பாராட்டியிருந்தால், அது தான் எனக்குக் குறைவாக இருக்கும். அந்தப் பத்திரிகை என்னைப் பற்றி எழுதியதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இது என்னைக் கொஞ்சங்கூட அசைக்கவில்லை. எனக்கு ஒரு மகிழ்ச்சி. இந்த பத்திரிகையினுடைய சர்டிபிகேட் நல்லது. இந்தப் பத்திரிகை சொன்னது நல்ல சர்டிபிகேட். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் என்னைப் பாராட்டியிருந்தால்கூட அது எனக்குக் கவலையைத்தான் கொடுத்திருக்கும். அவர் என்னை எப்படியோ ஒரு முறையிலே தற்சமயம் திட்டித் தாக்க வேண்டும் என்று நினைக்கக் கூடிய அளவுக்கு நான் ஆளாவேன். என்றாலும், எனக்கு அதுபற்றி வருத்தம் இல்லை. நான் என்னுடைய நாட்டுமக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், நேர்மையாக செய்யவேண்டிய வகையிலே செய்து கொண்டு வருகிறேன் என்ற நம்பிக்கைதான் எனக்கு அதிலிருந்து ஏற்படுகிறது.

அந்தப் பத்திரிகாசிரியர் சில சமயங்களில் என்னிடம் வருவார். சில சமயங்களில் " போனி "-ல் பேசுவார். அவர் போனில் கூப்பிடுகிறார் என்றாலே எனக்குப் பயம். ஆனால், அவ்வளவு நிர்த்தாட்சண்யமாக மறுக்க, **cut** பண்ண அவ்வளவு உறுதி எனக்கு இல்லை. இன்னார் பேசுகிறார் என்று சொன்னாலே எனக்கு பயம். காரணம் என்ன? அவர் என்ன பேசுகிறார்? ஏதாவது விசாரித்தால் பரவாயில்லை. ஏதோ ஒரு உத்தியோகஸ்தரைப் பற்றி என்னிடம் பேசினார்—கனம் அங்கத்தினர்கள் ஏதோ லஞ்சத்தைப் பற்றிப் பேசுகிறார்களே, அவர்கள் இதைச் சற்று அக்கறையோடு கவனிக்க வேண்டும்—அவர் போனில் பேசியது என்ன? ஏதோ ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவர் பேரிலே ஏதோ புகார் வந்து, அதன் பேரில் விசாரணை நடந்து, அவர் சப்-இன்ஸ்பெக்டராக " ரிவர்ட் " செய்யப்பட்டுவிட்டாராம். (உட்கார்ந்துகொண்டே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ க. அன்பழகன் குறுக்கீடு.) நீங்கள் பேசலாம் அவர்களுக்கு வக்காலத்து வாங்கி; ஆனால் நான் பேசக்கூடாதா? இன்ஸ்பெக்டராக இருந்த ஒருவர் சப்-இன்ஸ்பெக்டராக " ரிவர்ட் " செய்யப்பட்டுவிட்டாராம். அதற்காக என்னிடம் நேரில் கூட வரவில்லை; போனில் பேசினார். போனில் பேசும் போது, " என்ன, அண்ணா " என்று ஆரம்பித்தார். மறுபடியும் " அவரை இன்ஸ்பெக்டராகப் போட வேண்டும் " என்று சொன்னார். அதற்கு நான், " அது முடியுமோ முடியாதோ எனக்குத் தெரியாது; விதிக்கு உட்பட்டுத்தான் செய்ய வேண்டும் " என்று சொன்னேன். அதற்கு மேல் அவர் கொஞ்சம் கோபத்தைக் காட்ட ஆரம்பித்தார்: இதுதான் **Blackmailing** கோபத்தைக் காட்டினால், நம்மைப்பற்றி அவர் ஏதோ பத்திரிகையில் எழுதி விடுவார் என்று பயந்து செய்து விடுவேன் என்ற எண்ணமோ என்னவோ அங்கு அவருக்கு **interest** இருக்கிறது.

[18th March 1958

**Sri K. ANBAZHAGAN**: கனம் தலைவர் அவர்களே, விளக்கம் கோருகிறேன். வெளியிலே உள்ள, சட்ட மன்றத்தில் இல்லாத ஒருவரைக் குறித்துப் பேசுகிறபோது, **Blackmailing** என்று குறிப்பிடுகிற அளவுக்கு கருத்துக்களை இந்த மன்றத்தில் பேசலாமா? அப்படிப் பேசுவது அந்தத் தனிப்பட்டவருடைய உரிமையைப் பாதிப்பதாகாதா என்பதைத் தங்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் பத்திரிகையிலிருந்து குறிப்பிடும்போது குறுக்கிடாமல் இருந்தவர்கள் நான் குறிப்பிடும்போது மட்டும் ஏன் குறுக்கிட வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

**Mr. SPEAKER**: சாதாரணமாக ஒரு பத்திரிகையாளர் இந்தச் சபையில் இல்லாவிட்டால் அவரைப்பற்றிப் பேச வேண்டாம் என்று சொல்வேன். ஆனால், காலையில் அந்தப் பத்திரிகையிலிருந்து இங்கே படித்ததினால், அமைச்சர் அவர்களும் பதில் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

**Sri A. V. P. ASAITHAMBI**: கனம் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே இருக்கும் விஷயம் ஆட்சேபகரமாக இருப்பதால், இந்தப் பத்திரிகை ஆசிரியருடைய தாராதரத்தைப் பற்றி இந்த மன்றத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கலாமா, அந்த ஆசிரியர் இங்கே இல்லாத காரணத்தினால் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: பத்திரிகையிலிருந்து குறிப்பிடுவதைத் தவிர்த்திருந்தால், நான் இதைப் பேச வேண்டிய அவசியம் இராது. அந்தப் பத்திரிகையில் என்னைப்பற்றி கேவலமாக எழுதப்பட்டதாக நினைத்துக்கொண்டு, அதைப்பற்றி சொல்லும்போது, எந்த நிலைமையில் அது எழுதப்பட்டது என்பதைச் சொல்ல எனக்கும் உரிமை இருக்கிறது.

**Mr. SPEAKER**: பத்திரிகையைப் பற்றி இந்தச் சபையில் பேசும்போது இம்மாதிரியான விவாதம் கட்டாயமாக வரும் என்று கனம் அங்கத்தினர் கருதியிருக்க வேண்டும். ஆகையால், இனிமேலாவது இம்மாதிரி பத்திரிகையை இங்கு படிக்க வேண்டாம் என்று நான் சொல்லுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN**: கனம் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பத்திரிகையிலே வரும் கருத்துக்களைப்பற்றி மறுத்துப் பேசுவதிலே எனக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆனால் . . .

(கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. அன்பழகன் அவர்களும், கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களும் ஒரே சமயத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.)

**Mr. SPEAKER**: யாராவது ஒருவரை உட்காரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: Sir, I do not want to yield unless it is a point of order.

**Sri K. ANBAZHAGAN**: பாயின்ட் ஆப் ஆர்டர், ஸர், பத்திரிகையிலே வரும் கருத்துக்களைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் நியாயமான முறையில் மறுத்துச் சொல்லுகிற எதையும் மறுத்தோ குறைத்தோ நான் எதும் சொல்ல வரவில்லை. பத்திரிகையாசிரியருடைய தனிப்பட்ட குணங்களை இந்த மன்றத்தில் விளக்க நமக்கு வாய்ப்பு இருக்கிறதா, உரிமை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதிலும் **b!ackmailing** என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் அப்படிக் குறிப்பிட்டது முறைதான் என்று தாங்கள் சொல்வதாக இருந்தால், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.



18th March 1958]

**Mr. SPEAKER**: Normally it is not desirable to refer to names of papers. But reference was made to a newspaper by name in this House this morning. Therefore, the Hon. Minister has to defend himself but in doing so words like 'Blackmailing' need not be used.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: நான் பத்திராதிபரின் 1.00 p.m
பெயரைச் சொல்லவில்லை. நான் சொல்லவும் மாட்டேன். நான் குறிப்பிட்டது எல்லாம் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பத்திரிகையில் வெளிவந்திருப்பதாகச் சொன்ன விஷயங்களுக்குக் காரணம் என்ன என்பதைச் சொல்வதற்காகத்தான். அதற்காகத்தான் நான் சில சம்பவங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னை டெலிபோனில் கூப்பிட்டு இன்ஸ்பெக்டராகப் போட வேண்டும் என்று கேட்டார். இதைச் செய்ய முடியாது என்று சொன்னேன். மறுநாளும் என்னோடு டெலிபோனில் பேசினார். " சில விஷயங்கள் என்னோடு பேச வேண்டும் என்றும், தனக்கு நோயாக இருப்பதனால் வர இயலவில்லை என்றும், அதற்காக செக்ரடேரியட் போகும்போது தன் வீட்டிற்கு வரும்படியாகவும் " என்னிடம் சொன்னார். அதிக வேலையாக இருப்பதால் வர சௌகரியப்படாது என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் இம்மாதிரியாகவெல்லாம் நடந்திருக்கிறது. ஒருகால் நான் போயிருந்திருக்கும் பட்சத்தில் அங்கு யாராவது இருந்திருப்பார்கள், மந்திரி வந்தார், பேசினார் என்று பயன் படுத்திக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் பேசும்போது அந்தப் பத்திராதிபரின் பேரில் என் நடவடிக்கை எடுக்கவில்லையென்று கேட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு நமது ஒப்பற்ற தலைவர் பிரதம மந்திரி நேரு அவர்களைப் பற்றியே நமது தமிழ் நாட்டுப் பத்திரிகை ஒன்றில் மிகவும் கேவலமாக எழுதியிருந்தது. அதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்தது. பிரதம மந்திரியைப் பற்றி எழுதியபோதே அந்தப் பத்திரிகைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம் சட்டம் இடம் கொடுக்கவில்லை. நேரிடையாக சம்பந்தப்பட்டவர்கள் கோர்ட்டில் கேஸ் போடலாம். ஆனால் சட்டம் திருத்தப்பட்டாலன்றி அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கில்லை. (ஸ்ரீ எம். டி. தியாகராஜன் : ஏற்கனவே அபராதம் போட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?) நான்தான் பலமுறை போலீசார் மீது புகார் செய்திருப்பதாக ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புகார்கள் தக்க ஆதாரங்களுடன் வரும்போது எல்லாம் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. உடனே விசாரணை செய்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்புதான் என்று நினைக்கிறேன். ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்கு ஸ்ரீ க்ல்யாணசுந்தரம் போனில் கூப்பிட்டார்கள். ஹாஸ்டலில இரண்டு ப்யூன்கள் அரஸ்டு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எதற்காகச் செய்தார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் எல்லாம் வருந்தும் நிலையில் இருக்கிறது என்றார்கள். இங்கே கூட அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்பது மணிக்கு இவ்வளவு அவசரமாக கவனிக்கவேண்டிய விஷயமா என்று கேட்டேன். " அப்படி ஒன்றும் இல்லை. உங்களிடம் இதைச் சொல்லிவிட்டேன் " என்றார்கள். மறுநாள் இதைப்பற்றி கமிஷனரைக் கூப்பிட்டு விசாரித்தேன். போய் இருபது நிமிஷத்தில் விவரம் தெரிவிப்பதாகச் சொல்லிச் சென்றார்கள். உடனேயே அவரும் டெலிபோன் செய்தார். அந்த இரண்டு ப்யூன்களும் ஹாஸ்டலைச் சேர்ந்தவர்கள்தான் என்று நினைக்கிறேன். அவர்கள் ரோடில் ஏதோ பண விஷயமாக அடித்துக்கொண்டிருந்தார்களாம். ப்யூன்களுக்கு எத்தனையோ விவகாரங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் சில பேருக்கு இது தெரியாதது அல்ல. இங்கே பண விஷயத்தில் தகராறு பண்ணிக்கொண்டு ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிருந்ததாகவும் அவர்களை அரஸ்டு செய்து லாக்கப்பில் கொண்டு போனார்கள் என்றும், உடனேயே பெய்ல் மேலே விட்டுவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். அவர்கள் மீது கேஸ் போடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அரசாங்கத்தின் மீது புகார் சொல்லி என்ன பயன் ?

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

இன்னென்று பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு நான் காலையில் என் அறைக்குள் சென்றேன். அங்கே ஒரு தந்தி இருந்தது. திருவல்லிக்கேணியில் பகாப் என்பவன் போலீசாரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதாகவும், ஸிங்கிங், டையிங் என்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே கமிஷனரைக் கூப்பிட்டு இதைப்பற்றி விசாரித்தேன். பதினைந்து நிமிஷத்தில் நிலைமை தெரிந்து வருவதாக அவர் சொல்லிவிட்டுப்போனூர். காட்டன் பெட்டிங் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர் அவர் என்றும், போலீஸ் லாக்கப்பில் எவ்வித தொந்திரவும் இன்றி அவர் சௌகரியமாக இருப்பதாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும் கூட அவருக்குத் தந்தி வந்ததன் காரணமாக போய் பார்த்திருக்கிறார். இதே மாதிரியாக சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தந்தி கொடுத்திருந்ததன் காரணமாக அவரும் இதைப்பற்றி விசாரித்திருக்கிறார். நேரில் அவரையே கூப்பிட்டு உன்னைப் போலீஸ்காரர்கள் அடித்தார்களா என்றும் கேட்டிருக்கிறார். அவர் இல்லை யென்பதாக சொல்லவும் சொல்லியிருக்கிறார். இதற்கு மேல் என்ன நடவடிக்கை என்பது எனக்குத் தெரியவில்லை. அடித்தார்கள் என்று அவரைச் சொல்லும்படியாகச் செய்திருக்கவேண்டும் என ஸ்ரீ கல்யாணசுந்தரம் விரும்புகிறார்கள் போலிருக்கிறது.

இன்னென்று கோடம்பாக்கம் சம்பவத்தைப்பற்றி ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது கோர்ட்டில் இருப்பதால் அதுபற்றிய விவரங்களுக்கு நான் போகப் போவதில்லை. அவர்கள் அந்த அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும் என்றூர்கள். அதை நான் கேட்கவில்லை என்பது குற்றச் சாட்டு. எந்தச் சமயத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தின் பொறுப்பு. இவர்களுக்கு சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்பது சரியாகத் தோன்றலாம். இவர்களுக்கு தோன்றுவதை யெல்லாம் அரசாங்கம் ஒப்புக்கொள்ள முடியுமா ? கனம் அங்கத்தினருடைய சகாவோ கொஞ்சம் மேற்பட்டவரோ ஆகிய ஸ்ரீ ராமமூர்த்தி அவர்களோடு நான் பேசிக்கொண்டிருந்தேன். எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து கொடுத்திருக்கிறூர்கள், சஸ்பெண்டு பண்ண வேண்டும் என்பதாக. இது கட்சிப் பிரச்னையா என்று சொன்னபோது அவர் தன் அபிப்பிராயம் தெரிவித்தார். சஸ்பெண்டு செய்துவிட்டால் அவர் அவ்விடத்தில் இருந்துகொண்டே பல காரியங்களைச் செய்ய முடியும். மாற்றிவிட்டால்தான் அதில் பிரவேசிப்பதற்கு இடம் இருக்காது, என்று நான் கருதுகிறேன். அவர்களையும் கூடத் தீர்மானம் போட்டு அனுப்பும் படியாகச் செய்திருக்கிறேன் என்றூர். சில தனிப்பட்ட அதிகாரிகள் தவறுதலாக நடந்துகொண்டாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது எங்கள் கருத்தல்ல. அதை நாங்கள் விரும்பவில்லை. பகிரங்கமாக மேல் சபையிலும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் கூட இதைப் பற்றி கடுமையாக சுற்றறிக்கை விடுத்திருக்கிறூர். பலாத்காரமான முறையில் கைதிகளின் மேல் எல்லா அதிகாரிகளும் இனிமேல் கை வைக்கக் கூடாது. அம்மாதிரி புலாத்காரம் பிரயோகிக்கப்பட்டது என்று தெரிந்தால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக எச்சரிக்கை செய்திருக்கிறூர்கள். அக்கிரமம் செய்தாலும், அக்கிரமம் செய்பவர்களைக் காப்பாற்றவேண்டும் ஏன்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. அம்மாதிரி செய்வது அரசாங்கத்திற்கும் நல்லது அல்ல. மக்களுக்கும் நல்லது அல்ல. மக்கள் அதிருப்தி அடைந்து இந்த அரசாங்கத்தையே வெறுக்க ஆரம்பிப்பார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

1-10 p.m. ஆனால் சில சமயங்களில் இம்மாதிரி சம்பவங்களை கட்சி ரீதியில் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறூர்கள். அதுவும், என்னிடம் தகவல் இல்லாமல் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் இதை நாம் நன்ருக பயன் படுத்திக்கொள்ள வேண்டும், என்று வி. பி. சிந்தன் அவர்களை, ஏற்பாடு செய்திருக்கிறூர்கள் இக்காரியத்தைக் கவனிப்பதற்கு. இதை, அவர்களின் கட்சி பலத்திற்காக பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்பபட்டிருப்பதை நான் அறிவேன். மக்களை பாதுகாக்க எந்த யோசனை வேண்டுமாஞலும் சொல்லட்டும் நாங்கள் கேட்கிறேும்.



18th March 1958] [Sri M. Bhaktavatsalam]

ஆனுல் காரியத்தை மிகைப்படுத்தி அதை கட்சி பலத்திற்காக உபயோகப்படுத்துவது சரியல்ல. அது அந்தக் கட்சிக்கு பலமளிக்காது. அடுத்தபடியாக, நான் விசாரணையைப்பற்றிச் சொல்லவில்லை. மதுரை என்பவர் காணுமல் போய்விட்டார், அவரை எங்கேயோ அடித்து புதைத்துவிட்டதாக புகார் வந்தது. தேடிப் பார்த்து அகப்படவில்லை என்று சொன்னுர்கள். பின், மதுரை வந்து விட்டார் என்று பத்திரிகையில் பார்த்தேன்.

**Sri M. KALYANASUNDARAM :** நாங்கள் பேசுகிறபோது விவரங்களுக்குள் போக வேண்டாமென்று தாங்கள் கூறினீர்கள். அதன்படி நாங்கள் விவரங்களுக்குள் போகவில்லை. ஆனுல் அமைச்சர் அவர்கள் ஒரு தலைப் பட்சமாகக் கூறுகிறூர்கள். அவர்கள் திரித்துக் கூறக் கூடிய விஷயங்களை மறுப்பதற்கு கூட எங்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. ஆகவே, விசாரணையில் இருக்கக் கூடிய விஷயங்களை மற்றவர்கள் பேசக் கூடாது என்று தாங்கள் ரூலிங் செய்திருப்பதால் அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிப் பேசக் கூடாது என்று நீங்கள் அவருக்கு யோசனை சொல்ல முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** விசாரணையைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அதற்கு புறம்பாக உள்ள விஷயங்களைப்பற்றித்தான் சொல்கிறேன். அவரை ஸஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று கல்யாணசுந்தரம் அவர்கள் சொல்லவில்லையா ? கோடம்பாக்கம் சம்பவத்தைப்பற்றி பின் அவர் ஏன் சொன்னூர் ? அவர் சொன்னதற்கு நான் ஏன் சமாதானம் சொல்லக்கூடாது என்பது எனக்குப் புலப்படவில்லை. ஆக, அவர்கள் திரும்பக் கிடைத்ததும் அவர்கள ஏதோ சாட்சி சொன்னுர்கள். இப்பொழுது அவர் அண்ணன் பயப்படுகிறூர், வெளியில் வந்தால் அவரது உயிருக்கு ஆபத்து, ஆகவே போலீசிடம் பாதுகாப்பு வேண்டுமென்று அவர்கள் கேட்கிறூர்கள். வெளியில் வந்தால் ஆபத்து, ஆகவே போலீஸ் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றூல், மாஜிஸ்ட்ரேட்டும் அதை ஒப்புக்கொண்டால் போலீஸ் என்ன செய்வது ? மறுபடியும் போலீஸ் பிடித்து வைத்திருக்கிறூர்கள் என்று புகார் சொல்ல என்ன இருக்கிறது. சாதாரணமாக சிற்சில காரணங்களையொட்டி போலீஸாரைப் பற்றியோ அல்லது குறிப்பிட்ட போலீஸ்காரர்களைப் பற்றியோ வெறுப்பு இருக்கலாம். ஆனுல் நான் பார்க்கிறேன், இங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும், இங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று மக்கள் கேட்கிறூர்கள். நேற்று இரவு கூட கிராமத்தில் இருந்து வந்த ஒருவர் எங்கள் ஊரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று நாங்கள் ரொம்ப நாட்களாக சொல்லிக் கொண்டிருக்கிறேும், ஆகவே, போலீஸ் ஸ்டேஷன் இல்லாவிட்டாலும் ஒரு அவுட் போஸ்ட்டாவது அமைத்துத் தரவேண்டுமென்று கேட்கிறூர்கள். ஆக, பொதுவாக போலீசின் சேவையை மக்கள் பாராட்டுகிறூர்கள், கோருகிறூர்கள். எப்படி இங்கு சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்களோ அவ்வாறே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் சத்தியவாணிமுத்து அவர்கள் பொதுவாகச் சொன்னதோடு ராயபுரத்தில் உள்ள ஒரு சப்-இன்ஸ்பெக்டரைப் பற்றி புகார் சொன்னுர்கள். அன்றே கமிஷனர் அவர்களை நேரில் அழைத்து விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். விசாரித்து விவரங்களை தெரிவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். தவறுதல் ஏதாவது இருந்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். அதற்கு அப்புறமும் கூட, அவர்கள் இந்த மன்றத்தில் ஏதோ ஜாதியை எல்லாம் குறிப்பிட்டு பேசியதாக கேள்விப்பட்டேன். முடிவான அறிக்கை வரவில்லை. ஆனுல் நான் விசாரித்ததில், சப்-இன்ஸ்பெக்டர் மீது ஒரு குற்றமும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையில் நான் இப்பொழுது இல்லை, காரணம் முழு விவரமும் கிடைக்கவில்லை. ஆனுல், கட்சி ரீதியில் அந்த சப் இன்ஸ்பெக்டருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு தகராறு இருக்கிறது என்று புலப்படுகிறது. எலெக்ஷன்போது அந்த சப்-இன்ஸ்பெக்டர் கல்லால் அடிக்கப்பட்டார். பல கான்ஸ்டேபிள்ஸ்-ம் அடிக்கப்பட்டார்கள். பின்னர், தேர்தலுக்குப் பிறகு தோல்வியுற்ற ஒரு கட்சி அங்கத்தினர் தேர்தல் கேஸ் போட்டார்கள். அந்த தேர்தல் கேஸில் இந்த சப்-இன்ஸ்பெக்டர் இன்னின்ன மாதிரி நடந்து கொண்டார் என்று சொல்லி கேஸ்

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

போட்டார்கள். அதை விசாரித்த நீதிபதி முன் இந்த சப்-இன்ஸ்பெக்டர் சாட்சி சொன்னார். அவர் பேரில் உள்ள புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று சொல்லி அந்தத் தேர்தலை ஒப்புக் கொண்டார்கள். அதற்கு மேல் மனஸ்தாபம் வளர்ந்து கொண்டு வருகிறது. இரண்டு பாகங்களில் இருந்தும் கேஸ்கள் போடப்பட்டது. அவர்கள் போட்ட கேஸ்கள் தள்ளப்பட்டிருக்கிறது. இவர் போட்ட கேஸ் இரண்டு, ஒன்றில் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகளை தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒன்றிரண்டு விசாரணையில் இருக்கிறது என்று தோன்றுகிறது. ஆக, எனக்கு கிடைத்திருக்கும் தகவல்களில் இருந்து தகராறு கட்சி ரீதியில்தான் இருக்கிறது என்று புலப்படுகிறது. இத்தகைய புகார்கள்தான் சில. ஆனால் எங்கெங்கு ஆதாரம் இருக்கிறதோ அவைகள் கவனிக்கப்படும். சில பேர்கள், எங்கள் கட்சியில் இருந்தே வருகிறார்கள். தவறுதல் செய்கிறவர்களையும், ஒழுங்காக நடக்கிறவர்களையும் அவர்கள் விருப்பு வெறுப்பிற்கேற்ப மாற்றச் சொல்கிறார்கள். நான் கண்டிப்பாகச் சொல்கிறேன், ஒருவரது விருப்பு வெறுப்பிற்காக ஒரு அதிகாரியையும் மாற்ற முடியாது. ராமஸ்வாமி தேவர் அவர்களும், சசிவர்ணத் தேவர் அவர்களும் சொன்னார்கள். ஐ.ஜி. அவர்கள் கன்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறார்கள். யாராயிருந்தாலும் சரி, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உடையவாராக இருந்தாலும் சரி, அவர்கள் போலீஸ் சூப்பரிண்டெண்டிடம் போய் இவர்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால் அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யக்கூடாது, அதை மேல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும், அவர்கள் வேண்டுமானால் அரசாங்கத்தினிடம் சொல்லலாம். அவர்களாக நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம், கண்டிப்பாக. தவறுதலாக நடக்கிறவர்களையும் பிடிக்கவில்லை, ஒழுங்காக நடக்கிறவர்களையும் பிடிக்கவில்லை. சசிவர்ண தேவர் அவர்கள் சொன்னார்கள், ஒரு போலீஸ் அதிகாரியை மாற்றவேண்டுமென்று. அவர்கள் சொல்வதற்காக யாரையும் மாற்றிவிட முடியாது. மாற்றுவதற்கு அவசியம் இருந்தால் மாற்றலாமே தவிர இவர்கள் சொன்னார்கள் என்பதற்காக மாற்ற முடியாது. அவர்களுக்கு சரிப்படவில்லை என்பதற்காக ஒருவரையும் மாற்ற முடியாது. அரசாங்கத்தை ஆளுவதில் எதிர்கட்சியினருக்கும் பங்கு இருக்கிறது. ஆக, இதில் எல்லாம் அவர்களது யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் யோசனை ஏதாவது சொன்னால் அதை நன்றாக பரிசீலனை செய்து பார்க்கிறோம். நன்றாக பரிசீலனை செய்து அதில் ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அப்படிப் பார்த்து அதற்கு ஆதாரம் இருக்குமானால் எவ்வித தாட்சண்யமும் இல்லாமல் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ரிப்போர்ட்டில் வந்தது என்று. ரிப்போர்ட்டில் உள்ளது, " **A case was registered against one M.L.A. and seven others and it is pending trial** " அவ்வளவுதான் இது. கான்ஸ்டேபிள்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதில் முக்கியமானது வீட்டு வசதி அதில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. மத்திய அரசாங்கம் அதற்கு வேண்டிய கடன் உதவி அளிக்கத் தயாராயிருக்கிறது. முன் ஆண்டில் 24 லட்சம் ரூபாய் போலீசாரின் வீடுகளுக்காக செலவிடப்பட்டது. இந்த ஆண்டு 36 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த பட்ஜெட் ஆண்டில் 50 லட்சம் ரூபாய் நிச்சயமாக செலவிடப்படும் என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் அதிக வீடுகள் கட்டி முடிக்க வேண்டும். நூற்றுக்கு எண்பது பாகமாவது போலீஸ்காரர்களுக்கு வீடுகள் வேண்டும். அதோடு மின்சார வசதி, சுகாதார வசதி போன்றவைகளும் வேண்டிய அளவு இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். இதில் வேண்டிய அளவு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவர்களது சம்பளத்தை அல்லது படியை உயர்த்தவேண்டும் என்றும் அங்கத்தினர்கள் சிலர் சொன்னார்கள். அவ்வளவு அனுதாபம் காட்டுவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அரசாங்கம் அது விஷயத்திலும் கவனம் செலுத்தாமல் இல்லை. கொஞ்ச காலம் முன்புதான் சம்பளத்தை அதிகப்படுத்தியிருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் நம் ராஜ்யத்திலுள்ள போலீஸாரின் சம்பளத்தை வேறு ராஜ்யங்களிலுள்ள போலீஸார் வாங்கக் கூடிய



18th March 1958] [Sri M. Bhaktavatsalam]

சம்பளத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால். நாம் கொடுக்கும் சம்பளம் அதிகம் என்று தெரியும். அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்கு இது அதிகம் என்று கூறவில்லை. அதோடு அவர்களுக்குக் கொடுக்கப்படும் படியையும் முக்கால் ரூபாயிலிருந்து ஒன்றேகால் ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறோம். இன்னும் போலீஸாரின் குடும்பத்திலுள்ள பெண்கள் இவர்களுக்கு சிறிய தொழில்கள் அமைத்து வசதி அளித்துக் கொண்டு வருகிறோம். அதனால் அவர்களுடைய வருமானத்தை உயர்த்திக்கொள்ள வழி செய்து வருகிறோம். அதோடு அவர்களுடைய குழந்தைகளுக்கும் நல்ல வசதிகள் செய்து தரவேண்டுமென்று ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்கம் கவனம் 1-2 p.m.
செலுத்திக் கொண்டு வருகிறது. போலீஸார் வேறு, மக்கள் வேறு என்று கருதாமல், மக்கள் போலீசார் நமக்கு சேவை செய்வதற்காக இருக்கிறார்கள் என்று எண்ணுவதற்கும், போலீஸார், நாம் மக்களுக்குச் சேவை செய்ய இருக்கிறோம், அதிகாரம் செய்வதற்காக அல்ல என்ற எண்ணம் ஏற்படுவதற்கும், அப்பேர்ப்பட்ட வகையில் ஒவ்வொரு தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழுள்ள கிராமங்களில் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு, போலீஸாரைக் கொண்டு மண்ணை வெட்டி ரோடு பொடுவது, கட்டிடங்கள் கட்டுவது போன்ற வேலைகளைச் செய்வதில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் இது மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

ஆனால், குற்றங்களைப் போதிய அளவு கண்டுபிடிப்பதில்லை என்று சொன்னார்கள். இதைப் பற்றி கணக்கு சொன்னார்கள். கண்டுபிடிக்கப்படவில்லை, கண்டுபிடிக்கப்படவேண்டும். அதை நான் மறுக்கவில்லை. போதிய அளவு கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லும்போது அங்கத்தினர்கள் உணருவார்கள், இவ்வளவு ஜாக்கிரதையாகக் கண்டுபிடிக்கும் போதே, எத்தனையோ புகார்கள், அபாண்டமான புகார்கள் கூறப்படுகின்றன. அதைப் பார்த்துத்தான் செய்யவேண்டும். கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள், பழக்கப்பட்ட குற்றவாளிகள் சுலபமாக ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்று. சாட்சி சொல்வதற்குக்கூட மறுக்கிறார்கள். சமீபத்திலே திருச்சியில் நடந்தது. என்ன சம்பவம் என்ற விவரம் கொடுக்கப்போவதில்லை. அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்று புகார்கள் சொல்லுகிறார்கள். நேராகப் பார்த்தவர், பின்னர் மறுக்கிறார்கள். அரசாங்கத்தை குறை சொல்லும்போது, கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லும்போது, சாட்சியம் கொடுக்கக்கூடியவர்கள் கொடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணம்—பொது எண்ணம்—கிடையாது. ஏதோ, அம்மாதிரியெல்லாம் தாமதம் ஏற்படுகிறது. இருந்தபோதிலும் இந்த ஸி.ஐ.டி. இலாகா எப்போதும் திறமையாகத்தான் நடைபெறுகிறது. இதை அங்கத்தினர்கள் பலர் ஒப்புக்கொள்வார்கள். இன்னும் சிறந்த முறையில் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு மீண்டும் கவனம் செலுத்தி வருகிறோம். அடுத்த மே மாதத்தில் எல்லாப் போலீஸ் அதிகாரிகளையும் அழைத்து, நிலைமைகளை எப்படி சமாளிக்க வேண்டும், குற்றங்களை எப்படி கண்டுபிடிக்க வேண்டும், இன்னும் குற்றவாளிகளை பலாத்காரத்திற்கு இடமில்லாமல் எப்படி சமாளிப்பது—அடியோடு பலாத்காரத்தைத் தடுக்க முடியும் என்று உலகத்திலே உள்ள எந்த நாடும் செய்து காட்டவில்லை—அதற்கு கேரள அரசாங்கம் ஒரு சான்று—கூடிய வரையில் இதை தவிர்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன், நன்கு கவனிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு—மே மாதத்தில் எல்லா அதிகாரிகளையும் சேர்த்து வைத்து அவர்களுடைய அனுபவங்களைத் தெரிந்து கொண்டு, என்னென்ன வகையிலே திறமையை அதிகப்படுத்தலாம், என்று அந்தக் கூட்டத்தில யோசிக்கப் போகிறோம்.

திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். கோயம்புத்தூரில் சொன்னேன் என்று குறிப்பிட்டார்கள். ஆமாம், சொன்னேன். போலீஸ் பார்த்து வருவது கஷ்டமான வேலை. ஒன்றும் சுலபமான வேலை அல்ல. சம்பளம் எவ்வளவு கொடுத்தாலும், இந்த வேலை சுலபமான வேலை அல்ல. ரோப் வாக்கிங் மாதிரித்தான். சர்க்கஸில் கம்பியில் நடக்கிற மாதிரியான வேலை. ஆபத்தான வேலை, பின்னால் பார்த்தாலும் ஆபத்து, பின்னால் பார்க்காவிட்டாலும் ஆபத்து. அவர்கள் கூடிய வரையில் நன்றாகச் செய்து வருகிறார்கள். ஆங்காங்கு தவறுகள் இருக்கலாம்.

[Sri M. Bhaktavatsalam] [18th March 1958

தவறுகள் இல்லை என்று மறுக்கவில்லை. தவறுகள் இருந்தால், அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். இருந்தாலும் சில நிலைமைகள் அசம்பாவிதமான நிலைமைகள், விபரீதமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான நிலைமைகள் ஏற்பட்ட போதிலும் சுமுகமான முறையில், சிறந்த முறையில் போலீஸார் இது வரையில் நடந்துகொண்டு வந்ததற்குப் பாராட்டுதலைப் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : விவாதம் முடிந்து ஓட்டு எடுக்கப்படும் வரையில் இந்த சபை உட்காரலாம் என்று நினைக்கிறேன்.

**Sri A. GOVINDASAMY** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, என்னைப்பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள் "**attacked the shop keeper and committed theft**" என்று. அதைப்பற்றித்தான் சொல்லுகிறேன். . .

**Mr. SPEAKER** : அதுதான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டாரே ?

**Sri A. GOVINDASAMY** : இந்த வழக்கு ஏப்ரல் மாதத்தில் முடிந்து விட்டது. இதை ஜுன் மாதம் பப்ளிஷ் செய்திருக்கிறார்கள். ரிப்போர்ட்டை பப்ளிஷ் செய்து 6 மாதங்கள் கழித்து அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் ஏன் ஒரு எராட்டா வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : என்று அச்சிடப்பட்ட போதிலும், ஒரு தேதி வரை வைத்துக்கொண்டுதான் விவரங்களை அச்சிடுவது வழக்கம். இப்போது அங்கத்தினர்கள் பேரில் தவறு இல்லை என்பது தெரிந்துவிட்டது. இதனால் யாரும் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாகள்.

**Sri M. KALYANASUNDARAM** : ஆன் எ பாயின்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன், ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பேசுகையில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு ஏதோ இழிவான முறையில்—கீழ்த்தரமானது என்று நினைக்கிறேன்—கீழ்த்தரமான என்று சொன்னார்கள். அது இந்த சபையின் அகராதியில் இடம் பெறுவதற்கு ஆட்சேபணையில்லை. அதற்கு அவர்கள் வழி காட்டி விட்டாகள். நான் ஏதோ ஆவேசப்பட்டதாகச் சொன்னார்கள். கொஞ்சம் வேகமாக வேண்டுமானால் பேசலாம் ஆனால் நிதானம் தவறி நான் இந்த மாதிரி இன்று வரை கூறியதில்லை என்று நிச்சயமாகக் கூற முடியும்.

இந்தப் பத்திரிகை ஆசிரியரைப்பற்றி இது வரையில் எனக்குத் தெரியாது. இப்போது அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து இந்த ஆசிரியரை அமைச்சருக்கு நன்றாகத் தெரியும் என்று தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், பல சந்தர்ப்பங்களில் நேரடியாக தொடர்பும் இருக்கிறது என்று அவர்கள் பேசியதிலிருந்தே தெரிகிறது. ஒரு பத்திரிகை ஆசிரியர் ஒரு அமைச்சரை "பிளாக் மெயில்" செய்ய முற்படுவது ஒரு சாதாரண விஷயம் அல்ல. அவதூறாகப் பிரசுரித்தது மட்டுமின்றி "பிளாக் மெயில்" செய்வதற்கும் அந்த ஆசிரியர் முற்பட்டிருக்கும்போது அமைச்சர் அவர்கள் ஏன் அந்த ஆசிரியர்மீது நடவடிக்கை எடுக்க தயங்குகிறார் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அவர் ஆவேசப்படாமல் வெகு நிதானமாக எப்போதும் வெள்ளரிக்காய் பிஞ்சு போல குளு, குளு என்று அமைச்சரை நிதானமாகப் பதில் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** rose—

**Mr. SPEAKER** : Sri Nagaraja Monigar has not spoken at all. He can have no point of explanation. (Laughter.)



18th March 1958]

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் கூறிய குற்றச்சாட்டுகளை அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியிலிருந்து சொல்கிறார்கள் என்று தள்ளிவிடக்கூடும். பாதிக்கப்பட்டவர்களுடைய புகைப் படத்தையும் எக்ஸ்ரே படத்தையும் இங்கே காண்பித்தேன். அவர்களைக் கொண்டு போய் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே அமைச்சரிடம் காண்பித்தார்கள். ஆகவே, இவைகளை கட்சி மாச்சரியம் அன்னியில் பொதுவாக நான் சொல்வதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் சொன்ன விஷயத்தைப்பற்றி போலீஸாரால் அடிபட்டதாக கனம் அங்கத்தினர்கள் காட்டினார்கள். அவர்கள்மேல் கேஸ் இருப்பதாகத் தெரிகிறது. கேஸ் நடப்பதால் மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜராகியிருக்கிறார். எனக்குத் தெரிந்த வரையில் மாஜிஸ்டிரேட் முன்பு போலீஸார் அடித்தார்கள் என்று சொல்லலாம்—அப்படி மாஜிஸ்டிரேட்டிடம் சொல்லவில்லை என்று தெரிகிறது. அப்படிச் சொல்லியிருந்தால் எனக்குத் தெரிவதற்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

**Mr. SPEAKER** : கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்கிறாரா ?

**Sri M. KALYANASUNDARAM** : அது அமைச்சரே கேட்காத ஒரு விஷயம்.

**Mr. SPEAKER** : The question is—

'That the allotment of Rs. 5,76,95,400 under Demand XIV— 1-30 p.m.
Police—be reduced by Rs. 100'.

The cut motion was put and the House divided thus :

*Ayes.*

1 Sri A. R. Marimuthu.
2 „ P. S. Chinnadurai.
3 „ S. Pakkirisami Pillai.
4 „ V. K. Kothandaraman.
5 „ N. Marudachalam.
6 „ N. K. Palanisami.
7 „ M. Kalyanasundaram.
8 „ S. M. Annamalai.
9 „ C. Nataraja Odayar.
10 „ M. [illegible]nandan.
11 Dr. Sathiyavanimuthu.
12 Sri K. Anbazhagan.
13 „ A. Govindasamy.
14 „ M. P. Sarathi.
15 „ M. Selvaraj.
16 „ A. V. P. Asaithambi.
17 „ M. Karunanithi.
18 „ M. P. Subramaniam.
19 „ C. N. Annadurai.
20 „ P. S. Ellappan.
21 Sri M. Muni Reddi.
22 „ M. Jagannathan.
23 „ T. S. Ramaswamy Pillai.
24 „ T. Irusappan.
25 „ K. Gopala Gounder.
26 „ S. A. M. Annamalai Odayar.
27 „ M. D. Ramasami.
28 „ K. Ramachandran.
29 „ V. K. Ramaswamy Mudaliyar.
30 „ Tirumalaimuthu Veerasalaya Thiruvenkadasami Naicker.
31 „ S. Ramasami Thevar.
32 „ T. Veluchami.
33 „ A. Perumal.
34 „ K. Sattanatha Karayalar.
35 „ P. Veerappa Kounder.
36 „ A. V. P. Periavalaguruva Reddi.
37 „ T. L. Sasivarna Thevar.

*Noes.*

1 Sri B. Bhaktavatsalu Naidu.
2 „ P. Appavu.
3 „ N. P. M. Chinniah Kovunder.
4 „ V. Arunachala Thevar.
5 „ V. S. Arunachalam.
6 „ R. Chidambara Bharathi.
7 „ M. Alagirisamy.
8 „ M. A. B. Arumughasamy.
9 „ A. E. Chandrasekhara Nayagar.
10 The Hon. Sri P. Kakkan.
11 Sri G. Gomathisankara Dikshitar.
12 „ R. Kandasami.
13 „ S. Khadir Sheriff.
14 „ P. Kupppusami.
15 „ T. Manavalan.
16 „ T. P. Elumalai.
17 „ K. Karuthappa Gounder.
18 „ A. Mariappan.
19 The Hon. Sri M. A. Manickavelu.
20 Sri N. Ekambara Mudali.
21 „ P. Jayaraj.

*Noes*—cont.

22 Sri T. Karia Gounder.
23 „ K. Marappa Gounder.
24 The Hon. Sri M. Bhaktavatsalam.
25 Sri A. S. Duraiswami Reddiar.
26 „ M. R. Kandaswami Mudaliyar.
27 „ R. Krishnasami Gopalar.
28 „ S. Lazar.
29 „ V. S. Manicksundaram.
30 The Hon Sri C. Subramaniam.
31 Sr. D. Dasarathan.
32 „ G G. Gurumurthi.
33 „ V. K. Krishnamurthy.
34 „ P. S. K. Lakshmipathi Raj.
35 „ P. G. Manickam.
36 The Hon. Sri K. Kamaraj.
37 Sri P. G Karuthiraman.
38 „ V. Govindaswami Naidu.
39 „ M. Kandasami Kandar.
40 „ P. Kolanda Gounder.
41 „ S. Lakshmana Gounder.
42 Srimathi Kamalambuja Ammal.
43 Sri V. A Muthaiya.
44 „ A. Nesamony.
45 „ P. M. Periakaruppan Ambalam.
46 „ P. Ramachandran.
47 Srimathi Hemalatha Devi.
48 „ Rajathi Kunchithapatham.
49 Sri A. Raja Gounder.
50 „ T. R. Ramanatha Thondaman.
51 Srimathi A. S. Ponnammal.
52 Sri S. Nagaraja Monigar.
53 „ K G. Palaniswamy Gounder.
54 „ K. Ponnian.
55 „ S. Ramalinga Padayachi.
56 The Hon. Srimathi Lourdhammal Simon.
57 Srimathi P. K. R. Lakshmikantham.
58 Sri M. Muthuswamy Nayagar.
59 „ K. P Palaniswami.
60 „ N. S. Ramalingam.
61 The Hon. Sri V. Ramiah.
62 Srimathi Kolanthai Ammal.
63 Sri J. Matha Gowder.
64 „ K. Periannan.
65 „ M Ramachandra Reddi.
66 „ A. Vedarathnam.
67 „ S. Thangavelu.
68 „ A. R. Subbiah Mudaliar.
69 „ A. Senapathi Gounder.
70 „ S. C. Sadayappa Mudaliar.
71 „ K. Vasudevan
72 „ T. S. Swaminatha Odayar.
73 „ T. K. Subbiah.
74 Srimathi A. Suares.
75 Sri G. Vagheesam Pillai.
76 „ R. Swaminatha Merkondar.
77 „ P. R. Sreenivasa Padayachi.
78 „ T. Sampath.
79 „ A Chidambaranatha Nadar.
80 „ R. Srinivasa Iyer.
81 „ V. P Sarangapani.
82 „ N. R. Thiagarajan.
83 „ M. K. Somasundaram.
84 „ S. Samikannu Padayachi.
85 „ K. L. Ramaswami.
86 „ A. S. Subbaraj.
87 „ M. D. Thiagaraja Pillai.
88 „ V. Sankaran.
89 „ V. Vedayyan.
90 „ K. Vinayakam.
91 „ O. Venkatasubba Reddy.
92 „ P. Vedamanickam.

*Ayes* . 37 ; *Noes* : 92 ; *Neutral* : Nil.

The cut motion was lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,76,95,400 under Demand XIV—Police.'

The Demand was put and carried and the Grant was made.

1-40 p.m. MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## B. Reports and other papers.

38. *Review of the activities of the Transport Department during the first half of* 1957.

39. *Short Report on the achievements and various activities of Hindu Religious and Charitable Endowments (Administration) Department for the first half-year from 1st April to 30th September* 1957.



## APPENDIX I.

[Vide answer to short notice question No. 20 asked by Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 18th March 1958, page 74 supra.]

*Disparity in scales of pay and dearness allowances between Central Government employees and State Government employees holding comparable posts.*

1. The recent decision of the Government of India to increase the pay of their employees by Rs. 5 per mensem as a measure of 'Interim Relief' has again brought to the forefront the problem cited above. As this problem has been a thorn in the flesh of State Governments for now nearly a decade, and as it threatens to get worse and worse, it is suggested that the matter should be discussed by the National Development Council. Hence this note. The facts set out in this note are taken from the experience of Madras State. They are likely to be matched by similar facts from many other States if not perhaps, all of them.

2. The size of the disparity in total emoluments (pay and allowances including dearness allowances) between Central Government employees and State Government employees in Madras State has been, until recently, of the order indicated by a few examples given below:

(i) Peons in the Central Services were paid from Rs. 70 to Rs. 75, while peons in the State Services were paid from Rs. 39 to Rs. 47. Extension as percentages of the latter, the disparity was over 70 per cent and ranged (in amount) from Rs. 28 to Rs. 31.

(ii) Peons in the Central Services were better paid than all attenders, all police constables, most elementary school teachers and some among the Police Head Constables in this State, as shown below:

| Category. | Total emoluments. Minimum. | Maximum. |
|---|---|---|
| | RS. | RS. |
| Attenders .. .. .. | 46 | 57 |
| Police Constables .. .. | 52 | 65 |
| Higher Elementary Grade teachers | 52 | 75 |
| Head Constables .. .. | 65 | 98 |
| Secondary grade teachers .. | 70 | 117 |

(iii) Lower divisions clerks of the Central Services were paid from Rs. 110 to Rs. 190 in the mufassal districts, and Rs. 126 to Rs. 215 in Madras City. The corresponding range of total emoluments for lower division clerks of the State Services was Rs. 70 to Rs. 117 in the mufassal districts, Rs. 76 to 126 in non-Secretariat offices in Madras City and Rs. 82 to 136 in the Secretariat offices. At this level, the disparity was of the order of 50 to 60 per cent ranging (in amount) from Rs. 40 to Rs. 89.

[18th March 1958

(iv) Lower division clerks of the Central Services are better paid than upper division clerks of the State Services, whose range is Rs. 107 to Rs. 140 in mufassal districts.

(v) The story is the same about Postal and Railway employees. As these employees are distributed all over the countryside, they constitute a constant reminder of the disparities and cause continual irritation.

3. The low-paid employees of the Central Government are aggrieved because the cost of living goes up without equivalent increase in their dearness allowances; while industrial employees in the private sector get automatic increases of pay in consequence (and, in addition, substantial bonuses out of inflationary profits). There can be no doubt that the grievances of Central Government employees is legitimate and natural. But objective conditions are such that there is no way out of this situation, except by stabilising prices and the cost of living. This is a major problem falling outside the purview of this Note.

4. While the impact of this major problem is felt no less by the employees of the State Government than those of the Central Government, the grievance of State Government employees is aggravated by the wide disparity between the pay scales above referred to. In the endeavour to redress this grievance, the Government of Madras sanctioned increases of pay in two instalments, once in November 1956 and again in March 1957.

The effect of the first sanction was to level up total emoluments, on an average, by Rs. 5 per mensem. The combined effect of both sanction was to level up total emoluments by Rs. 12 per mensem.

5. It may be noted that even after the second sanction, the greater part of the disparity still remains. Even though the relief has been inadequate, the cost has been very high and it has had a serious adverse effect on the capacity of the State Government to finance its Development Plans.

(i) It is estimated that 160 thousand State Government employees, 46 thousand local body employees and 91 thousand teachers benefited by the sanctioned increases. The aggregate cost is Rs. 436 lakhs per annum. The cost for five years is nearly Rs. 22 crores as against Rs. 150 crores (which is the approved total cost of our State Development Plan). *Thus the shortage of resources for our Plan has been added to by over 14 per cent.*

(ii) The effect on that part of our Plan which relates to the Development of Education is still more striking. The pace at which the cost of Education was increasing from year to year at the end of the First Plan was such that Madras needed Rs. 15 crores in the Second Plan in order merely to maintain expansion at that tempo. Actually, the Educational Allotment was cut down to less than Rs. 12 crores, thereby entailing very difficult readjustments.



18th March 1958]

As a result of increasing emoluments of teachers by Rs. 12 per mensem the annual expenditure on Education has been increased by Rs. 131 lakhs. The five-year cost is thus between Rs. 6 or Rs. 7 crores. In other words, well over one-half of the entire allotment for development of Education has been consumed by this increase of emoluments. The situation has been met by treating the bulk of the expenditure as Non-Plan expenditure on Education (thereby spreading the resulting shortage of resources over the entire development plan).

6. It is in this context that the news has been received that the Central Government have increased the pay of their employees by Rs. 5 per mensem as a measure of " Interim Relief "; thereby arousing the hope that further increases are coming. While the announcement has been greeted by Central Government employees with complaints about its inadequacy, the State Government employees are renewing the agitation which had temporarily died down. What is the answer to be given by the State Government to their employees? A difficult situation is arising and it is bound to develop unfavourably. It is necessary that there should be an all-India policy to be followed in unison by the Central Government as well as all the State Governments.

7. A major mistake was committed ten years ago when the Central Government accepted the recommendations of the First Pay Commission and set a pace which the State Governments could not follow. When the idea of setting up the Second Pay Commission was mooted, it was pointed out in the National Development Council that . . . . . . . . . . . . . it was inevitable that the repercussions should be felt by all the State Governments. Yet, the Second Pay Commission was appointed. 'Interim Relief' has been given. Everyone will be now looking forward to the Report of the Second Pay Commission and preparing, in advance, to agitate. The process has restarted whereby the Finances of all the State Governments must be upset.

8. It is suggested that the time has arrived when the mistake committed ten years ago should be rectified. Obviously, the employees of the Central Government who have already acquired service rights in respect of existing scales of emoluments, are entitled to the continuance of these scales. But there is no good reason why a sharp change should not be made with the least possible delay in respect of new entrants. *It is suggested that a policy of 'Regionalization' of non-Gazetted Central Services should be accepted in principle, worked out in detail, and put into effect* . . .

The non-Gazetted Establishments of the Central Government functioning in each State may be operated as a separate 'Regional' Unit. Direct recruitment may be stopped, and all future vacancies filled by temporary deputation [followed (after satisfactory temporary service), by permanent transfer] of selected personnel

from the services of the State Government. Under such a system, existing scales of emoluments may be continued without diminution. The new system will operate as a new avenue of promotion for the State Services. This will remove the grievance about disparity of scales because the disparity will be maintained for the benefit of State Government employees. At the same time the new system will provide the Central Government Establishments with far more efficient personnel than they now secure by direct recruitment.

9. . . . It is true that many practical difficulties may have to be encountered, in the effort to bring about the changes proposed in paragraph 8 above. But these difficulties must be faced and overcome, for they cannot, by any means, be as serious as the difficulties into which the country is drifting, as a result of discontent among the Services. The discontent is provoked by rising prices and cost of living, and it is aggravated by the abnormal disparities. Really serious and effective measures must be devised in order to stabilise prices and cost of living. At the same time something must be done to reduce the abnormal disparities, or otherwise remove their evil effects on the morale of State Services. The suggestions about 'Regionalisation' of Non-Gazetted Central Service (made in paragraph 8 above) may be taken up for serious examination without delay, as one method of solving the latter problem.

10. Pending the final settlement of the difficult question on the foregoing lines, there is the immediate problem of the demand from State Government employees of further increase of pay corresponding to the 'interim relief' of Rs. 5 per mensem granted by the Central Government. It is necessary that the Central Government should agree to subsidise the State Government in respect of such relief as the State Government may have to grant. An early decision may be reached on this issue also and communicated to State Governments.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 351 asked by Sri A. Govindasamy at the meeting of the Legislative Assembly held on 18th March 1958, page 79 supra.]

*Resolutions concerning Government of the Fifth Conference of the General Body of the State Union of Panchayats held on 1st and 2nd December* 1957.

*Resolution No.* 7.—Welcoming the proposal of Government to constitute Panchayat Block Unions and to transfer to them the powers of district boards but objecting to the transfer to the said Unions the powers, functions and funds vested in the individual panchayats under the 1950 Act and requesting that the Block Development Officer may be made Secretary of the Block Union.



*Resolution No.* 8.—Pointing out that the proposal to transfer powers of control and supervision over Class II panchayats from Regional Inspectors to Revenue Divisional Officers and from the Inspector of Municipal Councils and Local Boards to District Collectors is against the Panchayat movement and that the proposal to place the District Panchayat Officers, Additional District Panchayat Officers and Deputy Panchayat Officers under the control of the Revenue Divisional Officers and to transfer the functions of Local Administration Officers to Revenue Divisional Officers or to place the District Panchayat Officers under the Dual Control of the Revenue Divisional Officers and the Inspector of Municipal Councils and Local Boards is not conducive to administration and requesting the Government to drop the proposals.

*Resolution No. 8-A.*—Requesting Government to create a separate department for panchayats.

*Resolution No.* 9.—Stating that there is no need to have Circle Committees between individual village panchayats and Block Unions and requesting Government that in order to carry on the administration efficiently and effectively and to enable the conduct of meetings often, an Executive Committee consisting of fifteen members elected by the Panchayat Union Council may be constituted.

*Resolution No.* 10.—Requesting the State Government and the Central Government that Class II panchayats may be given the right of vote to Local Authorities Constituency for the Madras Legislative Council.

*Resolution No.* 11.—Requesting the amendment of the rule prescribing an expenditure of 25 per cent of the gross receipts of panchayats on lighting.

*Resolution No.* 12.—Requesting to grant concessional rates for street lighting with electricity similar to those granted for agricultural service connexions.

*Resolution No.* 13.—Requesting removal of restrictions imposed during war time in regard to the stations whose broadcasts alone should be received by radio sets maintained by panchayats and relaxation of time-limit.

*Resolution No.* 14.—Requesting that control over tanks, rivers, channels, etc., porambokes in panchayat areas may be vested in the panchayats concerned and that the income from porambokes, fishery rent, lease of grass, etc., may be given to panchayats.

Though there is provision in the Madras Village Panchayats Act, 1950, to the above effect, because of the provision in the rules providing for the approval of the Collector and the Board of Revenue, the above rights and facilities have become ineffective and each panchayat loses thousands of rupees as income by above sources, and it is a great loss to the country.

*Resolution No.* 15.—Requesting transfer of income from cattle-pounds to panchayats.

*Resolution No.* 16.—In places where public contributions are not forthcoming for Local Development, National Extension Service and Community Development Schemes and if the finances of panchayats of such places are sound, requesting Government to permit such panchayats to execute the schemes themselves after getting the Government grant and supplementing the balance from their own funds.

*Resolution No.* 17.—Requesting the abolition of the system of appointment of group clerks and empowering panchayats to appoint separate clerks—part-time or wholetime, etc., and to empower the District Panchayat Officers to make such appointments to avoid delay.

*Resolution No.* 18.—Requesting that the Presidents of Class I panchayats may be given the same powers as Presidents of Class II panchayats and that the present paid Executive Officers may be made Secretaries of Class I panchayats.

*Resolution No.* 19.—Requesting that the Presidents of Class I panchayats may be empowered to check-measure works up to certain limits, in order to expedite execution of works.

*Resolution No.* 20.—Requesting direct election of Presidents.

*Resolution No.* 21.—Requesting that panchayats may be permitted to print the forms required by them in co-operative presses in districts.

*Resolution No.* 22.—Requesting that the power to license private markets in panchayat areas may be given to village panchayats concerned.

*Resolution No.* 23.—Requesting the appointment of a shroff separately for panchayat work in Government treasury.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 19th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Lift irrigation schemes*

* 363 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any lift irrigation schemes have been sanctioned for the Kanyakumari district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The answer[a] is placed on the table of the House.

*Industrial Training Institute*

* 364 Q.—SRI A. VEDARATHNAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the financial aid given by the State and Central Governments to the Industrial Training Institute at Thyagarayanagar;

(b) the industries that are being run there; and

(c) the other places where such institutions are in existence in the State?

THE HON. SRI R. VENKATARAMAN: (a), (b) & (c) A note[b] containing the information required is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: தாம்பரத்தில் இருக்கிற அந்தத் தொழிற் சாலையில் எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் ? அவர்கள் சென்னை வாசிகளா அல்லது வெளி ஜில்லா வாசிகளா ?

THE HON. SRI R. VENKATARAMAN: I am sorry, I must ask for notice. I have only figures with regard to expenditure, course of training, etc.

SRI M. D. THIAGARAJA PILLAI: மற்ற ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழில் பள்ளிக்கூடங்களைப் போன்று தஞ்சை ஜில்லாவிலும் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? தனியார் யாராகிலும் வைப்பதற்கு முயற்சி செய்து அவர்கள் வந்து கேட்டு அதற்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூல் ஒன்று நாகப்பட்டணத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் பாலிடெக்னிக்கைப்பற்றி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தனியார் ஒருவர் வைக்க முன் வந்திருக்கிறார். அது யோசனையில் இருக்கிறது.

a Printed as Appendix I on page 243 infra.
b Printed as Appendix II on pages 243–244 infra.

[19th March 1958

SRI S. LAZAR : இப்பொழுது இருக்கக்கூடிய ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்டுகள் போதுமானது என்று சர்க்கார் நினைக்கிறார்களா அல்லது இன்னும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்களா ? அப்படி இன்னும் அதிகமாக ஏற்படுத்துவதாக இருந்தால் அதை திருச்சி போன்ற இடங்களில் ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நமக்கு இப்பொழுது இருக்கக்கூடிய இன்ஸ்டிடியூட்டுகள் போதும் என்று நாம் நினைக்க முடியாது. நமது நாட்டில் இண்டஸ்ட்ரியல் தொழில் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருப்பதன் காரணமாக இன்னும் அதிகப்படுத்தலாம். இப்பொழுது இருக்கிறபடி இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12 பள்ளிக்கூடங்களை நடத்துவதாக யோசனை. அதற்காக திட்டங்களை செய்துகொண்டிருக்கிறோம்.

SRI M. JAGANNATHAN : இம்மாதிரியான தொழில் பயிற்சி ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்று வருகின்ற பல மாணவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினருக்கு நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன், பயிற்சி பெற்ற மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வருவதற்கு முன்னதாகவே அவர்களுக்கு வேலை கிடைத்து விடுகிறது.

SRI P. G. MANICKAM : தச்சு வேலை, கொல்லு வேலை போன்ற குடிசைத் தொழில்களைக் கற்றுக்கொடுக்கக்கூடிய பயிற்சி சாலைகளை ஜில்லாக்களில் நிறுவுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது கடலூர், நாகப்பட்டணம், விருதுநகர், பாளையங்கோட்டை போன்ற இடங்களும் ஜில்லாவுக்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். கிராமங்களிலுள்ளவர்கள் அங்கு வந்து பயிற்சி பெற்றுக்கொள்ளலாம். அப்படி பயிற்சி பெற்றுக்கொள்ளவும் முடியும்.

SRI K. VINAYAKAM : After imparting such kind of useful and utilization training to these trainees, do the Government follow it up by giving them employment or are they left to themselves to find employment? Also having given subsidy for their training, do the Government collect anything from these trainees in relation to the amount they have spent on them?

THE HON. SRI R. VENKATARAMAN : If hon. Members would visit some of the Employment Exchanges, they would find a blackboard with a notice calling for applications for the posts of fitters, turners, etc., from the trainees in this Institute. Therefore, there is really a dearth of candidates and there is no unemployment whatsoever.

SRI N. S. RAMALINGAM : தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்தப்போகும் பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்தை நாகப்பட்டணத்தில் வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : This question has to be addressed to the Minister for Finance who is now in charge of this subject.

SRI A. V. P. ASAITHAMBI : இம்மாதிரியான தொழிற் பயிற்சி ஸ்தாபனங்கள் நிறையதேவை என்பதை கனம் அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே ராஜ்யத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் இரண்டு, மூன்று தொழில் ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் ஒரு திட்டம்போட்டு வேலை செய்யுமா ?



19th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது 12 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதுவே கூடுமான அளவுக்கு எல்லா இடங்களிலும் சென்னை ராஜ்யம் பூராவுக்கும் போதுமானதாக இருக்கிறது. ஆனால் மேற்கொண்டு இன்னும் அதை விஸ்தரிக்க அவசியம் வரும் போது இன்னும் அதிகமாக விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

SRI A. VEDARATHNAM : பயிற்சி பெற வருகின்ற மாணவர்களுக்கு தகுதி என்ன இருக்க வேண்டும் ? பயிற்சி காலம் எவ்வளவு ? பயிற்சி காலத்தில் அவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறதா ? அப்படியானால் அது எவ்வளவு என்பதை விளக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வயது 16-லிருந்து 25-க்குக் குறைவாக இருக்க வேண்டும். படிப்பு குறைந்தது நாலாவது பாரம் வரையில் படித்திருக்கவேண்டும். அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிற காலம் இரண்டு வருஷங்கள்.

SRI A. VEDARATHNAM : ஸ்டைபண்டைப்பற்றி என்ன பதில் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு தனியாக கேள்வி கேளுங்கள்.

SRI T. KARIA GOUNDER : இம்மாதிரியாக தொழில் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கவேண்டும் என்றால் அதைப்பற்றி கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். வட ஆர்க்காட்டில் இரண்டாவது திட்ட காலத்தில் யாதொரு தொழில் பயிற்சி பள்ளிக்கூடங்களும் ஏற்படாமல் இருப்பதால் அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கவனிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன் ?

MR. SPEAKER : இது எல்லா ஜில்லாக்களையும்பற்றிய கேள்வி இல்லை. ஒவ்வொரு ஜில்லாவைப்பற்றியும் கேள்விகள் போட்டால் பதில் சொல்ல முடியாது. அதனால் தனிக் கேள்வியாகக் கேட்கவேண்டும்.

SRI A. A. RASHEED : What is the total strength in this Institute?

THE HON. SRI R. VENKATARAMAN : I am afraid. I do not have the figure.

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்தப்போகும் பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்தை தஞ்சையின் தலை நகராகிய தஞ்சையிலேயே ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வியை கனம் நிதி மந்திரிக்குப் போடவேண்டும்.

SRI P. G. MANICKAM : இந்த தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் எத்தனை அரிஜனப் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I want notice, Sir.

SRI M. JAGANNATHAN : தொழில் பயிற்சி ஸ்தாபனங்களில் பயிற்சி பெறுகிற ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு அது சர்க்காருடைய ரெகக்னைஸ்ட் (recognised) ஸ்தாபனமாக இருந்த போதிலும் அரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் அதை இன்னும் ஏன் ரெகக்னைஸ் செய்யவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I want notice for this question.

[19th March 1958

SRI A. R. SUBBIAH MUDALIAR: இந்த இண்டஸ்ட்ரியல் தொழில் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கும்போது அவைகளை ஜில்லா தலை நகரங்களில் ஆரம்பிக்கிறார்கள். அப்படி இல்லாமல் அவைகளை கிராமப் பகுதிகளில், டிசென்ட்ரலைஸ் பண்ணி, எங்கு அந்தத் தொழில் ஜாஸ்தியாக இருக்கிறதோ எங்கே ஆர்ட்டிஸான்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்களோ அந்த இடங்களில் அவைகளை ஏற்படுத்துவதற்கு எத்தனையோ மனுக்கள் கொடுத்தாலும் அப்படி வைக்காமல் அவைகளை டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்களில்தான் வைக்கிறார்கள். அதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அதை டிசென்ட்ரலைஸ் பண்ணி ஆர்ட்டிஸான்கள் இருக்கக்கூடிய இடங்களில் அவைகளை வைப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: எந்த எந்த இடங்களில் அந்த தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில்தான் வைக்கலாம். மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு அந்த தொழிற் பயிற்சி பள்ளிக்கூடங்களை அமைக்கும் இடங்களுக்குப் பக்கத்தில் அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் இருக்கவேண்டும். அப்படி எல்லா கிராமங்களிலும் வைக்கமுடியாது. சாதாரணமாக ஜில்லா தலை நகரங்களுக்குப் பக்கங்களில்தான் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் இருக்கும். அதனால்தான் அவைகள் ஜில்லா நகரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. Decentralize பண்ணி எல்லா இடங்களிலும் வைப்பதாக இருந்தால் அந்தப் படிப்புக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். அப்பொழுது ஜில்லா தலை நகரங்களில் வைப்பதும் கிராமங்களில் வைப்பதும் ஒன்றாகிவிடும்.

SRI M. K. SOMASUNDARAM: இரண்டு வருஷ காலம் பயிற்சி பெற்ற பிறகு அந்த மாணவர்களுக்கு வேலை கொடுக்கும் உறுதியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: I have already answered this question.

SRI K. VINAYAKAM: With regard to this Institute at Thyagarayanagar, is the Hon. Minister aware of the fact that there is a great rush for admission and after a rigorous screening of the candidates, only a very few are selected for training. So, will the Government think of the possibility of augmenting the number of candidates to be trained in that Institute?

THE HON. SRI R. VENKATARAMAN: There is certainly a great rush for admission not only in the Institute at Thyagarayanagar but also in all the 12 Institutes in the State. Merely increasing the strength without providing adequate facilities for training will lower the standard. Therefore, we propose to admit only that number of students who can get training and facilities for practical experience, etc., in that place.

SRI A. VEDARATHNAM: அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்து நடைபெறுகின்ற தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு நிதி உதவி கொடுத்து அவைகளை அபிவிருத்தி செய்ய முன்வருமா ? உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லா போர்டு 'இண்டஸ்டிரியல் டிரையினிங் ஸ்கூல்' நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தினாலே சரியாக வேலை செய்ய முடியவில்லை. அதற்கு ஏதேனும் நிதி உதவி கொடுத்து அதை ஆதரிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த ஸ்கீமில் சாயங்கால வேளைகளில்கூட படிப்பு சொல்லிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் இப்பொழுது 12 பள்ளிக்கூடங்களில் எவ்வளவு பேர்கள் சேர்ந்திருக்கிறார்களோ அதற்குமேல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு வசதி இருக்கிறது. தஞ்சாவூர் பள்ளிக்கு



19th March 1958]

*Minor ports*

* 365 Q.—SRI A. VEDARATHNAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the names of minor ports in the State;

(b) the amount now available under the Minor Ports Fund;

(c) whether the Government have any scheme for the improvement of minor ports with a view to develop the coastal traffic: and

(d) if so, the details thereof and the amount that is proposed to be spent therefor?

THE HON. SRI P. KAKKAN: (a), (b), (c) & (d) The answer* is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: இந்த ஜாபிதாவில் கண்டிருக்கிற எல்லா துறைமுகங்களும் இப்பொழுது வேலை செய்துக்கொண்டிருக்கிறதா ? இல்லையானால் அவைகளில் எந்தெந்த துறைமுகங்கள் மூடப்பட்டிருக்கின்றன ? அவைகளை திறப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN: எந்தெந்த துறைமுகங்கள் லாயக்காக இருக்கின்றனவோ அவைகளெல்லாம் வேலை செய்கின்றன.

SRI N. S. RAMALINGAM: இந்த ஜாபிதாவிலுள்ள துறைமுகங்களின் அபிவிருத்தி வேலை எப்பொழுது முடியும் என்பதை அரசாங்கம் சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN: நிச்சயமாக சொல்ல முடியாது. இருந்தாலும் வேலைகள் துரிதமாக நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

SRI M. KARUNANITHI: சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தின் கீழ் பல துறைமுகங்கள் ஏற்படுவதற்கு வசதி இருக்கிறது என்பதை சர்க்கார் அறியுமா ? அதற்கான வேலைகளில் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN: சர்க்கார் இதை நன்றாக அறிந்துதான் அந்த வேலையை எடுத்துக்கொள்ள ஏற்கனவே மத்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: What is the total amount available from the Central for these minor ports?

THE HON. SRI P. KAKKAN: A separate question may be put.

SRI A. VEDARATHNAM: முன்பு ஒரு காலத்தில் இந்தத் துறைமுகங்கள் தகுதி உள்ளதாக இருந்த காரணத்தினாலே அவைகள் துறைமுகங்களாக்கப்பட்டு இருக்கின்றன. இப்பொழுது வேறு எந்தக் காரணத்தினாலோ அவைகளில் பல மூடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, கோடிக்கரை, தோப்புத்துறை துறைமுகங்கள் இலங்கையோடு போக்கு வரத்துக்கு சௌகரியமான துறைமுகங்களாக பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் திறக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN: இந்தத் துறைமுகங்களை எடுத்துக் கொள்ளுவதாய் இருந்தால் உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது. பூனாவிலுள்ள சென்டிரல் வாட்டர் அண்டு பவர் ரிசெர்ச் ஸ்டேஷன், எந்தெந்த

* Printed as Appendix III on pages 244–245 infra.

துறைமுகங்களை நாம் எடுத்துக்கொள்ள முடியும், எவைகளை எடுத்துக் கொண்டால் நன்மை பயக்கும் என்று பார்த்து சொல்லுகிறார்களோ அவைகளைத்தான் நாம் எடுத்துக்கொள்ள முடியும். எந்தெந்த துறை முகங்களை நல்ல முறையிலே நாம் எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகளை யெல்லாம் பார்த்து அந்த துறைமுகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**Sri P. R. SRINIVASA PADAYACHI :** கடலூர் துறைமுகம் கரி அதிகமாக இறக்குமதி செய்யப்படும் துறைமுகம். அதில் நாள் ஒன்றுக்கு 1,200 டன் கரி இறக்குமதி செய்யப்படுகிறது. அந்தத் துறைமுகத்திலே கட்டப்பட்டிருக்கிற பிளாட்பாரம் சரியாக இல்லை என்று பாரி கம்பெனியி லிருந்தும், ஹிந்தியா கம்பெனியிலிருந்தும் ஏதாவது புகார்களை அரசாங் கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா ? அப்படி அனுப்பியிருந்தால், அந்தப் பாரி கம்பெனியையும், ஹிந்தியா கம்பெனியையும் இந்தக் கமிட்டியில் சேர்த்துக் கொண்டு பிளாட்பாரம் அமைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுவார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** அபிவிருத்தி செய்யவேண்டிய துறைமுகங்களில் கடலூர் துறைமுகம் முக்கியமானது. இந்தத் துறை முகத்திலே பாரி கம்பெனியுடன் கலந்துகொண்டு சீக்கிரத்தில் ரிவெட் மெண்டு கட்டுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

**Sri M. JAGANNATHAN :** மலேயா நாட்டிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்கள் நாகப்பட்டிணம் துறைமுகத்தில் இறங்குவதைப் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் ஆபத்தான நிலைமையில் இறங்குகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களா ? அந்த ஆபத்தான நிலைமையை போக்கி அங்கே இறங்குகின்ற பிரயாணிகளுக்கு வசதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்தத் துறைமுகத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய சர்க்காரிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

**The Hon. Sri P. KAKKAN :** நாகப்பட்டிணம் துறைமுகம் நம்முடைய துறைமுகங்களில் முக்கியமான துறைமுகம். மலேயாவிலிருந்து வந்து இறங்குகின்ற பிரயாணிகளுக்கு தங்குவதற்கு 'ஷெட்கள்' கட்டு வதற்கும், அவர்களுக்கு சாப்பிடுவதற்கு வசதிகள் செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

**Sri M. D. THIAGARAJA PILLAI :** கனம் அமைச்சர் அவர் கள் தெரிவித்தபடி நாகப்பட்டிணம் துறைமுகத்தில் புளூ ஜுரம் வந்த காரணத்தினாலே பாஸஞ்சர்கள் பல மாதங்களாக இறங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இப்பொழுது இறங்குவதற்கு அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri P. KAKKAN :** நான் இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது. அந்தத் துறைமுகத்தை நன்றாக செப்பனிட்டு சீர்திருத்தியபிற்பாடு, அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**Sri A. VEDARATHNAM :** மூடியிருக்கிற துறைமுகங்களில் வேலை நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் ஒரு 'கோஸ்டல் டிராபிக்', கடலோர போக்குவரத்து சர்வீஸை ஆரம்பிப்பதற்கு யோசனைஉண்டா ? இருந்தால் எப்பொழுது அதை ஆரம்பிப்பார்கள் ?

**Mr. SPEAKER :** இதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

*Prohibition offences*

* 366 *Q.*—**Sri A. VEDARATHNAM :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any complaints from the public that the penal provisions in the Madras Prohibition Act are light and that most of the offenders are let off on the ground that they have committed offences for the first time;



(*b*) if so, the action taken thereon;

(*c*) whether there is any proposal to amend the Act providing for maximum penalty for offences under the Act;

(*d*) whether any District Prohibition Advisory Council has made any recommendations in this regard and, if so, what they are;

(*e*) whether the Government have fixed in the permit itself the quantity of sweet juice to be tapped from each palmyrah tree for the preparation of palm jaggery and if so, what it is; and

(*f*) whether any owners of palmyrah trees have been punished for allowing sweet juice to be tapped without a permit?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** (*a*) The answer is in the affirmative.

(*b*) Provisions for imposition of both imprisonment and fine, minimum punishment and enhanced sentences for second and subsequent offences have been duly incorporated into the Madras Prohibition (Amendment) Bill, 1958.

(*c*) The Madras Prohibition (Amendment) Bill, 1958, introduced in the Assembly on 13th February 1958 provides for the necessary amendments.

(*d*) (i) The District Prohibition Advisory Council, Tiruchirappalli, at its meeting held on 30th July 1956, recommended that enhanced sentences should be imposed for second and third offences committed by one and the same person and that for the second offence, the minimum punishment should be three months rigorous imprisonment;

(ii) The District Prohibition Advisory Council, Ramanathapuram, at its meeting held on 15th April 1957, desired that sentences of imprisonment, sufficiently heavy, should be awarded in prohibition cases;

(iii) The District Prohibition Advisory Council, Tanjore, at its meeting held on 15th October 1957, felt that in more than 80 per cent of the cases convicted for illicit distillation and kindred offences, the fine amount had been paid and in order to make the sentence more deterrent the Act should be so amended as to make it mandatory on the part of the courts to impose sentences of imprisonment in each such case; and

(iv) at its meeting held on 12th June 1957, the District Prohibition Advisory Council, Salem, recommended that the punishments under the Act were light and not deterrent.

(*e*) The answer is in the negative.

(*f*) There were only a few cases reported in Tanjore and North Arcot districts.

**Mr. SPEAKER :** Recently we have had a sufficiently long discussion on this matter when the Madras Prohibition (Amendment) Bill, 1958, was before the House. Does the House want to discuss it still further?

[19th March 1958

ஒரு நாள் முழுவதும் மதுவிலக்கு சட்ட திருத்த மசோதாவின்மீது விவாதம் நடந்து இருக்கிறது. ஆகையால் இந்தக் கேள்வியின்மீது அநேக உபகேள்விகள் கேட்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீ ஏ. வேதரத்னம் இந்தக் கேள்வியை கேட்டிருப்பதால் அவர் மட்டும் ஒரு உபகேள்வி கேட்பதற்கு அனுமதிக்கிறேன்.

**Sri A. VEDARATHNAM** : பதநீர் விற்பதற்கு இந்த ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது ? 'ஸாகரின் வாடரில்' பனை மட்டையை போட்டு பதநீர் வாசனையை உண்டாக்கி பதநீர் என்று விற்கிறார்கள். பதநீரெல்லாம் கள்ளாக மாற்றி விற்கப்பட்டு வருகிறது. இதை தடுக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : எந்தெந்த இடத்தில் பதநீர் விற்பதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் பதநீர் விற்கப்படும் இடங்களிலெல்லாம் அம்மாதிரி தவறுகள் நடக்கின்றன என்று சொல்ல முடியாது. எங்கே தவறுதல் நடக்கிறதோ அதை தடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri K. VINAYAKAM : On a point of order, Sir. The Hon. Speaker was kind enough to inform us that having discussed the Bill recently there was no necessity for putting supplementary questions. I fully agree with him but at the same time I would like to bring to his notice that there are other aspects involved in this matter which have not been considered or discussed on the floor of this House. It is only with regard to those aspects that I want to put a supplementary question. If the Hon. Speaker allows, I will put a supplementary question which he will appreciate . . .

Mr. SPEAKER : The hon. Member may put a separate question.

*Motor Transport workers*

* 367 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are considering any proposal to bring in legislation for regulating the wages and working conditions of the workers in motor transport; and

(b) if so, when the Bill will be ready?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) No, Sir. I may mention here that a proposal in this regard is under the consideration of the Government of India.

* 368 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a tripartite committee to enquire into the condition of motor workers to decide minimum wages, dearness allowance and other amenities?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

**Sri M. KALYANASUNDARAM** : மத்திய சர்க்கார், அவர்களுடைய யோசனைகளை ராஜ்ய சர்க்காருக்கு அனுப்பி ராஜ்ய சர்க்காரின் அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார்களா ? அப்படியானால், இந்த சர்க்கார் அவர்களுக்கு அனுப்பிய அபிப்பிராயங்கள் என்ன என்று கனம் அமைச்சர் தெரிவிப்பாரா ?



19th March 1958]

**The Hon. Sri R. VENKATARAMAN** : மத்திய சர்க்கார் "இதுசம்பந்தமாக நாங்கள் ஒரு மசோதாவைக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறோம்" என்ற அவர்களுடைய அபிப்பிராயத்தை எங்களுக்கு எழுதியனுப்பினார்கள். "அப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவந்தால், நாங்கள் அதைப் பொதுவாக ஆதரிக்கிறோம்" என்று இந்த ராஜ்ய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : தாங்கள் ஒரு மசோதாவைக் கொண்டுவரவிருப்பதால், ராஜ்ய சர்க்கார் தனியாக மசோதா கொண்டுவரக்கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்களா ? எந்தக் காலத்துக்குள் மத்திய சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவருவார்கள் என்பதுபற்றிய அறிகுறி ஏதேனும் ராஜ்ய சர்க்காருக்குத் தெரிகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்த விஷயம் 'கன்கரெண்ட் லிஸ்ட்'-ல் இருப்பதால், இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவந்தால் மாநில சர்க்கார் எந்த விதமான சட்டமும் கொண்டுவர முடியாது. இது சம்பந்தமாக ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாக மத்திய சர்க்கார் சொல்லியிருப்பதால், தாங்கள் ஒரு சட்டம் கொண்டுவரலாமா என்று ராஜ்ய சர்க்கார் யோசனை செய்யவில்லை. மத்திய சர்க்கார் எப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவார்கள் என்று அறிவதற்கு, கனம் அங்கத்தினரின் பார்லிமெண்ட் நண்பர்கள் பார்லிமெண்டில் கேள்வி போட்டால் மத்திய அரசாங்கத்தார் உறுதியான பதில் கொடுக்க முடியும். அந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that next to the cinema industry, the motor industry is earning huge profit?

Mr. SPEAKER : What has that question to do with the main questiton? Next question.

*Kallagam Odai Scheme.*

* 369 Q.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the investigation of the Kallagam Odai Scheme in Lalgudi taluk, Tiruchirappalli district, is over;

(b) the cost of the scheme and the extent of lands that will be irrigated under it; and

(c) when the scheme will be taken up for execution?

The Hon. Sri P. KAKKAN (a), (b) & (c) : The investigation has not yet been completed. The question of execution can be considered only after the investigation is completed, and the scheme is found worthwhile pursuing.

**Sri S. LAZAR** : புள்ளம்பாடி வாய்க்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் இந்த ஓடையை யடுத்துச் செல்கிறது. ஏற்கெனவே காவேரியில் வரும் தண்ணீர் போதுமானதாக இருக்கிறதா என்ற சந்தேகம் சர்க்காருக்கு இருக்கும் நிலையில், இந்தத் தண்ணீரையும் உபயோகித்துக்கொள்வதற்காக இந்தத் திட்டத்தை சர்க்கார் பரிசீலிக்குமா ?

**The Hon. Sri P. KAKKAN** : திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*Green manure*

* 370 Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the ryots are permitted to collect green manure from unreserved forests; and

[19th March 1958

(b) if not, whether any fine is levied for unauthorized collection?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Does not arise.

* 371 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of cart-loads of green manure seized in Chengam taluk in 1957; and

(b) the amount of fine collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Three cart-loads and 378 head-loads of manure leaves were seized in the Chengam taluk in 1957. These are illicit cases of smuggling from forest reserves.

(b) A sum of Rs. 1,612 has been levied as compensation fees and fines. Of this amount, a sum of Rs. 835 has been collected so far and the remaining amount is pending collection.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு வண்டிக்கு அதிகபட்சம் எவ்வளவு அபராதம் விதிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? ஒரு வண்டிக்கு அதிகபட்சம் விதிக்கப்பட்டுள்ள அபராதம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகபட்ச அபராதம் எவ்வளவு விதிக்கவேண்டும், விதிக்கப்பட்டுள்ள அபராதங்களில் அதிகபட்சமான அபராதம் எவ்வளவு என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

SRI A. VEDARATHNAM : விறகாக உபயோகிப்பதற்காக இந்தக் காடுகளிலுள்ள பட்ட மரங்களையும் உலர்ந்த சரகுகளையும் எடுத்துக் கொண்டு போவதற்கு ஜனங்கள் அனுமதிக்கப்படுகிறார்களா ? அப்படி இல்லையானால், அவை சர்க்காரால் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வி, காடுகளிலிருந்து பச்சைத் தழைகளை எடுத்துச்செல்வது சம்பந்தமானது. உலர்ந்த சரகுகளை காடுகளிலிருந்து எடுத்துச் செல்வதைப் பொறுத்த வரையில், காடுகளுக்குக் குந்தகம் ஏற்படாத முறையில் அவ்வாறு செய்வதற்கு ஜனங்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI : காடுகளிலிருந்து பசுந் தழைகளை எடுத்துக்கொண்டுபோவதற்கு தனியாக அனுமதிகள் வழங்கப்படுகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காடுகளிலிருந்து பசுந் தழைகளை இலவசமாகவே எடுத்துக்கொண்டுபோவதற்கு அனுமதிக்கப்படுகிறது. Ryots are allowed to collect green manure, dry wood, thorns, leaves, etc., free of charge from the unreserved forest under rule 7 of the rules framed under section 26 of the Forest Act provided they are required by the inhabitants of the neighbouring areas for agricultural and domestic purposes.

SRI A. A. RASHEED : What is being done with the manure so seized? Is it sold in public auction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I have no information about it.



19th March 1958]

SRI A. GOVINDASAMY : உரத்திற்காக பசுந்தழைகளை ரிசெர்வ் காடுகளிலிருந்து எடுத்துக்கொண்டுபோவதற்கு அனுமதிக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறும் அனுமதிக்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : ரிசெர்வ் காடுகளிலிருந்து பசுந்தழைகளை எடுத்துக்கொண்டுபோவதற்கு இப்போது வழங்கப்படும் பாஸ்களுக்கு 'பீஸ்' உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில இடங்களில் அது ஏலத்திற்கு விடப்படுவது எனக்குத் தெரியும். ஆனால் பிரஸ்தாப ஜில்லாவில் உள்ள முறையைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. ரிசெர்வ் காடுகளிலிருந்தும், 3,970 எக்கர் வரையில், பசுந்தழை உரம் எடுத்துக்கொண்டு போவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவில் பெரிய காடுகள் இல்லை. ஆகவே அந்த ஜில்லாவில், புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்களிலிருந்து பசுந்தழைகளை உரத்திற்காக எடுத்துச் செல்வதற்கு சர்க்கார் அனுமதித்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மரங்களிலிருந்து தழைகளை வெட்டுவதற்கு அனுமதித்தால், அவர்கள் மரங்களை வெட்டாமல் தழைகளை மட்டும் வெட்டிக்கொண்டுபோவார்களா என்று தெரியவில்லை. ஆகவே இதை எவ்வாறு அனுமதிப்பது என்று சர்க்காருக்கு தெரியவில்லை. மரங்களை ஏலத்திற்கு விட்டபிறகு, ஏலம் எடுத்தவர்களிடமிருந்து தழைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that the fee that is levied for the issue of this permit is a bit high and if so, will the Government consider the desirability of reducing it? Also are they aware of the difficulties experienced by ryots who will have to go to the headquarters of the Distict Forest Officer to get this permit and if so, will they take necessary steps to simplify the procedure involved in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The procedure for getting permit is being simplified. But about the fees, if the hon. Member would put a separate question, I shall look into it.

SRI A. GOVINDASAMY : இந்தக் காடுகளை காண்டிராக்டுக்கு எடுத்துக்கொள்ளும் காண்டிராக்டர்கள் விவசாயிகளை அதிகத் தொல்லைக்குள்ளாக்குகிறார்கள். ஆகவே அரசாங்கமே காவலாளிகளைப் போட்டு ஒரு வண்டி தழை உரத்திற்கு ஏதாவது குறிப்பிட்ட பணத்தை வசூலிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கமே இதைச் செய்தால், அப்போது ஆங்காங்குள்ள அரசாங்க சிப்பந்திகள்பேரில் இதே மாதிரியான புகார் வரும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : காடுகளுக்குச் சமீபத்திலுள்ள விவசாயிகள் அந்தக் காடுகளிலிருந்து பசுந்தழைகளைக் கொண்டு போவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு, பக்கத்திலுள்ள காடுகளிலிருந்து அவைகளைக் கொண்டுபோவதற்கு ஆகும் செலவும் குறைவு. காடுகளிலிருந்து அதிக தூரத்திலுள்ளவர்கள் அவைகளிலிருந்து பசுந்தழைகளைக் கொண்டுபோக விரும்பினால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் காடுகளிலிருந்து தழைகளைக் கொண்டு போவதில் அவர்களுக்கு சர்க்கார் ஏதாவது உதவி அளிக்க முன்வருமா ?

[19th March 1958

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : காடுகளிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் விவசாயிகள் அவர்களுக்கு வேண்டிய பசுந்தழை உரத்தை அவர்களே உற்பத்தி செய்துகொள்ளலாம்.

**SRI R. SWAMINATHA MERKONDAR** : தஞ்சாவூர் ஜில்லா ஒரு விவசாயப்பொருள் உற்பத்தி செய்யும் ஜில்லாவாக இருப்பதால், அந்த ஜில்லாவிலுள்ள புறம்போக்கு நிலங்களில் பசுந்தழைக் காடுகள் உற்பத்தி செய்யப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVTASALAM** : அந்த ஜில்லாவில் ஆற்றோரங்களில் தேக்கு பயிரிடப்பட்டுவருகிறது. ஆனால் பசுந் தழைகள் அளிக்கக்கூடிய காடுகளை உண்டாக்குவது அவ்வளவு சுலபமல்ல. நான் முன்புசொன்னதுபோல், தஞ்சாவூர் ஜில்லாவில், விவசாயிகள் அவர்களுக்கு வேண்டிய பசுந்தழை உரத்தை அவர்களே உற்பத்திசெய்துகொள்ள முன் வரவேண்டும். அதற்கு வேண்டிய வசதியை அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

*Magnesite Syndicate, Salem.*

* 372 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries, be pleased to state whether the Government have taken any decision in regard to the taking over of the magnesite mines now leased out to the Magnesite Syndicate, Limited, Salem, when the term of lease expires?

**THE HON. SRI R. VENKATARAMAN** : The answer is in the negative, Sir.

**SRI M. KALYANASUNDARAM** : இந்தச் சுரங்கங்களை எடுத்து நடத்துவதற்கு நம் ராஜ்யத்திலிருந்து வேறு யாரும் மனுச் செய்திருக்கிறார்களா ? அப்படிச் செய்திருந்தால் அதை சர்க்கார் பரிசீலித்திருக்கிறார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனிப் பொருளை மாத்திரம் எடுப்பதற்கு, தங்களுக்கு லைஸென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சென்னை ராஜ்யத்திலிருந்து மற்றொரு கம்பெனியார் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் லைஸென்ஸை 1959-ம் வருடம் ஜனவரிமீ 10உ-வரையிலும் நீடிக்குமாதலால் அவர்களுக்கு அனுமதி கொடுப்பதுபற்றி கவனிக்கப்படவில்லை.

**SRI M. KALYANASUNDARAM** : இப்பொழுது நடத்திவரக் கூடிய கம்பெனிக்கு 1959-ம் ஆண்டு ஜனவரி மாதத்தோடு இந்த அனுமதி முடியக்கூடிய காலத்தில் அது ரத்து செய்யப்படுமா ? அல்லது தொடர்ந்து நீடிக்கப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : ரத்து செய்யப்படும்.

**SRI V. K. KOTHANDARAMAN** : மைனிங் ஆக்டுக்கு விரோதமாக இப்பொழுது மாக்னஸைட் எடுக்கப்படுகிறது, அப்படி எடுக்கும்போது ஆழமாகப் போகவேண்டியிருக்கிறது. இதனால் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தினால், புதிய புதிய சுரங்கங்கள் வெகு தூரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. புதிய புதிய சுரங்கங்களைக் கண்டுபிடித்து, அதிகமான மாக்னஸைட் தோண்டியெடுத்தால், நமக்கு அதிகமான லாபம் வரும்.

**SRI M. KALYANASUNDARAM** : மந்திரி அவர்கள் விவரத்தைக் கொஞ்சம் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார் என்று நினைக்கிறேன். சுரங்கங்களின் மேலே இருக்கும் மாக்னஸைட்டை எடுத்துக்கொண்டு போகிறவர்கள் மலிவாக எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்கள் சுலபமாக எடுத்துக்கொண்டுபோன பிற்பாடு, சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த முடியாது. அவர்கள் தோண்டிவிட்டுப்போன இடங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டால், வெகு ஆழத்தில்போய்த்தான் தோண்டி எடுக்கவேண்டியிருக்கும். அதனால், சர்க்காருக்கு அதிகமாக உற்பத்திச் செலவு ஏற்படுவதோடு நஷ்டமும் ஏற்படும். ஆகவே, மைனிங் விதிகளுக்கு மீறிய காரியத்தைத் தடை செய்தோ, மீறுவதாகத் தெரிந்தால் அவர்களுடைய குத்தகையை ரத்து செய்தோ நோட்டீஸ் அனுப்ப முடியுமா ?



19th March 1958]

**THE HON. SRI R. VENKATARAMAN** : சட்டத்திற்கு உட்பட்டு லைசென்சு பெறுகிறவர்களுக்கு கனிப் பொருளை எடுப்பதற்கு உரிமை உண்டு. அவர்கள் அதிகமாக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள் என்றால், அதைத் தடுப்பது முறையல்ல. ஆனால், மைனிங் விதிகளுக்கு விரோதமாகச் செய்தால், சர்க்கார் அதைக் கவனிக்கும். அம்மாதிரி புகார் வந்தது. மைனிங் விதிகளுக்கு மாறாக ஏதும் நடத்தப்படவில்லை என்பதுதான் சர்க்காருடைய அபிப்பிராயம்.

**SRI K. VINAYAKAM** : Sir, what are the reasons for the contemplated cancellation of licences that are granted to this company? Did the company violate any of the conditions under which mine has got to be worked? Have Government any other agency?

**THE HON. SRI R. VENKATARAMAN** : Sir, under the Mining Rules, a licence is granted for 30 years and then they have the option of renewal for another 30 years; in this case the 60-year period has expired. Therefore, the Government are free to examine the question whether this should be continued or whether it should be taken up by Government or any other alternative arrangement should be made to the best advantage of the State.

**SRI M. KALYANASUNDARAM** : இப்பொழுது நடத்திவரும் அன்னியக் கம்பெனிக்கு இனி தொடர்ந்து லைசென்சு கொடுக்க படமாட்டாது என்று அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறியதை நான் வரவேற்கிறேன். சர்க்காரே எடுத்து நடத்தும் யோசனை இப்பொழுது எந்த மட்டில் இருக்கிறது ? சர்க்காரே எடுத்து நடத்த முன் வருவார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : சர்க்கார் எடுத்து நடத்துவதானால், இதற்குச் சுமார் 18 லட்ச ரூபாய் மூலதனம் போட வேண்டும். அதில் நமக்கு நிகர வருமானம் இரண்டரை லட்ச ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்காரே எடுத்து நடத்துவதானால் குறிப்பிட்ட மூன்று பொருள்கள்தான் செய்ய முடியும். தனியார் யாராவது முன்வந்து பெரிய 'ரிப்ராக்டரி' தொழிற்சாலை வைப்பதாயிருந்தால், நமது ராஜ்யத்தில் உள்ளவர்களுக்கு வேலை வசதிகள் அதிகரிக்கும் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு அனுமதி கொடுப்பதினால் நம்முடைய ராஜ்யத்திற்கு நன்மை ஏற்படுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

*Radio sets*

* 373 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of community radio sets assembled by the State Broadcasting Department during the years 1950–57;

(*b*) whether the department has now stopped this work of assembling and, if so, the reasons therefor; and

(*c*) the total revenue earned and the total amount spent by the department during 1950–57?

**THE HON. SRI P. KAKKAN** : (*a*) 2,615 sets.

[19th March 1958

(*b*) The assembly of radio sets by the State Broadcasting Department was discontinued in 1956 mainly because many factories in India are manufacturing and assembling radio receiver sets conforming to the standards prescribed by the Indian Standard Institute at comparatively cheap rates. It was also considered that this would release the huge capital investment which would otherwise be required for setting up the requisite laboratory, etc.

(*c*) The total revenue earned and the total amount spent during 1950-57 are furnished below :—

| Year. | | Actual receipts. | Actual expenditure. |
|---|---|---|---|
| | | RS. | RS. |
| 1950-51 | .. | 6,27,015 | 7,50,280 |
| 1951-52 | .. | 7,13,981 | 10,01,953 |
| 1952-53 | .. | 4,05,275 | 11,21,840 |
| 1953-54 | .. | 11,24,700 | 7,71,800 |
| 1954-55 | .. | 3,09,194 | 7,65,608 |
| 1955-56 | .. | 3,07,816 | 7,55,000 |
| 1956-57 | .. | 4,66,000 | 7,22,067 |

* 374 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the number of radio sets required for panchayat boards at present and the number pending installation?

THE HON. SRI P. KAKKAN : For the period during 31st December 1957, 2,148 radio sets had been installed in panchayat boards and on the same date, 196 indents for radio sets from panchayat boards were pending compliance.

SRI M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, இப்பொழுது அதிகமான கிராமப் பஞ்சாயத்துகளில் ரேடியோ செட்டுகள் விரும்பி வைக்கப்படுவதால், கிராமங்கள்தோறும் ரேடியோ செட்டுகள் வைத்துக்கொள்ளத்தக்க அளவு அவர்களிடம் நிதி வசதி இருப்பதால், அவைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தனிப்பட்ட கம்பெனிகளுக்கு விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு ஒரு தனி கேள்வி போடலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I find from the statement furnished by the Hon. Minister that the expenditure when compared to the income has been mounting up every year and we can see from this that there has been heavy loss to Government. I understand that there is a separate Engineering Department to look after these radio-sets, etc. Will Government consider the desirability of effecting complete retrenchment of this by abolishing this department and entrusting the entire work to the regular Public Works Department.

THE HON. SRI P. KAKKAN : A separate question may be put.

SRI S. LAZAR : வரவை விட செலவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : அதற்காகவும் தனிக் கேள்வி போடலாம்.



19th March 1958]

SRI M. D. THIAGARAJA PILLAI : அனேக பஞ்சாயத்து போர்டுகளில் ரேடியோக்கள் வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கவர்ன்மென்ட்டிலிருந்து ஒரு சூபர்வைசர் போய் சூபர்வைஸ் செய்ய வேண்டியிருப்பதால், வருஷத்திற்கு 120 ரூபாய் கட்டணம் வாங்குகிறார்கள். அதற்குப்பதிலாக பஞ்சாயத்து போர்டுகள் வைத்திருக்கும் ரேடியோ செட்டுக்களைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவை பஞ்சாயத்துக்களே ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்தால், அவர்களுக்கு செலவு குறைவாக ஆகும். ஆதலால், அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : ரேடியோ செட்டுகளையெல்லாம் கவனிப்பதற்கு பி. டபிள்யூ. டி. ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகளைக் கவனிக்கத் தகுதியுள்ள எக்ஸ்பெர்ட்டுகள் பஞ்சாயத்துக்களிடமே இருந்தால், அப்படியும் செய்யலாம்.

SRI A. V. P. ASAITHAMBI : ரேடியோ செட்டுகளை ஆங்காங்கு வைப்பதிலே, கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில் தெருக்களின் பல பகுதிகளில் ரேடியோ செட் ஒர்க் பண்ணுகிற மாதிரி, ஜனங்களுக்குக் கேட்கிறமாதிரி, ரேடியோ நிலையம் வைத்திருக்கிறார்கள். அம்மாதிரி பல ஊர்களில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தால், சுகாதாரம் முதலிய பல துறைகளில் மக்களுக்குப் பிரசாரம் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அம்மாதிரி அமைப்பதற்கு சர்க்காரிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரேடியோ அமைக்கிறதாக திட்டம் இல்லை. ப்ராட்காஸ்டிங் ஸ்டேஷனின் ஒரு பக்கத்தில் ஒலி பரப்புகிறது ஊர் பூராவும் கேட்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கும் இந்த ரேடியோ செட்டுக்கும் சம்பந்தம் இல்லை.

SRI K. VINAYAKAM : அரசாங்கம் பஞ்சாயத்து போர்டுகளுக்கு வாங்கித்தருகிற ரேடியோ செட்டினுடைய விலை என்ன ? கோயமுத்தூரில் இருக்கும் தொழில் அதிபர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த விலையில், அதாவது மலிவான விலையில், ரேடியோ செட் செய்வதாகவும், அதை அரசாங்கம் வாங்கிப் பயன்படுத்தவில்லை என்றும் புகார் சொல்லப்படுகிறது. அதைப் பரிசீலனை செய்து, உண்மையிலேயே அது நல்ல ரேடியோவாக இருந்து—உடைக்கக்கூடிய ரேடியோவாக இல்லாமல்—பயன்படக்கூடிய ரேடியோவாக இருந்தால், அரசாங்கத்திற்கு மேலும் லாபகரமாக இருந்தால், அதை வாங்கிப் பரிசீலனை செய்து, பஞ்சாயத்துக்களுக்கு மலிவான விலைக்கு கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : திருவாளர் ஜி. டி. நாயுடு அவர்கள் செய்கிற ரேடியோ எனக்குத் தெரியாது, தனிக் கேள்வி போட்டால் அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யலாம்.

SRI M. JAGANNATHAN : இப்போது கிராமங்களுக்குக் கொடுக்கப்படுகிற ரேடியோ செட்டுகளில் எல்லாம் ஒரே ஒரு வானொலி நிலையத்திலிருந்துதான் கேட்கமுடியும் என்பது உண்மையா ? இதர நிலையங்களின் நிகழ்ச்சிகளையும் கேட்பதற்கு ஸ்விச்சை திருப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போடவும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இலாகா மூலமாக அசெம்பிளி செய்யப்படுகிற ரேடியோ செட்டுகளில் எத்தனை வால்வ்கள் உண்டு ? என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போடவேண்டும்.

[19th March 1958

SRI A. GOVINDASAMY : ஆயிரம் கிராமங்களுக்கு மேல் ரேடியோ செட்டுகள் கொடுக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ? எத்தனை காலமாகக் கொடுக்காமல் இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நோட்டீஸ் வேண்டும்.

SRI S. LAZAR : பஞ்சாயத்து போர்டுகளுக்கு வழங்கப்படுகிற ரேடியோ செட்டுகளில் இந்தியாவில் உள்ள எல்லா வானொலி நிலையத்திலிருந்தும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும் என்றாலும், அங்குள்ள ஆபரேடர் ஒரு நிலையத்தின் ஸ்விச்சைப் போட்டுவிட்டுப் போய்விட்டால் பொதுமக்களால் வேறு நிலைய நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு ஸ்விச்சைத் திருப்ப முடியாது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுமாதிரி வேண்டுமென்றே செய்யப்படுகிறது. கிராமங்களுக்குப் பயன்படுகிற எல்லா நிகழ்ச்சிகளையும் அதன் மூலமாக தொடர்ந்து கேட்கவேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறதே தவிர ரேடியோ சிலோனை கேட்பதற்கு அந்த செட்டுகள் வைக்கப்படவில்லை.

SRI T. S. RAMASWAMY PILLAI : இவ்வாறு ஒரே ஸ்டேஷன் நிகழ்ச்சி மட்டும்தான் ஒலிபரப்பப்படவேண்டும் என்ற காரணத்தினால் பல பஞ்சாயத்து போர்டுகள் இந்த ரேடியோ செட்டுகள் வேண்டாம் என்று நிராகரித்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ரேடியோ சிலோனை வைக்கவேண்டாம் ; இதர ஸ்டேஷன்களில் உள்ள முக்கியமான நிகழ்ச்சிகளையாவது ஒலிப்பரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. கிராம மக்களுக்குப் பயன்படக்கூடிய பல விஷயங்களையும் எடுத்துச் சொல்வதற்கு ஒவ்வொரு நிலையங்களிலிருந்தும் ஏற்பாடு செய்யப்படுகிறது. மக்கள் அவைகள் எல்லாவற்றையும் கேட்கவேண்டும் என்கிற நோக்கத்துடன்தான் ரேடியோ செட்டுகள் வழங்கப்படுகின்றன. இதர நிகழ்ச்சிகளைக் கேட்பதைக் காட்டிலும் மக்களுக்கு சங்கீதம் கேட்பதில் அதிக ருசி. ருசிக்காக கேட்பது என்றால் எந்த எந்த நிலையத்தில் சங்கீதம், நாடகம் என்று வருகிறதோ அதுமாதிரியாகப் பார்த்துத் திருப்பிக்கொள்வார்கள். அதனால் பல முக்கியமான நிகழ்ச்சிகளை கேட்க முடியாது ஒரே பாட்டும் கேளிக்கையுமாகப் போய் விடும். அதனால்தான் ஒரே ஒரு நிலையத்தின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வைக்கவேண்டும் என்பதால் கொஞ்சம் சங்கீதம் கேட்பதற்கும், பிறகு மக்களுக்குப் பயன்படக்கூடிய, அறிவு வளர்ச்சி பெறுவதற்குரிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்போது அவற்றைக் கேட்பதற்கும் வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

SRI A. R. MARIMUTHU : இப்போது பஞ்சாயத்து போர்டுகளில் வைக்கக்கூடிய ரேடியோ செட்டுகளில் ட்ரை பாட்டரி உபயோகப்படுத்துவதன் மூலம் சர்க்காருக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் ஆகக்கூடிய செலவைக் குறைக்க முடியுமா ?

MR. SPEAKER : தனிக் கேள்வி போடவும்.

SRI V. SANKARAN : நாம் எல்லாம் திராவிட மக்கள், திராவிட மொழியைத்தான் கேட்கவேண்டும் என்பதான நோக்கத்தோடு இம்மாதிரி செய்யப்படவில்லையா ?

MR. SPEAKER : நான் இந்தக் கேள்வியை நிராகரிக்கிறேன்.

SRI N. MARUDACHALAM : ரேடியோ செட்டுகள் முன்பு வேண்டாம் என்று சொன்ன பஞ்சாயத்து போர்டுகள் திரும்ப வேண்டும் என்று இப்போது கேட்டால் அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் வேண்டியது செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.



19th March 1958]

### *Forest wealth*

* 375 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to improve the forest wealth after 1st November 1956?

any further representations to the Speaker, they may do so. Their placed on the table.

### *Finger Print Bureau*

*376 Q.—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Government servants deputed for training in the Central Finger Print Bureau and the pay and allowances drawn by them during the training period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No one was deputed from this State for training in the Central Finger Print Bureau.

SRI M. P. SARATHI : நம்முடைய சென்னை ராஜ்ய பிங்கர் ப்ரிண்ட் பீரோவிலிருந்து மத்திய அரசாங்கத்து பீரோவுக்கும் ஆந்திராவுக்கும் யாரும் அனுப்பப்படவில்லையா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இங்கேயிருந்து மத்திய அரசாங்கத்துக்கு யாரும் அனுப்பப்படவில்லை என்று சொன்னேன்.

SRI V. K. KOTHANDARAMAN : மத்திய விரல் நிலையம் என்றால் என்ன? அது எதற்காக உபயோகபடுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. இந்தக் கேள்வியைப் போட்ட கனம் அங்கத்தினர், மூலக் கேள்வியைப் போட்டவரிடம் கேட்டு விவரம் தெரிந்து கொள்ளலாம்.

### *Railway Police*

* 377 Q.—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state the strength of Railway Police officers and staff in the State as on 1st January 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The information is as follows :—

| | |
|---|---|
| District Superintendent of Police ... | 1 |
| Deputy Superintendent of Police ... | 3 |
| Inspectors ... ... ... ... | 8 |
| Sub-Inspectors ... ... ... | 42 |
| Sergeants ... ... ... ... | 9 |
| Head constables ... ... ... | 122 |
| Police constables ... ... ... | 1,048 |

SRI M. P. SARATHI : இதற்கு மத்திய சர்க்கார் பணம் உதவி செய்கிறார்களா ? எவ்வளவு ?

* Printed as Appendix IV on pages 245–246 infra.

[19th March 1958

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** ரயில்வே போலீஸ் வேலையைப் பொறுத்தமட்டில் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று ஆர்டர் விஷயம். மற்றொன்று க்ரைம் விஷயம். க்ரைம் விஷயத்தைப் பொறுத்தவரையில் செலவு நம்முடைய பொறுப்பு. ஆர்டர் பிரிவு போலீஸ் சிப்பந்திகளின் செலவை ரயில்வே ஏற்றுக் கொள்கிறது. இதற்கு மேற்பார்வை பார்க்கும் சிப்பந்திகளின் செலவில் 25 சத விகிதம் மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கத்திற்குக் கொடுக்கிறது.

**Sri A. GOVINDASAMY :** இந்த ரயில்வே போலீஸ் இரு பிரிவுகளைச் சேர்ந்த சிப்பந்திகளின் செலவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என இந்த அரசாங்கம் ஏன் வற்புறுத்தக் கூடாது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இந்தப் பிராந்திய ரயில்வேயை தமிழ்நாட்டு மக்கள்தான் உபயோகப்படுத்துகிறார்கள். அதில் குற்றங்கள் நடந்தால் அதைத் தவிர்ப்பதற்கு நம் அரசாங்கத்திற்குத்தான் பொறுப்பு. இந்த கிரைம் விஷயமான செலவை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது சரியாகாது.

**Sri M. KALYANASUNDARAM :** ரயில்வே போலீஸ் பிரிவை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறதா ? அப்படி யானால் அதற்கு இந்த அரசாங்கம் என்ன அபிப்பிராயம் தெரிவித் திருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** எனக்குத் தெரிந்த வரையில் அப்படியில்லை.

**Sri A. V. P. ASAITHAMBI :** க்ரைம் போலீஸ் செலவு நம்முடையது என்றும், ஆர்டர் போலீஸ் செலவு மத்திய அரசாங்கத்தி னுடையது என்றும் அமைச்சர் சொன்னார். அப்படியானால் ஆர்டர் போலீஸ் மத்திய அரசாங்க சிப்பந்தியாகக் கருதப்பட்டு தனிச் சம்பள விகிதம் இருக்கிறதா ? இவர்களுக்கும் அவர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் உண்டா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** மத்திய அரசாங்க போலீஸ் என்று ஒன்றும் இல்லை. சம்பளத்தில் வித்தியாசம் இல்லை.

**Mr. SPEAKER :** Questions are over.

**[*Note.*—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADMISSIBILITY OF QUESTIONS.

**Mr. SPEAKER :** Yesterday, the hon. Member, Sri T. S. Ramaswamy said that he would not put a question, beause it was 'mutilated'. That is the very wording he used. The point as to the admissibility of a question has to be considered with reference to rules 30 and 31 of the Assembly Rules. A question to be admissible has to satisfy the conditions laid down in rule 31 and it must also relate to public affairs with which the Minister to whom it is addressed is officially connected or to a matter of administration for which he is officially responsible or to a matter of sufficient public importance.

Under rule 32 (1) the Speaker shall decide on the admissibility of a question and shall disallow any question when, in his opinion, it is an abuse of the right of questioning or is in contravention of the rules. Under rule 32 (2) of the Assembly Rules, where the form or the subject-matter of a question is, in the opinion



19th March 1958] [Mr. Speaker]

of the Speaker, in contravention of the rules, he may amend the question to secure its compliance with the rules and inform the Member concerned accordingly. Under this rule, the Speaker has got full powers to amend a question and admit it in the form he chooses subject to conditions laid down in rules 30 and 31. Most of the questions are admitted with certain modifications so that they may conform to the Rules. The questions as finally admitted are communicated to the Members so that if they wish to make any further representations to the Speaker, they may do so. Their representations are again considered by the Speaker and the final decisions of the Speaker are again communicated to the Members concerned.

In this particular case—Question No. 679 put by Sri T. S. Ramaswamy—the question was amended and admitted. The Member was informed of the fact with a copy of the question as amended in this office letter, dated 22nd January 1958. The hon. Member again put in further representations and they were considered by the Speaker and final orders communicated to the Member.

I would like to suggest that this House may establish a convention that it would not be correct on the part of any hon. Member to raise such questions in the open House. But the Speaker would be most happy to discuss these matters in his Chamber and this should, I think, be the convention established in this House.

## III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE LEGISLATIVE COUNCIL.

**Mr. SPEAKER :** I have to announce that the Hon. Chairman, Madras Legislative Council, has transmitted the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) and the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) as passed and agreed to by the Council on the 17th March 1958 without any amendment.

## IV.—DEMANDS FOR FURTHER EXPENDITURE FOR THE YEAR 1957–58.

**Mr. SPEAKER :** The next item is Demands for further Expenditure for the year 1957–58. The Hon. Minister for Finance will present Statement of Demands for further expenditure and the Detailed Supplementary Estimates thereof for the year 1957–58.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** Mr. Speaker, Sir, I rise to present to this House the second supplementary estimates for the year 1957–58. Hon. Members will remember that a first supplementary estimate for the year was obtained in November 1957 for a sum of Rs. 77 lakhs mainly for New Service Schemes.

[Sri C. Subramaniam] [19th March 1958

The present supplementary demand is for Rs. 5,18 lakhs under the Revenue Account, Rs. 4,58 lakhs under Capital Account and Rs. 10,09 lakhs under Loans and Advances and repayment of Public Debt, making up a total of Rs. 19,85 lakhs roundly. The present supplementary demand covers 37 grants, out of which, only token sums are proposed for 8 grants. The size of the supplementary demand is indeed large, but this should not cause us undue concern because savings of about the same order as the additional amounts asked for under revenue and capital accounts are available under the different grants. According to the present system of budgeting, savings under one grant cannot be utilised for expenditure under another and therefore fresh demands have to be moved to cover the excesses under individual grants.

Out of the sum of Rs. 5.18 lakhs on the Revenue Account, about Rs. 183 lakhs are for various items under Civil Works consequent on the increased tempo of Plan Outlay, but this is more than offset by corresponding credits. Under the system of gross budgeting, the outlay has to be voted for by Legislature notwithstanding the increase in the credits. The balance of the demand under Revenue Account is accounted for mainly by larger appropriations under Irrigation (Rs. 67 lakhs); District Administation and Miscellaneous (Rs. 47 lakhs) to allow for payment of enhanced dearness allowance and subsidies on New Well Schemes; Stationery and Printing (Rs. 28 lakhs); Police and Fire Services (Rs. 74 lakhs). Out of the sum of Rs. 74 lakhs under ' Police ', Rs. 31 lakhs is for the expenditure on the Malabar Special Police companies sent to Assam, and will be recovered in full from the Government of Assam.

Turning to the Capital Account, out of the total additional demand of Rs. 4,58 lakhs nearly Rs. 109 lakhs are on irrigation schemes on which progress has been more rapid than anticipated. Rupees 154 lakhs have been provided for increased debit under suspense items under Capital Outlay on Public Health. The supplementary estimates also include a provision for payment to the Government of India of dues towards the cost of fertilizers purchased in 1956-57 (Rs. 1,57 lakhs).

Under repayment of Public Debt a sum of Rs. 910 lakhs has been included towards clearing the ways and means advances taken from the Government of India in the current year. A sum of Rs. 76 lakhs incurred by us in earlier years on the Neyveli Lignite investigations is being adjusted as a loan to the Government of India as per the agreement with that Government. This is only a book adjustment because a corresponding credit is being shown in the Revenue Account.

With these words, Sir, I commend the supplementary estimates for the acceptance of this House.





## V.—VOTING OF DEMANDS FOR THE GRANTS FOR THE YEAR 1958-59.

### DEMAND NO. XVI—MEDICAL

### DEMAND NO. XVII—PUBLIC HEALTH

### DEMAND NO. XXXVI—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH

MR. SPEAKER: We shall now take up the discussion on the Demands for grants. To-day grants Nos. XVI, XVII and XXXVI will be taken up for discussion. The Hon. Minister for Health will now move the Demands.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 4,17,83,100 under Demand No. XVI—Medical,

that the Government be granted a sum not exceeding Rs. 93,58,200 under Demand No. XVII—Public Health,

and that the Government be granted a sum not exceeding Rs. 1,83,23,900 under Demand No. XXXVI—Capital Outlay on Public Health."

Sir, a note has been placed on the table of the House indicating the broad features of these Demands.

MR. SPEAKER: Motion moved—

" That the Government be granted a sum not exceeding Rs. 4,17,83,100 under Demand No. XVI—Medical,

that the Government be granted a sum not exceeding Rs. 93,58,200 under Demand No. XVII—Public Health.

and that the Government be granted a sum not exceeding Rs. 1,83,23,900 under Demand No. XXXVI—Capital Outlay on Public Health."

I understand that all opposition parties are agreed that Sri A. R. Marimuthu will move his cut motion on Demand No. XVI—Medical, that Sri K. Ramachandran will move his cut motion on Demand XVII—Public Health and that Sri K. Sattanatha Karayalar will move his cut motion on Demand No. XXXVI—Capital Outlay on Public Health.

SRI A. R. MARIMUTHU: Sir, I mave the cut motion standing in my name, namely—

" That the allotment of Rs. 4,17,83,100 under Demand No. XVI—Medical, be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut motion moved—

" That the allotment of Rs. 4,17,83,100 under Demand No. XVI—Medical, be reduced by Rs. 100."

[19th March 1958

SRI K. RAMACHANDRAN : Sir, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 93,58,200 under Demand No. XVII—Public Health be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 93,58,200 under Demand No. XVII—Public Health, be reduced by Rs. 100 ".

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 93,58,200 under Demand No. XXXVI—Capital Outlay on Public Health, be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 1,83,23,900 under Demand No. XXXVI—Capital Outlay on Public Health, be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : The Demands and the Cut Motions are now before the House for discussion.

I want to know how long the Hon. Minister will take to reply.

THE HON. SRI M. A. MANICKAVELU : I will take about 45 minutes, Sir.

MR. SPEAKER : The Hon. Minister will begin his reply at 12-45 p.m.

0 a.m. *SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நாட்டிலே வைத்திய வசதியை மிக அதிகமாக அதிகரிக்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கின்றோம். அரசாங்கம் முன்பிருந்த வைத்திய வசதிகளை அதிகரிப்பதற்கு எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும்கூட நமக்கு வேண்டிய அத்தனை வைத்திய வசதிகளையும் பெற இயலாத நிலையில் இருக்கிறோம். ஆகையினால் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு சரியான வைத்திய வசதி கிடைப்பதற்கில்லை. மேலும் தற்போது இருக்கக்கூடிய ஆஸ்புத்திரிகள், பற்றாத காரணத்தினால் ஆஸ் பத்திரிகளுக்கு செல்லும் நோயாளிகளை எல்லாம் ஆஸ்பத்திரிகளில் வைத்துக்கொள்வதற்கான நிலையில் இல்லை. ஆகவே பெரும்பாலான மக்கள் மிகவும் கஷ்ட நிலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இந்த வைத்திய வசதியைப் பெருக்குவதானது, மிகவும் அதி முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்றாகும். நம் நாட்டிலுள்ள மக்கள் பெரும்பாலும் மிக எளியவர்களாகவும், கஷ்ட நிலையில் உள்ளவர்க ளாகவும் இருப்பதால் அவர்கள், அவர்களுடைய சொந்த சக்தியை நம்பித் தான் வாழ வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வியாதி அல்லது ஏதாவது பலக்குறைவு ஏற்பட்டால் அதனால் நாட்டிலுள்ள பெரும்பாலான குடும் பங்கள், அவர்களை நம்பி வாழக்கூடிய மக்கள் பட்டினி கிடக்கவேண்டிய துர்பாக்கியமான நிலைதான் நிலவும். ஆகவே, பெரும்பாலான மக்கள் நோய் வந்தால் அதைச் சமாளிக்க முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். நாம் சென்ற வருஷம் வைத்தியவசதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை பரி பூர்ணமாக செலவழிக்கப்படவில்லை. ஆகையினால் இம்மாதிரி இல்லாமல் அடுத்து வரும் வருஷத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையையாவது பூராவாக



19th March 1958] [Sri A. R. Marimuthu]

செலவழிக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக நம் நாட்டிற்குத் தேவையான டாக்டர் கள் இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறோம். ஆகவே, நாம் இதில் வேகமாக முன்னேறுவதற்கு குறுகிய கால வைத்தியப் படிப்பை திரும்ப ஏற்படுத்துவதற்கான முறைகளை சர்க்கார் ஆலோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற இந்த வைத்திய முறைகள் எல்லாம் மிகுந்த 10-30 a.m.
பணச்செலவுள்ள முறையாக இருக்கிறது. இதனால் பெரும்பாலான மக்களுக்கு இந்த வைத்திய முறைகள் உபயோகப்படாமல் இருக்கிறது. குறிப்பாக ஆஸ்பத்திரிகளில் சென்று தங்கி வைத்தியம் செய்துகொள்ளும் போது அதிக விலையான மருந்துகள் ஒரு வியாதிஸ்தருக்கு அவசியமாக இருந்தால் அதை அந்த வியாதியஸ்தர்தான் தனியாக தனது சொந்த செலவில் வாங்கி கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த காரணத்தினால் அனேக ஏழைகள் வைத்தியம் செய்து கொள்ளப்போவதில்லை. இந்த நிலைமையில் இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவதற்கு ஏழைகள் ஆஸ் பத்திரியில் சென்று வைத்தியம் பெறுவதாக இருந்தால் சர்க்கார் செலவி லேயே மருந்துகளை, அந்த மருந்துகள் எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் சரி, அதை சர்க்காரே கொடுத்து சிகிச்சை அளிப்பதற்கு வசதி இருக்கவேண்டும். இந்த வசதியளிப்பதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பொதுவாக கிராமங்களிலுள்ள நிலைமை என்னவென்றால் அதிகமாக பணம் இல்லாதவர்கள் குறைந்த செலவில் வைத்தியம் செய்து கொள்வ தற்காக பலவிதமான வைத்தியங்கள் நிலவி வருகின்றது. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். பணம் இருந்தால்தான் சர்க்கார் ஆஸ்பத்திரி களில் போய் சிகிச்சை பெற முடியும் என்று பொதுமக்கள் அனைவருமே பேசிக்கொள்கிறார்கள். இந்த துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எல்லா டிப்பார்ட்டுமெண்டுகளிலும் ஊழல்கள் இருக்கிறது என்றாலும் வைத்தியத் துறையில் இந்த குறைபாடுகளை எல்லாம் களைந்து ஓரளவு நல்ல முறையில் நடப்பதற்கு வழி செய்யவேண்டும். பணம் இல்லாமல் ஏழைகள் வைத்தியம் செய்துகொள்ள முடியும் என்கின்ற ஒரு நிலைமையை உண்டு பண்ணவேண்டும். இன்றைக்கு பணம் இல்லாமல் சர்க்கார் ஆஸ் பத்திரிகளில் வைத்தியம் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பணமில்லாமல் வைத்தியம் செய்வதை ஒரு முக்கியமான காரியமாக கருதவேண்டும். ஆகவே இதில் மிகவும் கண்காணிப்பு காட்டி வைத்தியம்செய்ய வருகின்ற ஏழை மக்களிடமிருந்து பணம் பெறுவதை தடை செய்யவேண்டும். இதற்காக முக்கிய கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் கிராமங் களில் சிறு வைத்தியம், குறிப்பாக ஹோமியோபதி வைத்தியத்தை வேலையில்லாதவர்கள் எல்லாம் கற்றுக்கொண்டு ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். இந்த முறையை சர்க்கார் கூர்ந்து கவனிக்கவேண்டும். வறுமை தாண்டவமாடக்கூடிய நிலைமையில் ஏழைமக்கள் குறைந்த செலவில் வைத்தியம் செய்து கொள்வதற்கு இவர்களை நாடுகிறார்கள். பணச்செலவு குறையும் என்கின்ற ஒரு நோக்கத்துடன்தான் இவர்களிடம் மக்கள் போகிறார்கள். இம்மாதிரியாக அனுபவம் இல்லாத, பயிற்சி எதுவு மில்லாத இந்த வைத்தியர்களிடம் மக்கள் சிக்கிக்கொள்வதினால் நாட்டிலே ஒரு பெரிய கெடுதல்தான் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் உணர்ந்து கொள்ளவேண்டும். இதற்காக சர்க்கார் ஹோமியோபதி முறையை தடை செய்துவிட முடியுமா என்றால் அது சாத்தியம் என்று நான் கருதவில்லை. நாட்டிலே இன்றைக்கு அதிகமான பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார் கள். மேலும் இவ்விதம் தடை செய்வதினால் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கைத்தான் பெருகும். சில ராஜ்யங்களில் இதர ஹோமியோபதி முறையை எல்லாம் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். அதே போன்று இங்கேயும் ஹோமியோபதி முறையை அங்கீகாரம் செய்துகொண்டு, இதில் வேண்டிய அளவு பயிற்சி பெற்றிருக்கவேண்டும் என்று தனியாக விதியை ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால் நாட்டிலே தீமைதான் விளையும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். சர்க்கார் ஹோமியோபதி முறையை படித்து வைத்தியம் செய்கிறவர்களும் ஆங்கில மருந்துகளைத்தான்

உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் சரியாக வியாதியை புரிந்து கொள்ளாமல், ஐந்து வருடங்கள் வைத்திய பட்டப்படிப்பு படித்தவர்கள்கூட ஒரு வியாதியை கண்டுபிடிக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கும் பொழுது, தபால் மூலம் கற்றுக்கொள்ளுகிற இவர்கள் இந்த முறையில் வைத்தியம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவே இதனால் நாட்டில் ஒரு பெரும் தீமையைத்தான் விளைவிப்பதாகும். சர்க்கார் விதி வகுத்து ஒரு சரியான கட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இன்றைக்கு இங்கிலீஷ் வைத்திய முறை பணச் செலவான முறை. இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய சாதாரண ஜனங்களுடைய வருவாயை மனதில் கொண்டு பார்த்தால் அவர்களுக் கேற்ற ஒரு வைத்திய முறையை ஏற்படுத்தவேண்டும். எல்லாவிதமான வைத்திய வசதிகளும் சர்க்கார் செய்துகொடுக்கும் என்றிருப்பதற்கு இல்லை. அதனால் மிக குறைந்த செலவில் வைத்திய வசதி அளிப்பதற்கு சித்த வைத்திய முறையையும், ஆயுர்வேத வைத்திய முறையையும் அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். சித்த வைத்திய முறையை மிக குறைந்த செலவில் அபிவிருத்தி செய்யலாம். நம் நாட்டுக்கேற்ற முறை இந்த சித்த வைத்திய முறை. இதை சர்க்கார் முயற்சி எடுத்து, இந்த சித்த வைத்திய முறை இந்த நாட்டிலிருந்து அழிந்து போவதற்கு முன்னால் சர்க்கார் சரியான முயற்சி எடுத்துக்கொண்டு சித்த வைத்திய கல்லூரிகள் முதலியவை ஏற்படுத்தி கொடுத்து இதை வளர்ச்சி அடைய செய்தால்தான் இதற்கு தகுந்த வழிவகை செய்ததாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். தஞ்சையில் ஒரு வைத்திய கல்லூரி ஆரம்பிக்கப் போவதாக மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். வேகமாக இந்த மெடிக்கல் காலேஜ் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த பிரபோஸலை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். நமது நாட்டில் அதிகமான டாக்டர்கள் இல்லை என்று தெரிகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு இன்னுமொரு ஆயிரம் டாக்டர்கள் அவசியமிருப்பதாக மதிப்பிடுகிறார்கள். நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் போதிய அளவு டாக்டர்களை பெற்றுக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் காலரா நோயினால் ஆயிரக்கணக்கான பேர்கள் இறந்து போனார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் முன்பு ஒருதினம் இங்கு குறிப்பிட்டார்கள். சர்க்காரினால் இதை தடை செய்யமுடியாத ஒரு கேவலமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. இதை தடுப்பதற்கு இன்றைக்கு போதிய வசதிகள் சர்க்காரிடத்தில் இருக்கின்றது என்று நினைக்கிறேன். இந்த வியாதி எல்லா இடங்களிலும் எப்போதும் வருவதில்லை. குறிப்பிட்ட பிரதேசங்களில் சில காலங்களில்தான் வருகிறது. அந்த சமயங்களில் வேகமாக நடவடிக்கை எடுத்து இனாக்குலேஷன் எடுப்பது போன்ற சுகாதார முறைகளை கையாண்டிருந்தால் இதை தடுக்க முடியும். இதில் சர்க்கார் மேற்கொண்டு சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிராமங்களில் இருக்கின்றவர்கள் மிக குறைந்த வருமானக்காரர்கள், ஏழை விவசாயிகள், எந்தவிதமான ஆதரவும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை நம்பி பெரிய குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே சர்க்கார் இந்த ஏழை விவசாயிகளுக்கு, குறைந்த வருவாயுள்ளவர்களுக்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

9-40 a.m. இன்றைக்கு "ஜனதா இன்ஷ்யூரன்ஸ் திட்டம்" என்பதைச் சர்க்கார் கொண்டுவந்து அமுலாக்கியிருக்கிறார்கள் சில இடங்களில். ஆனால், இது எவ்வளவு தூரம் நல்ல பலன் கொடுத்திருக்கிறது என்பதை கவனித்துப் பார்த்தால்தான் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, சாதாரண வருவாய் உள்ளவர்கள், சொந்த முறையில் பணம் கட்டி இன்ஷ்யூரன்ஸ் வசதி செய்துகொள்ள முடியாத நிலையில், கூலி வேலை செய்யக்கூடியவர்கள், மிகக் குறைந்த நிலம் உள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் இந்தச் சாத்தியமா என்று ஆலோசித்து கூடுமான வரையில் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று





கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கிராமங்களில் குறைந்த வருவாய் உள்ளவர்கள், கூலி வேலை செய்யக்கூடியவர்கள், இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்வதற்காக வேண்டி பாதித் தொகையை சர்க்கார் கொடுத்து, பாதித் தொகையை அவர்கள் போடும்படிச் செய்து, அந்த விதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவந்தால் ஓரளவுக்கு சேமித்து, பிற்கால சந்ததிகள் நல்ல முறையில் இருக்க வழி வகைகள் செய்ய முடியும். தற்போது பொருளாதார நிலையில் பின் • தங்கியிருக்கும் விவசாயிகள் குடும்பத்தில் 1 அணா ஒரு நாளைக்கு மீதப்படுத்தினால் அதிகம். சர்க்கார் உதவி அளிக்கும் முறையிலே, அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் முறையிலே 1 அணா அவர்கள் சேமித்துக் கொடுத்தால், சர்க்கார் 1 அணா போட்டு, அவர்களெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்து பிற்காலத்தில் அவர்களுக்கு வாழ்க்கை வசதி நல்ல முறையில் அமைய சர்க்கார் கவனித்து ஆலோசிக்கவேண்டும். நம்முடைய நாட்டிலே எல்லோருக்கும் உணவு கிடைக்கவேண்டிய வசதி செய்து கொடுக்கக்கூடிய, எல்லோரும் வாழ வசதி செய்யக்கூடிய விவசாய மக்களுக்கு செய்யும் முக்கியமான நற்பணியாகும்.

இன்றைக்கு சர்க்கார் எத்தனையோ திட்டங்களைப் போடலாம். அந்தத் திட்டங்களின் பலன்களெல்லாம் கூலி வேலை செய்து மிகக் குறைந்த வருவாய் உள்ள இவர்கள் நிலையை எட்டிப் பிடிக்கக் காணோம். இந்த வகையிலாவது ஓரளவுக்கு, எவ்வளவு பணம் செலவானாலும், அதை எடுக்க முன் வரவேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் நாட்டில் உள்ள 100-க்கு 40 மக்களுக்கு உதவிகரமாயிருக்கும். அந்தப் பெரும் பெயரை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்தப் பெரும் காரியத்தை சர்க்கார் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri P. M. MUNUSAMI GOUNDER:** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மருத்துவ, சுகாதார அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியங்களை ஆதரிக்கும் வகையில் நான் ஒரு சில கருத்துக்களை வெளியிட ஆசைப்படுகிறேன். தற்போது அவர் கோரியிருக்கும் மானியத்திற்கும் அதிகமான அளவில் கோரி இருந்தால்கூட, இங்கு பல அங்கத்தினர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருந்தாலும் கூட, அதை ஆமோதித்து அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால், நாம் கடந்த பத்து ஆண்டுகள் முழுதும் நம் மருத்துவம், சுகாதாரம் முதலிய துறைகள் கிரமப்படி இருந்து, இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று பார்க்கும்போது உண்மையிலேயே நம் சர்க்கார் 10 வருஷங்களுக்குள் அநேக நல்ல முன்னேற்றகரமான காரியங்களில் ஈடுபட்டு, மருத்துவ வசதிகளெல்லாம் செய்து இருப்பதைக் குறித்துப் பாராட்டாமல் இருக்க முடியாது. நமக்கு எப்படியும் சில குறைகள் இருக்கும். அந்தக் குறைகளை சர்க்காருக்கு எடுத்துரைத்து நிவர்த்தித்துக் கொள்வது நம்முடைய கடமை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய வரவு செலவுத் திட்டத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கும் நேரத்தில் அவர்கள் சில குறிப்புகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முக்கியமாக நம் மாகாணத்தில் ஆங்காங்கு இந்த மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிகளுடைய அபிவிருத்தியை முன்னிட்டு ஆங்காங்கு அபிவிருத்தி ஏற்படுத்துவதின் காரணமாக சில முக்கியமான நகரங்களை—கோயம்புத்தூர், உதகை, செங்கல்பட்டு, கடலூர் போன்ற நகரங்களை—அபிவிருத்தி செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே சந்தர்ப்பத்தில், மற்ற ஜில்லாக்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது மற்ற ஜில்லாக்களுக்கும் அது மாதிரி செய்யவில்லை. அதற்கும் நாம் அவசியம் செய்யவேண்டும். அபிவிருத்தி என்று சொல்லும்போது, நாம் சாதாரணமாக முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போன்ற திட்டங்களை எடுத்துக் கொள்ளும்போது, எப்படி எப்படி, அந்தந்தப் பகுதிகளைப் பொறுத்து காரியங்களைச் செய்கிறோமோ, அதே மாதிரி நம் மாகாணத்திலே

[Sri P. M. Munusami Gounder] [19th March 1958

உள்ள தலைமை ஆஸ்பத்திரிகளை, ஒவ்வொரு ஆஸ்பத்திரியையும் பார்த்து, இந்திந்த ஆஸ்பத்திரிகளை அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டு, இவர்கள் இருக்கும் 5 ஆண்டு காலத்திற்குள், எந்தெந்த நகரங்கள் என்று வரையறுத்து செய்தால் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் நன்றாக வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்ட வரையில், பின் தங்கியதும் முன்னேற்றத்திற்கு அதிகம் வழியில்லாது இருக்கும் இந்த நகரத்தை எடுத்துக்கொண்டு அபிவிருத்தி செய்யும் விஷயமாக கனம் அமைச்சர் அவர்களிடத்திலும், கனம் முதலமைச்சர் அவர்களிடத்திலும், அபிவிருத்தியின் அவசியத்தைப்பற்றி விரிவாக எடுத்து உரைத்திருக்கிறோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேலத்தைப் பொறுத்த வரையில் ஒன்றும் காணப்படவில்லை என்று பார்க்கும்போது, அது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. சேலம் ஆஸ்பத்திரி எப்படி இருக்கிறது என்பது இங்கு இருக்கும் சேலம் ஜில்லா அங்கத்தினர்கள் பலருக்குத் தெரியும். போதுமான படுக்கை வசதி கிடையாது. கட்டிட வசதி கிடையாது. கட்டிட வசதி செய்யவேண்டும், அபிவிருத்தி செய்யவேண்டும் என்றால், அதற்குப் பக்கத்தில் இருக்கும் ஜில்லா முன்சீப் கோர்ட்டை அப்புறப்படுத்தி, அந்த இடத்தை ஆக்கிரமித்து, அபிவிருத்தி செய்ய முடியுமே தவிர, இட வசதி சரியான முறையில் அமைத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள்கூட கடந்த வருஷம் அதைப் பார்வையிட்டிருக்கிறார். அவர்களுக்கும் இது நன்கு தெரியும். ஆகவே கட்டிட வசதிகள் சரியாக இல்லை. அதோடு ஸ்டாப் நர்ஸுகள், டாக்டர்கள் போன்றவர்களையும் அதிகப்படுத்தவேண்டும். சென்னையில் எடுத்துக்கொண்டால் ஜெனரல் ஆஸ்பத்திரியில் எவ்வாறு நவீன முறையில் வைத்திய வசதி செய்கிறோமோ, அதற்கு வேண்டிய அபிவிருத்தி செய்து வரும் காலத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தலைமை ஆஸ்பத்திரிகள் விஷயத்திலும் கூட அபிவிருத்திக்கு இடம் கொடுக்கவேண்டும். இன்றைய தினம் அவர்கள் கொடுத்திருக்கும் ஸ்டேட்மெண்டில் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். எக்ஸ்ரே போன்றவைகளுக்கும், டி.பி. உள்ளவர்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதி செய்யவும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சாத்தியம் இருக்கிறதா என்றால் இல்லை. எல்லா இடங்களிலும் அவசியம் என்று அவருக்குத் தெரியும். அவசியம் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ ஒரு ஜில்லாவில் அபிவிருத்தி செய்துவிட்டு மற்ற ஜில்லாக்களில் அபிவிருத்தி செய்யாமல் இருக்கக்கூடாது. பொதுவாக ஒரு பழமொழி சொல்வார்கள், அதாவது "அழும் பிள்ளைக்குத்தான் தாய் பால் கொடுப்பாள்" என்ற பழமொழிப்படி எல்லாக் குழந்தைகளும் அழுதுகொண்டிருக்க முடியாது. சில குழந்தைகள் அழும் குழந்தைகளாக இருக்கலாம். சில குழந்தைகள் அழாது. அழாத குழந்தைக்குத் தேவையில்லையென்றால், அந்தக் குழந்தை க்ஷீணித்துவிடும். அழாது இருப்பவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு தாலூகாவிலும் உள்ள தாலூகா ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியை சர்க்கார் பரிபாலனத்தில் எடுத்துக்கொள்வதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டிருப்பதோடுகூட அதற்காக, கட்டிட வசதிகளுக்காக 11 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கவேண்டிய விஷயம். இந்தத் தொகையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் செலவழித்துவிடாமல் எல்லா தாலூகா ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளையும் ஒரே சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்வது நல்லது என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படி சில தாலூகா ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டு மற்றவைகளை எடுத்துக்கொள்ளாமல் விட்டால் அங்கத்தினர்களுக்கும், பொது மக்களுக்கும் அது அருவருப்பை ஏற்படுத்தி விடும். நாங்கள் இதில் ஏதோ பங்கு எடுத்துக் கொள்ளவில்லையோ, அக்கரை காட்டவில்லையோ என்று மக்கள் எடுத்துக் கொள்ளக்கூடும். சேலம் ஜில்லாவில் ஹஸூர் போன்ற முன்னேற்றமடையாத இடங்களை அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்



19th March 1958] [Sri P. M. Munusami Gounder]

புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் எக்காரணத்தினாலேயோ இந்த வரவு செலவுத் திட்டத்தில் விடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் காலத்தில், ஹஸூரில், சேலம் ஜில்லா போர்டிடமிருந்து சர்க்காருடைய பரிபாலனத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்பதை எடுத்துச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தப்படியாக நமக்கு ஒரு குறை இருந்துகொண்டே இருக்கிறது. ஆஸ்பத்திரிகள் கட்டுகிறார்கள். ஆஸ்பத்திரிகள் திறக்கிறார்கள். ஆனால் போதுமான டாக்டர்கள் இல்லையே என்பது மெம்பர்களிடத்திலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. வருஷா வருஷம் அநேக டாக்டர்களை உற்பத்தி செய்கிறோமே, அப்படி உற்பத்தி செய்யப்படுகிற டாக்டர்கள் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் அனுப்பப்பட்டு, அவர்கள் நன்கு வேலை செய்வார்களானால் இந்தக் குறை இருக்காது. அவர்கள் 5 வருஷம் படித்துவிட்டு, 6-வது வருஷம் ஏதாவது ஒரு இடத்திற்கு வேலைக்கு மாற்றப்படும் நேரத்தில் அந்த ஊர் பிடிக்கவில்லை என்று, சென்னை வேண்டும், சேலம் வேண்டும் என்று சொல்லிக் 9-50 a.m.
கொண்டு, அது கிடைக்காவிட்டால் தனிப்பட்ட முறையில் பிராக்டீஸ் செய்யும் முறையில் போகிறார்களே தவிர, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வேலை செய்ய சர்க்கார் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதை கவனித்து நாம் செலக்ஷன் செய்யும் காலத்தில் அநேக நிபந்தனைகளைப் போட்டு, அதற்குட்பட்டு செலக்ஷன் செய்தால் சௌகரியமாக இருக்கும். செலக்ஷன் செய்துவிட்டுப் பிறகு அவர்கள் இஷ்டப்படி வேலைக்கு நாம் அனுமதிப்பது மிகவும் தவறு. இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இரண்டு மூன்று வருஷங்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். அவர்கள் பாஸ் செய்தவுடன் ஏதாவது மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியில் இரண்டு, மூன்று வருடங்கள் வேலை செய்வதற்கு அனுமதி கொடுத்து, 5 அல்லது 6 வருடங்கள் கிராமங்களிலே இருக்கும் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தவேண்டும். குறைந்த பட்சம் 10 வருடங்களாவது அவர்கள் சேவை செய்யவேண்டும். அப்படிச் செய்ய இஷ்டம் இல்லையென்றால், அவர்களுக்கு "செலக்ஷன்" கிடையாது என்ற முறையை ஏற்படுத்தவேண்டும். எப்படி நாம் அவர்களை "செலக்ஷன்" செய்கிறோமோ, அதே மாதிரித்தான் அவர்களை உத்தியோகத்தில் அமர்த்தும்படியான நிலைமையை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டங்கள் இருக்கக்கூடிய இடங்களில் "Rural Dispensaries"களை அமைக்க ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம். ஏற்பாடு செய்கிறோமே தவிர, நடைமுறையில் அவைகள் சரியானபடி நடக்கவில்லை. மறுபடியும் இந்த டாக்டர்கள் பிரச்னைதான் அங்கேயும் குறுக்கிடுகிறது. நர்ஸ்கள் கிடையாது, கம்பவுண்டர்கள் கிடையாது, டாக்டர்கள் கிடையாது. ஆட்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்குப் போதுமான டிரெயினிங் கொடுத்து, பத்து வருடங்களுக்கு அவர்கள் சர்க்கார் சேவையில் இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தால், ஆஸ்பத்திரிகள் நன்றாக நடக்கும், சமுதாய நலத்திட்டங்களும் வெற்றிகரமாக நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஜனங்களுக்கு வெளிப்படையாக இந்த ஆஸ்பத்திரி குறைதான் தெரிகிறது. அன்றாடம் சாப்பாடு சாப்பிடுவது போல, ஆஸ்பத்திரிக்குப் போகும் வழக்கம் ஏற்பட்டு வருகிறது. நோயால் பாதிக்கப்படுகிற ஒவ்வொருவரும் ஆஸ்பத்திரிக்குப் போகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. "இன்றைய தினம் ஆஸ்பத்திரியைத் திறந்தார்கள், நாளைய தினம் டாக்டர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்" என்ற நிலைமைதான் இருக்கிறது. தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள்மீது ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டுமென்றால், இந்த டாக்டர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று சேவை செய்யவேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, சென்னை நகரைப் பொறுத்தவரையில் சில விஷயங்களைச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். பஸ் போக்குவரத்து நிலையங்களில் இந்த குஷ்டரோக வியாதியஸ்தர்கள் ஆங்காங்கே நிற்பதைப் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் தொத்து நோய் பரவுகிறது என்று சொல்லுகிறோம். மற்றொரு புறத்தில் தொத்து நோய் பரவுவதைத் தடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். சர்க்கார் இது விஷயமாகப் பல

[Sri P. M. Munusami Gounder] [19th March 1958

முயற்சிகள் எடுத்துக்கொண்டபோதிலும், முக்கியமாக அவர்களை அப்புறப் படுத்தவேண்டும். அவர்களுக்கென ஒரு தனி விடுதியை ஏற்படுத்தி, நல்ல முறையில் நோயாளிகளைப் பாதுகாப்பது நல்லது. குணம் அடைந்த பிறகு தான் அவர்களை வெளியிலே கொண்டுவரவேண்டும். பஸ் நிற்கும் இடங்களில் இந்த மாதிரி நோயாளிகள் நின்றுகொண்டு பிச்சை வாங்குவதைத் தான் பார்க்கிறோம். அவர்களை அப்புறப்படுத்தினால்தான் தொத்து நோய் பரவாமல் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக, டாக்டர்கள் போதாது என்று சொல்லப்படுகிறது. எம்.பி.பி.எஸ்., எல்.எம்.பி. என்று இரண்டு "course"-கள் இருந்தன. எல்.எம்.பி. course-க்கு மூன்று வருடங்களுக்கு பயிற்சி கொடுத்து வந்தோம். தற்காலிகமாக அதை எடுத்துவிட்டு இப்பொழுது ஜி.வி.ஐ.எம். என்ற course-ஐ ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இந்திய வைத்திய முறைக்கும் ஐந்து வருஷம் படிக்கவேண்டியிருக்கிறது. இதை மூன்று வருடங்களாகக் குறைத்து, சர்க்கார் "recognition" கொடுத்து, சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பாஸ் செய்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜி.வி.ஐ.எம்., எம்.பி.பி.எஸ். இரண்டுக்கும் ஐந்து வருடங்கள் படிக்கவேண்டும். அது டிப்ளமா கோர்ஸ், இது டிகிரி கோர்ஸ். ஐந்து வருடங்கள் படித்தாலும்கூட, ஜி.வி.ஐ.எம். கோர்ஸ் படிக்கிறவர்களுக்கு, சர்க்காரில் உத்தியோகஸ்தர் ஆக இருக்கலாம், நல்ல சேவை செய்யலாம் என்ற எண்ணம் இல்லாததினால், அவர்கள் மனது ஊசலாடும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவே இதை மூன்று வருஷ "கோர்ஸ்" ஆக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேரமாகி விட்டதினால் இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

SRI M. K. SOMASUNDARAM: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன். எல்லா இடங்களிலும் ஆஸ்பத்திரிகள் இல்லை, டாக்டர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் "பப்ளிக் ஹெல்த்" என்றால் என்ன என்பதை அங்கத்தினர்கள் உணர்ந்து பேசுகிறார்களா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

1919-ம் வருஷத்தில் "Government of India Reforms Act" கொண்டுவரப்பட்டது. அப்பொழுது இரண்டும் ஒன்றாக இருந்தது. அதைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டு, 1923-ம் வருஷத்திலே "டிபார்ட்மெண்ட் ஆப் பப்ளிக் ஹெல்த்" என்று பிரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இதுவரையிலும் அந்த டிபார்ட்மெண்ட் தனியாக இருந்து சேவை செய்து வருகிறது. அப்பொழுது எல்லாம் அந்த டிபார்ட்மெண்டின் வேலை குறைவாக இருந்தது. குறிப்பாக, vaccination, cholera control, Plague" இந்த மூன்று வேலைகள்தான் செய்யப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது இந்த டிபார்ட்மெண்டில்ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் செய்ய வேண்டிய வேலைகள் என்னவென்றால் "vaccination, cholera control, plague, malaria, filaria, guinea-worm, water-supply, drainage, refuse disposal, composting, sanitation, nutrition, fairs and festivals, maternity and child-welfare, plague research, general research, Kala zaar, B.C.G., family planning, propaganda and publicity, training Orientation training centre, R.C.A. projects, Health Unit Poonamallee, Health Visitors' School training, Public Health Nurses course, UNICEF of Projects, milk supply to children, vital statistics, food adulteration, D. and O. trades licence, V.D. control, School health work, Block Development work, National Extension Service work, etc". இவ்வளவு வேலைகளையும் இவர்கள் கவனிக்கவேண்டியிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலே ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர், 4 ஹெல்த் அஸிஸ்டண்டுகள் போட்டிருக்கிறார்கள். கிராமங்களுக்குப் போகும்பொழுது அவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் யார் என்றால் கிராம உத்தியோகஸ்தர்கள். அவர்கள் ரெவென்யூ டிபார்ட்



19th March 1958] [Sri M. K. Somasundaram]

மெண்டின் கன்டிரோலில் இருக்கிறார்கள். நாம் போனாலும்கூட அவர்கள் கொஞ்சம்கூட மரியாதை கொடுப்பதில்லை. அவர்கள் வெட்டியானையும், தலையாரியையும் அனுப்பிவிட்டு, தங்களுடைய வேலையைக் கவனிக்கப் போய்விடுகிறார்கள். ஒரு ஹெல்த் அஸிஸ்டண்டுக்குப் பியூன்கூட கிடையாது. அவர்களே பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிராமாந்திரங்களுக்குப் போகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். 200 ஆட்களுக்கு "பிரைமரி வாக்ஸினேஷன்" செய்யவேண்டுமென்று இருக்கிறது. இவ்வளவு பேருக்கும் ஒருவரே ஊசி குத்துவது என்றால் கஷ்டமாகத்தான் இருக்கும். தலையாரி, வெட்டியான் கூட இருந்தும், சரியான உதவி அளிக்கப்படாததால் "வாக்ஸினேஷன்" நடைபெறுவதில்லை. ஒரு பக்கத்திலே "குடும்பக் கட்டுப்பாடு" செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்திலே 200 பிள்ளைகளுக்கு "பிரைமரி வாக்ஸினேஷன்" செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஜனன மரண ரெஜிஸ்தரில் சரியான படி விவரங்கள் எழுதப்படுவதில்லை. குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க வேண்டுமென்றால், "பிரைமரி வாக்ஸினேஷன்" செய்வதற்கு பிள்ளைகள் கிடைக்கமாட்டார்கள். 200 பிள்ளைகள் இல்லையென்றால் "லிம்ப்" வீணாகப்போய்விடும். ஆகையினால் இந்த குறைபாடுகளை அரசாங்கம் நிவர்த்திக்கும் என்று நான் நினைக்கிறேன்.

'வாக்ஸினேஷன்' பொறுத்த பிராசிக்யூஷன்கள் 'ஹெல்த் ஆபீ 10–(
சருக்கு' 6 மாதம் கழித்து வருகிறது. இந்த 6 மாதத்திற்குள்ளாக a.n
அந்த ஆள் இருந்தாலும் இருக்கலாம். இறந்து போயும் இருக்கலாம். ஆகையினால் மறுபடியும் இந்த 'ஹெல்த் இன்ஸ்பெக்டர்' அந்த கிராமத்திற்கு சென்றால் அங்கு உள்ளவர்கள் இழிவாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆகையால் இந்த 'பிராசிகியூஷன்' செய்யும் அதிகாரத்தை ஹெல்த் இன்ஸ்பெக்டரிடம்' கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும். முன்பு எல்லாம் 'வாக்ஸினேஷன்' கம்பல்ஸரியாக இருந்தது. ஆனால் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்தபோது 'கம்பல்ஸரி' என்ற வார்த்தையை எடுத்துவிட்டார். ஆகையால் அம்மை குத்திக்கொள்ள யாரும் முன் வருவதில்லை. அதற்கு சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகையால் எம்.எல்.பி. ஆக்ட் 1920-ன் கீழ் 135, 138 செக்ஷன்களின்படி பிராசிக்யூஷன் செய்வதற்கு ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'பிளாக்' ஏரியாவிலும், மற்ற இடங்களிலும், 'சைட்' இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு 'ஹெல்த் இன்ஸ்பெக்டர்' போக வேண்டியிருக்கிறது. இந்த 'ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள்' 'அட்வைசரி போர்டில்' தற்போது மெம்பராக இல்லை. ஆகையால் இந்த 'சானிடேஷன்' சம்பந்தப்பட்ட வேலைகளை சரியாக செய்ய முடியாமல் போகிறது. ஆகையால் இந்த 'பிளாக் அட்வைசரி போர்டில்', 'ஹெல்த் இன்ஸ்பெக்டரும்' ஒரு மெம்பராக இருக்கவேண்டியது முக்கிய அம்சமாக இருக்கிறது.

சானிடேஷனை கவனிப்பதற்கு மதராஸ் சிட்டி முனிசிபல் ஆக்ட் 1920-ல், 352, 353, 354 செக்ஷன்கள் பிரகாரம் அதிகாரம் இருக்கிறது. மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிசிபல் ஆக்ட் 1920-ன் கீழ் 309, 310, 311 செக்ஷன்கள் பிரகாரம் அதிகாரம் இருக்கிறது. ஜில்லா போர்டுகளும் இந்த 'பைலாஸ்' படி சுகாதாரத்தைக் கவனிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. 'ரைஸ் மில்' சுகாதாரத்தைப் பொறுத்தவரை 1920-ம் வருஷத்திய எம்.எல்.பி. ஆக்ட் 193, 194 செக்ஷன்கள்படி பிராசிகியூஷன் செய்ய அதிகாரம் இருக்கிறது. இப்பொழுது இந்த அதிகாரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டின் கையில் இருக்கிறது. ஹெல்த் இன்ஸ்பெக்டர்களிடம் அந்த அதிகாரத்தைக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும். இந்த அதிகாரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டிடம் இருப்பதால், ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் இந்த பிராசிகியூஷனை தள்ளிவிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விடுகிறார்கள். லைஸன்ஸ் இன்ஸ்பெக்டர் பிராசிகியூஷன் செய்யவேண்டும் என்று சொல்லும்போது, ஜில்லா போர்டு பிரசிடெண்ட் அதை கான்ஸல் செய்ய வேண்டும் என்று உத்திரவு போட்டால், அந்த லைஸன்ஸ் இன்ஸ்பெக்டருக்கு மதிப்பு குறைந்து போகிறது. அவர் சம்பந்தப்பட்ட பகுதிகளில் வேலை செய்வதற்கு தடங்கலாகவும், கஷ்டமாகவும் இருக்கிறது.

[Sri M. K. Somasundaram] [19th March 1958

' பிரைமரி ஹெல்த் சென்டர் ' களிலே டாக்டர்களை நியமித்த பிறகு தான் மற்ற சிப்பந்திகளை நியமிக்கவேண்டும் என்று இப்பொழுது சொல்லப் படுகிறது. அந்த ஸெண்டர்களிலே இப்பொழுது ஒரு ஹெல்த் இன்ஸ் பெக்டர், ஒரு ஹெல்த் விசிடர், சில மெடர்னடி அஸிஸ்டெண்டுகள் இருக்கிறார்கள். இங்கு போடப்படும் டாக்டர்களுக்கு ' ஹெல்த், ஹைஜீன் ' இவைகளைப்பற்றி ஒன்றும் தெரிவதில்லை. இவர்களுக்கு ஊசிபோட மட்டும்தான் தெரிகிறது. ஆகையால் இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒழுங்காக, சரியான முறையில் நடைபெறுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நினைக்கிறேன்.

ஹெல்த் டிபார்ட்டுமெண்டிற்கும், மெடிகல் சர்வீஸ்-க்கும் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. ' **Inspection of Rural Dispensaries** ' என்று வரும்போது இரண்டு பிரிவுகள் இருக்கின்றன.

' **Indian Medicine** ' ஐச் சேர்ந்த ஆஸ்பத்திரி என்றும் ' **Allopathic**' ஐச் சேர்ந்த ஆஸ்பத்திரி என்றும் சொல்லப்படுகிறது. ஹெல்த் ஆபீசர்களுக்கு ' **Indian Medicine** ' ஐச் சேர்ந்த ஆஸ்பத்திரியை இன்ஸ்பெக்ஷன் செய்ய அதிகாரம் இருக்கிறதே தவிர ' **Allopathic**' ஐச் சேர்ந்த ஆஸ்பத்திரிக்கு இல்லை. ஹெல்த் இன்ஸ்பெக்டருக்கோ இரண்டு விதமான அதிகாரமும் கிடையாது. டாக்டர்களில் எம்.பி.பி.எஸ்., எல்.எம். அண்டு எஸ்., எல்.எம்.பி., எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம். என்று பல பட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் கூட எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம். இந்த இரண்டிலும் ' ஹைஜீன் ' கிடையாது. யூனிவர்சிடியால் ' **not recognised**' என்று இருக்கிறது. ஆகையால் இந்த ஹெல்த் இன்ஸ்பெக்டர்களையும், ஜி.ஸி.ஐ.எம். படித்த டாக்டர்களையும், பிரமோஷன் கொடுத்து **Personal Assistant to the District Health Officer**' என்று போடலாம். இந்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

சில பிரதேசங்களில் மெடிகல் சர்வீஸ்-ம், ஹெல்த் டிபார்ட்மெண்டும் ஒன்று சேர்ந்து இருப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. நம் மாகாணத்திலே ' டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் ' என்று தனியாகத்தான் இயங்கிக்கொண்டு வருகிறது. மைசூர், கேரளா, ஆந்திரா, பம்பாய், உ.பி., வங்காளம் முதலிய பிரதேசங்களிலும், அவை தனித்தனியாகத்தான் இருக்கின்றன. நம்முடைய மாகாணத்தில் இவைகள் தனியாக இருப்பதை ஒன்று சேர்க்வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் செய்தால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால் ' டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் ' தனிப்பட்ட முறையிலே தான் இயங்க வேண்டும் என்று வற்புறுத்திக்கூறி என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ' மெடிகல் பெஸிலிடிஸ் ' என்ற முறையில் பார்த்தால் நம்முடைய பிரதேசத்தில் முக்கியமாக ' ரூரல் மெடிகல் பெஸிலிடிஸ் ' தான் முதல் இடம் பெறவேண்டும். இதை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம். ' பிளாக் டெவலப்மெண்ட் ஏரியா ', ' **Non-Block Development Area** ' என்று பிரிக்கலாம். இப்பொழுது மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் ' **Rural medcal facilities** ' என்று போட்டிருப்பது ' **Block Devəlopment Area** ' வைத்தான் குறிக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி " **10 Primary Health Centres were established in this State, during 1955–56 and 24 during 1956–57. The opening of 23 Primary Health Centres during 1957–58 was sanctioned and these are expected to function shortly. Nine more Primary Health Centres will be sanctioned during 1958–59 in addition to 18 under the schematic budget of the Community Development Blocks** " என்று சொல்லப்பட்டிருக்கிறது. 34 ஹெல்த் சென்டர்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக



19th March 1958] [Sri K. Ramachandran]

நமக்கு இருக்கக்கூடிய ' பிளாக் ஏரியா ' வை எடுத்துக்கொண்டால் இந்த எண்ணிக்கை மிகவும் குறைச்சல் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. பிளாக் இல்லாத பிரதேசங்களைப் பார்த்தால் வைத்திய வசதி மிகவும் குறைவு.

சாதாரணமாக கிராமங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில், அநேகமாக எல்லாம், டாக்டர் இல்லாமல் இருக்கின்றன. அம்மாதிரி பல கிராமங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. சுதந்திரம் வந்து 10 ஆண்டுகள் ஆன பிறகும் வைத்திய வசதி வளர்ந்திருப்பதைப் பார்த்து பெருமைப் படக்கூடிய நிலையில் நாம் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல கிராமங்களில் ஆஸ்பத்திரிகளே இல்லாமல் இருக்கின்றன. சாதாரணமாக என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. ஒரு கிராமத்தில் ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாமல் அங்குள்ள பள்ளிக்கூட வாத்தியார் குறைந்தது நாலைந்து வருஷங்களாக வைத்திய போஷகராக இருந்து வருகிறார் என்று. அவரால் என்ன சேவை செய்ய முடியும் என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு எடுத்துக்கொண்டால் மேல் நாடுகளில் 24 மணி நேரத்தில் நீண்ட கால சிகிச்சை பெறக்கூடிய வியாதிகளுக்கு வசதி கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. மற்றும் ஒரு மணி நேரத்தில் ரண சிகிச்சைக்கு வசதி கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட விவரங்கள் நமக்குக் கிடைக்கும்போது நம்முடைய நாட்டைப் பார்த்தால் வைத்திய வசதிகள் இல்லாத பல கிராமங்கள் இருப்பது தெரியவரும். இப்பொழுது இருக்கக்கூடிய முக்கால் வாசி கிராமங்களில் இன்றைக்கு வைத்திய வசதியே கிடையாது. ஆஸ்பத்திரிகளே கிடையாது. மேல் நாடுகளில் இருப்பதையும் நம் நாட்டில் இருப்பதையும் பார்த்தால் அது நமக்கு பெருமை தரக்கூடியதாக இல்லை.

அடுத்தப்படியாக தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளில் தகுந்த வைத்திய வசதி இருப்பதாகவே தெரியவில்லை. ஏற்கெனவே சின்னச் சின்ன கட்டடங்களாக இருந்த ஆஸ்பத்திரிகள்கூட இப்பொழுது இல்லை. சின்னச் சின்ன கட்டடங்களில்கூட வைத்திய வசதி கிடையாது. சுதந்தரம் அடைந்த பிறகு இந்த அரசாங்கம் ஆஸ்பத்திரிகளையெல்லாம் ஜில்லா போர்டிலிருந்து எடுத்துக்கொண்ட பிறகு சரியான அபிவிருத்தி அடையாமல் இருக்கிறது. அங்கெல்லாம் வசதிகள் குறைவாகத்தான் இருக்கிறது. எந்த விதத்திலும் அபிவிருத்தி அடைந்ததாகத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியாகிய பரமக்குடியில் ஒரு ஆஸ்பத்திரி கட்டடம் கட்ட வேண்டும் என்று சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன்பிருந்தே திட்டம் இருந்திருக்கிறது. அப்படி இருந்தும் அங்கு இன்னும் கட்டடங்கள் கட்டவில்லை. அதற்கு வருஷந்தோறும் ஏதாவது காரணங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் அதற்கு என்று ஒதுக்கி வைக்கப்படும் தொகை செலவு செய்யப்படாமல் போய்விடுகிறது. சாதாரணமாக மின்சார இலாகாவில் இருந்த கட்டடத்தை அதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். சர்க்கார் மின்சார இலாகாவில் அது வருவதற்கு முன்னால் அந்தக் கட்டடத்திற்கு ஒரு லட்சம் சொச்சம் ரூபாய் காம்பன்ஸேஷனைக் கொடுப்பது என்று சொன்னார்கள். அந்தக் கட்டடத்தை துரதிருஷ்ட வசமாக மின்சார இலாகா தங்களுக்கு தேவைப்படுவதாக எடுத்துக் கொண்டார்கள். அது ஒரு விதத்தில் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் அதற்குப் பிறகு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு என்று ஒரு இடத்தை பார்த்துக் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே சொல்லப்பட்ட கட்டடம் தேவையில்லை வேறு இடத்தில் கட்டிக்கொள்ளலாம் என்று வேறு இடத்தைப் பார்த்துக் கொடுத்த பிறகு அதை ப்ளானிங் போர்டுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அந்த விஷயம் கிட்டத்தட்ட ஒரு வருஷமாக பெண்டிங்கில் இருக்கிறது. இது சம்பந்தமாக சுமார் ஐந்தாறு வருஷங்களாக தொகை ஒதுக்கப்பட்டு வந்தும் இன்னும் அங்கே கட்டடம் கட்டப்படவில்லை. இந்த இனத்தில் தற்போதைய பட்ஜட்டில் கிட்டத்தட்ட ஐந்தாறு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதாவது ராமனாதபுரம் ஜில்லாவிற்கு ஆஸ்பத்திரி கட்ட வசதிக்காக என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூரல் தாலூகா தலைமை

[Sri K. Ramachandran] [19th March 1958

ஆஸ்பத்திரி சம்பந்தமாக எவ்வளவு செலவழிக்கப்படுமோ என்னமோ தெரியவில்லை. இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால் அப்பெரிய தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் இரண்டு பெட்டுகள் கூட கிடையாது.

ரூரல் மெடிகல் யூனிட்டை அதிகப்படுத்தவேண்டும் என்று திட்டம் போட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்யும்போது தாலூகா தலை நகரங்களை மையமாகக்கொண்டு அங்கெல்லாம் ஒரு மோபைல் மெடிகல் யூனிட்டை ஆரம்பித்தால், அதுவும் அவசியமாக ஆரம்பித்தால் அந்த ஒரு வசதியாவது எதிர்காலத்தில் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். சமீபத்தில் கொடுத்திருக்கிற இரண்டாவது திட்ட விவரம் புத்தகத்தில் இம்மாதிரியான ஒரு மெடிகல் மோபைல் யூனிட்டை ஆரம்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. பொதுவாக ரொம்பவும் பின் தங்கி இருக்கக்கூடிய ராமனாதபுரம், தென் ஆற்காடு மாவட்டங்களில் உடனடியாக இவைகளை அமுலுக்குக் கொண்டு வந்தால் ரொம்பவும் பிற்போக்கான கிராமங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

போதுமான டாக்டர்கள் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை சொல்லப்படுகிறது. ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் சரியானபடி டாக்டர்கள் இருக்கிறார்களா என்பது சந்தேகப்பட வேண்டியதாக இருக்கிறது. அதற்காக நான் சொல்லக்கூடிய ஒரு யோசனையையும், ஏற்கெனவே பல அங்கத்தினர்கள் சொல்லியபடியும் நல்ல தமிழ் வைத்திய முறையைக் கையாளலாம் என்பதுதான். அது நல்ல சிறந்த முறை. இதையே நாம் வைத்துக் கொள்ளலாம்.

இரண்டாவதாக இப்பொழுது பயிற்சி பெறுகிற டாக்டர்கள் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷங்களாவது கண்டிப்பாக கிராமங்களில் போய் சேவை செய்யவேண்டும் என்ற ஒரு கட்டாய விதியை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முன்பு ஏகாதிபத்திய காலத்தில் டாக்டர்கள் இருந்ததுபோல் இப்பொழுதும் இருக்க முடியாது. சேவை மனப்பான்மையைக்கொண்ட டாக்டர்கள் இப்பொழுது வரவேண்டும். அவர்கள் கிராமங்களில் போய் சேவை செய்வதில் எந்த விதமான தவறும் இல்லை. அவர்கள் எல்லாம் கண்டிப்பாக ஒன்றிரண்டு வருஷங்கள் கிராமங்களில் வேலை செய்தாகவேண்டும் என்ற விதியை சர்க்கார் செய்வதற்கு துணிய வேண்டும். எந்த விதமான தயக்கமும் இருக்கவேண்டியது இல்லை. அத்துடன் மெடிகல் காலேஜ்களில் அட்மிஷன் வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் தமிழ் வைத்திய முறையையும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்தால் ஓரளவு நமக்கு வசதிகள் கண்டிப்பாக கிடைக்கும். தொத்து நோய்களைத் தடுப்பதற்கு வேண்டிய வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்று நான் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன்.

பல அங்கத்தினர்கள் தொத்து நோயைப்பற்றி பேசினார்கள். தொத்து நோய் சம்பந்தமாக 40 ஆவது ரூல்படி அநேகம் மோஷன்கள் இந்த சபைக்கு வந்திருக்கின்றன. நானும் ஒன்று கொடுத்திருந்தேன். பரமக்குடியில் தொத்து நோயாகிய அம்மை நோயால் பல குழந்தைகள் இறந்துவிட்டன. சுமார் 200 குழந்தைகள் இருந்துவிட்டன என்று ஒரு மோஷன் கொண்டு வந்தேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டதற்கு சரியான முறையில் பதில் சொல்லப்படவில்லை. பத்திரிகை வாயிலாகப் படித்துப் பார்த்ததில் அதிகப்படியான குழந்தைகள் இறந்திருப்பதாகத் தெரியவந்திருக்கும். இன்னும் இறந்து கொண்டே இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதற்கு பதில் என்ன சொல்லப்பட்டது என்றால் நிலைமை அப்படி மோசமாக இல்லை, இரண்டு மூன்று குழந்தைகள்தான் இறந்தன என்று பதில் சொன்னார்கள். இப்படி பல இடங்களில் தொத்து நோய் வந்தன. சென்ற வருஷம் மூவாயிரம் சொச்சம் பேர்கள் காலராவினால் இறந்ததாகச் சொல்லப்பட்டது.



19th March 1958] [Sri K. Ramachandran]

களுக்கு அடிப்படை காரணம் என்ன என்பதைப் பின்னால் பார்க்கலாம். தொத்து நோய்கள் வந்தால் உடனடியாக அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் அங்கு சரியானபடி staff-கள் கிடையாது. தேவையான ஆட்கள் கிடையாது. பஞ்சாயத் ஏரியாக்களில் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களும் சானிடரி இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். சாதாரணமான காலங்களில் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது இல்லை. அம்மை போன்ற தொத்து நோய்கள் வந்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். அவைகள் ஆரம்பமாகவுள்ள கட்டத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதாக இல்லை. கால தாமதம் ஆனவுடன் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுவதால் அவைகளை உடனடியாக கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அதற்கு என்று ஒரு நிரந்தரமான ஸ்டாப்பை அமைக்கவேண்டும். ஸ்டாப் இல்லாமல் இருப்பதால் அந்த தொத்து நோய்கள் வந்தவுடன் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்கு வேண்டிய நிரந்தரமான ஸ்டாப்புகள் இருக்குமேயானால் கிராமங்களில் இம்மாதிரியான வியாதிகள் பரவி விட்டால் சீக்கிரத்தில் அதைத் தடுத்துவிடலாம். ஒரு தாலூகாவிற்கு ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர் என்று இருந்தால் அவர் எப்படி சமாளிப்பார் என்பது எனக்குத் தெரியவில்லை. அவரால் சமாளிக்க முடிவதில்லை. தொத்து நோய் வந்தவுடனேயே அதைத் தடுத்து விட்டார்கள் என்று இந்த சரித்திரத்திலேயே கிடையாது. இப்படி தாமதம் ஏற்படுவதால் சரியானபடி நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே இதற்கு தகுந்த வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது ஜில்லா வசதிகளைப் பொறுத்த வரையில் சொல்லியிருக்கிறார்கள். அதில் குறைந்தது ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரே அளவில் அபிவிருத்தி ஏற்படவில்லை என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக பெட்டுகளை அதிகப்படுத்தப் போகிறார்கள். 570 பெட்டுகள் அதிகப்படுத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவு என்பது என்னுடைய அபிப்பிராயம். ஜில்லா ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொன்றிலும் குறைந்தது 500 பெட்டுகளாவது இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த ஜில்லாவின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அதற்கு என்று மானியம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்பொழுது அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மானியம் ரொம்பவும் குறைவு. இன்னும் அதிகப்படியாக தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக இப்படிப்பட்ட தொத்து நோய்களுக்கு அடிப்படைக் காரணம் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதுதான். பெரிய நகரங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதாலும் சுகாதார மற்ற முறையில் இருப்பதாலும்தான் தொத்து நோய்கள் அதிகமாக பரவி வருகிறது. பல இடங்களில் குடி தண்ணீர் வசதிக்கு பணம் ஒதுக்கியிருந்தும் அங்கேயெல்லாம் அவைகள் இன்னும் நடைபெறவில்லை. ஆர்டர் அப் ப்ரையாரிட்டி என்று காரணம் காட்டி சில இடங்களில் அந்த திட்டங்களையெல்லாம் எடுத்து நடத்துவதாக இல்லை. டெக்னிகல் ஸ்டாப் இல்லை என்றும் சொல்லி நாட்களை கடத்தி விடுகிறார்கள். ரொம்ப கால தாமதம் ஆகாமல் அவைகளை எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குடி தண்ணீர் வசதியை பெரிய நகரங்களில் உடனடியாக அதிகரிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஸ்டாபையும் கொடுக்கவேண்டும். சுகாதார மற்ற பஞ்சாயத்துகள் தங்களுடைய ஏரியாவில் திட்டங்களைச் செய்துகொள்வதற்கும் பணம் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியானபடி உதவி கொடுத்து, திட்டங்களையும் அமைத்துக்கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் பணம் செலவழிக்கத் தயாராக இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் செய்வதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனித்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

[19th March 1958

10-20 a.m. * SRI N. R. THIAGARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வைத்திய சுகாதார மான்ய கோரிக்கையை ஆதரித்து பேசும்போது என்னுடைய கருத்துகளை ஓரிரண்டு கூற ஆசைப்படுகிறேன். வைத்திய சுகாதார இலாகாக்கள் ஒன்றாக இணைக்கப்படவேண்டும் என்று பல கால மாக நான் கோரி வருகிறேன். அவைகளை இணைப்பதில் தவறில்லை. அவைகளுக்கு இரு தலைமைகள் வேண்டியதில்லை. ஆந்திரா, மலபார், தென் கன்னடம் இவைகளெல்லாம் நம்முடன் சேர்ந்திருந்த காலத்தில் அதிக வேலை இருந்திருக்கலாம். அதனால் அந்த இலாகாக்கள் தனியாக பிரிக்கப்பட்டிருக்கலாம். இப்பொழுது அந்த இலாகாக்கள் தனியாக இருக்க வேண்டியது அவசியமில்லை. 'டைரக்டர் ஆப் மெடிகல் ஸர்வீஸஸின்' கீழ் 'டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்' வேலை செய்யலாம். வேண்டு மானால் உதவி டைரக்டர் ஒருவரை நியமித்துக்கொள்ளலாம். ஆகவே, இந்த இரு இலாகாக்களும் ஒன்றாக இணைக்கப்படவேண்டுமென்பது என் னுடைய அபிப்பிராயம். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ராஜ்யத்தில் 570 படுக்கைகள் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 570 படுக்கைகளும் ஜில்லா தலை நகரங்களில்தான் விஸ்தரிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன். காரணம் எங்கள் மதுரையில் 800-க்கு புத்தம் புதிய படுக்கைகள் விஸ்தரிக்கப்பட் டிருந்தாலும் அவைகளெல்லாம் மதுரை தலைநகரத்திற்கே போய் சேரு கிறதே தவிர, தாலூகா தலைநகரங்களுக்கு செல்லுவதில்லை. என்னுடைய தொகுதி தேனீயில் பஸ்களில் பிரயாணம் செய்பவர்களை பார்த்தால், ஒரு பஸ்ஸில் 50 பேர்கள் இருந்தால் அதில் 20 பேர்களுக்குமேல் ஆஸ்பத்திரிகளுக்கு செல்லுபவர்களும், அல்லது ஆஸ்பத்திரிகளில் இருக்கும் நோயாளிகளை பார்ப்பதற்கு செல்லுபவர்களும்தான் பிரயாணம் செய் கிறார்கள். ஆஸ்பத்திரிக்குச் செல்லும் கூட்டம்தான் பஸ்ஸில் அதிகமாக இருக்கிறது. இதனால் பிரயாணத்தில் ஜன நெருக்கடி ஏற்படுகிறது. இந்த ஜன நெருக்கடியை தவிர்க்கவேண்டுமானால், தாலூகா தலைநகரங்களில் ஆஸ்பத்திரிகளை விஸ்தரிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஜன நெருக் கடியை தடுத்து நிறுத்த முடியும். (இந்த சமயம் சட்டநாதக் கரையாளர் தலைமை வகித்தார்.) மேஜர் பஞ்சாயத்து போர்டு உள்ள இடங்களிலும், தாலூகா தலைநகரங்களிலும் ஆஸ்பத்திரி வசதி இருந்தால்தான் ஆஸ் பத்திரிக்குச் செல்லும் ஜனநெருக்கடியை தடுக்க முடியும். பஸ்களிலுள்ள பெரிய கூட்டத்தை சமாளிக்க முடியும். ஒவ்வொரு கிராமத்திலும் ஆஸ் பத்திரிகளை அதிகமாக திறக்கவேண்டும். மேஜர் பஞ்சாயத்துகள் உள்ள இடங்களில் 10 படுக்கைகள்கொண்ட ஆஸ்பத்திரிகள் இருப்பது மிகவும் அவசியம். தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகள் மொத்தம் 100-க்கு மேல் இருக்க முடியாது என்று நினைக்கிறேன். சாதாரணமாக 500 கைதிகள் உள்ள ஜெயில்களில்கூட இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். அப்படி யிருக்கும்போது 5,000, 10,000 ஜனத்தொகைகொண்ட இடங்களில் ஆஸ் பத்திரி இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. என்னுடைய தொகுதியான தேனீயில் மேஜர் பஞ்சாயத்து போர்டுள்ள இடத்தில் 25,000 மக்கள் இருந்தாலும்கூட, 10 ஆண்டுகளாக முயற்சி செய்தும், அங்கு ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்படவில்லை. காரணம் டாக்டர் இல்லாத குறை என்று சொல்லுகிறார்கள். இதற்காகத்தான் 10, 15 வருஷங் களுக்கு முன்னால் இருந்த 'எல்.எம்.பி. கோர்ஸை' மறுபடியும் ஏற்படுத்த வேண்டுமென்று பிரசாரம் செய்துகொண்டு வருகிறேன். நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலத்தில் 45 ஆஸ்பத்திரிகள் இருந்தன. இப்பொழுது டாக்டர்கள் இல்லாத காரணத்தினால் அவைகள் பெரும் பாலும் மூடப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகள் படிப்புபடித்து எல்.எம்.பி. பட்டம் பெற்றால் குறைந்தபட்ச நோய்களுக்கு சிகிச்சை செய்வதற்கு முடியும், ஆகவே அந்த எல்.எம்.பி. கோர்ஸை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டுமென்று கோரியிருந்தேன். ஆனால் 'யூனிவர்ஸிடியை' சேர்ந்த ஒரு பெரிய மனிதர் 5 ஆண்டுகள் படித்து பட்டம் பெற்றால்தான் அவர் டாக்டராக இருக்க முடியும், அதற்கு குறைவாக படித்தால் அவர் டாக்டர் அல்ல என்று சொல்லி அதை தடைசெய்துவிட்டதாக கேள்விப் படுகிறேன். அது தவறு. ஐந்து ஆண்டுகள் படித்தால்தான் அவர் டாக்டர்



19th March 1958] [Sri N. R. Thiagarajan]

என்று சொல்லுவது சரியல்ல. அலெக்ஸாண்டர் பிளம்மிங் பென்ஸிலின் கண்டுபிடித்தார் என்றால், அவர்தான் டாக்டர், மற்றவர்களிடம் சிகிச்சை பெறக்கூடாது என்று சொல்ல முடியுமா ? சிறு சிறு நோய்களுக்கு எல்.எம்.பி. டாக்டர்கள் சிகிச்சை செய்யலாம். பெரிய நோய்களுக்கு, அல்லது பெரிய ஆபரேஷன் செய்வதற்குத்தான் பெரிய டாக்டர்கள் தேவை. ஆகவே, வைத்திய இலாகாவில் சிறு வகையிலே சேவை செய்வ தற்கு இந்த எல்.எம்.பி. டாக்டர்களை வைத்துக்கொள்ளலாம். தாலூகா தலைநகரங்களிலும் பஞ்சாயத்து போர்டு உள்ள இடங்களிலும் ஆஸ்பத் திரிகளை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து போர்டுகள், தண்ணீர் வரி, விளக்கு வரி, கல்வி வரி, என்று வாங்குவது போல், வைத்திய வரி என்ற ஒரு வரியையாவது போட்டு அதிகமான வைத்திய வசதி செய்துகொடுக்கவேண்டும். அதிலும் கிராமங்களில் அதிக மான வசதி செய்துகொடுத்தால்தான் மக்கள் நம்மை பாராட்டுவார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கு கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக குடும்ப கட்டுப்பாடு முறையைப்பற்றி நான் பேச விரும்புகிறேன். அதைப்பற்றி விரிவாக பேசவேண்டுமென்பதற்காகத்தான் இன்றைக்கு நான் பேச எழுந்தேன். குடும்பக் கட்டுபாட்டுக்காக ஜப மாலையை கொடுப்பதாக சொல்லுகிறார்கள். இந்த ஜபமாலை கொடுப்பதை எப்படி கண்டுபிடித்தார்கள் ? இருக்கும் ஜபமாலைகளே உருண்டு ஓடிக் கொண்டிருக்கும்பொழுது புதிய ஜபமாலை எதற்கு ? நான் ஜபமாலை வழங்குவதை எதிர்க்கிறேன். இயற்கை, கடவுள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு குடும்பக் கட்டுப்பாடு செய்யவேண்டும் என்று பிரசாரம் செய்வதில் பின்தங்குகிறார்கள். நமது 'சீப் விப்' கருத்திருமன் அவர்களுக்கு 1 டஜன் குழந்தை ½ டஜன் குழந்தைகளும், மந்திரி கக்கன் அவர்களுக்கு 1 டஜன் குழந்தை களும் இருக்கின்றன. பதினாறையும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டு மென்று சொல்லுவார்கள். இவர்கள் கலியாணத்தில் யார் இம்மாதிரி ஆசீர்வாதம் செய்தார்களோ ? இவர்கள் 16 குழந்தைகளையும் பெற்றுத் தான் தீருவார்கள் போலிருக்கிறது. (சிரிப்பு.) இவர்கள் வீடுகளில் போய் பார்த்தால் ஒரே குழந்தை மயமாக இருக்கிறது. கேட்டால், கடவுள் கொடுத்தார், இயற்கை என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

SRI P. G. KARUTHIRUMAN : 16 என்றால் குழந்தைகள் என்று அர்த்தமல்ல. அஷ்ட ஸித்திகள், அஷ்ட போகங்கள் என்று அர்த்தம்.

SRI N. R. THIAGARAJAN : 16 விதமான சம்பத்துக் களையும் பெறுவதுபற்றி சந்தோஷம். பதினாறு குழந்தைகளை பெற்றுவிட்டு அப்பா ! அந்த நரகத்தை எப்படி அனுபவிப்பது ? நான்கு குழந்தைகளை பெற்றுவிட்டாலே கஷ்டமாக இருக்கிறது. அதோ போய்க்கொண்டிருப்பவர் (ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் சபையிலிருந்து வெளியே போய்க்கொண் டிருந்தார்). இன்னும் எத்தனை குழந்தைகளை பெறப்போகிறார்களோ ? சட்டம் மூலமாக இதை தடை செய்யவேண்டும். ஆபரேஷன் செய்து கொள்ளுவதில் ஒன்றும் தவறில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். 2, 3 குழந்தைகள் பெற்ற பின் ஆபரேஷன் செய்துகொண்டுவிடவேண்டும். அதில் ஒன்றும் கஷ்டமில்லை. டாக்டருக்கு ஒரு ஆபரேஷன் செய்தால் இவ்வளவு ரூபாய் என்று கொடுத்துவிடலாம். சென்னையிலே 50,000 சதுர மைலுக்கு 3 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். அண்டையில் ஆந்தி ராவில் 1 லட்சம் சதுரமைலுக்கு 3 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். சென்னையில் ஒரு சதுரமைலுக்கு 600 பேர்கள் இருக்கிறோம். ஜனத் தொகை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகிறது. இதைத் தடுக்க வேண்டியது அவசியம். ஏதோ இயற்கை, கடவுள் என்ற பெயரால் ஜனத்தொகையை பெருக்கிக்கொண்டேபோவது தவறு. இயற்கையாக உற் பத்தியாகி ஓடும் நதிகளை தடுத்து மக்களுக்கு சாதகமாக செய்துகொள்ள வில்லையா ? மனிதன் இயற்கையாகத் தோன்றியபடியேதான் இருக்கிறானா? ஆடைகளால் தன்னை மறைத்துக்கொள்ளவில்லையா ? ஆகையால், இயற்கை, கடவுள் என்றெல்லாம் சொல்லாமல் குடும்ப கட்டுப்பாடு பிரசாரத்தை பகிரங்கமாகவும், தைரியமாகவும் செய்யவேண்டும், ஆப ரேஷன் மூலமாக அதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri N. R. Thiagarajan] [19th March 1958

அடுத்தப்படியாக, வைத்திய சுகாதாரத்தைச் சேர்ந்தது குடிதண்ணீர் திட்டம். என்னுடைய தொகுதியில் 5, 6 கிராமங்களில் குடிதண்ணீர் திட்டம் சம்பந்தமாக வேலைகள் நடந்துவருகின்றன. ஆனால் 3 ஆண்டுகள் ஆகியும் இது சம்பந்தமான எஸ்டிமேட்டுகள் இங்கே என்ஜினியர் ஆபீஸில் சிக்கிக்கொண்டு இருக்கின்றன. எவ்வளவு சொல்லியும் அவைகள் அந்த இடத்தை விட்டு வெளிவரவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக கவனித்து என்னுடைய தொகுதியில் குடிதண்ணீர் வசதியை துரிதமாகச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலத்தில் 52 மெம்பர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொகுதியிலும் 2 மைல் ரோடு போடுவதற்கும் புதிதாக 2 பள்ளிக்கூடங்கள் திறப்பதற்கும் வழி செய்யவேண்டுமென்று ஒரு முறை ஏற்படுத்தியிருந்தேன். அதேமாதிரி இங்கு 205 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவரவர்கள் தங்கள் தொகுதியிலே ஏதேனும் இம்மாதிரி காரியங்கள் செய்தாகவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு தொகுதியிலும் ஆஸ்பத்திரி, குடிதண்ணீர் வசதி, கல்வி வசதி இவைகளை செய்துகொடுக்கவேண்டிய நிலை ஏற்படவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன். ஜெய் ஹிந்த்.

Sri A. GOVINDASAMY: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். அமைச்சர் கக்கன் அவர்களுக்கு ஒரு டஜன் குழந்தைகள் இருப்பதாக கனம் அங்கத்தினர் சொன்னார். அவரைக் கேட்டால் ½ டஜன்தான் இருப்பதாகச் சொல்லுகிறார்.

Sri K. SATTANATHA KARAYALAR: (Temporary Chairman). That is not a point of order.

Sri S. RAMALINGA PADAYACHI: On a point of order; கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR: (Temporary Chairman). That is not a point of order.

* Sri A. A. RASHEED: Mr. Chairman, the City population has increased by leaps and bounds in the last 25 years. What was seven lakhs some 25 years ago has arisen now to 15 lakhs, whereas the number of hospitals has remained the same. There are only three hospitals—Stanley Hospital, General Hospital and Royapettah Hospital. I would, therefore, request the Government to open one more hospital for the City population. Besides, the bed strength of these hospitals which is now 12,497, is proposed to be increased by 500 in the year 1958-59. I think this is very meagre. The bed strength must be increased by at least 1,500. A tuberculosis patient is considered a potential enemy to the health of 100 healthy persons. There are many persons suffering from advanced tuberculosis and other diseases like lecomia and cancer These people are considered incurables. The Government should come forward to open a hospital for such incurables so that their last days may be spent in some comfort and in less pain. I therefore request the Government to open a hospital for incurables in the City.

I understand it is somewhat difficult to get admission into some of the Government hospitals. I also understand that sometimes



19th March 1958] [Sri A. A. Rasheed]

patients die not because of lack of treament but because the treatment was given too late. I think this should be rectified and the Government should find out whether anybody died by treatment being delayed.

Sir, there is an infectious diseases hospital run by the Corporation of Madras. The conditions there are so bad that the Government should take steps to take it over immediately. I know the decision of the Corporation. I am a Member of the Corporation. I have not stood in the way of the Government taking over the hospital. But the Corporation is adopting the dog in the manger policy in respect of this matter. Neither are they improving the hospital nor are they willing to hand it over to Government so that it could be improved. This state of affairs should be ended. Either the Government should ask the Corporation to improve the hospital or take it over themselves, if possible, even forcibly.

Sir, dispensaries and hospitals in rural areas are without doctors and nurses. This has been said a hundred times here and elsewhere. But we have not gone into the problem why they do not prefer to go to the rural areas. They do not go to the rural areas because there are no amenities and mainly because the salary paid to the doctors in the rural areas, is very meagre, so meagre that a medical graduate can earn that amount in ten days in private practice in the city. The Government should therefore increase the salary at least to Rs. 300 a month so as to attract doctors to rural areas.

The hon. Member Sri Thiagarajan referred to family planning and advocated vasectomy. I understand even in Western countries people are giving this up because of its evil after effects. I do not want to frighten people who had already had this operation but I am told that people who undergo this operation may become effeminate and their voice may also change into a shrill one. This is, I understand, the result of recent researches in Western countries. If it be so, I would request the Government to discourage people taking to this operation.

The salaries of nurses also must be increased. I think Government should not encourage the training of more number of male nurses. If at all we want them they should be employed only in three departments, namely. Venereal Diseases Department, Mental Hospital and in operation theatres. Apart from that, patients would prefer to be nursed by female nurses rather than by male nurses. I think diseases disappear even at the sight of a female nurse. Therefore we should prefer female nurses rather than male nurses.

The College of Integrated Medicine, I think, is not very popular because they award only a diploma. And they have also to study five years to get the diploma. I would therefore request Government not to spend too much money on this College and hospital.

As regards the infectious diseases that visit the rural areas once or twice every year, I think the Government should take immediate

[Sri A. A. Rasheed] [19th March 1958

action to see that what are called tropical diseases—Cholera, smallpox and bubonic plague—are eradicated once for all. If in Western countries they could do that, with some effort we could also eradicate plague in our country once and for all.

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no plague now.

SRI A. A. RASHEED : It may not be there this year. There were deaths by plague in previous years.

Another important thing is water-supply. Many of the municipalities are without protected water-supply. It is the duty of the Government to give them protected water-supply because many of the dieases we suffer from are water borne diseases. If the municipalities are not in a position to spend the money, Government should come forward and give them large sums of money as grants and loans. Regarding the Corporation of Madras, the water we are getting is half-filtered and half unfiltered. I do not know how the quality of the water could be improved by allowing unfiltered water to be let through the pipes. I understand a rapid mechanical filter has been installed but it is not working. I think the Government should also come forward to give more grants to the Corporation to improve water-supply in the City.

About drainage, the least said the better because there is no drainage system of any sort except in the city of Madras. Government should come forward to give large sums of money to the municipalities and to major panchayats to enable them to have underground drainage systems.

With these words I resume my seat, Sir. Thank you.

0-30 a.m. * SRI S. RAMALINGA PADAYACHI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரெவின்யூ மந்திரி பிரேரேபித்துள்ள வைத்திய சுகாதார மானிய கோரிக்கையை ஆதரிக்கிறேன். நம் மாநிலத்தில் 80 சதவிகித மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். ஆனால் இப்போது நகரங்களில்தான் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே வைத்திய சுகாதாரத்திற்கு கிராமங்களில் அதிகப் பணம் செலவழிக்கப்படவில்லை. ஆனால் நகரங்களில்தான் அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது. கிராம ஆஸ்பத்திரிகள் 15–16 மைல்களுக்கு ஒன்று வீதம்தான் இருக்கின்றன. அநேக கிராம ஆஸ்பத்திரிகளில் வைத்தியர்களே கிடையாது. மேலும் கிராம ஆஸ்பத்திரிகளில் தகுந்த மருந்துகளோ போதிய மருந்துகளோ கொடுக்கப்படுவதில்லை. இதுபற்றி ஆஸ்பத்திரி வைத்தியர்களிடம் கேட்டால் அவர்கள் " ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை. நாங்கள் என்ன பண்ணு வோம் ? " என்று சொல்கிறார்கள். ஆஸ்பத்திரியில் ஊசி மருந்து இல்லாத நிலையில், நோயாளிகளுக்கு ஊசிபோட வேண்டியிருந்தால், அப்போது வைத்தியர்களை " நீங்கள் 3 ரூபாய் கொடுத்தால் உங்களுக்கு ப்ரைவேட்டாக ஊசி போடுகிறோம் " என்று நோயாளிகளிடம் சொல் கிறார்கள். இந்த நிலைமையை நான் நேரில் பார்த்திருக்கிறேன். நோயாளி 3 ரூபாய் கொண்டுபோய்க் கொடுத்தால்தான் அவனுக்கு கிராம ஆஸ் பத்திரி வைத்தியர் ஊசி போடுகிறார். இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியில் இருக்கும் மருந்துகளில் ஏதாவது ஒன்றை கொடுத்து நோயாளியை அனுப்பிவிடுகிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசாங்கம் தக்க நட வடிக்கை எடுக்கவேண்டும். கிராம ஆஸ்பத்திரிகளுக்கு எல்லா அவசிய மான மருந்துகளையும் கொடுப்பதோடல்லாமல், மூடப்பட்டிருக்கும் ஆஸ்



19th March 1958] [Sri S. Ramalinga Padayachi]

பத்திரிகளுக்கும் வைத்தியர்களை நியமித்து அவைகளைத் திறக்கவேண்டு
மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 5 மைல்களுக்கு
ஒன்று வீதம் கிராம ஆஸ்பத்திரிகளை அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், பல கிராமங்
களில் தகுந்த குடிதண்ணீர் வசதி இல்லை. பல கிராமங்களில் குடி
தண்ணீர் மிகவும் மோசமானதாக இருக்கிறது. குறிப்பாக, திருச்சி ஜில்லா
வில் உடையார்பாளையம் தாலுகாவில் குடிதண்ணீர் மிக மிக மோசமான
தாக இருக்கிறது. அங்கே பூமியை 100 அடி ஆழம் வெட்டினாலும்
தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே குட்டை குளங்களிலுள்ள குடிதண்ணீர்
அங்குள்ள மக்கள் குடித்துவருகிறார்கள். அங்கேயுள்ள இந்தக் குறையை
நீக்குவதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்தத் திட்டத்தையும் நிறை
வேற்றவில்லை. அசுத்தத் தண்ணீரைக் குடிப்பதால் அங்குள்ள மக்களுக்கு
நரம்புச் சிலந்தி என்ற வியாதி வருகிறது. இது அங்கே மிகவும்
அதிகமாக இருக்கிறது. அங்கே 80 சதவிகித மக்களுக்கு நரம்புச் சிலந்தி
வந்திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் 10—15 பேர்களுக்கு நரம்புச் சிலந்தி
கள் வருகின்றன. இந்த நிலைமை மிகவும் கவலை கொடுக்கக்கூடியதாக
இருக்கிறது. அங்குள்ள மக்கள் எல்லோரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
மக்கள் கை-கால்களில் கட்டுக்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்க
ளிடம் ' அது என்ன கட்டு ? ' என்று கேட்டால் ' நரம்புச் சிலந்திக்
கட்டு ' என்று சொல்கிறார்கள். பெருவாரியான மக்களுக்கு இந்த வியாதி
வந்திருப்பதால் அங்குள்ள மக்கள் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள். இவர்களுடைய கவலையைப் போக்க அரசாங்கம் இதுவரையிலும்
எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

டாக்டரைக் கேட்டால் எங்களுக்கு ஒன்றும் தெரியாது ; தழையை
வைத்துக் கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி
நிலை இருக்கிறது. குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் போதும்
வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று சொல்கிறார்கள். கனம்
அங்கத்தினர் திரு. விசுவநாதன் அவர்கள் இந்தச் சபையில் பலமுறை
கூப்பாடு போட்டிருக்கிறார்கள். சென்ற ஐந்தாண்டுக் காலத்தில் ஒன்றும்
செய்ததாகத் தெரியவில்லை. நான் அரசாங்கத்தைக் குறை சொல்ல
வில்லை. எவ்வளவோ நல்ல காரியங்களை அரசாங்கம் செய்து வருகிறது.
ஆனால், நல்ல முயற்சி செய்தாலுங்கூட, இன்னும் நல்ல முறையிலே,
எங்கும் பயன் அடைந்ததாகத் தெரியவில்லை. நூறு, 150 அடி ஆழம்
' போர் வெல் ' வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது
என்றால், எங்கள் பகுதியில் குடி தண்ணீர் நிலைமை எவ்வளவு மோசமாக
இருக்கிறது என்பதை மந்திரி அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.
காவிரியிலிருந்தோ கொள்ளிடத்திலிருந்தோ தண்ணீரைக் கொண்டுவந்து
எங்கள் வறண்ட பகுதிகளில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க
உடனடியாக வழி வகை செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை நான்
கேட்டுக் கொள்ளுகின்றேன். எங்களுடைய திருச்சி நரகத்திற்கு தண்ணீர்
கஷ்டமென்று நகரத்திலிருந்து அரசாங்கத்திற்குப் பல மகஜர்கள் வந்திருக்
கும். எங்களுக்கும் வந்திருக்கின்றன. திருச்சி நகரத்திலே, அதிலும்
காவிரி ஓடும் பகுதியிலேயே, மக்கள் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்
படுகிறார்கள் என்று சொன்னால், அதைப்பற்றி நாங்கள் உண்மையிலேயே
கவலைப்பட வேண்டியதாக இருக்கிறோம். அந்தக் குடிதண்ணீர் கஷ்
டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறது.
இத்திட்டம் கிராமங்களுக்கு அவ்வளவு பொருத்தமாக இருக்காது ; நகரத்
தில் வேண்டுமானால் இருக்கலாம். இத்திட்டத்தைப்பற்றி கிராமப் புறங்
களில் பிரசாரம் செய்தாலுங்கூட, மக்கள் கேவலமாக நினைக்கிறார்கள்.
இது என்ன திட்டம் ? இதற்கு என் அரசாங்கம் இவ்வளவு அக்கறை
காட்ட வேண்டும் ? இது என்ன வேடிக்கையாக இருக்கிறது ? என்று
மக்கள் நினைக்கக்கூடும். ஒரு குழந்தை, இரண்டு குழந்தை மட்டும்
பெறுவதற்கு அனுமதித்துவிட்டு, அதற்குமேல் பெறுவதற்கே வழிஇல்லாமல்

செய்தால்தான் இந்தத் திட்டம் நிறைவேறும் என்று நான் நினைக்கிறேன். அல்லது மனிதர்களுக்கு இழத்தன்மையை சீக்கிரமாக உண்டாக்குவதற்கு ஏதாகிலும் மருந்து கண்டுபிடித்து நரம்பு தளர்ச்சியடைய ஒரு வழி செய்தால்தான் இத் திட்டம் நடைபெறுமேயொழிய வேறு எதனுலும் முடியாது. ஆகையால் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கிராமத்திற்கு வேண்டாம், நரகங்களுக்கு வேண்டுமானுல் செய்யுங்கள் ; அதை நான் மிகவும் வரவேற்கிறேன். இத் திட்டம் கிராமங்களுக்கு அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

10-43 a.m. * **Sri M. SELVARAJ** : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த சபை முன் வைத்திருக்கும் மருத்துவம்-சுகாதார மானியத்தின் மீது கனம் அங்கத்தினர் திரு. எ. மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மருத்துவத் துறையிலே நாம் பின் அடைந்திருக்கிறோம் என்றும், அரசாங்கத்தின் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தென்னுற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில், அந்த ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் பல நோயாளிகள், ஆஸ்பத்திரியில் போதிய இடமில்லாத காரணத்தினுல், மரத்தடியிலும் வெளியிலும் படுத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. தரையிலே தங்களுடைய துணிகளைப் போட்டு படுத்துக் கொண்டு இருக்கும் நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதைக் கண்கூடாக காண்கிறோம். இந்த நிலையை தவிர்ப்பதற்கு அவர்களுக்காக டெம்பரரி ஷெட் ஏதாவது போட்டு, படுத்துக்கொள்ள ஏதாவது படுதாக்களாவது கொடுத்து, நல்ல முறையிலே அந்த நோயாளிகளைக் கவனிக்கும்படியாக அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாநிலத்தில் வருஷா வருஷம் அம்மை நோயினுலும் காலரா நோயினுலும் பாதிக்கப்பட்டு அதிகம் பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந் நோய்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் திட்ட வட்டமான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப் பகுதிகளில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் என்று ஒவ்வொரு பிளாக்குக்கும் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதில் ஒரு டாக்டர்தான் இருக்கிறார். அவர் சுற்றுப்புறமுள்ள குறைந்தது 50, 60 கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார். வாரத்திற்கு ஒன்றிரண்டு நாள்தான் ஹெட்குவார்ட்டர்ஸில் இருக்கிறார். பாக்கி நாட்கள் டூர் போகும் நிலைமையிலிருக்கும்போது, ஹெல்த் ஸென்டரில் இல்லாத நேரங்களில், அவரைத் தேடிக்கொண்டு வரும் நோயாளிகள் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் செல்ல வேண்டியதாக ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் இன்னொரு டாக்டர் இருக்கும்படியாகச் செய்தால் கிராமப் பகுதிகளிலுள்ள நோயாளிகளுக்கு நன்மை செய்ததாகும்.

தென்னுற்காடு மாவட்டத்தில், செஞ்சி தாலூகாவில் வளத்தி என்னும் இடத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் மூன்று ஆண்டுகளாக டாக்டர் இல்லாமல், கம்பவுண்டர் மூலமாக மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. அவர் எந்த முறையில் மருந்து கொடுக்கிறார் என்பது தெரியவில்லை.

அங்கே 12 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு வான் கொடுத்திருக்கிறார்கள். அந்த வான் எந்த வேலையும் செய்யாமல் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விடப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு ஆயிரம் ரூபாய் செலவு பண்ணி அந்த வானை வாங்கியும், அதற்கு வேண்டிய டாக்டர் இல்லாமல், அது ஜில்லா ஆஸ்பத்திரியில் சும்மா இருந்து கொண்டிருக்கிறது. அதை வாங்கியதை விட அந்தத் தொகையைக் கொண்டு பல கிராமங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தியிருக்கலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

செஞ்சி தாலூகாவில் ஆனந்தபுரம் என்னும் கிராமத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு வருஷமாக டாக்டர் இல்லை. இது போல இன்னும் நாலைந்து மருத்துவ விடுதிகள், மருத்துவச்சிகள் இல்லாத காரணத்தால், மூடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஜில்லா ஆஸ்பத்திரியில் வருஷத்திற்கு எட்டு பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். குறைந்தது இருபது பேர்களுக்காவது ஆண்டொன்றுக்கு பயிற்சி கொடுத்தால் மருத்துவச்சிகள் கிடைப்பார்கள். அதன் மூலமாக இன்னும் பல கிராமங்களில் ஆஸ்பத்திரிகளைத் துவக்குவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





சுகாதாரத் துறையில் பார்க்கும்போது, தென்னுற்காடு மாவட்டத்தில், விருத்தாசலம் தாலூகாவில், ஊமங்கலம் பிர்க்காவில் தண்ணீர் குடித்தால் நரம்புச்சிலந்தி என்னும் வியாதி வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அம்மாதிரி கிராமங்களிலே குடி தண்ணீர் திட்டத்தை ஏற்படுத்தி மக்களுக்கு விரிவாகப் பயன்படும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, விருத்தாசலம் டவுன் பஞ்சாயத்து 1938-ம் ஆண்டிலிருந்து தண்ணீர்த் தீர்வை வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக வசூலித்து வந்தும், அங்கு குடிதண்ணீர்த் திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரியிருந்தும் இது வரை நிறைவேருமலிருக்கிறது. இப்பொழுது அந்த பஞ்சாயத்தில் இரண்டு லட்சம் ரூபாய் உபரியாக இருக்கிறது. அவர்கள் வைத்திருக்கும் இரண்டு லட்சம் ரூபாயோடு, அரசாங்கம் மூன்று லட்சம் ரூபாய் கடனுக அந்த பஞ்சாயத்திற்கு கொடுத்தால், ஐந்து லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை அங்கே உருவாக்க முடியும். இது சம்பந்தமாக சென்ற வருஷம் நான் இந்த சபையில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனுல் இந்தத் திட்டம் விருத்தாசலத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கும்போது மற்ற இடங்களில் குடிதண்ணீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளுவதில் 'ப்ரையாரிடி' கொடுத்து அவைகளை நிறைவேற்றியும் இருக்கிறார்கள். இதுபற்றி நான் ரெவினியூ அமைச்சரிடம் தெரிவித்து இருக்கிறேன். அவர்களும் இதைக் கவனிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்து அதனிடம் இருக்கும் இரண்டு லட்சம் ரூபாயை முன் பணமாகக் கொடுக்கத் தயாராய் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு திட்டத்தை ஆரம்பித்து நடத்திக் கொண்டே போகலாம். திட்டம் பூர்த்தியாவதற்கு மூன்று வருஷங்கள் ஆகலாம். அதற்குள் சர்க்கார், பணத்தை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆகவே தற்போது பஞ்சாயத்தினிடம் உள்ள இரண்டு லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு திட்டத்தைத் துவக்குவதற்கும், மேலும் சர்க்காருடைய உதவியை திட்டம் நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போதே அளிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தத் திட்டத்திற்காக சானிடரி எஞ்சினியர், ப்ளு பிரிண்ட் ப்ளேன் போட்டுக் கொடுத்து திட்டம் எக்ஸிக்யூட் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகையால் அரசாங்கத்தார் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றுல், பக்கத்தில் நெய்வேலித் திட்டம் பெரிய அளவில் உருவாகிக் கொண்டிருப்பதால் அதிகமான மக்கள் அங்கு வந்து குடியேறுகிறார்கள். ஆகவே இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இந்த ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை அனுமதித்து செய்து நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

ஆங்கில முறையில் இப்பொழுது நாம் வைத்தியம் செய்து கொண்டு வருகிறோம். இதனுல் வைத்தியச் செலவு ஓரளவு அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே மிகக் குறைந்த செலவில் வைத்திய வசதி அளிப்பதற்குரிய ஹோமியோபதி, சித்த வைத்தியம் போன்ற முறைகளை ரிகக்னைஸ் செய்து அதற்கு வேண்டிய உதவிகள் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தற்பொழுது டாக்டர்களுக்கும் கம்பவுண்டர்களுக்கும் குறைவான சம்பள விகிதமே இருப்பதினுல் நமக்கு அதிகப்படியான டாக்டர்களும் கம்பவுண்டர்களும் கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய சம்பள விகிதங்கள் உயர்த்தப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு டாக்டரும்

[Sri M. Selvaraj] [19th March 1958

குறைந்தது இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் இத்தகைய ஆஸ்பத்திரி யில் வேலை செய்தால்தான் அவர்களுக்கு பட்டமோ பதவியோ கன்பர் மேஷனே கிடைக்கும் என்ற ஏற்பாட்டைச் செய்யலாம். அப்படிச் செய்வது ஒருபுறமிருக்க அவர்களுடைய சம்பளத்தை எப்படியும் அதிகரிக்க வேண்டி யது அவசியம். அப்படி அதிகரிக்காத நிலையில், அரசாங்கத்தில் கொடுக் கும் பணம் தங்களுக்கு போதாது என்ற காரணத்தால், வெளியிலே ப்ரைவேட் ஆஸ்பத்திரிகளில் சேர்ந்துவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு ஊதியத்தை அதிகமாக்கி, நல்ல முறையிலே மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த முறையிலே, சுகாதார-வைத்திய மான்யங்களுக்கு நமது தோழர் கனம் அங்கத்தினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, நல்ல முறையிலே சர்க்கார் நிறைவேற்ற வேண்டுமென்றும், குறிப்பாக வைசூரி, காலரா போன்ற நோய்களினால் வருஷத்திற்கு குறைந்தது பத்தாயிரம் பேர்கள் இறந்து விடுகிறார்கள் என்ற நிலையைப் போக்குவதற்காக உருவான திட்டம் ஒன்றைத் தீட்ட வேண்டுமென்றும் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-50 a.m. * **SRI A. S. DURAISWAMI REDDIAR**: கனம் சேர்மென் அவர்களே, நமது சுகாதார மந்திரி கொண்டு வந்த மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது சுகாதாரத் திற்காக ஒதுக்கியிருக்கும் மானியம் போதாது. சுகாதார வசதி, வைத்திய வசதி எல்லாவற்றையும் அதிகரிக்க வேண்டுமென்று எல்லா அங்கத்தினர் களும் கோரியிருக்கிறார்கள். ஆனால் நமது கோரிக்கைகளை எல்லாம் நிறை வேற்றுவதற்கு பணம்தான் முக்கியமாக வேண்டும். இருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு சுகாதார வசதிகள் செவ்வனே செய்கிறார்கள். அதற்கு மேலே நாம் கோரிக்கைகளுக்கேற்ப பணம் அதிகரிப்பதற்கு வேண்டிய வழிகளைச் சொல்லவில்லை. இன்றைய தினம் அநேக இலாகாக்களில் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறார்கள். முக்கிய மாக சுகாதாரத்திற்குத்தான் அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். சுகாதார அபிவிருத்திகள் ஏற்பட்டால்தான் தேசம் முன்னேற முடியும். மக்கள் ஆரோக்கியமாக வாழ முடியும். ஆகையால் நமது சுகாதார மந்திரி அவர்கள், இந்த இலாகாவிற்கு அதிக பணம் ஒதுக்க வேண்டும் என்று நிதி மந்திரி அவர்களிடம் கேட்க வேண்டும். சுகாதார இலாகா விற்கு அதிக மானியம் வழங்குமாறு கேட்க வேண்டும். சுகாதார இலாகா அதிகமான வேலை செய்து வருகிறது. முன்காலத்தில் அடிக்கடி காலரா, ப்ளேக் முதலிய தொத்து நோய்கள் வந்து கொண்டிருந்தன. இப்போது அம்மாதிரி வராதபடி இவர்கள் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். உதாரணமாக சென்னைக்கு அடுத்த பெரியபாளையம் என்ற ஊரில் அம்மன் கோவில் இருக்கிறது. ஒவ்வொரு ஆனி மாதத்திலும் அங்கு நடக்கும் உற்சவத்தின் காரணமாக சென்னையில் காலரா நோய்கள் அதிகம் பரவி யது. இப்போது அம்மாதிரியாகக் கிடையாது. வைசூரி பரவாமலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்போது இவ்விஷயமாக எடுக்கப்படும் நடவடிக்கை பணம் குறைவினால் போதாது என்று வேண்டுமானால் சொல்லலாம். (இச்சமயத்தில் சபாநாயகர் தம் ஆசனத்தில் வந்து அமர்ந் தார்.) இப்போது சுகாதாரத்திற்காகச் செலவழிக்கிற பணம் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கிறது. சென்னை நகரம் பெருத்த ஜனத் தொகை உடையதாக ஆகிவிட்டது. அதனால் சென்னை அடுத்து எட்டு மைல், பத்து மைல்களுக்குள் உள்ள பிரதேசங்களில் அதிகமாக ஜனங்கள் குடியேற ஆரம்பித்துவிட்டார்கள். முக்கியமாக மின்சார ரயில் போக்குவரத்து வசதியுள்ள பிரதேசங்களில் ஜனப்பெருக்கம் அதிகமாகிறது. அவர்களுக்கு சுகாதார வசதி எதுவும் அந்தப் பிராந்தியத்தில் கிடையாது. உதாரணமாக சென்னைக்கு அடுத்துள்ள ஆலந்தூர் பஞ்சாயத்து போர்டும் சரி, சென்னைக்கு வடக்கேயுள்ள திருவொற்றியூர் பஞ்சாயத்து போர்டும் சரி பதினைந்து வருஷ காலமாக குடிதண்ணீர் வசதி அங்கே செய்து கொடுக்கப் பட வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி சர்க் காரைக் கேட்டுக்கொண்டும் ஒன்றும் நடக்கவில்லை. அதற்காக வேண்டி



19th March 1958] [Sri A. S. Duraiswami Reddiar]

சானிடரி இலாகா சாக்கடைக் கால்வாய் கட்ட இன்வஸ்டிகேஷனுக்காக இன்றளவும் எவ்வித விடம் முன் பணம் கட்டி வருஷம் நான்காகியும் கூட மான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னைக்கு அடுத்து மீனம்பாக்கத்திலிருந்து தாம்பரம் வரைக்கும் இப்போது புதுப்புது நகரங்கள் பல உருவாகியிருக்கின்றன. பல்லாவரம் பல ஆயிரக் கணக்கான ஜன சங்கியை கொண்ட இடம். இதற்கு பஞ்சாயத்து கிடையாது. சைதாப்பேட்டை தாலூகா என்று பெயரே தவிர தாலூகா தலைநகரம் சென்னை கார்ப்பொரேஷனில் சேர்ந்துவிட்டது. தாலூக்கா ஹெட்குவார்டர் ஆஸ்பத்திரி கிடையாது. சென்னைக்குத்தான் வரவேண்டும். இன்றைய தினம் தாம்பரம் மேஜர் பஞ்சாயத்து. ஆனால் முனிஸிபாலிட்டி யாக்கக்கூடிய ஜனத்தொகை அங்கே பெருகிவிட்டது. முனிசிபாலிட்டியாக்க வேண்டும் என்பதான கோரிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அங்கே சுகாதார வசதி கிடையாது. தண்ணீர் வசதி கிடையாது. ரோடு வசதி கிடையாது. பல்லாவரத்திலிருந்து எடுத்துக் கொண்டால் காந்தி நகர், சிவாஜி நகர், ராதா நகர், ராஜாஜி நகர் போன்ற எத்தனையோ புதுப்புது நகரங்கள் உண்டாகிவிட்டன. அங்கெல்லாம் சுகாதார வசதி ஒன்றுமே கிடையாது. சர்க்கார் பணம் செலவழிக்கக்கூடிய நிலைமையில் இல்லை யென்றால் அந்த கிராமங்களை எல்லாம் சேர்த்து பஞ்சாயத்தாக ஏற் படுத்தினால் அவர்களாவது மக்களிடத்தில் வரியாகப் பணம் வசூல் செய்து இந்த வசதிகளை எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அம்மாதிரி பஞ்சாயத்தாக ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏன் முன்வரவில்லை என்பது தான் எனக்குத் தெரியவில்லை. உதாரணமாக அங்கே விழும் நைட் சாயிலை எல்லாம் நிலங்களுக்கு எருவாக உபயோகப்படுத்தலாம். என் னுடைய தொகுதியில் சுமார் 20 கிராமங்களைத் தவிர மற்ற கிராமங் களுக்கு மின்சார வசதி பெருக்கப்பட்டிருக்கிறது. மின்சார இலாகா எவ்வளவு துரிதமாக பல பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறதோ அவ்வளவு துரிதமாக இதர இலாகாக்கள் வேலை செய்தால் நம் நாடு சீக்கிரமாக முன்னேற முடியும். இன்றைக்கு கூட ஸ்ரீ கக்கன் அவர்கள் ஒரு விளக்கை அங்கே ஏற்றி வைக்கப்போகிறார். ஆனால் ஒன்று. இப்படி மின்சாரம் வந்தும் பயனில்லை. காரணம் இவற்றை பராமரிக்க அங்கே தக்க ஏற்பாடு இல்லை. தனிப்பட்டவர்கள் தங்கள் செலவில் பராமரிக்க முடியாது, கரண்ட் சார்ஜ் கொடுக்காவிட்டால் பியூஸ் எடுத்து விடுகிறார்கள். ஆகையால் பஞ்சாயத்து உடனடியாக ஏற்பட்டால் அவர்கள் அதை மெயின் டெயின் பண்ணுவார்கள். சென்னையில் இருக்கும்படியான பல உத்தியோகஸ் தர்கள் அங்கேதான் வசிக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல் அங்கே தோல் தொழிற்சாலை, கெமிகல் பாக்டரி, எம்.ஐ.டி., ஐ.எ.எப். போன்ற பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இருந்தும் அவற்றினால் பயனில்லை. தாம்பரம் க்ஷயரோக ஆஸ்பத்திரி அங்கேதான் இருக்கிறது. இருந்தும் அங்கேயுள்ளவர்களை உடனே ஆஸ்பத்திரியிலே சேர்த்துகொள்வதில்லை. வெளியூர்களில் இருந்து வருகிறவர்கள்தாம் அதிகம். பல தொழில் ஸ்தாபனங்கள் இருந்தும் அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அங்குள்ள கிராம மக்களுடைய பொது சுகாதாரத்தைக் காப்பதற்கு பஞ்சா யத்து ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். சைதாப்பேட்டை தாலுக்கா என்றுதான் பெயர். அங்கே தாலுக்கா தலைநகர ஆஸ்பத்திரி கிடையாது என்று சொன்னேன். மொபைல் ஆஸ்பத்திரி வசதியையாவது உடனடி யாகச் செய்து கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு அதிக நன்மையாக இருக்கும். செங்கல்பட்டு ஜில்லா ஆஸ்பத்திரிக்காக அபிவிருத்தி செய்யப் போவதாக நிதி அமைச்சர் சொன்னார், அதை வரவேற்கிறேன். அதுவும் எங்கள் தொகுதிதான். அங்கே பல பல அபிவிருத்திகள் செய்யப்படுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

சென்னையில் இருந்து எங்கள் பகுதிக்கு அநேகர் குடியேறி யிருக்கிறார் கள். சென்னைக்கு ஒரு தொத்து வியாதி வந்தால் அது எங்கள் ஊருக்கும் பரவி விடுகிறது. அதே போல் எங்கள் ஊரில் ஒரு தொத்து வியாதி வந்தால் அது சென்னைக்கும் பரவி விடுகிறது. எனது தொகுதியில் கவர்னர் முதற்கொண்டு சாதாரண ஏழை விவசாயிகள் வரை வசித்து வருகிறார்கள். முன் கவர்னராயிருந்த சந்தானம் அவர்களும் எங்கள் ஊரில், அதாவது என் தொகுதியில்தான் வசிக்கிறார்கள். ஆனால் அங்கு

[Sri A. S. Duraiswami Reddiar] [19th March 1958

ஒரு வித வசதியும் கிடையாது. எலெக்ட்ரிக் டிரெயினில் அநேகம் பேர் அங்கும் இங்கும் போய் வருகிறார்கள். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் சுகாதார விஷயத்திற்காக சர்க்கார் பின்னர் பணம் செலவு செய்வதாயிருந்தாலும், உடனடியாக அங்கு ஒரு பஞ்சாயத்து போர்ட் ஏற்படுத்தினால் அவர்கள் இக்காரியங்களை எல்லாம் பார்த்துக் கொள்வார்கள். ஆகவே, உடனடி அங்கு பஞ்சாயத்து போர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு டைம் இல்லாததால் நான் கூடுதல் ஒன்றும் பேச விரும்பவில்லை. டாக்டர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். இருக்கிற டாக்டர்களையும் உபயோகப்படுத்திக் கொள்வதில்லை. காரணம், எல்லோரும் மெடிக்கல் காலேஜில் இருந்து வெளி வந்தவுடன் ப்ரைவேட் ப்ராக்டீஸ்தான் செய்கிறார்கள். காரணம், முதலில் சம்பளம் போதாது. இரண்டாவதாக அவர்கள் கிராமங்களுக்குச் செல்ல பயப்படுகிறார்கள். உதாரணமாக எனக்குத் தெரிந்த ஒருவரை தஞ்சை ஜில்லாவில் உள்ள ஒரு கிராமத்தில் டாக்டராக போட்டார்கள். அங்கு அவர் சென்று பார்த்தால், அங்கு வீட்டு வசதியும் இல்லை, தண்ணீர் வசதியும் இல்லை. முதலில் தங்கள் வசதிகளைப் பார்த்துகொண்டுதானே பிறருக்கு உபகாரம் செய்யப் பார்ப்பார்கள். ஆக, முடிவாக அவர், தனக்கு அந்த உத்தியோகம் வேண்டியதில்லை என்று அந்த அப்பாயின்ட்மென்ட் ஆர்டரை திருப்பி அனுப்பிவிட்டார்கள். நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு குடியிருப்புக்கு வேண்டிய வசதி செய்திருக்கிறோம் என்று. அது போன்ற வசதிகளை சீக்கிரம் செய்து கொடுத்தால் தான் கிராமங்களுக்கு நன்மை ஏற்படும். ஆகவே, கூடிய சீக்கிரம் சென்னைக்கு அடுத்தபடி ஜன நெருக்கமுள்ள எங்கள் தொகுதிக்கு சுகாதார வசதியும், தண்ணீர் வசதியும் செய்து கொடுக்கும்படி சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன். டிரெயினேஜ்க்கு; இன்வஸ்டிக்கேட் செய்து அனுப்பும்படி எழுதியும் ஒன்றும் செய்யப்படவில்லை. எல்.டி. வொர்க்ஸ்க்காக 40,000 ரூபாய் கிரண்ட் வாங்கி குழாய்கள் போட்டிருக்கிறார்கள். பன்னிரண்டு டாப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த என்ஜின் மோட்டார் எரிந்துபோய்விட்டதால், தண்ணீர் சப்ளை செய்ய முடியவில்லை. ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன், சுகாதார வசதிக்காக கூடுதல் பணம் ஒதுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

11-00 a.m. *SRI A. SENAPATHI GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பொது சுகாதார மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்கள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று நகரங்களில் ஆஸ்பத்திரிகள் இருந்தும்கூட ஆஸ்பத்திரிகளில் போதுமான அளவு இடம் இல்லாமல் இருக்க, படுக்க இடமில்லாமல் திண்ணைகளிலும் மற்ற வெளி இடங்களிலும் இருந்து கொண்டுதான் வைத்தியம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக, தாராபுரம் டவுனில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. சர்க்கார் ஆஸ்பத்திரி என்ற பெயரால் அது 20 வருஷமாக நடந்து வருகிறது. ஆனால் அதைப் பார்த்தால் ஒரு திருவிழாவிற்கு சத்திரத்தில் வந்து கூட்டம் தங்கி யிருப்பதுபோல் உள்ள நிலையில்தான் அங்கு ஆஸ்பத்திரிகளில் நோயாளி மக்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஊர்களிலும் ஆஸ்பத்திரிகளுக்கு போதுமான கட்டிட வசதியில்லை. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், புதிதாக ஆஸ்பத்திரிகள் கட்டுவதைவிட இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளை விரிவாக கட்டி, என் பல ஊர்களுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய நகரத்தில் இருந்தால் நகரத்தில் உள்ளவர்களுக்கும் சுற்றுப்புற கிராமங்களில் இருப்பவர்களுக்கும் மிகவும் சௌகரியமாக இருக்கும். ஆக, அப்படி நகர மக்களும் கிராம மக்களும் வந்து வைத்தியம் செய்து கொள்வதற்குப் போதுமான இட வசதி இருந்தால், பக்கத்தில் புது ஆஸ்பத்திரி ஏற்படுத்த வேண்டிய அவசியமே யில்லை. ஆகவே, இப்பொழுது இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளை முதலாவதாக நல்ல முறையில் விஸ்தரிக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். தாராபுரத்தில் ஒரு ஹெட்குவார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஒரு பிரசவ விடுதி கூட கிடையாது. பிரசவத்திற்கு என்று ஒரு சிறிய அறை மாத்திரம்தான் இருக்கிறது. அங்கு பிரசவத்திற்கு ஒரு தாய்



19th March 1958] [Sri A. Senapathi Gounder]

போனால் அதற்குள்ளே சென்று டாக்டர் குழந்தையை எடுக்கக்கூட முடியாத நிலையில் இருக்கிறது, அது. ஓரிரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அதை ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20,000 ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாவதாக அதைக் கட்டும்படியாக அரசாங்கம் ஒரு உத்தரவு இட்டார்கள். பிறகு, சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பணம் செலவழிக்கக் கூடாது என்று அதற்கு தடை போடப்பட்டது. இந்த சமயத்தில் அதை நான் ஏன் கூறுகிறேன் என்றால், கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் சமீபத்தில் அதை நேரில் பார்வையிட்டு, பொது சுகாதார மான்யத் தொகையில இருந்து அந்தப் பணத்தைக் கொடுத்து அதை கட்டி விடுவதாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன். தாராபுரம் நகரம், கோவை ஜில்லாவிலே முதன் முதலாக முனிசிபாலிட்டியாக, அதாவது பழங்கால முனிசிபாலிட்டி என்ற பெயர் பெற்றதாகும். இந்த இடத்தில் இன்று, குடிதண்ணீர் திட்டமோ அல்லது சாக்கடைத் திட்டமோ ஒன்றும் கிடையாது. அதற்காக பல வருஷங்களாக முயற்சி செய்து வருகிறோம். அதற்கு அதிக செலவு கூட அவசியமில்லை. சுருங்கிய செலவில் அதை முடித்து விடலாம். அருகாமையில் அமராவதி நதி ஓடுகிறது. ஆகவே, அதிகம் செலவு இல்லாமல் எட்டு, ஒன்பது லட்சம் ரூபாயில் திட்டமிட்டு அதைச் செய்துவிடுவதாக எஸ்டிமேட் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து அவர்களே நேரில் பார்த்து ஒரு காரணத்தினால் அதற்கு அவசரமாக ஒரு பரிகாரம் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய உத்தரவை இட வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். மேலும் பல கிராமங்களில் குடிதண்ணீர் திட்டத்திற்காக பல லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்துவருகிறோம். அதிலும் ஆற்றின் அருகாமையில் உள்ள கிராமங்களில் அநேகமாக கிணறுகள் வெட்டுவதே யில்லை. காரணம், ஆற்றுத் தண்ணீரை எடுத்துக் குடித்துக் கொள்ளலாமே என்ற முறையில் அதை விட்டு விடுகிறார்கள். அது சில சமயங்களில் சௌகரியமாக இருந்தாலும்கூட, சில சந்தர்ப்பங்களில் காலரா போன்ற தொத்து நோய்கள் வந்துவிட்டால் அது தொடர்ச்சியாக பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கும் ஆற்றுத் தண்ணீர் மூலமாக பரவி விட ஏதுவாகிறது. ஆகவே குடிதண்ணீர் திட்டத்தை ஒரு கிராமத்தில் ஆரம்பித்து ஐந்தாறு கிராமங்களுக்கு வரிசையாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்திற்கு ஏற்பாடு செய்து ஆற்றுத் தண்ணீரைச் சுத்தப்படுத்தி பல கிராமங்களுக்கும் ஆற்றோரம் உள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்தால் அநேக வித தொத்து நோய்களைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேலும் நம் பிரதம சுகாதார நிலயங்களில் இப்பொழுது டாக்டர்களுக்கு குடியிருக்க வீட்டு வசதி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அது மிக மிக அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் டாக்டர்கள் அங்கு வசிக்க முடியாது. மேலும் ஆரம்பத்தில் புதிதாக படித்து வந்த டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்புவதை விட ஒரு பத்து வருடம் அனுபவம் உள்ள டாக்டர்களை கட்டாயப்படுத்தி நீங்கள் இரண்டு வருஷம் கிராமத்திற்குச் சென்று சேவை செய்துவிட்டு வாருங்கள் என்று அனுப்பினால் மிகவும் நன்றாக இருக்கும். படித்து வெளியே வரும் மாணவர்களை கிராமங்களுக்கு அனுப்ப நினைத்தால், அவர்கள் எங்களுக்கு பணம் வேண்டாம், வசதி கூட தேவையில்லை, நாங்கள் கற்றுக் கொண்ட படிப்பு வீணாகி விடும், கிராமங்களில் எங்களுக்கு பலதரப்பட்ட நோயாளிகளைப் பார்க்க முடியாது, ஆகவே எங்கள் அனுபவத்தைக் கெடுத்து விடாதீர்கள் என்று அவர்கள் கிராமங்களுக்கு செல்ல பயப்படுகிறார்கள். ஆகவே, ஒரு பத்து வருஷம் சென்னை போன்ற இடங்களில் அவர்களுக்கு பயிற்சி கொடுத்துவிட்டு பிறகு அவர்களைக் கட்டாயப்படுத்தி ஒரு இரண்டு வருஷங்களாவது கிராமங்களுக்குப் போய் சேவை செய்துவிட்டு வாருங்கள் என்று அனுப்புவதுதான் நல்லது. இவர்களுக்கு கூடுதலாகக் கொடுக்கும் தொகையும் வரவேற்கத்தக்கது. ஆகவே, அந்த முறையில் அவர்களுக்கு வீட்டு வசதியுடன் வேறு வசதிகளும் செய்து

[Sri A. Senapathi Gounder] [19th March 1958

கொடுத்து அனுபவம் உள்ள டாக்டர்களையே கிராமங்களுக்கு அனுப்புமாறு
11-16 a.m. நான் சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன். மேலும் நமது இந்திய வைத்திய முறைகளில் அநேகமாக எந்தவித முன்னேற்றத்தையும் காணோம். மேனாடுகளில் எல்லாம் பலவிதமான நூதனமான ஆராய்ச்சிகள் எல்லாம் செய்து பலவிதமான மருந்துகள் எல்லாம் அனுப்புகிறார்கள். ஆனால் இந்திய வைத்தியம் அப்படியேதான் இருக்கிறது என்று தெரிகிறது. அதற்கு புத்துயிர் அளிக்க வேண்டும். உதாரணமாக பழனி தாலுகாவில் பழனி மலையில் பல விதமான மூலிகைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அங்கு பல வைத்தியர்களும் இருக்கிறார்கள். அங்கு ஒரு சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தி அந்த மருந்துகளை எல்லாம் ஆராய்ச்சி செய்து உபயோகித்தால் மிக நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அதே மாதிரி சித்த வைத்தியத்திற்காக ஒரு ஆராய்ச்சி நிலையத்தையும் ஏற்படுத்துமாறு இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக கிராமங்களில் இந்த மருத்துவ சிகிச்சை அவசியமாகிறது. ஆயிரம் ஜனத்தொகையுள்ள கிராமத்திற்கு ஒரு மருத்துவ நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எங்கள் நகரத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குள்ள திட்டத்தை இந்த ஆண்டிலேயே நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்றும், ஆஸ்பத்திரிகளை விஸ்தரிப்பதற்கு அதிகமான பணம் ஒதுக்கி அதற்கு வேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறும் கனம் சுகாதார அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு சபாநாயகருக்கு நன்றியும்செலுத்திக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I have two announcements to make. At a meeting of the Business Advisory Committee held yesterday, it was decided that the Assembly will not meet on the 9th April.

9-ம் தேதி அஜெண்டாவிலுள்ள விஷயங்கள் ஏப்ரல் 8-ம் தேதி மாலை 3-லிருந்து 5-வரை எடுத்துக்கொள்ளப்படும். அதேபோல மார்ச் 25-ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 3–30 லிருந்து 5–30 வரை சபை கூடி Indian Stamps Amendment Bill, Madras Children's Amendment Bill இவைகளை எடுத்துக்கொள்ளும். இந்த மாறுதல் பின்னால் கடிதம் மூலம் அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்படும்.

*SRI M. JAGANNATHAN: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மருத்துவ பகுதிக்காக ஏறக்குறைய 418 லட்சம் ரூபாயும், பொது சுகாதாரத்திற்காக ஏறக்குறைய 94 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பதை கண்டு ஓரளவு மகிழ்ச்சி அடைகிறேன். 1946-ம் ஆண்டிலிருந்து பார்ப்போமானாலும் ஒவ்வொரு ஆண்டிலும் இந்தத் துறையில் ஒதுக்கப்பட்ட பணமானது அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. ஆனால் இப்படி அதிகபட்சமான தொகை மருத்துவ துறைக்கும், பொது சுகாதாரத் துறைக்கும் நமது மாநில மக்களுக்கு வேண்டி ஒதுக்கப்பட்டிருந்தும், அந்த அளவுக்கு பலன்கள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிதா என்று பார்த்தால் உண்மையில் பெருமைப்படக்கூடிய அளவில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக தெரியவில்லை. எதற்காக இவ்வளவு பணம் மருத்துவத்திற்காகவும் பொது சுகாதாரத்திற்காகவும் ஒதுக்கப்படுகிறது என்று பார்த்தால், மக்களுடைய ஆயுள் காலத்தை "லைப் ஸ்பான்" நீட்டுவதற்கும், நோயை தடுத்து மரண விகிதங்களை தடுப்பதற்கும் வேண்டிதான் இந்த மருத்துவ பணியும், சுகாதார பணியும் சர்க்காரால் மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக நம்முடைய அரசாங்கம் அதிகபட்சமான தொகையை ஒதுக்கி மக்களுடைய பொது சுகாதாரத்தையும் மருத்துவ வசதிகளையும் பூர்த்தி செய்து வைப்பதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து பார்த்தால் நம்முடைய மாகாணத்தில் மக்களுடைய ஆயுட்காலம் விரும்பத்தக்க அளவில் அவ்வளவு அதிகமாக விருத்தி அடைந்துவிட்டதாக சொல்லுவதற்கு இல்லை. இம்மாதிரியாக நமது மாகாணத்தில் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அபிவிருத்தி அடையாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மையில் நம்முடைய சர்க்கார் எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய காரணத்தைத்தான் சொல்ல முன்வருகிறார்கள். அதாவது நம்



19th March 1958] [Sri M. Jagannathan]

மிடத்தில் நிதி நிலைமை சரியானபடி இடம் கொடுக்கவில்லை, என்ற காரணத்தால், இந்த சபையில் பல அங்கத்தினர்களாலும் சொல்லப் படுகிற குற்றச்சாட்டுகளாகிய டாக்டர்கள் பற்றாக்குறை, ஆஸ்பத்திரி பற்றாக் குறை, இந்த பற்றாக்குறைகளை எல்லாம் நம்மால் ஓரளவுக்கு சமாளிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கெல்லாம் தங்களது நிதி நிலைமையை காட்டி மக்களுக்குச் செய்யக்கூடிய வசதிகளை சர்க்கார் உதாசீனம் செய்து, இவ்விதம் அலட்சியப்படுத்திவிடுகிறார்கள். இந்த முறையில் சோவியத் ரஷ்யாவை பார்ப்போமானால் அங்கிருந்து நாம் நல்ல பாடங்களை படிக்க முடியும். நான் சோவியத் ரஷ்யாவை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் அங்கும் நமது நாட்டைப்போலவே முதல் ஐந்தாண்டு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டு என்று ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சோவியத் ரஷ்யா முதல் நிலைமை அடைந்து வருகிறது. அங்கு இம்மாதிரியான முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் மருத்துவத் துறையிலும், சுகாதாரத் துறையிலும் முன்னேற்றமடைந்து வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் இந்த முன்னேற்றம் சாத்தியமாயிருக்கும்பொழுது நம்முடைய நாட்டில் சாத்தியமாகவில்லை. இந்தததுறையில் கணிசமான அளவுக்கு மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க முடியவில்லையே ? இதற்கு காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தார்களா ? நான் ஒரே ஒரு காரணத்தை குறிப்பிட விரும்புகிறேன். சோவியத் ரஷ்யாவில் சோஷயலிஸ பாணியில் சமுதாயம் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டுக்கொண்டு சும்மா இருந்துவிடவில்லை. சோஷியலிஸத்தை நடைமுறையில் கொண்டு வந்தார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் சோஷியலிஸம் என்று சொல்லப்படுகிறதே ஒழிய நடைமுறையில் செயலளவில் சோஷியலிஸத்தை காண்பதற்கு முடியவில்லை. நிதி நிலைமை குறைவாக இருக்கிற காரணத்தால் மருத்துவ வசதிகளை அதிகரிக்க முடியவில்லை, அதனால் நோயை தடுக்க முடியவில்லை, அதனால் ஆயுட் காலத்தை நீடிக்க முடியவில்லை என்று அரசாங்கம் சொல்லுகிறது. இம்மாதிரியான சமாதானத்தை, சாக்குப்போக்கை சொல்லத்தான் வருகிறார்களே தவிர இங்கு இருக்கின்ற நில முதலாளிகளையும், நிலப் பிரபுக்களையும், பெரிய நிலச்சுவான்தார்களையும், மில் முதலாளிகளையும், பெரிய பஸ் முதலாளிகளையும், கோடீஸ்வரர்களையும், லட்சாதிபதிகளையும் கட்டுப்படுத்தி அவர்களிடம் நேரடியாக வரிகளை போட்டு அவர்களிடமிருந்து நிறைய பணத்தை எடுத்து மக்களுக்கு வேண்டிய இந்த மருத்துவ பணிகளை, சுகாதார வசதிகளை சர்க்கார் ஏன் செய்து கொடுக்க முன்வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். சோஷியலிஸ சமுதாயம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. டயரக்ட் டாக்ஸ் மூலம் அதிகமான பணத்தை திரட்டி, இம்மாதிரியான துறைகளில் மக்களுடைய வசதிகளை பெருக்க முடியும். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கு ஏறக்குறைய 13 லட்சம் ரூபாய் மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிகள் அபிவிருத்திக்காகவும், 11 லட்சம் ரூபாய் தாலூகா தலைமை நிலைய ஆஸ்பத்திரிகளை விருத்தி செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிகள் எல்லாம், எனக்கு முன்னால் காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசிய அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னதுபோல் "கடலில் பெருங்காயம் கரைப்பது" போலத்தான் இருக்கிறது. மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இந்த ஒதுக்கப்பட்ட நிதி இல்லை என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போதுள்ள தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளை எடுத்துப்பார்த்தால் அவைகள் எல்லாம் நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றனவா என்று பார்ததால் அந்த ஆஸ்பத்திரிகள் மக்களுக்கு மருத்துவ வசதிகள் செய்துகொடுக்கக் கூடிய நிலைமையில் இல்லை. காரணம் என்னவென்றால் அங்கிருக்கின்ற நிர்வாக திறமைக் குறைவுதான். ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் ஒரு ("அட்வைஸரி கமிட்டி") ஆலோசனைக் குழு இருந்து வருகிறது. இந்த குழு சரியானபடி அடிக்கடி சந்தித்து ஆஸ்பத்திரிகளிலுள்ள நிலைமைகளை பரிசீலனை செய்வது கிடையாது. அப்படியே அவர்கள் சொன்னதை யெல் 11-20 a.m.
லாம் வேண்டாம், சில சிபாரிசுகளையாவது, அதிகாரிகளோ, அரசாங்கமோ ஒப்புக்கொண்டு செயல்முறையில் கொண்டு வந்து நிலைமைகளை

[Sri M. Jagannathan] [19th March 1958

அபிவிருத்தி செய்ய முன்வரவில்லை. நாமும்தான் ஒவ்வொரு ஆஸ்பத்திரி யிலும் பார்க்கிறோம். நோயாளிகளுடைய நிலைமை மிக மிகக் கேவலமாக இருக்கிறது. ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் நோயாளிகளுக்கு படுக்கை வசதிகள்—பெட் ஸ்டிரெங்த்—மிக மிகக் குறைவாக இருக்கிறது. அவர் களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மிக மிகக் கேவலமான—மலிவான விலையில் கிடைக்கக்கூடிய—மருந்தாக இருக்கிறதே தவிர, நோய்களைப் போக்க தேவையான நல்ல மருந்துகள் ஆஸ்பத்திரிகளில் கொடுப்ப தில்லை. அங்குள்ள நோயாளியைப் பார்க்கிறோம். ஆஸ்பத்திரிகளின் தாழ்வாரங்களிலும், தரையிலும் படுத்துக் கொண்டிருக்கிறார்கள், சரியான படுக்கை வசதி கிடையாது. இதை யெல்லாம் நான் எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் சர்க்கார் மருத்துவத் துறையிலும், பொது சுகாதாரத் துறையிலும் மக்களுக்கு வேண்டியதைச் செய்வதில் அவர்கள் தவறிவிட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டுப் பேசுவதற்காகத்தான்.

அதேபோல, நம் மாநிலத்திலே, கொள்ளை நோய்களுடைய தொந் தரவைப்பற்றி இந்த சபையிலே அடிக்கடி பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. அதைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்திலே இருக்கின்ற இந்த கொள்ளை நோய்கள், தொத்து நோய்கள் இவைகளை நாம் பரிசீலனை செய்து பார்த்தால், எல்லா வியாதிகளையும் விட மிகக் கொடுமையானது, மக்களுக்கு உயிர் ,சேதம் விளைவிக்கக் கூடியது காச வியாதி—ட்யூபர்குலோஸிஸ் என்று ஆங்கிலத்தில் சொல் வார்கள். இந்த வியாதி நம் மாநிலத்தில் எவ்வளவு மக்களை பாதிக்கிறது என்று பார்க்க வேண்டுமானால், சர்க்காரே வெளியிட்டிருக்கிற "இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டம்—கருத்துக் கோவை" என்ற புத்தகத்தில் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது : "காச நோயால் நிமிஷத்துக்கு ஒருவர் வீதம் மடிவதாகவும், 150 பேருக்கு ஒருவர் வீதம் இந்த நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன" என்று. இம்மாதிரி நம் மாநிலத்திலே இந்த காச வியாதி நிமிஷத்திற்கு ஒரு நபரை கொன்று கொண்டிருக்கிறது என்ற உண்மையை சர்க்காரே சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே இந்த காச நோயைத் தடுக்க நல்ல பல நட் வடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாகப் பார்த்தால், நம் தாம்பரத்தில் இருக்கிற காச நோய் ஆஸ்பத்திரி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அங்கே மக்களுக்கு வேண்டிய அளவுக்கு படுக்கை வசதிகள் கிடையாது. ஒரு சாதாரண ஒரு கிராமவாசி காச நோயால் பீடிக்கப்பட்டு அந்த ஆஸ்பத்திரியில் சேர வேண்டும் என்று விண்ணப் பித்தால் அவன் இறந்துபோன பிறகு ஆஸ்பத்திரியில் சேர அனுமதிச் சீட்டு கிடைக்கிறது என்றால், அதைப்பற்றி நாம் பெருமைப்படுவதற் கில்லை. ஆகவே, சர்க்கார் காச வியாதியைத் தடுக்க வேண்டுமென்று செயலாற்றத்தக்க எண்ணத்தோடு தாம்பரம் ஸானடோரியத்தையும் இன்னும் பல காச நோய் ஆஸ்பத்திரிகளையும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தென் ஆற்காடு ஜில்லாவிலே, தனியார் முயற்சியினாலே ஒரு காச நோய் ஆஸ்பத்திரி துவக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு போதிய மானியம் கொடுக்க வேண்டும் அல்லது சர்க்காரே முன் வந்து எடுத்து நடத்த வேண்டுமென்றும் கனம் ரெவினியு அமைச்சரிடத்திலே கேட்டிருக்கிறோம். அதைக் குறித்து சர்க்கார் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்க வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் ஆற்காடு ஜில்லாவிலே, குஷ்ட நோய்—அதாவது இன்ஸிடென்ஸ் ஆப் லெப்ரஸி—அதிகமாக இருக்கிறது. உலகத்திலே இந்த இடத்தில் தான் அதிகம் என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஆகவே, அந்த வியாதியை யும் அதிகம் பரவாமல் தடுக்க—அநேக லெப்ரஸி கிளினிக்குகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டு, அந்தத் துறையிலே நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஹிந்த் குஷ்ட் நிவாரண் சங் என்ற அந்த சங்கத்திற்கு அதிகமாக மானியம் கொடுத்து, அந்த ஜில்லா மக்களின் வாழ்வு பிணியற்ற வாழ்வாக மறுமலர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



19th March 1958]

*SRI S. KHADIR SHERIFF : கனம் சபாநாயகர் அவர்களே, 11-
நமது சுகாதார அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரிக் a.m
கிறேன். இருந்தபோதிலும், இப்போது சுகாதாரத்திற்கு ஒதுக்கியிருக்கும் தொகை அதிகக் குறைவாக இருக்கிறது. அதை இன்னும் டபிள் ஆகச் செய்யும்படியாகச் செய்து மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தேவையான பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம் சர்க்கார்—மக்கள் சர்க்கார்—மக்கள் நன்றாக வாழ வேண்டும், அவர்கள் ஜோஷலாக இருக்கவேண்டும் என்று நம்முடைய சர்க்கார் நினைக்கிறார்கள். அதேபோல இப்போது சர்க்கார் கவனம், ஒவ்வொரு வில்லேஜிலும் ஆயிரம் பேர், ஐந்நூறு பேர் இருந்தால், அவர்களுக்கு நன்றாகப் படிப்புக் கொடுக்க வேண்டும் என்று எந்த வித மாக நினைக்கிறார்களோ, அதே போல விவசாயிகளுக்கு, ஏழை மக்களுக்கு தேவைகள் இரண்டு—வயிற்றுக்குச் சாப்பாடு, அடுத்தபடியாக தன்னுடைய சுகாதாரம். ஏழை மக்கள் சுகமாக இருந்தால் தேசம் முன்னேறு வதற்குப் பாடுபடுவார்கள். அதற்காக நான் என்னுடைய சிறு அபிப் பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம் நாடு முன்னேற வேண்டுமானால், ஒவ்வொரு வில்லேஜிலும், ஆயிரம் ஜனத்தொகை இருந்தால் ஒரு டிஸ்பென்ஸரி என்று ஏற்பாடு செய்தால் மக்கள் சௌகரிய மாக இருப்பார்கள். . நகரத்தில் டிஸ்பென்ஸரிகள், ஹாஸ்பிடல்கள், பிரைவேட் ஹாஸ்பிடல்கள் எல்லாம் இருக்கின்றன. நகரத்தில் உள்ளவர்கள் பணம் பெற்றவர்கள் சௌகரியமாகப் பார்த்துக்கொள்ள வசதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு வில்லேஜிலும் ஆஸ்பத்திரி இல்லாமல் பாடுபடுகிறார்கள். அவர்கள் நன்மைக்கு வேண்டியவற்றைச் செய்ய கடமைப் பட்டிருக்கிறோம். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் ரொம்பக் குறைவு. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் டாக்டர்கள் குறைவு, டாக்டர்கள் குறைவு, அதனால் டிஸ்பென்ஸரி திறக்க முடியவில்லை என்ற குறை ·இருக்கிறது. வாஸ்தவம்தான். இருந்தாலும் பத்து வருஷங்களுக்கு முன்னே, டாக்டர்கள் எல்.எம்.பி. படித்து உடனே டாக்டர் வேலைக்கு வந்து கொண்டிருந்தார் கள். இப்போது எம்.பி.,பி.எஸ். படிக்க ஆறு வருஷம் ஆகிறது. இன்றைக்கு டாக்டர்கள் அநேகமாகக் கிடைப்பதில்லை. என்னுடைய தாழ் மையான அபிப்பிராயம் மறுபடியும் இந்த மூன்று வருஷ படிப்பை வைத்து அதைப் படித்தவர்களைக் கொண்டு ஒவ்வொரு வில்லேஜிலும் டாக்டர்கள் அனுப்பினால் மக்களுக்கு ரொம்ப சௌகரியமாக இருக்கும். அதனால் மக்கள் நன்றாகப் பாடுபடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இரண்டாவது இப்போது சில டாக்டர்கள் படித்து விட்டு வந்தபோதி லும், சர்க்கார் உத்தியோகம் செய்வதற்கு ஆசைப்பட்டுக்கொண்டு வந்த போதிலும், அவர்களுக்கு ஊதியம் குறைவாக இருப்பதால், சிறிய வில் லேஜில் வேலை செய்ய இஷ்டப்படாமல், ஒரு மாதம், இரண்டு மாதம் வேலை செய்தவுடன் வெளியே போய்விடுகிறார்கள். அவர்கள் ஐந்து வருஷப் படிப்பு படித்துவிட்டு வெளியே வந்தவுடனே, நம் சர்க்கார் அவர்களுடைய கஷ்டத்திற்குத் தகுந்த ஊதியம் கொடுத்தால், அவர்கள் மக்களுக்குச் சேவை செய்வார்கள் என்று நம்புகிறேன். டாக்டர்களை ஒவ்வொரு வில்லேஜிலும் போட்டவுடன் அவர்களுக்கு வீட்டு வசதி, மற்ற வசதிகள் ஒன்றும் கொடுப்பதில்லை. அவர்களுடைய சம்பளமும் கம்மி. எத்தனை டாக்டர்கள் போட்டாலும் போய் விடுகிறார்கள். உயிரைக் காப் பாற்றுபவர்கள் டாக்டர்கள். அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து அவர்களுக்கு வேலை கொடுத்தால், அவர்கள் நலமாக வேலை செய்வார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

எங்கள் ஆற்காடு டவுனிலே 27,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்த இடத்தில் சாதாரண டிஸ்டிரிக்ட் டிஸ்பென்ஸரி ஒன்றுதான் இருக்கிறது. அதனால் மக்களுக்குச் சௌகரியம் கிடையாது. அங்கு ஒரு மெடர்னிடி வார்டு ஒன்றைக் கட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கும் டிஸ்பென்ஸரிக்கு கல் நாட்டியது கவனம் இருக்கும் என்று நினைக்கிறேன். உடனடியாக ஆற்காடுக்கு 20 பெட்டுகள் இருக்கும்படியான ஒரு மெடர்னிடி வார்டு கட்டினால் சௌகரியமாக இருக்குமென்று நம்புகிறேன். மேலும் ஆற்காட்டைச்சுற்றி 36 கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களில் எந்த சௌகரியமும்

கிடையாது. டெலிவரி டைமில் பெண்கள் கஷ்டப்படுகிறார்கள். போனால், ராணிப்பேட்டை, விஷாரம் எங்காவது போகவேண்டும். குறைந்தது பத்து மைல் தூரம் இருப்பதால் இந்த ஊரில் டிஸ்பென்ஸரி கட்டும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேலூரில் கவர்ண்மெண்ட் ஹாஸ்பிடல் இருக்கிறது. அது ஒரு பெரிய ஹாஸ்பிடல். அங்கு இப்போது ரொம்ப திறமையான டி.எம்.ஓ. வந்திருக்கிறார். மக்களுக்கு ஆர்வத்துடன் பாடுபடுகிறார். மக்களுக்குச் சேவை செய்வதில் ரொம்ப ஆர்வமுள்ளவராக இருக்கிறார். அதிகப்படியான பேஷண்டுகளுக்கு சிகிச்சை கொடுக்க இடம் இல்லாமல் தவிக்கிறார். உடனடியாக, இது ஒரு பெரிய டவுன் ஆக இருப்பதனால், அந்த சர்க்கார் ஆஸ்பத்திரியில் தேவையான கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தால் மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். அடுத்த இடத்தில் போனால் பணம் இல்லாமல் சிகிச்சை செய்துகொள்ள முடியாது என்ற நிலைமை இருப்பதனால், இன்னும் வேண்டிய இடத்தைக் கொடுத்துக் கட்டிடங்களை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஆற்காடு பெரிய டவுன். கிட்டத்தட்ட 27,000 மக்கள் அங்கே இருக்கிறார்கள். அந்த இடத்திலே சாதாரண டிஸ்பென்ஸரிதான் இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டார் மானேஜ்மெண்ட் செய்வதனால் சௌகரியக் குறைவாக இருக்கிறது. அதை அரசாங்கமே எடுத்துக் கொண்டு நடத்தினால் மக்களுக்கு சௌகரியம் கிட்டுமென்று நினைக்கிறேன். இப்பொழுது எங்கள் டவுனில் சுகாதாரக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. வயதானவர்களுக்கும் தெரியாத விதத்தில் ஒரு வியாதி வந்தது. அது அம்மை என்று பெரிய வைத்தியர்களுக்கே தெரியவில்லை. ஆறு அல்லது ஏழு மாத காலம் தொந்தரவு கொடுத்தது. கடவுளுடைய கிருபையால் இப்பொழுது குறைந்துவிட்டது. சுகாதாரத்தைக் காப்பதற்காக, ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை மக்களுக்கு அம்மை குத்துவதற்காக அனுப்புகிறார்கள். அம்மை ஊசி போட்டுக்கொள்ள மாட்டேன் என்று மக்கள் சொல்லுகிறார்கள். ஊசி போட்டுக்கொள்வதற்கு பயப்படுகிறார்கள். ஆகவே சுகாதார இலாக்கா ஆபீசர்களோடு ஒரு போலீஸ் அதிகாரியையும் கூட அனுப்பினால் அவர்கள் பயந்து ஊசி போட்டுக்கொள்வதற்கு சௌகரியமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் டவுனில் சுகாதாரக் குறைவு இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ தத்தர் அவர்கள் எங்கள் டவுனுக்கு வந்தார்கள். பப்ளிக் பஸ் ஸ்டாண்டிற்குப் பின்னால் ஹரிஜன காலனி பக்கம் சாக்கடை மிகவும் மோசமாக இருப்பதை தன் கண்ணால் பார்த்தார். சாக்கடையை நன்றாகக் கட்டும்படி கலெக்டருக்கு உத்தரவு போட்டார்கள். உத்திரவு போட்டு இரண்டு வருஷம் ஆகிவிட்டது. இது வரையிலும் சாக்கடை கட்டப்படவில்லை. சமீபத்தில் ஸ்ரீ தத்தர் அவர்கள் அங்கு வருவதாகக் கேள்விப்பட்டு, சாமான்கள் எல்லாம் வந்து விழுந்தன. ஆனால் அவர் "புரோகிராம் Cancel" ஆனதும் சாமான்களை எல்லாம் திரும்பத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஆகவே, அங்கேயிருக்கும் அதிகாரிகளிடம் சொல்லி சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு வாரத்திற்கு முன்பு வந்தவாசி தாலூகாவிற்குப் போயிருந்தேன். அந்த இடத்தில் குடிப்பதற்கு ஜலம் கேட்டதின் பேரில் ஒரு கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்தார்கள். அங்கே மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மண்ணோடு கலந்த தண்ணீரைக் கொண்டுவந்து வைத்தார்கள். போன ஐந்தாண்டுத் திட்டத்திலேயே குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்த ஐந்தாண்டு திட்டத்திலாவது அந்த ஸ்கீமை உடனடியாகச் சேர்த்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு முக்கியமானது குடி தண்ணீர். குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்களும் அங்கே வந்து பார்த்ததாக அங்கேயுள்ள மக்கள் சொன்னார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்த ஸ்கீமை சேர்த்துக்கொண்டு அதை நிறைவேற்றவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக சில அங்கத்தினர்கள் தொத்து வியாதியைப்பற்றிச் சொன்னார்கள். அது மக்களுக்கு அருவருப்பைத் தருகிறது. வாஸ்தவம் தான். ஏழை மக்கள் சுகாதார வசதியில்லாமல் வெளியில் கஷ்டப்படுகிறார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய், அவர்களுக்கு வேண்டிய சிகிச்சையைச் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அதிகாரத் தோரணையில் செய்தால்தான் அங்கே போவார்கள்.

சமீபத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ராணிப்பேட்டையில் குஷ்டரோக ஆஸ்பத்திரிக்கு கடகால் போட்டார்கள். கவர்ன்மெண்டிலிருந்து கிராண்ட் கொடுத்தார்கள். ராணிப்பேட்டையில் பெரிய நோய் பிடித்தவர்களுக்கு இடம் இருக்கிறது. ஆனால் மக்கள் பயந்து ஆஸ்பத்திரிகளுக்குப் போவதில்லை. சுகாதார இலாக்காவினர் வியாதியஸ்தர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ராணிப்பேட்டையில் 22,000 ரூபாய் செலவில் பிரசவ வார்டைக் கட்டி முடித்திருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவர் ஏதோ அபிப்பிராயம் தெரிவித்ததால் அதை ஒன்பது மாதங்கள் ஆகியும் இன்னும் அது ஆரம்பிக்கப்படவில்லை. என்ன காரணம் தெரியாது. ஏழை மக்கள் பிரசவத்திற்குப் போனால் "நாங்கள் என்ன செய்வது, பிரசிடெண்ட் உத்திரவு போட்டிருக்கிறார்கள், டாக்டர் உத்திரவு போட்டிருக்கிறார்கள், நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று சொல்வதாகக் கேள்விப்பட்டேன். ஒரு பிரசிடெண்ட் ஏதோ ஒரு உத்திரவு போட்டார் என்பதற்காக பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதை விசாரணை செய்து சரியாக நடத்துமாறு கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே, 1955-56 "டெத் ரேட்டை"-ப் பொறுத்த வரையில் 1,000-க்கு 14.00 ஆக இருந்துள்ளது. அதற்கு முந்திய வருடம் 13·20 ஆக இருந்தது. தொத்து நோயினால் ஏற்பட்ட மரணங்கள் இதே காலத்தில் குறைவாக உள்ளது. இதர மரணங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது "மால் நியூட்ரிஷன்" காரணமாக இருக்கலாம். பொதுவாக அப்படியானால் நாட்டிலுள்ள மக்கள் மத்தியிலே இருந்த சுகாதாரக் குறைவுதான் காரணமாய் இருக்க முடியுமென்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. 1956-57, 1957-58 வருடங்களுக்குப் புள்ளி விவரம் கொடுக்கவில்லை. சில தினங்களுக்கு முன்பு தொத்து நோய் பற்றி எழுந்த கேள்வி சமயத்தில் காலராவால் நேர்ந்த மரணங்கள் கணிசமான அளவு கூடுதலாக 1957-58-ல் இருக்கிறது. கழிந்த ஆண்டிலே "டெத் ரேட்டை" ப் பார்த்தால் இன்னும் அதிகமாக இருக்கக் கூடுமோ என்று தோன்றுகிறது. இதைப் பார்க்கும்பொழுது நாட்டிலே சுகாதார வசதிகள் எந்த அளவு தேவைப்படுகின்றனவோ அந்த அளவுக்குச் செய்து கொடுக்க முடியவில்லை என்பது தெளிவாகிறது. எங்கள் தென்காசி வட்டாரத்தில் காலரா நோய் கண்டது. எந்த அளவு மக்களுக்கு டிபார்ட்மெண்டிலே நன்மை செய்து கொடுக்க முடியும், எந்த அளவு சர்க்காரால் உதவி செய்ய முடிகிறது என்பதைப் இதனால் பார்க்க முடிந்தது, இதை கவனிக்கும் போது இந்த இலாக்காவையே டிஸ்ட்ரிக்ட் லெவலில் புதுப்பித்து அமைக்க வேண்டி வருமோ என்று தோன்றுகிறது. ஜில்லா ஹெல்த் ஆபீசர் நேரடியாக சர்க்கார் உத்தியோகஸ்தராக இருக்கிறார். ஹெல்த் இன்ஸ்பெக்டர் சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கிறார். ஸானிட்டரி இன்ஸ்பெக்டர், ஹெல்த் அஸிஸ்டண்டுகள், ஹெல்த் விஸிட்டர்கள் போன்றவர்கள் முறையே பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி, டிஸ்ட்ரிக்ட் போர்டு இவர்களுடைய நிர்வாகத்தில் இருந்து வருகிறார்கள். இதைப்பற்றி எனக்கு முன் பேசிய ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் மிகவும் விரிவாக அவர்களுடைய கடமைகளைப்பற்றிப் பேசியிருக்கிறார். இந்த இலாக்காவைப் பொறுத்த வரையில் இந்த உத்தியோகஸ்தர்கள் அத்தனை பேரையும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்குக் கீழ் வைத்து "புரொவின்ஷியலைஸ்" செய்து ஜில்லா ஹெல்த் ஆபீசரின் கீழ் கொண்டு வருவது நன்மை பயக்கத்தக்கதாக இருக்கும்.

[19th March 1958

SRI M. K. SOMASUNDARAM : On a point of information, Sir.

MR. SPEAKER : கடைசியில்தான் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் எல்லாம் சொல்ல வேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : 1939-ம் வருஷத்திய பப்ளிக் ஹெல்த் ஆக்டின்படி பப்ளிக் ஹெல்த் ஸ்டாபைப்பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. ஹெல்த் அஸிஸ்டண்ட், ஹெல்த் ஆபீசர், ஸானிட்டரி இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டென்டெண்ட், நர்சுகள், கிளார்க்குகள், பியூன் கள் போன்ற இவர்களின் சர்விஸை "புரொவின்ஷியலைஸ்" செய்யும் படிக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : ஹெல்த் இன்ஸ்பெக்டரை பொறுத்த மட்டில் அவர் நேரிடையாக சர்க்காரின் கீழ் இருப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த நிர்வாகம் தனியாக ஒரு ஹெல்த் இன்ஸ்பெக் டரின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பிர்க்காவில், குறைந்த பட்சம் ஒரு லட்சம் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில், ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டரையோ, ஹெல்த் அஸிஸ்டன்டையோ நியமித்து நேரிடையாக அவர்களிடம் நிர்வா கத்தைக் கொடுத்து, அவர் கீழ் 'Field Assistant' அல்லது வாக்ஸினேட்டரை கொடுத்து, சௌகரியம் செய்து கொடுத்து நல்ல முறையில் அமைக்க வேண்டுவது அவசியம். இப்பொழுது தொத்து வியாதி ஏதாவது ஏற்பட்டால் 'Taluk Headquarters'-க்கு போக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. கிராம சுகாதாரம், குடி தண்ணீர் வசதி, அரிஜனங்களின் க்ஷேம நலன் இவைகளை எல்லாம் அவர் பார்த்துக்கொள்ளும்படி, நேரடியான நிர்வாகம் நடை பெறும் முறையில் இருக்கவேண்டும். அவர்களுடைய குறைந்த சம் பளத்தைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. சாதாரணமாக அவர் களுக்கு சம்பளம் 30-லிருந்து 45 ரூபாய் வரைதான் இருக்கிறது. சில சமயங்களில் 'Unqualified hand' என்று சொல்லி 25 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இவர்களுக்கு இருக்கக்கூடிய குறைந்த பட்ச சம்பளம் பியூன்களுக்குக்கூட இல்லை. இந்த விஷயங்களையெல்லாம் பரிசீலித்து 'Provincialize' செய்து சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வைக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு 'District Health Officer இடம் ஒரு 'Ambulance' அவசியம் இருக்க வேண்டும். மற்றும் அவர்களிடம் 'ஜீப்' அல்லது 'வான்' இருக்க வேண்டும். இந்த வசதிகளை செய்து கொடுத்தால்தான் அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு உதவியாக இருக்கும். என்னுடைய வட்டாரத்தில் எட்டு மாதங்களுக்கு முன்பு, ஒரு கிராமத்தில் தண்ணீரில் விஷம் கலந்த காரணத்தால் அந்தக் கிராமத்தில் உள்ள எல்லோரும், குழந்தை குட்டிகள் உள்பட 500 பேர் காலரா மாதிரி ஒரு நோயினால் அவதிப்பட நேர்ந்தது. ஆனால் உதவி இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் கிடைத்தது. அதிகாரிகள் உடனடியாக வருவதற்கு வசதிகள் இல்லை. அங்கங்கே இருக்கும் கார்களை எடுத்துக்கொண்டு நாங்கள் அதிகாரிகளை அழைத்து வர வேண்டியதா யிருந்தது. அவர்களாகவே வருவதற்கு வசதி இல்லை. போலீஸ் மான் யத்தின்மீது பேசும்போது போலீஸுக்கு ஜீப் வேண்டும் என்று பலர் வாதாடினார்கள். அப்படி யிருக்கும்போது 'District Health Officer'க்கு அவசியம் 'ஆம்புலன்ஸோ,' 'வானோ,' 'ஸ்டேஷன் வாகனோ' இருக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டில் மருத்துவத்திற்கு டாக்டர் கிடைப்பது கஷ்டமாக இருக் கிறது என்று இந்த சபையில் பல முறை சொல்லப்பட்டது. மெடிகல் டிபார்ட்மெண்டுக்கு 150 பேரும் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு 45 பேரும் அதிகம் தேவைப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த எண்ணிக்கை சரியா என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. மெடிகல் காலேஜில் படிக்கும் ஒரு மாணவனுக்கு பயிற்சி கொடுக்க ஒரு வருஷத்திற்கு 3,000 ரூபாய் செலவாகிறது. ஒரு மாணவன் படிப்பை முடித்துவிட்டு வரவேண்டுமானால் சுமார் 15,000 அல்லது 20,000 ரூபாய் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த மாணவன் படிப்பை முடித்துவிட்டு வந்தவுடன் கிராமத்திற்கு செல்வதற்கு மிகவும் தயங்கு கிறான். நான் இதைப்பற்றி ஒரு காலேஜ் மாணவனைக் கேட்டேன்



19th March 1958] [Sri K. Sattanatha Karayalar]

சென்னை நகரத்திலோ, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்பத்தூர் போன்ற இடங்களிலோ வேலை கிடைத்தால்தான் வேலைக்கு போகப் போவதாகவும், வேறு இடங்களுக்கு போகத் தயாராக இல்லை என்றும் அவன் என்னிடம் சொன்னான். கிராமத்திலே பிறந்து வளர்ந்த இவனுக்கு இப்பேர்ப்பட்ட மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் மெடிகல் காலேஜில் சேரும் போதே, மூன்று வருஷமோ அல்லது ஐந்து வருஷமோ கிராமங்களில் வேலை செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாக நிர்ப்பந்தப்படுத்தும் ஒரு ஒப்பந்தத்துடன் சேர்க்க வேண்டும். மக்களின் வரிப்பணத்திலிருந்து இந்த மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து விட்டு, சிறகு முளைத்த பறவை பறந்து ஓடிவிடுவது போல் அல்லாமல், நாட்டுக்கு உதவி செய்ய அவர்கள் தயங்கக்கூடாது என்ற முறையில் ஒரு ஷரத்தை அவசியம் சேர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக 'College of Integrated Medicine'-ல் சொல்லிக் கொடுக்கக்கூடிய போதனா முறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'சித்த மருத்துவாங்க சுருக்கம்' என்ற பாடப் புத்தகத்தை நான் சில நாட்களுக்கு முன் பார்க்க நேர்ந்தது. அதில் 'குணபாடம்' என்ற ஒரு பகுதி இருந்தது. நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது மனிதனுடைய உறுப்புகளில் மொத்தம் 200 அல்லது 240 எலும்புகள் இருக்கின்றன என்று படித்திருக்கிறேன். ஆனால் துர திர்ஷ்டவசமாக இந்தப் புத்தகத்தில் 500 அல்லது 600 எலும்புகள் இருப்பதாக போடப்பட்டிருக்கிறது. இவைகள் 'Scientific basis' ல் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன்.

நான் மாணவர்களைப் பார்த்து 'நீங்கள் இதை நம்புகிறீர்களா' என்று கேட்டபோது, 'எங்களுக்கு நம்பிக்கை இல்லை, ஆனால் புத்தகத்தில் போட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். இதில் 'anatomy' சரி யாகவில்லை என்பது தெரிகிறது. நாட்டு முறை வைத்தியத்தைப் பற்றிதான் நான் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம். நாட்டு முறை வைத்தியம் நம் நாட்டில் நல்ல முறையில் பழக்கத்தில் இருந்து வருகிறது. நான் சொல்வதெல்லாம், இதை ரிஸர்ச் செய்து சரியானபடி பிரசுரிக்க வேண்டும் என்பதுதான். பழைய ஏடுகளில் இருப்பவற்றை அப்படியே மொழி பெயர்த்து போட்டுவிடக் கூடாது. பழைய ஏடுகளில் பல இடைச் செருகல்கள் இருக்கும். ஆகையால் இதை நன்றாகப் பரிசீலனைச் செய்து புத்தகத்தில் போட வேண்டும்.

இங்கு சொல்லிக்கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் குறைந்த பட்சம் 'Post-graduate' படித்தவர்களாக இருக்க வேண்டும். தற்பொழுது 'Medical graduate'-ஐ வைத்திருப்பதாக தெரிகிறது. 'Post-graduate' படித்து பட்டம் பெற்றவர்களாக இருப்பது மிகவும் அவசியம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிரைவேட் பிராக்டிஸ் செய்து கொண்டிருக்கும் டாக்டர்களை 'Honorary Doctors' என்று நியமிக்கும் முறை இப்பொழுது இருக்கிறது. இதை அவசியம் நிறுத்த வேண்டும். இவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து கேஸ் பிடிப்பதற்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு முன், மக்கள் இவர்கள் வீட்டிற்குபோய், கன்ஸல்ட் செய்து பணம் கொடுத் தால்தான் ஆஸ்பத்திரியில் சரியானபடி வைத்திய வசதி கிடைக்கிறது. இதை அவசியம் மாற்ற வேண்டும். இவர்கள் சர்க்கார் முழு நேர உத்தியோகஸ்தர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்கு வேண்டுமானால் அதிக பட்ச சம்பளம் கொடுக்கலாம். 'Private Practice' வைத்துக் கொள்ள வேண்டுமானாலும் அனுமதிக்கலாம். ஆனால் 'Honorary' என்று சொல்லி குறைந்த பட்ச சம்பளம் கொடுத்து ஒரே இடத்தில் நிரந்தரமாக வைப்பதை உடனே மாற்றவேண்டும். சில இடங்களில் 'Maternity hospital' இருக்கின்றன. அங்கு 'Lady Doctor' அவசியம் இருக்க வேண்டும். சில இடங்களில் 'Lady Doctor' இல்லாத நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. செங்கோட்டையில் ஒரு Maternity hospital இருக்கிறது. அதில் ஆறு, ஏழு மாதங்களாக 'Lady Doctor' இல்லை. பிரசவத்திற்காக வரும் பெண்களினுடைய நிலைமையை சிந்தித்துப் பாருங்கள். "Lady Doctor' இல்லாத காரணத் தால் கிராமங்களில் உள்ள 'Maternity hospital' பயன்படாமல் போய்

[Sri K. Sattanatha Karayalar] [19th March 1958

விட்டது. இந்த விஷயத்தில் ஒரு ' பாலிஸி ' வேண்டும். ' Maternity hospital ' இருக்கும் இடங்களில் ஆண் டாக்டர்களை நியமிக்காமல் பெண் டாக்டர்களையே நியமிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-48 a.m. **Sri P. S. K. LAKSHMIPATHI RAJ:** கனம் சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசின சட்ட சபை உறுப்பினர்கள் பல ஆலோசனைகளை கூறியிருக்கிறார்கள். டாக்டர்கள் இல்லையே என்ற குறைதான் அடிக்கடி பேசப்பட்டு வந்திருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்கு பல முனிசி பாலிடிகளிடமிருந்தும் பலவிதமான ஆலோசனைகள் வந்திருக்கின்றன.

ஒவ்வொரு முனிசிபாலிடியிலிருக்கும் ஹெல்த் ஆபீசர்கள் அங்குள்ள சானிடரி இன்ஸ்பெக்டர் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலையே கிடையாது. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, ஓட்டல்களினால் வரக்கூடிய பிரச்னைகள் இவைகளை கவனிக்கும் வேலையில் இருக்கிறார்களே தவிர வேறு எந்த வேலையையும் அவர்கள் மேற்கொள்வதில்லை. அந்த ஹெல்த் ஆபீசர்களுக்கு சரியான வேலையே கிடையாது. அந்த ஹெல்த் ஆபீசர்களை விடுவித்து அவர்களை கிராமங்களுக்கு அனுப்பினால் நன்றாக இருக்கும். இந்த யோசனையை அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சுகாதார அதிகாரி இருக்கிறார். ஆனால் ஒவ்வொரு முனிசிபாலிட்டிக்கும் ஒரு சுகாதார அதிகாரி தேவையா என்று பார்த்தால் நிச்சயமாக தேவை கிடையாது என்றுதான் நான் சொல்வேன்.

நான் பழனி நகர சபைத் தலைவராக இருந்த காலத்தில் ஒரு யோசனையை அரசாங்கத்திற்கு அனுப்பி இருந்தேன். சில நிபுணர்களின் யோசனையைக் கேட்டு அரசாங்கம் அதை கவனிக்கவில்லை. என்ன காரணத்தால் அப்படி கவனிக்கவில்லை என்பது தெரியவில்லை. முனிசிபாலிட்டி பெரும் அதிகாரிகளின் கையில் வந்திருக்கிறது. சுகாதார ஆபீசர், இஞ்சினியர், கமிஷனர் இந்த மூன்று ஆபீசர்களுடைய கையில் இருக்கிறது. அதன் காரணத்தால் பல மோதல்கள் நடந்து வருகின்றன. இப்படி மோதல்கள் நடந்து வந்திருக்கிறதே தவிர வேறு எந்தக் காரியமும் நடந்து வருவதாகத் தெரியவில்லை. அதனால் அவர்களை கிராமங்களுக்கு அனுப்பலாம் என்று தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஒரு யோசனையை நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மலைகளிலிருந்து உற்பத்தியாகி வரும் ஆறுகள் மூலமாக பாயக்கூடிய இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட திட்டங்கள் சுமார் 25 அல்லது 30 வருஷங்களுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் அப்படியே இப்பொழுதும் நடைபெற்று வருகின்றன. முன்பு 15 அல்லது 17 ஆயிரம் ஜனத் தொகை கொண்ட இடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட குடி தண்ணீர் திட்டம் ஜனத் தொகை 50 அல்லது 60 ஆயிரத்திற்கு மேல் போயுங்கூட அந்த திட்டங்கள் அப்படியேதான் இருக்கின்றன. பெரிய நகரங்களில்கூட ஏற்கனவே அமுலாக்கப்பட்ட திட்டம்தான் இன்னும் இருந்து கொண்டு வருகிறது. சாதாரணமாக பழனியை எடுத்துக்கொண்டால் அங்கு பாதுகாப்பு குடி தண்ணீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபொழுது 17 ஆயிரம் ஜனத்தொகை இருந்தது. இப்பொழுது அங்கே 50 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேல் இருக்கிறது. அது தென்னிந்தியாவிலுள்ள ஒரு முக்கியமான யாத்திரை ஸ்தலம். திருவிழாக்கள் காலத்தில் பல லட்சக்கணக்கான யாத்திரீகர்கள் அங்கு வருகிறார்கள். அதனால் அங்கு குடி தண்ணீர் வசதி திட்டத்தை அதிகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அங்குள்ள பஞ்சாயத்து அப்படி குடி தண்ணீர் வசதி திட்டத்தை விஸ்தரிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு ஒரு யோசனையையும் அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட பிரச்னைகளில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.



19th March 1958] [Sri P. S. K. Lakshmipathi Raj]

சில கிராமங்களில், சில பஞ்சாயத்துக்களில், குறிப்பாக பாலசமுத்திரம்
பஞ்சாயத்து போர்டில் பாதுகாப்பு குடிதண்ணீர் திட்டம் அமுலாக்கப்பட்டு
அது நடந்து வருகிறது. அந்தத் திட்டம் மூன்று நான்கு வருஷங்களாக
நடந்துகொண்டு வருகிறது. அந்தப் பகுதியில் அதற்கு வேண்டிய எல்லா
விதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தது. ஆனால் ஏதோ ஒரு
சின்னக் காரணத்தினால், எஸ்டிமேட்டில் ஏற்பட்ட ஒரு சின்னத் தகராறினால்
அந்தத் திட்டம் நின்றுபோய் விட்டது. அதன் காரணமாக மூன்று வருஷங்
கள் அமுலாக்கப்பட்டு வந்த திட்டமானது நின்று போய்விட்டது என்பதை
அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். சுகாதார அமைப்பு
கிராமங்களில் எப்படி இருக்கிறது என்றால் இங்கே நாம் நல்ல திட்டங்களைப்
போட்டாலும் அவைகள் அங்கு நல்ல முறையில் அமுலாக்கப்படுவது இல்லை.
இது அறியாமையின் காரணமோ என்னமோ தெரியவில்லை. அதிகாரிகள்
எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்கிறார்கள் என்று சொல்ல முடி
யாது. அதிகாரிகள் சரியானபடி அங்கு வேலை செய்யாமல் இருப்பதன்
காரணமாக பல்லாயிரக் கணக்கான உயிர்கள் கிராமங்களில் தத்தளித்துக்
கொண்டிருக்கின்றன. பல இடங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல்
அங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரைக் குடித்துக்கொண்டு பல வியாதி
களால் அங்குள்ள மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பழனி
தாலூகாவில் கணக்கம்பட்டி போன்ற கிராமங்களில் குடிதண்ணீர் வசதி
இல்லாமல் அங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரை அங்குள்ள ஜனங்கள்
குடித்துக்கொண்டு நரம்புச் சிலந்தி என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய
வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் படும்
கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஒரு குடும்பத்தைப் பார்த்தால் அதில்
நாலைந்து பேர்கள் கட்டுகளைக் கட்டிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் கட்டிக்
கொண்டிருக்கும் கட்டுகளை அவிழ்த்துப் பார்த்தால் உள்ளே ஒரு
சிறிய நரம்பு கம்பிபோல் தெரியும். அதை இழுத்துக் கட்டிக்கொண்டிருப்
பார்கள். அதனால் அவர்கள் படும் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல.
அதற்கு எண்ணெ தடவி கட்டிக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட வியா
திக்குக் காரணம் அங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரை எடுத்துக்
குடித்ததால் அப்படிப்பட்ட வியாதியால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
மீன் இலாகாவில் ஒரு வித மீன் இருக்கிறது. அந்த மீனை வாங்கிக்கொண்டு
போய் அந்தக் கிணறுகளில் அவைகளை விட்டு வைக்கிறார்கள். அந்த
மீன் அந்தப் பூச்சிகளை தின்கின்றன. அந்த அளவில் சாதாரணமாக
அதற்குப் பரிகாரம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட கிராமங்களுக்கு அதாவது
நரம்புச் சிலந்தியால் பாதிக்கப்படும் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி
தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முதல் சலுகை காட்ட
வேண்டும். மேல் நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சி அடைந்ததன் காரண
மாகவும் அங்கே பலவித துறைகளில் வைத்தியம் முன்னேற்றமடைந்த
காரணமாகவும் மனிதர்கள் நல்ல சுகாதார வசதிகளைப் பெற்றிருப்பதாலும்
அங்குள்ள மனிதர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள். அங்குள்ளவர்கள்
நீண்ட காலம் இறக்காமல் இருக்கின்ற காரணத்தால் பல தீங்குகள் ஏற்
படுகின்றன என்று அமெரிக்காவில் 80 வயதுக்கு மேல்பட்ட வயோதிகர்களை
இஞ்சக்ஷன் கொடுத்தாவது 'கொல்லலாமா என்றுகூட யோசித்துக்
கொண்டிருக்கிறார்களாம். ஆனால் நம் நாட்டில் வைத்திய வசதியின்
குறைவால் சிறிய வயதிலேயே மனிதர்கள் இறக்கிறார்கள்.

இங்குள்ள சுகாதாரத்தைப்பற்றி சொல்லும்போது பெரும் திருவிழாக்கள் நடக்கும் பகுதிகளில் சுகாதாரக் குறைவாக இருக்கின்ற பகுதிகளில் நல்ல முறையில் வைத்திய வசதியை அமுலாக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மோட்டார் வான்களில் மருந்துகளை எடுத்துக்கொண்டு போய் பல இடங்களில் வைத்திய உதவி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட உதவியை சில சந்தர்ப்பங்களில் செய்து பயன்படுத்திக்கொள்வது இல்லை. சரியான முறையில் இதை அமுலாக்குவதற்கு அரசாங்கம் சற்று துணிச்சலோடு இறங்கினால் சில கிராமங்களில் நல்ல வசதி கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது என்றால் கிராமங்களிலுள்ள ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால் குழந்தைகள் சாப்பிடாமல் இருந்தால் அவைகளை பயமுறுத்துவதற்கும் மிரட்டுவதற்கும் இந்த இன்ஸ்பெக்டர்களின் பெயரைச் சொல்லி ஊசி போடுகிறவர் வருகிறார், சாப்பிட்டு விடு என்று மிரட்டுவதற்குதான்

இவர்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் சாப்பிடாமல் விளையாடிக் கொண்டிருந்தாலும் அவைகளை சாப்பிட வைப்பதற்குத்தான் இந்த இன்ஸ்பெகடர்கள் உபயோகமாக இருக்கிறார்களே தவிர அவர்கள் வேறு எந்த விதத்திலும் உபயோகமாக இருப்பதாகத் தெரியவில்லை. மக்களுக்கு பூர்ணமாக பயனளிக்கும் வகையில் இவர்கள் இல்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் சேனாபதி கௌண்டர் கூறியபடி கிராமங்களில் ஆற்று ஓரங்களில் நல்ல ஊற்றுகள் கிடைக்கின்றன. அங்கே எல்லாம் கிணறுகளைத் தோண்டி பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியைச் செய்து பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கு வசதி செய்து கொடுக்கலாம். அமராவதி, ஷண்முக நதி பக்கங்களிலுள்ள கிராமங்களில் இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. அங்குள்ள ஹரிஜனங்கள் குடி தண்ணீருக்கு ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி இந்துக்களுக்கு எப்படியாவது தண்ணீர் கிடைத்து விடுகிறது. ஹரிஜனங்கள் இரண்டு மூன்று மைல்கள் சென்று தலையில் குடத்தை வைத்துக் கொண்டு போய் குடி தண்ணீர் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஹரிஜனங்கள் படும் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஒரு குடம் தண்ணீர் வேண்டும் என்றாலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சேரிப் பக்கம் இருக்கிற ஒரே கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. நல்ல தண்ணீர் வேண்டுமானால் குப்பை முதலியவைகளை கொண்டுபோய் கொட்டிவிட்டு தண்ணீர் எடுத்துவர வேண்டியதாக இருக்கிறது. அப்படி எடுத்து வரும்போதும் ஜாதி இந்துக்களிடம் பல திட்டுகளையும் வாங்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் கொண்டு வருவதாக இருந்தால் இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள் அங்குள்ள ஹரிஜனங்கள். பழனி தாலூகாவில் பல கிராமங்களில் மாடுகளுக்குக்கூட குடி தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் விவசாயத்திற்கும் போதுமான தண்ணீர் கிடையாது. பக்கங்களிலுள்ள ஜாதி இந்துக்கள் உபயோகப்படுத்தும் கிணறுகளிலிருந்து சாப்பிடுவதற்கு கொண்டு போவதற்கும் ஆட்சேபிக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் அங்குள்ள சுகாதார இலாகா வேலை செய்துகொண்டு வருகிறது. சுகாதார இலாகாவிற்கு இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து குறைந்த பட்சம் மனிதர்களுக்கு குடி தண்ணீர் வசதியாவது செய்து கொடுக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சில கிராமங்களில் பார்த்தால் கிணறுகளில் குப்பைகள் விழுந்து அழுகிப்போய் தண்ணீர் கெட்டுப்போய் கிடக்கும். அப்படிப்பட்ட தண்ணீரை எடுத்து சாப்பிடுவதால்தான் இப்படிப்பட்ட வியாதிகள் வருகின்றன. நவ நாகரீகமாக இருக்கக்கூடிய இந்தக் காலத்தில் இப்படி நடந்து வருகிறது. நகரங்களில் பார்த்தால் எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. அப்படி இருந்தும் இன்னும் அதிகமான வசதிகள் தேவை என்று கேட்கிறார்கள். நகரங்களில் இருப்பது போன்ற வசதிகள் கிராமங்களில் கிடையவே கிடையாது. கிராமத்திலுள்ள ஒரு தாய் பிரசவிக்க வேண்டுமானால் அவள் தலைநகர ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அப்படி வருவதற்குள் அவள் பெரிய மரண வேதனையை அடைய வேண்டியதாக இருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு வந்தால் அங்குள்ள படுக்கைகள் ஒரே அழுக்காக இருக்கிறது. கிட்டப்போனால் துர்நாற்றம் அடிக்கிறது. யுத்த காலத்தில் அடிபட்டு கீழே விழுந்தவர்களுக்குப் போட்ட படுக்கைகளோ என்று கூட தோன்றுகிறது. அவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது அங்குள்ள படுக்கைகள். ஆஸ்பத்திரிகளில் கூட லஞ்சம் தாண்டவமாடுகிறது. பணம் கொடுத்தால்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. அல்லது பெரிய மனிதர்களுடைய சிபாரிசு இருந்தால் தான் காரியங்கள் நடைபெறுகின்றன. வசதிகள் கிடைக்கின்றன. நரகர்களுடைய தயவை நாடிக்கொண்டு டாக்டர்களுக்கு யார் பணம் தருகிறார்களோ, கம்பவுண்டர்களுக்கு யார் பணம் தருகிறார்களோ அவர்களுக்குத் தான் வசதிகள் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்கி, நல்ல திட்டங்களை அமைத்து அவைகளை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

12-02 p.m. ***Sri A. GOVINDASAMY**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சுகாதார மான்யத்தின் பேரிலே கொடுத்திருக்கிற வெட்டு பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இட நெருக்கடி இருப்பதை நாம் பார்க்கிறோம். எவ்வளவுக்கு எவ்வளவு ஜனத் தொகை பெருகுகின்றதோ, அந்த அளவுக்கு வியாதியும பெருகிக் கொண்டே வருகிறது. பல ஆஸ்பத்திரிகளில் வியாதியஸ்தர்கள படுப்பதற்கு இடமில்லாமல் கட்டில் கிடைக்காத காரணத்தினால் தரையிலே கிழிந்த பாயிலே அவர்கள் படுக்க வேண்டியிருக்கிறது. ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கு கட்டில் வசதி கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு ஆங்காங்கு புதிய கட்டிடங்களை கட்டுவதற்காக திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டப் பிரகாரம் கடலூரில் 100 படுக்கைகள் அதிகப்படியாகக் கொண்ட ஒரு கட்டிடம் கட்டுவதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அஸ்திவாரக் கல் போட்டார்கள். அஸ்திவாரக் கல் போடுவதற்கு மூன்று அமைச்சர்கள் வந்திருந்தார்கள். இருந்தாலும், இது வரையிலும் கட்டிடம் எழுப்பவில்லை. தேர்தலுக்கு முன்னாலே அஸ்திவாரக் கல் போடப்பட்டது. தேர்தல் நடந்து $1\frac{1}{2}$ ஆண்டு ஆகியும்கூட கட்டிடம் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. உடனடியாக இதை துரிதப்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக, கடலூரில் ஒரு க்ஷயரோக ஆஸ்பத்திரி திறப்பதற்கு பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அதை நடத்துவதற்கு சர்க்கார் நிதி கோரியிருக்கிறார்கள். சுகாதார அமைச்சர் அவர்களும் அந்த இடத்தை வந்து பார்வையிட்டார்கள். இது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே இந்த விஷயத்தை சீக்கிரத்தில் கவனித்து நிதி உதவி செய்வதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெனரல் ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி, ஜில்லா ஆஸ்பத்திரிகள் போன்ற பெரிய ஆஸ்பத்திரிகளிலுள்ள ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும். அவர்கள் ஏதாவது நன்கொடையோ, அல்லது லஞ்சமோ கேட்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் ஊதியம் குறைவாக இருப்பதுதான் காரணம். ஆகையால் அவர்கள் அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் இது வரையில் கவனிக்கவில்லை. அதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், 'மேல் நர்சுகளுக்கு' வீட்டு வசதி குறைவாக இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் கவனித்து வருவதாக எற்கனவே சட்ட சபையில் சொல்லப்பட்டது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆஸ்பத்திரியிலே வேலை செய்கின்ற ஊழியர்கள் 12 மணி நேரம், 15 மணி நேரம் வேலை செய்வதாகவும், தங்களுடைய வேலைப் பளுவை குறைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதையும் கவனித்து அவர்கள் வேலைப் பளுவை குறைத்தால், அவர்களிடமிருந்து திறமையாக வேலையை வாங்கிக்கொள்ள முடியும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மனைவியும், கணவனும் ஒரே ஆஸ்பத்திரியில் வேலை செய்வதற்கு வசதி செய்துதர வேண்டும். அப்படியில்லாமல் பல குடும்பங்கள் தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் கண்டமங்கலத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருந்தது. இப்பொழுது அது மூடப்பட்டுவிட்டது. 'கஸ்டம்ஸ்' இருந்த காலத்திலேயே அது இருந்தது. கஸ்டம்ஸ் ஒழிந்ததே ஒழிய, அங்கு இருக்கின்ற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரி 10, 15 கிராமங்களுக்கு வசதியாக இருந்தது. அது இப்பொழுது மூடப்பட்டு விட்டது. அதை மீண்டும் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சபையிலே குடும்பக் கட்டுப்பாடு பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. அமைச்சர் அவர்கள் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறக்கூடாது என்று பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தக் கட்டுப்பாட்டை மீறியவனுள் நானும் ஒருவன். அதனால் ஏற்படும் தொல்லைகள் தாங்க முடியாமல் இருக்கிறது. ஆகவே குடும்பக் கட்டுப்பாடு அவசியம். ஆகையால் நாங்கள் திருமணங்களை நடத்துவதற்கு போகும்பொழுது குறிப்பாக குடும்பக் கட்டுப்பாட்டை பிரசாரம் செய்கிறோம். மணமக்களை ஆசீர்வதிக்கும்போது

இரண்டு, மூன்று குழந்தைகளுக்கு மேல் அதிகம் பெறாதீர்கள் ; அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்கிறது என்று சொல்லுகிறோம். ஆகவே நாங்கள் செய்து வைக்கும் சுயமரியாதை திருமணங்களை இந்த சட்ட சபை ஆதரித்துவிட்டால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு வசதியாக இருக்கும்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : 'பாயிண்டு ஆப் ஆர்டர்' ஸார். இந்த குடும்பக் கட்டுப்பாடுபற்றி அடிக்கடி இந்த சபையிலே பேசப்படுகிறது. அப்படி பேசுகின்ற அங்கத்தினர்கள் முன்னால் அதிக குழந்தைகளை பெற்றுவிட்டு இனிமேல் குழந்தை பெறப்போகிறவர்களை அதிகமாக குழந்தைகளை பெறக்கூடாது என்று சொல்லுவது சரியான யோசனையா ?

**Mr. SPEAKER** : இது ஒன்றும் 'பாயிண்டு ஆப் ஆர்டர்' அல்ல.

**Sri A. GOVINDASAMY** : இதுபற்றி அமைச்சர் அவர்களை கேட்க வேண்டும். அவரும், அவரைச் சார்ந்த கட்சியினரும்தான் குடும்ப கட்டுப்பாடு பிரசாரம் செய்கிறார்கள். அதில் நாங்கள் ஒத்துழைக்கிறோம். கனம் சபாநாயகர் அவர்களுக்கு இதில் அனுபவம் இருக்கிறது என்று நினைக்கிறேன். சபாநாயகருக்கு அரை டஜன் குழந்தைகள் இருப்பதாக அறிகிறேன்.

**Mr. SPEAKER** : தயவு செய்து சபாநாயகரை இந்த விவாதத்தில் இழுக்க வேண்டாம். அப்படி இழுத்தால் சரியான முறையில் சொல்லுங்கள். அரை டஜன் குழந்தைகள் அல்ல, முக்கால் டஜன் என்று சொல்லுங்கள் (சிரிப்பு).

**Sri M. KARUNANITHI** : சபாநாயகருக்கு ஒன்பது குழந்தைகள் இருந்தால் நவரத்தினங்களின் பெயர்களை வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

**Mr. SPEAKER** : இதில் கேள்வி ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் கோவிந்தசுவாமி தொடர்ந்து பேசலாம்.

**Sri A. GOVINDASAMY** : கனம் சபாநாயகர் வைத்திய துறையில் அனுபவம் பெற்றவராக இருப்பதால் நான் அவரைப்பற்றி குறிப்பிட்டேன். சபாநாயகரை வம்புக்கு இழுக்க வேண்டுமென்ற காரணத்தினால் அல்ல. எனக்கு ஐந்து குழந்தைகள்தான். குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ளுவதற்கு வழிவகை செய்துகொண்டுவிட்டேன். இனிமேல் எனக்கு குழந்தை பிறக்காது என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நரம்புச்சிலந்தி வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். கிராமப் புரங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாதால் சிகப்புத் தண்ணீரை குடிப்பதால், மண் கலந்த தண்ணீரை குடிப்பதால் இந்த வியாதி வருகிறது. இதனால் எதிர் காலத்தில் உழைக்கக்கூட சக்தியில்லாமல் போய்விடுகிறது. 'பாட்மின்டனில்' 'பாட்டுக்கு' 'கட்டு' போடுவதுபோல், ஆறு மாத காலத்திற்கு ஆஸ்பத்திரிக்கு இழுத்துக் கொண்டு இருக்க வேண்டும். நல்ல குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்து இந்த வியாதியை தடுக்கவேண்டும். உற்சவ காலங்களில் தொத்து நோய்கள் அதிகமாக பரவுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உதாரணமாக சமயபுரத்தில் உற்சவ காலத்தில் அதிகமாக காலரா நோய் பரவுகிறது. கும்பகோணத்தில் மகத்தின்போது மகாமகக் குளத்தில் ஜனங்கள் குளிப்பதால் ஊர் பூராவும் தொத்து நோய் பரவுகிறது. இம்மாதிரி உற்சவ காலங்களில் அசுத்தமான குளங்களில் குளிப்பதை தடை செய்ய வேண்டும். தண்ணீரை வேண்டுமானால் தலையில் தெளித்துக் கொள்ள அனுமதிக்கலாம். தண்ணீரை தலையில் தெளித்துக் கொண்டாலே முக்தி அடையலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. ஆகையால் குளத்தில் குளிப்பதை தடை செய்து, தண்ணீர் தெளித்துக் கொள்ளுவதற்கு மட்டும் அனுமதித்தால், தொத்து நோய்கள் பரவாமல் தடுக்கலாம். ஹிந்து மத பண்டிகையாக இருந்தாலும் சரி, முகம்மதிய பண்டிகையாக இருந்தாலும் சரி, கிருஸ்தவ பண்டிகையாக இருந்தாலும்





சரி, இந்தக் கொண்டாட்டங்களினால் தொத்து நோய் பரவும் என்று அரசாங்கம் கருதுமேயானால், அவைகளை தடை செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். வியாதி வந்த பிற்பாடு அதை தடுப்பதற்கு பதிலாக வருவதற்கு முன்பே முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தெய்வீகத் தன்மையைப்பற்றி ஸ்ரீ விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலரா நோயை தடுப்பதற்கு அம்மனுக்கு பூசை போடுவதில் ஜனங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர் சொல்லுகிற மாதிரி இரவு 12 மணி, 1 மணி வரை ஆடிப்பாடி கொம்மாளம் போட்டுக்கொண்டிருந்தால், அதனால் நோய் இன்னும் அதிகமாக பரவும். ஆகையால் இம்மாதிரி மூட நம்பிக்கை மக்களிடம் ஏற்படாத அளவுக்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பிரசாரம் செய்ய வேண்டும். அம்மாதிரி மூட நம்பிக்கையில் நமது அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. அவர்கள் இதற்காக பிரசாரம் செய்யக்கூடியவர்கள். அதை மீண்டும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடலூரில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக 1935-லிருந்து திட்டம் இருந்துகொண்டு வருகிறது. இன்று வரையிலும் குழாய் தண்ணீர் பரவலாக எல்லா இடங்களிலும் கிடைக்கவில்லை. ஒரு சில இடங்களில் தான் கிடைக்கிறது. அம்மாதிரி குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், யானைக்கால் போன்ற வியாதிகள் வராமல் தடுக்கலாம். தொத்து நோய்கள் பற்றி இந்தச் சபையில் கேள்வி நேரத்தில் கேள்விகள் கேட்கப் பட்டன. காலரா கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்படும் வியாதியஸ்தர்கள், சிகிச்சை பெற்றுக்கொண்டு திரும்பி வர முடியாத நிலையில் இருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு அவ்வளவு சௌகரியக் குறைவாக இருக்கிறது. காலரா கொட்டகைக்கு போவது சுடுகாட்டிற்கு போவது போலாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அவைகளை யெல்லாம் சுத்தமாக சுகாதார வசதிகள் உள்ளதாக வைத்துக்கொண்டு, காலரா போன்ற தொத்து நோய்களுக்கு பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆஸ்பத்திரியில் நல்ல மருந்து கொடுக்கப்படவில்லை. பென்ஸிலின் போன்ற மருந்துகள் தரப்படுவது கிடையாது. ஏழைகள் இதனால் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் இம்மாதிரி மருந்துகளை வெளியில் போய் வாங்கிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் நல்ல மருந்து கொடுப்பது கிடையாது, கலர் தண்ணீர்தான் கொடுக்கிறார்கள் என்ற எண்ணம் ஜனங்களிடத்திலே பரவி வருகிறது. ஆகையால், இவர்கள் தனிப்பட்ட டாக்டர்களை தேடிச் செல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்கு இலவசமாக மருந்துகள் கிடைப்பதற்கு வசதி செய்ய வேண்டும்.

ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்கு நல்ல உணவு தரவேண்டும். ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப்படும் உணவு சில சமயங்களில் துர்நாற்றம் வீசுகிறது. கொழம்பு சாப்பிட முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, ஆஸ்பத்திரிகளில் பயிற்சி பெற்ற சமையல்காரர்களை நியமித்து நோயாளிகளுக்கு நல்ல உணவு கிடைக்கும்படி செய்ய வேண்டும். ஆஸ்பத்திரிகளில் பசும்பால்தான் கொடுக்கப்பட வேண்டும். புட்டிப்பால் கொடுக்கக்கூடாது. ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளும், உணவுப் பொருள்களும் மாயமாக மறைந்து போவதாகவும், ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு அழுகிப்போன முட்டைகளும் கெட்டுப்போன ரொட்டிகளும் கொடுக்கப்படுவதாகவும் தெரிகிறது. ஆஸ்பத்திரி உணவுப் பொருள்கள் விஷயத்தில், ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்கள் காண்ட்ராக்டர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு நோயாளிகளை ஏமாற்றுவதாகத் தெரிகிறது. வேலூரிலுள்ள ஆஸ்பத்திரி மிகவும் பெயர் பெற்ற ஆஸ்பத்திரி. அது போன்ற ஆஸ்பத்திரிகளில்கூட இப்போது நோயாளிகளிடம் அதிகமாகப் பணம் கேட்கப்படுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக வேலூரிலுள்ள ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரிகளை சரிவர நடத்த வேண்டும்.

[Sri A. Govindasamy] [19th March 1958

தமிழ் வைத்தியர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும். ஒரு புத்தூர் வைத்தியரையாவது சர்க்கார் ஆஸ்பத்திரியில் நியமிக்க வேண்டும். புத்தூர் வைத்தியர் எலும்பு முறிவை சரிப்படுத்துவதற்கு மிகவும் நன்றாக சிகிச்சை செய்கிறார். வைத்தியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், கிராமங்களுக்குச் செல்ல போதிய ஆங்கில வைத்தியர்கள் முன்வராததாலும், ஹோமியோபதி வைத்தியர்களை சர்க்கார் நியமித்து அவர்களையாவது கிராமங்களுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, சபையில் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டிருக்கும் வைத்திய பொது சுகாதார மானிய கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கிறேன். வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கிறேன் என்று நான் சொல்வதால் பொது சுகாதார மானியத்தையும் வைத்திய வசதிக்கான மானியத்தையும் உண்மையிலேயே குறைத்துவிட வேண்டுமென்று நான் கோருவதாக அர்த்தம் செய்து கொள்ளப்படாது என்று நம்புகிறேன். பொது சுகாதாரத் துறையிலும் வைத்தியத் துறையிலும் அரசாங்கம் சரிவர கவனம் செலுத்தவில்லை என்று கூறி அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கும் முறையில்தான் வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆண்டில் வைத்திய வசதிக்காக ஒதுக்கப்பட்ட பணம் மிச்சமின்றி முழுவதும் செலவழிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கது. சென்ற ஆண்டு வைத்திய வசதிக்காக சுமார் 317 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தத் தொகையில் ரூ. 289 லட்சம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பாக்கித் தொகை செலவழிக்கப்படாததற்கு கனம் அமைச்சர் காரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வைத்தியக் கல்லூரிகளுக்காக சென்ற வருடம் ரூ. 42,31,000 ஒதுக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் செலவழிக்கப்பட்டது 37,57,000 ரூபாய். பாக்கித் தொகை ஏன் பயன்படுத்தப்படவில்லை என்று கனம் அமைச்சர் தெளிவாக எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சென்ற வருஷம், ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகத் தொகை 'மெண்டல் ஹாஸ்பிடல்'-க்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு ரூ. 14 லட்சம்தான் சென்ற வருஷம் ஒதுக்கப்பட்டது; ஆனால் செலவானது ரூ. 16 லட்சம். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. ஒரு வேளை அந்த ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதோ என்னமோ, தெரியவில்லை.

பொது சுகாதாரத்திற்காக சென்ற வருடம் ரூ. 27,12,000 ஒதுக்கப்பட்டது; ஆனால் செலவழிந்தது ரூ. 18,19,000 தான். இதே போல் சென்ற வருஷம் 'எபிடெமிக்' வியாதிகள் சம்பந்தப்பட்ட செலவுகளுக்காக ரூ. 17,65,000 ஒதுக்கப்பட்டது; ஆனால் செலவழிந்தது ரூ. 16,64,000 தான். இம்மாதிரி ஒவ்வொரு துறையிலும் செலவழிக்கப்பட்ட தொகை மிச்சமில்லாமல் செலவழிக்கப்படாமல் இருப்பதைக் காண்கிறேன். அதற்கான காரணங்களை அறிவதற்கு இந்த சபைக்கு உரிமை இருக்கிறது.

இந்த வருஷம் பொது சுகாதாரத்திற்கும் வைத்தியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவு; இன்னும் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும். கிராம மக்களுக்கு வைத்திய வசதிகள் சுலபமாகக் கிடைக்கச் செய்வதற்காக வைத்திய இனத்திற்கு அதிகமாக பணம் ஒதுக்கப்பட வேண்டும்.

ஆங்காங்கே ப்ரைமரி ஹெல்த் நிலையங்கள் அமைக்கப்பட்டால் பணம் இல்லாத காரணத்தாலோ, டாக்டர்களுக்கு வீடு இல்லாத காரணத்தாலோ, அவை திறக்கப்பட்டன என்று பிரகடனப்படுத்தப்பட்ட பிறகும் அவைகளில் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. உதாரணமாக, என் தொகுதியில் ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று ஜில்லா அபிவிருத்திக்



19th March 1958] [Sri P. S. Chinnadurai]

கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுப் பல காலமாகியும், டாக்டருக்கு வீடு கிடைக்காததால் இதுவரையில் அதில் வேலை துவங்கப்படவில்லை. ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பலகாலமாகியும் அவைகளில் வேலை துவங்கப்படவில்லை என்ற குறையை பலர் எடுத்துக்காட்டினார்கள். இதை கனம் அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்.பி.,பி.எஸ். படித்த டாக்டர்கள் கிராமங்களுக்குப் போகப் பிரியப்படுவதில்லை என்றும், அவர்கள் கிராமங்களில் ரொம்ப வசதியான வீடுகள் கேட்கிறார்கள் என்றும் அறிகிறேன். கிராமங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கு வீட்டு வசதிக்காக 50 ரூபாய் அதிகம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இதை நான் ஆட்சேபிக்கவில்லை. கிராமங்களுக்கு டாக்டர்கள் வர மறுக்கும் வருந்தத்தக்க நிலைமையை நீக்குவதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யக்கூடாதா ? இது சம்பந்தமாக சென்ற ஆண்டுகூட கனம் அங்கத்தினர்கள் பல யோசனைகள் சொன்னார்கள். இந்த வருஷமும் பல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு வருஷங்களோ மூன்று வருஷங்களோ உள்ள குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயித்து எம்.பி., பி.எஸ். படித்த மாணவர்கள் அந்தக் காலத்தில் கிராமங்களில் சேவை செய்துவிட்டு வர வேண்டுமென்று விதிக்கக்கூடாதா ? இந்தப் பிரச்னை சம்பந்தமாக கனம் அங்கத்தினர்கள் கூறியுள்ள யோசனைகளை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தாலூகாக்களிலுள்ள முக்கிய ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் திட்டம் ரொம்பவும் தாமதமாக நடக்கிறது. இந்தத் திட்டம் சிறந்த திட்டம். இதைத் தாமதமில்லாமல் அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்கீழ் உள்ள தொழிலாளர்களுக்காக தனியான ஒரு க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சென்ற ஆண்டு கனம் அமைச்சரால் அறிவிக்கப்பட்டது. இது வரையில் அந்த வாக்குறுதி சரிவர நிறைவேற்றப்படவில்லை. நான் அறிந்த வரையில், சில ஆஸ்பத்திரிகளில் இந்தத் தொழிலாளர்களுக்காக படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கனம் அமைச்சர் குறிப்பிட்டபடி பிரத்தியேகமான க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. இவ்வாண்டு அந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவு. அத் திட்டத்தை மேலும் சில பகுதிகளுக்கு விஸ்தரிக்கப் போவதாகவும், தொழிலாளர்கள் மட்டுமின்றி அவர்கள் குடும்பத்தாரும் பயனடையும் வகையில் திட்டத்தை விஸ்தரிக்கப்போவதாகவும் அரசாங்கத்தார் சொல்லியிருக்கிறார்கள். தொகையைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு இத்திட்டத்திற்காக சென்ற ஆண்டு கேட்டதைவிடக் குறைவான தொகைதான் கோரப்படுகிறது. இந்த நிலையில், திட்டம் எவ்வாறு புதிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று தெரியவில்லை. இதை கனம் அமைச்சர் விளக்க வேண்டும்.

இந்த ராஜ்யம் சம்பந்தமான குழந்தைகளின் ஜனன மரணக் கணக்கு வெளியாகி இருந்தது. அதைப் பார்த்த நான், சிசு மரணம் இந்த ராஜ்யத்தில் ரொம்ப அதிகமாக இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். இந்த ராஜ்யத்தில் சிசு மரணம் அதிகமாக இருப்பதற்கான காரணத்தை கனம் அமைச்சர் தெரிவித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோவை ஜில்லாவில், குறிப்பாக கோவையிலும் ஈரோடிலும்தான் பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இந்த ஜில்லாவிற்கே நடுநாயகமாக விளங்கும் பல்லடம் தாலூகாவின் இன்றைய தலைநகரான திருப்பூரில் பெரிய ஆஸ்பத்திரி இல்லை. திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட பெரிய ஆஸ்பத்திரி ஒன்றை கட்ட வேண்டுமென்ற தீர்மானத்தை கோவை ஜில்லா அபிவிருத்தி கமிட்டியில் நிறைவேற்றியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பட்ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. திருப்பூரில் இத்தகைய நவீன வசதிகள் கொண்ட புதிய ஆஸ்பத்திரி ஒன்றை கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். சிசு மரணம் சம்பந்தமாகச் சொல்லும்போது, இன்னொரு விஷயமும், என்னுடைய ஞாபகத்

திற்கு வருகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் சம்பந்தமாக கனம் மந்திரி அவர்கள் பேசும்போது, இந்த ஆண்டிலே அந்தத் திட்டத்தை இன்னும் அதிகமாக விஸ்தரிக்க பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குடும்பக் கட்டுபாடு திட்டம் சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்பதை சென்ற ஆண்டிலே கூட நான் இந்தச் சபையில் பேசும்போது குறிப்பிட்டேன். இந்தத் திட்டத்திலே மூன்று குழந்தைகளைத்தான் ஒருவர் பெற வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மூன்று குழந்தைகளைத்தான் ஒருவர் பெறலாம் என்ற ஏற்பாட்டை அந்தக் காலத்திலே அமுலுக்குக் கொண்டு வந்திருந்தால், நிச்சயமாக நம்முடைய நாட்டிலே பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்கும். நம் நாட்டிலே மட்டுமல்ல, உலகத்திற்கே ஏற்பட்டிருக்கும். மகாத்மா காந்தியின் பிறப்பையே எடுத்துக்கொள்வோம். காந்திஜி அவர்கள் தம்முடைய தாய் தந்தையருக்கு நாலாவது குழந்தை என்று அவரே சொல்லியிருக்கிறார். மூன்று குழந்தைகள் மட்டும்தான் பெறலாம் என்று இருந்தால், மகாத்மா காந்தி பிறந்தே இருக்கமாட்டார்; மகாத்மா காந்தி இந்த உலகத்திற்குக் கிடைத்தே இருக்கமாட்டார். மனித சமூகத்துக்கு எவ்வளவு பெரிய பாதகம் ஏற்பட்டிருக்கும்! சுபாஷ் சந்திர போஸ் அவர்கள், தம்முடைய தாய் தந்தையருக்கு ஒன்பதாவது குழந்தை. சாமான்யமாக நாம் இதை அவ்வளவு அலட்சியமாக நினைக்கக் கூடாது. எவ்வளவு உலகப் புகழ் பெற்ற வீரர் சுபாஷ் சந்திர போஸ்? அவர் இந்த நாட்டுக்குக் கிடைத்திருப்பாரா என்று இந்த நேரத்தில் நாம் நினைத்துப் பார்த்தால், இதனுடைய முக்கியத்துவத்தை நாம் தெரிந்து கொள்வோம் என்று நினைக்கிறேன்.

•குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லி இந்தத் தலைமுறையினர் இனி வர இருக்கும் தலைமுறையினரை வரவொட்டாமல் தடுப்பது சரியல்ல; தார்மீக ரீதியிலும் அது சரியல்ல; அது மிக பாபமான காரியம் என்று நான் சென்ற ஆண்டில் சொன்னதை இந்தச் சமயத்திலும் நினைவு படுத்த விரும்புகிறேன். இந்தப் பாபகரமான செயலுக்கு அதிகத் தொகை ஒதுக்கி, அதிகமான பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று எல்லாம் இந்த அரசாங்கம் கூறுவதைப் பார்த்தால், நமக்கு வேறு வேலையே கிடையாதோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. நாம் கவனிப்பதற்கு இதைத் தவிர வேறு பிரச்னை கிடையாதோ என்று கேட்கத்தான் எனக்குத் தோன்றுகிறது.

காந்தியைப்பற்றியோ, நேதாஜியைப்பற்றியோ நான் குறிப்பிட்டால், ஏதோ ரொம்பப் பெரியவர்களைக் குறிப்பிடுவதாகச் சொல்லலாம். அவர்களெல்லாம் அவதார புருஷர்கள், அப்படிப்பட்டவர்கள் எப்படியும் பிறந்து விடுவார்கள், மூன்றும் குழந்தைக்குப் பிறகும் அவர்கள் பிறக்கலாம்; அதற்கு முன்பும் பிறக்கலாம்; அதெல்லாம் தானே நடக்கும் என்று ஒருக்கால் சமாதானம் சொல்லக்கூடும். இந்தச் சபையிலே எடுத்துக் கொண்டாலுங்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு தலைவராக சட்ட சபையில் வீற்றிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் தம்முடைய தாய் தந்தையருக்கு எட்டாவது குழந்தை. கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவராக வீற்றுக்கொண்டிருக்கிற திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தம்முடைய தாய் தந்தையருக்கு நாலாவது குழந்தை.

* Sri P. G. KARUTHIRUMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் எத்தனையாவது குழந்தை என்று சொல்வார்களா?

Sri P. S. CHINNADURAI: நான் 11-வது குழந்தை. இந்த வகையிலே யோசித்துப் பார்த்தால், இப்படிப்பட்ட திட்டம் வந்திருக்குமானால், இந்தச் சபைக்கே எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கும்; யோசித்துப் பாருங்கள்.

சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் போதிய அவகாசம் இல்லை. அவகாசம் மாத்திரம் கிடைத்திருக்குமானால், நான் இந்தச் சபையிலிருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் தாய் தந்தையருக்கு எத்தனையாவது குழந்தை என்று அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க முடியும். சொற்ப அவகாசம் மட்டுமே இருந்ததனால், இந்தத் தகவலை





மட்டும் சேகரித்துக்கொண்டு வந்தேன். ஆகையால், இம்மாதிரி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அகில இந்திய ரீதியில் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டுமானால், தொப்பிக்குத் தகுந்தாற்போல் தலையைச் செதுக்கக்கூடிய கொள்கையாகத்தான் இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். தேசத்தில் பற்றாக்குறை இருக்கிறது. போதுமான அளவு நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உற்பத்தியை பெருக்கினோம். பெரிக்கிக் குவிக்கிறோம். உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கின்றது ஒரு பக்கம். அதே நேரத்தில் ஜனத் தொகையைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி குறைக்க முடியும் என்றும் சொல்லுகிறார்கள். இது சரியானதல்ல.

ரஷ்யாவிலும் இன்னும் மற்ற நாகரீக நாடுகளிலும் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உலகத்தின் சிறந்த நாடுகளிலெல்லாம் அதிகமாக குழந்தைகளைப் பெற்றெடுக்கிறவர்களுக்குத் தனியான விசேஷ மரியாதைகள் செலுத்தப்படுகின்றன என்பதைக் காண்கிறோம். நம்முடைய நாட்டில் அந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்துக்கு அதிக ஆக்கம் அளிக்க வேண்டாம் என்பதுதான் நான் அரசாங்கத்திற்கு விடுகிற வேண்டுகோள். 'நாம் என்ன செய்வது? பாரதப் பிரதமர் சொல்லுகிறாரே' என்று சொல்லலாம். மற்றவர்கள் சொல்லுகிறார்களே என்றும் சொல்லலாம். எங்கள் கட்சியிலேகூட சில தலைவர்கள் சொல்லுகிறார்கள். ஒருக்கால் அவர்களெல்லாம் தங்கள் தங்கள் தாய் தந்தையர்களுக்கு ஒரே குழந்தை போலும். கனம் அமைச்சர்கூட அவருடைய தாய் தந்தையருக்கு இரண்டாவது குழந்தையோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. அல்லது மூன்றுவது குழந்தையாக இருக்கலாம். ஆகையால்தான் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி வற்புறுத்துகிறார் என்று நினைக்கிறேன். நான்காவது, ஐந்தாவது குழந்தையாக இருந்தால் ஒருக்கால் வற்புறுத்தியிருக்கமாட்டார் என்பது என்னுடைய நம்பிக்கை. குடும்பக் கட்டுப்பாடு விஷயத்திலே நாம் அவ்வளவு அதிகமாக அக்கறை எடுத்துக்கொண்டு நம்முடைய பணத்தையெல்லாம் அதிலே விரயம் பண்ணுவதற்குப் பதிலாக, அந்தப் பணத்தைக் கொண்டு கிராம வைத்தியம், கிராம சுகாதார வசதிகள் போன்றவைகளுக்குப் பயன்படுத்துவது நல்லது என்று கூறி என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, many hon. Members have spoken on this subject. I would like to confine myself to some salient features connected with this department. Because, the time allotted to me is only 15 minutes.

Sir, nobody can deny the fact that this is a very important department and the Government must concentrate their attention on this department and give top priority to the expenditure incurred on this department. Because, it is a question of life and death. Medical and Public Health departments should do a lot of service to the public. The important question that is engaging the attention of the Government is dearth of medical personnel both in the public health and medical sectors. What is the reason for this? This is a very serious point that has been engaging the attention of the Government for the past so many years. Still, the Government have not solved this important problem. 12-2[illegible] p.m.

In the Second Five-Year Plan, the Government have taken up many schemes. But still, we find that for want of technical personnel, many schemes have to be shelved, though we may say

that they are all paper schemes. Take for instance, the case of medical practitioners in the rural areas. As pointed out by some hon. Members, many of the dispensaries in the mufassal—both in the rural and other local fund dispensaries are now without doctors. Even the primary health centres are without any doctors. I should say that the most important thing is scales of pay. You find from the Hon. Minister's speech circulated in the form of a pamphlet that 'there is also a proposal to give a rural allowance of Rs. 50 for Medical Officers in Primary Health Centres in addition to Rs. 50 paid as compensatory allowance for loss of private practice.' This is not given to the medical practitioners in the rural dispensaries. They have to address the Director of Medical Services in the matter. So, there is lot of delay in paying this allowance to them. My submission is that there should be a uniform allowance for all the medical practitioners. As far as the medical practitioners in the urban areas are concerned, they are given what is called the non-practising allowance. The same consideration should be shown to the medical practitioners serving in the rural parts. Because, many medical practitioners do not at all want to go to the rural parts for the simple fact that they are not having the same amenities as they have in the urban areas. That is a point for very serious consideration. I understand that the Government of West Bengal are paying about Rs. 200 or so per month as allowance or pay. But, we do not give any such thing. Hence, we find that most medical men are not going to villages.

Coming to the question of Colleges, I am glad that the Government of Madras have practically decided to start a College at Tanjore. I am sure that at least in the next year they will think of starting one College at Coimbatore. I understand that some people have come forward to give some private aid for the starting of a college at that place. I think there is need for starting a college there. That should be given top priority.

With regard to the teaching section, I think that the shift system should be adopted. My information is that the University is not in favour of the shift system.

Whatever it is, there should be a high level discussion with the Vice-Chancellor of the University who is also an authority on this subject. We must pay better pay to the teaching staff and have a shift system so that more students could be taken into our existing colleges. That is an important factor which should be looked into as early as possible.

With regard to post-graduate courses, I understand the Andhra University with all its dearth of qualified personnel is going ahead with its scheme as speedily as possible. It is turning out more men with post-graduate qualifications. What happens in our State? If you take Medicine and Surgery, if 60 or 70 persons appear for the post-graduate Degree Examination, only some 2 or 3 pass. I do not mean to say that the standards should be lowered. We must see that more facilities are given to the students so that more



may come out successful. Plenty of facilities should be afforded to students who want to go abroad and specialise. I have been drawing the attention of the Hon. Minister to the necessity for top priority being given to the question of sending our men abroad. Unless this is done, there will be lot of difficulties in manning our hospitals efficiently.

With regard to headquarters hospitals, my submission is that they should be upgraded and put in charge of persons with post-graduate qualifications. Unless they are run on up-to-date lines, the congestion in the hospitals in the metropolis—the Stanley Hospital and the General Hospital—will not be relieved.

With regard to the College of Integrated Medicine, it is neither allopathic nor Ayurvedic nor Unani. On a previous occasion, we passed an Act concerning the practitioners of this system of medicine. But we find that on account of certain difficulties, the Act has not been put into effect. If it is not possible to bring it into effect, why not the Government consider the desirability of converting that College into a pucca allopathic institution? Nearly 50 per cent of the candidates who seek admission to that institution do not join the course. I understand that the Andhra Government have withdrawn all their students from this college. So, unless it is converted into an allopathic institution and more students are admitted, our problem will not be solved. In this connection I would suggest that, if necessary, a separate school may be started for teaching homoeopathy or Ayurvedic. As it is, it is neither fish nor flesh that we have in this college.

As for pre-clinical subjects like Anatomy and Physiology, we find there is a dearth of teaching personnel. My submission is that the age of retirement of the Professors of these sections should be raised to 60 or 65 years, according to the state of health of the individual concerned. Another thing is, recently the Government found it difficult to post suitable persons for work in the Stanley and the General Hospitals. Though these vacancies have been filled up now, we have no 'second line of defence'. When these men retire, what do the Government propose to do? Unless we get men with post-graduate degree in large numbers, we will not be able to solve the problem.

The next point I would impress upon the Government is the necessity for upgrading the Royapettah Hospital in Madras which caters to the needs of the population in the South of Madras City. This should be raised to the level of the General Hospital so that it could be converted into a teaching institution. It has got temple gardens and other buildings attached to it and it can easily be converted into a Medical College on the model of the Madras Medical College, which is doing very good work. I hope the Government will consider this question as early as possible.

With regard to the Corporation Dispensaries, my submission would be that they also should be upgraded and that sufficient financial assistance should be given to the Corporation for maintaining them. As regards the Infectious Diseases Hospital at

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [19th March 1958

Tondiarpet, I suggest that it be taken away from the Corporation and run on more efficient lines by the Government themselves. As it is, medical students are taken there and given tuition. Unless the Government take it over, I do not think that the Corporation will be able to maintain it efficiently and run it on modern lines in the matter of teaching. It should also be upgraded and all infectious disease patients should be admitted only there. We find in the Stanley and the General Hospitals many infectious cases like typhoid. The Government should completely abandon the idea of admitting such cases in these hospitals.

Some time ago there was a proposal to have a separate hospital for invalids somewhere at Avadi or so. I do not know what the Government have done in the matter. I shall be glad if the Hon. the Minister tells the House at what stage the matter stands.

One hon. Member who hails from Saidapet mentioned about the difficulties of admission to the Tuberculosis Sanatorium at Tambaram. It is true that patients are waiting to be admitted. My submission would be that the bed-strength should be increased sufficiently so as to take in at least urgent cases without delay. Unless this is done, this problem will not be solved. This is a very serious and urgent matter which the Government should look into immediately. The Lady Willingdon Sanatorium and Belgian Team are doing work very satisfactorily in the field of leprosy. Here also there are many difficulties like lack of houses for patients. More aid should therefore be given to such Sanatoria and Leprosy Clinics.

Next I would refer to the delay in the matter of supply of medicines from the Medical Stores. Many hon. Members have spoken on this subject. Though purer quality medicines are available, yet they are not supplied to the hospitals in time. The result is the amount allotted for the purpose gets lapsed and this must be looked into.

Next I would come to the preventive side of medicine—Public Health. More attention should be paid to this aspect of medicine. We find when cholera or smallpox breaks out in the remotest parts of villages, the officers do not go there in time and provide adequate or early relief to the people. The Government should purchase more mobile vans so that quick action might be taken as soon as reports about such outbreaks in the villages are received.

12-40 p.m. So also with regard to sanitation and hygiene. Especially in urban areas as we find the slums are coming up like anything. Much attention has not been paid with regard to improving the conditions of these slums.

About water-supply, the complaint is that certain districts are given top priority while some others are neglected. It should not be so. Whatever it is so far as the urban water-supply problem is concerned we find from the answer given by the Hon. Minister the other day that they have allowed Rs. 14 lakhs to lapse under



19th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

this head. There seems to be some difficulty in solving this problem. Many important cities like Tiruchirappalli and Kancheepuram have been completely neglected. Unless these difficulties are removed there will be no salvation. All these contagious diseases I need not say, are the result of people taking impure water. Water-supply is the greatest problem of these municipalities. In Kancheepuram I have seen people waiting in long queues for hours together before public taps for water. Something must be done—even by holding a high-level conference—to send the top engineers to these parts at least in urban areas and municipalities and push through the work. (An hon. Member: It is because of over-population.) Whatever it is, this a very important problem and I would request the Hon. Minister to pay special attention to this.

With regard to adulteration of foodstuffs we find sufficient attention has not been paid by the Health staff. People are let off with light punishments and most of the offenders escape the Act. The Act is not very rigidly enforced. My submission is that the Public Health Department should be very severe in punishing people who indulge in adulteration of food. These are my submissions and I hope the Hon. Minister will implement all these suggestions.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மானியம் மிகவும் முக்கியமானது. இதன் பேரில் பதினைறு கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அரிய யோசனைகளைச் சொன்னார்கள். சிலர் விசித்திரமான யோசனைகளையும் சொன்னார்கள். குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாகத்தான் விசித்திரமான யோசனைகள் சொல்லப்பட்டன. நாம் இரண்டு கோணங்களிலிருந்து பார்க்க வேண்டும். ஒன்று அடிப்படையாக இருக்கக்கூடிய நிலைமை. இரண்டாவது நிர்வாகத்திலே ஏற்படுகிற குறைபாடுகள், ஊழல்கள், இவைகளை எப்படி திருத்த முடியும் என்று பார்ப்பது.

முதலாவது அடிப்படை நிலைமையை எடுத்துக் கொண்டால் நம் நாட்டில் ஜனத்தொகை அதிகம். அதை யாரும் மறுக்க முடியாது. உலகத்தில் சீனாவுக்கு அடுத்தபடியாக நம் நாட்டில்தான் அதிகமான ஜனங்கள் இருக்கிறார்கள். சில நாடுகளில் ஜன உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு சலுகைகள் கொடுக்கிறார்களே. அப்படி எல்லாம் இருக்கும்போது நாம் ஏன் குடும்பக் கட்டுப்பாடு என்று செய்ய வேண்டும் என்கிறார்கள். அங்கே ஜனத்தொகை குறைவு. அங்கே அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. இங்கே ஜனத்தொகை அளவுக்கு அதிகமாக இருப்பதால் இதை அனுசரிக்கிறோம். இன்னும் உற்பத்தி அதிகப்படுத்த சப்ஸிடி கொடுப்பது என்று ஆரம்பித்தால் இந்த நாட்டில் பெரிய விபரீதம் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஒரு பத்திரிகையில்கூட நான் பார்த்தேன். ஜன உற்பத்தி இதே வேகத்தில் போய்க்கொண்டிருந்தால் 200 வருஷங்களில் பூமியில் மனிதர்கள் நிற்பதற்குக் கூட இடம் இல்லாமல் போய்விடும் என்பதாக எழுதியிருந்தது. எத்தனையோ விஷயங்களை மிகைப்படுத்திப் பேசுகிறோமே அப்படி இதைக் கொஞ்சம் மிகைப்படுத்தி எழுதியிருப்பதாக வைத்துக் கொள்ளலாம். ஆகையால் நமக்கு எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குக் குறைத்துக் கொண்டால் போதுமானது என்று நினைக்கிறேன். ஜனத்தொகை அதிகம் இருந்தால்தான் எதிராளி படையெடுத்தால் ஜெயிக்க முடியும் என்பது சரியல்ல. புராணத்திலேயே ஆதாரங்கள் இருக்கின்றன. பஞ்சபாண்டவர்கள் ஐந்து பேர். கௌரவர்கள் நூறு பேர்கள். அவர்களை இவர்கள் அழித்துவிட்டார்கள். சுலபமாகத் தோற்கடித்துவிட்டார்கள். ஆகவே எண்ணிக்கை அதிகம் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. இருக்கிறவர்கள் ஆரோக்கிய

மாக, திடகாத்திரமாக இருந்தால் போதும். எண்ணிக்கை குறைவாக இருந்தால் பரவாயில்லை. இருக்கிறவர்கள் திடமாகவும், ஆரோக்கியமாக மாகவும் இருப்பதற்குப் பாடுபட்டால் போதும்.

இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதம் செய்த போது மேல்நாட்டைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மேல்நாட்டில் கொடிய நோய்கள் ஒழிக்கப் பட்டன, காலரா இல்லை' வைசூரி இல்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன கர்ரணம் என்று நாம் ஆராய வேண்டும். முதலில் ஜனத் தொகை குறைவு. இரண்டாவது நம் நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், மேல்நாட்டில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. உச்ச நிலையில் இருக்கிறது. அங்கு கல்வியும் பெருவாரியாகப் பரவியிருக்கிறது. இங்கு கல்வி இல்லாமையைப் பார்க்கிறோம். கொடிய தொத்து நோய்கள் பரவும்போது அதற்கு உண்டான தடுப்பு முறைகளைக் கையாளாமல் மாரியம்மா என்பதாக என்ன என்னவோ பூசை போடுகிறார்கள். அப்படிச் செய்வதனால் நோய் வராமல் இருந்தாலும் பரவாயில்லை. ஜனங்கள் மாண்டு கொண்டுதான் இருக்கிறார்கள். கல்வி குறைவினால் ஏற்படுகிற கஷ்டம் இது. மேலும் மேநாடுகளில் ஆயிரம் பேர்களுக்கு ஒரு தகுதி வாய்ந்த டாக்டர் இருக்கிறார். இங்கே ஏழாயிரம் பேர்களுக்குக்கூட ஒரு டாக்டர் கிடைப்பது அரிதாய் இருக்கிறது. போதுமா ன டாக்டர்கள் இல்லாததும் ஒரு குறை என்று நன்றாக விளங்குகிறது. இன்னொன்று மேல்நாட்டாரிடத்திலே சேவா மனப்பான்மை வளர்ந்திருக்கிறது. நம் நாட்டில் இல்லை என்று சொல்லவில்லை. முன்பு இல்லை. இப்போது சில வ்ருஷங்களாகத்தான் வளர்ந்து வருகிறது. இன்னும் அதிகமாக வளர வேண்டும். மேல் நாட்டிலிருந்து பல தகுதி வாய்ந்த டாக்டர்கள் எல்லாம் இங்கே வந்து சேவா மனப்பான்மையோடு வேலை செய்து வருகிறார்கள். பெல்ஜியம் யூனிட் வேலை செய்கிறது, வேலூரில் மிஷின் ஆஸ்பத்திரி உள்ளது. தென்னாற்காடு மிஷின் வேலை செய்கிறது. அதற்காக இப்போது அவர்கள் வாங்குகிற சம்பளத்தைப் போல பத்து மடங்கு சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் வாழ்க்கை நடத்த எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பணத்தைத்தான் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். ஆராயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து வேலை செய்கிறார்கள். பெல்ஜியம் யூனிட்டை நான் போய்ப் பார்த்தேன். அவர்கள் தென்னங்கீற்றினால் ஆன குடிசைகளில் வாழ்கிறார்கள். நம் நாட்டில் உள்ளவர்கள் தாம் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் வசதியில்லை, சௌகரியம் இல்லை என்கிறார்கள். இந்த மனப்பான்மை மாற வேண்டும். சட்டம் மூலமாக என்னதான் செய்தாலும் ஓரளவுதான் பயன்படும். இந்த மனப்பான்மை மாறினால்தான் டாக்டர்கள் கிடைப்பார்கள். மேல்நாடுகளில் முன்பு ஏற்படுத்திய ஆஸ்பத்திரிகளைச்கூட மூடிவருகிறார்கள். T.B. போன்ற வியாதிகள் இங்குதான் ஜாஸ்தியாக இருக்கிறது. அங்கே பொது சுகாதாரம் பெருகியிருப்பதனால் ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளிகளே இல்லை. நாம் இன்னும் அதிகமான பொது சுகாதாரத்தில் சில காலம் கவனம் செலுத்தினால் அந்த நிலைமை கொஞ்சம்கொஞ்சமாக ஏற்படும்.

வைத்தியர்கள் குறைவு என்றும் வைத்தியர்கள் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள் என்றும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றது. நான் சொன்னேன் தகுதியுள்ள வைத்தியர்கள் குறைவு என்று. ஆனால் சிலர் நினைக்கிறார்கள் வைத்தியர்கள் ஏராளம் பேர்கள் இருக்கிறார்கள் என்று. எனக்கு ஒரு ருசிகாமான கதை நினைவிற்கு வருகிறது. அக்பரின் காலத்தில் அக்பருக்கு பிரதம மந்திரியாக பிர்பால் என்று ஒருவர் இருந்தார். அப்பொழுது ஏதோ ஒரு பிரச்னை எழுந்து, அக்பர் பிர்பாலைக் கேட்டார், மக்களில் எந்தத் தொழிலை அதிகம் பேர்கள் கையாள்கிறார்கள் என்று கேட்டார். அப்பொழுது பிர்பால் வைத்தியத் தொழிலை கையாள்கிறவர்கள்தான் அதிகம் என்று சொன்னார். அக்பருக்கு கோபம் வந்துவிட்டது, " நீ முட்டாள் " என்றார். " எல்லோரும் வைத்தியர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நீயோ வைத்தியம் தெரிந்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்கிறாயே " என்றார். பிர்பாலோ மகா புத்திசாலி. அவர் அதை மனதில் வைத்துக் கொண்டார். ஒரு இரண்டு



நாட்கள் பொறுத்து அவர் தலையில் நோயாளி மாதிரி ஒரு கட்டு கட்டிக் கொண்டு தெரு வழியாகப் போனார். தெருவில் போகிறவர்கள் எல்லோரும் என்ன கட்டு கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பிர்பால் எனக்கு தலை நோய் என்று சொன்னார். உடனே அவர்கள் இந்த இலையை வைத்து கஷாயம் செய்து சாப்பிட்டால் நோய் போய்விடும் என்றார்கள். உடனே அதை அவர் ஒரு நோட் புக்கில் குறித்துக் கொண்டார். இப்படி அவரை வழியில் பார்த்த ஒவ்வொருவரும் என்ன என்ன என்று கேட்க, அவர் தலை நோய் என்று பதில் சொல்ல அதற்கு அவரவர்கள் அவரவர்களுக்குத் தெரிந்த மருந்தைச் சொன்னார்கள். அந்த மருந்துகளை எல்லாம் அவர் தம் கையில் உள்ள புத்தகத்தில் குறித்துக் கொண்டார். பின்னர் அவர் அந்தக் கட்டோடு அக்பர் தர்பாருக்கு வந்தார். அவரைக் கண்டதும் அக்பர் தலையில் என்ன கட்டு என்று கேட்டார். உடனே அதற்கு பிர்பால் தலைநோய் என்று சொன்னார்கள். உடனே அவர் ஒரு இலை இருக்கிறது அதை கஷாயம் வைத்துச் சாப்பிட்டால் போய்விடும் என்று சொல்ல அதையும் அவர் நோட் புக்கில் குறித்துக் கொண்டரர். என்னதை குறித்துக் கொள்கிறீர் என்று கேட்க, பிர்பால் எத்தனையோ பேர்கள் வைத்தியம் சொல்லியிருக்கிறார்கள், அவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். அதேபோல், வைத்தியர்கள் கூடுதல் இருந்தால் போதாது. தகுதியுள்ள வைத்தியர்கள்தான் நமக்கு வேண்டும். ஆகவே அதிகம் பேர்கள் நன்கு வைத்தியம் படித்து தேர்ச்சி அடைய நாம் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த நோக்கத்தோடுதான் தஞ்சாவூரில் ஒரு வைத்திய கல்லூரி ஏற்படுத்தி அதில் அதிகம் மாணவர்களைச் சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அங்கு காலேஜ் ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தாய்விட்டது. சர்வகலாசாலையின் அனுமதி இவைகளெல்லாம் வேண்டும். அதெல்லாம் கிடைத்துவிட்டால் இந்த வருஷமே ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நோய் வந்த பிற்பாடு வைத்தியம் செய்கிறோம். ஆனால் நோய் வராமல் தடுப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டு நோய் வராமல் அல்லது நோய் பரவாமல் தடுக்கலாம் என்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதாவது, ப்ரவன்டீவ் மெஷர்ஸ். அதற்கு முதலாவதாக நமது பழக்க வழக்கங்களை மாற்றி யமைக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தியாவில் எந்த யிடத்தில் புஷ்டிக் குறைவான சாப்பாடு சாப்பிடுகிறார்கள் என்றால், அது தென்னிந்தியாவில்தான். காரணம், நாம் சாதாரணமாக சாதம்தான் சாப்பிடுகிறோம். மற்றவர்கள் கோதுமை சாப்பிடுகிறார்கள், சிலர் கேழ்வரகு, சோளம் இவைகள் சாப்பிடுகிறார்கள். இங்கு அரிசியைத்தான் பிரதானமாக சாப்பிடுகிறார்கள். அதிலும் சாப்பிடும் முறையும் மோசமாக இருக்கிறது. அரிசியை மில்லில் குத்தி தவிடு போன்ற போஷாக்குச் சத்துக்கள் எல்லாவற்றையும் போக்கிவிட்டு வெள்ளையாக இருக்கிற அரிசியைத்தான் சாப்பிடுகிறோம். அதோடு சமையல் செய்யும் விதமும் மோசம். அந்த அரிசியில் கொஞ்சநஞ்சம் இருக்கிற சத்தும் தண்ணீரை வடிகட்டுவதால் போய் விடுகிறது. ஆகவே நாம் சாப்பிடும் உணவு ஆரோக்கியமான உணவல்ல. ஆகவே அதற்காக " நுட்ரீஷன் ப்ராஞ்ச் " ஒன்றை ஏற்படுத்தி, நன்கு ஆராய்ச்சி செய்து இந்த மாதிரி சாப்பிட்டால்தான் ஆரோக்கியமாக இருக்க முடியும் என்று பிரசாரமும் செய்யப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக, " என்வயர்ன்மென்டல் சானிட்டேஷன்." இருப்பிடம், சூழ்நிலை இவைகள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பூனமல்லியில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அநேகம் கிராமங்களில் பிரசாரமும் செய்யப்பட்டு வருகிறது. அதோடு குடும்பக் கட்டுப்பாடும் ஓரளவிற்கு இருந்தால்தான் பிரயோஜனப்படுமே தவிர இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை. ஒரு அங்கத்தினர் சொன்னார், 5, 6, 7-வது குழந்தையாகப் பிறந்தால் புத்திசாலியாக இருக்கும் என்று. நான் சொல்வது, பிஞ்சு விதையைப் போட்டால் அது முளைக்கிறதில்லை. நல்ல விதையாகப் பார்த்துப் போட்டால்தான் பயிர் நன்றாக இருக்கிறது. ஆகவே, நான் சொல்வது, இந்த ஸ்பேஸிங் என்று சொல்கிறார்களே, அது இருக்க வேண்டும். வருஷாவருஷம் பிள்ளைகள் பெரு

[Sri M. A. Manickavelu] [19th March 1958

மல் இருக்க வேண்டும். இந்த ஸ்பேஸிங் இருந்தால் குழந்தைகள் நன்றாக இருக்கும். தேக பலத்தோடு கூட மூளை பலமும் அதிகம் இருக்கும். அதைப்பற்றி நான் கூடுதலாக ஒன்றும் சொல்ல உத்தேசிக்கவில்லை.

நாம் என்னதான் அதிக டாக்டர்களை உற்பத்தி செய்தாலும், என்னதான் அதிகம் காலேஜ்கள் ஏற்படுத்தினாலும் நம் நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், ரூரல் டிஸ்பன்ஸரிகளுக்கும் தேவையான டாக்டர்கள் கிடைக்கப் போவதில்லை. ஆகவே, அதை நம்பிப் பிரயோஜனமில்லை. ஆகவே, கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு நாம் வேறு ஒரு முறையைக் கையாள வேண்டும். ஆகவே, இன்டீஜினஸ் ஸிஸ்டம் ஆப் மெடிஸின்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். அதன்படிதான் நாம கிராமங்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க முடியும். ஆகவே அதை உத்தேசித்து மத்திய அரசாங்கம் இதை ஊக்குவிக்க இப்பொழுது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டு வைத்திய முறையை, நல்ல விஞ்ஞான முறையில் திருத்தியமைத்து அதை மக்களுக்கு உபயோகப் படுத்தும் முறையில் அதற்கு ஆராய்ச்சி சாலை, ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ஜாம்நகரில். சென்னையிலும் ஒரு ரிசர்வ் நிலையம் ஏற்படுத்துவதாக உத்தேசம். சித்த வைத்தியம் என்பது நம் ராஜ்யத்தில்தான் இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லி விடுகிறேன். சித்த வைத்தியம் பற்றிய ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி எந்த வகையில் அதைக் கொண்டு மக்களுக்கு சேவை செய்யலாம் என்பது ஆலோசனையில் இருக்கிறது. கூடிய சீக்கிரம் அம்மாதிரி ஒரு நிலையம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதோடு இதில் செலவும் குறைவு. அலோப்பதி முறையில் ஒரு ரூபாய் செலவாகுமானால் உள்நாட்டு வைத்திய முறைப்படி இரண்டு அணாதான் செலவாகும். எனக்கு சொந்த அனுபவம் இருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் வைத்தியம் பார்த்து விட்டு அது பிரயோஜனப் படாமல் கிராம வைத்தியர்களிடம் போய் எண்ணெ, லேகியம், பஸ்பம் என்று ஏதாவது கொடுத்து அதனால் எத்தனையோ பேர்கள் குணமடைந்திருக்கிறார்கள். செலவும் அதிகம் ஆகாது. ஏதோ எட்டணா, பத்தணா கொடுத்தால் போதும். இப்படிப்பட்ட நல்ல ஒரு வைத்திய முறை இருக்கும்போது ஏன் மக்களில் பலர் வேறு வைத்தியத்திற்கு செல்கிறார்கள். என்று கேட்டால் பிர்பால் கதையைப் போல் எல்லோரும் தாங்கள் வைத்தியர்கள் என்று நினைத்துக்கொண்டு மருந்து சொல்லவோ அல்லது வைத்தியம் பார்க்கவோ ஆரம்பித்து விடுகிறார்கள். ஒன்றும் தெரியாதவனும், நானும் வைத்தியன் என்று போர்ட் எழுதிப் போட்டுக்கொண்டு வைத்தியம் செய்கிறான். அதனால் சில பேர்களுக்கு குணமாகலாம். ஆனால் சிலருக்கு நேர்மாறாக கெட்டதும் ஏற்படலாம். ஆகவே, அவர்கள் இதை யெல்லாம் பார்த்து இந்த வைத்தியம் பிரயோஜனமில்லை என்று மேல்நாட்டு வைத்திய முறைக்குச் செல்கிறார்கள். ஆனால் இந்த நாட்டு வைத்திய முறையில் கெடுதல் ஒன்றுமில்லை. முறை, நல்லதுதான். இடைக் காலத்தில் இதை சரிவர வளர்க்காமல் அலட்சியமாக விட்டு விட்டபடியால் நல்ல நல்ல சிகிச்சை முறைகளெல்லாம் போய்விட்டது.

அனேகர் இந்த புதிய முறைகளை வெளியில் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் அதை மாத்திரம் தனக்கு என்று வைத்துக் கொண்டு பணம் சம்பாதித்து கொண்டிருக்கிறார்கள். அங்கேதான் இருக்கிறது, தாராள மனப்பான்மை இல்லாமை. இந்த மனப்பான்மை மாறவேண்டும். இவ்விதம் தனக்கு தெரிந்ததை மறைத்து வைத்துக் கொள்ளுகிறார்கள். கேட்டால், இதை வெளியில் சொன்னால் பலிக்காது என்றும் சொல்லி விடுகிறார்கள். இவ்விதம் அனேக சிறந்த முறைகள் எல்லாம் மறைந்து கொண்டே வருகிறது. இவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தாலும் கண்டு பிடிக்க முடியாத நிலைமையில் மறைந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் இதில் கிடைக்கக்கூடிய நல்ல முறைகளைக் கொண்டு பரீட்சை செய்து பார்ப்பதற்காக பூந்தமல்லி ஹை ரோட்டில் இருக்கும் ஸ்தாபனத்தில் இந்த மருந்துகளை கொடுத்துப் பார்த்து அங்குள்ள நோயாளிகளின் முன்னேற்றத்தை கணக்கெடுத்துப் பார்த்து புள்ளி விவரம் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் பல மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதை யெல்லாம் நல்ல முறையில் செய்தால் நாட்டு மக்கள் கட்டாயம்



19th March 1958] [Sri M. A. Manickavelu]

உபயோகப்படுத்துவார்கள். இதற்கு செலவு ரொம்பவும் குறைவு. இதைக் கொண்டு கூடுமான வரையில் கிராமங்களுக்கு கூடுதல் வைத்திய வசதிகளை அளிக்க முடியும் என்று சொல்ல பிரியப்படுகிறேன்.

தொத்து நோயைப்பற்றி சொல்லப்பட்டது. மேனாட்டில் தொத்து நோய்கள் அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். நம் நாட்டில் இப்போது குறைந்து கொண்டு வருகிறது. முன்னால் இருந்ததை காட்டிலும், சுமார் 20 வருடங்களுக்கு முன் அனேகர் காலரா போன்ற நோயினால் இறந்து கொண்டிருந்தார்கள். இப்போது அப்படி ஒன்றுமில்லை. இப்போது இந்த நோய் குறைந்திருக்கிறது. இந்த அளவுக்கு நம் நாட்டில் தொத்து நோய் இருப்பதற்கு காரணம் குடிதண்ணீர் சரியாக கிடைக்காததினால்தான். அரசாங்கம் இதில் முழு கவனம் செலுத்தி வேண்டிய அளவு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுத்து வருகிறது. இருந்தாலும் போதிய அளவுக்கு வசதி செய்து கொடுக்க முடியவில்லை. இப்போது நமது அரசாங்கம் இதற்காக போட்டிருக்கிற திட்டங்களுக்கு எல்லாம், சில சேர்ந்து 873 லட்சம் ரூபாய் நமக்கு வேண்டியிருக்கிறது. இதற்கு மத்திய சர்க்காரிடத்தில் கடனை கேட்க வேண்டும். முதலில் ஒன்றே முக்கால் கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். இது காணாது என்று திரும்பத் திரும்ப எழுதின பிறகு மூன்று கோடி சில்லறையாக உயர்த்தினார்கள். இப்போது அது ஐந்து கோடி அளவுக்கு வந்திருக்கிறது. எப்படியாவது எட்டு கோடியாவது வாங்கிவிட வேண்டும் என்று விடாப்பிடியாக இங்கிருந்து கடிதப் போக்கு வரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். நமக்கு இந்த திட்டங்களுக்கு எல்லாம் அதிகமாக பணம் வேண்டியிருக்கிறது. உதாரணமாக தாராபுரத்தைப்பற்றி சொன்னார்கள். இந்த இடத்திலுள்ள திட்டத்தை இதில் சேர்க்கவில்லை. அந்த இடத்தை அமைச்சர் வந்து பார்த்தார் என்று எல்லாம் சொன்னார்கள். அவர் சொன்னதும் பரிதாபமாகத்தான் இருந்தது. நான் அதற்கு ஒரு குறுக்கு வழி கண்டு பிடித்து இருக்கிறேன். அது பலன் அளிக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த இடத்தில் வருஷா வருஷம் காலரா நோய் ஏற்படுகிறது. அந்த புள்ளி விவரத்தை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அதை யெல்லாம் கேட்டு வாங்கி வைத்திருக்கிறேன். ஆகவே அந்த இடத்தில் "டாப் பிரையாரிட்டி" கொடுத்து அதாவது எக்ஸ்பிரஸ் ட்ரெயின் வந்தால் குட்ஸ் ட்ரெய்ன்களை யெல்லாம் நிறுத்தி வழி கொடுப்பது போல இதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இங்கேயுள்ள கால்வாயிலுள்ள தண்ணீரை அங்குள்ள மக்கள் குடிப்பதினால்தான் இந்த நோய் ஏற்படுகிறது. ஆகவே இந்த இடத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு பணம் கடனை கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். இதைப்பற்றி சலுகையுடன் கவனிக்கலாம் என்று மேலிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினருக்கு இது ஆறுதல் அளிக்கும் என்றுதான் இதை நான் சொல்லுகிறேன். மலேரியாவைப்பற்றி சொன்னால், மலேரியா பெரிய அளவில் இருந்தது. இப்போது குறைந்திருக்கிறது. சிங்கோனாவுக்கு கிராக்கி இல்லை என்று சொல்லப்பட்டது. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம், இருந்தாலும் மலேரியா நோய் பாதிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் குறைந்திருக்கின்ற காரணத்தினாலும் சிங்கோனாவின் கிராக்கி குறைந்திருக்கிறது. மலேரியாவை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்றுதான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தியாவில் மலேரியா நோயே இல்லை என்கிற அளவுக்கு கொண்டுவர வேண்டும் என்கிற அளவுக்குதான் இப்போது வேலை செய்யப்பட்டு வருகிறது. யானைக்கால் நோயும் இவ்விதம்தான், அதையும் ஒழிப்பதற்கு வேண்டி, சமீபத்தில் கும்பகோணத்தில் இதற்காக ஒரு இன்டென்ஸிவ் காம்ப்பெயின் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. "ஹார்ட்டிஸான்" மாத்திரை கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த திட்டம் பரவலாக எல்லா இடங்களுக்கும் வந்தால் இந்த நோயை அடியோடு ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே மாதிரிதான் நரம்புச் சிலந்தி நோயும் கடுமையான நோய்தான். இதுவும் கெட்ட தண்ணீரை குடிப்பதினால்தான் வருகிறது. இதையும் எந்தெந்த முறையில் ஒழிக்க முடியும் என்று ஆராய்ந்து பார்த்து இதற்கென்று ஒரு யூனிட் வேலை செய்து வருகிறது. இந்த நோய்களுக்கெல்லாம் காரணம் சரியான படி குடிதண்ணீர் வசதி இல்லாததுதான். உடையார்பாளையத்தில் குடி

[Sri M. A. Manickavelu] [19th March 1958

தண்ணீர் வசதியைப்பற்றி சொல்லப்பட்டது. அந்த இடத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டு இந்த சமயத்தில் அது நிறைவேறி யிருக்க வேண்டும். ஆனால் சில டெக்னிக்கல் மென் இல்லாததினாலும் சில சாமான்கள் இல்லாததினாலும் அதில் தாமதம் ஏற்பட்டது. இப்போது அது எல்லாம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. உடனடியாக இவை எடுத்துக்கொள்ளப்பட்டு ஒரு முடிவுக்கு வரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே நாம் நமது மக்களுக்கு போதுமான வைத்திய வசதிகளை செய்து கொடுக்க வேண்டு மென்றால், அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் ஓரளவுக்கு உயர்ந்திருக்கவேண்டும். இதற்கு மக்களுடைய மூடப் பழக்க வழக்கங்கள் மாறவேண்டும். இதற்கு ஒவ்வொரு வருஷமும் இந்த மான்யம் வரும்போது பேசிவிட்டால் மாத்திரம் மாறிவிடாது. இந்த திட்டத்தைப்பற்றி மக்களிடம் நல்ல பிரசாரம் செய்ய வேண்டும். அரசாங்கம் மாத்திரம் இதில் ஈடுபட்டால் போதாது. பொதுஜன ஊழியர்கள் இதில் ஈடுபட்டு பிரச்சாரம் செய்யவேண்டும். அப்படியானால்தான் ஓரளவுக்கு பலன் கிடைக்கும். இதில் நல்ல அளவுக்கு பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்ததாக பப்ளிக் ஹெல்த் இலாகாவையும் மெடிக்கல் இலாகாவையும் ஒன்றாக சேர்த்து விடலாம் என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அனுபவம் வாய்ந்த சோமசுந்தரம் அவர்கள் கருத்தைச் சொன்னார்கள், தியாகராஜன் அவர்களும் இதைப்பற்றிச் சொன்னார்கள். அரசாங்கமும் இதை இணைத்துவிட்டால் நல்லது என்று நினைத்தது. ஆனால் அதை பரிசீலனை பண்ணிப் பார்த்தபோது இதில் சில கஷ்டங்கள் இருப்பதாக தெரிய வந்தது. திடீரென்று பப்ளிக் ஹெல்த் டயரக்டர், மெடிக்கல் டயரக்டர் என்றிருப்பதை மாற்றி ஒருவரை மாத்திரம் நியமிப்பதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஒரு கட்டிடத்தை நாம் எப்படி கீழேயிருந்து படிப்படியாக செய்து கொண்டு வருகிறோமோ அதே மாதிரி அடிப்படையில் இருந்தே இதை மாற்றி அமைக்க வேண்டும். இப்போது ஒரு ஜில்லாவுக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் இருக்கிறார், ஒரு டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸரும் இருக்கிறார். இதை மாற்றி ஒன்றாக இணைப்பதாக இருந்தால் டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸரிடம் இந்த இரண்டையும் ஒப்படைக்கவேண்டும். இந்த இரண்டு வேலைகளையும் அவர் ஒருவரால் செய்ய முடியாது. அதற்கு ஒரு அஸிஸ்டண்டு டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் போட வேண்டும் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஒரு அவசரம் நிமித்தம் அந்த மெடிக்கல் ஆபீஸர் வேறு ஒரு இடத்திற்கு போயிருந்தால் பப்ளிக் ஹெல்த் விஷயமாக உடனடியாக கவனிக்க முடியாது. அதே மாதிரிதான் இதற்காக வெளியே போயிருந்தால் சில முக்கியமான சிகிச்சைகளுக்காக அவர் கவனம் செலுத்த முடியாது. இந்த நிலைமை ஏற்படும். ஆகையால் கொஞ்சம் கொஞ்சமாக கட்டிடம் கட்டுவது போலச் செய்ய வேண்டும். இப்போது ஓரளவுக்கு பிரைமரி ஸெண்டர்களில் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதாவது பிரிவெண்டிவ், க்யூரடிவ் என்ற அந்த அடிப்படையில் அங்கே ஆரம்பிக்கப்பட்டு அங்கே வகுக்கப்பட்டு, நடந்து வருகிறது. அது அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து தாலூகா, பிறகு ஜில்லா, என்ற முறையிலே கொண்டு வரலாமே தவிற, உடனடியாக செய்வது முடியாது, அதனால் விபரீதம் ஏற்படும். ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ந்து பார்த்தால், அதிலுள்ள கஷ்டம் தெரிகிறது. பொதுவாகப் பார்த்தால் செய்து விடலாமே என்று தோன்றுகிறது. அவசரப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்தரிப்பதுதான் உசிதம் என்று தாழ்மையுடனே தெரிவித்துக் கொள்கிறேன்.

1-10 p.m. இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் பற்றி சொல்லப்பட்டது. அது இப்போதுதான் அமுலில் வந்தது. வந்து $1\frac{1}{2}$ வருஷம், 2 வருஷம் இருக்கும். நல்லபடியாக அது பணியாற்றிக் கொண்டு வருகிறது. அதையே கிராமங்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏன் விஸ்தரிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது. அது அவ்வளவு சுலபமல்ல. இப்போதுதான் குறிப்பாக ஒரு சின்ன எண்ணிக்கையில் செய்து கொண்டு வருகிறோம். சாதாரணமாக ரூரல் டிஸ்பென்ஸரிகளையே சமாளிக்க முடியாமல் இருக்கும்போது இந்த இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமை கிராமங்களில் கொண்டு வர முடியாது. ஆனால், இந்தத் திட்டம் ஒரு இடத்திலே நல்ல முறையிலே வேலை செய்வதைப் பார்த்தேன். அதாவது வார்தாவில் நடக்கிறது. அங்கே ஒரு



19th March 1958] [Sri M. A. Manickavelu]

ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். காந்தி அம்மையார் பேரிலே ஆஸ்பத்திரி நடக்கிறது. பத்து—இருபது கிராமங்களில் அந்த இன்ஷ்யூரன்ஸ் வருவாயிலிருந்து நல்ல முறையில் வேலை செய்து கொண்டு வருகிறது. அம்மாதிரி செய்வதற்கு அங்கு ஊக்கம் உள்ள, சேவை மனப்பான்மை உள்ள நபர்கள் இருக்கிறார்கள். அம்மாதிரி நபர்கள் மற்ற இடத்திலும் இருந்தால்தான் எக்ஸ்பெரிமெண்டலாகச் செய்யமுடியும். இல்லையென்றால் களர் பூமியில் போய் நெல் சாகுபடி செய்வது மாதிரி ஆகும். அதை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அமுலுக்குக் கொண்டுவர முடியும்.

தனியாக க்ஷயரோக நோய்க்கு ஒரு ஆஸ்பத்திரி அந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்கீழ் ஏன் ஏற்படுத்தவில்லை என்று கேட்டார்கள். ஆங்காங்கு பெட்கள் ஏற்படுத்தி இருக்கிறோம். ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்ட இடம் பார்க்கவேண்டும், கட்டிடம் கட்ட வேண்டும். அது வரையில் "கட்டிடம் கட்டுகிறோம்" என்று சொல்லிக் கொள்ளாமலே, உடனடியாக ஆங்காங்கு பெட்கள் ஏற்படுத்தி ஓரளவுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் கவனத்தில் இருக்கிறது. அதுவும் கவனிக்கப்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்—ஏன் இந்த ஷிப்ட் ஸிஸ்டம் வைக்கக்கூடாது—என்று. அதைக் கேட்டவுடன் ஏன் வைக்கக் கூடாது என்று தோன்றுகிறது. அதற்கு சர்வகலாசாலை அனுமதி வேண்டும். அந்த ஸிஸ்டத்தினால் போதனு முறையில் தரம் குறையும் என்ற எண்ணம் இருக்கிறது. அதைப்பற்றி யோசனை செய்யலாம். கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளாமல், கலந்து பேசி—அதாவது டிஸ்கஸ் என்று சொல்வார்கள்—அந்த வகையிலே பார்க்கவேண்டியது. அதையும் பார்க்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

வெளி நாடுகளுக்கு அனுப்பி புதிய வைத்தியர்களுக்கு பயிற்சி இடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு இப்போதே இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. முன் காலத்திலே அம்மாதிரி பயிற்சிக்கு அனுப்பப்பட்டவர்கள் ஒரு வருஷம், இரண்டு வருஷத்தில் ரிடையராகிறவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அது பிரயோசனம் இல்லை. ஒரு வருஷம், இரண்டு வருஷத்தில் ரிடையராகிறவர்களை அனுப்பினால் அதனால் ஏற்படக்கூடிய நன்மை வீணாகிறது. அதை இப்போது பார்த்து 10 வருஷம் 15 வருஷம் சேவை செய்யக்கூடியவர்களை அனுப்ப வேண்டுமென்று வைத்திருக்கிறது. அதிகப்படியாக அனுப்ப வேண்டும் என்பதும் யோசனையில் இருக்கிறது.

"க்ரானிக் டிஸீஸஸ்" ஹாஸ்பிடல்—அதாவது தீரா வியாதி ஆஸ்பத்திரி சம்பந்தமான வரையில்—இப்போது இங்கே 10 பேஷண்டுகளுக்கு ஒரு நர்ஸ் என்று இருக்கிறது, தீரா வியாதியஸ்தர்களுக்கு 20, 30 பேஷண்டுகளுக்கு ஒரு நர்ஸ் என்று ஏற்படுத்தலாம். அதனால் ஸ்டாப் குறையும். சாதாரணமாக இன்றைக்கு ஜெனரல் ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டால் அங்கு இருக்கிறவர்களுக்கு, கிரானிக் பேஷண்டுகளுக்கு ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வருஷம் ஆகும் சொஸ்தமாவதற்கு என்று சொல்கிறார்கள். இதனால் புதிய நோயாளிகளுக்கு இடம் இல்லாமல் போகிறது. அந்த மாதிரி வியாதியஸ்தர்களுக்கு தனியாக ஒரு ஆஸ்பத்திரி, சென்னையில் இருந்தாலும் சரி, வெளியிலே இருந்தாலும் சரி, கஷ்டமில்லை என்று யோசனை செய்து திட்டத்திலே இருந்தது. இருபது லட்சம் ரூபாயிலே அம்மாதிரியான தீரா வியாதி ஆஸ்பத்திரி ஒன்று வைக்க வேண்டுமென்று இருந்தது. திட்டக் கமிஷனின் பணக் குறைப்பினால் அது நிறுத்தப்பட்டுவிட்டது. இப்போது அதைத் திட்டத்தில் சேர்க்கவில்லை. சிறிய அளவிலாவது இம்மாதிரி ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டுமென்ற உத்தேசம் இருக்கிறது. அதற்கு அரக்கோணத்தில் முன்பு ஏரோடிரோம் இருந்த இடத்தில்—சிப்பாய்களுக்கு ஆஸ்பத்திரி இருந்தது—இப்போது சில கட்டிடங்கள் இடிக்கப்பட்டு விட்டன—இருந்தாலும் 500 பேர்களுக்கு இட வசதி இருக்கும் என்று தெரிகிறது. அந்த இடத்தை மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி எந்த அளவுக்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

மெடிகல் ஸ்டோர்ஸ்பற்றி அங்கிருந்து மருந்துகள் சரியான காலத்தில் வருவதில்லை, தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதைப்பற்றி சுகாதார அமைச்சர்கள் மகாநாட்டில் பரிசீலனை செய்யப்பட்டது. சில காரணங்களால் அனுப்ப முடியவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொல்வது, இங்கிருந்து இண்டெண்ட் அனுப்புவதில் தாமதம் என்பது. இன்னும் பல காரணங்கள். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக அனுப்ப முடியுமோ அதை ஆராய்ந்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

இன்னும் இந்த நிர்வாகக் குறைபாடுகள், ஊழல்கள், இவைகளைப் பற்றி யெல்லாம் சொன்னார்கள். அவைகளை ஒவ்வொன்றாய்ப் பார்த்துச் சொல்வதற்கு அவகாசம் இருக்காது. இருந்தாலும் குறித்திருக்கிற வரையில் சொல்ல விரும்புகிறேன்.

ஹாஸூர் ஒரு பிற்போக்கான பிராந்தியம். அங்கு அவசியம் அந்த ஆஸ்பத்திரியை புரொவின்ஷியலைஸ் செய்ய வேண்டுமென்றுசொல்லப பட்டது. அதை உத்தேசித்துத்தான் ஹாஸூரை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த வருஷத்திலே திட்டமிட்டிருந்தது. ஆனால், "பிரிண்டர்ஸ் டெவில்" என்று சொல்வார்களே, அதனால் பட்ஜெட்டிலே "ஹாஸூர்" "ஹோசூர்" ஆகிவிட்டது. அப்புறம் என்ன செய்வது? ஆகையால் "ஹாஸூர்," "ஹோசூர்" இரண்டையுமே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே ஹாஸூரும் சேர்க்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அப்புறம் குஷ்டரோகப் பிச்சைக்காரர்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். இந்த மாதிரி பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு, அங்கு பஸ்ஸுக்காக வருபவர்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல. அதுவும் வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் அவர்களைப் பார்த்தால், அநாகரீகமாக இருக்கிறதே, அநாகரீக கவர்ன்மெண்டாக இருக்கிறதே என்று நினைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வெளி நாட்டிலெல்லாம் இந்த மாதிரி பிச்சை எடுப்பதில்லை என்று அங்கு போய் வந்தவர்கள் சொல்கிறார்கள். அங்கு சுத்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது அவ்வளவு பிச்சைக்காரர்கள் தொல்லை இல்லை. முன்பெல்லாம் எங்கே போனாலும் கை நீட்டுவார்கள். இப்போது குறைந்திருக்கிறது. முழுவதும் இல்லை என்று சொல்லவில்லை. மேல்பாக்கம் என்ற இடத்தில் ஒரு விடுதி ஏற்படுத்தி அவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறது. இன்னும் இது போன்று அதிகப்படியாகச் செய்துவிட்டால், கூடிய சீக்கிரத்தில் இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லை போய்விடும். அவர்களுடைய கஷ்டத்தையும் நிவர்த்திக்க திட்டம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அழுகிற குழந்தையைப்பற்றிச் சொன்னார்கள். "அழுகிற குழந்தை தான் பால் குடிக்கிறது"—அதாவது நிறைய கூப்பாடு போட்டால்தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அழுகிற குழந்தைக்கு தாய் பால் கொடுக்கிறார்கள். ஆனால் நல்ல தாயாராக இருந்தால் அழாத குழந்தைக்குக்கூட பால் கொடுப்பார்கள். அதற்கு கொஞ்சம் தனிப்பட்ட சலுகை கூடக் கொடுப்பாள்—"பாவம், குழந்தை அழக்கூட இல்லையே—பசியாக இருந்தாலும் இருக்கும்" என்று தூங்குகிற குழந்தையை எழுப்பிக்கூட பால் கொடுப்பார்கள். இந்தப் பழமொழி பழசாகப் போய்விட்டது, அது இந்தக் காலத்திற்கு எடுக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"நர்ஸ்" விஷயத்தைப்பற்றி கனம் ரஷீத் அவர்கள் சொன்னார்கள். "ஆண் நர்ஸ் போட்டிருக்கிறீர்களே, அது நல்லதல்ல, பெண் நர்ஸ்கள் இருந்தால் வியாதியே சீக்கிரத்தில் போய் விடுகிறது" என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். ஏனென்றால் அவர்கள் சிகிச்சை செய்வதிலே, நல்ல முறையிலே—(டெலிகேட் டச் என்று சொல்வார்கள்) பரிதாபத்துடன் செய்கிறார்கள். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஏன் மேல் நர்சுகளைப் புகுத்தி விட்டீர்கள் என்று கேட்டார்கள். முன்பு இருந்த சுகாதார மந்திரி



"மேல் நர்சுகளையும்" நியமிக்கலாம் என்ற ஏற்பாடு செய்துவிட்டார்கள். இந்த வருஷத்திலே "மேல் நர்சுகளை" எடுப்பதில்லை என்று திட்டம் செய்திருக்கிறோம். ஏனென்றால் மேல் நர்சுகள் "proportion" அதிகமாக இருக்கிறது. ஆகையால் பெண் நர்சுகளைத்தான் எடுப்பார்கள். பெண் நர்சுகளே இருந்தால் நல்லது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆனால், சில ஆஸ்பத்திரிகளில், உதாரணமாக பைத்திய ஆஸ்பத்திரி இன்னும் இதுபோன்ற தொந்தரவு தரக்கூடிய ஆஸ்பத்திரிகளில் ஆண் நர்சுகள் இருப்பது நல்லது.

அடுத்தபடியாக, சம்பளம் இல்லாமல் ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கக் கூடிய முறையை சில அங்கத்தினர்கள் வரவேற்கவில்லை. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இந்த "honorary system" நல்ல முறையில் நடக்கிறது. இரண்டொருவர் தவறுகள் செய்திருக்கலாம். அவர்களுக்குக் கொடுத்திருக்கிற வசதிகளை துர்விநியோகம் செய்யலாம். ஓரிருவர் தவறு செய்கிறார்கள் என்பதற்காக பலர் நல்ல முறையில் சேவை செய்வதை நாம் ஏன் தடுக்கவேண்டும்? நம்முடைய ராஜ்யத்தில் இந்த "system" நன்றாக வேலை செய்கிறது.

அநேக இடங்களில் பிரசவ விடுதிகள், குழந்தைகள் கிளினிக்குகள் இவை யெல்லாம் வேண்டுமென்று சொல்லப்பட்டது. சில இடங்களில் பிரசவ விடுதிகளில் ஆண் டாக்டர்கள்தான் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இருக்கக் கூடாதுதான். ஆண் டாக்டர்களே போதிய அளவில் கிடைக்கவில்லை. அப்படி யிருக்கும்பொழுது பெண் டாக்டர்கள் கிடைப்பது இன்னும் கஷ்டமாகத்தானிருக்கிறது. எந்த டாக்டர் ஆக இருந்தாலும் சரி, சிகிச்சை கிடைத்தால் போதும் என்ற மனப்பான்மை யுள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே பெண் டாக்டர்கள் கிடைக்காத காரணத்தினால் தான் ஆண் டாக்டர்கள் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரி இடங்களிலெல்லாம் பெண் டாக்டர்களைத்தான் நியமிக்கவேண்டும். அம்மாதிரி நியமிப்பதற்குப் பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக, பணம் சரியாக செலவழிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. பணம் செலவு செய்யாததற்குக் காரணம் "capital outlay"-ன் கீழ் செலவு செய்யப்படும் திட்டங்களுக்கு குழாய்கள் கிடைப்பதில்லை. டெக்னிகல் ஆபீசர்கள் கிடைப்பதில்லை. பிளான்கள் தயாரிப்பதிலே கொஞ்சம் கால தாமதம் ஆகிறது. கடலூர், செங்கற்பட்டு, பாளையங்கோட்டை முதலிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 13 லட்சம், 14 லட்சம், 15 லட்சம் என்று ஒதுக்கி திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அஸ்திவாரமும் போட்டாய்விட்டது. அதற்கான "பிளான்கள்" தயாரிப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. அதற்காக சமீபத்தில் எஞ்சினியர்கள் கூட்டம் ஒன்று போட்டு, உடனடியாகச் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தேவையான ஓவர்ஸியர்களையோ, இன்னும் உதவி எஞ்சினியர்களையோ இதற்காக தனியாகக் கேட்டு, இந்த வேலைகளைச் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதனுடைய பலன் இன்னும் சில மாதங்களிலே தெரியும். இந்த ஆஸ்பத்திரிகள் வேலை யெல்லாம் இந்த வருஷத்தில் ஆரம்பிக்கப்படுமென்று சொல்ல விரும்புகிறேன்.

கடலூரில் க்ஷயரோக ஆஸ்பத்திரியை கிட்டத்தட்ட இரண்டு லட்ச ரூபாய் செலவிலே பொது ஜனங்களிடமிருந்து பணம் வசூலித்து கட்டியிருக்கிறார்கள். இதை ஆரம்பித்து நடத்துவதற்கு வசதியில்லாததினால், ஒரு "ஸ்கெலிடன்" ஸ்டாபை வைத்து 40 அல்லது 50 நோயாளிகளை வைத்து ஆரம்பிக்கலாமா என்ற விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. அப்படியே அதை விட்டுவிட்டால் இரண்டு லட்சம் ரூபாயும் பாழாய் போய்விடும். இதைப்பற்றி அரசாங்கத்தில் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அந்த ஆஸ்பத்திரியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அடுத்தபடியாக பிரசவ விடுதிகளிலுள்ள "தாய்களை"ப் பற்றிச் சொல்லப்பட்டது. "midwives" களுடைய யோக்கியதாம்சங்களுக்கு

[Sri M. A. Manickavelu] [19th March 1958

கொஞ்சம் குறைந்த யோக்கியதாம்சம் உள்ள 3,200 தாய்களை ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தயாரிப்பதாக உத்தேசம். ஒரு வருஷத்திலே 900 பேரை தயாரிப்பதற்குத் திட்டம் இருக்கிறது.

இவைகள் எல்லாம் அமலுக்கு வந்தால் இன்னும் இரண்டு, மூன்று படிகள் மேலே ஏறிவிடலாம். இப்பொழுது கொஞ்சம் சரியாய் இல்லை. அடிப்படை நிலைமை, அதாவது மக்களுடைய வாழ்க்கைத் தரம், சூழ்நிலை, பண வசதி எல்லாம் எப்படி இருக்கிறது என்று சொன்னேன். இதை அனுசரித்துப் பார்த்தால் சொல்லுகிற விஷயத்தை எல்லாம் செய்து முடிக்க முடியாது. கொஞ்சம் பொருமையுடன் இருக்கவேண்டும். அரசாங்கம் வேண்டியதை எல்லாம் செய்யும். இந்த மான்யங்களின் கீழ் செலவழிக்கப்படுகிற எல்லாப் பணமும் நல்ல வகையிலே செலவழிக்கப் படுகிறது என்றே சொல்லலாம். ஒரு தேசத்தில் இருக்கிற மக்கள் ஆரோக்கியமாகவும், தேக வலிவுடனும் இருந்தால், அதுவே நாட்டிற்கு ஒரு பெரிய செல்வம். அடிக்கடி ஏதாவது நோய் வந்தால் "Workmen's days" குறைந்து போகிறது. மேல் நாட்டிலே ஒரு வருஷத்திலே சராசரி எவ்வளவு நாட்கள் வேலை செய்கிறார்கள் என்று பார்ப்போமேயானால் 250 அல்லது 300 நாட்கள் இருக்கும். ஆனால் நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டால் 200 அல்லது 250 நாட்கள்தான் இருக்கும். அடிக்கடி ஜுரம், தலைநோவு, ஏதேதெல்லாமோ வருகிறது. அந்த மனிதனுடைய சேவை நாட்டிற்குப் பயன் படாமல் போய்விடுகிறது. "Workmen's days" குறைந்து போய்விடுகிறது. அது நாட்டிற்குப் பெரிய நஷ்டம். அதனாலேதான் இந்த இனத்தில் எவ்வளவு பணம் செலவு செய்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும் என்று சொல்லுகிறேன். நம்முடைய அரசாங்கத்தில் இதற்காக செலவு செய்வது மொத்த டிமாண்டிலே 12 அல்லது 13 சத விகிதம் இருக்கும் என்று நினைக்கிறேன். மேற்கு வங்காளத்தில் 18 சத விகிதம் செலவு செய்கிறார்கள். அங்கு டாக்டருக்கு மாதம் 400 ரூபாய் சம்பளத்திலே ஆரம்பிக்கிறார்கள். நாம் இங்கே 200 ரூபாயிலே ஆரம்பிக்கிறோம். சம்பளம் அதிகமாய் இருப்பதனால் அங்கே டாக்டர் கோர்ஸ் அதிகம் பேர் படிக்கிறார்கள். நமது ராஜ்யத்திற்கு வேண்டுமென்றால் இங்கே கூட அனுப்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் இதைப்பற்றி யோசனை செய்தோம். அவர்கள் இங்கே வந்தால் சம்பளம் ஜாஸ்தி கொடுக்கவேண்டும். குறைந்தபட்சம் ரூ. 400 கொடுக்க வேண்டும். இங்கே ரூ. 200-தான் கொடுக்கிறோம். இப்பொழுது மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் நமது சிப்பந்திகளுக்கும் இருக்கும் நிலைமைதான் ஏற்படும். இரண்டாவதாக மொழித் தகராறு வேறு இருக்கிறது. இங்கேயுள்ள மொழியைக் கற்றுக்கொள்வதற்கு ஒன்று அல்லது இரண்டு வருஷம் ஆகும். மொழிப் பிசகால் தப்பு மருந்து கொடுப்பதற்கும் இடம் ஏற்படும். (சிரிப்பு.) இதை யெல்லாம் யோசித்து இதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. நம் நாட்டிலேயே அதிக வைத்தியர்களுக்குப் பயிற்சி கொடுத்து அதிகப்படி டாக்டர்களை உண்டாக்கவேண்டும்.

பரமக்குடியைப்பற்றி ஒன்றும் நான் சொல்லவில்லையே என்று கனம் அங்கத்தினர் யோசிப்பதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரி கட்டடம் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். எலெக்டிரிக் சப்ளை கார்ப்பொரேஷனுக்கு இடம் கொடுத்ததினால், இடத் தகராறு ஏற்பட்டுவிட்டது. கலெக்டரும் டி.எம்.ஓ.-வும் ஒரு முடிவுக்கு வந்து சீக்கிரமாக வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சீக்கிரமாக அந்த வேலையை எடுத்துக் கொள்வார்கள்.

அடுத்தபடியாக, "College of Integrated Medicine"-ஐப்பற்றிச் சொல்லப்பட்டது. "இரண்டும் கெட்டான்" மாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே படிக்கிறவர்கள் நாலைந்து வருஷம் படிக்கிறார்கள். அவர்களுக்கு சரி சமமான அந்தஸ்து இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுதும் அந்தக் குறை இருந்துகொண்டிருக்கிறது. இது ஏற்பட்டதற்குக் காரணம் இங்கே உள்நாட்டு முறைகளைப் பயில வேண்டுமென்பதற்காக. ஆனால் அது ஏற்படவில்லை. இங்கே படிக்கிறவர்கள்கூட "ஸல்பா டிரக்ஸ், இஞ்செக்ஷன்ஸ்" போன்ற முறைகளைக் கையாளுகிறார்கள். நாட்டு முறைகள் வளர வேண்டுமென்று சொன்னால், அதற்கென வசதிகள்



19th March 1958] [Sri M. A. Manickavelu]

ஏற்படுத்தி, தனியாக நடத்தினால்தான் பிரயோஜனம். பிரித்துவிட்டால் நல்லது என்ற பிரச்னை உலாவிக்கொண்டு வருகிறது. எந்தெந்த வகையிலே திருத்தி அமைக்கலாமோ, அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று தோன்றுகிறது.

அநேகமாக எல்லா விஷயங்களையும்பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஒன்றிரண்டு சொல்லாமல் விட்டிருக்கலாம். அப்படி விட்டதனால் அதைப் பற்றி கவனிக்கவில்லை என்று நினைக்கக் கூடாது. அதை யெல்லாம் இந்த டிமாண்டுகள் எல்லாம் முடிந்த பிறகு உட்கார்ந்து பார்த்து என்னென்ன செய்யவேண்டுமென்பதைக் கவனிக்கிறேன்.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த மான்யத்திற்கு மாத்திரம் வெட்டுப் பிரேரணை வேண்டாம் என்று சொல்லுகிறேன். எல்லா மான்யத்திற்கும் வெட்டுப் பிரேரணை கொண்டுவரும் மனப்பான்மை யிருக்கிறது. இதற்கும் வெட்டுப் பிரேரணை இருந்தால், என்னதான் பிரயத்தனம் பண்ணினாலும் வெட்டுப் பிரேரணைதான் கொண்டு வருகிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு உற்சாகம் குறைந்துவிடும். அப்படி உற்சாகம் குறையாமல் இருப்பதற்கு, வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொண்டால், இன்னும் உற்சாகத்துடன் வேலை செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். (சிரிப்பு.)

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri Marimuthu, withdrawing his cut motion?

SRI A. R. MARIMUTHU: I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 4,17,83,100 under Demand XVI—Medical be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,17,83,100 under Demand XVI—Medical."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Mr. Ramachandran, withdrawing his cut motion?

SRI K. RAMACHANDRAN: I am not withdrawing, Sir.

DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 93,58,200 under Demand XVII—Public Health be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 93,58,200 under Demand XVII—Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member Mr. Sattanatha Karayalar withdrawing his cut motion?

[19th March 1958

SRI K. SATTANATHA KARAYALAR: No Sir. I am pressing.

DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 1,83,23,900 under Demand XXXVI—Capital Outlay on Public Health be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,83,23,900 under Demand XXXVI—Capital Outlay on Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again on Monday, the 24th March 1958 at 8-30 a.m.

The House then adjourned.

### VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### B. Report and other papers.

40. *A short report on the activities and achievements of the Madras Government Fisheries' Department during the half-year ended 30th September 1957.*



19th March 1958]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 363 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri N. K. Palanisami) at the meeting of the Legislative Assembly held on 19th March 1958, page 165 supra.]

*Lift Irrigation Scheme in Kanyakumari district.*

(a) Yes.

(b) The Scheme "Lift Irrigation—Hiring of oil engines to ryots" is in force in Kanyakumari district. Under the scheme the oil engines available with the Agricultural Department are hired to the ryots for irrigating food crops. The details of engines hired out to ryots and the area irrigated from December 1956 to November 1957 in the district are furnished below :—

| *Month.* | *Number of oil engines hired out.* | *Number of ryots benefited.* | *Area irrigated.* |
|---|---|---|---|
| December 1956 .. .. .. | 8 | 7 | 139 |
| January 1957 .. .. .. | 25 | 40 | 300 |
| February 1957 .. .. .. | 14 | 36 | 181 |
| March 1957 .. .. .. | 9 | 13 | 35 |
| April 1957 .. .. .. | 2 | .. | .. |
| May 1957 .. .. .. .. | 1 | 1 | 4 |
| June 1957 .. .. .. .. | .. | .. | .. |
| July 1957 .. .. .. .. | 1 | 1 | 5 |
| August 1957 .. .. .. | 2 | 1 | 7 |
| September 1957 .. .. .. | 4 | 1 | 2 |
| October 1957 .. .. .. | 4 | 5 | 1 |
| November 1957 .. .. .. | .. | .. | .. |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 364 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 19th March 1958 on page 165 supra.]

(a) The Industrial Training Institute at Thyagarayanagar is run by the Government. The expenditure, both recurring and non-recurring on this Institute is borne by the Central and State Governments in the ratio of 60 : 40.

(b) The institution is a training Institute and the training in the following trades are given in the Institute :—

1. Blacksmithy.
2. Carpentry.
3. Electricians.
4. Fitters.
5. Mechanic (Instrument).
6. Mechanic (Motor).
7. Mechanic (Radio).
8. Draughtsman (Civil).
9. Draughtsman (Mechanical).

The duration of the course is 18 months institutional training followed by six months in plant training.

(c) The following similar institutions are in existence in this State :—

1. Government Industrial Training Institute, Cuddalore.
2. Do. do. Nagapattinam.
3. Do. do. Virudhunagar.
4. Do. do. Palayamkottai.
5. Industrial Training Centre attached to the Strathie Co-operative Engineering Workshops, Madras.
6. Industrial Training Centre attached to the Andhra Mahila Sabha, Madras.
7. Industrial Training Centre attached to the Pioneer Motor Service, Nagercoil.
8. Government Industrial Training Centre attached to the Tamilnad Polytechnic, Madurai.
9. Government Industrial Training Centre attached to the Government Polytechnic, Coimbatore.
10. Industrial School Section attached to the Government Central Polytechnic, Madras.
11. Industrial School Section attached to the Government Tamilnad Polytechnic, Madurai.
12. Industrial School Section attached to the Government Polytechnic, Coimbatore.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 365 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 19th March 1958, page 169 supra.]

(a) The following is the list of Minor Ports in this State :—

*South Arcot district*—
1. Cuddalore.
2. Porto Novo.

*Tanjore district*—
3. Nagapattinam.
4. Thopputhurai (not working).
5. Point Calimere (not working).
6. Adirampattinam.

*Ramanathapuram district*—
7. Tondi.
8. Pamban.
9. Rameswaram (not working).
10. Vedalai (not working).
11. Dhanushkodi.
12. Kilakarai.
13. Maraiyur (not working—under Tuticorin).





*Tirunelveli district*—
14. Vambar (not working—under Tuticorin).
15. Vaipur (not working—under Tuticorin).
16. Tuticorin (Port Trust).
17. Kulasekharapattinam.

*Kanyakumari district*—
18. Colachel.
19. Kovalam.
20. Manakudy.

(b) Rs. 6,71,673.

(c) Yes, Sir.

(d) *Nagapattinam Port.*—(1) Provision of pier with mobile sand pump for entrance channel—estimated cost Rs. 7 lakhs.

(2) Acquisition of two mobile cranes for handling steel billets Rs. 80,000.

*Cuddalore Port.*—(1) Provision of groynes and pier with mobile sand pump—Estimated cost Rs. 15,00,000.

(2) Provision of 2-ton electric crane.

(3) Providing revetment round the spoil island.

(4) Water-supply to ships.

*Pamban Port.*—Dredging a sand bank channel at Pamban Port —Estimated cost Rs. 2,81,000.

*Tuticorin Port.*—Development of the port into a 20 feet harbour is under consideration. Results of experimental borings are awaited.

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 375 asked by Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 19th March 1958, page 181 supra.]

The total forest area in Madras State before the reorganization of States, i.e., before 1st November 1956, was 5,650,842 acres (8,829·44 square miles). The present area of forests in this State is 5,269,547 acres (8,233·66 square miles). Steps are being taken to increase the forest wealth by following a policy of conserving, improving and increasing the existing area under forests. The Second Five-Year Plan schemes of the Forest department all aim at the improvement of forest wealth.

[19th March 1958

2. The Plan consists of the following thirteen schemes :—

(1) *Expansion of planting activities* of valuable commercial timber species such as teak, etc.

(2) *Creation of river, canal and lake fringe forests.*

(3) *Development of matchwood plantations.*

(4) Creation of *industrial plantations.*

(5) *Rehabilitation of degraded forests, etc.*

(6) *Reclamation of eroded lands, etc.* :—

(i) Afforestation of dry fuel forests, etc.
(ii) Development of fodder and pasture.
(iii) Reconnaissance survey of eroded lands outside reserved forests.
(iv) Construction of residential accommodation.

(7) *Cashew cultivation.*

(8) Extension of *casuarina plantations.*

(9) *Development of modern technique of timber extraction and communication.*

(10) *Development of forest administration working plans.*

(11) *Creation of fodder banks and improvement to grazing.*

(12) Lac cultivation.

(13) Preservation of wild life.

3. The several afforestation schemes included in the Second Five-Year Plan aim at better forest management based on scientific principles with a view to re-clothe the denuded area, improve and expand the existing forest resources of fuel and timber required for domestic and industrial consumption. The Plannning Commission has approved a sum of Rs. 134·61 lakhs to be spent on forest during the Plan period. The Government have approved an allotment of a sum of Rs. 0·52 lakh for extension of some of the schemes in Kanyakumari district. The Chief Conservator of Forests has submitted proposals for extending teak cultivation in Shencottah taluk.

4. The schemes in the Plan are making good progress.

5. The Government have also laid down a rigid policy of not de-reserving forest areas except when required for irrigation projects. Generally a policy of extending and improving forests and planting of more trees on lands not classed as forest is being pursued. Even so the area under forests which is only about 14 per cent cannot be significantly increased.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, the 24th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Foodgrains Enquiry Committee*

*378 *Q.*—SRI P. S. CHINNADURAI AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the views of the Government have been called for on the report of the Foodgrains Enquiry Committee;

(*b*) if so, whether the State Government have conveyed their views to the Central Government; and

(*c*) the views expressed by the State Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) The recommendations of the Foodgrains Enquiry Committee are still being examined and the Government hope to formulate their views and communicate them to the Government of India soon.

SRI N. K. PALANISAMI : ஸார், இந்த அசோக் மேத்தா கமிட்டி உணவுப் பொருள்களுடைய குறைந்த பட்ச விலை, அதிக பட்ச விலை இவைகளை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்லியதன் காரணமாக விலை வாசிகள் ஏறுகிறது. அப்படி ஏறுகிற விலைவாசியைக் கட்டுப்படுத்த ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறைந்த பட்ச விலை, அதிக பட்ச விலை இரண்டுக்கும் ஒரே சமயத்தில் அவசியம் இருக்காது. அதிக பட்ச விலை என்று சொல்லும்போது, விலை அதிகமாகிக்கொண்டு போகிறது என்று அர்த்தம். குறைந்த பட்ச விலை என்பது விலை ரொம்பக் குறைந்து போகிறது என்று அர்த்தம். விவசாயிகளுக்கு கவலை இல்லாமல் செய்யவேண்டும். அதோடு உண்ணுகிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல் இருக்கவேண்டும் என்று பல சிபார்சுகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

SRI M. JAGANNATHAN : Have the Government taken any steps so far to investigate the causes for the rise in the price of foodgrains in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Ashok Mehta Committee has dealt with this question and we are not examining their observations and recommendations.

[24th March 1958

**Sri N. K. PALANISAMI** : இப்போது விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதன் காரணமாகவும், ஜனங்கள் அதிகப்படியாக அரிசி சாப்பிடுவதன் காரணமாகவும் இந்த கமிட்டி சொல்லியிருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் சர்க்கார் பூராவையும் கோதுமையாகக் கொடுப்பதற்கு பதிலாக, பாதி கோதுமையும் பாதி அரிசியும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அரிசி விலையைக் குறைக்க வேண்டும்என்பது என்னுடைய அபிப்பிராயம், சர்க்காருடைய அபிப்பிராயம். அதற்கு இன்னும் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதுதான் சிறந்த முறை. இப்போது நியாய விலைக் கடைகளில், ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல், இப்போது இருக்கும் நிலையில் அரிசி விற்பனை அவசியமில்லை என்று கருதுகிறோம். ஆகவே, குறைந்த விலைக்கு வேண்டுமென்கிறவர்கள் கோதுமை வாங்கிக்கொள்ளட்டும் என்று கோதுமை மட்டும் விற்கப்படும்.

**Mr. SPEAKER** : அடுத்த கேள்விக்கு பதிலளிக்க கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இப்போது இங்கில்லை. ஆகவே, அந்தக் கேள்வி பிறபாடு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Gypsies*

* 380 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received recently from the gypsies in Chengam taluk about their welfare; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir. A representation has been received from Narikoravars.

(*b*) The matter is under consideration of the Collector of North Arcot.

Sri A. A. RASHEED : What is the population of the gypsies and whether schools have been opened for them?

The Hon. Sri P. KAKKAN : Let the hon. Member put a separate question.

**Sri A. V. P. ASAITHAMBI** : இந்த ஜிப்ஸி ஜாதியார்" பாக்வேர்டு " ஜாதியார் என்று கருதப்படுகிறார்களா அல்லது " பார்வேர்ட் " ஜாதியார் என்று கருதப்படுகிறார்களா ?

**The Hon. Sri P. KAKKAN** : ஜிப்ஸி ஜாதியார் முன்னேற்றம் அடைந்த ஜாதியார் இல்லை. பின் தங்கிய ஜாதியார்தான்.

**Sri V. K. KOTHANDARAMAN** : இந்த ஜிப்ஸி ஜாதியார் ஷெட்யூல்ட் டிரைபலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஜில்லாக் கலெக்டர் இவர்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைக்கவில்லை. ஆகவே, உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா ?

**The Hon. Sri P. KAKKAN** : இந்தக் கேள்வி முதல் கேள்வியிலிருந்து எழவில்லை. அவர்களுக்குக் கொடுத்த இடம் பாரெஸ்டு இடமாக இருந்தது, அவர்கள் வேறு இடம் வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது திருத்தாண்டிப்படி வில்லேஜில் இடம் கொடுப்பதாக இருக்கிறது. அதைப்பற்றி கலெக்டர் தாசில்தாருக்கு அனுப்பியிருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது.



24th March 1958]

**Sri S. LAZAR** : இந்த ஜிப்ஸி ஜாதியார் மாகாணம் பூராவும், குறிப்பாக திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் நிறைய இருக்கிறார்கள். இவர்கள் முன்னேறுவதற்கு ஒரே இடத்தில் தங்கி வசிக்க ஏற்பாடுகள் செய்வதற்கு ஒரு பொதுவான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**The Hon. Sri P. KAKKAN** : மாகாணத்தில் உள்ள நரிக்குறவர்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் வைக்க முடியாது, இருக்கவும் மாட்டார்கள். எங்கெங்கு பாடசாலைகள் வைக்க முடியுமோ, எங்கெங்கு ஹாஸ்டல் நடத்த முடியுமோ அதையெல்லாம் கவனித்து இயன்ற உதவி செய்யப்படும்.

**Sri M. JAGANNATHAN** : நரிக்குறவர்கள், இன்னும் அவர்களைப் போன்ற நாடோடி மக்களை ஒரே இடத்தில் வைத்தால் அவர்கள் வசிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். இவர்களை ஒரே இடத்தில் வசிக்க எதாவது சர்க்கார் முயர்ச்சி எடுத்துக்கொண்டார்களா? அந்த முயற்சியில் தோல்வி ஏற்பட்டதா?

**The Hon. Sri P. KAKKAN** : மதுரை ஜில்லாவில் வசிக்க ஏற்பாடு செய்தோம். அவர்களுடைய பையன்கள் படிக்க ஹாஸ்டல் ஏற்பாடு செய்தோம். அவர்களாகச் சில பேர் போய்விட்டார்கள். சில பேரை பெற்றோர்கள் கட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். இன்னும் இவர்களைக் கட்டாயப்படுத்தி என்னென்ன வசதி செய்துகொடுக்க முடியுமோ, அவைகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கும்.

**Mr. SPEAKER** : இப்பொழுது கனம் தொழில் அமைச்சர் வந்துவிட்டார். 379-ம் கேள்வி எடுத்துக்கொள்ளப்படும்.

### *Labour Gazette*

* 379 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have under consideration any proposal to publish a *Labour Gazette* every month; and

(*b*) if so, when the first issue is likely to be published?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The proposal is under consideration of the Government.

**Sri V. K. KOTHANDARAMAN** : ஸார், இந்தத் தொழில் கெஜட்டைத் தயார் செய்து வெகு விரைவில் தமிழில் கொண்டுவருவதன் மூலம் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் பெரும் அளவுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, இதை வெகு விரைவில் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இது முதலில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும். அதைத் தமிழ்ப்படுத்துவதைப்பற்றி பின்பு யோசனை செய்யப்படும்.

**Sri P. G. MANICKAM** : இந்தத் தொழில் கெஜட் மாகாண ரீதியில் ஏற்படுத்தப்படுமா அல்லது ஜில்லா ரீதியில் ஏற்படுத்தப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இது லேபர் கெஜட். மாகாண ரீதியாகப் பப்ளிஷ் செய்யப்படும்.

**SRI A. V. P. ASAITHAMBI** : இந்தத் தொழில் கெஜட்டை வெளியிடுவதில் இப்போது பேப்பர் வெளி நாட்டிலிருந்து வந்துகொண்டிருக்கிறது—அதோடு உள்நாட்டில் செய்யப்படும் கைத்தொழில் பேப்பர் இருக்கிறது இந்த உள்நாட்டு கைத்தொழில் பேப்பரையோ அல்லது நேபா நியூஸ் பிரிண்ட் போன்ற பேப்பரில் வெளியிட்டு ஊக்குவிக்க சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இதற்குத் தனியாக கேள்வி போடவேண்டும்.

**SRI S. LAZAR** : இந்த லேபர் கெஜட்டில் இருக்கப் போகின்ற முக்கியமான அம்சங்கள் என்ன ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : மாதா மாதம் தொழிலாளர் சமூகத்திலே ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள், தொழிலாளர் சட்டங்கள், முக்கியமான கோர்ட் தீர்ப்புகள், இன்னும் விசேஷமான கட்டுரைகள் இருந்தால் அதுவும் பிரசுரிக்கப்படும். இதைத் தவிர புள்ளி விவரங்கள் முக்கியமாகக் கொடுக்கப்படும். காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ், மற்ற விசேஷ லேபர் சட்டத்தின்கீழ் வரக்கூடிய புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படும்.

**SRI M. JAGANNATHAN** : இந்த தொழில் கெஜட் வெளிவரும் போது, இது சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இது சாதாரண கெஜட் போலல்ல. விசேஷமாகப் பிரசுரிக்கப்படுவது. இதைப் பணம் இல்லாமல் கொடுப்பதைப் பற்றி யோசனை செய்யவேண்டும். இதனுடைய செலவை யார் கொடுப்பது என்று இன்னும் நிர்ணயிக்கவில்லை. எல்லாவற்றையும் யோசித்துச் செய்யப்படும்.

**SRI A. V. P. ASAITHAMBI** : ஸார், இந்தத் தொழில் கெஜட்டை இப்பொழுது "சென்னைச் செய்தி" என்கிற தமிழ் ஏடு, "மெட்ராஸ் இன்பர்மேஷன்" என்ற ஆங்கில ஏடு இவைகளோடு இன்னும் சில பக்கங்கள் சேர்த்து வெளியிட்டால் செலவு குறையுமல்லவா? அந்த மாதிரிச் செய்வதில் என்ன சிரமம் இருக்கிறது?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் ஆசைத்தம்பி அவர்களுடைய யோசனையை பாராட்டுகிறேன். இதைத்தான் சர்க்கார் கூடச் சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஏற்கக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி தனியாக கெஜட் பிரசுரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

**SRI K. B. S. MANI** : இந்தத் தொழிலாளர்கள் என்பவர்கள் அநேகமாகத் தமிழ் மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தும் இந்த கெஜட்டை தமிழிலேயே பிரசுரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, தமிழில் பிரசுரிக்க அவசர நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்வார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இன்றைக்கு தொழில் கோர்ட் நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. இது சம்பந்தமாக நாம் தயாரிக்கிற பல விஷயங்கள் எல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து எடுக்கிறோம். உடனடியாக இதைத் தமிழில் பிரசுரிப்பது சாத்தியமல்ல. கொஞ்ச காலம் ஆங்கிலத்தில் பிரசுரித்து பிறகு தமிழில் பிரசுரிக்க யோசிக்கலாம்.

**SRI A. A. RASHEED** : What will be the cost of a copy of the *Labour Gazette?*

**THE HON. SRI R. VENKATARAMAN** : It has not yet been fixed.





*Buses*

* 381 *Q.*—**SRI A. V. P. ASAITHAMBI** (on behalf of Sri A. Govindasamy) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the villagers in November 1957 for plying more buses from Radhapuram of Villupuram taluk to Kanchanur; and

(*b*) if so, the action taken thereon?

**THE HON. SRI V. RAMIAH** : (*a*) Yes, Sir.

(*b*) A proposal for putting two additional buses on the route Kanchanur to Muttarampattu via Radhapuram has been notified under the Motor Vehicles Act by the Regional Transport Authority, South Arcot. Necessary further action will be taken in this regard by the Regional Transport Authority.

**SRI A. V. P. ASAITHAMBI** : சர்க்கார் பஸ் ஓடாத இதர இடங்களில் பஸ் ஓட்டுவதற்குப் 'பெர்மிட்' கேட்பவர்களுக்கு பெர்மிட் கொடுப்பதால் பொதுமக்களுக்கு லாபம்தானே ஏற்படும் ? அவ்வாறு பெர்மிட் கொடுப்பதில் சர்க்காருக்கு என்ன சிரமம் இருக்கிறது ?

**THE HON. SRI V. RAMIAH** : It is a general question. A separate question may be put.

**SRI M. JAGANNATHAN** : Sir, if information is available with the Hon. Minister, may I know how many were the applicants who applied for these routes since it was undertaken?

**THE HON. SRI V. RAMIAH** : Again, it is a general question, Sir.

**SRI M. JAGANNATHAN** : Sir, the Hon. Minister said that I have put a general question. My question is only with reference to the main question and it is, 'How many applied for the routes?'

**MR. SPEAKER** : The Hon. Minister wants the hon. Member to put a separate question.

**THE HON. SRI V. RAMIAH** : I have no information with me now.

*Irrigation schemes*

* 382 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the allotment for 1956–57 and 1957–58 for Special Minor Irrigation Schemes in the North Arcot district;

(*b*) the number of minor irrigation sources, tanks, lakes, dams and channels (talukwise) constructed under these schemes; and

(*c*) the amount spent out of the allotment for 1956–57?

[24th March 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) 1956–57—Rs. 4·72 lakhs. 1957–58—Rs. 5·04 lakhs.

(b)—

| Taluks. (1) | Number of minor irrigation sources, tanks, lakes, dams and channels completed. 1956–57. (2) | 1957–59. (3) |
|---|---|---|
| Wandiwash | 8 | .. |
| Polur | 9 | 3 |
| Arni | 23 | 7 |
| Wallajah | 10 | .. |
| Chengam | 7 | 1 |
| Cheyyar | 4 | .. |
| Tiruvannamalai | 7 | 2 |
| Gudiyatham | 5 | .. |
| Tirupattur | 10 | 5 |
| Arkonam | 7 | — |
| Vellore | 2 | .. |
| Total | 92 | 18 |

(c) Rs. 4·76 lakhs.

SRI V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் தாலுகாவில் தனகொண்டபல்லி, காங்குப்பம், செஞ்சி போன்ற கிராமங்களில் ஏரிகளைக் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சிறு பாசனத்திட்டங்களுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த கிராமங்களில் நீண்டகாலமாக ஏரிகள் கட்டப்படவில்லை. "பாலார் பேஸின் ரூல்ஸ்" காரணமாக அவை கட்டப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவைகள் கட்டப்படாததால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பாலார் பேஸின் "ரூல்ஸ்" ரத்துசெய்து, இம்மாதிரி வசதியுள்ள இடங்களில் ஏரிகளைக் கட்டுவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பாலார் பேசின் ரூல்லை கனம் அங்கத்தினர் கோருகிறபடி ரத்துசெய்ய முடியாது. இருந்தாலும் தாம் குறிப்பிட்ட சிறு பாசனத் திட்டங்கள் சம்பந்தமாக தனிக்கேள்வி போட்டால், அவைகளை கவனித்து நிலைமையை விளக்க முடியும்.

* 383 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the amount allotted, districtwise for 1956–57 and 1957–58 for Special Minor Irrigation Schemes; and

(b) the amount surrendered in 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement* is placed on the table of the House.

* Printed as Appendix I on page 351 infra.



24th March 1958]

SRI A. V. P. ASAITHAMBI : ராமனுதபுரம் மாவட்டத்திற்கு 1956-57ல் 1·65 லட்ச ரூபாயும் 1957–58-ல் 8·13 லட்ச ரூபாயும் இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது என்று கனம் அமைச்சர் தமது பதிலில் தெரிவித்திருக்கிறார். இந்தப் பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது? மொத்த பணத்தில் பயன்படுத்தப்படாமல் ஏதாவது தொகை மிஞ்சியதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராமனுதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், ஜமீன் பிரதேசங்களாக முன்பு இருந்துவந்த பல கண்மாய்களை இப்போது சீர்திருத்த வேண்டியிருக்கிறது. இந்த வேலைகள் அங்கே அதிகமாக இருக்கின்றன. இந்தத் திட்டம் முதலில் பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்ட பிறகு அந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நடத்தப்பட்டுவருகின்றன.

SRI S. M. ANNAMALAI : சிறுபாசனத் திட்டங்களுக்காக வட ஆற்காட்டிற்கு 1956–57-ம் ஆண்டில் 4·76 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று முன்பு பதிலளிக்கும்போது கூறினார். ஆனால் அதே 1956–57-ல் ஆண்டில் 4.72 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று இப்போது பதில் கூறியிருக்கிறார். அதே மாதிரி, அந்த ஜில்லாவிற்கு 1957–58-ம் ஆண்டில் 5·04 ரூபாய் ஒதுக்கப்பட்டதென்று முந்தைய பதிலிலும் 5·05 ரூபாய் ஒதுக்கப்பட்டதென்று இப்போதைய பதிலிலும் கூறியிருக்கிறார். இவைகளில் எவை சரியானவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செலவு செய்யப்பட்ட தொகை வேறு, ஒதுக்கப்பட்ட தொகை வேறு. அதுதான் வித்தியாசம்.

SRI V. K. KOTHANDARAMAN : தென்னாற்காடு ஜில்லாவும், வட ஆற்காடு ஜில்லாவும் செங்கற்பட்டு ஜில்லாவை விட வறண்ட பிரதேசங்கள். அப்படியிருந்த போதிலும், இந்த இரு ஜில்லாக்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைகள் செங்கற்பட்டு ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைவிட மிகவும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தில், ஜில்லாக்களுக்குள் போட்டாப்போட்டி இல்லை. எந்த எந்த ஜில்லாவிற்கு எவ்வளவு தொகை தேவை என்பதையும், எவ்வளவு தொகை ஒதுக்குவது சாத்தியம் என்பதையும் பார்த்துத்தான் பணம் ஒதுக்குகிறோம்.

*Co-operative Societies*

* 384 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the names of co-operative societies closed since 1952 (figures yearwise and districtwise);

(b) the reasons therefor; and

(c) the total amount misappropriated?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 1,201 societies have been closed between 1952 and 1957. The usefulness of the information asked for is not commensurate with the cost and labour involved in collection of the data.

(b) The reasons for closing down are generally their bad financial condition and unsatisfactory working. The registration of societies is cancelled only if all attempts by the Department to revive them fail.

(c) Rs. 6,90,101·80 nP.

SRI V. K. KOTHANDARAMAN : லட்சக்கணக்கான ரூபாய்கள் கையாளப்பட்டு நூற்றுக்கணக்கான ஸொஸைட்டிகள் மூடப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும் நிலையில், கையாடல்களைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது ? இதுவரை ஒரு தீவிர நடவடிக்கையும் எடுக்காவிட்டாலும் இனிமேலாவது தீவிர நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எப்படிப்பட்ட தீவிர நடவடிக்கை என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டால், அதை சர்க்கார் பரிசீலனை செய்யும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Can the Government tell us, Sir, whether the department has entirely collected the amounts so far misappropriated and if not what is the balance to be recovered?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this is a matter running over five years and if we take the accounts for a period of ten years, the figure would be much more. Actually these figures are not so appalling as hon. Members would try to show. Every effort is made by the Department to collect these things. But naturally, proceedings in the courts will take a long time. If the hon. Member wants to know how much has been collected in 1952 to 1957, he may put a separate question. But I may tell him that the cost and labour involved will not be worthwhile collecting that information.

SRI M. JAGANNATHAN : May I know how, in spite of Government supervision and inspection by the Co-operative Inspectors, these huge sums were misappropriated by the societies?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, there is the human element in it. It is due to mismanagement by the Board of Directors and occasionally to defalcation by the persons concerned.

SRI T. T. DANIEL : May I know the approximate amount which the Government think that they could recover from out of the misappropriated amounts?

THE HON. SRI R. VENKATARAMAN : The Govenment want to recover every pie of the amounts misappropriated.

SRI V. K. KOTHANDARAMAN : பல வருஷ காலமாக விசாரணை செய்யாமல் விடுவதன் காரணமாக இதுபோன்ற ஊழல்கள் மேலும் மேலும் அதிகரிக்கின்றன. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேற்பட்டால், அதாவது 3 முதல் 6 மாதங்களுக்கு மேற்படாமல், அதற்காக தனி அதிகாரி நியமித்து உடனுக்குடன் விசாரணை செய்து, அதற்குத் தீர்வு காணுவது மூலமாக இதுபோன்ற ஊழல் ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கிறபோது அவருடைய அபிப்பிராயத்தை பதிலாகக் கொடுத்துவிட்டு போட்டிருக்கிறார். நான் ஆரம்பத்தில் சொன்னேன். இதில் நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான காலதாமதமும் இல்லை. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், சட்டப்படிதான் எடுக்கவேண்டும். சட்ட பூர்வமாக அவர்கள் பல கோர்ட்டுகளுக்குச் செல்வதால் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.



MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தம்முடைய அபிப்பிராயத்தை சொல்லக்கூடாது. கேள்விதான் போடவேண்டும்.

SRI A. V. P. ASAITHAMBI : 1952-லிருந்து 1957 வரைக்கும் மூடப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் விருதுநகர் நாஷனல் கூட்டுறவு சங்கமும் ஒன்று. நிர்வாகிகள் மோசடி செய்ததன் காரணமாகத்தான் அது மூடப்பட்டது. அவர்கள் பேரில் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் என்பதற்காக அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்களே, அது உண்மையா ?

MR. SPEAKER : I think this question must be disallowed. I have to disallow the question. மூலக் கேள்வி தனிப்பட்ட ஒரு சொஸைட்டியைப்பற்றியதல்ல. கேள்விநேரத்தில் இப்படி insinuation பண்ணக்கூடாது.

SRI S. LAZAR : இதுபோன்ற ஊழல்கள் நிறைந்திருப்பதால் நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் அங்கத்தினர்களுக்கு குறிப்பிட்ட சில யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டுமென்ற முறையிலே கட்டுப்பாடு ஏதாவது விதிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஊழல்கள் ஏராளமாக இருக்கின்றன என்று கனம் அங்கத்தினர்கள் சொல்லிச் சொல்லி கேள்விகள் போடுவதை நான் மறுக்கிறேன். சாதாரணமாக, நடைமுறையில் இந்த நாட்டில் எந்த அளவுக்கு பிற துறைகளிலும், தனியார் துறைகளிலும் ஊழல்கள் இருக்கின்றனவோ அவைகளைவிட அதிகமாக கூட்டுறவு சங்கங்களில் இல்லை என்று நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். அடுத்தபடியாக, தகுதியுள்ளவர்களை நியமிக்கவேண்டுமென்று சொல்வது ஜனநாயகத்திலே எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்ற கொள்கைக்குப் புறம்பாக இருக்கிறது என்பதனால் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know from the Hon. Minister the number of persons involved in this misappropriation case and the number against whom criminal proceedings have been taken by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : In fact, against every one proceedings have been taken.

SRI T. KARIA GOUNDER : சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்களும் இந்த ஊழலில் சம்மந்தப்பட்டிருப்பார்களா என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவிக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : நான் அப்படிப்பட்ட கேள்வியை கேட்கவேண்டாமென்று சொன்னேன். The question is disallowed.

SRI K. ANBAZHAGAN : கூட்டுறவு இலாகாவில் ஊழல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு ஒரு சிறந்த வழியாக அங்கே கையாளப்படும் கணக்கு முறைகளில் புதிய வழி முறைகளை ஆராய்ந்து ஒழுங்கான முறையிலே கணக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நாம் செய்திருக்கிற புதிதான முறைப்படி, கணக்குகளைத் தணிக்கை செய்வதைத் தனியாகவும், மேற்பார்வையிடுவதைத் தனியாகவும் பிரித்திருக்கிறோம். That is separation of audit from administration of Co-operative Department.

"ஆடிட்"க்குத் தலைமை அதிகாரியாக ஒரு அக்கௌண்ட்ஸ் ஆபீசரை நியமித்திருக்கிறோம். தணிக்கை செய்வது நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதால் ஓரளவு இன்னும் நல்ல முறையிலே பரிசீலனை நடக்கும் என்று நான் நம்புகிறேன்.

[24th March 1958

SRI V. K. KOTHANDARAMAN: பொதுத் துறையிலும் தனித் துறையிலும் இருப்பதைவிட இதில் குறைவு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் பொதுத்துறையில் இதைவிட ஊழல் அதிகம் என்று கனம் மந்திரி அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no answer.

* 385 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of co-operative societies started for the benefit of Government servants alone;

(b) the total number of members in them; and

(c) whether the Government are giving any financial aid to them?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 206 as on 30th June 1957. This includes all types of societies.

(b) 99,257 as on 30th June 1957.

(c) Government are not giving any aid generally to Employees' Credit Societies. For special types of societies, like co-operative canteens, Co-operative Workshop Stores, etc., interest-free loans are advanced and free services of departmental staff are lent in the initial stages of their working on the merits of each case. building societies organized for the general public.
building societies organizedfor the general public.

SRI A. V. P. ASAITHAMBI : அரசாங்க ஊழியர்களுக்காக நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது ஊழல் நடந்து மூடப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனிக் கேள்வி வேண்டும்.

SRI N. K. PALANISAMI : ஏற்கனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களைத் திருப்பி வாங்கும் வரையில், அதற்காக குறைந்த வட்டி வாங்குவதற்குச் சர்க்காருக்கு யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

* 386 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Handloom Co-operative Societies in the Shencottah Town have applied for any loans; and

(b) if so, when they applied and when they were sanctioned?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) There are two Weavers' Co-operative Societies in Shencottah Town. The Shencottah Handloom Weavers' Co-operative Society applied on 4th March 1957 for share capital and working capital loans. They were disbursed on 26th June 1957 and 30th July 1957 respectively. The Shencottah Illathar Weavers' Co-operative Society applied for a share capital loan on 25th July 1957 and the loan was disbursed to it on 31st July 1957. This society has applied to the Tirunelveli District Co-operative Central Bank for a working capital loan and it is now under the consideration of the Central Bank.



24th March 1958]

*Co-operative looms*

* 387 Q.—SRI M. S. SELVARAJAN (on behalf of Sri A. R. Subbiah Mudaliar) : Will the Hon. the Minister for Industries be pleased to state the percentage of looms brought into the co-operativefold in 1956–57?

THE HON. SRI R. VENKATARAMAN : About seven per cent of the total number of looms in the State, viz., 31,000 looms were brought into the co-operativefold in 1956–57.

SRI M. S. SELVARAJAN : மீதியுள்ளவர்களையும் கூட்டுறவு முறையின் கீழ் கொண்டுவருவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையில் சேர, ஷேர் காபிடலுக்கு கடன் கொடுக்கிறார்கள் ; சேர்ந்த பிறகு கூட்டுறவு சொஸைட்டியிலே நடைமுறை செலவுக்கான "ஒர்க்கிங் பண்டு"ம் கடனாகக் கொடுக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தவர்களுடைய சொஸைட்டி விற்பனை செய்யும் பண்டங்களுக்கு "ரிபேட்" கொடுக்கிறார்கள். இதைத்தவிர, நல்ல உயர்ந்த உபகரணங்கள் **(improved attachments, reels)** போன்றவையெல்லாம் அளிக்கப்படுகின்றன. வெகுவேகமாக இன்றைக்கு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து கொண்டு வருகிறார்கள். இன்றைய எண்ணிக்கை—இரண்டு லட்சம் தறிகளுக்கு மேல் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI P. G. MANICKAM : கூட்டுறவு இயக்கத்தில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்கு "செஸ்" நிதியிலிருந்து எந்தெந்த முறையிலே உதவி அளிக்கப்படுகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : உதவி அளிக்கப்படவில்லை.

SRI K. RAMACHANDRAN : கூட்டுறவு இயக்கத்தில் தறிகள் சேர்க்கப்பட்டிருந்தும்கூட, சுமார் மூன்றிலொரு பங்கு தறிகள்தான் கூட்டுறவு இயக்கத்தில் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். ஆகையால், வருஷத்திற்கு ஒரு குறிப்பிட்ட வீதமாவது சேர வேண்டுமென்ற முறையில், அவர்களை ஊக்குவிக்கும் விஷயத்தில் ஏதாவது "டார்ஜெட்" ஏற்படுத்தி, இந்தத் தறிகளையெல்லாம் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவர உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : 1956–57-ம் வருஷத்திற்கு டார்ஜெட் 21,000 தறிகள். ஆனால், நாம் சேர்த்த எண்ணிக்கை 31,000 ஆக, டார்ஜெட்டுக்கு அதிகமாகத்தான் நாம் சேர்த்துக்கொண்டு வருகிறோம்.

SRI M. D. RAMASAMI : கூட்டுறவு முறையில் சேராத தறிக்காரர்களுக்கு எந்த வகையிலாவது உதவி செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு முறையில் சேராத் நெசவாளர்களுக்குக்கூட உதவி செய்ய வேண்டும் என்பதுதான் இந்த ராஜ்ய சர்க்காருடைய கொள்கை. அதை செஸ் நிதியை நிர்வகித்து நடத்துகிற அகில இந்திய கைத்தறி போர்டாரிடம் நாங்கள் பன்முறை வற்புறுத்தினோம். ஆனால், மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தவர்களுக்குத் தான் இந்த உதவி கொடுக்கப்படும் என்று அவர்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

[24th March 1958

### *United Kingdom Technical Mission*

* 388 *Q.*—**Sri V. K. KRISHNAMURTHY** (on behalf of Sri S. Lazar): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any advance party of the United Kingdom Technical Mission visited Tuticorin Port during July 1957; and

(*b*) the recommendations, if any, made by the said advance party?

**The Hon. Sri P. KAKKAN**: (*a*) Yes, Sir.

(*b*) No particulars are available in this regard as the Mission was sponsored by the Government of India and the Government of India have also not so far sent any communication to this Government in the matter.

**Sri A. V. P. ASAITHAMBI**: தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி சம்மந்தமாக சர் ஏ. ராமசாமி முதலியார் செய்த சிபார்சு என்ன ஆயிற்று? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதைச் சேர்த்து வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா?

**The Hon. Sri P. KAKKAN**: மூலக் கேள்வியிலிருந்து இக்கேள்வி எழவில்லை.

**Sri K. ANBAZHAGAN**: தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி தமிழ் நாட்டின் வணிக வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருப்பதால், அதைக் குறித்து நிபுணர் கமிட்டி கூறிய கருத்தை நம்முறைய சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டு அறியுமா? அதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா?

**The Hon. Sri P. KAKKAN**: நான் பதில் சொல்லும்போது, "இன்னும் அரசாங்கத்தினிடத்தில் வரவில்லை" என்று சொன்னேன். இருந்தாலும் அது விஷயமாக மத்திய சர்க்காருக்கு எழுதி அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ளும்.

**Sri S. NAGARAJA MONIGAR**: இந்த சர்க்காரின் பல முன்னேற்றத் திட்டங்களிலும் இரண்டாவது மூன்றாவது திட்டங்களிலும் இந்தச் சபையிலிருக்கும் கனம் அங்கத்தினர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? அந்த . . .

**Mr. SPEAKER**: இந்தக் கேள்வி எப்படி மூலக் கேள்வியிலிருந்து எழும் என்பது எனக்குத்தெரியவில்லை. அவருக்கே அந்தக் கேள்வியின் பேரில் நம்பிக்கை இல்லை. நாம் என்ன செய்ய முடியும்.

**Sri N. K. PALANISAMI**: தூத்துக்குடி அபிவிருத்தி போர்டிலும் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் இருக்கின்றன. 1955-ம் வருஷமே 5 லட்சத்திற்கு மேல் இருந்தது. இப்போது அதிகமாகவே இருக்கும். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டாவது இந்த வேலையைச் செய்யும்படி மத்திய அரசாங்கத்தை இந்தச் சர்க்கார் வற்புறுத்துமா?

**The Hon. Sri P. KAKKAN**: தூத்துக்குடி துறைமுகம் பற்றிய வேலை அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. எதைச் செய்தாலும் அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தே செய்யும்.

**Sri K. B. S. MANI**: சென்ற வருஷமே தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள தரங்கம்பாடி துறைமுகம் மிகப் பழைய துறைமுகம், டேனிஷ்காரர்களுடைய காலத்தது, பண்டகசாலைகள் அமைக்க போதிய வசதியுள்ளது என்பதாக வெல்லாம் சொல்லி அந்தத் துறைமுகத்தையும் நன்கு அபிவிருத்தி செய்ய மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யப்பட்டும் அதைப்பற்றி



24th March 1958]

பரிசீலனையில் இருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டது. அதன் முடிவு என்ன ஆயிற்று? உடனடியாக அந்தத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER**: இந்தக் கேள்வி தூத்துக்குடியைப் பற்றியது. கனம் அங்கத்தினர் வெகுதூரம் தள்ளி தஞ்சாவூருக்கு வந்துவிட்டார். இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். நான் இதை அனுமதிக்க முடியாது.

**Sri K. RAMACHANDRAN**: தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சேது சமுத்திர திட்டத்தோடு இணைக்கப்பட்டே சிபார்சு செய்யப்பட்டது என்றும், சேதுசமுத்திர திட்டத்திற்கு நடைமுறையில் சில கஷ்டங்கள் ஏற்பட்டால் தூத்துக்குடி துறைமுக வேலையையாவது தனியாக நடத்திவிட வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா? உண்மையால் அதன்படி நடக்குமா?

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினர் அபிப்பிராயம் ஒருவாறு உண்மையாக இருக்கிறது.

**Sri M. JAGANNATHAN**: ஐக்கியநாட்டு தொழில் நிபுணர்கள் குழு தூத்துக்குடிக்கு வந்தது தானாகவா? அல்லது அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வந்ததா?

**The Hon. Sri P. KAKKAN**: இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் தான் வந்தது.

**Sri A. V. P. ASAITHAMBI**: இந்தத் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி பற்றி ராமசாமி முதலியார் சிபார்சு இருக்கிறது. அங்குள்ள வர்த்தக ஸ்தாபனத்தின் சிபார்சு இருக்கிறது. யு.கே. நிபுணர்களும் போய்ப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய சிபார்சுகளின் படி எந்தச் சிபார்சை சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்கள்? இவ்விஷயத்தில் சர்க்காருடைய அபிப்பிராயம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: தூத்துக்குடியை மத்தியதரத் துறைமுக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இதிலே சேதுசமுத்திர திட்டத்தையும் இணைத்து தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம். திட்டம் அந்த அடிப்படையில்தான் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற நிதி நிலைமை அடிப்படையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது சேதுசமுத்திரத்தை எடுத்துக் கொள்வது கஷ்டமாக இருந்தால் தூத்துக்குடி துறைமுகத்தை தனியாக எடுத்துக் கொண்டுவிடலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த இரண்டையும் இணைத்தே எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற முறையில் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தித் தெரியப்படுத்தியிருக்கிறது.

### *Electricity for pumpsets.*

* 389 *Q.*—**Sri S. M. ANNAMALAI**: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to supply electricity for running pumpsets in wells owned by more than one person after taking an indemnity bond from them?

**The Hon. Sri V. RAMIAH**: No, Sir.

**Sri S. M. ANNAMALAI**: ஒரே கிணற்றில் இரண்டு பேருக்கும் பாகம் இருந்து வந்த இரண்டு பேரில் ஒருவருக்கு சர்வீஸ் கொடுத்துவிட்டு அவர் தண்ணீர் இறைக்கும்போது மற்றவருக்கும் அந்த வசதி கிடைப்பதற்கு இண்டெம்னிடி பாண்டு எழுதி வாங்கிக் கொண்டு சர்வீஸ் கொடுக்கலாம் என்பதாக விதிகளிலும் இருக்கிறது. அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

[24th March 1958

THE HON. SRI V. RAMIAH : இந்தக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்தது. இப்படிச் செய்வதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுவதைக்காட்டிலும் தீமையே ஏற்படும் என்கிற காரணத்தினால் பொதுவாக எந்தவிதமான அனுமதியும் கொடுக்கவில்லை.

### *Mid-day meals*

*** 390 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to grant any subsidies to schools from the Harijan Welfare Fund, to provide for free mid-day meals to Harijan pupils studying in high schools ?**

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. S. SELVARAJAN : நம்முடைய ராஜ்யத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய இந்த நல்ல திட்டத்திற்கு ஆசி கூறும் வகையிலாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலுமாவது இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நமது அரசாங்கமே இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை நடத்திக்கொண்டு வருகிறது. அங்கு ஹரிஜன மாணவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் கொடுத்துவருகிறோம். மத்தியான சாப்பாடு ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுக்கும் முறையில் 1¾ லட்சம் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் உயர்நிலைப்பள்ளியில் சாப்பாடு, புத்தகம் முதலியவைகளுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM: பள்ளிக்கூட நிர்வாகிகள் ஹரிஜன மாணவர்களுக்கு பிற்பகல் உணவு கொடுப்பதற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டு அரசாங்கத்தின் உதவியைக் கேட்டால் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அப்படி யாராவது முன்வந்தால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய எல்லா ஹரிஜன மாணவர்களுக்குமாவது ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப் படும் என்று சொல்லமுடியாது.

SRI M. S. SELVARAJAN : தனியார் உயர்நிலைப் பள்ளியில் பிற்பகல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலாவது எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு சில விதிகள் இருக்கின்றன. மாணவனின் திறம், தகுதி, நிலை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டே வழங்கப்படும்.

SRI K. B. S. MANI : கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் ஹரிஜனப்பிள்ளைகளுக்குத் தனிச் சாப்பாடு கொடுக்க முடியுமா ? இப்படிக் கொடுக்க ஏற்பாடு செய்வதனால் சாதி மனப்பான்மை வளருவதற்கு வாய்ப்பு உண்டாகிறதா ? உண்டானால் ஹரிஜனங்கள் என்று தனியாகப் பிரித்துக் கொடுக்காமல் பிற்பட்ட இனத்து மாணவர்களையும் சேர்த்துக் கொடுக்க வசதி செய்யப்படுமா ?



24th March 1958]

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் எல்லாம் இப்பொழுதே அவ்வாறு சேர்த்துத்தான் கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : ஹரிஜன மாணவர்களுக்கு பகல் உணவு அளிப்பதற்கு ஒரு மாணவருக்குக் கொடுக்கும் செலவுத் தொகை ஏநன்கு புதுக்காசு அளவுக்குத்தான் என்று ஒதுக்கியிருப்பதாக தெரிகிறது ? அது உண்மையா ? உண்மையானால் போதுமா ? நடுப்பகல் உணவுக்கு ஒரு மாணவனுக்கு என்ன செலவு ஆகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் நல்லது.

### *Electricity for irrigation purposes*

*** 391 *Q.*—SRI V. SUBBIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether, during the periods of electricity cut, arrangements are proposed to be made to stop the supply of electricity to agriculturists for irrigation purposes during nights and supply only during day time under shift system ?**

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI V, SUBBIAH : விவசாய அபிவிருத்தி பலவகையிலும் பெருக வேண்டுமென்று சொல்லக்கூடிய நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு மாத்திரம் மின்சார வெட்டு செய்து இரவு காலங்களில் பாசனம் செய்ய வேண்டும் என்று சொல்வது சரியா? சினிமாக்கள், மில்கள் முதலியவற்றிற்கு அதிகமாகப் பகல் சப்ளை கொடுக்கும்போது விவசாயத்திற்கு மாத்திரம் ஏன் கொடுக்கக்கூடாது? இராக்காலங்களில்தான் கொடுக்கப்படும் என்பதைமாற்றி பகல் நேரத்தில் மின்சார வெட்டு இல்லாமல் விவசாயத்திற்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMIAH : இப்போது இருக்கக்கூடிய கஷ்டங்கள் எல்லாம் போகவேண்டுமானால் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறது.

### *Wattle plantations*

* 392 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of Sri S. A. M. Annamalai Odayar) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the purpose for which the Government have acquired about 75 acres of lands with wattle plantations in Mulligoor village, Ootacamund taluk, Nilgiris district ; and

(*b*) the basis on which (i) purchase was made and (ii) compensation was paid to the parties concerned?

THE HON. SRI V. RAMIAH : (*a*) In connexion with the execution of the Kundah Hydro Electric Project, 174 acres of land in Mulligoor village in Ootacamund taluk in Nilgiris district consisting of tea, coffee and wattle plantations and waste lands are proposed to be acquired under the Land Acquisition Act.

(*b*) (i) Does not arise as the lands are proposed to be acquired under the Land Acquisition Act.

[24th March 1958

(ii) Compensation has not yet been paid and it will be determined by the Land Acquisition Officer in accordance with the principles laid down in the Land Acquisition Act.

SRI A. A. BASHEED: Have the Government taken steps to extend the plantation of wattle in view of the fact that 75 acres had already been taken over by the Government?

THE HON. SRI V. RAMIAH: A separate question may be put.

## UNSTARRED QUESTIONS.

### *Bus routes*

1. *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Electricity be pleased to place on the Table of the House particulars regarding the number of bus routes and the extension of existing routes granted during the periods from 1st October 1956 to 31st March 1957 and from 1st April to 30th June 1957 (districtwar)?

*A.*—A statement showing the number of bus routes and the extension of existing routes granted during the periods from 1st October 1956 to 31st March 1957 and from 1st April 30th June 1957 (districtwar) is given below:—

*Statement showing the particulars of new routes opened and extension of existing routes granted (districtwar) during the periods between 1st October 1956 to 31st March 1957 and from 1st April to 30th June 1957.*

| *District.* | *During the period from 1st October 1956 to 31st March 1957.* | | *During the period from 1st April to 30th June 1957.* | |
|---|---|---|---|---|
| | *Number of new routes granted.* | *Number of extensions of existing routes granted.* | *Number of new routes granted.* | *Number of extensions of the existing routes granted.* |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 Madurai | .. | 10 | .. | .. |
| 2 North Arcot | .. | 3 | 2 | 2 |
| 3 Ramanathapuram | .. | 8 | 3 | .. |
| 4 South Arcot | 2 | 2 | .. | .. |
| 5 Tiruchirappalli | 4 | 9 | 5 | 4 |
| 6 The Nilgiris | 1 | 1 | .. | .. |
| 7 Tirunelveli | .. | 2 | 1 | 3 |
| 8 Kanyakumari | .. | 1 | .. | 3 |
| 9 Coimbatore | 3 | 5 | 3 | 1 |
| 10 Tanjore | 1 | 3 | 2 | 4 |
| 11 Chingleput | 7 | 13 | 3 | .. |
| 12 Salem | 4 | 2 | 5 | .. |



24th March 1958]

### *Amount allocated from the Central Road Fund*

2 *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Public Works be pleased to place on the Table of the House a statement of—

(*a*) the total amount allocated to this State from the Central Road Fund from the date of its inception; and

(*b*) the amount spent out of this in each district yearwar?

*A.*—(*a*) Rupees 569·97 lakhs to the end of September 1956. Further allocation from October 1956 is awaited.

(*b*) The total number of works taken up in each district in the present Madras State and their estimated cost are given below:—

| *District.* | *Number of works.* | *Total estimated cost.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 1 Ramanathapuram | 27 | 54,45,700 |
| 2 The Nilgiris | 80 | 8,96,550 |
| 3 Tirunelveli | 47 | 46,60,680 |
| 4 Salem | 80 | 18,77,720 |
| 5 Tanjore | 90 | 39,13,520 |
| 6 Madurai | 47 | 27,97,290 |
| 7 Chingleput | 41 | 56,94,180 |
| 8 Coimbatore | 42 | 28,71,165 |
| 9 South Arcot | 56 | 39,54,720 |
| 10 North Arcot | 53 | 16,96,073 |
| 11 Tiruchirappalli | 56 | 28,77,360 |
| 12 Kanyakumari | .. | .. |

On account of the reorganization of States it is not possible to give particulars of expenditure incurred in each district in each year from the date of inception of the Fund.

### *Rural Water-supply Scheme*

3 *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state the total number of wells sunk under Rural Water-supply Scheme and other schemes in the Attur taluk, Salem district, during the years 1955–56, 1956–57 and 1957–58?

*A.*—The total number of wells sunk under Rural Water-supply and other schemes in the Attur taluk in the Salem district during the years 1955–56 to 1957–58 is as follows:—

| | 1955–56. | 1956–57. | 1957–58. |
|---|---|---|---|
| Number of wells sunk in Block area.. | 1 | 6 | 2 |
| Number of wells sunk under Rural Water-supply Scheme. | 2 | 31 | 16 |
| Number of wells sunk under Local Development Scheme. | 13 | .. | .. |

### *Ammonium Sulphate*

4 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of tons of ammonium sulphate allotted to the North Arcot district yearwise from 1952 to 1957; and

(*b*) the number of tons allotted to other districts, districtwise?

A.—(a) & (b) A statement* showing the quantities of ammonium sulphate supplied to the districts during each of the years from 1952 to 1957 is placed on the Table of the House.

*Untouchability*

5 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of cases of offences committed under the Untouchability (Offences) Act, 1955, during the year 1955–56 under the following heads :—

(i) Number of cases registered,
(ii) number of cases challenged,
(iii) number of cases ending in discharge,
(iv) number of cases ending in compromise,
(v) number of cases ending in conviction,
(vi) number of cases ending in acquittal, and
(vii) number of cases pending disposal; and

(b) the number of cases registered against—

(i) tea shop-keepers,
(ii) barbers,
(iii) hotel-keepers, and
(iv) dhobies?

A.—(a)—

(i) 139.
(ii) 139.
(iii) Nil.
(iv) 4.
(v) 71.
(vi) 10.
(vii) 54.

(b)—

(i) 61.
(ii) 6.
(iii) 28.
(iv) Nil.

6 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government for the proper implementation of the provisions of the Untouchability (Offences) Act, 1955, so far?

*Printed as Appendix II on page 351 infra.



A.—The courts in this State are enforcing the penal provisions of the Untouchability (Offences) Act, 1955. The offences under this Act are cognizable and the Police can arrest the offender without a warrant. The following steps are also taken for the proper implementation of the various provisions of the Act :—

(i) The Govenment review the report of the Director of Harijan Welfare on the working of the Act in the districts during each quarter of the calendar year.

(ii) The District and State Harijan Welfare Committees review the working of the Act. The Government have also appointed the Inspector-General of Police as a Member of the State Harijan Welfare Committee.

(iii) Wide publicity is given to the provisions of the Act. The attention of the hon. Member is invited to the answer given to unstarred question No. 8.

7 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have appointed any officers to enforce the provisions of the Untouchability (Offences) Act of 1955 at the district, taluk and village levels?

A.—No, Sir.

8 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any steps have been taken to give wide publicity to the Untouchability (Offences) Act, 1955?

A.—The Government have undertaken, with a view to give wide publicity to the provisions of the Untouchability (Offences) Act, 1955, the following measures :—

(1) The Government have published a pamphlet in Tamil entitled 'Harijana Munnetram' urging eradication of untouchability and also incorporating the penal provisions of the Act. Copies of the pamphlet were distributed to all District Officers;

(2) the Untouchability (Offences) Act has been translated and printed in the regional languages of this State for sale to the public;

(3) wide publicity to the provisions of the Act is given in the meetings conducted on the "Haijan Day' every month;

(4) the Government have sanctioned the appointment of three Deputy Sevaks and three Assistants in each district to carry on propaganda in the villages for the removal of untouchability;

(5) posters depicting the evils of untouchability are printed and displayed to create an awakening in the hearts of the people at large; and

(6) the Government have also decided to broadcast a drama or dialogue over the All-India Radio every month in order to give publicity to the provisions of the Untouchability (Offences) Act, 1955.

[24th March 1958

*" Puthiya Samudayam "*

9 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have ordered at any time the screening of the documentary film entitled " Towards Better Society " in all the cinema theatres in the City of Madras?

*A.*—The Government had produced a two-thousand feet documentary in Tamil entitled, " Puthiya Samudayam " on the achievements of the First Five-Year Plan. This was duly declared an approved film, and was exhibited at all theatres which have to exhibit two thousand feet of " approved " films at every show. No specific instructions to screen this film were issued.

*Scholarships to Harijan students*

10 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent on scholarships granted to Harijan students—

(i) in 1956–57, districtwar; and

(ii) in Kanyakumari district in 1957–58?

*A.*—(i)—

| | RS. | A. | P. |
|---|---|---|---|
| Madras.. | 1,93,094 | 14 | 0 |
| Chingleput | 28,914 | 4 | 0 |
| Tanjore | 25,198 | 13 | 0 |
| North Arcot | 45,119 | 11 | 0 |
| South Arcot | 30,286 | 7 | 0 |
| Madurai | 47,557 | 9 | 0 |
| Ramanathapuram | 31,141 | 0 | 0 |
| Coimbatore | 44,330 | 0 | 0 |
| Tiruchirappalli | 84,980 | 0 | 0 |
| Tirunelveli | 46,274 | 8 | 0 |
| Salem | 56,493 | 0 | 0 |
| The Nilgiris | 34,230 | 6 | 0 |

(ii) The particulars of the amount spent on the grant of scholarships to Harijan students of Kanyakumari district during 1957–58 are not available. But an amount of Rs. 64,070 has been allotted for the purpose of granting scholarships to Harijan students of Kanyakumari district during 1957–58.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40. But the concerned Hon. Minister has not yet come as, I understand, the train has been delayed. So, we shall take it up on another day.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENT BY THE HON. THE SPEAKER *RE* MESSAGE FROM THE LEGISLATIVE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the Hon. the Chairman, Legislative Council, has returned the Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) and the Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958 (L.A. Bill No. 5 of 1958) as passed by the Council on the 18th March 1958 without any recommendation and has also transmitted the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Legislative Council on the 18th March 1958 for the concurrence of the Assembly.



## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION AND PAYMENT OF FAIR RENT (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 1 OF 1958).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to present the report of the Joint Select Committee on the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958)[a] and move— 9-10 a.m.

" That the Bill be dropped."

I may submit that another Bill will have to be prepared in accordance with the recommendations of the Joint Select Committee.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Sir, I went to know from the Hon. Minister whether there is any provision according to which the Bill can be withdrawn at this stage.

MR. SPEAKER : At any stage, the Bill can be withdrawn. The Hon. Minister has just now said that the Government are going to bring in a comprehensive Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is only in accordance with the recommendations of the Joint Select Committee we are withdrawing the Bill.

MR. SPEAKER : The question is—

" That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958) be dropped."

The Motion was put and carried and the Bill was dropped.

## IV.—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59.

### DEMAND XXII—HARIJAN UPLIFT.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,33,44,500 under Demand XXII—Harijan Uplift."

MR. SPEAKER : Motion moved—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,33,44,500 under Demand XXII—Harijan Uplift."

Will the hon. Member, Mr. Jagannathan move his cut motion?

---

[a] Printed as Appendix III on pages 352-354 infra.

[24th March 1958

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" That the allotment of Rs. 2,33,44,500 under Demand XXII —Harijan Uplift be reduced by Rs. 100."

MR. SPEAKER : மந்திரியவர்களின் மான்யக் கோரிக்கையையும் ஜகன்னாதன் அவர்களின் வெட்டுப் பிரேரணையும் நான் சபை முன் விவாதத்திற்கு வைக்கிறேன். மந்திரி அவர்களுக்கு பதில் சொல்ல எவ்வளவு மணி நேரம் வேண்டும் ?

THE HON. SRI P. KAKKAN: முக்கால் மணி நேரம்.

MR. SPEAKER : மூன்றரை மணி நேரம் இருக்கிறது. அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் 10 நிமிடம் கொடுக்கிறேன். ஜகன்னாதன் அவர்களுக்கு 15 நிமிடம் கொடுக்கிறேன். கடைசியில் எதிர் கட்சித் தலைவர்கள் இருவர் பேசவேண்டுமென்று ஒப்பந்தம் இருக்கிறது. . அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எனக்கு பெயர்கள் கொடுக்கவேண்டும். ஏனெனில், காங்கிரஸ் கொரடா இதுவரையில் 12 பெயர்களை கொடுத்திருக்கிறார்கள். நாஷனல் டெமாக்ராட்டிக் காங்கிரஸ் 4 பெயர்களை கொடுத்திருக்கிறார்கள். இதர கட்சிகள் இன்னும் கொடுக்கவில்லை. இன்டிபெண்டண்ட் ஒருவர் பெயர் கொடுத்திருக்கிறார். ஆகவே கொரடாக்கள் பெயர்கள் கொடுக்கும் போது கொஞ்சம் யோசித்துக்கொடுக்க வேண்டும். அங்கத்தினர்கள் 10 நிமிஷத்துக்கு மேல் எடுக்கக்கூடாது. இதற்காக அங்கத்தினர்கள் என் மேல் கோபித்துக்கொள்ளக்கூடாது. 10 நிமிஷத்துக்குக் கம்மியாக கொடுத்தால் பேசமுடியாது. ஆகவே, இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு ஜகன்னாதன் அவர்களை பேச அழைக்கிறேன்.

SRI M. JAGANNATHAN : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்துள்ள இந்த வெட்டுப் பிரேரணையானது, நம்முடைய மாநிலத்தில் இருக்கிற ஹரிஜன மக்களின் பொருளாதார வாழ்க்கையிலும் பின்தங்கிய மக்களின் பொருளாதார வாழ்க்கையிலும், நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு சர்க்கார் இதுவரையில் தவறிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். நம் நாடு சுதந்திரம் பெற்ற அன்று முதல் இன்றுவரை சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஏதோ சில லட்சக்கணக்கான தொகைகளை ஒதுக்கி வைத்து ஹரிஜன முன்னேற்ற வேலைகளை அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் இதுவரை செய்துகொண்டு வந்துள்ள ஹரிஜன முன்னேற்ற வேலைகளினால் ஹரிஜனங்களின் பொருளாதார நிலைமை உயர்ந்திருக்கிறதா என்று பார்ப்போமேயானால், அதைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் எல்லோரும் வருத்தப்படக்கூடிய நிலையில்தான் இருக்கிறோம். இதுவரையில், அரசாங்கத்தின் கொள்கையானது, அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழத்தைக் காட்டுவதுபோல்தான் இருக்கிறதே தவிர உண்மையிலே ஹரிஜன மக்களின் அடிப்படையான பிரச்னைகளுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காண வழிவகைகள் செய்ய சர்க்கார் இதுவரையில் ஒன்றுமே செய்யவில்லை. ஏதோ ஆங்காங்கு சில நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் மாத்திரம் கொடுத்துவிட்டால் மட்டும், லட்சக்கணக்கான ஹரிஜன மக்கள், வறுமையாலும், பட்டினியாலும், பஞ்சத்தாலும் வாடி வதங்கித் துன்பப்படுகிற இந்த ஹரிஜன மக்களின் துயரம் கிஞ்சித்தேனும் குறைந்துவிடாது என்பதை சர்க்கார் உணரவேண்டும். ஆகவே, நான் சொல்கிறேன், சர்க்கார் ஹரிஜன மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டத் தவறிவிட்டார்கள். அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தில், அக்கறை காட்டுவதற்கு சர்க்கார் இதுவரையில் முன் வரவில்லை என்பதை சுட்டிக் காட்டத்தான் இந்த வெட்டுப் பிரேரணையை நான் கொண்டுவந்துள்ளேன். இந்த வருட வரவு செலவுத்திட்டத்திலே, சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்திற்காக சுமார் 2 கோடி 33 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நாம் அதைப் பற்றி ஓரளவு பெருமை பட வேண்டியதுதான். இப்படி ஒதுக்கப்



24th March 1958] [Sri M. Jagannathan]

படும் தொகை உண்மையிலே ஹரிஜனங்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் பயன்படுகிறதா, காரியாம்சத்திலே, நடைமுறையிலே இந்தப் பணம் அவர்களுக்கு பயன்படுகிறதா, ஹரிஜன மான்யத்தின் பெயரால் ஒதுக்கப்படும் தொகை ஹரிஜன மக்களுக்கு போய் சேருகிறதா, அவர்களின் நன்மைக்காக அது செலவிடப்படுகிறதா என்று பார்த்தால் அவ்விஷயத்தில் நாம் சந்தேக அபிப்பிராயத்தை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, சர்க்கார் இனிமேலாவது ஹரிஜன மான்யத்திற்காக ஒதுக்கப்படும் தொகையை நல்ல முறையில் செலவு செய்து ஹரிஜனங்களின் நன்மைக்காக அவர்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு நிரந்தரமான முறையில் ஒரு தீர்வு காண அந்தத் தொகை செலவிடப்படவேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் நிர்வாகம் செய்து, அத்தொகை நன்கு செலவிடப்பட்டு ஹரிஜன மக்களையும், பின்தங்கிய மக்களையும் கைதூக்கிவிடவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன மக்களின் சிக்கலான பிரச்னைகளை, அவர்களின் ஜீவாதாரமான பிரச்னைகளை தீர்த்து வைக்க போதிய அளவு கணிசமான தொகை ஒதுக்கப்படவில்லை என்பதற்கு உதாரணமாக ஓரிரண்டு விஷயங்களை மாத்திரம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக, ஹரிஜன காலனிகள், அதாவது சேரிகளைப் பார்ப்போம். சேரிகளில் ரோடு வசதியில்லாமல் லட்சக்கணக்கான ஹரிஜன மக்கள் பல ஆயிரக்கணக்கான கிராமங்களில் அவஸ்தைப்படுகிறார்கள். இந்த ஹரிஜன சேரிகளில் ரோடு வசதி செய்துகொடுக்க இந்த வரவு செலவுத் திட்டத்தில் தொகை ஒன்றுமே ஒதுக்கப்படவில்லை. 1956–57-ல் அவர்கள் ஏதோ 11,000 ரூபாய் ஒதுக்கி சில வேலைகள் செய்திருக்கிறார்கள் என்று பார்க்கிறேன். ஆனால் 1957–58லும், 1958–59லும், சர்க்கார் ஹரிஜன காலனிகளுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க ஹரிஜன மான்யத்தில் எந்த விதமான தொகையும் ஒதுக்கப்படவில்லை என்று நான் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, ஹரிஜன சேரிகளில் குடிதண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான சேரிகளில் மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் வந்து இத்தனை வருஷங்கள் ஆகியும் கூட கிராமங்களில் வாழும் ஹரிஜன மக்களுக்கும், பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்கும் குடிநீர் வசதி கூட செய்து கொடுக்க இந்த சர்க்கார் முன்வரவில்லை என்றால் அதைப்பற்றி நாம் பெருமைப் படுவதற்கில்லை. இந்த வரவு செலவுத்த திட்டத்தில் இந்த மாநிலத்தில் இருக்கிற அத்தனை சேரிகளில் வாழும் ஹரிஜன மக்களின் சௌகரியத்திற்காக, அவர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 3,50,000 ரூபாய்தான் ஒதுக்கிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அதைப் பற்றிநான் உண்மையில் வருத்தப்படுகிறேன். ஏனெனில், நம் மாகாணத்தில் எத்தனையோ ஆயிரக்கணக்கான சேரிகள் இருக்கின்றன. அந்தச் சேரிகளில் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியும். ஆகவே நான் இதை கூறுகின்ற நேரத்தில். . .

. . . .

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சேரி சேரி என்று சொல்லுகிறார்கள். இப்போது அந்த பெயர் ஒழிக்கப்பட்டு காலனி என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஆகையால் காலனி என்று சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9–20 a.m.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, இம்மாதிரி ஹரிஜனங்கள் இருக்கும் இடங்களின் பெயரை மாத்திரம் மாத்துவதில் ஒரு அர்த்தமும் கிடையாது. உண்மையாகவே அவர்களுடைய இழி நிலையை மாற்றுவதற்கு ஏதாவது சர்க்கார் திட்டம் வகுத்து அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு வழிவகை செய்தால் பெருமைப் படவேண்டுமே தவிர வெறும் பெயரை மாத்திரம் சொல்லளவில் மாற்றுவதனால் ஹரிஜனங்களுக்கு சமூகத்தில் எந்தவிதமான அந்தஸ்தும், கண்ணியமும் வந்துவிடாது என்பதை தாழ்மையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடிதண்ணீர் பிரசனைக்காக இந்த மாகாணம் பூராவுக்கும் மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது மிகவும் வருந்தவேண்டிய விஷயமாய் இருக்கிறது. இன்றைக்கு எத்தனையோ

கிராமங்கள் குடிநீர் வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
அமைதிரிப்பட்ட ஒன்றிரண்டு கிராமங்களில்கூட தண்ணீர் வசதி செய்து
கொடுக்க இவ்வளவு குறைந்தபட்ச ரூபாயை ஒதுக்கினால் கடலில்
பெருங்காயம் கரைத்தது போல்தான் இருக்கும். இதனால் ஹரிஜனங்
களுடைய குடிநீர் பிரச்னையை தீர்த்துவிட முடியாது. இதன் மூலம் நாம்
ஒரு நல்ல பாடம் கற்றுக்கொள்ள முடிகிறது. இந்த சர்க்கார் வெறும்
கண்துடைப்பு வேலையாகத்தான் இதை செய்து வருகிறது என்பதை
தவிர ஹரிஜனங்களை முன்னேற்றவேண்டும் என்கின்ற நல்ல மனப்
பான்மையுடன் நல்ல மனோபாவத்துடன் இந்த வரவு செலவு திட்டத்தில்
பணம் ஒதுக்கவில்லை என்று நன்றாக அறிந்து கொள்ளமுடியும். அதே
மாதிரி குடிமனை விஷயத்திலும் இந்த வரவு செலவு திட்டத்தில் நான்கு
லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான
ஹரிஜன மக்கள் குடியிருக்க இடம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள். இந்த பெரியதொரு பிரச்னையை தீர்ப்பதற்கு வெறும் நான்கு
லட்ச ரூபாய் இந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம் என்று
சொன்னால் அதைப்பார்த்து நாம் வருத்தப்படவேண்டிய நிலைமையில்
இருக்கிறோம். இன்றைக்கு எத்தனையோ ஹரிஜன மக்கள் ஆண்டைகளின்
நிலத்தில் குடிசைகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் இருக்
கின்றபொழுது இந்த ஏழை ஹரிஜன மக்கள் ஆண்டைகளிடம் வேலை
செய்ததற்கு கொஞ்சம் கூலி அதிகமாக கேட்டால், அதற்காக ஏதாவது
கிளர்ச்சி செய்தால் ஆண்டைமார்கள் இந்த ஏழை ஹரிஜன மக்களை துன்
படுத்தி சட்டிப்பானைகளை எல்லாம் வெளியே எடுத்துப்போட்டு அவர்களை
குடிசையிலிருந்து துரத்திவிடுகிறார்கள். இம்மாதிரியான பரிதாபகரமான
நிலைமையில் ஹரிஜன மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதம்
ஹரிஜன மக்கள் குந்த குடிசை இல்லாமல் இருக்கும் இந்த இழி நிலையை
போக்குவதற்கு சர்க்கார் அவர்களுக்கு குடிமனை வழங்கவேண்டும்.
இதற்காக ஏதோ 4 லட்சம் ரூபாயை ஒதுக்கிவிட்டு ஹரிஜனங்களுக்கு அதிக
மாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால் அது ஒத்துக்கொள்ள முடியாத
ஒரு விஷயமாகும். சர்க்காருக்கு உண்மையிலே இவர்களுக்கு
நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால் இன்றைக்கு
ஹரிஜனங்களுடைய ஜீவாதாரமான பிரச்னையாக இருக்கிற இந்த குடிமனை
பிரச்னையை தீர்ப்பதற்கு இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்க
வேண்டும். குடிநீர் வசதிக்காக 3 லட்சம் ரூபாய் குடிமனை வசதிக்காக 4 லட்சம்
ரூபாய், இவ்விதமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அதே
போல் மற்ற பல துறைகளுக்கும் ஹரிஜனங்களுக்காக இரண்டு கோடி
முப்பத்திமூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால்
உண்மையிலேயே இந்த சர்க்கார் ஹரிஜனங்களுடைய பிரச்னைகளை தீர்ப்ப
தற்கு செலவு செய்வதற்கா அல்லது வேறு ஏதாவது வீண் செலவு
செய்து கொள்ளுவதற்கா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.
ஹரிஜனங்களுடைய வாழ்க்கையை சீரமைக்கவேண்டுமென்றால் அடிப்
படையிலேயே வேலை செய்யவேண்டும். ஹரிஜனங்களுடைய ஜீவாதாரமான
பிரச்னையாகிய குடிதண்ணீர் பிரச்னை, குடிமனை பிரச்னை இவைகளை
தீர்ப்பதற்கு கணிசமான முறையில் பணம் ஒதுக்கவேண்டும். அதல்லா
மல் ஹரிஜன முன்னேற்றத்திற்கு நாங்கள் என்னவெல்லாமோ செய்து
கொண்டிருக்கிறோம் என்று கூரை மேல் நின்று கூவி பறைசாற்றுவதில்
ஒரு பலனும் இல்லை. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு கொடுத்திருக்
கிற சமயத்தை வீணாக்காமல் மேலும் ஒன்றிரண்டு கருத்துக்களை சொல்ல
விரும்புகிறேன். சர்க்கார் உண்மையிலேயே ஹரிஜனங்களுடைய பொரு
ளாதார நிலையை உயர்த்துவதற்காக வேண்டிய வேலைகளை செய்யவேண்டும்.
நம்முடைய மாகாணத்தில் பல இடங்களிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்
தரிசு நிலங்கள் அனாதையாக கிடைக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம்
நிலமில்லாத இந்த அரிஜன மக்களுக்கும், பின்தங்கிய ஏழை மக்களுக்கும்
கொடுத்து அதில் சாகுபடி செய்வதற்கு உபயோகிக்கும்படியான நிலைமையை
உண்டுபண்ணி கொடுக்கவேண்டும். இம்மாதிரி கொடுக்கப்பட்ட புறம்
போக்கு நிலங்களை எல்லாம் உடனடியாக ஜாரி செய்து கொடுப்பதற்கு
வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்த விஷயத்தில் இதற்கு
முன்னால் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்து 1949-ம் ஆண்டு ஜூன்



மாதத்தில் 1523-ம் நம்பராக ஒரு ஜி.ஓ. பிறப்பித்திருந்தார்கள்.
அதில் நிலமில்லாத ஏழை ஹரிஜன மக்களுக்கும் பின் தங்கிய மக்களு
க்கும் தரிசு நிலங்களை கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்கள்.
மேலும் அதில் ஹரிஜனங்களுக்கும், அரசியல் தியாகிகளுக்கும், மாஜி
ராணுவத்தினருக்கும் இந்த புறம்போக்கு நிலங்களை கொடுக்கவேண்டும்
என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எத்தனை ஆயிரம்
பேர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு புள்ளி விவரங்
களும் இல்லை. எனக்கு தெரிந்த வரையில் பெருவாரியான முறையில்
ஹரிஜனங்களுக்கு நிலங்களை கொடுத்திருப்பதாக தெரியவில்லை.. அதன்
பின்னால் 1952-ல் பிறப்பித்த உத்தரவை 1957-ம் நவம்பர் கவனிக்கவேண்
டும். அதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் இனிமேல் ஹரிஜனங்
களுக்கு புறம்போக்கு நிலங்களை இலவசமாக கொடுக்கக் கூடாது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை ஏதோ நிலங்களை அதிகமாக கொடுத்து
விட்டது போலவும், இனிமேல் கொடுக்கமுடியாது என்றும் கூறுகின்ற
முறையில் தான் 7–7–1952-ல் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் பிறப்பித்த
1957 ஜி.ஓ. வில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இனிமேல் ஹரிஜனங்களுக்கு
வால்யூபிள் லாண்ட்ஸ்களை எல்லாம் ஒரு குறிப்பிட்ட விலைக்கு (மார்க்கட்டிங்
வால்யூ) தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதற்
காக இந்த புதிய உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள் என்று தெரிய
வில்லை. ஏற்கனவே ஏதோ நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஏழை
ஹரிஜன , மக்களுக்கும், பின்தங்கிய ஏழை மக்களுக்கும் கொடுத்து
விட்டதாக எண்ணிக்கொண்டு அவர்கள் அதன் பிறகு இந்த உத்தரவை
கொண்டு வந்து இப்பொது கொஞ்சம் கிடைத்துக்கொண்டிருக்கும்
நிலங்களையும் தடை செய்கின்ற முறையில் இதைப்போட்டிருக்கிறார்கள்.
ஆகவே இந்த உத்தரவை உடனடியாக மாற்றுவதற்கு சர்க்கார்
முன் வரவேண்டும். இன்றைக்கு பெரும்பாலும் விவசாயத்தை
நம்பி வாழ்க்கை நடத்துகின்ற லட்சக்கணக்கான ஏழை மக்க
ளுக்கு தங்களுக்கு என்று ஒரு செண்ட் பூமி கூட இல்லாமல் இருந்து
கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களை
எல்லாம் உடனடியாக ஜாரி செய்து கொடுக்கவேண்டும். இதை செய்து
கொடுக்க அரசாங்கத்தார் தவறி விட்டார்கள். இதற்கு இரண்டு காரணங்
உண்டு. ஒன்று சர்க்காரில் நிர்வாக திறமை யில்லாமல் இருப்பது.
இரண்டாவது ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் வசதிகள் செய்து
கொடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் இல்லாமல் இருப்பது. இந்த
இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். ஹரி
ஜனங்களுக்கு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் வந்தால் ஒழிய அவர்கள்
சமூகத்தில் எந்த உயர்ந்த அந்தஸ்தையும் பெற்றுக்கொள்ள முடி
யாது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, "**to treat an internal
disease externally**" என்று சொல்லுவார்கள். உள்ளேயிருக்கிற
வியாதிக்கு மேலே சிகிச்சை செய்வது போல ஹரிஜனங்களுடைய பொரு
ளாதார முன்னேற்றத்திற்கு வேண்டிய வேலை செய்வதற்கு பதிலாக வேறு
ஏதாவது செய்து கொண்டிருப்பது பெரும் தவறு, என்பது மாத்திரமல்ல,
அந்த சமூகத்திற்கே துரோகம் செய்வது போல்தான் ஆகும் என்பதை
சொல்லவிரும்புகிறேன். மேலும் இன்றைக்கு ஹரிஜனங்கள் அனைவரும்
கிராமங்களில் விவசாய கூலிகளாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்குஈ
ஒரு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய சர்க்கார் முன் வரவேண்டும்.
இன்றைக்கு நாட்டில் லட்சகணக்கான விவசாயிகள் தங்கள் நெற்றிவேர்வை
நிலத்தில் விழ வேலை செய்தும் தங்கள் உழைப்புக்கேற்ற கூலி பெற
முடியாமல் தினம் 4 அணா, 5 அணா என்று சம்பாதித்துதான் தங்கள்
வாழ்க்கையை நடத்திக்கொண்டுவருகிறார்கள். இதனால் அவர்கள் வறு
மையிலும் பஞ்சத்திலும் கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமல் துன்
பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் குறைந்த பட்ச கூலியை
**minimum wages for Agricultural labourers** என்பதை ஏற்
படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். 1959-ம் வருஷ
இறுதிக்குள்ளாவது சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்து, குறைந்த கூலி
யை பரிசீலனைசெய்து, விவசாயவேலை செய்கின்றவர்களுக்கும், ஹரிஜனங்களுக்
கும், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், குறைந்த பட்ச கூலியை

நிர்ணயித்து அது கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். மத்திய சர்க்கார் இந்த சர்க்காருக்கு அறிவுரைகள் கூறி
யிருக்கிருர்கள் என்று அறிகிறேன். ஆனால் இந்த சர்க்கார் அந்த
அறிவுரைகளை கேட்காமலேயே இருக்கிருர்கள். வேண்டுமென்றே கால
தாமதம் செய்வது வருந்தத்தக்கது.

9-30 a.m. ஹரிஜனங்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு நல்ல முறையில்
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் படித்த ஒரு சில ஹரிஜனங்களுக்கு சர்க்கார் உத்தியோகம்
கிடைக்காமல், ஹரிஜனங்களிடையே வேலையில்லா திண்டாட்டம் ஆரம்பித்து
இருக்கிறது. ஆகையால் அவர்கள் சரியானபடி முன்னேற்றம் அடைய
வேண்டுமானுல், அவர்களுக்கு சர்க்கார் இலாகாக்களில் உத்தியோகம்
கிடைக்கவும், வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் திட்டம் வகுத்து
வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொருளாதார
துறையில் ஹரிஜனங்கள் முன்னேறும் வகையில் சர்க்கார் அவர்களுக்கு.
உதவி செய்வதற்குப் பதிலாக அவர்களை ஏமாற்றிக்கொண்டுதான் வருகி
ருர்கள் என்று சொல்லவேண்டும். ஒரு சிலரை பல நாள் ஏமாற்றலாம்.
பலரை ஒரு சில நாள் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா நாளும்
ஏமாற்றுவது என்பது முடியாது. ஆகையால் சர்க்கார் ஹரிஜனங்களை
பொருளாதாரத் துறையில் கை தூக்கிவிடுவதற்கு நான் கூறிய ஆலோசனை
களை நல்ல வழி வகைகளை செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri K. PONNIAN** : கனம் சபாநாயகர் அவர்களே,
கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரி
ஜன மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.
பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்த நாட்டில் தீண்டாமை என்
னும் பேய் இருந்து வந்திருக்கிறது. பெரிய பெரிய மகான்கள் அதை
போக்குவதற்கு பலமுறைகளை கையாண்டும் அதை ஒழிக்க முடியவில்லை.
கடைசியாக நம் நாட்டு பிதா காந்தியடிகள் அதைப் போக்குவதற்கு
வழி வகை செய்து கொடுத்நார்கள். காங்கிரஸ் கட்சி அந்த முறைகளை
பின்பற்றி வருகின்றபடியால், தாழ்த்தப்பட்ட மக்கள் படிப்படியாக முன்
னேறிக்கொண்டு வருகிருர்கள். படிப்புத் துறையை எடுத்துக்கொண்டாலும்
உத்தியோகத் துறையை எடுத்துக்கொண்டாலும், விவசாயத் துறையை
எடுத்துக்கொண்டாலும், மற்றும் இன்னும் சகல துறைகளிலும் அவர்கள்
படிப்படியாக இந்த 10 ஆண்டுகளாக முன்னேறிக்கொண்டு வருகிருர்கள்.

சாதியை ஒழிக்கவேண்டும் என்று பல கட்சிகள் சொல்லுகின்றன.
ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது அவர்கள் ஒருவிதமான நல்ல
காரியமும் செய்வது இல்லை. உதாரணமாக, ஒவ்வொரு மாதமும் 30-ந்
தேதி ஹரிஜன தினம் என்று கொண்டாடப்படுகிறது. எந்த எந்த கட்சிகள்
ஜாதியை ஒழிக்கவேண்டும் என்று சொல்கின்றனவோ அவையெல்லாம்
இந்த தினத்தில் பங்கு எடுத்துக்கொள்வதில்லை. காங்கிரஸ் கட்சிமட்டும்
தான் இந்த தினத்தில் பங்கு எடுத்துக்கொண்டு சாதி வித்தியாசத்தை
ஒழிக்கவேண்டும், என்று பேசியும் செயலாற்றியும் வருகிறது. காங்கிரஸ்
கட்சி இப்பொழுது தான் இம்மாதிரி செய்து கொண்டு வருகிறதா என்று
பார்த்தால், கடந்த 30 வருஷங்களாக ஹரிஜனங்கள் முன்னேற்றத்திற்
காக ஹாஸ்டல்கள் ஏற்படுத்துவது, ஹரிஜன காலனிகளுக்கு சென்று,
அவர்களுக்கு வேண்டிய உடைகள் முதலியவைகளை கொடுப்பது போன்ற
வேலைகளை காங்கிரஸ் கட்சி செய்துகொண்டு வருகிறது.

தலைவர் அவர்களே, இன்றைக்கு ஹரிஜன முன்னேற்றத்திற்காக
கேட்டிருக்கக்கூடிய தொகையான 2,33,44,500 ரூபாய் போதவே போதாது
என்று தான் நான் சொல்வேன். குக்கிராமங்களில் சென்று பார்த்தால்,
அவர்களுடைய நிலைமையைப் பார்த்து நாம் மிகவும் வேதனைப்படவேண்டி
யதாக இருக்கிறது. பெரிய பெரிய நகரங்களிலும் **Taluk headquarters**-
லும் ஒரு சிலஹரிஜனங்கள் முன்னேறிக்கொண்டு இருக்கிருர்கள்
என்று சொல்லலாமே தவிர குக்கிராமங்களிலிருக்கும் ஹரிஜனங்களி





னுடைய நிலைமை முன்னேறியிருப்பதாக சொல்லமுடியாது. ஹரிஜனங்
கள் முன்னேற வேண்டுமானுல் சர்க்காரும், தனிப்பட்டவர்களும் அவர்
களுக்கு தகுந்த வேலை வாய்ப்புகள் செய்துகொடுக்கவேண்டும். அப்படி
அவர்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு சில யோசனைகளை சொல்ல
விரும்புகிறேன்.

பணக்காரர்கள் ஹரிஜனக் குழந்தைகளை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள
வேண்டும். சாதி மனப்பான்மை அறவே மறந்துவிடுவதற்காக அவர்கள்
வேலை செய்வதற்கு தகுந்த ஊக்கம் அளிக்கவேண்டும். அப்படி பெரிய
வீடுகளில் அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டால் சாதிமனப்பான்மை
ஒழிந்துவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயம் செய்வதற்கு தகுதியாக உள்ள தர்க்காஸ்து நிலங்களை அவர்
களுக்கு கொடுக்கவேண்டும். தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான
நிலங்களை ஹரிஜனங்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யும்படி ஏற்
பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஹரிஜன ஹாஸ்டல்களில் படிக்கும் பையன்களுக்கு கொடுக்க
கூடிய பணம் ரொம்பவும் தாமதித்து கொடுக்கப்படுகிறது. ஆகையால் அது
சரியான முறையில் பயன்படுத்த முடியாமல் போகிறது. ஆகையால்
கொடுக்கும் பணத்தை காலாகாலத்தில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய
வேண்டும். சர்க்கார் நடத்தும் ஹரிஜன ஹாஸ்டல்கள் ஒவ்வொரு வரு
ஷமும் 100-க்கு 25 மாணவர்களையாவது அதிகமாகச் சேர்த்துக்கொள்ள
வேண்டும். தனிப்பட்டவர் நடத்தும் ஹாஸ்டல்களிலும், 100-க்கு 15 அல்
லது 20 மாணவர்களை வருஷா வருஷம் அதிகமாக சேர்த்துக்கொள்வதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் சீக்கிரம்
முன்னுக்கு வர முடியும்.

15 அல்லது 16 கோடி ரூபாய் செலவில் இன்றைக்கு மதுவிலக்கு அமல்
செய்யப்படுகிறது என்ருல், கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் குடிப்பார்
கள் என்றோ அல்லது கனம் அண்ணாத்துரை அவர்கள் குடிப்பார்கள் என்றோ
அமல் செய்யப்படவில்லை. ஏழை ஹரிஜனங்கள் முன்னேறவேண்டும்
என்பதற்காகவே அது அமல் செய்யப்படுகிறது. யார் இந்த நன்மையை மறந்
தாலும், எந்த கட்சி மறந்தாலும், ஹரிஜனங்களாகிய நாங்கள் இந்த உப
காரத்தை மறக்க முடியாது என்பதை நான் பணிவோடு சொல்லிக்
கொள்கிறேன்.

ரைஸ் மில்களுக்கும், ஓட்டல்களுக்கும் சர்க்கார் லைசன்ஸ் கொடுக்கிறது.
அப்படி லைசன்ஸ் கொடுக்கும்போது இவ்வளவு ஹரிஜனங்களை வேலைக்கு
வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஓர் உத்திரவு போட்டால் ஹரிஜனங்
களுக்கு தகுந்த வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று சொல்லி என்னு
டைய பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்.

**Sri R. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, 9-40 a.m.
கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன மான்யத்தை
ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சர்க்கார் ஹரி
ஜன முன்னேற்றத்திற்காக மிகவும் தாராள மனப்பான்மையுடன்
தொகையை ஒதுக்கி, வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன, இன்னும்
நடக்கப் போகின்றன என்பதை அவர்கள் இதுவரை செலவழித்துக்
கொண்டு வரக்கூடிய தொகைகளிலிருந்து பார்த்தால் நன்கு புலனுகும்.
இந்த ஹரிஜன இலாகாவானது 1948–49-ல் லேபர் கமிஷனர் வசமிருந்து
எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுது இதற்கு செலவழித்த தொகை
ரூ. 26·71 லட்சம். அப்பொழுது ஆந்திராவையும் சேர்த்து இந்தத்
தொகை செலவழிக்கப்பட்டது. ஆனுல் அதற்குப் பிறகு வருஷா வருஷம்
ஹரிஜன முன்னேற்றத்திற்காக பணம் ஒதுக்கி நல்ல முறையில் வேலை
நடந்துகொண்டு வருகிறது. 1956–57-ல் 159·26 லட்சம் செலவழித்திருக்
கிருர்கள். இதில் ஹரிஜனங்களுக்காக மட்டும் ரூ. 113·93 லட்சம் செல
வழிக்கப்பட்டிருக்கிறது. 1957–58-ல் மொத்தமாக செலவழிக்கப்பட்ட

[Sri R. Subramaniam] [24th March 1958

தொகை ரூ. 210·73 லட்சம். ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்பட்டது ரூ. 151·7 லட்சம். அதேமாதிரி 1958–59-ல் சென்ற வருஷத்தில் ஒதுக்கியதை விட 40 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் 233 லட்சத்தில் 166 லட்சம் ஹரிஜனங்களுக்கு செலவழிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நண்பர் ஜகன்னாதன் அவர்கள், ஏதோ ஒரு சில லட்ச ரூபாயை ஒதுக்கிவிட்டால் ஹரிஜனங்கள் ஏமாறிவிட மாட்டார்கள் என்று சொன்னார். இது ஒரு கண் துடைப்பாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் உண்மையிலேயே சொல்லுகிறேன், இந்த மாதிரி வாதங்களை வெளியிலேயும் போய்ச் சொல்லுவதனால்தான் இப்பொழுது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, இப்பொழுது மனைக்கட்டுகள் கட்டும் திட்டத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதை நான் ஓரளவுக்கு ஆதரிக்கவில்லை என்றாலுங்கூட, அது எந்த அளவுக்கு வேலை நடக்கிறது என்பதை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவதாக, இந்த மனைகள் கட்டி கொடுப்பதற்கு ஆரம்பிக்கும்பொழுது "எங்கள் ஊருக்கு கட்டிக் கொடுங்கள், எங்கள் ஊருக்குக் கட்டிக் கொடுங்கள்" என்று தொல்லை கொடுக்கிறார்கள். "சர்க்கார் ரூபாய் 550 கொடுக்கிறார்கள், நாங்கள் ரூபாய் 200 கொடுக்க வேண்டும். இதை நாங்கள் நிச்சயமாக கொடுத்து விடுகிறோம்" என்று முதலில் சொல்லுகிறார்கள். ஆனால் மனைக்கட்டு கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டவுடன், இந்தப் பணத்தைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். உதாரணமாக, என்னுடைய தொகுதியில் இந்தத் திட்டத்தின் கீழ் 20 வீடுகள் கட்டுவதை 30 வீடுகளாக ஆக்கப்பட்டது. அதற்காக சர்க்கார் ரூபாய் 550 போக, பாக்கி ரூபாய் 200-ஐ அவர்களே போட்டுக் கொள்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இந்த ரூபாய் 200-ஐ எங்களால் எப்படிக் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்த 30 பேர்களுக்கும் கடன் சாங்ஷன் செய்யும்படியாக பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் அவர்களிடம் சொல்லி, அவர்களுக்கெல்லாம் இப்பொழுது ரூபாய் 150 கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி ரூபாய் 50-ஐக் கொடுப்பதற்குக்கூட இந்த மாதிரி கட்சிக்காரர்கள் அங்கே சென்று என்ன சொல்லுகிறார்கள் என்றால், சர்க்காரிலே தான் செலவழிக்கிறார்களே, எதற்காக நீங்கள் பணம் போட வேண்டும் என்று பிரசாரம் செய்வதனால், உண்மையிலேயே அவர்கள் எந்த மாதம், எந்தத் தேதியில் கொடுக்கவேண்டுமோ, அந்தத் தவணைக்குள்ளாக கொடுக்க முடிவதில்லை.

மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். எத்தனையோ இடங்களில் அஸ்திவார மட்டத்திற்குத்தான் வந்திருக்கிறது. மார்ச் 31-ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்படுமா, முடியாதா என்பது தெரியவில்லை. எப்படித்தான் இதைச் செய்யப் போகிறார்கள் என்று புரியவில்லை.

**The Hon. Sri P. KAKKAN** : மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் கட்டி முடிக்க வேண்டுமென்பது தான் நிபந்தனை. ஆனால், ஜூன் மாதம் வரை நீளும் போகலாம் என்று மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம்.

**Sri R. SUBRAMANIAM** : கூரைமேலிருந்து சிலர் கூவுவதாக ஜெகன்னாதன் சொல்லுகிறார். உண்மையாகவே தீண்டாமை மனப்பான்மையை அகற்றவேண்டுமானால், அதற்காக காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, எல்லாக் கட்சிகாரர்களும் வேலை செய்தால்தான் தீண்டாமையை ஒழிக்க முடியுமே தவிர, ஒருவர் மீது ஒருவர் குறை சொல்லிக் கொண்டிருந்தால் ஒரு பலனும் ஏற்படாது. ஹரிஜனங்களுடைய அறியாமையையும், வறுமையையும் மற்றும் அவர்கள் படும் கஷ்டங்களையெல்லாம் கட்சி நலனுக்காக பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர, அதனால் வேறு எந்தவிதமான நன்மையும் ஏற்படாது. ஹரிஜனங்கள் அறியாதவர்கள், படிக்காதவர்கள், வறுமையால் கஷ்டப் படுகிறவர்கள். அவர்களிடத்தில் போய் இம்மாதிரியான பிரசங்கங்களைச் செய்தால் நம்பத்தான் செய்கிறார்கள். எவ்வளவோ இடங்களுக்குப்போய் ஹரிஜனங்களிடம் "நீங்கள் பணம் கொடுக்க வேண்டியதே இல்லை, பூராவையும் சர்க்காரிடத்தில் வாங்கிவிடலாம், நான் மந்திரியைப் பார்க்கிறேன், அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவர்களும், நாம் ஏன் பணம் கொடுக்கவேண்டும், சர்க்காரே கொடுத்தால் நமக்கு லாபம் தானே என்று நினைக்கிறார்கள்.



24th March 1958] [Sri R. Subramaniam]

சர்க்காரும் பணத்தை தாராளமாக ஒதுக்கி வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஹரிஜனங்கள் எந்தெந்த விதத்தில் முன்னேற்றம் அடைய வேண்டுமோ, அதற்காக சட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இனிமேல் சட்டம் செய்ய வேண்டியது அதிகமில்லை. பணம் ஓரளவுக்கு ஒதுக்கிக் கொண்டுதான் வருகிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், "ஆகாறளவிட்டி தாயினுங் கேடில்லை, போகா றகலக்கடை" என்று திருவள்ளுவர் சொல்லியிருப்பது போல், ஒதுக்கியிருக்கக் கூடிய பணத்தை நல்ல முறையில் செலவழிக்க வேண்டும். ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா, இல்லையா என்று பார்ப்பதற்கு, அவர்களில் எத்தனை பேர் பட்டதாரிகள், எத்தனை பேர் படித்திருக்கிறார்கள், எத்தனை பேருக்கு மத்தியான உணவு அளிக்கப்படுகிறது என்பதை அளவுகோலாக வைக்கக்கூடாது. கிராம மக்கள் எந்த அளவுக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை அளவுகோலாக வைத்துத்தான் மதிப்பிடவேண்டும். இந்த விதத்தில் பார்க்கும்போது எனக்கு நியாயமான குறைகள் என்ன என்று தெரிந்ததை நான் மந்திரி அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். எதாவது ஒரு வேலையை எடுத்துக்கொள்வதாய் இருந்தால் எவர்கள் அதிகமாக தொந்தரவு கொடுக்கிறார்களோ, எவர்கள் அதிகமாக வற்புறுத்துகிறார்களோ, எந்த ஊரிலிருந்து அதிக மகசர்கள் வருகின்றனவோ, அந்த வேலைகளைத் தான் கவனிக்கிறார்கள். இந்த முறை மாறவேண்டும். இதற்காக ஒரு சர்வே நடத்தப்படவேண்டும். எவர்கள் ஊரில் போக்கு வரத்து வசதியிருக்கிறதோ, எவர்கள் ரோடு ஓரங்களில் இருக்கிறார்களோ, அவர்கள் தான் அதிகமாகத் தொந்தரவு கொடுக்கிறார்கள். உள்ளிட்ட கிராமங்கள் எல்லாம் ஓரளவுக்கு இருந்த நிலைமையில் தான் இருக்கின்றன. எவ்வளவு மகசர்கள் வந்திருக்கின்றன, எத்தனை தடவைகள் நம்மிடம் முறையிட்டிருக்கிறார்கள் என்பதை கணக்கில் வைக்காமல், ராஜ்யம் பூராவும் சர்வே எடுத்து, யார் யாருக்கு என்ன தேவை என்பதைக் கண்டுபிடித்து, ஒரு திட்ட அடிப்படையில் வேலை செய்யவேண்டும். இப்பொழுது நாம் எத்தனையோ திட்டங்களைப் போடுகிறோம். ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஏன் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடக்கூடாது என்று கேட்கிறேன். அந்த அடிப்படையில் வேலை செய்ய வேண்டுமென்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு இருந்ததை விட ஆபீஸ்களில் எல்லாம் வேலை அதிகமாய்விட்டது. ஆனால், அதே ஆட்களை வைத்துக் கொண்டு தான் வேலை நடத்த வேண்டியிருக்கிறது. சென்ற வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி மாடுகள் வாங்குவதற்கு ஒரு உத்தரவு அனுப்பப்பட்டது. மார்ச் 31-ம் தேதிக்குள் இதை நிறைவேற்றவேண்டுமானால், இப்பொழுது இருக்கும் ஆட்களை வைத்துக் கொண்டு எப்படிச் செய்ய முடியும் என்று கேட்கிறேன். எக்ஸிகூடிவ் வேலைக்கும், மற்றும் "**house-sites**"-க்காக இடம் "**acquire**" செய்வதற்கும், இன்னும் மற்ற வேலைகளுக்குகெல்லாம் அதிகமாக ஆட்கள் நியமிக்கப்படவேண்டும். ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு டெபுடி தாஸில்தார் வேண்டும் அத்துடன் கூட ரெவென்யூ இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு தாலுகா சர்வேயர்கள் வேண்டும். எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் "**acquire**" செய்யப்பட்ட நிலம் அவர்களுக்கு அளந்து கொடுக்கப்படாமலேயே இருந்து வருகிறது. ஒரு லோயர் டிவிஷன் குமஸ்தாவை ரெவென்யூ இன்ஸ்பெக்டராகப் போடுகிறார்கள். அவருக்கு சர்வே என்றால் என்ன என்று கூடத் தெரியாது. டயரியில் மனைகள் அளந்து கொடுக்கப்பட்டுவிட்டன என்று எழுதுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அந்த மாதிரி அளந்து விடவில்லை. ஏராளமான இடங்கள் இன்னும் அளந்து கொடுக்கப்படாமலேயே இருக்கின்றன.

[Sri R. Subramaniam] [24th March 1958

9-50 a.m. அத்துடன் கூட ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது ஹரிஜன வெல்பேர் ஆபீசர் இருக்கிறார். அவருக்கு எவ்வளவோ வேலை இருக்கின்றன. அவர்கள் ஜில்லா பூராவும் போக வேண்டியதாக இருக்கிறது.. இப்பொழுது ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜீப் கார் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஜில்லா பூராவும் போகக்கூடிய ஹரிஜன வெல்பேர் ஆபீசருக்கு ஒரு ஜீப் கார் கொடுக்கவில்லை. (மணி அடிக்கப்பட்டது). இன்னும் இரண்டொரு நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன்.

**MR. SPEAKER :** இன்னும் ஒரு நிமிஷம்தான் பேசலாம்.

**SRI R. SUBRAMANIAM :** ஜில்லா பூராவும் வேலை செய்யக்கூடிய ஹரிஜன் வெல்பேர் ஆபீசர் ஜில்லா பூராவுக்கும் போக வேண்டியதாக இருப்பதால் அவருக்கு ஒரு ஜீப் கார் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது அவர்களுக்கு ஜீப் கார் கொடுக்கவில்லை. அதனால் அவர்களால் சரியானபடி வேலை செய்ய முடியவில்லை. அவர்களுக்கு ஆட்களும் உதவி செய்வதற்கு கொடுக்கவில்லை. அதனால் அவர்களால் வேலைகளைச் செய்ய முடியவில்லை. அவர்களுக்கு அதிகமான பணம் ஒதுக்கி வேலை செய்யும்படி சொல்லி அதே சமயத்தில் அவர்களுக்கு வேண்டியபடி ஆட்களைக் கொடுக்காமல் இருந்தால் அவர்களால் எப்படி வேலை செய்ய முடியும் என்பதை யோசித்து பார்க்கவேண்டும். பணத்தை மட்டும் ஒதுக்கி வைத்தால் போதாது. அளவுக்கு மீறி சாப்பிட்டால் ஒருவனால் சாப்பிட முடியாமல் வயிற்று வலிதான் ஏற்படும். அதைப்போலவே பணத்தை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டு அதற்கு வேண்டிய ஆட்களை ஒதுக்கி வைக்காமல் இருந்தால் அவர்களால் வேலை செய்ய முடியாது. வயிற்றுவலி ஏற்படுவதுபோல் பணம் செலவு ஆகாமல் அப்படியே தங்கிப் போய்விடும். அதனால் அந்த இலாகாவுக்கு வேண்டிய ஆட்களையும் நியமித்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுடைய நலனுக்காக இந்த நாட்டைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் பெரும் பங்கு எடுத்துக் கொண்டு உழைத்து வந்திருக்கிறது என்பதை சொல்ல அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆதி திராவிடர்கள் இன்றைய தினம் அதிகப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்களும் சொல்லி வருகிறார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள்தான் என்றும் காந்தியடிகளும்தான் என்றும் சொல்லுகிறார்கள். ஆரம்பக் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்தால் நிச்சயமாக நமக்கும் தெரியும், கனம் நிதி அமைச்சருக்கும் தெரியும், கனம் விநாயகம் அவர்கள் சொல்லுவது போல் எல்லோருக்கும் நன்கு தெரியும், திராவிடர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம்தான். காங்கிரஸ்காரர்களிடத்தில் ஆட்சிப் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தாலும், கஜானா அவர்கள் கையில் இருக்கிற காரணத்தாலும் ஏதோ பணத்தை எடுத்து அவர்களுக்குச் செலவு செய்து வருவதால் அவர்கள் முன்னேற்றமடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். பணத்தை எடுத்து அவர்களுக்கு என்று செலவு செய்துவிட்டதால் அவர்கள் முன்னேற்றமடைந்து விட்டதாக காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். இன்றைய தினம் ஆதி திராவிடர்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு என்று எந்தக் கட்சி அதிகப்படியான பாடு பட்டு வந்தது என்று சொன்னால் அந்த ஒரு கட்சி இந்த திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித்தான் என்று சொல்லாமலேயே விளங்கும். கடந்த வருஷம் இதே மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது சொன்னார்கள், காங்கிரஸ் கட்சிதான் முதன் முதலாக ஆலயப் பிரவேசப் போராட்டத்தை நடத்தினார்கள் என்று. அப்படிச் சொல்வது தவறு என்பது எங்களுடைய அபிப்பிராயம். ஏனென்றால்



24th March 1958] [Sri A. V. P. Asaithambi]

அந்தப் போராட்டத்தை எங்கள் கட்சிதான் அதிகப்படியாக நடத்தியது. காங்கிரஸ்காரர்கள் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை நடத்துவதற்கு முன்னதாகவே திருவண்ணாமலையில், பழநியில், மதுரையில், 1929-ம் வருஷத்தில் எங்கள் கட்சி ஆலயப் பிரவேசப் போராட்டத்தை நடத்தி அதனால் பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. இந்த நாட்டில் இருக்கிறது பல பொது இடங்களில், பொது துறைகளில், பொது ஓட்டல்களில் ஆதி திராவிடர்கள் அவமானப்படுத்தியும் கேவலப்படுத்தியும் வந்ததை தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதும் இந்தத் திராவிட முன்னேற்றக்கட்சிதான். இப்படி பல துறைகளில் எங்கள் கட்சிதான் அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வைக்கத்தில் பெரியார் ராமசாமி அவர்கள் அந்தப் போராட்டத்தை நடத்தி இருப்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அது போலவேதான் ஓட்டல்களில் எழுதப்பட்டிருக்கும் ஜாதிப் பெயர்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று எங்கள் கட்சிதான் பாடுபட்டு வந்தது. இப்படிப்பட்ட எத்தனை துறைகளில் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து ஆதி திராவிடர்களுடைய முன்னேற்றத்தை மனதில் கொண்டு பல போராட்டங்களை நடத்தி வந்தோம். பொருளாதார துறையில் அவர்களை முன்னேற்றமடையச் செய்து விட்டால் மட்டும் போதாது. ஒரு சமுதாயம் நல்ல முறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால் அதற்கு அவர்களுக்கு பணத்தை ஒதுக்கி வைத்து விட்டால் மட்டும் போதாது. ஆதி திராவிடர்களை நாயை விட கேவலமாக நடத்தி வந்த காலத்தில் அவர்களுக்காக பாடுபட்டது ஆதி திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித்தான். இன்றைய தினம் அவர்களுக்கு பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டால் மட்டும் அவர்கள் ஜாதியில் முன்னேற்றமடைந்துவிட முடியாது. அவர்கள் தங்களுடைய வாழ்க்கைத்துறையில் முன்னேற்றமடைந்து விட முடியாது. பொருளாதாரத் துறையில் உதவி செய்து வருவதால் அவர்கள் ஜாதி அமைப்பில் முன்னேற்றமடைந்து விட்டதாகச் சொல்லிவிட முடியாது. அவர்களுக்கு சகல அந்தஸ்தும் வந்து விடாது. பொருளாதாரத் துறையில் அவர்களுடைய வாழ்க்கை துறை உயர்ந்திருந்தாலும் கூட சமுதாயத் துறையில் அவர்களுக்கு தனி அந்தஸ்து அந்த சமுதாயத்தில் வரவே இல்லை. அவர்கள் தாழ்ந்த மக்கள் என்று தான் இன்றைக்கும் கருதப்படுகிறார்கள். பொருளாதாரத் துறையில் அவர்கள் நல்ல வசதிகளைப் பெற்றாலும், அவர்கள் சமுகத்தில் கேவலமாகத்தான் நடத்தப்பட்டு வருகிறார்கள். அவர்கள் பொருளாதாரத் துறையில் நல்ல வாழ்க்கையை நடத்தி வந்தாலும், முன்னேற்றமடைந்தாலும் ஆதி திராவிடர்கள் சமூகத்தில் அவமானப்படுத்தப்பட்டு கேவலப்படுத்தப்பட்டுதான் வருகிறார்கள். தங்களுடைய கையில் பணம் இருக்கிறது என்று அவர்களுக்கு வருடந்தோறும் அதிகப்படியான பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டால் மட்டும் போதாது. பொருளாதாரத் துறையில் உதவி செய்து விட்டோம் என்று சொல்லிவிட்டால் அவர்கள் எந்த விதத்திலும் முன்னேற்றமடைய மாட்டார்கள். உண்மையிலேயே அவர்கள் தங்களுடைய ஜாதியில் முன்னேற்றமடைய வேண்டுமானால் ஜாதியை ஒழிக்க ஒரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் முன் வர வேண்டும். நாங்கள் அந்தக் காலத்திலிருந்தே இந்த ஜாதி ஒழிப்புக்கு என்று போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறோம். அப்பொழுது இந்த காங்கிரஸ்காரர்கள் என்ன சொன்னார்கள் என்றால், வெள்ளைக்காரனை வெளியேற்றி விட்டு அதன் பிறகு ஜாதி ஒழிப்பைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்பொழுது முதற்கொண்டே அதற்கு நாம் பாடுபட வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். மற்றும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் சுயராஜ்யம் அடைந்த பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் ஜாதியை ஒழிக்க என்ன சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள் என்று கேட்கிறேன். அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்றுங்கள் என்று கேட்டால் அதை சுலபமாக இயற்றுவது என்பது முடியாது, என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு வெள்ளைக்காரன் போய் விட்டான், சுயராஜ்யம் வந்து விட்டது, நம்மிடத்தில் பெரிய மெஜாரிடி இருக்கிறது. இந்த நிலைமையில் ஏன் ஜாதி ஒழிப்புக்கு சட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறை வேற்றக்கூடாது என்று கேட்கிறேன். உங்களிடத்தில் மெஜாரிட்டி அங்கத்தினர்கள் இருப்பதால் பயமில்லாமல் அந்தச் சட்டத்தை

[Sri A. V. P. Asaithambi] [24th March 1958

இயற்றி விடலாமே. ஆனால் அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதைப் பார்த்தால் ரொம்பவும் பரிதாபகரமாகத்தான் இருக்கிறது. ஆளுகின்ற கட்சியில் அபரிமிதமாக அங்கத்தினர்கள் இருந்தும்கூட அவர்கள் இதற்கு என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இந்த ஜாதி முறையை ஒழிக்க அவர்களால் முடியவில்லை. இந்த ஜாதி முறையை ஒழிக்காத வரையில் ஆதி திராவிட மக்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. இப்பொழுதுள்ள சர்க்கார் ஏன் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இயற்றக்கூடாது. இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டங்களினால் ஜாதி முறையை ஒழிக்கவே முடியாது. அதற்கு வேண்டிய சட்டம் இல்லை. அப்படிப்பட்ட சட்டம் இல்லாத காரணத்தால் தான் பெரியார் ராமசாமி அவர்கள் அந்தச் சட்டத்தை எரிப்பேன் என்று சொல்லுகிறார். அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். இப்பொழுதுள்ள சட்டம் அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே இப்பொழுதுள்ள சட்டத்தை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதுள்ள அரசாங்கத்திற்கு அதிகப்படியான ஆட்கள் இருக்கிறபோதே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இது வரையிலும் ஆதி திராவிடர்களுக்கு ஏதோ நன்மைகள் செய்து வந்திருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு காரணம் ஆட்சிப் பொறுப்பு அவர்களுடைய கையில் இருப்பதுதான். ஆட்சிப் பொறுப்பு அவர்களுடைய கையில் இருப்பதால் தான் அவர்களால் கொஞ்சம் பணம் அவர்களுடைய நன்மைக்கு என்று ஒதுக்க முடிகிறது. பொருளாதாரத் துறையை விட மற்ற எந்தத் துறையிலும் அவர்களுக்கு இந்த அரசாங்கம் நன்மை செய்யவே இல்லை. சாதாரணமாகப் பார்க்கலாம் இந்த சட்ட மன்றத்தில் அதிகப்படியாக ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு என்று தனித் தொகுதி வைத்ததின் காரணம் தான். அதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் என்று கூட சொல்ல முடியாது. அதற்குக் காரணம் டாக்டர் அம்பேத்கார் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் தான் பாடுபட்டார். அதற்காக காந்தியடிகள்கூட எதிர்த்து உண்ணா விரதம் இருந்தார். அந்த முறையில் அவர்களுக்கு என்று தனித் தொகுதி ஒதுக்கப்பட்டதன் காரணத்தால் ஆதி திராவிடர்கள் அதிகப்படியாக இந்த சட்ட மன்றத்தில் உட்கார்ந்திருக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அப்படி அவர் பாடுபடாமல் இருந்திருந்தால் இப்பொழுது ஆதி திராவிடர்களை இங்கு பார்க்க முடியாது. கனம் கக்கன் அவர்களும் அமைச்சராக இங்கு உட்கார்ந்திருக்க முடியாது என்பதை மறந்துவிடக் கூடாது. அதன் காரணமாகத்தான் ஆதி திராவிடர்கள் எல்லா இடங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். சமுதாய அமைப்பிலும் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி வகுப்பு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று அன்று ஜஸ்டிஸ் கட்சி பாடுபட்டது. அதன் காரணமாக அதிகப்படியான இடங்களை ஆதி திராவிடர்கள் பெறுகிறார்கள். சுயராஜ்யம் வந்த பிறகு துருதிருஷ்ட வசமாக அந்தக் கட்சி இல்லாமல் போய் விட்டது. இந்தக் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்கு பாடுபட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. உண்மையிலேயே அவர்களுக்கு என்று பாடுபட்ட கட்சி எங்கள் கட்சிதான். திராவிட இயக்கம் ஆரம்பித்த முதற்கொண்டு அவர்களுடைய முன்னேற்றத்திற்கு என்று
10 பாடுபட்ட கட்சி ஒன்று இருக்கிறது என்று சொன்னால் அது எங்கள் கட்சி
a.m. தான். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக எங்கள் கட்சி எத்தனையோ போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறது.

அந்த அளவுக்குப் பாடுபட்டதற்குப் பிறகு ஓரளவுக்கு ஆதித் திராவிட மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. நான் இன்னொன்று சொல்லுவேன். சட்டத்தை திருத்துவதோடு மாத்திரமல்ல. இந்தப் புனித ஹிந்து மதம் சீர்திருத்தப்பட்டாலொழிய, ஆதித் திராவிட மக்கள் முன்னேற வழி கிடையாது. இன்றைக்குப் பல மதங்கள் இருக்கின்றன. அவைகளில் இந்த ஹிந்து மதம் ஒன்றில்தான் பல ஜாதிகள், பல ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. வேறு மதங்களில் அப்படி கிடையாது. ஹிந்து மதத்தைச் சேர்ந்த நான் இன்றைக்கு கிறிஸ்தவனாகி ஆசைத்தம்பியிலிருந்து ஆசீர்வாதமாக மாறி விடலாம். அல்லது ஒரு முஸ்லீமாக மாறி அபுல் கலாம்



24th March 1958] [Sri A. V. P. Asaithambi]

ஆஸாதாக மாறி விடலாம். வேறு மதத்திலுள்ளவர்கள் இன்றைக்கு ஹிந்து மதத்தில் சேர முடியாது. யார் சேர்த்துக் கொள்வார்கள் என்று பார்த்தால் யாரும் மாட்டார்கள். எனவே, இந்த மதம் யார்யாரினாலோ சேர்ந்து கைப்பற்றப்பட்டு முதலாளித்துவ அமைப்பு முறையிலே, சர்வாதிகார முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. ஜாதிகளை ஒழிக்கப் பாடுபட வேண்டும். அதற்காகப் பாடுபட்ட கட்சி என்று ஒன்று இருக்குமானால், அது திராவிட முன்னேற்றக் கழகமே தவிர வேறு கிடையாது. அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். ஹரிஜன் என்று சொன்னால், இறைவன் பிள்ளை. இன்றைய தினம் ஆலயங்களில் அர்ச்சகர்களாக ஒரே ஜாதியார் இருக்கிறார்கள். அர்ச்சகர்களுக்கு என்ன யோக்கியதை, என்ன தகுதி இருக்கவேண்டுமென்று இன்றைய தினம் போடட்டும். அதற்கு யார் வேண்டுமானாலும் படிக்கட்டும். அதற்கு ஒரு பரீட்சை இருக்கட்டும். அந்தப் பரீட்சைக்கு அப்பியர் ஆகட்டும். அப்படிப்பட்ட பரீட்சையில் யார் பாஸ் செய்கிறார்களோ அவர்களின் பெயர்களைப் பேப்பரில் போட்டு, அவர்களிடமிருந்து அப்ளிகேஷன் வாங்கி, யார் தேர்ச்சி பெற்று வருகிறார்களோ அவர்களுக்குத் தான் அர்ச்சகர் வேலை கொடுக்கப்படும் என்று சர்க்கார் என்றைக்குச் சட்டம் செய்கிறதோ, அன்றைக்குத் தான் அந்தச் சட்டம் நல்ல சட்டமாகுமே தவிற, மற்றதெல்லாம் நல்ல சட்டமல்ல . . .

**Sri R. KANDASAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தின் மீது அடியேனுக்குப் பட்ட சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களின் மேர்பார்வையிலே, ஹரிஜன இலாகா டைரக்டர் ஸ்ரீ முத்திருளாண்டி அவர்கள் செய்திருக்கும் சில ஆக்க வேலைகளைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1957–58-ம் வருஷத்திற்கு ஹரிஜனங்களுக்கென்று ஹரிஜன டிபார்ட்மெண்டாரால் செய்யப்பட்டிருக்கும் ஆக்கவேலைகளில், வெல்பேர் பாடசாலைகள் 843, இதில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 72,745. இவர்களுக்கெல்லாம் மத்தியான உணவு அளிக்கப்பட்டிருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிகளில் வாசிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு சர்க்கார் உணவு விடுதிகள் 55; இதில் சாப்பிட்டு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை 3,329. காலேஜ் ஹாஸ்டல்கள் 3; இதில் சாப்பிடும் மாணவர்கள் 234. பிரைவேட் ஹாஸ்டல்கள் 212; இதில் சாப்பிட்டு வாசிக்கும் மாணவர்கள் 9,031. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கும் ஸ்காலர்ஷிப் ரூ. 30,000; மாணவர்கள் 1,191. ஹரிஜனங்களுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட மாடுகள் 4,604 ஜதைகள். இறவைக் கிணறுகள் 280. குடிசைத் தொழில்கள் 16. வீட்டு மனைகள் 1,705. கட்டப்பட்டுள்ள வீடுகள் 3,331. முதுகுளத்தூரில் கட்டப்பட்டுள்ள வீடுகள் 2,833. ஓடுபோட்ட வீடுகள் 300. குடி தண்ணீர் கிணறுகள் 50, மொத்த செலவு 1,52,72,000 ரூபாய். 1958–59-ம் வருஷத்திற்கு 1,66,00,000 ரூபாய். இவைகளெல்லாம் நடந்து வருகிறது. 1947-ம் வருஷத்திலிருந்து எத்தனையோ கிராமங்களிலும், ஜில்லாக்களிலும் மிகத் திருப்திகரமாக வேலைகள் நடந்து வருவதைப் பார்த்திருக்கிறோம். எதிர் கட்சி அங்கத்தினர்கள் சில குறைகளை வைத்துக் கொண்டு அதைப் பிரசாரம் செய்யலாம். செய்யப்பட்டுவரும் வேலைகளிலுள்ள குணத்தை விட்டு குறைகளைச் சொல்லி, தங்களுடைய கட்சி பலத்திற்கு வேண்டுமென்றே சொல்லலாம். ஹரிஜனங்களை, இப்படியெல்லாம் மாற்றிச் சொல்லி, ஏமாற்றி விட முடியாது என்று மனப்பூர்வமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். 20 வருஷங்களாக காந்தி அவர்களுடைய திட்டப்படியோ, பெரியார் அவர்களுடைய லெக்சர்படியோ நாங்கள் முன்னேறி வந்திருக்கிறோம். நீங்கள் நினைக்கின்றபடியே வைத்துக்கொள்வோம். ஹரிஜனங்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய், ஏர், மாடு முதலியவைகள் எல்லாம் கொடுத்தாலும் இன்னும் உயர்ந்தவர்களாக இருப்பார்கள். நிதி நிலைமை குறைவாக இருந்தும் சுயராஜ்யம் வந்த பிறகு இவ்வளவு முன்னேற்றகரமான ஆக்க வேலைகளைச் செய்திருப்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அதை மறந்து விடு

[Sri R. Kandasami] [24th March 1958

வது நன்றிகெட்ட தன்மையைக் குறிக்கும். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு". என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். ஆசைத் தம்பி ஏதேதோ சொன்னார். நான் ஒன்று சொல்லுகிறேன். சேலத்தில் ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் நன்றாகப் பாடக் கூடியவர். நல்ல வல்லவர். நன்றாக நடிப்பார். அவர் ஒரு தி. மு. க. நடிகரிடம் போய் சினிமாவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டார். முதல் நாள் புக் பண்ணியாயிற்று. இரண்டாம் நாள் போனபோது, என்ன ஜாதி என்று கேட்டார்கள். ஆதித் திராவிட ஜாதி என்று சொன்னார் அந்த ஆசிரியர். உயர்ந்த ஜாதிப் பெண்கள் மீது கை போட்டு நடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஆதித் திராவிடர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று போகச் சொல்லி விட்டார். அறிஞர்கள் இதற்கு என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, ராசீபுரத்தில் ஒரு தி. மு. க. மாநாடு நடந்தது; அந்த மாநாட்டில் சம பந்தி போஜனம் நடந்தது. அதற்கு ஹரிஜனங்களும் சாப்பிட வந்தார்கள். அப்போது அவர்களைப் பார்த்து எங்கள் தி.மு.க. குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. நீங்கள் இப்போது எங்களோடு கலந்து கொண்டால் எங்கள் கழகம் தீய்ந்து போகும் என்று சொல்லி அவர்களை வெளியேற்றி விட்டார்கள். அதை நான் அப்போது புளிய மரத்தடியில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன். இதற்கு தி.மு.க. தோழர்கள் என்ன சொல்கிறார்கள் ?

உங்களிடத்திலே லட்சக் கணக்கான வாலிபர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். இவர்களெல்லாம் சொன்னபடியே கேட்பார்கள் என்று சொல்லுகிறீர்கள். கலப்பு மணத்தில் உள்ளபடியே உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், உள்ளபடியே இவர்களெல்லாம் தீவிரமாக வேலை செய்தால், தீண்டாமை ஒழியும். முதலியார்களும் நாயுடுகளும் கலப்பு மணம் செய்துகொண்டதைப் பற்றி ஆசைத்தம்பி ஆசையாகப் பேசுவதை நம்ப முடியாது. எங்கு பார்த்தாலும் பிரசாரம் செய்கிறார்களே தவிர ஆக்க வேலைகளில் ஊக்கம் கொள்ளவில்லை.

வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலே காங்கிரஸுக்கு விரோதமாக வெள்ளைக்காரர் நீடூழி வாழ வேண்டுமென்று சொன்னோம். அப்போது காங்கிரஸ்காரர்கள் என்ன சொன்னார்கள். நீங்கள் அவர்கள் பக்கமே பேசுங்கள், வரக்கூடிய நன்மைகளை இழந்து விடாதீர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அதோடு நிற்கவில்லை. ஆசிரமம் ஏற்படுத்துவது, ஹரிஜனங்கள் இருக்குமிடங்களில் சுத்தத்தை ஏற்படுத்துவது, சுகாதாரத்தை ஏற்படுத்துவது போன்ற ஆக்கவேலைகளைச் செய்து வந்தார்கள். கல்வி முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்து வந்தார்கள். அத்தகைய பெருந்தன்மையோடு ஈடுபடவேண்டு மென்று தி.மு.க. பெரியார்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவர்களுக்கு உள்ளபடியே சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் மாதிரிப் பேசி, பாமர ஜனங்களை உயர்த்த காங்கிரஸ் கவர்ன்மெண்ட் செய்வதை அடியோடு அழிக்கும் வகையிலே, பாமர, ஆதித் திராவிட மக்களிடத்திலே போய் பிரசாரம் செய்து நீங்கள் அவர்களுடைய மனதைக் கெடுக்கவேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்ற எண்ணம் இருந்தால் காங்கிரஸ் செய்கிற நல்ல காரியங்களை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லுங்கள். தீமையான காரியங்கள் ஏதாவது இருந்தால் எடுத்துப் பிரசாரம் செய்து தீமை செய்யவேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, நீங்கள் முடிந்தால் ஆக்க வேலைகளைச் செய்யுங்கள். உங்களிடத்திலே நல்ல வாலிபர்கள், நல்ல லெக்சரர்கள், போராடக் கூடிய வல்லவர்கள் எல்லோரும் இருப்பதாகக் கூறுவதால், ஆக்க வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துங்கள். திராவிட முன்னேற்றக் கழக பெரியார்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்கிறேன்......

**SRI K. ANBAZHAGAN :** On a point of order இந்த அவையிலே பேசுகிற அங்கத்தினர் அவர்கள் "நீங்கள், நீங்கள்" என்று எதிர் கட்சியைக் குறிப்பிட்டுப் பேசுவதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.



24th March 1958]

**MR. SPEAKER :** "நீங்கள், நீங்கள்" என்று சொன்னால், அது சபாநாயகரைக் குறிக்கும். நான் ஒன்றும் அது மாதிரிச் சொல்லவில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தேன் (சிரிப்பு) கனம் அங்கத்தினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிச் சொல்வதானால், பெயரிட்டுச் சொல்ல வேண்டும். "நீங்கள், நீங்கள்" என்று சொன்னால் அது என்னைத் தான் குறிக்கும்.

**SRI R. KANDASAMI :** ஆகவே, ஹரிஜனங்களுக்காகப் பரிந்து பேசுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆக்க வேலைகளைச் செய்ய முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொருத்தவரையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். திருச்செங்கோடு தொகுதியில், திருச்செங்கோடு டவுனில் 32,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அதில் ஹரிஜனங்கள் 5,000 பேர். அவர்கள் தண்ணீருக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 6-ம் தேதி அற நிலையப் பாதுகாப்பு மந்திரி அவர்கள் வந்து நேரில் பார்த்திருக்கிறார். குடி தண்ணீருக்காக மக்கள் பல நாட்களாகக் கஷ்டப்படுகிறார்கள். கொக்கராயன் பேட்டை வழியாகத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கும் திட்டத்தை போட்டு மக்களுக்குச் சீக்கிரமாக உதவியளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, அங்கு மின்சார விஸ்தரிப்புக்கு ராஜாஜி அவர்களுடைய காலத்தில் கம்பங்கள் போடப்பட்டன. அவைகள் அப்படியே இருக்கின்றன. ஆகவே, இதையும் கவனித்து மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI K. P. PALANISWAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 10-10
ஹரிஜன மான்யத்தை ஒட்டி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். a.m.
கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஹரிஜன மான்யத்திற்காக ரூ. 2,33,44,500 ஒதுக்கியிருப்பதை மிகவும் வரவேற்கிறேன். அநேக ஆண்டுகளாக தீண்டாமையால் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டு, இப்பொழுது காங்கிரஸ் ஆட்சியிலே அநேக நன்மைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் மக்களுடைய வாக்குகளை பெறுவதற்காக வேண்டுமானால் என்ன செய்திருக்கிறார்கள், ஒன்றும் செய்யவில்லை என்று மறுக்கலாம். ஆனால், பல ஆண்டுகளாக சொல்ல ஒண்ணாத துன்பங்களுக்கு ஆளான தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட மக்களுக்கு இந்த நாட்டிலே காந்திஜியினுடைய லட்சியத்தை பின்பற்றி நடக்கவேண்டுமென்ற அடிப்படையில் காங்கிரஸ் ஸ்தாபனம் பல நன்மைகளை செய்திருக்கிறது. அவர்கள் முன்னேற்றம் அடைந்துகொண்டு வருவதை நாம் எல்லோரும் பார்க்கிறோம்.

குடியிருப்பு வசதிக்காக அவர்களுக்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக வீடு கட்டும் திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள். இந்த குடியிருப்பு வசதி சம்பந்தமாக எனக்குத் தெரிந்த சில யோசனைகளை கூற விரும்புகிறேன். முதலில் அவர்களுக்கு என்று சொந்தமாக பூமி இருந்தால் அது மிகவும் நல்லாக இருக்கும். குடியிருப்பு வீட்டிற்காக வீடு ஒன்றுக்கு சுமார் ரூ. 1,000 அல்லது 700 செலவழிக்கிறார்கள். ரூ. 2,000, 3,000 செலவில் 30, 40 பேர்கள் குடியிருப்பதற்கு வசதியாக ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களுக்கு சொந்த பூமி வாங்கிக் கொடுத்துவிட்டால் ரொம்பவும் சௌகரியமாக இருக்கும். சொந்த பூமியாக இருந்தால் அவர்களுக்கு வேண்டியதைச் செய்துகொள்ளலாம். பிறருடைய பூமியாக இருந்தால் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டுப்பாடு இல்லாமல் அவர்கள் தங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொள்ளுவதற்கு சொந்த பூமி வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri K. P. Palaniswami] [24th March 1958

நம்முடைய நாட்டிலே தீண்டாமை ஒழியவேண்டுமென்று சொல் அளவிலே பலர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். செயல் அளவிலே இதுவரையில் யாரும் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் நம்முடைய காங்கிரஸ் ஸ்தாபனம் மக்கள் எல்லோரும் சம அந்தஸ்தில் வாழவேண்டும், சுதந்திரமாக வாழவேண்டும் என்ற கருத்தோடு பல சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். ஆனால் சட்டங்களை இயற்றி விட்டால் மட்டும் போதாது. மக்களுடைய மனமாற்றம் உண்மையிலேயே ஏற்படவேண்டும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஜாதி மனப்பான்மை நீங்கவேண்டும், மனமாற்றம் ஏற்படவேண்டும். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் சம உரிமையோடு, சம அந்தஸ்தோடு வாழவேண்டும், மக்கள் எல்லோரும் சுபிட்சமாக வாழவேண்டும் என்ற மனப்பான்மை ஏற்படவேண்டும். அந்த மனமாற்றம் ஏற்பட்டால்தான் எல்லா மக்களும் சௌகரியமாக வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும்.

தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஆதிவாசிகளும் பல ஊர்களில் வசிக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் செம்மேடு என்ற பகுதியில் ஆதிவாசிகள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்காக 'நான்-ரெஸிடென்ஷியல் ஸ்கூல்' ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த பள்ளிக்கூடங்கள் நன்கு பிரயோஜனப்படுவதற்கு அவைகளை 'ரெஸிடென்ஸிஷியல் ஸ்கூல்களாக' மாற்றி அமைக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை செய்து கொடுத்தால்தான் அவர்களும் முன்னுக்கு வர ஹேதுவாக இருக்கும். அந்தச் சலுகைகளை செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முனிசிபல் பட்ஜெட்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு சிறிது பணம் ஒதுக்கினால் நலமாக இருக்கும். கோயமுத்தூரில் 3½ லட்சம் ஜனங்கள் வாழ்கிறார்கள். அந்த இடத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகட்டுவதற்காக ஒரு சிறிய தொகை கூட முனிசிபல் பட்ஜெட்டில் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. ஆகவே முனிசிபாலிடிகளில் தாழ்த்கப்பட்ட மக்களுக்காக ஒரு சிறிய தொகையாவது ஒதுக்கினால் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு ஹேதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சில இடங்களில் கூட்டுறவு சங்கங்களில் ஹரிஜனங்கள் மெம்பர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்று கேள்விபடுகிறேன். அவர்கள் பொருளாதாரத் துறையில் பின்னடைந்திருக்கிறார்கள் என்பதற்காக சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. அம்மாதிரி அவர்களை சேர்த்துக்கொள்ளாமல் இருந்தால் அவர்களுக்கு எந்த விதத்திலும் சலுகை கிடைக்காது. அதனால் அவர்கள் ரூபாய்க்கு 2 அணா வட்டி கொடுத்து கடன் வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு கடன் வசதி சுலபமாக கிடைப்பதற்காக அவர்களையும் கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் தீண்டாமை ஒழிய மக்களுடைய மனமாற்றம் ஏற்படவேண்டும். ஆகவே கூட்டுக் காலனிகளை உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதை தள்ளிப் போட்டுக்கொண்டே போனால் மக்களிடையே மனமாற்றம் சீக்கிரத்தில் ஏற்படாது. கூட்டுக் காலனிகளை படுத்தினால் அவர்கள் பழக்க வழக்கங்களிலே ஒன்றுபட்டு மக்களிடையே உண்மையிலேயே மனமாற்றம் ஏற்பட ஹேதுவாக இருக்கும். சில இடங்களில் பள்ளி பிள்ளைகளுக்கு மத்தியான உணவு கொடுக்கிறார்கள். அதில் உண்மையிலேயே மனமாற்றம் ஏற்படுகிறது. அம்மாதிரி மத்தியான உணவு அளிக்கப்படும்பொழுது ஹரிஜனங்களை தனியாக பிரித்துவைக்காமல் எல்லோருக்கும் சேர்த்து உணவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு சில பள்ளிக்கூடங்களில் மத்தியான உணவிற்காக 1 அணா கொடுக்கப்படுகிறது. அது மிகவும் போதாது. 2½ அணாவாவது கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆதிவாசிகள் வசிக்கும் இடத்திலே அவர்களுக்கு வேலையில்லை என்று அநேகம் பேர்கள் குறை சொல்லுகிறார்கள். உதாரணமாக செம்மேட்டில் 100 ஏகர் பூமி இருக்கிறது. அதை தாழ்த்தப்பட்ட மலை வாசிகளுக்கு பட்டா செய்து கொடுத்தால் அவர்கள் வாழ்வதற்கு சௌகரியமாக இருக்கும்.



24th March 1958] [Sri K. P. Palaniswami]

அவர்கள் போக்குவரத்திற்கு ரோடு வசதிகள் சரியாக இல்லை என்று தெரிகிறது. ஆகவே, அவர்கள் நடந்து போவதற்கு சில ரோடுகளையாவது நல்ல முறையிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri N. MARUDACHALAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தின் மீது நான் சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். இந்த மான்யத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2,33,44,500. இந்தத் தொகை பூராவும் ஹரிஜன நலனுக்காக செலவழிக்கப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வசதி செய்துகொடுப்பதற்கும், இந்த ஹரிஜன நல இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும் சேர்த்து இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் தனியாக ஹரிஜனங்கள் என்று எடுத்துக்கொண்டால் அவர்களுக்காக செலவழிக்கப்படுவது ஒரு கோடி ரூபாய் கூட வராது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். ஆனால் ஹரிஜன மான்ய விவாதத்தின்போது, எல்லா கட்சி அங்கத்தினர்களும், ஜாதி ஹிந்துக்களும், ஜாதி ஹிந்துக்கள் அல்லாதவர்களும் வருஷா வருஷம் ஹரிஜனங்களுக்காக பரிந்து பேசிக்கொண்டு வருகிறார்கள். அப்படி பேசி வந்த போதிலும் கூட, ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடையவில்லை என்று இப்பொழுதும் எதிர்க் கட்சி அங்கத்தினர்களும், மற்ற அங்கத்தினர்களும் பேசுகிறார்கள். இவ்வளவு பணம் ஒதுக்கியும் அது ஹரிஜனங்களுக்கு பிரயோஜனப்படுகிறதா, அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு உபயோகப்படுகிறதா என்று பார்த்தால், கொஞ்சம் கூட பிரயோஜனப்படவில்லை என்றுதான் கூறமுடியும். ஹரிஜனங்களுக்காகவீடு கட்டும் திட்டம், 'ஸ்காலர்ஷிப்' கொடுக்கும் திட்டம், ஹரிஜனப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்கும் திட்டம் இம்மாதிரி பல வகைகளில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களிடையே சிறு கைத்தொழில் அபிவிருத்திக்காக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்ட தொகை ஹரிஜன நல அதிகாரிகளால் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று பார்த்தால், கொஞ்சம் கூட ஹரிஜனங்களுக்கு பிரயோஜனப்படுகிற முறையில் விநியோகிக்கப்படவில்லை என்று தான் கூற வேண்டியிருக்கிறது. தலைமை உபாத்தியாயர் முதலில் 40 பிள்ளைகளுக்கு 'ஸ்காலர்ஷிப்' வேண்டுமென்று எழுதி அனுப்பினால் அதை 'சாங்ஷன்' செய்வதில்லை. பின்னாலே அனுப்பினால் 10 பிள்ளைகளுக்கு மாத்திரம் சாங்ஷன் செய்கிறார்கள். ஏனென்று கேட்டால், 2 தடவை அனுப்பியிருக்கிறார்கள், அப்படித்தான் செய்வது என்று அந்த ஹரிஜன நல இலாகா அதிகாரி கூறுகிறார். அதுமட்டுமல்ல. டைலரிங் மெஷின், லெத் மெஷின் இவைகளுக்கு பாதி விலையில் வாங்கிக் கொடுப்பதற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் லேத் மெஷின் வாங்கிக்கொடுப்பதற்கு மனு போட்டவர்களுக்கு இந்த வருஷத்தில் கூட அது கிடைப்பதில்லை. அதற்கு காரணம் ஹரிஜன நல இலாகா அதிகாரி ஆபீஸில் ஒரு ஹெட் கிளார்க் இருக்கிறார். அவரை முன்னால் போய் பார்த்தால் தான் இந்த மெஷின் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடைக்காது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஹரிஜனங்களாக இருப்பவர்களையே ஹரிஜன இலாகா அதிகாரிகளாகப் போட்டால்தான் ஹரிஜனங்களுடைய கஷ்ட நஷ்டங்களை அவர்கள் அறிந்து வேண்டிய வசதிகளை செய்துகொடுக்க ஹேதுவாக இருக்கும். ஹரிஜனங்களல்லாதாரை அந்த உத்தியோகங்களுக்கு நியமிப்பதால், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை மற்றவர்களுக்குப் பயன்பட ஏதுவாகிறது. அந்தப் பணத்தால் ஹரிஜனங்கள் பயனடைவதில்லை ஹரிஜன நலனுக்கான மானியத்தில், ஆசிரியர்களுக்காக 10,07,538 ரூபாயும், அலுவலகத்தாருக்காக 20,751 ரூபாயும், சிப்பந்திகளின் செலவிற்காக 2,633 ரூபாயும், இதர செலவுகளுக்காகவும் சில்லரைச் செலவுகளுக்காகவும் 17,02,255 ரூபாயும், குடிக்கூலிக்காக 46,161 ரூபாயும் ஒதுக்கப்படுகின்றன. ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தில் இந்தத் தொகைகள் எல்லாம் ஹரிஜனங்களுக்குப் பிரயோஜனப்படாத பணம். இந்த தொகைகள் போக பாக்கியுள்ள பணம்தான் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையின் மூலம் ஹரிஜன முன்னேற்றம் போதிய அளவு ஏற்படுமா?

கல்வியை எடுத்துக்கொண்டால், கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்புகளினால் பல ஹரிஜனங்கள் சரிவரப் பலனடைய முடியாமல் இருக்கிறார்கள். காரணம், சாதாரண பள்ளிக்கூடங்களிலிருந்து வைத்தியக் கல்லூரி வரையில், கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப் பணம் தாமதித்துக் கொடுக்கப்படுகிறது. காலாகாலத்தில் ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படாததால், பல மாணவர்களை பள்ளிகளிலிருந்து வெளியேற்றுவதற்கு பள்ளி நிர்வாகஸ்தர்கள் முயன்று வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் காலாகாலத்தில் கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், கைத்தொழில் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில், முன்னதாக விண்ணப்பம் போடுபவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். இது சம்பந்தமாக ஹரிஜன் வெல்பேர் ஆபீசரிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன் ‘சென்ற வருஷம் விண்ணப்பித்துக்கொண்டவர்களுக்கு ஏன் அனுமதி கொடுக்கவில்லை ?’ என்று அவரைக் கேட்டேன். ‘10 வருஷங்கள்கூட ஆகலாம். அது அவரவர்களுடைய அதிர்ஷ்டம்.’ என்று அவர் கூறினார். ஹரிஜனங்களுக்காக சர்க்கார் ஒதுக்கும் பணம் எல்லா ஹரிஜனங்களுக்கும் சரிவரப் பயன்படுவதில்லை. அந்தப் பணத்தைப் பெற ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பணம் கொடுக்கப்படும் விதம் ‘ப்ரைஸ் போடுவது’ போல் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால், ஹரிஜனரல்லாதவர்களை ஹரிஜன நல இலாகாவில் நியமிக்காமல், ஹரிஜனங்களை நியமிக்க வேண்டும். இப்போதுள்ள ஹரிஜனரல்லாத அதிகாரிகளுக்கு பதிலாக ஹரிஜனங்களை நியமிக்க வேண்டும். மேலும் ஹரிஜன நல அதிகாரிகளை அப்போதைக்கப்போபோது மாற்ற வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், ஹரிஜன நலனுக்காக ஒதுக்கப்படும் பணத்தினால் ஹரிஜனங்கள் பயனடைய முடியாது என்பதுதான் என் கருத்து. ஹரிஜன நலனுக்காக இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் ஒதுக்கினால் நல்லது என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. VINAYAKAM :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கோரப்பட்டுள்ள மானியத்தின்பேரில் ஒரு சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பல ஆண்டுகளாக ஆதிதிராவிட மக்கள் சமூதாயத்தால் ஒதுக்கப்பட்டும் கேவலமாக நடத்தப்பட்டும் வந்ததால், அவர்கள் அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். அப்படி இருந்து வந்த சமூகத்தை, காங்கிரஸ், அது ஆட்சிக்கு வந்தபிறகு, நினைத்த நாட்களுக்குள் முன்னேற்றமடையச்செய்துவிட வேண்டுமென்றோ, அவ்வாறு செய்துவிட முடியும் என்றோ யாராவது நினைத்தால், அது பெரிய தவறு ஆகும். ஆதித் திராவிட மக்களை முன்னேற்றமடையச் செய்வது, ஒரு பெரிய சிக்கலான பிரச்னை. இத்தனை ஆண்டுகளாக அடிமைகாளாக இருந்தவர்களை முன்னேற்றமடையச் செய்வதென்றால், குறைந்தது 20–30 ஆண்டுகளாவது பாடுபட்டால் தான் முன்னேற்றமடையச் செய்ய முடியும் என்பதை நாம் உணர வேண்டும். ஆங்கிலத்தில் ‘**Rome was not built in one day**’ என்று ஒரு பழமொழி உண்டு. பல ஆண்டு முயற்சிக்குப் பிறகு தான் ரோம் நகரம் அவ்வளவு அழகான நகரமாக ஆகியது; அவ்வளவு நாகரிகம் பொதிந்த கட்டிடங்கள் அங்கே ஏற்பட்டன. அதே மாதிரித்தான் ஹரிஜன முன்னேற்றம் பூரணமாக ஏற்படுவதற்கும் பல ஆண்டுகள் ஆகலாம். காங்கிரஸ் ஆட்சியாளர்கள் **1949**-ம் ஆண்டில் ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒரு தனி இலாகாவை அமைத்தார்கள். அதே சமயத்தில், கல்வித் துறையிலும் மற்ற பல துறைகளிலும் பிற்பட்டவர்களாக இருக்கும் மக்களை முன்னேற்றமடையச் செய்வதற்காகவும் ஒரு சிறிய இலாகாவை அரசாங்கத்தார் அமைத்தார்கள். இந்த இரண்டு இலாக்காக்களும் ஒரே அமைச்சரின் கீழும், ஒரே டைரக்டரின் கீழும் இயங்குகின்றன. ஆதித் திராவிட எம்.எல்.ஏ.-க்களிலும் ஆதித் திராவிடத் தலைவர்களிலும் விஷயம் புரியாதவர்கள் என்ன நினைக்கிறார்கள் ? ஆதித் திராவிடர்களுக்காக தனியாக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து தொகைகளை எடுத்து பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசாங்கம் கொடுத்துவிடுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். இந்த சந்தேகத்தை கனம் அமைச்சர் நீக்குவார் என்று நினைக்கிறேன். பிற்பட்ட இனத்தவர்களுக்காக தனித்தொகை





இருக்கிறது. ஆதித் திராவிட மக்களுக்காக வேறு தனித் தொகை இருக்கிறது. இரண்டிற்கும் சம்பந்தமில்லை. ஆதித் திராவிட மக்களுக்கான பணத்திலிருந்து ஒரு சல்லிக் காசுகூட பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கப்படுதவதில்லை என்பதை கனம் அமைச்சர் விளக்கமாகச் சொல்லிவிட வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் இதை விளக்கமாகச் சொல்லிவிட்டால் ஆதித் திராவிடர்களின் இந்த சந்தேகத்திற்கு இடமிருக்காது.

நான் கனம் அமைச்சருக்கு இன்னுமொரு யோசனை கூற விரும்புகிறேன். எங்களுக்காக, அதாவது பிற்பட்ட இனத்தவர்களுக்காக, ஒரு தனி டைரக்டர் நியமிக்கப்பட்டு, தனி **Directorate**-ம் அமைக்கப்பட்டு அந்த டைரெக்டரிடம் நாங்கள் சென்று பேசிவருவதை ஆதித் திராவிட மக்கள் பார்த்தால் அவர்களுக்கு இந்த சந்தேகம் எழாது. அவ்வாறு அரசாங்கத்தார் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். மேலும் பிற்பட்ட இனத்தவர்களுக்காக ஒரு தனி மந்திரியே இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும். நான் இவ்வாறு சொல்வதால், இப்போதைய மந்திரி மீது நான் சந்தேகம் கொண்டிருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. பிற்பட்டவர்களின் நலன்களைப் பேணுவதற்காக தனி டைரெக்டரையும் தனி மந்திரியையும் நியமித்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

ஆதித் திராவிட மக்களுக்கும் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் அரசாசாங்கம் செய்து வரும் நன்மைகளை நாம் குறைவுபடுத்திப் பேச முடியாது. பிற்பட்ட இனத்தவர்களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் அவர்களுக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறது. ஒரு காலத்தில் பிற்பட்ட இனத்தவர்களுக்காக அரசாங்கத்தார் **1** லட்சம் ரூபாய் தான் ஒதுக்கினார்கள். இப்போது அவர்களுக்காக அரசாங்கத்தார் **12** லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள் என்றால், அவர்களிடம் அரசாங்கத்தார் கொண்டுள்ள நல்லெண்ணத்தைத் தான் இது காட்டுகிறது. அதேமாதிரி ஆதித்திராவிட மக்களுக்காகவும் அரசாங்கத்தார் நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை ஆதித் திராவிட எம்.எல்.-ஏ.-க்களும் தலைவர்களும் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இதை உணராமல் ‘அரசாங்கத்தார் எங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, எங்களைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை’ என்று அவர்கள் கூறினால், ஆட்சியில் இருப்பவர்களின் மனதும் காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களின் மனதும் எவ்வளவு துன்பப்படும் என்றும், அவர்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்றும் அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்த நாட்டில் சௌகரியமாக இருப்பவர்கள் தான் வரி கொடுக்கிறார்கள். வரி கொடுக்கும் வசதியுள்ளவர்கள் முற்பட்ட இனத்தவர்களாக இருக்கிறார்கள். பணக்காரர்களாகிய அவர்களிடமிருந்து பணத்தை வரியாக வசூலித்து வசதியில்லாத ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் அரசாங்கம் கொடுப்பது,

‘**Rob Peter to pay Paul**’ என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஒத்ததாக இருக்கிறது. பணக்காரர்களிடமிருந்து பணத்தை வரியாக வசூலித்து அந்தப் பணக்காரர்களின் நன்மைக்காகச் செலவு செய்யாமல் பணம் கொடுக்காத பிற்பட்ட இனத்தவர்களுக்கும் ஆதித் திராவிடர்களுக்கும் அதை அரசாங்கம் கொடுக்கிறது. இதைப் பார்க்கும்போது வரி கொடுப்பவர்களின் மனம் எப்படி வேதனைப்படும் என்பதை ஆதித் திராவிட மக்களும் பிற்பட்ட மக்களும் உணர வேண்டும். சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதற்காக, பணக்காரர்களிடமிருந்து வரியை வசூலித்து பணமில்லாதவர்களுக்காக அரசாங்கத்தார் செலவு செய்கிறார்கள். இந்த நிலையில் வரி கொடுப்பவர்களின் மனம் புண்படக்கூடிய முறையில் நாம் ஒன்றும் பேசக்கூடாது என்றுகூட நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்வேன்.

ஹரிஜன நல இலாகா எப்படி நடக்கிறது ? ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஜில்லா ஹரிஜன நல அதிகாரி இருக்கிறார். அனேகமாக எல்லா ஜில்லா ஹரிஜன நல அதிகாரிகளும் நேரிடையாக ஹரிஜன நல டைரெக்டரின் கீழ் வேலை செய்வதில்லை. ஒரு சில ஜில்லா ஹரிஜன நல அதிகாரிகள்தான் நேரிடையாக டைரெக்டரின் கீழ் வேலை செய்கிறார்கள். பல ஜில்லாக்களில் ஜில்லா ஹரிஜன நல அதிகாரிகள் கலெக்டரின் கீழ் வேலை

[Sri K. Vinayakam] [24th March 1958

செய்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் டைரெக்டர் ஜில்லா ஹரிஜன நல அதிகாரிக்கு ஏதாவது நேரிடையாக எழுதினால், தன் மூலமாக இல்லாமல் நேரிடையாக ஜில்லா அதிகாரிக்கு டைரெக்டர் எவ்வாறு தெரிவிக்கலாம் என்று கலெக்டர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அவ்வாறு ஒரு ஜில்லாவில் நேர்ந்திருப்பது எனக்கு நனறாகத் தெரியும். ஜில்லா ஹரிஜன நல அதிகாரிகள் நேரிடையாக டைரெக்டரின் கீழ் பணியாற்றும்படி செய்ய வேண்டும். கலெக்டருக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. அவர்களுக்கு **revenue work and such other works** இருக்கின்றன. அந்த வேலைகள் இருக்கும்போது ஹரிஜன நல வேலைகளை கலெக்டர் பரிபூரணமாக கவனிக்கமுடியாது என்று நான் பயப்படுகிறேன். ஆகவே ஜில்லா ஹரிஜன நல அதிகாரிகளை டைரெக்டரின்கீழ் நேரிடையாக பணியாற்றும்படி செய்ய வேண்டும். அவர்களில் சிலர் இப்போது கெஜெட் பதிவுபெறுதவர்களாக இருக்கிறார்கள். சில ஜில்லாக்களில் தாசில்தார்கள் ஹரிஜன அதிகாரிகளாக இருக்கிறார்கள் அவர்களுடைய பதவிகளை கெஜெட் பதிவு பெற்ற பதவிகளாக உயர்த்த வேண்டும். அவ்வாறு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பிற்போக்கு இனத்தவர்களுக்காக ஒதுக்கிவைத்திருக்கும் பணம் ரொம்பக் குறைவு. எங்களுக்கு உத்தியோகம் கூட தரவேண்டியதில்லை. ஆட்சியாளர்கள் பிற்போக்கு இனத்தவர்களுக்கு உத்தியோகம் தேடித் தருவதைப்பற்றிக்கூட கவலைப் படவேண்டாம். நாங்கள் படித்துவிட்டால் போதும். நாங்கள் படித்துவிட்டால் முன்னேறுவதற்கு நாங்கள் வகை செய்துகொள்வோம். எங்களுக்கு வேண்டிய தெல்லாம் **initial start in life.** ஆரம்பக் கல்வியிலிருந்து கலாசாலைக் கல்விவரை எங்களுக்கு யாதொரு தடங்கலும் இல்லாமல், தொல்லை இல்லாமல் இருக்கவேண்டும். அதற்கு எங்களுக்குப் போதிய அளவு நிதி ஒதுக்கிவிடுங்கள். **Almost free education at all stages** என்ற முறையில் கலாசாலைப்படிப்பு வரையில் எங்களுக்கு இலவசமாகவே வசதி தந்துவிட்டால் உத்தியோகத்தைப் பற்றி நாங்கள் கவலைப்படமாட்டோம். ஆதித் திராவிடர்களைப் போல நன்றிகெட்டத் தனமாக இருக்க நாங்கள் வழி செய்யமாட்டோம். எங்களுக்குக் கல்வி ஒன்று இருந்தால் போதும். நாங்கள் முன்னேறி வந்துவிடுவோம். எங்களுக்கு இலவசக் கல்வி வசதி செய்துகொடுத்துவிட்டு மற்ற துறைகளில் எங்களுக்காக ஒதிக்கியிருக்கும் மான்யங்களை வெட்டுவதற்கு அனுமதி கேட்டால் கூட, நாங்கள் ஒத்துக்கொள்வதற்குத் தயாராயிருக்கிறோம்.

மான்யத்தின் மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் படித்துப் பார்த்தேன். ஏதோ டைரக்டர் அவர்களோ, அவர்கள் கீழ் இருக்கும் அதிகாரிகளோ ஹரிஜன மாணவர்களைத் துன்புறுத்துவதாகவும் கொடுமைப் படுத்துவதாகவும் ஒரு வெட்டுப் பிரேரணை வந்திருக்கிறது. அது பற்றி விசாரித்துப் பார்த்தேன். நடந்தது என்ன ? கனம் சூளை அங்கத்தினர் அங்கு இதிலே ஈடுபட்டிருக்கிறார். ஆதித் திராவிட மாணவன் ஒருவன் டைரக்டர் ஆபீசுக்குப் போய், அங்கிருக்கும் ஒரு குமஸ்தாவையோ, சூபரின்டெண்டண்டையோ அணுகி, "என்னுடைய அப்ளிகேஷன் என்ன ஆயிற்று ? என்றைக்குப் பணம் ஒதுக்கினீர்கள் ? ஸ்காலர்ஷிப் கிடைத்ததா ?" என்று கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும் ? அங்கிருக்கும் குமாஸ்தா என்ன சொல்வார் ? "டைரெக்டரைக் கேளுங்கள், பி.ஏ.-யைக் கேளுங்கள்" என்று சொன்னார். உடனே, செல்வாக்கு பெற்ற சூளை சட்ட சபை அங்கத்தினரிடம் பிராது செய்ய, அந்த அம்மையார் நேரடியாக அலுவலகத்திற்கு வந்து, "கோர்ட் மார்ஷல்" மாதிரி விசாரணை நடத்த ஆரம்பித்துவிட்டார். "என்ன ஐயா ? நான் சட்ட சபை அங்கத்தினர் ; இப்படிச் செய்யலாமா" என்று கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள் ? "நேரடியாக டைரக்டரைக் கேளுங்கள்,-பி.ஏ.யைக் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டார்கள். **A great scene was created in the office** "டைரக்டரைக் கேளுங்கள் ; பி.ஏ.-யைக் கேளுங்கள்" என்று சொன்னதற்காக ஒரு வெட்டுப் பிரேரணை வந்திருக்கிறது" **Ill treating Harijan students** என்று. அந்தத் தன்மையில் வெட்டுப்பிரேரணை கொடுத்தால், உத்தியோகஸ்தர்கள் என்ன செய்வார்கள் ? உத்தியோகஸ்தர்கள் எப்படியும் வேலை செய்யவேண்டியவர்கள்தான் என்றாலும் இப்படியெல்லாம் அவர்



24th March 1958] [Sri K. Vinayakam]

களைப்பற்றி சொன்னால், அவர்கள் என்ன நினைப்பார்கள் ? எவ்வளவோ நல்ல முறையில் வேலை செய்கின்ற இந்த அதிகாரிகளையோ, அமைச்சரவையையோ இவ்வளவு கடுமையாகப் பேசுவது தவறு. **It is not a fact ; it is only indulging in terminological inexactitude.** "பொய்" என்று சொல்ல மாட்டேன். அந்த வார்த்தையை சட்டமன்றத்தில் பேசக் கூடாது. **Terminologial inexactitude** என்று சொல்வேன். அது உண்மை அல்ல. அதிகாரிகளைப்பற்றியெல்லாம் அப்படிச் சொல்வது தவறு. நான் டைரக்டரிடம் பல முறை போயிருக்கிறேன். அவர் வீடு ஒரு சத்திரம் மாதிரி இருக்கும். 10, 20 மாணவர்கள் அங்கே இருந்து கொண்டேயிருப்பார்கள். "யார் ?" என்று அவர்களைக் கேட்டால், "ஆதித்திராவிட மக்கள்" என்று அவர்கள் சொல்வார்கள். ஆதித் திராவிட மக்களிடம் அவர் வைத்திருக்கும் நல்ல எண்ணம் எத்தகையது என்பதற்கு ஒரு சான்றை மாத்திரம் நான் இங்கே கூறினால் அவருடைய நல்ல எண்ணம் எல்லோருக்கும் விளங்கும். "முத்திருளாண்டி நகர்" என்ற பெயரில் 1,000 குடும்பத்தினருக்கு புறம்போக்கு நிலத்தில் குடிசைகள் போட்டுக்கொடுத்திருக்கிறார் என்றால், ஆதித்திராவிட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் எவ்வளவு நன்மை செய்யவேண்டுமென்ற நல்ல எண்ணம் அவருக்கு இருக்கிறது என்பதை குறை சொல்பவர்கள் கவனிக்க வேண்டும். அவருடைய இந்தச் செய்கை எதைக் காட்டுகிறது ? ஆதித் திராவிடர்களுக்கு நல்ல முறையில் இந்த இலாகா வேலை செய்வதைத்தான் காட்டுகிறது. "ஆதித்திராவிடர்களுக்கென்றே ஒரு தனி இலாகா இருக்க வேண்டும், அதற்கு டைரக்டராக ஒரு ஆதித்திராவிடரே இருக்கவேண்டும் என்று சொல்வதென்றால், அது அவர்களுக்கு நியாயம் செய்வதாகாது. **We are not doing proper justice to the officers concerned.**

தலைவர் அவர்களே, நான் வற்புறுத்திச் சொல்லுவது ஒரேஒரு பிரச்னைதான். சென்னையில் பல இடங்களில் ஆதித் திராவிட மக்களுக்கு இலவசமாகவே வீடு கட்டுகிற மனையை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வெள்ளப் பாதுகாப்புக்காக குடிசை கட்டிக்கொள்ள மக்களுக்கு பணத்தை சர்க்கார் சார்பில் டைரக்டரும், கலெக்டரும் வைத்துக்கொண்டு இனாமாகத் தந்தார்கள். அப்படிச் செய்யும் இந்த நல்ல இலாகாவை குறை சொல்வதிலே லாபம் இல்லை. மேலும் மேலும் இத்தகைய நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கவேண்டும். அதிகமாகச் செலவு செய்ய அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அந்த அளவில் நம்முடைய பேச்சுக்களும், அமைய வேண்டும். டைரக்டருடைய வீட்டுக்கு நான் நேற்று காலை போயிருந்தேன், இந்த வெட்டுப் பிரேரணையைப்பற்றி தெரிந்து கொள்வதற்காக.

DEPUTY SPEAKER : The hon. Member has got one minute more.

SRI K. VINAYAKAM : Yes, Sir. I shall finish in a minute.

இதையெல்லாம் பார்க்கும்போது, கனம் அங்கத்தினர் ஒருவர் கூறிய குறளைப்போலவே நான் இன்னொரு குறளைக் குறிப்பிடுவேன். அதாவது, "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்று வள்ளுவர் ஆணித்தரமாக, அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். யாராவது ஒரு நல்ல காரியம் செய்தால் அதை மறக்கவே கூடாது. அந்த நல்ல காரியத்தைச் செய்தவர் திரு. காமராஜ் அவர்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருப்பினும் சரி, எதிர்கட்சியில் இருக்கும் ஒரே காரணத்திற்காக, குறை சொல்வதே தம்முடைய வாழ்கையின் லட்சியமாகப் போய்விட்டது சிலருக்கு. மாற்றுக்கட்சித் தோழர்களோ, அந்த இனத்தைச் சேர்ந்தவர்களோ நன்றி மறந்த முறையிலே இங்கு கண்டித்துப் பேசினாலும் வள்ளுவர் அன்னவர்களை மன்னிக்கமாட்டார்கள். ஏனென்றால், "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றும் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆகவே, ஏதோ ஒரு சில தவறு நடந்தால், அதை அப்பொழுதே மறக்கவேண்டுமே யொழிய, அப்படியில்லாமல், அதையே திரும்பத் திரும்பச் சொல்லி,

கேவலமான முறையில், " இதைச் செய்ய வில்லை ; அதைச் செய்யவில்லை " என்று குறைச்சொல்லுவது மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டது என்று சொல்வேன். ஆகையால் அவர்களுடைய நன்றியை என்றுமே மறக்கக் கூடாதென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**SRI T. VELUCHAMI :** கனம் உப சபாநாயகர் அவர்களே, நான் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்றேன்: இந்த ஆண்டு ஹரிஜன இலாகா மான்யத்திலே ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நான் இங்கே எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. சென்ற ஓராண்டுக் காலத்திலே, இந்த நாட்டில் பல துக்ககரமான நிகழ்ச்சிகள் நடந்ததன் காரணமாக, ஹரிஜன மக்களும், மறவர் குலத்து மக்களும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வகுப்பு வெறியும் தலைதூக்கி அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அந்த வகுப்பு வெறி இப்படியே வளர்ந்து கொண்டே போகுமேயானால், அது ஹரிஜன மக்களையும், மறவர் மக்களையும், இந்த நாட்டையும் எந்த நிலைக்குக்கொண்டுபோய்ச் சேர்க்குமோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அப்படிப்பட்ட ஆபத்தான முறையில் வகுப்பு வெறி வளர்ந்து வருவதைத் தடுப்பதற்கு உரிய அக்கறை இந்தச் சர்க்காருக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்த நாட்டை பாதிக்கக்கூடிய முக்கியமான பிரச்னையாக இருக்கக்கூடிய வகுப்பு வெறியை ஒழிப்பதற்கான பரிகாரத்தைக் கண்டு, அதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் சரி, அதை ஒதுக்கி, வகுப்பு வெறியை ஒழிக்க அக்கறை காட்டியிருந்தால், அது பொறுப்புடைய சர்க்கார் செய்யக்கூடியதாக இருக்கும். வகுப்பு வெறியைத் தொலைப்பதற்கு தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடினாலும் சரி, ஹரிஜன நல இலாகா மூலமாக எத்தனை பரிசுகள் வழங்கினாலும் சரி, அவையெல்லாம் உதவாக்கரை பரிகாரங்களாக இருக்குமேயொழிய, உண்மையிலேயே வகுப்பு வெறியை ஒழிக்கவேண்டுமானால் கட்டாயக் கல்வி முறைதான் நிச்சயமாக ஒழிக்கக்கூடிய பரிகாரமாக இருக்கும்.

இன்றைக்கு படித்தவர்களிடையே ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை. எவ்வளவுதான் ஜாதி வித்தியாசங்களோடு கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒருவரோடொருவர் நெருங்கி அன்னியோன்னியமாக பழகி வருகிறார்கள். ஆனால், படியாதவர்கள் வகுப்பு வித்தியாசங்களை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வகுப்பு வெறியை ஒழிப்பதற்குரிய ஒரு நடவடிக்கையாக கட்டாயக் கல்வி முறையை எந்தப் பாகங்களில் அமுல் நடத்தினாலும் நடத்தாவிட்டாலும், முக்கியமாக ஹரிஜன மக்களும், மறவர் மக்களும் நெருங்கி வாழும் பகுதிகளிலாவது அமுல் நடத்தியிருக்கவேண்டும் அல்லது கலவரங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலாவது கட்டாயக் கல்வி முறை அமுல் நடத்தப்பட்டிருக்கவேண்டும். கட்டாயக் கல்வி முறைக்கு வறுமை இடையூறாக இருக்கிறதென்று சொல்லலாம், அமைச்சர் அவர்கள். பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு இலவசச் சாப்பாடு வழங்குவதின் மூலமாக அந்தக் கட்டாயக் கல்வி முறையை எளிதாக்கிக் கொள்ளமுடியும். செலவுகள் அதிகமாகும் என்றாலும், அதனால் பரவாயில்லை. இந்த நாட்டு மக்களையும் இந்த நாட்டிலே ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்கக்கூடிய வகுப்பு வெறியைக் கண்டிப்பாக ஒழிக்கவேண்டியது நமக்கு முதல் கடமையாக இருக்கிறபடியால் அந்தக் கட்டாயக் கல்வி முறையை கண்டிப்பாக அமுல் நடத்த வேண்டிய நடவடிக்கைகளை இந்த சர்க்கார் எடுத்திருக்கவேண்டும். தேசீய வளர்ச்சித் திட்டங்களிலுள்ள பணம் போல அல்ல இதில் செலவிடுவது. தேசீய வளர்ச்சித் திட்டங்களில் செலவிடும் பணம் அநேகமாக விரயமாகிறது என்று இந்தச் சபை அங்கத்தினர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கட்டாயக் கல்வி முறையில் செலவிடும் ஒவ்வொரு நையா பைசாவும் இந்த நாட்டின் நலனுக்கு உபயோகப்படும், ஒவ்வொரு நையா பைசாவாகும் என்பதோடு அல்லாமல் இந்தக் கலவரங்களுக்குக் காரணமானவர்களுக்கு ஓர் பிராயச்சித்தமாக இருக்குமென்று நம்புகிறேன்.





அடுத்த ஒரு விஷயம் நான் முக்கியமாகச் சொல்ல வேண்டியது. ஹரிஜன இலாகா மூலம் சலுகை அளிப்பதில் சர்க்கார் காட்டிவரும் பாரபட்சம் இந்த நாட்டில் வகுப்புத் துவேஷத்தை பரப்பக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதை நான் எடுத்துப் பேசும்போது ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் மீது துவேஷத்தின் காரணமாகச் சொல்லவில்லை. நான் குறிப்பாக அந்தச் சமூகத்தாருடன் நெருங்கிப் பழகக் கூடியவன். அவர்களிடத்தில் அதிகமான அன்பும், அபிமானமும் உள்ளவனாகையால் என்னை வேலுச்சாமி தேவர் என்பதற்குப் பதிலாக வேலுச்சாமி நாடார் என்று அழைப்பது வழக்கம். சர்க்கார் சலுகை காண்பிக்கும் விஷயத்தில் சர்க்கார் பாக்வர்டு சமூகத்தார், மோஸ்ட் பாக்வர்ட் சமூகத்தார் என்று இரண்டு பிரிவுகள் செய்திருக்கிறார்கள். பாக்வார்ட் சமூகத்தாரின் இன்னும் நன்றாக விருத்தி ஆகாத வன்னியர், முக்குலத்தோர் படையாச்சி போன்றவர்கள் இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் பின்தங்கிய வகுப்பாருக்குச் சில சலுகைகள் அளிப்பதன் மூலம் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்று சர்க்கார் விரும்பலாம். அது இயற்கை. அப்படிச் செய்ய வேண்டியதும் அவசியம் தான். ஆனால் நெடுங்காலமாக முற்போக்குச் சமூகத்தார் என்று கருதப்பட்டவர்கள் எப்படி பின்தங்கிய வகுப்பாரையும் தாண்டி, மிகவும் பின்தங்கிய வகுப்பார் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டார்கள் என்பதிலேயே மக்கள் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் மக்களிடையே பாரபட்சம் காட்டப்படுகிறது என்று மக்கள் நினைக்கிறார்கள். அது தவிர ஓர்புறம் ஓர் ஜாதி மக்கள் இன்னொரு சாதி மக்களிடையே அர்த்தம் இல்லாத வகையில் துவேஷம் பாராட்ட ஆரம்பிக்கிறார்கள். வகுப்பு துவேஷம் இல்லாத நிலைமையில் அவர்களுக்குள் ஓர் ஒற்றுமை நிலவச் செய்வதற்கு சர்க்காருடைய போக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்தச் சர்க்காரின் கொள்கையினால் வகுப்புத்துவேஷம் வளருவதற்குரிய நிலைமையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இப்போது இருக்கும் நிலைமைக்குப் பரிகாரமாக இந்தப் பிரிவில் இருக்கும் வன்னியர், படையாச்சி, முக்குலத்தோர் போன்றவர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பார் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் ஒரு காரியம் அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். அது இன்று வரையில் கவனிக்கப்படவில்லை. அது ஒரு நியாயமான கோரிக்கை. பாரபட்சமற்ற முறையில் நமது அமைச்சர் அவர்கள் நியாயம் வழங்கி வருவதாகக்கூட சென்ற ஆண்டில் பாராட்டினேன். ஆனாலும் நியாயம் வழங்கப்படவில்லை.

அதாவது இந்து அரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட சில சலுகைகள் கிருஸ்துவ அரிஜனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதைப் போலவே, பின்தங்கிய வகுப்பார், மிகவும் பின்தங்கிய வகுப்பார் என்று இந்துக்களுக்கு அளிக்கப்படுவதைப்போலவே, அந்த வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் கிருஸ்துவர்களாக மாறியிருந்தாலும் அளிக்கப்படவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டேன். இது நியாயமான கோரிக்கை. சென்ற ஆண்டில் இருந்தே நான் சொல்லிக்கொண்டு வந்தபோதிலும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. சர்க்காருக்கு இவ்விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட கொள்கை இருக்க வேண்டும். இந்துக்களில் குற்றபரம்பரையினர் இருப்பது போலவே, மதம் மாறிய கிருஸ்தவர்களும் குற்றபரம்பரையினராக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இச்சலுகை அளிப்பது மிகவும் நியாயமானதாகும்.

தவிர, தேசீய வளர்ச்சித் திட்டத்தில் சில கிராமங்களில் மக்கள் பெருவாரியாக பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த கிராமங்களில் ஏதாவது அபிவிருத்தித் திட்டங்களை அமைப்பது சர்க்கார் கிராமத்தார்கள் கொடுக்கவேண்டிய பாதித் தொகையை கட்டுவதற்கும் மார்க்கம் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அந்த கிராமங்களில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை. ஆகவே இப்படிப்பட்ட கிராமங்களுக்கு அங்குள்ள பின்தங்கிய வகுப்பார்கள், ஹரிஜனங்கள் இவர்களுடைய நலனைக் கருதியாவது சர்க்காரே இந்த உதவித் தொகையைக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே

[Sri T. Veluchami] [24th March 1958

பிளாக் டெவெலப்மெண்டு ஆபீசர்களுக்கு ஒரு டிஸ்க்ரிஷன் கொடுத்து இம்மாதிரியாக பிற்போக்கு இனத்தவர்கள் அதிகமாகவுள்ள கிராமங்களுக்கு சர்க்காரிடமிருந்தே ஒரு பகுதி உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ள வசதி செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. R. VISWANATHAN :** உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன முன்னேற்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த சமயத்தில் இதுவரை இந்த இலாகாவுக்கு பொறுப்பு ஏற்று நடத்தி வந்து இப்பொழுது மாற்றப் பட்டு செல்கின்ற டைரக்டர் அவர்களைப்பற்றி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றியதை குறித்து பாராட்டாமல் இருக்கமுடியாது. குறிப்பாக அண்மையில் இந்த இலாகாவிலிருந்து மாற்றப்பட்டுள்ள ஸ்ரீ முத்திருளாண்டி அவர்கள் இந்த இலாகாவில் செய்திருக்கும்படியான பல நல்ல காரியங்களில் படிப்புதவிர (Scholarship) வழங்குவதன் மூலம் செலவாகிக் கொண்டிருந்த பணம் இவர் வந்த பிறகுதான் சரியான முறையில் செலவிடப்பட்டது. அவர் மிகவும் நியாயமான முறையில் படிப்புதவி பணம் செலவிடப்படுவதைச் சீர் செய்தார். அவரிடம் சட்டசபை அங்கத்தினர்கள் மாணவர்களுக்கு உதவி வழங்கவேண்டுமென்று கேட்கப் போகும்போது எப்படி சர்க்கார் வழங்குகின்ற பணத்தை ஜில்லாவாரியாகப் பிரித்து, பிறகு அந்த ஜில்லாவிற்குள்ளேயே இனவாரியாகப் பிரித்து, பிறகு அந்த இனத்திற்குள்ளேயே மார்க்குகளையும், அந்தப் பையனுடைய நிலைமையையும் கணக்கிட்டுத் தனித்தனி மாணவர்களுக்கும் நியாயமாக சென்று சேருகிற வகையில் காரியங்கள் செய்திருப்பதாக எடுத்துக் காட்டுவார்கள். எதைச் சொல்லவேண்டுமென்று சட்டசபை அங்கத்தினர்கள் சொல்கிறார்களோ அதைச் சொல்லாமலேயே அந்த அதிகாரி மிகவும் நியாயமாக நடந்து கொள்கிறார் என்று நினைத்து பாராட்டி விட்டுத் திரும்பி வந்துவிடுவார்கள். அதோடு அந்த இலாகாவின் பணம் விரயமாக்கப்படுகிறது என்று வெட்டுப்பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர எப்படி வீணாக்கப்படுகிறது என்று யாரும் சொல்லவில்லை. முன்பு வீணாக்கப்பட்டிருக்கலாம். இவர் வந்த பிறகு பணம் எந்த விதத்திலும் விரயமாகாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன் படிப்புதவி யார் யாருக்கு வழங்கப்படுகிறது என்கிற லிஸ்டு கல்லூரிக்கு ஒன்றுதான் அனுப்பப்படும். அப்போது பணமோசடி செய்ய சந்தர்ப்பம் இருந்தது. உதவி கிடைத்த மாணவனுக்குக்கூட அந்த உதவி அளிக்கப்பட்டது தெரிவிக்கப்படாமல் இருந்ததும் நமக்குத் தெரியும். அந்த இலாகா தலைவராக ஸ்ரீ முத்திருளாண்டி அவர்கள் வந்தபிறகு விளம்பரப் பலகையில் ஒட்டுவதற்கு மற்றொரு லிஸ்டு அனுப்பி வெளிப்படுத்தியதால் அப்படிப்பட்ட மோசடிகள் எல்லாம் தவிர்க்கப்பட்டன. ஆகவே அவர் ஏழைகளுக்கு நியாயமான முறையில், மிகவும் திறமையான சேவா மனப்பான்மையோடு செய்து வந்திருக்கும்படியான செயல்களுக்காக எல்லாம் அவரைப் பாராட்டுகிறேன்.

10-50 a.m. அடுத்தபடியாக பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சர்க்கார் இப்போது செய்துவருகிற நன்மையைப் பாராட்டும்போது இந்த இனத்தவர்களுக்கு உத்தியோக விஷயத்தில் சர்க்கார் இன்னும் சில விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உத்தியோக நியமனங்களில், பிற்பட்ட வகுப்பாருக்கு 25 சத விகிதம், தாழ்த்தப் பட்டவகுப்பினருக்கு 15 சத விகிதம் உத்தியோக நியமனத்தில் மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று நாம் அறிவோம். ஆனால் உத்தியோக உயர்வுகளில் அம்மாதிரி இடங்கள் ஒதுக்கப்படுவதில்லை. அப்படி உத்தியோக உயர்வுகளில் இடங்கள் ஒதுக்கப்படாததால் உயர்ந்த உத்தியோகங்களில் இவர்களுக்கு தம் பங்கு கிடைப்பதில்லை. உதாரணமாக கலெக்டர்களை எடுத்துக்கொண்டால், இம்மாகாணத்தில் 12 கலெக்டர்கள் இருக்கிறார்கள் என்றால் அதில் முற்பட்டவகுப்பினரைச் சார்ந்தவர்கள் 10 பேர்கள் இருப்பார்கள். பிற்பட்ட வகுப்பினரில் இரண்டு பேர்கள்தான் இருப்பார்கள். அதேபோன்று இன்னும் அதற்கு சமமான பதவிகளில், **Assistant Secretaries, Deputy Secretaries and Secretaries**



24th March 1958] [Sri K. R. Viswanathan]

இலாகாத் தலைவர்கள்போன்ற உயர்ந்த பதவிகளை எடுத்துக் கொண்டால் முற்பட்ட வகுப்பைச் சார்ந்த பெரும்பாலானவர்கள் தான் அந்தப் பதவிகளை வகிக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்பட்ட வகுப்பினர் அதில் குறைவாகத்தான் இருக்கிறார்கள். காரணம் உத்தியோக நியமனத்தில் மாத்திரம் சலுகைகள் கொடுக்கிறார்களே தவிர உத்தியோக உயர்வு விஷயத்தில் சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே உத்தியோக உயர்வு விஷயத்திலும் சலுகைகள் காட்டினால்தான் பிற்பட்ட வகுப்பினருக்கும தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் கிடைக்கக்கூடிய பங்கு கிடைக்கும். அதைப்பற்றிய ஆலோசனை மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் பொறுப்பு உள்ளவர்கள் இம்மாதிரி உத்தியோக உயர்வு விஷயத்திலும் சலுகைகள் கொடுக்கவேண்டும், அதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடங்கள் ஒதுக்க வேண்டுமென்று ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். அடுத்தப்படியாக, மிகவும் பின் தங்கிய வகுப்பினரைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். மிகவும் பின் தங்கிய வகுப்பினர் என்ற பிரிவானது, அகில இந்திய பிற்பட்ட கமிஷன் ஒன்று மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டு அவர்கள் நாடு முழுவதும் சுற்றி ஆங்காங்குள்ள எல்லா இனத்தாரின் நிலைமையையும் பரிசீலித்து எந்தெந்த மக்களை மிகவும் பின்தங்கிய வகுப்பினராகக் கருதவேண்டும் என்று ஆராய்ந்து எடுத்துச் சொல்லி, அவர்களுக்கும் தாழ்த்தபட்ட மக்களுக்கும் தீண்டாமை என்ற ஒரு வித்தியாசம்தான் இருக்கிறதே தவிர மற்ற எந்த வித்தியாசமும் இல்லை. ஆகவே, மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்பவர்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை கொடுக்கவேண்டும் என்று சிபார்சு செய்தனர். முடிவு அப்படி இருந்தாலும், இந்த மாகாணத்தில் பள்ளிக்கூட, கல்லூரி கட்டணச்செலவு சலுகை மட்டுந்தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் கலைக்கல்லூரி, தொழிற் கல்லூரி இவைகளில் நுழைவுக்கு அனுமதி கிடைக்க எந்தவித சலுகையும் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு சர்க்கார் சார்பில் இருந்து சொல்லப்பட்டது, கலைக் கல்லூரி, தொழிற் கல்லூரி இவைகளில் அனுமதி கொடுக்க வேண்டிய உத்திரவு பிறப்பிக்க சர்க்காரால் உடனடியாக முடியவில்லை என்று. ஏனெனில், அதை பற்றி சட்ட அபிப்பிராயம் தெரியவேண்டியிருக்கிறது, அதைத் கேட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதைப்பற்றிய முடிவு இன்னும் தெரிந்தபாடில்லை. ஆகவே, இந்த வருஷத்திலாவது மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு கல்லூரிகளில் அனுமதிக்கும் சலுகைகள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கிராமங்களில் ஹரிஜன மக்களுக்கு நிலம் வழங்குதல், நில அடமானம் செய்தல், மனை அடமானம் செய்தல் என்ற முறைகளில் பல சலுகைகள் காட்ட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர். அதற்காக தனி அதிகாரிகளைப்போட்டு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் சென்று பார்ப்போமேயானால், துரிதமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்வதாக தோன்றவில்லை. சில சில்லறைக் குழப்பங்களும், தகராறுகளும் ஏற்பட்டு இந்த அடமான வேலைக்கு தடங்கல் ஏற்படுகிறது. வருடம் ஒன்றுக்கு ஒவ்வொரு தாலூகாவிலும் 10, 15 இடங்களில் அடமானம் செய்திருந்தால் அது, மிகவும் அதிகமான தொண்டு செய்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். அதற்கு தடையாக இருப்பது, அதிகாரிகள் நல்லமுறையில் வேலையை மேற்கொள்ளாது இருப்பதுதான். குடியானவர்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் அங்கிருக்கிற ஹரிஜன மக்களுக்கும் தகராறு ஏற்படாத விதத்தில் மனைகளை அல்லது நிலங்களைத் தேர்தெடுப்பது கிடையாது. தகராறு ஏற்படும் வகையில்தான் மனைகளை தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் அதிகாரிகள் நல்லமுறையில் கவனித்து வேலைகளைத் துரிதப்படுத்தும்படி உத்திரவிட வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, ஹரிஜன காலனி கட்டுதல் என்ற முறையில், ஒவ்வொரு தாலூகாவிற்கும், ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் என்ற முறையில் ஒன்றல்லது இரண்டு காலனிகள் வழங்கப்படுகிறது. அதாவது, 20 வீடுகள் இலவசமாக கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதற்காக, ஒரு வீட்டிற்கு 550 ரூபாய் இனாமாகவும், 200 ரூபாய் வீடு கட்டிக் கொள்பவர்

[Sri K. R. Viswanathan] [24th March 1958

போட்டுக்கொள்ளவேண்டும் என்று இருக்கிறது. ஆக, 750 ரூபாயில் வீடு கட்டி முடிக்கவேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது ; 750 ரூபாய்க்கு, வீடு கட்டி முடிக்கவேண்டுமென்று வருகிற மார்ச் திங்களுக்கு முன் ஐந்தாறு மாதங்களுக்குள்தான் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மார்ச்சுக்குள் வீடு கட்டி முடிக்க வேண்டுமென்றால், உத்தரவு பிறப்பிப்பது செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திலாகும். உத்தரவு வந்தபிறகு, வீடு கட்டும் ஆளை கண்டுபிடிப்பது, அதற்கு வேண்டிய எஸ்டிமேட் தயாரிப்பது ஜனவரி அல்லது பெப்ரவரி மாதம் வரை ஆகிவிடுகிறது. இடைக்காலத்தில் உள்ள ஒன்றிரண்டு மாதங்களில் 15,000 ரூபாயில் 20 வீடுகள் கட்டி முடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, வீடுகள் சரியான முறையில் கட்டப்படுவதில்லை. கோயமுத்தூர், மதுரை ஜில்லாக்களில் சென்று பார்த்தபோது அங்கு கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் தாமாக இடிந்து விழும் நிலையில் இருந்தது. பல இடிந்தும் விழுந்துவிட்டன. ஆகவே, சர்க்கார் நல்ல எண்ணத்தோடு செலவு செய்யும் பணம், அது எவரைச் சென்று அடைகிறதோ அவருக்கு பயன் படுவதாக இது இருக்கவேண்டும். ஆகவே, இடையில் நல்ல காலம் கொடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சாங்க்ஷன் செய்து சாவதானமாக வீடுகள் கட்ட குறைந்தது மூன்று மாத காலமாவது இருக்க வேண்டுமென்ற முறையில் வீடு கட்டிக்கொடுத்தால்தான் அவை நீடிக்கும் என்று சொல்லிக்கொண்டு இந்த ஹரிஜன இலாகா மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன்.

**Sri SAMI SAHAJANANDA :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யமானது மிக முக்கியமானது. வருஷந்தோறும் சர்க்கார் ஒதுக்கி வந்த பணம் குறைவாக இருந்தது. சென்ற ஆண்டில் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். அதற்கு முன் ஆண்டு ஒரு கோடி ஐந்து லட்சந்தான் செலவிடப்பட்டது. ஆனால் கனம் கக்கன்ஜி அவர்கள் வந்த பிறகு, அது இரண்டு கோடியானது. இந்த வருடம், இரண்டு கோடி 40 லட்சம் வரையில் செலவிட சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள் என்றால் அது சர்க்காரின் விரிந்த மனப்பான்மையைத் தான் எடுத்துக்காட்டுகிறது. மேலும் இந்த இலாகாவை யார் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர் விரிந்த மனப்பான்மையுடையவராக இருக்கவேண்டும். கக்கன்ஜி அவர்கள் டெல்லிக்குச் சென்றபோதும் கூட, வீடு கட்ட ஹரிஜனங்களுக்கு அதிகம் பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இங்கும் ஒரு மகாநாட்டில் ஹரிஜன நன்மைகளைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, அவர் வந்தது ஏதோ அதிருஷ்டம் என்று தான் சொல்லவேண்டும். இவ்வளவு பணம் செலவு செய்யும்போது ஹரிஜனப் பிள்ளைகளுக்கு அதிகமாக படிக்கவேண்டும். அவர்களுக்கு அதிகம் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தவேண்டும். ஆகவே, சர்க்கார் அந்த வகையில் அதிகம் ஹாஸ்டல்ஸ் ஏற்படுத்தவேண்டும். இப்பொழுது ஹாஸ்டல்களை சர்க்கார் நடத்துகிறார்கள். அது நல்லதுதான். ஆனால் ப்ரைவேட் மானேஜ்மெண்ட் நடத்தும் ஹாஸ்டல்களைப் போல் சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்கள் ஒழுங்காக நடப்பதில்லை. விழுப்புரத்தில் ஒரு ஹாஸ்டல் இருக்கிறது பத்து வருஷங்களாக. அது இன்னும் முன்னுக்கு வரவில்லை. பிரைவேட் மானேஜ்மெண்ட் நடத்துவதாக இருக்குமானால் அவர்கள், அது எப்படியாவது அபிவிருத்திக்கு வரவேண்டுமென்று கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். ஆகவே அந்த வகையில் ப்ரைவேட் மானேஜ்மெண்டுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஒரு ஹரிஜன டைரக்டரைப் போட்டிருக்கிறார்கள். முன் இருந்தவரும் ஹரிஜன டைரக்டர் போலவே நன்கு வேலை செய்து வந்தார். இருந்தாலும் ஹரிஜன உத்தியோகஸ்தர் ஒருவர் அந்த இலாகாவிற்கு தலைவராக வந்திருக்கிறார் என்ற ஒரு திருப்தி. அடுத்தபடியாக, சிதம்பரத்தில் மனைக்கட்டுகள் கொடுக்கும் விஷயம் பற்றி, இரண்டு தாசில் தார்கள் போட்டு அவர்கள் வேலை செய்து வருகிறார்கள். அங்கு, வீடு கட்ட யோக்கியதை உள்ள நிலம் இருந்தாலும், ஒன்று, ஒன்றரை கஜம் பள்ளம் உள்ள நிலத்தைத்தான் மிராசுதார்கள் வார்த்தையைக் கேட்டு எடுக்கிறார்கள். சுடுகாட்டில் உள்ள நிலங்களை எடுக்கிறார்கள். மந்திரியவர்கள் வந்தபோது, நேரில் பார்க்கவேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆகவே, சர்க்கார் செலவு செய்யும் பணம் ஹரிஜன மக்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் செலவு செய்யப்படவேண்டும்.



24th March 1958] [Sri Sami Sahajananda]

மேலும் ஹரிஜன முன்னேற்றத்திற்காக திராவிட முன்னேற்ற கழகத்தார் நாங்கள் பாடுபட்டோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கும் நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன். ஆனால் இப்போதும் எங்கள் பக்கத்தில் செட்டியார் தோப்பு என்கிற கிராமத்தில் ஹரிஜன மக்கள் செருப்பு போட்டுக்கொண்டு போனார்கள் என்ற காரணத்திற்காக அவர்களை அடித்திருக்கிறார்கள். இதற்காக கேஸும் நடந்து வருகிறது. அங்கே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனில் வைத்தே ஹரிஜன மக்களை அடிக்கிறார்கள். இதைப்பற்றி அங்குள்ள ஜில்லா சூப்பரிண்டெண்டண்ட், கலெக்டர் இவர்களிடம் சொல்லிருக்கிறோம். ஹரிஜன மக்கள் விஷயத்தில் போலீஸார் அக்கரையோடு நடந்துகொள்ளவேண்டும். போலீஸாரில் பாதிக்குமேல் ஹரிஜனங்களாக இருந்தால்தான் ஹரிஜனங்களுக்கு போலீஸில் பாதுகாப்பு கிடைக்கும். இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும். இவ்விதம் மேலும் சர்க்கார் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டு சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை பரிபூரணமாக ஆதரித்துக்கொண்டு, சர்க்காருக்கு என் நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRIMATHI A. S. PONNAMMAL :** மதிப்பிற்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷத்தில் நான் ஹரிஜன முன்னேற்றத்தில் பேசும்பொழுது கிராமப் பகுதிகளில் படிக்கின்ற ஏழை குழந்தைகளுக்கும் ஹரிஜன குழந்தைகளுக்கும் மத்தியான சாப்பாடு போன்ற வசதிகள் கொடுக்கப்படுவது போன்று எல்லாக் குழந்தைகளுக்கும் துணிகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இப்போது நிதி அமைச்சர் அவர்கள் மதுரையில் பேசும்போது எல்லாக் குழந்தைகளுக்கும் யூனிபாரம் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னதை நான் பேப்பரில் பார்த்தேன். அதைப்பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். அதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றியும் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து கல்வித்துறையை எடுத்துக்கொண்டால் பல ஏழை குழந்தைகள் கல்வி பெற்று பல்லாயிரக் கணக்கில் ரூபாய்களை பெற்று மாணவர்கள் ஆங்காங்கு பல துறைகளில் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இன்னும் ஒரு சில கிராமப் பகுதிகளில் பள்ளிக்கூடங்கள் இல்லாததினால் அங்குள்ள மக்கள் படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த முறையில் ஒரு சில இடங்களில் இன்னும் சரியான முறையில் பள்ளிக்கூடங்கள் அமையவில்லை. அதற்கும், ஆங்காங்கு பல பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டால் ஹரிஜன மக்கள், நகரப் பகுதிகளில்தான் ஓரளவுக்கு தங்கள் குடும்பத்தை காப்பாற்றக்கூடிய நிலையில் இருந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் கிராமப் பகுதிகளில் பகல் பூரா பாடுபட்டும், சரியானபடி உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பார்த்து கிராமப் பகுதிகளில் பிறந்த என்போன்றவர்கள் பரிதாபப்படவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. அவர்கள் ஆறு மாதம்தான் வேலை செய்கிறார்கள். பாக்கி ஆறு மாதம் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அந்த சமயத்தில் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த சமயத்தில் புல் அறுத்து விற்பனை செய்யலாம் என்றால், அதற்கும் இடையூறு ஏற்படுகிறது. புல் அறுப்பதற்கு அங்குள்ள தோட்ட முதலாளிகள் அனுமதிக்க மறுத்து விடுகிறார்கள். இவ்வித கஷ்டங்கள் ஏற்படுகிறது. ஆகவே பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றுவதற்கு ஆங்காங்கு இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கும் பிற்பட்ட வகுப்பிலுள்ள மக்களுக்கும், ஆங்காங்கு குடிசைத் தொழில்களை ஏற்படுத்தி அவர்களது வருவாயை அதிகப்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பொருளாதாரத் துறையில் நான் சென்ற ஆண்டில் குறிப்பிட்டது மாதிரி, மில்களில் எல்லாம் ஹரிஜன மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இதற்கு இதுவரையிலும் எந்தவிதமான

[Srimathi A. S. Ponnammal] [24th March 1958

நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதைப்பார்த்து நான் வருத்தமடைகிறேன். ஒவ்வொரு துறையிலும் இத்தனை சத விகிதம் ஹரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மில்களுக்கு எல்லாம் சர்க்காராகிய நாம்தான் லைஸன்ஸ் கொடுக்கின்றோம். இதில் நூற்றுக்கு 25 சத வீதமாவது ஹரிஜனங்களைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு நிபந்தனையை உண்டு பண்ணினால் அதில் வேலை பார்க்கிறவர்களுடைய குடும்பம் நல்லமுறையில் விருத்தி அடைய முடியும். இதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனிமேலாவது உடனடியாக அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த ஆண்டில் லட்சத்தி இருபத்தி ஒன்பதாயிரம் வீடுகளுக்கு மான்யம் கொடுக்கப்படப்போவதாக தெரிகிறது. அதில் சென்னை மாகாணத்திற்கு எத்தனை வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமான வீடுகள் கட்டிக்கொடுத்தால்தான் ஹரிஜன மக்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த முடியும். அவ்விதம் வீடுகளுக்கு வசதி இருந்தால்தான் அவர்கள் நாகரீகத்தோடு ஜாதி ஹிந்துக்களோடு நல்ல முறையில் வாழ்க்கை நடத்த முடியும். இப்போது பத்து பேர், பதினைந்து பேர் என்று ஒவ்வொரு குச்சு வீட்டிலும் தங்கியிருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு தாலூகாவுக்கும் 40 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்பது போதாது. உடனடியாக எல்லோருக்கும் வீடு கட்டிக்கொடுத்துவிட முடியாது என்பது என் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் வீடு கட்டிக் கொள்வதற்காக தவணை முறையில் கடனாக கொடுக்க ஏற்பாடு செய்தால் எல்லோரும் சுத்தமாக நல்ல வீடுகளில் வாழ்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், ஒரு சில இடங்களில் அதாவது தண்ணீர் உள்ள இடங்களில், மிக சிறிய சிறிய வீடுகள் கட்டிக்கொடுக்கிறார்கள். இந்த சிறிய வீடுகளிலுள்ள கூரைகளில் சில சமயங்களில் தீ பிடித்து விடுகிறது. பின்னால் இந்த வீடுகளுக்கெல்லாம் கலக்டரிடமிருந்து 30 ரூபாய் வாங்கி கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் குச்சு வீடுகள் போட்டுக்கொடுப்பதினால் மேலும் பணம் கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே இதற்கு கூட்டுறவு முறையில் கடன் கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு பணம் கொடுக்க சர்க்கார் முன்வர வேண்டும். சில இடங்களில் வீடு கட்டுவதற்குகூட மனைகள் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். நாச்சிகுளம், மேட்டு நீரேத்தான், தாதம்பட்டி, சோளவந்தான் பக்கத்தில் கோட்டப்பட்டி மேடு இந்த இடங்களில் எல்லாம் வீடு கட்டுவதற்கு மனைகள் இல்லாமல் இருக்கிறது. இதற்காக பக்கத்திலுள்ள ஒரு இடத்தை பிரித்து கொடுப்பதற்காக, நான், வெல்பெயர் ஆபீஸர், கலெக்டர் எல்லோரும் போய் பார்த்தோம். பின்னால் அதை சர்வே செய்ய போகும்போது அந்த இடத்தில் ஒரு இறந்த குழந்தையை புதைத்துவிட்டு இது சுடுகாடு என்று கூறி தடுத்து வருகிறார்கள். இவ்விதம் அங்கு ஜாரி செய்ய முடியாமல் இருக்கிறது. இந்த முறையை தடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று ஏழை ஹரிஜனங்களின் சார்பாக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கிணறு வெட்டிக்கொடுக்கும் காரியத்தில் ஒவ்வொரு கிணறுக்கும் 1,500 ரூபாய் கொடுத்து கிணறு வெட்டிக் கொடுக்கப்படுகிறது. இதற்கு இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்களிடம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் தனிப்பட்ட நபர்களிடம் கொடுப்பதை மாற்றி தரிசு நிலங்கள் எங்கு இடக்கின்றதோ அந்த இடங்களில் வெட்டிக் கொடுக்கவேண்டும். எங்கள் பக்கத்தில் அதாவது வத்தலக்குண்டு பகுதியில் 250 ஏக்கர் தரிசு நிலங்களாக கிடக்கின்றன். இதை அங்குள்ள ஹரிஜன மக்களுக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு கொடுத்தால் மிகவும் அனுகூலமாக இருக்கும், அதோடு இவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, ஹாஸ்டலில் படிக்கின்ற மாணவர்கள் இப்போது எந்த விதமான வேலையும் செய்யக்கூடாது தட்டு' கழுவக்கூடாது, என்றெல்லாம்



4th March 1958] [Srimathi A. S. Ponnammal]

ரு சர்குலர் வந்திருந்தது. அது நல்லதல்ல என்றுதான் நான்
னைக்கிறேன். இன்றைக்கு நமது சர்க்கார் உடல் உழைப்புக்கும், சுய
தவைக்கும் முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. காந்திஅடிகள்கூட
வ்வொருவரும் தனக்கு வேண்டிய தேவையை பூர்த்தி செய்துகொள்ள
வண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரி வேலைகள்
சய்யக்கூடாது என்று ஹாஸ்டலில் சர்குலர் வருமானால், அதனால்
ாணவிகள் எப்படியும் நல்ல முறையில் கற்றுக்கொள்வார்கள், ஆனால்
ாணவர்கள் எட்டாம் வகுப்பு வரை படித்த உடனேயே வேலைக்கு லாயக்
்லாதவர்களாகி விடுகிறார்கள். மேலும் வேலை செய்வதை கேவலமாக
நதி இருந்து விடுவார்கள். ஆகவே கட்டாயம் வேலை செய்யவேண்டு
மன்று ஒரு உத்தரவை பிறப்பிக்கவேண்டுமென்று ஹரிஜன குழந்தை
ளின் சார்பாக சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இன்னும்
ல இடங்களில் மாடுகள் வாங்கி கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால்
வசாயிகளுக்கு அனுகூலமும் ஏற்படுகிறது. இந்த மாடு வாங்கி கொடுக்கும்
ஷயத்தில், மாடு வாங்கி கொடுப்பது, அங்குள்ள தாசில்தார், எம்.எல்.ஏ.
வர்கள் எல்லோரும் சேர்ந்துதான் வாங்கிக்கொடுக்கிறார்கள். ஆனால்
தைப்பற்றி சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். மாடு வாங்கி கொடுக்
ன்ற முறை மோசமாக நடந்து வருகிறது, நல்ல முறையில் நடைபெற
ல்லை என்று கூறினார்கள். "இடுவார் பிச்சையை கெடுவார் கெடுப்பார்"
ன்பதுபோல, கனம் அங்கத்தினர் சொல்லியதைப் பார்த்து நான் மிகவும்
ருத்தப்படுகிறேன். ஹரிஜன மக்களுக்காக இன்னும் என்னென்ன நல்ல 11-10
ாரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறுவார்களேயானால், என்னைப் a.m.
ான்ற ஹரிஜன சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு ஆறுதலாக இருக்கு
மன்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரையிலும் டைரக்டராக இருந்து இப்பொழுது மாற்றப்பட்டிருக்கும்
ீ முத்திருளாண்டி அவர்கள் ஹரிஜன மக்களுக்கும் பிற்பட்ட மக்க
ளுக்கும் நல்ல முறையில் சேவை செய்து வந்ததைப் பாராட்டி, ஹரிஜன
க்களுடைய சார்பிலே அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்
காண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri P. S. SANTHANAM**: தலைவர் அவர்களே, அவையின் கண்
காண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச்
சால்ல ஆசைப்படுகிறேன். இந்த தமிழகத்திலே ஒதுக்கப்பட்ட சமூகத்
னர், அதாவது ஆதித்திராவிடர்கள் என்று சொல்லக்கூடிய ஹரிஜன
குப்பினர், இந்த நாட்டில் குடிக்க கஞ்சிக்கும், கட்ட ஆடைக்கும், குந்த
ழலுக்கும் தவித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, இந்த ஆளும்
க்கார் அவர்களுக்கு நல்லதொரு திட்டங்களைத் தீட்டி நன்மை செய்
தாகச் சொல்லப்படுகிறது. அதை ஒரு விதத்திலே வரவேற்கிறேன்.
ற்றொரு விதத்திலே ஏன் இந்த சர்க்கார் சரியான முறையில் வேலை
சய்யவில்லை என்று கேட்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஹரிஜனங்களுக்காக இந்த ஆண்டு ஏறத்தாழ $2\frac{1}{4}$ கோடி ரூபாய்க்கு
ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிதி ஒதுக்கப்படுகையிலே, பின்
ங்கிய வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், ஹரிஜன
குப்பினருக்கும் என்று பணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி
ாழர் விநாயகம் அவர்கள் விளக்கம் கூறினார்கள். "பூவை ஒட்டி
ரும் மணக்கும்" என்று சொல்லுவது போல், இந்த பட்ஜெட்டில்
ுக்கப்பட்ட நிதியிலிருந்து, ஹரிஜனங்களுக்குத் தனியாக ஒதுக்க
ண்டும், பின்தங்கிய வகுப்பினருக்கு தனியாக ஒதுக்கவேண்டுமென்று
ால்லுகிறார்கள். ஹரிஜனங்களுக்கென்று ஒரு தனி டைரக்டரும்,
ன்தங்கிய வகுப்பினருக்கு என்று ஒரு தனி டைரக்டரும் போட்டால்
ந்த நிர்வாகம் நல்ல முறையில் இருக்கும் என்று கூறியதை நான்
வேற்கிறேன். உண்மையிலேயே அதை மனமாற வாழ்த்துகிறேன்.
ந்த நிலைமை ஏற்படுமேயானால், ஒதுக்கப்பட்ட தொகையை பாழாக்கு
தற்கு வழி இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, வட ஆற்காடு ஜில்லாவிலே ஹரிஜனப் பிள்ளைகளுக்காக
ுக்கப்பட்ட நான்கு லட்சம் ரூபாயில் ஒரு லட்சம் தான் செலவு செய்யப்
டிருக்கிறது. மூன்று லட்சம் ரூபாயை மீத்து வைத்து மீண்டும்

[Sri P. S. Santhanam] [24th March 1958

சர்க்காருக்கே திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தோ பரிதாபம். ஏன்? இந்த வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள அத்தனை ஹரிஜன மக்களும் நல்ல நிலைமையில் இருக்கிறார்களா? உணவுப் பஞ்சம் இல்லாத நிலையில் இருக்கிறார்களா? மழை பெய்தால் என்ன, இடி இடித்தால் என்ன, ஹரிஜன மக்கள் எப்படிப் போனால் என்ன என்று நிர்வாகத்தில் உள்ளவர்கள் நினைப்பதனால்தான், அந்த மூன்று இலட்சம் ரூபாயும் செலவழிக்கப் படாமல், திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் தோழர் கே. விநாயகம் அவர்கள் சொன்னது போல், அந்தந்த நிர்வாகத்திற்குத் தகுந்தபடி ஒரு தனி அமைப்பாளரை ஏற்படுத்துவார்களேயானால், உண்மையிலேயே நிர்வாகத்தில் ஊழல் இருக்காது என்பது என்னுடைய கருத்து. இந்த சர்க்கார் ஹரிஜன மக்கள் முன்னேறவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்கள். அதை உண்மையிலேயே வரவேற்கிறேன். ஹரிஜனங்கள் இந்த நிலைமையில் இருப்பதன் காரணம் என்ன, ஹரிஜனங்களுக்கு ஏன் இந்த மாதிரி சலுகைகள் கொடுக்கப்படவேண்டும், பின் தங்கிய வகுப்பினருக்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்று ஏக்கமும், துக்கமும், பொறாமையும் கொண்டிருக்கிறார்கள் சிலர். இந்த நாட்டிலே வெள்ளையர்கள் இருந்த காலத்திலே கூட, ஹரிஜனங்கள் உண்மையாகவே நாட்டிற்குச் சேவை செய்யக்கூடியவர்கள், இந்த நாட்டிலே உள்ளவர்களில் நல்ல உழைப்பாளிகள், இந்த நாட்டிலே பரிசுத்தமானவர்கள், நாயைப் போல் நன்றியுள்ளவர்கள் என்று தெரிந்துதான் அவர்கள் படிப்பதற்காக சில சலுகைகளைக் கொடுத்தார்கள். ஆனால் ஆளும் கட்சியினர் சொல்லுகிறார்கள் "நாங்கள் தான் இந்த நிலைமையை உண்டாக்கினோம்" என்று. இன்று ஆளும் கட்சியில் ஏறத்தாழ 40 ஹரிஜன அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் காங்கிரஸின் பெயரால் வந்தார்களா, அல்லது தனித் தொகுதி ஏற்பட்டதன் காரணமாக வந்தார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன், எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற அடிப்படையிலே, ஹரிஜன மக்களுக்குத் தனித் தொகுதி இல்லாமலிருந்து, பொதுத் தொகுதியிலே வந்திருக்க முடியுமா என்று கேட்கிறேன். இந்த தனித் தொகுதி யாருடைய முயற்சியால் வந்தது என்பதை நாம் பார்க்கவேண்டும். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஹரிஜனங்களுடைய நிலைமையை மனதில் வைத்துக்கொண்டு, வெள்ளையர் ஏகாதிபத்தியத்தோடு போராடி, அந்தக் காலத்திலேயே அவர்களுக்காக தனித் தொகுதி ஒதுக்கப்படவேண்டும் என்ற பிரச்னையை கொண்டு வந்தார். அந்தக் காலத்தில் காந்தி அவர்கள் "ஹரிஜனங்களுக்கு தனித் தொகுதி கூடாது, எல்லோரும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்" என்று பாடுபட்டார்கள். அதே பிரகாரம் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒத்துக்கொண்டிருப்பார்களேயானால், இந்த மன்றத்திலே ஏறத்தாழ 40 ஆதித்திராவிடர்கள் உட்கார முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று எத்தனையோ தொல்லைகளுக்கும் இடையூறுகளுக்கும் இடையில்தான் அவர்கள் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். வோட்டுச் சாவடிக்குப் போகிற நேரத்தில் கூட "ஏ கருப்பா, ஏ முத்து, வோட்டுச் சாவடிக்கு ஏன் போறீங்க, வேலையைப் போய்ப் பாருங்கடா" என்ற கூக்குரல் இன்றும் கிளம்புகிறது. தனித் தொகுதி இல்லாமல் இருந்தால் வோட்டுச் சாவடியை எட்டிப்பார்க்கக் கூட முடியாது. தோழர் விநயகம் அவர்கள் ஒரு பேச்சிலே "காங்கிரஸ் சர்க்கார்தான் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்கிறது, ஹரிஜனங்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெயரால் தான் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், அந்த ஸ்தாபனம் இல்லையென்றால் அவர்கள் கேவலமான நிலையில் தான் இருந்திருப்பார்கள்" என்று சொல்லுகிறார். சென்ற ஆண்டிலே ஒரு மேடையில் அவர் பேசும்பொழுது, என்ன சொன்னார் என்பது இந்த அவையிலுள்ளவர்களுக்குத் தெரியும், என் போன்றவர்களுக்கும் தெரியும். சென்ற ஆண்டுக்கு முன்னதாக அநேக இடங்களில் காங்கிரஸ்காரர்கள் செய்யக்கூடிய அயோக்கியத்தனத்தையும், அட்டூழியத்தையும் பற்றிச் சொல்லும்போது எல்லாம், "காங்கிரஸ் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யவில்லை, தமிழகத்தின் தலை தாங்குவதற்குச் செல்லுகிறேன், எல்லோரும் வாருங்கள், வாருங்கள்" என்று அழைத்த தோழர் விநயகம், "ஹரிஜனங்களுக்கு



24th March 1958] [Sri P. S. Santhanam]

இந்த சர்க்கார் நன்மை செய்கிறது, சர்க்காரை நம்பித்தான் அவர்கள் வாழ்கிறார்கள்" என்று இப்பொழுது சொல்லுகிறார். அன்று அப்படிப் பேசியவர் . . .

**Sri K. VINAYAKAM : On a point of order, the speech that is being delivered by the hon. Member . . .**

**Sri P. S. SANTHANAM :** தமிழில் பேசினால் தான் என் போன்றவர்களுக்குப் புரியும்.

**Sri K. VINAYAKAM :** தமிழிலே வேண்டுமானாலும் பேசுகிறேன், ஹிந்தியில் வேண்டுமானாலும் பேசுகிறேன். இப்பொழுது நண்பர் பேசுவதற்கும் இந்த மான்யத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று கேட்கிறேன். நான் ஏதோ மேடையில் பேசினேன் என்பதற்கு அத்தாட்சி இருக்கிறதா? குறிப்பு எழுதி வைத்திருக்கிறீர்களா? இப்படி என்னை தற்காப்பு செய்து கொள்வதற்கு தருணம் இல்லாத பொழுது, இதை முன் கூட்டியே சொல்லி இருந்தால் சரியான "சாட்டை" கொடுத்திருப்பேன்.

**DEPUTY SPEAKER :** தயவுசெய்து மான்யத்தைப் பற்றிப் பேசுங்கள். வெளியிலே நடந்த விஷயங்களை இங்கே பேசுவது நல்லதல்ல.

**Sri M. C. MUTHUKUMARASWAMY :** கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் பேசும்பொழுது, முன் கூட்டியே பேசி இருந்தால் "சாட்டை" கொடுத்திருப்பேன் என்று சொல்லுவது சாட்டையால் அடிப்பதற்கு ஒப்பாகும் என்று கருதுகிறேன். அப்படிப் பேசுவது சரியல்ல என்று கண்டிக்கிறேன்.

**Sri K. VINAYAKAM :** "Proper reply" என்பதற்கு தமிழ் அகராதியில் "சாட்டை" என்று தான் போடப்பட்டிருக்கிறது.

**DEPUTY SPEAKER :** கனம் அங்கத்தினருக்கு இன்னும் ஒரு நிமிஷம் தான் இருக்கிறது.

**Sri P. S. SANTHANAM :** நான் பேசிக் கொண்டிருக்கும்போது மடக்கி, மடக்கி ஸ்ரீ விநாயகம் கேட்டுவிட்டதனால் என்னுடைய நேரம் குறைந்துவிட்டது. சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

ஹரிஜன மக்களுக்கு இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்வதற்குத் தான் நாம் இந்த சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோம். நிர்வாகத்தில் இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்வதற்குத்தான் நாம் இங்கு வந்திருக்கிறோம். ஒருவரை ஒருவர் பாகுபடுத்தி பேசுவதற்காக அல்ல.

கிராமங்களில் ஆதித்திராவிட மக்கள் மிகவும் பின் தங்கியிருக்கிறார்கள். கல்வித்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்கள் நிலைமை சீர்கேடான நிலையில் இருக்கிறது. பொருளாதாரத் துறையில் ஆதித்திராவிட மக்கள் முன்னேற வேண்டும் என்று சொன்னால் . . .

**DEPUTY SPEAKER : The hon. Member's time is up.**

**Sri K. B. S. MANI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன 11-22
மான்யத்தை ஆதரித்து என்னுடைய உரையை துவங்குகிறேன். a.m.

இந்த சர்க்கார் அரிஜன மக்களுக்கு பல நூற்றுக் கணக்கான நன்மைகளை செய்திருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில், அச்சமோ அல்லது வெட்கமோ இருக்கமுடியாது. உலகம் தோன்றிய நாள் முதல் என்று கூறுவது சரியாக இல்லாவிட்டாலும், மனிதன் அறிவு படைத்த நாட்களிலிருந்து, ஆசை வளர்ந்த நாட்களிலிருந்து பல நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். முன் காலத்தில் பொதுவாக "ஆண்டான், அடிமை" என்ற எண்ணம் இருந்தது. உலக வரலாற்றிலேயே, முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் இந்தியா தீண்டாமையின்

[Sri K. B. S. Mani] [24th March 1958

காரணமாக பின்னணிக்குப் போய் கொண்டிருக்கிறது. அரசாங்கம் பல துறைகளில் சட்ட பூர்வமாகவும், அதிகார பூர்வமாகவும் பல காரியங்களை செய்திருப்பதும், அவைகளை நடைமுறையில் கொண்டு வருவதற்கு பல அதிகாரிகளை நியமித்து அதை நல்ல முறையில் நிர்வகிக்க பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வரவேற்கத்தக்கது. அப்படியிருந்தும் சில குறைபாடுகள். இருக்கின்றன. சாதாரணமாக ஒரு சிறு குடும்பத்தை நடத்துவதிலும், பல குறைபாடுகள் இருப்பதைக் காண்கிறோம். உற்றார் உறவினர் சொல்வதை கேட்டு அவன் குறைகளை திருத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறான். அரசாங்கத்திலும், எந்த நாட்டில் எந்த கட்சி ஆண்டாலும், நடைமுறையில் சில குறைபாடுகள் இருக்கும். தனி மனிதன் தன்குறைகளை திருத்திக் கொள்வது போல், அரசாங்கமும் குறைகளை திருத்திக் கொள்ளவேண்டும் என்பது ஒரு பொது சித்தாந்தம். அரசாங்கம் இதுவரை செய்துள்ள நன்மைகளுக்கு எங்களுடைய மக்களின் சார்பாக, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்திருக்கும் நன்மைகளில் உள்ள குறைபாடுகளை திருத்தினால் இன்னும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். கடந்த வருஷம் ஒரு பெரிய மகாநாடு கூட்டி அரசாங்கத்திற்கும், மந்திரி அவர்களுக்கும் இதைப் பற்றி சொன்னோம். நான் நேரிடையாகவும் அவர்களுக்கு இதைப் பற்றி கூறியிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வீடு கட்டிக் கொடுப்பது நல்லது தான். ஆனால் இதனால் அதிகமாக நன்மை ஒன்றும் பயக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. தனிப்பட்ட மனிதனுக்கு குடியிருக்க இடம் இல்லை என்று சொன்னால், அவன் சுதந்திரம் அடைந்த மனிதன் என்று சொல்லிக் கொள்ள முடியாது. ஆகையால் அவனுக்கு குடியிருக்க வேண்டி வீடு இருப்பது மிகவும் அவசியம். ஆகவே இந்தப் பிரச்னையைப் தீர்ப்பதற்கு, தனிப்பட்ட ஒருவனுக்கு குடியிருப்பு வசதிசெய்து கொடுப்பதற்கு அரசாங்கம், தைரியமாக எந்த விதமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், ஒரு சட்டம் இயற்ற வேண்டும். இது தான் நமது முதல் பிரச்னை. பத்தாயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டால் அதை கட்டிக் கொடுப்பதற்கு எவ்வளவு வருஷங்கள் ஆகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகையால் யார் எந்த இடத்தில் சொந்த பணத்தைக் கொண்டு வீடுகட்டிக் கொண்டிருக்கிறார்களோ அந்த இடத்தை அப்படியே ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும். ஒருவனுக்கு குடியிருப்பதற்கு சொந்தமாக ஐந்து சென்ட் நிலம் இல்லை என்று சொன்னால் அவனை சுதந்திர மனிதன் என்று சொல்ல முடியாது. அவனும் சுதந்திர மனிதனாக இருக்க முடியாது. ஆகையால் சர்க்கார் நிலமாக இருந்தாலும் சரி, மிராசுதார் நிலமாக இருந்தாலும் சரி, பழைய ஜமீன் நிலமாக இருந்தாலும் சரி, அங்கு இருக்கும் அரிஜனங்களுக்கு குடியிருப்புக்கு என்று நிலங்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தற்பொழுது குடியிருப்புக்கு என்று சில இடங்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். கடந்த பிப்ரவரி மாதம் 28-ம் தேதி நமது முதல் அமைச்சர் நாச்சியார்கோவிலுக்கு அருகில் உள்ள செம்மங்குடி கிராமத்திற்கு வந்தார்கள். அரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு நிலம் வாங்கி கொடுத்தார்கள். நன்னிலம் தாலூகாவில் இருக்கும் குவளைகிணறு என்ற கிராமத்தில் 40 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் சர்க்கார் திருத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. பட்டுக்கோட்டைக்கு கனம் அமைச்சர் அவர்கள் வந்தபோது இதைப் பற்றி நானும் எஞ்சினியர் அவர்களும் சொன்னோம். இங்கு கட்டும் வீடுகளுக்கு 2¼ அடி தான் அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் எல்லாம் நஞ்சை நிலங்கள் அதிகம். அவைகள் ஆற்றுப் பாய்ச்சலில் பயிராகின்றன. ஒரு மழை பெய்தால் இங்கு கட்டியிருக்கும் வீடுகள் எல்லாம் சரிந்து விடுகின்றன. ஆகையால் போடப்படும் திட்டங்களை எல்லாம் " செய்வன திருந்தச் செய் " என்பது போல் நன்றாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.



24th March 1958] [Sri K. B. S. Mani]

கடந்த மாதம் 14-ம் தேதி ஸ்ரீ பந்த் அவர்கள் எங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். பணம் செலவழிக்காமல் இருந்ததற்கு காரணம் என்ன என்று சர்க்கார் ஆராய வேண்டும். அப்படி இருந்தால் பணத்தை செலவழிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது எங்களுக்கு ரிசர்வ் சீட் என்று ஒதுக்கியிருப்பது போல், பணம் தனியாக ஒதுக்கியிருப்பது போல் உத்தியோகத்திலும் ஒதுக்க வேண்டும். ஒரு தடவை சர்விஸ் கமிஷன் பரீக்ஷை எழுதி அந்த குறிப்பிட்ட உத்தியோகத்திற்கு தேர்வு கிடைக்கவில்லை என்றால், வேறு உத்தியோகத்திற்கு போக வேண்டுமானாலும் மறுபடி சர்விஸ் கமிஷன் பரீக்ஷை எழுத வேண்டும். இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும். ஒரு தடவை ஒருவர் ஸர்விஸ் கமிஷன் பரீக்ஷை எழுதினால் அதை வைத்துக் கொண்டே அவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற முறை வர வேண்டும்.

உத்தியோகத்துறைகளிலும் அவர்களுடைய ஜனத்தொகைக்குத் தக்கபடி அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்க வேண்டும். உத்தியோகங்களில் அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கினாலும் அவர்கள் மேல் பதவிகளுக்குச் செல்ல முடியாமல் அப்படியே இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு சலுகைகள் வழங்கியதாக கருதமுடியாது. ஆகவே உத்தியோகத் துறையில் அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்குவதோடு அவர்களுக்கு மேல் பதவிக்கு செல்வதற்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும். இப்பொழுது பார்த்தால் பலர் ஒரே பதவியில்தான் இருந்து கொண்டு வருகிறார்கள். எந்த உத்யோகத்தில் அவரை நியமித்தார்களோ அதே பதவியில் தான் இன்னும் இருந்து கொண்டு வருகிறார்கள். அதனால் அரிஜனங்களுக்கு உத்தியோகங்களில் ஸ்தானங்களை ஒதுக்குவதுபோல் அவர்களுக்கு மேல் பதவிகள் வழங்குவதிலும் அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் அவர்களுக்கு உண்மையிலேயே சலுகைகள் காட்டியதாக ஆகும்.

கன்னியாகுமரி போன்ற இடங்களில் அரிஜனங்களில் சில வகுப்புகளுக்கு சாம்பவர் என்று வழங்கப்படுகிறது. இங்கு அவர்களை சாம்பான் என்று வழங்குகிறார்கள். இந்த வித்தியாசத்தால், இருவரும் ஒரே இனத்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் சாம்பவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு இனத்தவர்களையும் ஒன்றாகக் கருதி இரண்டு இனத்தவர்களுக்கும் சலுகைகளை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய திருத்தத்தையும் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பணக்காரர்களிடமிருந்து வரிப்பணமாக பணத்தை வாங்கி அரிஜனங்களுக்கு செலவு செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது தவறு என்பது எங்களுடைய அபிப்பிராயம். வரி வசூல் செய்வதெல்லாம் நாட்டின் நலனுக்குத் தான் தவிர அரிஜனங்களுக்கு என்று வரி போட்டு வசூல் செய்வதல்ல. யாரிடமும் வரி வாங்காமல் எங்களுக்கு சலுகைகளை காட்டி வருகிறார்கள். அரிஜனங்களுக்கு என்று வரி போட்டு வசூல் செய்வதில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாடு நல்ல முறையில் வாழ்வதற்குத்தான் வரி போட்டு வசூல் செய்கிறார்கள். நாடு முன்னேற்றமடைந்து இருக்கிறது என்று சொன்னால் அது அரிஜனங்களால்தான் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது. இதை எல்லோரும் உணர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM** : சட்ட மன்ற உபதலைவர் அவர்களே, அரிஜன நல மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த சமுதாயத்தில் அடித்தளத்தில் சகல விதத்திலும் பின் தங்கிய நிலைமையில், நீண்டகாலமாக துவட்டப்பட்டு பின் அடைந்த சமூகத்தினர் இன்றைய தினம் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். இன்று அல்ல, நேற்று அல்ல, பல வருஷங்

[Srimathi Rajathi Kunchithapatham] [24th March 1958

களாக இந்த நாட்டில் ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக அந்த சமூகம் பின் அடைந்து வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சமூகத்தினருக்கு இந்த அரசாங்கம் பல விதத்திலும் சலுகைகள் காட்டி வருகின்றது. அதை நாம் பார்க்கிறோம். அரிஜனங்கள் பின்னடைந்து இருப்பதால் அவர்களுக்கு சகல விதமான வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறார்கள். எந்த விதமான சலுகைகள் அளிக்கப்பட்டாலும் அவைகளை அளிக்கும்போது அவர்களுக்குத்தான் முதல் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. அரிஜனங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகையை பார்த்தால் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களும் தாங்களும் அரிஜனங்களாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று எண்ணும்படியான அளவிற்கு அரிஜனங்களுக்கு முதல் சலுகை காட்டி விட்டு அதற்குப் பிறகு தான் மற்றவர்களுக்கு சலுகைகள் காட்டப்பட்டு வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும். ரோடு போடவேண்டும் . என்றுசொன்னால் அவர்களுக்குத்தான் முதல் சலுகை, கிணறுகள் வெட்ட வேண்டுமென்றால் அவர்களுக்குத்தான் முதல் சலுகை, படிப்பு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றால் அவர்களுக்குத் தான் முதல் சலுகை. குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றால் அவர்களுக்குத்தான் முதல் சலுகை. இப்படி அவர்களுக்கு எந்த வகையிலும் சலுகைகளை இந்த சர்க்கார் செய்து வருகிறார்கள். அந்தக் காலத்தில் சொன்னார்கள், அதாவது நந்தனார் காலத்தில் சற்று விலகி இரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்கிறாய் என்று. அந்தக் காலத்தில் நந்தனார் ஆண்டவனை தரிசனம் பண்ணவேண்டும் என்று சொன்னபோது சற்று விலகி இரும் பிள்ளாய் என்று ஆண்டவன் நந்தியை சொன்னார். பிறகு நந்தனார் தீக்குளித்து விட்டு மறு ஜன்மம் எடுத்து ஆண்டவனை தரிசிக்கச் சென்றான். தீக்குளித்த பிறகு நந்தனாருக்கு ஞான உதயம் ஆயிற்று. வழி மறைத்திருக்கிறதே என்று சொன்னான். அதற்கு கடவுள் நந்தியை சற்று விலகி இருக்கச் சொன்னார். பிறகு மறு ஜன்மத்தில் நந்தனாருக்கு மோட்சம் கிடைத்து கடவுளுடன் சேர்ந்தார் என்று சொல்லப்படுகிறது. அன்று கடவுளால் கூட அரிஜனங்களுக்கு உடனே கொடுக்க முடியாத சலுகைகளை இன்று ஒரே ஜன்மத்தில் காங்கிரஸ் சர்க்கார் அரிஜனங்களுக்கு செய்து கொடுக்க முடிகிறது. கடவுளாலும் செய்து கொடுக்க முடியாத காரியத்தை இந்த காங்கிரஸ் சர்க்கார். அரிஜனங்களுக்குச் செய்து கொடுக்கிறது. இப்படிப்பட்ட நன்மைகளை இந்த காங்கிரஸ் சர்க்கார் அரிஜனங்களுக்கு செய்து வருகிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது. அத்துடன்கூட இன்று பார்த்தால் தொட்டில் முதற்கொண்டு சுடுகாடு வரையிலும், கரு முதற்கொண்டு கல்லறை வரையிலும் அரிஜனங்களுக்கு சர்க்கார் பல சலுகைகளைக் காட்டி வருகிறார்கள். அவர்களுக் எவ்வளவு சலுகைகளைச் செய்ய வேண்டுமோ அவ்வளவு சலுகைகளையும்கு சர்க்கார் செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் அந்தச் சலுகைகள் அவர்களுக்கு சில சமயங்களில் பயனடையாமல் போய் விடுகின்றன. சர்க்கார் என்னசெய்தாலும் அவைகள் பூராவும் அரிஜனங்களுக்குப் போவதில்லை. சில குறைபாடுகள் இருக்கின்றன. வீடு கட்டும் திட்டம் என்று சர்க்கார் அமைத்திருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் யானை கொடுக்கிற நேரத்தில் அதற்கு உதவியாக தொரட்டி கொடுக்காமல் இருக்கிறார்கள். அதை ஒத்து இருக்கிறது இப்பொழுது அரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் உதவிகள். வீடுகள் கட்டுவதற்கு என்று ஒரு வீட்டிற்கு 750 ரூபாய் கொடுக்கிறார்கள். அதில் 550 ரூபாய் சர்க்கார் கொடுக்கிறார்கள். பாக்கி 200 ரூபாயை அரிஜனங்கள் போட்டுக்கொண்டு கட்டிக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த 200 ரூபாயை ஒரு அரிஜனாவது முழுசாக போட்டுக்கொண்டு கட்டிக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஒருவரிடமாவது முழுசாக 200 ரூபாயை கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு தரித்திர நாராயணர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால் பகல் பட்டினியாகவும் இரவு கொட்டாவியாகவும்தான் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் அவர்கள் இருக்கும்போது அவர்களிடமிருந்து எப்படி முழுசாக 200 ரூபாயை எதிர்பார்க்க முடியும். இப்பொழுது பல இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவைகள் எப்படி



24th March 1958] [Srimathi Rajathi Kunchithapatham]

இருக்கிறது என்றால் பச்சை செங்கலாலும், உளுத்த மரங்களாலும், உடைந்த ஓடுகளாலும், வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்படிக் கட்டியிருப்பதால் அவைகள் கூடிய சீக்கிரத்தில் விழக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இப்படியே தான் பல அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமையில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் நல்ல முறையில் அதிகாரிகளால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோளாறும் இல்லாமல் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் அப்படி கட்டிக் கொடுக்கவே இல்லை. மாதம் 25 நாட்கள் அவர்கள் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி 25 நாட்கள் அவர்கள் வேலை செய்தாலும் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத்தான் அவர்கள் சம்பாத்தியம் இருக்கிறது. இந்த நிலைமையில் அவர்கள் எப்படி இந்த 200 ரூபாயைக் கொடுக்கமுடியும் என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த 200 ரூபாயை அவர்களுக்குக் கடனாகக் கொடுத்து அந்தக் கடனை ஒரு வருஷத்திலோ அல்லது ஆறு மாதத்திலோ திருப்பி வாங்கிக்கொள்ளும்படியாக கடன் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி கடனாகக் கொடுத்து அவர்களிடமிருந்து பல தவணைகளாக வசூலித்துக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக பார்த்தால் நகரப்புரங்களில் அரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லை. இதைப்பற்றி பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதைப் போலவேதான் பல ஊர்களிலும் இருக்கின்றது. நகரப்புரங்களிலும் அதாவது முனிசிபாலிடிகளில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நகரப்புரங்களில் இருக்கும் [illegible] எந்த அளவிலும் கிராமப்புரங்களில் இருக்கும் அரிஜனங்களை[illegible] அதிகப்படியா[illegible] உயர்ந்த நிலைமையில் இல்லை. நகரப்புரங்களில் இருக்க[illegible]கூடியவர்[illegible] மாட மாளிகையிலும் கூடகோபுரங்களி[illegible] வசிக்கவில்லை. கிராமங்களிலுள்ளவர்கள் அரைப் பட்டினியா[illegible] இருந்தால் இவர்களும் அரை பட்டினியாகத்தான் இருக்கிறார்கள். [illegible] இவர்களுக்கு [illegible] வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் என் [illegible]க்கவில்லை என்று கேட்[illegible]. இந்த அடிப்படையில் சர்க்காருடைய [illegible]கையைப் பார்த்தால் ஒரு கண்ணில் வெண்ணையும் மற்றொரு [illegible] சுண்ணாம்பும் இருப்பது போல் கருதுவதாகத் தோன்றுகிறது. [illegible] பார்த்தால் ரொம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. இப்படிப்பட்ட [illegible] நிலைமை நகரப்புரங்களிலும் இருக்கிறது. ஆகவே ந[illegible]புரங்களில் இருக்கிறவர்களுக்கும் வீடு கட்டித் தரும் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தப்படியாக அரிஜனங்களுக்கு சம்பளம் வழங்கும் திட்டம். இதிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. "கானல் நீரை கவர்ந்து செல்லும் கால் நடை " போல, அதாவது தண்ணீர் வரப் போகிறது, வரப்போகிறது என்று நினைத்துக்கொண்டு கால் நடைகள் நடந்து நடந்து சென்று கடைசியில் தண்ணீர் இல்லாமல் ஏமாந்து போவது போல் இருக்கிறது அரிஜனங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது. இன்றைக்குப் பார்த்தால் அரிஜனங்களுக்கு சம்பளம் காலாகாலத்தில் கிடைப்பதாகவே இல்லை. 1956-ம் வருஷத்திற்கு கொடுக்க வேண்டிய சம்பளம் இன்னும் அதாவது 1957 ஆகியும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இப்பொழுது வருவதற்குக்கூட கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. இதைப்பற்றி பல தடவை இங்கே குறிப்பிடப்பட்டும் இன்னும் காலதாமதம் ஆகிக்கொண்டு வருகிறது. அவர்கள் கையிலுள்ள பணத்தைக் கொடுத்துவிட்டு இன்னும் அதைத் திருப்பிப் .பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். பலர் பணத்தை வட்டிக்கு வாங்கி விட்டு இன்னும் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வசித்து வருகிற குடிசைகளை விற்று, நகை நட்டுகளை விற்று, சொத்து சுதந்தரத்தை விற்று பள்ளிக்கூடங்களுக்கு சம்பளத்தைக்கட்டியிருக்கிறார்கள். பலர் கடன் வாங்கியும் சம்பளத்தைக் கட்டியிருக்கிறார்கள். அப்படி கடன் வாங்கி வட்டி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்கள் எவ்வளவு நாட்களுக்குத்தான் வட்டி கட்டிக்கொண்டிருக்க முடியும். அதனால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளப் பணத்தை காலா காலத்தில் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Srimathi Rajathi Kunchithapatham] [24th March 1958

அடுத்தப்படியாக தேவஸ்தானம் சம்பந்தமாக சிலவற்றை சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு அரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள், கிணறுகள் வெட்டிக்கொடுக்கிறார்கள், ரோடுகள் போட்டுக் கொடுக்கிறார்கள். இன்னும் பல விதமான சலுகைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி செய்யும்போது அதற்கெல்லாம் இந்த தேவஸ்தானம்களும் மடாலயங்களும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. தேவஸ்தான, மடாலய நிலங்கள் அவைகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் துலுக்கர்பட்டியில் அரிஜனங்கள் இருக்கிறார்கள். அடுத்தபடியாக நரியூத்து என்ற கிராமம் இருக்கிறது. அது இனாம் கிராமம் அல்ல. ஆனால் துலுக்கர்பட்டி இனாம் கிராமம். அந்த இனாம் கிராமத்தில் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. கிணறுகள் வெட்டுவதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. ஆனால் அடுத்துள்ள நரியூத்தில் கிணறுகள் வெட்டிக் கொடுத்தும் ரோடுகள் போட்டுக்கொடுப்பதற்கும் முடிகிறது. இனாம் கிராமமாக இருந்தால் அப்படி முடியவில்லை. இன்னும் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த இடமாக இருப்பதால் அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்ய முடியாமல் இருக்கிறது. அங்குள்ள மாணவர்கள் தாங்களாகவே முன் வந்து ஒரு ரோடு போட்டார்கள். அதன்மூலம் சர்க்காருக்கும் எவ்வளவோ பணம் செலவாயிற்று. அது இனாம் நிலமாக இருந்ததால் அந்த இடத்தை எடுத்துக்கொள்ள முடியாமல் போனதால் மாணவர்கள் போட்ட ரோடு மழையால் கரைந்து போய்விட்டது. அதன் பிறகு அங்கு ரோடு இல்லாமல் நடந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. ரோடு போடுவதற்கு முன்னதாகவாவது வண்டிகள் போகக்கூடிய நிலைமையில் இருந்தது. இப்பொழுது வண்டிகள்கூட போகமுடியாத நிலைமையில் இருக்கிறது. அங்குள்ளவர்கள் கால் நடையாகச் செல்ல வேண்டியதாக இருப்பதால் ரொம்பவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அங்குள்ளவைகள் இனாம் நிலமாக இருப்பதால் அதை ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. அதை ஆர்ஜிதம் செய்வதாக இருந்தால் சுமார் ஏழு அல்லது எட்டு வருஷங்களாகும் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அதனால் சர்க்கார் செலவு செய்தாலும் அதனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. இம்மாதிரி மாணவர்களுடைய உடல் உழைப்பு பிரயோசனம் இல்லாமல் போனதோடு சர்க்காருடைய பணம்கூட வீண் செலவாகியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட குறைகளை அகற்ற வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரியே கிணறுகள் வெட்ட வேண்டுமென்றாலும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே அரிஜனங்களுக்கு சொந்தமாக நிலம் கொடுக்கவேண்டும் என்றால் இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும். இப்படிப்பட்ட இனாம் நிலங்களை தேவஸ்தானங்களும், மடாதிபதிகளும் கொடுக்கவேண்டும் என்றாலும் அவர்களால் கொடுக்கமுடியவில்லை, அதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்று சொல்லுகிறார்கள். சர்க்கார் வாங்க வேண்டுமென்றாலும் அதுவும் முடியவில்லை. ஆகவே அவர்கள் விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரிஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைக்கும்போது இப்படிப்பட்ட நிலங்கள் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. இப்படிப்பட்ட முட்டுக்கட்டைகளை அகற்றி அவர்களுக்கு நன்மையை செய்யவேண்டும் என்றும் அதை காலா காலத்தில் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது "

என்று சொல்வதுபோல் நாம் செய்யக்கூடியது சிறிய நன்மையாக இருந்தாலும் சிறியவையாக இருந்தாலும் அதை காலா காலத்தில் செய்வது நன்று என்று சொல்லிக்கொண்டு இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

-40 n. * **Sri P. VEDAMANICKAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டிலே மராமத்து அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஹரிஜன மான்யத்தை ஆதரித்து வரவேற்று பேசுகிறேன். இந்த நாட்டிலே ஆயிரம் ஆண்டுகள் அல்ல, அதற்கு மேலாகவே இருந்து



24th March 1958] [Sri P. Vedamanickam]

வந்த கொடுமையான தீண்டாமை இப்பொழுது ஓரளவுக்கு மறைந்து கொண்டிருக்கிறது. நான் சிறுவனாக இருக்கும்பொழுது பள்ளிகளிலே மற்றவர்களோடு சேர்ந்து உட்கார்ந்து படிக்க முடியாது. இந்த நிலை மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படுகிறது, இருந்தாலும், மற்றவர்கள் சொல்லியபடி முழுவதும் தீண்டாமை ஒழியவில்லை, ஹரிஜன மக்கள் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல சட்டங்களை செய்தபோதிலும், நாட்டு மக்களுடைய மனம் மாறவில்லை என்றுதான் சொல்லுகிறேன். மனம் மாறுவதற்கு கொஞ்சம் காலம் செல்லும். ஏனென்றால் வெகு நாட்களாக ஊறிப்போன காரியமானது சீக்கிரத்தில் மாற முடியாது. இருந்தாலும் இப்பொழுது படிப்படியாக தீண்டாமை மறைந்து கொண்டிருப்பது பற்றி மிக சந்தோஷம். இன்னும் தீண்டாமை விஷயத்திலே அரசாங்கம் கடுமையான சட்டத்தை நிறைவேற்றவேண்டும்.

இந்த ஆண்டிலே ஹரிஜன நல மான்யத்திற்காக ரூ. 2,33,44,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய பிரகாசம் அவர்க்ள் காலத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். இப்பொழுது ஏறக்குறைய ஒரு கோடி 33 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இதை கண் நோக்கிப் பார்த்தால் நாளுக்குநாள் ஹரிஜனங்களுடைய அபிவிருத்தி முன்னுக்குத் தான் சென்றுகொண்டிருக்கிறது. என்னுடைய வட்டாரத்தில் இந்த ஆண்டில் விவசாயத்திற்காக ஏறக்குறைய ரூ. 2,30,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, 520 ஜதை மாடுகள் வாங்குவதற்கும், 30 கிணறுகள் வெட்டுவதற்கும், 40 மாணவர்களுக்கு கைத்தொழில் சாமான் கொடுப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஹரிஜன மாணவர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. இம்மாதிரி ஹரிஜனங்களுக்கு பல வசதிகள் செய்து தரப்படுகின்றன. ஹரிஜன மக்கள் இப்பொழுது அதிகமாக படிக்க ஆசைப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு சர்க்கார் இன்னும் பூரண உதவி செய்ய முடியவில்லை.

எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது குடியிருப்பு மனை வசதி. அதை எல்லா அங்கத்தினர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் டிபார்ட்மெண்டு கொஞ்சம் மந்தமாகத்தான் நடக்கிறது. என்னுடைய தாலூகாவிலே, நான் வேலை செய்த இடத்திலே 10 ஆண்டுகள் காலமாகியும் இதுவரையில் ஒரு வருஷத்தில் கூட மனைக் கட்டு கொடுக்கப்படவில்லை. இன்னும் சர்க்கார் அலுவலகத்தில் அதுபற்றி வேலை நடந்துகொண்டு வருகிறது. அதற்கு ஆசைப்பட்ட அநேக ஆத்மாக்கள் இன்று உலகத்தை விட்டே மறைந்துவிட்டன. இம்மாதிரி வேலைகள் துரிதமாக நடை பெறவேண்டுமென்றால் ஜில்லா வெல்பர் ஆபீஸருக்குக் கீழே 3 டெப்யூடி தாசில்தார்கள் நியமிக்கப்படவேண்டும். ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு தாசில்தார் போடவேண்டும். ஜில்லா வெல்பேர் ஆபீஸருக்கு ஜீப்கார் கொடுக்கவேண்டும். 2 பிர்கா 80 கிராமங்கள் உள்ள பிளாக் டெவலப்மெண்டு ஏரியாவுக்கு ஜீப்கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு வேலை அதனால் துரிதமாக நடைபெறுகிறது. ஆகவே, ஏறக்குறைய 1,500 கிராமங்கள் கொண்ட ஒரு வட்டாரத்திற்கு அதிகாரியாக இருப்பவர் வாகனம் இல்லாமல் சொந்தக் காரிலோ அல்லது பஸ்ஸிலோ சுற்ற வேண்டுமென்றால், வேலை துரிதமாக நடப்பதில்லை. அதனால் அவர்களுக்கு மற்ற காரியங்களை சரிவர செய்யமுடியாமல் போய் விடுகிறது. ஆகவே ஒவ்வொரு வெல்பர் ஆபீஸருக்கும் ஒரு ஜீப்கார் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியில்லாவிட்டால் ஹரிஜன நலனுக்காக ஒதுக்கப்படும் பணம் வீணாக செலவழிக்கப்படும். காரணம் ஒரு வெல்பேர் ஆபீஸர் கார் இல்லாமல் 7, 8 தாலூக்காக்களை சுற்ற வேண்டுமென்றால், மற்ற வேலைகளை ஒழுங்காக செய்ய முடியவில்லை. மேலும் வெல்பர் ஆபீஸர்கள் பள்ளிக்கூட நிர்வாகம் முதலிய எல்லா வேலைகளையும் சேர்த்து கவனிப்பது என்றால் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் இரண்டு தாலூகா கொண்ட ஒரு டிவிஷனுக்கு ஒரு டெப்யூடி தாசில்தார், 2 ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை போட்டால் வேலைகள் சீக்கிரமாகவும் ஒழுங்காகவும் நடக்கும். சிதம்பரம் தாலூகாவில் அப்படிச் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலும் அம்மாதிரி செய்திருப்பதாக கேள்விப்படுகிறேன். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள

[Sri P. Vedamanickam] [24th March 1958

வெல்பேர் ஆபீஸருக்கு ஒரு ஜீப்கார் கொடுத்து, ஒரு டிவிஷனுக்கு டிப்டி தாசில்தாரையும் நியமித்தால், மனைக்கட்டு கொடுக்கும் வேலை சீக்கிரமாக நடைபெறும்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனைக்கட்டு அளிக்கப்படவேண்டுமென்று எங்கும் எல்லா கட்சியினர்களாலும், எல்லா மேடைகளிலும் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அது வாயளவில்தான் இருக்கிறது. பேப்பர் அளவில்தான் இருக்கிறது. ஏறக்குறைய 100-க்கு 90 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் இல்லை. அவர்கள் நிலம் இல்லாமல் கூலி வேலை செய்து காலம் தள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு நிலம் அளிக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் லட்சக்கணக்கான ஏக்கர்கள் நிலம் தரிசாகக் கிடக்கின்றன. அவைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா செய்து கொடுக்கலாம். இன்னும் அநேக ஏக்கர் நிலங்கள் புறம்போக்காக இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களை சர்க்கார் இவர்களுக்கு கொடுக்க மறுக்கிறது. காரணம், சர்க்காருக்கு அவைகள் வேண்டியிருக்கலாம் என்பதுதான். ஆனால் சில கண்டிஷன்ஸ் போட்டு குறிப்பிட்ட காலத்திற்காவது அவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை அளிக்கலாம். அப்படிச் செய்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற முடியும். அப்படியில்லாமல் கொஞ்சம் ஹரிஜன மாணவர்களுக்கு படிப்பதற்கு சலுகைகள் கொடுத்துவிட்டால் மட்டும், ஹரிஜன மக்கள் முன்னேற முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தலைக்கு 1 ஏக்கர் நஞ்சையும், அல்லது 2 ஏக்கர் புஞ்சையாவது கொடுக்க வேண்டும். தஞ்சாவூர், சிதம்பரம் குத்தகை வாரச் சட்டம் அமுலில் இருக்கிறது. அதனால் ஒரு ஆளுக்கு அங்கே ரூ. 1–4–0 கூலி கிடைக்கிறது. ஆனால் மற்ற 7 தாலூக்காக்களில் ஒரு ஆளுக்கு 8 அணாவும், பெண்ணுக்கு 6 அணாவும் கூலி கிடைக்கிறது. இது மிகவும் மோசமான கூலி. மிராசுதார்களை அணுகி கேட்டாலும், ஸ்டிரைக் செய்தாலும் ஒன்றும் முடியாது. ஏனென்றால் அந்த வட்டாரங்களில் சட்டம் அமுலில் இல்லை. ஆகவே, 1959 டிசம்பருக்குள் இந்த மாநிலம் முழுவதற்கும் ஒரேவிதமான கூலியை நிர்ணயிக்கவேண்டும். சிதம்பரம் போன்ற இடங்களிலுள்ள கூலி கிடைக்காவிட்டாலும், அவர்கள் ஜீவனத்துக்கேற்ற கூலியாவது கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது படித்த அநேக ஹரிஜன மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உண்மையிலே இவர்களுக்கு கல்விச் சலுகைகள் கொடுத்துவிட்டு, வேலை கொடுக்காமல் இருந்தால் பிரயோஜனம் இல்லை. என்னுடைய விடுதியிலே படித்த மாணவர்கள், எம்.ஏ., பி.ஏ. படித்தவர்கள் வேலைதேடித்தரும் ஸ்தாபனத்தில் ரெஜிஸ்டர் செய்து கொண்டிருந்தும், வேலையில்லாமல் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சர்க்கார் எவ்வளவு தூரம் கல்விச் சலுகைகள் அளிக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு உத்தியோகம் வழங்குவதிலும் சலுகை அளிக்கவேண்டும். இந்த மாநிலத்தில் ஏறக்குறைய 140 டெவலப்மெண்டு பிளாக்குகளுக்கு மேல் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களோ அல்லது ஹரிஜன மக்களோ பிளாக் டெவலப்மெண்டு ஆபீஸர்களாகவோ அல்லது வேறு உத்தியோகஸ்தர்களாகவோ நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்று பார்த்தால் மிகவும் சொல்பம்தான். அபிவிருத்தி வட்டாரங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவசியம் வேலை கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால்தான் அவர்கள் கையை தூக்கிவிட முடியும்.

குடிதண்ணீர் திட்டம் ஒவ்வொரு தாலூக்காவிலும் பஞ்சாயத்து கிராமங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய தாலூகாவில் முதலை, மங்கலம்பேட்டை, பெண்ணாடம் திட்டக்குடி முதலிய கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி விஸ்தரிக்கப்படவில்லை. நகரங்களிலும், பஞ்சாயத்துகளிலும் உயர் ஜாதி மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குமட்டும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்துவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் சேரிகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்காமல் இருப்பது ஜனநாயக ஆட்சியில் பொறுத்தமாக இருக்காது. குறிப்பாக பஞ்சாயத்து போர்டு பிரதேசங்களில் உள்ள ஹரிஜன. காலனிகளுக்கு குடி தண்ணீர் கிடைப்பதற்கு "ஓவர்ஹெட் டாங்க்" கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



24th March 1958] [Sri P. Vedamanickam]

எல்லாவற்றிற்கும் மேலாக, தாழ்த்தப்பட்ட மக்களை போலீஸ் அதிகாரிகள் மிகவும் கேவலமாக மதிக்கிறார்கள். இதனால் நான் அரசாங்கத்தை எதிர்த்துப் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. அம்மாதிரி நிலை இருக்கிறது. என் தொகுதியில் ஏந்தல் சேரியை உயர்ஜாதி மக்கள் கொளுத்திவிட்டார்கள். ஆர்.டி.ஓ., டி.டபிள்யூ.ஓ. இவர்களோடு நானும் போய் நேரில் பார்த்தேன். ஆனால் சப்-இன்ஸ்பெக்டர் அந்த இடத்திற்கே வரவில்லை, அதுபற்றி மந்திரி அவர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். ஆனால் சப்-இன்ஸ்பெக்டர் ஒன்றுமில்லை என்று ரிபோர்ட் கொடுத்துவிட்டதாக தெரிகிறது. பேப்பரும் குளோஸ் ஆகிவிட்டது. அதே மாதிரி நெய்வாசல் சேரியில் ஒரு வீட்டையும், போரடியையும் கொளுத்திவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் ரிபோர்ட் கொடுத்தால் அதை சப்-இன்ஸ்பெக்டர் கவனிப்பதே இல்லை. நான் சொன்னால் கூட மதிப்பதில்லை. சர்க்கார் இம்மாதிரி நடைபெறுமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விஷயத்தை கவனிக்காவிட்டால் இந்த இடங்களிலெல்லாம் முதுகளத்தூர் ஆகிவிடும். இம்மாதிரி செய்தால் அங்குள்ள சப்இன்ஸ்பெக்டர் பேரிலும், போலீஸ் அதிகாரிகள் பேரிலும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபா 11.50 a.m.
நாயகர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் மானியத்தின் பேரில் நான் பேசுவது ஒருசில ஹரிஜன அங்கத்தினர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஹரிஜன முன்னேற்ற மானியத்துடன் பிற்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கான மானியத்தையும் அரசாங்கத்தார் சேர்த்திருப்பதால், இந்த சந்தர்ப்பத்தில் பேச முன்வந்திருக்கிறேனே தவிர, ஹரிஜனங்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகவோ அவர்களுக்கு உரிமைகள் அளிக்கும் சர்க்காருக்கு குறுக்கே நிற்பதற்காகவோ நான் பேச முன்வரவில்லை என்று முதலில் சொல்லிக்கொள்கிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக சென்ற ஆண்டு அரசாங்கத்தார் 194 லட்ச ரூபாய் மானியம் ஒதுக்கினார்கள்; இந்த ஆண்டு அதைவிட அதிக மானியம் ஒதுக்க முன்வந்திருக்கிறார்கள். அதாவது இந்த ஆண்டு 233 லட்ச ரூபாய் ஒதுக்க முன்வந்திருக்கிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக அரசாங்கம் எதை எதையெல்லாம் செய்துவருகிறது என்பதை என்னை விட நன்றாக ஆளும் கட்சியைச் சேர்ந்த இதர அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை கனம் அங்கத்தினர்கள் கேட்டும் இருக்கிறார்கள். எந்தெந்த துறைகளில் எவ்வளவு எவ்வளவு பணம் செலவழிக்க முடியுமோ அவ்வளவு பணத்தை அந்தந்தத் துறைகளில் செலவழிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஹரிஜனங்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்ற ஆவேசத்தோடும் ஆர்வத்தோடும் இந்த அரசாங்கத்தார் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது, மறக்கவும் கூடாது. ஹரிஜன முன்னேற்றத்திற்காக நிறையப் பணம் செலவு செய்துவரும் இந்த அரசாங்கத்தார் பிற்பட்ட இனத்தவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் பணம் ஒதுக்கிச் செலவழித்து வருகிறது. ஆனால் பல ஹரிஜனங்களுக்கு ஒரு பயம் இருக்கிறது. ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்திலிருந்து தொகைகளை பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசாங்கத்தார் கொடுத்து விடுகிறார்களோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். சில எதிர்கட்சி கனம் அங்கத்தினர்கள் போடும் குழப்பமான கேள்விகளிலிருந்து இந்த பயத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஹரிஜனங்களுக்காக தனித் தொகையும் பிற்பட்ட இனத்தவர்களுக்காக வேறு தனித் தொகையும் ஒதுக்கப்படுகின்றன என்றும், ஹரிஜனங்களுக்கான தொகையில் ஒரு பகுதியும் பிற்பட்டவர்களுக்காக செலவழிக்கப்படுவதில்லை என்றும், பிற்பட்டவர்களுக்கான தொகையில் ஒரு பகுதியும் ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்படுவதில்லை என்றும் கனம் அமைச்சர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஹரிஜனங்களுக்காக சென்ற ஆண்டு 150 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது; இவ்வாண்டு 220 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது; சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதை விட 70 லட்ச ரூபாய் அதிகமாக இவ்வாண்டு ஒதுக்கப்படுகிறது. பிற்பட்ட இனத்

தவர்களுக்காக சென்ற ஆண்டு 22 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது; இவ்வாண்டு 12 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்படுகிறது; இவ்வாண்டு பிற்பட்டவர்களுக்கு குறைவாக ஒதுக்கப்படுகிறது. ஹரிஜன மக்களின் தொகை எல்லாப் பிற்பட்ட வகுப்பினரின் மொத்தத் தொகையையும் விடக் குறைவாகத்தான் இருக்குமே தவிர அதிகமாக இருக்காது. அப்படிப்பட்ட பிற்பட்ட வகுப்பினருக்கு, சென்ற ஆண்டு ஒதுக்கியதைவிட குறைவாக பணம் இவ்வாண்டு ஒதுக்கப்படுகிறது. பிற்பட்ட இனத்தவர் பிரிவில் எத்தனையோ ஜாதிகள் வருகின்றன. காகா கலேல்கர் குழுவினர், இரு நிலைமைகளைக் குறிப்பிட்டு அந்த இரு நிலைமைகளில் உள்ளவர்களைத்தான் பிற்பட்ட இனத்தவர்களாகக் கருத வேண்டுமென்று கூறினார்கள். அந்த இரு நிலைமைகள் "ஸோஷல் டிஸபிலிடி" என்பதும் "இகனமிக் பாக்வர்ட்னெஸ்" என்பதும் ஆகும். அதாவது பிற பிரிவினரால் இழுக்கு உண்டாக்கப்பட்டு அதன் விளைவாக சமுகத்தில் தாழ்ந்த அந்தஸ்தில் இருப்பது ஒரு நிலைமை; பொருளாதாரத் துறையில் தாழ்வுற்றிருப்பது மற்றொரு நிலைமை. "பாக்வர்ட், மோர் பாக்வர்ட், மோஸ்ட் பாக்வர்ட்" என்ற வெவ்வேறு விதமான பிற்பட்ட நிலைகளிலிருக்கும் ஜாதியினர் "ஏ, பி, சி" என்ற மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். காகா கலேல்கர் கமிஷனில் நானும் ஒரு அங்கத்தினராக இருந்ததால் இதுபற்றி எனக்கு விளக்கமாக தெரியும். அந்தக் கமிஷனின் யோசனைகள் பார்லிமெண்டால் இன்னும் அங்கீகரிக்கப்படாததால் அவை பூராவும் இன்னும் அமலுக்கு வரவில்லை. அந்தக் காரணத்தால், இப்போது, மிகவும் பிற்பட்ட இனத்தவர்கள் என்று எங்களால் குறிப்பிடப்பட்டவர்கள் மிகவும் பிற்பட்ட இனத்தவர்களாக எடுத்துக்கொள்ளப்படாமல் அவ்வளவு பிற்பட்டவர்களாக இல்லாத வேறு இனத்தவர்கள் மிகவும் பிற்பட்ட இனத்தவர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறார்கள். இதை கனம் அமைச்சரின் கவனத்திற்கு நாங்கள் அடிக்கடி கொண்டு வந்திருக்கிறோம். மத்திய சர்க்காருக்கு எழுதி நாங்கள் சொல்கிறபடி செய்வதாக கனம் அமைச்சரும் வாக்குறுதி அளித்திருக்கிறார். அவ்வாறு கனம் அமைச்சர் வாக்குறுதி அளித்திருக்கும்போது, பிற்பட்ட இனத்தவர்களுக்கான தொகை சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதில் பாதியாக இவ்வாண்டு குறைக்கப்படுவதற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். பிற்பட்ட இனத்தவர்களின் நிலைமையை அரசாங்கம் புரிந்து கொள்ளாததால், அந்தத் தொகையை அரசாங்கம் குறைக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், பிற்பட்டவர்கள் ஓரளவு முன்னேற்றமடைந்து விட்டார்கள் என்று கருதி அவ்வாறு அரசாங்கம் குறைக்கிறதா? இப்போது இவ்வளவு தொகை போதும் என்று கருதி அரசாங்கம் அதை அவ்வாறு குறைக்கிறதா? ஹரிஜனங்களுக்கு படிப்பிற்காக மாத்திரமின்றி மற்ற காரியங்களுக்காகவும் அரசாங்கம் நிதி உதவி அளிக்கிறது. மனைக் கட்டுகள், கிணறு வெட்டுதல், ஹாஸ்டல்கள் ஆகிய எல்லாவற்றிற்குமாகத்தான் ஹரிஜனங்களுக்கு அரசாங்கத்தார் 233 லட்ச ரூபாய் மானியம் அளிக்கிறார்கள். ஆனால் பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தில் 3/4 பங்கு படிப்பிற்காகத்தான் செலவழிக்கப்படுகிறது. "ரெக்லமேஷன் ஆப் கள்ளர்ஸ் அண்ட் கொரவர்ஸ்" என்பது போன்ற காரியங்களுக்காக ஒரு சிறிது தொகை செலவழிக்கப்படுகிறதே தவிர மற்றெல்லாத் தொகையும் ஸ்காலர்ஷிப்பிற்காகத்தான் செலவழிக்கப்படுகிறது. அதிகமான பிற்பட்ட இனப் பிள்ளைகள் ஸ்காலர்ஷிப் கேட்டிருந்தும்கூட அவர்களுக்கு அது கிடைக்காமலிருப்பதற்குக் காரணம், மானியத் தொகை பற்றாக்குறையாக இருப்பதுதான் என்று நினைக்கிறேன். மற்ற இலாகாக்களில் செலவழிக்கப்படுவதைவிட 82 சத விகிதம் அதிகமான பணம் ஹரிஜன நல இலாகாவில் செலவழிக்கப்படுகிறது என்று அறிகிறேன். ஆகவே ஹரிஜன மக்களையும் பிற்பட்ட இனத்தவர்களையும் குறுகிய காலத்தில் முன்னேற்றமடையச் செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்காக அதிகமான பணம் ஒதுக்க வேண்டுமென்ற ஆர்வமும் ஆவேசமும் அரசாங்கத்தாருக்கு இருப்பதை உணருகிறேன். இந்தத் தொகைகளை சரிவரச் செலவழித்து அவர்களை சீக்கிரம் முன்னேற்றமடையச் செய்தால்தான் அதற்குப் பிறகு மற்ற வளமளிக்கும் திட்டங்களை ஆரம்பித்து நிறைவேற்ற முடியும். இந்த நிலையில் பிற்பட்ட இனத்தவர்களுக்கு இவ்வாண்டு குறைவான பணம் ஒதுக்கப்பட்டதற்கு கனம் அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, திருத்தப்பட்ட மதிப்பீடுகளில், பிற்பட்ட இனத்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 22 லட்ச ரூபாய் தொகையில் சென்ற ஆண்டு 12 லட்ச ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாக்கித் தொகையை இந்த மார்ச்சு மாத முடிவிற்குள் இலாகாவினர் செலவழித்து விடுவார்கள் என்று அரசாங்கம் எண்ணுகிறதா? இல்லா விட்டால், இலாகாவினர் மொத்தத் தொகையையும் மீதமின்றி செலவழிக்கத் தவறி விட்டனர் என்றே கருதுகிறதா? இது எனக்கு சரியாக விளங்கவில்லை. செலவழிக்கப்பட்டது 12 லட்ச ரூபாய் என்று குறிப்பிட்டால், பாக்கித் தொகை என்ன ஆனது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக்கணக்கில் குற்றம் இருக்கிறதா? குற்றம் இருக்குமானால் அது என்ன குற்றம் என்று கனம் அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு விஷயம் புரியாமல் இருக்கலாம். புரிய வைத்தால் மகிழ்ச்சியுடன் புரிந்துகொள்வோம் என்று கனம் அமைச்சருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதம் பே அண்ட் அக்கௌண்ட்ஸ் ஆபீஸில் ஏற்படுகிறது. அந்த ஆபீஸிலிருந்து அங்கீகாரம் மிகவும் தாமதித்து வருகிறது. அந்த ஆபீஸில் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் கூட அங்கீகாரம் கொடுப்பதில்லை. அதற்கும் மேல் தாமதிக்கிறார்கள். அதுவரையில் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பணம் கொடுக்காத வரையில் பிற்பட்ட இன மாணவர்கள் எவ்வாறு சம்பளம் கட்ட முடியும்? அவ்வளவு வசதியுள்ளவனாக இருந்தால் இவன் ஏன் பிச்சைக்கு வருகிறான்? சம்பளம் கட்ட வக்கில்லாமல் தானே பிச்சைக்கு வருகிறான்? இவனுக்கு ஸ்காலர்ஷிப் பணம் பிறகு வந்து சேரும் என்று நம்பி இவனுக்கு எவனாவது பணம் கடன் கொடுக்கிறானா? அதுவும் இல்லை. இந்த நிலையில், மாணவன் புழுவாகத் துடித்து அவன் உயிரே ஊசலாடிக்கொண்டிருக்கும்போதுதான் அவனுக்கு பணம் போய்ச் சேருகிறது. மார்ச் மாதம் வந்து விடுகிறது. அவன் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குப் போக வேண்டும். அதற்குள் சம்பளத்தைக் கட்டுவதற்கு அவன் கடன் வாங்கியிருக்கிறானோ என்னமோ, தெரியாது; கடன் கொடுத்த எத்தனைபேர் அவன் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறார்களோ, தெரியாது. இதற்கு, ஹரிஜன இலாகாவின் பேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஸ்காலர்ஷிப் விண்ணப்பங்களை அங்கீகரிப்பதில் பே அண்ட் அக்கௌண்ட்ஸ் ஆபீஸில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க வேண்டும். ஹரிஜனங்களின் விண்ணப்பங்களை அந்த ஆபீஸில் "எமெர்ஜெண்ட்"-ஆக கவனிக்கவேண்டுமென்று அந்த ஆபீஸருக்கு அரசாங்கத்தார் உத்தரவு போடவேண்டும். எப்படியாவது ஹரிஜனங்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் பணம் துரிதமாகக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஸ்காலர்ஷிப் விஷயத்தில் இன்னும் சில சங்கடங்கள் இருக்கின்றன: இந்த அரசாங்கத்தார் பணம் கொடுக்காவிட்டால் இந்திய அரசாங்கத்தார் பணம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதன் காரணமாகவும் தாமதம் ஏற்படுகிறது. தாமதத்தின் காரணமாக பிள்ளைகளின் படிப்பு கெடுகிறது. ஹரிஜனங்களுக்காகவும் பிற்பட்ட இனத்தவர்களுக்காகவும் அரசாங்கத்தார் எத்தனையோ லட்சம் ரூபாய் செலவழிக்கிறது. இவ்வளவு பணம் செலவழிக்கும்போது அந்தப் பணத்தின் பயனை அவர்கள் காலா காலத்தில் அடையமுடியாததால், அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வருகிறது. ஆகவே ஸ்காலர்ஷிப்புகளும் மற்ற நிதி உதவிகளும் இவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்கும்படி சர்க்கார் செய்யவேண்டும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். பலர் ஹரிஜன நல இலாகா ஆபீசிற்கு சென்று சிப்பந்திகளை அடிக்கடி பார்த்து அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கிறார்கள். இது எனக்கு நேரிடையாகத் தெரியும். நான் ஒரு தடவை அந்த ஆபீஸிற்குப் போக வேண்டியிருந்தது. அங்கே சென்று பலர் அங்குள்ள சிப்பந்திகளிடம் "எனக்கு ஸ்காலர்ஷிப் அனுமதிக்கப்பட்டு விட்டதா?" 'என்று அடிக்கடி கேட்கிறார்கள். இவ்வாறு சாதாரண சிப்பந்திகளுக்கு அடிக்கடி தொல்லை கொடுக்கிறார்கள். இதன்

காரணமாக ஒரு தடவை ஒரு சிப்பந்திக்கும் ஒரு மாணவருக்கும் குத்துச் சண்டை ஏற்பட்டது. அது சம்பந்தமாக இந்த சபையிலுள்ள ஒரு கனம் அங்கத்தினர் நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சி சொல்ல வேண்டியிருந்தது. கனம் அங்கத்தினர்களோ மற்றவர்களோ அந்த ஆபீஸிலுள்ள சாதாரண சிப்பந்திகளுக்கு தொல்லை கொடுக்கக்கூடாது. ஏதாவது விசாரிக்க வேண்டுமானால் நேரே டைரக்டரிடமோ, பி.ஏ.-யிடமோ சென்று பேசலாம். சாதாரண சிப்பந்திக்கு ஏற்பட்ட தொல்லையின் விளைவாக நடந்த குத்துச் சண்டையைப் பற்றி குறிப்பிட்டேன். 'To discuss the discourteous behaviour of the Director and the department.' என்று குறிப்பிட்டு இந்த சபையில் ஒரு வெட்டுப் பிரேரபணை வந்தது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். மேலும் "discourteous" என்ற வார்த்தையை அதில் ஏன் போட்டார்கள் என்று தெரியவில்லை. அர்த்தத்தை சரிவர கவனிக்காமல் அந்த வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்போது ஹரிஜன நல இலாகா பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. அந்த இலாகாவை எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். 1951–52-ல் எல்லாம் ஹரிஜன நல இலாகா என்றால் என்ன என்று பலருக்குத் தெரியாது.

**Sri A. GOVINDASAMY** : கனம் உப தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணையை "மூவ்" பண்ணாமல் இருக்கும்போது, அதைக் குறித்து சட்ட சபையில் பேசலாமா என்று தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER** : வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருந்து, வெட்டுப் பிரேரணை "சர்க்குலேட்" செய்யப்பட்டது. அது கனம் அங்கத்தினர்களுக்கு "சர்க்குலேட்" செய்யப்பட்ட பிறகு, சபையில் அதை "மூவ்," பண்ணாவிட்டாலும், அதைப்பற்றி பேசலாம்.

**Srimathi T. N. ANANDANAYAKI** : ஆகையால், இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் இது ஓரளவு நன்றாக நடந்து வருகிறது. அதை முன்னேற்றத்திற்குக் கொண்டு போக வேண்டுமானால், கனம் அமைச்சர் அவர்கள் பிற்பட்ட இனத்தவர்களுடைய நலத்திற்காக அதிகமாக தொகை ஒதுக்கி நல்ல முறையில் இந்த இலாகா செயல்பட உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

I only referred to one of the cut motion. I went through. It may pertain to this incident because I was there.

**DEPUTY SPEAKER** : I will answer. The hon. Member need not answer. They have been circulated and so the Members are at liberty to refer to them.

***Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உப சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஜெகன்னாதன் அவர்கள் பிரேரேபித்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். (இத்தருணத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் தலைமை வகித்தார்) இப்பொழுது ஹரிஜன முன்னேற்றத்தைப்பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் மிக தெட்டத் தெளிவாக அதில் இருக்கும் குறைபாடுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். "எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் எப்பொழுதும் எதிர்ப்பாட்டுத்தான் பாடிக்கொண்டிருப்பார்கள் ; நல்லது இருப்பதை அவர்களால் பார்க்க முடியாது" என்று சொல்லலாம். ஆனால், நான் சொல்லுகிறேன். எல்லோரும் ஒரே பாட்டைத்தான் பாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று. ஆனால், ஒரு வித்தியாசம் இருக்கிறது. எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள், "நாங்கள் எதிர்க்கிறோம்" என்று சொல்லிவிட்டு அதில் இருக்கும் குறைபாடுகளை எடுத்துச் சொல்வார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், "நாங்கள் மனமார வரவேற்கிறோம்" என்று சொல்லி, அவர்கள் தொகுதியிலே இருக்கும் கோரிக்கைகளை முழுக்க முழுக்க எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால்,





அதை முழுக்க முழுக்க மனதார ஆதரித்து, அதில் எந்தக் குறைபாடும் கிடையாது என்று சொன்னவர்கள் ஒருவரும் கிடையாது. இதைத்தான் நாம் பார்க்கிறோம்.

ஆகவே, இப்பொழுது உண்மையிலேயே ஹரிஜன முன்னேற்றத்திற்காகவேண்டி, சர்க்கார் ஓரளவு ஏதோ பணத்தை ஒதுக்கி நல்லது செய்யக் கூடிய அளவுக்கு செய்து வருகிறார்கள் என்பதைப் பொறுத்தவரையிலே வரவேற்கக்கூடியதுதான். ஆனால், சாகும் தருவாயிலிருக்கும் ஒருவனுக்கு பால் சோறு கொடுக்கிறேன் என்று சொல்வதைப்போல், "அதைத் கொடுத்தோம் ; இதைக் கொடுத்தோம்" என்று சொல்வதிலே பிரயோஜனம் இல்லை. உண்மையிலேயே ஆயிரக்கணக்கான வருஷங்களாக அவர்கள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். மனித சமுதாயத்திற்கு ஜீவநாடியாகவும், முதுகெலும்பு போலவும் இருந்து, உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். ஜனங்களுக்கு நோய் நொடி ஏற்படாமல் காப்பாற்றக்கூடிய சுகாதார தொழிலாளர்களாக இருப்பவர்களும் தாழ்த்தப்பட்டவர்கள்தான். இதுபோன்ற பல துறைகளிலே மனித சமுதாயத்திற்கு பாடுபடக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லும் அதே நேரத்தில் அவர்களுடைய வாழ்க்கை ஒதுக்குப் புறங்களிலும், மரத்தடியிலும், சாக்கடை ஓரங்களிலும் இருக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது.

நாம் இங்கே குறை கூறுவது டைரக்டர் திருவாளர் முத்திருளாண்டியை அல்ல. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் ? அது போல நாம் இங்கே எந்த அளவுக்கு பணம் ஒதுக்குகிறோமோ அந்த அளவுக்குத் தான் அவர் அங்கே பணம் கொடுப்பார். அதுபோல்தான் நாம் கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களைப்பற்றி குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. அவர் என்ன செய்வார் ? அவரும் இதற்காக பணம் நிறைய ஒதுக்கவேண்டுமென்று போராடலாம். ஆனால், அங்கேகூட செல்வாக்கு படைத்த அமைச்சர்கள் "நீங்கள் கேட்பது சரியில்லை" என்று அவரை அப்படியே அமுக்கி உட்கார வைக்கலாம். அந்த அளவுக்கு காபினெட்டிலே இருக்கலாம். இம்மாதிரி சூழ்நிலை, ஏற்றத்தாழ்வு, பாகுபாடு ஒவ்வொரு துறையிலும் காபினெட்டில் மட்டுமல்லாமல் கிராமத்திலும் மற்ற துறைகளிலும் இருந்துகொண்டு வருகிறது. இந்த நிலைமையிலே இன்றைக்கு ஹரிஜனங்கள் முன்னேறக்கூடிய தன்மையிலே இருக்க வேண்டுமானால், ஏதோ சில பணத்தை ஒதுக்கிவிட்டு, அதன் மூலமாக அவர்கள் முன்னேறிவிடுவார்கள் என்று நினைத்தால் அதற்கு இன்னும் எத்தனை நூற்றுக்கணக்கான வருஷங்கள் ஆகுமோ என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. ஆனால், இந்த அளவு பணம் ஒதுக்கவில்லையென்றாலும் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக வேண்டி, அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காக வேண்டி, சர்க்கார் உடனடியாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, இன்றைக்கு சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும் லட்சக்கணக்கான தரிசு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 5 அல்லது 10 ஏக்கர் வீதம் கொடுத்து அதன் மூலமாக விவசாயம் செய்யக்கூடிய அளவுக்கு வசதி செய்து கொடுத்தால், இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுங்கள், உத்தியோகங்கள் கொடுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் விவசாயத் துறையில் பாடுபட்டு, பெரிய அளவுக்கு முன்னேறி வந்து, அவர்களை மற்றவர்கள் நம்பி வாழக்கூடிய அளவுக்கு முன்னேறி வர முடியும்.

ஆனால், இன்றைக்கு உள்ள நிலைமை என்ன ? இருப்பதற்கு வீடு இல்லை, என்ற நிலைமை பல இடங்களில் இருக்கிறது. நூற்றுக்கணக்கான மனுக்களும், கம்ப்ளெயிண்டுகளும் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு தரிசு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அந்த இடத்திலிருந்து விரட்டியடிக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. அது மட்டும் அல்ல. இன்னும் பல கிராமங்களிலே அவர்கள் 15 முதல் 40 வருஷங்கள் வரை விவசாயம் செய்துகொண்டிருந்தாலும், மேடு பள்ளங்களைத் திருத்தி, பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தாலும் அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருந்ததற்காக நூற்றுக்

கணக்கான ரூபாய் அபராதம் விதிப்பது மூலமாக அவர்கள் பேரில் அடக்கு முறை கொண்டுவருவதும், அந்த நிலத்தைவிட்டு ஓட்டக்கூடிய அளவுக்கு
12-30 p.m. நிலைமை இருக்கிறது. அந்தத் தரிசு நிலங்கள்கூட குட்டைப் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு என்று நூற்றுக்கணக்கான புறம்போக்குகள் இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இன்றைக்கு உயர்ந்த ஜாதி என்று சொல்லக்கூடியவர்கள் அதே புறம்போக்கிலே விவசாயம் செய்கிறார்கள் என்றால், பத்து வருஷம் விவசாயம் செய்துகொண்டிருந்தால்கூட உடனே பட்டா செய்யப்படுகிறது. அதே புறம்போக்கில் தாழ்த்தப்பட்டவர்கள், 20 வருஷம், 30 வருஷம் விவசாயம் செய்துகொண்டிருந்தால்கூட விரட்டப்படு கிறார்கள். இம்மாதிரி நிலைமை இருக்கிற காரணத்தால் உடனடியாக உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், இன்றைக்கு, தனிப்பட்டவருக்கு சொந்த நிலமாக இருந்தாலும் சரி, இனும் ஜாகாவாக இருந்தாலும் அது புறம் போக்கு நிலமாய் இருந்தாலும் சரி, கோயில் மான்யமாக இருந்தாலும் சரி அதில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறவர்களை அதிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாதென்று சட்டம் கொண்டுவந்திருக்கவேண்டும். உடனடியாக நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து தரிசு நிலங்களை பட்டா செய்யக்கூடிய அளவு சர்க்கார் கொடுப்பதற்கு முன்வந்தால் உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்னையை நாம் தீர்த்தவர்கள் ஆவோம். அதுவும் அரசாங் கத்தார் இன்றைக்கு ஹரிஜன மக்களுக்காக வேண்டி ஹாஸ்டல்கள் திறப்ப தாக சொல்லப்படுகிறது. அதிலுங்கூட இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ளக்கூடிய தன்மையிலேதான் இது உபயோகப்படுத்தப் படுகிறது என்பதை இந்த நேரத்தில் பலமாக சொல்ல ஆசைப்படுகிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், எங்கெல்லாம் ஹாஸ்டல் இருக்கிறதோ அங்கெல்லாம் காங்கிரஸ்காரர்களை மட்டிலும்தான் அந்தக் கமிட்டியில் போடப்படுகிறது. மற்றவர்களைப் போடுவதற்கு எதற்காக பயப்படுகிறார்களோ தெரியவில்லை. அந்த அளவு நிலைமையைப் பார்க்கும்போது நாம் எதைப் பார்க்கவேண்டியிருக்கிறது ? உண்மையிலேயே கட்சியை வளர்ப்பதற்கு அதைக் கருவியாக உபயோகப்படுத்துகிறார்கள். அதேபோல் தாழ்த்தப் பட்டவர்கள் பல இடங்களில் ஹாஸ்டலை வைத்து நடத்த முன்வந்தால், அந்த ஹாஸ்டலை உடனுக்குடன் அங்கீகாரம் செய்து அதற்காகப் பணம் ஒதுக்குவதில்லை, உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இன்றைக்கு போளூர் தாலூகாவில் ஒரு ஊரில் 1953-ம் ஆண்டிலிருந்து ஹரிஜன அனாதை விடுதியை நவநீதஅம்மாள் என்பவர் நடத்திக்கொண்டுவருகி றார்கள். அதைத்தவிர, ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் ஒன்றையும் நடத்தி வருகிறார்கள். ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு மட்டும் கிராண்டு கொடுக் கப்படுகிறது. அனாதை விடுதி ஹாஸ்டலுக்கு இதுவரை பணம் ஒதுக்கப்பட வில்லை என்ற கம்ப்ளெயிண்ட்டை முந்தாநாள் தான் என்னிடம் வந்து சொன்னார்கள். "இம்மாதிரி கம்ப்ளெயிண்ட் இருந்தால், அதைப்பற்றி உடனுக்குடன் எழுதிக்கொடுங்கள். நாங்கள் உடனே தீர்த்துவிடுகிறோம்" என்று அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அப்படி சொல்லியிருந்தாலும் அவ்வப்போது வரும் புகார்களையெல்லாம் நாம் அடிக்கடி அமைச்சர் களிடம் கொண்டுபோவதும், அவைகளையெல்லாம் அமைச்சர்களே தீர்க்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் தவறு என்பதை உணர்கிறோம். இருந்தாலும், கீழே இருக்கும் அதிகாரிகள் எந்த அளவுக்கு நடக்கிறார்கள் என்பதைப்பற்றி இங்கே எடுத்துச்சொல்லப்படுகிறது என்று சொன்னால், அவைகளைப்பற்றி உடனடியாக கவனிக்கவேண்டும். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமப் புறங்களில் இருக்கக்கூடியவர்கள் இன்றைக்கு ஜாதி இந்துக்களால் கொடுமைப்படுத்தப்படுவது மட்டுமல்ல ; இன்றைக்குப் போலீஸ்காரர்களால் அதைவிட மிக மோசமாக கொடுமைப்படுத்தப்படு கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்னால் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் ஏதோ திருடி விட்டான் என்ற காரணத்திற்காக வேண்டி, "லாக்கப்பில்" வைத்து கொலை பண்ணியிருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்டால், லாக்கப்பில் இருக்கும்போதே தூக்குப் போட்டுக் கொண்டான் என்று சொல்லப் படுகிறது. இது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. ஒவ்வோரு போலீஸ் ஸ்டேஷனிலும் இம்மாதிரி லாக்கப்பில் வைப்பது என்பது சகஜம். அப்படி வைக்கப்பட்ட நபர் இறந்து விட்டால், ஏதோ பவுடர் சாப்பிட்டு இறந்து விட்டான் என்றோ, காக்காய் வலிப்பால் இறந்துவிட்டான் என்றோ,





தூக்குப் போட்டுக் கொண்டுவிட்டான் என்றோ சொல்லப்படலாம். காக்காய் வலிப்பால் இறப்பவனும், தூக்குப் போட்டுக்கொண்டு இறக்கவேண்டு மென்று நினைப்பவனும் பவுடர் சாப்பிட்டு இறப்பவனும், இம்மாதிரி லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கும்போதுதானா சாகவேண்டும் ?

இந்த அளவுக்கு நிலைமை இருக்கிறதென்று சொன்னால் இதையெல்லாம் சர்க்கார் சொல்லக்கூடிய நேரத்தில் இப்படித்தான் சொல்வார்கள். ஆகை யால் நாங்கள் இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ள முடியாது என்று சொல்லிக்கொண்டிருப்பதனால் நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருக் கிறது. தாழ்த்தப்பட்ட மக்களை உண்மையில் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம் இருக்கக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை எந்த முறையில் காப்பாற்றுவது ? அருந்ததியர்கள் என்று ஒரு சாதியார். மின்சாரம் வந்துவிட்டது. அவர்கள் தொழில் நசித்துவிட்டது. அவர்களுடைய நிலைமையை கவனித்தாகவேண்டும். ஆகவே எந்தப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும், தரிசு நிலமாக இருந்தாலும் அத்தனை நிலங்களையும் உடனடியாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பின் தங்கியவர்களுக்குக் கொடுத்து உதவவேண்டும். அப்படிச்செய்வதன் மூலமாகத்தான் பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்ய முடியும். இதை 1931-ம் ஆண்டு கராச்சி மகாநாட்டிலிருந்து சமீபத்தில் நடந்த அஸ்ஸாம் மகாநாடு வரையில் வற்புறுத்தி வந்திருக்கிறோம். உடனடியாக நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதன் மூலமாகத்தான் அவர்களுடைய நிலைமையை முன்னேற்ற முடியும். இதைப்பற்றிக் கவனிக்காமல் இருப்பது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் குறித்து உடனடியாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** இன்னும் அநேக அங்கத்தினர்கள் இந்த மானியத்தில் பேசவேண்டுமென்று விரும்புவதன் காரணமாக நான் கட்சித்தலைவர்கள் எல்லோரையும் கலந்துகொண்டு இன்று காலை சபை 1 மணி வரையில் நடக்கவும், பிறகு பிற்பகல் 3 மணியில் இருந்து 5 மணி வரையில் நடக்கவும் ஏற்பாடு செய்துள்ளேன். கனம் கக்கன் அவர்களுக்கும் இதில் ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன். சபை அங்கத்தினர்கள் பிற்பகல் 3¾ மணி வரையில் பேசலாம். அப்புறம் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். அதற்குப் பிறகு மந்திரி பேசுவார். இப்போது ஸ்ரீ அருணாசலம் பேசவேண்டும் . . . ஸ்ரீ அருணாசலம் சபையில் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். கட்சி கொரடா மூலமாகப் பெயர் கொடுத்தபின்னர் நான் கனம் அங்கத்தினரைக் கூப்பிடும் வரையில் ஆசனத்தில் அமர்ந்திருக்கவேண்டும். இரண்டு முறை ஸ்ரீ அருணா சலம் அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன். அவர் இல்லாத காரணத்தினால் அவரது சான்ஸ் போய்விட்டது. இனி இப்படியின்றி பெயர் கொடுத்த அங்கத்தினர்கள் பெயர் கூப்பிடும் வரையில் இடத்திலேயே இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

* **Sri T. P. ELUMALAI :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன முன்னேற்ற மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல பிரியபடுகிறேன். ஹரிஜன மானியம் என்றாலே எல்லோரும் ஆதரிக்கக்கூடிய மானியமாகவும் எல்லோரும் வரவேற்கக்கூடிய மானியமாக அது இருக்கிறது. குறிப்பாக அதிகமான அங்கத்தினர்கள் இதில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதற்காக இந்த மானியத்திற்கு அதிக நேரம் ஒதுக்கியிருப்பது இந்த சட்ட சபையில் ஆதரவு இதற்கு இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகிறது. இருந்தாலும் அதேமுறையில் எதிர்க்கட்சியில் உள்ளவர்களிடமிருந்தும் வெளியிலிருந்தும் இந்த ஆதரவு வரவேண்டும். ஏனென்றால் இங்கே பேசிய பல அங்கத்தினர்கள் சட்டம் போதாது, காங்கிரஸ் கட்சி இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காகச் செய்கின்ற காரியங்கள் போதாது, தவிர செய்கிற காரியங்களும் அவர்களது கட்சியின் செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்வதாகத்தான் இருக்கிறது என்பதாக வெல்லாம் பேசினார்கள். ஆனால் எத்தனை சட்டங்களைப் போட்டாலும் கூட

[Sri T. P. Elumalai] [24th March 1958

எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் வெளியிலும் சர்க்கார் கட்சியுடன் ஒத்துழைத்தால்தான் ஹரிஜனங்களுடைய நிலைமை உண்மையிலேயே முன்னேற்றம் அடையும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்தன. தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் போடப்பட்டது. அந்தத் திட்டங்களிலும் ஹரிஜனங்களுக்கு முதல் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் வெளியில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஹரிஜனங்களுக்கு என்று சில வேலைகளைச் செய்யும்போது எங்களுடன் ஒத்துழைக்காமல் நல்ல காரியங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதும், நடந்த காரியங்கள் பயனளிக்காமல் போகும்படியாகச் செய்வதுமான செயல்களில் தான் ஈடுபட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

குறிப்பாக ஹரிஜனச் சேரியில் விளக்கு போடவேண்டும் என்பதுதான் எல்லோருடைய அவாவும். ஆனால் அந்த வசதியை செய்து கொடுக்க முன்வரும்போது எதிர்க்கட்சியில் சிலர் முட்டுக்கட்டை போட்டார்கள். ஒத்துழைக்கவில்லை என்று குறிப்பாகச் சொல்ல முடியும். கொடுங்கையூர், மேலூர் சேரியில் மின்சார விளக்கு போடவேண்டும் என்பதாக கோரப் பட்டது. அவ்வாறே விளக்குகளும் போடப்பட்டது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் இந்த வேலையில் முன்னணியில் இருந்தார்கள் என்பதற்காக அந்த விளக்குகள் தொடர்ந்து எரிவதற்கு வாய்ப்பு இல்லாமல் எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கள் உதவியை அளிக்க முன்வராதுவிட்டார்கள். அதனால் இரண்டு மாதம் கஷ்டப்பட்டு காங்கிரஸ்காரர்கள் செலவுகளை ஒப்புக் கொண்டும், தொடர்ந்து உதவி அளிக்க முடியாத காரணத்தினால் இன்று விளக்குகள் எரியவில்லை. இவையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. ஆனால் ஒன்று சொல்வேன். வெளியிலும் ஹரிஜனங்க களுடைய முன்னேற்றத்திற்கு அவரவர்களுடைய கட்சி ஊழியர்கள் பரிபூரண ஒத்துழைப்பையும், உதவியையும் அளிக்கவேண்டும் என்பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் உண்மையிலேயே ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைவார்கள். அது இல்லாமல் அக்கட்சித் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட வர்களுடைய முன்னேற்றத்தைப்பற்றி சபையில் பேசுவதும் வெளியில் பேசு வதும் பேச்சளவில்தான் மக்களுக்குப் பயன்படும். ஆகவே இவ்விஷயத் தில் அவர்களுடைய கட்சிகாரர்கள் எல்லாம் செயலிலும் ஒத்துழைப் பைக் கொடுக்கவேண்டும் என்பதாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு விளக்கு வசதியை எடுத்துக் கொண்டாலும் ரோடு வசதியை எடுத்துக் கொண்டாலும், பள்ளிக்கூட வசதியை எடுத்துக் கொண்டாலும் முட்டுக்கட்டை போடும் மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இருக்கக் கூடிய சட்டங்கள் ஹரிஜன மக்களுடைய முன்னேற்றத்திற்கு அதிகப்பயன் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போதுள்ள சட்டத்தில் சில முரண்பாடுகள் உள்ளன. நடைமுறையில் சில சிக்கல்கள் ஏற்படலாம். ஹரிஜன வெல்பேர் ஆபீசிலும் சில கோளாறுகள் இருக்கலாம். ஆனால் அந்தக் கோளாறுகளை எல்லாம் எப்படி நீக்கவேண் டும் என்பதை நாம் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். இன்று அநேக வாரப்பத்திரிகைகள் இருக்கின்றன. தினசரிப் பத்திரிகைகள் இருக் கின்றன. அதிகாரிகளிடம் சென்று இந்தக் காரியத்தைச் செய்கிறீர்களா அல்லது உங்களைப்பற்றி கண்டித்து பத்திரிகையில் எழுதித்தள்ளட்டுமா என்று பயமுறுத்துவதைப் பார்க்கிறோம். குறிப்பாக நம் அங்கத்தினர்கள் அதிகாரிகளிடமும் குமாஸ்தாக்களிடமும், சென்று இந்தக் காரியத்தை நீங்கள் செய்யாவிட்டால் நான் சட்டசபையில் கேள்வியைப் போடுவேன், வெட்டுப் பிரேரணை கொண்டுவந்து கண்டித்து பேசுவேன் என்பதாக வெல்லாம் பயமுறுத்தி கலாட்டா செய்வது காரியங்களுக்குப் பெரிய அளவில் முட்டுக்கட்டை போடுவதாகத்தான் அமையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

Sri T. S. RAMASWAMY PILLAI : On a point of order, Sir. The hon. Member is making allegations against some of the hon. Members of this House.



24th March 1958]

Mr. SPEAKER : He has not made any specific charges against anybody.

Sri T. S. RAMASWAMY PILLAI : He said that some hon. Members intimidated the officers of the Harijan Department by saying that irregularities in the office would be brought to the notice of the Government by means of cut motions, etc., unless they appoint persons recommended by them. I would request you to rule the statement out of order or to see that the Member substantiates it.

Mr. SPEAKER : இதற்கு கனம் அங்கத்தினர் என்ன பதில் சொல்கிறார் ?

Sri T. P. ELUMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, இங்கே ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருப்பதைப் பார்த்தேன். அதற்கு முன்னால் சம்பந்தப்பட்ட அந்த மெம்பரைச் சார்ந்த மாணவன் அதிகாரியிடத்தில் சென்று உதவி அளிக்காவிட்டால் என் எம். எல். ஏ.ஐ அழைத்துக் கொண்டுவருவேன் என்று சொன்னதாகவும். பிறகு அப்படியே காரியா லயத்திற்கு மெம்பரை அழைத்துச் சென்று அங்கே ரகளையை உண்டுபண்ணி யதாகவும் கேள்விப்பட்டேன். இதைக்குறித்து சொல்லாமல் அதை நினைத்துத்தான் பொதுப்படையாகப் பேசினேன்.

Mr. SPEAKER : எதுவாக இருந்தாலும் சபையில் அங்கத்தினரைக் குறைகூறக்கூடாது.

Sri T. P. ELUMALAI : நான் உள்ளதைச் சொன்னேன். குறைகூறும் வகையில், அவமானப்படுத்தும் வகையில் எதுவும் சொல்லவில்லை. வேறு கட்சிகள் இந்த நாட்டை ஆள வேண்டுமென்ற கிளர்ச்சியில் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக சில ஹரிஜனங்களை அதிகமாக உபயோகப் படுத்தி வருகின்றார்கள். இதனால் ஒன்றும் தெரியாத ஒரு சிலர் வீணாக பயன் படுவதை நான் பார்க்கிறேன். இதனால் மேலும் பத்து வருஷங்களுக்கு ஹரிஜனங்களுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்றிருக்கும் ஆலோசனைக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டு விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்கான வேலைகள் நடந்து வருகிறது. அந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்று ஹரிஜனங்கள் பூர்ண முன்னேற்றம் அடைய மேலும் ஒரு பத்து வருஷங்களுக்காவது இப்பொழுதுள்ள சலுகைகளை ஸ்திரப்படுத்தவேண்டுமென்று நான் இந்த சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களும் இது குறித்து மத்திய சர்க்காருக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி இன்னும் பத்து வருஷங்களாவது இப்பொழுதுள்ள சலுகைகளை நீடிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்காக மாடுகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். மாஜி குற்றப்பரம்பரையினருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். எருமை மாடுகள் எல்லாம் வாங்கிக் கொடுக்கி றார்கள். அதைப்பற்றியெல்லாம் விரிவாகச் சொல்ல எனக்கு நேரமில்லை. உதா ரணமாக சிலவற்றை சொல்லிவிட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். மாடு வாங்குவதில் பல இடஞ்சல்கள் இருக்கின்றன. மாடுகளை சந்தையில் இருந்து வாங்கித்தான் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஜில்லா அபிவிருத்தி ஆபீஸர்கள் சந்தைக்குப் போனால் அங்கு மறை முகமாக தரகர்கள் பேசுவதை நாம் பார்க்கிறோம். ஒரு மாட்டிற்கு 50 ரூபாய் என்றிருந்தால் 75 ரூபாய் என்று சொல்லி வாங்கி, அந்த மீதி 25 ரூபாயை தரகர்கள் எடுத்துக்கொள்ளுகின்றார்கள். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், தலைமை அதிகாரியை நம்பி பணத்தைக் கொடுக்க வேண்டும். ஆனால் உத்தியோகஸ்தர்கள், ஏழைகளின் ரூபாயில் கை வைப்பார்களேயானால் அவர்களை சட்டப்படி ஜெயிலுக்குள் தள்ளிவிட வேண்டும். இதில் சர்க்கார் கண்டிப்பாக இருந்தால் ஹரிஜன முன்னேற்றம் நல்ல முறையில் நடக்கும் என்று மான்யத்தை ஆதரிக்கின்றேன். (இச்சமயத்தில் கனம் சபாநாயகர் அடுத்த அங்கத்தினரை பேசுமாறு அழைத்தார்).

[24th March 1958

**SRI A. PERUMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன மக்களின் நலனுக்காக நமது சர்க்கார் அக்கரை காட்டுகிறது என்று சொல்லப்படுகிறது. அது ஓரளவு உண்மை தான். ஆனால் வாயளவில்தான் அக்கரை காட்டுகிறது என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், ஹரிஜனங்களுக்காக கொடுக்கப்படும் தொகைகள், தாற்காலிக கடன்கள், புயலால் பாதிக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட புயல் லோன், இவைகளெல்லாம் நல்ல முறையில் அம்மக்களுக்கு கொடுத்து உதவவில்லை. ஹரிஜனங்களுக்காக நாங்கள் எவ்வளவோ செய்கிறோம். அவர்களுக்கு எவ்வளவோ சலுகைகள் காட்டுகிறோம், அவர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு நாங்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்றெல்லாம் சர்க்கார் சொல்லுகிறார்கள், ஆனால் அவைகளெல்லாம் ஓரளவு உண்மையல்ல என்று தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, என் தொகுதியில், அதாவது முதுகுளத்தூரில் நடந்த கலவரங்களைப் பற்றி எனக்கு இங்கு எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆகவே இப்பொழுது அதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறலாமென்று நான் நினைக்கிறேன்.

**MR. SPEAKER** : ஹரிஜன மான்யம் சம்பந்தமாக உள்ளதைத் தான் இங்கு சொல்லலாம். சம்பந்தம் இல்லாததைப்பற்றி சொல்லக்கூடாது.

**SRI A. PERUMAL** : நம் சர்க்கார் ஹரிஜனங்களுக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறோம், ஹரிஜனங்களுக்காக நாங்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அது உண்மையல்ல. காரணம் எங்கள் தொகுதியில் எலெக்ஷன் நடந்த போது அங்குள்ள மக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் பட்ட கஷ்டங்களைப் பற்றி இப்பொழுது சர்க்காருக்கும், இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் தெரியும். நம் நாடு சுதந்திரம் பெற்று பத்து வருஷங்களாகிறது. இந்த பத்து வருஷத்தில் முதுகுளத்தூரில் எத்தனையோ தடவை எலெக்ஷன் நடந்திருக்கிறது. அவைகளில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களோ அல்லது அவரது கட்சியோ தவிர வேறு யாரும் வெற்றி பெற்றதில்லை. அதற்காகத் தான் சர்க்கார் இப்பொழுது அங்குள்ள மக்களை கஷ்டப்படுத்துகிறார்கள். எங்கள் தாலூகாவான முதுகுளத்தூரில் ஹரிஜனங்களும், ஜாதி ஹிந்துக்களும் எவ்வளவோ ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது ஜாதி ஹிந்துக்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் இடையே சிறிது பகை உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் காங்கிரஸ் சர்க்கார் தான். ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம் அரசாங்கம் எவ்வளவு முயற்சி செய்தாலும் முதுகுளத்தூரில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் செல்வாக்கை யாராலும் குறைக்க முடியாது. அப்படி மிகவும் செல்வாக்குள்ள ஒருவரிடம் நம் சர்க்கார் இப்பொழுது நடந்து கொள்ளும் விதம் மிகவும் மோசமாகத் தான் இருக்கிறது. அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்காக நாங்கள் எவ்வளவோ உதவி செய்கிறோம், அவர்களுக்காக நாங்கள் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம், அவர்களுக்கு மாடு வாங்கிக் கொடுக்கிறோம், அவர்களுக்கு நாங்கள் கடன் உதவி அளிக்கிறோம், இப்படியெல்லாம் நாங்கள் செய்தும் கூட நீங்கள் சர்க்காரை குறை கூறுகிறீர்களே என்று சர்க்கார் கேட்கலாம். நானும் ஒரு ஹரிஜன அங்கத்தினர் தான். எங்கள் தொகுதியில் ரொம்ப அநீதிகள் நடக்கின்றன. என் சொந்தக் கிராமத்தில் ஒரு விவசாயிக்கு, ப்ளாக் டெவலப்மெண்டில் இருந்து 500 ரூபாய் கொடுத்தார்கள், புயலால் பாதிக்கப்பட்ட கிணற்றை திரும்பத் தோண்டுவதற்காக. அந்த 500 ரூபாயை வாங்க 100 ரூபாய் செலவு செய்ய வேண்டி வந்தது. அதை வாங்கும்போது, சர்க்காரின் ஆறும் நம்பர் பாரத்தில் பத்து வருடத் தவணை என்று போட்டிருந்தது. ஆனால் அடுத்த வருடத்தில் அதை ஒரே வருடத்தில் கட்டும்படி அதிகாரிகள் கேட்டார்கள். அதற்கு முன்னால் கொடுக்கும்பொழுது ஒரு வருஷத்தில் திருப்பி கொடுக்கவேண்டும் என்று சொன்னால் என்ன ?



24th March 1958] [Sri A. Perumal]

பத்து வருடத்திற்கு தவணை என்று கடன் கொடுத்துவிட்டு ஒரே வருடத்தில் திரும்ப கொடுக்கவேண்டும் என்று சொல்வதைப் பார்த்து நான் வருந்துகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன மாணவர்களுக்கு இலவசமாக ஹாஸ்டல் நடத்தப்பட்டு வருகிறது. சில இடங்களில் இவர்களுக்கு கொடுக்கப்படுகிற பணத்தை சரியானபடி மாணவர்களுக்கு கொடுப்பதில்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், குறிப்பாக கமுதியில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் இருக்கிறது. அங்கு 67 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்த மாணவர்களிடமிருந்து அங்குள்ள ஹாஸ்டல் செக்ரடரி 50 ரூபாய் வீதம் முதலாவது வாங்கிக்கொண்டு சர்க்கார் பணம் வந்த பிறகு திரும்பத் தந்து விடுகிறோம் என்று சொல்லி வாங்குகிறார்கள். ஆனால் இவ்விதம் வாங்கி ஐந்தாறு வருடங்கள் ஆகியும் இதுவரை அந்தப் பணத்தை திரும்பக் கொடுக்கவில்லை. இப்படியாக அந்த செக்ரடரி பணத்தை சேகரித்து பெரிய பணக்காரராகிவிட்டார். இதை சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக அதே தொகுதியில் கமுதியில், வெள்ளைபுரம் ஊரில் ஒரு ஹரிஜன காலனி கட்டினார்கள். ஏறக்குறைய நூறு வீடுகள் கட்டினார்கள். அந்த வீடுகளில் இரண்டு மூன்று மாதங்களில் 50 வீடுகளை கட்டி விட்டார்கள். அந்த வீடுகளை கட்டுவதற்கு விறகுகளை வைத்து காளவாசல் வைக்காமல் புல் பூண்டுகளை வைத்து செங்கல்களைச் சுட்டார்கள். அந்த செங்கல்களை அந்த இடத்திலிருந்து வீடுகள் கட்டக்கூடிய இடத்திற்கு கொண்டு சேர்ப்பதற்கு முன்பாகவே பாதி செங்கல்கள் உடைந்து போய் விட்டது. அந்த நொறுங்கி போன செங்கலை வைத்து வீடும் கட்டி விட்டார்கள். வெறும் மண்ணையும் சேர்த்து சாந்தாக வைத்து கட்டி விட்டார்கள். அதே மாதிரி தான் பனம்பட்டியல்களை வாங்கி, தார் அடித்து கருப்பாக்கி அதை மேல் கூறைகளுக்கு உபயோகித்துக்கொண்டார்கள். ஓட்டின் விலை 250 ரூபாய் விலையாக இருக்கும்பொழுது ஏதோ 35 ரூபாய் விலையில் ஓட்டை வாங்கி வந்து போட்டார்கள். ஒரு நாள் நான் கமுதியிலிருந்து ஊருக்கு வரும்போது அந்த வீட்டில் மழைக்கு ஒதுங்கி யிருந்தேன். நான் அங்கு தங்கியிருக்கும்பொழுதே மளமளவென்று மேலேயிருந்து தண்ணீர் இறங்கியது. இந்த மாதிரி சர்க்கார் கொடுக்கும் மான்யத்தை செலவு செய்கிறார்கள். இதை மாற்றி ஒழுங்கான முறையில் செலவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். சரியான முறையில் செலவு செய்யாத அதிகாரிகளை தண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது சிற்றுரையை முடித்து கொள்கிறேன்.

* **SRI P. G. MANICKAM** : மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் கட்சி அங்கத்தினர்களாகிய நாங்கள் பேசும்பொழுது கவர்ன்மெண்டை குறை கூறி பேசுகிறோம் என்று ஒரு சில அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். அது தவறு என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் இந்த பக்கத்திலுள்ள நாங்கள் சொல்லுவது குறைகளை எடுத்துச் சொல்லுவதற்காக அல்ல. இந்த மான்யத்தை இந்த வருஷ காலத்திலேயே செலவு செய்யப்பட வேண்டும். அதற்காக இன்னின்ன காரியங்களை செய்யவேண்டும் என்று கூறி, இன்னின்ன காரியங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற முறையில் எங்கள் காரியங்களைச் சொல்லுகிறோமே தவிர குறை கூறுவதற்காக அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் எங்கள் தொகுதியை பொறுத்த வரை ஒன்றிரண்டு விஷயங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். அதிலும் முக்கியமாக ஒரு விஷயத்தை கவர்ன்மெண்டாருடைய பார்வைக்கு கொண்டு வர விரும்புகிறேன். வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வீடு மனை கொடுக்கிற விஷயத்தைப் பற்றி மத்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி பந்த் அவர்கள், பிப்ரவரி மாதத்தில் நடந்த ராஜ்ய பிற்பட்ட வகுப்பினர் மந்திரிகள் மகாநாட்டில் சொன்னார், ஒவ்வொரு ஹரிஜன குடும்பத்திற்கும் சொந்தமாக ஜாகை வைத்துக்கொள்வதற்கு நிலம் இருக்கவேண்டும். அப்போதுதான் சொந்த வீடு கட்டி சுதந்திரமாக இருக்க முடியும், என்று சொன்னார். இதையே தான் ஹரிஜனங்களாகிய நாங்கள் கவர்ன்மெண்டாருக்கு முக்கியமாக சொல்ல விரும்புகிறோம். அந்த மகாநாட்டில் ஆந்திராவிலிருந்து வந்த மந்திரி அவர்கள் பேசும்பொழுது அவர் குறிப்பிட்டிருக்கிறார், ஆந்திர

[Sri P. G. Manickam] [24th March 1958

தேசத்தில் 6 லட்ச ஹரிஜன மக்களுக்கு வீடுகள் தேவையாகயிருக்கிறது. இதற்கு மத்திய சர்க்காரிலிருந்து வருடா வருடம் 6 லட்ச ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த முறையில் எல்லா ஹரிஜனங்களுக்கும் வீடு மனை வாங்க வேண்டுமென்றால் 100 வருஷங்கள் ஆகும், இதனால் காரியம் நடைபெறாது என்று அவர் தெரிவித்திருக்கிறார். இதை சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சென்ற ஐந்தாண்டு திட்டத்திலும் நமது சென்னை மாகாணத்திற்கு ஒரு குறிப்பு எடுக்கப்பட்டது, அதில் ஐந்து லட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று இருந்தது. அதற்காக வேண்டிய தொகை ஒதுக்க வேண்டும் என்றும் புள்ளி விவரங்கள் இருக்கிறது. இதிலும் உள்நாட்டு மந்திரி அவர்கள் சொல்லியிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். அதாவது இதற்கென்று ஒதுக்கப்படும் பணத்தை நல்ல வழியில் அந்தந்த வருடத்திலேயே செலவு செய்தால்தான் மேலும் அதிகத் தொகை பெறலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும் மத்திய சர்க்கார் ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறது. அதாவது முக்கியமாக ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்கும் விஷயமாக ஒரு குறிப்பு எடுத்து அனுப்பினால் அதைப்பற்றி நாங்கள் கவனிக்கிறோம் என்று மத்திய அரசாங்கம் எல்லா ராஜ்ய அரசாங்கங்களுக்கும் அறிக்கை அனுப்பியிருக்கிறது. ஆகவே நமது சர்க்கார் இந்த வீட்டு மனைகள் விஷயமாக வேண்டிய தகவல்களை மத்திய சர்க்காருக்கு தெரியப்படுத்த வேண்டும். எப்படியாவது இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாயாவது மத்தியசர்க்காரிடமிருந்து பெறுவதற்கு இந்த ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பிர்க்காவில் இந்த வீட்டு மனைகள் விஷயமாக, குறிப்பாக பவானி தாலுகாவில் இருக்கிற 60 சேரிகளும் ஜாதி இந்துக்களுடைய பெயரில் தான் பட்டா இருந்து கொண்டு வுருகிறது. இந்த சேரியும் பத்து இருபது வருஷமாக இருந்து கொண்டு வருகிறது. இந்த சேரிகள் ஜாதி இந்துக்களுடைய பெயரில் பட்டா இருந்து வருவதினால் இவர்கள் அடிமை போன்று வாழ வேண்டியிருக்கிறது. இதை மாற்றுவதற்கு கவர்ன்மெண்டார் வேண்டிய முயற்சியும் எடுத்து வருகிறார்கள். இதை மாற்றி இவர்கள் பேரில் ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கு ஹரிஜன நல இலாகா மந்திரி அவர்கள் பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். இருந்தாலும் இதை உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டால் மிக நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேட்டூர் வாய்க்கால் பாசன ஏரியாவில் 19 சேரிகள் நீர்க்கசிவினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதைப் பற்றி மந்திரி அவர்களிடம் ஒரு அறிக்கையும் கொடுத்திருக்கிறோம். 8 சேரிகளிலே குறைந்தது 494 வீடுகள் சேதமுற்று இருக்கின்றன. அவர்களுக்கு 38 ஏகர் 68 செண்ட் நிலம் தேவை. 100 ரூபாய் "ஸப்சிடி" கொடுக்கவேண்டிய அளவிலே 49,400 தேவைப்படும என்று புள்ளி விவரங்களை கொண்டு ஒரு அறிக்கையைக் கூட கனம் மந்திரி அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். அதன் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன்.

வருங்காலத்திலே கிராம பஞ்சாயத்து போர்டுகள்தான் ராம ராஜ்யத்திற்கு அடிகோலாக இருக்கப்போகின்றன. இனி மேல் கிராம பஞ்சாயத்து போர்டுகள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகத் தான் எல்லா வேலைகளும் நடக்கப் போகின்றன. கிராம பஞ்சாயத்துக்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெட்யூல்டு மலை ஜாதியினருக்கும், ஜனத்தொகை அடிப்படையிலே ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று, மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஷெட்யூல்டு வகுப்புகளின் கமிஷனர் சொல்லியிருக்கிறார். இது நாம் மிகவும் கவனிக்கவேண்டிய விஷயம். இப்பொழுது எந்த முறையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றன என்றால், மொத்தம் 12 பேர்கள் இருந்தால், அதிலே பிச்சை கொடுப்பது போல ஒரு ஹரிஜன் இருப்பார். இதற்காக மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட கமிஷனர், ஜனத்தொகை விகிதாசாரப்படி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார். இனிமேல் கிராம பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள்தான் எல்லா வேலைகளையும் கவனிக்கப்போவதால், ஜனத் தொகை அடிப்படையிலே ஸ்தானங்களை ஒதுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



24th March 1958] [Sri P. G. Manickam]

நான் காங்கிரஸ் கட்சியை மட்டுமில்லாமல் எல்லக் கட்சிக்காரர்களையும் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலப்பு மணம் அத்தியாவசியம் என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள், மற்றும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். எல்லோரும் அதை ஆதரிக்கிறார்கள். அப்படி கலப்பு மணம் செய்துகொள்ள எந்த ஜாதி ஹிந்துக்கள் முன் வருகிறார்களோ, அவர்களுக்கு சர்க்கார் ஒரு போனஸ் கொடுக்க வேண்டும். மேலும் உத்தியோக உயர்வும் கொடுக்கப்படும் என்று அறிவிக்கவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த என்னன்ன தேவையோ அதையெல்லாம் செய்து கொடுக்க பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி, அதற்காக ஒரு சட்டத்தையும் இயற்றும்படியாக சர்க்காரை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நம்முடைய ராஜ்ய சர்க்காருடைய முயற்சிகளினால், ஹரிஜனங்களில் அநேகம் பேர் படித்தவர்கள் இருக்கிறார்கள். எட்டாவது வகுப்பு வரையிலும் படித்தவர்கள் இருக்கிறார்கள். எஸ். எஸ். எல். ஸி. வரையிலும் படித்தவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பியூன் வேலையிலிருந்து என். ஜி. ஓ. உத்தியோகஸ்தர்கள் வரைக்கும் எத்தனை ஸ்தானங்கள் காலி ஆகிறதோ அவைகளில் 100 க்கு 50 சத விகிதம் ஹரிஜனங்களுக்கு என தனியாக ஒதுக்கப்பட்டு வேலை கொடுக்கப்பட்டால், அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதே போன்று கல்வித் துறையிலும் முன்னேறவேண்டும். ஆரம்பக் கல்வியை எடுத்துக் கொண்டால், இப்பொழுது இருக்கிற மாணவர்களிலே அதாவது 6 வயது முதல் 14 வயது உள்ளவர்களிலே, படிக்காதவர்கள் குறைந்த பட்சம் 100-க்கு 90 பேர்கள் ஹரிஜனங்களிடையே இருப்பார்கள் என்பது புள்ளி விவரம் எடுத்துப் பார்த்தால் தெரிய வரும். ஆகவே படிப்பதற்குறிய வசதிகளை கல்வி இலாகா மூலமாகவும், ஹரிஜன வெல்பேர் பண்டில் ஒதுக்கப்படுகிற தொகையிலிருந்தும் செலவழிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன வெல்பேர் பண்டில் மத்தியான உணவுக்காக ஒதுக்கப்படும் தொகையில் பெரும் பகுதி செலவழிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பதற்கு புள்ளி விவரம் இல்லை. அப்படி செலவழிக்காமல் பணம் இருக்குமேயானால், அதை எலிமெண்டரி ஸ்கூல்களிலே படிக்கும் மாணவர்களுக்கு மத்தியான சாப்பாட்டிற்காக ஒதுக்கினால் நல்லது. காரணம் என்னவென்றால், இப்பொழுது மத்தியானச் சாப்பாடு ஒரு சில இடங்களில் தான் போடப்படுகிறது. எந்தெந்த இடங்களில் ஜாதி ஹிந்துக்கள் பணம் கொடுக்க முன் வருகிறார்களோ அந்த இடங்களில் மத்தியான சாப்பாட்டிற்காக ஒதுக்கப்படும் தொகையையும் சேர்த்து, மாணவர்களுக்கு மத்தியான சாப்பாடு போடப்பட்டு வருகிறது. இந்த ஹரிஜன வெல்பேர் பண்டில் ஏதாவது தொகை மீதி இருந்தால் அதை ஹரிஜன மாணவர்கள் எங்கெங்கு படிக்கிறார்களோ அங்கே யெல்லாம் அவர்களுக்கு மத்தியான சாப்பாடு அளிப்பதற்காக ஒரு சிறு பகுதியை ஒதுக்கினால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஆரம்பக் கல்வித் துறையிலும் ஹரிஜனங்கள் முன்னுக்கு வர முடியும்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களில் "அருந்ததியினர்" என்ற ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைய நிலையில் மிகவும் பிற்போக்கு ஜாதியினராக இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக சர்க்கார் எத்தனையோ காரியங்களைச் செய்து வருகிறார்கள். குறிப்பாக தோல் சம்பந்தமான தொழில்களை (**Leather Industries**) விருத்தி செய்வதற்கு சர்க்கார் பலவிதமான வழிகளைக் கையாண்டு வருகிறார்கள். இந்த அருந்ததியினருடைய தொழிலும் அதுவே, அவர்களுக்கு தொழில் செய்ய வேண்டிய வசதிகளைக் கொடுக்க வேண்டும். உண்மையாகவே இந்த அருந்ததி வகுப்பினர் மற்ற ஆதித் திராவிடர் நிலைக்கு உயரும்போது தான், மகாத்மா காந்தியடிகள் சொன்னது போல். சுயராஜ்யத்தின் பலனை நாம் காண முடியும். இவர்களின் முன்னேற்றத்திற்காக வேண்டிய தொகையை பட்ஜெட்டில் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[24th March 1958

*SRI M. C. MUTHUKUMARASWAMY: கனம் சபைத் தலைவர் அவர்களே, இன்று சபை முன்பு வைக்கப்பட்டிருக்கும் இந்த ஹரிஜன மான்யத்தை முழு மனதுடன் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது கடந்த ஆண்டுகளிலே இருந்ததை விட அதிகமாகவே இருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. அதுவும் குறிப்பாக எங்கள் மதிப்பிற்குறிய அமைச்சர் பெருமான் இருக்கும்பொழுது அதிகமாக இருக்கிறது என்பதை நினைக்கும்பொழுது நான் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறேன். இதோடு நில்லாது, இன்னும் கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் முன்னிருந்த அமைச்சர்கள் ஏறக்குறைய நகரவாசிகளாக இருந்ததால் மக்களுடைய குறைபாடுகளை அவ்வளவு தூரம் கவனித்தார்கள் என்று சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. ஆனால் எங்கள் மதிப்பிற்குறிய ஹரிஜன அமைச்சர் குடிசையிலேயே வாழ்ந்து, ஹரிஜன மக்களுடைய நிலைமையை உணர்ந்திருப்பதனால், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் மான்யத் தொகை "போதாது, போதாது" என்று சொல்லி அதிகமாக வாங்கி விடுவார்கள். இந்த மான்யத்தில் ஹரிஜன மாணவர்கள் படிப்பதற்கும், அவர்களுக்கு உணவு அளிப்பதற்கும், இன்னும் ஹரிஜன மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கும் தான் அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை நியாயப்படி பிரித்துப் பார்த்தால் இந்த மாகாணத்தில் இருக்கிற ஜனத்தொகைக்கு தகுந்தாற்போல் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்லவேண்டும். நம் மாகாணத்திலே இருக்கிற ஹரிஜன மக்களுக்கு, ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுத்தால் கூட, அது போதாது என்று தான் நான் கருதுகிறேன். அதிகமாக மேலும் தொகை ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் இதை விட்டு விடுகிறேன். ஆதி திராவிட மக்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. பல இடங்களில் நான் சுற்றிப் பார்த்தேன். அங்கு இருக்கும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பாரங்கள் கூட காலத்தில் கிடைப்பதில்லை. நான் சமீபத்தில் "டைரெக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர்" ஆபீசிற்கு சென்று இதைப் பற்றி விசாரித்த போது இந்த பாரங்கள் "பிரிண்டிங்கில்" இருப்பதாகச் சொன்னார்கள். இதைக் கேட்க மிகவும் வருத்தமாயிருந்தது.

கல்லூரி விஷயத்தில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதைப்பற்றி ஒரு குழப்பம் இருந்து வருகிறது. மத்திய சர்க்கார் அந்த சலுகையை கொடுப்பதா அல்லது மாகாண சர்க்கார் கொடுப்பதா என்ற குழப்பம் இருக்கிறது. இந்த குழப்பத்தை அமைச்சர் அவர்கள் போக்குவதற்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன்.

நம் நாட்டில் தீண்டாமை ஒழிந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. தீண்டாமை இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. நம் நாட்டில் பல ஆலயங்கள் இருக்கின்றன. அவைகள் சர்க்காரின்கீழ் இருக்கின்றன. நம் மகாணத்தில் மொத்தம் 60, 65 ஹரிஜனங்கள்தான் இந்த ஆலயங்களில் வேலை செய்கின்றனர் என்று அமைச்சர் தந்த பதிலிலிருந்து தெரிந்து கொண்டேன். 12,000 ஆலயங்கள் இருக்கும் மாகாணத்தில் 65 பேர் தான் இருக்கின்றனர் என்றால் அது மிகவும் குறைவு என்று சொல்ல ஆசைப்படுகிறேன். "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது, அன்றே மறப்பது நன்று" என்று குறளைக் குறிப்பிட்டு சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஆதி திராவிட மக்கள் நன்றி மறந்தவர்கள் என்று சொல்வது தவறு என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். உலகம் தோன்றிய காலத்திலிருந்து உழைத்து, உழைத்து உருக்குலைந்து, குடியிருப்பதற்குக்கூட வீடு இல்லாமலிருக்கும்போது நன்றி மறந்தவன் என்று சொல்வது சரியல்ல. அவனுக்கு மட்டும் உணர்ச்சி இருக்குமானால் என்ன நடைபெறும், என்ன நிலைமை ஏற்படும் என்று சொல்ல முடியாது.

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இருக்கக்கூடிய சர்க்கார் ரிகார்டை வேண்டுமானாலும் எடுத்து பரிசீலனை செய்து பார்க்கட்டும். நன்றிகெட்டவர்கள் யார் என்று, அவர்களைப்பற்றி குற்றம் குறைகள் ஏதாவது இருக்



24th March 1958] [Sri M. C. Muthukumaraswamy]

கிறதா என்று பார்க்கட்டும். சில அங்கத்தினர்கள் அவர்களைப் பற்றி இழிவாகப் பேசினது வருந்தத்தக்கது இனிமேலாவது அம்மாதிரி பேசாமல் இருக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆதித்திராவிடர்களுக்கென்று உத்தியோகத்தில் 15–16 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது தமிழ் நாட்டு முனிசிபாலிடிகளில் ஹரிஜனங்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பத்து வருஷத்திற்கு ஹரிஜனங்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த காலம் முடிவடைய இருக்கிறது. என்னைக் கேட்டால் இந்த 10 வருஷங்கள் போதவே போதாது என்று தான் சொல்வேன். ஆதிதிராவிடர்கள் சரியானபடி முன்னுக்கு வர வேண்டுமானால் குறைந்த பட்சம் 30 வருஷங்களுக்காவது இந்த சலுகையை நீடிக்க வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு வலியுறுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய ஜில்லாவான தஞ்சை ஜில்லாவில் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் அமுலில் இருக்கிறது. அங்கு சட்டம் இருக்கிறதே தவிர ஆட்கள் யாரும் இல்லை. நான் சமீபத்தில் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தேன். மூன்று கிராமங்களில் பண்ணையாட்கள் இருக்கிறார்கள். சர்க்காரின் புள்ளி விவரப்படி தஞ்சாவூரில் 33 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். இதில் ஆதிதிராவிடர் 8 லட்சம் பேர்கள். 100-க்கு 1 அல்லது 2 பேர் தான் உத்தியோகத்தில் இருக்கிறார்களே தவிர மற்றவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அமைச்சர் இந்த விஷயத்திலே நிச்சயம் நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன். ஆதித்திராவிடர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. "ஒரு நாடு சிந்திக்க தொடங்கிவிட்டால் அதன் வேகத்தை யாரும் தடுக்க முடியாது" என்று பெரியவர்கள் சொல்லியிருப்பதை நான் இப்பொழுது ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தற்பொழுது அவர்களுக்கு உழைப்பதற்கு, பண்ணைகளில் வேலை செய்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையால் இந்த விஷயத்தை சரியாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பதற்கு வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். நத்தம், புறம்போக்கு முதலிய இடங்களில் கூட இவர்கள் வீடு கட்டிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் ஷை புறம்போக்காக இருந்தும் அதற்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த விஷயத்தை பரிசீலனை செய்து சர்க்கார் புறம்போக்கு முதலிய இடங்களை ஒதுக்குவதற்கு உடனடியாக ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டில் பல தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. மில்கள் இருக்கின்றன. பஸ் நிலையங்கள் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சர்க்கார்தான் லைஸன்ஸ் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு தொழில் ஸ்தாபனத்திலும், 100-க்கு 15 அல்லது 20 ஆதிதிராவிடர்களுக்கு வேலை கொடுத்தால்தான் லைஸன்ஸ் கொடுக்கப்படும் என்று ஏற்பட்டால் கல்வித் துறையில் ஹரிஜனங்கள் முன்னேறியிருப்பது போல் தொழில் துறையிலும் அவர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படியெல்லாம் கட்டாயப்படுத்துவதற்கு முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுவிலக்கு விஷயத்தில் 18 கோடி ரூபாய் வருமானத்தையும் புறக்கணித்துவிட்டு சமூகம் நன்மை அடைய வேண்டும் என்ற ஒரு கொள்கை இருப்பதுபோல் ஆதிதிராவிடர்களுக்கும் நன்மை செய்யக் கூடியபடி உத்தியோகவிஷயத்திலும், சட்டத்தில் இடம் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நகரங்களில் வருஷத்துக்கொருமுறை ஜாதி அடிப்படையில் தலைவரை தேர்ந்தெடுப்பதுபோல் முனிசிபாலிடிகளிலும் இம்மாதிரி "ரொடேஷன்" முறையை கொண்டு வந்தால் நலமாக இருக்கும். அதனால் ஆதித்திராவிடர்களுக்கும் தலைவர் பதவிக்கு வருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். மாயவரம், சீர்காழி, தஞ்சாவூர் முதலிய இடங்களில் இம்மாதிரி ஏற்பாடு இருந்தால் ஆதித்திராவிடர்களுக்கு மிகவும் திருப்தியாக இருக்கும். சர்க்கார் இந்த விஷயத்தை பரிசீலனை செய்து அமுலுக்கு கொண்டு வருவார்கள் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[24th March 1958

1 p.m. MR. SPEAKER : இந்த சபையை மாலை 3 மணி வரை ஒத்தி வைக்கிறேன்.

(After lunch—3 p.m.)

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1958–59-ம் ஆண்டு மானிய கோரிக்கையின் மீது . . .

SRI T. S. RAMASWAMY PILLAI : On a point of order Sir, It was announced by the Hon. Speaker that the Hon. Minister concerned would place a statement on the table of the House just before he moved his Demand for Grant. But that statement has only just now been placed on the Table of the House and those hon. Members who have already spoken have had no opportunity to go through it. Is that in order ?

DEPUTY SPEAKER : The Hon. Minister will explain it.

THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆரம்பத்திலேயே இந்த அறிக்கையை வாசித்துக் கொடுக்க முடியவில்லை. அப்பொழுது இது தயாராகவில்லை. இதில் உள்ளதையே தான் இதற்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இதை வாசிக்கவில்லையென்றாலும் அதிலுள்ள பொருளை எல்லா அங்கத்தினர்களும் உணர்ந்திருக்கிறார்கள், அதைப்பற்றிதான் பேசினார்கள். இன்னும் பேசக் கூடியவர்கள் அதைப் பற்றிதான் பேசுவார்கள். அரசாங்கம் செய்கின்ற வேலைகள் எல்லாமும் அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது இந்த அறிக்கை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் பேசுகிறவர்களுக்கு இது உதவியாக இருக்கும்பொருட்டுதான் இப்பொழுது இது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது எல்லோரும் பேசுவார்கள் என்றும் நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : There was some delay in preparing the note. Now it has been placed on the table of the House. Hon. Members may go through it.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே 1958–59-ம் ஆண்டினுடைய ஹரிஜன மான்யக் கோரிக்கையின் மீது சட்ட மன்ற உறுப்பினர் தோழர் ஜெகந்நாதன் அவர்கள் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். இந்த மானியத்தின் கீழ் எவ்வளவோ அதிகப்படியான தொகையை ஒதுக்கி வைக்கிறார்கள். அப்படி ஒதுக்கி வைத்தும் உண்மையிலேயே அவ்வளவு தொகையும் ஹரிஜனங்களுக்குச் செலவு செய்யப்படுகிறதா என்று பார்த்தால் உண்மையிலேயே அவ்வளவு தொகையும் ஹரிஜனங்களுக்குச் செலவு செய்யப்படுவது இல்லை. அதன் மூலம் ஹரிஜன மக்கள் பயன்படுவதாக இல்லை. இந்த மானியக் கோரிக்கையின் பூரா தொகையும் காங்கிரஸ் கட்சியினுடைய நலனுக்காகவும், காங்கிரஸ் கட்சி தன்னுடைய கட்சியை வளர்ப்பதற்காகவும் பயன் படுகிறதே தவிர உண்மையிலேயே அது ஹரிஜனங்களுக்கு பயன் படுவதாகவே இல்லை என்பதை இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு உதாரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் நடந்திருக்கக்கூடிய சில வேலைகளை எடுத்துக்காட்ட முடியும். அங்கு நடைபெற்றிருக்கக்கூடிய சில குறைபாடுகளை எடுத்துச் சொன்னால் இது நன்றாக விளங்கும். 1957-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுவரையிலுள்ள வரவு செலவு கணக்கை எடுத்துப் பார்த்தால் நான் சொல்வது சரியாக இருக்கிறது என்று தெரியவரும். அந்தக் கணக்கில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் பொது கிணறுகள் வெட்டும் திட்டத்தின் மூலம்



24th March 1958] [Sri S. M. Annamalai]

21,500 ரூபாய் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செலவழிக்கப்பட்ட தொகை 6,634 ரூபாய். சுகாதார வசதிக்காகவும் கிணறுகள் ரிப்பேர், ரோடுகள் ரிப்பேர் முதலிய வசதிகளுக்குகாக சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 34,400, ஆனால் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 28,571. மத்தியான உணவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4,41,800, ஆனால் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1,05,879. பள்ளிக்கூடம் கட்டடம், பராமரிப்பு முதலியவைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 28,700, செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 14,082. அதைப் போலவே உபகாரச் சம்பளத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 13,000, செலவழிக்கப்பட்ட தொகை 12,908 ரூபாய். அதைப்போலவே நில ஆர்ஜிதம் செய்வதற்கு சர்க்காரால் ஒதுக்கி வைக்கப்பட்ட தொகை ரூ. 30,000, செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 10,526. இந்த அளவில் இருக்கிறது அவர்களுடைய செலவு விவரம். சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட தொகை அதிகம் ஆனால் செலவழிக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. இதைப் போலவே ஒவ்வொரு வருஷமும் வட ஆற்காடு மாவட்டத்தில் தொகையை ஒதுக்கி வைத்துவிட்டு திரும்பத் திரும்ப அதை திருப்பிப் பெற்றுக்கொள்வதாகவே இருக்கிறது. இந்த அளவில்தான் வரவு செலவு திட்டத்தில் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பல லட்சக்கணக்கான ரூபாயை ஒதுக்கி வைத்துவிட்டு அதை பூராவும் செலவழிக்காமல் திரும்பவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த அளவில் இருக்கிறது சென்னை மாநில சர்க்காருடைய வரவு செலவு கணக்கு, நிலைமை இப்படி இருக்கிறது என்றால் இந்த சென்னை சர்க்காருடைய போக்கை சொல்லித்தான் முடியுமா ?

அடுத்தபடியாக சொல்லும்போது செலவழிக்கப்படும் தொகையெல்லாம் எங்கு செலவழிக்கப்படுகிறது என்றால் எந்தந்த இடத்தில் காங்கிரஸ் கட்சி தோழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அந்தந்த இடங்களில் தான் செலவு செய்து வருகிறார்கள். வேண்டுமானால் கனம் அமைச்சர் அவர்களுக்கே இந்தப் புள்ளி விவரங்களைக் கொடுக்கிறேன், அவர்களே பார்த்துக்கொள்ளட்டும். எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் எந்தந்த இடங்களில் அவைகளை செலவு செய்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களே பார்த்துக்கொள்ளலாம். எந்தந்த இடங்களில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அந்த இடங்களில்தான் அந்த தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் இல்லை. இதைப்பற்றி நான் மீட்டிங்கில் கூட கேட்டேன். எந்தந்த இடங்களில் திராவிட முன்னேற்ற கழக தோழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அந்த இடங்களிலெல்லாம் 144 சட்டத்தின் கீழ் உத்தரவு போட்டிருக்கிறார்கள். எந்தந்த இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக தோழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அந்தந்த இடங்களில் செலவு செய்யவே இல்லை. கனம் அமைச்சர் அவர்கள் வேண்டுமானாலும் வந்து பார்க்கட்டும், நான் காட்டத் தயாராகவும் இருக்கிறேன். ஒரு வருஷத்திற்கு முன்னதாக களம்பூரில் உள்ள அருந்ததியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. இது வரையிலும் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதை கவனித்து உடனடியாக கட்டிக்கொடுக்கிறோம் என்று சொன்னார்கள், இன்னும் கட்டிக்கொடுக்க முன் வரவில்லை. ஆனால் அதற்குப் பிறகு மற்ற இடங்களில் பல வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தந்த இடங்களில் அதிகமாக காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அந்த இடங்களில் தான் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகத் தோழர்கள் வெற்றி பெற்ற இடங்களில் சிலருக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கடன் வாங்கியவர்கள் யார் என்று பார்த்தால் அவர்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சிக்கு உழைத்தவர்களாகவும், தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு உதவி செய்தவர்களாகவும்தான் இருப்பார்கள். காங்கிரஸ் கட்சிக்கு உழைத்த ஒவ்வொருவருக்கும்தான் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் வளர்ச்சிக்கு யார் பாடுபடுகிறார்களோ அவர்களுக்குத் தான் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்சிசார்பற்ற முறையில் ஜனநாயக முறையில் ஆட்சி நடக்கிறது என்று மட்டும் சொல்லுகிறார்கள்.

[Sri S. M. Annamalai] [24th March 1958

ஜனநாயக அடிப்படையில் எதாகிலும் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வேண்டுமென்றால் அதை எடுத்துக்காட்ட முடியும். அப்படி இல்லை என்றால் கனம் அமைச்சர் அவர்கள் அதை சட்ட மன்றத்தின் மூலமாக விளக்க வேண்டும். ஆனால் சொல்லுகிறார்கள் கட்சி மனப்பான்மையில் ஆட்சியை நடத்தவில்லை என்று. எல்லா மக்களுக்கு நன்மையைச் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அந்த அடிப்படையில் நடக்கவில்லை என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும். தங்களுடைய கட்சியின் வளர்ச்சிக்காகத் தான் ஒதுக்கப்படும் பணத்தை, அது கோடிக்கணக்காக இருந்தாலும், லட்சக்கணக்காக இருந்தாலும், செலவுசெய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பல குற்றங்களை என்னால் சொல்ல முடியும். அப்படிச் சொல்வதற்கு வேண்டிய அவகாசம் இப்பொழுது எனக்குக் கிடையாது. கனம் அமைச்சர் வேண்டும் என்று என்னை அழைத்து தனிப்பட்ட முறையில் கேட்டால் அப்படிப்பட்ட குற்றங்களை எடுத்துக்காட்ட முடியும்.

அதற்கு அடுத்தப்படியாக விவசாயிகளுக்கு கூலியை நிர்ணயம் செய்ய வேண்டும். அங்கங்கே சில வீடுகளைக் கட்டிக் கொடுத்தும் கிணறுகளை வெட்டிக்கொடுத்தும் வந்தால் மட்டும் அவர்கள் முன்னேற்றமடைந்துவிட மாட்டார்கள். உண்மையிலேயே அவர்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும். விடு கட்டிக்கொடுப்பதன் மூலமாகவும் கிணறுகள் வெட்டிக் கொடுப்பதன் மூலமாகவும் அவர்கள் முன்னேற்றமடைந்துவிடமாட்டார்கள். வீடுகள் கட்டுவது எங்கே என்று பார்த்தால் எங்கே செல்வாக்குள்ளவர்கள் இருக்கிறார்களோ அந்த இடங்களில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன, கிணறுகள் வெட்டிக்கொடுக்கப்படுகிறது. ஆனால் விவசாயக் கூலி உண்மையிலேயே உயராமல் இருக்கிறது. அதற்குக் காரணம் அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்ய வில்லை. கட்டப்பட்ட வீட்டில் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டு முழித்துக்கொண்டு அண்ணாந்து பார்த்தால் அவனுடைய பசி தீர்ந்துவிடாது. இவைகளைச் செய்வதால் உண்மையிலேயே ஹரிஜனங்களுக்கு நன்மை செய்வதாக ஆகாது. அவர்கள் உண்மையிலேயே முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்கள் பொருளாதார அடிப்படையில் உயர வேண்டும். அதற்கு அவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் திட்டக் கமிஷன் இதைப் பற்றி திட்ட வட்டமாக சொல்லியிருக்கிறது. விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதை ஏன் இன்னும் செய்ய முன் வரவில்லை? முன் வருவதற்கு தயங்க வேண்டிய காரணம் என்ன?

அடுத்தப்படியாக பஞ்சமா தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவைகளை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க முன் வரவேண்டும். அப்படிக் கொடுக்க வேண்டும் என்று எவ்வளவோ மனுக்கள் வந்தும் இன்னும் அவர்களுக்கு அதைக் கொடுக்க அரசாங்கம் முன் வரவில்லை, அதற்குக் காரணம் என்ன? இரண்டு வருஷங்களாக இதைப்பற்றி சொல்லியும் மனுக்கள் கொடுத்தும் இன்னும் ஹரிஜனங்களுக்கு அதை பட்டா செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். பலமுறை இதைப்பற்றி சொல்லியும் இன்னும் கால தாமதப்பட்டு வருகிறது. பத்து வருஷங்களாக அந்த நிலங்களை ஹரிஜனங்கள் பயிரிட்டு வருகிறார்கள். அப்படியிருந்தும் இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதுடன் அவர்கள் பொருளாதாரத் துரையில் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் அவர்களுக்குக் பட்டா செய்துகொடுக்க வேண்டும். உடனடியாக விவசாயக் கூலியை நிர்ணயம் செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தப்படியாக தாழ்த்தப்பட்ட மக்களைவிட இன்னும் அதிகப்படியாக தாழ்த்தப்பட்ட மக்களாகிய மலைவாசிகள் இருக்கிறார்கள். அப்படி பலர் ஜவ்வாது மலையில் இருக்கிறார்கள். அவர்களில் 100-க்கு 100 பேர்கள் படிக்காதவர்கள், நாகரீகமற்றவர்கள். கலையற்றவர்கள்.



24th March 1958] [Sri S. M. Annamalai]

எந்த அளவுக்கும் அவர்கள் முன்னேற்றமடையாமல் இருக்கிறார்கள் இந்தக் காலத்தில் அவர்கள் இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பதைத் பார்த்தால் ரொம்பவும் கேவலமாக இருக்கிறது. இதை விட இந்நாட்டில் வேறு அநீதி கிடையாது. அவர்கள் வசிக்கக்கூடிய பிரதேசங்களையும் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில் கீழ்கொண்டு வந்து அவர்களையும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழும் அவர்களுடைய பிரதேசத்தைக் கொண்டுவரவேண்டும். பலபல திட்டங்களை அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க இந்த சர்க்கார் முன் வர வேண்டும். அந்தந்த திட்டங்களை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல முற்பட வேண்டும். அவர்கள் படிப்பிலும் சரி, நாகரீகத்திலும் சரி எல்லா துறைகளிலும் அவர்கள் ரொம்பவும் பின் தங்கி இருக்கிறார்கள். இப்பேர்பட்டவர்களுக்கு பள்ளிக்கூட வசதி செய்து கொடுக்க முன் வர வேண்டும். மற்றும் எல்லா வழிகளிலும் அவர்கள் முன்னேற்றமடைவதற்கு வழி வகை செய்து தர முன் வரவேண்டும் என்று அரசியலாரை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போளூர் தாலூகாவில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல வீடுகளைக் கட்டினார்கள். முதலில் அந்த வீடுகளை கலெக்டர் வந்து திறந்து வைத்தார். அடுத்தபடியாக அதே வீடுகளை முதன் மந்திரி வந்து திறந்து வைத்தார். ஒரு முறை திறந்த வீடுகளை மறுமுறையும் திறக்க வேண்டிய அவசியம் என்ன? அதனால் எவ்வளவு பணம் செலவாகிறது என்பதையும் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த கிராமத்தில் இரண்டு காலனிகளை திறந்து வைத்தார்களா என்று பார்த்தால் இல்லை, ஒரு காலனியைத் தான் திறந்து வைத்திருக்கிறார்கள். இதற்கு இரண்டு திறப்பு விழா கொண்டாட வேண்டுமா என்று கேட்கிறேன். மூன்றாவது முறையாக வேறு எந்த மந்திரியாவது வந்து திறக்கப்போகிறார்களோ என்னமோ? இப்படியெல்லாம் பணத்தை ஏன் விரயம் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, ட்ரங்கு ரோடுகளின் ஓரமாக இருக்கக்கூடிய ஹரிஜன சேரிகளில்தான் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. உட்புறத்தில் இருக்கக்கூடிய ஹரிஜன மக்கள் தங்களுக்கு வீடுகள் தேவை, தேவை என்று பல ஆண்டுகளாக சொல்லி வந்தபோதிலும், அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. சர்க்கார் இவைகளையெல்லாம் விளம்பரத்திற்காக செய்கிறார்களே தவிர, உண்மையிலேயே ஹரிஜனங்கள் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்வதாக தெரியவில்லை. இந்த மான்யத்திற்காக ஒதுக்கப்படும் தொகையை ஆளும் கட்சியினரின் முன்னேற்றத்திற்காக, வளர்ச்சிக்காக பயன் படுத்திக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

**Sri M. K. SOMASUNDARAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். இதற்கு முன்பு பேசிய அங்கத்தினர் சரியான முறையிலே இந்த ரூபாய் செலவழிக்கப்படவில்லை, காங்கிரஸ் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு செலவழிக்கப்படுகிறது என்று சொன்னார். ஆனால் இதனுடைய நன்மைகளை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனுபவிக்காமல் இருக்க முடியாது. எல்லோரும் அனுபவித்துக் கொண்டுதான் வருகிறார்கள். அது போக, இப்பொழுது ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது பல வழிகளிலே செலவழிக்கப்படுகிறது. இந்தத் தொகை நல்ல முறையிலே செலவழிக்கப்பட வேண்டுமென்றால், ஐந்து வருஷ ஹரிஜன சேரி அபிவிருத்தி திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். திட்டமிட்டு வேலைகளை செய்தால்தான் ஓரளவுச்கு நல்ல பலன் கிடைக்கும். இப்படி பெரிய தொகை பல துறைகளிலே சிதறுண்டு போகுமானால், சர்க்கார் எவ்வளவு செய்தாலும், அது செய்த மாதிரி தெரியவில்லை. ஆகையால் திட்டம் போட்டு வேலை செய்தால்தான் ஓரளவுக்கு நன்றாகச் செய்த மாதிரி தோன்றும் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[Sri M. K. Somasundaram] [24th March 1958

அடுத்து விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில் ஒரு சில இடங்களில் அது சரியான முறையில் கொடுக்கப்படுகிறது. மற்ற இடங்களில் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. சிற்சில இடங்களில் இது விஷயமாக சிறு தவறுதல்கள் இருந்தபோதிலும், இனிமேலாவது இந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நினைக்கிறேன். முக்கியமாக, ஹரிஜனங்கள் குடியிருக்கும் நிலங்கள் இனும் நிலங்களாகவோ, அல்லது கோவில் நிலங்களாகவோ இருக்கின்றன. இதனால் அவர்கள் ஒரு இடத்தில் ஸ்திரமாக குடியிருப்பதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த நிலங்களை ஹரிஜன மக்களுக்கு ஜாரி செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜன மக்களாகிய கன்வெர்ட்டட் கிரிஸ்டியன்களுக்கு படிப்பு சலுகை மட்டும் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படுகின்ற மற்ற சலுகைகளையும் கொடுக்கும்படி நான் மிகவும் தாழ்மையுடன் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பிளாக் டெவலப்மெண்டு ஏரியாவில் அநேக இடங்களில் ஹரிஜன அபிவிருத்தி திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே மக்கள் முன்னேறவேண்டுமானால் அந்த இடங்களில் சுகாதாரம் உயர்ந்த நிலைமையில் இருக்க வேண்டும். ஒரு இடத்தில் சுகாதாரம் நல்ல முறையில் அமைந்திருந்தால்தான், அந்த இடத்தில் அபிவிருத்தி திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறி மக்கள் முன்னேற முடியும். ஆகவே, சுகாதார விஷயத்தை நன்றாக கவனிக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுவார்கள் என்று நினைக்கிறேன். சில இடங்களிலே அதிகாரிகள் தப்பிதமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் ஹரிஜனங்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு இனிமேலாவது நடக்காவண்ணம் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு பல இடையூறுகள் ஏற்படுகின்றன. பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஹரிஜன நல இலாகாவின் மூலம் கல்விச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆனால் அது சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. இந்த மாதத்துடன் இந்த வருஷம் முடிந்தால் கூட இன்னும் சில பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் போய் சேரவில்லை என்று புகார் வந்திருக்கிறது. இனிமேலாவது அது குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கும்படி அமைச்சர் அவர்கள் கவனித்து ஏற்பாடு செய்யவேண்டும். தலைமை ஆசிரியர்கள் பாரங்களை ஒழுங்காக வாங்கி குறிப்பிட்ட நேரத்தில் ஆபீசுக்கு அனுப்பாததால் இவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. ஆகவே, சர்க்காரிடமிருந்து பாரங்களை வரவழைத்து அந்த ஸ்தாபனங்கள் அந்த பாரங்களை மாணவர்களுக்கு கொடுத்து வாங்கி குறிப்பிட்ட நேரத்தில் அவைகள் ஆபீஸுக்கு வந்து சேரும்படி தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதற்கான உததரவை அமைச்சர் அவர்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஹாஸ்டல்களில் மாணவர்கள் சேர்ந்துக்கொள்ளுவதில் சில தொந்தரவுகள் ஏற்படுகின்றன. முதலிலே பையன்களை சேர்த்துவிட்டு, கடைசியில் "ஓவர் ஏஜ்" என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் அம்மாதிரி மாணவர்கள் பரீக்ஷை எழுத முடியாமல் அவர்களுடைய படிப்பு கெட்டுப்போய் வாழ்க்கையும் கெட்டுப்போய் விடுகிறது. அம்மாதிரி இல்லாமல் முதலியேயே இதை கவனித்து மாணவர்களை சேர்க்கவேண்டும். இந்த விஷயத்தை அமைச்சர் அவர்கள் கவனித்து தக்க உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக ராமநாதபுரத்தில் விவேகாநந்தா ஹாஸ்டலில் இம்மாதிரி சில பிள்ளைகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மறுபடியும் ஹாஸ்டலில் சேர்ந்து பரீக்ஷை எழுதுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து வேலைக்கு மனுக்கள் போடும்போது சில மாணவர்கள் சர்டிபிகேட் வாங்குவதற்கு கஷ்டப்படுகிறார்கள். கெஜெட்ட் ஆபீஸர்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்குவதற்கு அவர்களுக்கு ரொம்பவும் தொந்தரவாக இருக்கிறது. ஒரு எம்.எல்.ஏ. சர்டிபிகேட் கொடுத்தால் கூட, அதைப்



24th March 1958] [Sri M. K. Somasundaram]

பார்த்து சர்டிபிகேட் கொடுப்பதற்கு கெஜெட்ட் ஆபீஸர்கள் மறுத்துவிடுகிறார்கள். எம்.எல்.ஏ. அல்லது மற்றவர்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்தால் அதைப் பார்த்துவிட்டு கெஜெட்ட் ஆபீசர்கள் சர்டிபிகேட் வழங்க வேண்டுமென்று சர்க்கார் உடனடியாக உத்தரவு போட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசி நேரத்தில் கெஜடெட் ஆபீஸர்கள் சர்டிபிகேட் கிடைக்காததால் மனுப் போடுவதற்கு தவறிவிடுகிறார்கள். இனிமேல் இம்மாதிரி கஷ்டங்கள் ஏற்படாமல் சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹாஸ்டல் விஷயமாக நான் சென்ற பட்ஜெட் விவாதத்தின் போதே பேசியிருக்கிறேன். ஒவ்வொரு ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸிலும் சர்க்காரால் கட்டப்பட்ட ஹாஸ்டல் ஏற்படுத்தப்பட்டு, அவைகளில் அதிக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்பே சொல்லியிருக்கிறேன். சர்க்கார் வருகிற வருஷத்திலாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஹாஸ்டலை கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் சில பள்ளிக்கூடங்களில் ஒரே வகுப்பில் இரண்டாவது வருஷம் படிக்கும் ஹரிஜன மாணவர்களிடமிருந்து பீஸ் வாங்குவதாக தெரிய வருகிறது. அப்படி அவர்களிடமிருந்து 92 எம்.ஈ.ஆர். - படி பீஸ் வாங்கக் கூடாது என்று ஹரிஜன இலாகா டைரக்டர் அவர்களிடமிருந்து தெரிய வருகிறது. அப்படி வாங்கியிருந்தால் அந்த ஸ்தாபனங்கள் பீஸை மாணவர்களுக்கு திருப்பிக் கொடுக்கும்படி சர்க்கார் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், இப்படிப்பட்ட சலுகை இருந்தும், அவர்களிடமிருந்து பீஸ் வாங்குவது மிகவும் தவறான காரியமாக இருக்கிறது.

இன்னும் சில கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படாமல் இருக்கின்றன. அந்த இடங்களில் ஜில்லா போர்டுகள் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முன்வந்தாலும், தனிப்பட்டவர்கள் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கு முன்வந்தாலும் ஹரிஜன இலாகா டிபார்டுமெண்டு அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கும்படியாக சர்க்கார் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக ஸ்ரீவைகுண்டத்தில் மூன்று ஆசிரியர்களை போட்டு தனிப்பட்டவர்கள் மானேஜ்மெண்டில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருகிறது. பத்து மாதங்கள் ஆகியும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. இது விஷயமாக ஒரு ஆசிரியர் உண்ணா விரதம் இருக்கப்போவதாக ஒரு பிரசுரம் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார். ஹரிஜன மக்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடும்பொழுது, அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படும்பொழுது இந்தப் பள்ளிக்கூடத்திற்கு 10 மாதங்கள் ஆகியும் இன்னும் அனுமதி தரப்படவில்லை என்பதற்காக ஒரு ஆசிரியர் 1958-ம் வருஷம் மார்ச்சுமீ 29உ முதல் உண்ணா விரதம் இருக்கப் போவதாக தீர்மானித்திருக்கிறார். அப்படியிருக்குமானால், அதை உடனடியாக கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து போர்டு எலக்ஷன் நடக்கக்கூடிய இடத்தில் வார்டுகள் பிரிப்பதில் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஹரிஜனங்கள் இருக்கப்பட்ட இடங்களில் வார்டுகளை பலவிதமாக பிரித்து ஹரிஜனங்கள் மெம்பர்களாக வரமுடியாதபடி தடுத்துவிடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இதை கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜன இலாகாவில் வேலை பார்த்து வரும் ஹரிஜன உத்தியோகஸ்தர்களுக்கு கிளார்க் உத்தியோகத்திலிருந்து பிரமோஷன் கொடுப்பதற்கு சர்க்கார் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜாதி ஹிந்துக்களையோ அல்லது மற்ற வகுப்பினரையோதான் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன "வெல்பேர் ஆபீஸர்களாக" போட்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களில் படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஏன் அவர்களை இம்மாதிரி உத்தியோகங்களுக்கு நியமிக்கக்கூடாது என்று கேட்கிறேன் . . .

[24th March 1958

**DEPUTY SPEAKER**: கனம் அங்கத்தினருடைய " டைம் " ஆகிவிட்டது.

3-20 p.m. *SRI M. P. PERIASAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மாண்யத்திற்காக ஒவ்வொரு வருஷமும் கொடுக்கப்பட்டுவந்த தொகையை விட அதிகமான தொகை இந்த வருஷம் கொடுக்கப்படுகிறது. கிருஸ்தவர்களாக இருக்கும் ஹரிஜனங்களுக்காகவும் இந்தப் பணத்தைச் செலவழிக்கலாம் என்றும் இந்த வருஷம் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. இது மிகவும் விசேஷம்தான். பல வருஷங்களாக காங்கிரஸ் அரசாங்கம் ஹரிஜன முன்னேற்றத் திட்டத்தின்கீழ் ஹரிஜனங்களுக்கு பல நன்மைகளைச் செய்துகொண்டிருக்கிறது. அவ்வாறு நல்ல காரியங்களைச் செய்துவரும் சர்க்கார், ஹரிஜன நல அதிகாரிகளை நியமிக்கும்போது, ஹரிஜனங்களுக்கு ஆதரவாகவும், ஹரிஜனங்களிடம் நல்லெண்ணம் கொண்டும் இருக்கும் ஜாதி ஹிந்துக்களை ஹரிஜன நல அதிகாரிகளாக நியமித்தால், அவர்கள் ஹரிஜனங்களாக இருக்கும் அதிகாரிகளைவிடத் திறமையாக ஹரிஜன நலக் காரியங்களைச் செய்வார்கள் என்பது என் அபிப்பிராயம். இதை நான் இப்போது அல்ல, பல ஆண்டுகளாகச் சொல்லிவருகிறேன். ஹரிஜனங்களிடம் அனுதாபம் கொண்டுள்ள ஜாதி இந்துக்களை ஹரிஜன நல அதிகாரிகளாக நியமித்தால், அவர்கள் ஹரிஜனங்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் விஷயத்தில், ஜாதி இந்துக்களின் சம்மதத்தை வெகு எளிதில் பெற்று, சட்டத்தைப் பிரயோகிக்காமலே அவைகளை ஆர்ஜிதம் செய்து விடுவார்கள் என்பது என் அபிப்பிராயம். அதிகாரிகளாக இருப்பவர்கள் ஹரிஜனங்களாக இருந்தாலும், அவர்கள் சட்டப்படி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடிவதில்லை. ஏனென்ருல், அவர்கள் ஹரிஜன நலக் காரியங்களைச் செய்தால், அவர்களுடைய சமூகத்திற்காகத்தானே செய்கிருர்கள் என்று பிற சமூகத்தினர் சொல்வதால், அவர்கள் அக்காரியங்களை வெற்றிகரமாகச் செய்யமுடிவதில்லை. அந்த அதிகாரிகள் ஜாதி இந்துக்களாக இருந்தால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் அக்காரியங்களை சுலபமாகச் செய்துவிடுவார்கள். ஆகவே ஹரிஜனங்களிடம் அனுதாபம் கொண்டுள்ள ஜாதி இந்துக்களை ஹரிஜன நல அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டங்களும் இன்னும் பல திட்டங்களும் நல்ல முறையிலே நடப்பதில்லை என்பது என் அபிப்பிராயம். வீடு கட்டுவதற்காக பல வகைகளிலும் மொத்தமாக 550 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது எனக்கு பிடிக்கவில்லை. சில ஹரிஜனங்களுக்கு ஏதோ கொஞ்சம்தான் பணம் கிடைக்கிறது. அதைக் கொண்டு அவர்கள் ஒன்றும் செய்யமுடிவதில்லை. மற்ற வகைகளில் கொடுக்கும் பணத்தையெல்லாம் சேர்த்து வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக போதிய நிலங்கள் மட்டும் வாங்கிக் கொடுக்க வேண்டும். மேலும் மத்திய அரசாங்கத்தார் துளி துளியாக திட்டம் போட்டு பணம் கொடுப்பதாக இந்த அரசாங்கத்தார் சொல்லுகிருர்கள். என் பிராந்தியத்தில் நான் இருக்கும் ஊரில் 20 வீடுகள் கட்டதான் பணம் கொடுக்கும்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளுச்கு ஒவ்வொன்றுக்கும் 100 ரூபாய் கொடுக்கப்பட்டது. பாக்கித் தொகையை பிறகு கொடுப்பதாக அரசாங்கத்தாருக்கு சொன்ஞர்கள் வீட்டுக்காரர்கள். ஆனல் கடனுக இப்போது அந்த பாக்கியை கொடுக்க வேண்டாமென்று நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. இதுபற்றியெல்லாம் ஹரிஜன நல டிரெக்டரிடமும், ஹரிஜன இலாகா மந்திரியிடமும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆகவே ஹரிஜனங்கள் அவர்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தால் பயனடைவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. வீடு கட்டிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் பணத்தால் ஒரு சிலர்தான் பிரயோசனமடைய முடிகிறது. கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படும் பணம்தான் பல ஹரிஜனங்களுக்கு பிரயோசனப்படுகிறது. ஆகவே இந்தக் காரியங்களுக்காக எல்லாம் சேர்த்து மொத்தம் ஒரு ஊருக்கு 10,000—15,000 ரூபாய் செலவழிப்பதைவிட, எல்லா ஜில்லாக்களிலும் ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகளைக் கொடுத்துவிடுவது மிகவும் நல்லது. அவ்வாறு செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.



24th March 1958] [Sri M. P. Periasami]

அடுத்தபடியாக, முதுகுளத்தூர் சம்பந்தமாக ஏதோ சொல்லப்பட்டது. அதைப்பற்றி நான் பேச வேண்டியது அவசியமில்லை. இருந்தாலும் அது பற்றி இங்கே பேசப்பட்டதால் நானும் ஓரிரு வார்த்தைகள் மட்டும் அது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே அவர்கள் எல்லோரும் ஒன்ருக இருந்தது போலவும், அரசாங்கம் அவர்களைப் பிரித்து விட்டது போலவும் ஒரு கனம் அங்கத்தினர் பேசினர். தொன்றுதொட்டு அவர்கள் அவ்வாறு இருந்து வந்திருக்கலாம். எப்போதும் அவர்களுக்கு அடிமைகளாக இருந்து அவர்கள் சொல்கிறபடி நடந்து வந்தால் அப்படி இருக்கலாம். இல்லாவிட்டல் முடியாது. அவர்கள் சொல்கிறபடி நடந்துவந்தால் இன்னும் 5,000 வருஷங்களுக்கு அவர்கள் அடிமைகளாகவே இருப்பார்கள். ஹரிஜனங்களுக்காக நாம் பல சட்டங்களை இயற்றியிருக்கிருேம். எல்லாக் கட்சியினரும் ஹரிஜனங்களுக்கு ஆதரவாக இருக்கிருேம் என்று சொல்லுகிருர்கள். எந்தக் கட்சி பலன் கொடுக்கிறதோ, அந்தக் கட்சிப் பக்கம் ஹரிஜனங்கள் சேருகிருர்களே என்று சிலர் நினைக்கக்கூடும். அதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. யார் அவர்களுக்கு நன்மை செய்கிருர்களோ அவர்கள் பக்கம் போவதுதான் ஹரிஜனங்களுக்கு உசிதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஹரிஜன நலனில் எல்லாக் கட்சிக்காரர்களும் அக்கறை கொள்ள வேண்டும். காங்கிரஸ் அரசாட்சி வந்தவுடன் ஹரிஜனங்களில் ரொம்பப் பேருக்கு கெஜட் பதவி உத்யோகங்கள் கூடக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் அவ்வாறு உத்தியோகம் கொடுக்கப்பட்ட ஹரிஜனங்கள் 10—15 வருஷங்களாக முதலில் கொடுக்கப்பட்ட பதவியிலேயே இருந்துவருகிருர்களே தவிர, மேல் பதவிக்குப் போகவில்லை. காரணம், அவர்களுடைய " கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் "-ல் ஏதாவது பாதகமாக மேலதிகாரிகள் எழுதி வைத்துவிடுகிருர்கள். அதன் காரணமாக அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளிக்கப்படுவதில்லை. உத்தியோகம் பார்க்கப்போன ஹரிஜனங்களுக்குத் தான் இந்தக் கஷ்டம் தெரிகிறது. வீட்டில் இருக்கும் என்போன்றவர்களுக்கு இது தெரிவதில்லை. இந்த ஹரிஜனங்களுக்குக் கீழேயுள்ள குறைந்த ஸெர்வீஸையுடைய கீழ் அதிகாரிகளுக்கு இவர்களுக்கு மேல் உத்தியோக உயர்வு கொடுக்கப்படுகிறது. ஹரிஜனங்களை அப்படியே அழுத்தி கீழேயே வைத்திருக்கிருர்கள். அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படாததற்கு காரணம் கேட்டால் " கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் "-ல் நல்ல அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. கனம் மந்திரி அவர்கள் அந்த பைல்களை வாங்கிப்பார்த்தாலும் கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்டில் பாதகமாக எழுதப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைத் தான் குறிப்பிடுவார்கள். ஆகவே காங்கிரஸ் அரசாங்கம் எவ்வளவோ உத்தியோகங்கள் ஹரிஜனங்களுக்குக் கொடுத்தாலும் பல ஹரிஜன உத்தியோகஸ்தார்கள் உத்தியோக உயர்வின்றி கஷ்டப்படுகிருர்கள். இம்மாதிரி செய்வது சரியா? அவர்களுக்கு அப்போதைக்கப்போது உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும். அவர்கள் லஞ்சக் குற்றமோ வேறு எந்தக் குற்றமோ செய்திருந்தால் தண்டிக்கலாம். ஆனல் தகுந்த காரணமின்றி அவர்களை, உத்தியோக உயர்விற்கு லாயக்கில்லை என்று கீழேயே வைத்திருப்பது சரியா? அவர்களை இவ்வாறு உயிரோடு துன்புறுத்தலாமா? டெபுடி சூபரின்டெண்டெண்ட் ஆப் போலீஸாக இருக்கும் ஒரு ஹரிஜனனுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படாது. அவருக்குக் கீழே இருக்கும் ஸப்-இன்ஸ்பெக்டர் டி.எஸ்.பி.-ஆக உயர்த்தப்படுவார். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அரசாங்கம் இதை கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மற்ற ஜாதியினர் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து, சொல்ல வேண்டியதைச் சொல்லி, உத்தியோக உயர்வு பெற்றுவிடுகிருர்கள். ஹரிஜனங்கள் யாரைப் பார்த்து என்ன சொல்ல முடிகிறது? ஆகவே அவர்கள் கீழேயே இருக்கிருர்கள். ஹரிஜனங்களுக்கு கெஜட் பதவி உத்தியோகங்களை காங்கிரஸ் அரசாங்கத்தார் கொடுத்தாலும் அவ்வாறு உத்தியோகம் கொடுக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு மேலே இருக்கும் ஜாதி இந்துக்கள், அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுப்பதில்லை. ஹரிஜனங்கள் சார்பில் அந்த அதிகாரிகளுக்கும் மிகவும் வணக்கத்துடன் சொல்லிக்கொள்கிறேன். மேலதிகாரிகள் பெரிய மனதுவைத்து, உத்தியோகங்களுக்கு வரும் ஹரிஜனங்களுக்கு நல்லது செய்தால், அவர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும்.

[Sri M. P. Periasami] [24th March 1958

3-30 p.m. இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். அதெல்லாம் சற்று தாமதமாக வருகிறது என்று சொல்லுகிறார்கள். சில பள்ளிக்கூட தலைமை ஆசிரியர்களிடமிருந்தோ, காலேஜ் பிரின்சிபால்களிடமிருந்தோ விண்ணப்பங்கள் நேராக வருவதில்லை, காலதாமதம் ஆகிவிடுகிறது, இவைகளையெல்லாம் அவ்வப்போது கவனித்து, அதைக் கொஞ்சம் ஒரு மாதம், 2 மாதம் தள்ளிவைத்து அதற்கு தகுந்த முறையில் செய்யவேண்டும்.

ஹரிஜன நல இலாகாவைப் பற்றி நான் முதலில் சொன்னது ரொம்ப முக்கியமானது. ஜாதி இந்துக்களையோ, ஐயரையோ, பிராம்மணரையோ ஹரிஜன நல இலாகா டைரக்டராகப் போடும் முறை சிறந்தது. அப்படிப் போட்டால் அவர்கள் நல்லது செய்யும் முடியும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI P. S. ELLAPPAN : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலிருந்து ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி இங்கு எல்லோரும் ஒரே இராகத்தைத்தான் வருணித்துக்கொண்டு வருகிறார்கள். இதிலே ஏதோ மாற்று இராகம் வருமா என்று பார்த்தால் ஒன்றும் காணோம். அப்படிச் செய்யவில்லை, இப்படிச் செய்யவில்லை என்று சொல்லி எல்லோரும் ஒரே இடத்தில் தான் வந்து சேருகிறார்கள். ஆகவே, நான் சொல்ல என்ன இருக்கிறது? நான் ஏதாவது சொல்லவேண்டுமென்று நினைத்திருக்கும்போது, எல்லோரும் சந்தை அடைத்துவிட்டார்கள். சொல்லவேண்டியது ஏதாவது மிச்சம் இருக்கிறதா என்று பார்த்தால் அதற்கும் வழி இல்லை. ஆகவே, எல்லாம் சரியாய்ப் போச்சு. ஹரிஜன மான்யம் விவாதிக்கப்படும்போது காலரி கூட நிச்சிந்தையாக இருக்கிறது. சபையில் இருக்கும் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைத்தான் பாருங்கள். ஆகவே, இன்றைய தினத்தில் இந்த விஷயமாக ஒரே ஒரு விஷயம் சொல்லலாம் என்று யோசிக்கிறேன். இதற்கு மேல் சொல்வதற்கு வழி இல்லை. சொல்லவும் தெரியாது. அது என்னவென்றால், சர்க்காரிடத்திலே 30 லட்சம் ஏக்கர நிலம் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலங்களை உடனடியாக ஹரிஜனங்களுக்கு எந்தவித சாக்குப்போக்கும் சொல்லாமல், சர்வே, சர்வே, சர்வே என்று சொல்லிக்கொண்டிராமல், ஜாரி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். இம்மாதிரி யோசனைகளை நாங்கள் சர்க்காருக்கு எடுத்துச் சொல்லலாம சட்டசபையில். ஆனால், சர்க்கார் அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றவேண்டும். அப்படி அவர்கள் நிறைவேற்றாமல் இருந்தால் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? "என்ன ஐயா! உங்களை சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினோம், ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள், எங்களுக்கு ஏதாவது செய்யக் கூடாதா? எங்களுக்காகப் பேசக்கூடாதா?" என்று கேட்கிறார்கள். அதற்கு நான், "எண்ணபண்ணுகிறது, அப்பா. அம்மி எல்லாம் காற்றில் பறக்கிற பாட்டில், என் சமாசாரத்தைக் கேட்க யார் அப்பா இருக்கிறார்கள்? நான் ஒரு சமயம் பார்த்து ஏதாவது சொல்வேன், அது கூட முடியாத சமாசாரமாக இருக்கிறது" என்று சொல்லுவேன். இந்த 30 லட்சம் ஏக்கர் சம்பந்தமாக நேற்றிரவு என்னிடம் ஒருவர் வந்து சொன்னார். அந்த நிலத்தை ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்துகொடுக்க வேண்டும். ஏனென்றால், ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலே எல்லோரும் ஒரே கருத்து உடையவர்களாக இருக்கிறோம். ஹரிஜனங்கள் இன்றைக்கு மிகுந்த கஷ்டப்படுகிறார்கள்.

1942–லே உணவு உற்பத்தியை அபிவிருத்தி பண்ணவேண்டும் என்பதற்காக, "ஏரிப் புறம்போக்கைப் பயிரிடுங்கள்" என்று சொன்னார்கள். அதையெல்லாம் பார்த்து உழுது, வரப்பு கட்டி, கிணறு எடுத்து பயிரிட்டு வந்தால், ஒரு ஏக்கருக்கு வருஷத்திற்கு 15 ரூபாய் வீதம் தண்டத் தீர்வையா அவர்களுக்கு விதிப்பது? இம்மாதிரி தண்டத் தீர்வை கேட்டால் தரித்திரர்கள் எப்படிக் கொடுக்கமுடியும். வசதியுள்ள விவசாயிகளாக இருந்தால், இப்படிப்பட்ட தீர்வையை செக் மூலமாகவோ, பர்ஸிலிருந்தோ எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். இந்த தரித்திரன் தன்னுடைய கோவணத்திலிருந்து அவிழ்த்துக்கொடுக்கிறான். ஆகவே, அப்படிப்பட்டவர்களை ரொம்பவும் கவனிக்கவேண்டும்.



24th March 1958] [Sri P. S. Ellappan]

ஏழை விவசாயி என்ன நிலைமையில் இப்பொழுது இருக்கிறான்? எப்படி ஜீவிக்கிறான், அதற்கு என்ன செய்யவேண்டும்? என்று பார்க்க வேண்டும். மில்கள் இருக்கும் பக்கத்தில் திரும்பினால் மில் தொழிலாளர்கள் ஏதோ பரவாயில்லை. ஆனால், விவசாயி பக்கம் திரும்பினால் ஒன்றுமே இல்லை. சமீபத்தில் கிண்டியில் இருக்கும் தோல் பதனிடும் கம்பெனியை நாங்கள் பார்க்கப்போனோம். தோலினால் செய்யப்பட்ட, அழகு அழகான பொருள்கள் வைக்கப்பட்டதைப் பார்த்தோம். இத்தாலி, ரஷ்யா தேசத்துப் பொருள்கள்போல் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவ்வளவெல்லாம் இருக்கின்றனவே, விவசாயிக்கு வேண்டிய பொருள் ஏதாவது இருக்கிறதா என்று ஒவ்வொன்றாக, சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். தண்ணீர் இறைப்பதற்காக ஏதாவது தோல் இருக்குமா என்று பார்த்தேன். பெருத்த ஏமாற்றமாக இருந்தது. விவசாயத்திற்கு வேண்டிய பொருள் ஒன்றுமே அங்கு இருக்கவில்லை. அங்கு கோடி கோடியாக ரூபாய் செலவழிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், முக்கியமாக விவசாயத் தொழிலை நம்பியிருக்கக் கூடியவர்களுக்குத் தேவையான, கிராம மக்களுக்குத் தேவையான காரியங்கள் என்ன என்ன செய்யவேண்டுமோ அதை நம் சர்க்கார் செய்யவேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

எங்கள் தாலுக்காவில் நான்கு வருஷத் தீர்வையை ஒரேயடியாகச் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். வசூல் செய்ய முயற்சிக்கிறார்கள், ஜரூராக இருந்து, 14 லட்சம் ரூபாய் வரை வசூல் செய்தார்களாம். கபிலைத் தோல், மாடு, கன்றுகள், கல்பைகள், நுகத்தடி இவைகளைக்கூட தீர்வைப் பாக்கிக்காக தாலுகா ஆபீசுக்குக் கொண்டுபோய் ஏலம் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள் ? "அடப் பாவிகளே, இராமராஜ்யம் என்று சொன்னார்களே, காந்தியம் என்று சொன்னார்களே இந்தச் சர்க்காரைப் பார்த்து, இவர்கள் செய்யும் அநியாயத்தைப் பாருங்கள், இப்படி வசூல் செய்கிறார்களே!" என்று பரிதபிக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதைப் பார்க்க எனக்கு உடம்பு எரிகிறது. நம்முடைய இராஜ்ய சர்க்காரைப்பற்றி இப்படிச் சொல்லுகிறார்களே என்று நினைப்பது உண்டு. ஆனால், இவர்கள் பண்ணுகிற அநியாயத்தைப் பார்க்க எனக்குக் கூட சகிக்கவில்லையே, என்ன செய்வது? இம்மாதிரி நிலை இருப்பது பரிதாபத்திற்குரியது.

சேரிகளில் விளக்கு ஏற்பாடுசெய்வதைப் பார்த்தால், அதுவும் திருப்திகரமாக இல்லை. இவர்கள் ஒரு பக்கம் லைட் போட்டுவிட்டுச் சென்றால், கொஞ்ச நாள் சென்று பார்த்தால் லைட் இருக்கிற இடம் தெரியாமல் போய், கம்பம் தான் மிச்சமாக இருக்கிறது. விளக்கு போட்டு 25 நாள் வரை பல்பு எரிகிறது ; பிறகு எரிவது இல்லை. காரணம் என்னவென்று கேட்டால், அதற்குறிய பணம் கட்டவில்லை என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி கஷ்டம் இருக்கிறது. ஹரிஜனங்களுக்குச் செய்யும் சலுகைகளோடு, முக்கியமாக சேரிகளுக்கு லைட் போடும் விஷயத்தை இனமாகப் போடும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கம்யூனிடி ஹால் என்பதை எங்கே கட்டுகிறார்கள் ? நன்றாக இருக்கும் கிராமங்களில் கட்டுகிறார்கள். ஏன் இப்படி அழுக்கான துணிக்கு சோப் போடவேண்டுமா ? சுத்தமான துணிக்கு சோப் போடவேண்டுமா ? அது போல ஆபாசமாக, அசுத்தமாக, நிலைமை தெரியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற ஜனங்கள் வசிக்கும் தெருக்களுக்கு முக்கியமாக லைட் வசதி செய்து கொடுக்க வேண்டும் ; அந்த இடங்களில் இரவுப் பாடசாலை வைத்து அங்குள்ளவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கவேண்டும். ஏதோ "இம்ப்ரூவ்மெண்ட்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அவையெல்லாம் கஷ்டப்படுகிற சுத்தத்தைப் பற்றி தெரியாத மக்கள் வசிக்கும் இடங்களிலே செய்து கொடுக்கவேண்டும். இதையெல்லாம் ஒருவிதமாக நிவர்த்தி பண்ணவேண்டும். ஏதோ ஹரிஜன சமூகத்திற்குச் செய்கிறார்கள். ஆகையால் நானும் குறை சொல்வதற்கில்லை. இருந்தாலும், அங்கேயிருக்கும் நிலைமையைப் பார்த்தால், செய்யாறு ஹைஸ்கூல், மதுராந்தகம் ஹைஸ்கூல் அச்சரபாக்கம் ஹைஸ்கூல், கருங்குழி ஹைஸ்கூல் ஆகியவைகளில் படிக்கும் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு இன்னும் ஸ்காலர்ஷிப் போகவில்லை. இது அங்கே உள்ள நிலைமை. ஆனால், இங்கே என்ன பேசப்படுகிறது? கோடி

[Sri P. S. Ellappan] [24th March 1958

கோடியாக ஒதுக்கிவிட்டதாகப் பேசப்படுகிறது. இங்கே மூன்று லட்சம் அங்கே நான்கு லட்சம் என்று லட்சக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் பேசப்படுகிறது. ஆனால், அங்கு ஸ்காலர்ஷிப் போகவில்லை. பிறகு எங்கே தான் இந்தப் பணம் போகிறது? யாரிடம் போகிறது என்பது ஒன்றுமே புரியவில்லை. வாயில்லாத ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். . ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இம்மாதம் 31-ந் தேதிக்குள்ளாக எல்லாவற்றையும் சேர்த்து அனுப்புவதற்கு வழிசெய்துவிட்டு மறுவேலை பார்க்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** ஐந்து நிமிஷங்கள் போதுமானால் ஸ்ரீமதி இலட்சுமி காந்தம்மாள் பேசலாம்.

**Srimathi P. K. R. LAKSHMIKANTHAM :** கனம் சட்டசபைத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன முன்னேற்ற மான்யத்தை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஹரிஜன முன்னேற்றம் என்று சொல்லும்போது, இந்த ஹரிஜனங்களுடைய நிலைமையைக் கூர்ந்து கவனித்து அவர்கள் மக்களாக நடத்தப் படவில்லை, மக்களாக நடத்தப்படுகிறார்கள் என்பதை முதன் முதலில் உணர்ந்தவர் நமது அண்ணல் காந்தியடிகளாவார்கள். அவர்கள்தான் இந்தக் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினவர்கள். அந்தக் காங்கிரஸ் ஸ்தாபனத்திலே உள்ள 18 நிர்மாணத் திட்டங்களோடு, ஹரிஜன முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு ஆகிய இரண்டு திட்டங்களையும் சேர்த்து ஹரிஜனங்களுக்காகப் பாடுபடவேண்டும் என்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டியவர் மகாத்மா காந்தியடிகள்தான். இந்தக் காங்கிரஸ் ஸ்தாபனம் தான். அதே காங்கிரஸ் ஸ்தாபனம் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகும் ஹரிஜன மக்களுடைய நலனைப்பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு, எத்தனை துறைகளில் அவர்களுக்காக சேவை செய்ய முடியுமோ அத்தனை துறைகளிலும் சேவை செய்துகொண்டு வருகிறதென்பதை நினைக்கும்போது நாம் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவே முடியாது.

ஹரிஜனங்களுக்கு மாத்திரம் அவர்கள் சேவை செய்யவில்லை. இதர பிற்போக்குச் சமூகங்களைப் பற்றியும் இந்த அரசாங்கம் நன்றாகத் தான் கவனித்துக்கொண்டு வருகிறது. இருப்பினும் ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. சௌராஷ்டிரர் சமூகம் என்று ஒன்று இருக்கிறது, என்பதை நான் இங்கு உணர்த்த விரும்புகிறேன். அவர்கள் இம்மாகாணத்திலே இரண்டு லட்சம் ஜனத்தொகை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஒரு லட்சம் ஜனத்தொகை மதுரையிலும், மற்றொரு லட்சம் ஜனத்தொகை இதர ஊர்களிலும் பரவிக்கிடக்கின்றனர். அவர்கள் பிற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை 'மிகவும் பின் தங்கியவர்கள்' என்னும் வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். காரணம், படிப்பிலும் பொருளாதாரத்திலும் அவர்கள் மிகவும் பின் தங்கியுள்ளனர். இதுவரை அவர்கள் பிற்போக்குச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்பட்டு, அவர்களுக்கு கல்விச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், அண்மையில் மிகப் பிற்போக்கான சமூகத்தவர்கள் லிஸ்ட்டிலே அவர்களைச் சேர்க்காமல் இருந்ததினாலே ஏற்கெனவே ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளெல்லாம் இன்று நட்டாற்றில் விடப்பட்டு தவிக்கிறார்கள். ஏற்கெனவே பணத்தைப் பெற்றுக்கொண்டுவந்தவர்கள் இப்பொழுது மத்தியில் படிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர். ஆகையால், இனிமேலும் தாமதம் செய்யாமல் அவர்களுக்கு வேண்டிய பண உதவி கொடுத்து அவர்களைப் படிக்க வைக்கவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கின்றேன். நான் இதைப் பற்றி பேசியிருக்க மாட்டேன். ஆனால் மிகவும் பிற்பட்ட சமூகமாக இருக்கிற அவர்கள் படுகிற கஷ்டம் மிகவும் அதிகமாக இருப்பதனால் அதைப் பற்றி பேசினேன். பல ஊர்களில் சென்று பார்த்தால் அவர்களின் கீழான நிலையை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். வேண்டுமானால் என்னுடன் வந்தால் நான் அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று அந்த பிற்பட்ட சமூகத்தினுடைய கீழான நிலைமையைக் காண்பிக்கத் தயாராய் இருக்கிறேன். கல்வித் துறையிலும், பொருளாதாரத்



24th March 1958] [Srimathi P. K. R. Lakshmikantham]

துறையிலும் அவர்களுடைய நிலைமையை உடனடியாக உயர்த்துவது நமது அமைச்சர் அவர்களுடைய கடமை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே இந்த அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட ஸ்காலர்ஷிப்பும், மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஸ்காலர்ஷிப்பும் நின்றுவிட்டன. தொழிற் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவர்களும், வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவர்களும், ப்ரீ யூனிவர்சிடியில் படித்துக் கொண்டிருந்தவர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்குத் தந்தி மேல் தந்தியாகவும், கடிதங்களாகவும் வந்து கொண்டிருப்பதன் காரணமாக மிகவும் வருத்தத்தோடு இவ்விஷயத்தை இங்கே சொல்லிக்கொள்கிறேன். ஆகையால் அவர்களுடைய ஒரு குறையை இந்தச் சர்க்கார் உடனடியாகப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI :** கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்த அளவில் ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சரி, எதிர்கட்சியில் இருப்பவர்களும் சரி எவ்வித வித்தியாசமும் இன்றி எல்லோரும் பலபல தலைமுறைகளாக மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்த ஹரிஜன சமூகம் முன்னேறவேண்டும் என்கிற எண்ணத்தோடு ஒருமுகமாக ஆதரிக்கக் கடமைபட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு இன்றளவும் இருந்து வந்திருக்கிற அந்த ஹரிஜன சமூகம் முன்னேற்றம் அடைந்தால்தான் இந்தியா தேசம் முன்னேற முடியும் என்பதை இங்குள்ள அங்கத்தினர்கள் அத்தனை பேரும் உணர்ந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. சுதந்திர இயக்க காலத்திலிருந்தே ஹரிஜன முன்னேற்றத் திட்டத்தை நமது நிர்மாண திட்டங்களில் ஒன்றாக வைத்துக்கொண்டே செயல்பட்டு வந்திருக்கிறோம். சுதந்திரம் அடைந்து நம்முடைய இலட்சியத்தை நாமே வகுத்துக்கொள்ளும் போதும்கூட அரசியல் சட்டத்தில் 46-வது ஷரத்தில் மிகவும் தெளிவாக ஹரிஜனங்களுடைய கல்வியிலும், பொருளாதாரத்திலும் விசேஷ கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாக சங்கற்பம் செய்துகொண்டிருக்கிறோம். அந்த வேலைக்காகவே இந்த மான்யத் தொகை ஒதுக்கப்படுகிறது இதைப்பற்றி விவாதிக்கும்போது பலதரப்பட்ட கருத்துக்கு என்ன இடம் இருக்கிறது என்று கேட்கலாம். பலதரப்பட்ட கருத்துக்கு இடந்தராவிட்டாலும்கூட சுதந்திரம் அடைந்து 8 ஆண்டுகள் ஆன போதிலும்கூட இன்னமும் நாம் எதிர்பார்த்தபடி அவர்களுடைய நிலைமை முன்னேற்றம் அடையவில்லையே என்கிற தாபத்தினால்தான் ஆளும் கட்சியில் இருந்தும் சரி, எங்களுடைய கட்சியில் இருந்தும் சரி பலபேர்கள் கொஞ்சம் ஆவேசமாகப் பேசியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் ஒன்று. இதர இராஜ்ஜியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு இன்னமும் தீண்டாமை கொடுமை இருப்பதற்கு மிகவும் வெட்கப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். 1955-ம் வருஷம் அகில இந்திய ரீதியில் ஹரிஜன முன்னேற்றம் பற்றி விசாரணை செய்வதற்காகப் போடப்பட்டிருந்த கமிஷன் தன்னுடைய அறிக்கையில் கொடுத்திருக்கக்கூடிய விவரங்கள் நம்மை வெட்கம் அடையச் செய்கின்றன. தீண்டாமை குற்றத்திற்காக தண்டனை பெற்றிருப்பவர்கள் நம்முடைய இராஜ்ஜியத்தில்தான் ஆறு மாதங்களில் 74 பேர்களாம். பம்பாயில் ஒன்று. உத்திரப்பிரதேசத்தில் இரண்டு. இதர பல இராஜ்ஜியங்களில் இல்லவே இல்லை. ஆகவே தீண்டாமை என்பதை அறவே ஒழிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் தக்கபடி நடவடிக்கை எடுத்துக்கொண்டாலன்றி நம்முடைய மாகாணத்திற்குள்ள களங்கம் நீங்காது. அதுமட்டுமல்ல. பொருளாதாரத்துறையில் ஹரிஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றி வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்தவர் கடுமையாகப் பேசினார். அரசாங்கம் எத்தனையோ முறைகளைக் கையாண்டாலும் அவர்களுடைய குறைகள் பூர்ணமாக இன்னமும் நிவர்த்திக்கப்படவில்லை, போன சந்தர்ப்பத்தில்கூடக் குறிப்பிட்டேன். குறிப்பாக கன்னியாகுமரி மக்கள் தாயகத்தோடு சேர்ந்தும் தங்களுக்கு எவ்வித நன்மையும் அங்கே இருந்தபோது கிடைத்ததுகூட கிடைக்கவில்லையே என மனம் புழுங்குகிறார்கள். அப்படிச் சொல்லும்போது அங்கு ஏதோ சொர்க்க

லோகமாக இருந்தது என்று சொல்ல வரவில்லை. உதாரணமாக ஆரம்பப் பள்ளியில் இருந்து, உயர்நிலைப் பள்ளி வரையில் அங்கு இருக்கும்போது புத்தகம், ஸ்லேட் இதர செலவுக்கு கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப் பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாதத்திற்குள்ளாகக் கிடைத்துவிடும். ஆனால் இங்கே சேர்ந்த பிற்பாடு வருஷம் முடியப்போகிறது—நான் பட்ஜெட் கூட்டத்திற்கு வரும் வரையிலும் தரப்படவில்லை என்பதாக எனக்குத் தெரியும். இதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரியில் மட்டுமல்ல. அங்கேயுள்ள இதர தாலுக்காகளிலும் இதே நிலைமை தான். நாம் முழுமூச்சுடன் பல திட்டங்களைத் தீட்டுகிறோம். ஆனால் அவர்களுக்கு வேளாவேளைக்குக் கிடைக்க வேண்டிய உதவி கிடைக்கவில்லை என்றால் எப்படி அந்த ஹரிஜன மாணவர்கள் படிப்பார்கள்? புத்தகம் இல்லாமல் படிக்க முடியுமா? இதனால் ஏற்படக்கூடிய தீமை முழுவதும் இந்த அரசாங்கத்தையே சாரும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன இலாகாவைப் பொறுத்தவரையில் இன்று அவ்விலாகாவுக்குத் தலைவராக ஒரு ஹரிஜனரே இருக்கலாம். இது பெருமை படக்கூடிய விஷயம். டைரக்டர் பணத்தை ஹரிஜன மாணவர்களுக்கு ஜில்லாவாரியாக ஒதுக்கி வைக்கிறாரே தவிர இவர் வேறு ஒன்றும் செய்வதில்லை. ஜில்லாவிலுள்ள கலெக்டர்கள் தான் ஸ்காலர்ஷிப் வழங்கவேண்டியிருக்கிறது. ஆகவே இனிமேல் பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாதத்திற்குள்ளாக ஸ்காலர்ஷிப் வழங்காவிட்டால் ஏன் வழங்கவில்லை என்பதாக விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். தொகையை ஒதுக்கிவிட்டால் மட்டும் போதாது. ஒதுக்கப்பட்ட தொகை கீழேயுள்ள அதிகாரிகளால் சரியான முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்று பார்த்து இல்லையானால் அவர்கள் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாக எதிர்கட்சிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அதோடு முன்பு கல்லூரிகளில் சேர்ந்துவிட்டால் ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது. ஆனால் இப்போதோ கல்லூரிகளில் சேர்ந்துவிட்டால் மட்டும் போதாது. ஹாஸ்டலில் இடம் கிடைத்தால் தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. அதனால் ஹாஸ்டலில் சேருவதற்குப் போட்டி.

அதற்கு ஒருவருக்கொருவர் போட்டி. அதற்கு சிபார்சு. அதிலும் டவுனில் உள்ளவர்களுக்கு கிடையாது. மூன்று மைல்களுக்கு அப்பால் இருந்தால்தான் கிடைக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதால், பல ஹரிஜன மாணவர்கள், புத்திசாலிகளான மாணவர்கள், தாங்கள் நன்கு கல்வி அறிவு பெற வேண்டுமென்று விரும்பும் மாணவர்கள், அவர்களுக்கு அரசாங்க ஸ்காலர்ஷிப் போகாததால் படிப்பை விட்டு விடுகிறார்கள். போன தடவை இதைப் பற்றி கூறினபோது அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அவர்கள் பீடி சிகரெட் குடித்து விட்டு பணத்தை வேஸ்ட் செய்து விடுவார்கள், அதற்காக ஹாஸ்டலில் இருக்கவேண்டும் என்று. நான் சொல்கிறேன். அந்த மாணவர்கள் உத்தமமான மாணவர்கள். அவர்கள் ஒழுங்கானவர்கள். படிக்க வேண்டுமென்று ஆர்வம் உடையவர்கள். அவர்கள், ஹாஸ்டலில் இடமில்லை என்று சொல்லி வெளியே போக வேண்டிய துர்பாக்கியமான நிலை இன்றிருக்கிறது. ஆகவே, இதற்காக நிச்சயம் அதிக தொகை ஒதுக்க வேண்டும். இதற்கு யாரும் ஆட்சேபம் சொல்லமாட்டார்கள். முன்னுக்கு வரக்கூடிய மாணவர்கள் இந்த ஸ்காலர்ஷிப் இல்லாததால் படிக்க முடியாமல் அலங்கோலமான நிலையில் போகிறார்கள். அதுபோலவே, இன்னொரு விஷயம். நம்முடைய விதிகளைப் பொறுத்தளவில் கல்லூரிகளில் படிக்கிறவர்களும் சரி, அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் ஸ்கூல் பைனலில் படிக்கிறவர்களும் சரி, முதலில் பரிட்சைக்கான பணத்தை அவர்கள் அடைக்க வேண்டும். அப்படி பணம் அடைத்து விட்டு ஹரிஜன மாணவன் என்று சர்டிபிகேட் கொடுத்தால் அந்தப் பணத்தை திரும்பக் கொடுப்பார்கள். அப்படி பணம் அடைக்கும் சக்தி அவர்களுக்கு இருந்தால் எதற்காக அவர்கள் உங்களிடம் ஸ்காலர்ஷிப் கேட்கிறார்கள்? ஆகவே, அந்த விதிகளை மாற்றவேண்டும். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், ஹரிஜன மாணவர் என்று தெரிந்து விட்டால் அவர்கள் நிச்சயம் பணம் அடைக்கக்கூடாது. அதாவது அவர்கள் பணம் அடைக்க வேண்டாம் என்று இருக்க வேண்டும். இதனால் அரசாங்கத்திற்கும் நஷ்டம் கிடையாது.





ஆகவே, ஏன் இந்த விதிகளை மாற்றவில்லை என்று நான் கேட்கிறேன்? காங்கிரஸ் கட்சியில் உள்ள அம்மையார் அவர்கள் இதைப்பற்றி வெகு அழகாக எடுத்துக் கூறினார்கள். பல ஜில்லாக்களில் ஹரிஜன மாணவர்கள் படும் அல்லல்களை மாதக்கணக்கில் அவர்கள் ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் படும் அல்லல்களைப்பற்றி ஆளும் கட்சியில் இருப்பவர்களும், எதிர் கட்சியில் இருப்பவர்களும் எவ்வளவோ தூரம் எடுத்துச் சொன்ன போதிலும் கூட ஏன் நீங்கள் அந்த விதிகளை மாற்றவில்லை என்று நான் மீண்டும் கேட்க ஆசைப்படுகிறேன். அதேபோல், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கத்தில் இருந்து திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். உதாரணமாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்க 285 ரூபாய் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது, என்பது ஸ்டேமெண்ட். அதாவது காளை வாங்குவதற்கு. கன்னியாகுமரி ஜில்லாவை பொறுத்த மட்டில் 130 ஜோடி காளைகள் வாங்கப்பட்டன. திருநெல்வேலியில் 400 ஜோடி காளைகள் ஏன் வாங்கப்பட்டன என்று கேட்கிறேன். அதுவும் அவசர அவசரமாக வாங்குகிறார்கள். ஒரு ஆபிஸர் போய் வாங்குவது என்றால் அவர்கள் 50, 60 ரூபாய் விலையுள்ள மாடுகளுக்கு கூடுதல் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். அந்த மாட்டை விவசாயிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் எங்களுக்கு இது அவசியமில்லை என்று சொல்லக்கூடிய நிலைமையில், நிலைமை மிகவும் மோசமாகப் போய்விட்டது. அவர்களுக்கிடையே போட்டி போட்டுக் கொண்டு, எனக்கு இந்த ஜோடி வேண்டும், எனக் இந்த ஜோடி வேண்டும் என்றும் போட்டியிருக்கிறது. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், அந்த ரூபாயை அவர்கள் கையில் கொடுத்து விட்டால் அவர்களே போய் நல்ல மாடாகப் பார்த்து வாங்கிக் கொள்வார்கள். அதேபோன்று குடிசைக் கைத்தொழிலுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அறிக்கையில் அந்த அட்டவணை வந்திருப்பதைப் பார்க்கும்போது சென்ற ஆண்டு எங்களுக்கு கிடைத்த ஏமாற்றத்தை கூற வேண்டியிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் 60,000 ரூபாய்க்கு குடிசைக் கைத்தொழில்களுக்கு என்று மூன்று திட்டங்கள் அனுப்புங்கள் என்று இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டில் இருந்து வந்தது. செங்கல் செய்யும் திட்டம், கார்போர்ட், சோப் செய்வது போன்ற திட்டங்கள் அனுப்பப்பட்டது. இரண்டு மாதங்களுக்குப் பின்னால், இப்பொழுது போதிய பணம் இல்லை, ஆகவே, ஒரு திட்டம் போடுங்கள் என்று சொல்லப்பட்டு செங்கல் (பிரிக்ஸ்) திட்டம் அதையாவது கொடுங்கள் என்று சொன்னோம். அதற்கும் இப்பொழுது பணம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். ஆகவே, நான் சொல்வது இப்படி திட்டங்கள் போட்டுக் கொண்டே போவதை விட குறைந்தளவு திட்டங்கள் போட்டு அவைகளையாவது சரிவர நிறைவேற்றுங்கள், என்று பணிவுடன் ஆனால் வன்மையுடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல் விவசாயிகளுக்காக நிலம் கொடுப்பதாக திட்டத்தில் பார்த்தேன். அது உண்மையானால், அது போற்றத்தக்கதே. அதைப்பற்றி காங்கிரஸ் அங்கத்தினர்களிடமும், இதர அங்கத்தினர்களிடமும் கேட்டேன். இந்த ஆண்டு 48,000 ஏக்கர் கொடுத்திருப்பதாக, அஸைன் செய்து கொடுத்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஐந்து வருடத்தில் ஏறக்குறைய மூன்று லட்சம் ஏக்கர் நிலம் ஏழை ஹரிஜன மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. அப்படியானால் நிச்சயம் அது போற்றத்தக்கதே. ஒவ்வொரு ஜில்லாவைப்பற்றியும் கேட்கும்போது, ஆயிரம் ஏக்கர் கூட எங்கள் ஜில்லாவில் தரவில்லையே என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆகவே ஜில்லாவாரியாக இந்த வருஷத்தில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினால் மிகவும் உபகாரமாக இருக்கும். அது மட்டுமல்ல. ஹரிஜனங்களில், 99 சத விகிதம் ஏழை விவசாய மக்களாவர். அவர்கள் இந்த நாட்டில் உணவை உற்பத்தி செய்யும் மக்களாவர். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய உதவி அளிப்போமேயானால், நாட்டில் உற்பத்தியும் பெருகும். அவர்களின் ஏழ்மையும் நீங்கும், அவர்களுக்கு தொழில் கொடுத்தது மாதிரியுமாகும். ஆகவே, அவர்களுக்கு நிலம் வழங்குவதோடு கூட, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது, விவசாயத் தொழிலாளிகளாக இருக்கும் லட்சோபி லட்சம் ஹரிஜன மக்களை, அதாவது விவசாய தொழிலாளர்களாகிய ஹரிஜன மக்களை, மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழ் கொண்டுவந்து அவர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்க வேண்டுமென்று என்னுடைய நண்பர் ஜகன்னாதன் அவர்கள்

எடுத்துச் சொன்னார்கள். அதில் ஒன்று எனக்கு வியப்பாக இருக்கிறது. நேற்று அவர்கள் லேபர் கமிஷனர் அவர்களிடம் கேட்டார், இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜ் என் நிச்சயிக்கப்படவில்லை, அது எந்த நிலையில் இருக்கிறது என்று. அதற்கு அவர் சொன்னார், அந்தத் தொழில் வேறு தொழிலைப் போல் அல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிப்பது மிகவும் கஷ்டமான காரியம். அப்படி நிர்ணயிப்பது கஷ்டமான காரியம் என்பதோடு கூட, அதை அமுல் நடத்துவது அதை விட கஷ்டமான காரியம் என்று சொன்னார்கள். அதோடு, இந்தியாவில் வேறு எந்த தேசத்திலும் இப்படி நடந்ததில்லை என்று ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி சொன்னார்கள். அதை கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். மினிமம் வேஜ் கமிட்டியில், அந்த ராஜ்யத்தில் உள்ள கமிட்டியில், நானும் ஒரு அங்கத்தினராக இருந்தேன். நான் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களுக்கு கோபம் வராது. ஆனால் வேறு அமைச்சர் ஒருவருக்கு கோபம் வரும். கேரளம் என்றவுடனேயே, "அலெர்ஜிக்" என்று சொல்வார்களே, அதுமாதிரி அவர்களுக்கு வருகிறது. அந்த ராஜ்யத்திலே இது இப்பொழுது அமுல் நடத்தப்படுகிறது. அதில் சிக்கல்கள் இருக்கலாம். கஷ்டங்கள் இருக்கலாம். நல்ல காரியத்திற்கு 400 கஷ்டங்கள் என்று சொல்வது போல் நல்ல காரியம் ஒன்று செய்வதில் கஷ்டங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் இந்நாட்டில் உணவை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலை உயர நாம் முன் கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதே போல் இன்னும் பல துறைகளிலும் ஹரிஜன முன்னேற்றத்திற்காக திட்டங்கள் தீட்டப்படவேண்டும். அவைகளை சரியான முறையில் நடத்துவதற்கு, விதிகள் தடையாக இருந்தால் அவ்விதிகளை மாற்ற வெண்டும். அதிகாரிகள் அவைகளை நிறைவேற்றுவதில் அசிரத்தையாக இருந்தால் அவர்களுக்கும் சரியானபடி பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு இந்த சபையைப் பொறுத்த வரையில், இந்த ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தப்பட்ட வரையில் எல்லாக் கட்சியினரும் தங்கள் தங்கள் ஒத்துழைப்பை ஆர்வத்தோடு தர முன்வருவார்கள் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI C. N. ANNADURAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஹரிஜனத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த தொகையை அனுமதிப்பதற்கு முன்னால் அந்த துறை எந்த வகையில் நிர்வகிக்கப்படுகிறது எனபதைப் பற்றி எங்களுக்குள்ள சில கருத்துக்களையும் யோசனைகளையும் எடுத்துச் சொல்வதற்காக வெட்டுத்தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. அதை ஆதரிக்கின்ற வகையில் நான் சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அங்கத்தினர்கள் எதிர் தரப்பிலிருந்து பேசுகின்றவர்கள் குறைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பதால் கனம் அமைச்சர் அவர்களுக்கு உற்சாகம் குறைந்துவிடும் என்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லுவதால் உற்சாகம் குறைந்துவிடும் என்று நான் கருதவில்லை. உற்சாகம் குறைந்துவிடும் என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டு பேசுவது என்றால் உற்சாகத்தை கொடுக்கக்கூடிய வார்த்தைகளை—கக்கன் அவர்கள் வாழ்க—கனம் கக்கன் அவர்கள் வாழ்க—அவர்களுடைய மேற்பார்வையில் ஹரிஜன மக்கள் நீடூழிகாலம் வாழ்க என்று சொல்லலாம். குறைகளை எடுத்துச் சொன்னால் அமைச்சர் அவர்களுக்கு திருப்தி அளிக்காது என்று சொன்னார்கள். செய்கின்ற காரியங்கள் நல்ல நோக்கத்தோடு செய்யப்படுகின்றனவா என்பதை ஆராயும் நோக்கம் மட்டுமல்ல, அந்த நோக்கங்கள் சரியானபடி நிறைவேற்றபடுகின்றனவா, நிறைவேற்றப்படுவதற்கு செலவழிக்கப்படும் தொகை சரியான அளவுக்கு அதே நோக்கத்திற்காக பயன்பட்டதா என்று பார்ப்பது மிக முக்கியமான ஒரு அம்சமாகும். இதில் எந்த கட்சி ஹரிஜனங்களுக்கு வேண்டிய கட்சி, எந்த கட்சி ஹரிஜனங்களுக்கு நன்மை செய்தது என்பது பற்றியுள்ள அரசியல் கருத்து வேற்றுமைகள் வேகமாக விவாதிக்கப்பட்டது. ஒரு கருத்தை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துச் சொல்வேன்—ஹரிஜனங்களை புறக்கணித்து விட்டு தமிழகத்தில் எந்த கட்சியும் நிலைநிற்க முடியாது—ஆகையால்



தான் எந்த அரசியல் கட்சியாய் இருந்தாலும் சரி ஹரிஜனங்களுக்கு தாங்கள் தான் நன்மை செய்தோம் என்று சொல்லி பெருமை படுகின்றன. அந்த அளவுக்கு எல்லா கட்சிகளும் கூர்ந்து கவனிக்கத்தக்க வகையில் வளர்ந்திருக்கின்ற ஹரிஜன மக்களின் நல்லெண்ணம் மேலும் வளரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இந்த மன்றத்தில் இதைப்பற்றி பேசிய நேரத்தில் ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதிலுள்ள ஆழ்ந்த பொருளை நாங்கள் எல்லாம் கவனிக்கமாட்டோம் என்ற எண்ணத்தில்—நான் அவ்விதம் சமாதானம் தேடிக்கொள்கிறேன்—சர்க்கார் செய்த நன்மைக்காக ஹரிஜன மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு நன்றி காட்டவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள்—இதில் யார் யாருக்கு நன்றி காட்டுவது என்பது பிரச்னை அல்ல. நீண்ட நாட்களாக ஒரு சமுதாயத்தை பழங்குடி மக்கள் என்று கருதப்படும் ஒரு சமுதாயத்தை, நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் சமுதாயத்தை நாட்டின் உடைமைக்கும், உழைப்புக்கும், உயிரின் பாதுகாப்புக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்ட ஒரு சமுதாயத்தை, இன்ன கட்சி என்று அல்ல, எந்த கட்சியிலுமுள்ள உயர்ந்த ஜாதி மனப்பான்மை பெற்றவர்கள் இன்று நேற்றல்ல, தலைமுறை தலைமுறையாக கொடுமைப்படுத்தி வந்திருக்கிறார்கள். அந்த கொடுமைகளை களைந்தெறிவதற்கு நமக்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் நாம் முன்னால் செய்த கேடுகளுக்கு கழுவாய் தேடிக்கொள்ள வேண்டும் என்கிற முறையில் செய்யப்படுகிறதே தவிர நன்றி பெறுவதற்காகச் செய்யப்படும் காரியம் என்று அதை யாரும் கருதுவதற்கில்லை. உலகத்திலே எந்த நாட்டிலும் ஜாதிப்பிரிவினால் தாழ்ந்த மக்கள் என்று ஒருசாரார் கருதப்படுவதில்லை. அமெரிக்க நாட்டிலே நீக்ரோக்கள் பிரச்னைப்பற்றி நண்பர்கள் மனதில் எண்ணிக்கொள்வார்கள். இந்த நாட்டிலுள்ள பழங்குடி மக்களுக்கும் அந்த நாட்டிலுள்ள நீக்ரோக்களுக்கும் அடிப்படையில் பலமான மாறுதல் உண்டு. நூறு ஆண்டு காலத்திற்கு முன்னால் அமெரிக்கா நாட்டில் இன்றைய தினம் உரிமைக்காக போராடும் நீக்ரோக்கள் அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்டார்கள். அப்படி அடிமையாக நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள் இன்று அமெரிக்காவில் அரசியல் சுதந்திரத்தை பரிபூரணமாக அனுபவிக்கிறார்கள். இன்று அமெரிக்கா அடைந்திருக்கின்ற தேசிய வளர்ச்சியை, அரசியல் வளர்ச்சியை, பொருளாதார வளர்ச்சியை அவர்கள் பரிபூரணமாக பெற்று இருக்கிறார்கள். இங்கும் அங்குமாக ஏதாவது அநாகரிகமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்றால் அதை கண்டிப்பதற்கு மற்ற அமெரிக்கர்கள் முன்வருகிறார்கள். நூறு ஆண்டு காலத்திற்கு முன்பு அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள் அமெரிக்கா நாட்டில் அடைந்திருக்கின்ற வளர்ச்சியை இந்த நாட்டில் புராணகாலம் தொட்டு, இதிகாச காலம் தொட்டு, நாயன்மார் ஆழ்வார்கள் காலந்தொட்டு, நிரந்தர அடிமைகளாக கருதப்படுகின்ற ஹரிஜன மக்கள் பெற்றுள்ள நிலைமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். 25 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அவர்களுடைய பெயரில் மாத்திரம் ஒரு மாற்றத்தைப் பார்க்கிறோமே தவிர, அவர்களுடைய நிலையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆகவே இங்குள்ள ஹரிஜனங்களுடைய பிரச்னைக்கும் அமெரிக்க நாட்டிலுள்ள நீக்ரோ மக்களின் பிரச்னைக்கும் ஒப்புவமை பார்ப்பது திருப்தி தேடிக்கொள்வது இந்த பிரச்னைகளிலிருந்து ஓடி ஒளிந்து கொள்வதற்குத்தான் பயன்படுத்தலாமே தவிர உண்மையை உணர்ந்து கொள்வதற்கு பயன்படாது. இதுவரையில் ஹரிஜன மக்கள் ஜாதியில் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும் மார்க்கத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் இந்து மார்க்கத்தை சேர்ந்தவர்கள் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இந்து மார்க்கத்தில் ஒரு பகுதியினர் என்று கருதப்பட்டாலும் அதே இந்து மதத்தில் இருக்கின்ற மற்ற பகுதியினர் அவர்களை நீண்ட நாட்களாக தாழ்ந்த குல மக்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் மட்டுமல்ல இதற்கு முன்னால் இருந்த நீதிக் கட்சி அரசாங்கமும் அதற்கு முன்னால் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கமும் ஆதிதிராவிட மக்களுக்கு ஏதாவது சில பல நன்மைகள் செய்தார்கள் என்றால் அவர்களிடத்திலிருந்து நன்றி பெறுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் கழுவாய் தேடிக்கொள்ள, செய்த பாவத்தை போக்கிக்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட பெருமுயற்சி என்று

[Sri C. N. Annadurai] [24th March 1958

கருதி இதை ஒரு திருத்தொண்டு என்ற முறையில் தான் பார்க்கவேண்டும். சென்ற ஆண்டு இந்த துறையில் பேசும் பொழுது நான் குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது. இந்த பிரச்னை எல்லா கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசியப் பிரச்னையாகும். இதில் கட்சி மாச்சரியங்கள் குறுக்கிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். மனிதன் குறைகளுக்கு ஆட்பட்டவன். சந்தர்ப்பங்கள் வருகின்ற நேரத்தில் ஒரு கட்சி மற்றொரு கட்சியை உரசிக்கொண்டிருந்தால்தான் உள்ளத்திற்கு தெம்பு வருகிறது. அதே முறையில் ஒரு கட்சியை மற்றொரு கட்சி எதிர்த்துப்பேசிக்கொள்வதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி இன்றைய தினம் செய்கின்ற இந்த காரியங்களை விட திறமையாக இந்தக் காரியங்களை இந்த நாட்டில் செய்வதற்கு வேறு கட்சிகளே இல்லை என்று காங்கிரஸ்காரர்கள் மார் தட்டிக்கொள்ளக் கூடாது. எனவே காங்கிரஸ் கட்சி இன்றைக்கு முழு அதிகாரங்களையும் எற்றுக்கொண்டிருக்கும் முதல் அமைச்சரவை, இந்த முதல் அமைச்சரவை கேட்கின்ற வரிப்பணத்தை நாட்டுமக்கள் தட்டாமலும் தயங்காமலும் கொட்டித்தருகிறார்கள். இவ்விதம் நிரம்ப வரிப்பணத்தைப் பெற்றுவருகிற காங்கிரஸ் கட்சி, நல்ல அதிகாரங்களைப் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி, ஈடு எதிர்ப்பின்றி செல்வாக்கு பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி இந்த ஆதிதிராவிட மக்களுக்கு செய்யவேண்டிய காரியங்களை பரிபூரணமாக செய்திருக்கிறார்களா என்றால் ஆட்சியாளர்களை வாழ்த்த வந்தவர்கள்கூட வாழ்த்த ஆரம்பித்து எதிர்கட்சி குறைகளைத்தான் சொல்லுகிறார்கள் என்று சொல்லி அப்படி யெல்லாம் நாங்கள் சொல்லமாட்டோம் என்று சொல்லி கடைசியில் அவர்களும் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் செய்கிறார்கள். அவர்கள் குறைகள், குறைகள் என்று தயக்கத்தோடு சொல்லுவதைப் பார்த்து பரிதாபப்படுகிறேன் ஒருசமயம் அவர்களுடைய கட்சித் தலைவர்கள், இவர்களைப் பார்த்து எதிர் கட்சிகளும் குறைகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், நீங்களும் குறைகள் என்று சொல்லிக்கொண்டிருந்தால் கட்சிக் கட்டுப்பாடு என்ன ஆவது என்று சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை. குறைகளை நாங்கள் குறைகள் என்று சொல்லும்பொழுது காங்கிரஸ் உறுப்பினர்கள் அதே குறைகளை நிலைமைகள் என்று எடுத்துச் சொன்னார்கள். நிலைமைகள் என்ன? கிராமங்களில் சரியானபடி பாதை அமைக்கப்படவில்லை. சரியானபடி கிணறுகள் வெட்டப்படவில்லை. சுடுகாடுகளில் காட்டப்படும் பேதங்கள் நீக்கப்படவில்லை என்றும், பள்ளிக்கூட மாணவர்களுக்கு தரப்படுகிற உபகார சம்பளங்கள் போதுமான அளவுக்கு சரியான காலத்தில் அவர்களிடம் போய்சேரவில்லை என்றும் சொன்னார்கள். இவைகளை குறைகள் என்று சொன்னால் கட்சிக் கட்டுப்பாடு குறுக்கே நிற்கிறது. இவைகள் குறைகள் அல்ல, நிலைமைகள் என்று காங்கிரஸ் கட்சியினர் நாசூக்காகக் கூறுகிறார்கள் என்று சொன்னால், இந்த பக்கத்திலுள்ள கட்சிகள் குறைகள் என்று இவைகளை எடுத்துச் சொல்லும்பொழுது கோபம் வருவதில் பயனில்லை. இந்த நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு எந்தக் கட்சியும் குறுக்கிடாது. இருநூறு பேர்களுக்கு மேல் இருக்கும் இந்த மாமன்றத்தில் சனாதனத்தை, வைதீகத்தை, ஜாதியை ஆதரிக்கக் கூடியவர்கள் யாருமில்லை. அனைவரும் இன்றைய தினம் ஜாதியற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் ஒருவருக்கொருவர் போட்டி போடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் பழங்குடி மக்கள், இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்ற முறையில் அவர்களை ஈடேற்ற செய்ய வேண்டும் என்பதில் ஒருவருக்கும்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வந்து பலதுறைகளில் இன்றைய தினம் ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபடுகிற நேரத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளில் பிற கட்சிகளின் ஒத்துழைப்பை பெற இதுவரை என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது? இங்கே ஒரு அங்கத்தினர் ஹரிஜன மக்களுக்குச் செய்யப்படுகிற நல்ல காரியங்களுக்கு யார் யாரோ முட்டுக்கட்டை போடுவதாக குறிப்பிட்டு ஒரு கிராமத்திலுள்ள தகவலைப்பற்றி சொன்னார்கள். உண்மையிலேயே நான் அதைக் கேள்விப்பட்டு வருத்தப்படுகிறேன். அப்படி யாராவது முட்டுக்கட்டை போடுவார்களானால் நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இரண்டு யோசனைகள் சொல்வேன். ஒன்று அவர் தனது சொந்த செல்வாக்கை முட்டுக்கட்டையை நீக்கும் அளவுக்கு வளர்த்து கொள்ள வேண்டும். மற்றொன்று அப்படி எதாவது முட்டுக்கட்டை போடு



24th March 1958] [Sri C. N. Annadurai]

வதாக போதிய தகவல் இருந்தால் இந்த மாமன்றத்தில் சொல்லுவதற்கு முன் பொறுப்பாக உள்ளவர்களிடம் அந்த நல்ல தகவல்களை எடுத்துச் சொல்லவேண்டும். ஏனென்றால் இந்த பிரச்னை கட்சிகளுக்கு அப்பாற்பட்டப் பிரச்னையாகும். ஆகவே இவைகளை முட்டுக்கட்டை போட்டு தடுத்து விடுகிறார்கள் என்று சொல்லுவதில் பயனில்லை. அப்படி முட்டுக்கட்டை போடக்கூடிய அளவுக்கு ஜாதி மனப்பான்மை இருக்கின்றது. அந்த ஜாதி மனப்பான்மையை நீக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பல முயற்சிகளில் நம்முடைய அமைச்சரவை அளித்திருக்கின்ற அறிக்கையில் நான் ஒரு பகுதியை பார்க்கிறேன்.

**"With a view to eradicate untouchability and give publicity, the Government have sanctioned the appointment of three Deputy sevaks and three Assistants in each district".**

மூன்று சேவகர்கள், அவர்களோடு மூன்று துணை சேவகர்கள் மாவட்டம் ஒன்றுக்கு நியமித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவர்கள் இந்த மாவட்டத்தில் செய்த காரியங்கள் என்ன? ஆதிதிராவிட சமுதாயத்திலுள்ள குறைப்பாடுகளை நீக்குவதற்கு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? இதைப்பற்றியுள்ள தகவல்கள் எங்கே தரப்பட்டிருக்கின்றன? இவர்கள் தீண்டாமையை போக்குவதற்கு என்ன பிரசாரம் செய்தார்கள் என்கிற தகவல்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. நான் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவன் மட்டுமல்ல—நான் தவறாமல் நல்லதற்கோ கெட்டதற்கோ மக்களை சந்திக்கிறேன். இப்படி ஒரு ஆறு பேர் தீண்டாமையை போக்குவதற்கு நல்ல ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் இவர்களை எங்கும் சந்தித்ததுமில்லை. நான் சந்திக்கவில்லை என்பது பொருள் படுத்தக் கூடியதல்ல என்று கூறிவிடலாம். ஆனால் நானே சந்திக்கவில்லை என்றால் சாதாரண மக்கள் எங்கே சந்திக்கப் போகிறார்கள்.

**"Posters depicting the evils of untouchability are printed and displayed to create an awakening in the hearts of the people at large."**

தீண்டாமை கொடுமை எப்படி எப்படி யிருக்கிறது என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காக விளம்பரத் தாள்கள் அச்சடித்திருக்கிறோம் என்று போடப்பட்டிருக்கிறது. நான் பல விளம்பரத் தாள்களைப் பார்த்தது இல்லை. ஆனால் ஒரு விளம்பரத் தாள் எனக்குத் தெரியும். ஏன் அந்த விளம்பரத் தாள் மட்டும் தெரியும் என்றால், அது என் உள்ளத்திலே அப்படியே பதிந்திருக்கிறது. சர்க்கார் அவசரமான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொது மக்களுடைய பணத்தை விரயப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை விளக்கும் சம்பவம் அது. அந்த வகையில் அந்த விளம்பரம் என்னுடைய கவனத்திற்கு வந்தது. தீண்டாமைச் சட்டத்தை வலியுறுத்துவதற்காக, "தொட்டால் தீட்டு" என்று சொன்னால் எந்த அளவுக்கு தண்டனை கிடைக்கும் என்ற கருத்தை விளக்குவதற்காக போடப்பட்ட விளம்பரத்தில் ஒரு பார்ப்பன உருவத்தைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டிருந்த காரணத்தால் யாரோ சிலர் அதிருப்தியைக் கிளப்புகிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி, அந்த போஸ்டர்கள் எல்லாம் விநியோகிக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் பொது மக்கள் அதிருப்திப்பட்டார்கள், சிலர் மனம் கொதித்தார்கள் என்று சர்க்கார் அறிக்கையில் சமாதானம் சொன்னார்கள். உண்மையிலேயே பொது மக்கள் ஆத்திரப்பட்டார்களா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு, நாங்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சர்க்கார் அச்சடித்து ஒட்டாமல் விட்டுவிட்ட அதே விளம்பரத் தாள்போன்ற எங்கள் கழகச் செலவிலே 5,000 போஸ்டர்களை அச்சடித்து எல்லா கிராமங்களுக்கும் அனுப்பினோம். சில கிராமங்களில்—நான் சொல்லுவதைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்—பார்ப்பனர் வீடுகளில் கூட ஒட்டி வைத்தார்கள். யாரும் வருத்தப்படவில்லை. ஒரு சமூகத்தாருக்குக் கேடுபாடானது என்று இவர்களாகக் கருதிக்கொண்டு அந்தப் பணத்தை விரயம் ஆக்கியிருக்கிறார்கள். இது தவிர, தீண்டாமை ஒழிப்புக்கு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள்

[Sri C. N. Annadurai] [24th March 1958

என்ன வகையிலே இருக்கிறது என்று அறிவிக்கப்படவில்லை. என்னுடைய நண்பர்கள் எடுத்துச்சொன்னபடி, எதிர்க்கட்சிகள் எப்பொழுது அழைக்கப் பட்டன ? எப்பொழுது அழைத்தார்கள் ?

சென்ற ஆண்டு இதே துறையில் பேசுகிற காலத்தில் குறிப்பிட்டேன், "ஹரிஜன தினம் கொண்டாடுகிறார்கள். நாலைந்து அதிகாரிகள், பத்துப் பதினைந்து கண்டிராக்டர்கள், இருபது முப்பது வோட்டர்கள், ஐம்பது அறுபது போலீஸ்காரர்கள், இவர்கள் மத்தியிலே ஹரிஜன தினம் நடத்தப்படுகிறது" என்று. அப்படி நடத்துவதினால் மட்டும், ஹரிஜனங்களுக்கு வந்துவிட்ட குறைகளை நீக்குவதற்கு பொதுமக்களுடைய கவனத்தை ஈர்க்க முடியாது. இதைத் தேசியத் திருவிழாவாக்க வேண்டும், எல்லாக் கட்சிகளும் இதிலே கலந்து கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டேன். அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன ? ஏன் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏன் எனக்கு நன்றாகத் தெரியும் என்று சொன்னால், எவ்வளவு தான் நமக்குள்ளே, கட்சிகளுக் குள்ளே "பேதம் வேண்டாம், பேதம் வேண்டாம்" என்று சொன்னாலும், நாம் அந்த பேதத்திலிருந்து விடுபடவில்லை, விடுபடப்போவதுமில்லை, விடுபடுவது ஜனநாயகத்திற்கு ஏற்றதும் அல்ல. ஆனால் முக்கியமான துறைகளில் கட்சிக்கட்டுப்பாடுகள் தான் முக்கியம் என்று கருதாமல், தேசியத் திருவிழா வென்று கருதவேண்டும். அப்படிக் கருதுவதற்கு இவர்கள் எந்தெந்த வகையிலே காரியங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட ஷெட்யூல்டு வகுப்பினர் கமிஷனர் ரிப்போர்டில்—இந்த ஆண்டு ரிப்போர்டிலும் சரி, இதற்கு முன்னால் வந்த ரிப்போர்டிலும் சரி—எடுத்துக்கொண்ட முயற்சிகள் தக்க விதத்திலே நிறைவேற்றப்படவில்லை என்று குற்றம் சாட்டி அதிலே குறிப் பிட்டிருக்கிறார்கள்.

"The State Governments have not still undertaken the welfare schemes of backward classes under any definite planned programme. Even while submitting schemes for the Second Five-Year Plan, they have attached importance only to the amount of expenditure that may be earmarked for theschemes."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத்தான் திரும்பத் திரும்ப நாம் பார்க்கிறோம். 17 லட்சம் ரூபாய் செலவழித்த இடத்தில் 18 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம், 19 லட்சம் ரூபாய் செலவழித்த இடத்தில் 20 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம் என்பதைத்தான் பார்க்கிறோமே தவிர, தெளி வாகத் திட்டமிட்டுத் திறமையாக நிறைவேற்றினோம் என்று சொல்லக் கூடிய விதத்தில் ராஜ்ய சர்க்கார்கள் நடக்கவில்லை என்று—நாங்கள் அல்ல—ஷெட்யூல்டு வகுப்பினர் கமிஷனர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக் கிறார். மற்றொன்று, எந்த வகையிலே இந்த பிரச்னை தீர்க்கப்படவேண்டு மென்பதைக் குறித்து மிகத் தெளிவான முறையில் அந்த அறிக்கையில் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்னையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் உள்ள நம்முடைய நண்பர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன மக்களை வறுமைப் பிடியிலிருந்து நீக்குவது ஒரு பகுதி. ஹரிஜன மக்களை, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களை, சமூகக் கொடுமை யிலிருந்து விடுவிப்பது மற்றொரு பகுதி. ஒன்றுக்கொன்று ஓரளவுக்குத் தொடர்பு கொண்டது. ஆனால் இரண்டும் வேறு, வேறு என்பதும், ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருந்தாலும், இந்த இரண்டுக்கும் இடையில் அதிகமான அளவு மாறுபாடும் உண்டு என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நான் இருக்கிற காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்திற்கு பல்லாண்டுகளுக்கு முன்னால் ஒரு ஆணையாளர் வந்திருந்தார். அவர் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர். அவர் வந்தவுடனே வீடுகளுக்கெல்லாம் வீட்டு வரியை அதிகப் படுத்தினார். அதிகப்படுத்திய உடனே, வீட்டுக்காரர்கள் மனுக்கொடுத்துக் கொண்டதன் பேரில் முன்னாலே போட்ட வரியைக் குறைக்கவேண்டுமா என்று பார்ப்பதற்காக, அந்த ஆணையாளர் வீடுகளைப் பார்வையிடச் சென்றார். அப்பொழுது நான் பத்தாவது வகுப்பை முடித்துவிட்டு, கல்லூரியிலே



24th March 1958] [Sri C. N. Annadurai]

படிக்கிறேன் என்ற நினைவு. அவர்கள் சென்ற நேரத்தில் உயர்ந்த ஜாதிக் காரர்கள் அவர்களை வரவொட்டாமல் தடுத்தார்கள். அவர்களைப் பார்த்து ஆணையாளர் "நான் இந்த நகராட்சி மன்றத்தின் ஆணையாளர்" என்று சொன்னார். அதற்கு அவர்கள் "அது தெரிந்துத்தான் நாங்கள் உங்களை வரவிடவில்லை" என்று சொன்னார்கள். "நான் நகராட்சி மன் றத்தின் ஆணையாளர் என்று தெரிந்துமா என்னை வரவிடவில்லை" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "நீங்கள் நகராட்சி மன்றத்தின் ஆணையாளர் என்று தெரிந்துமட்டும் அல்ல, எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று தெரிந்தே நாங்கள் உங்களை வரவிடவில்லை" என்று சொன்னார்கள். பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த விஷயத்திற்கு இப்போது என்ன என்று கேட்கலாம். தீண்டாமை பிரச்னை பணம் படைத்துவிட்டால் மட்டும் நீங்கி விடாது. படித்து விட்டால் மட்டும் போய் விடாது. பதவியில் உட்கார்ந்து விட்டால் மட்டும் போய்விடாது. மக்களுடைய மனதில் மாறுதல் ஏற்பட் டால் ஒழிய இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான பரிகாரம் கிடையாது என் பதை வலியுறுத்துவதற்கே இதனைச் சொல்கிறேன். அப்படி வலியுறுத்து கின்ற நேரத்தில் அறிக்கையில், சாதியை ஒழித்தால் ஒழிய தீண்டாமையை ஒழிப்பதற்கு நல்ல மார்க்கம் இல்லை என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. "Caste is one of the biggest things in India to-day if not the biggest and this has been recognised during elections"

தேர்தல் காலத்தில் சாதியம் தலைவிரித்தாடுகிறது என்பது தெரிகிறது. சாதி என்பது மிகவும் முக்கியமான பிரச்னை.

"Most of the biggest cities are the strongholds of casteism." சாதி வெறி நகரங்களில் இருக்கிறது என்று அறிக்கை அறிவித்துவிட்டு சாதியத்தை ஒழிப்பதற்கு வழி என்ன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி போட்டிருக்கிற திட்டங்களுக்கு நீங்கள் எங்கள் கட்சியை துணைக்கு அழைக்கலாம். காங்கிரஸ் கட்சிக்காரர்கள், சாதி வேற்றுமை கூடாது என்று பேச ஆரம்பிப்பதற்கு முன்பே, நான் சார்ந்திருக்கும் கட்சி பேசி இருக்கிறது. நீங்கள் எங்கள் அளவுக்கு கிணறு வெட்டினீர்களா என்று கேட்டால், வெட்டினது இல்லை, பள்ளிகூடங்கள் கட்டினீர்களா—என்று கேட்டால்—கட்டினது இல்லை, பொலி காளைகளை வாங்கிக் கொடுத்தீர் களா என்று கேட்டால்—வாங்கிக் கொடுத்தது இல்லை, பொறுக்கு விதைகளை வாங்கி தந்தீர்களா என்று கேட்டால்—பொறுக்கு விதைகளை வாங்கித் தந்தது இல்லை. ஏன் வாங்கித் தரவில்லை என்றால் நாங்கள் கஜானா பக்கத்தில் உட்கார்ந்து இருக்கவில்லை. ஆனால் நீங்கள் கஜானா பக்கத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள்.

எங்கள் கட்சி பூர்வோத்திரத்தைப் பற்றி நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் அன்றொரு நாள் பேசினார்கள். அவரை நான் மனக்கண்ணால் பார்க்கிறேன். காங்கிரஸ் கட்சி பூர்வோத்திரத்தில் சாதி முறையை ஒழிக்க வேண்டும் என்று பேசக்கூடாது என்று சநாதன காங்கிரஸ்காரர்கள் தடுத் திருந்தார்கள். லோகமான்ய பால காங்காதர திலக் அவர்கள் "இது ஒரு அரசியல் கட்சி ஸ்தாபனம், சமுதாயத்தை திருத்த தேவையில்லை" என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பிறகு காங்கிர கட்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதன் பூர்வோத்திரம் படிப்படி யாக வளர்ந்தது. அதற்கு பிறகு அரிஜனங்களுக்கு மான்யம் ஒதுக்கும் பெருந்தன்மை காங்கிரஸ் கட்சிக்குப் பிறந்தது. காங்கிரஸ் கட்சி காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே, நீங்கள் கனம் கக்கன் அவர்களை இங்கு அமைச்சராக அமர வைத்து, அழகு பார்த்து, ஆனந்தப்பட்டு, பெருமைப் பட்டு, வாழ்த்தி, வழிபடுவதற்கு முன்பே, இதே துறையில் எம்.சி. ராஜா அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். பழங்குடி பெருமக்கள் பெருமைப் படத்தக்க பதவிகளில் அமர்ந்து வேலைப் பார்த்து இருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு வந்துள்ள குறைபாடுகளை நான் சார்ந்திருக்கிற கட்சியும், அதற்கு பூர்வோத்திரமாக கூறப்பட்ட சுயமரியாதை கட்சி, நீதிக் கட்சி, நீண்ட காலத்திற்கு முன்னேயே கவனித்து வந்து இருக்கிறது.

ஒரு கனம் அங்கத்தினர், ஏதோ ஒரு மகா நாட்டில், ஆதித்திராவிட மக்களை சமமாக நடத்தவில்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே விளக்கம் சொல்வார்களேயானால், அதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடியவர் யாராக இருந்தாலும், அவரை கட்சியிலிருந்து விலக்குவதற்கு நான்

தயாராக இருக்கிறேன். அதே நேரத்தில், அப்படிப்பட்ட காரியங்களை—சாதி முறையை ஒழிப்பது, சாதி முறையை ஒழிப்பதன் மூலம் பழங்குடி மக்களின் நீண்ட காலக் குறைபாடுகளை நீக்குவதற்கு—எல்லா கட்சியிலும் இருக்கும் தீவிர வாதிகள் ஒன்றுபட வேண்டும். ஒரு கட்சியிலிருந்து வேறு கட்சிக்குப் போவது சகஜம், லாபமானதும் கூட. அதை இங்கேயே கூட நான் சாட்சிகளாக காண்கிறேன். ஆனால் கட்சி விட்டு கட்சி மாற வேண்டும் என்று நான் சொல்லவில்லை, அழைக்கவில்லை. கட்சிக் கட்டுப்பாட்டுக்குட் பட்டே, குறிப்பிட்ட நல்ல காரியத்தில் நாம் ஈடுபடலாம். அப்படிப்பட்ட ஒரு நல்ல திருத்தொண்டு அரிஜன முன்னேற்றத்திற்கு பாடுபடுவது, பழங்குடி மக்களை விடுவிப்பது. இதில் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் துணை நிற்கும். ஆனால் ஓடக்கூடிய குதிரைக்கு அதன் உடலில் தழும்பு ஏருதபடி சவுக்கு தந்து ஓட்டுவது போல, ஒரு நல்ல காரியத்தை மேலும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று தூண்டக்கூடிய வகையில் நாங்கள் இந்த வெட்டுத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் சபாநாயகர் அவர்களே, ஏழை பின்தங்கிய ஹரிஜன மக்களின் மாணியக் கோரிக்கைக்கு இரண்டு மணி நேரம் அதிகமாகவே கொடுத்து அநேக நண்பர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதலில் என்னுடைய நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்னை எவ்வளவு முக்கியமானது, இதில் எவ்வளவு கவனம் செலுத்தவேண்டும் என்பது இதிலிருந்தே நன்றாகத் தெரியவரும். ஒரு தாய் தன்னுடைய மெலிந்த குழந்தையை எப்படி பாதுகாத்து வருவாளோ, அந்தக் குழந்தை எப்படி நோயற்று வாழ விரும்புவாளோ, அதைப் பாதுகாப்பதற்கு எவ்வளவு அக்கரை எடுத்துக்கொள்ளுவாளோ, எவ்வளவு நன்றாக அதை வளர்ப்பாளோ அதைப்போலவே இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் ஹரிஜனங்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக பல யோசனைகளைக் கூறி, தீண்டாமையைப்போக்க எவ்வளவுதூரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆலோசனைகளைக்கூறி இருக்கிறார்கள். ஹரிஜன சமுதாயம் நல்ல உயர்ந்த நிலைமைக்கு வருவதற்கு எவ்வளவோ ஆலோசனைகளைக் கூறியதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கடைசியாக பேசும்போது ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் எல்லோரும், எந்தவிதமான பாகுபாடும் இன்றி, ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதை அவர் தன்னுடைய இருதய பூர்வமாக சொன்னாரோ என்னமோ எனக்கு அது சந்தேகமாகத்தான் இருக்கிறது. அவர் தன்னுடைய இருதய பூர்வமாகத்தான் சொல்லி இருப்பார் என்றே நான் நம்புகிறேன். (சிரிப்பு). அவர் எவ்வளவு தூரம் அரசியலில் ஈடுபட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் பேசியதிலிருந்தே நன்றாகத் தெரியவரும். அவர் பேசியதிலிருந்தே உண்மையாகவே நான் சந்தேகப்பட வேண்டியதாக இருந்தது. அவர் பேசும்போது குறிப்பிட்டார். முன்பு ஒரு போஸ்டர் இருந்தது, அதில் படம் போட்டிருந்தது. அதில் பூணூல் போட்டிருந்ததால் அதை சிலர் ஆட்சேபித்தார்கள் என்று அந்தப் படத்தை நிறுத்தி விட்டார்கள் என்று குறிப்பிட்டார். அப்படி இருந்தும் தாங்கள் தான் பிராமண சகோதரர்கள் இருக்கும் வீடுகளில் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்தோம் என்றும் குறிப்பிட்டார். அதிலிருந்தே அவருடைய குட்டு வெளிப் பட்டு விட்டது. பிராமண சகோதரர்களை அவர்கள் எப்படிச் சொல்லி வந்தார்கள் என்பது நமக்கு நன்கு தெரியும். அவர்கள் பிராமணர்களை எவ்வளவு துவேஷ மனப்பான்மையில் சொல்லி வந்தார்கள் என்பது "பார்ப்பனையும் பாம்பையும் கண்டால் முதலில் பார்ப்பனைக் கொல்லு" என்று அவர்கள் சொல்லி வந்தது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஏதோ இன்றைக்கு ஹரிஜன சேவையில் ஈடுபட்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லிகொள்ளுகிறார்கள். குறிப்பாக இந்து சமுதாயத்தில் ஹரிஜன முன்னேற்றத்தில் பிராமண சகோதரர்கள் தான் அதிகமாகப் பாடு



பட்டிருக்கிறார்கள். அவர்கள்தான் முதற்படியாக நின்று வேலை செய்திருக்கிறார்கள். தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் ஹரிஜனப் பிரச்னைக்கு முக்கியத்துவம் கொடுத்தபோது அதற்கு என்று முதலில் பாடுபட வந்தவர்கள் பிராமணர்கள் தான் என்பதை கனம் சகோதரர் அண்ணாத்துரைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அகில இந்திய ஹரிஜன சேவாசங்கத்தை ஏற்படுத்தினர். அப்பொழுது தமிழ் நாட்டிலும் ஹரிஜன சேவா சங்கத்தை ஆரம்பித்தார்கள். அதற்கு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு காலஞ்சென்ற மாஜி மந்திரி டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள் தலைவராக இருந்தார். அதற்குப்பிறகு காலஞ்சென்ற ஏ. வைத்தியநாத அய்யர் அவர்கள் தலைவராக இருந்தார். இப்படிப்பட்ட தலைவர்கள் பலர் இந்து சமுதாயத்திலிருந்து பணியாற்றி வந்திருக்கிறார்கள். இப்படி பல பிராமணர்கள் பணியாற்றி வந்ததை நாம் மறந்து விடக்கூடாது. கட்சி வளர்ப்புக்காக என்று ஜாதி பாகுபாட்டை சில நாட்களுக்குத்தான் சொல்லிக்கொண்டிருக்கலாம். அப்படிச் சொல்லிக்கொண்டிருந்து ஒன்றையும் சாதித்துவிட முடியாது. இனி மேலாவது அந்த ஜாதி இந்த ஜாதி என்றும் அந்த இனம் இந்த இனம் என்றும் சொல்லிக்கொண்டு வருவதில் பிரயோசனம் இல்லை. இப்படிச் சொல்வதும் நல்லது அல்ல. அப்படிச் சொல்லி வந்தால் உண்மையான முன்னேற்றத்தை நாம் காண முடியாது. குறிப்பாக பிற்பட்ட இனத்தவர்களை, தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றமடையச் செய்து விட முடியாது என்பதை இந்த சபையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் பேசியபோது சில பெரியவர்களைப்பற்றி குறிப்பிட்டார். அதிலும் குறிப்பாக டாக்டர் அம்பேத்காரைப் பற்றி குறிப்பிட்டார். மகாத்மா காந்தியைப்பற்றி குறிப்பிட்டார். வைக்கம் வீரரைப்பற்றி குறிப்பிட்டார். டாக்டர் அம்பேத்காரைப்பற்றி குறிப்பிட்ட போது உண்மையிலேயே அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் தனித் தொகுதி கேட்டார். அதாவது ஹரிஜனங்களுக்கு ஹரிஜனங்களே வோட்டுச் செய்யவேண்டும் என்று கேட்டார். ஆனால் மகாத்மா காந்தி என்ன கேட்டார் என்றால் கூட்டுத்தொகுதிதான்வேண்டும் என்றும் ஆனால் ஹரிஜனங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கவேண்டும் என்றும் சொன்னார். அதற்காகத்தான் அவர் உண்ணா விரதமும் இருந்தார் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். மகாத்மாஜி கேட்டுக்கொண்டதால்தான் நான் இன்றைக்கு மந்திரியாக இருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் இப்படி நான் வந்திருக்கவே முடியாது. அம்பேத்கார் சொல்லியபடி இருந்தால் நான் இப்படி வந்திருக்க முடியாது என்பதை கனம் ஆசைத்தம்பி அவர்கள் உணர வேண்டும். அவர் வடக்கு தேசத்தின் ஹரிஜன் என்றும் தெற்கு தேசத்தின் ஹரிஜன் என்றும் எந்தவிதமான பாகுபாடும் சொல்லவில்லை. அகில இந்திய ரீதியில்தான் கேட்டுக்கொண்டார். அவர் அகில இந்தியாவுக்குத்தான் பாடுபட்டாரே தவிர வடக்கு தெற்கு என்று பேசும் அன்பர்களைப் போல வடக்கு ஹரிஜனங்களுக்குமட்டும் பாடுபடவில்லை. இந்தியா தேசத்திலுள்ள எல்லா ஹரிஜனங்களுக்கும் பாடுபட்டார். இதை நான் கனம் ஆசைத்தம்பி அவர்களுடைய ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அடுத்தபடியாக அவர் வைக்கம் வீரரைப்பற்றி குறிப்பிட்டார். அவர் காங்கிரஸைச் சேர்ந்திருந்தார் என்பது நன்றாகத் தெரியும். அவரைப் பற்றி சொல்லும்போது அவர் எவ்வாறு சீர்திருத்தம் செய்வதற்கு பாடுபட்டார் என்பதைச் சொல்ல மறந்து விட்டார். பெரியார் ராமசாமியினுடைய சில காரியங்களைத்தான் எடுத்துக்கொள்ளுகிறார்களே தவிர எல்லா காரியங்களையும் எடுத்துக்கொள்வதாக இல்லை. பெரியார் ஆதி திராவிடர் என்பதில் ஆதி என்ற பதத்தை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னார். ஹரிஜன மக்கள் முன்னேற்றமடைய வேண்டும், அவர்கள் மற்ற இந்து சமூகத்துடன் சரிசமமாக வாழ வேண்டும் என்று மகாத்மா காந்தி சொல்லி வந்தார். அதனால் அவருடைய பெயரை எப்பொழுதும் நான் பேசும்போதெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறேன். அத்துடன் காங்கிரஸ் கட்சியின் பெயரையும் சொல்லிக் கொண்டு வருகிறேன். காரணம் காங்கிரஸ் இயக்கம் தான் அதற்கு அரும்பாடுபட்டு வந்தது. சட்டத்தினால் ஒருவாறு பிற்பட்ட மக்களுக்கு முன்னேற்றம் காண முடியும் என்றாலும் அதையே கையாண்டு வந்தால் முடியாது என்று சொல்லிவந்தார். ஜாதி இந்துக்களுடைய

[Sri P. Kakkan] [24th March 1958

மனம் மாற வேண்டும் என்றுதான் அவர் சொல்லிக்கொண்டு வந்தார். சட்டத்தின் மூலமாக ஒரளவு அந்தக் குறையை அகற்றினலும் கூட மக்களுடைய மனதை மாற்றுவதற்கு அவர் ஏற்பாடு செய்தார் என்பதை யாரும் மறக்க முடியாது. மக்களை ஒன்று திரட்டி இந்த சமூகத்திலுள்ள ஒரு பெரிய மாசினை அகற்றுவதற்கு அவர் அரும்பாடு பட்டார். அதற்காகத்தான் ஆலயப் பிரவேசத்தை ஆரம்பித்து வைத்தார். அதில் முதன் முதலில் பாடுபட்டவர் எங்களை கருதிதான் என்று நண்பர் ஆசைத்தம்பி சொன்னார். அது சரியல்ல. ஆலயத்திற்குள் முதன் முதலில் ஹரிஜனங்களை இழுத்துச்சென்றவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வ. வைத்தியநாத அய்யர் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கனம் அண்ணாதுரை அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார் அந்தக் காலத்தில் தங்களிடம் கஜானா இல்லை என்று. ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் அவர்கள் பக்கத்தில் கஜானா இல்லையா என்று கேட்கிறேன். கஜானா அவர்கள் பக்கத்தில் தான் இருந்தது, அவர்களுக்கு வேண்டியவர்கள் பக்கத்தில் தான் கஜானா இருந்தது. அந்த சமயத்தில் ஹரிஜனங்களுக்கு எந்த இடத்திலாவது இடத்தை ஜாரி செய்து கொடுத்திருக்கிறார்களா என்று கேட்கிறேன். (சிரிப்பு). அல்லது பத்து மாடுகளை வாங்கிக்கொடுத்திருக்கிறார்களா? அந்த ஏழை ஹரிஜனங்களுக்கு ஏதாவது செய்திருக்கிறார்களா என்று கேட்கிறேன்? அவர்கள் நினைத்திருந்தால் ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கலாம்.

**Sri C. N. ANNADURAI :** இப்பொழுது அரிஜன மக்களுக்கு என்ன குறைகள் எந்த துறைகளில் இருக்கின்றனவோ அந்த குறைகள் தான் அப்பொழுதும் இருந்தன. இப்பொழுதுள்ள குறைகள் தான் ஜஸ்டிஸ் கட்சி காலத்திலும் ஹரிஜனங்களுக்கு இருந்தது. அப்பொழுது இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் எந்த அளவிலும் வித்தியாசம் இல்லை. அப்படியே தான் இருக்கிறது.

**The Hon. Sri P. KAKKAN :** என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். நடைமுறையில் மக்களுக்கு காரியங்களை செய்து காண்பித்தால்தான் தெரியும். பேச்சால் மட்டும் பிரச்னையை தீர்த்துவிட முடியாது. பேச்சால் மட்டும் மக்களை நம்பச் செய்து விட முடியாது. இதை நான் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளையன் ஆண்ட காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஆண்ட காலத்தில் இவர்களுக்கு அவர்கள் உதவியாக இருந்த காலத்தில் எத்தனை ஹாஸ்டல்களை கட்டியிருக்கிறார்கள் ? ஆனால் இப்பொழுது சென்னை மாகாணத்தில் எங்கேயெல்லாம் ஹைஸ்கூல்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அதிகப்படியான ஹாஸ்டல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்கேயெல்லாம் பெண்கள் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் ஹாஸ்டல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எல்லா இடங்களில் இல்லாவிட்டாலும் பெரும்பகுதியான இடங்களில் கட்டப்பட்டிருக்கிறது. அவர்களுடைய காலத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் தான் கட்டியிருந்தார்கள். வெளியூர்களில் எல்லா இடங்களிலும் ஹாஸ்டல்கள் கட்டாவிட்டாலும் பெரும்பகுதியான இடங்களில் கட்டியிருக்கிறோம். ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட இனமாணவர்களுக்கும் எவ்வளவு தூரம் உதவி அளிக்க முடியுமோ அவ்வளவு தூரம் வசதிகளை அளித்துக்கொண்டு வருகிறோம். எங்களிடம் உள்ள நிதிக்குத் தக்கவாறு அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வெட்டுப் பிரேரேபணையை பிரேரேபித்த கனம் ஜகன்னாதன் அவர்கள் பேசும்பொழுது ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு அரசாங்கம் எந்த விதமான வழிவகையும் செய்யவில்லை என்ற தோரணையில் பேசினார்கள். நூற்றுக்கு நூறு செய்துவிட்டோம் என்று நான் மார் அடித்துக்கொள்ளவில்லை. (சிரிப்பு.) (குறுக்கீடு.) மார் தட்டிக் கொள்ளவில்லை.

**Mr. SPEAKER :** Order, Order. தயவு செய்து மந்திரி அவர்களை பேச விடுங்கள்.



24th March 1958]

**The Hon. Sri P. KAKKAN :** குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறு என்று அடித்துக் கொள்ளும் என்று சொல்வதுண்டு. அதேபோல அவர்கள் தப்பு அர்த்தத்தில் அதை எடுத்துக்கொள்ளுகிறார்கள். நான் சரியான அர்தத்தில் தான் சொன்னேன். பிரமாதமாக எல்லாவற்றையுமே செய்துவிட்டோம் என்று நான் சொல்லவில்லை. ஏதோ ஓரளவுக்கு செய்திருக்கிறோம் என்பதை நான் சொல்லாமலே அங்கத்தினர்கள் ஒத்துக் கொள்ளுவார்கள். தமிழகத்திலே மக்கள் பேசிக் கொள்ளுவதை நாம் பார்க்கிறோம். எதற்கெடுத்தாலும் அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். மாடு வாங்குவதற்கு கடன், வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கு இனம், கிணறுகள் வெட்டிக்கொள்ளுவதற்கு மான்யம், நிலங்கள் ஜாரி செய்து கொடுப்பது, ஹாஸ்டல்கள் கட்டிக் கொடுப்பது, ஹரிஜன மாணவனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 கொடுப்பது, ஹரிஜன காலேஜ் மாணவர்களுக்கு சலுகைகள் வழங்குவது இப்படி பல துறைகளில் ஹரிஜனங்களுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. இதைக் கண்ணாரப் பார்க்கிறோம், காதால் கேட்கிறோம். அப்படியிருந்த போதிலும் கனம் ஜகன்னாதன் அவர்கள் ஹரிஜனங்களுக்காக அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லுவது உண்மையிலேயே சிறிது வருத்தத்தை கொடுக்கிறது. செய்த காரியங்களை சொல்லுவோம். செய்த காரியங்களைச் சொல்லி நன்றி தெரிவித்து, மேலும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சண்டைபோட்டு வாங்குவதற்கு அங்கத்தினர்கள் முன் வரவேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சி அங்கத்தினர்களும் சிலர் ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். செய்ததை சொல்லிவிட்டு மேலும் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். மேலும் ஹரிஜனங்களுக்கு நன்மைகளை செய்வதற்காகத்தான் நாம் இந்தச் சபையிலே வீற்றிருக்கிறோம். நம்முடைய கடமையைச் செய்து மேலும் உரிமையை பெறுவதற்கு அங்கத்தினர்கள் முன்வருவதை பாராட்டுகிறேன். கனம் ஜகன்னாதன் அவர்கள் பேசும்பொழுது தீண்டாமையை போக்குவதற்கு இந்த அரசாங்கம் மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். தீண்டாமையை போக்குவதற்கு அரசாங்கம் இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்ற வரலாற்றினை முதலிலே இப்பொழுது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கனம் அண்ணாத்துரை அவர்கள் டெப்யூடி சேவக்குகள், உதவி சேவக்குகள் நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அவர்களை பார்த்ததே கிடையாது என்று சொன்னார்கள். போன வருஷத்திலே இதே பட்ஜெட் விவாதத்தின் போது இது பற்றி சொன்னேன். உண்மையிலே ஹரிஜன் சேவையில் ஆர்வம் இருந்தால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை தெரிந்துக்கொண்டிருக்கலாம். அந்தந்த ஜில்லாவில் ஹரிஜன இலாகா அதிகாரியின் ஆபீஸ் இருக்கிறது. அது ஹரிஜன மக்களுக்கு சேவை செய்துவருகிறது என்பதைத் தெரிந்துக்கொண்டிருக்கலாம். அதற்காக ஒரு தனி அதிகாரி போட்டிருக்கிறோம். அநேக அன்பர்கள் பிரசாரகர்களாக வேலை செய்து வருகிறார்கள். அப்படியெல்லாம் இருக்கும்பொழுது ஒன்றும் தெரியாதது போல் இங்கு வந்து அப்பேற்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்களா என்பதே தெரியவில்லை என்று சொன்னால், அதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. கனம் அண்ணாத்துரை அவர்கள் செங்கல்பட்டு ஜில்லாவாசி. அந்த ஜில்லா ஹரிஜன இலாகா ஆபீஸ் சென்னையிலே இருக்கிறது. அங்கு சென்று அவர்கள் ஹரிஜன முன்னேற்றத்திற்காக செய்யும் வேலையை கண்ணால் பார்த்து, காதால் கேட்டறிந்து தீண்டாமை ஒழிப்புக்கு பூரணமாக பாடுபடவேண்டுமென்று அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலிலே இப்பொழுது தீண்டாமையை போக்குவதற்கு அரசாங்கம் என்னென்ன வழிவகைகள் செய்திருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லுகிறேன். ~~தீண்டாமை ஒழிப்புக் கொள்கையை பரப்புவதற்காக~~ அரசாங்கம் டெப்யூடி சேவாக்குகளையும், உதவி சேவாக்குகளையும் நியமித்திருக்கிறது. அவர்கள் ஜில்லா தோறும் சென்று எந்தந்த இடங்களில் ஓட்டலில் ஹரிஜனங்கள் போகக்கூடாது, கோவிலில் போகக்கூடாது, கிணறு வில் ஜலம் எடுக்கக்கூடாது, ராஸ்தாவில் போகக்கூடாது என்று சொல்லப்படு

கிறதோ, அம்மாதிரி சொல்பவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். கனம் ராமசுவாமி அவர்கள் இதற்காக பல பேர்கள் மீது 6 மாத தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இது எதைக்காட்டுகிறது ? தமிழகத்திலே இப்படிப்பட்ட செயல்களுக்கு இடம் அளிக்க முடியாது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. அம்மாதிரி சொல்லுபவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தாவது அவர்களை தண்டனை அடையும்படி செய்யவேண்டுமென்ற கருத்து தமிழ் நாட்டு அன்பர்களுக்கு தோன்றியிருக்கிறது. தீண்டாமையை ஒழிப்பதற்கு இம்மாதிரி பல அன்பர்கள் பாடுபடுகிறார்கள். தீண்டாமையை ஒழிப்பதற்கு முதலிலே தமிழகம் தான் பாடுபட்டது. இப்பொழுதும் தமிழகத்திலுள்ள அன்பர்கள்தான் தீண்டாமையை ஒழிப்பதற்கு பூரணமாக ஒத்துழைத்து உதவி செய்கிறார்கள். ஹரிஜன சேவக் சங்கம், சென்னை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் லீக், சத்குரு சர்வ சமரச சங்கம் முதலியவற்றிற்கு பிரசாரகர்களை நியமித்து தீண்டாமை பிரசாரம் செய்வதற்கு வருஷத்திற்கு ஹரிஜன சேவா சங்கத்தினர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 23,000 ரூபாய் வீதம் கொடுக்கிறோம். ஜில்லாவாரியாக பிரசாரகர்களை போட்டு தீண்டாமை ஒழிப்பு வேலை நடந்து வருகிறது. தாழ்த்தப்பட்ட லீக் நாம் கொடுக்கும் 23,000 ரூபாய் மான்யத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பிரசாரகரை நியமித்து தீண்டாமை ஒழிப்பு வேலை செய்து வருகிறார்கள். சத்குரு சர்வ சமரச சங்கம் உதக மண்டலத்தில் கூனூரில் இருக்கிறது. அங்கே ஒரு ஜாதி ஹிந்துவைச் சேர்ந்த ஒரு சகோதரர் உடல், பொருள், ஆவி, மூன்றையும் அர்ப்பணித்து தீண்டாமையை ஒழிப்பதற்காக சேவை செய்து வருகிறார். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சுற்றறிக்கை தயார் செய்து மக்கள் மத்தியிலே விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதரவு கொடுத்து தீண்டாமையை போக்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1956–57-ல் விளம்பரத்திற்காக ரூ. 48,000 செலவிடப்பட்டிருக்கிறது. 1958–59-ல் விளம்பரத்திற்காக இந்த பட்ஜெட்டில் ரூ. 2,39,000 சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. 1956–57-ம் ஆண்டில் ஹரிஜன மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் படிக்கும் இதர ஜாதி இந்துக்களும் அவர்களோடு கலந்து நண்பகல் உணவு சாப்பிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வட ஆற்காடு, கோயமுத்தூர், நீலகிரி, செங்கல்பட்டு, மதுரை, திருசிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இந்த உத்தரவு அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஹரிஜன மாணவர்களோடு மற்ற ஜாதி மாணவர்களும் சேர்ந்து உணவு உண்ணும்போது அவர்கள் ஒன்றுபட்டு பழகுவதால் அதன் மூலம் தீண்டாமையை போக்குவதற்கு அனுகூலமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, ஹரிஜன மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஹாஸ்டல்களில் முன்னேற்ற சமூகத்தைச் சேர்ந்த இதர ஜாதி ஹிந்து மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஹாஸ்டல்களில் 10 சத விகிதம் முன்னேற்றம் அடைந்த வகுப்பினரையும் 15 சத விகிதம் பின் தங்கிய வகுப்பினரையும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்து, இந்த மாணவர்கள் ஹரிஜன மாணவர்களோடு சேர்ந்து தங்குவதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம். இது எதைக் காட்டுகிறது என்றால் இந்த ஹாஸ்டலில் தங்குகின்ற மாணவர்கள் ஒன்றுபட்டு வாழும் போது தீண்டாமை என்ற பிசாசுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற ஒரு சிறந்த தத்துவத்தை அவர்கள் உணர வேண்டும் என்பதைத்தான். அவர்கள் ஒரே சம அந்தஸ்தில் வாழ வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கம் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறது. அந்த மாதிரிதான் சர்க்கார் நடத்துகின்ற ஹாஸ்டல்களிலும் ஹரிஜன மாணவர்களுக்கு 10 சதவிகிதம் இடம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பயிற்சி பள்ளியுடனோ அல்லது தொழிற் கல்லூரியுடனோ இணைக்கப்பட்ட விடுதியாக இருந்தாலும் சரி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புதிதாக கட்டப்படும் ஹரிஜன காலனிகளில் 100-க்கு 10 சத விகிதம் மற்ற வகுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்கித் தரவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற வகுப்பினர்களோடு ஹரிஜனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே தாய் வயிற்று பிள்ளைகள் போல் பழகி வாழ்வதற்கு அரசாங்கம் இந்த ஏற்



அடுத்தபடியாக, மயானங்களிலே பாகுபாடு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் சட்டபூர்வமாக மயானங்களில் பாகுபாடு இருக்கக் கூடாது என்பதற்காக சட்டத்தின் மூலம் தடை செய்திருக்கிறோம். அதேபோல் ஹரிஜனங்களுக்காக மயானத்திற்கு இடம் வாங்கிக் கொடுத்திருந்தாலும் அங்கே ஜாதிஹிந்துக்கள் புதைக்கப்படுவதை தடுக்கக் கூடாது என்ற ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம்.

ஹரிஜன சேவையில் அதிக ஆர்வம் கொண்டு வேலை செய்யும் அன்பர்களுக்கு மெடல்கள் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். முதல் தரமான மெடல் ரூ. 100 மதிப்புள்ளது. இரண்டாவது தரமான மெடல் ரூ. 50 மதிப்புள்ளது. கனம் அன்பழகன் சிரிக்கிறார்கள். அவர்களுக்கு சிரிப்பாகத்தான் இருக்கும். மனிதனுக்கு மானம் பெரிது. சொத்து, சுகம் எல்லாவற்றையும் விட மானம்தான் மதிப்பு வாய்ந்தது. ஹரிஜன சேவையில் ஆர்வம் உள்ளவர்கள் கஷ்டப்பட்டு சேவை செய்து இந்தப் பரிசுகளை பெறுவதற்கு முன்வரவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறோம். இம்மாதிரி பரிசு பெற்றவர்களை பின்பற்றி பல அன்பர்கள் இந்தப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான் அரசாங்கம் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும், தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தை அகில இந்திய ரேடியோவின் மூலம் செய்வதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அகில இந்திய ரேடியோவில் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான பிரசங்கங்கள் நிகழ்த்தப்படுவதற்கும் நாடகங்கள் நடத்தப்படுவதற்கும் அவசியமான கட்டளையை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. இப்படிப்பட்ட சிறந்த காரியங்களை செய்து தீண்டாமை ஒழிப்பில் அரசாங்கம் மிகவும் அக்கறைகாட்டி வருகிறது. ஆகையால், தீண்டாமையைப் போக்குவதற்கு அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்று ஸ்ரீ. ஜெகன்னாதன் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. ஆனால் ஜனங்களின் மனதை மாற்றுவதில் அரசாங்கம் நூற்றுக்கு நூறு வெற்றிபெறவில்லை என்று சொன்னால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். மக்களின் மனதை மாற்றுவதிலும் அரசாங்கம் மிகுந்த அக்கறைகாட்டி வருகிறது. தீண்டாமை ஒழிப்பில் மற்ற அன்பர்களும் அரசாங்கத்திற்கு தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தொகைகளை எடுத்து பிற்பட்ட இனத்தவர்களுக்காக செலவழிப்பதாக சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். அவ்வாறு அரசாங்கம் செய்வதில்லை என்று நான் இந்த சபையில் பலதடவைகள் சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதை வலியுறுத்துகிறேன். ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளை இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1954–55-ல் " ஷெட்யூல்ட காஸ்ட்ஸ் " க்காக 80,77,000 ரூபாயும், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்காக 20,000 ரூபாயும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக 10,77,000 ரூபாயும், இதர பிற்பட்ட வகுப்பினருக்காக 11,75,00,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டன. 1955-56-ல், ஷெட்யூல்ட் காஸ்ட்ஸுக்காக 77,31,000 ரூபாயும், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்காக 1,69,000 ரூபாயும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக 12,68,000 ரூபாயும் இதர பிற்பட்ட வகுப்பினருக்காக 15,01,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டன. 1956–57-ல் ஹரிஜன மக்களுக்காக 1,13,93,000 ரூபாயும், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்காக 2,60,000 ரூபாயும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக 22,07,000 ரூபாயும், இதர பிற்பட்ட இனத்தவர்களுக்காக 20,66,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டன. 1957-58-ல் ஹரிஜனங்களுக்காக 1,61,72,000 ரூபாயும், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்காக 9,65,000 ரூபாயும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக 25,89,000 ரூபாயும் இதர பிற்பட்ட இனத்தவருக்காக 24,47,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டன. 1958-59-ல் ஹரிஜனங்களுக்காக 166,02,000 ரூபாயும், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்காக 10,12,000 ரூபாயும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக 32,37,000 ரூபாயும், இதர பிற்பட்ட இனத்தவர்களுக்காக 24,71,000 ரூபாயும் ஒதுக்குகிறோம். ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் பணம் இன்னொரு தலைப்பின் கீழ் உள்ள காரியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்ற தவறான எண்ணம் கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடாது என்று மிகவும் பணிவுடன் சொல்லிக் கொள்கிறேன். அந்த

[Sri P. Kakkan] [24th March 1958

அந்த தலைப்பின் கீழ் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் அந்த அந்த காரியங்களுக்காக இப்போது செலவழிக்கப்பட்டு வருகிறது. இப்போது ஸ்ரீ முத்திருளாண்டி அவர்கள் ஹரிஜன நல டிரெக்டராக வந்த பிறகு, இந்தக் காரியங்கள் மிகவும் நன்றாக நடக்கின்றன. ஏனென்றால், இதற்கு முன்பெல்லாம் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுவதைக் குறித்து வைத்துக் கொள்வதற்கான ரெஜிஸ்டர் எதுவும் வைத்துக்கொள்ளப்பட்டதில்லை. முன்பெல்லாம் வரும் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டவுடன் அதுபற்றி எந்த ரெஜிஸ்டரிலும் குறித்துக்கொள்ளப்படாது. இப்போது அது குறித்துக்கொள்ளப்படுகிறது. கள்ளர்கள், மறவர்கள், செட்டியார்கள், ஜாதிச் செட்டியார்கள் என்று பல பிற்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு எத்தனை எத்தனை ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுகின்றன என்று ரெஜிஸ்டரில் குறித்துக்கொள்ளப்படுகிறது. ரெஜிஸ்டர் சமூக வாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்த சமூகத்திற்கு அந்த அந்த தலைப்பு இருக்கிறது. அந்த அந்த சமூக மாணவர்களுக்கு கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்புகள் அந்த அந்தத் தலைப்பின் கீழ் குறித்துக் கொள்ளப்படும். ஆகவே எல்லா வகுப்பினர்களுக்கும் சரிவர ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. கனம் அங்கத்தினர் ஸ்ரீ வினயகம் அவர்கள், ஹரிஜனங்களுக்கான பணம் பிற்பட்ட இனத்தவர்களுக்குச் செலவழிக்கப்படுகிறது என்ற தவறான எண்ணம் ஹரிஜனங்களுக்கு இருப்பதால், பிற்பட்ட இனத்தவர்களுக்குக்காக ஒரு தனி டிரெக்டரைப் போட்டு தனி டிரெக்டரேட்டை அமைக்க வேண்டுமென்று கூடச் சொன்னார்கள். அவ்வாறு தனி டிரெக்டரேட்டை அமைத்தால், பிற்பட்ட இனத்தவர்களுக்கான பணம் அந்த டிரெக்டரேட்டுக்குத் தான் செலவாகுமே தவிர உண்மையில் பிற்பட்ட இனத்தவர்களுக்காக போதிய செலவு செய்யப்படாமல் போய்விடும். சமூகத்தில் சில பிரிவினர் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அவர்களை முன்னேற்றமடையச் செய்வதற்காகத் தான் அரசியலமைப்பில் சில விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின் பிரகாரம்தான் ஹரிஜனங்களுக்காகவும் ஆதிவாசிகளுக்காகவும் மாஜி குற்ற பரம்பரை மக்களுக்காகவும் அரசாங்கம் பணம் செலவழித்து வருகிறது. அதற்கு ஒரு டிரெக்டரே போதும். பிற்பட்ட இனத்தவர்களுக்காக தனி டிரெக்டர் போட வேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ வினயகம் கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்துகுமாரசாமி, ஸ்ரீ வினயகம் கூறிய சில விஷயங்களைக் குறிப்பிட்டு "எங்களை நன்றிகெட்ட சமூகம் என்று ஸ்ரீ வினயகம் சொல்லிவிட்டார்" என்று சொன்னார். ஸ்ரீ வினயகம் கூறியதை ஸ்ரீ முத்துகுமாரசாமி அவ்வாறு எடுத்துக் கொள்ளக்கூடாது. ஸ்ரீ வினயகம் எந்த ஒரு சமூகத்தையும் இழிவுபடுத்திப் பேசுபவர் அல்ல. பிறர் செய்த நன்மைகளை மறக்கக்கூடாது என்ற கருத்தை அவர் பொதுப்படையாக வெளியிட்டாரே தவிர, எந்த சமூகத்தையும் அவர் இழிவுபடுத்திப் பேசவில்லை. "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்ற வள்ளுவர் வாக்கை அவர் எடுத்துச் சொன்னாரே தவிர, எந்த சமூகத்தையும் அவர் இழிவுபடுத்திப் பேசவில்லை என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்துகுமாரசாமிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1958–59-ல் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளுக்காக 10,85,000 ரூபாயும், பாதைகளுக்காக 3,50,000 ரூபாயும், குடிதண்ணீர் வசதிக்காக 3,00,000 ரூபாயும், மத்தியான உணவிற்காக 25,35,500 ரூபாயும், பாடசாலைகளுக்காக 41,00,000 ரூபாயும், ஸ்காலர்ஷிப்புகளுக்காக 11,47,000 ரூபாயும், ஹாஸ்டல்களுக்காக 6,28,000 ரூபாயும், விவசாய ஸப்ஸிடிக்காக 6,40,000 ரூபாயும் வீடு கட்டுவதற்காக 15,09,000 ரூபாயும் ஒதுக்கப்படுகின்றன. இந்தக் காரியங்களுக்காக இவ்வளவு தொகைகளைச் செலவழித்து ஹரிஜனங்களை பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். முதலில் எல்லா மனிதர்களும் மனிதர்களாக வாழவேண்டும். எந்த மனிதனும் எந்த ஒரு பிற மனிதனையும் இழிவுபடுத்தக்கூடாது. ஜாதியில் உயர்வு-தாழ்வு இல்லை. இந்த நாட்டில் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதுதான் காங்கிரசின் கொள்கை. வர்க்க பேதமோ வகுப்பு பேதமோ இல்லாத



24th March 1958] [Sri P. Kakkan]

சமூகத்தை உருவாக்குவது தான் காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கை. அதற்காகத்தான் அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. ஹரிஜனங்களுக்கு உத்தியோகச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. மேலும் ஹரிஜனங்களுக்கு பல கடன் உதவிகளையும் அரசாங்கத்தார் அளித்து வருகிறார்கள். மாடுகள் வாங்குவதற்காக ஹரிஜனங்களுக்கு மத்திய சர்க்கார் நேரிடையாக பணம் கொடுக்கிறார்கள். கிணறுகள் வெட்டுவதற்காகவும் மத்திய சர்க்கார் அவர்களுக்கு நேரிடையாகப் பணம் கொடுக்கிறார்கள். ராஜ்ய சர்க்காரும் ஹரிஜனங்களுக்கு பல கடன்களைக் கொடுக்கிறார்கள். மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக கடன் கொடுத்து வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். மாடுகள் வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் கடனைப்பற்றி ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். அவர் ஸ்ரீ ராமசாமி பிள்ளை என்று நினைக்கிறேன். வாங்கப்படும் மாடுகளைப் பற்றியும் அவைகளின் விலைகளைப்பற்றியும் கொடுக்கப்படும் கடன் தொகைகளைப்பற்றியும் அவர் குறிப்பிட்டார். மாடுகள் வாங்குவதற்காக மட்டுமின்றி, நிலத்தை உழுவதற்குக் கலப்பையும், பயிரிட விதைகளும் வாங்குவதற்காகவும் அரசாங்கம் பணம் கொடுக்கிறது. ஆக மொத்தம் 255 ரூபாய் அரசாங்கம் கடன் கொடுக்கிறது.

போன பட்ஜெட் கூட்டத்திலே பேசும்போதும் நான் சொன்னேன், 4.50 p.m.
மாடு கொடுப்பதிலேயுள்ள குறைகள் ஆங்காங்கே வந்தன. சில நாட்டாண்மைக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் பாவம், ஏழைகளிடம் போய் மாடு வாங்குவதென்றால் சில ரூபாய்களை அபகரித்துக் கொள்கிறார்கள் என்று குறைகள் தெரிவிக்கப்பட்டன. அந்த நிலைமையைப் போக்குவதற்காகத் தான் இந்த முறையைக் கையாண்டோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜனங்களிடையே இதற்கென 'கான்பரென்ஸ்' வைத்து, மாடு கொடுப்பதிலே என்ன முறையைக் கையாளலாம் என்பது பற்றியும், பூரணமாக அந்த மாடுகளெல்லாம் அவர்களுக்கே போய்ச் சேருகிறதா என்பதைப் பற்றியும், அந்தப் பணம் எல்லாம் அவர்களுக்கே போவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றியும் யோசித்தோம். பிறபாடு ஜில்லா ஹரிஜன நல அதிகாரி அவர்களையும் அந்தப் பகுதி எம்.எல்.ஏ.க்களையும், ஹரிஜன சேவையிலே ஆர்வம் உள்ளவர்களையும் சேர்த்து நல்ல முறையிலே மாடு வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தோம். கனம் அங்கத்தினர் திரு. ஜெகன்னாதன் அவர்கள் ஊரில் கூட, அவர்கள் முன்னிலையிலே எட்டு ஜோடி மாடுகள் வாங்கிக் கொடுத்தோம் என்று நினைக்கிறேன். அவர்கள் கண்ணுக்கு எதிரிலேயே அந்த மாடுகள் கொடுக்கப்பட்டன. அவைகள் எல்லாம் ரூ. 50 மட்டும் பெறுமான மாடுகளோ, யோசனை மாடுகளோ அல்ல என்பதையும் அவர்கள் நேரிலே கண்டிருக்கக்கூடும். அவைகளெல்லாம் நல்ல மாடுகள்; வண்டியில் பூட்டி ஓட்டக்கூடிய மாடுகளாக இருக்கின்றன, என்ற காட்சியைப் பார்க்கிறோம். (திரு. ஜெகன்னாதன் அவர்கள் உட்கார்ந்தபடியே குறுக்கீடு) கனம் அங்கத்தினர் பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்.

மாடுகளை நல்ல முறையில் வாங்கிக் கொடுப்பது மட்டும் அல்லாமல் அவைகளுக்கு 'சீல்' போடும்படியும் சொல்லியிருக்கிறோம். அப்படி 'சீல்' போடுவதிலே கூட ஒரு சிலர் ஏதோ rare ஆக தவறு செய்வதாகத் தெரிகிறது. அப்படித் தவறு செய்பவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மட்டுமல்ல; கொடுத்த பணமும் நிச்சயம் பறிமுதல் செய்யப்படும் என்று உங்கள் மத்தியில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களைப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றுவதுமட்டுமல்ல; மாடுகளை வாங்கிக் கொடுப்பது மட்டுமல்ல; பொறுக்கு விதைகள் வழங்குவது மட்டுமல்ல; கிணறுகளை ஆழப்படுத்துவது மட்டுமல்ல; இவையெல்லாவற்றையும்விட முக்கியமாக நிலங்களை ஜாரி செய்து கொடுத்து உதவி செய்வதற்கும் அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

1952–53-ல் 85,635·65 ஏக்கராக்களும், 1953–54-ல் 48,750·27 ஏக்கராக்களும், 1954–55-ல் 56,244·70 ஏக்கராக்களும், 1955–56-ல் 84,732·98 ஏக்கராக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1956–57-க்கான புள்ளி

[Sri P. Kakkan] [24th March 1958

விவரங்கள் இங்கு இல்லை. பின்பு அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்படும். 1957-58-ல் 48,141·63 ஏக்கராக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கெல்லாம் தரிசு நிலங்கள் சாதகமாக இருக்கின்றனவோ அதையெல்லாம். கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. நிலங்கள் ஜாரி செய்யப்படும்போது, ஹரிஜன சமூகத்தைப் போன்று இதர பின்தங்கிய அல்லது இதர ஏழைகள் இருக்கிறார்களோ அவர்கள் அந்த நிலங்களிலே சாகுபடி செய்துகொண்டிருநதால் அப்பேர்ப்பட்டவர்களையும் நாம் அப்புறப்படுத்தலாகாது. எங்கெல்லாம் புறம்போக்கு நிலம் சாதகமாக இருக்கிறதோ அதையெல்லாம் கொடுக்க அக்கறை காட்டப்பட்டு வருகிறது. வருடா வருடம் நடைபெறும் கலெக்டர்கள் மகாநாட்டில் கலெக்டர்களிடம் நாம் வற்புறுத்தி இந்தக் காரியங்களைச் சொல்கிறோம். அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று அவர்களிடம் ஏற்பாடு செய்கிறோம்.

வருடந்தோறும் இத்தகையவர்களுடைய சுகாதாரத்திற்காக 6 லட்சம் ரூபாய் இந்த அரசாங்கம் செலவு செய்து வருகிறது. வீடு கட்டுவதற்காக 18 லட்சம் ரூபாய் ஒதுக்கி வருடமொன்றுக்கு 3,000 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. "நம்பிக் கெட்டதனால் பாதகம் இல்லை" என்று சொல்வது போல் நம்பித்தான் நல்ல வீடுகள் கட்ட ஏற்பாடு செய்கிறோம். ஒரு சில பேர்கள் தம்முடைய கடமையைச் சரிவர செய்யாததினால் வீடுகள் சரியான முறையில் அமைவதில்லை. இருந்தாலுங்கூட அதையெல்லாம் இப்பொழுது கவனித்து வருகிறோம். எபபொழுது யார் வீட்டைக் கட்டினது? எந்த என்ஜினீர் மேற்பார்வை செய்தது? அல்லது எந்த என்ஜினீர் சர்டிபை செய்தது? என்பதையெல்லாம் பரிசீலனை செய்து, ஆசை காரணமாக கடமையைச் சரியாகச் செய்யாத ஒரு சிலர் இருந்தால் அவர்களுடைய "ப்ரமோஷன்" கூட நிச்சயம் தடுத்து நிறுத்தப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கம் எவ்வளவு தூரம் ஹரிஜன மக்களுக்கு என்னென்ன உதவி செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** கனம் அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து, மான்யத்தின் மீது வோட்டு எடுக்கும் வரைக்கும் கனம் அங்கத்தினர்கள் சபையில் உட்கார்ந்திருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** கனம் அங்கத்தினர் திரு. எல்லப்பன் அவர்கள் தம்முடைய தாலூகாவில் இருக்கும் குறைகளைப்பற்றிச் சொன்னார்கள். அவருடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தாவிட்டாலும், நோட்டீஸ் கொடுத்திருப்பதால் அதைப்பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தாலூகாவிலே மட்டும் ஐந்து ஏக்கரா நிலம் ஜாரி செய்து 500 வீடுகள் கட்டிக்கொள்ள மனைக்கட்டுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே காலதாமதம் இருக்கிறதென்று பல அன்பர்கள் சொன்னார்கள். ஹரிஜன இலாகா அதிகாரியைப் பற்றியும், ஹரிஜன நல இலாகாவைப்பற்றியும் குறிப்பிடும்போது அங்கே காலதாமதம் இருப்பதாகச் சொல்லப்பட்டது. காலதாமதம் செய்ய வேண்டும் என்ற சிந்தனை அவர்களுக்கு ஏன் இருக்க வேண்டும், இருந்திருக்குமா என்பதை கனம் அங்கத்தினர்களே சிந்தனை செய்து பார்க்க வேண்டும். எவ்வளவு தூரம் உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு தூரம் உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. அதோடு திரு. முத்திருளாண்டி அவர்கள் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர். முன்பெல்லாம் அவரை ஹரிஜன் என்றுகூட ரொம்ப பேர் சொல்வதுண்டு. அவர் இந்தப் பணிக்கு வந்த பிற்பாடு கடந்த மூன்று ஆண்டுகளாக [illegible] நல்ல சேவை செய்திருக்கிறார். நான் முன்பு சொன்னபடி இந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும் விஷயத்திலும் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்து வந்தார்கள். அவர் அப்படி வேலை செய்ததன் காரணமாக ஒரு பெரிய முன்னேற்றத்தை இந்த மாகாணம் கண்டிருக்கிறது என்று நான் இங்கே சொன்னால் அது மிகையாகாது.



24th March 1958] [Sri P. Kakkan]

என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரி திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அந்த ஆபீசிலே ஏதோ மாணவனைக் கொண்டுபோய்க் கேட்டதாக சொல்லப்பட்டது. அதை அவ்வளவாகப் பொருட்படுத்தக்கூடாது என்று நினைக்கிறேன். மக்களுக்காக சேவை செய்கிற அன்பர்கள் அதிகாரிகளையும் தங்களைப் போலவே கருதவேண்டுமேயொழிய, அவர்களை வேண்டா வெறுப்பாகப் பார்க்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லா கனம் அங்கத்தினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் நிச்சயமாகக் காது கொடுத்துக் கேட்க மந்திரிகள் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, அதிகாரிகளும் அப்படிக் கேட்கத்தான் இருக்கிறார்கள். ஆகையால், கனம் அங்கத்தினர்களுடைய கோரிக்கைகளெல்லாம் நன்கு கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காலதாமதத்திற்குக் காரணம் நான் அன்றைக்கே திருமதி சத்யவாணி முத்து அவர்கள் ஒரு கேள்வி கேட்டபோது சொன்னேன். அந்தந்த காலேஜ் பிரின்சிபால்களும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களும் உரிய சமயத்தில் ரின்யுவல் ஸ்காலர்ஷிப்புக்கான விண்ணப்பங்கள் அனுப்பாத காரணத்தால் கிராண்டு வழங்குவதிலே தாமதம் ஏற்பட்டது என்று நான் சொன்னேன். உண்மையை நிரூபிப்பதற்கு ரிக்கார்டு இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் நான்கு குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதிலே உள்ள தாமதத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே ஒரு ஹரிஜனக் குழந்தைக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு மீதியுள்ளவர்களுக்கும் விடப்பட்டதென்றால் அதற்குக் காரணம் மார்க் போதாமல் இருந்திருக்கும்; அல்லது சரியான விதிமுறைக்கு உட்பட்டு இருந்திருக்காது. இப்படி ஏதாவது ஒரு காரணம் இருந்திருக்குமேயொழிய வேண்டுமென்றே கொடுக்காமல் இருந்திருக்கமாட்டார்கள். திரு. முத்திருளாண்டி அவர்கள் பின் தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்ற எண்ணத்தோடு இருந்திருக்கவே மாட்டார் என்று உங்கள் மத்தியிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்காரும் பின் தங்கியவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் மாணவர்களுக்கு வந்து சேருவதில் காலதாமதம் ஏற்படும் காலத்தில் எல்லாம், ஷரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் ரூ. 200 வரையில் முதலிலே ஒரு **advance money** ஆக கொடுத்து, ஹாஸ்டலுக்கு வெளியாவது இந்தப் பணத்தைக் கொண்டு இருங்கள் என்ற ஏற்பாடு செய்ததன் காரணமாக எல்லா மாணவர்களும் இன்று ஹாஸ்டலில் தங்கி படிக்கிறார்கள். இனிமேல் அப்பேர்ப்பட்ட காலதாமதம் கூட இருக்கக்கூடாதென்பதை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆகையால், ஏதோ ரொம்பக் காலதாமதம் ஆய்விட்டது, அரசாங்கம் நன்றாகக் கவனிக்கவில்லை என்று அன்பர்கள் சொன்னார்கள். அதை நான் பூரணமாக ஒத்துக் கொள்ளமாட்டேன். இருக்கும் கஷ்டங்களையும் கனம் அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். வேண்டுமென்றே கொடுக்காமல் காலதாமதப்படுத்தியதாக கனம் அங்கத்தினர்கள் எண்ணிவிடக்கூடாது. ஹரிஜன, பின் தங்கிய மக்களுடைய முன்னேற்றத்திற்கு முதல்படியாக இருப்பது படிப்பு. அந்தப் படிப்புக்கான ஸ்காலர்ஷிப்புகள் வழங்கும் விஷயத்தில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருகிறது. அந்தக் கல்வியைக் கொடுப்பதிலே அரசாங்கம் எந்தவிதமான காலதாமதமும் செய்யாது என்று நான் உங்கள் மத்தியிலே சொல்லிக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை கனம் அங்கத்தினர் திரு. ஜெகன்னாதன் அவர்கள் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**Mr. SPEAKER :** கனம் மந்திரி அவர்கள் கொடுத்த பதிலுக்குப் பிறகு கனம் அங்கத்தினர் தன்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறார்களா ?

**Sri M. JAGANNATHAN :** வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the allotment of Rs. 2,33,44,500 under Demand XXII—Harijan Uplift be reduced Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : I shall now put the Demand to the vote of the House. The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,33,44,500 under Demand XXII—Harijan Uplift."

The Demand was put and carried and the Grant was made.

5-00 p.m. MR. SPEAKER : நான் இந்த சபையை நாளைக் காலை 8½ மணி வரை ஒத்திவைக்கிறேன்.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory rules, orders and notifications.

82. *Notification issued with G.O. Ms. No. 300, Home, dated 4th February 1958 amending rule 3 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

83. *Notification issued with G.O. Ms. No. 302, Home, dated 4th February 1958 exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the Jeep bearing serial number 54148-14080 with Motor No. IT-70977 imported for the use of Mr. Erven J. Long, Agricultural Consultant attached to the Government of Mysore under the Technical Co-operation Mission to India. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931.]*

#### B. Reports and other papers.

41. *Statement showing the decision taken on the recommendation of Doctor Lokanathan, in his report on the simplification and improvement of Sales Tax System in Madras.*

42. *Short review of the activities and achievements of the Civil Supplies Department of the Madras Government for the first half year of 1957.*





## APPENDIX I.

[Vide answer to starred question No. 383 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 24th March 1958, page 252 supra.]

(*a*) Allotment of amount districtwise for 1956-57 and 1957-58—

| District. | 1956-57 RS. IN LAKHS. | 1957-58 RS. IN LAKHS. |
|---|---|---|
| Madurai .. .. .. .. | 2·91 | 2·84 |
| Tiruchirappalli .. .. .. | 3·64 | 3·97 |
| Tirunelveli .. .. .. | 3·73 | 4 33 |
| Chingleput .. .. .. .. | 8 16 | 7 02 |
| South Arcot .. .. .. | 3·04 | 2·52 |
| North Arcot .. .. .. | 4·72 | 5·05 |
| Salem .. .. .. .. | 3·63 | 3 40 |
| Ramanathapuram .. .. .. | 1·65 | 8·13 |
| Tanjore .. .. .. .. | 7·02 | 7·37 |
| Coimbatore .. .. .. | 1·70 | 0 75 |
| Kanyakumari .. .. .. | – | 1·32 |
| Total .. | 40·20 | 46·70 |

(*b*) Rs. 1·85 lakhs.

## APPENDIX II.

[Vide answer to unstarred question No. 4 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 24th March 1958, page 264 supra.]

*Statement showing the quantities of Ammonium Sulphate supplied to the various districts during 1952-57.*

(ALL FIGURES IN TONS.)

| *Serial number and name of district.* | *Quantities of Ammonium Sulphate supplied.* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1952. | 1953. | 1954. | 1955. | 1956. | 1957. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 Chingleput (including Madras). | 7,498 | 6,382 | 7,763 | 8,812 | 9,011 | 3,399 |
| 2 North Arcot .. .. | 2,657 | 5,401 | 6,525 | 15,713 | 10 501 | 13 681 |
| 3 South Arcot .. .. | 3.3 0 | 5,457 | 3,185 | 8,441 | 6,788 | 6 607 |
| 4 Tanjore .. .. | 5,595 | 8 744 | 8,697 | 10,157 | 7 286 | 10 831 |
| 5 Tiruchirappalli .. | 8,715 | 7.001 | 7,661 | 11,000 | 13,575 | 13,605 |
| 6 Madurai Urban .. | 4,072 | 6,681 | 4,507 | 6,257 | 8 333 | 5 892 |
| 7 Ramanathapuram .. | 1,118 | 1.773 | 2,065 | 2.530 | 2,824 | 2 254 |
| 8 Tirunelveli .. .. | 5 88 | 7.470 | 7.438 | 9.488 | 12,399 | 8.091 |
| 9 Salem .. .. | 1,654 | 2 80 | 2,432 | 5.977 | 2,332 | 4,708 |
| 10 Coimbatore .. .. | 5,823 | 4,538 | 6,832 | 9,585 | 10,720 | 8,527 |
| 11 The Nilgiris .. .. | 2 | 1 | .. | 140 | 115 | 26 |
| 12 Kanyakumari .. | .. | .. | .. | .. | .. | 1,956 |
| Total .. | 46,012 | 55.931 | 57,305 | 88,410 | 83,884 | 79,277 |

NOTE.—The quantity supplied to each district is taken as the final allotment to the district.

APPENDIX III.

[Vide item III on page 267 supra.]

## REPORT OF THE JOINT SELECT COMMITTEE ON THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION AND PAYMENT OF FAIR RENT (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL No. 1 OF 1958).

To

THE HON. THE LEGISLATIVE ASSEMBLY,
MADRAS.

The Joint Select Committee appointed to consider the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958) has the honour to make the following report.

2. The Bill was published in English in an Extraordinary issue of the *Fort St. George Gazette*, dated 12th February 1958 and in Tamil in the *Fort St. George Gazette*, dated the 26th February 1958.

3. The Joint Select Committee was appointed by resolutions of the Legislative Assembly, dated the 14th February 1958 and of the Council, dated the 15th February 1958.

4. The Joint Select Committee met in the Lounge Room, Fort St. George, at 11-30 a.m. on Tuesday, the 4th March 1958 and in the Committee Room, Government Estate, at 10 a.m. on Wednesday, the 5th March 1958 and at 10 a.m., Saturday, the 8th March 1958 and again in the Lounge Room, Fort St. George, at 2-30 p.m. on Friday, the 14th March 1958.

5. At its first meeting on the 4th March 1958, the Hon. Sri M. A. Manickavelu was elected Chairman of the Joint Select Committee.

6. The Joint Select Committee decided to have an exact idea of the peculiar nature of the tenures 'kaiaeruvaramdars' and 'mattuvaramdars" prevailing in parts of the Tiruchirappalli district before taking up the Bill for consideration and determined the points which required further clarification.

7. Extracts from the report of the Member, Board of Revenue, who made a local enquiry on these various points, was read out to the Joint Select Committee by the Chairman at its meeting on the 14th March 1958. The Committee then felt that it was clear that the kaiaeruvaramdar was a person who corresponded more closely to a 'pannaival' than to a cultivating tenant and that only the mattuvaramdar had any claim to be treated on a par with the cultivating tenant.

8. The Hon. Sri C. Subramaniam suggested that the Bill may be dropped and a new Bill introduced and that the proposed legislation for kaiaeruvaramdars and mattuvaramdars might be on the following lines :—

(1) That kaiaeruvaramdars are to be treated on a par with 'pannaivals' and their rights protected as in the Tanjore Pannaiyal Protection Act.



(2) That small landholders owning 3 acres and less and without any other means of livelihood and who do not pay sales-tax or income-tax are to be completely exempted from the provisions of the Act.

(3) In the case of landholders owning up to 10 acres, they should be entitled to resume lands up to three acres for personal cultivation and lands not so resumed are to be pooled and divided among the mattuvaramdars in case the interests of any of them are pejudicially affected.

(4) In the case of those who own more than 10 acres, mattuvaramdars are to be raised to the status of cultivating tenants with the rights and liabilities of cultivating tenants under the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.

(5) Retrospective effect was to be given to the proposed legislation from 1st January 1957.

(6) The terms 'kaiaeruvaramdar' and 'mattuvaramdar' to be defined so as to bring out their status as stated above.

(7) The proposed legislation should be made applicable only to the 28 villages in Tiruchirappalli district where this peculiar tenure is said to be in force.

After some discussion, the Committee recommended, Sri S. M. Annamalai only dissenting, that the present Bill be dropped and fresh legislation be brought in on the lines suggested by the Hon. Sri C. Subramaniam.

The Committee reports accordingly.

9. The Committee decided that it was not necessary to publish the Report.

10. Sri S. M. Annamalai and others have given dissenting minutes which are annexed.

FORT ST. GEORGE, MADRAS-9,
15th March 1958.

M. A. MANICKAVELU,
*Chairman.*

### ANNEXURE.

### DISSENTING MINUTES.

### I

I am submitting hereunder a note of dissent to the report of the Joint Select Committee on the above Bill [Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Act, 1958].

Even if this Bill is passed, Mattuvaramdars and Kaiaeruvaramdars will not be benefited completely until or unless the principal Acts should be amended as to clear the doubt, i.e., who is a cultivator. Also provision should be made to have lists just as voter lists so as to know in which land the cultivator is cultivating. By these remedies only a cultivator can be benefited and cannot be evicted from the lands.

These kinds of varamdars are not only in Tiruchirappalli district, but also all over the presidency having different names in each district. So this Act should also be amended so as to be in force in all districts.

However if this Bill is passed some of the abovesaid varamdars who have already proved that they are cultivators but have been evicted on account of their being these kinds of varamdars can be benefited.

There is agitation between these Varamdars and Mirasdars in Tiruchirappalli district. Paddy is left in Kalathumedu without partition.

In this critical stage, I highly object to postpone this Bill and allow the Ordinance to lapse as per the decision of the Joint Select Committee.

I also differ from the decision of the Joint Select Committee that a separate Bill be prepared, i.e., bringing the Mattuvaramdars as tenants and Kaiaeruvaramdars as Pannaiyals. My opinion is that Mattuvaramdars and Kaiaeruvaramdars should also be brought as tenants under the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 and Madras Cultivating Tenants Protection Act, 1955.

S. M. ANNAMALAI.

II

This is a Bill intended to regularise the Ordinance issued for giving protection for Kaiaeruvaramdars and Mattuvaramdars. This made of tenancy is prevalent in a large number of villages in the taluks of Kulithalai, Musiri, Tiruchirappalli, Lalgudi and to some extent in Karur in the district of Tiruchirappalli. It is not correct to state that this mode of tenancy is confined to some 28 villages in the district. Further, it is not correct to state that Kaiaeruvaramdars are not tenants. The only difference between Kaiaeruvaramdar and Mattuvaramdar is the supply of bulls. Other factors are common. In our opinion these two kinds of varams are eligible for protection and other benefits under the Madras Cultivating Tenants Protection Act and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act.

We therefore insist that the present Bill must be passed as it is.

M. KALYANASUNDARAM.
A. R. MARIMUTHU.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 25th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### *Scheduled Caste students*

* 21S.N.Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Dr. Srimathi Sathiyavanimuthu): Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government have received recently any complaint to the effect that the Director of Harijan Welfare has been ill-treating the Scheduled Caste students; and

(b) if so, the action taken thereon by the Government?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes. A representation has been received by the Government and it is from the hon. Member herself.

(b) The complaints being of a general nature did not admit of any specific action, but the Government are impressing on the Director of Harijan Welfare the need to show due courtesy and consideration to persons and petitioners approaching him or his officers for assistance or redressal of their grievances.

SRI S. LAZAR: இந்தக் கேள்விக்கு பதில் அளிக்கக்கூடிய நேரத்தில் இல்ட்ரீட்மெண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இது ஹார்ட்ஷிப் என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளதா அல்லது கொடுமை என்ற அளவில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: யாருக்கும் கொடுமை இழைக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM: அந்த அலுவலகத்தில் நடந்த செய்தி என்ன ? இந்தச் சட்டசபை அங்கத்தினரும், அவரைச் சார்ந்த அங்கத்தினர்களும் டைரெக்டரிடமோ, அவருடைய பீ.ஏ.-யிடமோ விஷயத்தைத் தெரிந்து கொள்ள முயற்சிக்காமல் அங்கே இருந்த சாதாரண குமாஸ்தாக்களிடம் போய் அதட்டி மிரட்டியதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN: எந்த ஆபீசுக்குச் சென்றாலும் அதிகாரியிடத்தில் விஷயத்தை விசாரிப்பது தான் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL: May I know whether the complaint was written or oral and what was the nature of the complaint?

THE HON. SRI P. KAKKAN: அப்படி ஒன்றும் பயங்கரப்படுத்தியதாகத் தெரியவில்லை.

[25th March 1958

*Bus accident.*

*228.N.Q.—SRI A. NESAMONY, SRI T. T. DANIEL, SRI M. WILLIAM, SRI T. S. RAMASWAMY PILLAI AND SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Transport bus overturned on 10th March 1958 at Parasalai on its way to Trivandrum;

(b) the number of passengers travelling in the bus at the time of accident;

(c) the number of passengers injured;

(d) the number of passengers dead;

(e) the cause of the accident; and

(f) what help is rendered to the injured and to the families of the injured and the dead?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) 89 (including driver and conductor).

(c) 86 (including driver and conductor).

(d) 2.

(e) The driver of the bus (K. 87) overtook another bus (K. 68) going in front at a high speed. While so doing, it was about to run into a ditch on the right side of the road and in order to avoid this, the driver appears to have suddenly turned to his left and lost control. The bus then hit a post on the left side of the road, ran into an open drain, tilted and then crashed into the trunk of a road-side tree and fell on its rear side.

(f) First-aid was rendered by the crew of the State Transport vehicle and the injured were taken to hospital. No information is at present available as to the help rendered to the families of the injured and the dead.

SRI A. NESAMONY: May I know the number of vehicles that were plying on that day for the Mandakad festival and whether the Kerala Transport Service was also running its buses by obtaining special permits from our Road Transport Authority?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not have figures about the total number of buses which were run for the festival. But it is true that the Kerala State buses were also running in that route. So far as the Madras State buses are concerned, we got permit for about four buses for this route.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister, what is the capacity of the bus and how many persons were allowed to travel on that day? Also whether the District Collector, the Director of Transport, who was conducting a conference in Nagercoil and other important officials of the State went either to the scene of occurrence or to the hospital to take care of the injured?

THE HON. SRI R. VENKATARAMAN: The capacity of the bus is 37 but the passengers who wanted to go to the festival would not hear any protest from the conductor. They all got into the



25th March 1958]

bus and they could not be taken out. Actually there were 89 passengers including the driver and the conductor in the bus. Immediate first-aid was given by the transport crew and they were immediately taken to the Neiyatinkara hospital. Five of them were admitted in the Neiyatinkara hospital and 20 of them were admitted in the Trivandrum hospital. Every possible assistnace was rendered immediately. I do not know whether the Collector visited the scene.

SRI T. S. RAMASWAMY PILLAI: May I know whether there was any scheduled driver kept as a stand-by and whether the concerned driver was recruited by the Public Service Commission or by the present Director of Transport?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not have any particulars about the driver but it is obvious from the report that the driver tried to overtake another transport vehicle which was going at a fairly good speed in the same direction and it appears that the accident was, I should say, largely due to (An hon. Member: Rash driving)—I would not say rash driving as the matter is before the court . . .

MR. SPEAKER: If the matter is before the court, then it is *sub judice*.

THE HON. SRI R. VENKATARAMAN: Whether it was due to rash driving or not is a matter to be decided by the court.

SRI A. NESAMONY: May I know whether instructions were issued by the Traffic Superintendent that the buses should be overloaded so as to compete with the Kerala Bus Service and also whether there was any officer of the department regulating traffic at the junction where the Mandakad festival was celebrated?

THE HON. SRI R. VENKATARAMAN: Far from giving instructions that they should be overloaded, instructions were given that they should not be overloaded. But it was impossible for the conductor to prevent people from getting into the bus when they were rushing for the festival.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister whether any of our officers of the Transport department actually took the injured to any of the hospitals and also whether the Government are aware of the fact that those poor injured people, after their discharge from the hospitals, had to beg for money from the people to go to their houses?

THE HON. SRI R. VENKATARAMAN: So far as the taking to the hospital is concerned, the State Transport has come a little after this incident and the crew of the State Transport bus took five of them to the Neiyatinkara hospital and the rest to the Trivandrum hospital. So far as the second part of the question is concerned, I have no information.

[25th March 1958

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the Government are aware of the fact that the Kerala Ministers took the trouble to visit the scene of accident whereas the Director of Transport who was at that time in Nagercoil was not kind enough to investigate the matter personally?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not have this information but I presume that everything possible under the circumstances was done to alleviate the suffering of the injured persons.

SRI N. MAHALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக முன்பு திருவாங்கூரில் அளவுக்கு அதிகமான பிரயாணிகளை பஸ்களில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள் என்பது உண்மையா? அதன் காரணமாக சென்னை ராஜ்ய சர்க்கார் அந்த பஸ் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகும் ஓவர்லோடைத் தடுக்க முடியாமலிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : முக்கியமாக விசேஷ தினங்களில்—விழா நாட்களில் அதிகமான பிரயாணிகள் பஸ்ஸில் ஏறுவதைத் தடுக்க முடியவில்லை அந்தப் பிரதேசத்தில். சொன்னாலும் அங்கே இருக்கிற பிரயாணிகள் கேட்பதில்லை. அது வழக்கமாகப் போய்விட்டது என்று என்னிடத்தில் சொல்கிறார்கள்.

SRI M. JAGANNATHAN : Sir, I understand that the driver in question was a new recruit on daily wage basis and that he has failed in the driver's test conducted by the foreman? How is it that the Government appointed such an inefficient driver?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the allegation made by the hon. Member is true, it is very serious and I will take action on that. At present I have no information about the qualifications of the driver.

SRI T. S. RAMASWAMY PILLAI rose—

MR. SPEAKER : I have already allowed twelve supplementary questions on this question. Of these, nine questions were allowed to hon. Members coming from that area. If you will ask only one more question, I have no objection.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know whether the Government are aware of the fact that conductors are being punished for refusing to overload and that one Sri Nagarajan's increment was barred by the transport authority because he refused to overload?

THE HON. SRI R. VENKATARAMAN : I shall be grateful to the hon. Member if he would put it in writing and send it to me. No person has any right to do anything against law. I shall certainly take very serious notice if the allegations are proved.

*Raw films.*

* 23 *S.N.Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a factory for the manufacture of raw films at Ootacamund in the Nilgiris district?



25th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. But no final decision has been taken by the Government of India so far on the proposal to establish the factory at Ootacamund.

SRI V. SANKARAN : முன்னால் இந்த தொழிற்சாலை கொடைக்கானலில் ஆரம்பிக்க இருந்து பின்னால் நீலகிரிக்கு மாற்றப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தியாவில் பல பாகங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. அவைகளுள் கொடைக்கானலும் ஒன்று. ஆனால் அது குறித்து பரிசீலனை செய்த நிபுணர்கள் இந்தியாவில் இருக்கிற எல்லா பாகங்களையும் விட உதகமண்டலந்தான் சிறந்தது என்று தேர்ந்தெடுத்தார்கள்.

SRI A. GOVINDASAMY : இந்தத் தொழிலை சர்க்கார் ஏற்று எடுத்து நடத்த உத்தேசமா அல்லது தனியார் துறையில் விட உத்தேசமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சர்க்கார் துறையில் நடத்தப்படப் போகிறது.

SRI A. A. RASHEED : Sir, has any aid been sought from foreign Governments?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a Central Government venture under the National Development Corporation. This Government have no particulars about the financial structure of this venture.

*Primary Health Centre.*

* 393 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken charge of the Primary Health Centre at Vedaranyam;

(*b*) if so, when;

(*c*) whether the Government have any proposal to improve it; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) 13th June, 1957.

(*c*) & (*d*) Yes, Sir; an in-patient ward with 8 beds was built under Community Development Scheme and a new ward with 8 beds is also being constructed with 50 per cent contribution from the public.

SRI A. VEDARATHNAM : இந்த ஆஸ்பத்திரியில் பேஷண்ட்ஸ் நிறைய வருகிறதால் உதவி லேடி டாக்டர்கள் வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அரசாங்கம் அதை அனுமதிப்பார்களா ? அங்கு ஆசன வசதிகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடம் அந்தத் தகவல் இப்பொழுது இல்லை.

*Elementary schools.*

*394 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of elementary schools in the Talavadi firka, Coimbatore district;

(*b*) the number of students, boys and girls, studying in these schools; and

(*c*) the number of Harijan boys and girls among them?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) 30

(*b*) Boys 932
Girls 378.

(*c*) Boys 110
Girls 88.

SRI P. G. MANICKAM: தாலவடி பிர்க்காவில் 22 கிராமங்கள் இருக்கின்றன. இன்னும் அநேக கிராமங்களில் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அத்துடன் லோக்கல் டெவலெப்மெண்ட் ஸ்கீமில் 12 இடங்களில் பள்ளிக்கூடங்கள் கட்டுவதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் ஏழைகளாக இருப்பதினால் அவர்களால் பள்ளிக்கூடம் கட்ட நன்கொடை கொடுக்க முடியாமல் இருப்பதால் அதையும் இலவச மாகக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 22 கிராமங்கள் இங்கு இருப்ப தாகச் சொன்னார்கள். இப்பொழுது இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக் கூடங்கள், 30. லோக்கல் டெவலெப்மெண்ட் ஸ்கீமைப் பற்றி தனியாக கேள்வி போட வேண்டும்.

SRI G. G. GURUMURTHI: இருக்கிற பள்ளிக்கூடங்களில் போது மான ஆசிரியர்கள் இல்லாதது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி யானால் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஜில்லா போர்டுக்கு உத்தரவு அனுப்புவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஜில்லா போர்ட் நிர்வாகத் தில் எவ்வளவு உபாத்தியாயர்கள் வேண்டுமோ அவ்வளவு உபாத்தியாயர் களை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பகுதியில் உபாத்தியாயர் கள் குறைவாக இருக்கிறார்களோ அதை ஜில்லா போர்ட் நிர்வாகிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கட்டாயம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள்.

SRI P. G. MANICKAM: இந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் 90 சத விகிதம் ஹரிஜன மக்கள்தான். பள்ளிக்கூடத்தில் மிட் டே மீல்ஸ் வழங்க நன்கொடை வசூலிக்க ஒரு திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு 90 சத விகிதம் மக்கள் ஹரிஜனங்களாக இருப்பதால் ஹரிஜன இலாகா பண்டில் இருந்து பணம் எடுத்து மத்தியான உணவு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

MR. SPEAKER: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லே.

*Slums.*

*395 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for slum clearance and town-planning schemes in the municipalities and major panchayats in Coimbatore district in 1957–58; and



(*b*) the number of municipalities and major panchayats in which such work has been taken up?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Amount allotted during 1957–58 for—

(1) Slum Clearance Schemes.—Nil.

(2) Town Planning Schemes.—Rs. 9,40,550.

(*b*) Eight municipalities and three panchayats.

SRI P. G. MANICKAM: இந்த பஞ்சாயத்து போர்ட் மூலமாகவும், முனிஸிப்பாலிட்டிகள் மூலமாகவும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்ட இந்தத் தொகையிலிருந்து எவ்வளவு செலவழிக்கப்பட்டது? எந்தெந்த முனிஸிப் பாலிட்டிகளும், பஞ்சாயத்து போர்ட்களும் வீடுகள் கட்ட பிரயாசை எடுத்துக் கொண்டன?

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் பொது வாக கேட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த விவரத்தை இந்தக் கேள்வி யிலிருந்து சொல்லமுடியாது

SRI V. K. KOTHANDARAMAN: பெரிய நகரங்களில் சேரி ஒழிப்புத் திட்டத்தில் கவனம் செலுத்துவது போல் கிராமங்களில் கவனம் செலுத்தப் படவில்லை. இதுவிஷயமாக பார்லிமெண்டில் ஒரு கேள்வி கேட்டபோது. . .

MR. SPEAKER: பார்லிமெண்ட்டில் கேட்டால் அதற்கு இந்த மந்திரி எப்படி ஜவாப்தாரியாக முடியும்? பார்லிமெண்ட் சமாசாரம் இங்கு வேண் டியதில்லே.

SRI V. K. KOTHANDARAMAN: சேரி அபிவிருத்தி சம்பந்தமாக எவ்வளவு ராஜ்ய சர்க்கார் கேட்கிறார்களோ, அவ்விஷயத்தில் நாங்கள் அக்கறை காட்டுவோம், கவனம் செலுத்துவோம். . . .

MR. SPEAKER: I disallow this supplementary question.

*Prime Minister's visit.*

*396 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI AND SRI A. GOVINDASAMY: Will the Hon. the Chief Minister be pleased to state the total expenditure incurred by the Government on account of the Prime Minister's visit to Madras on the 6th January, and his return from Madras on the 7th January 1958?

THE HON. SRI C. SUBRAMANIAM: A total expenditure of Rs. 43,542–20 nP. was incurred by this Government in connection with the visit to Madras of the Prime Minister of India on 6th January 1958.

SRI A. GOVINDASAMY: இம்மாதிரி பிரதமர் அவர்கள் அடிக்கடி இந்தப் பகுதிக்கு வருவதால் அதிகச் செலவு ஏற்படுவதால் இந்தச் செலவை மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்குமா?

THE HON SRI. C. SUBRAMANIAM: இதில் செலவு கொஞ்சம் அதிக மானதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக்கழக இயக்கந்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தயவுசெய்து அவர்கள் சட்ட விரோதமாக எதுவும் செய்யாமல் நல்லவழியில் நடந்துகொள்வார்களே யானால் குறைவாகச் செலவு செய்தால் போதும். பிரதம மந்திரியையும் இங்கு அடிக்கடி வரவேற்கலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : "கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ" என்பதுபோல் பண்டிட் ஜவஹர்லால் நேரு என்ற மாணிக்கம் இந்த நாட்டிற்கு கிடைத்திருப்பதில் நமக்கு எத்தனை கோடி ரூபாய். . .

MR. SPEAKER : ஒரு தடவை ஒரு கேள்வி கேளுங்கள். பிறகு அடுத்த கேள்வி கேட்கலாம்.

SRI A. GOVINDASAMY : நம் பிரதமமந்திரி இங்கு வந்த காலத்தில் அவர்களுக்காக எவ்வளவு போலீஸ்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள் ? அதற்கான செலவு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களுக்காக போலீஸ்காரர்கள் நியமிக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்காகத்தான் போலீஸ்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதனால்தான் செலவு ஏற்பட்டது, கூடுதலாக.

SRI A. VEDARATHNAM : இந்தச் செலவில், எரிக்கப்பட்ட பஸ்களின் கிரயமும் சேர்ந்திருக்கிறதா ? இல்லையென்றால் அதன் மதிப்பு எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுபற்றி எனது சக மந்திரியவர்களிடம் கேள்வி கேட்டால் தெரியும். அந்த விவரம் இதில் இல்லை.

SRI K. VINAYAKAM : புதுப்பேட்டையில் இருக்கிற ஒரு காங்கிரஸ் கௌன்ஸிலரின் ஜவுளிக்கடை கொள்ளை அடிக்கப்பட்டு, அவரையும் அடித்தார்கள். அந்தச் செலவும் இதில் சேர்ந்திருக்கிறதா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI A. GOVINDASAMY : திராவிடமுன்னேற்றக்கழகக்காரர்களுக்காக போலீஸ்காரர்கள் போட்டதாகச் சொன்னார்கள். பிரதமர் தென்னகத்திற்கு வரும்போதெல்லாம் தென்னகமக்களின் மனம் புண்படாமல் பேசிவிட்டுப் போக அமைச்சர் அவர்கள் அவர்களுக்குத் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே யார் புண்படப் பேசுகிறார்கள் என்பது கோவிந்தசாமியே யோசித்துப் பார்த்தால் நன்கு தெரியும். ஆகவே, தாங்கள் பேசும் வார்த்தையை கொஞ்சம் கவனித்துப் பார்ப்பார்களேயானால் மற்றவர்களின் பேச்சும் அதற்குத் தகுந்தமாதிரியிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI V. SANKARAN : நாட்டினுடைய ஐக்கியத்திற்கும், நாட்டினுடைய நலத்திற்கும் நம்முடைய பிரதமர் நேரு அவர்கள் எவ்வளவு தடவை இங்கு வந்து விட்டுப் போனாலும், எவ்வளவு செலவானாலும், அவரை வரவேற்க சர்க்கார் தயாராயிருப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாம் வரவேற்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் இந்த நாடு ஐக்கியமாயிருப்பதால், அவர்கள் எல்லாப் பகுதிகளுக்கும் போக வேண்டியதாகயிருக்கிறது. உடனடியாக வரவில்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எதிர்ப்பினால் தான் வரவில்லை என்று அவர்கள் சந்தோஷப்பட்டுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know the broad heads of this expenditure and the amount spent under each head?

THE HON. SRI C. SUBRAMANIAM : Generally on bandobust arrangements, Sir.



### *Educational Concessions.*

* 397 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Harijan Christian students admitted in the Educational Institutions other than Elementary and Higher Elementary Schools in 1957–58;

(*b*) the number amongst them enjoying full educational concessions; and

(*c*) whether there is any proposal to give the remaining students also full educational concessions?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*c*) The Government do not have the particulars. They consider that the time and labour involved in collecting the particulars may not be commensurate with the object in view.

SRI S. LAZAR : ஸார், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப்போல், கல்லூரிகளில் படிக்கும் ஹரிஜன கிரிஸ்தவ மதத்தினர் எல்லோருக்கும் சலுகை கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பிரச்னை இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

### *Waste lands.*

* 398 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of Government waste lands in the North Arcot district (talukwise);

(*b*) the extent brought under cultivation in 1957; and

(*c*) the extent for which pattas have been issued?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*), (*b*) & (*c*) The particulars are given in the statement* placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மேஜையின் மேலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஸ்டேட்மெண்டிலே, சுமார் 10 சத விகிதம் நிலங்களைக் கூட பட்டா செய்ததாகத் தெரியவில்லை. சுமார் 20 வருஷங்கள், 30 வருஷங்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கக் கூடிய ஏழை விவசாயிகளுடைய சர்க்கார் தரிசு நிலங்களை சர்க்கார் பட்டா செய்து கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக பட்டா செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியுமோ அதெல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு இப்போது அமுலில் இருந்து வருகிறது.

SRI S. M. ANNAMALAI : ஸார், போளூர் தாலூகாவிலே 7,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் 90 ஏக்கர் மட்டும் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி நிலங்களை சீக்கிரத்தில் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த பட்டா கொடுக்கும் விஷயத்திலே தகாத நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்தால் பட்டா கொடுக்க முடியாது. இதையெல்லாம் கவனிக்க கொஞ்சம் கால தாமதம் ஆகிறது.

* Printed as Appendix on page 466 infra.

[25th March 1958

பட்டா கொடுக்காவிட்டாலும் இந்த 7 ஆயிரத்து சில்லரை எக்கர் விஸ்தீரணத்தில், இரண்டாயிரத்து நானூற்றுச் சில்லரை எக்கர் இப்போது சாகுபடியில் இருக்கிறது.

### *Grants to Institutions outside the State.*

* 399 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount of grants or the extent of aid given to the various institutions outside the State; and

(*b*) the activities of such institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The amounts sanctioned to the institutions outside the State during 1957-58 and their activities are given below :—

| *Name of the Institution.* (1) | *Amount of grant sanctioned in 1957-58.* (2) | *Remarks.* (3) |
|---|---|---|
| **Education and Scientific Research—** | | |
| 1 Bhandarkar Oriental Research Institute, Poona. | 1,000 | Engaged in the promotion of Sanskrit. |
| 2 Prakrit Text Society, New Delhi. | 5,000 | |
| 3 Sanskrit Vishva Parishad, Bombay. | 1,000 | |
| 4 Raman Research Institute, Bangalore. | 2,000 | Engaged in the development of scientific research. |
| 5 Museums Association of India, Bombay. | 600 | Promoting museum movement in India. |
| 6 The Numismatices Society of India. | 300 | Promoting study of numismatics. |
| **Industries—** | | |
| 1 Indian Institute of Science, Bangalore. | 5,000 | Doing investigation of chemical problems arising in this State and imparts training to students on Government Scholarship from this State in research work. |
| 2 Indian Standards Institution, New Delhi. | 2,000 | Issues standard specifications for various indigenous products which are communicated to Departments of the Government for their information and guidance in selecting the materials required for the Departments. |

SRI M. P. SARATHI : ஸமஸ்கிருத ஆராய்ச்சிக்காக நம் சர்க்கார் மானியம் கொடுப்பதுபோல தமிழ் வளர்ச்சிக்காக வெளி மாகாணத்திலிருந்து ஏதாவது மானியம் வருகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் தனி கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும். அதுபோல கிடைக்கிறது என்பதுதான் என்னுடைய நினைவு.



25th March 1958]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : For how many years will the Government go on giving this grant? Will the Hon. Minister also tell us whether the other States also are giving similar grants?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, the other States are also giving similar grants. In making this grant, we decided on an ***ad hoc*** basis.

### *Government Headquarters Hospital, Cuddalore.*

* 400 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of construction of the new ward with provision for 100 beds in the Government Headquarters Hospital, Cuddalore?

THE HON. SRI M. A. MANICKAVELU : Detailed plans and estimates have been prepared and the work will commence after it is technically sanctioned by the Chief Engineer, P.W.D.

SRI A. GOVINDASAMY : ஸார், இந்த ஆஸ்பத்திரிக்கு அதிகப்படியாக 100 பெட்டுக்கு ஒரு வார்டு கட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் முதலமைச்சர் அவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டியும் இது வரையில் வேலை செய்யப்படவில்லை. இங்குள்ள ஜன நெருக்கத்தைத் தவிர்த்து உடனடியாக வேலை நடத்த சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வேலையை உடனடியாகத் துவக்க நல்ல சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இப்போது அஸ்திவாரம் போடப்படும் நிலைமையில் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே தென் ஆற்காடு மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்வதற்காகவும், இன்னும் இதைப் போன்ற ஆறு மாவட்ட ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்ய 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே இருக்கிறது. அந்தப் பணத்தை தென் ஆற்காடு ஜில்லாவில் இருக்கிற மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியின் படுக்கை எண்ணிக்கையை—அதாவது பெட் ஸ்ட்ரெங்த் என்று சொல்வார்கள்—அதிகரிக்க செலவு செய்து அந்த வசதிகளைச் செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் எல்லா மாவட்டங்களுக்கும் 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னதாகத் தெரிகிறது. இந்த ஆஸ்பத்திரிக்கு மாத்திரம் 13.9 லட்ச ரூபாய் செலவாகப் போகிறது.

SRI T. KARIA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, 13 லட்சம் ரூபாய் தென் ஆற்காடுக்கு என்று சொன்னார்கள். மற்ற ஜில்லாக்களுக்கும் ஏதாவது செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

MR. SPEAKER : முதல் கேள்வியிலிருந்து எப்படி இந்தக் கேள்வி வரும். நீங்கள் ஒரு தனிக் கேள்வி போடுங்கள்.

### *Bifurcation of the Tiruchirapalli district.*

* 401 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Revenue be

pleased to state—

(a) whether there is any proposal under consideration for forming a new district of Pudukottai by bifurcating the present district of Tiruchirappalli;

(b) how long this proposal has been under consideration; and

(c) when a final decision is expected to be taken?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI M. KALYANASUNDARAM : புதுக்கோட்டை ஜில்லா என்று தனியாகப் பிரிக்காவிட்டாலும், திருச்சி ஜில்லாவிலிருந்தும், கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்தும் சேர்த்தோ, அல்லது திருச்சி ஜில்லாவிலிருந்தும் ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்தும் சேர்த்தோ, இன்னும் அதிகப்படியான ஜில்லாக்களைப் பிரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தற்போது சில ஜில்லாக்கள் பெரிதாக இருப்பதால் நிர்வாக சௌகரியத்திற்காக சில ஜில்லாக்களில் ஒரு ஜில்லா கலெக்டர் நிர்வாகம் செய்வதை, 2 கலெக்டர் நியமித்து அதாவது ஒரு அடிஷனல் கலெக்டர் போட்டு நிர்வாகம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : அப்படி பிரிவினை ஏற்படுத்துவதாக இருந்தால் பொது மக்களுடைய அபிப்பிராயத்தையும், பொது மக்களின் பிரதிநிதிகளான சட்ட சபை அங்கத்தினர்களையும் இதைப் பற்றி கேட்பார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த அபிப்பிராயம் அவசியமில்லை. ஏனென்றால், இந்த அதிகப்படியான ஜில்லா கலெக்டரும் ஹெட்க்வார்ட்டர்ஸிலே இருந்து நிர்வாகம் செய்யப்போகிறார். அந்த நான்கு ஜில்லாக்கள்—கோயம்புத்தூர், சேலம், தஞ்சை, திருச்சி.

SRI V. SANKARAN : ஏற்கெனவே நமது ராஜ்யத்தில் சேர்வதற்கு முன்னாலேயே புதுக்கோட்டை ஒரு சமஸ்தானமாக இருந்ததால் அங்கு பல பெரிய நல்ல வசதிகள் பொருந்திய கட்டிடங்கள் ஹெட்க்வார்ட்டர்ஸிலே இருக்கின்றன. அவைகளை உபயோகித்துக்கொண்டு அதை ஒரு ஜில்லாவாக அமைக்கவேண்டுமென்று பொதுமக்கள் கிளர்ச்சி செய்து வந்தார்கள். அதற்கு அரசாங்கம் இணங்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜில்லாவைப் பிரித்து அதற்கு எதைத் தலைநகரமாக ஏற்படுத்த வேண்டுமென்று யோசிக்கும்போது இந்தத் தகவல்கள் உபயோகமாயிருக்கும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் அமைச்சர் அவர்கள் நிர்வாக சௌகரியத்திற்காக இன்னொரு கலெக்டரை 4 ஜில்லாக்களில் நியமிக்கப்போவதாகச் சொன்னார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு கலெக்டர் நியமிக்கப் போகிறார்களா ? அல்லது ஜில்லாவையே இரண்டு ஜில்லாக்களாகப் பிரித்து இரண்டு கலெக்டர்களைப் போடப் போகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டம் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது முடிவாக எதுவும் சொல்ல முடியாது.

SRI S. NAGARAJA MONIGAR : நிர்வாக சௌகரியத்திற்காக பெரிய ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று கருதினால், ஒரு பகுதிக்கு ஒரு கலெக்டரையும், இன்னொரு பகுதிக்கு இன்னொரு கலெக்டரையும் ஏற்படுத்தினால் நலமாக இருக்குமல்லவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படித்தான். ஏற்கெனவே இருக்கிறவருக்கு ஒரு பாதி. புதிதாக வருபவருக்கு ஒரு பாதி.



SRI A. V. P. ASAITHAMBI : புதுக்கோட்டை மாவட்டத்தை தனியாக அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதே மாதிரி, ராமனாதபுரம் மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை புதுக்கோட்டையுடன் சேர்த்து, மிகுதி இருக்கின்ற ராமனாதபுரம் மாவட்டத்தின் பெயரை விருதுநகர் மாவட்டம் என்று மாற்றி அமைப்பதற்கு சர்க்கார் முன்வருமா ? ஏனென்றால் இப்பொழுது ராமனாதபுரம் மாவட்டத்தின் "ஹெட்குவார்ட்டர்ஸ்" மதுரையில் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னை மும்முரமாக எடுத்துக்கொள்ளும் போது இவைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

SRI V. ARUNACHALA THEVAR : புதுக் கோட்டை சமஸ்தானமாக இருந்த காலத்தில், அங்கு கட்டிட வசதிகள் இருந்தன. அதை வைத்துக் கொண்டு அதை ஒரு தனி ஜில்லாவாக பிரிக்கலாம் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். சர்க்கார் கூடிய சீக்கிரம் அதை தனி ஜில்லாவாக பிரிப்பார்களா என்று தெரிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVEL[illegible] "கூடிய சீக்கிரம்" என்றால் அரசாங்க "அகராதியில்" வேறு அர்த்தம். (சிரிப்பு)

SRI M. C. MUTHUKUMARASWAMY : பிரிக்கப்படும் ஜில்லாக்களில் தஞ்சை ஜில்லாவும் ஒன்று என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி தஞ்சை ஜில்லா பிரிக்கப்படும்போது காரைக்கால் பிரதேசத்தையும் சேர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜில்லாக்கள் பிரிக்கப்படும் போது இவைகள் எல்லாம் கவனிக்கப்படும். இரண்டு மூன்று ஜில்லாக்களிலிருந்து சில பகுதிகள் எடுக்கப்படவேண்டியிருக்கும். சில பகுதிகள் சேர்க்கப்பட வேண்டியிருக்கும். இப்பொழுது இதைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

SRI A. GOVINDASAMY : "கூடிய சீக்கிரம்" என்ற வார்த்தைக்கு அரசாங்க "டிக்ஷனரியில்" வேறு அர்த்தம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு காலம் என்பதை விளக்கிச் சொல்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சாதாரணமான காலத்தை விட கொஞ்சம் அதிகப்படியான காலம் என்று அர்த்தம். (சிரிப்பு)

SRI P. G. MANICKAM : கோயம்புத்தூரில் இருக்கும் பல இலாகாக்கள் இப்பொழுது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தலைமை ஸ்தாபனங்களும் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அங்கு இருக்கும் ஜில்லா கலெக்டர்களுக்கு ஸ்பெஷல் அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இது கோயம்புத்தூர் ஜில்லாவைப்பற்றிய கேள்வி. இந்த கேள்வியை இப்பொழுது அனுமதிக்க முடியாது.

### *Basic Education.*

* 402 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI AND SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the progress of the Basic System of education; and

(b) the facilities provided for the students, who have completed their Post-Basic education, for their further Collegiate studies?

[25th March 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Six copies of the Booklet showing the progress of Basic Education for 1956-57 are kept in the Legislature Secretariat Library for reference;

(b) The matter will be taken up with the Universities as soon as the syllabus for the course is finalised.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the very teachers who are appointed to propagate the system of basic education are doing anti-basic education propaganda, thus undermining the very laudable object with which it has been launched in our State?

MR. SPEAKER : How does that question arise from the main question. Further there is an insinuation in the question.

SRI A. VEDARATHNAM : "போஸ்ட் பேஸிக்" கல்வியை படித்த மாணவர்களுக்கு மேல்படிப்பு படிப்பதற்கு இங்கே ரூரல் காலேஜ், ரூரல் யூனிவர்சிடி அமைப்பதற்கு ஏற்பாடுகள் உண்டா ? அப்படியானால் எங்கே, எப்பொழுது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது சர்க்காருக்கு அந்தவிதமான திட்டம் ஒன்றும் இல்லை. ஆனால் இரண்டு ரூரல் இன்ஸ்டிடியூட்கள்—ஒன்று காந்திகிராமத்திலும், மற்றொன்று பெரியநாயக்கன் பாளையத்திலும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கு "போஸ்ட் பேஸிக்" பயிற்சி பெற்றவர்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : ஏற்கெனவே உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, தள்ளாத வயதில் "போஸ்ட் பேசிக்" பயிற்சி பெறுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. இதை அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இந்தக் கேள்வி எழவில்லை.

SRI K. B. S. MANI : "போஸ்ட் பேஸிக்" பயிற்சி பெறும் மாணவர்களுக்கு, குறிப்பாக விவசாயத்தில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. இவர்களுக்கு மற்ற தொழில் துறைகளிலும் பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : "பேஸிக்" கல்வி என்பதே தொழில் மூலமாக கற்க வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டது. என்ன தொழில் இருக்க வேண்டும் என்பது பற்றி, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்கக்கூடிய வசதிகளைப் பொறுத்து முடிவு செய்திருக்கிறார்கள். மற்ற தொழில்கள் மூலம் கல்வி சொல்லிக் கொடுப்பதற்கு வசதி இருக்கக்கூடிய இடங்களில் அவைகளை ஆரம்பிப்பதற்கு தடை ஒன்றும் கிடையாது.

SRI A. VEDARATHNAM : "போஸ்ட் பேஸிக்" பயிற்சி பெற்றவர்கள் தொழில் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுகிறார்களா ? அப்படியானால் எந்த எந்த கல்லூரிகளில் இடம் பெறுகிறார்கள். அவர்கள் ஸீனியர் பேஸிக் டிரெயினிங் ஸ்கூலில் அனுமதிக்கப்படுகிறார்களா? அப்படியில்லாவிட்டால், அவர்களை அனுமதிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பள்ளிக்கூடங்களில் பாஸ் செய்த உடனேயே தொழில் கல்லூரிகளிலே எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு மேல் இரண்டு வருஷம் படிக்க வேண்டும். ஒரு வருஷம் "பிரி யூனிவர்சிடி" படிப்பும், ஒரு வருஷம் "பிரி பொரபஷனல்" படிப்பும் படிக்க வேண்டும். அதற்குப்பிற்பாடுதான் தொழில் கல்லூரிகளில் இடம் பெற முடியும். இவர்கள் நேரிடையாக தொழில் கல்லூரிகளில் இடம் பெறும் பிரச்னை எழவில்லை.



25th March 1958]

ஸீனியர் பேஸிக் பள்ளிகளில் இடம் பெறுவார்களா என்பது பற்றி இப்பொழுது போஸ்ட் பேஸிக் பள்ளிகளில் எந்த அளவுக்கு படிப்பின் தரம் இருக்கிறது என்பதை நிர்ணயிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அவர்களும் தங்களுடைய அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதை பரிசீலனை செய்த பிறகு அந்த படிப்பின் தரம் எஸ்.எஸ்.எல்.ஸி. படிப்பின் தரத்திற்கு உயர்ந்து இருக்குமானால் ஸீனியர் பேஸிக் பள்ளிகளில் எடுத்துக் கொள்வதற்கு ஆட்சேபனை கிடையாது.

SRI M. P. PERIASAMI : ஓர் ஆசிரியர் பள்ளிகளுக்காக மோகனூரில் 200 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போஸ்ட் பேஸிக் டிரெயினிங் அல்ல. அந்த இடத்தில் பயிற்சி கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் "போஸ்ட் பேஸிக்" டிரெயினிங் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா டிரெயினிங் ஸ்கூல்களையும் "பேஸிக் டிரெயினிங்" ஸ்கூல்களாக மாற்ற வேண்டும் என்பது தான் சர்க்காரின் திட்டம். ஒவ்வொரு வருஷமும் 15 அல்லது 16 ஸ்கூல்களை மாற்றிக்கொண்டு வருகின்றோம். இன்னும் சில வருஷங்களில் எல்லா பயிற்சி நிலையங்களும் பேஸிக் பயிற்சி நிலையங்களாக மாறிவிடும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : "போஸ்ட் பேஸிக்" டிரெயினிங் முடித்தவர்களுக்கு, "பிரி யூனிவர்சிடி கோர்ஸ்"ல் அனுமதிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் இல்லை.

*Stamp vendors.*

* 403 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any rule preventing the appointment of village headmen as stamp vendors; and

(b) if so, whether any exemption from this rule is proposed to be granted to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

*State Taxes.*

* 404 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state the rate of State taxes *per capita* in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM :

| | Budget Estimate. | Revised Estimate. |
|---|---|---|
| | 1957-58. | 1957-58. |
| | RS. | RS. |
| Incidence of principal heads of revenue *per capita* per annum is .. .. .. .. | 12·6 | 13·7 |
| If the share of Central taxes and revenue from Forests is excluded, the incidence *per capita* .. .. .. .. .. .. | 9·9 | 10·4 |

SRI S. LAZAR : How does it compare with the other States?

THE HON. SRI C. SUBRAMANIAM : I hope to give some information about it during the course of the Budget debate.

[25th March 1958

SRI K. VINAYAKAM: Do not the Government feel that the incidence of taxation per head in our State is a bit slightly higher?

MR. SPEAKER: Higher than what?

THE HON. SRI C. SUBRAMANIAM: We can only speak relatively with reference to comparable figures. Therefore when the hon. Member says 'higher', I do not know 'higher' with reference to what?

SRI S. NAGARAJA MONIGAR: மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில் வரிகள் அதிகமாக இருப்பதனால், நம் ராஜ்யத்தில் வாழ்க்கைத் தரமும் மற்ற ராஜ்யங்களைவிட அதிகமாக இருக்கிறது என்று கொள்ள முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் எந்த விதமான முடிவுக்கும் வர முடியாது. ஆகையினால் தான் இப்போது ஒவ்வொரு ராஜ்யத்திலும் சராசரி வருமானம் என்ன என்பதை நிர்ணயிக்க இப்போது ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: உற்பத்தி பெருகிக் கொண்டு வரும்போது வரிகள் குறைந்து கொண்டு தானே வர வேண்டும். சர்க்கார் இனிமேலாவது வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அங்கத்தினர் அவர்களின் பொருளாதாரத் தத்துவமோ அல்லது நிதி தத்துவமோ எனக்குப் புரியவில்லை.

SRI T. KARIA GOUNDER: உற்பத்தி பெருகுவதாக அங்கத்தினர் அவர்கள் சொன்னரே, அது என்ன என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா?

MR. SPEAKER: இதைப்பற்றி கனம் அங்கத்தினரை கேட்க வேண்டுமே தவிர கனம் அமைச்சரை கேட்க முடியாது.

*Assignment of poramboke lands to Harijans.*

* 405 Q.—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(i) the extent of poramboke lands assigned to Harijans in 1955-56 and 1956-57 in the South Arcot district;

(ii) the Villupuram taluk; and

(iii) the Kalpathi village of Villupuram taluk?

THE HON. SRI M. A. MANICKAVELU:

| 1955–56 | 1956–57 |
|---|---|
| ACS. | ACS. |
| (i) Nil. | 127.08. |
| (ii) Nil. | Nil. |
| (iii) Nil. | Nil. |

SRI A. GOVINDASAMY: 1955–56-ம் வருடத்தில் என் ஆதிதிராவிட மக்களுக்கு புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: ஒதுக்குவதில் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அது 1956–57-ல் வந்து விட்டது.



25th March 1958]

SRI M. C. MUTHUKUMARASWAMY: இந்த புறம்போக்கு நிலங்களை ஒதுக்கும் விஷயமாக ஆங்காங்கு இருக்கின்ற பஞ்சாயத் போர்ட்டின் அனுமதி வேண்டுமென்று இருக்கிறபடியினால், இக்காலத்திற்கு அது ஏற்றபடி இருக்கிறதாக சொல்ல முடியாது. ஆகையால் ரெவன்யூ டிப்பார்ட்மெண்டே கொடுக்கலாம் என்று முடிவுசெய்ய சர்க்கார் பரிசீலிக்குமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: பஞ்சாயத் போர்டு சம்பந்தமாக அவர்கள் அனுபவத்தில் இருக்கின்ற நிலங்களை எடுக்கும்பொழுது அவர்களையும் கலந்து ஆலோசித்து அவர்களுடைய அனுமதியையும் பெறவேண்டியது அவசியமாகிறது.

SRI A. GOVINDASAMY: எனக்கு வந்திருக்கின்ற கேள்வித்தாளில் கல்பட்டி என்பது ஆங்கிலத்தில் கல்பாதி என்றிருக்கிறது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் சொன்னதில் வேறு ஏதாவது மாறுதல் உண்டோ? கல்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் ஒதுக்கியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அது ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் ஏற்பட்ட மாறுதல்தான். கிராமம் கல்பட்டுதான். அதில் சந்தேகமில்லை. மற்றபடியுள்ள விவரங்களுக்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை.

SRI M. JAGANNATHAN: விழுப்புரம் தாலூகாவில் கல்பட்டு கிராமத்தில் ஹரிஜன மக்களும் மாஜி ராணுவத்தினரும் சில இடங்களில் விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது அவர்களை அந்த தரிசு நிலங்களிலிருந்து இந்த அரசாங்கத்தார் வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக வேறு தரிசு நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா? அவர்களை வெளியேற்றினதற்கு என்ன காரணம்?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்களை வெளியேற்றினது என்ன காரணத்திற்காக என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. (டேங்க் பெட்டில்) ஏரிக்கரைகளிலும் ஆயக்கட்டு நிலங்களுக்கு விரோதமாக இருக்கக்கூடிய இடங்களிலும் இருக்கிறவர்களை வெளியேற்றத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் வெளியேற்றினவர்களுக்கு வேறு இடங்களில் நிலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

SRI K. B. S. MANI: இந்த ஹரிஜனங்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் நிலங்களை அவர்கள் சரியான விதத்தில் அனுபவிக்காமல் இருந்த போதிலும் ஏதோ ஒரு காரணத்திற்காக கிராம உத்தியோகஸ்தர்களின் மனத்தாங்கல் காரணமாக இவ்விதம் கொடுக்கப்பட்ட நிலங்களை மாற்றுவதற்காக இந்த நிலங்கள் எல்லாம் மேய்ச்சல் நிலங்கள் என்றெல்லாம், இருபது, இருபத்திஐந்து வருடங்களுக்கு முன்புள்ள புத்தகங்களிலிருந்து எடுத்துச்சொல்லி அதை மாற்றி வருகிறார்கள். ஆனால் இந்த நிலங்களில் அந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை செலவு செய்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் அவர்களுக்கு அரசாங்கம் தவக்கமன்னியில் கொடுக்க முன்வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: மேய்ச்சல் நிலங்கள், வாய்க்கால் ஏரிகள், புறம்போக்கு நிலங்கள் இவைகளை எல்லாம் அடமானம் செய்து கொடுப்பதற்கில்லை. அப்படி இல்லாத நிலங்களை அடமானம் செய்து கொண்டு வருகிறோம்.

*Daily allowance to last grade servants.*

* 406 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state the action taken by the

[25th March 1958

Government on the recommendation made by the Collector's Conference held in October 1957 to raise the daily allowance of peons from Re. 0–12–0 to Rs. 1–4–0 while on tour?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have issued orders enhancing the daily allowance of peons from Re. 0.75 to Rs. 1·25.

SRI N. K. PALANISAMI : இந்த ரூ. 1–4–0 எந்த மாதத்திலிருந்து அமுலாகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து.

SRI N. MAHALINGAM : இதே சலுகையை கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI. C. SUBRAMANIAM : அது வேறு அடிப்படையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI D. S. AUTHIMOOLAM : போலீஸ் கான்ஸ்டபிளுக்கும் இந்த படி உயர்வு உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : இந்த பஞ்சப்படி உயர்வு ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது ஸ்தலஸ்தாபனங்கள் செய்ய வேண்டிய வேலை.

SRI M. JAGANNATHAN : எந்த தேதியிலிருந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

SRI N. K. PALANISAMI : அதை கொஞ்சம் பார்த்து சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு தனிக்கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* EVICTION OF SALT WORKERS FROM THE GOVERNMENT PORAMBOKE LANDS IN TIRUCHENDUR TALUK.

9–10 a.m. SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, திருச்செந்தூர் தாலூகாவில் ஆறுமுகநேரி பகுதியில் தாராங்கதாரா கம்பெனியார் சோடா உப்பு, மற்றும் ரசாயனப் பொருள்கள் தயாரிப்பதற்கு வேண்டிய ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைக்காக ஏறத்தாழ 3,000 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுகிறது. தேவைப்படுகிற நிலங்கள் எல்லாம் பட்டா நிலங்களாகவும் அரசாங்கத்தின் நிலங்களாகவும் இருக்கிறது. தரிசாக கிடந்த அந்த சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் உப்பு சாகுபடி செய்வதற்காக சர்க்கார் விளம்பரம் செய்து தூண்டுதல் செய்ததின் பேரில் 12 வருடங்களுக்கு முன்பு அங்குள்ள ஏழை விவசாயிகள் தொழிலாளர்கள் பலர் அங்கு உப்பு பாத்தியை அமைத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஏழை விவசாயிகள்.



25th March 1958] [Sri M. S. Selvarajan]

தொழிலாளர்கள் இவர்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஒரு பகுதியை ஆக்ரமித்து இருக்கிறார்கள். இதற்குரிய பி மெமோ சார்ஜும், உப்பு செஸ் வரியுமாக நூற்றுக்கணக்கான ரூபாய்களையும் அரசாங்கத்திற்கு செலுத்தி வந்திருக்கிறார்கள். இதற்கிடையில் எடுக்கும் நிலத்திற்கு காம்பன்சேஷன் நஷ்ட ஈடு இதை பரிசீலனை செய்வதற்காக அரசாங்கம் டெபுட்டி கலக்டர் ஒருவரை நியமித்திருக்கிறது. அவர்கள் இதில் சாதாரண நிலங்களுக்கு அதாவது தரிசு நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 150 ரூபாயும், உப்புபாத்தியுள்ள நிலம் ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதமும் நஷ்ட ஈடாக கொடுக்கவேண்டும் என்று முடிவு தெரிவித்திருக்கிறார்கள். இதை கம்பெனியார் அரசாங்கத்திற்கு கொடுக்க இருக்கிறார்கள். இவ்விதம் கொடுக்கப்படுகிற பணம் அந்த நிலங்களில் அதிகமான பணமும் செலவழித்து அதை ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டிருக்கும் அந்த உற்பத்தியாளர்களுக்குச் சேர வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. தரிசு நிலத்தில் மதிப்புக்கு அரசாங்கத்திற்கு இந்த விவசாயிகளுக்கு செஸ் வரிகள் செலுத்தியிருக்கிறார்கள். தாராங்கதாரா தொழிற்சாலை மிகவும் வரவேற்கத்தக்கது. அரசாங்கமும் தாரங்கதாரா கம்பெனிக்கு ஒத்தாசை செய்து வருகிறது இந்த கம்பெனிக்கு இந்த நிலங்கள் கொடுக்கப்படாமல் இருந்தால் இதற்குள் இந்த நிலங்கள் எல்லாம் அனுபவஸ்தர்களுக்கு பட்டா செய்து அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். இந்த நிலையில் அரசாங்கத்திற்கு எந்த விதமான நஷ்டமும் இல்லாமல் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக கொடுக்கப்படும் இந்த பணம் ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் இந்த விவசாயிகளுக்கு போய் சேரவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இவ்விதம் இதுவரை அனுபவித்து வந்த நிலங்களை இழந்து விடுவதால் அவர்கள் வேலையற்றவர்களாகவும் ஆகிவிட வேண்டியிருக்கிறது. அதற்காகத் தான் இந்த அவசரப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவர்களுக்குச் சட்டபடி நஷ்டஈடு கொடுப்பதோடு, வேலை இழந்து வந்தவர்களுக்கு அதே கம்பெனியில் முன்பாத்தியதை கொடுத்து வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் தான் என்னுடைய கோரிக்கை. இதற்கு தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the Dharangadhara Chemical Works, Ltd., Bombay has applied for the acquisition of 1,477·9 acres of private lands and for the grant of 2,462·23 acres of Government lands in Kayalpatnam North, Authoor Cusba, Sendamangalam adn Punnaikayal village in Tiruchendur taluk, Tirunelveli district for establishing a factory for the manufacture of caustic soda and soda ash. The establishment of this industry will be the basis for the development of other important industries and it is of a national importance. The Government have therefore considered the acquisition of lands required for this industry to be for a publis purpose and have ordered the acquisition of private lands under Part II of the Land Acquisition Act. The Collector of Tirunelveli has been asked to submit proposals for the grant of the Government lands. As some of the Government lands required by the Company have been encroached upon by a number of persons who have put up salt pans and as they have also represented that it will be hardship to them to be displaced from these lands without proper compensation, the Government have asked the Collector to examine whether some compensation may be paid to such of the encroachers as are not likely to have recouped the amounts spent by them so far and if any such compensation is to

[Sri M. A. Manickavelu] [25th March 1958

be paid, whether the Company for whose benefit the encroachers will be evicted may be asked to pay the compensation also, besides, the value of the land. The Collector's report has been received only in respect of some of the lands required by the Company in two villages out of four. His further report and the recommendations of the Board of Revenue are still awaited. The Government will take suitable action after considering these reports.

III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE LEGISLATIVE COUNCIL.

9-20 a.m. MR. SPEAKER: I have to announce that the Hon. the Chairman, Legislative Council has transmitted the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) as passed and agreed to by the Council on the 19th March 1958 without any amendment and has also returned the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) and the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 7 of 1958) as passed by the Legislative Council on 20th March 1958 without any recommendation.

IV.—GOVERNMENT MOTIONS.

(1) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES FOR THE FINANCIAL YEAR 1958–59.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

" That, with reference to rule 178 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen Members to be Members of the Committee of Privileges for the financial year 1958–59 ".

MR. SPEAKER: The question is—

" That, with reference to rule 178 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen Members to be Members of the Committee of Privileges for the financial year 1958–59 ".

The motion was put and carried.

MR. SPEAKER: In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 10 a.m., on Thursday the 27th March 1958 as the time within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on Thursday, the 27th March 1958. I also fix 10 a.m. on Friday the 28th March 1958 as the last hour and date for withdrawal of candidature.



25th March 1958] [Mr. Speaker]

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, viz., 15, a poll will be taken on Monday, the 31st March 1958 between the hours of 9 a.m. and 1 p.m.

(2) ELECTION TO THE HOUSE COMMITTEE FOR THE FINANCIAL YEAR 1958–59.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

" That, with reference to rule 214 of the Madras Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect eleven Members to be Members of the House Commitee for the financial year, 1958–59 "

MR. SPEAKER: The question is—

" That, with reference to rule 214 of the Madras Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect eleven Members to be Members of the House Committee for the financial year, 1958–59 ".

The motion was put and carried.

MR. SPEAKER: In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 10 a.m. on Thursday, the 27th March 1958 as the time within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on Thursday, the 27th March 1958. I also fix 10 a.m. on Friday, the 28th March 1958 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, 11, a poll will be taken on Monday, the 31st March 1958, between the hours of 9 a.m. and 1 p.m.

(3) ELECTION TO THE COMMITTEE ON ESTIMATES FOR THE FINANCIAL YEAR, 1958–59.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

" That, with reference to rule 163 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fourteen Members to be Members of the Committee on Estimates for the financial year, 1958-59 ".

MR. SPEAKER: The question is—

" That, with reference to rule 163 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fourteen Members to be Members of the Committee on Estimates for the financial year, 1958-59 ".

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m. on Saturday, the 5th April 1958 as the time within which nomination papers of candidates for election to the Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3-30 p.m. on Saturday, the 5th April 1958. I also fix 10 a.m. on Monday, the 7th April 1958, as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely 14, a poll will be taken on Tuesday, the 8th April 1958, between the hours of 9 a.m. and 1 p.m.

### (4) ELECTION TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS FOR THE FINANCIAL YEAR 1958–59.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That, with reference to rule 171 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fourteen Members to be Members of the Committee on Public Accounts for the financial year, 1958–59".

MR. SPEAKER : The question is—

"That, with reference to rule 171 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fourteen Members to be Members of the Committee on Public Accounts for the financial year, 1958–59".

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m. on Saturday, the 5th April 1958 as the time within which nomination papers of candidates for election to the Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3-30 p.m. on Saturday, the 5th April 1958. I also fix 10 a.m. on Monday, the 7th April 1958, as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, 14, a poll will be taken on Tuesday, the 8th April 1958 between the hours of 9 a.m. and 1 p.m.



## V.—BUDGET FOR THE YEAR 1958–59. VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958–59.

### DEMAND XXIII-LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 34,01,900 under Demand XXIII—Labour including Factories."

I have printed a statement and circulated it to Members. I reserve my comments.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 34,01,900 under Demand XXIII—Labour including Factories."

I understand that the Opposition parties are agreed that Mr. Pakkirisami Pillai will move his cut motion. He wil move it.

SRI S. PAKKIRISAMI PILLAI : Sir, I move—

"That the allotment of Rs. 34,01,900 under Demand XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 34,01,900 under Demand XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் தலைவர் அவர்களே, லேபர் இங்க்ளூடிங் பாக்டரீஸ் என்ற மான்யத்தின் கீழ் இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கும்போது நான் சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் சில முக்கியமான விஷயங்களையும் எடுத்துச் சொல்லவேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. காங்கிரஸ் கட்சி நாட்டின் சுதந்திரத்தை அடையப்பெற்று அந்த ஆ முதலாளிகளின் அனுசரணையின் கீழ் கொண்டு வந்து இப்போது இருக்கும்படியான நிலைமையில் தொழிலாளர்களுக்கு உண்டான கடமையைச் செய்ய தவறி இருக்கிறார்கள். எந்த வழியிலேயும் தொழிலாளர்கள் முன்னேற்றமடைந்தார்கள் என்று தைரியமாக இப்பொழுது இருக்கும்படியான ஆட்சியாளர்கள் சொல்ல முடியாது. இப்பொழுதுள்ள ஆட்சியாளர்களுக்கு தொழிலாளர்களின் பேரில் ஆர்வம் இருக்கலாம், தொழிலாளர்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம் அதற்காக வேண்டிய பிரசாரம் செய்யலாம். அதற்கான ஆசை வார்த்தைகளைச் சொல்லலாம். ஆனால் தொழிலாளர்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பார்த்தால் எந்தத் தொழிலாளர்களும் முன்னேற்றமடைந்ததாகக் காணோம் இந்த பத்து வருஷ காலத்தில். பல்வேறு பிரசாரத்தின் மூலமாக காங்கிரஸ் கட்சியினுடைய நிலைமையை எடுத்துச்சொல்லிக்கொண்டு வருகிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு இன்னது செய்தோம், இந்தச் சட்டத்தை இயற்றினோம் இந்தந்த புதியதான சலுகைகளை வாங்கிக் கொடுத்தோம் என்று சொல்லும்படியான அளவில் கிடையாது. இதை யாரும் மறுக்க முடியாது. மறுப்பதற்கும் தைரியம் இருக்காது. இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

உதாரணமாக இது முதலாளித்துவ அரசாங்கமாக இருக்கிறது என்று சொல்லும் அளவில் நான் சில விஷயங்களை எடுத்துக்காட்ட முடியும். இந்த ஆட்சியை ஒரு கஞ்சத்தனமான முதலாளித்துவ ஆட்சி என்று சொல்ல முடியும்.

MR. SPEAKER : சத்தம் அதிகமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் பேசுவது சபாநாயகருக்கு கேட்கவில்லை. ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை பேச்சை கேட்கலாம் என்று நினைக்கிறேன்.

[25th March 1958

9–30 a.m. SRI S. PAKKIRISAMI PILLAI : அரசாங்க அலுவலகங்களில் எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் சிப்பந்திகள் "பாட்ஜை" அணிந்துகொண்டு அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் போதாது என்று எடுத்துக்காட்டுவதை எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். இதை நான் புதியதாக சொல்லுவதாக யாரும் எடுக்க முடியாது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தான் செய்கிறார்கள். அவர்களுக்கு போதுமான வாழ்க்கைத்தர சம்பளம் கொடுக்கப்படவில்லை. கொடுக்க முடியாத நிலைமையை இப்பொழுது வெளியிலே சொல்லுவதற்கு பயப்படுகிறார்கள் ஆட்சியாளர்கள். ஏதோ எலக்ஷன் காலத்திற்கு முன்னால் ரூ. 5 கொடுத்திருக்கலாம்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the question of allowances and emoluments of Government servants is not pertinent to the Demand under discussion. This relates to Factory and Labour employed in private enterprise.

MR. SPEAKER : I think the Hon. Minister is right. Let the hon. Member please confine his remarks to Labour.

SRI S. PAKKIRISAMI PILLAI : தொழிலாளர்கள் கொள்கையைப் பற்றி இந்த மான்யத்தில் பேசுகிறேன். அரசாங்கத் தொழிலாளர்கள் பாக்டரி தொழிலாளர்கள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது.

MR. SPEAKER : I will not allow the hon. Member to speak like that. I have already ruled that the discussion should relate to Labour and not to Government employees. If the hon. Member persists in referring to Government employees, then I will have to take action.

SRI S. PAKKIRISAMI PILLAI : I bow to your ruling.

தங்களுடைய சிப்பந்திகளுக்கு இம்மாதிரி சம்பளம் கொடுக்கும் மனப்பான்மை ஆட்சியாளர் மத்தியில் இருக்குமானால், பல தொழிலாளர்களுடைய நிலைமையை அவர்கள் எங்கே கண்காணிக்க முற்படப்போகிறார்கள்? நான் மற்ற தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக, அவர்களுக்கு அதிகச் சம்பளம் வாங்கிக் கொடுக்க முயற்ச்சி எடுத்துக்கொண்டிருக்கும் பொழுது, இதர முதலாளிகள் "அரசாங்கத் தொழிலாளர்களை போய் பாருங்கள். அரசாங்கம் அவர்களுடைய சிப்பந்திகளுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்கள்? அதைப்பற்றி கேட்பதற்கு உங்களுக்கு வாய் இடையாது. இங்கு வந்து ஏமாற்ற வந்துவிட்டீர்கள் என்று கேட்கும்படியான தைரியம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி, அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வளவு சம்பளம் அதிகமாகக் கொடுக்கிறார்களோ, அவ்வளவு அதிகமாக கொடுக்கிறோம் என்று கார்ப்பரேஷன் அல்லது மற்ற முனிசிபல் ஊழியர்களின் ஊதியத்தைப் பற்றி அவர்கள் பேசும் அளவில் இருந்துகொண்டிருக்கிறது.

நாம் இப்போது பார்க்கிறோம். மதராஸ் எலக்ட்ரிஸிடி தொழிலாளர்களுக்கு 8 அணா சம்பளம் கொடுத்து அவர்களிடமிருந்து உடலை பிழிந்து வேலை வாங்குகிறார்கள். காண்ட்ராக்ட் மூலமாகவோ ஏஜன்ஸி மூலமாகவோ, அல்லது வேறு வழியாகவோ செய்யப்படலாம். அவனுடைய உழைப்பைப் பெற்று அவனிடமிருந்து வேலை வாங்கி அதனால் கிடைக்கும் தொகையை யார் அனுபவிப்பது ? ஏன் அவர்களை கஷ்டப்படும் நிலையில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்? அவர்களால் கஷ்டப்பட்டு சம்பாதிக்கப்படும் தொகையை அவர்கள் அனுபவிக்க வேண்டாமா? இந்த சமயத்தில் இந்த தத்துவத்தை கேட்க ஆசைப்படுகிறேன். சாதாரணமாக "ஷிப்பிங் ஏஜண்டுகள்" கூட இம்மாதிரி தொழிலாளர்களை சுரண்டி வாழ்கிறார்கள். அவர்கள் உல்லாச வாழ்க்கையில் ஈடுபடும்படியான அளவுக்கு பணத்தை சம்பாதிக்கிறார்கள். அவர்கள்கூட 12 அணா கூலி கொடுக்



25th March 1958] [Sri S. Pakkirisami Pillai]

கிறார்கள். தொழிலாளிகளுக்கு சாப்பாடும் போடுகிறார்கள். அந்த அளவுக்குகூட இல்லாமல் எலக்ட்ரிஸிடி தொழிலாளர்களை சுரண்டும் நிலைமையில் அரசாங்கம் இருக்கிறது. இது எதை எடுத்துக்காட்டுகிறது என்றால், கஞ்சத்தனத்தைத் தான் எடுத்துக்காட்டுகிறது என்று நான் சொல்லவேண்டும்.

இங்கிலாந்தில் அரசாங்க சிப்பந்திகளுக்கு மற்ற எந்தத் தொழிலாளிகளுக்கும் கொடுக்கப்படும் அளவுக்கு மேல் தான் ஊதியம் அளிக்கப்படுகிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அதனால் அந்த சிப்பந்திகளின் மத்தியிலே திறமையும் நேர்மையும் இருந்துகொண்டு வருகிறது. அதனால் அவர்கள் வேறு யாரிடமிருந்தும் எந்த உதவியும் எதிர்பார்ப்பது கிடையாது. அந்த மாதிரி நிலையிலே நம்முடைய சிப்பந்திகளை அரசாங்கம் வைத்துக்கொண்டால் வேறு யாரும் அவர்களைப்பற்றி சின்ன வார்த்தைகள் சொல்லமுடியாது. அவ்வாறு செய்தால் அவர்கள் நேர்மையாகவும் திறமையாகவும் நடந்துகொள்ளுவார்கள். அம்மாதிரி நிலைமையை ஏற்படுத்துவதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகும்? அன்றைக்கு ஒரு நாள் கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, ஜெர்மனியில் ஒரு தொழிலாளி வேலை செய்தால் அவனுக்கு மேற்பார்வையாளர் கிடையாது. ஆனால் அவர்கள் செய்யும்படியான வேலை வெகு நுணுக்கமாகவும், திறமையாகவும், செம்மையாகவும் இருந்துகொண்டிருக்கிறது என்று எடுத்துச்சொன்னார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு கொடுக்கும்படியான சம்பளம் எவ்வளவு? அவர்கள் மேற்பார்வையாளர்களுக்கு கொடுக்கும்படியான சம்பளம் எவ்வளவு? இரண்டு பேர்களுக்கும் சம்பள விகிதாசார வித்தியாசம் எவ்வளவு? அவர்களுக்கு வாழ்க்கைத் தரத்திற்கு மேலே இருக்கும்படியான நிலையிலே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யும்படியான அளவுக்கு தங்களை காப்பாற்றிக்கொள்ள முடியும். அந்த நிலையில் அவர்கள் இருக்கிற காரணத்தினாலே அவர்கள் மனதில் உண்மையாகவே தேச பக்தி ஏற்படுகிறது. அந்த தேச பக்தி உண்டாகவேண்டும், நாட்டு மக்களுக்கு சேவை செய்யும் பக்தி உண்டாகவேண்டுமென்று சொன்னால், தொழிலாளர்களை பட்டினி போட்டால் அந்த பக்தியை யாரும் அவர்களிடையே எதிர்பார்க்க முடியாது. இந்த மாதிரி சம்பளவிகிதத்தை வைத்துக் கொண்டு இந்தக் காலத்திலே நாம் சுதந்திரம் அடைந்திருக்கும்பொழுது நம்முடைய ஊழியர்களிடமிருந்து இம்மாதிரியான பக்தியை எதிர்பார்ப்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அம்மாதிரியான நிலைமையை தொழிலாளர்களிடையே ஏற்படுத்துவதற்கு, உடனடியாக சம்பள விகிதாசார வித்தியாசத்தை குறுக்கிகொள்ள வேண்டும். இப்பொழுது கீழே இருக்கும்படியான தொழிலாளி ரூ. 20, 22 வாங்குகிறான். மேலே இருக்கும்படியான அதிகாரி ரூ. 5,000 வாங்குகிறார். இந்த சம்பள விகித வித்தியாசத்தை முதலில் குறைக்க வேண்டும். ஒன்றுக்கு பத்து மடங்கு தான் வித்தியாசம் இருக்கவேண்டும். ஒரு தொழிலாளிக்கு தன்னுடைய குடும்பத்தைக் காப்பற்றுவதற்கு இப்பொழுது இருக்கும் வாழ்க்கைப் புள்ளியின் அளவுக்கு குறைந்த பட்சம் ரூ. 150 வேண்டும் என்று பொருளாதாரத் துறையில் வேலை செய்யும்படியான மேதைகள் கணக்குப்போட்டிருக்கிறார்கள். ஆகையால் உயர்தர அதிகாரிக்கு ரூ. 1,600-க்கு மேல் சம்பளம் இருக்கக்கூடாது. அந்த நிலைமைக்கு கொண்டுவரவில்லை என்று சொன்னால் முதலாளிகளின் அனுசரணையின் கீழே அவர்கள் ஏஜண்டுகளாகத்தான் ஆட்சியாளர்கள் ஆட்சி புரிகிறார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. சோஷலிஸ மனப்பான்மை, சோஷலிஸத் தன்மை கொண்டுவரும்படியான நிலையில் அவர்கள் இருக்கமாட்டார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த சம்பள விகிதாசார வித்தியாசத்தை குறைப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. முக்கியமாக இதர தொழிலாளர்கள் தாங்களே முயற்சி எடுத்துக்கொண்டு இதற்காக பாடுபடுவதற்கு அரசாங்கத்தார் அனுமதி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எல்லா வழிகளிலும் தடையாக இருந்து அவர்களுக்கு குந்தகமான வழியிலே எதையெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு அரசாங்க அதிகாரிகள் அத்தனை பேரும் முயற்சி எடுத்துகொண்டிருக்கிறார்கள்.

9-40 a.m. முதலாளிகளுக்குச் சாதகமாகத்தான் அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஏழைத் தொழிலாளர்களை அதிகாரிகள் கவனிப்பதில்லை. "ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்" என்பது போல அதிகாரிகளும் தொழிலாளர்களின்மீது தான் பாய்கிறார்கள். முதலாளிகளுக்கு சாதகமான முறையிலும் தொழிலாளர்களுக்கு பாதகமான முறையிலும்தான் அரசாங்க அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். அந்த அந்தத் தொழிலாளர்கள் அவரவர்களாக கஷ்டப்பட்டு முயற்சித்து தங்களுக்கு நிவாரணம் தேடிக் கொள்ள முயன்றால் அப்போது கோர்ட்டுகளும் அவர்களுக்கு எதிராக தீர்ப்பளிக்கின்றன. முதலாளித்துவ அடிப்படையில் உள்ள சமுதாயத்தில் எல்லாம் தொழிலாளிகளுக்கு பாதகமாகவும் சீர்கேடாகவும் இருக்கின்றன. பத்திரிகை நிருபர்கள் அவர்களுடைய சொந்த முயற்சி செய்து கோர்ட்டுக்குச் சென்று ஒரு தீர்ப்புப் பெற்றார்கள். அந்தத் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்யப்பட்டதற்குப் பிறகு அந்தத் தீர்ப்பு நிராகரிப்பட்டிருக்கிறது. அதற்கு மேல், தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பெறுவதற்கு பத்திரிகை நிருபர்கள் மேலும் முயற்சி செய்யவேண்டியிருக்கிறது. தொழிலாளர்களில் ஒவ்வொரு பிரிவினரும் இப்படிப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் அவர்களுடைய கஷ்டங்களுக்கு நிவாரணம் தேடிக் கொள்வதற்கு முயற்சி செய்யும்போது அரசாங்கத்தார் அவர்களுக்கு எந்த விதத்திலும் ஒத்தாசை அளிப்பதில்லை. அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் தானாகவே முன்வருவதில்லை. "அவர்கள் நம்மை அணுகும்போது பார்த்துக்கொள்ளலாம்" என்ற மனோபாவத்தில் தான் அரசாங்கத்தார் இருக்கிறார்கள்.

அரசாங்கத்தார் அவசர அவசரமாக ஆத்திரத்துடன் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அவ்வாறு அவசர உணர்ச்சியுடன் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்த அரசாங்கத்தார் ஓட்டல் தொழிலாளர்களுக்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இன்னும் தயங்குகிறார்கள். பீடித்தொழிலாளர்களுக்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கும் தயங்குகிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவரும்போது அரசாங்கத்தார் காட்டிய அவசர உணர்ச்சியை, தொழிலாளர்களுக்கான சட்டங்களைக் கொண்டுவருவதில் ஏன் காட்டக்கூடாது?

**The Hon. Sri R. VENKATARAMAN** : பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூட்டத்தில் அதற்கு அவசியமான பிரேரபணை நீங்களே கொண்டுவந்திருக்கலாமே.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : ஒரு நாட்டின் பொதுவான முன்னேற்றம் அந்நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றத்தைப் பொறுத்து தான் இருக்கிறது. தொழிலாளர்கள் முன்னேறினால்தான் சமுதாயம் முன்னேறும். தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பார்த்து தான் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமை மதிப்பிடப்படும். தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசாங்கத்தார் இதுவரையில் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. இனிமேலாவது அதற்கு அரசாங்கத்தார் முயற்சிக்க வேண்டுமென்று கோரி, இந்த மான்யத்தின்பேரில் இந்த வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரபிக்கிறேன். என் அன்பிற்குரிய கனம் மந்திரி ஸ்ரீ வெங்கடராமன் அவர்கள் கவுன்சிலுக்கு திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : கனம் மந்திரி அவர்கள், தாம் பதிலளிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : எனக்கு முக்கால் மணி நேரம் போதும்.

**Mr. SPEAKER** : 1½ மணிக்கோ அதற்கு முன்னதாகவோ நான் வோட்டு எடுக்க வேண்டும். கனம் அமைச்சர் பதிலளிப்பதற்கு முக்கால் மணி நேரம் போதும் என்று சொல்கிறார். எதிர்கட்சித் தலைவர்கள் ஸ்ரீ கல்யாணசுந்தரமும், ஸ்ரீ சின்னதுரையும் ஒவ்வொருவரும் 15 நிமிஷங்கள் பேசப்போகிறார்கள். பாக்கியுள்ள நேரத்தில் மற்ற கனம் அங்கத்தினர்கள் பேசலாம்.





**Sri J. MATHA GOWDER** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரின் மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பத்தாண்டு காலமாக இந்த ராஜ்யத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றும், தொழிலாளர்களுக்கு சர்க்கார் எந்த உதவியும் அளிக்கவில்லை என்றும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை பேசியதைப் பார்த்து நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். தொழிலாளர்களுக்கு குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தார் எந்த உதவியும் செய்யவில்லை என்று சொல்லி அரசாங்கம் செய்துள்ள உதவிகளை அவர் அடியோடு மறுப்பதைப் பார்த்து நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், நாடு சுதந்திரமடைந்த பிறகு அவர்கள் எவ்வளவோ முன்னேறியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு எத்தனையோ துறைகளில் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்காருடைய முயற்சியாலும் தனிப்பட்ட அமைச்சர்களின் முயற்சியாலும் அவர்களுக்கு எத்தனையோ சலுகைகள் கிடைத்திருக்கின்றன. அவைகளை நாம் மறுப்பது சரியல்ல. தொழிலாளர்களின் பிரச்னை ஒரு தனிப்பட்ட பிரச்னையாக இருக்கிறது. எந்தக் காரணத்தாலோ அவர்களுக்கு கஷ்டங்களுக்கு மேல் கஷ்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுடைய பிரச்னை ஒன்றைத் தீர்த்தால் அதற்கு பிறகு அவர்களை பாதிக்கும் இன்னொரு பிரச்னை எழுகிறது. இதற்குக் காரணஸ்தர்களாக இருப்பவர்கள் முதலாளிகள். எந்த சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு தொழிலாளிகளை ஏமாற்றுவதை அவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்களின் தொல்லைகள் தீர்க்கப்படாமல் நீடித்துக்கொண்டே வருகின்றன. இதற்காக சர்க்காரைக் குறைச்சொல்ல முடியாது. தொழில் துறையில், ஒரு தொழிலுக்கு பல தொழில் சங்கங்கள் இருப்பதை அனுமதிப்பதை முதலாளிகள் தங்கள் சொந்த நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதாவது, அவர்கள் தொழிலாளர்கள் சங்கங்களுக்குப் போட்டியாக தங்கள் சங்கங்களை அமைத்துக் கொள்கிறார்கள். போட்டிச் சங்கங்களால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால், இந்தப் பிரச்னையை கனம் அமைச்சர் தீர ஆலோசித்து, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று விதிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்தால் தான் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் ஓரளவு உயரும். தொழிலாளர்களின் தலைவர்களையும் வேறு தொழிலாளர்களையும் இழுத்துப்போட்டு போட்டிச் சங்கங்களை முதலாளிகள் அமைத்துவிடுவதால், தொழில் துறையில் பல சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆகையால் ஒரு தொழிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சங்கம் இருக்கக்கூடாது என்று விதிக்கும் மசோதாவை இந்த சபைக்கு சீக்கிரம் கொண்டுவரவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். முன்னால்தொழில் அமைச்சராகிய கனம் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்கூட அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவருவது பற்றி சில இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். தொழிலாளர்களின் தலைவராக இருந்துவந்திருக்கும் கனம் ஸ்ரீ வெங்கடராமன் தொழிலாளர்களுடைய பிரச்னைகளை மிகவும் நன்றாக அறிந்திருக்கிறார். அவர் அந்தச் சட்டத்தை சீக்கிரம் கொண்டுவந்தால் தொழிலாளர்களின் பல பிரச்னைகள் எளிதில் தீர்த்துவிடும். அப்படிப்பட்ட சட்டம் வந்தால் தொழிலாளர்கள் முதலாளிகளின் சூழ்ச்சியிலிருந்து விடுபடுவார்கள். "**Government attach the greatest importance to the prompt and willing implementation of settlements and awards**" என்று "**Labour in Madras State**" என்ற பிரசுரத்தில் சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் ஒப்பந்தத்தின்படியோ, தொழில் கோர்ட்டுகள் கொடுக்கும் தீர்ப்புகளின்படியோ முதலாளிகள் நடக்கவில்லையென்றால், அந்த முதலாளிகளின் பேரில் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு சட்டம் இடம்தரவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே, ஒப்பந்தத்தையோ தொழில் கோர்ட்டின் தீர்ப்பையோ மீறும் முதலாளிகளிடமிருந்து ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட நியாயமான சலுகைகளைப் பெறுவதற்கு, தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. உதாரணமாக ஒரு ஒப்பந்தத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு ஜனவரி மாதம் நீலகிரி தோட்டத் தொழிலாளர்

[Sri J. Matha Gowder] [25th March 1958

கள் சம்மந்தமாக, லேபர் கமிஷனர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. " **irrespective of profit or loss** " அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் போனஸ் கொடுத்துவிட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு முதலாளிகள் ஒப்புக்கொண்டார்கள். அந்த ஒப்பந்தம் நடந்த இடத்திற்கு நானும் சென்றிருந்தேன். அந்தத் தீர்மானத்திற்கு எல்லா முதலாளிகளும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் ஒப்பந்தத்திற்குப் பிறகு சில முதலாளிகள் ஒப்பந்தப்படி நடக்கவில்லை. காரணம் கேட்டால் நஷ்டமடைவதாக அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கு லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் போனஸ் கொடுக்கவேண்டுமென்பது ஒப்பந்தம். அப்படியிருக்கும்போது அவர்கள் இப்போது எவ்வாறு போனஸ் கொடுக்க மறுக்கலாம். அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இதுவரை அவர்கள் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. இதை கனம் அமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன். அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்தும் போட்ட பிறகும் ஒரு முதலாளி போனஸ் கொடுக்காமல் தொழிலாளர்களை ஏமாற்றி வருகிறார். கனம் அமைச்சர் இந்தப் பிரச்னையை கவனிக்கவேண்டும். ஏதாவது ஒரு செட்டில்மெண்ட் ஏற்பட்ட பிறகு ஒரு முதலாளி கன்சிலியேஷன் தீர்ப்புப்படி நடக்கவில்லையென்றால், நிச்சயமாக அவர்களுடைய சங்கத் தலைவர்கள் கையெழுத்து போட்டுவிட்டால் சங்கத்திலே உள்ள தொழிலாளிகளையும் தோட்ட முதலாளிகளையும் கட்டுப்படுத்தும் என்ற காரணத்தால், அந்த முதலாளிபேரில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

9 50 p.m. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தியதற்குக் காரணம் சென்ற ஆண்டிலே 173 தொழிற்சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1957–58-க்கான அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதாவது :

" **The number of registered trade unions in the State at the beginning of 1957 was 651. During the year, 173 new unions were registered. A total of 775 trade unions were functioning at the end of the year.**"

அதாவது, சென்ற ஆண்டின் ஆரம்பத்திலே 651 தொழிற் சங்கங்கள் இருந்தன. இந்த ஆண்டில் 173 புதிய தொழிற் சங்கங்கள் இந்த ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கின்றன. 173 சங்கங்கள் ஒரு ஆண்டிலே எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. அவ்வளவு தனித்துறை இருக்கிறதா? தனித்தொழில்கள் இருக்கின்றனவா என்ற விவரம் இங்கே கொடுக்கப்படவில்லை. ஆனால், ஒரு தொழிலுக்குப் பல சங்கங்கள் ஏற்பட்ட காரணத்தால் ஒரு ஆண்டில் 173 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். இப்படி ஏற்படுவதற்கு நாம் விட்டுக்கொண்டே போனால், இந்த நாட்டிலே ஆயிரக்கணக்கான சங்கங்கள் ஏற்படுவதற்குத் தடை இல்லை. அரசியல் கட்சிகள் ஆனாலும்சரி வேறு துறைகளில் இருப்பவர்களும் சரி, முதலாளிகளின் கையாட்களானாலும்சரி, தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு போவார்கள். ஆகையால் இதை அதிகமாக வளர விடக்கூடாதென்பதற்காக ஒரு தொழிலுக்கு ஒரு சங்கத்திற்கு மேல் வைக்கக்கூடாதென்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் தோட்டத் தொழில் முக்கியமானது. நீலகிரியில் உள்ள தோட்டத் தொழிலுக்கும், கீழே, ப்ளெயின்களில் உள்ள தொழிலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நீலகிரியில் தோட்டத் தொழிலாளர்கள் படும் கஷ்டம் வேதனைக்குரியது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அவர்களுக்கு ஓரளவு சலுகை கொடுக்கப்பட்ட காரணத்தால் அவர்கள் இன்றைக்கு ஓரளவு நல்ல வாழ்க்கை நடத்துகின்றார்கள். பழைய நிலைமையிலே அவர்கள் வைக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக தோட்டத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கும். அவர்கள் செய்யும் தொழில் கடுமையானது மட்டுமல்ல, கஷ்டமானதும்கூட. அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு என்ன என்ன சலுகை அளிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி திட்டவட்டமாக ஆராய்ந்து, அதற்கென ஒரு திட்டம் ஏற்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இன்னும் அரசாங்கம் உற்சாகம் காட்டவேண்டும். முதலாளிகள் விஷயத்தில் அரசாங்கம் தயவு தாட்சண்யம் எந்தக் காரணத்தைக்கொண்டும் வைக்கக்கூடாதென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நானும் தொழில் வைத்திருக்கிறேன் என்றாலும்கூட முதலாளி தொழிலாளிகளை ஏமாற்றுவது எப்படி என்பதை நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள். நீலகிரியில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களில் 100-க்கு 99 பேர் படிப்பு இல்லாத பாமர மக்கள். அவர்களை சுலபமாக ஏமாற்றிவிடலாம். அவர்களை ஏமாறும்படி விட்டுவிடக்கூடாதென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



25th March 1958] [Sri J. Matha Gowder]

தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வீடு கட்டுவதற்காக தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது :

" **A sum of Rs. 36·46 lakhs has been allotted to this State for the Plan period. No loan was sanctioned during the year 1956–57. For the year 1957–58, a sum of Rs. 83,500 has been provided in the Budget, and is expected to be fully utilised.** "

83,500 ரூபாய் 1957–58-ம் ஆண்டிலே தோட்டத் தொழிலாளிகளுக்குக் கடன் கொடுக்க ஒதுக்கப்பட்டிருப்பதாக போடப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது முதலாளிகள் அந்தத் தொகையை வாங்கி தொழிலாளிகளுக்கு உதவ முன்வரவில்லை என்று தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளிகள் வீடு கட்டிக்கொள்ளுவதற்கு முதலாளிகள் பணம் இல்லை என்றும் சர்க்கார் கடன் கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, முதலாளிகள் அதை வாங்கத் தயாராயில்லை. அப்படிச் சொல்லும்போது, தொழிலாளிகளை முதலாளிகள் இதுவிஷயத்தில் முன்னேறுவதற்கு இஷ்டப்படாத காரணத்தால், சர்க்கார் பணம் கொடுப்பதாகச் சொன்னாலும்கூட அதை வாங்காமல் இருக்கிறார்கள். ஆகையால் அதற்கு ஒரு சட்டம் போட்டோ, உத்தரவு போட்டோ சர்க்கார் கொடுக்கும் கடன்களை வாங்கி தொழிலாளிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும்படி முதலாளிகளைக் கட்டுப்படுத்தவேண்டும், அப்படி முதலாளிகள் முன்வரவில்லையென்றால், குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் வீடு கட்டிக்கொடுக்கவில்லையென்றால் முதலாளிகள் பேரில் தக்க நடவடிக்கை எடுப்போம் என்ற முறையில் சட்டம் கொண்டுவர வேண்டும். அல்லது சர்க்குலர் பிரப்பிக்க வேண்டும். இந்த வகையில் அவர்களை பயமுறுத்த வேண்டும். நான் என் முதலாளிகளை இந்த வகையில் பயமுறுத்த வேண்டும் என்று சொல்கிறேன் என்றால், சர்க்கார் பணம் கொடுப்பதாகச் சொல்லும்போது, முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கும்போது, தொழிலாளிகளுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக சர்க்கார் கடன் கொடுக்கிறேன் என்று சொல்லும்போது முதலாளிகள் அதை வாங்க மறுக்கிறார்கள். இந்த நிலை வளரவிடக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

மலைத் தோட்டத்தொழிலில் மேஸ்திரிகள் என்ற ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களைக் கங்காணிகள் என்று குறிப்பிட்டு, கங்காணி முறையை ஒழித்துவிடவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கங்காணிகளை ஒழிக்கவேண்டுமா, ஒழிக்கக்கூடாதா என்பதைப்பற்றி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் யோசனை செய்திருக்கிறார்கள். அவர்கள் கங்காணி என்றாலும், அவர்களும் தொழிலாளர்கள் தான். அவர்களுக்குப் பதிலாக சூபர்வைசர் என்று போடவேண்டுமென்று சொல்லப்படுகிறது. சூபர்வைசர்களாக நியமிப்பதாயிருந்தால் எப்படிப்பட்டவர்களை நியமிப்பது? யார் நியமிப்பது? சர்க்கார் நியமிப்பதா? தொழிற்சங்கங்கள் நியமிப்பதா? அல்லது முதலாளிகளே நியமிப்பதா என்ற முறையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. முதலாளிகள் நியமிப்பதென்றால் சூபர்வைசர்களுக்கு என்ன யோக்கியதாம்சங்களை நிர்ணயித்திருக்கிறார்கள்? என்ற எந்த விதமான விவரமும் தெரியவில்லை. சூபர்வைசர்களை முதலாளிகள் நியமிப்பதாயிருந்தால் பழைய மேஸ்திரிகளையே சூபர்வைசர்களாகப் போட்டுக்கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால். பழைய மேஸ்திரிகளுக்குப் போதிய படிப்பு இல்லையென்றும், சக்தி இல்லையென்றும் சொல்லி அவர்களை

[Sri J. Matha Gowder] [25th March 1958

முதலாளிகள் ஒழித்துக் கட்டிவிடுவார்கள். ஆகையால், இன்று மேஸ்திரிகளாக வேலை செய்பவர்களையெல்லாம் நிரந்தரமான முறையில் சூபர்வைசர்களாக்கி உத்தரவு போடவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீலகிரி ஜில்லாவில் உள்ள லேபர் ஆபீசர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. அவர்கள் மலைப் பிரதேசத்தில் வசிப்பவர்கள். கன்சிலியேஷனுக்கு அவர்கள் பல இடங்களுக்குப் போகும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தயவு செய்து சர்க்கார் ஒரு ஜீப் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில விஷயங்களை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த தொழிலாளர்கள் விஷயம் என்
-56 றுலே கடந்த காலத்திலே அது பலவிதமான பலாத்காரச் சம்பவங்கள்
.m. நிறைந்த ஒரு சரித்திரம் என்றே கூறுவார்கள். அந்த நிலை எல்லாம் இப்பொழுது மாறி ஒரு அமைதியான நிலைமையிலே தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்துகிறபோதுகூட அவர்கள் உரிமையோடு தங்களுடைய வாதங்களை எடுத்துக்கூறி, தொழில் கோர்ட்டிலே நல்ல பல தீர்ப்புக்களை காண்கிற காலம் இது. என்ன நிலைமை இருந்தபோதிலுங்கூட பலாத்கார நிலைமை அல்லாமல் தங்களுடைய கோரிக்கையைச் சிறந்த முறையில் எடுத்து விவாதிக்கும் தன்மையை நம்முடைய காங்கிரஸ் அரசாங்கம் அளித்திருக்கிறது. கடந்த காலத்தில் மதுரைமா நகரில் பல ரத்த வெள்ளங்கள் ஓடியதைக் கண்ணால் பார்த்தோம். தொழிலாளர்கள் கடந்த காலத்திலே ஏதாவது உரிமை வேண்டுமென்று கூறுகிறபோது அந்தத் தொழிற் சங்கங்கள் அந்தந்த தொழிற்சாலையிலே பெரும் போராட்டங்களை நிகழ்த்தித்தான் ஏதாவது சில்பல நன்மைகளைப் பெற முடிந்தது. அதுபோன்று நெடுங்காலம் இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு தொழிற்சங்க இயக்கத்தை தனக்கு உரிமைக்காக வைத்துக்கொண்டு கம்யூனிஸ்டுகள் கடந்த காலத்திலே இந்தத் தேசத்திலே பல பெரிய கிளர்ச்சிகளைச் செய்துகொண்டு வந்தார்கள். தொழிலாளர்களுக்கு உரிமை பெறுவது என்பது மட்டும் அவர்களுடைய நோக்கம் அல்ல. அதன் மறைவிலே அவர்கள் அரசியல் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல பெரிய போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே கடந்த காலத்தில் ஒரு சமயத்தில் பார்க்கும்போது தொழிலாளர்களுக்கு இந்த நாட்டின் மீது பற்று இருக்கிறதா இல்லையா என்று சந்தேகிக்கும் அளவுக்கு அந்தத் தொழிற்சங்கங்களைக் கொண்டு அவர்கள் நடத்திக்கொண்டு வந்தார்கள். அது எல்லாம் இப்பொழுது மறைந்து இப்பொழுது நல்ல ஒரு சமூகமான நிலைமையிலே தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய உரிமைகளை நல்ல முறையிலே எடுத்துக்கூறும் அளவுக்கு இன்றைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், இந்த நிலைமையிலே இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் இந்த அரசியலில் பிரவேசித்ததற்குப் பிறகு இதுபோன்ற நல்லதோர் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

குறிப்பாக மதுரையின் தலைநகரில் நடந்த பெரும் போராட்டங்கள் தெரியும். கடந்த காலத்தில் தொழிலாளர்களுக்காகவும் முத்துராமலிங்க தேவர் அவர்கள் தலைமை தாங்கி பல போராட்டங்கள் நடத்தியிருக்கிறார். இன்னும் பல கம்யூனிஸ்டுத் தலைவர்கள் திரு. ஜீவானந்தம், திரு. ராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் தலைமை வகித்து பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மதுரைமா நகரில் பல காட்சிகளும், திடீரென்று பல இடங்களில் பலாத்காரங்களும் நிகழும். அதை அடக்குவதற்காக என்றே அங்கே போலீசார் தயாராகி இருக்க வேண்டிய காலம் எல்லாம் இருந்து மதுரைமாநகரத்தில் யோக்கியமான அரசியலுக்கு இடம் இருக்கிறதா என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு இருந்து அங்கே ஒரு பலாத்கார வெறி தாண்டவம் ஆடிக்கொண்



25th March 1958] [Sri P. S. K. Lakshmipathi Raj]

டிருந்தது. அந்தப் பக்கத்தில் இன்று மதுரைமாநகரத்திலே பார்த்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மத்தியிலும் நல்லதோர் அரசியல் பூத்துக் குலுங்குகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் தொடர்ந்த சட்டங்களும் அந்த அமைப்பிலே உள்ள சர்க்காரும்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கடந்த காலத்தில் இருந்து அரசாங்கம் வேறு. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காலத்தில் தொழிலாளர்களுடைய உரிமை வேண்டுமென்றே நசுக்கப்பட்டது. அந்தச் சமயத்திலும் நமது காங்கிரஸ் கட்சி தொழிலாளர்களுடைய பக்கத்தில் இருந்து பெரும் ஆதரவு தந்திருக்கிறது. இன்றுள்ள நிலைமை என்ன? இன்று காங்கிரஸ் அரசாங்கம் நடைபெறுகிறது. தொழிலாளர்களுடைய போராட்டங்கள் பல நடைபெறுகின்றன. சில இடங்களில் முதலாளிகளே போராட்டங்களை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பழனியில் மதுரை மாவட்ட திராவிடக் கழக உபதலைவர் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் தண்டபாணி என்பவர் வைத்தியசாலைத் தொழில் நடத்துகிறார்.. அங்குள்ள தொழிலாளர்கள் ஊதியம் வேண்டும், தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டதற்கு பத்துப் பதினைந்து பேர்களை வேலையைவிட்டே நீக்கி விட்டார். உபாத்தியாயராக இருந்து, வைத்தியராக மாறி இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு அதிபராக மகிழ்ந்து கொண்டிருக்கிற அவர் "தனக்கு அந்தத் தொழிலினால் வருமானம் கிடையாது, வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்பதாக பொய்யாக நஷ்டக் கணக்கைக் காட்டி தொழிலாளர்களுடைய உரிமை தவறானது என்பதாக நிரூபிக்கிறார். இந்த நஷ்டக் கணக்கை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு எப்படி சம்பள உயர்வுத் தீர்ப்பு அளிக்க முடியும். இந்த நிலைமையில் தொழிலாளர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்குள்ளே ரகசியம் இருக்கிறது. அவருடைய மருந்து எல்லாம் மலேயா நாட்டில் தான் அதிக விற்பனை ஆகிறது. இவருடைய தண்டபாணி என்ற பெயரையும் பார்த்து, பழனியில் இருந்து வருகிற மருந்து என்றும் எண்ணி, மண்ணோ மருந்தோ மலேயா நாட்டுத் தமிழர்கள் தெய்வத்தினிடம் கொண்ட பக்தியின் காரணமாக வாங்கி வருகிறார்கள். பழனியில் இருந்து வருகிற மருந்து, நிச்சயம் நன்மை பயக்கும் என்று நம்பி வாங்குகிறார்கள். இதிலிருந்து ஏராளமான பணம் அவருக்கு வந்து கொண்டிருக்கிறது. அவருடைய மருந்து மேலை நாடுகளுக்கு கல்கத்தா மூலமாகச் செல்கிறது. அங்குள்ள தபாலாபீசில் கணக்கு விவரம் இது பற்றி இருக்கும்.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, இங்கு பேசக்கூடிய 10.00
நேரத்தில் தனிப்பட்ட நபர்கள் யாரையும் பற்றி குறிப்பிடக்கூடாது என்று a.m.
தாங்கள் சொல்லும் கருத்துக்கு கனம் அங்கத்தினர் தற்போது பேசுவது பொருந்துமா? இதுவரையில் தாங்கள் வழங்கியிருக்கிற நீதிக்குப் பொருந்துமா என்று கேட்கிறேன்.?

**Mr. SPEAKER** : மான்ய விவாதத்தில் தனிப்பட்ட நபர்களுடைய பெயரைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதைவிட்டு விட்டுப் பொதுவாகச் சொல்லலாம்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : ஒரு உதாரணத்திற்காகச் சொல்லிவிட்டேன். பெயரை விட்டு விட்டு பொதுவாகச் சொல்கிறேன். அந்த முதலாளியினுடைய கணக்கை கல்கத்தா தபாலாபீஸ் மூலமாக ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கே அவர் கொடுத்திருக்கிற கணக்கு முழுவதும் பொய்யான கணக்கு என்று தெரிந்து கொள்ளமுடியும். அது இல்லாத காரணத்தினால் தொழிலாளிகள் ஒன்றும் செய்ய முடியாது. போராட்டத்தை நிறுத்தி விட்டார்கள். இன்றைக்கு அவர்கள் படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இதை நான் கட்சி மனோபாவத்தோடு சொல்லவில்லை.

இதே போன்று நாட்டில் பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. முதலாளிகள் பெரிய பெரிய தொழிற்சாலைகளைக் கட்டி தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதைப் பாராட்டுகிறோம். ஆனால் தொழிலாளர்களுடைய நிலைமை உயர்த்தப்பட வேண்டும். தொழிலாளர்களை வைத்துக்

கொண்டு தாங்கள் பணக்காரர்களாகப் பார்க்கிறார்களே தவிர உண்மையில் தொழிலாளர்களுடைய அடிப்படையான உரிமைகள் கூடப் பலவிடங்களில் வழங்கப்படுவதில்லை. கடந்த காலத்தில் பல தொழிலாளர்கள் வெளி நாட்டுத் தீவுகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பாரதியார் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியும், கரும்புத் தோட்டத் தொழிலாளர்களைப்பற்றியும் பாடியிருக்கிற பாடல்களைப் பார்த்தால் அந்தத் தொழிலாளர்கள் எத்தனை கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாயிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். ஆனால் வருங்காலத் தொழிலாளர்களுடைய நிலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பாரதியார் தொழிலாளர்களின் உரிமைக் குரலை எழுப்பி பாதை வகுத்திருக்கிறார். அந்தப் பாதையில் தான் இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. அந்த முயற்சியின் பயனாக பல சட்டங்கள் வந்திருக்கின்றன. நல்ல தீர்ப்புகள் பல வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பொதுவாக நியாயமான தீர்ப்பு வழங்குவதில் அதிகமான காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால் பல போராட்டங்கள் சிதைந்து போகின்றன. அப்படியில்லாமல் துரிதமாகத் தீர்ப்புக் கிடைக்க வழி செய்ய வேண்டும். வால்பாறை போன்ற இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் படுகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. தரையில் இருந்து தினமும் மலைக்குச் சென்று, அட்டைக் கடிகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு, கால் வீங்க, வயிறு வீங்க அவர்கள் மாலைக்கு வீடு வருவதும் மிகவும் பரிதாபகரமானதாகும். அவர்களுக்குப் போதுமான சுகாதார வசதியும் கிடையாது. அந்த ஏழைகளுக்கு நல்ல சுகாதார வசதி, வைத்திய வசதி, வீட்டு வசதி முதலியன எல்லாம் வழங்குவதற்குத் தக்க ஏற்பாட்டை இந்தச் சர்க்கார் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. P. SARATHI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் மானியத்தின் மீது கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று விரும்புகிறேன். முக்கியமாக சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்தப் பத்து ஆண்டு காலத்திற்கு முந்தி தொழிலாளர்களுடைய நிலைமை எப்படி இருந்ததோ அதேமாதிரியாகத் தான் இன்றைக்கும் தொழிலாளர்களுடைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால் கணக்கு எடுத்துப் பார்க்கலாம். தொழிலாளர்களுக்கு யாதொரு விதமான நன்மையும் ஏற்படவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சட்டம் கொண்டு வருவதாக ஏறக்குறைய 6 மாதங்களுக்கு முன்பே அமைச்சர் அவர்கள் வாக்குக் கொடுத்தார்கள். இதுவரைக்கும் கொண்டு வரவில்லை. பல இடங்களில் பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதாகப் பல மகா நாடுகள் நடைபெற்றிருக்கின்றன. சர்க்கார் கொண்டு வருவார்கள் என்றே இன்றளவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த வருஷமோ, இதற்கு அடுத்த வருஷமோ கூட அந்தச் சட்டம் வரும் என்று தோன்றவில்லை. பீடித் தொழிலாளர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு அளிக்க சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்க வேண்டும் என்பதாக மாதா கௌடர் அவர்கள் கூறினார்கள். நான் அது சம்பந்தமாக இந்தச் சர்க்காருக்கு ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் இருக்க வேண்டியதுதான் நியாயம். ஆனால் அந்த ஒரு சங்கத்தினுடைய காரியதரிசி, தலைவர் போன்றவர்கள் எல்லாம் அந்தத் தொழிற் ஸ்தாபனத்தில் ஊழியர்களாகவே இருக்க வேண்டும். அதை விட்டு, தங்கள் தங்கள் கட்சியினுடைய ஆதிக்கத்தை அந்தத் தொழிலாளர்களினால் பெற முடியும் என்கிற மனோபாவம் வளர்வதன் காரணமாகத்தான் இன்றைக்கு தொழிற்சங்கங்களிடையே போட்டா போட்டி மனப்பான்மை வளருகிறது. இதனால் தொழிலாளர்





களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்தந் தொழிலாளர்களையே நிர்வாகிகளாகக் கொண்ட தொழில் சங்கங்களைத்தான் ரிஜிஸ்டர் செய்வது என்று சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன கட்சி ஆதிக்கியம் வேரூன்றவிடக்கூடாது.

அதோடு பீடித் தொழிலாளர்களுக்கு மாத்திரம் அல்ல, அச்சுத் தொழிலாளர்கள், மோட்டார் தொழிலாளர்கள் என்பதாகப் பல பல தொழில்களில் இன்றையதினம் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய உரிமையும் நசுக்கப்படுகிறது. ஆகவே, பொதுவாக எந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் கூட, எல்லாத் தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாக்கும் வகையில் ஒரு பொதுவான சட்டத்தைச் சர்க்கார் கொண்டு வர வேண்டும் என்பதாகக் கேட்டு கொள்கிறேன். தினக் கூலி வாங்கிக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தனித்தனியாக ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு என்று சட்டம் கொண்டு வராமல் பொதுவாகச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அச்சுத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் சிறிது நேரம் கழித்து வந்தாலும் உடனே வீட்டுக்குப் போகச் சொல்லி விடுகிறார்கள். மின்சாரத் தொழிலாளர்கள் படுகிற கஷ்டம் நமக்குத் தெரியும். மின்சார ஆலோசனை போர்டில் மின்சாரத் தொழிலாளர்களைப் போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இத்தொழிலாளர்களுக்கு என்ன தெரியும் என்று சர்க்கார் நினைத்தார்களோ என்னவோ? அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமை மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. பொதுவாக எல்லாத் தொழிலாளர்களும் நன்மை அடையக்கூடிய வகையில் பொதுவான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதுதான் தோதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலைமையிலேயே தொழிலாளர்களுடைய நிலை போய்க்கொண்டிருந்தால் நாட்டின் வருங்காலம் சீரழிந்து விடும் என்று சொல்லிக் கொண்டு, அப்படிச் சீரழிந்து போகாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதகாக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri S. LAZAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானிய கோரிக்கையை ஆதரித்து நான் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதல் முதலாக தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசாங்கம் கையாண்டு இருக்கக் கூடிய கொள்கையை அவர் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் அவர்களுடைய அறிக்கையில். அதை வரவேற்கிறேன்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவனுக்குள்ள லிவிங் வேஜஸ் கிடைக்க 10-10
வேண்டும். மேலும் பல வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். a.m.
தகராறுகள் ஏற்பட்டால் கோர்ட் மூலமாக மட்டும் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நிலைமை மாறி அதற்காக சமரசம் பேசியும் கூட தீர்க்க வழி செய்ய வேண்டுமென்று சட்டம் வகுத்திருக்கிறோம் என்றெல்லாம் கொள்கையை அழகாக எடுத்துச் சொல்லி இதிலும் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கொள்கையை ராஜ்ய சர்க்கார் கையாண்டு வருகிறதா இல்லையா என்பதை பரிசீலனை செய்து அதன் பேரில் இந்த பத்து ஆண்டு காலமாக இந்த அரசாங்கம் ஆட்சியை ஏற்றுக்கொண்டதில் இருந்து இந்தக் கொள்கை எழுத்தளவில்தான் இருக்கிறது, நடை முறையில் வரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி அப்படிச் சொல்வதற்கு குறிப்பிட்ட காரணங்களை எடுத்துக் காட்டி எதிர்க்கட்சியில் இருந்து பேசிய, வெட்டுப் பிரேரணையை கொடுத்த அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருப்பார்களேயானால் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், அதற்குப் பதிலாக ஒரேயடியாக இந்த அரசாங்கம் தொழிலாளர் பிரச்னையில் எந்த வித அக்கறையும் காட்டவில்லை என்று ஒரேயடியாக அடித்துப் பேசுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். அது இந்தச் சபையின் கௌரவத்திற்கு பொறுத்தமாகாது என்றும் நினைக்கிறேன். அடுத்தபடியாக, அவர்கள் பேசும் போது குறிப்பிட்டுச் சொன்னார்கள், இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எந்த விதமான உதவியும் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு பேசியதெல்லாம் ஏதோ தாங்கள் கொடுத்த ஒரு சில பிரச்னைகள், அல்லது கோரிக்கைகள் முற்றிலும்

வரவேற்கப்படவில்லை என்ற ஒரு காரணத்தினால் என்னவோ அவர்கள் இந்த இடத்தில் தங்கள் மனக் குமுறல்களை வேறு வகையில் எடுத்துச் சொன்னார்கள் ஆனால் பொதுப்படையாக பேசும்போது இந்த பத்து ஆண்டு காலத்தில் எத்தனை எத்தனையோ சட்டங்கள், எத்தனை எத்தனையோ காரியங்களை அரசாங்கம் செய்து வந்திருக்கிறது என்று பரிசீலனை செய்து பார்ப்பார்களேயானால், அதைப் பற்றி விவரமாக பேசவேண்டுமென்று சொன்னால் காலம் கண்டிப்பாக இடம் தராது. ஆனால் அதைப் பற்றிய பட்டியல் வேண்டுமென்று சொன்னால் நிறைய இருக்கிறது என்று மட்டும்தான் நான் சொல்லிக்கொள்ள முடியும். அப்படியிருக்கும்போது எதுவுமே அரசாங்கம் செய்யவில்லை என்று, அதிலும் குறிப்பாகப் பக்கிரிசாமி பிள்ளை போன்றவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால், அவர்களே ஏமாற்றம் அடைய முடியாத ஒரு நிலையில் மீண்டும் மீண்டும் இந்த சபைக்கு தேர்ந்தெடுத்து வரக்கூடிய அளவிற்கு அவர்கள் கேட்கக்கூடிய கோரிக்கைகளை சர்க்கார் ஏற்று நடை முறையில் காண்பித்திருக்கிறார்கள் என்று பொருள்படுமே ஒழிய அவர்களுடைய வாதம் இந்தச் சபையில் இருக்கக்கூடிய முறைக்கு புறம்பாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் சொல்லக்கூடியதெல்லாம், இன்னும் அதிகம் அதிகமாக சலுகைகள், அதிகம் அதிகமான தேவைகள் • இன்னும் தொழிலாளர்களிடம் இருக்கிறது, அவைகளைப் போக்க வேண்டுமென்ற முறையிலே எடுத்துச் சொன்னால் அது நியாயமாக இருக்கும். அப்படிப் பார்க்கும்போது இன்று அரசாங்கம் மினிமம் வேஜஸ் ஆக்ட், குறைந்த பட்ச சம்பளம் இருக்கவேண்டுமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் பல தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல தொழில்களுக்கு இந்த குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கபடவில்லை. அதிலும் குறிப்பாக, நிலத்தில் வேலை செய்யக் கூடிய விவசாயிகளுக்கு, நியாயவாரம் கிடைக்கவேண்டுமென்று நாம் எப்பொழுது திட்டமிட்டோமோ, எப்படி அவர்களை அனாவசியமாக நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாதென்று இந்தச் சபையில் சட்டம் கொண்டு வந்தோமோ அதே முறையில் இந்த விவசாயிகளின்கீழ் வேலை செய்யும் தொழிலாளர்கள், அன்றாடம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள விகிதம் நிர்ணயித்தால் இன்று நாட்டில் இருக்கிற குமுறல் அநேகமாக அடங்கி விடும், அதோடு நல்ல முறையில் விவசாயத் துறையிலும் முன்னேற்றம் காண முடியும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, இன்சூரன்ஸ் பெனிபிட்ஸ். அவை பல சிப்பந்திகளுக்கு அளிக்கப்படவேண்டுமென்ற முறையில் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் எல்லாத் தொழில்களுக்கும் அது விஸ்தரிக்கப்படவில்லை. குறிப்பாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அது விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே அங்கெல்லாம் இதை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குடியிருப்பிற்கு வீடுகள் கட்ட சர்க்கார் முயற்சி எடுக்கிறது. ஆனால், டால்மியா சிமெண்டு, மதுக்கரை சிமிண்ட் தொழிற்சாலைகளில், அவர்கள் ஏராளமாக லாபம் அடைந்து வருகிறார்கள் என்பதை நான் கண்கூடாக கண்டும் கூட, அவர்கள் அங்கு வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு கண்டிப்பாக வீட்டு வசதி அளிக்கவேண்டுமென்ற முறையில் வீடு கட்டும் திட்டத்தை அவர்களிடம் கொடுத்து கண்டிப்பாக அத்தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேணடுமென்று நம் அரசாங்கம் அவர்களிடம் கூறவேண்டும்.

**Mr. CHAIRMAN** : (Sri M. D. Ramasami) அடுத்தபடியாக, கரிய கௌண்டர். . . . . .

**Sri S. LAZAR** : I have been speaking only for five minutes. May I know how much time has been allotted to me, Sir?

**Mr. CHAIRMAN** (Sri M. D. Ramasami) : **Ten minutes have been allotted to you.**





**Sri S. LAZAR : I have been speaking only for five minutes.** அடுத்தபடியாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட். அதன் கீழ் பல சட்டதிட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சர்க்கார் அதன் மேல் நல்ல அக்கரை எடுத்து பல கன்ஸிலியேஷன் போர்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. கன்ஸிலியேஷனும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த கன்ஸிலியேஷன் மிகவும் காலதாமதமாகிறது. அப்படி காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள், அவர்கள் கேட்கக்கூடிய முக்கியமான கோரிக்கைகள் எல்லாம் காலம் கடந்து தான் கிடைக்கின்றன. அதில் நல்லதொரு நிவாரணம் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. கன்ஸிலியேஷன் போர்டுகள், விரைவிலே அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மைன்ஸ் டிஸ்ப்யூட்ஸ். நம் ராஜ்யத்தில் பல சுரங்கங்கள் இருக்கின்றன. இன்றைய நிலையில் சுரங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்கின்றன. இந்த சுரங்கங்கள் எல்லாம் நம் அரசாங்க கன்ஸிலியேஷன் ஆபீஸரிடம், லேபர் ஆபீஸரிடம் அளிக்கப்படவேண்டும். அவர், இவைகளை எடுத்து நடத்த வேண்டுமென்ற முறையில் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அந்த முறையில் நல்லகாரியங்கள் எல்லாம் சென்ற ஆண்டு நடைபெற்று வந்தன. ஆனால், இந்த ஆண்டு ஏனோ அந்த ஒரு உத்தரவை மீண்டும் அளிக்க மறந்து விட்டார்களோ அல்லது மறுத்து விட்டார்களோ தெரியவில்லை. ஆகவே, மைனிங் டிஸ்ப்யூட்ஸ் எல்லாம் மத்திய அரசாங்கம் ரீஜனல் கமிஷனரிடம் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் கால தாமதமாகிறது. மைனிங் நம் அரசாங்கத்திடம் இருந்தால் நல்லது அங்கு தகராறுகள் ஏற்படுமானால் அங்கு நிலைமை மிகவும் மோசமாகி விடுகிறது. அந்த இடத்தில் சமாதானத்தை நிலை நாட்ட முடியவில்லை. ஆகவே, சமாதானத்தை நிலை நாட்ட வேண்டுமென்றால், அந்த அதிகாரத்தை நாம் வைத்துக்கொண்டால்தான் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக எத்தனையோ பெரும் தொழில்கள் எல்லாம் நம் ராஜ்யத்தில் இருக்கிறது. ஏனைய நாடுகளில், குறிப்பாக வடக்கு இருக்கக்கூடிய பல ராஜ்யங்களில் கூட பெரிய தொழில் அதிபர்கள் தொழிலாளிகள் ஒரு சிலரைப் பொறுக்கியெடுத்து அவர்களை மேற்படிப்பிற்காக, தனிப்பட்ட சில ஸ்பெஷல் படிப்புக்காக அனுப்பி அவர்களை தயார் செய்கிறார்கள். ஆனால் நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் யாரும் அந்த விதமான ஒரு முறையையும் கையாளுவது இல்லை. சர்க்கார் இதற்கு அக்கரை எடுத்துக்கொண்டு இது போன்ற தொழிலாளர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்கு பயிற்சியை கொடுத்தால் மேலும் தொழில் உற்பத்தி பெருகும். பல விதமான தொழில்கள் முன்னேறும் என்பதோடு கூட இருக்கக்கூடிய தொழில்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவர்கள் உதவி செய்ய முடியும்.

கடைசியாக சமீபத்தில வேஜ் போர்டு ஒன்று நிறுவப்பட்டது. அதன் மூலம் பல நல்ல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டன. அதிலும் சட்டம் சரியாக போடவில்லை என்ற காரணத்தால் டெல்லியிலுள்ள சுப்ரீம் கோர்ட் (அல்ட்ரா வயர்ஸ்) முரண்பட்டது என்ற தீர்ப்பை அளித்து இருக்கிறது. இதனால் அதிகம் பேர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதில் அக்கரை காட்டி அவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக தொழில் பிரச்னையை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாட்டில் தொழிலாளி, முதலாளி என்ற பாகுபாடு அதிகமாக இருந்து கொண்டிருப்பதால் நாட்டில் "இண்டஸ்ட்ரியல் பீஸ்" நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. இந்த நிலையை நாம் நீக்கவில்லையானால் நாம் முன்னேற்றம் காண முடியாது. இதை நீக்குவதற்கு தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒத்துழைக்க வேண்டும். அதிலும் முக்கியமாக "ஸ்மைல்ஸ்" என்ற பிரஞ்சு எழுத்தாளர் சொன்னது போல் நாட்டில் தொழிலாளி, முதலாளி என்பதும் பணக்காரன், ஏழை என்பதும் முக்கிய பிரச்னை அல்ல, சிக்கனமாக வாழத்

தெரிந்தவன், சிக்கனமாக வாழத் தெரியாதவன் என்கிற பாகுபாட்டைத் தான் நாம் கவனிக்கவேண்டும் என்று சொல்லி இருப்பதுமாதிரி சிக்கனமாக வாழ்க்கையை நடத்துவதற்கு அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வழிகளை எடுத்துச் சொல்லி தொழிலாளர்களை முன்னேற்ற வேண்டும். குறிப்பாக தொழிலாளர்கள் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இதை மனதில் கொண்டு இதற்கு நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. KARIA GOUNDER** : தலைவர் அவர்களே கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதே சமயத்தில் குறிப்பாக நமது நாட்டில் சொல்லவேண்டுமென்றால் எல்லா தொழில்களும் தேசீய மயமாகவேண்டும் என்ற கருத்தை என்
10-20 a.m. போன்றவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தொழில்களை தேசீய மயமாக்குகின்ற நேரத்தில்தான் நாட்டினுடைய வளர்ச்சியும் பெருகும். இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. பல தேசங்களுடைய தொழில்களைப் பற்றி நமது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த நாட்டில் தொழில்களுக்கு பல சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தும் கூட கனம் பக்கிரிசாமி பிள்ளை போன்றவர்கள், அவர்களுக்கு நீண்ட நாளைய தொழிற்சங்க அனுபவம் உண்டு. அவர்கள் கூட சர்க்கார் தொழிலாளர்களுக்கு வேண்டி ஒன்றும் செய்யவில்லையே என்று சொன்னது வியப்பாக இருக்கிறது. காரணம் என்னவென்றால் தொழிலாளர்களுடைய பிரச்னையை தீர்ப்பதற்கு மேலும் மேலும் லேபர் கோர்ட்டுகள் இருக்கிறது. அதன் பின்னாலும் ட்ரிப்யூனல் ஜட்ஜ் இருக்கிறார். எவ்வளவு தான் சலுகை செய்தாலும் தொழிலாளர்களுக்கு ஒன்றும் இந்த அரசாங்கம் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களும் சொல்லுவதை தயவு செய்து விட்டு விடுமாறு அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகளும் கஷ்டப்படுகிறார்கள். கோர்ட்டுகளில் அகப்பட்டுக்கொண்டு அவர்களும் சிரமப்படுகிறார்கள். தொழிலாளர்களிடத்திலும் நாம் குறைகளைக் காண்கிறோம். கோர்ட்டுகளின் தீர்ப்பின்படி தொழில்கள் எல்லாம் முடிந்து போகுமானால் என்ன செய்ய முடியும் என்று முதலாளிகள் சிரமப்படுகிறார்கள். நான் முதலாளியும் அல்ல, பெரிய தொழில் அதிபரும் அல்ல. விவசாய தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கு ஒரு விதமான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சர்க்காரால ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இன்னும் அது நடைமுறையில் வரவில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வார்களானால் என்னைப் போன்ற விவசாயிகள் பெரிதும் பலன் அடைவார்கள். இப்போது கூலிகள் எல்லாம் முன்பு இருந்ததை விட பத்து மடங்கு கூடுதலாக கொடுத்து வருகிறோம். யுத்த காலத்தை விட இப்போது 4 அல்லது 5 மடங்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்திருந்தாலும் அதே நேரத்தில் விவசாயக் கூலியாக இப்போது முன்னைவிட 10 மடங்கு அதிகமாக கொடுக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டு வருவதைப் பற்றி நண்பர் சாரதி அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் அனேக பீடித் தொழிலாளர்களின் வோட்டையும் பெற்றிருக்கிறேன். அன்றைய தினம் அவர்கள் கேட்டார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் பீடித் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிற சலுகைகள் எங்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று எங்கள் ஜில்லாவிலுள்ள பீடித் தொழிலாளர்கள் கேட்டார்கள். அப்போது எல்லா தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியான கூலி நிர்ணயம் செய்ய வேலை செய்கிறோம் என்று வாக்கு சொன்னோம். இப்போது அது பல மாதங்களாக பரிசீலனையில் இருக்கிறது. அதை கூடிய சீக்கிரமாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் குறிப்பாக தொழில் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அடிக்கடி சிறிய சிறிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பெரிய தொழில்களை நிறுவு



வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்று நாங்கள் சொன்னால், அதற்கு அரசாங்கம் இது பக்கத்தில் இருக்கிறது, அல்லது இந்த ஜில்லாவில் இதற்கு முயற்சி செய்யக்கூடியவர்கள் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறதோ என்னவோ தெரியவில்லை. இதற்காக முதல் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் எங்கள் ஜில்லா சேர்க்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக ஒரு தொழில் பள்ளிக்கூடம் வட ஆற்காடு ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டும் என்று அந்த இலாகாவிடம் அணுகியபோது சர்க்கார் ஒரு பகுதி உதவி அளிக்கும், மற்றொரு பகுதி நாங்கள் அளிக்க முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தார்கள். நாங்கள் பணம் கொடுப்பதானது விவசாயத் தொழிலுக்காக என்றால் எங்களால் கொடுக்க முடியுமே தவிர தொழில் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்காக ரொம்பவும் பிற்போக்கான எங்கள் ஜில்லாவிலிருந்து கொடுப்பது இயலாத காரியமாக இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் அநேகம் பேர்கள் ஸ்கூல் பைனல் வரை படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடம் வருவதாக இருந்தால் அவர்களுக்கு பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கைத் தொழில் விஷயத்தில் சிறிய தொழிலாக வெல்ல உற்பத்திக்காக, கரும்பு அதிகமாகக் கிடைக்கும் எங்கள் ஜில்லாவில் இந்த சிறிய தொழிலை ஆரம்பிக்க வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக நாட்டில் தொழில்களை தேசீயமயமாக்கும் விஷயத்தில் போக்குவரத்து இலாகாவை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்தி வருகிறது. இப்பொழுது குறிப்பிட்ட ஜில்லாவில் மாத்திரம்தான் தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறது. இந்த விஸ்தரிப்பு மற்ற ஜில்லாக்களுக்கும் கொண்டு வரவேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு அவர்கள் இதற்காக வேண்டிய முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டில் எல்லாம், அதாவது இப்போதுள்ள அமைச்சர் அவர்கள் இதைப் பொறுப்பு எடுப்பதற்கு முன்னால் ரோடுகளில் பஸ் அதிகமாக நிற்கும். இப்பொழுது எந்த இடத்திலும் பஸ் நிற்பதைப் பார்க்க முடியாது.

**Sri N. K. PALANISAMI** : இப்போதும் பஸ் ரோடுகளில் நிற்கிறது.

**Sri T. KARIA GOUNDER** : நண்பர் பழனிசாமி கவுண்டர் அவர்கள் இப்போதும் பஸ் நிற்பதாகச் சொல்லுகிறார். இப்போதும் ரோடுகளில் பஸ் ஸ்டாப்புகளில் பஸ் நிற்கிறதே தவிர முன் இருந்தது மாதிரி கண்டக்டர் இல்லாமல் ட்ரைவர் இல்லாமலும் பஸ் நிற்பதை பார்க்க முடியவில்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மாதிரி அவர்களுடைய துறையிலே அவர்கள் வெகு திறமையாக 1(
செய்கிறார்கள். இதையெல்லாம் மற்ற ஜில்லாக்களுக்கும் கொண்டுவந்து a
தேசீயமயமாக்கினால் இந்த உபத்திரவம் இருக்காது. வரி போடுங்கள், வரி போடாதீர்கள் என்ற முறையீடு இருக்காது. குறைவான பட்ஜெட் போட்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சிகளெல்லாம் பேசமாட்டார்கள். இதனால் பல கோடி ரூபாய் வருமானம் வரும். இந்த என்.ஜி.ஓ. கூட்டங்களுக்கு அவசியம் இருக்காது. அவர்களுக்கு நாம் அள்ளி அள்ளி கொடுக்கலாம். நாம் வாரி வாரிக் கொடுக்கலாம். அத்துடன் மத்திய சர்க்கார் திட்டங்களுக்கும் கொடுக்கலாம். அவர்கள் கொடுக்கும் சம்பளத்தையும் நம்முடைய ஊழியர்களுக்கு கொடுக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் தலைவர் என்னைப் பார்க்கிறார்—எனக்குக் கொடுத்த 10 நிமிஷம் ஆகிவிட்டது என்பதற்காக. தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு இவற்றைச் சொல்லிக்கொண்டு என்னுடைய சிறிய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

[25th March 1958

* **Sri M. JAGANNATHAN:** தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியத்தின் மீது பேசும்போது, வெட்டுப்பிரேரணையை ஆதரிக்க முன் வந்திருக்கிறேன். சர்க்கார், தொழில் துறையிலே கையாளுகின்ற கொள்கையானது "பாலுக்கும் காவல்—பூனைக்கும் தோழன்" என்ற முறையிலே அவர்கள் தொழிலாளர்களுக்கு ஒரு பக்கம் பாதுகாப்புக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்; அதே சமயத்தில் முதலாளிகளுக்கும் அவர்கள் தோழனாக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது கடைசியிலே அவர்களுடைய கொள்கையிலே நிரந்தரமான முறையில் தொழிலாளர்களுக்கு நம் ராஜ்யத்திலே எந்த விதமான நன்மையும் ஏற்படாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப்பற்றி சொல்ல முன் வந்தால் இவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமான நிலைமையாக இருக்கிறது என்பதை யாரும் மறைக்க முடியாது. ஏனென்றால் இன்றைக்கு விவசாயத் துறையிலே பல லட்சோப லட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் பின் தங்கிய வகுப்பினரும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு இந்த விவசாயத்திலே காலை முதல் மாலை வரையிலும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தபோதிலும் அவர்களுக்கு ஒரு நாளைக்கு 2 அணா, அல்லது 4 அணா கிடைக்கிறது என்றால், இந்தச் சொற்பப் பணத்தை வைத்துக்கொண்டு இவர்கள் தங்களுடைய பெண்டு பிள்ளைகளை எப்படிக் காப்பாற்ற முடியும்? விவசாயத்தையே நம்பி வாழும் இவர்கள் மத்தியிலே வறுமை, பஞ்சம், பசி, பட்டினி இவைகள் தாண்டவம் ஆடுகின்றது. ஆகவேதான் இந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் வரையரை விதித்துக் கூறியிருக்கிறார்கள். குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்க ராஜ்ய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு கமிட்டியை நியமித்து, அந்தக் கமிட்டி மூலம் பரிசீலனைகளைச் செய்து, சில சிபார்சுகளைச் செய்து, அவற்றை அட்வைசரி போர்டு அங்கீகாரம் செய்து, பின்னர் அந்த குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்து அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். இதைத்தான் உடனடியாகச் செய்யவேண்டுமென்று மத்திய சர்க்கார் வலியுறுத்துவதாக நான் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால், நம் ராஜ்ய சர்க்கார் இதைச் செய்யாமல் கால தாமதம் செய்து கொண்டு வருவதாகத் தெரிகிறது. 1959-ம் ஆண்டு முடிவிற்குள் இந்த விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்தாக வேண்டுமென்று மத்திய சர்க்கார் கூறியிருப்பதாக உணருகிறேன். அந்த கால வரையரைக்குள் நம் சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்து இந்த விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு ஆவன செய்யவேண்டும். ஆனால் சர்க்கார் என்ன சொல்கிறார்கள் என்றால் இதிலே ஏராளமான சிக்கல்கள்—கஷ்டங்கள்—எல்லாம் இருக்கின்றன; இது அனுபவ சாத்தியமல்ல; ஏனென்றால் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு எப்படி நாம் ஏற்படுத்துவது என்ற முறையிலே இவர்கள் பேசுகிறார்கள். சாதாரணமாக இந்தக் கூலி பிராந்தியத்திற்கு பிராந்தியம், ஜில்லாவிற்கு ஜில்லா, தாலூகாவிற்கு தாலூகா வித்தியாசப்படுகிறது. அந்த முறையிலே இந்த கூலியை எப்படி நாம் "பிளாட் ரேட்" ஆக நியமனம் செய்ய முடியும். அதிலே பல வித அனுபவ சாத்தியக் கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால் இதைச் சுலபமாகச் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம் ராஜ்யத்திலே இது கஷ்டமாக இருந்த போதிலும் நம் பக்கத்தில் இருக்கிற திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதை நம் சர்க்கார் கவனித்துப் பார்க்கவேண்டும். அந்த ராஜ்யத்திலே விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது இப்போது நடைமுறையில் இருக்கிறது. அதைப் பற்றிக் கூட நேற்றுப் பேசும்போது எனது அருமை நண்பர் டி. எஸ். ராமசாமி பிள்ளை குறிப்பிட்டார்கள். கேரள ராஜ்யத்தில் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் நடை முறையில் இருக்கும்பொழுது நம் சர்க்கார் ஏன் செய்யக்கூடாது.



25th March 1958] [Sri M. Jagannathan]

எவ்வளவு கஷ்டம் இருந்த போதிலும், அனுபவ சாத்தியமாக இல்லாத போதிலும், அதை ஏன் நம் சர்க்கார் நன்றாகப் பரிசீலனை செய்து, கஷ்டங்களை ஓரளவுக்கு சமாளித்து அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர முயற்சி செய்யக் கூடாது? திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் மட்டுமல்ல, மேல் நாடுகளில் பார்த்தால் கூட இந்த நிலைமை நன்றாகத் தெரியும். உதாரணமாக இங்கிலாந்தைப் பார்த்தால், விவசாய துறையிலே ஈடுபட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அங்கு சாத்தியமாயிருக்கும் போது ஏன் நம் நாட்டில் முடியாது. நான் ஒன்று சொல்லக் கேட்டிருக்கிறேன். நம் நாட்டிலே மக்களுடைய நேஷனல் கேரக்டர் என்று சொல்லுகிறார்களே—பொதுவான ஒரு தேசீய குணம்—அந்த குணம் மேல் நாட்டு மக்களுக்கு இருக்கிற அந்த அளவுக்கு இல்லை என்று...............

**The Hon. Sri R. VENKATARAMAN:** நான் ஒரு நாளும் அந்த மாதிரி சொன்னது கிடையாது. நான் வெளி நாடுகளில் சுற்றிப் பார்த்த வரை நம் தேசீய குணம் மற்ற நாடுகளதை விட உயர்வாகத்தான் இருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறேன்.

**Sri M. JAGANNATHAN:** அமைச்சர் அவர்கள் சொன்னார் என்று நான் எங்கே குறிப்பிட்டேன்? நான் அப்படிச் சொல்லவேயில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகவே, மேல் நாடுகளில் இருக்கின்ற மக்களுக்கு உள்ள அந்த பொதுவான குணத்தை விட, நம் நாட்டு மக்களுக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்த போதிலும் இங்கு இருக்கிற நிலச்சுவான்தார்களும், பெரிய மிராசுதார்களும், குறைந்த பட்ச கூலி நிர்ணயத்தை அமுல் செய்வதில் அவர்கள் அவ்வளவு நேர்மையாக நடந்துகொள்ளமாட்டார்கள். அதனால்தான் இங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு பாதகம் ஏற்படும். அவர்களுக்கு பார்கெயினிங் கெபாஸிடி, ஆர்கனைஸிங் கெபாஸிடி, வருமையின் காரணத்தினால் மிகக் குறைவாக இருக்கிறது. பல தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தி அவர்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள அவர்களால் எந்த விதமான கிளர்ச்சியும், இயக்கமும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இந்தக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் பொதுவாக நம் இந்தியா தேசத்திலே கடினமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். இப்படிக் கடினமாக இருக்கக் கூடியது திருவாங்கூர்-கொச்சியில் சாத்தியமாயிருக்கிறது. மேலை நாடுகளில் சாத்தியமாயிருக்கிறது. ஆகவே, சர்க்கார் கடினமான பிரச்னை என்று தள்ளிவிடாமல் உடனடியாக அவர்களுடைய கவனத்தை இதில் செலுத்தி ஆவன செய்ய வேண்டும்.

மத்திய சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்ன சொல்லுகிறார்கள். அவர்களும் இதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். குறைந்த பட்ச கூலி நிர்ணயம் கடினமான காரியம் என்று ஒத்துக் கொள்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் மொத்த ஜனத் தொகையில் 55 சத விகிதத்திற்கும் மேலாக, விவசாயத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய வறுமையைப் போக்க விரைவில் செய்ய முடியாமல் கடினமான பிரச்னையாக இருப்பதால் காலதாமதம் ஏற்பட்டாலும், இதை நாளடைவில் செய்யவேண்டுமென்பதை மத்திய சர்க்கார் உணர்ந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது, உடனடியாக இதைத் தீர்த்து வைக்க முடியாது. மக்களுடைய வறுமையைப் போக்க ஆல்டர்னேடிவ் எம்ப்ளாய்மெண்டு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். தகுந்த முறையில் வேறு துறைகளில் வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த வேலை வாய்ப்புக்கு நம் ராஜ்யத்தில் இருக்கிற சூழ்நிலையைச் சிந்தித்துப் பார்த்தால் மிக மிக மோசமாக இருக்கிறது. வேலை தேடித் தருவதற்கென்று ஜில்லா

[Sri M. Jagannathan] [25th March 1958

தோறும் டிஸ்டிரிக்ட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸரைப் போட்டு வேலை தேடிக் கொடுக்கும் வேலையை கவனிக்க சர்க்கார் நியமனம் செய்திருக்கிறார்கள்.

இந்த வேலை தேடித் தரும் அலுவலகங்களின் மூலமாக மக்களுக்கு சரியான முறையில் வேலை கிடைக்கிறதா என்று பார்த்தால் இல்லவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், தொழில் துறையில் பயிற்சி பெற்றவர்கள் இந்த வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களின் மூலமாக வேலை பெற முடிவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், சர்க்காரின் கீழ் இருக்கும் பல இலாக்காக்களில் அவ்வப்பொழுது ஏற்படும் காலி ஸ்தானங்களை வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களுக்குத் தெரிவிப்பது கிடையாது. தயவு தாட்சண்யத்தினால் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தைக் கேட்காமலே, தாங்களாகவே இந்த காலி ஸ்தானங்களுக்கு ஆட்களைத் தேர்ந்து அமர்த்தி விடுகிறார்கள். ஆகவே வேலை தேடித் தரும் ஸ்தாபனம் நல்ல முறையில் செயல் ஆற்ற முடிவதில்லை. இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஏதோ பொதுவாக பேசுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கவேண்டாம்.

என்னுடைய ஜில்லாவான தென்னாற்காடு ஜில்லாவிற்கு வேலை தேடி தரும் ஸ்தாபனம் கடலூரில் இருக்கிறது. அங்கு இருக்கும் உத்தியோகஸ்தர் ஒரு அம்மையார். அந்த ஜில்லாவிலே இருக்கும் பல இலாக்காக்கள் காலி ஸ்தானங்களைப் பற்றிய தகவல்களைப் சரியாக தருவதில்லை என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக நெய்வேலியில், பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தைச் சேர்ந்த ஆபீஸர்களில் பலவிதமான வேலைகளுக்கு ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன. அங்கு இருக்கும் ஆபீஸர்களே ஆட்களை நியமித்து கொள்கிறார்களே தவிர வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திற்கு தகவல் தருவது கிடையாது என்று அந்த அம்மையார் பொது ஜனங்களின் பிரதிநிதியாகிய எங்களிடம் கூறுகிறார். ஆகையால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற ரீதியில் இந்த ஸ்தாபனம் வேலை செய்வதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக் காட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri N. MAHALINGAM** : கனம் சபா நாயகர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய தொழிலாளர், பாக்டரி மான்யத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். பக்கத்து ராஜ்யங்களில் இருக்கக்கூடிய நிலைமையை விட நமது ராஜ்யத்தில் தொழில் துறையில் அமைதியும், ஒத்துழைப்பும் இருந்து வருகிறது. நமது ராஜ்யம் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். பலர் நம்முடைய ராஜ்யத்தில் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது பக்கத்து ராஜ்யமான கேரளாவில் மின்சாரம் அதிகமாக இருந்த போதிலும் கூட அங்கே தொழில்களை ஆரம்பிக்காமல், சிறிது காலதாமதமானாலும் நம்முடைய ராஜ்யத்தில் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று தொழில் அதிபர்கள் காத்துக்கொண்டிருப்பதற்கு இங்கு இருக்கும் தொழில் அமைதியே காரணம். இதை உணர்ந்துதான் பல தொழில் அதிபர்கள் பல புதிய தொழில்களை நம் ராஜ்யத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். கனம் அங்கத்தினர் மாதா கௌண்டர் சொன்னது போல், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் இருக்க வேண்டும் என்ற யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர் சொல்லியது போல் இந்த தொழிற்சங்கங்கள் தொழில் நடத்துபவர்களின் தூண்டுதலால் ஏற்படுத்தப்படுகின்றன என்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த தொழிற் சங்கங்கள் பல அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. ஒரு தொழிலுக்கு 'ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு சங்கம் நடத்திக்கொண்டு வருகிறது. இந்த நிலைமை மாறி, ஒரு ஊருக்கு ஒரு தொழிற் சங்கம் என்பது மாறி, ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரே தொழிற்சங்கம் மாகாணவாரியாக இருக்கவேண்டும். இப்பொழுது பல சங்கங்கள் இருப்பதால், பல சிரமங்கள் ஏற்படுகின்றன.



25th March 1958] [Sri N. Mahalingam]

(Mr. Speaker in the Chair.)

நம் மாகாணத்தில் நூல் நூற்புத் தொழில் பெரிய தொழிலாக இருக்கிறது. இந்த தொழில் ஸ்தாபனத்தில் நூல் நூற்கும் பகுதியில் இருப்பவர்கள் ஒரு தொழிற் சங்கத்தின் கீழ் இருக்கிறார்கள். ரீலிங் பகுதியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேறு ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இப்படி பல சங்கங்கள் இருக்கின்றன. ஆகையால் ஒரு சங்கம் ஒத்துழைக்கும்போது மற்றொரு சங்கத்திலுள்ள தொழிலாளர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். ஆகையால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகையால் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் இருக்கவேண்டும். இதைப்பற்றி முன்பு தொழில் அமைச்சராக இருந்த ஸ்ரீ பக்தவச்சலம் ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாகக் குறிப்பிட்டார். கனம் அமைச்சர் அவர்கள் அதைச் சீக்கிரம் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்தில் நூற்புத் தொழில் மிகப் பெரிய தொழில். இப்போது இந்தத் தொழில் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் நம்முடைய மாகாணத்தில் இருக்கும் கைத்தறி துணிகள் அதிகமாக தேங்கி யிருக்கிறது. இது விற்கப்படாவிட்டால் மில்களில் உற்பத்தி பாதிக்கப்படும். இப்பொழுது இருக்கும் நிலைமை இன்னும் ஒரு மாதம் நீடித்தால் அநேக மில்கள் மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்று நான் அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன்.

மதுரையில் இருக்கும் ஹார்வே மில்லில் 3-வது ஷிப்டை மூடி விட்டார்கள். கோயம்பத்தூரிலிருக்கும் மில்களிலும் அங்கு இருக்கும் மில் சங்கத்தின் தலைவர் ஜெனரேட்டர்களை வேலை செய்யாமல் இருக்கும்படி செய்ய வேண்டும் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்த நூற்புத் தொழிலில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் போட்டிருக்கிற எக்சைஸ் வரி காம்போஸிட் மில்களுக்குத்தான் பிரயோசனமாக இருக்கிறதே தவிற மற்ற மில்களுக்கு இல்லை. ஆகையால் இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கத்திற்கு நம் சர்க்கார் எடுத்து உரைத்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால், நம் மாகாணத்தில் இருக்கும் நூற்புத் தொழிலில் பெரும் குழப்பம் ஏற்பட்டு பல மில்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும், தொழில் அமைதியின்மை ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

கோயம்பத்தூரில் '**Health Insurance Scheme**' என்ற திட்டம் இருக்கிறது. இதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. டாக்டரிடம் போதுமான மருந்து இருப்பது இல்லை. டாக்டரிடம் சீட்டு வாங்கிக்கொண்டு மத்திய மருந்து கிடங்கிற்கு போக வேண்டிய நிலை இருக்கிறது. டாக்டர்கள் அதிகப்படியாக மருந்து ஸ்டாக் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் மருந்து கிடங்குகள் அதிகமாக ஏற்படுத்தவேண்டும்.

டாக்டர்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்பது தணிக்கை செய்யப்படுவது இல்லை. சில டாக்டர்கள் தொழிலாளர்களுக்கு நோய் இல்லாவிட்டாலும் நோய் இருப்பதாகச் சொல்லி மாதக் கணக்கில் லீவு கொடுத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு என்ன நோய் என்று கேட்டால் அவர்கள் பதிலே அனுப்புவது இல்லை. இதனால் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நேரம் வீணாகப் போய்விடுகிறது. ஆகையால் டாக்டர்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்று பரிசோதிப்பதற்கு தணிக்கையாளர்கள் இருக்கவேண்டும்.

தொழில்துறையில் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்தால்தான் நம். தொழில்கள் எப்பொழுதுமே சீரான முறையில், லாபகரமானதாகவும் சௌகரியமாகவும் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டிரிபூனல்கள் "அவார்டுகளை"-க்கூட அமல் செய்யாமல் கோர்ட்டுகளுக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். கோர்ட் என்று சொன்னால் சுப்ரீம் கோர்ட்வரை செல்கிறார்கள். ஆகையால் இதில் தீர்வு காண காலதாமதம் ஆகிறது. தொழிலாளர்களுக்கும் திருப்தி ஏற்படுவதில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நினைக்கிறேன்.

10-50 a.m. அதைப்போலவே தொழிலாளர்களுக்கும் பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது. அவார்டுகள் கொடுக்ககூடிய காலங்களில் அந்தந்த தொழிலைச் சார்ந்த நிபுணர்கள் இருந்தால் அவர்களுடைய யோசனைகளைக் கேட்டுக்கொண்டு அவார்டுகளைக் கொடுத்தால் அது ஒரு விதத்தில் நன்மையாக இருக்கும். அந்தந்த தொழிலுக்கு எந்த அளவுக்கு அவர்கள் ஆலோசனைகளைக் கொடுக்க முடியும் என்பது கண்கூடாகத் தெரியும். இந்தியா பூராவும் உள்ள பத்திரிகையாளர்களுக்கு சம்பளம் சம்பந்தமாக ஒரு சட்டம் வந்தது. அது சரியல்ல என்று கூட சமீபத்தில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. இம்மாதிரியான நிலைமைக்கு வரக்கூடாது. அந்த அளவில் அவார்டுகளைச் செய்யும்போது அந்த தொழிலினுடைய நிபுணர்களையும் அதில் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு அவார்டுகளை கொடுத்தால் அது நல்ல முறையில் பயன்படும். பல ட்ரிபூனல்கள் அவார்டுகள் கொடுத்தாலும் அது சரியானபடி அமுல் செயயப்படாமல் தொழிலை நடத்துகிறவர்களும், தொழிலாளர்களும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து அவார்டு சம்பந்தப்பட்ட தீர்ப்புப்படி இல்லாமல் தாமாகவே ஒரு முடிவுக்கு வந்து அதன்படி செய்து கொள்கிறார்கள். அதனால் அவார்டுக்கு மதிப்பு இல்லாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமை வராமல் இருப்பதற்கு அந்தந்த தொழில் நிபுணர்களையும் அந்த ட்ரிபூனலில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி கோயம்பத்தூரில் இன்ஜினியரிங் தொழில் சம்பந்தமாக ட்ரிபூனல் அவார்டு கொடுத்திருந்தும் அதை ஏற்றுக்கொள்ளாமல் தொழிலை நடத்துகிறவர்களும், தொழிலாளிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து அதன்படி நடந்துகொண்டு வருகிறார்கள். அவர்களே கூலி நிர்ணயம் செய்துகொண்டு சம்பளத்தை நிர்ணயம் செய்துகொண்டு செயல்பட்டு வருகிறார்கள். ட்ரிபூனல் கொடுக்கும் அவார்டுகள் சில சமயங்களில் செயல்படாமல் போய்விடுகிறது. ஆகவே அந்தத் தொழில் நிபுணர்கள் அதில் இருந்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது. அதைப்போலவே பொருள்களை உபயோகப்படுத்துகிறவர்களுடைய யோசனையையும் கேட்டு பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. பொருள்களின் விலையை நிர்ணயம் செய்யும்போது அதை உபயோகப்படுத்தக்கூடிய பிரதிநிதிகளையும் ஆலோசனை கேட்டு அதன் பிறகு விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்காவில் அதைப் போன்றதான் கமிட்டி இருக்கிறது. அங்கு கன்ஸல்ட்டண்ட் கமிட்டி என்று ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதன் மூலமாக விலைகளை நிர்ணயம் செய்து வருகிறார்கள். அந்தக் கமிட்டியில் பொருள்களை உபயோகப்படுத்துகிறவர்களையும் அவர்களுடைய பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு விலைகளையும் கூலியையும் நிர்ணயம் செய்கிறார்கள். அதே மாதிரி இங்கேயும் நாம் ஒரு கமிட்டியை நியமித்து அதன்படி விலையையும் கூலியையும் நிர்ணயம் செய்யலாம். இப்படி அவர்களைச் சேர்த்துக்கொண்டால் சரியான முடிவுக்கு வருவதற்கு சௌகர்யமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக என்னுடைய தொகுதியாகிய ஆனைமலை தேயிலைத் தோட்டப் பிராந்தியங்களில் அநேகம் வீடுகள் கட்டவேண்டியது பாக்கியாக இருக்கிறது. அரசாங்கம் நடத்துகிற தொழில் சம்பந்தப்பட்டவர்கள் சில வருஷங்களாக வீடுகள் கட்டுவதை மிகவும் குறைந்த வேகத்தில் செய்துகொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக அங்குள்ள தொழிலாளர்கள் போதுமான வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். புதிய சட்டமாகிய ப்ளான்டேஷன் லேபர் ஆக்டின் பிரகாரம் வீடுகள் கட்டிக் கொடுப்பது அந்தத் தொழிலை நடத்துகிறவர்களுடைய கடமையாக பாவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது வேகமாக அப்படி வீடுகளை கட்டி கொடுப்பதாக இல்லை. அந்த தோட்டத் தொழில்களை நடத்துகிறவர்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்தாவது உதவி செய்து தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள தொழிலாளர்களுக்கும் சீக்கிரமாகவே வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நானே சில மந்திரிகளை நேரில் அந்தப் பிரதேசங்களுக்குக் கூட்டிக்கொண்டு போய் அவர்கள் வசிக்கக்கூடிய வீடுகளை காட்டியிருக்கிறேன். இப்பொழுதுள்ள ரெவினியு மந்திரி அவர்களும் அந்த வீடுகளை நேரில் வந்து





பார்த்திருக்கிறார். தற்போது சபாநாயகராக இருக்கும் டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் சென்ற மந்திரி சபையில் தொழில் மந்திரியாக இருந்தபோது அவர்களையும் அங்கு கூட்டிக்கொண்டு போய் அங்குள்ள தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய வீடுகளைக் காட்டியிருக்கிறேன். 8 அடிக்கு 6 அடி உள்ள அறையில் ஒரு குடும்பம் வசிப்பதையும் 12-க்கு 10 அடியுள்ள அறையில் மூன்று குடும்பங்கள் வசித்து வருவதையும் அவர்கள் நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். அநேக தோட்டங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே தொழிலாளர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கு சீக்கிரத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் அங்கேயுள்ள தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு சரியானபடி படிப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். பத்தாவது வரையில் படித்தவர்களுக்கு அங்கேயே உத்யோகங்கள் கிடைப்பதாக இல்லை. அதனால் பல தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்குள்ள உயர்தரப் பள்ளிகளில் படித்துவிட்டு தேர்ச்சி பெற்ற குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு அங்கேயே உத்யோகங்களைக் கொடுத்து வந்தால் நன்மையாக இருக்கும். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால் அப்படி உத்யோகங்கள் கொடுப்பதாக இல்லை. தோட்டங்களில் குமஸ்தா வேலையோ அல்லது மற்றும் அதைப் போன்று வேறு எந்த வேலைகளாக இருந்தாலும் அவைகளை தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கே கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயம்செய்யவேண்டும். அதற்கு வேண்டிய சட்டங்களை செய்ய முடியாவிட்டாலும் அங்குள்ள நிர்வாகஸ்தர்களைக் கண்டு இப்படி தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உபயோகங்களைக் கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுத்தால்தான் அங்குள்ள தொழிலாளிகள் நல்ல முறையில் இருக்க முடியும்.

அடுத்தபடியாக போனஸ் சம்பந்தமாக சிலவற்றைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு தொழில் சம்பந்தமாக போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாக அடிக்கடி ட்ரிபூனலுக்கு போய்க்கொண்டே இருக்கிறது. கனம் மாதா கௌடர் பேசும்போது தொழிலை நடத்துகிறவர்களுக்கு லாபம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அப்படிச் சொல்வது சரியல்ல. அது கொள்கை அளவில் சரியாக இருக்காது. அது நடைமுறையில் அமுலுக்கு வர முடியாது. ஒவ்வொரு தொழிலிலும் இப்படி போனஸ் கொடுக்கப்படவேண்டும் என்றும், இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு அதிகமாக இருக்கக் கூடிய நாட்களில் நிச்சயமாக வேலை செய்தால் போனஸ் கிடைக்கும் அளவில் முடிவு செய்யவேண்டும். அப்பொழுதுதான் சரியானபடி அமைதியாக இருக்கும். எவ்வளவு லாபம் என்று கணக்கு எடுத்து அந்த அளவில் மூன்று வருஷங்களுக்குள்ள லாபத்தை கண்டுபிடித்து போனஸ் கொடுக்கலாம். அதன்படி முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த இலாகா நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வருகிறது என்பதைச் சொல்லிக் கொண்டு இந்த மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

**SRI T. P. ELUMALAI**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் முன்வைத்திருக்கிற தொழில மானியக் கோரிக்கையை, ஆதரித்துப் பேசும்போது இந்த மானியத்துக்கு ஆதரவாக இருக்கிற கனம் மந்திரி அவர்கள் மீண்டும் மேல் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததற்கு தொழிலாளர்களுடைய சார்பாக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உண்மையிலேயே பத்து வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கு தொழிலாளர்களுடைய நிலைமை சிறந்த முறையில் இருக்கிறது என்று சொல்லலாம். சிறந்த முறையில் என்று சொன்னால் மானத்தை பாதுகாத்து மானத்தோடு வாழ்ந்து தன் வாழ்க்கையைச் சரியான முறையில் நடத்தி வருகிறார்கள். நல்ல மானத்தோடு தொழிலாளர்கள் வாழ்கிறார்கள் என்று எல்லோரும் ஒப்புகின்ற அளவில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் இப்படிப்பட்ட ஒரு நிலையை நான் தொழிலாளர்களுடைய மத்தியில் பார்க்கிறேன். தொழிலாளர்களும் அப்படிப்பட்ட ஒரு நிலைமையைப்

பெற்றுப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்கபிரியப்படுகிறேன். மானம் இல்லாமல் ஒருவன் வாழ்ந்து வந்தால் இந்த சுதந்திர நாட்டில் எவ்வளவுதான் சௌகர்யத்துடன் வாழ்ந்தாலும் அவனை மதிக்கமாட்டார்கள். ஆனால் அந்த உரிமையைப் பெற்று இன்றைக்கு தொழிலாளர்கள் மானத்தோடு வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு தொழிலாளர்களுடைய பொருளாதார நிலைமை உயர்ந்து இருக்கிறது. இதை நான் இந்தச் சட்டசபையில் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். இந்த இலாகாவில் இருக்கிற அதிகாரிகளும் மந்திரிகளும் யாராக இருந்தாலும் அவர்கள் இலாக்காவைப் பற்றி அறிந்தவர்களாக இருக்கவேண்டும். ஒவ்வொரு இலாக்காவிலும் உள்ள அதிகாரிகளையும் மந்திரிகளையும் யார் யாரோ என்பதையும் எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு முன்னதாக இந்த சபையில் பேசப்பட்டது பூர்வீகத்தைப்பற்றி, அந்த பூர்வீக சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் இது நன்றாகத் தெரிய வரும், மேலும் பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்கள்பேரில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது. அந்த முறையில் அவர்கள் இருந்தார்கள். இப்பொழுதுள்ள அதிகாரிகளையும் மந்திரிகளையும் பார்க்கும்போது இந்த இலாகாவைப்பற்றி நன்றாக அறிந்தவர்களும் இந்த இலாகாவில் நீண்ட நாட்களாக அனுபவம் உள்ளவர்களும்தான் இருக்கிறார்கள். அந்த இலாகாவில் இருந்து தொண்டாற்றியவர் இன்று அந்த இலாகாவின் சர்க்கார் மந்திரியாக இருக்கிறார். ஆனால் இதற்கு முன் இருந்தவர்கள் அந்த இலாகாவைப்பற்றியே தெரியாதவர்களாக இருந்தார்கள். இப்பொழுது இந்த இலாகாவைப்பற்றி தெரிந்து கொண்டவர்கள் இருப்பதைப் பார்த்து நாம் பெருமை கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இதற்கு முன்னதாக இந்த இலாகாவில் ஒன்றும் அறியாதவரையும் அந்த இலாகா சம்பந்தம் இல்லாதவரையும் போட்டிருந்தார்கள். அதனால் தொழிலாளர்கள் சொல்வது அவர்களுக்குப் புரியாமலும், அவர்கள் சொல்வது தொழிலாளர்களுக்குப் புரியாமலும் இருந்தது. இதனால் தொழிலாளர்களுக்குப் பெரிய கஷ்டமாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை அந்தக் காலத்தில் இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இப்பொழுதுள்ள மந்திரிக்கு முன்னால் இருந்த மந்திரி சபையில் கனம் பக்தவத்சலம் அவர்கள் தொழிலாளர்களுக்கு இருந்த தீமையை போக்கினார்கள். அப்பொழுதுள்ள சூழ்நிலையை மாற்றி தக்க சூழ்நிலைக்குக் கொண்டுவந்தார்கள். அதன் பிறகு அது சாசுவதமாக இருப்பதற்கும் தற்போது உள்ள மந்திரி தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல சூழ்நிலையை ஊக்குவிப்பதற்கும் நம்முடைய நண்பர் தொழில் அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்களை இப்பொழுது அந்த இலாக்காவிற்கு பொறுப்பாளியாக போட்டிருக்கிறார்கள். இது ஒரு அளவிற்கு வரவேற்கத்தக்கதாக இருக்கிறது பெருமைப்படக்கூடியதாகவும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள பிரியப்படுகிறேன்.

இந்த இலாகா எவ்வளவோ நல்ல முறையில் மாறுதல் அடைந்திருந்தாலும் அதில் சில குறைகள் இருக்கத்தான் செய்கிறது. தொழிற்சாலைகளில் இன்றைக்கு எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளில் இருக்கிற அதிகாரிகள் தொழிலாளர்களை வேறுவிதமாக நடத்தினாலும் அல்லது அவர்களுக்கு எந்த வகையிலாவது இடைஞ்சல் செய்தாலும், தொழிலாளர்கள் அவர்களை கொடும்பாவி கட்டி இழுக்கக்கூடிய அளவில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு உரிமை தொழிலாளர்களுக்கு இப்பொழுது வந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. தங்களுக்கு விரோதமாக இருக்கக்கூடிய முதலாளிகளின்பேரில் தொழிலாளர்கள் பகிரங்கமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். முதலாளிகளின் மீது தொழிலாளர்கள் பழி வாங்கக்கூடிய அளவில் அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். ஆனால் இதற்கு பல தொழிற் சங்கங்கள் தடையாக இருக்கின்றன. உதாரணமாக அந்தந்த சங்கத் தலைவர்கள் தங்களுடைய கட்சியின் கொள்கைக்கு சாதகமாகவும் தங்களுடைய கட்சியின் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்கும் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்த சந்தர்ப்





பத்தில்தான் தொழிலாளர்களுடைய உண்மையான உரிமை பறிபோகிறது. அதற்காக சர்க்கார் தக்க சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். சில சட்டங்களையும் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். சர்க்கார் கொண்டுவரும் சட்டங்களை தொழுற்சங்கத் தலைவர்கள் ஆதரிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் மூலமாக தொழிலாளர்களுடைய முன்னேற்றத்துக்கு பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டியது அவசியம். ஓரளவு உரிமையோடு இருப்பவர்கள் அதை ஒட்டி கேட்பதற்கு அதிகாரம் பெற்றவர்களைவிட, தாழ்மையான நிலைமையில் இருக்கும் தொழிலாளிகளுக்கு கூலி நிர்ணயம் செய்ய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, உப்பு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் படும் கஷ்டம் கொஞ்சம் நஞ்சம் அல்ல. அது மட்டுமல்ல. விவசாயத் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள், கட்டிடங்கள் கட்டுவதில் ஈடுபட்டிருக்கும் தினக்கூலி என்று சொல்லப்படும் தொழிலாளிகள் ஆகியோர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கண்டிராக்டர்கள் லட்சக்கணக்கில் பெரிய கட்டிடங்களையெல்லாம் கட்டு 11.00 a.m. வதற்கு கண்டிராக்ட் எடுத்துவிட்டு தினக்கூலி ஆட்களை வைத்துக்கொண்டு கட்டிட வேலையையே முடித்துவிடுகிறார்கள். அந்தத் தினக்கூலிகள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்கள் சிமெண்டு கூட்டுவதற்காக காலில் காகிதத்தையோ கந்தத்துணியையே கட்டிக்கொண்டு வேலை செய்வது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. நான் நேற்றுகூட ½ மணி நேரம் நின்று இதை கவனித்தேன். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியிருக்கிறது. அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்தால்தான் அவர்களுக்குதகுந்த பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே, இம்மாதிரியான தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். உண்மையிலேயே அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். ஏதோ நான் புதியதாகச் சொல்லுவதாக நினைக்கவேண்டாம். ஆனால், உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு கூலியை நிர்ணயம் செய்து பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதற்காகத்தான் இது பற்றி குறிப்பிட்டேன்.

அது மாத்திரமல்ல. சென்னையில் வால் டாக்ஸ் ரோடில் பல பட்டரைகள் இருக்கின்றன. அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் படும் கஷ்டத்தை சட்டசபை மெம்பர்கள் எல்லோரும் பார்த்திருக்கலாம். அவர்களுக்கு எந்த விதமான வசதியும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கிண்டியில் தொழில் அரங்கு ஏற்படும்பொழுது அதில் இந்த பட்டரைகளுக்கெல்லாம் இடம் கொடுத்து அங்கே இவைகளை மாற்றவேண்டுமென்று நினைத்தார்கள் என்று நான் எண்ணினேன். ஆனால் ஒரே ஒரு பட்டரைதான் அங்கே போயிருக்கிறது என்று விசாரித்ததில் தெரியவருகிறது. அவைகளையெல்லாம் சரியான வசதியோடு கூடிய தொழிற்சாலைகளாக மாற்ற வேண்டும். அந்தத் தொழிலாளர்கள் நல்ல வசதியான முறையிலே உட்கார்ந்து வேலை செய்வதற்கு வகை செய்யவேண்டுமென்று நம்முடைய சர்க்காரை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருவொற்றியூரில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு கிண்டியில் வீடு கட்டிக்கொடுத்து பிரயோசனம் இல்லை. இதனால் தினந்தோறும் தொழிலாளிகள் போக்குவரத்துக்கும் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே, எங்கு தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிறதோ, அங்கெல்லாம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு சர்க்கார் முன்வரவேண்டும். ஓரளவுக்கு இதைச் செய்திருக்கிறார்கள். ஆனால் தொழில் அரங்கு என்று சொல்லக்கூடிய நிலையில் திருவொற்றியூரில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு இருக்கும் தொழிலாளர்களுக்கு பக்கத்திலேயே வீடு கட்டிக்கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய இட வசதியும் அங்கேயே இருக்கிறது. இதில் அமைச்சர் அவர்கள் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Si T. P. Elumalai] [25th March 1958

உண்மையிலேயே தொழிலாளர்கள் ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். லேபர் கமிஷனர் கூட இங்கே வந்திருக்கிறார்கள். தொழிலாளர் தலைவர்கள் வந்தாலும் சரி, சாதாரண தொழிலாளி வந்தாலும் சரி, அவர்களுக்கு சொல்லவேண்டிய விஷயங்களையெல்லாம் சொல்லி, சட்ட விஷயத்தையும் விளக்கி, இப்படியெல்லாம் நீங்கள் போராடவேண்டுமென்று சொல்லி அவர் ஒரு தொழிற் சங்க தலைவர்போல் இருந்து பணியாற்றுகிறார். இது பொதுவாக தொழிலாளர்களுடைய நிலைமையை கண்காணித்துவரும் தலைவர்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே அமைச்சர் அவர்களுக்கும், லேபர் கமிஷனர் அவர்களுக்கும், முதலாளிகள் எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள் என்பது தெரியும். இந்த நிலைமை தொழிலாளர்களின் அரங்கில் வேலை செய்கின்ற தலைவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகையால் நாம் எல்லோரும் அவர்களுக்கு நன்றி செலுத்தி சட்டங்களுக்கு உதவியாக இருக்கவேண்டும். அவர்கள் போடுகின்ற சட்டத்திலே ஏதாவது ஓட்டைகள் இருந்தாலும், நிர்வாகத்திலே ஒரு சில குறைகள் இருந்தாலும், அவற்றை சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லி நல்ல எண்ணத்தை நிலைநிறுத்துவதற்காக தொழிற் சங்கத் தலைவர்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு முன்னாலே தொழில் மானியத்திலே பேசுவதற்கு நான் வாய்ப்பு பெற்றிருந்தேன். சென்ற சட்டசபையில் தொழில் மானியத்தில் நான் பேசியிருக்கிறேன். தொழில் மானியம் என்றால் ஒரு சுருசுருப்பு காணப்படும். என்னென்னவோ கேள்விகளெல்லாம் எழும். ஆனால் இப்பொழுது விவாதம் உப்பு சப்பு இல்லாமல் இருக்கிறது. (சோத்துக்கு உப்பு இல்லை என்றால் பிரயோசனப்படாது). அதுபோல் உப்பு இல்லாத சோறு மாதிரி விவாதம் சப்பு என்று இருக்கிறது. தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்கின்றவர்கள், தொழிலாளர்கள் இடத்திலே அதிக அக்கரை உள்ளவர்கள் ரொம்ப குறைவாக இருக்கிறார்கள் என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. புதிதாக திராவிட முன்னேற்ற கழகத்தினர் ஓரளவுக்கு இந்த முகாமிலே புகுந்திருக்கிறார்கள். அதில் வேலை செய்வதற்கு முன்வருவதற்கு ஆசையோடு இருக்கிறார்கள். இந்த ஆண்டில் இதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நினைக்கிறேன். தொழில் சங்கங்களுடைய நிலைமையை உணர்ந்து அவைகளுடைய சரித்திரத்தை அறிந்து, தொழிலாளர்களுடைய குறைகளை அறிந்து, அதிலே ஈடுபடுகிற முறையில்தான் மறு ஆண்டிலே கூட இந்த மான்ய விவாதத்தின் போது ஒரு சுருசுருப்பு ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என் நன்றியை சொல்லி இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, போன மந்திரி சபையில் இருந்ததைவிட உண்மையாகவே லேபர் டிபார்ட்மெண்டு இப்பொழுது திறமையாக வேலை செய்கிறது என்பதை இப்பொழுது இருக்கக்கூடிய சுமுகமான நிலைமை எடுத்துக்காட்டுகிறது. இப்பொழுது அதிகப்படியான தகராறுகள் இல்லாமல், சீக்கிரம் எல்லா தகராறுகளும் "ரெபெரன்ஸ்" செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, நமது தொழில் அமைச்சர் அதிக திறமையுடன் தொழிற் சங்கங்களை நடத்தியவர். ஆகவேதான் பீடி தொழிலாளர்கள் சட்டம், ஹோட்டல் தொழிலாளர்கள் சட்டம், தொழிலாளர்களுக்கு தேசீய நாட்களுக்கு லீவு கொடுக்கக்கூடிய சட்டம் போன்ற சட்டங்களையெல்லாம் கொண்டுவருவதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான சட்டங்கள் பல நல்ல அம்சங்களோடு கூடியவை.

கோயம்புத்தூர் போன்ற இடத்திலே பனியன் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அநேக "ஜின்னிங் பாக்டரிகள்" அங்கே இருக்கின்றன. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். அங்கே ஒரு லேபர் ஆபீஸர்தான் இருக்கிறார். ஆகவே, கோயம்புத்தூரில் அதிகப்படியாக ஒரு லேபர் ஆபீஸர் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுமட்டுமல்ல. அங்கு இருக்கக்கூடிய லேபர் ஆபீஸருக்கு மேஜை நாற்காலி கூட கிடையாது. ஒரு சிறிய கமிட்டி கூட்டம் நடத்த வேண்டுமென்றால்கூட பக்கத்தில் இருக்கும் முதலாளிகள் சங்கத்திலி



25th March 1958] [Sri N. K. Palanisami]

ருந்து மேஜை, நாற்காலிகள் வாங்கிக்கொண்டு வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதனால் தொழில் உறவு எந்த அளவுக்கு இருக்கும் என்பது நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்குவேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கவேண்டும்.

நம் தேசத்தில் பார்க்கிறோம், உற்பத்தி அதிகரித்துக்கொண்டே போகிறது. சர்க்கார் கணக்குப்படியே உற்பத்தி 20 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாக உயர்ந்திருக்கிறது. முதலாளிகளுக்கு லாபம் அதிகப்படியாக குறையவில்லை. லாபம் வந்துகொண்டுதான் இருக்கிறது என்று சர்க்கார் அறிக்கையிலேயே கூறப்பட்டிருக்கிறது. 1955-ம் ஆண்டில் 5,000 பாக்டரிகளில் 321,000 பேர்கள் வேலைசெய்திருக்கிறார்கள். 1957-ல் 293,000 பேர்கள் வேலை செய்திருக்கிறார்கள். ஆகவே, கிட்டதட்ட 28,000, 30,000 பேர்கள் ரிட்ரென்ச் செய்யப்பட்டிருக்கிறார்கள், இப்படி ரிட்ரென்ச் செய்யப்பட்டிருக்கிறவர்களுக்கு வேலை கொடுப்பதற்கோ, அல்லது வேறு தொழில்களை ஆரம்பிப்பதற்கோ சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கேட்கிறேன். மதுரை ஹார்வி மில்லுக்கு 1955-ல் வந்த லாபம் ரூ. 1 கோடி 14 லட்சம். 1956-ல் ரூ. 96½ லட்சம் தான் லாபம் வந்திருக்கிறது. அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், 26 நாட்களுக்கு மில்லை மூடிவிட்டார்கள். சரக்கு விற்பனையாகாமால் தேங்கிக் கிடக்கிறது என்ற காரணத்தைக் காட்டி 26 நாட்களுக்கு மில்லை மூடிவிட்டார்கள். அதே மாதிரி மதுரை மில்லில் 1955–56-ல் ரூ. 15½ கோடிக்கு விற்பனையாகி இருக்கிறது. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் லாபம் கிடைத்திருக்கிறது. 1957-ல் ரூ. 14 கோடி 84 லட்சத்திற்கு விற்பனையாகி இருக்கிறது. ரூ. 62 லட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. ஆனால், சரக்கு விற்பனையாகவில்லை, தேங்கி கிடக்கிறது என்று சொல்லி மில்லை 46 நாட்களுக்கு மூடிவிட்டார்கள். சமீபத்தில் டீசல் எண்ணெய்க்கு வரி போட்டதின் காரணமாக, அதனால் உற்பத்திச் செலவு அதிகமாகும் என்று சொல்லி டீசல் எண்ணெயில் ஓடக்கூடிய அநேக என்ஜின்களை மூடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது கொஞ்சம் சாக்கு கிடைத்தால் போதும், அதை வைத்துக்கொண்டு முதலாளிகள் தொழிலாளிகளின் மீது தாக்குவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதுதான் நமக்கு நன்றாகத் தெரிகிறது. மதுரையில் இன்னும் 11-10 p.m பல இடங்களில் இத்தகைய நிலைமை இருக்கிறது. மகா கணபதி மில் மூடப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சியில் பாக்கியலக்ஷ்மி மில் மூடப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் மில் மூடப்படும் தருவாயில் இருக்கிறது. அவர்களுக்கு லாபம் குறைந்திருக்கலாம். துணித் தேக்கமும் அதிகரித்திருக்கலாம். அதற்காக பல ஷிப்டுகளை பல மில்காரர்கள் நிறுத்தியிருப்பது சரியல்ல. அவ்வாறு செய்தவர்கள் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? துணிகள் மில்களிலேயே தங்கிக்கிடப்பதற்கு நிவாரணம் கொடுப்பதற்காக மத்திய அரசாங்கத்தார் 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதன் விளைவாக துணித் தேக்கம் ஓரளவு குறையும். தென்னிந்தியாவிலுள்ள மில்கள் எல்லாம் நூற்பு மில்கள். இந்த நிலைமையில் இந்த 15 கோடி ரூபாயினால் நம் ராஜ்யம் போதிய பயனடைய முடியாது. இங்கே நூற்பு மில்கள் அதிகமாக இருப்பதால்தான் துணிகளுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறார்கள். நடுத்தர ரகத் துணிக்கு இந்த வரியில் 1/3 பங்கும் மோட்டா ரகத் துணிகளுக்கு ½ பங்கும் குறைகிறது. எனவே துணிகள் மிகவும் மலிவான விலைக்கு விற்கப்படலாம். இந்த நிலைமையில் பல கோடி ரூபாய் பெறுமான கைத்துறித் துணிகள் தேங்கிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே 2 கோடி ரூபாய் பெருமான கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. அது இன்னும் அதிகமாகும். இதற்கு சரியான பரிகாரம் காணவேண்டுமானால் ரிபேட் தொகையை உயர்த்தவேண்டுமென்று மத்திய சர்க்காரை ராஜ்ய சர்க்கார் நிர்ப்பந்திக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார வெட்டு வரப்போகிறது. இங்கே இருக்கும் டீசல் எஞ்ஜின்களை எடுத்துவிடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை கண்டிப்பாக எடுக்கக்கூடாது என்று சர்க்கார் கட்டளையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூரில் கிட்டத்தட்ட 18 மில்கள் இருக்கின்றன. அந்த மில்களுக்கு சர்க்கார் வரிச் சலுகைகள் கொடுத்

[Sri N. K. Palanisamy] [25th March 1958

திருக்கிறார்கள். அந்த மில் முதலாளிகள் அரசியல் சட்டத்திற்கு மாறாக, பெண்களை மில்லில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள மறுக்கிறார்கள். இது சம்பந்தமாக 1958-ம் வருடம் நவம்பர் மீ 21-ந்தேதியன்று கனம் மந்திரியிடம் "ரெப்ரெஸென்டேஷன்" தரப்பட்டிருக்கிறது. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட அவார்டுக்கு மாறாக சுப்ரீம் கோர்டில் தீர்ப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை உழைக்கும் பத்திரிகையாளர்களை மட்டுமின்றி மற்றத் தொழிலாளர்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தத் தீர்ப்பு "அப்ஸர்ட்" ஆகவும் "பெர்வெர்ஸ்" ஆகவும் இருக்கிறது.

MR. SPEAKER : May I remind the hon. Member that he is passing remarks on the judgment of the Supreme Court. I would strongly advise him not to refer to it and pass adverse remarks.

SRI M. KALYANASUNDARAM : No such remarks.

MR. SPEAKER : He calls the decision of the Supreme Court absurd and perverse. I would ask him to withdraw these remarks or I would expunge them; he can't pass such remarks.

**SRI N. K. PALANISAMI : I withdraw them, Sir.** ஒரு தொழிலுக்குச் சொல்லப்படும் விஷயம் மற்ற தொழில்களுக்கும் பொருந்தும். ஆகவே ஒரு தொழில் சம்பந்தமாகக் கூறப்படும் தீர்ப்பு மற்ற தொழில்களையும் பாதிக்கும். ப்ளான்டேஷன்ஸுக்கு இருக்கும் "அவார்ட்"-ஐயும் இந்தத் தீர்ப்பு பாதிக்கக்கூடும். "வேஜ் போர்ட்" சம்பந்தமாகவும் நெருக்கடி நிலைமையை இந்தத் தீர்ப்பு ஏற்படுத்தக்கூடும். ஆகவே தொழில் கோர்ட்டின் "அவார்ட்"-ல் சுப்ரீம் கோர்ட் தலையிடக்கூடாது என்று விதிக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு ராஜ்ய அரசாங்கம் சிபாரிசு செய்யவேண்டும்.

தொழில் தகராறுச் சட்டத்தின் 10 (a) விதியின் பிரகாரம், ஒரு "எஸென்ஷியல் ஸெர்வீஸ்" ஆக இருக்கும் தொழிலில் தகராறு ஏற்பட்டால் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்தவுடன் தகராறை அட்ஜுடிகேஷனுக்கு விடவேண்டும். சென்னை மின்சாரத் தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த சர்க்கார் என்ன செய்திருக்கிறது? ஊருக்கெல்லாம் உபதேசம் செய்யும் சர்க்கார் என்ன செய்திருக்கிறது? நியாயப்படி தகராறை சர்க்கார் அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருக்கவேண்டும். ஆனால் அரசாங்கத்தார், லேபர் கமிஷனர் தலைமையில் ஒரு "நெகோஷயேஷன் கமிட்டி"யை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியின் மூலம் தகராறை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். நெகோஷியேஷன் கமிட்டியில் பேச்சு முறிந்துவிட்டது என்று சொன்னால் அதற்குப் பிறகு அந்த தொழிலாளர்கள் சர்க்காரிடம்தானே வரவேண்டும்? 15-வது தொழிலாளர் மகாநாட்டில் என்ன தீர்மானிக்கப்பட்டது? இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், ஒரு தொழிலாளிக்குத் தேவைப்படும் துணிகள், உணவுச் செலவு இதர வீட்டுச் செலவுகள் முதலியவைகளைக் கணக்கிட்டு ஒரு "நார்ம்" நிர்ணயிக்கவேண்டும் என்றும் அதற்குப் பிறகு அதன் அபிப்ராயம் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் பார்த்தால் மின்சாரத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 42 ரூபாய் கொடுக்கப்படவேண்டும். ஒரு மின்சாரத் தொழிலாளருக்கு இப்போழுது 18 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை 36 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் மொத்தம் 40,000 பேர்தான். அவர்களில் மிகக்குறைவான பேர்களுக்கே உத்தியோகம் பெர்மனென்ட் ஆக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் தாற்காலிக ஊழியர்களாக இருக்கிறார்கள். எல்லோரையும் "பெர்மனென்ட்" ஆக்கவேண்டுமென்று அவர்கள் லேபர் ஆபீசர் விசாரணையின்போது சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் இந்த நியாயமான கோரிக்கைகளையெல்லாம் சரிவரப் பரிசீலித்து ஒரு நியாயமான முடிவிற்கு ஏன் வரக்கூடாது?



25th March 1958] [Sri N. K. Palanisami]

கோயம்புத்தூரில் 40,000 "ஜின்னிங் பாக்டரி" தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மேலும், ஏராளமான கட்டிடத் தொழிலாளர்களும் ஏராளமான தீக்குச்சித் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் சர்க்கார் ஏன் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கக்கூடாது. 1945-ம் வருஷம் நிர்ணயித்த குறைந்த பட்சக் கூலிகள்தான் இப்போதும் இருக்கின்றன. தொழிலாளர்களின் 15-வது மகாநாட்டில், "நார்ம்" நிர்ணயித்து குறைந்த பட்சக் கூலிகளை நிர்ணயிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. சர்க்கார் அவ்வாறு ஏன் செய்யக்கூடாது? மேலும் கோயம்புத்தூர் போன்ற இடங்களில் ஏராளமான மோட்டார் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் ஒரு 'வேஜ் போர்ட்'-ஐ அமைத்து அவர்களுடைய குறைந்தபட்சக் கூலியையும் ஏன் நிர்ணயிக்கக்கூடாது? இதைச் செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தொழிலாளர்களை பாதிக்கும் விஷயங்கள்பற்றி இந்த மாநிலத்தில் மொத்தம் 8,572 கம்ப்ளெயின்டுகள் லேபர் ஆபீசருக்கு வந்திருக்கின்றன. அவைகளில் 3,541 பழிவாங்குதல், டிஸ்மிஸல் போன்றவைகள். அவ்வாறு டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மறுபடியும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு மறுபடியும் வேலை கிடைக்கச் செய்வதற்கு சர்க்காரும் நடவடிக்கை எடுக்கவில்லை; டிஸ்மிஸ் செய்யப்பட்டோ ஸஸ்பெண்ட் செய்யப்பட்டோ இருக்கும் தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை கொடுக்கப்படவில்லை. இதைப் பார்க்கும்போது சர்க்கார் தொழிலாளர்கள் பக்கம் இல்லை, முதலாளிகள் பக்கம்தான் இருக்கிறதென்று தெரிகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : புள்ளிவிவரங்களை கனம் அங்கத்தினர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். புகார்கள் மொத்தம் 8,000-க்கு மேற்பட்டவை. அவைகளில். "டிஸ்மிஸல்" பற்றிய புகார்கள் மொத்தம் 3,000-க்கு மேற்பட்டவை. தொழிலாளர்களை முதலாளிகள் டிஸ்மிஸ் செய்தார்களே தவிர, அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டதற்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை. அது அவர்கள் செய்தது ஆகும், நாங்கள் செய்தது இல்லை.

SRI M. K. MARIAPPAN : கனம் சபாநாயகர் அவுர்களே, கனம் தொழில் அமைச்சர் பிரேரேபித்திருக்கும் மானிய கோரிக்கையை ஆதரிக்கிறேன். ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அந்நாட்டில் கல்வியும் கைத்தொழில்களும் அபிவிருத்தியடையவேண்டும். கைத்தொழில்கள் எந்த முறையில் நடத்தப்படவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமான விஷயம். இப்பொது நமக்குக் கிடைத்திருக்கும் தொழில் அமைச்சர், தொழிலாளர்கள் நலனில் மிகவும் அக்கறை கொண்டவர். அவர் தொழிலாளர்களின் க்ஷேமநலன்களை நன்கு அறிந்தவர். அவர்களுடைய க்ஷேமநலன்களில் அவர் மிகுந்த அக்கறை செலுத்தி வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

எங்கள் பகுதியில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இல்லையென்றாலும், 11
விவசாயிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அதுவும் ஹரிஜன விவசாயி a.
கள். அந்த ஹரிஜன விவசாயிகளுக்குத் தொழில் விவசாயம்தான். அந்தத் துறையில் அவர்களுக்குக் கூலி நிர்ணயம் இன்னது என்று நிர்ணயிக்கப்படவில்லை. எல்லாத் தொழில்களில் வேலை செய்பவர்களுக்கும் கூலி நிர்ணயம் ஏற்பட்டிருக்கும் காலத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்தால்தான் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

அதுபோன்ற ஹரிஜன சமுதாயம் முன்னேறவேண்டுமானால் தொழிற்துறையில் அவர்கள் முன்னேற்றம் காணவேண்டும். தொழிற்துறையில் முன்னேற்றம் கண்டால்தான் அவர்கள் பொருளாதாரம் உயரும். பொருளாதாரம் உயர்ந்தால்தான் ஹரிஜன மக்களுடைய வாழ்க்கையும் முன்னேற்றம் அடையும். ஆகவே, எங்களுடைய தாலுகாவில் அந்த மாதிரி எந்த விதமான தொழிற்சாலையும் கிடையாது. இருப்பினும் எங்களுடைய தாலுகா மலைப் பிரதேசம், ஆதலால் அங்கு மூங்கில் மரங்கள், சந்தன மரங்கள், பூவரச மரங்கள், கொன்னை மரங்கள், ஆவாரம் மரங்கள், கல்நார் மரங்கள் போன்றவை இருப்பதால், அவைகளிலிருந்து கிடைக்கும் பொருள்

களை வைத்துக்கொண்டு பெரிய தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்த முடியாவிட்டாலும் சிறிய தொழிற்சாலைகளையாவது ஏற்படுத்தி ஆங்காங்கே தொழில் வளம் ஏற்படும்படி செய்யலாம். அந்த முறையில் தொழில் வளம் பெற்றால் சிறு சிறு பிராந்தியங்களிலே மக்களுடைய குறைகள் நீங்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹரிஜன சமுதாயம் தொழிற்துறையைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறது. 5 சதவிகிதத்தினர்கூட மிராசுதார்களாக இருக்கமாட்டார்கள். ஏதோ ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். மற்றவர்கள் அனைவரும் தொழிலை நம்பிக்கொண்டிருப்பவர்கள். அதிலும் சர்க்காரால் அங்கீகாரம் பெற்று நடைபெறும் தொழிற்சாலைகளில் ஹரிஜனங்களுக்கென குறிப்பிட்ட சதவிகிதம் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்தால் ஹரிஜன மக்கள் அந்தத் தொழிற்சாலையில் சேர்ந்து அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ளமுடியும். நல்ல முன்னேற்றத்திற்கு வரமுடியும். அப்படிச் செய்யவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

தொழிற்சாலையை ஏற்படுத்தும் நேரத்தில், அப்படி சிறு சிறு தொழிற்சாலைகளாக மோட்டார் தொழிற்சாலை போன்றும், ஹோட்டல் தொழிற்சாலை போன்றும் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளிலும் ஹரிஜன மக்களிலிருந்து அதிகப்படியானவர்களை நியமித்தால்தான் அவர்களிடையே முன்னேற்றம் காணமுடியும். அதுதவிர, ஹரிஜன மக்கள் பொருளாதாரத்தில் உயர வேண்டுமானால் என்னுடைய அபிப்பிராயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மூங்கில் மரங்கள் இன்னும் இதர மரங்கள் வெட்டுவதும், காட்டிலாகாவில் கொடுக்கக்கூடிய காண்டிராக்டுகளும், ரோடுகள் அமைப்பது, பாலம் கட்டுவது, ஏரி மராமத்து செய்வது, இவை சம்பந்தப்பட்ட லேபர் கண்டிராக்ட்களெல்லாம் ஹரிஜனங்களுக்கே கொடுக்கப்படவேண்டும் என்ற முறையில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, அதிலுள்ள ஹரிஜனங்களுக்கு சர்க்காரிலிருந்து கடனைக் கொடுத்து, சர்க்காருடைய மேற்பார்வையில் அந்தத் தொழிலை நடத்தி அதில் வரும் கனிசமான லாபத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு மூலதனத்தை சர்க்கார் எடுத்து வந்தால் அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். அம்மாதிரி எடுக்கும் கண்டிராக்டுகள் எல்லாம் அவசியம் ஹரிஜனங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று சர்க்காரில் ஒரு சட்டம் நிர்ணயித்தால் அவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடையமுடியும். அவர்கள் தொழிற்துறையில் முன்னேற வசதி காண முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, தொழிலாளர்களுடைய நலனில் அக்கறைகொண்ட அமைச்சர் அவர்கள் எங்களுடைய தாலூகாவில் மூங்கில் வளம் அதிகம் உள்ளதால் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு என்ன என்ன சாதனங்கள் வேண்டுமோ அவையனைத்தும் எங்களுடைய தாலூகாவில் இருக்கின்றன. சுமார் பத்தாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் நாளொன்றுக்கு கூலி கிடைக்காமல், தொழில் கிடைக்காமல் அவதி உறுகிறார்கள். அம்மாதிரி காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் பத்தாயிரக்கணக்கான மக்களுக்குத் தொழில் கிடைக்கும். அதனால் மற்றவர்களிடத்தில் அடிமைகளாக இருந்து அவர்களுடைய இழிவை அதிகப்படுத்திக்கொள்ளாமல் தாங்கள் பொருளாதாரத்துறையில் உயருவதற்கு ஏதுவாகும். சர்க்கார் இதிலும் அக்கறை செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்களுடைய பிராந்தியத்தில் நெருப்புக் குச்சி செய்யும் அளவுக்கு மரங்கள் கிடைக்கின்றன. அவைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. எங்கள் தாலூகாவில் ஒரு நெருப்புப் பெட்டித் தொழிற்சாலையை அமைத்துக்கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தொழிலமைச்சர் கொண்டுவந்த இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.





**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** சபைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் தொழிலாளர் மான்யத்தை வரவேற்று சிற்சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் மந்திரி அவர்கள் தொழிற்துறையிலே நல்ல அனுபவமும், ஆர்வமும் 11-27 a.m. கொண்டு வேலை செய்வதோடு மட்டும் அல்லாமல் இப்பொழுது அவர்களுடைய காலங்களிலே தொழிலாளரின் நிலைமை மிக உயர்ந்து நல்ல நிலைமையிலே இருக்கிறது. பூசல் ஒழிந்தது மட்டும் அல்ல; தொழிற்சாலையில் சுமுகமாக வேலை நடப்பதைப்பற்றியும் மிகவும் அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே மிகவும் ஆர்வமாக வேலை செய்வதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

இப்பொழுது மற்றெல்லாத் தொழிற்துறைகளிலும் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு ஓரளவுக்கு கூலி நிர்ணயங்கள் செய்து அந்தந்த துறையிலே வேலைசெய்யக்கூடிய தொழிலாளர் நல்ல நிலைமையில் இருந்துவரக்கூடிய அளவுக்கு நம்முடைய ராஜ்யத்தின் பொருளாதார நிலைமையை உத்தேசித்து அவர்களுக்குக் கூடுமான வரையிலும் வசதி செய்து கொடுத்து வந்திருக்கிறோம். இப்பொழுது முக்கியமாக, இந்தத் தேசத்தின் முதுகெலும்பாக உள்ளது விவசாயத் தொழிலும், நெசவுத் தொழிலும் தான். இன்றைக்கு அத்தொழிலாளர்கள் கவனிப்பாரற்று இன்றைக்கு நாட்டில் அனாதைகளாக, ஏழைகளாக நடமாடிக்கொண்டிருக்கும் நிலைமையிலே நாம் இந்த ராஜ்யத்திலே வைத்திருக்கிறோம். அவர்களைப்பற்றி இங்கேகூட பெரும்பாலும் அக்கறை செலுத்தவில்லை என்றே நினைக்கிறேன். கனம் அங்கத்தினர்கள்கூட, ஒரு நாடு முன்னேற்றம் காணவேண்டுமென்றால், விவசாயிகள், நெசவாளிகள் நிலை உயரவேண்டும். மற்ற தொழிற்சாலைகளில் 8 மணி நேரம் வேலை செய்தால்போதும் என்ற நிர்ணயம் இருக்கும்போது, நெசவுத் தொழிலில் அவன் நாளைக்கு சுமார் 18 மணி நேரம் வேலை செய்துகொண்டிருக்கிறான், அவனுடைய வருமானம் என்னவென்று பார்த்தால் நாளொன்றுக்கு 8 அணா முதல் 12 அணா வரையில்கூட வருமானம் இல்லை. அதைக்கொண்டு அவனும், அவனை நத்தி வாழுகின்றவர்களுடைய ஜீவனமும் அடங்கியிருக்கிறது.

ஒரு நெசவுசெய்ய வேண்டும் என்றால், அவன்கீழ் குறைந்தது பத்து பேர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். முதலில் பாவு வார்ப்படம் போட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்புறம் நூல் இழை கொடுக்க ஒரு ஆள் வேண்டும். மற்ற கருவிகளைக் கொடுக்கச் சில ஆட்கள் வேண்டும். ஆகவே ஒரு நெசவாளிக்கு 16 உப தொழிலாளர்கள் உதவி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதில் வரக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு இத்தனை பேர்களும் சாப்பிடவேண்டியிருக்கிறதென்றால் ஒரு ஆளுக்கு பத்தணா, பதினைந்தணா கூடக் கிடைக்கமாட்டேன் என்கிறது. அதோடு இன்றைக்கு மில் துணிக்கு ஒரு மூனே வரி வந்துவிடுகிறது. அதனால் மில் துணியின் விலை நான்கணா, ஐந்தணா குறைந்துவிட்டது. இதனால் கைத்தறி துணி பல லட்சக்கணக்கான கஜங்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதோடு கைத்தறித் துணிக்குக் கொடுத்து வந்த ரிபேட்டும் $1\frac{1}{2}$ அணாவாக இருந்தது, இப்போது 1 அணாவாக்கப்பட்டுவிட்டது. அதனால் எட்டு கஜம் என்றால் நான்கணா குறைந்துவிடுகிறது. மில் துணி விலையும் குறைந்து இருக்கிறது. ஆகவே இன்றைக்கு ஒரு கஜம் மில் துணிக்கும், ஒரு கஜம் கைத்தறித் துணிக்கும் எட்டணா வித்தியாசம் ஏற்படுகிற காரணத்தினால் கைத்தறித் துணி தேக்கம் அதிகமாகி பல தொழிலாளர்கள் இன்று பட்டினி கிடக்கிற நிலைமை உண்டாகிவிட்டது. நெசவுத் தொழிலாளர்களுக்கு ஏதாவது வசதி இருக்கிறதா என்றால் கிடையாது. நல்ல ஆஸ்பத்திரி கிடையாது. கல்வி வசதி கிடையாது. ஒரு நாளைக்குப் பன்னிரண்டணாகூட வருமானம் இல்லாத நெசவாளி எப்படி தன் பிள்ளையைப்படிக்க வைக்கமுடியும். ஆகவே அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். பலகோடிக்கணக்கான மக்கள் நெசவுத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைக்கு இலவசக் கல்விச் சலுகை அளிப்பதோடு தொழில் வாய்ப்பு வசதியைக் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த

[Sri M. R. Kandaswami Mudaliyar] [25th March 1958

நெசவுத்தொழிலைப்போலவே இன்றையதினம் நம் நாட்டில் பெரும்பாலான தொழிலாளர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பார்கள். அந்த தொழிலாளர்களைப் பாருங்கள். இதர தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் 70 ரூபாயிலிருந்து, 250 ரூபாய் வரைக்கும் கூலி இன்றையதினம் கிடைக்கிறது. ஆனால் இன்றையதினம் விவசாயக் கூலிகள், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற கூலிகள் இவர்களுக்குத்தான் மிகமிகக் குறைவாகக் கூலி கிடைக்கிறது. விவசாயியை எடுத்துக்கொண்டால் எட்டணா, பத்தணா. அதுவும் மாதத்தில் 20 நாட்கள்கூட சரியாக வேலை கிடைப்பது இல்லை. அவர்களுடைய குழந்தைகளை எப்படிப் படிக்கவைக்கமுடியும் என்று கேட்கிறேன். ஆகவே இவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கொடுக்கவேண்டும். பொருளாதாரத்துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று. விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்வதைப்பற்றி பலர் பேசினார்கள். அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் நாட்டின் நிலைமையை உணர்ந்து செய்வதைச் செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவில் ஒவ்வொருவிதமாக இன்றைக்கு விவசாய வேலைகள் நடைபெறுகிறது. தஞ்சாவூர், திருச்சி போன்ற ஜில்லாக்களில் கூலி நிர்ணயம் செய்வது பொருத்தமாக இருக்கலாம். சேலம் போன்ற வறண்ட ஜில்லாக்களில் ஒரு ஏக்கருக்கு நிலச்சொந்தக்காரனுக்கே 100 ரூபாய் வரமாட்டேன் என்கிறது. பாறையையும், மலையையும் தோண்டி விவசாயம் செய்யப்படுகிற நிலம் அது. அதோடு ஒரு மகசூல் கண்டுபிடிப்பதற்குள் உரம் அடிப்பது, நிலம் உழுவது, விதை விதைப்பது, நடுவது, களைபிடுங்குவது, என இப்படியாகப் பலதரப்பட்ட வேலைகள் நடைபெறுகின்றன. வேலைக்கு ஏற்றாற்போல் கூலி கொடுக்கப்பட்டும் வருகிறது. ஒரேவிதமாக நிர்ணயம் செய்துவிடுவது என்பது சாத்தியமில்லாத காரியம்.

ஆகவே சர்க்கார் இவ்விஷயத்தை நன்கு கவனித்துச் செய்யவேண்டும். அவசரப்பட்டு எதையாவது செய்துவிட்டால் விவசாயிகளுக்கு நன்மை அளிப்பதைவிட இது பெரிதும் தீங்கை விளைவித்துவிடலாம். நம்முடைய சட்டங்கள் விவசாயிகளுக்கு எவ்விதத்திலும் பாதகமாக இருக்கக்கூடாது. ஆகையால் நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக செய்கிற காரியங்களை எல்லாம் நன்கு கவனித்துச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோக சமீபத்தில் சூரமங்கலத்தில் இருக்கக்கூடிய சுண்ணாம்புத் தொழிற்சாலையை மூடுவது என்பதாக அங்குள்ள தொழிலாளர்களுக்கு எல்லாம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 850 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் வெளியேற்றுவது என்றால் அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமை என்ன ஆவது ? ஆகவே சீக்கிரமே சர்க்கார் அதை எடுத்துக்கொள்வதா, தனியாரிடத்தில் ஒப்படைப்பதா என்பதை முடிவுசெய்து அந்தத் தொழிலாளர்கள் வெளியேறித் திண்டாடாத நிலைமையை உண்டுபண்ணவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன், அடுத்தபடியாக . . .

* **Sri K. ANBAZHAGAN**: மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், தொழில் நிலையங்கள் பற்றிய மானியத்தை ஒதுக்குவதில் வெட்டுப் பிரேரணை ஒன்றைத் தருவதன் மூலம் மாற்றுக் கட்சிகள் தங்கள் கருத்துகளை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு உள்ள நிலைமையில் நான் இங்கே பேசுகின்றேன். வெட்டுப் பிரேரணையின்மூலம், தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய பலப் பல நலன்களையும் மாற்றுக் கட்சியினர் எடுத்துச் சொல்வதின் காரணமாக, ஆளும் கட்சியினைச்சேர்ந்த பலரும் பல கருத்துக்களை எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே தொழிலாளர் இயக்கத்தில் தொடர்புகொண்ட ஒருவர் தொழில் இலாகா அமைச்சராகப் பணியாற்றுவது—ஆட்சி பீடத்தில் தொழிலாளர் நலத்தை உணர்ந்தவர் ஒருவர் இருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும் ஆட்சி பீடத்தின் பொதுக் கொள்கையைப் பொறுத்துதான் தொழில் மந்திரிக்கு தொழிலாளர்களின் நலனில் அதிகமான அக்கறையும், ஆர்வமும் இருந்தாலும்கூட அவர் செயல்பட முடியும் என்பதை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



25th March 1958] [Sri K. Anbazhagan]

மூன்று கோடி மக்கள் வாழும் நமது தமிழ் நாட்டில் 1957-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி 5 லட்சத்து 3,000 பேர்கள் தாம் இப்படி ஏதாவதொரு குறிப்பிடத்தக்க தொழில்துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிற வகையான தொழிலில் இருப்பவர்களைக் சேர்த்து கருதினும் ஏறத்தாழ ஆறு லட்சம் மக்களுக்கு மேல் குறிப்பிடத்தக்க தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாகயில்லை.

* **The Hon. Sri R. VENKATARAMAN**: பாக்டரி சட்டத்தின் கீழ் ரெஜிஸ்டர் செய்பவர்கள் ஷாப் ஆக்ட்படி ரெஜிஸ்டர் செய்பவர்கள்தான். பாக்டரி ஆக்ட்படி ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்றால் பவர் உபயோகப்படுத்தி 10 பேர்களுக்கு வேலை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இருபது பேர் பவர் இல்லாமல் இருக்க வேண்டும். பெரிய தொழிற்சாலைகளுக்குத்தான், இது.

**Sri K. ANBAZHAGAN**: பெரிய தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருப்பவர் 11
கள் ஐந்து லட்சம் பேர்கள். தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 70,000 பேர். ஆகவே, இந்தக் கணக்கைக் இந்த நாட்டில் வாழும் 3 கோடி மக்களுடன் ஒப்பிடுகிறபோது இந்த நாட்டில் மிகவும் பெரும்பாலான மக்களுக்கு இவ்வகை தொழில்துறையில் இடம் தேடித்தர வேண்டியது அவசியம் இந்த நாட்டை ஆள்பவரைச் சார்ந்திருக்கிறது என்பது விளங்கும். தொழில்துறை வாய்ப்பு, ஐம்பதில் ஒரு பங்கு மக்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய அளவுதான் தொழிற்சாலைகள் இந்நாட்டில் இருக்கின்றன. தொழில்துறை வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள், 'எம்ப்ளாய்மென்ட் எக்ச்சேன்ஞ்' இன்றையதினம் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலிருந்து மாநில அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கு உரியதாகியிருக்கிறது. நிர்வாகப் பொறுப்பை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்டளவில், அது என் போன்றவர்களால் வரவேற்கப்படுவதாகும். மாநில அரசாங்கத்திற்கு அது ஒரு செலவுக் கணக்காகக்கூடும். எனினும் நிர்வாகப் பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு இருக்குமானால்தான் எவ்வளவு பேர்களுக்கு தொழில்துறையில் வாய்ப்பு அளிக்க முடியவில்லை என்பதை மாநில அரசாங்கம் அவ்வாறு உணர்ந்து அதற்கான திட்டங்களைத் தீட்ட முயற்சிக்கக்கூடும். அந்த வேலை தேடித் தரும் நிலையத்தில் 57-ம் ஆண்டில் ஏறத்தாழ 160,000 பேர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 24,000 பேர்களுக்குத்தான் வேலை தேடித்தரப்பட்டிருக்கிறது. வேலை தேடித்தரும் ஸ்தாபனம், விண்ணப்பித்துக் கொள்கிறவர்களில் ஏறத்தாழ பாதிப் பேர்களுக்காவது வேலை தேடித்தரும் வாய்ப்பு இருந்தால்தான் அந்த ஸ்தாபனமும் பயன்பட்டு மக்களின் குறையும் நீங்க முடியும். தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளும் என்ற தலைப்பில் இங்கு பேசும்போது, பாக்டரிஸ் அண்ட் லேபர் என்று ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள கருத்துக்கள் மட்டுமல்லாமல் வேறு தொடர்புள்ள கருத்துக்களும் பேசப்படத்தக்கனவாகும். இவற்றிற்குச் சில அடிப்படையான கொள்கைகள் இருக்கிறது. விவசாயத்துறையிலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருப்பவர்களின் குறைகள் பாக்டரி சட்டத்தின் கீழ் வராவிட்டாலும்கூட பொதுவாக அவர்களும் தொழிலாளர் என்ற காரணத்தினால் அவர்கள் நிலையும் விவாதத்திற்குரியதாகிறது. சற்று முன் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் விவசாயத் தொழிலாளர்களுக்கு நாட் கூலி தீர்மானிக்கப்படவேண்டுமென்றும் அதேபோல் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் எடுத்துக்காட்டி வலியுறுத்தியதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். அடுத்து, உடனடியாக அவர்களின் அடிப்படை நாட் கூலி தரம் நிர்ணயிக்கப்பட்டால்தான் சமுதாய வாழ்க்கையில் பொதுவாக ஏற்படவேண்டிய முன்னேற்றத்தை நாம் காணமுடியும். குறிப்பாக இந்நாட்டில் விவசாயத்துறையில் ஏற்பட்டிருக்கிற பல போராட்டங்கள், கையேர் வாரந்தார், மாட்டேர் வாரந்தார், குத்தகைதார், முதலானோர் பெற்றிருக்கிற உரிமைகள் அந்நிலத்திற்கு உரியவர்களால் பறிக்கும்போது ஏற்படுகிற தகராருகள் நாட் கூலிக்கு வருகிறவர்கள் மிகக் குறைந்த கூலிக்கு வேலை செய்ய வருவதால்தான் வளருகிறது. ஆகவே, குறைந்த அளவு

நாட் கூலி கொடுத்து நிறைய பலன் பெறும் வாய்ப்பு இருப்பதினால்தான் நிலத்திற்கு உச்சவரம்புகட்டத் தடை ஏற்படும் சூழ்நிலை வளருகிறது. ஆகவே, நாட்கூலிக்கு வருபவர்களில் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டால்தான் வேறு எந்த சீர்திருத்தங்களும் கொண்டு வரமுடியும். தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலியைத் தீர்மானித்த வகையில், 54-ம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு ஒருவருக்கு 689 ரூபாய் சராசரி வருமானம் கிடைத்தது, 55-ம் ஆண்டில் 888 ரூபாயாயிற்று, 58-ல் அது 1,016 ரூபாயாயிற்று என்று புள்ளி விவரம் காட்டப்படுகிறது. இந்தப் புள்ளி உயர்வுங்கூட தொழிலாளர்களாக இருப்பவர்களின் இன்றைய வாழ்க்கை நிலையை உயர்த்தியிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக உயர்த்தியிருக்கிறது என்று கூற முடியாது. காரணம், வாழ்க்கைத் தரத்தை கட்டுப்படுத்துவதற்கான முக்கியமான கருவியாக இருப்பது, விலைவாசிகளின் நிலையாகும். விலைவாசியைப் பார்க்கும்போது, 54-ம் ஆண்டிலிருந்து 56-ம் ஆண்டிற்குள் விலைவாசிகள் ஏறித்தானிருக்கிறது. இறங்கிவிடவில்லை. இப்பொழுது மேலும் சில தொழில்துறைகளில் அடிப்படை கூலி தீர்மானிக்கப்பட்டிருப்பதால் மொத்தத்தில் 1,016 என்று புள்ளியை காட்ட முடிகிறதே தவிர, தொழிலாளர்கள் இன்றைய தினம் பெறும் ஊதியம் அவர்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்க இல்லை. ஆயிரத்து பதினாறு என்ற புள்ளியை பார்க்கும்போது அது பெரியதாகத் தெரியலாம். ஆனால் அது, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அளவு கூட ஆகவில்லை. அந்த அளவு வருமானத்திற்குக்கூட வாய்ப்பில்லை என்று சொன்னால், தொழிலாளர்களாக இருப்பவர்கள், கட்டுப்பாடான தொழிற்சங்கத்தை நடத்துபவர்கள், நுண்ணறிவு பெற்று திறமையாக செயலாற்றுபவர்கள், அவர்களின் நிலைமையே இப்படி பரிதாபகரமாக இருந்தால் நாட்டின் சூழ்நிலை எவ்வளவு தாழ்ந்திருக்கிறது என்பதை இதிலிருந்து நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மற்றொன்று, இத்தகைய நாட்கூலி நிர்ணயிக்கும்போது, ஒரு குடும்பத்திற்கு மூன்று பேர்கள் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. அப்படித் தீர்மானிப்பதின் மூலம் அவர்களுக்கு நாம் சரியான ஊதியம் அளிக்கத் தவறி விடுகிறோம். ஏனெனில், சாதாரணமாக, ஒரு தொழிலாளி குடும்பத்தில் கணவன், மனைவி, தவிர இரண்டு குழந்தைகளாவது இருக்கும். ஆகவே, மூன்று பேர்கள் என்று வைத்துத் தீர்மானிப்பது நியாயமாகாது என்பதால் நான்கு பேர் என்ற அடிப்படையில் தீர்மானிக்கவேண்டும். அடுத்து, தொழிற்சாலைகளில் பல காரணங்களால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களின் எண்ணிக்கை, கடந்த இரண்டு ஆண்டு காலமாகப் பார்க்கும்போது பெருகியிருக்கிறது. அங்ஙனம் விபத்துக்கள் பெருகுவதற்கு, இரண்டு முக்கிய காரணங்கள் இருக்க முடியும். ஒன்று, நிர்வாகத்தை நடத்துபவர்கள், நான் குறிப்பிடுவது அரசாங்க நிர்வாகத்தையல்ல, ஆலைகள், அல்லது தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்கள் தங்கள் லாபத்தை மட்டும் கருதி அலட்சியமாக நடந்துகொள்ள வேண்டும். அல்லது அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தங்கள் உயிரைப்பற்றிக் கூட கவனிக்காமல், கவனக்குறைவாக வேலை செய்ய வேண்டும். இதில் எதுவாயிருந்தாலும் அது நன்கு ஆராயப்படவேண்டும். விபத்திற்கு எது காரணமாகிறது ? அது, பொதுவாகவே வேலை செய்பவர்களின் உடல்நலக் குறைவா ? போதுமான கவனத்தோடு வேலை செய்யாததன் விளைவா ? அல்லது தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு வசதி அளிக்கப்படுவதில்லையா ? அல்லது உற்சாகம் அற்ற தன்மையின் விளைவா ? அல்லது கவனக் குறைவால் ஏற்படுகிறதா ? கவனக்குறைவென்றால், அதற்கு யார் காரணம் ? என்பனவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இதைக் குறித்து எனக்குத் தோன்றுகிற ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். விபத்துகள் ஏற்படாத தொழிற்சாலைகளுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்குவதின் மூலம் அல்லது விபத்துக்கள் ஏற்படாமல் நிர்வாகம் நடத்துகின்றவர்களை சிறப்பிப்பதன் மூலம் விபத்துக்களை தவிர்ப்பதற்கு ஊக்கமளிப்பதற்கான ஒரு முறையைக் கையாள வேண்டும். விபத்துகளுக்கு ஆளாகிற தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களுக்குத் தரப்படும் நஷ்டயீடு உயர்த்தப்படவேண்டும். தொழிலாளர்களின் உழைப்பு உற்பத்





திக்குப் பயன்படுகிறது அதே போன்று தொழிற்சாலை உரிமையாளரின் லாபத்திற்கும் பயன்படுகிறது. விபத்திற்கு ஆளாகியவர்களுக்கு எக்காரணத்தினால் விபத்து ஏற்பட்டாலும் ஏதோ குறைந்தபட்ச ஈடு தொகை தந்து விடுவதினால் மட்டும் உண்மையான திருப்தி ஏற்பட்டுவிடுவதாக நான் நினைக்கவில்லை. மாறாக, அளிக்கப்படும் ஈட்டுத்தொகை கொடுக்கும் பணம் அதிகமாக இருக்குமானால் நிர்வாகத்தை நடத்துபவர்கள் நிர்வாகத்தைக் கவனமாக நடத்துவார்கள். அத்துடன் விபத்துக்கு ஆளான தொழிலாளியும், அவனது குடும்பமும் ஓரளவு கஷ்டத்திலிருந்து விடுதலை பெற்றவராவார்கள். இப்படிச் செய்வதின் மூலம் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். மற்றொன்று பஸ் அல்லது ஆட்டோமோபைல் துறையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களை பற்றியும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தொழில் செய்கையில் விபத்து விளையும்போது அவர்களால் பொது மக்கள் பலர் பலியிடப்படுகிறார்கள். ஒருவரின் தவறு காரணமாகப் பலப் பலர் ஆபத்திற்கு ஆளாகும் முறையில் இவர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அவர்கள் எந்தவிதமான தவறும் செய்யாமல் அத்தொழிலை கவனத்துடன் செய்ய அவர்களுக்கு சிறப்பு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். போனஸ் அல்ல நான் குறிப்பிடுவது, போனஸ் என்றால் அது லாபத்தில் இருந்து கிடைக்கும் ஒரு பங்காகும். மேலும், அது தொழிலாளர்களின் உரிமையும் கூட ஆகவே, பஸ் ட்ரைவர்களுக்கும், அதுபோன்ற தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும், பிறருக்கும் தம்மால் விபத்து ஏற்படாமல் பாதுகாக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு சற்று அதிகப்படியான ஊதியம் கொடுக்க வேண்டும். தவறு செய்யாமல் இருப்பதற்கு எச்சரிக்கையாக, தவறு செய்யாமல் இருக்க ஒரு தூண்டுகோலாக அவர்களுக்கு தவறு செய்யாமல் கடமையைச் செய்பவர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பு ஊதியம் கொடுக்க வேண்டும். அவர்களின் ஊதியத்தை அவ்வாறு உயர்த்துவது என்பது நாம் சமுதாயத்திற்கு செய்யும் ஒரு கடமையாகும். மற்றொன்று, தொழிலாளர்களுக்காக சட்டங்கள் கொண்டு வருகிற இக்காலத்தில் சில குறிப்பிட்ட தொழில்களுக்கு இன்னும் சட்டம் கொண்டுவரப்படவில்லை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பு வேலை செய்பவர்களின் பாதுகாப்பிற்கு சட்டம் கொண்டு வரவேண்டும். அத்தொழில் அவர்கள் நெடுங்காலம் வேலை செய்வதால் அவர்களின் கண்கள் பழுதாகிவிடுகின்றன. அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குச் சட்ட மூலம் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். மற்றும் பீடித் தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டுவருவது போன்ற சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் சட்டம் இயற்றப்படவேண்டும்.

சிறப்பாக தீப்பெட்டி, தீக்குச்சித் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான நல்ல சட்டப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் நாள் முழுவதும் வேலை செய்யவில்லை என்றாலும் ஓய்வு நேரங்களில்தான் வேலை செய்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் தீர்மானிக்கப்பட்டாக வேண்டும். அடுத்து தோல் பதனிடும் தொழிலாளர்களும் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். அவர்கள் மூலம் அதிக லாபத்தை முதலாளிகள் பெறுகிறார்கள். அவர்களுக்கும் குறைந்த பட்சம் ஊதியத்தையும் தீர்மானிக்க வேண்டும். இவை எல்லாவற்றையும்விட வர்த்தக குமாஸ்தாக்கள் சிறு சிறு கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்பையும் பெறமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். சில கடைகளில் மூன்று பேருக்கு மேல் நாலைந்து பேர்களை வைத்து வேலை செய்வித்தாலும், அதிகாரிகள் கேட்கும்போது மூன்று பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று தெரிவித்து விடுகிறார்கள். இவ்வாறு சட்டதின்படி தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது. இதை நீக்குவதற்காக அவ்வகையான கடைகள் வாரத்திற்கு ஒரு நாள் மூடப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படவேண்டும். அல்லது வாரத்திற்கு ஒரு நாள் அந்தக் தொழிலாளர்களுக்குக் கட்டாயமாக ஓய்வு கொடுக்கவேண்டும். அதுவும் முடியாவிட்டால் ஏதேனும் ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கவேண்டும். மேலும் பத்திரிக்கை தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்

களுக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட வேஜ் போர்ட் அளித்த தீர்ப்பானது சமீபத்தில் அதன் மேல் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பினால் பயனற்றதாக ஆக்கப்பட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த முடிவினால் இது எல்லா ஊழியர்களையும் பாதிக்குமோ என்று சந்தேகிக்கும்படியான நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பினைக் காட்டி இனிமேல் முதலாளிகள் சரியான ஊதியத்தையும் உரிமைகளை வழங்க சம்மதிக்க மறுக்கலாம். உயர் நீதி மன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு, பத்திரிகை தொழிலாளர்களாய் இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த தொழிலாளர்களாய் இருந்தாலும் சரி, அதற்கென்று நியமிக்கப்படும் ஒரு ஊதியகுழு கொடுக்கும் தீர்வைப்பாதிக்காது என்ற முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். தேவைப்பட்டால் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக, பாராளுமன்றத்தின் மூலமாக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இதற்காக மத்திய அரசாங்கத்திற்கு ஓய்வுரை கூறி நம்முடைய அரசாங்கம் வலியுறுத்தவேண்டும். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பிலிருந்து அல்லது சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அரசியல் சட்டத்திலுள்ள சந்து பொந்துகளின் வழியாக உயர் நீதி மன்றம் மூலம் வேறு தீர்ப்புகள் கொண்டு வராதபடி செய்வதற்கு பாராளுமன்றத்தின் மூலமாக அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கும் திருத்துவதற்கும் மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். இதற்கு எதிர்கட்சியிலுள்ளவர்கள், மாற்றுகட்சியிலுள்ளவர்கள் ஒத்துழைப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக தொழிலாளர்களை பொறுத்தவரையில் சக்திக்கேற்ற உழைப்பு தேவைகேற்ற வசதி என்ற கொள்கையை மனதில்கொண்டு திட்டமிடுவது அவசியம். அதில் தேவைக்கேற்ற வசதியைத் தீர்மானிக்கப்படும் பொழுது அன்றாடம் இருக்கின்ற விலைவாசிகளை கருத்தில் கொண்டு அவற்றை நிர்ணயிக்கவேண்டும். அதே போன்றுதான் சக்திக்கேற்ற உழைப்பையே அவர்களிடத்தில் எதிர்பார்க்குமாறும் திட்டமிடவேண்டும். இவ்வாறு தொழிலாளர் நலனையே—முதன்மையாகக் கருதியே—தொழிற்சாலைகள் இயங்குமாறு அமைச்சர் அவர்களை கவனிப்பதுடன் அதற்கான சட்டங்களையும் விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னது மாதிரி இன்றைக்கு தொழிலாளர் இலாகா அமைச்சராக விளங்குபவர், தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர் என்பது மட்டுமல்ல, நம்முடைய தேசத்திலும், சர்வ தேச அரங்கிலும் தொழிலாளர்களுடைய நியதிகளையும் தொழிலாளர்களுடைய சட்ட நுணுக்கங்களையும் தெரிந்திருக்கின்றவர், அதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர், அத்தகைய ஒருவர் தொழிலாளர் இலாகாவுக்கு அமைச்சராக கிடைத்திருப்பது தொழிலாளர் வர்க்கத்திற்கே பெருமை தரக் கூடியதாகும் என்ற முறையில் நான் அவர்களை பாராட்டுகிறேன். இதற்கு முன்னால் எல்லாம் இதே அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வேண்டி வாதாடிய எத்தனையோ அரங்குகள் உண்டு. அப்போது எல்லாம் அவர்களிடம் இம்மாதிரிப்பட்ட பொறுப்புகள் இல்லை. ஆனால் இப்போது பொறுப்புகள் கையில் இருக்கின்றது. ஆகவே அவர்கள் நினைத்த அளவுக்கு செய்ய முடியாதபடி பெரிய சிக்கல்கள் நிறைந்திருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். பொதுவாக தொழிலாளர்களுடைய குறைகளை தெரிவிக்கவில்லையானால் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியவனாவேன். நம்முடைய ராஜ்யத்தை பொறுத்த அளவில் தொழிலில் பல சட்டங்கள் இருக்கின்றன. இதை அமுலுக்கு கொண்டு வரும் பொழுது அரசாங்கம் மாத்திரம் அதற்கு பொறுப்பாக இருக்க முடியாது. தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் சங்கங்களுக்கும் பொறுப்பு உண்டு. தொழிற்சங்கங்கள் உதவி அளித்தால் அரசாங்கத்திற்கு இவைகளை அமுலாக்குவதற்கு லெகுவாக இருக்கும். இதற்கு முதலாளிகள் சட்டத்திற்கு ஏற்றவாறு வராவிட்டால் அரசாங்கத்தினுடைய பாடு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்க முடியும். இங்கே வொர்க்கிங் ஜர்னலிஸ்டுகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒரு தொழிலாளர் பகுதியி





லிருந்து வந்தவன் நான். இந்த பத்திரிகை ஊழியர்களுடைய ஸ்தாபனம் பலமான ஸ்தாபனம்தான் என்றாலும் போராட்ட ரீதியில் வளர்ந்த ஸ்தாபனம் அல்ல என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இத்தகைய முறைகளை நாம் பார்க்கிறோம். ஸ்தாபனம் ஒன்றாக இருந்தாலும், அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. காரியதரிசி டிஸ்மிஸ் செய்யப்படுகிறார். சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்த முடியாத நிலைமையில் அவர்கள் இல்லை. முதலாளிகளின் கை ஓங்கி வளரும்பொழுது அதை தடை செய்ய பலனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை, சட்டங்களை கொண்டுவரவேண்டுமென்று நான் கருதுகிறேன். இதைப்பற்றி என்னைவிட அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத்தெரியும். வேஜ் போர்டில் அமைச்சர் அவர்களும் ஒரு அங்கத்தினர். பல நல்ல காரியங்களும் முடிவு செய்யப்பட்ட பின்னர் அதை அமுல் நடத்துவதற்கு சட்டம் குறுக்கே நிற்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்த பத்திரிகை தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வேஜ் போர்டு தீர்ப்புக்கு மாறாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்திருக்கிறது. இந்த நிலையில் என்ன செய்யவேண்டும். இந்த தீர்ப்பு தொழிற்சங்க வாதிகளுக்கு எல்லாம் ஒரு பிரச்னையாக—ஒரு சவாலாக—வந்து சேர்ந்திருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசியல் சட்டத்தைதான் மாற்றவேண்டும் என்றால் கண்டிப்பாக அரசியல் சட்டத்தை மாற்றத்தான் வேண்டும். இதற்கு தொழிற்சங்கவாதிகள் எல்லாம், ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன். மேலும் நம்முடைய அரசாங்கத்திலிருந்து பல தொழில் துறைகள் நடத்தப்படுகின்றன. உதாரணமாக டிரான்ஸ்போர்ட் இலாகாவைப்பற்றி குறிப்பிடும் பொழுது நான் வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் அரசாங்கத்தை பொறுத்தவரையில் தொழில் அதிபர்கள் என்ற முறையில் அரசாங்கம் மற்ற தொழில் அதிபர்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். அதிலும் தொழில் துறையில் மிக்க அனுபவம் பெற்ற அமைச்சர் அவர்கள் இந்த துறையில் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய முறையில் இவைகளை எல்லாம் அமுல் நடத்துவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை அமுல் நடத்தினால் மற்ற இலாகாக்களுக்கு இந்த இலாகா ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த இலாகாவைப் பார்க்கும்போது இப்போது ஒன்றல்ல, இரண்டல்ல—பல முறையில் சம்பள விகிதங்கள் இருக்கின்றன. ஒரே வேலையைச் செய்யக் கூடிய டிரைவர் சென்னையில் வேலை செய்தால், அவருக்கு 40 ரூபாய் முதல் 65 ரூபாய் வரை தரப்படுகிறது. அதே வேலையை செய்யக் கூடியவர் கன்னியாகுமரியில் இந்த இலாகாவின் கீழ் இருக்கக்கூடியவர்களுக்கு 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது. அதைப் போலவே கண்டக்டர்கள். இங்கு கண்டக்டர்களுக்கு 30 ரூபாய் முதல் 45 ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. அதே வேலையைச் செய்யக் கூடிய அங்குள்ள கண்டக்டர்களுக்கு சம்பளம் 40 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை இருக்கிறது. ஒரு கண்டக்டர் 10 மாதங்கள் கேரளாவிலிருந்து விட்டு இங்கு இருக்கிறார். அவர் சம்பளம் 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை இருக்கிறது. இத்தகைய முறை இருக்கக்கூடாது. ஒரு இலாகாவில் ஒரே முறை இருக்கவேண்டும். ஒரே முறை இருக்கவேண்டுமென்று சொல்லும்போது, நிச்சயமாகச் செய்து விடுகிறோம் என்று கன்னியாகுமரியில் இருப்பவர்களுடைய சம்பளத்தை இதைப் போலக் குறைத்து விடுகிறோம் என்று சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுவும் நமது தொழிலமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இங்குள்ளவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும். அங்குள்ள ஸ்டாண்டர்டு—தரம்—கண்டக்டர்களைப் பொறுத்தவரையில், கல்வியிலும் சரி, மற்ற விஷயங்களிலும் சரி, தரம் உயர்ந்ததாக இருக்கிறது என்று கூறவேண்டும். ஆனால் டிரைவர்களைப் பொறுத்தவரையில் அப்படி இல்லை. கண்டக்டர்கள் படித்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஒரே வேலையைச் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரே விதமான சம்பளம் கொடுப்பதில் ஆட்சேபனை இருக்க முடியாது.

[Sri T. S. Ramaswamy Pillai] [25th March 1958

நம்முடைய டிரான்ஸ்போர்ட் இலாகாவைப் பொறுத்தவரையில் நான் காலையில் ஒரு அவசரக் கேள்விக்கு பதில் கொடுக்கும்போது அதை நன்றாக கவனித்தேன். டிரைவர் அவசியம் இல்லாமல் 97 பாஸஞ்சர்களை ஏற்றிக் கொண்டு வேகமாகப் போயிருக்கிறார் . . .

THE HON. SRI R. VENKATARAMAN: 87 தான், 97 அல்ல.

SRI T. S. RAMASWAMY PILLAI: 97 என்பது என்னுடைய தகவல். டிபார்ட்மெண்டில் 87 என்று கொடுத்திருக்கிறார்கள். டிபார்ட் மெண்டின் தகவல் டிரைவரையும் கண்டக்டரையும் சேர்த்து 89 என்பது. என்னுடைய தகவல் சரி என்று கருதுகிறேன். 97 பேர்களை ஏற்றிக் கொண்டு ஒரு பஸ்ஸில் ஓவர் ஸ்பீடில் போனார்கள். அந்த 97 பேரில் 87 பேர்கள் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். 87 பேர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனதில் 3 பேர்கள் உயிர்போயிருக்கிறது.

அடுத்தபடியாக இப்போது இவர்களுக்கு செக்யூரிடி ஆப் சர்வீஸ் கிடை யாது இங்கு சேர்ந்த பிறகு. முன்பு தொழிலாளர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்றால் நிச்சயமாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்க வேண்டும். இப்போது டிரான்ஸ்போர்ட் இலாகா எதைப் பின்பற்றுகிறார் கள். டிரான்ஸ்போர்ட் இலாகா சம்பந்தமாகப் பலவிஷயங்கள் இருக்கின் றன, அதற்கு பிற்பாடு வருகிறேன். இப்போது டிரான்ஸ்போர்ட் இலாகா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய விஷய யத்தைப் பொறுத்தமட்டிலும் ஒரு சில விஷயங்களைக் கூறிவிட்டு முடித்துக் கொள்கிறேன்.

அங்கு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மூலமாக அவர்கள் தொழிலாளர் களைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், இங்கு சேர்ந்த பின்னர் அதிகாரிகள் இஷ்டப்படி அதிகாரிகளுக்கு வேண்டுபவர்கள், வேண்டாதவர்கள் என்பதால் தொழிலாளர்கள் நிர்வாகத்தினருடைய தயவுக்குக் காத்திருக்கவேண்டுமே தவிர, அவர்களுடைய உரிமையை மனதில் இறுத்தி வேலை செய்ய முடி யாமல் இருக்கிறார்கள். ஆகவே நாம் ஒன்று பார்க்கிறோம். ஒரு ஷெட் யூல்டுகேஸ்ட் டிரைவர் இருக்கிறார். அவர்களுக்கு கொடுக்காமல் ஏதோ அன்றாடம் வேலை செய்யக்கூடிய ஒருவரை வைத்துக் கொண்டிருக்கிறார் கள். ஆகையால்தான் இத்தகைய நிலைமை ஏற்படுகிறது. டிரான்ஸ்போர்ட் இலாகாவிலே கூட செக்யூரிடி ஆப் ஸர்விஸ் வேண்டும். அவர்களுக்கு வேலை நிச்சயம் வேண்டும் என்று நான் கூற ஆசைப்படுகிறேன். ஒரே வேலைக்கு ஒரே சம்பளம் வேண்டும். ஒன்று பார்க்கலாம். இன்றைய தினம் நம்முடைய அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. கேரள அரசாங்கத்திலிருந்து நம்முடைய அரசாங்கத்திற்கு எழுதிய ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதாவது 1954-ம் ஆண்டு முதல் சம்பளத்தை உயர்த்தி யிருக்கிறோம். அத்தகைய முறையில் உயர்த்தியிருப்பதால் அவர்களுக்கு அரியர்ஸை நாங்கள் 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி வரையில் அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை நாங்கள் கொடுக்கிறோம் என்று அங்கிருந்து வந்திருக்கிறது. சென்னை மாகாணத்திலுள்ளவர்களுக்கு நாங்கள் கொடுக்கிறோம் என்று வந்திருக்கிறது. இவர்கள், நீங்கள் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று எழுதியிருக்கிறார்கள். ஏனென் றால், அங்கு அதிகப்படுத்தினால், அதைத் தொடர்ந்து இங்கும் அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக. அதிலும் நம் தொழிலமைச்சர் போன்றவர்கள் தலைமை தாங்கும்போது, அத்தகைய முறையை உடனடியாகக் கையாண்டு சென்னையிலுள்ள தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் உயர்ந்த ஊதி யத்தைக் கொடுக்கவேண்டுமென்று இந்த சமயத்திலே கூற ஆசைப்படு கிறேன்.

குறைந்த பட்ச சம்பளத்தைப் பற்றிய வரையில் பல நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கும், அதைப் போலவே நெச வுத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக் கிறேன். அத்தகைய ஒரு நிர்ணயம் செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக் கொள்கிறேன்.



25th March 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

அதைப் போலவே உப்பளத் தொழிலாளர்களுக்கும் நிர்ணயிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்திலே எத்தனையோ ஆயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் இருக்கிறார் கள். கன்னியாகுமரியில் உப்பளத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்க ஒரு கமிட்டி ஏற்பாடுத்தினார்கள். அந்தக் கமிட்டி இந்த பாஷா வாரி மாகாண அமைப்புக்கு 1, 2 மாதங்களுக்கு முன்னால், அமைக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் இங்கே சேர்ந்துவிட்டபடியால் கேரள சர்க்காரிலிருந்து இதை இங்கே மாற்றினார்கள். ஆனால், அந்தக் கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டது. மினிமம் வேஜஸ் ஆக்ட் ஷெட்யூலில் சேர்க்க வில்லை என்ற காரணத்திற்காக இதைக் கலைத்து விட்டார்கள். இதுவும் அந்த ஷெட்யூலில் சேர்க்கப்படவேண்டும். இத்தகைய பிரச்னையில் பல சிக்கல்கள் இருக்கலாம். விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் பல சிக்கல்கள் இருகின்றன. லேண்ட் டென்யூர் ஜில்லாவிற்கு ஜில்லாவித்தியா சமாயிருக்கிறது. பல சிக்கல்கள் வரலாம். இதையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரேமாதிரியாகக் கொண்டு வரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொண்டு, மீண்டும் ஒரு முறை அரசாங்க இலாகாவைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்கும், இதன் ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் பிற அதிபர்களுக்கும் ஒரு எடுத்துக் காட்டாக இருந்தாலொழிய சட்டம் இயற்றி, சட்டத்தை அமுலாக்குவதிலே ஒரு பயனும் இருக்க முடியாது என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I shall give five minutes, if the hon. Member Sri K. S. G. Haja Sheriff can finish his speech within that time.

SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to speak in support of the Demand made by the Hon. Minister for Labour. Sir, I am greatly surprised when both the mover of the cut motion and other hon. Members spoke that the Government had not done or had not improved the conditions of labour within the last ten years and that the Government are more aligned towards the capitalists. I do not think that there can be any better false propaganda than this statement. I am sure that hon. Members are having each a copy of the small booklet supplied by the Government giving vividly what they have done to the labour within the last ten years, what their policy is, what they propose to do hereafter.

Sir, we are fortunately having in our midst a Minister who has devoted the best part of his life for the betterment of labour and who is wedded to improve their conditions.

Sir, if only I can give illustrations how the conditions of labour have been improved, I am sure the hon. Members would be taken by surprise. For instance, if we take a worker who is working in the ports, a worker who was earning Rs. 3 a day three or four years ago, is today earning Rs. 9 or 10 for working only a shift of eight hours. Can it not be said that his lot has been improved? I agree when hon. Members said that there was still unemployment, that there were considerable difficulties in finding employment for both the educated and uneducated people, etc., and that cannot be disproved. But so far as people who are employed in any sector, either in agriculture, or in factory or in business houses or ports, it is not correct to say that their conditions have not improved. Their conditions have definitely improved. The hon. Members have may give

[K. S. G. Haja Sheriff] [25th March 1958

concrete suggestions as to how to solve the unemployment problem or how to improve the conditions of these people, who are already working in all these factories or other business houses.

Sir, one of the reasons given for the food shortage is the increased consumption of food. But how has the increased consumption of food come about? It cannot be unless people had improved their purchasing capacity and is it not due to increased earnings and wages? Sir, it is also said that the Labour Housing Schemes have not been put forward. It is not correct, when it is said that the employers are not taking advantage of the facilities offered by the Government; let us take any factory, a cement factory in our State or a Sugar Factory or any factory that is either in the private sector or in the public sector, the first concentrated attempt is for the improvement of the condition of labour. So, labour conditions have improved a lot. I should not be mistaken as speaking on behalf of the capitalists. It is all due to the measures adopted by the Government and on account of the changed policy in the managements that the conditions of labour have improved very conspicuously.

I am sure, Mr. Speaker, that if only given concrete suggestions for the improvement of labour, the Government which are wedded to the policy of having a socialistic structure of society, will certainly do all they can for their betterment. Thank you, Sir.

12-10 p.m. SRI P. S. CHINNADURAI : மதிப்புற்குரிய சபாநாயகர் அவர்களே, நமது அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளில் மிகவும் முக்கியமானது "**Right to work, Living wage**" என்ற இரண்டு விஷயங்கள் என்பதை முதல் முதலாக எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். வேலை செய்வதற்கான உரிமை, ஜீவன சம்பளம் பெறுவதற்கான உரிமை, இந்த இரண்டும் அரசியல் சட்டத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கொள்கையாகவும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கொள்கையாகவும், ராஜ்ய சர்க்காரின் கொள்கையாகவும் இருந்து வருகிறது என்பதை சூசகமாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த உரிமைகள் இருந்தும், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகையால் இந்தக் கொள்கை குறையுடையதா, இந்தக் கொள்கையை அமல் நடத்துகின்ற அரசாங்க நிர்வாக இயந்திரம் குறையுடையதா, அல்லது இந்த அமைச்சரவை குறையுடையதா என்று ஆராய்ந்து பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

போடப்பட்டிருக்கிற கொள்கை குறையுடையது அல்ல. அரசாங்க நிர்வாகம் பொறுத்தவரை, இப்பொழுது தொழிலாளர் இலாகாவை நிர்வகித்து வரும் அதிகாரிகள், பாக்டரி இலாகாவை நிர்வகித்து வரும் அதிகாரிகள் எல்லா வகையிலேயும் திறமை உள்ளவர்கள் என்பதை என் அனுபவத்திலிருந்து நான் கூற முடியும். கனம் அமைச்சர் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லை. உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவர். (சிரிப்பு.) நான் மற்ற மந்திரிகள் இருந்தாலும் இதைப் பற்றி குறிப்பிடுவேன். நான் ஏதோ அமைச்சரை காக்கா பிடிப்பதாக யாரும் நினைத்துக்கொள்ள வேண்டாம்; இதற்கு அவசியமும் இல்லை.

உண்மையிலேயே அரசாங்க நிர்வாக இயந்திரம் நன்றாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் எல்லா காரியங்களையும் திறமையாகச் செய்யக் கூடியவர். கையாளப்படுகின்ற கொள்கையோ நல்லதாக இருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் ஏன் குறை கூறப்படுகின்றது' என்பதை நாம் பார்க்க வேண்டும். இன்றைய தினம் இருக்கும் அரசியல் பொருளாதார அமைப்பிலே முதலாளித்துவத்திற்குத்தான் அதிகப்படியான சலுகையும் உரிமையும் இருக்கின்றன. இன்றைய அரசியல் ஆதிக்கமானது எப்படியோ முதலாளிதத்துவத்தின் கையிலே சிக்கிப்போய் கிடக்கிறது என்பதுதான் மிகவும் தெளிவாக தெரிகிறது. இதனால்தான் கனம் அமைச்சர் அவர்கள் சில காரியங்களை செய்ய வேண்டுமென நினைத்தாலும் அதை நடத்தி வைக்க முடியாத நிலையில் இருப்பதை நாம் அனுபவ ரீதியாக பார்க்கிறோம்.



25th March 1958] [Sri P. S. Chinnadurai]

உண்மையிலேயே கனம் அமைச்சர் அவர்கள் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டிருப்பது விதியின் கோளாறு என்றுகூட நான் சொல்வேன். அமைச்சர் அவர்கள் அந்த பதவியில் இருப்பதற்கு பதிலாக நம்முடைய தொழிற் சங்கத்திற்கு பலம் அளிக்கத் தக்க முறையில் ஒரு பெரிய கிளர்ச்சிக்காரராக இருப்பாரானால் அதை நான் மிகவும் சந்தோஷமாக வரவேற்பேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தை ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் 160,000 பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், 24,000 பேர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நம்முடைய திறமையை எடுத்துக் காட்டுகிறதா ? நாட்டிலிருக்கும் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தை யாருமே மதிப்பது கிடையாது. ஆட்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் இந்த வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் ஆட்களை எடுக்க வேண்டும் என்ற நியதியை ஏன் ஏற்படுத்தக்கூடாது ? அப்படி ஏற்படுத்தும் விதியை ஏன் அமல் செய்யக் கூடாது. இதை அமல் செய்வதில் யார் தடையாக இருக்கிறார்கள் ? அவர்கள் யார் என்று தெரிவித்தால் அவர்களை தூக்கி எறிய தொழிலாளர்கள் காத்திருக்கிறார்கள், சமுதாயம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை தங்கள் மூலமாக கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே வேலையில் இருக்கின்ற தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை அவர்கள் தங்கள் வேலையை இழக்காமல் இருப்பதற்கான நிலைமை இருக்கிறதா என்று பார்ப்போம். அங்கங்கு இருக்கும் தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிற்சாலைகளை மூடுவதற்கு ஏற்பாடு செய்கின்றனர் என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு தொழிற்சாலைகளை மூடுவதற்கு திடீர் என்று என்ன ஏற்பட்டது என்று அரசாங்கம் ஒரு பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். ' கோயம்பத்தூரில் இருக்கும் பஞ்சாலைகளைப் பற்றி இங்கே பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கோயம்பத்தூர் பஞ்சாலைகளில் ஒரு ஷிப்டு குறைப்பதை நாம் குறிப்பாக கவனிக்க வேண்டும். தென் இந்திய மில் முதலாளிகள் சங்கம் உற்பத்தியை திட்டமிட்டு குறைப்பதற்கு என்ன வழி செய்யலாம் என்று தீர்மானிக்க ஆலோசனை பண்ணிக் கொண்டிருக்கிறது. திட்டமிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அல்ல. உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று நாட்டில் சொல்லிக்கொண்டு வருகின்ற நேரத்தில், இவர்கள் திட்டமிட்டு உற்பத்தியை குறைக்க வழி என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாசகரமான வேலையை அரசாங்கம் ஒரு பத்திரிகை அறிக்கையால் தடுத்துவிட முடியும் என்று நினைக்கிறதா ? இந்த நாசகரமான வேலையை தடுப்பதற்கு வேறு வழியே கிடையாதா ? பத்திரிகை அறிக்கையிலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது. சட்ட பூர்வமாக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யவேண்டும். நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நோட்டீஸ் கொடுக்காமல் ஆட்களை வேலையிலிருந்து நிறுத்தக்கூடாது என்று தான் போட்டிருக்கிறது. இந்த அறிக்கையை இந்த முதலாளிகள் பயன் படுத்திக்கொள்வார்கள். அரசாங்கமே பத்திரிகை அறிக்கையில் நோட்டீஸ் கொடுத்துவிட்டு ஆட்களை நிறுத்தி விடலாம் என்று சொல்லியிருக்கிறது என்று சொல்வார்கள். அரசாங்க அறிக்கையில் முதல் பாகத்தை அமல் நடத்தாமல் மற்ற பாகங்களை மட்டும் அமல் நடத்துவார்கள். ஆகையால் மில் முதலாளிகள் திட்டமிட்டு

[Sri P. S. Chinnadurai] [25th March 1958

உற்பத்தியை குறைப்பதற்கு வழி செய்வதை தடுப்பதற்கு, மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அமல் செய்யவேண்டும் என்று ராஜ்ய அரசாங்கத்தைக் கோருவேன். அவ்வாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால், தேசத்தின் உற்பத்தி பாதிக்கப்படும். வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படும். ஆகையால் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாக ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பீடி தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்வதற்கு ஒரு கமிட்டியை நியமிக்கப்போகிறோம் என்று சென்ற வருஷத்தில் சொன்னார்கள். அப்படி நியமிப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தார் அமைச்சர். அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதைப்பற்றி கேட்டால் சீக்கிரம் செய்கிறோம் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்களே தவிர என்ன செய்யப்போகிறோம் எப்பொழுது செய்யப்போகிறோம் என்று சொல்வதாகவே இல்லை. அவர் அப்படிச் சொல்லி ஒரு ஆண்டு கடந்து போய்விட்டது. இன்னும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அப்படி நிறைவேற்றாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? என்பதை அறிய விருமபுகிறேன். கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அதற்குள்ள காரணத்தையும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12-20 p.m. சம்பளம் நிர்ணயிப்பதைப்பற்றி, ஏற்கெனவே சம்பள போர்டு நிர்ணயம் செய்யப்பட்டதைப் பற்றி நமக்கு எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பத்திரிகைகளுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு அது கோர்ட்டுக்குச் சென்று அதன் முடிவு என்ன ஆயிற்று என்பது நமக்குத் தெரியும். அதைக் குறித்து பல அங்கத்தினர்கள் பல யோசனைகளைக் குறிப்பிட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கும் ஹைக்கோர்ட்டுக்கும் போகாத அளவில் நாம் தடைகளை விதிக்க வேண்டும் என்று யோசனைகளைச் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகக்கூடாத அளவுக்கு ஏன் தடைகளை விதிக்கக் கூடாது என்றும் கேட்டார்கள். அப்படி தடை விதிக்க இயலுமா என்று பார்த்தால் அது இயலாது என்றுதான் சொல்லவேண்டும். ஜீவாதார உரிமை பிரகாரம் நிச்சயமாக அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடியஉரிமை இருக்கிறது. இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டிலும், ஹைகோர்ட்டிலும் நியமிக்கப்பட்டிருக்கூடிய நீதிபதிகளைப் பார்த்தால் அவர்கள் இன்றைய அரசியல் நிலைமையை உணர்ந்துகொனடு அவர்கள் சோஷலிஸ சித்தாந்தத்துக்கு ஏற்ற மனப்பண்பு படைத்தவர்களாக இல்லாமல் இருக்கிறார்கள். அந்தக் குறையைத்தான் இது காட்டுகிறது. நாம் எவ்வளவோ திட்டங்களைப் போடலாம், எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம். செய்ய முடியும். ஆனால், நமது லட்சியங்களையும், திட்டங்களையும் புரிந்துக்கொண்டு செயலாற்றும் நீதிபதிகளும் நிர்வாகிகளும் தேவை. இன்றைய நீதிபதிகள் தங்கள் மனத்தை முற்போக்கான முறையில் மாற்றிக் கொள்ளத்தக்க முறையில் பொதுஜன நிர்பந்தம் உருவாகவேண்டும். இந்தப் பொதுஜன நிர்பந்தத்தை உருவாக்குவதில், இந்த தரப்பிலுள்ளவர்களோடு ஆளும் கட்சியில் உள்ள முற்போக்கு கொள்கை படைத்தவர்களும் ஒன்று சேர வேண்டும் என வேண்டுகிறேன்.

தொழிலாளர்கள் 55 வயதுக்கு மேல் வேலையை விட்டு விட்டுப்போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். அப்படி தொழிலாளிகள் 55 அல்லது 58 வயதுக்கு மேல் வேலையை விட்டு விட்டுப் போனால் அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. ப்ராவிடெண்ட் பண்ட் திட்டம் அவர்களுக்கு இருக்கிறதா ? இப்பொழுதுதான் மூன்று அல்லது நான்கு வருஷங்களாக அந்தத் திட்டம் வந்து அமுலில் இருக்கிறது. இந்த ஐந்து வருஷத்தில் அவர்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது. அந்த பண்ட் இல்லாமல் இருக்கிறவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. அவர்களுக்கு கிராச்யுட்டி ஸ்கீம் இருக்கிறதா, அல்லது பென்ஷன் ஸ்கீம் இருக்கிறதா ? அவர்களுக்கு சட்ட நுணுக்கங்கள் தெரியாத காரணத்தால் அவர்களை சுலபமாக வெளியே அனுப்புகிறார்கள். அதனால் 55 வயதுக்கு மேல் பட்டவர்களை



25th March 1958] [Sri P. S. Chinnadurai]

வேலையை விட்டு நீக்குவதாக இருந்தால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன் வரவேண்டும். 55 அல்லது 58 வயதுக்கு மேல்பட்டவர்களை வேலையை விட்டு நீக்குவதாக இருந்தால் அதற்காக ஒரு பென்ஷன் திட்டத்தை அமைக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முன் வரவேண்டும். அதை அரசாங்கமே கொண்டு வந்தாலும் சரி அல்லது தொழிற்சாலை அதிபர்களைக் கொண்டு வரச்சொல்லி இந்த அரசாங்கம் அவர்களுக்கு சிபாரிசு செய்தாலும் சரி. இந்த திட்டத்தை தொழிலாளர்களுக்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை யார் கொண்டு வந்து கொடுத்தாலும் தொழிலாளர்களுக்கு பென்ஷன் அல்லது கிராசுயுட்டி ஸ்கீமைக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அநேகம் தொழிற்சாலைகளில் அநேகம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதற்கு அரசாங்கமும் காரணம் அல்ல, பாக்டரியும் காரணம் அல்ல. அதற்கெல்லாம் அங்குள்ள மானேஜ்மெண்டார் தான் காரணம். மானேஜ்மெண்டார் தொழிலாளர்களுக்கு சரியானபடி பாதுகாப்பு கொடுக்காமல் இருப்பதால்தான் இப்படிப்பட்ட விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் "பாலிசி அப் பர்சியுவேஷன்" தான். இதுதான், கவர்ன்மெண்ட்டின் கொள்கையாக இருக்கிறது. பாலிசி அப் பர்சுவேஷனிலேயே இருந்தால் "**It is equivalent to the policy of appeasement**" என்று சொல்வதற்கு முடியும். அவர்களே செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஒருக்காலும் தொழிற்சாலை அதிபர்கள் செய்யவே மாட்டார்கள். அதனால் தான் **policy of punishment** வரட்டுமே என்று சொல்லுகிறோம். அப்பொழுது தெரியும் நிலைமை. இப்பொழுது எவ்வளவோ கேஸ்கள், புகார்கள் வருகின்றன. அவைகளில் தண்டிக்கப்பட்டவைகள் எவ்வளவு என்று பார்த்தால் ரொம்பவும் குறைவாகத்தான் இருக்கும். ஒவ்வொரு வருஷத்திலும் தண்டிக்கப்பட்ட எண்ணிக்கையைப் பார்த்தால் 400-க்கு குறைவாகத்தான் இருக்கும். ஆயிரம், அல்லது இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் கேஸ்கள் வந்தாலும் தண்டிக்கப்பட்ட எண்ணிக்கையைப் பார்த்தால் அது ரொம்பவும் குறைவாகத் தான் இருக்கும். அதனால் சரியான அளவில் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டியபடி சட்டத்தை திருத்தி அமைக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். மனது வைத்து சட்டத்தை திருத்தி அமைத்தால்தான் அது சரிவர அமுல் செய்யப்படும். அதை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கான துணிச்சல் அந்த இலாகவிலுள்ள அதிகாரிகளுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரிகளும் அந்த இலாகாவில் இருக்கிறார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். ஆகவே சட்டத்தை திருத்தி அமைக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்று அந்தக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லும்போது ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்று தான் அர்த்தம். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும். இதைப்பற்றிய ஒரு முடிவுக்கு அரசாங்கம் சீக்கிரமாக வர வேண்டும். இது சம்பந்தமாக திட்டவட்டமான ஒரு முடிவுக்கு அரசாங்கம் சீக்கிரம் வரவேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன். அப்படி அரசாங்கம் வராத வரைக்கும் தொழிற்சாலைகளில் போட்டி சங்கங்கள் இருந்துகொண்டே தான் இருக்கும். பல சங்கத் தலைவர்கள் அங்கு தலையிட ஆரம்பிப்பார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படாலாம். ஆகவே அரசாங்கம் சீக்கிரத்திலேயே இதற்கு ஒரு திட்ட வட்டமான முடிவு காணவேண்டும்.

அடுத்தபடியாக மெட்ராஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் அட்வைசரி போர்டு என்று ஒன்று இருக்கிறது. கடைசியாக அந்த போர்டு 20–10–56-ல் தான் கூடிற்று. அதற்குப் பிறகு கூடவே இல்லை. அந்த போர்டு அடிக்கடி ஏன் கூடக்கூடாது என்று கேட்கிறேன். அந்த போர்டு அடிக்கடி கூடி

[Sri P. S. Chinnadurai] [25th March 1958

என் ஆராய்ச்சி செய்யக்கூடாது என்று கேட்கிறேன். திட்டமான வேலைகளை அமைத்து அதன்படி அவர்கள் அடிக்கடி கூடி என் வேலை செய்யக் கூடாது. மாதக் கணக்கில் வருஷக் கணக்கில் அவர்கள் கூடுவது கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அதோடு, சுப்ரீம் கோர்ட்டுக்கும், ஹைகோர்ட்டுக்கும் முதலாளிகள் சுலபமாகப் போகிறார்கள். அப்படி தொழிலாளர்களால் போக முடியவில்லை. அப்படிப் போவதற்கு தொழிலாளர்கள் பணத்துக்கு எங்கே போவார்கள். பணம் இல்லாத காரணத்தால் அவர்களால் அடிக்கடி கோர்ட்டுகளுக்குப் போக முடிவதில்லை. அடிக்கடி இது சம்பந்தமாக பேசப்படும்போது ஏதாவது யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் ஒரு யோசனையைக் கூறுகிறேன். அதை அரசாங்கம் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். லீகல் எய்ட் டிபார்ட்மெண்ட் என்ற ஒரு இலாகாவை அமைத்து அதன் மூலம் தொழிற்சங்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற யோசனையை நான் சொல்லுகிறேன். தொழிலாளர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்கோ அல்லது ஹைகோர்ட்டுக்கோ போக வேண்டும் என்று சொல்லி அவர்கள் இந்த இலாகாவை அணுகினால் அவர்கள் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும். சாதாரணமாக தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் ஒரு வக்கீலை நியமிப்பது என்பது முடியாது. அவர்கள் தனிப்பட்ட முறையில் வக்கீலிடம் போகாமல் நேரடியாக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட லீகல் எய்ட் டிபார்ட்மெண்டுக்குப் போக வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் ஓரளவுக்கு தொழிலாளர்களுக்கு உதவி புரிவதாக இருக்கும் என்பது என்னுடைய யோசனை.

தொழிலாளர்களுக்கு ஸ்டாம்பு கட்டணம் கட்டுவதிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் பல தடவை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். இதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே தொழிலாளர்கள் ஏதாவது மனுக்கள் கொடுத்தால் அதற்கு ஸ்டாம்பு கட்டணம் கட்டாமல் இருக்கும்படியாக ஒரு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர் இலாகா இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் திரம்பட வேலை செய்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் எடுத்துக் காட்டிய கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு அந்த இலாகா தன்னுடைய நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தினால் ஓரளவு தொழிலாளர்களுக்கு சௌகர்யமாக இருக்கும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் சேவை செய்வதாக ஆகும், சேவை செய்யவும் முடியும்.

போனஸ் சம்பந்தமாக ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். லாபம் இருந்தாலும், லாபம் இல்லாவிட்டாலும் போனஸ் கொடுக்க வேண்டும் என்றும், அப்படிக் கொடுப்பது அநீதி என்றும் எனக்கு எதிர் தரப்பிலே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆட்சியாளர்கள் தரப்பிலேயே இப்படி மாறுபட்ட கருத்துக்களை சொல்லிக் கொண்டு மோதிக்கொண்டார்கள். இப்பொழுது சோஷலிஸ அமைப்பில் ஆட்சியை நடத்துகிறார்கள். கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியை நடத்துகிறது. இதற்கு முன்னதாக திருவாங்கூரில் மிதவாத முற்போக்குக் கட்சியைச் சேர்ந்தவர் இருந்த காலத்தில் இதைப்பற்றி முடிவு செய்தார்கள். ஒருவர் வாங்கும் மொத்த சம்பளத்தில் 5 பர்செண்ட் வீதம் போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். லாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த போனஸ் கொடுக்க வேண்டும் அதன்படி ஏற்பாடு செய்தவர் ஸர் சி. பி. அவர்கள். அந்த காலத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு இப்பொழுதும் நடந்து கொண்டு வருகிறது. அதையே அபிவிருத்தி செய்வதற்கு இப்பொழுதுள்ள கேரள அரசாங்கம் ஏற்பாடு



25th March 1958] [Sri P. S. Chinnadurai]

செய்து கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட முற்போக்கான போனஸ் திட்டத்தை நம்முடைய ராஜ்யத்திலும் கொண்டு வரவேண்டும் என்று இந்த மந்திரி சபையைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அடுத்து ஒரு வருஷத்துல இந்த மான்யக் கோரிக்கையை வைத்துக் கொண்டு எப்படி நம்முடைய ராஜ்யத்தில் தொழில் அமைதியை பாதுகாக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சில அறிக்கைகளை நம் முன்னாலே சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்திலே அவர்கள் பத்திரிகைக்கு ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த இரண்டையும் ஒப்பிட்டு சேர்த்து பார்க்கும்பொழுது, அடுத்த ஒரு வருஷத்தில் நம்முடைய ராஜ்யத்தில் தொழிலாளர்கள், தொழில் இரண்டும் சம்பந்தப்பட்ட வரையில் எப்படி ஒரு நெருக்கடி வர இருக்கிறது என்கின்ற அபாயத்தை தான் நமக்கு உணர்த்தியிருக்கிறது. இந்த சூழ்நிலையிலே நான் அமைச்சர் அவர்களை பாராட்டுவதா, அல்லது பரிதாபப்படுவதா என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவர்களை பாராட்டிவிடுவது சுலபம். ஆனால் தனி மனிதனுடைய நல்லெண்ணமும், திறமையும் ஓரளவுக்கு உபயோகப்படுமே தவிர, அது சூழ்நிலையை மாற்றுவதற்கு உபயோகப்படுமானால், அப்பொழுது தான் உண்மையான பரிகாரம் ஏற்படும். அத்தகைய சக்தி நமது அமைச்சர் அவர்களிடத்தில் இல்லையே என்று பரிதாபப்படுகிறேன். அவர்களிடையே இருக்கும் அதிகாரத்தை ஒழுங்காக பிரயோகிக்கலாம். நமக்கு சுலபமாக படிக்கக்கூடிய முறையில் அச்சடித்து அவர் அறிக்கைகளை வழங்கியிருக்கிறார். திறமை அதிகமாக இருப்பதினால் இத்தகைய வேலையைத் தான் செய்ய முடியுமே தவிர, சூழ்நிலையை மாற்றக் கூடிய சக்தி அவர்களிடத்தில் இல்லையே என்று தான் பரிதாபப்படுகிறேன். உண்மையிலேயே அவர்களுக்கு நல்லெண்ணம் இருக்கிறது. தொழில் அமைதி இருக்க வேண்டும். தொழிலாளர்கள் நன்றாக வாழ வேண்டும், தொழில் தகராறுகள் இருக்கக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. நம்முடைய சமுதாய அமைப்பில் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால், முதலாளிகளுக்கு கொஞ்சம் கஷ்டத்தை கொடுத்துத் தான் தீரவேண்டும். அந்த அளவுக்கு கொஞ்சம் சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். அப்படி வரக்கூடிய சமயத்தில் தான் எல்லோருடைய ஒத்துழைப்பும் மந்திரி அவர்களுக்கு தேவைப்படுகிறது. அமைச்சர் அவையிலுள்ள மற்ற அமைச்சர்களுடைய ஒத்துழைப்புக் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. உதாரணமாக சேலம் டானரியில், நாராயணன் இண்டஸ்டிரீஸ் என்ற தொழிற்சாலையில் 150 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை மூடி விட்டார்கள். அதைத் திறக்க வேண்டுமென்று தொழில் அமைச்சர் உத்தரவு போட்டார். போலீஸ் அமைச்சரின் கீழ் வேலை செய்யும் போலீஸ் அதிகாரிகள் அதை திறப்பதற்கு உதவி செய்வதற்கு பதிலாக, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை சிறையிலே போடுகிறார்கள். இம்மாதிரி சமயங்களில் உத்தரவுகளை அமுல் நடத்துவதற்கு மற்ற அமைச்சர்களுடைய ஒத்துழைப்பு ரொம்ப குறைவாக இருக்கிறது. தொழில் இலாகாவில் கடைசியிலே இருக்கும் லேபர் ஆபீஸர்களிலிருந்து காரியதரிசி வரை எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். 12-30 p.m.

கடந்த ஒரு வருஷ காலத்தில் தொழில் இலாகாவில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தயக்கமின்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். லேபர் டிபார்ட்மெண்டு சுருசுருப்பாக வேலை செய்கிறது. சச்சரவுகள் இருந்தால் சமரசம் செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். சமரசம் முறிந்தால் தகராறுகளை கோர்டுகளின் முடிவுக்கு விடுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். இதிலெல்லாம் முன்னேற்றம் இருக்கிறது என்பது ஒரு புறத்தில் வாஸ்தவம் தான். தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில், தொழில் தகராறுகள் இல்லாமல் தொழில் துறையில் அமைதி நிலவுவதற்கு அமைச்சர் அவர் ள் தன்னுடைய சகாக்களின் ஒத்துழைப்பையும், மத்திய சர்க்காரின் ஒத்துழைப்பையும

[Sri M. Kalyanasundaram] [25th March 1958

பெற்று வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தொழில் தகராறுகள் இருக்க வேண்டுமென்பது தொழிலாளிகளின் விருப்பம் அல்ல. தொழில் தகராறுகளுக்கு பொறுப்பாளி தொழிலாளி அல்ல. தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுவதற்கும், தொழிலாளர்கள் சுமுகமாக வாழ்வதற்கும் தான் தொழிலாளர்கள் விரும்புகிறார்கள். தினம்தோறும் வேலை நிறுத்தம், போலீஸ் தடியடி இவைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்ற நோக்கமல்ல தொழிலாளிகளுக்கு. ஆகையால் தொழில் தகராறுகள் வந்தால், தொழிலாளிகளைப்பற்றி குறை சொல்லுவதில் பிரயோசனமில்லை. தொழில் தகராறுகளுக்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கும் தன்னுடைய சகாக்களுக்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உதாரணமாக, பஞ்சு ஆலைகள் சம்பந்தமாக ஒரு நெருக்கடி வர இருக்கிறது என்பது பற்றி குறிப்பிட்டேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சின்னதுரை அவர்களும் இதை எடுத்துக் காட்டினார்கள். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையும் இதன் காரணமாகத் தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பி. அண்டு ஸி. மில்லில் ஒருவிதமான நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுரை ஹார்வி மில்லில் ஒருவிதமான நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சில ஷிப்டுகளை மூடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கோயம்புத்தூரிலும் சில ஷிப்டுகளை மூடவேண்டுமென்று ஏற்பாடு நடக்கிறது. நூல் மில்களிலும் சரி, நெசவு மில்களிலும் சரி, சில ஷிப்டுகளை மூடவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடிக்கு என்ன காரணம் என்பதை சற்று பரிசீலனை செய்து பார்த்து, இதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நெருக்கடிக்குக் காரணம் நம்முடைய கோர்ட்டுகள் சர்க்காருடன் ஒத்துழைக்காமல் இருப்பது தான். சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டு தீர்ப்புகளை பார்த்தால் ஜனங்களுடைய உரிமையை பாதுகாக்கும் நோக்கத்தோடு அவைகள் கொடுக்கப்படவில்லை. தனி நபர்களுடைய உரிமைகளைத்தான் அவை பாதுகாக்கின்றன. விவசாயப் பிரச்னையாக இருந்தாலும் சரி, தொழில் பிரச்னையாக இருந்தாலும் சரி, இந்தத் தீர்ப்புகளை பார்க்கக்கூடிய நேரத்தில் தனி நபர் உரிமை தான் பெரியது, புனிதத் தன்மை வாய்ந்தது என்ற மனோபாவத்தோடு நம்முடைய நீதிபதிகள் தீர்ப்புகளை அளிக்கிறார்கள் என்று நினைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்க்காரின் கொள்கை என்ன, நமமுடைய தேசத்தின் நிலைமை என்ன, நம்முடைய தேசம் எந்த ஸ்திதியில் போய்க் கொண்டிருக்கிறது, சோஷலிஸ சமுதாயம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்ற சூழ்நிலைகளையெல்லாம் நம்முடைய நீதிபதிகளும், நீதி ஸ்தாபனங்களும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. கோர்ட்டுகளின் தீர்ப்புகள் இந்தக் கொள்கைகளுக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்பதை பத்திரிகைத் தொழிலாளர்களின் பிர்ச்னையில் சமீபத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு எடுத்துக் காட்டும். இதனால் பத்திரிகைத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, மற்ற தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். முதலாளிகளுக்கு சக்தி இருந்தால் தான் கொடுக்கலாம் என்று சொன்னால், உண்மையிலேயே சக்தி இருந்தால் கூட சக்தியை குறைத்துக் காட்டக்கூடிய சாமர்த்தியம் முதலாளிகளிடத்தில் இல்லையா? அதற்குத் தகுந்தபடி கணக்குகளை அவர்கள் தயார் செய்து காட்டிவிடுவார்கள். இனி மேலும் மேலும், பத்திரிகைத் தொழிலில் மட்டுமல்ல, மற்ற எல்லா தொழில்களிலும் அமைதியின்மையை ஏற்படுத்தும் ஒரு சூழ்நிலையை இந்த சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு தெரிந்தோ, தெரியாமலோ ஏற்படுத்தி விட்டது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வந்த பிறகு தான் கோவை மில் முதலாளிகளுக்கும், மதுரை மில் முதலாளிகளுக்கும் எங்களுக்கு சக்தி இல்லை, வருமானம் இல்லை என்று கணக்கு தயார் செய்துகொண்டு சில ஷிப்டுகளை மூடப்போகிறோம் என்று சொல்லும் துணிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் கொஞ்சம் அவர்கள் யோசனை செய்து கொண்டு



25th March 1958] [Sri M. Kalyanasundaram]

தான் இருந்தார்கள். அவர்கள் நிர்ப்பந்தமாக இப்பொழுது சில ஷிப்டுகளை மூடப்போகிறோம் என்று சொல்லுவதற்கு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு தான் உதவி செய்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அமைச்சர் அவர்கள் எவ்வளவு திறமையாக வேலை செய்தபோதிலும் சரி, இந்த சூழ்நிலையை எப்படி மாற்றுவது என்பது பற்றி அவர்கள் யோசனை செய்யவேண்டும். பஞ்சாலை நெருக்கடி சம்பந்தப்பட்ட மட்டில், மத்திய சர்க்கார் மில்துணி மீது விதிக்கக்கூடிய வரிக்கு சலுகை கொடுத்தார்கள் அம்மாதிரி சலுகை கொடுத்தது நியாயமா, அநியாயமா என்பது ஒரு பக்கத்தில் இருக்கட்டும், அந்த அளவுக்கு துணி விலை குறைந்தால் நல்லது தான். துணி விலை குறையவேண்டுமென்பது தான் நம்முடைய நோக்கம். விலைவாசிகள் குறையவேண்டுமென்பது தான் எல்லோருடைய விருப்பமும். மத்திய சர்க்கார் ஒரு நல்ல காரியத்தை செய்யும்பொழுது, அதனால் வேறு ஏதாவது தீமை ஏற்படுமா என்பதை சிந்தனை செய்யாமலே, முடிவு எடுத்து காரியங்களை செய்கிறார்கள். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை, பாதகங்களை தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மத்திய சர்க்காரின் முடிவை வரவேற்க முடியாத நிலையில் ஏன் இருக்கிறேன் என்றால், இதனால் கைத்தறி பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு கவலையில்லை. கைகத்தறிக்கு கொடுக்கப்பட்ட ரிபேட்டை குறைத்த போதே மில் முதலாளிகளின் நிர்ப்பந்தத்தின் பேரில் அப்படிச் செய்திருக்கலாம் என்று சூசமாக அப்பொழுது சொன்னேன். இப்பொழுது உண்மையாகவே அந்த நிர்ப்பந்தத்தின் காரணமாகத் தான் கைத்தறிக்கு கொடுத்து வந்த ரிபேட்டை குறைத்திருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. மில் துணிக்கு சலுகை கொடுக்கக்கூடாது என்ற கருத்தல்ல. ஆனால் கைத்தறிக்கு கொடுத்து வந்த பழைய ரிபேட் தொகையையாவது கொடுத்திருக்க வேண்டும். கைத்தறி துணி நிறைய தேங்கியிருக்கிறது. இதனால் கைத்தறி துணி நமது ராஜ்யத்தில் மேலும் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய நிலைமையில் இல்லை. இதற்குக் காரணம் துணி உற்பத்தி சம்பந்தமாக நூல் உற்பத்தி சம்பந்தமாக மில் சம்பந்தமாக மத்திய சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கை தான். இது விஷயத்தில் மத்திய சர்க்கார் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை பல முறை சுட்டுக்காட்டியிருக்கிறேன். ஒரு தொழிற்சாலையில் 1,200 1,500 "ஸ்பிண்டில்கள்" வைத்து வேலை செய்யக்கூடிய ஒரு மில்லை புதியதாக நம்முடைய ராஜ்யத்தில் புகுத்தியிருக்கிறார்கள். இதற்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? இம்மாதிரி நெருக்கடியான சமயத்தில் இப்படிப்பட்ட ஒரு புது மில்லுக்கு லைசென்ஸ் அளிக்கவேண்டிய காரணம் என்ன? 30 பஞ்சாலைகள் அதிகரித்திருந்தும், மொத்தமாக வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளின் எண்ணிக்கையில் 28,000 குறைந்திருக்கிறது. மந்திரி அவர்கள் கொடுத்த அறிக்கையிலேயே நான் இதை காண்கிறேன். மத்திய சர்க்கார் லைசென்ஸ் கொடுக்கக்கூடிய லட்சுஷணத்தைப் பாருங்கள். உத்தியோக வசதியை வளர்ப்பதற்கு பதிலாக, உத்தியோக வசதியை குறைக்கக்கூடிய கொள்கையைத் தான் மத்திய சர்க்கார் கையாண்டு வருகிறது. இதற்கு எதிராக அமைச்சர் அவர்கள் உறுதியாக போராடினால் தான், பரிகாரம் ஏற்படும். இல்லாவிட்டால், ஒரு வருஷத்தில் பஞ்சாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில் ஒரு நெருக்கடி ஏற்படத்தான் செய்யும். அப்பொழுது நண்பர் ஏழுமலை அவர்கள் சொல்லியதுபோல் இந்த சட்ட சபையிலே காரசாரமான விவாதம் நடப்பதை பார்க்கலாம். இந்த மான்யத்தின் மீது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களே இந்த நிலைமையை எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சமயத்தில் சிலயோசனைகளையும் நான் சர்க்காருக்குச் சொல்ல 12–p.m.
விரும்புகிறேன். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு நம் உணவு அமைச்சரோ மத்திய சர்க்கார் அமைச்சர்களோ எதுவும் செய்யவில்லை. விலைவாசிகள் இன்னும் உயர்ந்துக்கொண்டேதான் இருக்கின்றன. உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகியிருக்கிறதென்று கனம் அமைச்சர் சொன்னார். ஆனால் விலைவாசிகள் உயர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. ராஜ்ய சர்க்கார் தங்களுடைய புள்ளி விவரங்களை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஷெட்யூல்களைக் கொண்டு தயாரித்திருக்கிறார்கள். அதுவும்

[Sri M. Kalyanasundaram] [25th March 1958

விலைவாசிகள் உயருவதைத் தான் காண்பிக்கிறது. விலைவாசிகள் உய ரும்போது தொழிலாளிகள் எப்படி அமைதியுடன் இருக்க முடியும்? ஆகவே விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போதைய "கன்சிலியேஷன்" நிர்வாகம் அதிக வேலைகளைச் செய்து வருகிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் சில பிரச்னைகள் தீர்க்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதற்குக் காரணம் லேபர் ஆபீஸர்களின் பற்றுக்குறை என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். ஒவ்வொரு ஜில்லா விற்கும் ஒரு லேபர் ஆபீஸர் வேண்டும். கோயம்புத்தூர், மதுரை ஜில்லாக் களுக்கு தேவையானால் அதிகமான லேபர் ஆபீஸர்களை நியமிக்கலாம். தொழில் தகராறுகள் தீர்க்கப்படுவதில், தொழிலாளர்களும் முதலாளிகளும் பரஸ்பரம் பேச்சுவார்த்தை நடத்திக்கொள்வதற்கு சமரஸ நடவடிக் கையில் வாய்ப்பு அளிக்கவேண்டியது அவசியம் என்று கனம் அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஒரு இடத்தில் தகராறு இருந்தால் அதை சமரஸமாக தீர்த்து வைப்பதற்கு சமரஸ அதிகாரி அங்கே வந்த மூன்று வாரங்களுக்குப் பிறகு தான் கூட்டத்தை நடத்த முடிகிறது. அதுவரையில் தொழிலாளி களையும் முதலாளிகளையும் கூட்ட முடியவில்லை. சமரஸ அதிகாரிகள் அந்த அந்த இடங்களுக்கு அவ்வப்போது செல்ல முடிவதில்லை. ஆகவே போதிய சமரஸ அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

மணப்பாரை தியாகராய மில்லில் பஞ்சப்படியை 8 மணி நேர வேலைக்கு 3 அணா என்று நிர்ணயித்தார்கள். 6 மணி நேரம் வேலை செய்தால் அந்தத் தொகை குறைக்கப்படும் என்றும் அந்த மில்காரர்கள் சொன்னார் கள். இந்த விஷயத்தில் அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் என்று தெரியவில்லை. குலசேகரபுரத்தில் இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் 2,000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் $11\frac{1}{2}$ அணா வீத த்தைக் கேட்டார்கள். ஆனால் $9\frac{1}{2}$ அணா தான் கொடுக்கப்போவதாகச் சொல்கிறார்கள். அந்தத் தகராறு என்னவாயிற்று என்று தெரியவில்லை. மேலும், பாலகிருஷ்ணண் அண்ட் பிரதர்ஸ் மோட்டார் தொழிற்சாலையில் ஒரு தகராறு இருக்கிறது. அந்தத் தகராறு பற்றி புகாருக்கு மேல் புகார் வருகிறது. முதலாளிகளிடம் தொழிலாளர்கள் புள்ளி விவரங்கள் கேட்கிறார் கள். அவர்கள் புள்ளிவிவரங்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களுக்கு போதிய சம்பளம் கொடுக்கவும் மறுக்கிறார்கள். இந்தத் தகராறுகள் மிகமிக மோசமாகி வருகின்றன. இந்தத் தகராறுகள் சம்பந்தமாக சர்க் கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்களோ, தெரியாது. தகராறுகளை அவ்வப்போது கவனித்துத் தீர்த்துவைப்பதற்காக அதிக லேபர் ஆபீஸர்களை நியமிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தொழில் தகராறுகளைத் தீர்த்துகொள்வதற்காக கோர்ட்டுக்குப் போவது அதிகமாகிவிட்டது. சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தபோது தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை இருந்தது. சட்டப்படி தொழிற் சங்க இயக்கம் நடக்க வேண்டுமென்று முறை வந்த பிறகு தொல்லைகள் அதிகமாகி தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை நீங்க ஆரம் பித்தது. இப்போது கோர்ட்டுகளுக்குப் போவதால் தொழிளாலர்கள் அதிக மாக எதையும் சாதித்துக் கொள்ள முடிவதில்லை. கோர்ட்டுகளில் நிறைய வழக்குகள் நடந்தால் தம் இலாகாவிற்கு நிறைய வருமானம் வரும் என்று வருவாய் அமைச்சர் நினைக்கிறார். சக அமைச்சரே தொழில் அமைச்சரின் நற்காரியங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார். மனுக்களை சமர்ப்பிக்கும்போது ஸ்டாம்பு வாங்கி ஒட்ட வேண்டிவிருக்கிறது. முன் பெல்லாம் 5 ரூபாய் எடுத்துக்கொண்டு கஜனாவிற்கு போனால் மனுவை சமர்ப்பித்துவிடலாம். இப்போது அதிகப் பணம் கொண்டுபோக வேண்டி யிருக்கிறது மனுவின் மேல் ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. தொழில் தகராறுபற்றிய மனுக்களுக்காவது, மனுவின் மேல் ஸ்டாம்பு ஒட்டவேண்டிய விதியினின்றும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



25th March 1958] [Sri M. Kalyanasundaram]

மேலும் இப்போது தொழிற் சங்கத்தினர் எழுதும் கடிதங்களுக்கு தொழில் இலாகாவிலிருந்து பதிலே வருவதில்லை. தற்செயலாக எப்போ தாவது பதில் வருகிறதே தவிர, சாதாரணமாக பதில் வருவதில்லை. இதை என் சொந்த அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன். தமிழ் நாடு தொழிற்சங்கத்தின் நிர்வாக தலைவராக நான் இருக்கிறேன். தமிழ் நாடு தொழிற் சங்கத்தில் அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ சர்க்கரை செட்டியார். அதன் நிர்வாகத் தலைவராக நான் இருக்கிறேன். இந்த சபையின் அங்கத்தினராகவும் நான் இருக்கிறேன். நான் எழுதும் கடிதங்களுக்கே நூற்றுக்கு ஒன்றிற்காவது பதில் வந்திருக்கிறது என்று நான் நிச்சயமாகச் சொல்லமுடியாது. பதில் எழுதுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது. சமரசம் செய்து வைப்பதில் கஷ்டம் இருக்கலாம். உடனுக்குடன் பதில் எழுதுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இலாகாவில் போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லையென்றால், வேண்டிய குமாஸ்ததக்களையோ மற்ற உத்தியோகஸ்தர்களையோ நியமித்து, உடனுக்குடன் பதில் எழுத செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில மசோதாக்களைக் கொண்டுவருவதாக கனம் அமைச் சர் வாக்குறுதி அளித்திருந்தார். தொழிற் சங்கங்களுக்கு அங்கீகார மளிப்பது சம்பந்தமானது ஒரு மசோதா. தொழிற் சங்கங்கள் அங்கீகரிக்கப் படவேண்டுமென்ற முறை இருந்தால்தான் தொழிலாளர்களுக்குள் ஒற்று மை ஏற்படும். தொழிளாலர்களுக்குள் ஒற்றுமை இல்லாதிருப்பதற்குக் காரணஸ்தர்கள் தொழிலாளர்களோ அரசியல் கட்சியனரோ தான் என்று கூறுவதை நான் மறுக்கிறேன். தொழிலாளர்கள் வேறுபட்ட அரசியல் கருத்துகள் கொண்டவர்களாக இருக்கக்கூடும். அதன் காரண மாக அவர்களிடையே பிளவு ஏற்படுவதில்லை. இப்போது முதலாளிகள் நல்ல பலமான தொழிற் சங்கங்களுக்குப் போட்டியாக சில சங்கங்களை அமைக்கிறார்கள், முதலாளிகள் தங்கள் கையாட்களைக் கொண்ட போட்டிச் சங்கங்களை அமைக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் தொழிலாளர் களுக்குள் இருக்கும் ஒற்றுமை கெடுகிறது. ஆகையால் சில நிபந்தனை களுக்குட்பட்டுத் தான் தொழிற்சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்று விதிக்கும் மசோதாவைக் கொண்டுவருவது மிகவும் அவசியம். அந்த மசோதாவை சீக்கிரம் கொண்டுவர வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். கடை சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட மசோதா வைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், மத்திய . சர்க்கார் அதைக் கொண்டுவரப்போவதாக இராஜ்ய சர்க்கார் சொல்கிறார்கள். இராஜ்ய சர்க்காருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டதாக மத்திய சர்க்கார் சொல்கிறார்கள். அந்த மசோதாவும் எப்போது வரும் என்று தெரியவில்லை. பீடி தொழிலாளர்களுக்கான மசோதா வெளியிடப்பட்டி ருக்கிறது. அதைக் கூட சட்டமாக்கவில்லை. சபையின் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளாகவாவது அதைச் சட்டமாக்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி வரவில்லை என்று சொல்லப்படுகிறது. (குறுக்கீடு) வந்துவிட்டால் ரொம்ப சந்தோஷம். தொழிற்சாலைகளில் விடுமுறை தினங்களை நிர்ணயிக் கப்பட வேண்டும். முக்கியமாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் மே தினத்திற்கு விடுமுறை கொடுக்கப்படவேண்டும். அது போன்ற முக்கிய மான மற்ற தினங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கு விடுமுறை கொடுக்க வேண்டும்.

இப்போது தொழிற்சாலைகள் சரிவர "இன்ஸ்பெக்ட்" பண்ணப்படுவ தில்லை. "பாக்டரி இன்ஸ்பெக்ஷன்" மிகவும் மோசமாக நடத்தப்படுகிறது. இதன் காரணமாகத் தான் தொழிற்சாலை விபத்துக்கள் அதிகமாகி வருகின் றன என்றுகூடச் சொல்லுவேன். சிறிய தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் கொஞ்சம் அனுதாபத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென் பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவைகளைப் பொறுத்த வரையில் தவறுக்குப் பொறுப்பானவர்களை "ப்ராஸிக்யூட்" பண்ண வேண்டாம். தொழிலாளர்கள் முன்னிலையில் தொழிற்சாலைகள் பார்வையிடப்படுவதில்லை

[Sri M. Kalyanasundaram [25th March 1958

ஆயில் மில்கள், அரிசி மில்கள் போன்ற சிறிய தொழிற்சாலைகளில் இன்ஸ்பெக்ஷன் சரியாக நடப்பதில்லை. எல்லாத் தொழிற்சாலைகளிலும் இன்ஸ்பெக்ஷன் நடக்கச்செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் தொழிலாளர்களின் நியாயமான சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு "வேஜ் போர்ட்" அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

12-50 p.m. *THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாய்யக் கோரிக்கை மீது பங்கெடுத்துக் கொண்ட கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த வருஷத்திலே இவ்விலாகா எந்த முறையில் நடந்துகொண்டது, அதில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் என்ன, அதில் இலாப நஷ்டங்கள் என்ன என்பதையெல்லாம் நன்றாக விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தினம் இதுவாகும். அந்த முறையிலேதான் இதில் தவறுகள் இருந்தாலும் சரி, அல்லது போற்றக்கூடிய அம்சங்கள் இருந்தாலும்சரி, எல்லாவற்றையும் கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த அறிக்கையைத் தயாரித்து சர்க்கார் வெளியிட்டிருக்கின்றது.

இந்த அறிக்கையிலே எல்லாம் பாராட்டுதற்குரிய விஷயங்களைச் சொன்னதாக நினைத்து கனம் சின்னதுரை அவர்கள் என்னிடம் கேட்டார்கள். "ஒரு இலட்சம் 60 ஆயிரம் பேர்கள் வேலை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்க, இருபத்து நான்கு ஆயிரம் பேர்களுக்குத் தான் வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இது என்ன பெருமையாக அச்சடித்து வெளியிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். இது ஆண்டு அறிக்கை. இருக்கிற நிலைமையை, உள்ளது உள்ளவாறு எடுத்துச் சொல்வதற்காக எழுதப்பட்டது. குறைபாடுகள் இருந்தால் அவைகளையெல்லாம், உங்களுக்குப் புள்ளி விவரம் கிடைக்காது என்ற காரணத்தால், சர்க்காரே எடுத்துக் காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்பட்டது. நாட்டில் இருக்கும் நிலைமையை தெளிவுபடுத்துகிற முறையிலே தான், இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் அதிகமாக இருக்கிறது என்று காட்டுகிற முறையில் தான் இது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

அதே முறையில்தான் விபத்து கூட அதிகமாக இரண்டு வருஷ காலமாக ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, அதற்கு கனம் அங்கத்தினர்கள் கவனம் செலுத்தவேண்டும். இதை வெளிப்படையாகக் கூறுவதன் மூலமாக முதலாளிகள் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில் நிர்வாகத்திலே இருக்கும் உத்தியோகஸ்தர்களும் இதில் கவனம் செலுத்தவேண்டும். இதற்கெல்லாம் மேலாக தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கிறவர்கள் இவ்வாறு விபத்துகள் ஏற்படும் காலத்திலே அக்கறையுடன் அவைகளைச் சர்க்காருக்கு எடுத்துக் காட்டி, சுட்டிக்காட்டி, எந்தெந்த முறையிலே அவற்றையெல்லாம் தவிர்க்க முடியும் என்று யோசனை கூற வேண்டும் என்பதற்காகத் தான் இதையும் வெளியிட்டிருக்கிறோம்.

1958–59-ம் வருஷத்திலே என்ன செய்ய இருக்கிறது என்பதை மாத்திரம் நான் முதலில் சொல்லிவிட்டு, அதன் பிறகு பல்வேறு யோசனைகள் கூறியது சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முன் வருகிறேன்.

1958–59-ல் முக்கியமாக இந்த ஒட்டல் தொழிலாளர் சட்டம் நிறைவேற்றப்படும். காலதாமதம் ஆனதற்குக் காரணம் நம்முடைய சட்டசபையில் இருக்கும் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி அதற்கு நேரம் ஒதுக்காததுதான் என்பதை நான் மிகத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பீடித் தொழிலாளர் சட்டம் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. அதை ஒரு ஆலோசனைக் குழுவுக்கு விடவேண்டுமென்பது சர்க்காருடைய அபிப்பிராயம். ஆகவே, அதையும் இந்த சட்டசபைக் கூட்டம் முடிவதற்கு முன்னால் சபை முன் வைத்து, அதை ஆலோசனைக் குழுவுக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.



25th March 1958] [Sri R. Venkataraman]

இப்பொழுது மகப்பேறு காலத்திலே பெண் தொழிலாளர்கள் அடைகிற சலுகைகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அவைகளைப் பெருக்குவதற்கான சட்டத்தை, அதாவது Maternity Benefits Act என்ற சட்டத்தை மேல் சபையில் நிறைவேற்றியாய்விட்டது. அதுவும் கூடிய சீக்கிரம் இந்தச் சபையில் நிறைவேற்றப்படும். அதன் மூலமாக, மகப்பேறு காலத்திலே நம்முடைய நாட்டிலே இருக்கும் பெண் தொழிலாளர்களுக்குச் சலுகை அதிகமாக்குவதற்கும் அவர்களுக்கு அதிக நாட்களுக்கு இந்த வசதிகள் அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, நாட்டில் இருக்கும் தொழிலாளர்கள் பலருக்கு தேசீய விடுமுறை நாட்கள் என்று இல்லை. பலம் பொருந்திய தொழில் ஸ்தாபனங்கள் ஓரளவு ஒப்பந்தங்கள் மூலமாக, கோர்ட் தீர்ப்புகள் மூலமாக அவற்றைப்பற்றி சில முடிவுகள் பெற்றிருக்கிறார்கள். பொதுவாக, பாக்டரிகளில் வேலை செய்கின்றவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்ற காரணத்தினால் அவர்களுக்கு ஏழு நாட்கள் குறைந்தபட்சம் கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தையும் கொண்டுவருவதற்கு முன் வந்திருக்கிறது.

"பீடித் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணய போர்டு அமைப்பதில் ஏன் காலதாமதம்?" என்று கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் கேட்டார்கள். கூலித் தகராறைத் தீர்ப்பதற்கு போர்டு நியமிப்பதாகச் சொன்னவுடனேயே பல இடங்களிலே பெரிய தகராறுகள் ஏற்பட்டு பாக்டரிகள் எல்லாம் மூடும் நிலைமை உண்டானதால், முதலில் அதனைச் சமாளிப்பதற்கான நிலைமை ஏற்பட்டது. அவைகளையெல்லாம் நியாயமான முறையில் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டு தீர்ப்புகளும் இப்பொழுது வந்துவிட்டன. ஆகையால், இப்பொழுது சீக்கிரமாக இந்தக் கமிட்டி அமைக்கப்படும். அமைக்கப்படுகிற கமிட்டி கூட, கோர்ட்டுக்கு தீர்ப்புகளின் அடிப்படையிலேயே அவர்களுடைய காரியங்களைச் செய்வதற்கும் உதவியாக இருக்கும். நம்முடைய இராஜ்யத்திலிருக்கும் எம்ப்பிளாயிஸ் ஸ்டேட் இன்ஷ்யரன்ஸ் திட்டத்தை இப்பொழுது நமது இராஜ்யத்தில் சில பகுதிகளில்தான் விஸ்தரித்திருக்கிறோம். பல பகுதிகளில் இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. 1,500 தொழிலாளர்களுக்கு மேற்கொண்டு எல்லா இடங்களிலும் எம்ப்ளாய்ஸ் ஸ்டேட் இன்ஷ்யரன்ஸ் திட்டம் விஸ்தரிப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அதையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டது.

சமீபத்தில் கோவையில் நடந்த மகாநாட்டில் எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஸ்ஷ்யரன்ஸ் திட்டம் சம்பந்தமாக முதலாளிகள் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு, அதை விஸ்தரிக்கப்படாத இடங்களுக்குத் துரிதமாக விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு இணங்கும் குடும்பங்களுக்கு விஸ்தரிக்கிற காலம் சற்று தாமதம் ஆனாலும், அதற்காக காத்திருக்கத் தேவையில்லை என்று நமது இராஜ்யத்தில் விஸ்தரிக்கப்படாத இடத்திற்கு முதலில் விஸ்தரிக்கவேண்டுமென்பது முடிவு. அவ்வாறு நாம் விஸ்தரிப்புச் செய்யும்போது இந்திய நாட்டிலேயே இந்த இராஜ்யம் ஒன்றில்தான் எல்லாத் தொழிலாளர்களுக்கும் எம்ப்பிளாயிஸ் ஸ்டேட் இன்ஷ்யரன்ஸ் திட்டம் விரிவடையப்பட்டிருக்கிறதென்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சில முக்கியமான அம்சங்களை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள்— "1954-ம் வருஷத்திலிருந்து 1956-வருஷம் வரையிலும் கூலி உயர்வு 689-லிருந்து 1,016 ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவுப் புள்ளியினுடைய உயர்வானது இந்தப் புதிய அளவுக்கு இருக்கிற கூலி ஓரளவு உண்மை அல்ல என்று நிரூபிக்கும்" என்று சொன்னார்கள். நான் புள்ளி விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன். 1954வது வருஷத்தில் சென்னையில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 341. 1956வது வருஷத்தில் 358. ஆகவே 17 புள்ளிகள் தான் உயர்ந்திருக்கிறது. ஆனால், கூலி விகிதம் 690 இலிருந்து 1,016 ஆக உயர்ந்திருக்கிறது.

[Sri R. Venkataraman] [25th March 1958

இதுபோல், கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டாலும் 391 இலிருந்து 413 ஆகத்தான் உயர்ந்திருக்கிறது. மதுரையில் 346 இலிருந்து 356 ஆகத்தான் உயர்ந்திருக்கிறது. ஆகவே, ஓரளவுக்கு இந்தத் தொழிலாளர்களுக்கு, பாக்டரிகள் சட்டத்தின்கீழ் வந்து Payment of Wages Act இன்படி இருக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது அவர்களுக்குப் போதும் என்று நான் சொல்லவில்லை. மேற்கொண்டு கூலி உயர்த்துவதற்கு அவர்கள் கேட்கக்கூடாது என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. நாம் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில் நாம் எந்த அளவுக்கு முன்னேற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளும் முறையிலே சொல்லுகின்றேன்.

**Sri M. KALYANASUNDARAM:** நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையில் சொல்லக்கூடிய சமயத்தில் மொத்த விலைவாசி (Wholesale Price) 1956-ல் 377 ஆக இருந்து இப்பொழுது 508 ஆக உயர்ந்திருக்கிறது என்று கூறினார்கள். அப்படியிருக்கும்போது, வாழ்க்கைப் புள்ளி மட்டும் இந்த அளவுக்கு மட்டும் தான் உயர்ந்திருக்கிறது என்று சொல்வதினால் ஏதோ மாறுபாடு இருப்பதாகத் தெரிகிறது. வாழ்க்கைப் புள்ளி தயாரிக்கும் இலாகாவின் வேலையைக் கொஞ்சம் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN:** Cost of living index தயார்செய்கின்றபோது எந்த அளவுக்கு உணவு உபயோகப்படுகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒருவருடைய வாழ்க்கைச் செலவில் சுமார் 40 சதவிகிதம் தான் உணவு. ஆகவே, 508 ஆக உயர்ந்திருந்தபோதிலும், அதில் 40 சதவிகிதம் தான் வாழ்க்கைத்தர உயர்வுக்கு சதவிகிதமாக எடுத்துக்கொண்டு கணக்குப் போடப்படும். உணவுப் பொருள்களுடைய விலைவாசி ஓரளவு உயர்ந்திருக்கலாம். வேறு பொருள்களுடைய விலைவாசி ஓரளவு குறைந்திருக்கலாம். ஆகவே, ஒரு இடத்திலே உயர்வு ஏற்பட்டு மற்ற இடத்தில் குறைவு ஏற்படும்போது அதையெல்லாம் சராசரியாகப் போட்டுத்தான் Cost of living Index அதாவது வாழ்க்கைச் செலவு புள்ளி தாயர் செய்யப்படுகிறது. ஆகவே,
1 p.m. இதில் முறண்பாடு இருப்பதற்கு இடம் இல்லை. அடுத்தபடியாக நான் முக்கியமாக எடுத்துக் காட்ட வேண்டிய விஷயம் நம் இராஜ்யத்தில் பெரிய அளவுக்குத் தொழில் தகராறுகள் கோர்ட்டுகளுக்குச் செல்லாமல் நேரிடையான சமரசப் பேச்சின் மூலமாகவும், சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிற கன்ஸிலியேஷன் ஆபீஸர் மூலமாகவும் முடிந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். கடந்த வருஷத்தில் 248 வேலை நிறுத்தங்கள்—கதவு அடைப்புகள்—நமது இராஜ்யத்தில் வந்தன. இருபத்தெட்டு கேஸ்கள் நேரிடையாக சமரஸமாகிவிட்டன. நூற்றுமுப்பத்திரெண்டு சர்க்கார் கன்ஸிலியேஷன் ஆபீஸர் மூலமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்கு என்று சென்ற தகராறுகள் மிகவும் சொற்பம் தான் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். யாராவது இந்த நிர்வாகம் வந்த பிறகு சர்க்கார் துறையில் நமக்கென்ன என்ற கவலையற்ற முறையில் கோர்ட்டுக்கு எல்லா வழக்குகளையும் விட்டுவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்குக் கொஞ்சங்கூட இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய இராஜ்யத்தில் இருக்கிற கோர்ட்டுகளில் பெண்டிங்காக இருக்கக்கூடிய வழக்குகள் எவ்வளவு என்று பார்க்கும்போது நமக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் அளவுக்குக் குறைந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். 1958–ம் வருஷம் பிப்ரவரியில் சென்னையில் உள்ள கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கக் கூடிய வழக்குகள் 31. மதுரையில் 19. கோயமுத்தூரில் எப்போதும் அதிகமான தகராறுகள் இருக்கக்கூடிய இடமாக இருந்தாலும் கூட முக்கியமாக பஞ்சாலைத் தொழில் மாத்திரம் அல்ல தோட்டத் தொழிலில் இருக்கக் கூடிய தகராறுகளையும் அந்தக் கோர்ட் தீர்க்க வேண்டியதாக இருக்கிறது, என்றாலும் கூட அங்கே பெண்டிங்காக இருக்கக் கூடிய வழக்குகள் 10 தான் என்று சொன்னால் அதைப்பற்றி நாம் பெருமை அடையாமல் இருக்க முடியாது.



25th March 1958] [Sri R. Venkataraman]

இந்த நிலைமைக்குக் காரணம் சர்க்கார் என்று நினைத்துக் கொள்ளக் 1-00
கூடாது. சர்க்கார் அப்படி நினைக்கவில்லை. இந்த நிலைமைக்குக் காரணம் p.m.
பெரிய அளவுக்கு முதலாளியும், தொழிலாளர்களும் ஒத்துழைத்து அவர்களுக்குள் விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்று எழுந்திருக்கிற விருப்பமும் அல்லது சர்க்கார் கன்ஸிலியேஷன் ஆபீஸர் சொல்கிற முடிவையாவது ஏற்றுக்கொண்டுவிட வேண்டும் என்கிற மனோபாவமும் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது நீடிக்கவேண்டும். நீடிக்கும் என்றே நான் எதிர்பார்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பாராட்டுதலை முதலாளிகள், தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகிய இருசாராருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியது ஒன்று. வீடு கட்டும் திட்டத்தில் நாம் பெரிய அளவுக்கு முன்னேற்றம் அடையாவிட்டாலும் நமக்குக் கொடுக்கப்பட்ட தொகை அளவுக்கு வீடுகளைக் கட்டி முடித்திருக்கிறோம். அடுத்த வருஷத்திற்கு 1,100 வீடுகள் திருச்சி ஜில்லாவில் வளவனூர், விருதுநகர், சிங்கநல்லூர், கெண்டி, செம்பியம் போன்ற இடங்களில் கட்டுவதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட பல அங்கத்தினர்கள் பல பிரச்சனைகளைப் பற்றி விரிவாக பேசினார்கள். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக சில தலைப்பின் கீழ் எடுத்துச் சொன்னால் சுலபமாக அதிலுள்ள நிலைமைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். ஆகவே சில தலைப்பின் கீழ் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது சென்னை ராஜ்யத்தில் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் என்பதாகச் சட்டம் நிறைவேற்றவேண்டுமென்று சொன்னார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்கிறபோது அதன் உட்கருத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பஞ்சாலைத் தொழில் என்றால் அதற்கு ஒரு சங்கம் என்று அர்த்தமா அல்லது மீனாட்சி மில்லுக்கு ஒரு சங்கம், ஹார்வி மில்லுக்கு ஒரு சங்கம் என்று அர்த்தமா? இப்படி இருந்தால் ஒவ்வொன்றுக்கும் ஒரு சங்கம் என்று ஏற்படுமானால் ஒரே விதமான விகிதங்கள், ஒரு தலைப்பாடு அவர்களுடைய வாழ்க்கை வசதிகள் இவைகள் எல்லாம் இருக்க இயலாது. கடந்த கால மேல் நாடுகளின் அநுபவத்தை எடுத்துப் பார்க்கும்போது ஒரு விதமான தொழிலுக்கு ஒரே சங்கம் வைத்துக்கொண்டு அத்தொழில் சம்பந்தமாக எழுகிற தகராறுகளை எல்லாம் தீர்த்து இருக்கிறார்கள். அதுவன்றி தனித்தனியாக வைப்பதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகிறது.

அடுத்தப்படியாக தொழிற்சங்கத்தை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது 15 சத வீதம் தொழிலாள அங்கத்தினர்கள் இருந்தால் அங்கீகரிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதைக் கடந்த சென்னை ராஜ்ய ஆலோசனை போர்டில் வைத்து விவாதித்ததில் 80 சத விகிதம் 85 சத விகிதம் அங்கத்தினர்களைக் கொண்ட பெரிய சங்கங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கும்போது 15 சத விகிதம் அங்கத்தினர்கள் கொண்ட சங்கத்தையும் அங்கீகாரம் செய்யலாம் என்றால் போட்டி சங்கங்கள் இல்லாத இடத்தில்கூட போட்டிச் சங்கங்கள் வைப்பதற்கான நிலைமை ஏற்படும். பலவித சங்கடம் உண்டாகிவிடுமோ என்று சொன்னார்கள். ஆகவே இதுவிஷயமாக முடிவான அபிப்பிராயத்தை யாருடைய நன்மைக்காகச் செய்கிறோமோ அவர்களைக் கலந்து கொண்டே செய்ய வேண்டும் என்பதற்காக அடுத்து வருகிற கூட்டத்திற்கு சென்னை ராஜ்ய தொழில் ஆலோசனை போர்டு கூட்டத்திற்கு ஒத்தி வைத்திருக்கிறோம் அதைச் செய்யும்போது அதில் ஏற்படுகிற சிக்கல்கள், அதனால் ஏற்படுகிற விளைவுகள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து செய்ய வேண்டியிருப்பதால் அவசரப்பட்டு இதில் ஒன்றும் செய்ய இடம் இல்லை. ஆகவேதான் சர்க்கார் எவ்வளவு இஷ்டப்பட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினாலும் இதுவரையில் முடிவான

அபிப்பிராயத்திற்கு வரமுடியவில்லை. இந்த விஷயத்தில் தொழிற்சங்க தலைவர்கள் எல்லாம் ஆழ்ந்து பரிசீலனை செய்து தங்கள் அறிவின் இறுதி முடிவைக் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய அநுபவத்தை ஒட்டி இதை நன்ருக ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஸ்ரீ மாதா கௌடர் அவர்கள் பேசினார்கள். இது சம்பந்தமாக சில சரித்திர நிகழ்ச்சி இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னால் அகில இந்திய, சர்வ தேசத் தொழிலாளர் மகாநாட்டில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு தொழிலாளர்களுடைய நிலைமையைப் பரிசீலனை செய்தபோது தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற கங்காணி முறை மிகவும் கேவலமானது அதை ஒழித்து விடவேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். கங்காணி என்று சொல்கிறபோது இரண்டுவிதமான நபர்கள் அவ்வாறு சொல்லப்படுகிற ஒரு பெயரின் கீழ் வருகிறார்கள். ஒன்று ஆட்களை மாத்திரம் சேகரித்துக் கொடுத்துவிட்டு கமிஷன் வாங்கிக்கொண்டு போகிறவர்கள் ஒரு சாரார். இரண்டாவது ஆட்களைச் சேகரித்து கொடுத்து அவர்களுடன்கூட இருந்து வேலை செய்து மேற்பார்வை பார்க்கிறவர்கள். ஆகவே கங்காணி என்று பொதுவாகச் சொல்லிவிட்டால் பெரிதும் குழப்பம் ஏற்படுகிறது. ஆட்களைத் தேடிக் கொடுத்து மேற்பார்வை பார்த்து அவர்களுடனேயே வேலை செய்யக்கூடியவர்களை ஒழிக்கக்கூடாது. அவர்களுக்குத் திட்டவட்டமாக—நிரந்தரமாக—வேலை கிடைக்கும்படி செய்ய வேண்டும் என சென்னை சர்க்கார் முடிவு செய்து இது விஷயமாகப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. அந்த ஒரு சாராருக்கு நிரந்தரமான வேலை கிடைக்கவேண்டும், அவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்யவேண்டும், அவர்களும் இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்குரிய நிலைமையை உண்டாக்க வேண்டுமென்பது சர்க்காரின் நோக்கம். அதற்காக இந்த வருஷம் மே மாதத்தில் முக்கூட்டு மகாநாடு கூட்டுவதாக முடிவு செய்திருக்கிறது. அப்படியே செய்வார்கள் என்று நினைக்கிறேன். மேலும் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். வெளியார் எல்லோரும் தொழிற் சங்கத்தைவிட்டு வெளியே போய்விட்டால் எந்த விதமான தொந்தரவும் இருக்காது என்பதாக. இது பழைய காலப் பிரச்சனை. 1926-ம் வருஷத்தில் இந்திய தேசீய தொழிற் சங்கத் சட்டத்தைக் கொண்டு வரும் போது வெளியார்கள் இருக்கலாமா, இருக்கக்கூடாதா என்ற பிரச்சனை மிகவும் பலமாக எழுந்தது. ஆனால் தனி நபர்கள் அபிப்பிராயத்தைச் சொல்வதற்குப் பதிலாக 1930-ம் வருஷம் ராயல் கமிஷன் ஆப் லேபர் செய்த முடிவுப் பிரகாரம் அந்தப் பிரச்சனை பரிசீலனை செய்து பார்த்த போது தொழிலாளர்களே தலைவர்களாகக் இருக்கவேண்டுமென்று சொல்கிற வாதம் சரியல்ல, அவர்களை மிரட்டவோ, பயமுறுத்தவோ, மாற்றவோ முதலாளிகளால் முடியும் என்று சொல்லப்பட்டது.

ஆகவே, இதில் அவர்கள் அவ்வாறு செய்யும்பொழுது, தொழிலாளர்களையே தலைவராக வைத்துக் கொண்டிருப்பது முடியுமா என்று பார்க்க வேண்டும். சமீபத்தில் ஆசிய தொழிலாளர்கள் மகாநாடு ஒன்று டெல்லியில் கூடிற்று. அதில், நம்முடைய இந்தியன் யூனியனில் இருக்கிற சட்டம் 1926ம் தொழிற்சங்க சட்டப்படி பாதி மடங்கிற்கு மேல் வெளியார் இருக்கக் கூடாதென்பதை அவர்கள் ஆட்சேபித்தார்கள். வெளிநாடுகளில் இருந்து வந்த தொழிற்சங்கத் தலைவர்கள், யார் தொழிற்சங்கத் தலைவராக இருக்க வேண்டுமென்று சொல்வது சர்க்காருக்கோ முதலாளிகளுக்கோ என்ன உரிமையிருக்கிறது. அவர்கள் இஷ்டப்படித் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அந்த காரணத்தினால் நாம் இயற்றிய சட்டம் சரி என்று ஏற்றுக்கொள்ளவில்லை. கன்வென்ஷனுக்கு ஒப்பாதது என்று அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, திடீரென்று இதுபற்றி ஒரு முடிவு செய்வது சரியல்ல. ஆலோசித்துத்தான் செய்யவேண்டும். பின், குறைந்த பட்ச கூலி பலயிடங்களிலும் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அவற்றுள் சிலவற்றிற்கு இப்பொழுதே குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டது. முக்கியமாக, தோல் பதனிடும் தொழிலுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.





இன்னும் இதர தொழில்களுக்கும், வீடு கட்டும் தொழிலுக்கும் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. உப்பளம் அடுத்தபடியாக விவசாயத் தொழிலாளர்கள் இவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. உப்பளம் சம்பந்தமாகவும், விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாகவும் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக நம் சட்டசபையிலேயே இருவித அபிப்பிராயங்களைக் கேட்டோம். ஒன்று, குறைந்த கூலியிருக்கிற இடத்திலாவது நாம் குறைந்தபட்சகூலித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அதன் மூலம் குறைவாக சம்பளம் வாங்குகிறவர்கள் ஓரளவு நன்மையடைய வேண்டும் என்பது. மற்றொன்று, குறைந்த பட்ச கூலியை வளம் உள்ள பிரதேசங்களாக பார்த்து அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு முன் சென்னை ராஜ்ய சர்க்கார் குறைந்த பட்ச கூலி சிலயிடங்களிலாவது கொண்டு வர வேண்டுமென்று நோட்டிபிகேஷன் போட்டபோது பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டதால் முடிவு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் அது ஒத்தி போடப்பட்டது. இன்று நாம் குறைந்த பட்ச கூலி விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொள்கிறோம். அதை எந்த முறையில் செய்தால் எவ்வாறு பரிசீலனை செய்தால் அதை அமுல் நடத்தமுடியும் என்பதை நாம் ஆராயவேண்டும். சட்டங்கள் இயற்றினால் மட்டும் எல்லாச் சலுகைகளும் எல்லொருக்கும் கிடைக்கப் போவதில்லை. எந்தெந்த இடங்களில் சட்டங்கள் சரியாக அமுல் நடத்தப்படவில்லை என்று அதிகாரிகள் கண்காணித்து விடுவார்கள் என்பது முற்றிலும் சரியல்ல. என்னை ஒருவன் அடித்துவிட்டால், இன்டியன் பீனல் கோட் பிரகாரம் நான் கோர்ட்டில் தாவா கொடுத்தால்தான் அவர்கள் அந்த ஆளை பிடிப்பார்களேயல்லாது பீனல் கோட் தானகவே ஆளை பிடிப்பதில்லை. ஆகவே, தொழிற்சங்கங்கள் பலமாக வளர்ச்சி அடைந்தால்தான், எந்தெந்தயிடங்களில் சட்டங்கள் கொண்டு வந்து சலுகைகள்கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தயிடங்களில் அவர்கள் சலுகை பெற சாத்தியமாகும். ஒரு நோட்டிபிக்கேஷன் மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்னின்ன கூலி குறைந்தபட்சம் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதெல்லாம் உடனடியாக நிறைவேறிவிடும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே, சர்க்கார் குறைந்த படச கூலி நிர்ணயம் செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கையில், அத்தொழிலில் அக்கறை உள்ளவர்கள் விவசாயத்தொழிலாளர் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் அவர்கள் கண்காணிப்பாக இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, நெய்வேலியில் எம்ப்ளாய்மென்ட் எக்சேன் மூலம் ஆட்கள் எடுக்கப்படவில்லை என்று புகார் சொல்லப்பட்டது. அதற்கு, எனக்கு கிடைத்திருக்கிற தகவல் டெக்னிக்கல் பெர்ஸனல் தொழில்நுட்பம் உள்ளவர்களை, ஒரு கமிட்டிப் போட்டு எடுக்கிறார்கள். பின், க்ளெரிக்கல் வேக்கன்ஸீஸ் போன்றவைகளுக்கெல்லாம் கடலூர் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் எடுப்பதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது. மேற்கொண்டும் அவர்களிடமிருந்து தகவல் வரவழைத்தும் பார்க்கிறேன். அடுத்தபடியாக, ஒரு முக்கிய பிரச்னை சம்பந்தமாக சில விஷயங்கள் குறிப்பிட நான் விரும்புகிறேன். நண்பர் பழனிசுவாமி அவர்கள் ஏன் இந்த எலெக்ட்ரிசிட்டி தொழிலாளர்களுக்கு உடனடியாக கோர்ட் அமைத்து கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். சட்டபூர்வமாக பப்ளிக் யூட்டிலிட்டி சர்வீஸில் தொழில் தகருரு ஏற்பட்டவுடன் அதை கட்டாயம் கோர்ட்டிற்கு விட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் கூறியது அவ்வளவு சரியல்ல என்று நான் முதலில். தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது என் வாதம், முடிவல்ல இந்த எலெக்ட்ரிஸிட்டி தொழிலாளர்கள் பிரச்னையானது. நீண்டகாலமான ஒரு பிரச்னையாகும். அந்தத் தொழிலாளர்கள் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களில், டெம்பரரி, காஷுவல், என். எம். ஆர்., ஒ. என். எஸ். என்று எத்தனையோ வித்தியாசமிருக்கிறது. இதுவரையில் அவர்களது தொழிலாளர் தலைவர்கூட, முன்னேற்றம் காண வேண்டுமென்று நினைத்தவர்கள், பொதுவாக இண்டஸ்ட்ரியல் வொர்க்கேர்ஸ் எந்த முறையில் பலனடைந்திருக்கிறார்களோ அந்தமாதிரியான முறையை விரும்பவில்லை. என். ஜி. ஓக்கள் என்ற முறையில் என்னென்ன சலுகைகள்

கிடைக்கும் என்று அந்த விதமான முன்னேற்றத்தைக் காணவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு சிக்கல்கள் அடங்கிய பிரச்னையை நேரிடையாக விட்டுத் தீர்க்கவேண்டுமென்று நான் ஒரு முடிவிற்கு வந்தால் பல தீர்ப்புகளிலும், அனுபவம் இல்லாத, தொழில் நுணுக்கம் தெரியாதவர்கள் தவறான தீர்ப்பு கொடுத்துவிட்டு அதன் காரணமாக தொழில் தகராறு தீருவதற்குப் பதிலாக புதுத் தொழில் தகராறுகள் ஏற்பட்டு விடுமோ என்று பயந்து அதற்காக சர்க்கார் ஒரு நெகோஷியேடிங் கமிட்டி, ஏற்படுத்த முன் வந்தோம் நேரடியாக சமரசம் செய்து கொள்ள இரு தரப்பிலும் உள்ளவர்கள் அங்கத்தினர்களாக இருப்பார்கள். அதற்காக, லேபர் கமிஷனர் அவர்களையும் சேர்மனாகப் போட்டு ஒரு கமிட்டி கொடுக்கிறோம் என்று சொன்னோம். அப்படிச் சொன்னது, சர்க்கார் ஏதோ காலதாமதம் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டல்ல. உண்மையாகவே, எலெக்டிரிஸிட்டித் தொழிலாளர்களின் பிரச்னைகளை நல்ல முறையில் சுமுகமாக எப்படி தீர்த்து வைக்க முடியும் என்று ஆராய்ந்து அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் செய்யப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவ்வாறு செய்ய நான் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வருகிற வருஷத்திலும் இந்த வருஷத்தில் உள்ள நிலைமை போல் ஒரு நல்ல சீரான நிலைமை இருக்காது என்று நான் அஞ்சுகிறேன். ஏற்கெனவே, பல மில்களிலிருந்து தங்களுக்கு நூல் தேக்கம் அதிகரித்து விட்டது, அதனால் அதிகமான உற்பத்தி செய்ய முடியவில்லை, வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் அல்லது ஷிப்டுகளை மூடவேண்டுமென்றெல்லாம் சர்க்காரிடம் வந்து தெரிவித்திருக்கிறார்கள். சிலர் சட்ட விதிகளுக்கு மாறாககூட தாங்களாகவே ஒன்றிரண்டு இடங்களை மூடியும் விட்டார்கள். இந்த அறிக்கை இன்றைக்கு வெளி வந்தாலும் அது சில நாட்களுக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையை அனுப்பியதின் காரணம் சட்டத்தை நன்கு எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக. எந்த தொழிலை மூடுவதாகயிருந்தாலும் அதற்கு 21 நாள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்ற நிலைமையை எல்லாம் அந்த அறிக்கையின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இந்த அறிக்கை மூலமாக மில்கள் மூடுவதை தவிர்க்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அந்த அறிக்கைமூலம் அவர்கள் அவகாசம் கொடுப்பார்களேயானால் அதையொட்டி தொழிலாளர்களையும் முதலாளிகளையும் அழைத்து அதில் உண்மை நிலை என்னவென்று ஆராய்ந்து அவர்களுக்கும் ஒரு சமரசமான முடிவிற்கு வரும்படிசெய்ய முடியும் என்ற நோக்கத்துடன்தான் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. உண்மையாகவே நூல் தொழிலில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைமை இருக்குமானால், அதன் உண்மையை தொழிலாளர் தலைவர்கள் உணர்ந்து எப்படி ஒத்துழைத்தால் தொழிலை மூடிவிடாத நிலைமையில் ஓரளவு குறைபாடுகள் செய்துகொண்டால்தான் தொழில் நீடித்து நடக்கும் என்று நிலையில் அவைகளைச் செய்வதற்கான முயற்சிகளையும், ஒத்துழைப்பையும் கொடுப்பார்கள் என்பதில் எனக்குச் சற்றும் சந்தேகமில்லை.

அவ்வாறு இன்றைக்கு பிற சலுகைகளை கொடுக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது அவர்கள் மில்களை மூடுகிறோம் என்றுள்ள முடிவுக்கு வந்து விடுகிறார்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்கள் வருகின்ற நேரத்தில் அதை பரிசீலித்து அதன்பேரில் நடவடிக்கை எடுக்க சர்க்கார் தயங்காது என்பதை தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். இந்த நிலைமையில் இன்னும் ஒரு மாதங்களில் வரக்கூடிய நிலைமை அச்சத்தை உண்டாக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது. எக்ஸைஸ் ரிபேட் என்று கொடுத்த சலுகையை பொறுத்த அளவில் சென்னை ராஜ்யத்தில் இருக்கக்கூடிய நூற்பு ஆலைகளுக்கு இந்தச் சலுகை கிடைக்கவில்லை. நூற்பு ஆலையும், நெசவு ஆலையும் சேர்ந்திருக்கின்ற ஆலைகளுக்குத்தான் இந்த சலுகை பயன்படும். நூற்பு ஆலைகளை மாத்திரம் வைத்திருக்கின்றவர்களுக்கு சர்க்கார் கொடுத்திருக்கின்ற இந்த எக்ஸைஸ் வரி குறைப்பானது பயன்படாது. இந்த நிலைமை ஏற்படுகின்ற பொழுது அவர்கள் எந்த அளவுக்கு நூல் விலையை குறைப்பதற்கும் அதேசமயத்தில் கைத்தறி துணிகளை



விற்பதற்கும் ஒரு முடிவுகட்ட வேண்டும். அதற்கு மில் முதலாளிகளும் எல்லா தொழிற் சங்க தலைவர்களும் தங்களுடைய ஒத்துழைப்பை கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். எல்லோரும் இதில் ஒன்றுபட்டு உறுதியாக இருந்தால் கட்டாயமாக இந்த பிரச்னையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே அந்த அடிப்படையில் முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று சொல்லி, அதற்காக உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக இந்த மான்யத்தின்மீது பேசும்பொழுது என்னைப் பற்றியும் என்னுடைய இலாகாவைப் பற்றியும் பாராட்டி பேசிய நண்பர்கள் அனைவருக்கும் என் இலாகாவின் சார்பாகவும் என் சார்பாகவும் என் நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : ஸார், பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் : தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுக்கும் விஷயத்தில் தொழிலாளர்கள் அதற்கு 25 சத வீதம் கொடுத்தால் போதும் என்றிருந்தது. இப்பொழுது தொழிலாளர்களால் இந்தத் தொகையை கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் 10 சத வீதம் கொடுத்தால் போதும் என்று ஏதாவது முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? மேலும் இதற்காக ஒதுக்கப்படும் தொகையும் செலவு செய்யப்பட்டதாக தெரியவில்லை. இதைப் பற்றி என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் 10 சத விதம் கொடுத்தால் போதுமா ? என்பதை அறியவேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்கள் வீடு கட்டுகின்ற திட்டத்தில் 25 சத விதம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அவ்வாறு 25 சத வீதம் கொடுக்க முடியாது என்று 1957-ல் நடந்த 15-வது இந்தியத் தொழிலாளர்கள் மகாநாட்டில் சென்னை ராஜ்யத்தின் சார்பாக நான் எடுத்துக்கூறினேன். அதன் பின்பு நடந்த தொழிலாளர் இலாகா மந்திரிகள் மகாநாட்டிலும் இதைப்பற்றி வற்புறுத்தினேன். இதில் மாறுதல் செய்வதற்கில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லிவிட்டார்கள். இதை 10 சத வீதம் என்று குறைக்கவேண்டும் என்பதை எடுத்து மத்திய அரசாங்கத்திற்கு சொன்னபோது அங்குள்ள நிதி இலாகா ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டது. அதனால் தொழிலாளர்கள் 25 சத வீதம் கட்டினால்தான் வீடு கட்ட முடியும் என்ற நிலைமை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. R. KANDASAMY MUDALIAR rose—

DEPUTY SPEAKER : This is not question hour.

SRI V. K. KOTHANDARAMAN rose—

DEPUTY SPEAKER : This is not question hour. There can be no discussion now. The hon. Member may please resume his seat. Is hon. Member Sri Pakkirisami Pillai withdrawing his cut motion?

SRI S. PAKKIRISAMI PILLAI : I am not withdrawing my cut motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 34,01,900 under Demand XXIII —Labour including Factories be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

[25th March 1958

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 34,01,900 under Demand XXIII—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3-30 p.m.

The House then adjourned.

**(After lunch—3-30 p.m.)**

VI.—GOVERNMENT BILLS.

(1) THE INDIAN STAMP (MADRAS AMENDMENT) BILL, 1958*
(L.A. BILL NO. 12 OF 1958).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, I beg to move—

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958) be taken into consideration."

Sir, I may as well explain a few general features underlying this Bill. The Bill seeks to amend the Indian Stamp Act, 1899 in its appplication to the State of Madras. The main purpose of the Bill is to express wherever necessary in terms of decimal system of coinage the rates of stamp duty at present in force in this State. The Indian Stamp Act contains a Schedule—Schedule I laying down the rates of stamp duty originally fixed by the Government of India. The State Government have power, however, to vary the rates in respect of documents other than those specified in entry 91 of list I in the Seventh Schedule to the Constitution. The result is that there are two Schedules to the Stamp Act, Schedule I specifying the rates of stamp duty as originally fixed by the Government of India and Schedule I-A which specify the rates of stamp duty payable in Madras State on the various documents. The Bill seeks to omit Schedule I-A altogether and to amend Schedule I suitably carrying out consequential alterations in the body of the Act.

The Government of India have in consultation with all State Governments decided what should be the equivalents in terms of decimal coinage in respect of each rate and have asked all State Governments for the sake of uniformity to adopt these rates. It will be seen that the new rates proposed by the Government of India are in many cases higher than the exact decimal equivalent vide the table given in paragraph 2 of the Statement of Objects and Reasons to the Bill. It is not the purpose of the Bill to increase the existing rates as found in Schedule I-A but merely to adopt the rates fixed by the Government of India. For example, by comparing the rates for a particular article in Schedule I with the rates as now proposed to be specified in this Bill, it may seem on the face

* Published in the *Fort St. George Gazette* Gazette Extraordinary, dated 14th March 1958.



25th March 1958] [Sri M. A. Manickavelu]

of it that there is a large increase in the Stamp duty and that the Bill seeks to increase the Stamp duty from Rs. 5 to Rs. 15 or from Re. 1 to Rs. 3·75 nP. and so on. In reality this is not so. The rate specified in Schedule I for a particular instrument has already been modified by the State Government and by a series of amendments, Acts from 1922 onwards the rate has been doubled or trebled and is now in force in this State and it is this rate that is sought to be expressed in decimal coinage in terms of the rates fixed by the Government of India. For this reason it has been found difficult to prepare an annexure setting out the various rates, as while one set of rates may be misleading, another set will seem alarming.

Incidentally, opportunity has been taken to introduce four new provisions as follows :—

(1) a provision has been made to enable the rounding off of particular fractions to the nearest 10 naye paise;

(2) to amend the existing provision under which stamp duty on partition deeds was calculated at 25 times the annual revenue in cases in which the land was held on ryotwari settlement for a period not exceeding 30 years and to provide for such calculation even in cases where resettlement took place more than 30 years ago;

(3) to extend the stamp law as in force in this State to the Kanyakumari district and the Shencottah taluk;

(4) to introduce a new article to govern chittis in transferred areas.

MR. SPEAKER : கனம் அண்ணாமலை அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார். அதை அவர்கள் பிரேரேபிக்கலாம்.

SRI S. M. ANNAMALAI : Mr. Speaker, I move—

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958), be referred to a Select Committee."

SRI M. SELVARAJ : I second the amendment, Sir.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

* SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, the present amendment that has now been brought before this Assembly appears to be one intended to introduce the decimal coinage system primarily. At the same time, some additional provisions are also made. In this connection, I desire to place before the Government certain difficulties felt by the public in the supply of stamps. Some time ago, on account of some patriotic spirit so-called, stamps with the inscription of the British Emperor were withdrawn suddenly, when sufficient quantities of stamps with the new Asoka Pillar were not available and stamps of lower denominations were not available, in the districts. Telegrams had to be sent to the

[Sri R. Srinivasa Iyer] [25th March 1958

Ministers, to the officers of the Government here and to the Collector and yet for several months, stamps were not supplied. The result was this. There were some stamp vendors keeping these old stamps of higher denominations who reallly traded in black-market. Some men purchased these things from them and sold them at a higher value. Therefore, the people who were in need of smaller denominations had to go in for higher denominations and sustain heavy loss. The same is the case with regard to Court fees also. On several occasions—verification can also be made from the districts and from the telegram received Government—stamps of lower denominations were not made available. Now, this stamp law is being brought forward with a view to introducing decimal coinage. Before actually giving effect to this, it will be better that the Government see that sufficient quantities of stamps of these denominations, I mean these new denominations, are made available for sale to the public from the lowest to the highest order. Of course, the question of decimal coinage comes in only when fractions of a rupee come in. If it is Rs. $1\frac{1}{2}$ or multiples of half a rupee, it does not matter. But, at the same time, stamps with the inscription of the new coinage, must be made available before this Act is brought into force. It is stated in the First clause that the Act " extends to the whole of the State of Madras and it shall come into force on such date as the State Government may, by notification, appoint." I therefore request that this Act may be brought into force only after sufficient quantities of stamps are made available in all Government Treasuries in the State, in each district, so that there may not be any black-marketing because of the non-availability of smaller denominations. I am constrained to make this remark because on more than three or four occasions we in Pattukkottai, had to suffer for want of one anna, two annas and even twelve annas stamps. Therefore, people had to go in for higher denominations and also use a large number of small value in stamp papers in lieu of higher denominations.

Moreover, the Government will also be losing their income, and the revenue which they are otherwise capable of getting if really stamps of various denominations are not made available in sufficient quantities. Because of the increase in stamp duty rates, there is already a tendency on the part of some people to lower the value of the consideration for the conveyance or exchange and evade the stamp duty.

That is one other reason, apart from the tendency on the part of the people to evade taxes. There is this difficulty in getting stamps of proper denomination and, therefore, they go in for available stamps, whether they are of higher or lower value.

3-40 p.m. Sir, it would have been much easy for hon. Members to study the Bill and understand its provisions, if they had been supplied in a parallel column both the old schedule and the new one that they want to introduce now. Such a practice was observed on previous occasions. Perhaps the schedule is too long and therefore, it has not been supplied to hon. Members. Sir, it has taken



25th March 1958] [Sri R. Srinivasa Iyer]

several hours for some of us to go through four books—the Indian Stamp Act of 1899, the Madras Stamp (Amendment) Act of 1922, the Madras Stamp (Increase of Duties) Act of 1943 and the present Bill. We had to take a lot of trouble to find out the implications of the various provisions of the Bill. We also find certain mistakes in the present Bill itself. I would like to point out in this connection that it would have been better if the entire schedule of the Indian Stamp Act had been substituted. Some items—for example, articles 13 and 14—of the Central Act are left as they are. We do not have a complete schedule. In this connection, I would also submit that the Madras Stamp Manual of 1911 is continued even now but that when we go to the Government Press, we do not have this. There should be an up-to-date Madras Stamp Manual. This is an important enactment and immediately it becomes law, a new volume with the amendments duly carried out should be published. Even in the Madras Code, published in 1951, I find the amendments of 1943 not carried out. The difficulty in calculating the stamp duty is apparent. Then, Sir, article 62 (a) of the main Act dealing with transfer of shares has been omitted here. After 62 (a) of the Indian Stamp Act which has been amended by Central Act XLIII of 1955 says ' transfer, whether with or without consideration, of shares in an incorporated company or other body corporate—12 annas for every hundred rupees or part thereof of every share '. I do not find this clause here. Perhaps it is an inadvertant omission because this has been introduced by Act XLIII of 1955 of the Central Legislature, and is found pasted in the Indian Code (Unrepealed Central Acts). The drafting Department has omitted it here. This is a very valuable item which is likely to get us a huge revenue.

Another thing, I would suggest is, so far as promissory notes are concerned, the old one anna, two annas, three annas and four annas are continued. I know this is a Central subject—stamping promissory notes, bills of exchange, etc.—and I do not know if they have introduced that system there also. It is better, however, that the Madras Stamp law is complete in itself. It should be a complete Code so that the citizens of this State may know what stamp fee they have got to pay for the various documents.

Sir, regarding exemptions, we have got some exemptions at present. It should be made clear that these will continue to be in force even after the amendment of this schedule. Then, Sir, regarding ' New rates and multiples of 5 nP ' in the statement of objects and reasons found at page 172 of the Gazette copy of the Bill, I find that wherever it is nearer 5 nP. it is not rounded off to 5 nP. but 10 nP. It may not look much, as it reads. But when we calculate the fee on thousands of rupees, then the amount that the public may have to pay will be considerable. We find 6·25 nP. is made 10 nP. 9·375 nP. is also 10 nP. 12·5 nP. is made 15 nP. It goes on like this. It is better this rounding off begins with 5 nP. and ends with 95 nP. As it is I find that instead

[Sri R. Srinivasa Iyer] [25th March 1958

of two schedules, one new schedule is introduced. It is good. But at the same time, by not enacting six items in the Central law, we are made to go to the schedule to the Central Act as amended by the Madras Act. I would request that the Government will introduce a new amended schedule which may entirely incorporate the Central Act schedule in the new Act. Of course, Sir, the amendment as to partition is welcome. It has to be extended to Kanyakumari district and chitties in the transferred areas because of the addition of these new areas to the Madras State. I would before conclude reiterate my earlier point that stamps of all denominations may be made available to all places.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, the need for the present Bill is explained in the statement of objects and reasons. It is stated that the introduction of decimal coinage in the country has necessitated this piece of legislation. Also, it is sought to be extended to the transferred areas—Kanyakumari district and portions of Shencottah taluk of the Tinnevelly district. But I personally consider this another indirect method of taxation. The Government, not being satisfied with the many taxation measures they have undertaken so far, have decided to tax the people this way also. This was not mentioned by the Hon. Leader of the House in his Budget speech wherein he detailed the various taxation measures he would undertake.

The first thing I would emphasise is the provision contained in clause 13 which seeks to amend sections 53 and 54 of the principal Act so as to change 'one anna' into 'ten nP.'. Now, Sir, as regards the stamps that are spoiled, they give a rebate of one anna. Now if this amendment is introduced, many people will be hard hit. One anna will work out to one and a half or one and three fourths annas. The Commission the Government are giving to stamp vendors is only one anna. So, I do not think there is any need for amending this provision.

With regard to amendment of section 78, I feel there should be a translation of the provision into the regional language. I do not know why the Government are thinking of completely deleting the existing Section 78. It says that every State Government shall make provision for the translation and sale of the Act in the principal vernacular languages of the territories administered by it at a price not exceeding four annas per copy. I do not see any reason why this provision has been deleted here. I am of opinion that section 78 should continue and with that object in view, I have given notice of an amendment which will come up later for discussion. Sir, the chief amendment is the merging of Schedule I and Schedule I-A, to make it applicable to the State of Madras.
3-50 p.m. The Stamp duties in respect of documents under entry 91 of Seventh Schedule are also embodied in this schedule and for any amendment, we have to wait for the orders of the Union Government. There is a difficulty in this. Till an amendment is made, the stamp duties of documents in the Union List will be in rupees,



25th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliar]

while the other articles so far as this State is concerned will be in naye paise. Therefore, my contention is that the Government must either retain Schedule I-A or they must move the Government of India for amending Schedule I simultaneously. What is the benefit that we derive by merging these two Schedules? I am unable to understand that. By merging these two Schedules, the stamp duty will be in rupees in certain places and in naye paise in other places. That is why I say that we can wait till the Government of India amend Schedule I.

My friend, the Advocate-Member Sri Srinivasa Iyer referred to paragraph 2 on page 172 of the Bill. It is stated therein, ' . . . It is, however, considered desirable, from a practical point of view, to have the new rates in multiples of five naye paise.' This will work great hardship. We can make one anna as five naye paise. Therefore, there is no need to change this clause. When they make multiples of five naye paise, there is no object in amending this. There is no harm in making this one anna as five naye paise.

Sir, on page 173, paragraph 5 of the Bill, it is stated, ' . . . As there is no prospect of any resettlements in the near future and as the existing provision works hardship in areas in which resettlement took place more than 30 years ago . . .' and so on. I understand—if my memory does not fail me—that the 30 year period has been extended to 60 years by the recent notification of the Government. So far as the ryotwari areas are concerned, the period is not 30 years and my recollection is that it has been extended to 60 years. When the stamp duty is based on 25 times the annual assessment in the case of ryotwari lands, I am unable to understand why such concession should not be extended to Inam and Zamin lands taken over by the Government. My submission is that the same concessions should be given to these areas also without confining them to the ryotwari areas only.

Another point which I wish to emphasise is this. There is a steep increase in stamp duty as in force now in the merged areas and as proposed. Further, as per the Rules framed by the Government of Madras, stamps purchased in the Madras State alone are insisted in respect of documents to be acted upon in this State. As far as I know, stamps purchased in Bombay or some other State are not considered as valid. In such cases, the party concerned has to purchase fresh stamps or stamp papers in this State. The stamps purchased here are also not considered as valid in other areas. When all the States are in the same Indian Union, I do not understand why there should be such a state of affairs. There must be reciprocal arrangements among the various States so that the sufferings of the people may be mitigated. Such cases should be looked into and due provision should be made in this Bill itself. With these few words, I resume my seat.

SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே நான் கொடுத்திருக் 3-55 p.m.
கக்கூடிய திருத்தங்களைப் பற்றி சொல்வதற்கு முன்னால் ஒன்று அல்லது இரண்டு கருத்துக்களை இந்தச் சட்டம் பற்றிச் சொல்ல ஆசைப்

படுகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய முக்கியமான நோக்கம் இப்பொழுது இருக்கக்கூடிய அணா, பைசாவிலிருந்து நயா பைசாவுக்கு மாற்ற வேண்டும் என்ற முறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் பல கருத்துக்களையும் கொண்டு வருவதற்காக இதைக் கொண்டு வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. இப்பொழுது டெசிமல் காயினேஜ் சிஸ்டம் வந்த பிறகு அதனால் நாம் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டியதாக இருந்தது. மத்திய சர்க்காரிலும் இதைப் பற்றி எடுத்துச் சொல்லி சாதாரணமாக கன்வர்ஷன் டேபிளை வைத்துக் கொண்டு நயா பைசாவுக்கு மாற்றிக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அதனால் நமக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டது. பொதுவாக வியாபார ஸ்தலங்களில் கணக்குப் போடுவதற்கு இந்த கன்வர்ஷன் டேபிளை வைத்துக்கொண்டு கணக்குப் போட வேண்டியதாக இருக்கிறது. ரூபாய், அணா, பைசாக்களை நயா பைசாவுக்கு மாற்றவேண்டுமானால் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொண்டோம். டெசிமல் சிஸ்டத்தைக் கொண்டு வரும் போதே கன்வர்ஷன் டேபிளையும் கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த கன்வர்ஷன் டேபிளை உபயோகித்துக்கொண்டே இப்பொழுது இருக்கக்கூடிய ஸ்டாம்பு ட்யூட்டியை கண்டு பிடித்துக்கொள்ளலாம். அதை வைத்துக் கொண்டே எவ்வளவு ஸ்டாம்பு கட்ட வேண்டும் என்று கண்டு பிடித்துக் கொள்ளலாம். அந்த முறையில் இந்தச் சட்டத்திற்கு அவசியமே இல்லை என்று தோன்றுகிறது. அப்படி மாற்றவேண்டுமென்ற முறையில் எல்லாமே மல்ட்டிபிள்ஸாக இருக்க வேண்டும் என்று ஐந்து நயா பைஸா முறையில் இருக்கவேண்டும் என்று இதைக் கொண்டு வந்திருப்பது அவ்வளவு சரியல்ல என்று நினைக்கிறேன். கன்வர்ஷன் டேபிள் பிரகாரம் ஒவ்வொரு வரிசைப் பிரகாரம் கிரமமாக ஒரு அணா, 1½ அணா, இரண்டணா முதலியவைகளுக்கு சாதாரணமாக நயா பைசாவைக் கண்டு பிடித்துக் கொண்டு அதன் பிரகாரம் ஸ்டாம்பு ஒட்டிக்கொள்ளலாம். அதற்காக, 5, 10, 15 என்ற முறையில் மாற்ற வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதற்கு அவசியமும் இல்லை. ஏற்கெனவே இருக்கிற கன்வர்ஷன் டேபிளை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்து அதன்படி ஸ்டாம்பு எவ்வளவு என்று கண்டு பிடித்து ஒட்டலாம். இப்பொழுது போட்டிருக்கக்கூடிய முறைப்படி அநேகமாக கீழ் டினாமினேஷனுக்குள்ள ஸ்டாம்புகளுக்கு அதிகப்படியாக பணம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஸ்டாம்பு ட்யூட்டியை அதிகப்படுத்துவதாக ஆகிறது. அதிகப்படியான ஸ்டாம்பு ஒட்டக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஏற்கெனவே நமது மாகாணத்தில் மட்டும் அல்ல இந்த நாட்டிலேயே அதிகப்படியான ஸ்டாம்பு ட்யூட்டி போட்டிருப்பதாக புகார் இருந்து வருகிறது. இப்பொழுதுள்ள சட்டப்படி பார்த்தால் இன்னும் அதிகப்படியான ஸ்டாம்பு ட்யூட்டி கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் இப்படிப்பட்ட மாறுதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுகிறது.

அதற்கு அடுத்தபடியாக இதற்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச அய்யர் சொன்ன மாதிரி கடந்த இரண்டரை வருஷங்களாக ஸ்டாம்புகளே கிடைக்காமல் இருந்தது. அதனால் லிட்டிகண்ட் பப்ளிக் ரொம்பவும் கஷ்டப்பட்டார்கள். மற்றப்படி வக்கீல்களும் கோர்ட்டில் இருக்கக்கூடியவர்களும் பட்ட கஷ்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. இது சம்பந்தமாக அங்கங்கே இருக்கக்கூடிய ஜில்லா கலெக்டர்களுக்கும், மாகாண அரசாங்கத்திற்கும் அநேக தந்திகள் அனுப்பப்பட்டன. மேற்கொண்டு பார் அசோஷியேஷன் சார்பாக பல தீர்மானங்கள் போட்டும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன. அந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க இன்றுவரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. தாற்காலிகமாக அந்தந்த காலங்களில் சற்று முன்னேற்றம் காணப்பட்டதே தவிர இன்னும் ஸ்டாம்புகளே கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த குறைபாடு இருந்து கொண்டேதான் இருக்கிறது. சென்ற வாரத்தில் கூட திருச்சியில் கீழ் டினாமினேஷன் ஸ்டாம்புகள் தாராளமாக கிடைக்கவே இல்லை. தந்தி



கொடுத்துக் கேட்டதற்கு இன்னும் நாசிக்கிலிருந்து ஸ்டாம்புகள் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இதைப் பற்றி நீதி ஸ்தலங்களில் இருக்கக்கூடியவர்கள் கேள்விப்படுவதால் ரொம்பவும் கேவலமாக இருக்கிறது. இது சர்க்காருக்கு வருமானம் வரக்கூடியதாக இருந்தாலும் இதில் ரொம்பவும் குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே தாராள முறையில் எல்லா இடங்களிலும் ஸ்டாம்புகள் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். போதுமான அளவிலும் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது ஸ்டாம்பு வெண்டர்களை நியமித்திருக்கிறார்கள். சில குறிப்பிட்ட இடங்களில் சில கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டு அவர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால் பொது ஜனங்கள் ஸ்டாம்புகள் வாங்கவேண்டும் என்று சொன்னால் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சாதாரணமாக 10 அல்லது 15 மைல்களுக்கு அப்பால்தான் இருக்கிறார்கள். பொது ஜனங்கள் ஸ்டாம்பு வாங்க வேண்டும் என்று நினைத்தால் அவர்கள் பத்து அல்லது பதினைந்து மைல்கள் சென்று வாங்கி வர வேண்டியதாக இருக்கிறது. அதனால் அதிகப்படியான ஸ்டாம்பு வெண்டர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்டாம்புகள் கிடைக்காத நேரத்தில் ஸ்டாம்பு வெண்டர்கள் அதிகப்படியான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு இடத்தில் நியமிக்கப்பட்ட ஸ்டாம்பு வெண்டர் இதர இடங்களுக்குச் சென்று வாங்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அப்படி வாங்குவதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. திருச்சிக்கு பக்கத்திலுள்ள அரியலூரில் ஒரு ஸ்டாம்பு வெண்டரிடம் ஸ்டாம்பு இல்லாமல் அங்குள்ள ட்ரெஷரிக்குப் போய் கேட்டதற்கு அங்கும் ஸ்டாம்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதனால் அவர் திருச்சிக்குச் சென்று அங்கே கேட்டதற்கு அங்கே கொடுக்க முடியாது என்றும் அரியலூரில்தான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள். அவர் திருச்சியிலுள்ள ஸ்டாம்பு வெண்டரிடமிருந்து திருட்டுத்தனமாக அவருடைய பெயரில் ஸ்டாம்பு வாங்கிக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமையை போக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த கஷ்டத்தைப் பார்க்கும்போது இன்னும் அதிகப்படியான ஸ்டாம்பு வெண்டர்களை நியமிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஸ்டேட்மென்டு ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸைப் பார்க்கும்பொழுது இருக்கக்கூடிய கட்டணத்தை அதிகப்படுத்தவேண்டுமென்ற நோக்கம் சர்க்காருக்கு இல்லை என்று தெரிய வருகிறது .முதலாவதாக என்னுடைய திருத்தம் என்னவென்றால்,' என்டிரி 2-ஏயில் அயிடம் 1-ல், 15-வது கட்டத்தில் கண்ட பாண்டுக்கு என்ன ஸ்டாம்போ அதிலே முக்கால் வாசி கொடுத்தால் போதும் என்பதுதான். இப்பொழுது இந்த மசோதாவில் கண்டிருப்பது ஒரு வேளை தவறுதலாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இருந்த சட்டத்தில் அதே ட்யூடிதான் கொடுக்கவேண்டுமென்று கண்டிருக்கிறது. அதிலிருந்து எடுத்துத்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை சர்க்கார் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

என்னுடைய இரண்டாவது திருத்தம் என்னவென்றால்,

**In entry 6 (2) (a) (ii) of item (1) for the entry**

**" and for every additional Rs. 10,000 or part thereof in excess of Rs. 30,000.** } **27 00 12 25 9 00"**

என்பதற்கு பதிலாக

**"and for every additional Rs. 10,000 or part thereof in excess of Rs. 30,000.** } **27 00 13 50 9 00"**

[Sri S. Lazar] [25th March 1958

என்று திருத்தவேண்டுமென்பதுதான். அதாவது ஏற்கெனவே இருக்கக் கூடிய சட்டத்தில் ரூ. 13½ தான் போடப்பட்டிருக்கிறது. போட்டுப் பார்த்த தில் அதுதான் சரியான கணக்கு என்று தெரியவருகிறது. அதுதான் சரியாக இருக்கிறது. இப்பொழுது இந்த மசோதாவில் அதற்குப் பதிலாக ரூ. 12·25 என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இது சாதாரணமான திருத்தம் தான். இதை சர்க்கார் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக் கிறேன்.

அடுத்தபடியாக நான் கொடுத்திருக்கும் திருத்தம் மிகவும் முக்கிய மானது. . .

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member is referring to the amendments he has given notice of. They will come up later.

MR. SPEAKER : The Hon, Minister suggests that the hon. Member can speak on the amendments when they are taken up. That seems to be a good suggestion.

SRI S. LAZAR : Yes, Sir. Just one more minute.

MR. SPEAKER : He can take his own time. I am not going to fix any time limit.

SRI S. LAZAR : அடுத்தபடியாக டாக்டர்கள் இருக்கிறார்கள், என்ஜினீயர்கள் இருக்கிறார்கள், சூபர்வைசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்ரோல்மெண்டு கட்டணம் என்று ஒன்றும் கிடையாது. ஆனால் வக்கீல்கள் மட்டும் என்ரோல்மெண்டு செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் அவர்கள் ரூ. 625 ஹைகோர்ட்டிற்கு என்ரோல் மெண்டு பீஸாக கட்டவேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில், பாரிஸ்டர் கள் அதிகமாக இருந்த காலத்தில் அவர்களுக்கு வருவாய் அதிகமாக வருகிறது என்ற காரணத்தினால் ரூ. 625 "என்ரோல்மெண்டு பீஸாக" வைத்திருக்கக்கூடும். ஹைகோர்ட்டில் ரூ. 625 கட்டுவதோடு கூட சட்டப் பூர்வமாக பார் கவுன்சிலுக்கு கொடுக்கவேண்டிய ஒரு விகிதமும் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, சட்டப் பயிற்சி பெற்று வெளியே வரக்கூடிய ஒருவர் வக்கீல் "பிராக்டிஸ்" ஆரம்பிக்கவேண்டு மென்றால் குறைந்தது ரூ. 1,000 செலவழிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டியது மிக மிக அவசியம். முன் பெல்லாம் இருந்தது போல் இப்பொழுது வக்கீல்களுக்கு அவ்வளவு வருமானம் கிடையாது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சட்டங்களெல் லாம் வக்கீலின் வருவாயை குறைக்கக்கூடியதாக இருக்கின்றனவே தவிர, அதிகரிக்கக்கூடியதாக இல்லை. இந்த நிலைமையை உணர்ந்து இந்த "என்ரோல்மெண்டு" கட்டணத்தை ரூ. 50 ஆக குறைக்கவேண்டும். அதற்காக ஒரு பெரிய "ஹ்யூஜ் எமவுண்டு" இருக்க வேண்டியது அவசிய மில்லை. ஒரு "பார்மாலிடிக்காக" அதை ரூ. 50 ஆக வைத்துக்கொள்ள லாம். ஏற்கெனவே சர்க்கார் இதை பரிசீலனை செய்து பின்தங்கிய வகுப்பினர்களும், ஹரிஜன வகுப்பினர்களும் பாதி கட்டணம் கட்டினால் போதும் என்று சலுகை கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சலுகையை இன்னும் சற்று அதிகமாக விஸ்தரித்து ரூ. 50 "என்ரோல்மெண்டு பீஸாக" கட்டினால் போதும் என்ற முறையில் சட்டத்தைத் திருத்துவதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளு கிறேன்.

* SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே இந்த மசோதாவில் 14-வது செக்ஷனில் 5 நயா பைசாவை 10 நயா பைசாவாக ஆக்கவேண்டுமென்று கண்டிருக்கிறது.



25th March 1958]

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் அப்பொழுதே சொன்னார். "கிளாஸ் பை கிளாஸ்" விவாதத்தின் போது "கிளாஸைப்" பற்றிப் பேசலாம். இப்பொழுது பொதுவாக விவாதம் செய்யலாம் என்று சொன்னார்.

SRI V. K. KOTHANDARAMAN : குறிப்பாக என்னுடைய அபிப்பிராயத்தை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது என்ன வென்று கேட்டால், என் போன்ற ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாத தமிழ் தெரிந்த அங்கத்தினர்கள் இங்கே பெருவாரியாக மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது சட்டப் புஸ்தகம் ஆங்கிலத்தில் இருக்குமானால் என் போன்றவர்களுடைய . . .

MR. SPEAKER : அதற்காகத்தான் நீங்கள் ஒரு திருத்தம் கொடுத் திருக்கிறீர்களே ? அந்தக் கிளாஸ் விவாதத்திற்கு வரும்பொழுது அதைப் பற்றி பேசலாம். இப்பொழுது பொதுவாக விவாதிக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தச் சட்ட புஸ்தகம் தமிழிலே இல்லாத காரணத்தினால் இன்னும் பல திருத்தங்களை கொடுக்கமுடியவில்லை. ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூட அதை படிப்பதற்கு அவகாசம் இல்லாத ஒரு நிலைமை இருக்கக்கூடிய நேரத்திலே என்போன்றவர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்களிடத்திலே உட்கார்ந்து அதைப் படித்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால், எந்த அளவுக்கு முடியும் என்பதையும் நாம் இந்த சந்தர்ப்பத்தில் ரொம்பவும் திட்டவட்டமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை குறிப்பாக ஏன் சொல்லுகிறேன் என்றால், பல நாட்க ளாகவே எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே, தமிழ் டைப்ரைட்டர் கிடைக்க வில்லை, பிரெஸ் கிடைக்கவில்லை, வெகு சீக்கிரமாக கவனிக்கப்படும் என்று காலதாமதம் செய்யப்பட்டுக்கொண்டு வரப்படுகிறது. இதன் காரணம் என்னவென்று நான் நினைக்கிறேன் என்றால், என்போன்றவர்களிடமி ருந்து நல்ல அபிப்பிராயம் வரக்கூடாது என்றோ, அல்லது நாங்கள் இருக்கக்கூடிய விஷயங்களை தெரிந்துகொள்ளக்கூடாது என்றோதான் சர்க்கார் எண்ணுகிறார்களோ என்பதுதான். இன்றைக்கு ஆளும் கட்சி யிலே இருக்கக்கூடியவர்களும் சரி, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்களும் சரி ஆங்கிலம் தெரியாதவர்கள் அம்மாதிரி நினைக்கவேண்டிய அளவிலே தான் நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இந்த சட்ட புஸ்த கத்தை தமிழிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுமட்டுமல்ல. மத்திய அரசாங்க சட்டத்தில் 4 அணுவுக்கு மேற்படாமல் இந்த புஸ்தகத்தை விற்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் 5 நயா பைசாவை 10 நயா பைசாவாக மாற்றியிருப்பதை பார்த்தால், அந்த அளவுக்கு 4 அணுவுக்கு விற்பனை செய்யவேண்டிய புஸ்தகத்தை 8 அணுவுக்கு விற்பனை செய்வார்களோ என்று நினைக்க வேண்டி யிருக்கிறது. குறிப்பாக இப்படிப்பட்ட புஸ்தகங்கள் எல்லா பாமர ஜனங்களும் புரிந்துக் கொள்ளக்கூடிய அளவில், படித்து தெரிந்துக் கொள்ளக்கூடிய அளவில் தமிழிலேயே இருக்கவேண்டும், விலையும் குறைவாக இருக்கவேண்டும் என்ற என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவின் முக்கியமான நோக் கம், "ப்ராக்ஷன்" இருக்கக்கூடாது என்பதுதான். அதாவது நயா பைசா வின் மூலமாக "ப்ராக்ஷன்" இருக்கக்கூடாது என்பதுதான் முக்கியமான நோக்கம் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மசோதாவில் 5·5 நயா பைசா 10 நயா பைசாவாக உயர்த்தப் படுகிறது. சர்க்காருக்கு வருமானம் தேவையாக இருந்தால் நேரிடையாக வரி போடலாம். மறைமுகமாக இம்மாதிரி கட்டணத்தை உயர்த்தக்கூடாது. "ப்ராக்ஷன்" இருக்கக்கூடாது என்ற ஒரு காரணத்தைச் சொல்லி அதன் மூலமாக பல லட்ச ரூபாயை சர்க்கார் வசூலிக்க விரும்புகிறது என்று

நான் சொல்ல முடியும். அதுட்டுமல்ல. ஒரு அணுவுக்கு 6·25 நயா பைசா தான். அதை பத்து நயா பைசாவாக உயர்த்திருக்கிறார்கள். 4 அணா, 8 அணா, 12 அணா, 1 ரூபாயை விட்டுவிட்டு, மற்றும் இருக்கக் கூடிய அணுவுக்கு நயா பைசாவை அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். இதன் மூலமாக பல லட்ச ரூபாய் சர்க்காருக்கு வருமானம் வரப்போகிறது. அது மாத்திரமல்ல. "மெட்ராஸ் ஸ்டாம்ப் அமெண்டுமெண்டு ஆக்ட்" 1922, மெட்ராஸ் ஸ்டாம்ப் ஆக்ட் 1943. இப்படி இரண்டு விதமாக திருத்தங்களைக் கொண்டு வந்து சேர்த்து அதை சரிவர பார்க்கக்கூட முடியாமல் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவேதான் இதை தீர ஆலோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என்று நினைக்கிறேன். 6·25 நயா பைசாவை 10 நயா பைசாவாக அதிகப்படுத்துவதற்கு பதிலாக 5 நயா பைசாவாக ஆக்கிவிட்டால் போதும், "ப்ராக்ஷன்" இல்லாமல் இருக்கும், சுலபமாக புரிந்து கொள்ளலாம். "ப்ராக்ஷன்" இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் மறைமுகமாக இதன் மூலம் பல லட்ச ரூபாய் வருவாய் தேடி கொள்ளுவதற்கு சர்க்கார் வகை செய்திருக்கிறது. இது அனுவசியம். ஆகவே இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டால், பழைய சட்டங்களை யெல்லாம் பார்த்து நல்ல முறையில் பரிசீலனை செய்து ஒரு நல்ல சட்டத்தை கொண்டுவரலாம் என்பது என்னுடைய உத்தேசம். ஆகையால் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

4-10 p.m. * **Sri V. S. MANICKASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஸ்டாம்ப் திருத்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன். இந்த மசோதா கிராம மக்களையும் பெரும்பாலான பொது ஜனங்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இதுபோன்ற சட்டங்களிலுள்ள விஷயங்களை யாராவது சாதாரண ஜனங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால், ஹோ அண்ட் கம்பெனியார் போன்ற பிரசுரகர்த்தர்கள் வெளியிடும் டைரிகளிலிருந்துதான் தெரிந்துகொள்ளமுடியும்; ஆதாரபூர்வமான பிரசுரங்கள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. இது போன்ற சட்டங்களில் குறிப்பிட்டுள்ள சில பதங்களை சாதாரண மக்கள் சரியாகத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. உதாரணமாக பூமி கிரயம் என்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் "கன்வேயன்ஸ்" என்ற வார்த்தை சட்டங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்திய ஸ்டாம்புச் சட்டத்திலும், சென்னை ஸ்டாம்புச் சட்டத்திலும் அந்தப் பதம் தான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இதைப்பற்றி குறிப்பிடும்போது ரெஜிஸ்டிரேஷன் ஆபீஸில் ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் ஒவ்வொருவிதமாகக் குறிப்பிடுகிறார். ஒரு ரெஜிஸ்டிரார் "கன்வேயன்ஸில் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்டாம்பைப் பெற்றுக் கொண்டு வர வேண்டும்" என்று சொல்கிறார். இன்னொரு உத்தியோகஸ்தர் இன்னொரு விதமாகச் சொல்கிறார். பூமிக் கிரயம் என்ற பதத்திற்கு, "ட்ரான்ஸ்பெர் ஆப் ப்ராபெர்டி ஆக்ட்"-ல் இருக்கிறபடியாவது, ரெஜிஸ்டிரேஷன் ஆக்டில் இருக்கிறபடியாவது ஆங்கிலப் பெயர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குழப்பத்தை உண்டுபண்ணும் இன்னொரு பதம் "பார்டிஷன்" என்பது ஆகும். இந்தப் பதத்திற்கு எந்தச் சட்டத்திலும் விளக்கம் கொடுக்கப்படவில்லை. "ட்ரான்ஸ்பெர் ஆப் ப்ராபெர்டி" சட்டத்திலும் இதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. அந்த வார்த்தையின் அர்த்தத்தை எல்லோரும் சுலபமாகத் தெரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் அதற்கு விளக்கம் கொடுக்கவேண்டும்.

தசாம்ச நாணய முறைக்கொத்த வகையில் ஸ்டாம்புச் சட்டத்தைத் திருத்துகிறோம். அவ்வாறு செய்யும்போது, அவசியமான தஸ்தாவேஜுகளை சமர்ப்பித்து ரெஜிஸ்டிராரைத் திருப்தி செய்யும் விஷயத்தில் ஜனங்களுக்கு அதிகத் தொல்லைகள் ஏற்படாதபடி செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். இப்போது பாகப் பிரிவினைப் பத்திரங்கள் எழுதும்போது ஸப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸில் "கன்வேயன்ஸ்" வாங்க வேண்டுமென்று ஒரு உத்தியோகஸ்தர் சொல்கிறார்; பார்டிஷன் ஸ்டாம்பு வாங்க வேண்டுமென்று மற்றொருவர் சொல்கிறார். ஆகவே "பார்டிஷன்" என்ற வார்த்தைக்கு விளக்கம் கொடுக்கப்படவேண்டும்.



அடுத்தபடியாக, கனம் நண்பர் ஸ்ரீ லாஸர் சொன்னதுபோல், வக்கீல் உத்தியோகத்திற்காகப் பதிவுசெய்து கொள்பவர்களிடமிருந்து பெருத்த தொகையை வாங்குவது பொருத்தமல்ல என்று நான் கருதுகிறேன். எல்லா நாடுகளிலும் வக்கீல்கள் என்ற தொழில் வர்க்கத்தினர் இருக்கிறார்கள். இந்த நாட்டில் வக்கீல்களிடம் உதவிபெறுகிறவர்களே வக்கீல்களை ஏசத் தயங்குவதில்லை. கட்சிக்காரர்கள் தங்களுடைய வழக்குகள் முடிந்தவுடன், அவை வெற்றிகரமாக முடிந்தாலும் சரி, தோல்வியாக முடிந்தாலும் சரி, வக்கீல்களை ஏசுவதற்குத் தயங்குவதில்லை. வக்கீலாகப் பதிவு செய்துகொள்வதற்கான ஸ்டாம்புக் கட்டணத்தை அதிகரிக்கக்கூடாது. அரசாங்கம் அவர்களுக்கு ஸப்ஸிடி கொடுத்தாவது எல்லா வழக்கறிஞர்களையும் வக்கீல்களாகப் பதிவு செய்து கொள்ளும்படி செய்ய வேண்டும். (சிரிப்பு). இருந்தபோதிலும், இனிமேல் வக்கீல் தொழிலுக்கு வருபவர்களிடமிருந்தாவது அதிக ஸ்டாம்பு கட்டணம் வசூலிக்கக்கூடாது. எல்லா வக்கீல்களும் அட்வகேட்டுகளாக இருக்கும்படி செய்வதற்கு அரசாங்கத்தார் முயன்றபோது, அதுவரை இருந்துவந்த வக்கீல்களுக்கும் ப்ளீடர்களுக்கும் சலுகையளிக்கும் முறையில் ஸ்டாம்புச் சட்டத்தைத் திருத்தினார்கள். அதே போல், இனிமேல் வக்கீல் தொழிலுக்கு வருபவர்களிட மிருந்தாவது அதிக ஸ்டாம்புக் கட்டணம் வசூலிக்கக்கூடாது. அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் காலத்தில் பணக்காரர்களாக இருந்தவர்களிடமிருந்தே அதிகக் கட்டணம் வசூலித்தது கிடையாது என்று ஸ்ரீ லாஸர் சொன்னார். அப்போது, பாரிஸ்டர்கள் தங்களுக்குப் போட்டியாக மற்ற வக்கீல்கள் வந்துவிடக்கூடும் என்று எண்ணி அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்று தான் நான் கருதுகிறேன். சென்னை வக்கீல்கள் சரித்திரத்திலேயே அது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. அட்வகேட்டுகள், குறிப்பாக சென்னை ஹைகோர்ட்டு அட்வகேட்டுகள், தங்களுக்குப் போட்டியாக வரக்கூடாது என்பதற்காக அப்போது பாரிஸ்டர்கள் அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறேன். என்னுடைய கோரிக்கையை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI :** கனம் சபாநாயகர் அவர்களே, பழைய நாணயவிகிதங்களுக்கு பதிலாக புதியநாணய விகிதங்களில் ஸ்டாம்ப் கட்டணங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார். இந்த மசோதாவானது, ஏற்கெனவே இருக்கும் ஸ்டாம்புக் கட்டணங்களை மறைமுகமாக உயர்த்துவதற்குத்தான் வகை செய்கிறது என்று இந்த சபை ஒருமுகமாக அபிப்பிராயப்படுகிறது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். இதனை கனம் அமைச்சர் கவனிக்க வேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்ற திருத்தத்தை கனம் அங்கத்தினர் ஸ்ரீ அண்ணாமலை கொடுத்திருக்கிறார். அந்தத் திருத்தம் முற்றிலும் ஏற்றுக் கொள்வதற்குரியது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்டாம்புச் சட்டத்திலுள்ள விதிகளும் பதங்களும் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும். ஸ்டாம்புச் சட்டத்திலுள்ள முக்கியமான பதங்களுக்கு தெளிவான விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். மிகவும் தெளிவான முறையில் இந்த மசோதா தயாரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை கனம் அங்கத்தினர் ஸ்ரீ மாணிக்கசுந்தரம் தெரிவித்தார். உண்மையிலேயே, இந்த சட்டத்தையும் சிக்கலான சட்டமாக நிறைவேற்றக்கூடாது. திருத்தங்களை கொண்டு வரும்போதாவது சட்டத்தை சிக்கலில்லாத சட்டமாக ஆக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

இந்த சபையில் புதிய நாணய முறையில் பழைய கட்டணங்களை மாற்றியமைக்கும் மசோதாக்கள் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு சமயத்திலும், அந்த மசோதாக்களில் கட்டண விகிதங்கள் பொது மக்களுக்கு அதிகத் தொல்லை கொடுக்கக்கூடிய முறையில் மாற்றியமைக்கப்பட்டிருப்பதை நாங்கள் பார்க்கிறோம். சென்ற ஆண்டு இந்த மசோதாவைப் போன்ற பல மசோதாக்கள் வந்தன. குறிப்பாக, விற்பனை வரித் திருத்த மசோதா

[Sri P. S. Chinnadurai] [25th March 1958

வந்தபோது அதில் வரிவிகிதங்கள் மறைமுகமாக உயர்த்தப்பட்டிருந்தன. அதே போன்று ஸ்டாம்புக் கட்டணங்கள் இப்போது மறைமுகமாக உயர்த்தப்படுகின்றன. இந்தக் கட்டணங்கள் இப்போது அதிகமாக உயர்த்தப்படுகிறது என்பது இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திலிருந்து தெரிகிறது. ஒரு அணாவிற்கு பதிலாக 10 நயா பைசா என்று நிர்ணயித்து இருப்பது மிகவும் அநியாயமானது என்றுகூட நான் குறிப்பிடுவேன். ஓரணா ஸ்டாம்புக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பது ஏராளமான மக்களை பாதிக்கும். பல தொழிற் சங்கங்கள் இருபது ரூபாய்க்கு மேற்பட்ட பண விவகாரங்களில் இப்போது ஓரணா ஸ்டாம்பு ஒட்ட வேண்டியிருக்கிறது. சட்டம்
4-20 p.m. இப்படியே நிறைவேற்றப்பட்டால், இனிமேல் அவர்கள் 10 நயா பைசா ஸ்டாம்பு ஒட்டவேண்டி யிருக்கும். இப்போது ஒரு ரூபாய்க்கு ஸ்டாம்புகள் வாங்கினால் அப்படிப்பட்ட ரசீதுகள் பதினாறுக்கு ஸ்டாம்பு ஒட்ட முடியும். இனிமேல் ஒரு ரூபாய்க்கு ஸ்டாம்பு வாங்கினால் 10 ரசீதுகளுக்குத்தான் ஒட்டமுடியும். இது தொழிற் சங்கங்களின் செலவு பாரத்தை மிகவும் அதிகரிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த ஸ்டாம்பு சட்டத்திலேயிருந்து பலவிதமான விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருப்பதை நான் இங்கே காணமுடிகிறது. பல தடவை இந்தச் சட்ட சபையிலே வற்புறுத்தப்பட்ட பின்னாலும், இந்த மசோதாவைத் திருத்துவதற்குரிய முறையிலேயே இந்தத் திருத்த மசோதாவை பிரேரேபிக்கப்படுகிறபோதும்கூட, தொழிற்சங்கங்களுக்கு இதிலேயிருந்து விதி விலக்கு கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்துவதற்குரியது. தொழிற் சங்கங்கள் அடிக்கடி தொழிலாளர் சம்பந்தமான விவகாரங்களை எடுத்துக்கொண்டு தொழிற் கோர்ட்டு முன்னால் ஆஜராக வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தடவை ஆஜராகும்போதும் அவர்கள் எந்த ஒரு ஸ்டேட்மெண்டை அங்கே தாக்கல் செய்தாலும், அதற்கு **affidavit** என்ற முறையிலே பிரமாண பத்திரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது பிரமாணப் பத்திரத்திற்குரிய தொகையை மூன்று ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டால் உண்மையிலேயே தொழிற் சங்கங்களுக்கு அது மிகப் பெரிய பாரமாக இருக்குமென்று நான் குறிப்பிடுகிறேன். கோயமுத்தூர் ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து ஒரு ஆண்டுக்கு நூற்றுக் கணக்கான மனுக்கள் தாக்கல் செய்ய வேண்டியிருக்கிறது. ஸ்டாம்பு கட்டணம் மாத்திரம் பல நூற்றுக் கணக்கான ரூபாய் அந்தச் சங்கத்திற்கு செலவினமாக ஆய்விடும். பெரிய சங்கத்திற்கே இந்த நிலையானால், சிறிய சங்கங்கள் இந்தப் பாரத்தைத் தாங்க முடியுமா என்று கனம் அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். இந்தத் துறையில் மசோதா கொண்டுவந்தபோதே அதைக் கவனித்துச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது மாத்திரமின்றி, இன்னும் பல விளக்கங்களை இந்தத் திருத்த மசோதாவிலே மக்கள் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகையால், இதனை அவசரமாக உடனே இங்கு நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதைவிட செலக்ட் கமிட்டி சில தினங்கள் நன்றாக ஆலோசனை செய்து, அதற்குப் பிறகு சபை முன்னால் பிரேரேபணை செய்தால் நன்றாக இருக்கும். இந்த மசோதாவின் மீது பேசியவர்களில் எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இவைகளின் அவசியத்தை வற்புறுத்தி இங்கே ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள்தான் நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை எவ்வளவு முக்கியம் வாய்ந்தது. இதைக் குறித்து எந்த அளவுக்கு முக்கியமாக நினைக்கிறார்கள்? இத்தகைய ஒரு மசோதாவை அவசரமாக நிறைவேற்றுவது எவ்வளவு ஆபத்தானது என்பதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக ஆலோசனை செய்ய வேண்டிக்கொள்ளுகின்றேன். இந்தச் சபையின் ஒரு பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு இந்தத் திருத்த மசோதாவை விட வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருப்பதன் நோக்கம் இதனை அடியோடு தாமதப்படுத்த வேண்டும் என்பதல்ல. சில தினங்கள் கழித்தால் ஒன்றும் கெட்டுப் போகாது என்று நான் உறுதியாகச் சொல்வேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த பலரும், குறிப்பாக வழக்கறிஞர்களாக இருப்பவர்களும், சொல்வதையாவது ஏற்றுக்கொண்டு இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, ஒரு வாரம் கழித்து



25th March 1958] [Sri P. S. Chinnadurai]

இதனை நிறைவேற்றினால், என்ன கெட்டுவிடும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனை அவசரம் அவசரமாக நிறைவேற்றாமல் இதனை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்று ஒரு மனதான முடிவுக்கு கனம் அமைச்சர் அவர்கள் இசைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri V. SANKARAN:** கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே 4-25 p.m. ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் சொன்னது போல் இந்த ஸ்டாம்பு சட்டத் திருத்த மசோதாவில் கண்டிருக்கும் ஷரத்துக்களும், அதற்கு "ஐடெண்டிகல்" ஆக இருக்கும் மூலச் சட்டத்தின் பிரிவுகளும் கம்பாரிடிவ் டேபிள் போல, நேருக்கு நேராக அச்சிட்டுக் கொடுக்கப்படாத காரணத்தால் நான் இரண்டு மணி நேரத்திற்கு மேல் பழைய மூல சட்டத்தையும் பின் திருத்தங்களையும் புரட்டிப் பார்த்தேன். இருந்தாலும் ஓரளவுகூட தெரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலுங்கூட ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒரு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரும்போது, திருத்தங்களையும் அதற்கு ஐடெண்டிகல் ஆக இருக்கும் பழைய சட்டத்தின் பிரிவுகளும் நேருக்கு நேராக அச்சிட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னதுபோல் கம்பாரிடிவ் டேபிள் இல்லாத நிலைமையில், குறுகிய காலத்தில் புரிந்துகொள்ள முடியாத கஷ்டமான நிலையில் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, கட்டணங்களை "ரௌண்ட் ஆப்" செய்திருப்பதைப் பார்த்தால், சாதாரணமாக இந்த ஒரு புதிய மசோதா சட்டமானால் முதல் பலி சட்டசபை அங்கத்தினர்கள்தான். அவர்கள் தங்களுடைய பிரயாணப்படி தினப்படி வாங்கும்போது அதற்குரிய நமூனாவில் ஒரு அணா ஸ்டாம்புக்குப் பதிலாக பத்து நயா பைசா ஸ்டாம்பு ஒட்டவேண்டி ஏற்படும். ஆகவே, இந்த திருத்தச் சட்டத்திற்கு முதல் இரை சட்டசபை அங்கத்தினர்கள்தான்.

சாதாரணமாக பஸ்களில் பிரயாணம் செய்யும்போது நயா பைசாவினால் ஏற்படும் தொல்லைகளைப் பார்த்து வருகிறோம். அவர்களுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அந்த முறையில் நயா பைசா வாங்கிக் கொள்ளப்படுகிறது, அணா நயா பைசா மாற்றத்தின் காரணமாக. அந்த முறையில், இதில் கொடுத்திருக்கும் கம்பாரிடிவ் டேபிளைப் பார்த்தால்கூட, ஐந்து இடத்தில் அதிகப்படியாக இருப்பதை குறிப்பிட முடியும். ஒரு அணா என்பது 6·25 நயா பைசாவுக்குச் சமமாக இருக்கும் போது, பத்து நயா பைசா ஆக்கப்பட்டிருக்கிறது. அதே முறையில் இரண்டணாவுக்கு 12·50 நயா பைசா சமமாக இருக்கும்போது 15 நயா பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆறு அணாவுக்கு 37·50 நயா பைசா சமமாக இருக்கும்போது 40 பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது அணாவுக்கு 56·25 நயா பைசா சமமாக இருக்கும்போது 60 நயா பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதே போல 13 அணாவுக்கு 81·25 நயா பைசாவாக இருக்கும்போது 85 நயா பைசா ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல **gesture** ஆக நான் சொல்லும் யோசனைப்படி செய்யலாம். அதாவது 10 நயா பைசா என்பதை 5 நயா பைசாவாகவும், 12·50 என்பதை 10 ஆகவும், 37·50 என்பதை 35 ஆகவும், 56·25 என்பதை 55 ஆகவும், 81·25 என்பதை 80 ஆகவும் மாற்றினால் ஒரு நல்ல **gesture** ஆக காணப்படும். ஆட்சியாளர்களுக்கும் அவ்வளவு தூரம் இடைஞ்சல் இருக்காது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சாதாரணமாக மக்களிடையே ஒரு தப்பு அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அணாவை நயா பைசாவாக மாற்றுகிறதை முகாந்திரமாகக் கொண்டு கட்டணத்தையே அதிகரிப்பது என்பது வழக்கமாகப் போய்விட்டது என்று மக்களிடையே ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயத்திற்கு இடம் கொடாமல் இருக்க நான் சொன்ன யோசனையைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். பஸ் கட்டணமாக இருந்தாலும் சரி, பத்திரிகைத் தாளாக இருந்தாலும் சரி, நயா பைசாவுக்கு மாற்றம் வரும்போது விலை அதிகரிக்கப்படுவதைப் பார்க்கிறோமேயொழிய, கட்டணம் சற்றுக்கூட குறைவதாகக் காணோம். ஆனால், அரசாங்கத்தைப்

பொறுத்த வரையில் இந்த விஷயத்தில் ஒரு நல்ல **gesture** ஆக, நான் சொன்ன யோசனைப்படி குறைத்துக் கொண்டால் மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ரௌண்ட் ஆப் செய்வதற்கு மட்டும்தான் இது உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், செக்ஷன் 4, செக்ஷன் 5 இவைகளுக்கு திருத்தங்கள் செய்திருப்பதைப் பார்த்தால் ஒரு ரூபாய் என்று இருந்ததற்குப் பதிலாக மூன்று ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. கௌண்டர்பார்ட், டூப்ளிகேட் சம்பந்தமாகவும் ஒரு ரூபாய்க்குப் பதிலாக மூன்று ரூபாய் ஆக்கப்பட்டிருப்பதன் காரணம் தெரியவில்லை. நயா பைசாவாக மாற்றும்போது கொஞ்சம் கூடியிருக்கலாம் ஆனால், இங்கே காரணமின்றி இப்படி ஒரேயடியாக உயர்த்தியிருப்பதன் காரணம் புரியவில்லை. திருத்தப்பட்ட செக்ஷன் (4)

**"(1) Where in the case of any sale, mortgage or settlement, several instruments are employed for completing the transaction, the principal instrument only shall be chargeable with the duty prescribed in Schedule I for the conveyance, mortgage or settlement and each of the other instruments shall be chargeable with a duty of three rupees instead of the duty, if any, prescribed for it in that Schedule".**

என்று இருக்கிறது. அதாவது புதிதாகப் போடப்பட்டிருப்பதில் முன்பு ஒரு ரூபாய் இருந்தது. மூன்று ரூபாய் என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஐந்தாவது செக்ஷனில் கௌண்டர்பார்ட், டூப்ளிகேட் சம்பந்தமாகவும் மூன்று ரூபாய் என்று இப்பொழுது போடப்பட்டிருக்கிறது இப்படி உயர்த்தப்பட்டிருப்பதின் காரணம் **statement of objects and reasons** லும் கூட விளக்கப்படவில்லை. நயா பைசா மாற்றம் என்பதைச் சாதனமாகக் கொண்டு ஒரு ரூபாய் என்று இருந்ததை ஏன் மூன்று ரூபாய் ஆக்க வேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை.

கனம் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சொன்னதுபோல் **spoilt and unused** செய்யப்பட்ட ஸ்டாம்ப்கள் உபயோகப்படுத்தப்படாத ஸ்டாம்ப்களைத் திருப்பிக் கொடுத்தால் ஒரு அணு கழித்துக் கொண்டதுபோக, அதாவது 16-ல் ஒரு பங்கு குறைத்துக் கொண்டது போக பாக்கி கொடுக்கப்படும் என்று இருந்தது. இப்பொழுது பத்து நயா பைசா குறைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆயிரம் இரண்டாயிரம் என்று திருப்பிக் கொடுக்கும்போது ஜனங்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, பத்து நயா பைசா என்பதை ஐந்து நயா பைசாவாக்கினால்கூட ஒரு விதத்தில் நல்ல வழியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. லாசர் சொன்னதுபோல் வக்கீல் தொழில் செய்ய வேண்டுமானால் 625 ரூபாய் செலுத்த வேண்டுமென்று விதித்திருப்பது அதிகமானதாகும். வக்கீல் தொழிலில் இருக்கிறவர்கள் கடைசிப்பட்சமாக **last refuge** என்ற முறையில் வக்கீல் தொழிலுக்கு வருகிறார்கள். வைத்தியக் கல்லூரி, இன்ஜினீரிங் கல்லூரி, உபாத்தியாயர் கல்லூரி ஆகிய எல்லாக் கல்லூரிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு எங்கும் இடம் கிடைக்காவதவர்கள் கடைசியில் வேறு வழியில்லாமல் சட்டக் கல்லூரிக்கு போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எல்லா இடங்களிலும் அப்ளிகேஷன் போட்டுவிட்டு எந்த இடங்களிலும் கிடைக்காவிட்டால், **last refuge** ஆக சட்டக் கல்லூரி தான் கிடைக்கிறது. அந்த முறையில் வக்கீல் படிப்பு படித்து, வக்கீல் தொழில் பல கஷ்டங்களுக்கிடையே செய்கிறவர்களுக்கு அபராதம் விதிப்பதுபோல, தடை விதிக்கிற மாதிரி இவ்வளவு பெரிய தொகை கட்டணம் விதிக்கப்படுகிறது. ஒருவேளை அந்தக் காலேஜிலும் அதிகமாகச் சேராமலிருக்கும்பொருட்டு இவ்வளவு தொகை விதிக்கப்பட்டிருக்கிறதோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. ஏதோ வேறு வழியில்லாமல் வக்கீல் தொழிலுக்குப் போகக்கூடிய நிலை ஏற்படும்போது தண்டனை கொடுக்கிற மாதிரி ஏன் இவ்வளவு பெரிய தொகை விதிக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். அவர்கள் விஷயத்தில் சர்க்கார்





அதிகமாக இரக்கம் கொள்ளவேண்டும். கஷ்டமான நிலைமையில் வக்கீல் தொழில் நடத்துவதால் வர வர அவர்கள் நிலைமை கீழே போய்க் கொண்டிருக்கிறது. அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபாய் 50-க்கு குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் சொன்னதுபோல், ஸ்டாம்ப் கட்டணம் சம்பந்தமாக மக்கள் கஷ்டப்படக்கூடாது; அந்த அளவுக்கு விவரமாக விளக்கப்பட்டு புத்தகம் வெளியிடப்படவேண்டும்.

ஏற்கெனவே இருந்ததுபோல் முதல் ஷெட்யூலும், இரண்டாவது ஷெட்யூலும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு ஒரே ஷெட்யூலாக்கப்பட்டது வரவேற்கக்கூடியதாகும். நான் சொன்ன யோசனைப்படி திருத்தங்கள் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**Sri M. JAGANNATHAN** : இந்த ஸ்டாம்பு திருத்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கோரும் அங்கத்தினர்களில் 4-30 நானும் ஒருவன். இதற்கு வேறு எந்த காரணமும் இந்தச் சந்தர்ப்பத்தில் p.m. சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. காலையிலிருந்து இதுவரையில் சர்க்கார் தரப்பிலிருந்தே எட்டு, பத்து திருத்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டே இருப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இதை சர்க்கார் நல்ல முறையில் பரிசீலனை செய்யவில்லை என்று தோன்றுகிறது. ஆகவே இதை நல்ல முறையில் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி பல பல திருத்தங்களையும் செய்துகொண்டுவரவேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த மசோதாவின் நோக்கத்தில் **"It is, however, considered desirable from a practical point of view to have the new rates in multiples of five naye paise"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம் வரவேற்கத்தகுந்ததாக இருந்தபோதிலும் இதன் முடிவு என்ன என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மாதிரி பழைய நாணயத்திலிருந்து புது நாணய விகிதாசாரத்தை மாற்றி அமைப்பதன் காரணமாக சர்க்கார் கிட்டத்தட்ட 25 லட்ச ரூபாய் மறைமுகமாக வருமானத்தைத் தேடிக் கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது. இது ஒரு பினான்ஷியல் பில் ஆகவும் இருப்பதால் அவசியம் ஒரு பொறுக்குக் கமிட்டியை நியமித்துப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தி நான் முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : Hon. Members Sri Srinivasa Iyer and Sri V. Sankaran raised an objection that the annexure was not supplied together with the Bill. Well, the notice given in respect of this Bill was very short and the Hon. Minister requested me to waive notice. As it was stated that the Assembly will have to discuss the Bill today, the 25th March, the department felt that it would not be possible to prepare the annexure and explain the full scope of the Bill before the 25th March. Therefore, I thought that it was not necessary in view of the urgency of the matter and also the fact that the time at our disposal was very short. I agreed to it not because knowledge of the annexure was not necessary, but because of want of time.

***The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் சபாநாயகர் அவர்களே, முதலில் அதாவது இந்த மசோதாவின்கீழ் பெரிய மாறுதல்கள் செய்து ரேட்டு வித்தியாசம் செய்வதாக இருந்தால் அது நிதானமாக பார்க்கவேண்டும். சாதாரணமாக ரூபாய் அணு பைசாவாக இருப்பதை நையா பைசா நாணயமாக மாற்றுவதுதான் இதன் கருத்து. இதனால் இருபத்தைந்து லட்சம், முப்பது லட்சம் வருமானம் சர்க்காருக்கு வரும் என்பது எல்லாம் தப்பு. அப்படி ஒன்றும் பணம் ஜாஸ்தியாக வராது. இதில் நாங்கள் ஒன்றும் சுயேச்சையாகச் செய்யவில்லை. இந்திய சர்க்கார் ஒரு அணுவுக்கு இவ்வளவு நையா பைசா, ஐந்தணுவுக்கு இவ்வளவு நையா பைசா என்பதாக டேபிள்

[Sri M. A. Manickavelu] [25th March 1958

கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை எல்லா மாகாண சர்க்காரும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளவேண்டும், அதன் காரணமாக அவர்கள் எப்படி சொன்னார்களோ அப்படியே இப்போது மாற்றி அமைக்கப்படுகிறது. ஆகவே பொறுக்குக் கமிட்டியில் இதை நம் இஷ்டப்படி யோசித்து மாற்றிக்கொள்ளலாம் என்பதற்கும் இடம் இல்லை.

அடுத்தபடியாக பழைய நாணயத்தை புது நாணயமாக மாற்றுவதில் கொஞ்சம் அதிகமாகிறது. ஆனால் அதைக் குறைக்கவோ மாற்றவோ வசதி இல்லை என்று சொன்னேன். அதோடு இந்த மசோதாவில் வக்கீல்களைப் பற்றியும், அவர்களுக்கு என்ரோல் சார்ஜ் குறைக்கவேண்டும் என்பது பற்றியும் பேசினார்கள். இந்த மசோதாவின்கீழ் அவைகளை எல்லாம் பற்றிப் பேசுவதற்கே இடம் இல்லை. நானும் ஒரு வக்கீல்தான். எல்லா வக்கீல்களுமே இந்த மசோதாவில் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்ரோல் சார்ஜை குறைப்பது பற்றி இதில் எவ்வாறு யோசிப்பது ? ஏதோ பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று வேண்டுமானால் தான் சொல்லியிருக்கலாம் என்று நினைக்கிறேன். அதைத்தவிர பிரயோசனமான காரியம் ஒன்றும் இல்லை. மற்றப்படி ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்யும்போது இதர திருத்தங்களுக்கு எல்லாம் பதில் அளிக்கிறேன். இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்பது ஒத்துக்கொள்வதற்கில்லை. இன்னொன்று சொல்லப்பட்டது. மூன்று ரூபாய் இருந்ததே அதை மாற்றுவதில் 5 ரூபாய் ஆகிவிடும் என்று சொன்னார்கள். ஆரம்பத்திலேயே சொன்னேன். கனம் அங்கத்தினர்கள் ஸ்டாம்பு ட்யூட்டி பற்றி 1922-ம் வருஷ ஷெட்யூலைப் பார்த்து சொல்லுகிறார்கள். அதற்கப்புறம் அதில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. கடைசியாகச் செய்யப்பட்டிருக்கிற திருத்தத்தையொட்டித்தான் இப்போது புது நாணய விகிதத்தில் அமைக்கப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் உயரவில்லை. அதோடு கொஞ்சம் பணம் சர்க்காருக்கு வந்தாலும் பாதகமில்லை. அதை இந்திய சர்க்காருக்கு அனுப்பிவிடப்போவது இல்லை. நம் ராஜ்ய மக்களுக்கேதான் செலவிடப்படும். ஆகவே இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பாமல் உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

**Mr. SPEAKER** : I shall now put the amendment moved by hon. Member Sri S. M. Annamalai to the vote of the House. The question is—

" That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958) be referred to a Select Committee."

The amendment was put and lost.

**Mr. SPEAKER** : I shall now put the original motion moved by the Hon. Minister to the vote of the House. The question is—

" That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 12 were put and carried.

*Clause 13.*

**Mr. SPEAKER** : The motion is—

" That clause 13 do stand part of the Bill."



25th March 1958]

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, I move—

" *For* the words ' ten naye paise ' *substitute* the words ' five naye paise.' "

**Sri K. RAMACHANDRAN** : I second the amendment, Sir.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : For the reasons that I have already stated, I am unable to accept the amendment, Sir.

**Mr. SPEAKER** : The question is :—

" *For* the words ' ten naye paise ' *substitute* the words ' five naye paise.' "

The amendment was put and lost.

Clause 13 was put and carried.

*Clause 14.*

**Mr. SPEAKER** : The motion is—

" That clause 14 do stand part of the Bill."

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, I move—

" The existing section 78 of the principal Act to be *renumbered* as sub-section (1) and the proposed new section to be *numbered* as sub-section (2) of section 78."

**Sri K. RAMACHANDRAN** : I second the amendment, Sir.

**Sri V. K. KOTHANDARAMAN** : Sir, I move—

" Before the proposed new section 78 *insert* the following, namely :—

' 78. *Act to be translated and sold cheaply.*—Every State Government shall make provision for the sale of translations of this Act in the principal regional language or languages of the territories administered by it at a price not exceeding twenty-five naye paise per copy, ' and renumber the new section 78 suitably.' "

The amendment was duly seconded.

**Mr. SPEAKER** : கோதண்டராமன் அவர்கள் இப்பொழுது வேண்டுமானால் பேசலாம்.

**Sri V. K. KOTHANDARAMAN** : சபாநாயகர் அவர்களே, சென்ட்ரல் ஆக்டில் இந்தச் சட்டப் புத்தகம் நாலணாவிற்கு மேற்படாமல் விற்கவேண்டுமென்று இருக்கிறது. விலைப்பற்றி இங்கு குறிப்பிடவில்லை. ஆகவே, அது அதிகப்படியான விலைக்கு விற்கப்படுமா இல்லையா என்பது தெரியவேண்டும். மேலும், இந்தச் சட்டப் புத்தகத்தை தமிழில் ப்ரிண்ட் செய்து குறைந்த விலைக்குக் கொடுத்தால் அதை வாங்கி எல்லோரும் படித்துத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால் தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை. ஏனென்றால் இப்பொழுது நம் மாகாணத்தில் தமிழ் மொழி ஆட்சி மொழியாகிவிட்டது. ஆகவே, எல்லாச் சட்டங்களும் தமிழில் பிரசுரிக்கப்படும். ஆகவே, இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை.

MR. SPEAKER: I shall now put the amendment moved by Sri V. K. Ramaswamy Mudaliyar to the vote of the House. The question is—

"The existing section 78 of the principal Act to be *renumbered* as sub-section (1) and the proposed new section to be *numbered* as sub-section (2) of section 78."

The amendment was put and lost.

MR. SPEAKER: Now that Sri Ramaswami Mudaliyar's amendment is lost, I declare the amendment moved by Sri V. K. Kothandaraman which is also to the same effect, as lost.

Clause 14 was put and carried.

*Clause* 15.

MR. SPEAKER: The motion is—

"That clause 15 do stand part of the Bill."

SRI S. LAZAR: Sir, I move—

"In entry 2 (a) of item (i) against 'proper stamp-duty', *insert* the words 'three-fourth of' before the words 'the same duty as a bond (No. 15), etc."

Sir, it has been categorically stated by the Hon. Minister that the intention of the Government is not to increase the duty which is already payable. It is stated in entry (2), "Administration Bond including a bond given under section 291 or section 375 of the Indian Succession Act, 1925 (Central Act XXXIX of 1925) or section 6 of the Government Savings Banks Act, 1873 (Central Act V of 1873.)" I want that the words 'three-fourth of' may be inserted before the words 'the same duty as a bond (No. 15), etc. According to the rates proposed by Government, the same duty as a bond is fixed in respect of cases where the amount does not exceed Rs. 1,000. I want that it should be three-fourth of the same duty as a bond. That is all.

The amendment was duly seconded.

SRI S. LAZAR: Sir, I move—

"In entry 6 (2) (a) (ii) of item (1) for the entry—

'and for every additional Rs. 10,000
or part thereof in excess of Rs. 30,000. 27 00 12 25 9 00"

the following entry may be substituted, namely—

'and for every additional Rs. 10,000
or part thereof in excess of Rs. 30,000. 27 00 13 50 9 00"

The amendment was duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

"In item (i), in entry 11, *for* the words 'in any High Court' *substitute* the words 'in the Madras High Court.'"



"In item (iv), in entry 30, and in items (*a*) and (*b*) of the Exemptions thereunder, *for* the words 'of any High Court' *substitute* the words 'of the Madras High Court.'"

There are also a series of other amendments which are of a consequential nature and I move them also—

"In item (viii) *for* the opening paragraph *substitute* the following, namely:—

'(viii) for entries 54 to 61, the following entries shall be substituted, namely:—'"

"In entry 62 of item (viii), in the opening paragraph *for* the words and letters '62. TRANSFER (whether with or without consideration)—', *substitute* the following, namely:—

'(ix) in entry 62, for clauses (*b*), (*c*), (*d*) and (*e*), the following clauses shall be substituted, namely:—'"

"In entry 62 of item (viii) *reletter* clauses (*a*), (*b*), (*c*) and (*d*) in the coloumn 'Description of instrument' as clauses (*b*), (*c*), (*d*) and (*e*) respectively."

"In entry 62 of item (viii) *for* the words 'chargeable' under clauses (*a*) and (*b*) of this article' in the column 'Proper stamp-duty' *substitute* the words 'chargeable under clauses (*b*) and (*c*) of this article.'"

"In entry 62 of item (viii) *omit* the *Exemptions* in the column 'Description of Instrument.'"

"In item (viii) immediately before entry 68, *insert* the following, namely:—

'(x) *for* entries 63, 64 and 65, the following entries shall be *substituted*, namely:—'"

SRI S. LAZAR: With regard to the amendment that I have given notice of in respect of entry 30 (*a*)—enrolment of Advocates—the Hon. Minister has stated that it may not be quite relevant under the circumstances in which the present Bill has been brought forward. I am of the opinion that any section of the Stamp Act can be amended even now provided it is not in conflict with the Act already promulgated by the Central Government. But, as the Hon. Minister has stated that this matter could be considered at a later time and that he would consider it later, I do not propose to move the amendment, Sir.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, in the first place, I must thank the hon. Member Sri Lazar who was kind enough not to move his amendment relating to enrolment of Advocates.

As for my amendments, the first one is intended to clarify the position. Instead of saying 'any High Court', it is specifically stated 'in the Madras High Court'. That is all and there is no difference of opinion with regard to that. As for the other amendments, though they may appear to be very big on paper, they are only of a consequential nature. They are very innocuous amendments.

[Sri M. A. Manickavelu] [25th March 1958

Therefore, since we have mentioned that in the amending Bill, we have to rectify it. It does not affect the basic object of the Bill. With regard to the other amendments moved by the hon. Member, I am glad to say that I accept the amendments Nos. 11 and 12.

Mr. SPEAKER : The question is—

"In entry 2 (a) of item (i) against 'proper stamp duty' *insert* the words 'three-fourth of' before the words 'The same duty as a bond (No. 15), etc.'"

The amendment was put and carried.

Sri R. SRINIVASA IYER : Mr. Speaker, with reference to amendment No. 12 moved by Mr. Lazar and accepted by the Government, I would make one submission. Formerly the rate was Rs. 6-2-0 and by Act XVI of 1943, it was made Rs. 12-4-0. Why should we make it Rs. 13·50 now, when the Government want to make it only Rs. 12·25? I desire to point out to the hon. Mover that in respect of item 6—Agreement relating to deposit or title-deeds, pawn or pledge, the Act of 1922 fixed the stamp fee at Rs. 6-2-0, and that the Amendment Act of 1943 made it Rs. 12-4-0. Now the Government simply make it Rs. 12·25. The hon. Member's amendment will increase it to Rs. 13·50 which the Government do not want.

Mr. SPEAKER : Let me make my position clear. I find that all rates in column 2 are just half of the rates mentioned in column 1. Therefore, I thought that Mr. Lazar intended that Rs. 13·50 being half of Rs. 27 should be there. That was the impression he gave me. But the hon. Member, Mr. Srinivasa Iyer, says it is not necessary and is raising an objection to it. I have nothing to do with the Bill except to put the various amendments to vote.

Sri S. LAZAR : Sir, the Amendment Act is old. (Laughter.) The Member is not quite correct. The latest position is this. I have got the rate here in the Hoe & Co.'s Diary and that is the latest.

Sri R. SRINIVASA IYER : On a point of order, Sir. When we have got a Government publication, is it open to a Member to look into the Hoe & Co.'s Diary and say we are wrong? We have got the Madras Code here. At page 1692, we find the relevant entry. Why should we enhance it now?

The Hon. Sri M. A. MANICKAVELU : The trouble arose in this way. What the hon. Member said was due to a printer's devil in the Code.

Mr. SPEAKER : What is the correct figure?

The Hon. Sri M. A. MANICKAVELU : It is Rs. 6-1-0.



25th March 1958]

Mr. SPEAKER : I am convinced that Mr. Srinivasa Iyer is right and Mr. Lazar is wrong. I have to rule the amendment out of order.

Sri S. LAZAR : I think what the Hon. Minister said is something totally different.

Mr. SPEAKER : Will the hon. Member talk it over for a minute with the Hon. Minister? I shall wait.

The Hon. Sri M. A. MANICKAVELU : I suggest, Sir, that you cut the Gordian knot.

Mr. SPEAKER : I rule Mr. Lazar's amendment out of order.

Mr. Lazar did not move his amendment. Now, I shall put the Government amendments to vote. The question is—

"In item (i), in entry 11, *for* the words 'in any High Court', *substitute* the words 'in the Madras High Court'."

The amendment was put and carried.

Mr. SPEAKER : The question is—

"In item (iv), in entry 30 and in items (a) and (b) of the Exemptions thereunder, *for* the words 'of any High Court', *substitute* the words 'of the Madras High Court'."

The amendment was put and carried.

Mr. SPEAKER : The question is—

"In item (viii) *for* the opening paragraph, *substitute* the following, namely :—

'(viii) for entries 54 to 61, the following entries shall be substituted, namely :—'"

The amendment was put and carried.

Mr. SPEAKER : The question is—

"In entry 62 of item (viii), in the opening paragraph *for* the words and letters '62. TRANSFER (whether with or without consideration)—', *substitute* the following, namely :—

'(ix) in entry 62, for clauses (b), (c), (d) and (e), the following clauses shall be substituted, namely :—'"

The amendment was put and carried.

Mr. SPEAKER : The question is—

"In entry 62 of item (viii) *reletter* clauses (a), (b), (c) and (d) in the column 'Description of instrument' as clauses (b), (c), (d) and (e) respectively."

The amendment was put and carried.

MR. SPEAKER: The question is—

"In entry 62 of item (viii) *for* the words 'chargeable under clauses (*a*) and (*b*) of this article' in the column 'Proper stamp-duty' *substitute* the words 'chargeable under clauses (*b*) and (*c*) of this article'."

The amendment was put and carried.

MR. SPEAKER: The question is—

"In entry 62 of item (viii) *omit* the EXEMPTIONS in the column 'Description of Instrument'."

The amendment was put and carried.

MR. SPEAKER: The question is—

"In item (viii) immediately before entry 63, *insert* the following, namely:—

'(x) for entries 63, 64 and 65, the following entries shall be substituted, namely:—'"

The amendment was put and carried.

Clause 15, as amended, was put and carried.

Clauses 16 to 19 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958 (L.A. Bill No. 12 of 1958), as amended, be passed."

4-50 p.m.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது இப்போது சட்டமாக்கப்படவிருக்கிறது. இதில் அனேக குளறுபடிகள் இருப்பதை நாம் பார்த்தோம். இதில் இரண்டு பக்கத்தில் இருப்பவர்களும் பேசினார்கள். இதைப்பற்றி ஆக்டில் கொண்டு வந்த பிறகு இங்கு கொண்டு வந்திருக்கலாம். இதை செண்ட்ரல் இதில் அனெக்ஸர் கொடுத்திருந்தால் விவரங்கள் எல்லாம் வெட்டவெளிச்சமாக தெரிந்திருக்கும். இப்போது இருப்பதைப் பார்த்தால் இதில் அதிகமாக மாறுதல்கள் ஒன்றுமில்லை என்று நினைக்கக்கூடும். இனிமேலாவது டிப்பார்மெண்டார்களுக்கு சரியானபடி உத்தரவு போட்டு இனிமேல் வரக்கூடிய மசோதாக்களிலாவது சரியானபடி அனெக்ஸர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக ஸ்டாம்பு வாங்குவதில் பழைய ஸ்டாம்புகளை திரும்ப கொடுக்கும்போது அது கெட்டுப்போய்விட்டால் ஒன்றரை அணா, ஒன்றேமுக்கால் அணா என்று கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் இப்போது ரெஜிஸ்ட்ரேஷனுக்கு சார்ஜ்கள் எல்லாம் அதிகமாகிவிட்டது. இதனால் பொது மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி அதிகமாக சர்ச்சை செய்யவேண்டும். இதைத்தான் நான் சொன்னேன். ஆகவே இதைப் பற்றி பொதுமக்கள் புரிந்து கொள்ளும்படியான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI K. ANBAZHAGAN: அவைத்தலைவர் அவர்களே, இந்தியன் ஸ்டாம்ப்ஸ் அமெண்ட்மெண்ட் ஆக்ட் என்று ஆங்கிலத்தில் இருப்பதை தமிழில் இந்தியத் தபால் தலை மசோதா என்று மொழிபெயர்த்திருப்பது கருத்தினில் சரியல்ல என்று நினைக்கிறேன். அதற்கு பதிலாக இந்திய முத்திரை மசோதா, அரசாங்கத்தலை மசோதா என்று வேண்டுமானால்



வைத்துக்கொள்ளலாம். இந்த மசோதா ஆய்வுக்குழுவுக்கு விடப்பட்டிருந்தால் இதைப்பற்றி கூடுதலாக பரிசீலனை செய்திருக்க முடியும். புதிய நாணய திட்டமானது கொண்டு வரப்பட்ட காரணத்தால் ரூபா அணாவிலிருப்பதை புதுக்காசு முறைக்கு மாற்றும்போது இம்மாதிரி குழப்பம் ஏற்படுவது இயற்கை. பொதுமக்களிடத்தில் வழங்குகிற காசுமுறையில் மசோதா கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியமே. ஆனால் புதுக்காசுகளின் அளவு முறைக்கேற்ப—ஒரு புதிய விகிதாசாரத்தில்—ஒரு புதிய சட்டமே கொண்டுவர வேண்டுமே தவிர—பழைய தொகையான இத்தனை அணாவிற்கு இத்தனை காசு என்று அட்டவணை தயாரிப்பது முறையாகாது. இதை ஆங்கிலத்தில் "ரேஷனல் பேஸிஸ்" (Rational Basis) என்று குறிப்பிடலாம். அந்த அடிப்படையை அமைத்துக்கொண்டு புதுக்காசு எப்பொழுது புழக்கத்திற்கு வருகிறதோ அந்தக் காலத்தில் முத்திரை விலைகளையும் ஐந்து காசு, பத்து காசு, பதினைந்து காசு என்று புதிய காசு முறையில் கொண்டு வரவேண்டும். இதற்காக மாற்றப்படும்பொழுது அதிகமான பணம் வசூலிப்பது நல்லது அல்ல என்பது இங்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் "இந்திய அரசாங்கம் ஒரு அட்டவணை ஷெட்யூல் அமைத்திருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் மாகாண அரசாங்கம் இங்கு சட்டம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். மாநில அரசாங்கத்தின் அல்லது இந்த சட்டமன்றத்தில் எடுத்துச்சொல்லப்படுகிற கருத்துக்களை ஒரு வேளை மத்திய சர்க்காரால் மதிக்க மறுக்கின்ற சூழ்நிலையை இது காட்டுவதாக இருக்கிறது. நம்முடைய கருத்துக்களுக்கேற்ப நாமே சட்டம் அமைத்துக்கொள்வதற்கு நம்முடைய சட்டமன்றத்திற்கு வாய்ப்பு இருக்கவேண்டுமே தவிர டெல்லியிலிருந்து ஒரு திட்டத்தை மத்திய அரசாங்கம் அனுப்பினால் அதை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுள்ள நிலை மாறவேண்டும். ஆகவே இதை ஆய்வுக்குழுவுக்கு அனுப்பியிருந்தால் வழக்கறிஞர்களாக இருக்கின்ற அங்கத்தினர்கள் இதில் காணப்படும் குழப்பமான பிரச்னைகளுக்கு முடிவு கண்டிருக்கக்கூடும். அந்த சந்தர்ப்பத்தை ஆட்சியாளர்கள் அளிக்கவில்லை. எனினும் இதிலுள்ள குறைகளை களைந்தெறிவதற்கு ஆட்சியாளர்கள் தாமே முன்வருவார்கள் என்று நம்புகிறேன். மேலும் இந்த மசோதாவானது சட்டமாக வருகின்ற இந்த நோக்கில் இன்னும் நாள்தோறும் திருத்தப்படவேண்டிய நிலைமை வந்து கொண்டிருக்கும் என்றுதான் நினைக்கிறேன். ஆகவே [illegible] சட்டங்களை பொதுமக்களின் நன்மையின் அடிப்படையில் கருதிக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் இதை நான் ஆதரிக்கிறேன்.

SRI R. SRINIVASA IYER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்போகிற இந்த தருணத்தில் நான் ஏற்கெனவே சொன்ன விஷயத்தைப்பற்றி இன்னும் சொல்லுவதாக இருந்தால் இன்னும் விபரமாக சொல்லிக்கொண்டேயிருக்கலாம். அதாவது இந்த சட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படுகிற கஷ்டத்தைப்பற்றி இங்கு பேசப்பட்டது. 1922-ல் கொண்டுவரப்பட்ட இந்த Indian Stamp Act பல தடவை திருத்தப்பட்டிருந்த போதிலும், Section, Section-ஆக திருத்தப்பட்டிருக்கிறதே தவிர பூராவும் சேர்த்து ஒரே ஷெட்யூலாக இன்னும் பிரசுரம் செய்யப்படவில்லை. Madras Stamps Manual இப்போது பொதுமக்களுக்கு கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. இந்த ஒரு புத்தகத்திற்கு இருக்கும் திருத்தத்தை ஐந்து புஸ்தகங்களாக வெளியிட வேண்டியிருக்கிறது. அதை ஒரு தலைவிரி கோலமான புஸ்தகம் என்று சொல்லலாம். பொது ஜனங்களுக்கு இதை எப்படி பார்ப்பது என்றே தெரியவில்லை. சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸுக்குப் போனால் இதைப்பற்றி விதம் விதமாக அர்த்தம் சொல்லுகிறார்கள். அங்கு இருக்கின்ற எழுத்துக்காரர்களுடைய கையில் தான் அதிகாரங்கள் எல்லாம் இருக்கிறது. ஆகவே நான் சர்க்காரை கேட்டுக்கொள்வது என்னவென்றால் இவ்விதம் ஐட்டம் ஐட்டமாக இருப்பதை மாற்றி ஒரே ஆக்டாக உடனடியாக அச்சடித்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக கவர்ன்மெண்ட் பிரஸில் ஒரே இரவில் சில சட்டங்களை, திருத்தங்களை அச்சடித்து கொடுத்துவிடுகிறார்கள். அதுவும் சரியான சமயத்தில் எல்லோருக்கும் கிடைப்பதில்லை;

[Sri R. Srinivasa Iyer] [25th March 1958

சர்க்காருடைய வருவாயை உத்தேசித்து இந்த திருத்தங்களை எல்லாம் சேர்த்து அச்சடித்து பொதுஜனங்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் கிடைக்கும் படியாக செய்ய வேண்டும். இதற்கு சரியானபடி அப்பெண்டிக்ஸ் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. இதைப்பற்றி இதற்கு முன்னுள்ள 1922-ம் ஆண்டு சட்டத்தையும் 1943-ம் ஆண்டு சட்டத்தையும் வைத்துக் கொண்டு மூன்று மணி நேரம் ஆலோசித்துப் பார்த்தாலும் முக்கால்வாசி கூட சரியாக புரியவில்லை. எப்படியும் சட்டம் வந்தாய் விட்டது. நான் வக்கீல்களைப்பற்றி குறிப்பிட்டதை நண்பர்கள் சொன்னார்கள். இனிமேல் வக்கீல்களுக்கு வேலை கிடையாது. **In every Act we pass, we oust the jurisdiction of Civil Courts.** நல்ல வக்கீல்களுக்கு கூட வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. வேலை கிடைப்பது வரவர கஷ்டமாக இருக்கிறது என்று நண்பர் லாசர் அவர்கள் சொன்னது உண்மையாகத்தான் இருக்கிறது. 500 ரூபாய் என்று இருந்ததை இப்போது 625 என்று எதற்காக திருத்தம் கொண்டு வந்து மாற்றியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இனிமேல் நாங்கள் எல்லாம் புதிதாக படிக்கப்போவதில்லை. இனிமேல் வருகின்ற வக்கீல் வர்க்கத்தினருக்கு வேண்டி தான் இது சொல்லப்பட்டது. ஆகவே 625 ரூபாய் என்றிருப்பதை 500 ரூபாய் என்று கொண்டுவந்திருக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாகாணத்தில் மசோதாவை நிறைவேற்றும் விஷயத்தில் மத்திய அரசாங்கம் தலையிடுவதாக சொல்லப்பட்டது. அவ்விதம் ஒன்றுமில்லை என்பதை சொல்ல விரும்புகிறேன். நாம் மசோதா கொண்டு வருவதில் மத்திய அரசாங்கம் தலையிட முடியாது. ஆனால் சில மசோதாக்களுக்கு அவர்களுடைய அனுமதி வேண்டியிருக்கிறது. அதிலும் சின்னின்ன பகுதிகள் சட்டத்திற்கு விரோதமாயிருக்கிறது என்று சொல்லுவதைத் தவிர தலையிட முடியாது. சில சட்டங்களில் தான் மத்திய அரசாங்கத்தினுடையதாக இருக்கும். இப்போதுள்ள இந்தியன் ஸ்டாம்ப் ஆக்டை நமது ராஜ்யத்தில் கொண்டுவரும்பொழுது நமது ராஜ்யத்திலுள்ள நிலைமைகளை ஒட்டி அதற்கு தகுந்தாற்போல் மாற்றம் செய்து நாம் கொண்டு வருகிறோம். இந்த வகையில் தான் சீர்திருத்தம் செய்கிறோம். இப்போது ஏற்பட்டிருக்கிற நயாபைஸா மாற்றத்தினால் தான் இதை அவசரமாக கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதனால் தான் இதை பொறுக்கு கமிட்டிக்கு அனுப்புவதற்கு ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. இதை வேண்டுமென்றால் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து விவாதித்து இருக்கலாம்.

5 p.m. ஆனால் இது பிரமாதமாக இருந்தாலும் இதில் ஓர் சாரமும் இல்லை. சாரம் அதிகமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். கனம் லாஸர் அவர்கள் ரூ. 625 என்று இருப்பதைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு வேறு வழி தேட வேண்டும். ரூபாய், அணா, பைசாவை நயா பைசாவாக மாற்ற வேண்டும் என்றால் அதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன என்பது தெரிய வருகிறது. அதனால் அதை எடுத்து விட வேண்டும் என்று சொல்வதற்கு இல்லை. எல்லா மாகாணங்களிலும் ஒரே ரீதியில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்யப்படுகிறது. மத்திய அரசாங்கத்தில் ஒரு ஜாப்தா கொடுத்திருக்கிறார்கள். அதன்படி எல்லா மாகாணங்களிலும் ஒரேமுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதனால் மத்திய அரசாங்கம் ஏதோ அதிகாரத்துடன் சொல்லுகிறார்கள், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இல்லை. அவர்கள் ஒன்றும் கட்டாயப்படுத்தவில்லை. எல்லோருக்கும் சௌகர்யமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஸ்டாம்பு ட்யூட்டி எல்லா மாகாணங்களிலும் ஒரே ரீதியில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருத்தங்கள் அநேகமாக இருக்கிறது, புத்தகத்தில் ஒட்டி ஒட்டி பெரிதாகப் போய் விட்டது என்று சொல்லப்பட்டது. இப்பொழுதுள்ள ஸ்டாண்டிங்



25th March 1958] [Sri M. A. Manickavelu]

ஆர்டரும் அப்படித்தான் ஒட்டி ஒட்டி பெரியதாக ஆகி இருக்கிறது. ஒட்டிக்கொண்டே போவதால் அது நீண்டுகொண்டே தான் போகிறது. ஐந்தாறு வருஷங்களை எடுத்துக்கொண்டால் நிறைய ஒட்ட வேண்டியதாகத் தான் இருக்கிறது. அதையெல்லாம் ஒன்றாகச் சேர்க்க வேண்டும் என்றால் அது ஒரே நாளில் முடியாது. இப்பொழுது அச்சடிக்காமல் ஒத்திப் போட்டது நல்லது தான். ஆங்கிலத்தில் அச்சடித்திருந்தால் மறுபடியும் அதையே தமிழில் அச்சடிக்க வேண்டியதாக ஏற்பட்டிருக்கும். இனிமேல் அச்சடிக்கப் போவதால் எல்லாவற்றையும் தமிழிலேயே அச்சடித்து விடலாம். அப்படி அச்சடிக்க சௌகர்யமாக இருக்கும்.

குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வக்கீல்களிடத்தில் குழப்பம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நயா பைசாவாலேயே பெரிய குழப்பம்தான் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழப்பத்தினால் சாதாரண ஜனங்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் என்பது வாஸ்தவம் தான். நயா பைசாவால் ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பத்தை பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகள் அதிகப்படியாக சம்பாதிக்கிறார்கள். ட்ரான்சிஷனல் ஸ்டேஜில் இப்படித்தான் இருக்கும். இதனால் ஏற்படக்கூடிய கஷ்டத்தை தவிர்க்க முடியாது. கூடுமான வரையில் நிலைமையை நாம் சமாளித்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் அதற்கு நிவாரணத்தை தேடிக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தேடிக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். குழப்பத்தை ஒரு அளவுக்குத்தான் குறைக்கலாம்.

வக்கீல்களைப்பற்றி சொன்னார்கள். அவர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குள்ள வேலை போகவில்லை. அவர்களிடத்தில் ஏற்பட்ட குழப்பத்தை எவ்வளவு தூரம் குறைக்கலாமோ அவ்வளவு தூரம் குறைக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம். அதற்கு எவ்வளவோ காரியங்களைச் செய்து கொள்ளலாம். அவைகளைச் செய்து கொண்டால் குழப்பம் ஓரளவிற்கு குறையும். ஏதாவது சின்னச் சின்ன திருத்தங்களை செய்திருக்கலாம், சிலவற்றை செய்யாமல் விட்டு விட்டிருக்கலாம். அதனால் குடி முழுகி விடாது. அடிப்படை பிரச்னையில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. சின்னச் சின்ன விஷயங்களில் வித்தியாசம் இருந்தால் அதனால் பரவாயில்லை. கூடுமான வரைக்கும் நல்ல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அவைகளையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொண்டு இந்த பிரேரபணையை நிறைவேற்றும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The question is—

**"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1958, (L.A. Bill No. 12 of 1953) as amended, be passed."**

**The motion was put and carried and the Bill as amended was passed.**

## (2) THE MADRAS CHILDREN (AMENDMENT) BILL, 1958 [a] (L.A. BILL NO. 10 OF 1958).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Children (Amend-

[a] Published in the *Fort St. George Gazette*, Extraordinary, dated 13th March 1958.

[Sri M. Bhaktavatsalam] [25th March 1958

ment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam,
2. Sri P. G. Karuthiruman,
3. ,, M. Ramachandra Reddi,
4. Srimathi Kamalambuja Ammal,
5. ,, C. Kolanthai Ammal,
6. ,, P. K. R. Lakshmikantham,
7. ,, Rajathi Kunchithapatham,
8. Sri P. M. Munuswami Gouhder,
9. ,, P. Jayaraj,
10. ,, B. K. Linga Gowder,
11. ,, T. K. Subbiah,
12. ,, K. R. Nallasivam,
13. ,, K. Ramachandran,
14. ,, C. Nataraja Odayar,
15. ,, N. K. Palanisami,
16. Dr. E. P. Mathuram."

It is now more than 37 years since the Madras Children Act, 1920, which contains the first comprehensive legislation on the subject of the custody, trial and punishment of youthful offenders and for the protection of children and young persons was enacted in this State. This enactment was mainly based on the English Children Act. The main objects of the Act are—

(1) to prohibit the imprisonment of juvenile offenders under 16 years of age;

(2) to provide for the reception of youthful offenders under 12 years of age in junior certified schools and those between the ages of 12 and 16 in senior certified schools;

(3) to empower courts to commit a juvenile offender to the custody of his parent, guardian or any adult relative and to place him under the supervision of a person named by the court; and

(4) to provide for children who are likely to drift into crime being sent to certified schools or committed to suitable custody.

In 1950, the Government considered that the methods pursued in certified schools and other institutions established under the Madras Children Act were inadequate and that a radically new approach to the problem of juvenile delinquency was essential.



25th March 1958] [Sri M. Bhaktavatsalam]

According a Bill to replace the Madras Children Act was published in 1950. This Bill was designed to implement and bring into practice a radically new concept of the treatment, care and training of delinquent, neglected or destitute children. The Bill was considered by the Provincial Advisory Board of Education. While expressing general agreement with the terms of the Bill, the Board suggested the constitution of a Committee to consider in detail the provisions of the Bill. Government accordingly appointed the Madras Children Bill Committee, 1950 to consider the provisions of the Bill. The draft amendments suggested by the Committee were examined by Government. In view, however, of the large expenditure involved and the then impending partition of the State, the proposal to legislate on the lines of the Draft Children Bill was deferred. In November 1953, the Government of India informed all State Governments that the Model Children Bill as drafted by the Expert Committee on Juvenile Delinquency and subsequently revised by the Government of India had been introduced in the Parliament. This Bill was intended to apply to all Part 'C' States. This Bill was subsequently given up by the Government of India.

In December, 1953 the question of undertaking legislation on the lines of the Madras Children Bill, 1950 was again considered and a Committee was appointed to scrutinise the Central Bill and suggest modifications, if necessary, to the Madras Children Bill, 1950. The terms of reference for this Committee were—

(1) to examine the provisions of the Central Children Bill, 1954, with a view to their adaptation by the Madras Children Act, 1920.

(2) to examine the provisions of the Madras Children Bill, 1950 and see whether all or any of them may be incorporated in the Bill to be introduced in this State; and

(3) to consider suggestions, if any, on the subject received from the Government departments or from the general public from time to time and make recommendations germane to the above.

The Committee recommended that the Madras Children Act be amended. The amendments suggested by the Committee provide for maintenance, welfare, education and character training of youthful offenders and of children who are uncontrollable, in moral danger, destitute or in need of care and protection, so that such children also may have a really good opportunity to grow up into valuable and happy members of the community. In addition, it is proposed to make a provision in the Madras Children Act for the transfer of girls convicted of the offence of prostitution under section 12 of the Madras Suppression of Immoral Traffic Act, 1930, and detained in a certified school to a rescue home, when such girls are found to be exercising an evil influence over the other inmates of the school. It is also proposed to omit the provision relating to whipping as a judicial form of punishment for a child or young person. The Bill is intended to make necessary provisions in this behalf.

[25th March 1958 [Sri M. Bhaktavatsalam]

The salient features of the Bill are :—

(1) New provision for the detention of a person beyond his eighteenth year in an After-care-Home.

(2) Prescribing a minimum period of two years for committal of children to a Junior Certified School.

(3) Deletion of whipping as a judicial form of punishment for a child or young person.

(4) Placing incorrigible children after release under the supervision of a Probation Officer or in an After-care institution.

(5) Providing penalties for offences committed against children or young persons.

(6) Authorising the making of provision by rule for sending inmates in special cases to educational institutions or to institutions for professional or vocational training outside the limits of approved schools for education or training.

DEPUTY SPEAKER : Motion moved—

" That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam,
2. Sri P. G. Karuthiruman,
3. ,, M. Ramachandra Reddi,
4. Srimathi Kamalambuja Ammal,
5. ,, C. Kolanthai Ammal,
6. ,, P. K. R. Lakshmikantham,
7. ,, Rajathi Kunchithapatham,
8. Sri P. M. Munuswami Gounder,
9. ,, P. Jayaraj,
10. ,, B. K. Linga Gowder,
11. ,, T. K. Subbiah,
12. ,, K. R. Nallasivam,
13. ,, K. Ramachandran,
14. ,, C. Nataraja Odayar,
15. ,, N. K. Palanisami,
16. Dr. E. P. Mathuram."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958) be circulated for the purpose of eliciting public opinion."

SRI N. MARUDACHALAM : Sir, I second it.



25th March 1958]

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958) be circulated for the purpose of eliciting public opinion."

The motion as well as the amendment is before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மைனர் குழந்தைகள் தவறு செய்துவிட்டால், அவர்களை பிடித்து ஜெயிலுக்கு அனுப்புவதற்குப் பதிலாக "பார்ஸ்டல் ஸ்கூல்" என்று சொல்லக்கூடிய ஜெயிலுக்கு அனுப்புவதன் காரணமாகத் தான் இந்த மசோதா வந்திருக்கிறது. "பார்ஸ்டல் ஸ்கூல்" என்றால் தமிழிலே என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆங்கிலம் தெரிந்தவர்களை கேட்டுப் பார்த்தேன். அவர்களும் "பார்ஸ்டல் ஸ்கூல்" என்றே தமிழிலும் சொல்லி விடலாம் என்று கூறிவிட்டார்கள். 5-20 p.m. இதை எதற்காக குறிப்பிட்டேன் என்றால், 37 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த சட்டம் இயற்றப்பட்டது. இவ்வளவு ஆண்டுகள் கழித்து இந்த நேரத்திலே அதற்கு ஒரு திருத்த மசோதா நம் முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. "சில்ட்ரன் ஆக்ட்" என்று பார்த்தவுடனே, ஏதோ குழந்தைகளுக்கு இனிமேற்பட்டு விமோசனம் வரும்போல் இருக்கிறது, குழந்தைகளுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டும், படிப்பதற்கு பலவிதமான வசதிகள் செய்துகொடுக்க வேண்டும், அதற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்று நினைத்தேன். அதற்குப் பிறகு மசோதாவை முழுவதும் படித்துப் பார்த்ததில், குறிப்பாக இந்த சட்டத்திற்கு "சில்ட்ரன் ஆக்ட்" என்ற பெயர் கூட பொறுத்தமாக இல்லை என்று கூறவேண்டியிருக்கிறது. தவறு செய்யக்கூடிய சிறு குழந்தைகள் "பார்ஸ்டல் ஸ்கூலுக்கு" அனுப்பப்படுகின்றன என்று சொன்னால், இந்த ராஜ்யத்தில் அப்பேற்பட்ட ஸ்கூல்கள், 1, 2 தான் இருக்கிறது. அதே நேரத்தில் வயிற்றுக்கு இல்லாத காரணத்தினாலே பல பையன்கள் பல தவறுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களையும் "பார்ஸ்டல் ஸ்கூலுக்கு" அனுப்பக்கூடிய அளவில் "பார்ஸ்டல் ஸ்கூல்கள்" கிடையாது. அந்த நிலைமையில் சிறிய பையன்கள் சென்டிரல் ஜெயிலிலே இருக்கக்கூடிய அவசியம் ஏற்படுகிறது. மேலும், சமீபத்தில் "ஜெயில் ரிபார்ம்" பற்றி ஒரு ரிபோர்டு வெளிவந்திருக்கிறது. அதில் கூட குற்றம் செய்யக்கூடிய மைனர் பையன்களைப் பற்றி பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் அந்த ஸ்கூலிலிருந்து வெளியே போகும் வரையில் அவர்களுக்கு நல்ல முறையிலே கல்வியெல்லாம் கற்றுக்கொடுத்து, அவர்கள் வெளியே போகும்பொழுது கையிலே பணம் கொடுத்து அனுப்பவேண்டும், உடைகளை கொடுத்து அனுப்பவேண்டும் என்று அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் வெளியிலே போகும்பொழுது ஒரு உத்தியோகத்தில் ஈடுபடக்கூடிய அளவுக்கு அவர்களை திருத்தி அனுப்பவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நல்ல தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த ஸ்கூல்கள் ஜெயில்கள் போல் தான் இருக்கிறதே தவிர, அவைகளை பாடசாலைகள் என்று சொல்ல முடியாது. அவைகளை "பார்ஸ்டல் ஸ்கூல்" என்று சொல்லமுடியாது என்று அந்த ரிபோர்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோன்று 37 வருஷங்களுக்கு முன்னால் அமைக்கப்பட்ட இந்த ஸ்கூல்களை திருத்தி அமைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஒரு திருத்தத்தை மட்டும் கொண்டுவந்து இதை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு விவாதித்து ஒரு நல்ல சரியான முடிவுக்கு வரமுடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டம், ஜெயில் ரிபார்ம் ரிபோர்டு, 1955-ம் வருஷத்தில் வந்திருக்கும் ரிபோர்டு இவைகளையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு நன்றாக பரிசீலனை செய்து, விவாதம் செய்து ஒரு நல்ல முடிவு காண்பதற்கு முயற்சி செய்யவேண்டும். அப்படியில்லாமல் குறிப்பிட்டு திருத்தத்தை மட்டும் கொண்டுவந்து அதை

செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டுவிட்டால்மட்டும் இந்தப் பிரச்னையில் ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியாது. இந்த நிலைமையில் நாம் குற்றங்கள் செய்யக்கூடிய குழந்தைகளுக்கு விமோசனம் தேடிக்கொடுத்தவர்கள் ஆகமாட்டோம் என்பதைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று சிறு குழந்தைகள் தவறு செய்த பிறகுதான் அவர்களை திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. அவர்கள் திருடினாலோ அல்லது வேறு தவறு செய்தாலோ அவர்கள் பேரில் குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டில் அவர்களுக்கு "கன்விக்ஷன்" கொடுத்த பிறகுதான் இந்த ஸ்கூலுக்கு அனுப்பப்படுகிறார்கள். சென்னை நகரத்தில் எடுத்துக்கொள்ளுவோமானால், பத்தாயிரக் கணக்கில் மைனர் குழந்தைகள் நாடோடிகள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கல்வி இல்லாமல், படுப்பதற்கு தகுதியான இடமில்லாமல், உணவு இல்லாமல் மிக மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலையிலே இருக்கக் கூடியவர்களையெல்லாம்கூட இது போன்ற ஒரு ஸ்கூலில் வைத்து, அவர்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுத்து, அவர்களை முன்னுக்கு கொண்டுவரக் கூடிய அளவுக்கு நல்ல முறையில் சட்டம் இயற்றவேண்டும். அப்படிச் செய்தால் எதிர்கால சமூகம் வளர்வதற்கு, அவர்கள் நல்ல முன்னேற்ற பாதையிலே போவதற்கு நல்லது செய்தவர்களாவோம். ஆகவே, இந்த திருத்த மசோதாவை மட்டும் செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடாமல், முழு சட்டத்தையும் இந்தக் கமிட்டியில் வைதது விவாதம் செய்து நல்ல முறையில் ஒரு முடிவு காணுவதுதான் நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்பதை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: Mr. Deputy Speaker, this is a legislation for dealing with juvenile delinquents. The Children Act of 1920 provides for the establishment of juvenile courts in all parts of the State. But, we find that only in certain districts we have these courts. All the districts do not have these courts with the result that there is so much of hardship caused. I request that juvenile courts may be established in all the districts at least after the new Act comes into force.

Another point which I wish to stress in this connection is this. All the children are rounded up and kept in the sub-jail. I should say that psychologically, it will have a bad effect on the children so kept in those jails. This procedure will be highly detrimental to the children and will spoil the morale of juveniles. My submission is that they should be kept in separate places and should not be allowed to mingle with the ordinary prisoners for a very long time

Another submission of mine is this. The Probation Officers whose number is already inadequate, are entrusted with so many jobs such as looking after the children in Borstal Schools, suppression of immoral traffic, etc. So, they are unable to discharge their duties satisfactorily. When the present Bill is passed, I request that the Government may appoint more officers. It is stated that there will be no extra cost to the Governmnet. But, if they want to enforce the Act effectively, more officers are necessary.

Sir, the Certified Schools in the different districts should be recognised as after-care houses and the maximum accommodation should be provided in those homes. The Bill is going before the Select Committee and I shall reserve my other observations on the



Bill till we receive the report of the Select Committee. For the present, I shall only state that the Government must appoint more Probation Officers and set up more after-care houses and shelters in the different parts of the State. These two things are very essential and also very urgent and should therefore be attended to immediately. I would like the Select Committee to go into these things as well as the insertion of new sections contemplated under clause 12 of the Bill. Most of the cases are not effectively dealt with. In most cases, the Act is not properly enforced. Most of them are entrusted to Honorary Magistrates who do not regularly go to the courts. That is my recollection. Any legislation of this kind must devote more attention to after care. Our object and aim should be to enable these children to correct themselves and to rehabilitate them so that they may be able to take their proper place in society in the years to come. That is why I say that they should not be allowed to mingle with other ordinary prisoners in the sub-jails.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் உதவி சபாநாயகர் 5-30 p.m.
அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவரும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ. கோதண்டராமனும் குறிப்பிட்ட காரணங்களுக்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இரண்டு சபைகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு இதை அனுப்ப வேண்டுமென்று இப்போது நான் பிரேரேபித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் ஏதோ ஒரு திருத்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சாதாரணமாக, தவறு செய்யும் குழந்தைகளையும் அனாதைகளாக இருக்கும் குழந்தைகளையும் சிறையில் வைத்தால் அவர்கள் கெட்டுத்தான் போவார்கள். அவர்களை திருத்தக்கூடிய வழி அதுவல்ல என்பதுதான் இந்தத் திருத்த மசோதாவின் அடிப்படைக் கருத்து. கனம் அங்கத்தினர்கள் ஒரு முக்கியமான திருத்தத்தைக் கவனித்திருப்பார்கள். அதாவது, குற்றம் புரியும் குழந்தைகளுக்கு சவுக்கடி கொடுக்கும் முறை இதுவரை இருந்து வந்திருக்கிறது. அந்த முறையை எடுத்துவிடுவதற்கான ஒரு திருத்தம் இந்த மசோதாவில் இருக்கிறது. இந்த மசோதா சம்பந்தமாக பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் கூறினார். குழந்தைகள் நாட்டின் சிறந்த பொக்கிஷம். அவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை; சில சமயங்களில் அவர்களுடைய பெற்றோர்கள்கூட அதற்குக் காரணஸ்தர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும், அவர்கள் தவறு செய்வதை நாம் சட்டைசெய்யாமல் இருந்துவிட்டால், பிறகு அந்த நிலைமை சமூகத்திற்கு பேராபத்தாக முடியும் என்று அறிகிறோம். ஆகையால் குழந்தைகள் தவறுசெய்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனது பூர்வாங்கப் பேச்சில், இந்த மசோதா பல ஆண்டு காலமாக ஒரு பரிசீலனைக் கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டு வந்திருக்கிறது என்று சொன்னேன். இவ்வளவு காலமாக இதைப் பரிசீலித்திருக்கும்போது, இனிமேலும் இதைப் பரிசீலிப்பதற்காக இதுசம்பந்தமாக பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டியது அவசியமில்லை என்றுதான் திரு. கோதண்டராமனுக்கு நான் தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன். தவறுசெய்யும் குழந்தைகள் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டால், அவர்கள் நல்ல பிரஜைகளாவார்கள். "சேவாசமாஜம் பாய்ஸ் ஹோம்" என்பதுபோன்ற ஸ்தாபனங்கள் இருக்கின்றன. நேற்று ஸேவாஸமாஜத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே, அனாதைகளாக இருந்த சிறு குழந்தைகள் இரண்டு-மூன்று ஆண்டுகளாகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் திருந்தியதோடு ஒரு தொழிலும் கற்றுக்கொண்டு சம்பாதிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் சம்பாதனையைச் சேர்த்துவைத்திருந்தார்கள். அவர்களில் 3-4 பேர்கள்

அவ்வாறு பணம் சேர்த்து வைத்திருந்தார்கள். அந்தப் பணமெல்லாம் சிறுசேமிப்புப் பத்திரங்களாக வழங்கப்பட்டன. நானேதான் வழங்கினேன். ஒரு பையனுக்கு 750 ரூபாய்க்கும் மற்றொரு பையனுக்கு 500 ரூபாய்க்கும் பாண்டுகள் வழங்கினேன். தவறுசெய்யும் குழந்தைகளை கவனித்துவந்தால் அவ்வாறு அவர்களை சீர்திருத்தமுடிகிறது. எல்லாக் குழந்தைகளும் அவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வது சமூகத்திற்கு மிகவும் நன்மைபயக்கும் என்பதால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொறுக்குக் கமிட்டியில் மசோதாவை நன்றாகப் பரிசீலனை செய்து, எவ்வாறெல்லாம் திருத்தவேண்டுமோ அவ்வாறெல்லாம் திருத்தலாம். ஆகவே கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் இந்த மசோதாவை பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டுமென்ற தமது பிரேரேபணையை வற்புறுத்தமாட்டார் என்று நம்புகிறேன். அவர் அதை வற்புறுத்தினாலும் அதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று என் பிரேரணையை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

The amendment of Mr. Kothandaraman was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER: I shall now put the original motion to vote. The question is—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee:—

1. The Hon. Sri M. Bhaktavatsalam,
2. Sri P. G. Karuthiruman,
3. ,, M. Ramachandra Reddi,
4. Srimathi Kamalambuja Ammal,
5. ,, C. Kolanthai Ammal,
6. ,, P. K. R. Lakshmikantham,
7. ,, Rajathi Kunchithapatham,
8. Sri P. M. Munuswami Gounder,
9. ,, P. Jayaraj,
10. ,, B. K. Linga Gowder,
11. ,, T. K. Subbiah,
12. ,, K. R. Nallasivam,
13. ,, K. Ramachandran,
14. ,, C. Nataraja Odayar,
15. ,, N. K. Palanisami,
16. Dr. E. P. Mathuram."

The motion was put and carried.

5·35 p.m. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.



## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

84. *Notification issued with G.O. No. 4804, Revenue, dated 31st December 1957, inserting certain rules and forms to the Madras General Sales Tax Rules, 1939. (Laid on the Table of the House under Section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939).*

85. *Notification issued with G.O. Ms. No. 319, Home, dated 6th February 1958, adding new rule 9 to the Madras Juvenile Court Rules, 1930.*

86. *Notification issued with G.O. Ms. No. 394, Home, dated 14th February 1958, amending rules 5, 7 and 9 of the rules for the management of the Government Reception Homes, Madras.*

87. *Notification issued with G.O. No. 257, Local Administration, dated 14th February 1958, amending the rule relating to the strength of panchayats.*

### B. Reports and other papers.

43. *Report of the Joint Select Committee on the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 1 of 1958).*

44. *The Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958).*

### APPENDIX.

[Vide answer to starred question No. 398, asked by Sri V. K. Kothandaraman at the meeting of the legislative Assembly held on 25th March 1958, page 363 supra.]

*Statement.*

| *Name of taluk in North Arcot district.* | *Extent of Government waste lands.* | *Extent of lands brought under cultivation in 1957.* | *Extent of lands for which pattas have been issued.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ACS. | ACS. | ACS. |
| Arni .. .. .. | 793·77 | 46·77 (including estate villages). | Nil. |
| Arkonam .. .. | 4,140·09 | 1,088·00 | 28.47 |
| Chengam .. .. | 9,770 47 | 6,132·33 | 1,707·26 |
| Cheyyar .. .. | 3,472·00 | 1,795·00 | 150·00 |
| Gudiyatham .. .. | 2,625·21 | 1,082·00 | 216·98 |
| Polur .. .. | 7,285·28 | 2,458·23 | 90·29 |
| Tiruppattur .. .. | 8,70[illegible]·94 (including estate villages). | 6.184·15 (including estate villages). | 6·36 |
| Tiruvannamalai .. | 5,720·98 | 254·27 | 557.69 |
| Vellore .. .. | 4,861·46 | 3,676·86 | 666·32 |
| Wallajah .. .. | 6,444·69 | 3,759·26 | 23·24 |
| Wandiwash .. .. | 1,725·49 | 621·67 | 11·20 |
| Total .. | 55,544·38 | 27,098·54 | 3,457·81 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 26th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Rice*

* 407 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have made any suggestion to the Centre recently regarding the movement of rice from one State to another within the same food zone; and

(*b*) if so, whether any reply has been received by this Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No suggestions were made recently. However, this Government have been repeatedly urging on the Government of India since October 1957, the desirability of cordoning off Madras State and constituting it into a zone by itself, in order to prevent the movement of rice from this State except on Government account.

(*b*) The Government of India are not for any changes now.

SRI N. K. PALANISAMI: நம் சர்க்கார் பிற ராஜ்யங்களுக்கு இங்கிருந்து அரிசி போகக்கூடாதென்று தடை விதிக்கும்போது மற்ற ராஜ்யங்களும் அந்த ராஜ்யங்களிலிருந்து நமக்கும் எதும் வரக்கூடாதென்று தடை விதிப்பார்கள். ஆகையால், இதற்குப் பதிலாக மைசூர் ராஜ்யத்தில் இருப்பது மாதிரி அங்கிருக்கும் வியாபாரிகள் ஒரு குறிப்பிட்ட அளவுதான் ஸ்டாக் வைத்திருக்கவேண்டும் என்ற முறையில் அவர்களுக்கு லைசென்சு வழங்குவதுபோல் இந்த ராஜ்யத்திலும் அமுல் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மைசூரிலே இருக்கும் நிலைமை எனக்குத் தெரியாது. இங்கே வேறொன்றும் மாறுதல் செய்வதாக இல்லை. ஸோனில் இருக்கும் ராஜ்யங்களுக்குள்ளே அரிசியோ மற்ற உணவுத் தானியங்களோ நடமாட்டம் ஏற்பட்டாலும் அதிலே ஒன்றும் தடை இல்லை.

SRI S. LAZAR: நமது மாகாணத்தில் உற்பத்தி செய்கின்ற அரிசியிலே ஒரு சில ரகங்கள் நமது மாகாணத்திலேயே இருக்கிறவர்கள் சாப்பிடுவது இல்லை. உதாரணமாக, பெரிய அரிசியாய் இருந்தால் அது கேரளாவுக்குச் செல்கிறது. இந்த ஏற்பாட்டைத் தடை செய்தால் இங்கே வியாபாரம் குன்றும் ; அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படும் என்பதை சர்க்கார் உணருகிறார்களா ? அது தாராளமாக அடுத்த ராஜ்யங்களுக்குச் செல்ல அனுமதி கொடுக்கப்படுமா ?

[26th March 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இங்கு ஊற்பத்தியாகும் குறிப்பிட்ட தானியம் இந்த மாகாணத்தில் உள்ளவர்கள் சாப்பிடுவதே இல்லை என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய ராஜ்யத்திலேயிருந்து ஸோணிலேயுள்ள அயல் ராஜ்யங்களுக்குப் போவதைத் தடுக்கவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இல்லை. ஆனால், அவ்வாறு போவதென்றால் அதை அளந்து அனுப்பி வைக்கவேண்டும். எவ்வளவு என்று நிர்ணயித்து, அனுப்பும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாம், குறிப்பிட்ட அளவுக்கு அனுப்பலாம் என்ற யோசனை இருந்தது. ஆனால், வியாபாரிகள் தங்களுடைய வியாபார நிமித்தமாக அளவுக்கு மீறி கொண்டு போவதைத் தவிர்க்கவேண்டும் என்ற யோசனை இருந்தது என்று நான் முன்பே சொன்னேன். இப்பொழுது வேறு எந்த விதமான யோசனையும் இல்லை.

SRI K. VINAYAKAM: Sir, among the States comprising this rice zone, Andhra Pradesh is considered to be a surplus area in production of rice. Did our Government feel any difficulty at the governmental level over the movement of rice from Andhra Pradesh to our State. Has such kind of movement lowered the prices existing in our State?

MR. SPEAKER: May I ask the Hon. Minister to answer question No. 408 also which will cover the questions raised by Mr. Vinayakam and others. After question No. 408 is answered, Mr. Vinayakam and others can put supplementary questions. The Hon. Minister may therefore answer question No. 408.

* 408 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the States comprising the Southern Rice Zone;

(*b*) the purpose for which this zone has been constituted;

(*c*) how far this zonal system has controlled the prices of rice in the State; and

(*d*) the benefits, if any, accruing to the State by this zone?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Southern Rice Zone as originally constituted by the Government of India in July 1957, comprised of the States of Madras, Andhra Pradesh, Kerala and Mysore. Recently, the Government of India have included the State of Pondicherry also in the above zone.

(*b*) The Southern Rice Zone was constituted with a view to prevent the depletion of the stocks of paddy and rice in the Southern States mentioned in clause (*a*) above by large-scale exports outside and in order to stabilize the prices of rice and paddy within the zone. The main object was that the requirements of deficit States like Madras and Kerala should be met from the surplus available in Andhra Pradesh.

(*c*) The formation of the Southern Rice Zone has not brought down or stabilized the prices of paddy and rice in this State to any appreciable extent.



26th March 1958]

(*d*) The zone has been useful to a limited extent. It has provided large-scale movement of rice from Andhra towards the north and has kept the prices thus within limits and this has helped in 1957–58. No scarcity is felt in this State.

With reference to the point raised by Sri Vinayakam I must say that there is no difficulty, except that there is no free movement of rice. Rice has moved from Andhra Pradesh practically to the extent of about nine thousand tons only till November last in 1957–58. No scarcity is felt in this State.

SRI M. KALYANASUNDARAM: அரிசி கிடைப்பது உண்மை. இருந்தாலும் விலை குறையவில்லை. அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஆந்திராவிலிருந்து நமக்கு வழக்கமாக வருகிற அரிசி வராதது தான். வழக்கமாக வரவேண்டிய அளவுக்கு அரிசி கொள்முதல் செய்வதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கொள்முதல் மத்திய சர்க்கார் செய்கிறது. இந்த அரசாங்கமே ஆந்திராவில் போய் கொள்முதல் செய்யவேண்டுமென்ற திட்டம் ஒன்றும் இல்லை. மத்திய அரசாங்கம் கொள்முதல் செய்து, இந்த ராஜ்யத்திற்கு வேண்டியிருந்தால், அந்த அரிசியை மத்திய அரசாங்கம் கொள்முதல் செய்வதிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளலாம்.

SRI S. LAZAR: It is made to understand by some that because there is no restriction on the export of rice from one State to other, there is free flow of rice and that there is no scarcity of rice. May I know whether there is any real scarcity of rice and whether there will be any need for such restriction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have just now stated that there is no scarcity as such. But if more rice flows from Andhra and less rice moves to Kerala that will reduce the prices.

SRI A. R. SUBBIAH MUDALIAR: ரோட் மூலமாகத்தான் அதிகமான அளவுக்கு அரிசி கேரள ராஜ்யத்திற்குப் போகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் ரோட் லைஸன்ஸ் மாதிரி எடுத்துக் கவனிக்க சர்க்கார் யோசிக்குமா?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM: மோட்டார் லாரிகள் மூலமாக அரிசி போகிறது. அதைத் தடுக்கவேண்டும் என்ற யோசனை இப்பொழுது ஒன்றும் இல்லை.

SRI A. VEDARATHNAM: 407 (ஏ) கேள்வியில் கண்டுள்ளபடி மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் என்ன சிபார்சு செய்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சமீபத்தில் ஒன்றும் சிபார்சு செய்யவில்லை என்று நான் சொன்னேன். ஆனால், சென்னை ராஜ்யத்திலிருந்து அரிசி போவதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். அரசாங்கமே அதை ஏற்றுக்கொண்டு அப்போதைக்கப்போது அனுப்பலாம்; மற்றப்படி தடை இருக்கவேண்டும் என்ற யோசனையை இந்த அரசாங்கம் முன்பு வற்புறுத்தியிருக்கிறதென்று நான் சொன்னேன்.

SRI N. K. PALANISAMI: Sir, in order to prevent the fluctuation in trade, will the Government take measures at least for a partial control of business in foodgrains?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Hon. Members will agree that it is best to avoid all kinds of control and that is the idea of the Government. The Government have been taking all steps to reduce the price of rice. Control steps should be taken by the Government of India and this Government have been urging on the Government of India as to what could be done to reduce the prices.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ: கேரளாவும் திராவிட நாட்டின் ஒரு பகுதி என்ற காரணத்திஞல் இங்கே திராவிட பக்தர்கள் ஏதாவது உதவி செய்ய முற்படுவார்களா என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது அந்த வித்தியாசம் இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் ஒன்றும் இல்லை. நானே கேரள அரசாங்க அமைச்சர் அவர்களுடன் பேசினேன்; கட்டுப் பாட்டுக்கு உட்பட்டு ஒன்றரை லட்சம் டன் கூட தமிழ் நாட்டிலிருந்து நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று கேரள ராஜ்ய மந்திரியிடமே நான் சொன்னேன்.

SRI T. SAMPATH: நமது ராஜ்யத்தில் நெல், அரிசி கொள்முதல் செய்யவேண்டும் என்ற எண்ணம் முதலில் இருந்ததா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கொள்முதல் செய்ய வேண்டிய நிமித்தம் ஏற்பட்டால் செய்வது பற்றி யோசிக்கப்பட்டு வந்தது.

SRI K. VINAYAKAM: Sir, whereas no scarcity is felt about the availability of rice in our State, what steps did the Government take to reduce the price of rice available? What steps did the Government take to get more rice from Andhra and if possible to restrict the export of rice from our place to Kerala State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the Government consider that it is not possible to compel the Andhra Pradesh to arrange import of rice and produce it for us. Rice must flow freely. This Government does not consider necessary to completely ban the export of rice from this State to the neighbouring Kerala State. As pointed out by an hon. Member, sometimes producers are interested in free movement of their produce. But at the same time, the Government are worried about the price structure and as I stated sometime before, the effective step which this Government have been taking is to increase the production considerably and that should go to a large extent in reducing the price level.

SRI T. S. RAMASWAMY PILLAI: Is it a fact that this Government represented to the Central Government to prevent the purchase of rice from Tanjore district by the Kerala Government and if so, the reasons that prompted the Government to make that representation?



THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. The merchants had been purchasing and exporting rice to Kerala not only from Tanjore district but even from other districts such as South Arcot, etc. Sometimes we noticed that there was more speculation in this than mere trade movements. In addition to this the Government of Kerala proposed to set up a machinery of their own to purchase rice from these places. What we said to the Government of India was that they cannot do it both ways. Even if they wanted this Government would purchase rice and transport it to Kerala but it should not be allowed to be done by the merchants also in their own way, in addition to permitting the Kerala Government, to make purchases. That was what we represented to the Government of India and they advised the Kerala Government not to have their own purchasing machinery in the districts.

SRI R. SWAMINATHA MERKONDAR: உணவு பற்றாக்குறை யாக இருக்கிற கேரள மக்களுக்கு உணவு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடும் கூட இந்திய சர்க்கார் இம் மண்டலத்தை அமைத்திருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆம். ஒரு ராஜ்யத்தில் ரொம்ப பற்றாக்குறை இருக்கிறது. ஒரு ராஜ்யத்தில் மிகுதியாக இருக்கிறது. ஒரு ராஜ்யத்தில் சரிக்கட்டிக் கொள்கிறது. இவை எல்லாவற்றையும் சேர்த்துப் போட்டால் ஒன்ருெடொன்று சரிக்கட்டிக் கொள்ளும் என்றே அமைக்கப்பட்டது.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister whether the price of rice in our State is lower or higher than the price of rice in Kerala or Andhra and also whether the purchasing power of the people of Kerala has risen and that is why they are able to purchase rice from here?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no large variation in prices. I gave figures sometime ago in the House regarding prices. Compared to certain other States the price of rice here is lower. But there are variations in prices. We have also put it to the Government of India that if this Government were to purchase rice for Kerala, it should be on a uniform price basis.

SRI M. JAGANNATHAN: If the supply of rice in our State is sufficient to meet our demands, will there not be corresponding reduction of price of rice? When there is no scarcity, what is the reason for rise in prices of foodgrains especially rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I just now stated that compared to the price level in certain other States, it is lower here. The price of rice is related to other factors also. The general cost of so many things have gone up and correspondingly the price of rice also has gone up. If this has to be reduced, there should be more production.

**SRI K. ANBAZHAGAN :** தென் மண்டலத்தில் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு அரிசி செல்வதைத் தடுக்கக்கூடாது என்ற கொள்கையை வலியுறுத்துவது போல, தென் மண்டலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற அரிசியையும், இங்குள்ள பற்றாக்குறையையும் கணக்கிட்டு இந்த மொத்த அரிசியை இந்திய சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** தென் மண்டலத்தை எல்லாம் சேர்த்துக் கணக்குப் போட்டால் இங்கு தேவைப்படும் அரிசி இங்கேயே உற்பத்தியாகும். வெளிமண்டலத்திலிருந்து அரிசி தேவை இருக்காது. கேரள அரசாங்கத்திற்கும், மற்ற அரசாங்கத்திற்கும் மத்திய சர்க்கார் அவர்கள் இறக்குமதி செய்கிற அரிசியைக் கொடுக்கிறார்கள்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** இப்போது மத்திய அரசாங்கம் நமக்குக் கடன் கொடுத்திருப்பதைத் திருப்பிக் கேட்கிறார்கள். நமக்குப் பற்றாக்குறை இருப்பதனால் அதைக் கொடுப்பதற்கு முடியாது என்று வற்புறுத்தப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கடன் ஒன்றும் இல்லை. அதற்குப் பணம் கொடுத்துவிட்டார்கள். இங்கே இருந்து அரிசி வாங்கிப் பூர்த்தி செய்கிறோம் என்று சொன்னோம். இப்போது நாங்கள் வாங்கப் போவது இல்லை. ஆந்திர நாட்டு விலைக்கும், தமிழ்நாட்டு விலைக்கும் குறைவாக கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. அது முடியாது என்று எழுதிவிட்டோம், அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே இதைப்பற்றி அதிகமாகக் கேட்கவேண்டியது இல்லை என்று அபிப்பிராயப் படுகிறேன்.

### *Tanneries*

* 409 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted, districtwise, in the current year for opening tanneries and centres for the production of leather goods; and

(*b*) the amount given by the Union Government for this purpose either as grant or as loan?

**THE HON. SRI R. VENKATARAMAN :** (*a*) & (*b*) A statement[a] containing the information is placed on the Table of the House.

**SRI P. G. MANICKAM :** இதில் தெரிவிக்கப்படும் தோல் பதனிடும் சாலைகளும், விற்பனை சாலைகளும் கவர்ன்மெண்டால் நடத்தப்படுகின்றதா ? தனியாரால் நடத்தப்படுகின்றதா ? எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** சர்க்காரால் நடத்தப்படுகின்றன.

**SRI A. V. P. ASAITHAMBI :** தோலினால் செருப்பு, பூட்சு முதலியன எல்லாம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதில் பேட்டா கம்பெனிக்குத்தான் அதிக வியாபாரம் ஆகிறது. நம் சரக்குத் தேங்குகிறது. ஆகவே அவைகளைத் தடை செய்து நம் சரக்கை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

**MR. SPEAKER :** How does this arise out of the main Qustion ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** I would like to answer that Question, Sir, பேட்டா கம்பெனி செய்கிற செருப்பு, பூட்சைவிட சென்னை

a Printed as Appendix I on page 552 infra.



சர்க்கார் செய்கிறவைகள் மிகவும் உயர்ந்தவை, சிறந்தவை. விலை கூட மிகக் குறைவு. அவர்கள் அதிகமான விளம்பரம் செய்கிற காரணத்தினால் மக்கள் அங்கே போய் வாங்குகிறார்களோ என்னவோ தெரியவில்லை. பெரம்பூர் யூனிட்டில் ரூ. 88,450-க்கு சரக்கு உற்பத்தி ஆயிற்று. ரூ. 46,674-க்கு சரக்கு விற்பனை ஆகியிருக்கிறது. 50 ஆயிரம் ரூபாய்க்கு ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். இது மக்களுக்குத் தெரிந்தால் நம்முடைய சரக்கும் அதிகமாக விற்பனை ஆகும் என்று நினைக்கிறேன்.

**SRI K. RAMASUBBU :** கனம் சபா நாயகர் அவர்களே, உலகத்திலேயே எந்தப் பகுதியிலும் தயாரிக்கப்படும் தோலைவிட நம்முடைய தமிழ் நாட்டில் உற்பத்தியாவதுதான் மிகவும் உயர்ந்தது எனச் சொல்லப்படுவது உண்மையா என்று கேட்க ஆசைப்படுகிறேன் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** தோல் என்று சொன்னால் அதில் மூன்று வகை இருக்கிறது—**hides and skins, tanned leather and East Indiakips.** கனம் அங்கத்தினர் எதைச் சொல்கிறார் என்று புரியவில்லை.

**SRI M. D. THIAGARAJA PILLAI :** கிராமங்களில் ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் முதலியன தயாரிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் இருக்கிறது. தனிப்பட்டவர்கள் அந்த லாபத்தை அடைந்து விடுகிறார்கள். ஆகவே ஆங்காங்குள்ள தோல் பதனிடும் சாலைகளில் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் தயாரிக்கிற தோலுக்கு நல்ல விலை கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் சரியான முறையில் தோல் உரிக்க அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே ப்ளாக்குகளில் முப்பது ப்ளேயிங் சென்டர்கள் வைத்திருக்கிறோம். தோல் எவ்வாறு உரிக்கப்படவேண்டும் என்று அங்கே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அம்மாதிரியாகத் தோல் உரிக்கப்பட்டால் நல்ல விலையும் கிடைக்கிறதென்பது என்னிடத்திலுள்ள தகவல்.

**SRI A. A. RASHEED : Wherefrom do the Government get the finished leather for the manufacture of their shoes ?**

**THE HON. SRI R. VENKATARAMAN : I would like to have a separate question on this.**

**SRI M. C. MUTHUKUMARASWAMY :** மிருகங்களைக் கொன்று தோல் உரிப்பவர்களை மிகவும் கேவலமாக மதிக்கின்ற வகுப்பாரை இங்கே போடாது, இந்தத் தொழிலிலேயே பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு வருகிறவர்களைச் சேர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**MR. SPEAKER : The question contains an insinuation. I rule it out of order.**

**SRI N. MARUDACHALAM :** தோல் தொழில் விஸ்தரிப்புக்காக 1953-ம் வருஷம் எவ்வளவு மானியம் நிர்ணயம் செய்திருந்ததோ அதன்படி தோல் தொழில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**MR. SPEAKER :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**SRI P. G. MANICKAM :** இந்த நிலையங்களில் வேலை செய்பவர்களுக்கு இதர தொழில் ஸ்தாபனங்களுக்குப் பொருந்தும் சட்டங்கள் எல்லாம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையானால் அப்படி விஸ்தரிக்கும் நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

[26th March 1958

THE HON. SRI R. VENKATARAMAN : சார், வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிப்பதற்காக சிறுசிறு தோல் பதனிடும் சாலைகளை ஆரம்பித்திருக்கிறோம். அதில் அதிகமான எண்ணிக்கையில்கூடத் தொழிலாளர்கள் இல்லை. சாதாரணமாக ஓர் இடத்தில் ஏழு பேர், எட்டு பேர்கள் கூட இருக்கமாட்டார்கள். அதற்குள்ளாக இந்தச் சட்டங்கள் எல்லாவற்றையும் அங்கு அமுல் நடத்தவேண்டுமென்று சொல்வது சரியாகாது.

SRI D. S. AUTHIMOOLAM : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ரூ. 80,000-க்கு சரக்கு தயார் செய்யப்பட்டு பாதிதான் அவ்வருஷத்தில் செலவானதாகச் சொன்னார்கள். ஆகவே, அதைப் பிரபலப்படுத்த கலர் வால் போஸ்டேர்ஸ், முதலியன போட்டு விளம்பரம் செய்ய சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை வாங்கி உபயோகப் படுத்தினவர்கள் எல்லோரும் அது நன்றாகயிருக்கிறது என்று சொல்லி அவர்களால் செய்யப்படும் விளம்பரம் மூலமே அவை செலவாகின்றன.

*Pumping of river water*

* 410 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received any mahazar recently from the villagers of Muthupet and surrounding villages in Tiruturaipundi taluk regarding the pumping of Pamani river water for irrigation purposes; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The Government have already examined the matter with reference to earlier petitions on the subject. The ryots who would be benefited by the Scheme were reluctant to give their consent to pay any contribution, working expenses and water charges. The Scheme was therefore, deferred. The party owing a major portion of lands, namely, the Superintendent, Sri Manthara-pureeswarar Temple Devasthanam desired to know the approximate cost of the scheme. The Chief Engineer (Irrigation) has furnished to him the information. Further action will be taken on receipt of the party's reply.

SRI A. VEDARATHNAM : அங்குள்ள தேவஸ்தானம் நிலம் தவிர பாக்கி எல்லா நிலச்சுவான்தாரர்களும் இந்தத் திட்டத்தை ஏற்று அதற்கான காண்ட்ரிபியூஷன் கொடுக்க ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா ? தேவஸ்தான நிலத்திற்கும் அந்தப் பாசனம் கிடைப்பதால், அதிக வருவாய் கிடைக்கின்ற காரணத்தினால், அதற்கு அரசாங்கம்தானே அனுமதி அளிக்க வேண்டியது. ஆகவே, இந்தப் பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : தேவஸ்தானம் சூப்பிரண்ட்டென்டைத் தவிர மற்ற விவசாயிகள் எல்லாம் செலவழிக்கின்ற தொகையைக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால் கடைசியில் அவர் வந்து கேட்டார். அதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டதற்கு வேண்டிய விவரங்கள் எழுதியனுப்பப்பட்டிருக்கிறது.



26th March 1958]

*Express Bus Service.*

* 411 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any express bus service is proposed to be introduced between Tiruchirappalli and Madras to relieve congestion in trains ?

THE HON. SRI V. RAMIAH : Yes, Sir.

*Town Bus Service.*

* 412 Q.—SRI S. LAZAR AND SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of municipal towns in the State having town-bus-service?

THE HON. SRI V. RAMIAH : Twenty-one, Sir.

SRI A. GOVINDASAMY : கடலூரில் முனிஸிபல் நகரில் ஓடுகிற டௌன் பஸ்களை அரசாங்கம் எடுத்து நடத்த முயற்சிக்குமா ?

THE HON. SRI V. RAMIAH : A separate question may be put.

SRI M. C. MUTHUKUMARASWAMY : முனிஸிபல் நகர பஸ்கள் வருவதற்கு முன்னால் மாட்டு வண்டிகள் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது. பஸ் வந்ததும் மாட்டு வண்டிக்காரர்கள் அவ்வளவு பேர்களும் அவஸ்தை படுகிறார்கள். ஆகவே, சர்க்கார் அவர்களுக்கு உதவி புரிய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMIAH : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

SRI P. G. MANICKAM : பஸ் நடத்த அனுமதி தேவை என்று எத்தனை முனிஸிபாலிட்டிகள் சர்க்காருக்குத் தெரிவித்தார்கள் ? எத்தனைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

THE HON. SRI V. RAMIAH : இப்பொழுது ஒரு முனிஸிபாலிட்டிக்கும் அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை.

SRI A. A. RASHEED : Is there any proposal to extend this scheme of running buses to other Municipalities ?

THE HON. SRI V. RAMIAH : At present there is no proposal.

MR. SPEAKER : The question relates to number of buses running in Municipalities. I have not understood the hon. Member's supplementary ?

SRI A. A. RASHEED : I asked whether there was any proposal to extend the scheme of nationalisation, Sir.

MR. SPEAKER : How does that arise from the main question ?

SRI S. LAZER : டௌன் பஸ் சர்வீஸ் நடத்த ஒரு சில முனிஸிபாலிட்டிகளிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ?

MR. SPEAKER : This is also out of order. I am sorry. You can put that question.

SRI S. LAZAR: We could not hear the Hon. Minister's reply exactly and that is why I put this question, Sir.

MR. SPEAKER: Will the Hon. Minister please repeat his answer?

THE HON. SRI V. RAMIAH: Sir, they wanted the number of Municipal towns where we have town-bus-service and I have said that we have in 21 towns.

SRI K. VINAYAKAM: Did any Municipal authority make representations to Government requesting them to accord permission to run their own bus service so as to augment their slender finances?

THE HON. SRI V. RAMIAH: We have received several requests. But I am not in a position to inform the House which Municipalities asked for such permission. A separate question may be put and I shall try to answer.

SRI K. PERIANAN: திருச்சிக்கும் சென்னைக்கும் மெயில் பஸ் விடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள் . . .

MR. SPEAKER: இப்பொழுது நாம் 412 வது கேள்வியில் இருக்கிறோம். Next Question, No. 413.

SRI N. K. PALANISAMI: Sir, this may be taken up tomorrow.

MR SPEAKER: The hon. Member has represented to me that the answer is too long and therefore it might be taken up tomorrow. Since tomorrow's programme is heavily packed, we will take this on the day after tomorrow.

### *Slums*

* 414 Q.—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether slum clearance will be taken up in Municipalities and Major Panchayats under the Scheme for slum clearance and town-planning during the Second Five-Year Plan period;

(b) the amount allotted for implementing the scheme during 1957–58; and

(c) whether the amount given by the Central Government is also included in this allotment?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Under the slum Clearance Scheme of the Government of India, no slum improvement works have so far been undertaken in Municipalities and Major Panchayats. A sum of Rs. 168 lakhs has been allocated to the Madras State for slum clearance schemes for the Second Five-Year Plan period. This includes a matching subsidy of Rs. 42 lakhs to be contributed by the State Government under the scheme. Owing to the limited allotment, it was decided to confine slum





improvement works under the Central schemes to Madras City only. Further, the Madras Slum Improvement (Acquisition of Land) Act applies to Madras City only. It is proposed to extend the Act to mufassal areas also.

The Municipalities and major Panchayats may also take up slum clearance work in their areas, and meet the expenditure from their funds. They may also apply to the State Government, wherever necessary, for sanction of assistance for the purpose.

(b) & (c) No amount has been allocated by the Central or the State Government for slum clearance in the Municipalities and Major Panchayats. The allocations for slum clearance schemes in the Madras City for 1957–58, is Rs. 20 lakhs—(Rs. 15 lakhs by the Central Government and Rs. 5 lakhs by the Madras Government).

SRI P. G. MANICKAM: சேரி ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்காரிலிருந்து உதவி வேண்டும் அல்லது கடன் வேண்டுமென்று எத்தனை முனிஸிபாலிட்டிகளும், மேஜர் பஞ்சாயத்துகளும் சர்க்காருக்கு விண்ணப்பித்தன? அவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN: இது, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்கு போட வேண்டிய கேள்வி.

SRI N. MARUDACHALAM: சர்க்கார் கோவை முனிஸிபாலிட்டிக்கு சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1955–56ம் வருஷத்தில் தொகை ஒதுக்கப்பட்டதாக தெரிவித்திருந்தும் மறுபடியும் அந்த சேரி ஒழிப்புத்திட்டத்தை கைவிட்டது அமைச்சருக்குத் தெரியுமா? அதற்கு பொருள் கொடுக்காததற்குக் காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: இக்கேள்வியை என் சக மந்திரியாகிய ஸ்தல ஸ்தாபன மந்திரியவர்களிடம் போட வேண்டும்.

SRI A. GOVINDASAMY: சேரி ஒழிப்புத்திட்டத்தில், சென்னையில் கையாளும் முறையை ஏன் கிராமங்களில் கையாளவில்லை?

THE HON. SRI R. VENKATARAMAN: நான் பதில் சொன்னேன், அவர்கள் கொடுத்திருக்கிற 168 லட்சம் ரூபாய் சென்னையில் இருக்கிற சேரிகளை ஒழிப்பதற்குக் கூட போதவில்லை. சேரி ஒழிப்புத் திட்டப்படி, லாண்ட் அக்விஸிஷன் செய்யவேண்டுமென்றால் அது சென்னையில்தான், நகரில் தான் இருக்கிறது. கிராமப்பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட வில்லை. விஸ்தரிக்க வேண்டுமென்று நண்பர்கள் விவாதத்தின்போது சொல்லலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI P. G. MANICKAM: சென்னை நகர சேரி ஒழிப்புத் திட்டத்தை மற்ற நகரங்களுக்கும் கொண்டு வருவதற்கான யோசனை சர்க்காருக்கு இருக்கிறதா? அப்படியிருப்பின் எப்பொழுது அது அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதரப் பகுதியில் இருக்கிறவர்கள் சேரி ஒழிப்பு வேண்டுமென்று சொன்னால், அதற்காக சர்க்காரிடத்தில் நிதி ஒதுக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொள்ளலாம் என்று முதலிலேயே சொன்னேன்.

SRI K. VINAYAKAM: Sir, arising out of the answer given by the Hon. Minister, are the Government aware of the fact that in the City of Madras, the Slum Acquisition Act provides that once a place is declared ' slum ', twelve years' rent has got to be paid for

[26th March 1958

the slum which works out to more than the actual value of the land and therefore, will the Government think of the possibility of amending the Slum Acquisition Act which is highly defective?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the hon. Member is slightly incorrect. The compensation payable under the Madras Slum Improvement (Acquisition of Land) Act, is twelve times the annual net income on that particular property. So far as land is concerned, there is no difficulty, the twelve times annual rent could be given. But in respect of huts costing about Rs. 10 or Rs. 20 or even Rs. 100 or Rs. 200, the rent is as much as Rs. 5 per month and twelve times the annual rent is about 700 or 800 rupees. Therefore, there is some difficulty with regard to acquisition of the superstructure on lands and Government are considering this matter

SRI M. KALYANASUNDARAM : ஸர், இதர முனிஸிபல் நகரத்திலுள்ள சேரிகளை ஒழிப்பதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு தொகை வேண்டுமென்று இந்த சர்க்கார் கேட்டார்கள். அப்படி கேட்ட தொகையில் எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டுக்கு மத்திய சர்க்காரிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை 168 லட்சம். எவ்வளவு வேண்டுமென்று கேட்டார்கள் என்பதற்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை. மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு கேட்டது. இதற்கு தனி கேள்வி போட்டால் அதைப் பார்த்து சொல்லுகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த சேரி ஒழிப்புக்காக சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது என்பது உண்மை தான். ஆனால் புதிதாக வரும் சேரிகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது ரொம்பவும் உண்மை. புதுச்சேரிகளை ஒழிக்கும் விஷயம் கஷ்டமாகத்தான் இருக்கிறது—நான் குறிப்பிடுவது புதுச்சேரி அல்ல—புதிய சேரிகளை குறிப்பிடுகிறேன். (சிரிப்பு.) புது சேரிகளை தடுக்கின்ற முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்போது பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. இதற்கு கனம் அங்கத்தினர்களை போன்றவர்கள் ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். இம்மாதிரி தடுக்க நடவடிக்கை எடுக்கும்போது அதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று கேட்காமல் இருந்தால் அதுவே அரசாங்கத்திற்கு ஒரு பெரிய சகாயமாக இருக்கும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸர், சென்னை போன்ற நகரங்களில் ஜனத்தொகை அதிகமாக இருப்பதால் சேரிகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதே போன்று ஜனத்தொகை அதிகமாக இருக்கும் மற்ற நகரத்திலுள்ள சேரிகளையும் ஒழிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ? எடுக்கும் என்றால் எப்போது ?

THE HON. SRI R. VENKATARAMAN : மற்ற நகரத்திலுள்ள சேரிகளை ஒழிப்பதற்கு இந்த தொகையிலிருந்தல்லாமல் வேறு தொகையிலிருந்தும் கேட்கலாம்.

SRI V. SUBBIAH : சேரி ஒழிக்கும் திட்டத்தை மதராஸிலிருந்து வெளியே பரப்புவதற்கு அங்கங்கே ஏற்பட்டிருக்கும் சமுதாய நல திட்டத்திலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலும் இதை சேர்க்க சர்க்கார் முன் வருவார்களா ?



26th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த பிரச்னையில் நகரங்களில் தான் முதலில் இந்த திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று எண்ணி இதை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : தலைவர் அவர்களே, ஏற்கனவே நகரங்களில் சேரிகள் அதிகமாக இருப்பது தெரியும். ஆனால் மேலும் மில்கள் அதிகமாக ஆரம்பிக்கப்படும் இடங்களில் இந்த ஸ்லம் ஏரியாக்கள் அதிகமாக உண்டாகிறது. மதுரைப்பக்கத்தில் இம்மாதிரி மில்கள் ஆரம்பிக்கப்படும்பொழுது பக்கத்திலுள்ள பள்ளங்களில் குடிசைகளை கட்டிக்கொள்கிறார்கள். இதனால் அசுத்தம் ஏற்படுகிறது. ஆகவே மில்களுக்கு லைஸன்ஸ் கொடுக்கும்பொழுது அதே நேரத்தில், டௌன் பிளானிங் பிரகாரமோ அல்லது ஹௌஸிங் பிளானிங் பிரகாரமோ ஏதாவது ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாட்டில் பல இடங்களிலும் இன்னின்ன இடத்தில் இம்மாதிரிப்பட்ட வீடுகள் கட்டிக்கொள்ள வேண்டும் என்று டௌன் பிளானிங் ஸ்கீம் இருக்கிறது. அதையும் மீறி கட்டுகின்றவர்களை தடுப்பதற்காக குடிசையை பிரிப்பது போன்ற காரியங்களில் இறங்கும்போது பல கஷ்டங்களும் ஏற்படுகிறது. அதனால் தான் இந்த நெருக்கடி ஏற்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஸர், சென்னையை தவிர்த்து இதர நகரங்களில் இந்த திட்டம் கொண்டு வரப்படுமா என்பதைப்பற்றி கேட்ட சமயத்தில் இதைப்பற்றி விவாதம் நடக்கும்போது பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அப்படியானால் இதர நகரங்களில் இதை கொண்டு வருவதற்கு சர்க்காரிடத்தில் திட்டங்கள் ஒன்றுமில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நான் மீண்டும் அதைத்தான் சொல்லுகிறேன். இந்த மான்ய கோரிக்கை வரும்பொழுது அந்த மந்திரி இதற்கு பதில் அளிப்பார்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த திட்டத்திற்காக மத்திய சர்க்கார் 168 லட்சம் ரூபாய் செலவிட போகிறதாக சொன்னார்கள். இந்த தொகை நமது ராஜ்யம் முழுவதிற்குமா அல்லது சென்னை நகரத்திற்கு மாத்திரமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை நகரத்திற்கு மாத்திரம்தான்.

SRI T. S. RAMASWAMY PILLAI : As there is likely to be great delay in improving all the slums, will the Government come forward to give some immediate relief by way of providing public convenience and water facilities in all the slums?

THE HON. SRI R. VENKATARAMAN : That we considered; but it appears that it will be a perpetuation of the slums. It is better to clear them rather than to provide one or two amenities and make them worse.

### *Highways.*

*415 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have issued any order prohibiting the planting of posts or digging of holes in highways, roads and streets in municipal towns and Panchayat villages?

THE HON. SRI P. KAKKAN: Orders have been issued regulating the planting of posts and digging of holes in roads under Government control. According to these orders the poles should be located ordinarily at a minimum distance of 22 feet from the centre of National and State Highways and 17 feet of Major District Roads and other roads. The provisions in the Madras City Municipal Act, 1919, the Madras District Municipalities Act, 1920, the Madras District Boards Act, 1920, and the Madras Village Panchayats Act, 1950, as the case may be, also prohibits the digging of holes and causing obstructions in public roads and streets under control of the respective local bodies without the permission of the Executive Authority of the local body concerned.

SRI S. LAZAR: ஸார், இப்பேர்ப்பட்ட தடையிருந்தபோதிலும் நகரங்களிலுள்ள சில பெரிய பெரிய ரஸ்தாக்களில் கல்யாண காலங்களிலும், மற்ற காலங்களிலும் பந்தல்கள் போடப்படுகின்றன. அந்த சமயத்தில் பந்தல்கள் போடுவதற்கு புது ரஸ்தாக்களில் குழி பறிக்கப்படுகின்றன. இதை தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும்?

THE HON. SRI P. KAKKAN: பந்தல்கள் போடும்போது ரஸ்தாக்களில் போகும் பிரயாணிகளுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாதவாறு அவர்களுடைய சௌகர்யத்தைப் பார்த்துத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது.

SRI V. SANKARAN: இவ்வித அனுமதி இல்லாமல் மதுரை போன்ற நகரங்களில் சில அரசியல் கட்சிகள் சில வட்டாரங்களில் அந்த வட்டாரம் தங்களுக்கு கிடைத்துவிட்டது மாதிரி நினைத்துக்கொண்டு பொது ரஸ்தாக்களிலும் எலக்ட்ரிக் கம்பங்களிலும் போன் கம்பங்களிலும் தங்களது கொடியை நட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை தடுப்பதற்கு சர்க்காரிடத்தில் ஏதாவது விதி இருக்கிறதா? இல்லையென்றால் இதை தடுப்பதற்கு ஏதாவது விதியை போடுவார்களா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் ரோடு விதிகளுக்குப் புறம்பாக எங்கெல்லாம் இம்மாதிரி கம்பங்கள் ஊன்றியிருக்கிறார்கள் என்றுள்ள தகவலை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் நெடுஞ்சாலை பாதுகாப்பின் கீழ் மின்சார இலாகாவும் பொது மராமத்து இலாகாவும் ரோடுகளின் நடுவே குழி வெட்டி தங்களுடைய சடங்குகளை நிறைவேற்றுகின்ற முறையில் வேலைகளை செய்கிறார்கள், இவ்விதம் பழுது பார்க்கப்பட்டபின் ஒரு இலாகாவால் வெட்டப்பட்ட குழி மற்றொரு இலாகாவால் மூடப்படுவதற்கு விடப்படுவதால் மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது. இவ்விதம் ஒரு இலாகா மற்றொரு இலகாவுக்கு குழி வெட்டுவதை தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் நினைத்திருப்பது முற்றிலும் தவறு. மின்சார இலாகாவும் ஹைவேஸ் இலாகாவும் சேர்ந்து தான் வேலைசெய்கிறது.

SRI A. GOVINDASAMY: சில முனிசிபல் நகரங்களில் சில கட்சிகள், அதாவது காங்கிரஸ் கட்சி கொடிகளை நட்டால் அதை ஆட்சேபிப்பது இடையாது. மற்ற கட்சிகள் நட்டால் அதை ஆட்சேபிக்கிறார்கள். ஏன் இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது?

MR. SPEAKER: The question is out of order.

---



SRI V. K. KOTHANDARAMAN: மதுரையில் சில கட்சிகள் கொடிகளை நட்டிருப்பதாக சொன்னார்கள் நண்பர் அவர்கள். அதே மதுரை நகரத்தில் காங்கிரஸ் கட்சியும் கொடிகளை நட்டிருக்கிறது. இதற்கு மாத்திரம் ஏன் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது?

MR. SPEAKER: இந்த கேள்வியை அனுமதிக்கமுடியாது. கோவிந்தசாமி அவர்களுடைய கேள்விக்கே அனுமதி கொடுக்க மறுத்தேன். அப்படியிருக்கும்பொழுது இதற்கு மாத்திரம் எப்படி அனுமதி கொடுக்க முடியும்?

### *Provident Fund.*

* 416 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have paid Provident Fund to the workers who were transferred or proposed to be transferred to the Electricity Board?

THE HON. SRI V. RAMIAH: No, Sir. It is not proposed to pay the Provident Fund amounts standing to the credit of the workers, to them consequent on their transfer to State Electricity Board. The question of transferring the balances standing to their credit to the Madras State Electricity Board which will maintain the Fund is separately under consideration.

SRI N. K. PALANISAMI: ஸார், கவர்ன்மெண்டிலிருந்து போர்டுக்கு வேலைகள் எல்லாம் மாற்றப்படும்பொழுது ஏன் பிராவிடண்ட் பண்ட் போன்றவைகளை மாற்றக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMIAH: இவைகளையும் போர்டுக்கு கொடுக்கவேண்டுமென்றுதான் ஆலோசித்து வருகிறோம்.

### *Lands under cultivation.*

* 417 Q.—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the extent of lands under cultivation of (1) paddy, (2) sugarcane and (3) dry crops, in the North Arcot district from 1952 to 1957 taluk-war; and

(b) the extent of cultivable land which remains uncultivated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) A statement* is placed on the table of the House.

Taluk-wise particulars regarding the extent of cultivable land which remains uncultivated in the district are not available. Hence, information furnished is for the district as a whole.

SRI A. A. RASHEED: What is the main reason for nearly five lakh acres of land remaining fallow in the North Arcot district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information that I have is all cultivable land that is available is under cultivation.

* Printed as Appendix II on pages 553–560 infra.

[26th March 1958

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவில் நெல் சாகுபடி செய்யும் நிலங்கள் 6 லட்சத்து 46 ஆயிரம் எக்கர் என்றும், அதேபோன்று மற்ற மேட்டுப் பிரதேசங்களில் விவசாயம் ஆகக் கூடிய நிலங்களில் சுமார் 8½ லட்சம் எக்கர் என்றும் இருக்கிறது. அதே நேரத்தில் விவசாயத்திற்கு லாயக்காக இருக்கக்கூடிய நிலங்கள் விவசாயம் செய்யாமல் இருக்கக்கூடியது 4 லட்சத்து 76 ஆயிரம் எக்கர்கள் இதிலிருந்து அந்த ஜில்லா எவ்வளவு மோசமாக இருக்கிறது என்று தெரியும். அங்கே இருக்கக்கூடிய ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அந்த தரிசு நிலங்களில் விவசாயம்செய்ய பட்டா செய்யவேண்டுமென்று எழுதிக்கேட்டு வந்தும் பட்டா கொடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன ? இனியாவது கொடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களெல்லாம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற கணக்கு வேறு நிலங்களைப் பற்றிய கணக்கு. அதாவது மேய்கால் போன்ற நிலங்கள்.

SRI A. A. RASHEED : At page 8, the cultivable land remaining uncultivated is shown as 476,386 acres Is that correct?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member may see the note below the statement.

SRI K. VINAYAKAM : Regarding the cultivable land remaining uncultivated—about 476,000 acres—was any representation made by the people in the villages abutting those lands for assignment of those lands and if so, what action was taken by the Government on such representation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may read the note from the paper placed on the table of the House for the benefit of hon. Members who have not read it. 'It comprises cultivable waste, permanent pastures and other grazing lands, land under miscellaneous tree crops and groves not included in net area sown, current fallows, and other fallow lands.'

*Ex-Services Personnel Benevolent Fund*

* 418 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the amount collected on the Flag Day on 7th December 1957 for the Madras State Ex-Services Personnel Benevolent Fund; and

(b) the several welfare schemes for which this amount will be spent?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The answer[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், முன்னாள் ராணுவத்தினர் சகாய நிதிக்கு இந்த ராஜ்யத்தில் வசூல் செய்யப்பட்ட 16,379 ரூபாயில் எவ்வளவு மத்திய ப்ளாக் டே கமிட்டிக்கு அனுப்பப்பட்டது ? அந்தத் தொகையிலிருந்து நம் ராஜ்யத்திற்கு அனுப்பப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் சில விதிகள் இருக்கின்றன. எவ்வளவு வசூல் நடக்கிறதோ அதில் 25 சத வீதம் உடனடியாக மாகாண பெனவலன்ட் பண்டுக்கும், அந்த வருஷத்திற்கு முந்திய

[a] Printed as Appendix III on pages 560–561 infra.



26th March 1958]

மூன்று வருஷங்களுக்கு எவ்வளவு சராசரி வருமானம் வந்திருக்கிறதோ, அதற்கு மேல் வசூல் செய்திருந்தால் அதில் 50 சத வீதமும் ராஜ்ய பெனவலன்ட் பண்டுக்கு கொடுக்கப்படும். இம்மாதிரி கணக்குப்போட்டு இனிமேல்தான் கொடுப்பார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : கொடி தினம் என்பது என்ன ? அதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : யுத்த காலத்திலே யுத்தத்தில் ஈடு பட்டு கை, கால் இழந்து முடம் ஆனவர்கள், உயிர் இழந்தவர்களுடைய விதவைகள், இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுவது.

SRI S. NAGARAJA MONIGAR : முன்னாள் ராணுவத்தினர் என்பது எதைக் குறிக்கிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்பு ராணுவத்தில் சேர்ந்தவர்களையோ, அல்லது திரும்பியவர்களையோ இது குறிக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எக்ஸ்-ஸர்விஸ்மென் என்பதற்கு தமிழிலே முன்னாள் ராணுவத்தினர் என்று போட்டிருக்கிறார்கள்.

SRI P. G. MANICKAM : நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் தொகையானது ஜில்லாக்களில் உள்ளவர்களுக்கு செலவழிக்க எந்த முறையிலே திட்டம் போடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடிய எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் ஆபீஸில் ஒரு போர்டு இருக்கிறது—ஸைலர்ஸ், ஸோல்ஜர்ஸ், எக்ஸ்-ஸர்விஸ்மென் போர்டு—ஏதாவது நிவாரணம் வேண்டுமென்பவர்கள் போய் மனுச் செய்து கொள்கிறார்கள். இவர்கள் மூலமாக இந்த உதவி கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : படையிலே பணியாற்றிய முன்னாள் வீரர்கள், இப்படிப்பட்ட உதவித் தொகையைப் பெறுவது மிகவும் குறைவாக இருப்பதனால், அவர்கள் நல்லபடி வாழ்க்கை நடத்த கூட்டுறவு தொழில்களை ஒதுக்கி கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறார்களா ? பஸ் போக்குவரத்து போன்ற திட்டங்களில் அவர்கள் ஈடு பட வழி வகை செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கடந்த 10 வருஷ காலமாக இந்த பழைய ராணுவ வீரர்கள் எல்லோருக்கும் பல வித சலுகைகள் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் கூட்டுறவு முறையில் நடத்தக் கூடிய தொழில்கள் இவர்ளுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், அதெல்லாம் திறமையாக நடத்தப்படாமல் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வரும்படியாக இருக்கிறது.

*Slater Hostel and M.C. Rajah Hostel.*

* 419 Q.—SRI A. GOVINDASAMY : (On behalf of Dr. Srimathi Sathiyavanimuthu) : Will the Hon. the Minister for Works be pleased to state the number of Arunthathiyar students admitted in the Government Slater Hostel and M. C. Rajah Hostel, Madras, during the current year?

THE HON. SRI P. KAKKAN : Eight students belonging to Arunthathiyar community were admitted in the Government Slater Hostel and two students in the Government M. C. Raja Hostel during the current year.

**Sri A. GOVINDASAMY** : எத்தனை மாணவர்கள் இந்த இரண்டு ஹாஸ்டல்களிலும் சேர விண்ணப்பம் போட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

**The Hon. Sri P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால்தான் எத்தனை என்று சொல்லமுடியும்.

**Sri D. S. AUTHIMOOLAM** : இந்த "அருந்ததியார்" சமூகம் என்றால் என்ன ?

**The Hon. Sri P. KAKKAN** : அருந்ததியார் என்றால் ஹரிஜனங்கள்தான்.

### *Intensive Manuring Scheme*

*** 420 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the amount allotted districtwise for 1956–57 and 1957–58 under the Intensive Manuring Scheme for sanctioning loans to agriculturists for the cultivation of paddy and sugarcane ?**

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : A statement is placed on the table of the House.

**Sri V. K. KOTHANDARAMAN** : இந்த மேஜையில் இருக்கக்கூடிய பேப்பரில் கண்டுள்ளபடி பார்த்தால், மற்ற எல்லா ஜில்லாக்களையும்விட மிக மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கடன் கேட்பவர்கள் இல்லையா, அல்லது கேட்டாலும் கொடுக்க முடியாத காரணத்திலா, குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : முன் வருஷத்திலே எவ்வளவு கோரப்பட்டு எவ்வளவு செலவாயிற்று என்பதைப் பார்த்து ஒதுக்குகிறார்கள். ஆனால், டிஸம்பர் மாதத்தில் மறுபடியும் எவ்வளவு செலவாயிருக்கிறது என்பதைப் பார்த்து இன்னும் அதிகமாக வேண்டியிருந்தால் அதிகம் ஒதுக்குகிறார்கள். இவ்வாறு பார்த்தால் அதற்குமேல் தேவை இல்லாமல் இருந்திருக்கும். தேவை இருந்திருந்தால் இன்னும் ஒதுக்கப்பட்டிருக்கும். இது குறுகிய காலக் கடன். முன்பு வாங்கிய கடனில் பாக்கி இருந்தால் புதிதாகக் கடன் கொடுப்பதில்லை. கடன் பாக்கி இருப்பவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : What is the maximum loan given to each individual ? Is it in the form of cash or manure ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I would like to have notice.

**Sri S. LAZAR** : ராமநாதபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட 50,000 ரூபாயில் எல்லாவற்றையும் மக்கள் பெற்றுக்கொண்டார்களா ? அல்லது அதில் மிகுதியாக சர்க்காரிடத்திலே ஏதாவது இருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதிலே மீதி இருப்பதாகத் தெரியவில்லை.

**Sri V. K. KOTHANDARAMAN** : சென்ற வாரத்திலே இதே போன்று வட ஆற்காடு ஜில்லாவிலே ஒதுக்கப்பட்ட தொகையை 436 பேர்கள் கேட்டதற்கு, 126 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டபோது அவர்களுக்கு தகுதியில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு, இதற்கு முந்திய வருஷத்தில் எத்தனை பேர் கேட்டார்களோ, அந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது என்று சொல்லும்போது வட ஆற்காடு ஜில்லாவிற்கு அந்த நேரத்திலே அந்தக் கணக்கு அடிப்படையில் ஒதுக்கப்படவில்லை. இதற்கு மட்டிலும் இதுபோன்று செய்வதற்குக் காரணம் என்ன ?

a Printed as Appendix IV on page 561 infra.





**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் முன்பே குறிப்பிட்டபடி, எவ்வளவு ஒதுக்கினாலும், பின்பு அதிகமாக ஒதுக்கி செலவிடப்பட்டு வருகிறது. ராமநாதபுரம்பற்றி கேள்வி கேட்டபோது புரியவில்லை. இப்போது சொல்கிறேன். 1956–57 வருஷத்தில் 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, பின்பு அது 78,000 ரூபாயாக் அதிகரிக்கப்பட்டு, 71,215 ரூபாய் செலவிடப்பட்டது. அதே மாதிரி 1957–58-ம் வருஷத்திலே முதலில் 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, பின்பு அது 80,000 ரூபாயாக ஒதுக்கப்பட்டு, ஆனால் பணம் செலவானது 30,000 ரூபாய்தான்.

### *Steel*

*** 421 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have requested the Centre to allot additional quota of steel to this State for the purpose of starting small industries ?**

**The Hon. Sri R. VENKATARAMAN** : This Government have addressed the Government of India for increasing the State quota for iron and steel for small-scale industries as the existing quota falls far short of the requirements of the small-scale industries in this State.

**Sri N. K. PALANISAMI** : ஸார், போதுமான உருக்குக் கிடைக்காததன் காரணமாக என்ஜினீயரிங் தொழில்கள் ஏற்படுவது தடைப்பட்டிருக்கிறது. பாக்கி மாகாணங்களைவிட அதிகமாகக் கிடைக்காவிட்டாலும், பாக்கி மாகாணத்திற்கு எந்த அளவு கிடைக்கிறதோ, அந்த அளவைப் பெறுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அதைத் தான் சொன்னேன். நம் ராஜ்யத்திற்கு இன்னும் அதிகமான இரும்பு உறுக்கு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

**Sri S. LAZAR** : இப்பொழுது இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு போதுமான ஸ்டீல் கிடைத்து வருகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இல்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, there is so much of black-marketing still going on in the matter of distribution of iron. That is due to the fact that the Government of India give permits for the import of steel from abroad. Side by side, permits for the purchase of indigenous steel are also issued and the merchants are allowed to deal in both the varieties. Will the Government of Madras kindly address the Government of India to stop the import of the foreign varieties and at the same time increase the indigenous quota to the merchants?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Unfortunately, the production of iron and steel in the country is hopelessly inadequate and we have to depend on foreign imported steel to some extent. Therefore, I think the remedy would be worse than the disease if we prohibit the import of steel.

SRI A. A. RASHEED: What is the present quota of steel for the State, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, there are three or four separate quotas such as agricultural, non-agricultural, steel processing industry and small-scale industries and we have Government developmental schemes. So far as small-scale industries are concerned, our requirements are nearly 1,800 tons per quarter, but our allocation is 500 tons per quarter.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Will the Government kindly consider the desirability of separating these two quotas? Supposing a particular merchant is given licence to deal in indigenous steel, he is also given permit to deal in foreign steel. Will the Government kindly see to the separation of these two licences?

THE HON. SRI R. VENKATARAMAN: This is a matter concerning the Central Government. If the hon. Member writes to me, I will forward it to the Government of India.

SRI N. K. PALANISAMI: சர்க்கார் டிபார்டுமெண்டுகளுக்குத் தேவையான ஸ்டீல் எப்படி வாங்கப்படுகின்றது ? தேவையான அளவு ஸ்டீல் கிடைகாததால் வேலைகள் தடைபட்டு இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN: கவர்ன்மெண்டு டெவலப்மெண்டு ஸ்கீம்களுக்கென்று தனியாக ஒரு "கோட்டா" ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நமக்குத் தேவையான ஸ்டீலை நாம் பெறுகின்றோம். உதாரணமாக நம்முடைய கிண்டி இன்டஸ்டிரியல் எஸ்டேட்டை கட்டுவதற்கு 100 டன் ஸ்டீல் வாங்கினோம்.

SRI A. V. P. ASAITHAMBI: எஃகுக் கோட்டா எந்த முறையில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: சிறு கைத்தொழில்களைப் பொறுத்தவரை "நேரிடையாக உபயோகிப்பவர்கள் கோட்டா" மூலமாக வழங்குகிறோம். இதைத் தவிர "டீலர்ஸ்" இருக்கிறார்கள். அவர்களுக்கு தனியாக ஒரு "கோட்டா" கொடுக்கப்படுகிறது. சிறு கைத்தொழிலுக்காக ஒதுக்கப்படுவது 500 டன்.

SRI K. VINAYAKAM: Sir, what was the reaction of the Central Government to our representation for allotment of more quota to our State? Is the Hon. Minister aware of the fact that there is a general scarcity felt for M.S. rods, G.P. iron and iron girders by some of the small-scale industries?

THE HON. SRI R. VENKATARAMAN: The reaction of the Central Government so far is silence.

SRI S. LAZAR: சார், எந்த அடிப்படையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் இந்த 'கோட்டா' பிரித்துக் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒவ்வொரு சிறு தொழிலும் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும் என்று ரேடட் கபேசிடியைப் பொறுத்து 'கோட்டா' நிர்ணயிக்கப்படுகிறது.

MR. SPEAKER: Questions are over.



[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* DIFFICULTIES EXPERIENCED BY THE RYOTS IN TIRUNELVELI DISTRICT.

MR. SPEAKER: The hon. Member Sri Ramasubbu, has given notice of a motion under Rule 40. He may explain his motion.

SRI K. RAMASUBBU: சபாநாயகர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே அம்பாசமுத்திரம் தாலுகாவிலே, மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலே மிக திறமையாக, மிக அழகாக கட்டப்பட்டிருக்கின்ற மணிமுத்தார் நீர்திட்டம் திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிக்கு இன்னும் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறது. திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியைச் சேர்ந்தவன் என்பதற்காக நான் அப்படிச் சொல்வதாக நீங்கள் நினைக்கவேண்டாம். பல ஆண்டுகளுக்கு முன்பாகவே திருஞானசம்பந்தர் பாடல்களில் அதன் புகழைச் சொல்லியிருக்கிறார். திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியின் புகழ் அன்றும், இன்றும், என்றும் நிற்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member speaks about something which is not here. (Laughter.)

SRI K. RAMASUBBU: மணிமுத்தார் திட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது ஒரு விஷயத்தை சொல்லாமல் இருக்கமுடியாது. இந்த நாட்டிலே மக்கள் கொடுக்கும் ஒரு பகுதி தொகையைக் கொண்டு ஒரு திட்டம் இயங்கி இருக்கிறது என்றால் அது மணிமுத்தார் திட்டம்தான் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 6 கோடி ரூபாய் திட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்ட மக்கள் 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்ததற்காக திருநேல்வேலி மக்கள் சந்தோஷம் அடைகிறார்கள். இந்த திட்டமானது நாம் எதிர்பார்ப்பதற்கு முன்பாகவே, முடிவடைந்து விட்ட காரணத்தால் அதற்கு செய்யவேண்டிய பல சடங்குகளை செய்வதற்கு முன்பாகவே திறந்துவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. நான்கு அமைச்சர்கள் வந்து அந்த நீர்தேக்கத்தைத் திறந்து வைத்தார்கள். இதனால் மக்கள் பெரும் ஆனந்தம் அடைந்தார்கள் . . .

MR. SPEAKER: I am sorry the hon. Member is making a long speech. May I request him to come to the subject-matter. Rule 40 says that a 'member may, after questions, and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later'. There is no provision for a long speech.

SRI K. RAMASUBBU: For how many minutes can I speak, Sir?

MR. SPEAKER: For two minutes.

SRI K. RAMASUBBU: இந்த திட்டமானது திறந்தபோது பல கால்வாய்களின் மூலமாக பல குளங்களுக்கு தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. தண்ணீர் எப்படி நம்முடைய குளங்களுக்குக் கிடைக்கப்போகிறது என்று கிராம மக்கள் நிச்சயம் இல்லாமல் இருக்கிறார்கள். ரெவினியூ டிபார்டுமெண்டுக்காரர்கள் ஒரு அதிகாரத்தைப் போடுகிறார்கள். அதே சந்தர்ப்பத்தில் "இர்ரிகேஷன்" டிபார்ட்டுமெண்டுக்காரர்கள் வேறு ஒரு

அதிகாரத்தைப் போடுகிறார்கள். இதைத்தான் நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இந்த நிலை இப்பொழுது ஒருவாறாக சீர்திருத்தப்பட்டு வருகிறது. இன்னும் 2, 3 நாட்களுக்கும் தண்ணீர் நின்றுவிடும். ஆகையால் இம்மாதிரியான இடைஞ்சல்கள் ஏற்படாதவாறு, தண்ணீர் சரியான முறையில் வினியோகிக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டு மதிப்பிற்குரிய சபாநாயகர் எனக்கு இரண்டு நிமிஷம் பேச வாய்ப்பு கொடுத்ததற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, the general irrigation practice in the Tirunelveli district is to raise the kar crop in the months of June to September and then have the pishanam crop which will be harvested in February-March. But after the advent of the Papanasam reservoir, the tail race waters of the turbines have been utilized in certain taluks for an advance kar locally called "Palantholi", in continuation of the pishanam.

That being the case, in this year, complaints were received that a large number of tanks had not sufficient quantity of water for maturing the withering crops (pishanam), and that supply should be made from the Manimuthar Project Canal for filling them up. As, at this time, there was plenty of water in the reservoir and it was also surplussing, the Chief Engineer issued orders for the filling up of the tanks from the head reaches. The tanks that had to be filled up being in the Nanguneri, Ambasamudram, Tirunelveli, etc. taluks, it was reported that the ryots of Nanguneri taluk had prevented the Tirunelveli ryots from taking water to their tanks under the erroneous impression that the former had preferential rights. The matter was reported to the higher authorities, and, as a result, supplies were made to the tanks in accordance with the Collector's orders. It is stated that about 150 tanks had been filled up to 15th February 1958, out of the 300 to be filled up and that every effort is being made to fill up all the tanks.

No difficulty is anticipated in filling them up or in the distribution of water; nor have conflicting orders been issued by the Revenue and Public Works authorities as alleged, as far as information could be gathered.

Hence, it is not necessary to issue any special instructions to the local officers in the matter.

MR. SPEAKER: We shall now proceed with the discussion on Demand No. VIII—Irrigation. The Hon. Minister will now move the Demand.

## III.—BUDGET FOR THE YEAR 1958-59 VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—DEMAND No. VIII—IRRIGATION AND DEMAND No. XXXV—CAPITAL OUTLAY ON IRRIGATION.

• THE HON. SRI P. KAKKAN: கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் 8-வது மான்யக் கோரிக்கையான நீர்ப்பாசனத்துக்கு ரூபாய் 1,56,37,500-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்துக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





மேலும் மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் 35-வது மான்யக் கோரிக்கையான நீர்ப்பாசன முதலீட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 3,49,72,500-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்துக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய எல்லா வேலைகளைப்பற்றியும் என்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அங்கத்தினர்கள் எல்லோரையும் ஆக்க முறையில் நல்ல ஆலோசனைகளைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையின் 10-வது பாராவில் மூன்றாவது வரியில் ஒரு சிறிய எழுத்துப் பிழை இருக்கிறது. "இந்திய அரசாங்கம் செய்து கொடுக்காத நிதி" என்று இருப்பதை "இந்திய அரசாங்கம் செய்து கொடுத்த நிதி" என்று திருத்திக்கொள்ளவேண்டும். இதை கனம் அங்கத்தினர்கள் நன்கு தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. R. NALLASIVAM: Sir, I move—

"That the allotment of Rs. 1,56,37,500 under Demand No. VIII—Irrigation" be reduced by Rs. 100."

MR. SPEAKER: How long does the Hon. Minister wants for reply?

THE HON. SRI P. KAKKAN: எனக்கு முக்கால் மணிநேரம் தேவை.

MR. SPEAKER: I want to make an appeal to the hon. Members of this House. Yesterday, the Deputy Leader of a Party and an hon. Member on the Congress side were speaking. I was ringing the bell after ten minutes, but the hon. Members did not sit down. I have no objection to hon. Members talking for any length of time. It is for the Leader of the House to decide what time should be allotted. My duty is to divide the time. Having agreed in the Business Advisory Committee that certain time should be allotted, I do not want to make any departure from that. Hon. Members should agree to that. I would appeal to hon. Members that once we agree that a certain time should be allotted, they should stick to that. Yesterday—unfortunately I was not in the Chair—I had asked Sri M. D. Ramasami to preside over the discussion. He raised an objection to say that an hon. Member had finished ten minutes. I always note the time allotted to each Member. Hon. Members with their enthusiasm when they begin to speak, forget the time allotted to them. They should restrict themselves to the time allotted to them. I would impress upon the hon. Members that when one Member takes more time, another Member loses it. To-day for example, I have got with me ten names from Congress side, five names from the National Democratic Party, two names from the Dravida Munnetra Kazhagam. The time allotted is ten minutes. But, I do not know how we are going to arrange the time unless it is reduced to five minutes each. If hon. Members agree to five minutes, I have no objection. This is one thing.

There is another thing, which I want to tell the House. I would appeal that when I ring the bell, Members must obey the Chair. This is in general interest.

SRI K. VINAYAKAM: On a point of order, Sir. My point of order is this. The Chair was kind enough to read the number of speakers to be allowed to speak on the Demand such as ten for Congress, five for National Democratic Party, etc. Is it commensurate with the total number of parties concerned, Sir? Is it proportionate to the total number of membership?

MR. SPEAKER: I am glad the hon. Member raised this question. There is an impression that I am not fair for one side or another. It is true that the proportion should be correctly 3 : 1. In all Assemblies the Opposition is given a greater chance. The division is 2 : 1. There is nothing wrong in it. In many Assemblies the division of three Opposition and one Congress is also given. But I would not take this House to that extreme limit. Therefore the division is two Opposition and one Congress taking it in turn. That is the proposal I have got.

SRI T. S. RAMASWAMY PILLAI: On a point of personal explanation, Sir, lest it should be misunderstood. I have never exceeded the time limit fixed by the Chair.

MR. SPEAKER: What I said does not apply to him.

I must say that when the Chair rules that the time is over, the hon. Member must accept it. He must obey the rulings of the Chair. To question the Chair is objectionable. I must say this to Mr. Lazar, because it was when Sri M. D. Ramasami was in the Chair as a member on the panel of Chairman, I heard an hon. Member say " I have been speaking only for five minutes ". This is objectionable.

SRI V. S. MANICKASUNDARAM: I may be allowed to tender apology on his behalf.

MR. SPEAKER: He must be kind enough for the kind clarification.

SRI D. S. AUTHIMOOLAM: My name may also be included, Sir.

MR. SPEAKER: When I say Opposition, it includes Independents also. It may be that Sri Authimoolam might not have got a chance. Sri Nallasivam may now speak.

SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நமது மாகாணத்தில் நிறைவேற்றப்படவிருக்கிற திட்டங்கள் இன்னும் ஐந்து இருப்பதாக சர்க்காருடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. அவைகளிலே இப்பொழுது நாலு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பரம்பிக்குளம் திட்டம் மட்டும் கூடிய சீக்கிரத்தில் கேரள அரசாங்கத்தின் ஒப்புதலோடு எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரியவருகிறது. இந்த வேலைகள் எல்லாம் முடிந்து விட்ட பின்னர் நமது மாகாணத்தில் மேற்கொண்டு நீர்ப்பாசன வசதிகளுக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு என்பதை எல்லோரும்



ுக்கொள்கிறோம். அப்படியானால் இன்னும் இரண்டு வழிகள் மூலம்
ன் நீர்ப்பாசன வசதியை நல்ல முறையில் நாம் ஏற்படுத்திக் கொள்ள
டியும். மூன்று சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவது. இரண்
வது கிணறுகள் வெட்டுவது. இந்த இரண்டு வேலைகளிலும் நாம்
ல முறையில் கவனம் செலுத்தியாக வேண்டும். சிறிய பாசனத்
டத்தின் கீழ் இந்த ஆண்டில் 395 புதிய வேலைத்திட்டங்கள் மேற்
ாள்ளப்படுமென்று கனம் மந்திரி அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டி
கிறார்கள்.

இவைகளில் எவ்வளவு குளங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப்
றிய விவரம் இல்லை. இருந்தாலும் குளங்களைப்பற்றி ஒரு சில வார்த்
கைளைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது குளங்களை எடுத்துக்கொள்
ாக இருந்தால் ஒன்று அதன் கரைகளை ரிப்பேர் செய்வதோடு இருந்து
கிறார்கள். தூர்ந்துபோய் இருக்கக்கூடிய குளங்களுக்கு வண்டல் எடுப்
போன்ற வேலைகளைத்தான் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால்
இடங்களில் பார்த்தால் குளங்களுக்கு வரக்கூடிய வரத்துக்கள் சிதறிப்
ாய்க் கிடக்கின்றன. பல வருஷங்களாக அப்படி குளங்களின் வரத்துக்
சிதறிப்போய் இருப்பதால் நாளடைவில் அது தூர்ந்து போய் குளங்களுக்கு
ண்ணீரே வராமல் இருக்கிறது. குளங்களுக்கு தண்ணீர் வரமுடியாமல்
நப்பதால் அதன் பாசனத்திலுள்ள பயிர்கள் காய்ந்து போகக்கூடிய
லைமை ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட குளங்களுக்கு தண்ணீர் வரக்
டிய அளவில் அவைகளுக்கு வரக்கூடிய வரத்துக்களை ஒழுங்கான முறை
ல் அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி
த்துக்கொள்ள வேண்டும். பழைய வரத்துக்களை ஒழுங்குப்படுத்துவ
ாடுகூட புதிய வரத்துக்களையும் சில குளங்களுக்கு அமைத்துக்
ாடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் மூலம் நீர்ப்பாசன
திகளைச் செய்து கொடுக்கும்படியாக நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளு
றன்.

இரண்டாவதாக கிணறுகள் வெட்டும் திட்டம். இன்றைக்கு இந்த
டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அநேகமாக எல்லா
ரிய திட்டங்களும் எடுத்துக்கொண்டு முடித்துக்கொடுக்கப்பட்டுவிட்டது.
ன்னும் ஒன்று அல்லது இரண்டு திட்டங்கள் இருக்கலாம், அவைகளும்
ந்த ஆண்டிற்குள் முடிவடைந்து விடும். அதன் பிறகு நாம் முக்கியமாக
னத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது கிணறுகளை வெட்டும் திட்டம்
ன். எல்லா ஜில்லாக்களிலும் கிணறுகளை வெட்டுவது சம்பந்தமாக நல்ல
றையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
பொழுது இருப்பதைவிட நான்கு மடங்கு அதிகமாக வெட்டிக்கொடுக்க
பாடு செய்தால் நீர்ப்பாசன வசதிக்கு கொஞ்சம் அனுகூலமாக இருக்கும்.
ப்படி இன்னும் நான்கு மடங்கு அதிகமாகச் செய்து கொடுத்தால் நிச்சய
க விவசாயத்திற்கு நல்ல முறையில் பாசன வசதி செய்துகொடுப்பதாகும்.
கவே பாசன வசதியை அதிகப்படுத்த இன்னும் அதிகப்படியான கிணறு
ள வெட்டிக்கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டும். கிணறுகள் வெட்டும்
டத்திற்கு என்று இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது
கவும் குறைவானது. இன்னும் அதிகப்படியாக ஒதுக்க வேண்டும் என்று
ட்டுக்கொள்ளுகிறேன். கிணறுகள் வெட்டுவதற்கு நம்மிடத்தில் சில
றைகள் இருக்கின்றன. நிலத்தில் தண்ணீர் எங்கெங்கே இருக்கிறது
ன்று கண்டுபிடித்து அதை எடுக்க வேண்டிய மெஷினரி நம்
த்தில் இல்லை. நீர் நிலை எங்கேயெல்லாம் இருக்கிறது என்பதைக்
ண்டுபிடித்து அதைப்பற்றி சரியான முறையில் தகவல் கொடுத்தால்
தன் மூலம் விவசாயிகள் லாபம் அடைவார்கள். இப்பொழுது கிணறு
ர் வெட்டி வருவதைப் பார்த்தால் அதிருஷ்டம் இருந்தால் அவருக்கு
ண்ணீர் கிடைக்கிறது, இல்லாவிட்டால் கிடைப்பது இல்லை. தண்ணீர்
டைக்காவிட்டால் அந்த விவசாயி அழிந்துபோக வேண்டியதாக இருக்
றது. சில விவசாயிகள் கிணறுகளை வெட்டுவதற்கு சில முறைகளைக்

[Sri K. R. Nallasivam] [26th March 1958

கையாண்டு வருகிறார்கள். குச்சியைப் பிடித்து நீர் நிலையைக் கண்டு பிடித்து அதன்மேல் கிணறுகளை வெட்டுகிறார்கள். சிலர் விஞ்ஞான முறையில் நீர் நிலைகளைக் கண்டு பிடித்து கிணறுகளை வெட்டுகிறார்கள். சிலர் ஜோசியரைக் கேட்டு கிணறுகளை வெட்டுகிறார்கள். இப்படி மூன்று விதமாக அவர்கள் கிணறுகளை வெட்டும் முறைகளை கையாண்டு வருகிறார்கள். ஆகவே இதற்கு நமது மாகாண சர்க்கார் முக்கியத்துவம் கொடுத்து அதற்காக நல்ல அறிவாளர்களை அமைத்து எந்த இடங்களில் வெட்டினால் எந்த அளவிற்கு பயன்படும் என்பதைக் கண்டு பிடித்துச் சொல்லுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் கிணறுகளை வெட்டி வந்தால் பெரும் லாபகரமாக இருக்கும்.

கிணறுகள் வெட்டுவதற்கு என்று கொடுக்கப்படும் தொகையை சில இடங்களில் கிணறுகளை வெட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு இனங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். என்றும், கிணறுகளை வெட்டாமலேயே பழைய கிணறுகளைக் காண்பித்து விட்டு கிணறுகளை வெட்டி விட்டதாகச் சொல்லி பணத்தை வேறு இனங்களுக்குச் செலவு செய்து விடுவதாக தெரியவருவதாகவும் சொல்லப்படுகிறது. அதில் சிலவற்றில் உண்மையும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். சில இடங்களில் கிணறுகளை வெட்டுவதாக இருந்தால் சர்க்காருடைய பணத்துடன் இன்னும் அதிகப்படியாக இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் போட்டு வெட்டக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி அதிகமாகப் போட்டு வெட்ட முடியாத இடங்களில் கொடுக்கப்பட்ட பணத்தை வேறு இனங்களுக்குச் செலவு செய்திருப்பார்கள். அதனால் அந்தந்த பிரதேசங்களுக்கு கிணறுகளை வெட்டுவதற்கு எவ்வளவு பணம் தேவைப்படுமோ அதற்குத் தக்கவாறு அந்தந்த ஜில்லாவைப் பொறுத்த வரையில் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தந்த பிரதேசங்களில் வெட்டுவதற்கு எவ்வளவு தேவைப்படும் என்பதைப் பார்த்து அந்தந்த ஜில்லா அடிப்படையில் மானியத்தைக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம் இருப்பதாக தெரிய வருகிறது. தண்ணீர் அதிகப்படியாக கிடைக்கும் பிரதேசங்களில் நெற்பயிருக்கு எப்பொழுதும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நான் நேரில் கண்ட சில அனுபவத்திலிருந்து குறைவாகப் பாய்ச்சினால் அதிகப்படியான பலன் கிடைக்கிறது என்று தெரிந்துகொண்டேன். ஏற்கெனவே நமது நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி சொன்னபோது நான் நம்பவே இல்லை. அதன் பிறகு அப்படிச் செய்ய முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு காண்பிக்கப் பட்டது. அதன் பிறகு எனக்கும் அதில் நம்பிக்கை ஏற்பட்டது. அதாவது நெற்பயிருக்கு எப்பொழுதும் தண்ணீர் பாய்ச்சவேண்டும் என்ற அவசியம் இல்லை. குறைந்த அளவில் அதற்கு தண்ணீர் பாய்ச்சி அதிக அளவில் சாகுபடியை எதிர் பார்க்கலாம் என்று தெரிய வருகிறது. நெற்பயிருக்கு தினசரி தண்ணீர் பாய வேண்டும் என்ற அவசியம் இல்லை. சுமார் நாலு, அல்லது ஐந்து அல்லது பத்து நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சக் கூடிய இடங்களில் நல்ல முறையில் நெல் சாகுபடி. செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. அது நான் என்னுடைய அனுபவத்தில் நேரில் பார்த்து கண்டறிந்த விஷயம். நெற்பயிருக்கு ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சினால் போதும் என்று தெரிய வருகிறது. அப்படிப் பாய்ச்சினால் தினசரி பாய்ச்சி எதிர் பார்ப்பதை விட அதிகமாக எதிர் பார்க்க முடிகிறது. அதிகமான அளவில் உற்பத்தியாகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே இந்த முறையைப் பரப்புவதற்கு சர்க்கார் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கே தண்ணீர் அதிகமாக பாய்ச்சுகிறார்களோ அங்கே



26th March 1958] [Sri K. R. Nallasivam]

யெல்லாம் குறைவாக பாய்ச்சுகிற இடங்களில் காணப்படும் உற்பத்தியை விட குறைவாக இருக்கிறது. விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இப்படிப் பட்ட முறையை இன்னும் ஆராய்ச்சி செய்து அதை பொது ஜனங்களிடத்தில் பிரசாரம் செய்து அதன் மூலம் அவர்கள் இந்தமுறையில் அதிகப்படியான கவனம் செலுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் அதிகப்படியான தண்ணீர் கிடைக்கிறது. கோவை ஜில்லாவில் அவ்வளவு நீர்ப்பாசன வசதி கிடையாது. ஆனால் இந்த புது முறைப்படி கோவை ஜில்லாவில் அதிகப்படியான விளைச்சலைக் காண முடிகிறது என்று சொல்லுகிறார்கள். தஞ்சையிலுள்ள தண்ணீர் வசதி கோவையில் இல்லாமல் இருந்தாலும் அங்கு அதிகப்படியான விளைச்சலை எதிர் பார்க்க முடிகிறது. ஆகவே இந்த முறையில் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய காலத்தில் பாசன வசதிக்கு என்று ஏற்படுத்தப்பட்ட வாய்க்கால்களை வைத்துக்கொண்டே இந்த புது முறைப்படி அதிகப்படியான ஏக்கர் நிலங்களுக்கு சாகுபடி செய்ய பயன்படுத்திக்கொள்ளலாம். காளிங்கராயன் வாய்க்கால் மூலமாக 14 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடியாகிறது. பழைய ராஜன் வாய்க்கால் மூலமாக சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடியாகிறது. அரிசிபாளையம் வாய்க்கால் மூலமாக சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடியாகிறது. இத்துடன் மேட்டூர் வாய்க்கால் வேறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பழைய வாய்க்கால்களை வைத்துக் கொண்டே இன்னும் அதிகப்படியான விஸ்தீர்ணத்திற்கு பாசன வசதி செய்துகொள்வதற்கு வசதி இருக்கிறது. அதன் மூலம் அதிகப்படியான விளைச்சலை நாம் தேடிக்கொள்ளலாம். இப்படி புதிய முறைப்படி பாசன வசதி செய்து கொண்டால் இப்பொழுதுள்ள வாய்க்கால்களை வைத்துக் கொண்டே அதிகப்படியான விஸ்தீரணத்திற்கு பாசன வசதி செய்து கொள்ளலாம். இதைத்தவிர பரம்பிக்குளம், வீடூர் திட்டங்கள் இருக்கின்றன. பழைய வாய்க்கால்களையே சரியானபடி சீர்திருத்தி, மதகுகளை நல்ல முறையில் அமைத்துக்கொண்டால் இன்னும் அதிகப்படியான பாசன வசதிகளைச் செய்து கொள்ளலாம். மதகுகளையும், வடி மதகுகளையும் கழிவுகளையும் நல்ல முறையில் சீர்திருத்தம் செய்து வைத்துக்கொண்டால் இன்னும் அதிகப்படியான விஸ்தீரணத்திற்கு பாசன வசதி செய்து கொள்ளலாம். அவைகளையெல்லாம் சரியானபடி நடைமுறைக்குக் கொண்டு வந்தால் பத்தாயிரம் ஏக்கருக்கு பாயக்கூடிய பாசன வசதியை வைத்துக் கொண்டு 15 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்கலாம். அதன் மூலம் அதிகப்படியான விளைச்சலை உண்டு பண்ணலாம். இதை சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1863-ம் ஆண்டு காளிங்கராயன் வாய்க்காலுக்கு மதகுகள், வடிமதகுகள் கட்டி, கழிவுகள் கட்டி, சுமார் 11 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டது. அந்த மதகுகள் கொஞ்சம் கொஞ்சமாக தூர்ந்து போய் விட்டன. அதை சீர் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளைச் செய்து கொடுத்தும் ஏற்கெனவே சொன்ன புதிய முறைப்படி பாசன வசதியும் செய்து கொடுத்தால், பத்தாயிரம் ஏக்கருக்கு பாயக் கூடிய தண்ணீரை வைத்துக்கொண்டு சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீரைப் பாய்ச்சி அதிகப்படியான விளைச்சலை செய்து கொள்ளலாம். பல வருஷங்களாக பல வாய்க்கால்கள் சீர்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. அவைகளையெல்லாம் சீர்திருத்தி புதிய முறைப்படி பாசன வசதி செய்தால் இன்னும் அதிகபடியாக இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அதன் மூலம் அதிகப்படியான விஸ்தீரணமுள்ள நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரலாம். ஆகவே இது சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளும், இஞ்சினியரிங் இலாகா அதிகாரி

களும் ஒன்றுசேர்ந்து ஒரு கமிட்டியை அமைத்து ஒரு வருஷம் அல்லது மூன்று மாதங்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால் நிச்சயமாக பாசன விஸ்தீரணத்தை அதிகப்படுத்திக்கொள்ள மிகவும் வசதியாக இருக்கும்.

காவிரி ஆறு, பவானி ஆறு, பாசனத்தின் கீழ் உள்ள பிரதேசங்களில் யுத்த காலத்தில் அதிகப்படியான உணவு உற்பத்தி செய்யும் பொருட்டு தாராளமாக விவசாயிகள் கேட்ட போதெல்லாம் அவர்களுக்கு இஞ்சின்களை யும் பம்பு செட்டுகளையும் வாங்கிக்கொடுத்து வந்தார்கள். அவைகளின் மூலமாக சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். யுத்தம் முடிந்த பிறகும் அவர்கள் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. இன்றைக்கு காவிரி ஆற்றின் கீழ் உள்ள பிரதேசங் களிலும் திருச்செங்கோடு முதலிய இடங்களிலும் சுமார் 200 இஞ்சின்கள் இப்பொழுது இருக்கின்றன. அதைப்பற்றி சேலம் ஜில்லா கலெக்டரை உணவு கமிட்டியில் கேட்டபோது காவிரி ஆற்றுப் பாசனத்திலுள்ளவர்கள் இஞ்சின் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார். அதைப்போலவே மற்ற எல்லா பாகங்களிலும் அப்படி இஞ்சின்களை வைத்துக்கொண்டு பாசன வசதி செய்து கொள்ளலாம் என்று சொல்லவேண்டும். இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து எல்லோருக்கும் இஞ்சின்கள் கிடைக்கும் படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தண்ணீர் தீர்வை சம்பந்தமாக நியாய—அநியாயம் இருக்கிறது. அதைப்பற்றி சர்க்கார் கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். புஞ்சைக்கு முதல் போகமாக இருந்தால் 4 ரூபாயிலிருந்து 9 ரூபாய் வரைக்கும் இருக்கிறது. இரண்டாவது போகத் திற்கு இரண்டு முதல். நான்கு ரூபாய் வரையில் இருக்கிறது, தண்ணீர் தீர்வை காவிரி பாசனம் பொறுத்த வரைக்கும் முதல் போகத்திற்கு 15 ரூபாயும், இரண்டாவது போகத்திற்கு 7½ ரூபாயும், மூன்றாவது போகத் திற்கு 3¾ ரூபாயும் என்று இந்த அடிப்படையில் இருக்கிறது. லோயர் பவானியைப் பொறுத்தவரையில் பார்த்தால் அது ரொம்பவும் வேடிக்கை யாக இருக்கும். தண்ணீர் தீர்வையைப்பொறுத்த வரைக்கும் மாகாணம் பூராவும் ஒரே மாதிரியாக இருந்தால் நலமாக இருக்கும். எந்தந்த அள விற்கு தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்களோ அந்த அளவில் தீர்வை இருக்க வேண்டும். சோஷலிஸ அடிப்படையில் தீர்வை இருக்க வேண்டும் அது தான் நியாயமாக இருக்கும். அதற்கு வேண்டிய முயற்சி யையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER:** அவ்வளவு நேரம் நான் சொன்னது வீணாகவா போயிற்று? 10 நிமிடங்களுக்குள் நீங்கள் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன். நீங்கள் கேட்காது போனால் நான் என்ன செய்வது?

SRI A. NESAMONY: Mr. Speaker, Sir, I support the Demand and I am thankful to the Government for allotting a fair share out of the Demand to the Kanyakumari district. But I wish to say a few words regarding the plans that are to be executed in that area.

The first is the second stage of the Neyyar left bank channel. It is said that the Kerala Government now wants a royalty upon the waters that are to be let into the channel. Though in the statement that has been placed on the table of the House by the Hon. Minister every other channel is described in detail, giving the length, the cost and so on, so far as this channel is concerned, he has simply stated that a few distributaries will be taken out from the left bank channel. Particulars regarding the length and



cost etc., have not been given by the Hon. Minister. Sir, I put a supplementary question to the Hon. Minister some time back whether it was a fact that the Kerala Government was demanding a royalty upon the waters to be let into the channel. The Hon. Minister wanted notice for that question. Now at least at the end of the debate when the Hon. Minister replies to the debate I hope he would give the necessary particulars regarding this matter.

Sir, this scheme was included in the first Five-Year Plan while we formed part of the Travancore-Cochin State. The Planning Commission accepted the scheme. But it so happened that when this area was then talked of as an area to be transferred to the Madras State, the then Travancore-Cochin Government did not execute the scheme but allowed it to lie over. This fact was brought to the notice of the Planning Commission and the concerned Ministry in Delhi and more than once we were assured by the then existing Government that the work on both the right and the left channels would go ahead simultaneously. If that had been done in November 1956 itself a major portion of the work would have been executed in the transferred territory. But it was not done so. Now the Kerala Government seem to demand a royalty over these waters.

In this connection, I wish to bring to the notice of the Hon. Minister the provisions of the States Re-organization Act as adumbrated in sections 92, 107 and 108. Sub-section (2) of section 108 makes it mandatory that the benefits to be accrued under the First Plan and carried on to the Second Plan should not be minimised. I believe, on a correct interpretation of section 108, we are not bound to pay any royalty for this water for the transferred territory has a vested interest over these waters.

Then, Sir, I wonder whether our experts know that one of the tributaries of the Neyyar rises from the hills on the mountainous regions of Vilavangode taluk. The water in that area is drawn into Neyyar and we are now only tapping it back by the construction of these distributaries. As such it is most inequitable and unjust for the Kerala Government to demand royalty on these waters. If the work had been executed simultaneously with the work on the right bank probably by this time the whole system would have been in operation. We have been paying taxes for the past six or seven years since the scheme was inaugurated and we are entitled to the benefits of the tax paid towards the construction of the scheme and the Kerala Government is not entitled to ask for any royalty over these waters. Therefore I believe Government would take into consideration all these aspects of the question if the Kerala Government should demand a royalty.

The second point I wish to refer to is this. A sum of Rs. 1,50,000 has been provided for the Vilathurai Lift Irrigation Scheme. This scheme was inaugurated long long ago and we thought that before 1956 it would have been completed by the

Travancore-Cochin Government. But it was not possible for that Government to carry on the work because the pumps needed had to be imported from Western Germany. Now I understand the contractors who undertook to supply the pumps of 175 h.p are prepared to supply 75 h.p. pumps available in India now. Government should therefore reconsider the matter and take steps to complete the scheme as early as possible.

Then, Sir, we find a provision of Rs. 2,22,000 has been made for maintenance and repairs of Kodayar Project System and Rs. 5,00,000 for extension and improvements to the same system. Irrespective of party affiliations the representatives of the Kanyakumari district urge upon the Government that the Chittar-Pattanangal scheme should have top priority in this extension project. I was assured by the Hon. the Chief Minister that the scheme would go through. There are oppositions created by vested interests to the execution of this scheme, but I am sure in the interests of safety, health and the augmentation of food supplies in the area lying between Kodayar and the commanded area, the project system I believe would go a long way. Therefore, I believe the scheme would go through and it would have top priority.

I am glad to note, Sir, that the Government of Madras have at least now woken up to the possibilities of training the waters of the Punalur river of Shencottah taluk. Out of 122 square miles of this taluk the birth right of people living in 64 square miles have been signed away to the Kerala Government on the basis of an imaginary watershed line. If a proper assessment had been made they would not have done so. If this Government had only gone through the third volume of the Travancore State Manual, they would have realized the potentialities of irrigation in that area. Five dams were proposed by the then Travancore Government to irrigate the whole of Shencottah taluk some 50 years back. If they had only seen it, probably they would not have signed away the birthright of the people there. Even now it is not too late to find out the possibilities of the tributaries of the Punalur and Achankol rivers, which take their source in the area that has been transferred. If the whole of the Punalur river could not be trained into the Tinnevelly district at least a portion of this could be trained and dams could be constructed to irrigate portions of Tinnevelly district. These are possibilities to be considered by Government. I wish very much that the Punalur river should be trained into the Tinnevelly district by some agreement with the Kerala Government because the Kerala Government have no use for the waters of the river augmented by the waters of the Achankol river except to fertilise the prawns in the shallow lagoons of their Arabian sea. Our necessity is greater than that and I believe if the Kerala Government are properly appraised, they will understand our necessity in the matter and accede to our request



Finally when we speak of the Kerala waters we are thinking only of the Parambikulam and Aliyar projects. But it is up to the opposition parties whether by reconsidering the matter they cannot redeem portions of Peermede and Devikulam taluks. Three hundred and five square miles of the catchment area of the Periyar river is reserve forests and 217 square miles of cardamom area is occupied by the Madras Government, namely the Cardamom Planters' Association of South India. The area beyond the Talayar estate also comprises of Tamil villages of Mariyur and others. These are areas which should have come to us leaving aside the Kundala dam and Muthupatti dam. A solution to these problems could be found immediately if we claim our own from that State.

Thank you, Sir.

**Mr. SPEAKER**: எதிர்கட்சியினர் எல்லோரும் சேர்ந்து 35-வது மான்யத்தின் மீது கனம் அங்கத்தினர் ப. உ. சண்முகம் அவர்கள் வெட்டுப் பிரேரேபணையை பிரேரேபிக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் அவரை அதை 'மூவ்' செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri P. U. SHANMUGAM**: Sir I move—

"That the allotment of Rs. 3,49,72,500 under Demand No. XXXV for Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

* **Sri K. L. RAMASWAMY**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்று கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனத் துறைக்காகவும், நீர்ப்பாசன முதலீட்டுத் திட்டங்களுக்காகவும் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பொதுவாக நாட்டிலே விவசாயம் முன்னேறவேண்டுமானால், தண்ணீர் வசதி மிகவும் அவசியம் என்பதை நம் சர்க்கார் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது, குறிப்பாக சுதந்திரம் பெற்ற பின்பு அவர்கள் தீட்டிய திட்டங்களிலிருந்தும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலிருந்தும் தெரியவருகிறது. நம்முடைய ராஜ்யத்தில் மட்டுமல்ல, அண்டை ராஜ்யத்திலும் கூட வீணாகும் தண்ணீரையும் நல்ல முறையில் நமது ராஜ்யத்திற்கு வாங்கித் தரவேண்டுமென்று முழு முயற்சியுடன் பாடுபடுகிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தில் பரம்பிகுளம் திட்டம் ஒன்றாகும். அதில் அவர்கள் தீவிர முயற்சி எடுத்துவருகிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், மிகவும் பிற்போக்கான ஜில்லாவாகிய கோயம்புத்தூரில் சில பிரதேசங்கள் நீர்ப்பாசன வசதி பெறும். அதுமட்டுமல்ல, மின்சாரம் உற்பத்தி செய்து மின்சார சக்தியையும் அதிகரிக்க முடியும். இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் பலனுள்ளதாக உள்ள அந்தத் திட்டமானது விரைவிலே நிறைவேறும் வழியில் நம் அரசாங்கம் எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்தத் துறையில் அவர்கள் பெரு முயற்சி எடுத்துவருவதற்காக என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டாலும், நடைமுறையில் அதில் சில இடையூறுகளும், தொல்லைகளும் இருக்கும் என்பது உண்மை. அப்பேற்பட்ட சில திட்டங்களிலே எங்கள் ஜில்லாவில் கீழ்பவானி திட்டம் மிகவும் முக்கியமானது. அது உண்மையில் ஒரு பெரிய திட்டம். அந்தத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரும்பொழுது பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த சங்கடங்களை 5, 6 ஆண்டுகளாக சர்க்காருக்கு எடுத்துச் சொல்லிய முறையிலே, அவர்கள் மிகவும் நன்றி கூர்ந்து அவைகளை நீக்குவதற்கு பலவிதமான முயற்சிகளை எடுத்துவந்தார்கள். அந்த

முயற்சிகளின் இறுதி கட்டமாக சென்ற ஜனவரியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதாவது பயிர் முறையிலே விதிக்கப்பட்ட வரியை மாற்றி, நிலத்தைத் தரம் வாரியாகப் பிரித்து, அந்த முறையில் அதற்குத் தீர்வை போடுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். இந்த முறை ஓரளவு வரவேற்கக்கூடியதுதான். அதாவது இப்பொழுது உள்ள கஷ்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தரம் வாரியாக பிரித்து வரி விதித்தல் வரவேற்கக்கூடியது தான். முன்பு உள்ள கஷ்டங்கள் சிறிது குறைந்திருக்கின்றன. ஆனால் இந்த முறையிலும், பொதுவாக அறியாமையில் ஆழ்ந்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, சில சங்கடங்கள் உண்டாகின்றன என்பதை நான் கண்டிப்பாக எடுத்துச் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறேன்.

உதாரணமாக, இப்பொழுது நிலத்தின் தரத்தை நஞ்சை, புஞ்சை, தோட்டக்கால் என்று மூன்று விதமாக பிரித்திருக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளை நியமித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது தான். ஆனால், எதிர்காலத்தில் அதை மாற்றக்கூடாது என்ற ஒரு நியதியையும் வைத்திருக்கிறார்கள். அதாவது புஞ்சை பூமியை தோட்ட பூமியாகவோ, தோட்ட பூமியை நஞ்சை பூமியாகவோ மாற்றக்கூடாது என்ற ஒரு நியதியை வைத்திருக்கிறார்கள். இந்த நியதியானது விவசாயிகளுடைய உணர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டை போடுவதாக இருக்கிறது. பொதுவாக, நிலத்தின் தரத்தை உயர்த்திக்கொள்ள முயற்சி எடுப்பவன் விவசாயி. புஞ்சை பூமியை நஞ்சையாக மாற்றக்கூடாது, தோட்ட பூமியாக மாற்றக்கூடாது என்று தடை போடுவது விவசாயிகளை எதிர்காலத்தில் பாதிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அதுவும் இது ஒரு குறைந்த நிலப்பரப்பு உள்ள பிரதேசம் அல்ல. ஏறக்குறைய 4 தாலுக்காக்களில் 2 லட்சம் ஏகராவை இது பாதிக்கும். இந்தத் திட்டமானது 4 தாலுக்காக்களில் பரவியிருக்கிறது. ஆகவே, இந்தத் தாலுக்காக்களிலுள்ள விவசாய மக்களுக்கு இது ஓரளவு ஏமாற்றத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இப்பொழுது புஞ்சை பூமி என்று சொல்லுவது மழையை எதிர்பார்த்து விவசாயம் செய்யக்கூடிய பிரதேசம். இந்தத் திட்டம் கொண்டுவந்திருப்பதின் நோக்கம் "லோயர் பவானி இர்ரிகேஷன் ஸெஸ் ஆக்ட்" பிரகாரம் பார்த்தால்—இந்த ரிஸர்வாயர் கட்டிய நோக்கம் என்னவென்றால் "**to provide water to supplement rainfall for the irrigation of dry crops**" என்பது தான். அதாவது, புஞ்சைப் பயிர்களுக்கு மழைத் தண்ணீர் போதாதபோது தண்ணீர் பாய்ச்சுவதற்கு பவானி நதியின் மேல் சர்க்கார் ஒரு ரிஸர்வாயர் கட்ட உத்தேசித்திருக்கிறார்கள் என்பது தான். 1933-வது வருஷத்தில் தீட்டப்பட்ட திட்டம் இது. 1933-க்கும் இன்றைக்கும் இடையே ஏறக்குறைய 25 ஆண்டுகள் கடந்துவிட்டன. 25 ஆண்டுகளுக்கு முன் ஒரு திட்டம் போடப்பட்டு 6, 7 ஆண்டுகளுக்கு முன் 10 கோடி ரூபாய் செலவில், அதாவது ஏகர் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் செலவழித்து நிறைவேற்றப்பட்டது. ஏகருக்கு ரூ. 500 வீதம் செலவழிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிக்கு கிடைக்கும் வசதியைச் சொன்னால் மிகவும் வேடிக்கையாகத் தான் இருக்கும். அதாவது கால்வாய் திட்டத்தின் மூலம் 6 மாதங்களுக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கும். 180 நாட்களில் விவசாயிக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தத் திட்டத்தில் ஒரு விவசாயி ஆண்டுக்கு 18 முறை தான் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளலாம். ஏற்கெனவே மழையை நம்பி வாழ்ந்த விவசாயிக்கு மழை தவறினால் உதவி செய்வதற்காக ஏற்பட்ட திட்டம், ஓரளவுக்கு அவனுக்கு உதவி செய்வதாக இருக்கிறதே தவிர, அவன் இதை பரிபூரணமாக நம்பி வாழும் நிலையில் இல்லை. அப்படியிருக்கும்பொழுது புஞ்சை பூமியை தோட்ட பூமியாகவோ, நஞ்சை பூமியாகவோ மாற்றக்கூடாது என்று தடை விதித்திருப்பது விவசாயிகளுக்கு ஓரளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை நான் மிகவும் உறுதியாக தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



எங்கள் ஜில்லாவை பொறுத்தவரையில் தோட்ட பூமி என்றால் ஒரு கிணறு வெட்டி கிணற்றின் மூலம் நீர்ப்பாசனம் செய்வது என்று பொருள்படும். மற்ற ஜில்லாக்களைப்பற்றி நான் அதிகம் அறியேன். எங்கள் ஜில்லாவை, அதாவது கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொருத்தவரையில் கிணறு வெட்டுவது என்பது மிகவும் எளிதான காரியம் அல்ல. கடுமையான பாறைகளைத் தோண்டி, 60, 70 அடி ஆழத்திலுள்ள, அடி ஊற்று தண்ணீரை எடுக்கவேண்டும். அதாவது "அண்டர் கிரவுண்டு வாடர் ரிஸோர்ஸஸ்" என்று சொல்லுவார்கள். அம்மாதிரி கிணறு வெட்டி கிணற்றின் மூலம் விவசாயம் செய்வதற்கு ஒரு ஏகருக்கு ரூ. 500 போதாது. கீழ்பவானித் திட்டத்தில் ஒரு ஏகருக்கு ரூ. 500 செலவழித்திருக்கிறார்கள். ஆனால் தோட்ட பூமியாக மாற்றவேண்டுமானால், ரூ. 500 போதாது. குறைந்தபட்சம் ஒரு ஏகருக்கு ரூ. 1,000 வீதம் செலவழிக்க வேண்டும். அதிகமான மூலதனம் போட்டு தோட்ட பூமியாக மாற்றுவதற்கு ஒரு விவசாயி தனிப்பட்ட முயற்சி எடுத்துக்கொள்ள முற்பட்டால் அதற்கு இது தடையாக இருக்கிறது. இதுபோன்ற தடைகளை விதிப்பது விவசாய முன்னேற்றத்திற்கு நல்லது அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பயிர்க்கட்டுப்பாடு முறையை நீக்கி நிலத்தை பாகுபாடுபடுத்தி வரி முறையை எளிதாக்கும் வகையில்தான் இந்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்னும் தோட்ட பூமிக்கு பயிர் கட்டுப்பாடு இருக்கிறது. தோட்டத்தில் ஒரு விவசாயி தனக்கு வேண்டிய எல்லா பயிர்களையும் பயிர் செய்து கொள்ளலாம். அப்படியிருந்தும் முக்கியமாக இந்தக் காலத்தில், நெல், அதாவது அரிசி உணவு அதிகமாக பயன்படக்கூடிய காலத்தில், ஒரு தோட்டத்திலே நெல் பயிர் செய்யக்கூடாது என்ற கட்டுப்பாடானது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தார், அல்லது மராமத்து இலாகா என்ஜினியரிடமிருந்து அறிந்துகொண்ட காரணம், கிணற்று நீரை நெல் பயிருக்கு பயன்படுத்தினால், அது வாய்க்காலில் உள்ள நீரை உறிஞ்சிவிடுகிறது என்பது தான். அது அவ்வளவு பொருத்தமான காரணமாக தெரியவில்லை. தோட்ட பூமியிலே நெல் பயிர் வைக்கக்கூடாது என்ற கட்டுப் பாட்டைப் போலவே, கிணறுகளில் மோட்டார்கள் வைக்கக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாடும் இருக்கிறது. இம்மாதிரியான கட்டுப்பாடுகள் விவசாயத்துறையிலே நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*SRI K. APPAVOO PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, 10-10 a.m.
கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரிக்கிறேன். சென்னை ராஜ்யத்தில் சேலம் ஜில்லா மிகவும் பிற்போக்கான ஜில்லா என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த ஜில்லாவிலேயே மிகவும் பிற்போக்கான பகுதி எங்கள் ஹோசூர் தாலூகா என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆண்டவனை நம்பித் தான் நாங்கள் வாழ்கிறோமே தவிர சர்க்கார் எங்களுக்கு உதவியளிக்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். சர்க்கார் எங்களுக்கு விவசாயத்தில் முன்னேறுவதற்கு எந்த உதவியும் அளிக்கவில்லை. எங்கள் தாலூகாவில் எத்தனையோ ஏரிகள் இருந்தாலும் அவைகள் செப்பனிடப்படவில்லை. இதன் காரணமாக, அங்கே நஞ்சை விவசாயம் செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நீர்ப்பாசன மகாநாட்டில், தூர்ந்துபோன ஏரிகளையும் கரை உடைந்துபோன ஏரிகளையும் பற்றிக் குறிப்பிட்டால், மூன்று வருஷங்களுக்குள் அவைகளைச் செப்பனிடுவதாகவும், உடைந்து மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டவைகளைச் செப்பனிட முடியாதென்றும் எஞ்ஜினியர்கள் சொல்கிறார்கள். மற்ற ஏரிகளை கவனித்தால், சாத்தனூர், கிருஷ்ணகிரி திட்டங்களுக்கு தண்ணீர் வராமல் போய்விடும் என்று அவர்கள் காரணம் சொல்லுகிறார்கள். எங்கள் தாலூகாவில் பெரும்பாலான ஏரிகளில் தண்ணீர் பெண்ணையாறு பேசினில்தான் விழுகின்றன. அந்த ஏரிகளால் எங்களுக்குப் பிரயோஜனமில்லை. நில

[Sri K. Appavoo Pillai] [26th March 1958

மில்லாத ஏழைகளுக்கு சர்க்கார் நிலம் கொடுக்கும் திட்டம் இருந்து வரு கிறது. நிலமில்லாத ஏழைகள் நிலங்கள் கோரி விண்ணப்பம் அனுப்பி ஞல், கோரப்படும் நிலம் ஏரிப் புறம்போக்கு நிலமாக இருக்கிறதென்ருே வேறு ஏதாவதோ சொல்லி கோரிக்கையை நிராகரித்து விடுகிருர்கள். பழுதடைந்திருக்கும் ஏரிகளை சர்க்கார் செப்பனிடுவதும் கிடையாது. தளவாய் ஏரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அங்கே சிறியதொகை செல வில் அந்த ஏரிக்கு கரைகட்டிக் கொடுத்தால் சுமார் 2,200 ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்கள் தாலூகாவில் ஆறு முக்கியமான நதிகள் ஓடுகின்றன. வேறு எந்தத் தாலூகாவிலும் இந்த மாதிரி ஆறு நதிகள் இருக்காது என்று நினைக்கிறேன். எங்கள் தாலூகாவில் முக்கியமான ஆறு நதி களில் மூன்று ஜீவ நதிகள். அவை காவேரி, தென்பண்ணை, சனத் குமார் ஆகிய நதிகள் ஆகும். தென்பண்ணை 37 மைல் தூரம் ஓடுகிறது. சனத்குமார நதி 35 மைல்கள் ஓடுகிறது. ஹொஸூர் தாலூகா வில் நதிகள் இருந்தாலும், அங்கே ஒரு சிறிய அணைக்கட்டும் கட்டப்படா மல் அது புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. தென் பெண்ணையாற்றை எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு பழைய அணைக்கட்டு இருக்கிறது. அது ஹைதர் அலி காலத்தில் கட்டப்பட்டதென்ருே 200 ஆண்டுகளுக்கு முன் ஞல் கட்டப்பட்டதென்ருே சொல்லப்படுகிறது. நமது அமைச்சர்களும் பெரிய அதிகாரிகளும் அங்கே வந்தால் அந்த ஆற்றைப் பார்ப்பதில்லை. ஏனென்ருல், அங்கே ரோடு வசதியில்லை. நானும், 20 வருஷங்களாக அந்தத் தாலூகாவிற்கு விஜயம் செய்யும் அமைச்சர்களுக்கும் கவர்னர் களுக்கும் அளிக்கும் வரவேற்புப் பத்திரங்களில் இது சம்பந்தமான திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு வந்தாலும், இது வரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லை. அந்த ஆறுகளை கவனிக்காததற்கு சர்க்கார் இப்போது என்ன காரணம் சொல்கிருர்கள்? கிருஷ்ணகிரி, சாத்தனூர் திட்டங் களுக்கு தண்ணீர் போதாது என்று காரணம் சொல்கிருர்கள். அந்த ஆறுகள் சம்பந்தப்பட்ட திட்டத்தை பயன் படுத்திக்கொள்வதற்கு எங் களுக்குத்தான் முதல் உரிமை இருக்கிறது. ஏனென்ருல், அங்கே ஒரு பழைய அணை இருக்கிறது. நான் அனுவசியமாக சர்க்கார் பேரில் குறை கூறவில்லை. இப்போது சாத்தனூர் திட்டமும் கிருஷ்ணகிரி திட்டமும் முடி வடைந்து விட்டன. அந்த ஆறுகளில் மழை காலத்தில் வெள்ளத்தில் வரும் தண்ணீர் பூராவும் சமுத்திரத்தில் விழுவதைத் தடுத்து தேக்கி வைக்கக்கூடிய ஒரு சிறிய அணையைக் கட்ட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரித் திட்டத்தில் செலவாகாமல் மிஞ்சி யிருக்கும் பணத்தைக் கொண்டு அந்த அணையைக் கட்டிக் கொடுக்கலாம். ஆறும் உயர்ந்த "லெவல்"-ல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு சிறிய அணைக்கட்டை நிர்மாணித்தால் தாலுகா முழுவதற்கும் தண்ணீர் கிடைக் கும் என்று நினைக்கிறேன்.

தொட்டஹல்லா திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இது வரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தொட்டஹல்லாவில் சிறு தொகை செலவில் ஒரு அணையைக் கட்டினுல் இரண்டு நோக்கங்கள் பூர்த்தி யாகும். அதாவது, அங்கே விவசாயமும் அபிவிருத்தியடையும், ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பு உண்டாகும். அங்கே 2,500 ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம். அங்கே நிறைய மூங்கில்கள் வளருவதால், பேப்பர் தொழிற்சாலையை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கே வந்து அந்த நதியை ஸ்ரீ தாமஸும், டைரெக்டர் ஸ்ரீ ராமும் பார்த்தார்கள். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறதென்று தெரியவில்லை.

இங்கு சனத்குமார் நதி என்று ஓடும் நதியை பயன்படுத்தி ஒரு திட்டத்தை நிறைவேற்றலாம், தர்மபுரியில் சின்னுறு என்று சொல்லப் படுகிறது. கனம் அமைச்சர் ஸ்ரீ கக்கனும் அங்கே சென்று அந்த நதிகளைப் பார்த்தார். தர்மபுரிக்கு தண்ணீர் கொண்டு போவதற்



26th March 1958] [Sri K. Appavoo Pillai]

காக திட்டம் போட்டிருப்பதாக அறிகிறேன். அந்தத் திட்டத்திலும் எங் களுக்கு முதல் உரிமை இருக்கிறது. அந்த நதியில் பைரகொண்டபள்ளி என்ற இடத்தில் ஒரு அணைக்கட்டு இருக்கிறது. அந்த அணைக்கட்டும் உடைந்துபோயிருக்கிறது. சில ஆயிரம் ரூபாய் செலவழித்து அந்த அணைக் கட்டைச் செப்பனிட்டால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அந்த இடத்தையும் கனம் அமைச்சர் பார்வையிட்டால் மிகவும் நன்ருக இருக்கும். அங்கே பெரிய நிலச்சுவாந்தார்கள் "டாம் ஸைட்"-களைப் பயன் படுத்திக் கொண்டு லாபமடைந்து வருகிருர்கள். சனத்குமார் நதியிலிருந்து 2½—3 மைல் தூர "சானல்" மூலம் உழவாஹள்ளி என்ற ஏரிக்கு தண்ணீர் கொண்டுபோனுல் மழை காலத்தில் எப்போதும் 13 ஏரிகளில் தண்ணீர் இருக்கும். இந்தத் திட்டத்திற்கு சில ஆயிரம் ரூபாய்கள் செலவழிக்க லாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினுல் ஆயிரம் ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம். சின்னுறு என்ற ஆறு ஹொஸூருக்குப் பக்கத்தில் போகிறது. இந்த ஆற்றுத் தண்ணீரைப் பயன் படுத்துவதற் கான திட்டத்தை நிறைவேற்றினுல் 200 ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம்.

சாமனப்பள்ளி நீர்த் தேக்கத்தைக் கட்டுவதாக சர்க்கார் சொல்கிருர்கள். எந்தத் திட்டங்களைப்பற்றி நாங்கள் பேசினுலும், ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி சர்க்கார் தட்டிக்கழிக்கிருர்கள். இத்தனை நதிகள் ஹோஸூர் தாலூகாவில் ஓடினுலும் அவைகளால் அத்தாலூகா பயனடைய முடிய வில்லை. எங்களை சர்க்கார் கைவிட்டாலும் கடவுள் கைவிடவில்லை. இந்த ராஜ்யத்தில் கடந்த பஞ்சத்தின்போது ஏராளமான மக்கள் அவஸ்தைப் பட்டபோது ஹொஸூர் தாலூகா லட்சக்கணக்கான மூட்டை உணவு தானி யங்களைக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கர்வத் துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தார், ஹொஸூர் வாசிகள் மிகவும் அப்பாவிகள், வாயில்லாப்பூச்சிகள், என்பதைத் தெரிந்து கொண்டு இனிமேலாவது அத்தாலூகாவில் நல்ல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். சர்க்கார் அந்தத் தாலூகா விற்கு ஒரு நன்மையை மாத்திரம் செய்திருக்கிருர்கள். அதாவது, இரண்டு வருடங்களுக்கு முன் அங்கே மின்சார வசதியை செய்து கொடுத்தார்கள். அதற்காக சர்க்காருக்கு ஹொஸூர் வாசிகள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி ஹொஸூர் தாலூகாவை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri W. P. A. R. CHANDRASEKHARAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மராமத்து அமைச்சர் பிரேரேபித்திருக்கும் நீர்ப்பாசன மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நீர்ப்பாசனத் திட்டங்களை பரிசீலிப்பதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு வாய்ப் பளிக்கும் வகையில் அவர் ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிருர். அதற் காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நமது ராஜ்யத் தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் பல பூர்த்தியடைந்து விட்டன என் றும், பல முடியும் தருவாயில் இருக்கின்றன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. வைகைத் திட்டத்தை சீக்கிரம் பூர்த்தி செய்யவேண்டு மென்றும், ஏற்கெனவே பெரியாறு வாய்க்கால் பாசனத் திட்டத்தின் கீழ் இருக்கும் இடங்களில் நீர்ப்பாசன வசதியை ஸ்திரப்படுத்தும் வகையில் இந்தத் திட்டமும் பயன் படுமாறு நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முறையில் பெரியாறு வாய்க்கால் வேலையில் **earth works** பகுதியில் பத்தாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பெரியாறு வாய்க்கால்களில் **sluices** என்று சொல்லக்கூடிய மதகுகளை சீர்படுத்தவேண்டியும் புதிதாக ஏற்படுத்தவேண்டியும் இருப்பதால், அவைகளை யும் அங்கே இடம் பெற அமைத்து வேலை நடைபெறுவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்குத் தகுந்தபடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், சாத்தியாறு, மஞ்சளாறு, கொடவனாறு திட்டங்களை சர்க்கார் அங்கீகரித்து ஆரம்ப வேலைகளை எடுத்திருப்பதற்காக அப்பகுதி மக்களின் சார்பாக நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, அவைகளை சீக்கிரமே மக்களுக்கு பயன்படும் ரீதியில் உபயோககரமாக நிறுவ வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய காரியங்களைக் கண்காணிக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர், தன்னுடைய தாலூகா பஞ்சாபுக்குச் சமம் என்று குறிப்பிட்டார்கள். அவருடைய தாலூகாவில் ஐந்து ஆறுகள் ஓடிக்கொண்டிருப்பதாக வருணித்தார். நான் சொல்லிக்கொள்ள பிரியப்படுவதெல்லாம்

> "நாரியிட பாக்களுக்கு நஞ்சளித்த பாவியென்று
> வாரியிடம் போகாத வைகை—பாரில்
> இடத்தும் வலத்தும் இரு புறமும் பாய்ந்து
> நடத்தும் தமிழ் புலவர்—பாண்டிய நாடு."

என்று வைகை நதியைப் பற்றி ஒருவர் கூறும்போது, சமுத்திர ராஜனிடம் போகவில்லை என்று சிலேடையாகக் கூறி, ஆனால் இடமும் வலமும் பாய்ந்து, அது தமிழ்ப் பாண்டி நாட்டையும் நடத்திக்கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார். இந்த நிலைமையில் பெரிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய, பெரிய கட்டுக்கோப்பான திட்டங்களை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாலும், அப்படிச் செய்தாலும் அவைகள் நிறைவேறமுடியாமல் போய்விடுவதாலும், இன்னும் வேறு சேதங்கள் ஏற்படும் நிலையில், பெரிய ஆறுகள் இருக்கும் நிலையில் முன்னால் எல்லாம், ஆங்காங்கே இருக்கும் சிறு சிறு ஆறுகள் ஆங்காங்கே இருக்கும் மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் சிறு பாசனத் திட்டங்களாக அமைக்கப்பட்டது என்பதுதான் அந்தப் பாட்டின் சிலேடைக் கருத்து என்று நான் கூறுவேன்.

அப்படிப் பார்க்கும்போது, வைகை நதியை உதாரணமாகச் சொன்னாலும், அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள எல்லா சிறு நதிகளுக்கும் அது பொருந்தும். ஆகவே, சிறு பாசனத் திட்டங்களை ஆங்காங்கே அமைப்பதற்கு வேலைகள் மும்முரமாகச் செய்யப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ரீதியில் நமது ஒப்பற்ற பிரதமர் நேருஜீ அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் கண்மாய் அபிவிருத்தியைப் பற்றியும், மராமத்து வேலைகளைப் பற்றியும் சமீபத்தில் நடந்த அகில இந்திய விவசாயிகள் சம்மேளனத்தில் கூறியதை இங்கே நமது சர்க்கார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப் பிரியப்படுகிறேன். இம்மாதிரி காரியங்களில் இந்தக் கண்மாய் மராமத்து என்று சொல்லப்படும்போது, மழை காலத்தில் வண்டல்களை அடித்து வந்து, ஆற்றிலிருந்து கண்மாய்களுக்குப் போகும் **supply channel** என்று சொல்லப்படும் வாய்க்காலிலும் கண்மாயிலும் நிரப்பி மேடு தட்டி விடுகிறது. அந்த ரீதியில் நதிகளைச் செப்பனிடும் வேலை, யாருடைய பொறுப்பு என்று நிர்ணயம் இல்லாமல், சரிவர நடைபெறாமல் இருப்பதால் தான் அங்கு பாசன வசதிகளில், அதிலும் முக்கியமாக ஜமீன்தார்களிடமிருந்து இப்பொழுது சர்க்காருக்குக் கைவசமாகிய இடங்களில், கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகள் மேடு தட்டி விடுவதால் மழை காலத்தில் தண்ணீர் வந்தாலும் குளம் முன்னால் நிறைந்த அளவு நிறைவது இல்லை. அந்த நிலைமையில் இருப்பதால் அந்த வெட்டு எடுக்கும் வேலைகளையும், இன்னும் வாய்க்கால் அமைப்பு, கண்மாயிலிருந்து நிலங்களுக்குப் போகும் வாய்க்கால்களின் முக்கியமான இடங்களை நல்ல தளவரிசை சிமெண்டு மூலமாக அமைத்துக் கொடுக்கவேண்டும். இம்மாதிரி வேலைகள் செய்வது மூலமாக நல்ல முறையில் விவசாயம் முன்னேறி நாடு வளம் பெறும் என்று சொன்னால் அது மிகையாகாது. அம்மாதிரி வேலைகளில் எப்போதும் **professional contractors** என்பவர்களுக்குப் பதிலாக அங்கேயே ஆயக்கட்டுகளில் இருக்கும் விவசாயிகள் சங்கத்தின் மூலமாக, அவர்கள்



முன் வந்தால், அவர்களிடம் **Contract system** என்று சொல்லப்படும் சில நியதிகளை **(conventions)** விலக்கு அளித்து அவர்களுக்கு ஊக்கம் அளித்து அந்த வேலைகளை அவர்களிடம் ஒப்படைத்தால் மிகவும் சரியாக நடைபெறும் என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. மீன் பிடித்தல் அல்லது கண்மாயில் தண்ணீர் இல்லாமலிருக்கும்போது விவசாயம் செய்துகொள்ளும் நிலை, இவைகளை விட நீர்ப்பாசன வசதிக்காக முக்கியத்துவம் கொடுத்து, மற்றவைகளெல்லாம் அதற்குப் பின்னால் தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதி தான் முக்கியம். மீன் பிடித்தலோ, கண்மாயை வேறு விஷயங்களுக்குப் பயன்படுத்துவதோ முக்கியம் அல்ல என்ற கருத்தில் வேலை நடக்கவேண்டும். ஏனென்றால் சில சமயங்களில் மீன் பிடிப்பவர்களுக்கு . இருக்கும் உரிமைக்காக நீர்ப்பாசன வசதியின் உரிமை பரிபோக்கப்படுகிறது அல்லது துஷ்பிரயோஜனப்படுத்தப்படுகிறது. இம்மாதிரி காரியம் ஏற்படாதபடி ஆங்காங்கே இருப்பவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது மாத்திரமல்ல. இப்பொழுது நாடு பூராவும் வேலைகள் அதிகம் ஆவதன் நிமித்தம் இப்பொழுது எக்ஸிகியூடிவ் அஸிஸ்டெண்ட் இன்ஜினீயர் ஒருவர் இருக்கிறார் சப்-டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸில். அதுபோல் ஹைவேஸ் அஸிஸ்டெண்டு என்ஜினீயர் இருக்கிறார். அதே மாதிரி **food production** அஸிஸ்டெண்ட் இன்ஜினீயர், மைனர் இரிகேஷன் அஸிஸ்டெண்ட் இன்ஜினீயர் இருக்கிறார். சப்-டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸில் இருக்கும் இவர்களையெல்லாம் தாலூகா ஹெட் குவார்ட்டர்ஸில் மாற்றி, அங்கே முதலாவதாக ஒரு அஸிஸ்டெண்டு இன்ஜினீர் ஏற்படுத்தி, அவர்கள் வேலைகள் எல்லாவற்றையும், ஹைவேஸ், எக்ஸிக்யூடிவ், இர்ரிகேஷன் மூன்றையுமே வேலை குறைவாக இருக்கும் தாலூகாவில் ஒருவரே பார்க்கும்படியாகவும், வேலை அதிகமாக இருக்கும் இடத்தில் சப்-டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸில் இருப்பது போல் அஸிஸ்டெண்ட் இன்ஜினீர்கள் இருக்கும்படியும் செய்தால் அவர்கள் உடனடியாக காரியங்களைக் கவனித்து வேண்டியதை மக்களுக்குச் செய்ய வாய்ப்பும் வசதியும் இருக்குமென்று கூறிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. இது சம்பந்தமாக நமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிலத்தின் முதலீட்டுத் தொகை 300 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை விசேஷ காரணங்களுக்காக உயர்த்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் இப்பொழுதிருக்கும் சூழ்நிலையை அனுசரித்து சாதாரண காரணங்களுக்காகவே சிறிது கணிசமாக உயர்த்தி, சின்ன திட்டங்களும் நிறைவேறுவதற்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

* **SRI P. M. PERIA KARUPPAN AMBALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, நமது சர்க்காரால் நல்ல முறையில் செய்யப்பட்டு வரும் மராமத்து வேலைகளைப் பாராட்டுகிறேன். இத்துடன் முக்கியமாக மதுரை ஜில்லாவில் வைகை அணைக்கட்டின் மூலம், பெரியாறு ஆழப்படுத்தியதின் மூலம் சர்க்கார் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். முக்கியமாக மதுரை ஜில்லாவில் அதிகமான குளங்கள் இருக்கின்றன. அதில் ஏ-1 குளங்கள், ஏ-2 குளங்கள் என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். ஏ-1 குளங்கள் சர்க்கார் மராமத்தில் இருக்கின்றன. ஏ-2 குளங்கள் சர்க்கார் மராமத்தில் இல்லாமல் குடி மராமத்தில் இருப்பதினால் குடிகள் அவைகளைச் சரியாகச் செப்பனிடுவதில்லை. ஏ-2 குளங்களில்தான் பெரியாறு கழிவு நீர் போய்ச் சேருகிறது. அந்தக் குளங்கள் நல்ல முறையில் ஆழப்படுத்தப்படாமல், நல்ல பாய்ச்சல் கால்வாய் இல்லாமல், மடைகள் இல்லாமல் இருப்பதால் மழைக் காலங்களில் அதிகமான கழிவுத் தண்ணீர் வரும்போது தேக்கி வைக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. ஏ-2

குளங்களை ஏ-1 குளங்களாக மாற்றி சர்க்காரே நேரிடையாக மராமத்து செய்தால் அதிகமான நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். விவசாய உணவுப் பொருள்களும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். முக்கியமாக மேலூர் தாலூகாவில்தான் குளங்கள் அதிகமாக இருக்கின்றன. மதுரை ஜில்லாவில் மொத்தமுள்ள ஏ-2 குளங்கள் 863. அவற்றில் மேலூர் தாலூகாவில் மட்டும் 766 குளங்கள் இருக்கின்றன. புயல் காரணமாகச் சில குளங்கள் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. ஆனால் இதர குளங்கள் ஆழப்படுத்தப்படாமல், செப்பனிடப்படாமல் இருப்பதினால் அதிகமான தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. அந்தக் குளங்களை ஏ-1 ஆக்கி, ஆழப்படுத்திச் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும் என்பதாகவும், மேலூர் தாலூகாவில் வீணாக கடலுக்கு ஓடுகின்ற ஆறுகளுக்கு குறுக்கே அணைகட்டி அந்தத் தண்ணீரையும் பாசனத்திற்கு உபயோகப்படுத்த வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. KARUNANITHI** : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மான்யத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டு பிரேரணைகளை—தோழர்கள் நல்லசிவம் அவர்களும், ஷண்முகம் அவர்களும் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை—ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தென்னகத்தில் நீர்வளம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டால்தான் நல்ல செழிப்பும், பசுமையும் இருக்க முடியும் என்கிற கருத்தினை அமைச்சர் அவர்களுக்கு நான் கூறி தெரிய வேண்டுமென்ற அவசியம் இல்லை.

பழைய காலத்திலே நம்முடைய தமிழ் மன்னர்கள் நீர் வளத்தைப் பெருக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு பெரிய பெரிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும், அவைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தது போல கரிகாலப் பெருவளத்தான் கட்டிய கல்லணை இன்றையதினம் காட்சி தருகிறதென்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

வசதிகளும்,வாய்ப்புகளும் குறைந்திருந்த அந்தக் காலத்தில்—விஞ்ஞானப் பெருக்கம் இல்லாத அந்தக் காலத்தில்—அத்தகைய ஒரு கல்லணையைக் கட்டி அந்தப் பகுதியை செழிப்பாகவும், சீராகவும் ஆக்கிய அந்தப் பெருமையினையும், அதைவிட அதிகமான வசதியும், வாய்ப்பும் விஞ்ஞானப் பெருக்கும் மிகுந்துள்ள இந்த நேரத்தில் நாம் செய்கின்ற நீர்வளத் திட்டங்களையும் எண்ணிப் பார்க்கும்போது—அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது—மிக மிக குறைந்த அளவில் தான் நம்முடைய வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று கூற விரும்புகிறேன்.

இவைகளுக்கு எல்லாம் காரணம் என்ன என்று கூறும்போது—வரவு செலவு அறிக்கையில், நிதி அமைச்சர் அவர்கள் உரையிலும், இந்த நீர்ப் பாசன மானியத்தை கோரியிருக்கின்ற அமைச்சர் திரு கக்கன் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையிலும்—குறிப்பிடப்படுகிற ஒரே ஒரு காரணம் இயற்கையின் இடையூறுகள் நமக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதுதான். இயற்கையான வசதிகள் இல்லாத காரணத்தினால் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்கிறார்கள். அதே நேரத்தில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கான வழித் துறைகள், அதற்கேற்ற இயற்கை வசதிகள் நம் மாநிலத்தில் எங்கெங்கே கிடக்கின்றன என்பதையும், அவற்றை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் பற்றி பல முறை இந்தப் பேரவையில் பல அங்கத்தினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தும் கூட அவை கவனிக்கப்படவில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.



சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையிலுள்ள வட பகுதியில் வாணியாற்றில் அணை கட்டப்படுமானால் ஹரூர் தாலூகா முழுவதும் பாசன வசதி பெறும் என்பதாக அந்தப் பகுதி மக்கள் பல பல மனுக்கள் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு சர்வே செய்யப்பட்டு ஒரு லட்சத்திற்கு மேல் செலவு ஆகியிருந்தும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா, இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்று இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

புதுக்கோட்டைப் பகுதியில் அக்கினியாறு, கோரையாறு, வெள்ளாறு, குண்டாறு போன்ற காட்டாறுகள் ஓடுகின்றன. அப்படி ஓடுகின்ற காட்டாறுகளை அந்தப் பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கும் வகையில் தடுத்துத் தேக்க சில திட்டங்கள் சொல்லப்பட்டன. அக்கினியாற்றுக்கு அணை கட்டினால் அந்தப் பகுதி நல்ல செழிப்பும், பசுமையும் அடையும் என்று அந்த வட்டாரத்து மக்கள் என்னைக் காணுகின்ற போதெல்லாம் சொல்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள மந்திரி அவர்களைச் சந்தித்தும் கூறியிருக்கிறார்கள். 1950-ம் ஆண்டு என்று எனக்கு நினைவு—கனம் பக்தவத்சலம் அவர்கள் அக்கினியாறு திட்டத்தைப் பார்வையிட்டு, வழி முறைகளை எடுத்துக் கூறி, தண்ணீர் கணக்கு இவைகளையெல்லாம் போட்டு திட்டத்தை உருவாக்க நல்ல முயற்சி எடுப்பதாக கூறியிருக்கிறார். ஆனாலும் இன்றைக்கு அந்த முயற்சியும் கைவிடப்பட்டு விட்டதா, இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்று இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற மதிப்பிற்குரிய நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். கீரியாறு, வேம்பாறு, பம்பையாறு முதலிய நல்ல பல திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசினரின் முயற்சியை எதிர்பார்த்துத் தவங் கிடக்கின்றனர் என்று கூற விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுக நதித் திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. வடவாறு சீர்திருத்தம் செய்யப்பட வில்லை. பனமலை ஏரித் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதோடு தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நந்தன் கால்வாய் திட்டம், நந்தன் பெயர் பெற்ற அந்த மாவட்டத்திலே, நந்தன் பரம்பரைப் புகழை நிலை நாட்ட அந்தப் பரம்பரையில் இருந்தே வந்துள்ள அமைச்சர் அவர்கள் இன்னும் நிறைவேற்றாமலிருப்பதைக் கவனித்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படி நம் மாநிலத்தில் இயற்கை வசதிகள் அதிகமாக இருந்தும் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடாமல், இயற்கை வசதி இல்லை என்று ஒரு வார்த்தையில் கூறி விடுகிறார்களே என்று வியப்படைகிறேன். அப்படிச் சொல்லி விடுவதின் காரணமாக நிறைவேற்றப்படவேண்டிய பல திட்டங்களை நிறைவேற்றாமல் விட்டு விடுகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் செய்யாறு அணைக் கட்டு, சதுப்பேரி, களம்பூர் ஏரி, வடவேடு ஏரி, கமண்டலநாக நதி திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டும் கவனிக்கப்படவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் என்னுடைய தொகுதியாகிய குளித்தலை பகுதியில் குடகநாறு திட்டத்தைப் பற்றி நான் மிக மிக விளக்கமாக பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தக் குடகனாறு திட்டத்தின் படி திண்டுக்கல் வட்டம் வேடசாந்தூருக்கு அருகேயுள்ள கல்வார்பட்டியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டி கீழ்ப்பக்கமாக சுமார் 20 மைல் நீள வாய்க்கால் வெட்டினால் என்னுடைய குளித்தலைத் தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதியைப் பெறும் என்று கூறியிருக்கிறேன். வருகிற ஏப்ரல் மாதம் 5-ந்தேதி கூட சர்வ கட்சித் தோழர்களைக் கொண்ட விவசாயி மகாநாட்டைக் கூட்டுவதாக இருக்கிறது. குடகனாறு திட்டத்தைப் பற்றி சென்ற ஆண்டு மந்திரி கக்கன் அவர்கள் சொல்லும்போது—சென்ற ஆண்டு

[Sri M. Karunanithi] [26th March 1958

ஜூலை மாதம் 12-ந்தேதி என்று நினைவு—அமராவதி திட்டத்திற்குத் தண்ணீர் விடப்பட்டதும் அது கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அமராவதி திட்டத்துக்கு தண்ணீர் விட்டாகி விட்டது. ஆகவே இதையும் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி பிரிவில் தூர்ந்து போயிருக்கிற வாய்க்கால்களை சென்ற பத்து ஆண்டு காலமாக—சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே— மராமத்து செய்யவில்லை. அந்தக் காவேரி கால்வாய்கள் வெட்டப்படுமானால் இன்னும் அந்தப் பிரதேசத்தின் வளம் அதிகமாகப் பெருக வழியேற்படும் என்று கூற விரும்புகிறேன்.

இவைகளையன்னியில் கிருஷ்ணா, கோதாவரி திட்டங்களுக்கு நம் சர்க்கார் செய்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இன்றைக்கு ஆந்திராவில் அந்நதிகளின் 10 சத வீதம் தண்ணீர்தான் உபயோகப்படுகிறது. அவர்களே அணை கட்டிக்கொண்டாலும் 40 சத வீதம் தான் அவர்களுக்கு பயன்படும் என்றும், மிச்சம் இருக்கிற 60 சத வீதம் வீணாகப் போகாமல் தமிழக மாவட்டங்களுக்குப் பயன்படும் வகையில் செய்யலாம் என்றும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வேலையை 'விரைவில்' செய்ய திட்டமிட வேண்டும். அது அமைச்சர் அவை விரைவில் என்று சொல்கிற வார்த்தைக்கு கொள்கிற புதிய பொருள் போல் இல்லாமல் 'சீக்கிரமாக' நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அது போலவே, சென்ற ஆண்டு பாலாறு திட்டத்தைப் பற்றி எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எந்த வகையிலே பாலாற்றில் இருக்கிற தண்ணீரை 'சப் சாயில் வாட்டர்' மூலம் எந்த அளவு நிறைவேற்ற முடியும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுவும் இது வரையில் கவனிக்கப்படவில்லை. அதிலும் அமைச்சர் அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். பெரிய திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று கூறும்போது 176 கோடி ரூபாய் செலவில் பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டமும், 116 கோடி ரூபாய் செலவில் ஹீரா குட் திட்டமும், 140 கோடி ரூபாய் செலவில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டமும், இது போன்று பல பல திட்டங்களும் வடக்கே நிறைவேற்றப்படும் அதே நேரத்தில் இங்கு பெரிய திட்டங்களுக்கு வழியில்லை, பெரிய திட்டங்களுக்கு இயற்கை வசதியில்லை என்று கூறும்போது நான் இங்கு ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, சில ஆண்டுகளுக்கு முன்னர், ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்கள், கங்கைத் தண்ணீர் குமரி வரையில் கொண்டு வரப்படுமானால் தென்னாடு வளம் பெறும் என்று ஒரு பெரிய திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள் தான் தென்னாடு பிரிய வேண்டுமென்று கேட்கிறீர்களே, அந்தத் தண்ணீரை அவர்கள் கொடுப்பார்களா என்று கக்கன் அவர்கள் விடை பகரக் கூடும். தென்னாடு பிரிய வேண்டுமென்று நாங்கள் கூறும்போது நட்புறவு முறைகளோடு தான் ஒரு நாடு இன்னொரு நாட்டில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்று கூறுகிறோமே தவிர நதி, வளங்கள் போன்ற பல வளங்களைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்று நாங்கள் கூறவில்லை. கங்கையில் வீணாகப் போகும் தண்ணீரை தென்னகத்திற்குக் கொண்டு வரும் முயற்சியை ஸர் ஸி. பி. ராமசாமியின் 'ட்ரான்ஸ் கான்டினெட்டல் கனால்' திட்டத்தை வெகு விரைவிலே செய்து முடிப்பதற்கும், அதற்காகிற செலவை மத்திய அரசாங்கத்திலிருந்து கேட்பதற்கும் இந்த அமைச்சரவை துணிவு பெற வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக, வடக்குள்ள ராஜ்யங்களில் கட்டப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் பண உதவி செய்கிறது. ஆனால் இங்கு நம் அமைச்சர் அவர்களால் காலையில் தரப்பட்ட இந்த அறிக்கையில், இங்கு கட்டப்படுகிற திட்டங்களுக்கும், இங்கு செய்யப்படுகிற பாசன வேலைகளுக்கும் மக்களிடமிருந்துதான் நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம் என்ற வாசகம் காணப்படுகிறது. இத்தகைய நிலைமை வடக்கில் உள்ள ராஜ்யங்களில் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. ஏனென்றால் நான் அடிக்கடி வடக்கே போகாதவன்



26th March 1958] [Sri M. Karunanithi]

ஆகவே, மக்களிடமிருந்து வாங்கித்தான் நாம் இக்காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த நீர்ப்பாசனத் திட்டம் மான்யத்தின்மீது கொண்டு வரப்பட்ட இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிற இந்த நேரத்தில் இந்த அணைக்கட்டுக்களையெல்லாம் இங்கு நீங்கள் கட்டவேண்டுமென்றும் இல்லாவிடில் நாங்கள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே கட்டிக்கொள்கிற அணையையாவது அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN** : உதவி 10-40 a.m.
சபாநாயகர் அவர்களே, பாசன வாய்ப்பிற்காக அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற பிரேரணையை ஆதரிப்பதுடன் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பெரிய பாசன வாய்ப்புகளுக்குள்ள நதிகள் நமக்கு இல்லை. அதிலும் நம் தமிழ் நாட்டில், பொன்னியாறு, வைகையாறு, காவேரியாறு போன்றவைகளில் இருந்து பாசன வசதி இனி பெறக்கூடிய வாய்ப்பில்லை. அதனால், மழைத்தண்ணீரை நம்பியிருக்கும் பிரதேசங்கள் அதிகமாக இருக்கிற தமிழ்நாட்டுப் பகுதிகளில் மழை பெய்யும் நேரத்தில் காட்டாறுகள், சின்ன சின்ன ஆறுகள், வாய்க்கால்கள் இவைகளில் ஓடும் தண்ணீரை சிறு சிறு அணைகள் போட்டுத் தடுத்து குளங்களை நிரப்புவதன் மூலம், அத்தண்ணீரைப் பாய்ச்சி உணவு உற்பத்தி செய்யக்கூடிய பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கட்டத்தில் நாம் இன்று இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களுக்கு ப்ரையாரிட்டீஸ் கொடுத்து பஞ்சப் பிரதேசங்களில் உணவு உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். எனக்கு முன் பேசிய கருணாநிதி அவர்கள் என் தொகுதியைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். என் தொகுதியைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்களே என்று நான் சந்தோஷப்பட்டேன். கடைசியில் பார்க்கும்போது தண்ணீரை நடுவில் இருக்கிற இடங்களுக்கு கொடுக்காமல் எப்படிக் கடத்திக்கொண்டு போவது என்பதைப் பற்றி குறிப்பிட்டது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வேடசந்தூர், லக்ஷ்மணம்பட்டி அணைக்கட்டுத் திட்டம் சென்ற 16 வருஷங்களாக என் கவனத்தில் பட்டுக்கொண்டிருக்கிறது புது விஞ்ஞான முறைப்படி அதை அங்கோ அல்லது அதற்கு அடுத்துள்ள இடத்திலோ கட்டினால், பாசன வசதி எக்காலத்திலும் இல்லாத பாளையம் பிர்க்காவிற்கு, பாசன வசதி கிடைக்கும், இந்தக் குடவனாறு திட்டத்தை அமைத்துக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இது நீர்ப்பாசனக் கான்பரன்ஸில் பல தடவை கொண்டுவரப்பட்டும், எனக்குத் தெரிந்து ஒரு தடவைதான் தண்ணீர் விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது. அமராவதி அணைக்கட்டு, திண்டுக்கல் குடி தண்ணீர் திட்டம் இவைகளின் வேலைகள் முடிந்து வருகிறது. மேலும் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பாளையம் பிர்க்காவில் சிறு குளங்கள் நிறைய இருக்கிறது. அதை நிரப்பிக் கொடுத்தாலே போதும். கிணற்றுத் தண்ணீரும், குளங்களில் உள்ள தண்ணீரும் நீர்ப்பாசனத்திற்கு உதவுபடியாகும். ஆகவே, நான் மீண்டும் இந்த சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன், பஞ்சப் பிரதேசமாகிய பாளையம் பிர்க்காவிற்கு பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று. அடுத்தபடியாக, அமைச்சர் அவர்களின் பேச்சிலே சில திட்டங்களுக்கு எஸ்டிமேட்டுகள் தயாரிக்கச் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். முக்கியமாக திருநெல்வேலி கொர்டனா நதி அணை எஸ்டிமேட் போடப்பட்டு சர்க்கார் வரை போயிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது, திருநெல்வேலி கெஸட்டியரில் குறிப்பிட்டிருக்கும் திட்டமாகும். அது, பெரிய பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டமல்ல. தண்ணீர் வராமல் இருக்கும் ஆயக்கட்டு பூமிகளுக்கு, ரிசர்வாயரைத் தடுத்து குளங்களை நிரப்பி ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம் இதில் குறிப்பிட்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏற்கனவே எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கு எதிர்ப்புகள் இல்லாதபடியாலும் 1958-59-ல் ஆவது இதை துவக்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக்

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
[26th March 1958

கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மதுரையில் உள்ள சாத்தியாறு, மஞ்சளாறு திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். மஞ்சளாற்றில், வத்தல குண்டு பக்கத்தில் ஆலங்குளம் அணைக்கட்டு பற்றி நாலைந்து வருஷங்களுக்கு முன்னாலேயே பூர்வாங்க ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. இது சமுதாய வளர்ச்சிப் பரப்புத் திட்டத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் அதற்கு வேண்டிய எல்லாம் செய்யப்பட்டு சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமாகும். அங்குள்ள குளங்களுக்கெல்லாம் கூட எப்.டி.எல். **(F.T.L)** லெவல் கூட கட்டியாகிவிட்டது. அப்படியிருந்தும் இன்னும் சில வேலைகள் முடியாதிருக்கிற காரணத்தினால் அந்த அணைக்கட்டுத் திட்டம் பூர்ணம் அடையாமல் பிள்ளையார்நத்தம் போன்ற கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. அதோடு, மஞ்சளாறு திட்டத்தை சீக்கிரமாக அமுலாக்க வேண்டும். மஞ்சளாறு போகிற இடங்களில் செழிப்பான இடங்கள் இருந்தாலும் தண்ணீர் இல்லாமல் இருக்கிற வரண்ட பிரதேசங்களும் நிறைய இருக்கிறது. ஆகவே, இந்த சாத்தியார் திட்டம் வந்தால் அந்தப் பிரதேசங்கள் உண்மையிலேயே பொன் விளையும் பிரதேசங்களாக மாறும் என்று பலர் நினைக்கிறார்கள். அங்கு இரண்டு தடவை ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. அதையும் ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பள்ளிப்பட்டி வட்டாரம் என்று ஒன்றிருக்கிறது. அது, கொடைக்கானல் ரோட்டிற்கு அருகில் இருக்கிறது. அதை மதுரை ஜில்லாவின் தோட்ட பூமி என்று சொல்வார்கள். அங்கு மாவத்தனது என்ற நீர் வீழ்ச்சியும் சிறிய ஆறும் இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சியில் உள்ள தண்ணீர் ஆறாக பாய்ந்து வீணாக போகிறது. அதேசமயத்தில், 10, 15 நாட்களுக்கு தண்ணீர் இல்லாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர் பாழாகிப் போகிறது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், உள்ள தண்ணீரை வைத்துக் கொண்டு அதை ரெகுலேட் செய்து, ஒழுங்கு பண்ணிவிட்டால் நமது உணவு பற்றாக்குறையை நாம் பெருவாரியாக சமாளித்துக் கொள்ள முடியும். அத்துடன் இன்னொரு காரியத்தையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது, இரிகேஷனில் வருகிறதா, விவசாய அபிவிருத்தியில் வருகிறதா என்று தெரியவில்லை. பில்டர் பாயின்ட்ஸ் அமைத்து எலெக்ட்ரிக் மோட்டார் வைத்து ஓட்டினால் 10, 20 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியும். ராமனாதபுரத்திற்குப் பக்கத்தில் நரிக்குடி வட்டாரத்தில் ஒரு ஆற்றங்கரையிருக்கிறது. அதன் கரைகளில் **filter points** போட வாய்ப்புண்டு.

அடுத்தபடியாக ஒரு ஆராய்ச்சி நமக்கு ரொம்பவும் அவசியமாக வேண்டியிருக்கிறது. அதாவது பெரியாற்று பாசனத்தில் 100-க்கு 110 உபயோகிக்கப்படுகிறது. அதோடு விளைச்சலும் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே தண்ணீரை குறைந்த அளவில் எவ்விதம் சிக்கனமாக உபயோகிப்பது என்பதை ஆராய்ச்சி செய்ய ஒரு ஆராய்ச்சி சாலையை ஏற்படுத்தினால் விவசாய அபிவிருத்தி ரொம்பவும் பயனுள்ளதாக இருக்கும். நமது சர்க்கார் இந்தமாதிரி ஒரு ஆராய்ச்சியை ஏற்படுத்தி விவசாய அபிவிருத்திக்கும் உணவு உற்பத்திக்கும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அதன் மூலமாக இப்போது இருக்கும் தண்ணீரைக்கொண்டு இன்னும் 25 சதமானம் நிலங்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியுமானால் அதுவே பெரிய காரியமாக இருக்கும். தோட்ட விவசாயிகளுக்கு இதைப்பற்றி நன்றாகத்தெரியும். அடுத்தபடியாக தண்ணீர் கட்டி நிற்கிற குளங்களை எல்லாம் செப்பனிட்டு அதில் தண்ணீரை நிரப்ப வழி செய்யவேண்டும். நமது மந்திரி கக்கன் அவர்கள் தாலூகாவைப்பற்றியே சொல்லுகின்றேன். நத்தம் பள்ளத்தாக்கிலும் அதற்கு பக்கத்திலும் தண்ணீர் வீணாக போய் கொண்டிருக்கிறது. பாலமேடு மலை பகுதிகளிலும், செங்குறிச்சி பக்கத்திலும், வட மதுரை பக்கத்திலும் வீணாகிக்கொண்டிருக்கிறது. இதை எல்லாம் சீரமைப்பு செய்தால் இந்த தண்ணீரை வைத்தே அதிகமான சாகுபடி செய்ய



[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
26th March 1958]

லாம். உப்பாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. நூறு வருடங்களுக்கு முன்பே அங்குள்ளவர்களுக்கு அதில் பாத்தியதை இருக்கிறது. இதில் ஒரு அணையை கட்டினால் அங்கு சுமார் 700, 800 ஏக்கர்களுக்கு தண்ணீர் பாயும். இதை சரியானபடி கவனிக்கவில்லையானால் அந்த பகுதிகள் எல்லாம் இன்னும் பஞ்ச பிரதேசமாகவே இருக்கும். ஆகவே இந்த மாதிரி இருக்கும் சிறு திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்குள்ள அணைக்கட்டுக்கு அவர்களுக்கு பாத்தியதை இருக்கிறது. அதை சீக்கிரமாக சீராக்குவதின் மூலம் அங்கு விவசாயத்தை அபிவிருத்தியடையச் செய்து உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். முக்கியமாக விவசாயிகளுக்கு தண்ணீர் சிக்கனத்தைப் பற்றி அறிவிக்கவேண்டும். அதோடு எஸ்டிமேட் போட்டப்பட்டு இருக்கும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் சர்க்கார் உடனடியாக முயற்சிக்க வேண்டும். அதில் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கும் சாத்தியார் ஓடை போன்ற திட்டங்களை 1958-59-லேயே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ**: கனம் உப சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யப் பிரேரணையைப் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நீர்ப்பாசன திட்டங்களைப்பற்றி எனக்கு முன் பேசிய பலர் அரிய பெரிய யோசனைகளை தெரிவித்து இருக்கிறார்கள். நமது நாட்டின் எல்லைகளை தாண்டியும் செய்ய வேண்டிய திட்டங்களைப்பற்றியுள்ள யோசனைகளையும் ஞாபகப்படுத்தினார்கள். ஆனால் வளம் மிகுந்த எங்கள் பகுதியிலுள்ள சில குறைப்பாடுகளை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஏற்கனவே இருபது ஆண்டுகளுக்கு முன்பு பாலாறு-பொருந்தலாறு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் பின் காங்கிரஸ் மந்திரி சபை வந்த காலத்திலிருந்து மறுபடியும் பரிசீலனை செய்து இப்போது அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டுமென்று பழனி பகுதியிலுள்ள மக்கள் கடந்த 20, 25 ஆண்டுகளாக கேட்டுவருகிறார்கள். கோவை ஜில்லா, மதுரை ஜில்லா இவைகளுக்கு நடுவில் இருக்கிற நாங்கள் அங்கெல்லாம் ஏற்படும் திட்டங்களை பார்த்துவிட்டு எங்களுக்கு மாத்திரம் இதை நிறைவேற்றாமல் இருப்பதை பார்த்து மிகுந்த வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். இந்த பகுதியிலுள்ள மக்கள் கிணறுகளில் கூட தண்ணீர் இல்லாமல் கால்நடைகளை வளர்ப்பதற்குக்கூட வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இது தவிர அங்கு நங்காஞ்சி ஆறு வருத மாநதி, குதிரையாறு போன்ற பல ஆறுகள் ஓடுகிறது. இவைகளில் ஒரு நதியின் மீதாவது அணைக்கட்டு கிடையாது. ஆனால் சில அணைக்கட்டுகள் மதுரை ஜில்லாவில் கட்டப்பட்டிருக்கிறது. இவைகள் சில செல்வாக்குள்ள மெம்பர்களின் முயற்சிகளினால் கட்டப்பட்டு வருகிறது. எந்தெந்த பகுதியிலுள்ள மெம்பர்கள் அதிகமாக சப்தம் போடவில்லையோ அந்தந்த பகுதிகளில் எல்லாம் இம்மாதிரி தடைகள்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் பழனி பகுதியிலுள்ள மக்களின் குரல் கடந்த 25, 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றி கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவதே கிடையாது. அப்படியே அரசாங்கம் முன்வந்தாலும் அங்குள்ள சில வாய்க்கால் தகராறுகளை காட்டி அந்த திட்டங்கள் ஒதுக்கி வைக்கப்படுகிறது. நான் நீர்பாசன அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கனம் கக்கன் அவர்கள் பொதுமக்களுடைய அபிலாஷைகளை தெரிந்துகொண்டிருக்கிறவர் என்ற காரணத்தால் இதை நிறைவேற்றித்தா வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு வேறு ஒரு காரணமும் இருக்கிறது. தமிழ் கடவுள் என்று சொல்லப்படுகிற தண்டாயுதபாணி அங்கு இருக்கின்ற காரணத்தால் இந்த அணையைக்கட்டி ஆசியை பெருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்த தண்ணீர் எல்லாம் வீணாகப்போய்க்கொண்டிருக்கிறது. இதில் அணைகட்டவேண்டுமென்று சொல்லும்பொழுது தஞ்சாவூரிலுள்ள

ஒரு சிலர் இந்த நதியிலுள்ள தண்ணீரை பயன்படுத்திக்கொண்டிருப்பதால் இதை எதிர்த்து வருகிறார்கள். நாங்கள் அணைகட்டவேண்டும் என்று முயற்சிக்கும்பொழுது திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சில மக்கள் இதை ஆட்சேபிக்கிறார்கள். இவர்களுக்கு தண்ணீர் குறைந்து விடும் என்று ஆட்சேபிக்கிறார்கள். இதற்காக இன்ஜினீயர்களை கண்டு இதை நிறுத்துவதற்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து வைத்து விடுகிறார்கள். ஆகவே இந்த பாலாறு-பொருந்தலாறு திட்டத்தை நிறைவேற்றுவிட்டால் தாராபுரம், உடுமலைப்பேட்டை பகுதிகள் என்றென்றும் பஞ்சப்பிரதேசமாக போய்விடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கு விளைச்சல் இல்லாத பகுதிகளுக்கு எல்லாம் வரி வஜா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த தண்ணீரை கொண்டு வந்தால் இந்த வரி வஜாவை நிறுத்திவிடலாம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு இந்த திட்டம் நிறைவேறினால் மின்சாரம் கிடைப்பதற்கும் வழி இருக்கிறது. அங்கு உயரமான நீர்வீழ்ச்சி இருக்கிறது. பல ஊற்றுள்ள ஆறுகள் இருக்கின்றன. ஆகவே இதை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எங்கள் பகுதியிலுள்ள ஒரு பெரிய கஷ்டத்தை குறிப்பிட விரும்புகிறேன். அமராவதி நதி எல்லையில் எங்கள் பகுதி இருக்கிறது. அந்த கரையில் இருந்து கொண்டிருக்கிற மக்கள் இந்த அணைக்கட்டினால் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அமராவதி தண்ணீர் தாராபுரம் தாலூகாவுக்குத்தான் சென்றதே தவிர அதன் கிழக்கு கரையிலுள்ள கிராமவாசிகளுக்கு பயன்படவில்லை. அங்குள்ள கிராமவாசிகள் தலைமுறை தலைமுறையாக தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கிழக்குப் பக்கம் ஒரு மதகு வைத்து இவர்களுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டும். தண்ணீர் இல்லாத காரணத்தால் ருத்திரபாளையம், ஆண்டிப்பட்டி, குப்பம் பாளையம், பாப்பம்பட்டி போன்ற பகுதிகளில் இருக்கின்ற மக்கள் தண்ணீர் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை உடனே எடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பழனி பகுதியிலே வருதமாநதித் திட்டம் பரிசீலனைசெய்யப்பட்டு அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் 10,000 எக்கர் வரை தண்ணீர் பாய ஏதுவாக இருக்கும். ஜமீன் விவசாயிகள் காலம் எல்லாம் கிணறுகள் உடைந்து பாசன வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு தாசில்தார் வந்து ஏராளமான பணம் செலவழித்து ரிப்பேர் பார்க்கிறார்கள். இந்த மாதிரி ஏராளமாக பணம் செலவழிப்பதற்கு பதிலாக அரசாங்கம் கவனித்து ஒரு அணையைக் கட்ட முன் வந்தால் நலமாக இருக்கும். இத்துடன் இந்த வருதாமாநதியில் கட்டப்படும் அணையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதை கட்டிக் கொடுத்து விவசாயிகளுக்கு உபயோகமாக தண்ணீர்கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுடைய இந்தக் கவலையைப் போக்கியாகவேண்டும். ஒரு சிலர் இந்த வசதியைப் பெறுக்கிக் கொள்ளுகிறார்கள். வசதியில்லாத மக்களுக்கும் இந்த வாய்ப்புக் கிடைக்கவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பழனி தாலூகாவிற்கு மற்ற ஜில்லாவிலிருந்து கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் கிடைக்க முடியாமல் இருக்கிறது. மேற்கு எல்லையில் இருக்கின்ற காரணத்தினால் மேடாக இருக்கிறது. இப்பக்கம் பார்த்தால் கோயமுத்தூர் ஜில்லாவின் எல்லையில் கடைசியில் இருக்கிறது. இரண்டு ஜில்லாவிற்கு மத்தியில் இருக்கும் பழனி தாலூகாவிற்கு சரியான அபிவிருத்தி ஏற்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே, இங்குள்ள விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க, பஞ்சத்தைப் போக்க பாலாறு-பொருந்தலையாறு திட்டத்தை வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து பொது மக்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**SRI A. VEDARATHNAM :** ஆன் எ பாய்ன்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன், ஸார் . . .

**DEPUTY SPEAKER :** உங்களைப் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லையே!

**SRI A. VEDARATHNAM :** என்னைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தஞ்சை ஜில்லா மிராசுதார்களைப் பற்றிச் சொன்னார். அவர்கள் ஷண்முக நதியிலும் அமராவதி நதியிலும் அணை போட்டு பாசனத்திற்குக் கொண்டு வருவதை தஞ்சை ஜில்லா விவசாயிகளும், தஞ்சை மிராசுதார்களும் ஆட்சேபிப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது எந்த விதமான செலவும் இல்லாமலேயே சில நிலங்கள் பாசனத்திற்கு வந்து விளைச்சல் நடந்து கொண்டிருக்கிறது. செலவுசெய்து அணை கட்டி அந்தத் தண்ணீரை இன்னொரு பக்கம் விட்டு, அதன் மூலமாக இப்போது சாகுபடியில் இருக்கும் நிலங்களைக் காயப்போடுவதைக் காட்டிலும், புதியதாக நிலங்களை சாகுபடி செய்ய வசதி எவ்வளவோ இருக்கும்போது, அம்மாதிரி செய்தால் தஞ்சை மிராசுதார்கள் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள், தடை செய்ய மாட்டார்கள், அதற்கு பதிலாக உதவி செய்ய முன் வருவார்கள் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே நீர்ப்பாசனத் திட்டம் மிக முக்கியமான ஒரு திட்டமாகும். இதை எப்படி நாம் பார்க்க வேண்டும். ஒரு மனிதன் வாழ்வதற்கு எப்படி தண்ணீரும் காற்றும் மிக மிக அத்தியாவசியம் என்று கருதுகிறோமோ, அதே போன்று இன்றைக்கு உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் குறைந்த விலையில் கிடைப்பதற்கும், இன்றைக்கு நீர்பாசனத் திட்டங்களை எந்த அளவுக்கு அதிகப்படுத்தி அதில் கவனம் செலுத்துகிறோமோ, அந்த அளவுக்கு உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். ஆகவே, இந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய பணம் மிக மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் ரொம்ப அழுத்தம் திருத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதே சந்தர்ப்பத்தில் நமது ராஜ்யத்திலே எல்லா ஜில்லாக்களிலுமே நாங்கள் பல இடங்களில் அணைக்கட்டுகளை கட்டி விட்டோம், நீர்த்தேக்கங்களை கட்டிவிட்டோம், இனி கட்டுவதற்கு இயற்கை வசதி கிடையாது, அந்தக் காரணத்தினால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஆளும் கட்சி அங்கத்தினர்களும் சரி, எதிர் கட்சி அங்கத்தினர்களும் சரி, ஒவ்வொரு ஜில்லாவிலும் இன்றைக்கு எத்தனை இடங்களில் பல பாசனத் திட்டங்களை, அணைக்கட்டுகளை கட்ட வசதிகள் இருக்கின்றன என்பதை தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த நேரத்திலே அரசாங்கம் வசதி கிடையாது என்று சொல்வதானது அணைகள் கட்டுவதற்கு அரசாங்கம் மறுப்பது போலாகும்—உணவு உற்பத்தியை அதிகப்படுத்த மறுப்பது போலாகும்—என்பதைதான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே மத்திய சர்க்கார் மந்திரி டே அவர்கள் ஒரு மாநாட்டுக்கு வந்தபோது குறிப்பிட்டார்கள். இந்த நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக எந்த அளவுக்கு பணம் செலவானாலும் நாங்கள் கேட்டால் கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்று திட்ட வட்டமாக குறிப்பிட்டுப் போனார்கள். ஆனால் நமது ராஜ்யத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலேயும் ஏரிகள் போன்றவைகள் புதிதாகக் கட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏரிகள் இருக்கின்றன. அணைக்கட்டுகள் கட்ட வசதிகள் இருக்கின்றன. அப்படி இருந்தும் கூட மத்திய சர்க்காரிடம் பணம் கேட்பதற்கு எதற்காகத் தயங்குகிறார்கள் என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏதோ அவர் வந்த போக்கிலே அப்படி சொல்லிவிட்டுப் போகிறாரோ, உண்மையிலே பணம் கேட்டுப் பார்த்தால் கொடுக்க மாட்டாரோ என்று கூட நினைக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஜனங்களை ஏமாற்ற வேண்டி இப்படிச் சொன்னாரே தவிர, பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை என்பதாவது இங்கு தெரிந்தாக வேண்டும். ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் எல்லா இடத்திலும் கட்டிய பிறகு, குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவிலே பல இடங்கள் வசதிகள் பெறாமல், பலனடையாமல் இருக்கின்றன. வெள்ளையன் காலத்திலிருந்து, குறிப்பாக 1931-ம் ஆண்டு முதற் கொண்டு இந்த ஜில்லாவிலே ஷண்பகத்தோப்பு அணை தேக்கம், செய்யாறு அணை, மோர்தானா அணை என்று சொல்லக்கூடிய திட்டங்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. குடியாத்தம் தொகுதியிலே 1954-ம் ஆண்டிலே முதல் அமைச்சர் போட்டியிட்டு வெற்றி பெற்றவுடன் அவர் முதன் முதலாகச் செய்தது அங்கே இருக்கக் கூடிய என்ஜினியர்களைக் கொண்டு பார்த்து விட்டு, மோர்தானா அணையைக் கட்டவேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு, அதற்கு பிறகு கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதே போன்று இன்னும் பல தாலுக்காக்களில், பல கிராமங்களில் ஏரிகள் கட்ட வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகளைக் கட்டாமல் இருக்கிறார்கள். இதிலெல்லாம், அதிகாரிகளுக்கு எழுதினால் என்ன காரணங்கள் கூறப்படுகிறது? பாலாறு பேசின் ரூல்ஸ் படி இதைக் கட்டினால், பாலாற்றில் போய் விழக்கூடிய தண்ணீரைத் தேக்கி அங்கே குறுக்கே கட்டினால், அந்த ஆற்றிலுள்ள ஸ்பிரிங்குகள் பாதிக்கும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு வெள்ளையன் காலத்திய சட்டத்தைக் குறிப்பிட்டு எப்போதும் சொல்லப்படுகிறது. பாலாறு ஆற்றின் கரையிலே பணக்கார விவசாயிகளுக்கு மட்டிலுமே எல்லா வசதிகளும் இருக்கிறதே தவிர ஏழை விவசாயிகளுக்கும் சிறு நில சொந்தக்காரர்களுக்கும் எந்தவிதமான வசதிகளும் கிடையாது. பாலாறு பேசின் ரூல்ஸ் எப்படி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். எப்படி என்று சொன்னால் பாலாறு ஆற்றின் கரையில் இருக்கிற சிறு ஏழை விவசாயிகள் பம்ப் செட்டுகளை வைத்து, என்ஜின் வாங்கி விவசாயம் செய்ய கடன் கேட்டால், அந்த ஆற்றின் கரையிலிருந்து 200 கஜத்திற்கு அப்பால் இருந்தால்தான் கொடுப்போம் என்று சொல்லப்படுகிறது. பணக்கார விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள் ஆற்றுக் கரையிலல்ல, ஆற்றிலேயே கூட கிணறு வெட்டி தண்ணீர் இறைக்க சட்டம் இடம் கொடுக்கிறது. வசதிப்பட்டவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்லாம். வசதியில்லாத மக்களுக்கு கடன் கொடுப்பதாகச் சொல்லி விட்டு மறுபக்கத்திலே இந்த சட்டங்களைப் போட்டு அவர்களுக்கு வாய்ப்பு வசதிகள் இல்லாத அளவிற்கு இது போன்ற சட்டம் இருக்குமானால் அந்தச் சட்டத்தை தகர்த்தெரிந்து ஏழை விவசாயிகளுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்யக்கூடிய அளவிற்கு வசதி செய்யக்கூடிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அதற்கு வேண்டி பாலாறு பேசின் ரூல்ஸைத் திருத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு பல இடங்களில் ஏரிகள் வெட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைச் சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலேயும் 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டங்கள் கூடுகிறது. இர்ரிகேஷன் கூட்டமோ, மற்றும் பிளானிங் போர்டு போன்ற கூட்டமோ கூடுகிறது. அந்தக் கூட்டங்களிலே ஒரு என்ஜினியர் வரும்போது கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, கட்டுவோம் என்று சொல்லுவார். இன்னொரு என்ஜினியர் வரும்போது, பாலாறு பேசின் ரூல்ஸ் இருக்கிற காரணத்தினால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுகிற அளவிற்கு இருக்கிறது. இதேபோன்று, பழைய ஏரிகள், அதிலிருந்து தண்ணீர் பாய்ச்சி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விவசாயம் செய்யக்கூடிய அளவிற்கு வசதி இருக்கக்கூடிய ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளுக்கு தண்ணீர் போகக் கூடிய கால்வாய்கள் இருக்கின்றன. பல இடங்களில் அந்தக் கால்வாய்கள் பழுது பார்க்க முடியாத அளவிற்கு இருக்கின்றன. கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அதையெல்லாம் நீங்கள் எங்கள்



கவனத்திற்கு கொண்டு வந்து எழுதினால் கவனிக்கலாம் என்று. அமைச்சர் அவர்களுக்கு எழுதினால் அவர் மீண்டும் கீழே இருக்கக்கூடிய ஜில்லா அதிகாரிகளுக்குத் தான் அனுப்புகிறார். அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதைத்தான் அமைச்சர் அவர்களும் சொல்லக்கூடும். ஆகவே இதை அவசியம் உடனடியாக கவனிக்கவேண்டும். வட ஆற்காடு ஜில்லாவானது சிறு நில விவசாயிகளைக் கொண்ட ஒரு ஜில்லா மட்டுமல்ல, மிகவும் வறண்ட பிரதேசம். வறண்ட பிரதேசங்களை கவனிப்பதுதான் மிகமிக முக்கியம். அதற்கு பதிலாக "இதோ பாருங்கள், மற்ற மாகாணங்களை விட இந்த மாகாணத்தில் தான் அதிகமாக மின்சார வசதி வழங்கியிருக்கிறோம். இந்த மாகாணத்தில்தான் ரோடு வசதிகள் இருக்கின்றன" என்று சொல்லுகிற நேரத்தில், 'இந்த மாகாணத்தில் நீர்ப்பாசன வசதி மிகமிக மோசமாக இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இந்த நிலையில் பார்ப்போமேயானால், கங்கைத் தண்ணீரை இங்கே கொண்டு வர வேண்டியது அவசியமில்லை. ஆனால் ஆந்திராவில் இருக்கிற கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை இங்கே கொண்டு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி பெரிய பெரிய நிபுணர்களும் கூறியிருக்கிறார்கள். அப்படி அந்தத் தண்ணீரை இங்கே கொண்டு வருவதாய் இருந்தாலும் அதை மைசூர் ராஜ்யத்திற்கு கொண்டுபோய், அங்கேயிருந்து நம்முடைய ராஜ்யத்திற்கு வருமேயானால், செங்கற்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களும், இன்னும் பல ஜில்லாக்களும் பயனடையும். இதைக் குறிப்பாக ஏன் சொல்லுகிறேன் என்றால், இந்த ஆறு ஆரம்பமாவது மைசூர் ராஜ்யத்திலிருந்து. இதைப்போன்ற ஒரு திட்டம் வரக்கூடிய சந்தர்ப்பத்திலே, அந்தத் தண்ணீரை பாலாற்றிலே கொண்டுவருவார்களேயானால், பலவிதத்தில் உதவியாக இருக்கும். பாலாற்றில் சரியான அளவுக்கு தண்ணீர் வராத காரணத்தால், பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தையும், மோர்தனாத் திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட இருப்பவர் தான் கனம் அமைச்சர் கக்கனும். ஆகவே இந்தத் திட்டத்தைக் கைவிடாமல் —அங்கே காங்கிரஸ் எம். எல். ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும் சரி, கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. இருந்தாலும் சரி, அங்கே இருக்கக் கூடிய மக்கள் நல்ல முறையில் வாழவேண்டும் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், இந்த ஆண்டிலே இல்லாவிட்டாலும் சரி, அடுத்த ஆண்டு பட்ஜெட்டிலாவது இதைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று செண்பகத் தோப்பு அணைக்கட்டு, செய்யாறு அணைக்கட்டுத் திட்டங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 11-1[illegible] a.m.

**Sri V. S. MANICKASUNDARAM**: உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பாசன முதலீட்டு மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். கனம், அமைச்சர் அவர்கள் தங்களுடைய முன்னுரையிலே பெரிய திட்டமான கீழ்பவானித் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றும், ஏறக்குறைய முடிந்துவிட்டது என்றும் சொன்னார்கள். கீழ் பவானித் திட்டப்பகுதி மக்களின் பிரதிநிதி என்கிற முறையில் அத்திட்டத்தில் உள்ள சில சிக்கல்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றும்போது, திட்டப் பிரதேசங்களில் அதிகப்படியாக விளையக்கூடிய உணவு தான்யத்தைக் கொண்டுதான் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி முடிவு செய்யப்படுகிறது என்றும் முன்னுரையில் கண்டிருக்கிறது. அப்படியானால், கீழ்பவானித் திட்டப் பகுதியில் நெல் பயிரிடக்கூடாது என்கிற தடை உத்திரவைப் பிறப்பித்ததற்குக் காரணம் என்ன என்று கேட்கிறேன். இம்மாதிரி உத்திரவானது இயற்கைக்கும், சட்டத்திற்கும் முரணானதாகாதா என்று கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் சட்ட நிபுணர்களைக் கலந்து மீண்டும் புனராலோசனை செய்து, அந்த உத்தரவை நீக்கி, அந்த பகுதி மக்கள் நஞ்சை சாகுபடிக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளும் வகையில் வழி செய்யுமாறு

கேட்டுக்கொள்கிறேன். கீழ்பவானித் திட்டத்தில் இந்த மாதிரி உத்தரவை அமல் நடத்துவதன் அனுபவத்தை மீண்டும் பரிசீலனை, செய்து புதுத் திட்டங்கள் கொண்டு வருகிற சந்தர்ப்பத்தில் இந்தமாதிரி கட்டுத்திட்டத்தை புகுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் விசாரித்த வரையிலும் பரம்பிக்குளம் திட்டத்திலும் புஞ்சை தான்யங்களுக்குத்தான் தண்ணீர் கொடுக்கப் போவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிந்துகொள்ள நேர்ந்தது. ஆகவே, மராமத்து இலாகா இதை பரிசீலனை செய்து, கீழ் பவானிப் பிரதேசத்தில் இது எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று தெரிந்துகொண்டு, அதற்கு பிறகு இதைப் பரம்பிக்குளம் திட்டத்திற்கு அமலுக்குக் கொண்டுவரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ் பவானிப் பிரதேசத்தில் தண்ணிர் விநியோகிக்கும் விஷயத்தில் ஒரு தகராறு பிரச்னை இருந்து கொண்டே வருகிறது. விவசாயிகளுக்குத் தண்ணிர் விநியோகிப்பது யார் என்று தீர்மானிக்கப்படாமல். ஒரு நிரந்தரமான நிலைமை ஏற்படாமல் இருக்கிறது. சட்டத்திலே " **whether a land is actually irrigated with water or not, he shall be levied a tax** " என்று இருப்பதன் காரணமாக, அந்தப்பகுதியை அநுகூலமாக எடுத்துக் கொண்டு யாருமே தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளவில்லை. ரெவின்யூ இலாகாவிடம் போய்க் கேட்டால், மராமத்து இலாகாவைப் போய்க் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். மராமத்து இலாகாவைப் போய்க் கேட்டால், 200 எக்கருக்கு உட்பட பொறுப்பு ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்தது என்று சொல்லுகிறார்கள்.

நானும் ஈரோடில் கீழ் பவானி பிராஜெக்ட்டுக்கு சார்ஜ் ஆக இருக்கும் எக்ஸிகூடிவ் என்ஜியரும் சித்தோடு அருகே உள்ள ஒரு நிலத்திற்குப் போய் இருந்தோம். சென்ற ஐந்து வருஷங்களாக அந்த விவசாயியின் நிலத்திற்கு அருகே வாய்க்கால் இருந்தும் கூட அவன் நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவனுக்கு வரி விலக்கு அளிக்கவில்லை. நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்களிடம் போய்க் கேட்டதற்கு '**whether a land is actually irrigated with water or not, he shall he levid a tax**' என்று இருப்பதனால், வரி விலக்கு அளிக்க முடியாத நிலையிலே இருக்கிறேன் என்று சொல்லிவிட்டார். எக்ஸிகூடிவ் எஞ்சினியரிடம் போய்க் கேட்டதில் " தண்ணீரை விநியோகிக்கும் பொறுப்பு என்னிடத்தில் இல்லை, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் போய்க் கேளுங்கள் " என்று சொல்லி விட்டார். தனியாக மதகு வைத்துக் கொடுங்கள், அல்லது தண்ணீர் முறை வைத்துக் கொடுங்கள், அல்லது ஆயக்கட்டிலிருந்து நீக்குங்கள் என்று சொன்னதற்கு ஒருவராலும் ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. கேட்கிறவர்களுக்கு எல்லாம் மதகு வைத்துக் கொடுப்பதற்கு **P.W.D.** சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இதை ஒரு உதாரணத்திற்காக சொன்னேன். இந்த மாதிரி சங்கடமான நிலைமை அநேக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் விநியோகித்துக் கொடுக்கும் முறையில் சில சட்ட ரீதியான சிக்கல்கள் இருக்கின்றன. சுமார் 100 அல்லது 200 எக்கர்களுக்குப் பாயக்கூடிய அளவில் அரசாங்கத்தின் செலவில் ஆர்ஜிதம் செய்து ஒரு வாய்க்கால் வெட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் தங்களுடைய சொந்த பூமியிலே, தாங்களே செலவு செய்து வாய்க்கால் வெட்டிக் கொள்ள வேண்டும் என்று சொன்னதற்கு அரசாங்கம் உத்திரவு போட முடியாது என்று சொல்லி வந்தார்கள். 1957-ம் ஆு ஜனவரியில் அப்பொழுது கோயமுத்தூர் ஜில்லா கலெக்டராக இருந்த ஸ்ரீ ஆர். வி. ஜோஸப் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அதன்படி நிலத்திற்குரிய கிரயத்தை ஒரு விவசாயி அரசாங்க கஜானாவில் கட்டிவிட்டால், அரசாங்கம் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அதற்கான செலவையும் கட்டிவிட்டால், வெட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு தனி மனிதனிடமிருந்து கிரயம் வாங்கிக் கொண்டு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஏறக்குறைய ஒரு வருஷத்திற்கு முன்னதாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தும், பரவலாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தும் கூட ஒரு விவசாயிக்காவது நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வாய்க்கால் வெட்டிக் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் பணம் ஒரு பகுதியாவது வந்தால்தான் " **Land acquisition**" செய்ய முடியுமென்று அரசியல் அமைப்பு சட்டம் கூறுகிறது.



இந்த கால்வாய்களை சரியாக பரிசீலனை செய்து, பிரபோசல்ஸ் அனுப்பி, 11-20 a.m.
அவைகளை வெட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். பிற்பாடு தேவையானால் அரசாங்கம் அத்தியாவசியம் என்று கருதினால், அதற்கான செலவுகளை மட்டும் பின்னால் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொள்ள வேண்டுமே தவிர, அவர்கள் கஜானாவிற்கு சென்று பணம் கட்ட வேண்டும் என்று சொல்வது நியாயம் அல்ல.

கீழ்ப் பவானி திட்டப் பிரதேசத்தில் இன்னும் இரண்டொரு சட்டப் பிரச்னைகள் எழ முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அங்கு பயிர் கட்டுப்பாடு அமல் நடந்து கொண்டு வருகிறது. ஒரு விவசாயி தனக்கு இஷ்டப்பட்ட பயிர்களை பயிர் செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அவனுடைய ஜீவாதார உரிமை. இந்த சட்டசபைக்கோ அல்லது வேறு எந்த ஸ்தாபனத்துக்கோ அதை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் கிடையாது என்று நான் நினைக்கிறேன். ஆகையால் அரசாங்கம் தக்க சட்ட ஆலோசகர்களை கலந்து ஆலோசித்து முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழ் பவானி திட்டத்தின் கீழ் பாசனமாகும் பிரதேசங்கள் எல்லாம் ரயத்துவாரி பிரதேசங்கள். சட்டக் கல்லூரியில் படிக்கும்போது முதன் முதலாகக் கற்றுக்கொடுப்பது ரயத்துவாரி பிரதேசங்களில் அவர்கள் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பது தான். " மைனிங் ஆக்ட் ", " ட்ரஷர் ட்ரோவ் ஆக்ட் " இவைகளுக்கு உட்பட்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தான். ஆகையால் அவர்கள் கிணறு வெட்டுவதைத் தடுப்பது அரசியல் அமைப்புச் சட்டப்படி மனிதனுடைய ஜீவாதார உரிமையை பாதிப்பதாகும். ஆகையால் இந்த விஷயத்திலும் சர்க்கார் நன்றாக ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பிரதேசத்தில் மின்சார விஸ்தரிப்பையும் கட்டுப்படுத்துகிறார்கள். கீழ் பவானி மக்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. தமிழ் நாடு முழுவதும் மின்சார திட்டம் விஸ்தரிக்கப்படும் பொழுது கீழ் பவானி பகுதியில் மட்டும் மின்சார விஸ்தரிப்பை கட்டுப்படுத்துவது நியாயமாகுமா, அவர்களுடைய ஜீவாதார உரிமைகளை பாதிப்பது ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு சுண்ணும்பு ஓடை, பெரும்பள்ளம், குரங்கம்பள்ளம், நொய்யல் முதலிய இடங்களில் இருக்கும் பள்ளங்களை தடுத்து தண்ணீரை வாய்க்கால் மூலமாக விட்டால் பாசனத்துக்கு வசதியாக இருக்கும். ஆகையால் இந்த திட்டங்களை உடனே பரிசீலனை செய்து, எடுத்துக் கொண்டு, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**SRI R. CHIDAMBARA BHARATHI:** கனம் சட்ட மன்ற உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் சபையின் முன் வந்துள்ள நீர்பாசன கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். இந்த வருஷத்தில் புதிதாக 190,000 ஏகர் நிலம் அதிகப்படியாக விவசாயத்திற்கு கொண்டு வரப்பட்

டிருக்கிறது. ஒன்பது நல்ல திட்டங்களை எடுத்துக் கொண்டு நான்கு திட்டங்கள் நிறைவேற்றும் தருவாயில் இருப்பதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சமயத்தில் சர்க்காருக்கு ஒன்று ஞாபகப் படுத்த ஆசைப்படுகிறேன். 1805-ம் வருஷத்திலே ராமனுதபுரம் ராஜா கிழவன் சேதுபதியும், அவருக்கு முதல் மந்திரியாக இருந்த முத்துவீரப் பிள்ளையும் பெரியாறு திட்டத்தை கட்ட முடியும் என்று சொன்னார்கள். 1815-ம் வருஷத்தில் இருந்த ஒரு எஞ்ஜினியர் இந்த திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அதற்கு பிறகுதான் இந்த திட்டத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ராமனுதபுரம் ராஜாவும், அவருடைய முதல் மந்திரியும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் படி இந்த திட்டம் நிறைவேற்றப்படாமல் வேறு வகையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் வருத்தம் தெரிவிக்கவில்லை. ஆட்சேபிக்கவும் இல்லை. இந்தத் திட்டத்தினால் வைகை நதிக்கு தண்ணீர் வருவதற்கு ஏது இல்லாமல் போய்விட்டது. இந்த வைகை நதி பாசனத்தில் ஏற்கெனவே மூன்று லட்சம் ஏகர் நிலங்கள் இருக்கின்றன. அவைகள் பாதிக்கப்பட்டுவிட்டன. பாதிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை சர்க்கார் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக கோர்ட்டுகளில் பல வழக்குகள் நடந்து கொண்டிருந்தாலும், இந்த விஷயத்தைப்பற்றி அப்பொழுதே சர்க்காரிடம் கேட்பதற்கு இந்த மூன்று லட்சம் ஏகருக்குச் சொந்தமான மக்கள் சக்தியற்றவர்களாக இருந்த போதிலும், தர்மம், நியாயம் என்ற அடிப்படையில் அவைகளை திரும்பவும் ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆங்கிலேயர்கள் 100 வருஷ காலம் ஆண்ட காலத்தில் மூன்று பெரிய திட்டங்களைத் தான் நிறை வேற்ற முடிந்தது. அவை பெரியாறு, மேட்டூர், பாபநாசம் என்னும் திட்டங்கள். ஆனால் மக்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு 10 வருஷ காலத்தில் ஒன்பது திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 190,000 ஏகர் நிலங்கள் விவசாயத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

நடைமுறையில் வந்து கொண்டிருக்கும் வைகை திட்டம் 20,000 ஏகர்களுக்கு பயன்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் 10,000 ஏகரா திருமங்கலம் தாலுகாவில் உள்ள நிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மீதி உள்ள 10,000 ஏகருக்கு உள்ள தண்ணீரை வைகை நதியின் வழியாக விடுவார்களேயானால் பல ஆயிரக்கணக்கான, பல லட்சக்கணக்கான, ஏகர் நிலங்களுககு பயன்படும். வாய்க்கால்களை வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், அதை வெட்டி அந்த செலவை ஜனங்களிடமிருந்து வசூல் செய்ய ஏற்பாடு செய்ய முடியும். இந்தப் பிரதேசத்தில் உள்ள நிலங்கள் மிகவும் வளப்பம் உள்ளவை. மண் வண்டல்கள் அதிகம் நிறைந்தவை. அங்கு தண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கும் போதே அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு வைகை ஆற்றில் 2 அல்லது 3 கெஜம் தோண்டி கண்மாயில் தண்ணீரை நிரப்பி விவசாயம் செய்கின்றனர். இப்படி விவசாயம் செய்யும்போது அவர்களுக்கு ஏகருக்கு 20 அல்லது 30 மூட்டை நெல் கிடைக்கிறது. இந்த விவசாயிகளுக்கு தண்ணீர் வசதி சரியாக இருக்குமானால் 30 மூட்டைகள் அல்லது 40 மூட்டைகள் உற்பத்தி செய்ய ஹேது ஏற்படும்.

பெரியார் ஏரியைப் பொறுத்த வரை அங்கு ஒரு தனி என்ஜினியரிங் இலாகா இருப்பதன் காரணமாக புயல் வந்த போது எந்த விதமான பாதகமும் ஏற்படவில்லை. வைகை ஆற்றைப் பொறுத்த வரை திட்டவட்டமாக கண்டிரோல் இல்லாதபடியால் பல கண்மாய்கள் உடைந்துபோயின. அதனால் விவசாயத்தில் பிரதிகூலங்கள் ஏற்பட்டன. புயலால் இந்த கண்மாய்கள் உடையவில்லை. தண்ணீர் அதிகமாக தேங்கிவிட்டதின் காரணமாக இந்த கண்மாய்கள் உடைந்து போயின. அங்கு விவசாயம் சரிவர நடைபெறுவதற்கு ராமனுதபுரம் டிவிஷனிலிருக்கும் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டுக்கு திட்டவட்டமாக அதிகாரங்களைக் கொடுத்து வைகை பாசனத்திற்கு ஏற்றபடி கண்மாய்களையும், வாய்க்கால்களையும் ஏற்படுத்த திட்டங்கள்



வகுக்க வேண்டும். அந்த வாய்க்கால்களின் மூலமாக தண்ணீரை சரிவர ஒழுங்குபடுத்தி விடுவதற்கு "சலுயிஸ்கள்" போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆகவே இப்பொழுதுள்ள மக்கள் இந்த சர்க்காருக்கு மிக மிக கடமைப் 11-30 a.m.
பட்டிருக்கிறார்கள். அப்படிக் கடமைப்பட்ட போதிலும் இந்த சர்க்காருக்கு அதிகப்படியாக நன்றி செலுத்துகிறார்கள். அப்படி தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மகிழ்ச்சியும் அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட பெரியாறு திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு விட்டது. அந்த பெரியாறு திட்டத்தை முதலில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னது ஆங்கிலேயர்கள் அல்ல. அப்பொழுது ராமனுதபுரம் ராஜாவாக இருந்தவர் தான் அந்த திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லி வந்தார். பெரியாற்றிலிருந்து வரக்கூடிய தண்ணீரை வேறு வழியாகத் திருப்பி வைகையாற்றில் விட்டு பக்கங்களிலுள்ள குளங்கள் கண்மாய்களுக்கு விட்டு அவைகளை நிரப்பிக் கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்த வேண்டும். அதற்கு என்று இப்பொழுது தனியான ஒரு டிபார்ட்மெண்டை அமைத்திருக்கிறார்கள். மதுரையில் ராமனுதபுரத்திற்கு என்று தனியாக ஒரு டிபார்ட்மெண்டை அமைத்திருக்கிறார்கள். அதை ஒரு பெரிய ஏரியாவாக அமைத்து அதற்கு தனியாக இலாகாவை வைத்திருக்கிறார்கள். விவசாய விஸ்தரிப்பை அதன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கிறார்கள். அதன் மூலமாக அங்குள்ள பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். இன்னும் ஒரு நிமிஷம் கொடுத்தால் இன்னும் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். ஒரு பத்து ஏக்கருக்கு என்று ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

* **Sri M. MUNI REDDI**: Mr. Deputy Speaker, I rise to support the Cut Motion under discussion. Before I offer my suggestions with regard to Minor Irrigation, I wish to state that my hon. Friend Sri Appavoo Pillai has spoken at length about the irrigation needs in Hosur taluk. Many a time, these needs have been stated, and restated on the floor of the House. We will be submitting a memorandum also very soon. We do not want that the Government should spend the money drawn from other areas. In Hosur taluk we have 390 square miles of forests and they fetch not less than Rs. 7 to 8 lakhs of rupees income every year. Even if one-fourth of the amount is spent on this backward area, much of the complaints could have been avoided, and the area improved.

As for the irrigation needs of our taluk, besides the points referred to by Sri Appavoo Pillai, I wish to bring one or two points to the notice of the Government. The Hon. Minister was pleased to visit Vepanapalli in Krishnagiri taluk and a memorandum was presented to him with regard to the repair of Thimmama cheruvu. Representations on this subject have been made on the floor of the House as well as outside, for the past 8 or 9 years. So far, no action has been taken. I hope the Hon. Minister will pay due attention to the backward areas and specially the areas I represented in 1952 to 1956 and now. We would like the Government to pay more attention to the backward areas. It has been stated that in respect of the irrigation schemes, if contributions were forthcoming the Government would consider the question of undertaking them

[Sri M. Muni Reddi] [26th March 1958

Whenever we raise this question in the Irrigation Conferences, or during the budget discussion or when we speak on the Demands, the same reply is usually given. I would like to submit that the Government have spent some amounts on Minor Irrigation Schemes year after year. But, we have no idea as to how and when they will be completed and how many are completed. In this connection I wish to point out that so far as Minor Irrigation Schemes are concerned, from 1946 to 1951, a sum of about Rs. 2,311 lakhs has been spent. We do not know how many of these schemes have been completed for the amount earmarked and spent. In the subsequent year, a sum of Rs. 95 lakhs was provided and in 1954 or so, the Central Government were pleased to sanction a sum of Rs. 94 lakhs or so for the improvement of Minor Irrigation Schemes, and specially renovation of tanks, etc. To this day, we have not heard anything in this regard on the budget. It is, however, stated that a certain amount has been earmarked for the de-silting of tanks. More than this, we do not know anything.

I wish to offer a few suggestions with regard to the minor irrigation schemes, repair and renovation of tanks, etc. In this State, we have 386 lakhs of acres out of which 48 lakhs of acres are under irrigation. They are irrigated by major projects, small anicuts and tanks and wells. Out of the 48 lakhs, more than 22 lakhs of acres are under cultivation by tanks only. In the composite State, we had 35,000 tanks and now it is stated that we have about 22,000 tanks and out of these 48 lakhs of acres, more than 22 lakhs of acres are under irrigation by tanks only. In this connection, I would request the Hon. Minister to devote more attention to renovation of tanks. Only a sum of Rs. 10 lakhs has been set apart as per the budget speech of the Hon. Finance Minister for the improvement and renovation of tanks or de-silting of tanks. Well, I wonder it will take 500 to 600 years to achieve any substantial results in this regard at this rate. Tanks are the real wealth of our State. As for our food requirements, the Hon. Finance Minister has stated that we required about 48 lakh tons per year at the rate of one pound per head. There is the increase of one tenth population every year. We have to feed 30 lakhs of people which means that we have got to produce 1,500 to 1,700 tons more every year. How are we going to achieve this? For the past so many years, we have been stating that the Government must take up in right earnest the work of renovating the tanks. If only they could improve the tanks, we could get a better yield. Sri Ananda Rao, the Chief Engineer is repeatedly saying that the Government will take up improvement of tanks as Major Irrigation resources in our State have more or less been exhausted. But the work so far done is most unsatisfactory. The Government and the Chief Engineer must duly consider the suggestions made from time to time. The Mysore Government is using the bulldozers to remove the silt in tanks. I have been representing this for the last 7 years. The Mysore Government is successfully solving this.



26th March 1958] [Sri M. Muni Reddi]

Apart from this I have been suggesting various schemes such as construction of bunds to obstruct silt getting into tanks when floods rush in the winters and clearing of the silt and cementing the supply channels to regulate water-supply. If only we could improve these tanks, we would be able to tide over the food crisis to a certain extent. I even went to the extent of suggesting on the floor of the House at one time that even cranes could be used to remove the silt from the tanks. In the year 1949 the Tanks Improvement Act was passed. From that year onwards, we see that a sum of Rs. 80 to 90 lakhs has been earmarked every year. I take this opportunity to thank the Government for constituting the Electricity Board. I would request the Government to consider in all earnestness, the question of constituting an Irrigation Board. There may not be any difficulty in regard to this. There are now so many tanks under the supervision of the Irrigation Department and the Revenue Department. There are also major tanks under the supervision of the Public Works Department. So much so, there is lot of confusion and delay is caused for improving tanks. So in this connection, the suggestion I want to make is that we must form an Irrigation Board. This has also been suggested in one of the cut motions, cut motion No. 126. In that cut motion it has been suggested to discuss the imperative need for establishing a separate unit in the Public Works Department in every district to concentrate on the investigation and execution of Minor Irrigation Schemes and on the de-silting or repairing of the existing ones. But I suggest that we must form a Board. There are at present a host of officials in this Department. In 1950 in the composite State there were two Chief Engineers, ten Superintending Engineers, 75 Executive Engineers, 304 Assistant Engineers and 990 supervisors. So much so the number of officers and staff is also increasing in view of the various schemes at hand. If the Irrigation Department is to be consolidated and is to be well-organized, a Board as suggested must be constituted. Then the public may also have opportunities to offer valuable criticisms on the resources available and the Government also can investigate all the available resources.

11-40 a.m.

The second suggestion that I want to make is with regard to the construction of bunds obstructing silt coming into the tanks. During the winter time, lot of silt is brought into the tank by floods in winter. So much so, most of the tanks become silted up. If the Government spend about 7 or 8 lakhs in this respect, they will be only giving a helping hand to the ryots.

Then there is also another suggestion, namely, cementing of canals. There is a channel or Roja kalvai nearly one mile from sluice to the tail end. If the sluice is fully opened and close all the outlets, the entire water do not reach the tail end. There is percolation of water. The Engineer who came to me, examined this and said that this is not feasible. Immediately I spoke on the

floor of this House, some friend of mine who is working in the Thungabhadra Dam wrote that they too have worked out a scheme and said that it is a very profitable one and lot of water can be saved by this kind of device.

Sir, I want to make another suggestion for the construction of what is called 'Community Well', that is a tank within a tank. In a memorandum I have sent this proposal to the Department. I have even sent it to the Secretary and to the Chief Engineer also. So far no action has been taken, nor I have been informed. So much so, I hope to submit a memorandum with a detailed note as to the suggestions I have made now. With regard to the community well, I submit that it is only exploitation of sub-soil or underground water from tank. Wherever this is possible, we must construct such 'Community Wells'. Because in tanks due to uneven rainfall there is the scarcity of water for wet crops. The ryots will have to raise only dry crops or leave the lands shallow. By spending about Rs. 40,000 we can construct such a community well in places and specially in tanks where there is good sub-soil water.

* **SRI M. A. MUTHIAH CHETTIAR** : கனம் தலைவர் அவர்களே, நீர்பாசன வசதிகள் விஷயமாக இப்பொழுது விவாதம் நடைப்பெற்று வருகிறது. இது சம்பந்தமாக முதன்முதலாக சென்னை அரசாங்கத்தையும், இது விஷயமாக கவனித்து வரும் இன்ஜினீயர்களையும், இந்த இலாகா சம்பந்தப்பட்ட செக்ரடேரியட்டையும் நாம் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாகக் குறிப்பிடும்போது தமிழ் நாட்டில் இனிமேல் பெரிய நீர்ப்பாசன திட்டங்களை அமைப்பதற்கு இடமே கிடையாது என்று கூட சொல்லப்படுகிறது. இருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாவற்றையும் எடுத்து நிறைவேற்றப்பட்டு விட்டன என்றும் சொல்லப்படுகிறது. இனிமேல் பெரிய திட்டங்கள் கிடையாது என்றும் சொல்லப்படுகிறது. நாம் சென்ற இரண்டு வருஷங்களாகப் பேசிக் கொண்டு வருகிறோம். முதல் ஐந்தாண்டு திட்டம் வந்த போது சொன்னார்கள், ப்ளானிங் கமிஷன் சிபாரிசு செய்யும் பொது திட்டங்கள் எல்லாவற்றையும் சென்னை சர்க்கார் முன் கூட்டியே யோசித்து ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. ப்ளானிங் கமிஷன் சொல்வதற்கு முன்னதாகவே சென்னை அரசாங்கம் இந்த திட்டங்களை யெல்லாம் யோசித்து ஆரம்பித்திருப்பதைப் பார்த்தால் அது பெருமைப்படக்கூடிய விஷயம் தான். நமக்கு அப்படிப்பட்ட ஒரு பெருமை கிடைத்தது என்று கூட நாம் எண்ணிக்கொள்ளலாம். ஒரு விஷயத்தைப் பற்றி நான் ஐந்தாறு வருஷங்களாகவே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். நமக்குக் கொடுக்கப்படும் பணம் போதாது என்றும் இன்னும் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நான் ஐந்தாறு வருஷங்களாகவே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். நமக்கு 25 கோடி, 30 கோடி, என்று தான் கொடுக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. அத்துடன் முன்னால் ஒரு ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அந்த அளவில் நமக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும், அதாவது 125 கோடி அல்லது 130 கோடி நமக்குக் கொடுக்க வேண்டும் என்றும் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். மேட்டூர் அணைக்கட்டு போன்ற பெரிய அணைக்கட்டுகள் கட்ட வேண்டியதாக இல்ல விட்டாலும் சிறிய திட்டங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். சிறு திட்டங்கள் என்றால்



லோயர் இரிகேஷன் போன்ற கண்மாய் மராமத்து, முதலியவைகள் அல்ல. இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாயில் முடிக்க கூடிய பல சிறிய திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்து நடத்த வேண்டும். பல தாலூகாக்களில் இப்படிப்பட்ட சிறிய திட்டங்கள் இருக்கின்றன. பல அங்கத்தினர்கள் அவரவர்களுடைய தாலூகாவில் இருக்கக் கூடிய திட்டங்களைப்பற்றி யெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சென்ற வருஷங்களில் நான் பேசும்போது அப்படிப்பட்ட தனிப்பட்ட முறையில் என்னுடைய தொகுதியைப்பற்றி சொல்வது இல்லை. பொதுவாகத்தான் சொல்லிக் கொண்டு வந்தேன். அதன் காரணமாக நான் பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். குறிப்பிட்டு சொல்லாததால்தான் நான் பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். பொதுவாகச் சொன்னால் ஒன்றும் பிசகு இல்லை. அரசாங்கத்திற்கும், செக்ரடேரியட்டுக்கும் இஞ்ஜினியர்களுக்கும் தெரியாத திட்டங்கள் நமக்கு மட்டும் தெரிந்து விட முடியாது. நாம் சொல்வது என்றால் அதையே திரும்பச் சொல்வதாகத்தான் இருக்கும். பரம்பிக்குளம் திட்டம் இருக்கிறது, அது சுமார் 36 கோடி ரூபாயில் நடக்கப் போகிறது என்று சொல்லுகிறார்கள். கேரள சர்க்காருடன் பஞ்சாயத்து செய்து அதன் மூலம் அனுகூலம் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைக் கண்டு நாம் கொஞ்சம் திருப்திப்படலாம். அத்துடன் குந்தா திட்டம் இருக்கிறது. அதை பெரும்பாலும் மின்சாரத்திற்காக வைத்துக்கொள்ளலாம். ராமநாதபுரம் ராஜா அவர்கள் மந்திரியாக இருந்த ஐந்து வருஷ காலத்தில் அவரிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஸ்கீம்களைப் பற்றி சொல்லப்பட்டது. அவைகளைப்பற்றி கவனிப்பதாகச் சொன்னார்கள். பொதுவாகப் பேசும்போது தனிப்பட்டு பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். (மிஸ்டர் ஸ்பீக்கர் தலைமை வகித்தார்). கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட விவாதத்தில் குறிப்பிட்ட தாலூகாவைப்பற்றி பேசிப் பழக்கம் எனக்கு இல்லை. பொதுவாகத்தான் பேசி பழக்கம். பொதுவாகப் பார்க்கும் அந்தந்தப் பகுதியிலிருந்து வரக் கூடிய அங்கத்தினர்கள் தங்களுடைய பகுதியிலுள்ள திட்டங்களைப்பற்றி தான் சொல்லுவார்கள். குறிப்பிட்ட ஸ்கீம்களைப்பற்றி சொன்னால் ஒரு விதமான தவறும் இல்லை. நான் எல்லா இடங்களுக்கும் போனது கிடையாது. அதனால்தான் குறிப்பாக பேசுவது இல்லை. அவரவர்கள் தங்களுடைய தொகுதிகளில் இருப்பதைத் தெரிந்திருப்பதால் தான் அவர்கள் குறிப்பாகச் சொல்லுகிறார்கள். இலாகாவில் வேலை செய்யும் அதிகாரிகளுக்குத் தெரியாத ஸ்கீம்கள் கிடையாது. அவர்களுக்குத் தெரியாத புதி ஸ்கீம்கள் ஒன்றும் இல்லை. நான் ஒன்றும் சொல்லவில்லை என்று சொல்வதால் குறிப்பாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. உண்மையைச் சொல்லுகிறேன். உண்மையைச் சொன்னால் பிசகு ஒன்றும் இல்லை. செங்கம் தாலூகாவில் சில திட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். பொதுவாக நாம் சொல்ல வேண்டியது என்னவென்றால் தமிழ் நாட்டிற்கு அதிகப்படியான பணம் வரவேண்டும் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் தான் நாம் அரசாங்கத்திற்கு பலமாக இருப்பதாகத் தோன்றும். அப்படிச் சொல்லித்தான் அதிகப்படியான பணம் வருவதற்கு வழி தேடிக்கொள்ள வேண்டும். இதற்கு முன்னதாக நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட் தயாரித்திருப்பதைப் பார்த்தால் 25 கோடி ரூபாய் என்றுதான் இருக்கும். எந்த ஸ்கீமை எடுத்துக் கொண்டாலும் அதற்கு 25 கோடி ரூபாய் என்று தான் இருக்கும். இந்த 25 என்பது எந்த அளவில் வந்தது என்பது புரியவில்லை. அந்த 25-க்கு முன்னால் ஒன்றைச் சேர்த்துக் கொண்டு ஏன் 125 என்று போடக்கூடாது என்று கேட்கிறேன். யு.பி.க்கு 750 பம்பு செட்டுகள் கொடுக்கிறார்கள். என்றால் நமக்கு 75 செட்டுகள் தான் கொடுக்கிறார்கள். ஒரு பூஜ்யம்தான் வித்யாசம். (சிரிப்பு). புதிய திட்டங்களைப்பற்றி இங்கே சொல்ல வேண்டியது இல்லை. சாதாரணமாக செக்ரடேரியட்டுக்கோ, அல்லது இஞ்ஜினியருக்கோ, மின்சார போர்டு சேர்மனுக்கோ, சீப் இஞ்ஜினியருக்கோ ஒரு கடிதம் எழுதினால் போதும். அதை வைத்துக்கொண்டே அவர்கள்

நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள். இங்கே பேசுவதால் மட்டும் கவனம் எடுத்துக் கொள்ளுவார்கள் என்பது அல்ல. இங்கே பேசும் போதெல்லாம் மந்திரி இருப்பார் என்பது இல்லை. பட்ஜெட் பொது விவாதம் நடக்கும்போது நிதி மந்திரிதான் இருப்பார். இப்படிப்பட்ட டிமாண்ட் சம்பந்தப்பட்ட விவாதம் நடக்கும்போது அது சம்பந்தப்பட்ட மந்திரிதான் இருப்பார். இதைப்பற்றி எவ்வளவோ தடவை இந்த சபையில் சொல்லியும், அதாவது எல்லா மந்திரிகளும் இருக்க வெண்டும் என்று எவ்வளவோ சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. டில்லியில்கூட இப்படிப்பட்ட புகார் இருப்பதாகத் தெரிய வருகிறது. எந்த விவாதம் நடக்கிறதோ அது சம்பந்தப்பட்ட மந்திரிதான் இருக்கிறார். பொது விவாதத்தில் கடைசியாக பேசுகிறவருக்கு பதில் சொல்லிவிட்டு உட்கார்ந்துகொண்டு விடுவார். கடைசியில் மங்களம் பாடுவதுபோல் இருக்குமே தவிர எல்லாவற்றிற்கும் பதில் சொல்வதாக இருக்காது. இதையெல்லாம் மந்திரிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது மராமத்து இலாகா சம்பந்தமாக கனம் கக்கன் இருக்கிறார் அவர் பதில் சொல்லப்போகிறார். அவருக்கு எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியாது. ஆகவே நாம் சொல்வதெல்லாம் அப்படியே நோட்டில் இருக்கும். பொது விவாதத்தில் நாம் சிரமப்பட்டு டயம் வாங்கி பேசும்போது சில திட்டங்களைப்பற்றி சொன்னால் அவைகள் எல்லாம் அப்படியேதான் இருக்கும். அப்படி இல்லாமல் மந்திரிகள் அதை கவனிக்கிறேன் என்று சொன்னாலும் பரவாயில்லை. இங்கு பேசுவதையெல்லாம் சுருக்கெழுத்தில் எடுத்துக்கொண்டு அதை அந்தந்த டிபார்ட்மெண்டுகளுக்கு அனுப்புகிறார்கள். அங்கே அவைகளின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள். நாம் சொல்லும் யோசனைகளையெல்லாம் யோசிக்கிறோம் அல்லது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று சொன்னால் கூட போதும். நாம் சொல்வதெல்லாம் டிபார்ட்மெண்டில் இருக்கும். பைல் ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்தில் பைசல் செய்யட்டும் அதனால் பரவாய் இல்லை. உண்டு அல்லது இல்லை என்றாவது பதில் சொல்ல வேண்டும். ஒரு விஷயத்தை 5, 6 வருஷங்களாக சொல்லிக் கொண்டு வருகிறேன். ராமநாதபுரம் ராஜா அவர்கள் மந்திரியாக இருக்கும் பொழுதே சொல்லியிருக்கிறேன். இப்பொழுதுதாவது அதை மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். இது டிபார்ட்டுமெண்டுக்கு தெரிந்த விஷயம் தான். மதுரையிலிருந்து திருச்சிக்குப் போகும் வழியிலே கொட்டாம்பட்டிக்கு பக்கத்தில் ஒரு அணை கட்டவேண்டுமென்று சொன்னேன். அதற்கு $1\frac{1}{2}$ கோடி அல்லது 2 கோடி ரூபாய் செலவாகும். அப்பொழுது "காஜ்" எடுக்க முடியாது, மழை இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது 5, 6 வருஷமாக மழை பெய்திருக்கிறது. இந்த ஸ்கீம் நிறைவேற்றப்பட்டால் 20,000 ஏகர்களுக்கு சௌகரியமாக இருக்கும். இதை ராமநாதபுரம் ராஜா அவர்கள் மந்திரியாக இருக்கும் பொழுதே கவனிப்பதாக உறுதி சொன்னார்கள். வரப்போகிற வருஷத்தில் இதற்காக ஒரு லட்ச ரூபாயாவது ஒதுக்கி "இன்வெஸ்டிகேஷன்" செய்யட்டும்.

இன்னும் ஒரு பெரிய விஷயம். குமாரசுவாமி ராஜா அவர்களுக்குத் தெரியும். ராஜபாளையத்திற்கு மேற்கே போய் விழும் தண்ணீரை அணை போட்டு ஒரு டன்னல் கட்டி இந்தப் பக்கம் திருப்ப வேண்டுமென்று சொன்னேன். வைகையில் தண்ணீர் ஜாஸ்தியாக இல்லை. அதனால் அதை அந்தப்பக்கம் கொண்டு போவதற்கு வசதி இல்லை. திருமங்கலம் வரையில் தான் கொண்டு போயிருக்கிறார்கள். இந்த ஸ்கீமை நிறைவேற்றினால், ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு உதவியாக இருக்கும். "டீடைல்ஸ்" நமக்குத் தெரிவதில்லை. இந்த ஸ்கீம்களையெல்லாம் கவனித்து மந்திரி அவர்கள் ஒரு அறிக்கை விடவேண்டும். அல்லது இவைகளையெல்லாம் கவனித்து ரிஸல்டு என்ன ஆயிற்று என்பதை இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசும்போதாவது மந்திரி அவர்கள் சொல்ல வேண்டும். இம்மாதிரி திட்டங்களையெல்லாம் நிறைவேற்றினால் எவ்



வளவோ சௌகரியம் ஏற்படும். இன்னும் சொல்லுவது என்றால் எத்தனையோ ஸ்கீம்கள் இருக்கின்றன. ரூபாய் ஒரு கோடி, இரண்டு கோடி, மூன்று கோடிக்கு ஸ்கீம்கள் போட்டு மொத்தமாக கூட்டிப்பார்த்தால் ரூபாய் 40, 50 கோடி ஆகிவிடுகிறது என்று சொல்லப்படுகிறது. டெல்லியிலிருந்து இன்னும் அதிகமாக பணம் கேட்டு வாங்கவேண்டும். டெல்லியிலும் பணத்திற்கு முடையாக இருக்கிறது, அந்த கவர்ன்மெண்டை "எம்பராஸ்" செய்யவேண்டாம் என்று நினைக்கக்கூடாது. அம்மாதிரி மற்ற ராஜ்யங்களில் இருப்பதாக தோன்றவில்லை. எனக்கு வருகிற தகவல்படி அவர்கள் அதிகமாக சத்தம் போட்டு பணம் வாங்குகிறார்கள். ஆகவே, நாமும் அதிகமாக சத்தம் போட்டு அதிக பணம் வாங்கவேண்டும். நாம் சண்டைபோட்டு டெல்லியிலிருந்து அதிகமாக பணம் வாங்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தப்படியாக காவேரி ஸ்கீம் பற்றி சொல்ல விரும்புகிறேன். 1922–23-ல் ஸ்ரீ ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் மந்திரியாக இருந்த காலத்தில் காவேரி தண்ணீரை புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடாகியது. திருச்சிக்கு 6–வது மைல் என்ஜினியர் தங்குவதற்காக முஸாபரி பங்களா கூட கட்டப்பட்டுவிட்டது. ஆனால் அந்தக்காலத்தில் இருந்தவர்கள் புதுக்கோட்டையில் வாட்டர் ரேட் கூடிவிடும் என்று ஆட்சேபித்து அதை நிறுத்தி விட்டார்கள். கலிபுல்லா இருக்கும்பொழுது நான் 3 கோடி ரூபாய் கடன் ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்று சொன்னேன். அப்பொழுது அட்மினிஸ்டிரேடராக இருந்த டாடன்ஹாம் அவர்கள் தனக்கு வயது ஆகிவிட்டது, செய்ய முடியாது என்று சொல்லி விட்டார். குளித்தலைக்கு அருகில் திருச்சி பரமசிவன் பிள்ளை ஒரு கெனால் போடுவதற்கு ஏற்பாடு செய்தார். காவேரியில் 4 வருஷங்களில் ஒரு வருஷம்தான் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. ஆகவே 4 வருஷங்களில் 3 வருஷங்களிலாவது தண்ணீர் கிடைக்கும். திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக தொண்டி வரையில் ஒரு கெனால் கட்ட வேண்டும். கொட்டாம்பட்டியிலும் ஒரு கெனால் கட்டவேண்டும். அது மந்திரி அவர்கள் இருக்கும் ஊருக்கு பக்கத்தில் இருக்கிறது. இம்மாதிரி ஸ்கீம்களையெல்லாம் இன்வெஸ்டிகேட் செய்வதற்காவது முதலில் ஏற்பாடு செய்யவேண்டும். ரூபாய் 2, 3 கோடிக்கு ஸ்கீம்கள் போட்டு மொத்தத்தில் ரூபாய் 50 கோடிக்கு ஆகிவிட்டது என்று சொல்லிவிட்டால் போதாது. இன்னும் அதிகமான ஸ்கீம்கள் போடவேண்டும். நம் நாட்டில் மின்சார வசதி அதிகமாக செய்யப்பட்டிருக்கிறது. அப்படி செய்தும் புண்ணியம் இல்லை. மின்சார வசதி. . . .

**Mr. SPEAKER** : காலையில் அங்கத்தினர்கள் தயவுசெய்து இந்த விவாதத்தில் 10 நிமிஷங்களுக்கு மேல் பேசக்கூடாது என்று சொன்னேன். காலையில் இங்கே இல்லாதபடியால் அங்கத்தினர் அவர்களுக்கு அது தெரியவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே, அவர் சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன்.

**Sri M. A. MUTHIAH CHETTIAR** : சபாநாயகருக்கு வந்தனோபசாரம் சொல்லவேண்டியதுதான் பாக்கி. இதோ முடித்துக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : வந்தனோபசாரம் சொல்லாவிட்டால் பரவாயில்லை.

**Sri M. A. MUTHIAH CHETTIAR** : நான் மீண்டும் சொல்ல விரும்புவது என்னவென்றால், அங்கத்தினர்கள் எல்லோரும் மந்திரிகளுக்கு உதவி புரிந்து அதிகமான பணத்தை டெல்லியிலிருந்து கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டும். அப்படி அதிகமான பணத்தை நாம் பெறமுடிந்தால், நம்முடைய என்ஜினீயர்களின் திறமையைக் கொண்டு பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதில் சந்தேகம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**Mr. SPEAKER** : காலையில் கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு ½ மணி நேரம் போதும் என்று சொன்னார்கள். இப்பொழுது என்னிடம் 1 மணி நேரம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இன்னும் ஒரு அங்கத்தினருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு, அதற்கு பிற்பாடு கட்சித் தலைவர்களை கூப்பிடுகிறேன்.

**Sri K. G. PALANISWAMY GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நீர்ப்பாசன மான்யத்தை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். இந்த மான்யத்திலே பரம்பிகுளம் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சொல்லப்பட்டிருப்பதை நான் முழு மனதுடன் ஆதரித்து, என்னுடைய தொகுதி எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி மாத்திரம் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தாராபுரம் தாலுகாவை பொறுத்தமட்டில், காங்கயம் பிரதேசம் பரம்பரையான பஞ்சப் பிரதேசம். காங்கயம் வட்டாரத்தைப் பற்றி நமது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கோயம்புத்தூர் கலெக்டரிடமிருந்து ரிபோர்டு வரவழைத்தால் நன்கு தெரியும். எவ்வளவு காலம் இந்தப் பிரதேசத்திலே ரெவின்யூ கலெக்‌ஷன் செய்யாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள், எவ்வளவு தடவைகள் "பாமின் ரிலீப்" செய்திருக்கிறார்கள், எவ்வளவு பணம் அதற்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் ரிபோர்டிலிருந்து தெரியும். காங்கயம்
11-50 a.m. வட்டாரத்திலுள்ள மக்கள் பரம்பிகுளத் திட்டம் தங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று நினைக்கிறார்கள். இந்தத் தொகுதி மக்கள் பரம்பிக்குளத் திட்டம் ஒன்று தான் தங்களுக்கு பிரயோஜனப்படும், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால், தாங்கள் வாழமுடியாது என்ற உறுதியுடன் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பஞ்சப் பிரதேசமாக இருக்கக்கூடிய எங்கள் தாலூகாவிற்கு முழுக்க முழுக்க பிரயோஜனப்படுத்தவேண்டும். காங்கயம் பிரதேசத்தில் வெள்ளை கோயில், கொடுங்குழி முதலிய இடங்களிலுள்ள மக்கள் படும் அல்லல் சொல்ல முடியாது. பத்து வருஷ காலமாக இந்த இடங்கள் பஞ்சப் பிரதேசமாக இருந்துகொண்டுவருகிறது. பல தடவைகள் இந்தப் பிரதேசத்தில் அமைச்சர் அவர்கள் லோன் வசூல் செய்வதையும், கிஸ்தி வசூல் செய்வதையும் ஒத்திவைத்திருக்கிறார்கள். இதை இப்பொழுது கண்டிப்பாக வசூல் செய்யும்பொழுது, விவசாயிகள் படும் கஷ்டம் சொல்ல முடியாது. அந்த நிலைமையில் இருக்கும்பொழுது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பரம்பிக்குளத் திட்டத்தை நமது சர்க்கார் அவசியம் நிறைவேற்றவேண்டும். சீப் என்ஜினியர் அவர்களும் இதை நன்றாக ஆராய்ந்து அமைச்சர் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் சிறு நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எங்கள் தொகுதியில் சிறு சிறு கரைகள், ஓடைகள் இருக்கின்றன. ஒரே ஓடைக்கு பல பெயர்கள் இருக்கும். நிழலை வட்டமலை, உத்தமபாளையம் இப்படி பல பெயர்கள் இருக்கும். இதில் 10, 12 அயக்கட்டுகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் தூர்ந்துபோய் இருக்கின்றன. சிறு நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் இவைகளையெல்லாம் செப்பனிட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பரிசீலித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஆயிரக்கணக்கான கிணறுகளிலிருந்து பாசன வசதிக்கு அங்கே வகை செய்யலாம் இந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே கிணறுகள் வெட்டுவதற்கு சர்க்கார் 500 ரூபாய், 700 ரூபாய் மானியம் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகள் ஏராளமான பேர் மானியம் வாங்கி கிணறுகள் வெட்டினார்கள். ஆனால், 40-50 அடி வெட்டியும் அங்கே தண்ணீரைக் காணமுடியவில்லை. அந்தப் பணத்தையெல்லாம் கடனாக பாவித்து திரும்பப்பெற வேண்டுமென்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்கள். இதுபற்றி கலெக்டரிடமும் அமைச்சரிடமும் நான் சொல்லியிருக்கிறேன். எங்கள் பகுதி பஞ்சப் பிரதேசமாக இருப்ப





தால் அந்தப் பணத்தையெல்லாம் மானியமாகவே பாவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தாராபுரத்துடன் இணைந்திருக்கும் பழனி தாலூகாவும் நிரந்தர பஞ்சப் பிரதேசமாக இருப்பதாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ லக்ஷ்மிபதிராஜ் சொன்னார். எங்கள் தாலூகாவுடன் இணைந்திருக்கும் தாலூக்காக்களுக்கும் கஷ்டங்கள் இருக்கின்றன. பரம்பிக்குளத் தண்ணீரை பூரணமாக நாம் பயன்படுத்தக்கூடியவகையில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மறுபடியும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ் பவானி ஆயக்கட்டிலிருந்து எங்கள் தாலூகாவில் 20,000 ஏக்கர் வரையில் தண்ணீர் பாய்கிறது. அங்கே நிறையத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆயக்கட்டுதாரர்களின் கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சலாம் என்றால், அதற்கும் மின்சார வசதி கிடைப்பதில்லை. நாங்கள் வாய்க்காலின் கடைக் கோடியில் இருக்கிறோம். அங்கே சில கிராமங்களுக்குத் தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும். 200 கிணறுகளுக்கு மின்சாரம் கொடுத்தார்கள். அப்போது கோபி தாலூகாவிற்குக் கொடுக்கப்பட்டது. அப்போது தாராபுரத்தில் ஒரு கிணற்றுக்குக்கூடக் கொடுக்கப்படவில்லை. கீழ் பவானி ஆயக்கட்டிலுள்ள எல்லா கிணறுகளுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாப் பிரதேசமாயுள்ள எங்கள் தாலூக்காவுக்கு பரம்பிக்குளம் தண்ணீரை நாம் பூரணமாகப் பயன்படுத்தக்கூடியவகையில் பரம்பிக்குளத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்காரை மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன். பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பமளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, to-day it was unanimously agreed that all members would be given only ten minutes' time to speak on the demand and the Minister would take only 45 minutes to reply to the debate. But now I find the Hon. Minister wants an hour to reply to the debate. This would considerably cut short the time available to Members on both sides of the House who are anxious to speak on the demand. I consulted the Hon. Minister and he has no objection to the House sitting till 2 o'clock. I suggest that if the Hon. Speaker has no objection we can sit till 2 o'clock.

**The Hon. Sri P. KAKKAN** : எதிர்க்கட்சி தலைவர்கள் அவ்வாறு கேட்பதால் நான் ஒத்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : ஆறு கனம் அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த ஆறு கனம் அங்கத்தினர்களும் ஒவ்வொருவரும் 5 நிமிஷங்கள் தான் பேசமுடியும். அதற்குமேல் பேசவேண்டுமானால், ஒரே ஒரு வழி இருக்கிறது. அதாவது, கடிகாரத்தை நிறுத்திவிட்டால் எல்லோரும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். (சிரிப்பு). ஆறு கனம் அங்கத்தினர்களை பேச அனுமதிக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் 5 நிமிஷங்களுக்குமேல் எடுத்துக்கொள்ளக்கூடாது. I will give five minutes to each Speaker and call six more hon. Members to speak one from the D.M.K. one from among the Independents and four from the Congress benches.

**Sri T. IRUSAPPAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் கோரும் நீர்ப்பாசன மானியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன். என் தொகுதி நீர்வளம் நிலவளம் நிறைந்த தொகுதி. என் மாவட்டம் சேலம். அந்த மாவட்டத்தில் மேட்டூர் நதிகளும் ஏரிகளும் இருந்தாலும் அவைகளால் அந்த மாவட்டம் பயனடைய முடியவில்லை. எங்களைப்பொறுத்தவரை, அந்த மாவட்ட நதி

கள் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்று சொல்வதற்குரிய நிலையில் இருக்கின்றன. அங்கே நிறைவேற்றுவதற்கேற்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையாவது சீக்கிரம் நிறைவேற்றி அங்குள்ள விவசாய மக்களுக்கு உதவ வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். என் வட்டாரமாகிய ஆத்தூர் தாலூகாவில் விவசாயத்திற்குரிய நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இருந்தாலும், அது வறண்ட பிரதேசமாக இருக்கிறது. ஏனென்றால், அங்கே பல ஏரிகள் 15 ஆண்டுகளாக செப்பனிடப் படாமல் இருக்கின்றன. சீரியம்பாடி ஈச்சம்பாடி ஏரிகளுக்கு வரும் வாய்க் கால் பாழடைந்திருக்கின்றது. இதுவரையிலும் அது செப்பனிடப்படவில்லை. அந்த இரு ஏரிகளையும் சீர்திருத்தினால் 70 எக்கர் நிலங்கள் நல்ல பாசன வசதி பெறும். மேலும், பங்கம்பாடு, சங்கமசமுத்திரம் வாய்க் கால்கள் துந்துபோயிருக்கின்றன. அதன் காரணமாக பல விவசாயி கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவைகள் செப்பனிடப்படவில்லை. மே லும் இந்த ஆண்டு மழை இல்லாததால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் சர்க்காருக்கு செலுத்த வேண்டிய வரியைக்கூட செலுத்தமுடியாமல் இருக்கிறார்கள். இந்தத் தட தடவை நல்ல மகசூல்கள் கிடைக்கவில்லை. எல்லாம் காய்ந்துவிட்டது. மேலும், தலைவாசல் பெரி ஏரி கிராமத்தில் ஏரிக்கு வரும் வாய்க்கால் உடைந்துபோயிருக்கிறது. இதைச் செப்பனிடவேண்டுமென்று சென்ற ஆண்டு கலெக்டரைப் பார்த்து விண்ணப்பம் கொடுத்தோம். அது இன்னும் செப்பனிடப்படவில்லை. அதையும் செப்பனிட வேண்டுமென்று சர்க் காரைக் கேட்டுக்கொள்கிறேன். பக்கத்திலுள்ள புத்தூர், வேப்பநத்தம் என்ற ஊர்களிலிருக்கும் ஏரிகளும் துந்துபோயிருக்கின்றன. அதனால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் செப்பனிட வேண்டும். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அங்கே உடனடியாக புதுத் திட்டங்களை ஆரம்பிக்கமுடியாவிட்டாலும், உடனடியாக பழைய ஏரிகளையாவது ஆழப்படுத்த வேண்டுமென்றும், பாழடைந்த வர்ய்க்கால்களைச் செப்பனிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. ALAGIRISAMY**: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப் பிற்குரிய மராமத்து மந்திரி அவர்கள் பிரேரேபித்திருக்கும் நீர்ப்பாசன மானிய கோரிக்கையைக் குறித்து ஒரு சில கருத்துக்களை வெளியிட விரும்பு கிறேன். நமது தலைவர் நேருஜீ உணவுப் பொருள் உற்பத்தியைப்பற்றிப் பேசும்போது, உணவுப் பிரச்னைக்கு நாம் முடிவுகாணவிட்டால் உணவுப் பொருள் உற்பத்தியை போதிய அளவு பெருக்காவிட்டால்—நம் திட்டங்கள் எல்லாம் உயிரற்ற திட்டங்களாகத்தான் இருக்கும் என்று கூறியிருக்கி றார். இதை மனதில் வைத்துக்கொண்டு தான் அரசாங்கத்தார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவுப்பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியதுவமளித்து, பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கட்டிக்கொடுத்தார்கள். இரண்டாவது திட்டத்திலும்கூட நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவமளித்திருக்கிறார் கள். நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதை யாரும் மறுக்கமாட்டார்கள். நம் நாடு ஒன்றுபட்ட நாடு. நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தவரையில், நம் நாடு ஒன்றாகத் நான் இருக்க வேண்டுமென்று கூறுபவர்கள் மத்திய அரசாங்கத்தின் கொள்கைக்கும் ராஜ்ய அரசாங்கத்தின் கொள்கைக்கும் இடையே எந்த விதமான முறண் பாட்டையும் காணமாட்டார்கள். திராவிட நாடாகவோ தமிழ் நாடாகவோ இந்த ராஜ்யம் பிரியவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டவர்கள் மத்திய அரசாங்கத்தின் கொள்கைக்கும் ராஜ்ய அரசாங்கத்தின் கொள்கைக் கும் இடையே முறண்பாடு காணத்தான் செய்வார்கள். ஆகவே இந்த முறண்பாடே அரசியல் கட்சிகளின் கொள்கைகளின் அடிப்படையில் தான் எழுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.





எங்களைப் பொறுத்தமட்டிலும், நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களைப் பொறுத்தமட்டிலும், மத்திய சர்க்காருடைய கொள்கைக்கும் இந்த ராஜ்ய 12-10 p.m.
சர்க்காருடைய கொள்கைக்கும் எந்தவிதமான முறண்பாட்டையும் நாங்கள் காணவில்லை. இந்தியா முழுவதையும் ஒன்றாகப் பார்த்து அந்த அடிப் படையின் கீழ் தான் கொள்கைகள் வகுப்பது என்ற முறையில் வகுத்து வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டிலும் நீர்ப்பாசனத் திட்டத் திற்கு முதலிடம் அளித்து வருகிறார்கள் என்பதை எல்லா அங்கத்தினர் களும் உணருவார்கள். இன்னும் நடக்கவேண்டிய வேலைகள் பல இருக் கின்றன என்று அனேக அங்கத்தினர்கள் எடுத்துக்கூறுவதிலிருந்து இந்த உணவு உற்பத்திப் பெருக்கத்திலே கனம் அங்கத்தினர்கள் எல்லோ ரும் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். உணவு உற்பத்தி இந்த நாட்டிலே பெருகினால்தான் மற்ற திட்டங்களெல்லாம் சரிவர நிறை வேற்றப்பட முடியும் என்ற தத்துவத்தை எல்லா அங்கத்தினர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

குறிப்பாக மதுரை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய கொடைக் கானல் பகுதியிலே பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில், மதுரை மாவட்டத்தில் சத்தையாறு, மஞ்சளாறு, கொடவனாறு திட்டங்களை நிறைவேற்றுவதற் குரிய மதிப்பீட்டைத் தயாரிக்குமாறு நீர்ப்பாசன தலைமை இன்ஜினீர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. அதற்காக அந்த வட்டார மக்களின் சார்பாக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக, மஞ்சளாறு அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றி அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் பல வருஷங்க ளாகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்வதோடு நின்றுவிடாமல், 1958-59 இலே அதை எடுத்து வேலையைத் துவக்குவார்களானால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மேலும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருப்பார்கள் என்று கூறிக்கொண்டு நான் என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR**: தலைவர் அவர்களே, மராமத்தி லாகா மந்திரி அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து எனக்குள்ள குறைகளையும் சொல்லப் பிரியப்படுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து திட்டங்கள் சேர்க்கப் பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அதில் எங்களுடைய தொகுதியிலுள்ள கிரியாறு திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லப்படவில்லை. 1954-ல் இராமனுதபுரம் ராஜா அவர்கள் அமைச்சராக இருந்தபோதே அவருடைய உரையில் வாக்குக் கொடுத்திருக்கிறார். அதாவது, "The Giriyar Project was one of the subjects then dealt with. It is very likely that it might be included in the Second Five-Year Plan at least" என்று சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது மராமத்து அமைச்சராக இருப்பவரும் அந்தக் கிரியாறு திட்டத்தைப்பற்றி 1957-ம் வருஷம் ஜூலை மாதம் 12-ந்தேதி-ல் சட்ட சபையில் உறை நிகழ்த்தும்பொழுது ஸ்ரீமான் சுப்பையா முதலியார் கிரி யாறு திட்டத்தைப்பற்றி சொன்னார். பம்பையாறு திட்டம் கவனிக்கப்பட்டு வருகிறது; இந்தத் திட்டம் இதர மாகாணத்தவருடன் கலந்து ஆலோசிக்க வேண்டிய விஷயம். அப்படி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் மற்ற திட்டத்திற்கு அவசியமில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த திட்டங் களைப் பார்த்து பேச்சுவார்த்தை நடத்தப்போகிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார். அவர் இப்படிச்சொல்லி வருஷம் ஒன்று ஆய்விட்டது. உபகேள்வி கேட்டபோது கூட, கிரியாறு திட்டத்தைப்பற்றி ஒரு விதமான முடிவும் சொல்லவில்லை. பரம்பிகுளம் திட்டம் பற்றி முடிவு செய்ததற்குப் பிறகு

தான் கீரியாறு திட்டத்தைப்பற்றி பேசவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இப்படி எங்களுக்கு **step-motherly treatment** கொடுப்பதை சர்க்காரிடத்தில் நாங்கள் ரொம்ப வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரே இடத்தில்போய் பேச்சு வார்த்தை நடத்தும்போது எல்லாத் திட்டங்களைப் பற்றியும் பேசக்கூடாதா ? ஒரு திட்டத்தைப்பற்றி மட்டும் பேசி, மற்ற திட்டங்களைப்பற்றி பின்னால் பேசலாம் என்று சொல்வது ரொம்ப வருந்தத்தக்கதாக இருக்கிறது. நாங்கள் பத்து வருஷங்காளாக கஷ்டப்படுகிறோம். பலவிதமாக முறையிடுகிறோம். கீரியாறு திட்டம் வேண்டுமென்று அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். 36 ஆயிரம் ரூபாய் செலவு செய்து இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்ட திட்டத்தைப்பற்றி ஏன் கேரள சர்க்காரிடம் எடுத்துச் சொல்லவில்லை ? அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை அவர்களிடம் தெரிவித்தால் என்ன ? மக்களுடைய கோரிக்கையை நாங்கள் இந்தச் சபையில் எடுத்துச் சொன்னதன் பயன் என்ன ? நாங்கள் அப்பகுதி மக்களுக்கு என்ன சொல்வது ? மந்திரி அவர்களுடைய போக்கு இப்படி இருக்கிறது ? முதலில் பரம்பிகுளம் திட்டத்தை முடித்து விட்டு மற்றதைப் பற்றி பிறகு பேசலாம் என்று சொல்கிறார்கள் என்பதை நோக்கும் போது எங்களுக்கு உண்மையிலேயே **step-motherly treatment** தான் அளிக்கப்படுகிறது என்று நான் மீண்டும் சொல்லி வேதனைப்படுகிறேன்.

**MR. SPEAKER :** ரொம்பக் கோபமாகப் பேசுகிறீர்களே ! ஏன்?

**SRI A. R. SUBBIAH MUDALIAR :** எனக்குக் கொடுத்திருக்கும் நேரம் ஐந்து நிமிஷமே ஆதலால், என்னுடைய வேகத்தை அதன் மூலமாகத் தெரியப்படுத்த வேண்டியிருக்கிறது. என் தொகுதி மக்களுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். அப்படியிருக்கும்போது நான் உருக்கமாக மன்றாடிக் கேட்டும் மந்திரி அவர்கள் வாக்குக் கொடுத்தும், உப கேள்வி கேட்கும்போது அதைப்பற்றிச் சொல்லும் பதில் ரொம்ப **step-motherly treatment** ஆக இருக்கிறது. இன்வெஸ்டிகேட் செய்யப்பட்ட திட்டத்தைப்பற்றி தயவு செய்து கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீர்ப்பாசன பிரதம இன்ஜினீர்களிடம் கேட்கும்போதுகூட, " திட்டம் தயாராக இருக்கிறது ; நாங்கள் நடத்தத் தயாராக இருக்கிறோம் ; சர்க்கார் எடுத்து நடத்தச்சொன்னால் நாங்கள் நடத்த முடியும் ; அப்படியில்லாத போது நாங்கள் என்ன செய்வது ? " என்று சொல்லி வருத்தப் படுகிறார்கள். ஆகவே, கீரியாறு திட்டத்திற்கு 36 ஆயிரம் ரூபாய் இன்வெஸ்டிகேஷனுக்குச் செலவு செய்துவிட்டு, பத்து வருஷமாக " பென்டிங் " ஆக வைத்துக்கொண்டு, அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் இருந்து, பரம்பிகுளத் திட்டத்தை எடுத்து முடித்துவிட்டபிறகுதான் கீரியாறு திட்டத்தைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்துவோம் என்று சொல்வது பொருத்தமில்லை என்று நான் மீண்டும் வருத்தத்துடன் தெரிவித்து" கொள்ளுகிறேன்.

இன்வெஸ்டிகேஷன் ஜில்லாவாரியாக நடத்தப்படுகிறது. நல்ல வேலை நடக்கிறது. இன்வெஸ்டிகேஷன் பார்ட்டி ஒவ்வொரு பாசனத்திலும் சில கோட்பாடுகளுக்கு உட்பட்டு சீர்திருத்தம் செய்வதற்கு வாய்ப்பு கொடுத்தால் இன்வெஸ்டிகேஷன் பார்ட்டி நல்ல நிலைமையில் வேலை செய்யும்.

பி.டபிள்யூ.டி., ரெவினியூ இவ்விரு இலாகாவையும் ஒன்றாகச் சேர்த்து இருப்பது **Duel Control** ஆக இருக்கிறது. சில கால்வாய்களை பி.டபிள்யூ. டி. மெயின்டெயின் செய்கிறது. ஆனால், டிஸ்ட்ரிப்யூஷன் வேலை ரெவினியூ டிபார்ட்மெண்டுக்கு இருக்கிறது. ஆகவே, இரண்டு பேர்களிடமும் போகும்போது ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள. கால்வாய்களையும் குளங்களையும் பி.டபிள்யூ.டி. மெயின்டெயின் செய்வதால் டிஸ்ட்ரிப்யூஷனையும் பி.டபிள்யூ.டி.-க்கே கொடுத்தால் நீர்ப்பாசனம் நன்றாக நடக்கும். ரெவினியூ டிபார்ட்மெண்டுக்கு போவதினால் எங்களுக்கு ஏற்படும் விதமான கஷ்டங்களும் நீங்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறே



மைனர் இரிகேஷன் விஷயம் தாசில்தார் பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் " நான்-டெக்னிகல் பீபிள் " பார்க்கும் போது பலவிதமான ஊழல் ஏற்படுகிறது. நீர்ப்பாசன விஷயம்பற்றி தாசில்தாரவர்களுக்கு ஒன்றும் தெரியாதவராக இருப்பதால் அவர் கீழ் மைனர் இரிகேஷன் ஓவர்சீர் நல்ல வேலை செய்ய முடியவில்லை. மைனர் இரிகேஷன் வேலையை பி.டபிள்யூ.டி.க்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஸில்ட் க்ளியரன்ஸுக்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1952–53ல் அப்பொழுதிருந்த மந்திரி திரு. ரெங்கா ரெட்டி அவர்கள் **The quickest way of giving more food to people is to renovate the tanks and restore their lost capacities. This renovation is particularly important in respect of a large number of tanks in Zamin areas which are taken by Government. The object of the scheme is not so much to bring new lands under irrigation as to ensure adequate supplies to lands already growing wet crops.**
என்று சொல்லியிருக்கிறார். ஆகையால், ஸில்ட் கிளியரன்ஸ் செய்தால் முக்கியமான நன்மைகள் ஏற்படும். ஸ்டோரேஜ் கபாசிடியை அதிகப்படுத்த முடியும். அதன் மூலமாக தொடர்ந்து சப்ளை கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்பு ஏற்படும். ஜமீந்தாரி ஏரியாவுக்குக் சலுகை கொடுக்கவேண்டுமென்று 1952–53-ல் திரு. ரங்கா ரெட்டி அவர்கள் சொல்லியிருக்கிறார்.

**The object of the scheme is not so much to bring new lands under cultivation but assured supply to existing ayacuts.** என்று அப்போதே அவர்களுடைய பேச்சில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோக, சிவகிரி கிராமத்தில் செம்பகவல்லி திட்டத்திற்கு ஒரு லட்சம் 35 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று எஸ்டிமேட் போடப் பட்டிருக்கிறது. ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது, " இன்வெஸ்டி கேஷன் முடிந்துவிட்டது, சாங்ஷன் செய்யப்பட்டுவிட்டது, ஆனால், எடுத்து நடத்தவில்லை, கேரள கவர்ன்மெண்டுடன் பேச்சு நடத்தவேண்டும் " என்று சொல்லப்படுகிறது. ஆனால், விசாரித்ததில் அந்தத் திட்டத்திற்கும் கேரளாவுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்கிறார்கள். இவர்களைக் கேட்டால் "அது நம்முடைய இடத்தில் இல்லை, கேரளாவும் சம்பந்தப்பட்ட விஷயம் " என்று ஒரு வார்த்தையில் சொல்லி தப்பித்துக்கொள்ளுகிறார்கள். அதற்கும் கேரளாவுக்கும் சம்பந்தமே இல்லை. அது பூராவும் நம்முடைய பொறுப்பில் இருக்கிறது.

அதுபோக சென்ற வருஷத்தில் நீர்ப்பாசனம் சம்பந்தமாகப் பேசும் போது 4, 5 யோசனைகள் சொன்னேன். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. ஏதோ நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால், நடைமுறையில் ஒன்றும் வருவதில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். அடுத்த வருஷம் வந்துவிட்டது. நாங்கள் யோசனை சொல்லி 12 மாதங்கள் கடந்துவிட்டன. நாங்கள் சொன்னதைப்பற்றி " உண்டு, இல்லை " என்று இரண்டில் ஒன்று சொல்லிவிடக்கூடாதா ? சட்ட சபையில் எடுத்துச்சொல்லும் வாய்ப்பு இருக்கிறதே தவிர, அதனால் ஒருவிதமான நன்மையும் இல்லை. ஆகையால், சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் ஏதாவது ஒரு கவலைப்படக்கூடிய காரியத்தை இங்கே எடுத்துச் சொன்னால், அதைப் பற்றி " உண்டு, இல்லை " என்று இந்த 12 மாத காலத்திற்குள் சொல்ல முடியாமலிருப்பது உண்மையிலேயே வருத்தத்தைத் தருகிறது என்று சொல்லிக்கொண்டு, இப்பொழுது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**SRI D. S. AUTHIMOOLAM :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், எனக்கு முன் பேசிய கனம் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் ரொம்ப உக்வேகமாகப் பேசினார்கள். அதற்குக் காரணம் என்ன என்று நான்

பார்க்கும்போது, கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையின் நான்காவது பக்கத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சில திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறது. அதே நேரத்தில் இன்னும் உருவாகக்கூடிய சில திட்டங்களை நாங்கள் ஒரு ஸ்பெஷல் இன்ஜினீரிங் டிவிஷன் வைத்து பரிசீலனை செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்து வருஷங்களாக அந்த திருநெல்வேலி ஜில்லாவை வளப்படுத்த ஒரு முக்கியமான திட்டம் வகுக்கப்பட்டு, பேசப்பட்டு வந்தது. அந்தக் கீரியாறு திட்டத்தைப்பற்றி இங்கே காணப்படவில்லை. அந்தத் தொகுதி மெம்பர் என்ற முறையில் அவர் மிக அழகாகப் பேசியது நியாயமானதுதான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் என்னுடைய கடையம் தொகுதியில் கரணையாறு திட்டத்தை மைனர் இரிகேஷன் என்ற முறையில் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய சுருக்கமான அறிக்கையில் “பரிசீலனை செய்கிறோம், 1958-59-ம் வருஷத்தில் அத்திட்டம் கவனிக்கப்படும்” என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக கனம் அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12-20 p.m. திருநெல்வேலி ஜில்லாவில் கீரியாறு ஒரு முக்கியமான திட்டம். பத்து ஆண்டு காலமாகப் பரிசீலனை செய்தும்கூட இன்றைக்கு அந்தத் திட்டம் உருப்படாமல் போவதைக் கண்டு என்னுடைய தொகுதி கரணையாறு திட்டமும் எவ்வாறு ஆகிவிடுமோ என்று அஞ்சித்தான் அவ்வாறு சொல்கிறேன். காரணம், போதுமான நிதி இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படவில்லை. முதலீட்டுச் செலவினத்தில் 3½ கோடி என்றுதான் இருக்கிறது. இது 13½ கோடியாக இருக்கவேண்டும். மத்திய சர்க்கார் நமக்கு ஒதுக்குகிற பணம் மிகவும் குறைவு. சென்னை சர்க்கார் நேஷனல் டெவெலெப்மெண்டு கவுன்ஸிலில் போய் வாதாட வேண்டும். “நீங்கள் கொடுத்திருக்கிற பணம் போதாது. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்கிற அபிப்பிராயம் பலமாக வளர்ந்து வருகிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்த முத்தையா செட்டியார் போன்றவர்கள் பேசியிருக்கிற பேச்சுக்களையே பாருங்கள்” என்று பைல்களை எடுத்துக்கொண்டு டெல்லிக்குப் போகும்போதே தீர்மானமாக உறுதியாக வாதாடி அதிகப் பணம் வாங்கிவரவேண்டும். “முதல் அமைச்சர் அவர்கள் கிராமங்களுக்குப் போகும்போது நாம் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டோம். இனி நம் ராஜ்யத்தில் எடுத்துக்கொண்டு வேலை செய்வதற்குப் பெரிய திட்டங்களே கிடையாது” என்பதாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் ஒரு கோடி இரண்டு கோடி ரூபாய் செலவில் அநேக திட்டங்கள் இன்னமும் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை அவர்கள் வலியுறுத்த வேண்டும். ஏதோ பணம் ஒதுக்குகிறோம் என்றால் அந்தப் பணம் ஜனங்களிடத்தில் போய்ச் சேராது. அடுத்த தேர்தல் ரொம்ப கஷ்டமாகப் போய்விடும் என்று வலியுறுத்தி அதிகத் தொகை பெற்றுவரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு எங்கள் தொகுதியில் சொல்லப்படுகிற கரணையாறு திட்டத்தை சீக்கிரமாகவே பரிசீலனை செய்து கட்ட வேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இரண்டு போக நஞ்சை சாகுபடிக்குத் தீர்வை கட்டுகிறார்கள். ஒரு போகம்கூட விளைவிக்க முடியவில்லை. சீக்கிரமாகவே இரண்டுபோக சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் கட்டி வருகிறார்கள். இந்த வருஷம் அதிருஷ்டவசமாக மழை பெய்திருக்கிறது. ஆகவே இந்த அணைக்கட்டைக் கட்டினால் ஐந்தாயிரம் ஏக்கராவுக்கு சாகுபடி வசதி கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



**SRIMATHI KOLANTHAI AMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற பாசன திட்டத்தின் கீழே நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய தொகுதியில் செய்யவேண்டிய சில காரியங்களை நினைவுபடுத்தலாமென்று நினைக்கிறேன்.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய தொகுதியில் சிரவணம்பட்டி பஞ்சாயத்தின் சார்பில் மேல்பவானி திட்டம் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானம் போட்டு எல்லாத் தலைமை அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பது ஞாபகம் இருக்கும். அந்தத் திட்டமானது பல ஆண்டுகளாக என்னுடைய தொகுதி மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு திட்டமாகும். ஏனென்று கேட்டால் எங்கள் தொகுதியில் கிணறுகள் 120 அடி, 130 அடி ஆழம் வரைக்கும் தோண்ட வேண்டியிருக்கிறது. பலபல வருஷங்களாக அவர்கள் எவ்வாறு விவசாயம் செய்து வருகிறார்கள் என்று சொன்னாலும் ஒவ்வொரு ஆண்டும் அந்தக் கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு பொறுமையோடு இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மேல்பவானித் திட்டமானது வருமா இல்லையா என்பது எங்களுக்கு முடிவாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு ஆண்டும் எங்கள் ஊரில் சங்கனூர் பள்ளமென்னும் காட்டாறு ஓடிவந்து கிராமத்திலுள்ள மக்களின் வாழ்க்கையை நாசப்படுத்திக்கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளத்தின் தண்ணீரை தேக்கி குளங்கள் மூலமாக விவசாயம் செய்யலாம் என்று 42 ஆயிரம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு தண்ணீர் அந்தக் காட்டாற்றில் வராத காரணத்தினால் பணம் திரும்பி வந்துவிட்டது என்று நினைக்கிறேன். மீண்டும் போன ஆண்டில்தான் தண்ணீர் வந்து ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சிரவணம்பட்டி, சின்னவேடப்பட்டியில், ஒரு குளம் ஏற்படுவதற்கு பொதுமக்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். குளத்தில் தண்ணீர் தேங்கி நின்றால் சுற்றியுள்ள கிணறுகளில் எல்லாம் தண்ணீர் ஊற்று எடுக்க வசதி இருக்கும். மழை காலத்தில் குளம், குட்டைகளில் எல்லாம் தண்ணீர் தேங்கும். ஆகவே இத்திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல்லடம் தாலுக்கா இருக்கிற தாலுக்காக்களில் எல்லாம் மிகவும் பஞ்சமானது. அதில் ஓடும்படியான சிறு வாய்க்கால்கள் எல்லாம் மேடு அடைந்து சிராஜ வாய்க்கால், கண்ணம்பாளையம், பள்ளபாளையம் குளம் மூன்று நான்கு ஆண்டு காலமாக செப்பனிடப்படுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்தும் வேலை வெற்றிகரமாக நடைபெறவில்லை. அதற்காக நல்ல முறையில் வேலை எடுத்துக்கொண்டால்தான் பல்லடம் தாலுக்காவும் ஓரளவு செழிப்பு அடைய முடியும் என்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதனால் இருபோக நஞ்சை விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

மேலும் எனது தொகுதியில் கரவளிமாதப்பூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது பெயர் மிகப் பழமையானது. அங்கே கம்புகூட வெள்ளாமை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் கரவளிக்கு என்ன தீர்வை கட்டுகிறார்களோ அதுவேதான் கட்டப்பட்டு வருகிறது. காரணம் ஒன்றிரண்டு வருஷங்களில் கரவளிக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கும் நல்லமுறையில் குளங்களைச் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஆண்டு ஒன்றுக்கு இரண்டு குளங்களையாவது செப்பனிடுவது என்று எடுத்துச் செய்தால ஐந்தாண்டுகளில் பத்து குளங்களைச் செப்பனிட்டுவிடலாம். எங்கள் தாலுக்காவைப் பொறுத்தவரையில் கீழ்

பவானி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். 11 கோடி ரூபாய் வாங்கிக்கொண்டதற்காகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வணக்கம்.

**Sri P. R. SRINIVASA PADAYACHI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல முன் வந்திருக்கிறேன். தென்னாற்காடு ஜில்லாவில் சில பகுதிகள் வறண்ட பிரதேசமாக உள்ளன. அதற்குப் பாய்ச்சல் வசதி கொஞ்சங்கூட கிடையாது. திருச்சி ஜில்லாவிலுள்ள கண்டசீலம் அணையின் மூலமாக எமினேரி இருக்கிறது. அதற்கும் அணைக்கட்டுக்கும் 21 மைல் நீளத்தில் வாய்க்கால் வெட்டி அந்த ஏரிக்கு ஜலத்தைக் கொண்டுவந்தால் திருக்கோவிலூர் தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா, சிதம்பரம் தாலுக்கா முதலியவற்றுக்குப் பாசன வசதி அதிகமாக ஏற்படும் என்று நான் சொல்ல முற்படுகிறேன். அந்தத் திட்டத்தை லெவெல் எடுத்துப் பார்த்தால் எவ்வளவு தூரம் வெற்றி அடைய முடியும் என்று அறிந்துகொள்ள முடியும். அதற்குக் கீழே லோயர் அணைக்கட்டு இருக்கிறது. அந்த லோயர் அணைக்கட்டில் இருந்து வீராணம், வாலாஜா, பெருமாணம் ஆகிய மூன்று ஏரிகளுக்கும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அந்த ஏரிகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். கடலூர் தாலுக்காவில் பெருமாள் ஏரி இருக்கிறது. அதனால் சுமார் 20 ஆயிரம் ஏக்கரா நிலங்கள் விவசாயம் செய்ய முடியும். முப்போகம் சாகுபடியாகக்கூடிய நிலங்கள்கூட இருக்கின்றன. அந்த ஏரியின் எதிர்ப்புறத்தில் நான்கைந்து காணி விஸ்தீரணத்திற்கு மண் எக்கல் மேடு இருக்கிறது. அந்த எக்கல் மேட்டைத் தீர்ப்பதற்கு விவசாய நீர்ப்பாசன மகாநாட்டில்கூட எடுத்து முறையிட்டோம்.

12-30 p.m. அதை எடுப்பதற்கு எங்களிடம் எந்தவிதமான இயந்திரங்களும் இல்லை. அதை எடுப்பது என்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கு, கலங்கல் மூலம் ஏரிகளுக்கு விடப்படும் தண்ணீரானது கலங்கள் மூலம் வழிந்து ஓடுகிறது. ஏரி நிறைவதற்குள்ளாக ஏரியின் கலங்கள் மூலம் தண்ணீர் வெளிப்படுகிறது ஆகவே, மண்ணை எடுத்துக் கொடுத்து ஏரியை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பெருமாள் ஏரியில் அதிக விஸ்தீரணம் ஏற்படுத்தலாம். பி. டபிள்யூ. டி. என்ஜினியராக சுப்பாராவ் அவர்கள் இருக்கும்போது பாண்டியன் ஸ்கீம் என்ற ஸ்கீமைப் போட்டார்கள். 37,000 ரூபாய் எஸ்டிமேட்டில் பாசன வசதிக்காக ஊமையன் மதகு மூலம் இரண்டு போக நஞ்சைக்கு கடலூர் தாலூகாவில் பாய்ச்ச வசதி செய்தார்கள். அந்தத் திட்டத்தை இப்பொழுது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதை மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடாதி நதியில் திருவந்திபுரம், வானமதி போன்ற அணைக்கட்டுகள் வழி ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்கிறது. ஆனால், அவ்வாய்க்கால்களை சீர்படுத்த பி. டபிள்யூ. டி. ஒன்றும் செய்ய வில்லை. ஆகவே, அந்த வாய்க்கால்களை சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வாய்க்கால்களை வெட்டுவதற்கு, 500 ஏக்கர் அளவில் அந்த வாய்க்கால் இருந்தால் அவைகளையும் சீர்படுத்த சர்க்கார் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடலூர், விருத்தாசலம், சிதம்பரம்

**Mr. SPEAKER** : ராமஸ்வாமி முதலியாருக்கு கொடுத்திருக்கும் நேரத்தில் ஐந்து நிமிஷம் குறைத்துக் கொண்டிருக்கிறார்.

***Sri V. SUBBIAH** : திருநெல்வேலி ஜில்லாவில் ஆறில் ஒரு பங்குள்ள
12-30 p.m. கோவில்பட்டி தாலூகாவில் கிட்டத்தட்ட நாலரை லட்சம் ஜனத்தொகையுள்ள ஒரு பரந்தயிடத்தில் இன்றையதினம் நீர்பாசனத்திட்டங்களே இல்லை. குறிப்பாக ஜமீன் பிரதேசமாகிய எட்டயாபுரம் போன்றயிடங்களில் பல குளங்கள் இன்று சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வேலை செய்ய முடியாமல்



இருக்கிறது. பெரும் பகுதியும் வானம் பார்த்த பூமியாக, இருப்பதால் மழையை நம்பியே வாழ்கிறார்கள் அங்குள்ள மக்கள். மதிப்பிற்குறிய சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்ட கீரியார், பம்பையார் போன்ற திட்டங்கள் எங்கள் பகுதியில் இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும். நிதியமைச்சர் அவர்கள் இன்று முதலிடம் கொடுப்பது அவர்களின் தொகுதியில் உள்ள, கோயம்புத்தூரில் வரக்கூடிய சோலையார், பரம்பிக்குளம் திட்டங்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கிறார்கள். பனகல், பொப்லி ராஜா போன்றவர்களும் எங்கள் ஜில்லாவின் மதிப்பிற்குறிய தலைவராயிருந்த சிவஞானம் பிள்ளை மந்திரியாக இருந்தபோது கீரியார், பம்பையார் போன்றவைகள் அப்பொழுதே நடைமுறையில் வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த அப்பேர்ப்பட்ட திட்டங்கள் எல்லாம் இன்று முதலிடம் பெறாமல் சமீப காலத்தில் வந்த திட்டங்கள் கோயம்புத்தூர் பகுதியில் கொண்டு வரப்படுகிறது, என்று மக்களால் பேசப்படுகிறது. நமது நிதியமைச்சர் அவர்கள் பாரபட்சம் காட்டுகிறார்கள் என்றும் பொது மக்கள் கூறுகிறார்கள். அதைப்பற்றி சுப்பையா முதலியார் அவர்கள் அழுத்தந்திருத்தமாக கோபத்துடன் சொன்னார்கள். எங்கள் பகுதியில், முதலமைச்சர் அவர்களின் பகுதியான சாத்தூரில், போகக்கூடிய வைப்பாறு போன்றயிடங்களில் நீர்ப்பாசனத்திற்கு வசதியின்றி, அணைக்கட்டுகள் இல்லாத காரணத்தினால் தண்ணீர் வங்காளக்குடாக்கடலில் போய் விழுகிறது. ஆக, கோவில்பட்டி ராயலசீமாப் போன்று இன்று காட்சியளிக்கிறது. ஆகவே, அங்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் போன்ற இடங்களில் உள்ள விவசாய மக்களுக்கு வாழ்வு தேடிக்கொடுத்தவராவர்கள். அங்கு, முத்திலாபுரம் என்ற பகுதியில் ஒரு பெரிய பாலம் கட்டுகிறார்கள். அங்கு இரண்டு கால்வாய்கள் வெட்டி விட்டால் பல கண்மாய்கள் நிறைந்து பயிர் விளைந்து மக்கள் நன்கு வாழ முடியும். ஆறுகளில் ஓடும் தண்ணீரை, மழைக்காலத்தில் ஓடும் தண்ணீரை தேக்கி வைக்க வேண்டும். அந்தளவு கூட எங்கள் பகுதியில் ஒரு திட்டமும் இல்லை என்று நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். கவிசக்ரவர்த்தி பாரதி பிறந்த எட்டயாபுரம் எங்கள் பகுதி. அங்கு நீர்பாசன வசதி கிடையாது. அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்குக்கூட ஏங்கும் நிலையில் இருக்கிறார்கள். கப்பல் ஓட்டிய தமிழன் வ. உ. சி. பிறந்த ஓட்டப்பிடாரத்தில் தண்ணீர் வசதியற்று இருக்கிறது. அங்கு கால்வாய்கள் வெட்டப் படவில்லை. வீர பாண்டிய கட்டபொம்மன் பிறந்த தாலூகா, எங்கள் தாலுகா. சரித்திரப் பிரசித்தி பெற்ற சாலிக் குளம் கண்மாய் இன்று ரிப்பேரற்ற நிலையில் இருக்கிறது. இந்த நாட்டின் சரித்திரத்தை தட்டி எழுப்பிய முப்பெரும் தலைவர்கள் பிறந்த கோவில்பட்டி தாலுக்கா நீர்பாசன வசதியற்று ராயலசீமாப் போல் காட்சியளிக்கிறது. பேசுவதற்கு நேரம் இல்லாததால், எங்கள் தாலுக்காவை தனியாகக் கவனித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நீர்பாசனத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் ஒரு வெட்டுத் திட்டத்தைக் கொடுப்பதின் மூலம் எதிர்தரப்பில் உள்ள நாங்கள் நீர்பாசனத் திட்டத்தை நிறைவேற்றுகிற தன்மையில் இருக்கிற சில பல குறைகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினம் நடைபெற்ற விவாதத்தின் போது நான் நம்முடைய மராமத்து இலாக்கா அமைச்சர் கனம் கக்கன் அவர்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதை விட நம் நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களைப் பற்றித்தான் அதிகமாக எண்ணிக் கொண்டிருந்தேன். ஏனென்றால், சென்ற தடவை நீர்பாசனத்துறையைப் பற்றிய விவாதம் நடந்தபோது நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள், "நாட்டிலே எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் ஓடினால் அதை அணைகட்டி தேக்க வைக்கவேண்டும் என்ற

ஆசை தோன்றுவது இயற்கைதான், ஆனால் அப்படி அணை கட்டுவதற்கு, தேக்கங்கள் கட்டுவதற்கேற்றளவு நாட்டில் நீர் வீணாகிப் போய்விடவில்லை" என்று சொல்லி, ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற எண்ணத்தில் நாட்டில் எந்த அளவு மழை பெய்கிறது, எந்தளவு கடலில் நீர் போய் விழுகிறது என்று கணக்கெடுத்துப் பார்த்தால் இங்கு பெருமளவுப் நீரைப் பயன்படுத்துகிறோம், தண்ணீர் வீணாகி விடவில்லை என்று கூறினார். மழை பெய்து தண்ணீர் ஓடும் இடங்களிலெல்லாம் அணை கட்டுவது என்பது முறையல்ல என்றெல்லாம் சொன்னார்கள். இன்று கனம் அங்கத்தினர்கள், சீர்கொழிக்கும் சீமையான திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து வருகிறவர்களும், மற்ற துறைகளில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாக கருதப்படுகிறவர்களான கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஆங்காங்குள்ள ஆறுகளில் தேக்கங்கள் கட்டலாம் என்று சொன்னதைப் பார்க்கும்போது சென்ற ஆண்டு நிதியமைச்சர் அவர்கள் செய்த வாதத்தை இந்த சபை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற முடிவிற்குத்தான் நான் வரவேண்டியவனாக இருக்கின்றேன். நாட்டில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் ஏராளம் இருக்கின்றன, நிதியமைச்சர் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் வாதிட்டும் கூட அதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிற கனம் உறுப்பினர்கள் அதன் மூலம் தங்கள் தங்கள் தொகுதிகளில் மட்டுமல்ல, நாட்டிற்கே பொதுவாக நல்லதொரு காரியத்தை செய்திருக்கிறார்கள், நல்லதொரு தொண்டாற்றியிருக்கிறார்கள் என்று அவர்கள் எல்லோருக்கும் நான் நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன். காங்கிரஸ் அமைச்சரவையே வெளியிட்டிருக்கிற அறிக்கையில், "In the British regime Madras ranked second only to the Punjab in the matter of irrigation, etc." என்று குறிப்பு காணப்படுகிறது. பாஞ்சாலத்திற்கு அடுத்தபடியாக சென்னை மாநிலத்தில்தான் நீர்பாசனத் திட்டம் செவ்வையான முறையில் இருக்கிறது என்று வெள்ளைக்காரன் காலத்திற்குப் பிறகு காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்ட போது வெளியிடப்பட்ட நீர்பாசன அறிக்கையில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. ஆக, வெள்ளைக்காரன் கூட தான் செய்ய வேண்டிய கடமையை ஓரளவு உணர்ந்து செய்திருக்கிறான் என்றாலும் நம்மவர்கள் ஆட்சியில் நம்மவர்கள் கேட்கிற சில பல காரியங்களைக்கூடச் செய்வதற்கு இந்த அமைச்சரவையால் முடியவில்லை என்பது இன்றைய தினம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் தங்கள் தொகுதிகளைப்பற்றி எடுத்துப் பேசியதில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. ஓரளவு கூட நம் குறைபாடுகளை, நம் அமைச்சரவை நீக்க முடியாத நிலையில் இருப்பதற்குக் காரணம் என்னவென்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஒரு துறையில் பேசுகிறபோதாவது வடக்கு தெற்கு என்று பேசாமல் இருக்கலாம் என்று நான் ஆசைப்பட்டேன்.

12-40 p.m. ஆனால் காங்கிரஸ் கரப்பில் உள்ளவர்கள் வடக்கு தெற்கு என்று நாங்கள் பார்க்கமாட்டோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அவ்விதம் பார்க்காமல் இருக்கிறவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்கள் என்றால் ஏன் அவர்கள் வடக்கே உள்ள நீர்பாசனத் திட்டங்களைக் கண்டு திருப்தி அடைந்துவிடாமல், இங்கே, தெற்கே, நீர்பாசனம் சரியாக செய்யப்படவில்லை என்று குறைபட்டுக் கொள்ளவேண்டும்? வடக்கேயே கோதுமையை விளைவித்து மலிவான விலைக்கு வாங்கி சாப்பிட்டுக்கொள்ளலாம்— வடக்கே நெல்லை விளைவித்து மலிவான விலைக்கு வாங்கி சாப்பிட்டுக்கொள்ளலாம். அதற்காக மற்றொரு பக்ராநங்கல் திட்டத்தையோ, மற்றொரு தாமோதர் அணைகட்டையோ அங்கேயே கட்டச் சொல்லி சிபாரிசு செய்திருக்கலாம். நம்முடைய மாநிலம்—நம்முடைய இராஜ்யம்—நம்முடைய நாடு பின்தேக்கி சொல்கிறது என்று காண்கிறநோக்கில் "வடக்கு-தெற்கு" என்ற உணர்ச்சி அதே விதத்தில் வராவிட்டாலும் மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் என்ற உருவிலே உங்கள் உள்ளத்திலே புகுந்து குடையத்தான் செய்கிறது. அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையில் பல இடங்களில் நான் பார்க்கிறேன், மத்திய சர்க்காரை இன்னும் எந்த அளவுக்கு நம்பிக்



கொண்டிருக்கிறார்கள் என்று. "1958-59-ல் இந்த வேலைகளுக்கு மான்யம் ரூபாய் 21 இலட்சம், கடன் ரூபாய் 11 இலட்சமும் தரும்படியாக இந்திய அரசாங்கத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே கேட்கப்படுகிற பணம் நிச்சயம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அமைச்சரவைக்கு இருக்குமானால் மத்திய சர்க்காரிடமிருந்து மான்யமாக 21 இலட்சம் ரூபாயும் கடனாக 11 இலட்சம் ரூபாயும் நாங்கள் பெற்று கனம் அங்கத்தினர்கள் சொல்லியிருக்கின்ற இந்த சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றித்தருவோம் என்று தெளிவாக திட்டவட்டமாக எடுத்துச்சொல்ல முடியும். ஆனால் அனுமதி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மறுபக்கத்திலே "1958-59-ம் ஆண்டில் இந்த வேலைகளுக்காக ரூபாய் ஆறு லட்சம் மான்யமும் ரூபாய் ஒரு லட்சம் உதவித் தொகையும் அளிக்குமாறு இந்திய அரசாங்கத்தினிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது." என்று இப்படி பக்கத்திற்கு பக்கம் "எதிர்பார்க்கிறோம்" என்ற நிலைமையில் இருக்கிற காரணத்தால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு உற்சாகம் தருகிற வகையில் அமைச்சர்களுக்கு உண்மையிலேயே துணிவு ஏற்பட வேண்டும் என்றும், டெல்லியிடம் சண்டை போட்டு பணத்தை கேட்டு வாங்கவேண்டும் என்றும் எடுத்து குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார், ஆனால் அந்த நேரத்தில் மத்திய சர்க்கார் பணம் தரக்கூடிய நிலையில் நம்மிடத்தில் இருக்கிறார்களா என்று அறிய வேண்டுமானால் மத்திய சர்க்காருடைய நீர்பாசன திட்டக்கொள்கை எந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. விருப்போடு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—இன்றையதினம் இந்திய துணைக்கண்டம் என்ற அரசியல் அமைப்பில் இருக்கிற காரணத்தால் மத்திய சர்க்கார் எந்தெந்த திட்டங்களை எப்படி எப்படி அமுலாக்குகிறார்களோ அதைப் பொறுத்து நம்முடைய திட்டங்களுக்கு மாற்று உருவங்களை கொடுக்கவேண்டியோ குறைக்கவேண்டியோ அல்லது அதிகரிக்கவேண்டியோ ஏற்படுகிறது. அந்த நிலைமை இருக்கிறது. இதில் ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய சர்க்கார் போட்ட நீர்பாசனத் திட்டங்கள் அத்தனையும் மலை போன்ற அணைகட்டுகளுக்குத் தான் பெருவாரியாக பணம் ஒதுக்கப்பட்டதே தவிர சிறு சிறு நீர்பாசன திட்டங்களைப் பற்றி மத்திய சர்க்கார் கவலைப்படவில்லை. அவர்கள் கவலைப் படாதது மிகுந்த தவறுடையது என்று மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்களே இன்றைய தினம் உணர்ந்து முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பெரிய நீர்பாசன திட்டங்களுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து விட்டோம், ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்று அவர்களே கொஞ்சம் கழிவிரக்கத்துடன் பேசியிருக்கிறார்கள். தாமோதர் அணைகட்டு கட்டப்பட்டதாலும், பக்ரா நங்கல் கட்டப்பட்டதாலும் அங்கே கிடைக்கிற தண்ணீரை அந்த பகுதி மக்கள் சரியான படி பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று மத்திய அரசு இன்றையதினம் மனம் நொந்து பேசியிருக்கிறது. இப்படி பேசியிருக்கிறார்கள் என்றால் மிக தாராளமாக கோடிக்கணக்கான ரூபாய்கள், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை வாரி இறைத்தான பிறகு பேசியிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே பெரிய ஆறுகள் இல்லை, ஆகவே அணைகள் கட்டுவதற்கில்லை என்று பேசுகிற அமைச்சர்கள் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களை வடக்கே செலவழிக்கப்பட்ட நேரத்தில் நம்முடைய சிறு நீர்பாசன திட்டங்களுக்காக என்று ஏன் பெரிய தொகை கேட்டு வாங்கவில்லை. இனியாவது கேட்டு வாங்குவதற்கு, அந்த துணிவு அவர்களுக்கு இருக்கிறதா என்றால் அவர்கள் அறிக்கையில் "அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது" என்று சொல்லுகிறார்கள். இவர்கள் அனுமதி எதிர்பார்ப்பதை தான் "வடக்கு-தெற்கு" என்று நாங்கள் சுருக்கமாகச் சொல்லுகிறோம். அனுமதி நீங்கள் எதிர்பார்க்கவேண்டியது நாட்டுமக்களுடைய கண்களிலிருந்து—அனுமதி நீங்கள் எதிர்பார்க்க

வேண்டியது வரண்டு கிடக்கிற வயல்களிலிருந்து—அனுமதி நீங்கள் எதிர்பார்க்கவேண்டியது தேய்ந்து போகிற நம்முடைய விவசாயத்தைப் பார்த்தே தவிர பணப்பெட்டியை கையிலே வைத்துக்கொண்டு இருக்கிற வேறு ஒரு இடத்திலிருந்து அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக பயன் இல்லை, சரியல்ல. திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர்கள்—தேச விடுதலை வரலாற்றை எடுத்துச்சொல்லி இப்படிப்பட்ட சீமையை நீங்கள் பட்டினி போடுகிறீர்களே என்று கேட்டால் அவர்கள் குரல், உண்மையிலேயே அந்த சீமையிலே இருக்கிற மக்கள் எந்த அளவுக்கு குமுறிக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடும் அளவுக்கு இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நிச்சயமாக வெற்றி பெறவேண்டுமென்றால் நம்முடைய விவசாயத்திலே கிடைக்கும் விலை பொருள்களின் வளர்ச்சி 100–க்கு 42 பங்கு அதிகமாக வேண்டும் என்று பிளானிங் கமிஷன் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது. 100 கலம் விளைந்து கொண்டிருந்த இடத்தில் ஐந்து வருடத்திலே 142 கலமாக விளைய ஆரம்பித்தால் நமக்கு ஏற்பட்டிருக்கிற வெளிநாட்டு கடன்களை கூட நம்மால் நீக்கிக் கொள்ள முடியும் என்று பிளானிங் கமிஷன் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறது. இராஜ்ய சர்க்கார் தலைவர்கள் 100–க்கு 42 பங்கு என்று முடியாவிட்டாலும் 100–க்கு 28 என்ற அளவுக்கு அதிகம் வளர்ச்சி செய்து காட்டுகிறோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். பெரிய ஆறுகள் இல்லை—பாக்ரா நங்கல் கட்டுவதற்கு, சிறிய ஆறுகள் இருக்கின்றன—ஆனால் அவைகளில் தண்ணீர் அதிகம் இல்லை, தண்ணீர் அதிகம் இருந்தாலும், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைக் கட்டுவதற்கு பணம் இல்லை—என்று சொல்லிக் கொண்டிருந்தால்—நூற்றுக்கு 28 பங்கு என்ற வளர்ச்சியை எப்படி நிறைவேற்ற முடியும்? நூற்றுக்கு 28 பங்கு என்ற அளவுக்கு உணவுப் பொருள்களை நாம் அதிகப்படுத்திக் காட்டாவிட்டாலும், வெளி நாடுகளிலிருந்து வாங்கிய கடன் தொகைகளைத் திருப்பித் தருகிற காலம் வரும்போது எதிலிருந்து திருப்பித் தரப்போகிறோம் ? இப்படி வாங்கிய கடன் தொகைகளை மத்திய சர்க்கார்தான் அதிகப் பொறுப்போடு கவனிக்க வேண்டுமென்றாலும், மாநில சர்க்கார் இந்தப் பொறுப்பிலிருந்து அடியோடு நழுவி விடமுடியாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொகுதியிலே இருக்கும் சிறு சிறு ஆறுகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே—சிறிய ஆறல்ல—பெரிய ஆறு இருக்கிறது. அந்தப் பெரிய ஆற்றில் நீர் இல்லாது இருப்பதற்குக் காரணம் மைசூர் ராஜ்யத்திற்கும், சென்னை ராஜ்யத்திற்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படாதது தான் என்று சென்ற ஆண்டிலே நான் சுட்டிக் காட்டினேன். சென்ற ஆண்டிலே, இப்படிப்பட்ட விவரங்களைப் பற்றிய பேசிய நேரத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் “இங்கு வந்து அவரவர்கள் தங்கள் தங்கள் தொகுதியிலுள்ள குறைகளைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை, நானே சென்று அந்தந்த இடத்தில் கவனிக்கிறேன்” என்று சொல்லி “பாகல்மேடு பாதை” என்ற ஒரு புதிய முறையை வகுத்தார்கள். அந்தப் புதிய முறை என்ன ஆயிற்று ? என்று இந்த நாட்டை ஆளுகிற அமைச்சரவர் நாட்டு மக்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த “பாகல்மேடு பாதையை” அவர்கள் மறுபடியும் பின்பற்றப்போகிறார்களா ?—அல்லது ஒரு தடவை பின் பற்றி, அது சரியல்ல என்று அதிகாரிகளிடமிருந்து யோசனை வந்த காரணத்தினால்—கைவிடப்பட்டு விட்டதா ?—அல்லது “பாகல்மேடு பாதை” என்பது தேர்தல் முடிந்த ஒரு நாளிலும், மறு தேர்தல் வருகிற மறு நாளிலும் நாங்கள் நடத்திக் காட்டுகிற வேடிக்கை என்று கருது கிறீர்களா ?—என்று நான் அறிய விரும்புகிறேன். “பாகல்மேடு முறை” அனுசரிக்கப்பட்டிருந்தால் இங்கே வந்திருக்கிற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கீரியார் திட்டத்தைப் பற்றியும், மஞ்சளாறு திட்டத்தைப் பற்றியும், அவர்கள் தொகுதியில் இருக்கிற ஆற்றைப்பற்றியும். . .



**Sri N. MAHALINGAM:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், இந்த “பாகல்மேடு” திட்டத்திற்கும், தற்போது விவாதத்தில் இருக்கும் இறிகேஷன் விஷயத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER:** கொஞ்சம் பொறுங்கள், அவர்களே சொல்வார்கள்.

**Sri C. N. ANNADURAI:** “பாகல்மேடு” திட்டத்திற்கும் கனம் மகாலிங்கம் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று நான் உணருகிறேன். ஆனால் “பாகல்மேடு” திட்டத்திற்கும் முதல் அமைச்சருக்கும் சம்பந்தம் இருக்கிறது. “பாகல்மேடு” என்பது வேடிக்கையான ஒரு தேசீய திருவிழா என்று கருதியிருந்தால் அதைப்பற்றி நான் கேள்வி கேட்டிருக்கமாட்டேன். “பாகல்மேடு” திட்டத்திற்குப் பிறகு நான் என்னுடைய தொகுதியில் இருக்கும் குறைபாடுகளை நமது முதல் அமைச்சருக்குத்தெரியப்படுத்த, அவரை தண்டலத்திற்கு அழைத்துச் சென்று ஒரு மாநாடு நடத்தினேன். அந்த மாநாட்டைப் பற்றி இந்த மாமன்றத்திலே நான் குறிப்பட்ட நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள்—எழுந்திருந்தல்ல—மற்ற அங்கத்தினர்கள் பேசுவது போலல்ல—வழக்கமாக உட்கார்ந்துகொண்டே சொல்லுகிற கருத்துக்களைப் போல—“ என்னை அழைத்துச் சென்று ஏமாற்றப் பார்த்தீர்கள் ” என்று சொன்னார். இந்தக் கருத்து ஒரு அமைச்சருக்கு இருக்குமானால்—பாகல்மேடு பாதையிலேயும் போக மாட்டோம்—தண்டலம் மார்க்கம் தப்பு அர்த்தம் கொடுக்கிறது—என்றால் இந்தக் குறைகளை இங்கே எடுத்துப் பேசுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது. அப்படிப் பேசுவதில்தான் பலன் இருக்கிறதா ? என்றால்—கனம் சுப்பையா முதலியார் அவர்கள் “பேசிப் பேசிப் பார்க்கிறோம், ஆனால் பலன்தான் இல்லை ” என்று சொன்னார்கள்—அப்படி சுப்பையா முதலியாரே பேசிப் பேசிப் பலன் இல்லையென்றால்—10 ஆண்டு காலமாகச் சொல்லியும் பலன் இல்லை என்றால்—நாங்கள் உங்களிடத்திலே பேசுவதை விட்டு, மக்களிடத்திலே பேசுவதைத் தவிர வேறு மார்க்கத்திற்கு எங்கே விடுகிறீர்கள் ? இதைத் தான் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் காட்ட பிரியப் படுகிறேன். பெரிய தொகை ஒதுக்குவதற்கு மத்திய சர்க்காரிடம் பணம் கேட்க உங்களுக்குத் துணிவு இல்லை—அந்தத் துணிவு இல்லையே என்று சொன்னால் “நாங்கள் வடக்கேயே கட்டி ஆள வேண்டுமென்றாலும் முடியும்” என்று பல பேர் சொல்லுகிறார்கள். இன்றைய தினம் இராஜா ஸர் முத்தையா செட்டியார் சொன்னதைப் போல, டில்லிக்குப் போகிறபோது கொஞ்சம் அதட்டிப் பணத்தை கேட்டு வாங்கவேண்டும். ஆனால், அதட்டுகிற நேரத்தில் அதட்டுகிறவருடைய தன்மையையும், அதட்டப் படுகிறவருடைய தன்மையையும் பொறுத்துத்தான் பலன் இருக்கும். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் நம் மாநில சர்க்கார் இன்றைய தினம் அனுமதி கேட்கிற நிலைமையில் இருப்பதைச் சுட்டிக் காட்டி பல தடவை பேசியிருக்கிறோம். பாலாறு திட்டத்தை வலியுறுத்திய நேரத்தில் நமது நிதி அமைச்சர் சென்ற ஆண்டு சொன்னார்கள்—மைசூர் இராஜ்யத்தோடு பேசி ஒன்றும் பலன் ஏற்படவில்லை என்று. இப்போது மண்டலக் குழு நிறுவியிருக்கிறார்கள்—அதாவது ஸோனல் கவுன்ஸில். அந்த மண்டலக் கமிட்டி பாலாறு பிரச்சினையைப் பற்றி அவர்கள் நிச்சயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எங்களுடைய செங்கற்பட்டு, வட ஆற்காடு, இரண்டு மாவட்டங்களுக்கும் பாலாற்றை விட்டால் வேறு வழி முறை இல்லை ஆற்று நீர் பாசனத்திற்கு. ஒன்று நீங்கள் பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டு வாருங்கள், அல்லது அதிலே இருக்கிற மணலை எல்லாம் எடுத்து, பெரிய பெரிய லாரிகளிலே ஏற்றி, கப்பல்கள் மூலமாக வெளி நாடுகளுக்கு அனுப்பி விடுங்கள். அல்லது சாதாரண கரம்பு நிலமாகவாவது ஆக்கித் தாருங்கள். இந்த இரண்டு மாவட்டங்களில் வளைந்து வளைந்து ஓடுகிற பாலாறு பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர் மேலேயில்லையே தவிர,

12-50 p.m. நல்ல நீர்பாசன நிபுணர்கள் அதிலே அடியூற்று நீர் (subsoil water) ஏராளமாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நீரைப் பயன்படுத்துவதற்கு இதுவரையில் என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். மைசூர் இராஜ்யத்தோடு கலந்து பேசுவதற்கு "ஸோனல் கவுன்சிலை" பயன்படுத்துங்கள். ஸோனல் கவுன்சிலில் இதைப்பற்றி பேசுவதற்கு இல்லை என்று கருதினால், இந்த மாமன்றத்தில் இருக்கிற வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்—எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை—கொண்ட அதிகாரம் படைத்த ஒரு நல்லெண்ண தூதுகோஷ்டி (Goodwill Mission)-ஐ மைசூர் சர்க்காரிடத்தில் சென்று பேசுவதற்கு நிறுவுங்கள். எப்பாடு பட்டாவது பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரவேண்டும். இந்த இரண்டு மாவட்ட மக்களும்—இன்றல்ல, நேற்றல்ல—எனக்கு வோட்டு அளித்த பிறகு அல்ல, அதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னாலிருந்தே, மனதில் இதைத்தான் ஆவலோடு எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பாலாற்றிலே தண்ணீர் கொண்டு வருவதற்கு வழிவகை சொன்னால், அதை காதில் வாங்க மறுக்கிறீர்கள். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளாமல், காஞ்சீபுரம் தொகுதிக்கு வரும்போது எல்லாம், காங்கிரஸ் அமைச்சர்களும் சரி, அவர்களால் தூண்டிவிடப்படுகிற பிரசாரகர்களும் சரி, "அண்ணாதுரை பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டுவந்துவிட்டாரா"? என்று பேசுகிறார்கள். அதனால் எனக்கு ஒன்றும் குறைவு ஏற்பட்டு விடவில்லை. பகீரதன் கங்கையைக் கொண்டுவந்தான் என்று சொல்லுகிற பரம்பரையைச் சேர்ந்த நீங்கள் மைசூர் இராஜ்யத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர முடியவில்லை என்றால், அது இந்த அமைச்சரவைக்குத்தான் இழுக்கே தவிர, அங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கு அல்ல என்பதை நான் வலியுறுத்திச் சொல்லுவேன். செய்யாறு திட்டத்தைப் பற்றி நீண்ட நாளைக்கு முன்னதாகவே நம்முடைய மராமத்து இலாக்கா அமைச்சருக்குத் தெரியும். இதற்கு அதிகமான பணம் தேவையில்லை. இந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவர்கள் என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அத்தனை தகுதிகளும் இந்தத் திட்டத்தில் இருக்கின்றன. செலவு குறைவு. பலன் அதிகம். அதிகமான சிக்கல்கள் இல்லை. கட்சி மாறுபாடு இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், பிற கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட்டாகச் சேர்ந்து செய்யாறு நீர்தேக்கத் திட்டத்தைப் பற்றி அமைச்சர் இடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் கூட அங்கே சென்று பார்த்து நிலைமையை ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையில் செய்யாறு திட்டத்தைப் பற்றி ஏதாவது குறிப்பு இருக்குமா என்று துருவித்துருவிப் பார்த்தேன். ஆனால் குறிப்பு எதுவும் இல்லை. இப்படி, இருக்கிற திட்டங்களை நிறைவேற்றாமல், புதிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்காமல், "இங்கே ஆறுகள் அதிகம் இல்லை, ஆகவே நீர்பாசனத்திற்கு வசதியில்லை" என்று சொன்னால், நாட்டிலே இருக்கிற விவசாயத்தை நீங்கள் எப்படி வளர்க்கப் போகிறீர்கள்? அதற்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஒரு வழி சொன்னார்கள், இப்பொழுது விவசாயி அதிகமான அளவுக்கு தண்ணீரைப் பாழ்படுத்தி விடுகிறான் என்று. இந்த அளவுக்கு தண்ணீரைப் பயன்படுத்தாமலே விவசாயத்தை வளரச் செய்யமுடியுமென்று சொல்லுவது நிபுணர்களுடைய கருத்தாக இருக்குமேயானால், அதை நாட்டிற்கு எடுததுச் சொல்லுங்கள். அதிகத் தண்ணீர் தேவையில்லை, இப்பொழுது விவசாயத்திறகு உபயோகிக்கப்படும் தண்ணீரை மிகக் குறைச்சலாக தண்ணீரைக் கொண்டு இந்த விளைச்சலைப் பெற முடியுமென்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், அந்தக் கருத்துக்கு நிபுணர்களின் ஒப்பம் இருக்கிறது என்றால், விவசாயத்துறை நிபுணர்களைக் கொண்டு அந்தக் கருத்தை நாட்டிலே பரப்புங்கள். பரப்பி, இந்த அதிகமான தண்ணீரைச் செலவழிக்காமலே, விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு வழிமுறையை நீங்கள் செய்து கொடுங்கள். தண்ணீரும் தரமாட்டீர்கள், உணவைப் பெருக்கச் சொல்லுவீர்கள், விலைவாசியைக் குறைக்க மாட்டீர்கள். எதிர் தரப்பிலுள்ளவர்கள் வாழ்த்தே



பாடவேண்டுமென்று கருதிக்கொண்டு இருப்பீர்களேயானால், இன்றைய தினம் எதிர் தரப்பிலிருந்து மட்டுமல்ல, உங்கள் சொந்த கட்சியிலிருந்தே சொல்லப்படுவதேயெல்லாம் வாழ்த்து என்று கருதுவீர்களேயானால், அதை உபசாரத்திற்காக வாழ்த்து என்று கொள்ளலாமே தவிர, கட்சிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தின்படி வாழ்த்து என்று கொள்ளலாமே தவிர, உண்மையில் அதைவிட வன்மையான கண்டனம் இருந்திருக்க முடியாது.

12-55 p.m. சர்க்கார் தயாரிக்கும் திட்டங்களை கண்டித்துவிட்டு, கடைசியில் திட்டங்களுக்கு ஆதரவு தருகின்றவர்களைப் பற்றி சென்ற கிழமை பண்டித நேரு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கனம் அங்கத்தினர்களின் கவனத்திற்கு கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். திட்டத்தில் உள்ள குறைபாடுகளை எடுத்து சொல்லிவிட்டு, கடைசியில் ஆதரிக்கிறேன் என்று சொல்வதை, "**That is illogical support, and I do not want it**" என்று பண்டித நேரு அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், இன்றைய தினம் உங்களுக்கு கிடைக்கும ஆதரவு அத்தனையும் கட்சிக் கட்டுப்பாட்டினால் கிடைக்கிற ஆதரவே தவிர வேறு வகையில் ஆதரவு கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் தெளிவாக எடுத்துச் சொல்லப் பிரியப்படுகிறேன். போடப்பட்டுள்ள பல திட்டங்களில், ஒரு திட்டத்தைப் போட்டால் மற்ற இடங்கள் பாதிக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து திட்டம் போடப்படுவது இல்லை. சாத்தனூர் திட்டத்தினால் வளவனூர் காய்கிறது என்று அந்த தொகுதி அங்கத்தினர் சொன்னால் அதை அமைச்சர் அவர்கள் அடியோடு மறுப்பதற்கு இல்லை. சாத்தனூர் திட்டத்தில் அதிகமான அளவு தண்ணீர் தேங்கவில்லை, மழை பெய்யவில்லை என்று சொல்லலாம். ஆனால் இந்த சாத்தனூர் திட்டம் நீண்ட நாளாக சர்க்கார் அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்ததற்கு காரணம் சாத்தனூர் அணைக்கட்டினால் வளவனூர் பகுதியில் பஞ்சம் வரக்கூடும் என்று அப்போதே கருதியிருந்ததால்தான். ஒரு இடத்தில் திட்டம் போட்டால் மற்ற இடங்களில் காய்ந்து போகிறது என்பதை யோசிக்காமலே திட்டம் போட்டிருக்கிறார்கள். உங்களுக்குத் திட்டம் போடத் தெரியவில்லை. போட வேண்டிய திட்டங்களை போடுவதற்கு ஏற்ற பணம் இல்லை. ஆனால் அறிக்கையில் "**Our engineers are in great demand elsewhere**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மைதான். நம் மின் பெரியார்கள் (எஞ்சினியர்ஸ்) நாட்டின் பல இடங்களில் தேவைப்படுகிறார்கள். இங்கு அவர்களை பயன்படுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் திறமைக்கு ஏற்ற அளவுக்கு இங்கு அணைக்கட்டு திட்டங்கள் போடப்படவில்லை. ஆகவே அவர்கள் வேறு இடங்களில் தேவைப்படுகிறார்கள். அங்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். நம்முடைய எஞ்சினியர்கள் அங்கு செல்வது நமக்கு சிறப்பு என்றாலும், நம்முடைய அமைச்சரவை அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு நல்ல திட்டங்களை போடவில்லை என்பதையும் அனுசரிக்கிறது. ஆகையினால் குறை இல்லாத முறையில் எல்லா கட்சிகளையும் கலந்து, அத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை நிறுத்திக்கொள்கிறேன்.

12-57 p.m. **Sri V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்றால், சிறிய நீர் பாசன திட்டங்களை எடுத்து நிறைவேற்றுவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும். நம்முடைய பிராந்தியத்தில் முக்கியமான சில பிராஜக்டுகள் கட்டி முடிந்துவிட்டன. அதன் காரணமாக அங்கே அநேக இயந்திரங்கள் உபயோகிக்கப்படாமல் சும்மா இருந்து கொண்டு இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும்.

சிறிய நீர்பாசன திட்டங்களை சரியாக மராமத்து செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். "ஸில்டிங் ஆப் டாங்ஸ்" குளங்களில் தூரு வாருவதற்கு முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். இப்பேர்பட்ட திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு சர்க்கார் முன்வரவேண்டும்.

அதேமாதிரி ஏரிகளையும், அதைச் சேர்ந்த வரவு கால்வாய்களையும் சரிவர மராமத்து செய்யவேண்டும். வரவு கால்வாய்களையும் சரிவர தூர் எடுத்து மராமத்து செய்தல் வெள்ளம்வரும் காலத்தில் அந்த ஏரிகள் நிரம்பும். இதற்காக சரியான ஒரு திட்டம் போடவேண்டும்.

ஏரிகளில் எல்லாம் "புல் டாங்க் லெவல் **(full tank level)** என்று இருக்கிறது. அந்த லெவலை எந்தெந்த இடங்களில் உயர்த்த முடியுமோ அவைகளை உயர்த்துவதற்கு சர்க்கார் முன்வர வேண்டும்.

நம் பிராந்தியத்தில் (சிவாஜமா சாகுபடி அன்ஆதரைஸ்ட் கல்டிவேஷன் காரணமாக பல சச்சரவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. "அன் ஆதரைஸ்ட் கல்டிவேஷன்" (சிவாஜமா சாகுபடி செய்கிறவர்களை உடனே அப்புறப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். 6 அல்லது 8 மாதங்களுக்கு தண்ணீர் வரக்கூடிய ஏரிகள் எல்லாம் இந்த ("வாஜமா சாகுபடி அன்ஆதரைஸ்ட் கல்டிவேஷன்" செய்பவர்களின் தொந்திரவுகளால் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குக் கூட வருவதில்லை. ஆகையால் எல்லோருக்கும் கஷ்டமாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகையால் இந்த விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1-00 p.m. பல ப்ராஜெக்ட் வேலைகள் முடிந்ததன் காரணமாக அங்கு உபயோகப் படுத்தப்பட்ட மிஷின்களையெல்லாம் டிஸில்ட்டிங்குக்கு **(desilting)** உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அந்த விதத்தில் இஞ்சினியரிங் டிபார்ட்மெண்டுக்கு ஒரு உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய பிரதேசத்தில் சுமார் 30 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. அவைகளில் சில சமீபத்தில் மராமத்து செய்திருந்த போதிலும் உடனடியாக அவைகளை பரிசீலனை செய்து எந்தந்த கிராமங்களுக்கு எந்தந்த நீர்பாசன திட்டங்களை அமைக்க வேண்டுமோ அவைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நீர்பாசன திட்டங்களை நாம் எந்த அளவுக்கு முன்னுக்குக் கொண்டுவர முடியுமோ அந்த அளவுக்கு முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு என்று ஒரு தனியான டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி அதற்கு என்று ஒரு சூப்ரன்டென்டிங் இஞ்சினியரைப் போட்டால் அது நல்ல முறையில் நடைபெறும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சிற்சில சப்-டிவிஷன்களை ஏற்படுத்தி அவைகளை கவனிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். உடனடியாக பஞ்சப் பிரதேசங்களில் ஆரம்பிக்கவேண்டும். செங்கற்பட்டு, வட ஆற்காடு போன்ற பஞ்சப் பிரதேசங்களில் உடனடியாக ஆரம்பிப்பதோடு தமிழ் நாட்டிலுள்ள பஞ்சப் பிரதேசங்களையும் பரிசீலனை செய்து அதை பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம், கோயம்பத்தூர் போன்ற பிரதேசங்களுடன் நிற்காமல் தமிழ் நாடு பூராவும் உடனடியாக பரிசீலனை செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாலாறு திட்டத்தைப் பற்றியும், செய்யாறு திட்டத்தைப்பற்றியும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளைப் பற்றி நானும் முன்பு அநேகம் தடவைகளில் சொல்லியிருக்கிறேன். கனம் அண்ணாதுரை அவர்களும் இதைப்பற்றி குறிப்பிட்டார். மைசூர் ராஜ்யத்துடன் கலந்து பேசி ஒரு ஒற்றுமையான திட்டத்தை அமைத்து அதை நிறைவேற்ற சர்க்கார் முன் வரவேண்டும். அதற்காக இந்த சர்க்கார் மத்திய சர்க்காருடைய உதவியையும் நாட வேண்டும். ஸோனல் கவுன்சிலில் மட்டும் பேசிப் பயன் இல்லை. மத்திய அரசாங்கத்துடன் பேசி இந்த வேலையைப் பூர்த்தி செய்ய முன் வரவேண்டும்.



அடுத்தபடியாக கிணறுகள் வெட்டுவதைப்பற்றி சர்க்கார் நன்றாக பரிசீலனை செய்யவேண்டும். தமிழ் நாட்டில் முன்பு பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் எல்லா ஜில்லாவிலும் கிணறுகள் வெட்டிக்கொள்வதற்கு சப்சிடி **(subsidy)** கொடுத்து வந்தார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய உதவியையும் பெற்று ஆயிரக் கணக்கான கிணறுகள் வெட்டப்பட்டு அதன் காரணமாக உணவு உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டன. அதே மாதிரியான ஒரு ஸ்கீமை **(scheme)** ஆரம்பித்து இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு போதுமானபடி சப்சிடி கொடுத்துவந்தால் அவர்கள் கிணறுகளை வெட்டிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். அப்படிப் பட்டவர்களுக்கு சப்சிடியாகக் கொடுத்தோ அல்லது கடனாகக் கொடுத்தோ உதவி செய்தால் நன்மையாக இருக்கும். அதற்கு எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது பெட்டர்மெண்ட் டாக்ஸ் அதாவது நில அபிவிருத்தி வரி என்று போட்டு வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். பஞ்சப் பிரதேசங்களில் கிணறுகள் வெட்டுவதற்கு சப்சிடி மூலமாகவோ அல்லது கடன் மூலமாகவோ கொடுத்து உதவி செய்து அதை வசூலிக்க வரியைகூட உயர்த்திக்கூட போடலாம், அதனால் பாதகம் இல்லை. ஆகவே கிணறுகள் வெட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி அதிகப்படியான கிணறுகளை வெட்டினால் அதிகமாக உணவு உற்பத்தியாகும். அதில் மக்களுடைய பங்கும் நிறைய இருக்கும் என்பதை நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

**(Deputy Speaker in the Chair.)**

தவிர ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள சிறு சிறு திட்டங்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் உடனடியாக எடுத்து நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். பரம்பிக்குள திட்டத்திற்கு மூன்று, நாலு கோடி ரூபாயாகும், சின்னச் சின்ன திட்டங்களையெல்லாம் எடுத்துக்கொண்டால் பரம்பிகுளம் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு இடையூறாக இருக்கும், அதனால் சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தில் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். பொது ஜனங்களுடைய அபிப்பிராயமும் அப்படித்தான் இருக்கிறதாக தெரிய வருகிறது. கேரள ராஜ்யத்துடன் பேசி அந்த திட்டத்தை எடுத்து நடத்துவதைப் பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. அந்த திட்டத்திற்கு பணம் வேண்டும் என்ற காரணத்தால் மற்ற திட்டங்களை நிறுத்தி வைக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். கிணறுகளை வெட்டுவதற்கு நாம் எவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வளவு தூரம் ஏரிகளை மராமத்து செய்துகொள்வதற்கும் ஆராய்ச்சி செய்யவேண்டும். மத்திய அரசாங்கத்துடன் சரிவர விவாதித்து பணம் பெருவதற்கு வழி தேடிக் கொள்ள வேண்டும். ஸோனல் கவுன்ஸிலில்மட்டும் பேசிப் பயன் இல்லை. நமக்கு வேண்டிய போதுமான பணத்தை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் ஜில்லா போர்டுகளுக்கு சிறிய உதவி அளிப்பது போன்ற நிலைமை ஏற்படாதபடி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து போதுமான உதவி பெருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி மத்திய சர்க்கார் நமக்கு உதவி அளிக்காமல் இருப்பதைப் பார்த்தால் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. டில்லிக்குப்போய் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளைக் கண்டு பேசிவிட்டு வராமல் அங்குள்ள மந்திரிகளுடனும், பிரதம மந்திரியுடனும் கலந்து

பேசி நமக்கு வேண்டிய உதவியைப் பெற்றுக்கொண்டு வரவேண்டும். அங்குள்ள செக்ரட்டரியையும் டிபார்ட்மெண்டிலுள்ளவர்களையும் கண்டு பேசிவிட்டு வருவதில் எந்த விதமான பிரயோசமும் இல்லை. இங்குள்ள அங்கத்தினர்கள் எவ்வளவோ திட்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பண உதவி பெற்று இங்கு சொல்லப்பட்ட திட்டங்களை எல்லாம் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி எடுத்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் அவைகளையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **THE HON. SRI P. KAKKAN:** மதிப்பிற்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை அரசாங்கம் நீர்பாசன திட்டத்தை நல்ல முறையில் மக்களின் நன்மைக்காக எவ்வாறு உதவி செய்ய வேண்டுமோ அதற்கு இணங்கி பல திட்டங்களைப்போட்டு, அவைகளை நிறைவேற்றி வருவதைப்பற்றிய அறிக்கை ஒன்றை முன்னதாகவே அங்கத்தினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நீர்பாசன திட்டம் மிகவும் சிறந்தது, அது மக்களுக்கு எப்படி பயன்படக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதில் அங்கத்தினர்களைக் காட்டிலும் அரசாங்கம் அதிக அக்கரை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை திட்ட வட்டமாகச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பேசும்போது அவர்கள் தொகுதியிலுள்ள பல ஏரிகளைப்பற்றியும் ஆறுகளைப்பற்றியும் அந்த ஆறுகளைத் தடுத்து நிறுத்தி வைத்தால் அது மக்களுக்கு எவ்வாறு பயன் அளிக்கும் என்ற வரலாற்றைப்பற்றியும் தெரிவித்தார்கள். உண்மையிலேயே ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்வதாக இருந்தால் அதனால் பெரிய பயனை அடைந்தாலும் அல்லது அடையாவிட்டாலும்கூட அதனால் ஏற்படக்கூடிய வரவுக்கும் செலவுக்கும்—லாபம் பெற வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும்—வரவுக்கும் செலவுக்கும் சரிகட்டக்கூடிய அளவில் இருந்தால் அந்த திட்டங்களையெல்லாம் எடுத்து நடத்த அரசாங்கம் பின் நிற்காது என்பதை உங்களுடைய மத்தியில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதிப்பிற்குரிய அண்ணாதுரை அவர்கள் பேசும்போது பாகல்மேடு திட்டத்தைப்பற்றி பட்ஜெட் பிரசங்கத்தில் குறிப்பிட்டது மாதிரி இப்பொழுதும் குறிப்பிட்டுள்ளார். ஏனென்றால், அவருக்கு அந்த திட்டத்தில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதால் அதைப்பற்றி குறிப்பிட்டார். இந்த நாடு விடுதலை அடைந்துவிடும் என்ற நம்பிக்கைகூட இல்லாமல் இருந்தவர் அவர். அதைப்போல் இல்லாமல் பாகல்மேடு திட்டத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று நான் திராவிட முன்னேற்றக் கழக தலைவரையும் அவர்களைச் சார்ந்த அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு திட்டத்தை எடுத்து நடத்தவேண்டும் என்றால் அதையே பதினைந்து நாட்களுக்கு உட்கார்ந்து கொண்டு நடத்திவிட முடியாது. அப்படி நடத்தினால் அதே வேலையாக இருக்கிறார்கள், மற்ற வேலைகளை கவனிப்பது இல்லை என்று கேள்வி கேட்பார்கள். மற்ற வேலைகளுடன் அந்த வேலையையும் எடுத்து நடத்திக் கொண்டு வந்தால் இந்த வேலையில் கவனம் செலுத்தவே இல்லை என்று கேள்வி கேட்பார்கள். எந்தந்த திட்டங்களை எந்தந்த முறையில் நடத்த முடியுமோ அந்தந்த முறையில்தான் நடத்தவேண்டும். அதனால் பாகல்மேடு வரலாற்றைப்பற்றி பேசுவதில் பிரயோசனம் இல்லை என்பதை கனம் அண்ணாதுரை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றும் அவர் பேசும்போது கனம் முத்தையா செட்டியார் அவர்கள் பேசியதைப்பற்றி குறிப்பிட்டார். **(same side goal)** அடித்தால் யாருக்குமே சிரிப்புத்தான் வரும். அதைப்போலவே இருக்கிறது கனம் அண்ணாதுரை அவர்கள் கனம் முத்தையா செட்டியார் அவர்கள் பேசியதைப்பற்றி குறிப்பிட்டது. கனம் செட்டியார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார் "சட்டசபை நடவடிக்கை நடக்கும்போது விவாதம் சம்பந்தப்பட்ட மந்திரிதான் இருப்பார், மற்றவர்கள் இருக்கமாட்டார்கள்" என்று சொன்னதைக் குறிப்பிட்டார். அதற்கு அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்லுகிறேன் என்றால் மந்திரிகள் இங்கு இல்லாவிட்டாலும் அவர்



களுடைய அறைகளில் இங்கு பேசுவதைக் கேட்கும்படியான வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது, அதன் மூலமாக அவர்கள் அங்கிருந்துகொண்டே இங்கு நடப்பதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். கனம் அங்கத்தினர்கள் அந்த அறைகளுக்குச் சென்று மந்திரிகளுடன் பேசும் சமயங்களைத் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் அவர்கள் கேட்டுக்கொண்டுதானிருப்பார்கள். இங்கு என்ன பேசப்படுகின்றன என்பதையெல்லாம் மந்திரிகள் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள். மராமத்து மந்திரி என்னென்ன திட்டங்களையெல்லாம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகிறாரோ அதற்கெல்லாம் ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிச் சொல்லுவதற்கு ஒரு பழமொழி என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. "வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் அகப்பட்டால் சும்மா இருப்பாளா" என்று சொல்வதுண்டு. யாராவது குற்றம் சொல்வதாக இருந்தால் அதை பயன்படுத்திக்கொண்டு பேசுவதாக இருக்கிறது. கனம் முத்தையா செட்டியார் என்ன சொன்னார் என்றால் மத்திய சர்க்காரை அணுகி இன்னும் அதிகப்படியாக பணம் பெறவேண்டும் என்றும் சொன்னார். உண்மையிலேயே ஒரு திட்டத்தை எடுத்து நடத்தவேண்டுமென்றால் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். முதல் முதலாக ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்த திட்டத்தின்மூலம் கிடைக்கும் தண்ணீர் குறைந்த பட்சம் ஒரு வருஷமாவது கிடைக்கும்படியான நிலையில் இருக்கவேண்டும். அணைகளைக் கட்டிவிட்டு தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் செலவு செய்யப்பட்ட பணம் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். அதனால் திட்டங்களை நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியதாக இருக்கிறது. நாம் ஒரு அணைக்கட்டு கட்டுவதாய் இருந்தால், அதைப் பரிசீலனை செய்து மக்களுக்கு பயன்படும்படி கட்டவேண்டுமே ஒழிய, வீணாக அழகுக்காக அணைகட்டுவதில்லை என்ற தன்மையை தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கெல்லாம் 1-10 p.m. அணைக்கட்டுகள் கட்டவேண்டுமோ அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். திருச்சியில் ஒரு டிவிஷனை ஏற்படுத்தி சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ, அவைகளையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதற்காக ஒரு தனி டிவிஷன் அமைத்து ஒரு "சூபரின்டெண்டிங் என்ஜினியர்" போட்டு எங்கெல்லாம் சிறிய அணைகளை கட்ட முடியுமோ அதையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கத்தினர்கள் அநேக சிறிய அணைக்கட்டுகளைப்பற்றி சொன்னார்கள். எந்தந் திட்டங்களெல்லாம் சாதகமாக இருக்கிறதோ, நிறைவேற்ற முடியுமோ, அவைகளையெல்லாம் செய்வோம் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் கருணாநிதி அவர்கள் குடவனாற்றைப்பற்றி போன வருஷம் சொன்னார்கள். இன்றையதினமும் மீண்டும் சொன்னார்கள். எல்லா ஜில்லாக்களையும் அவர்கள் தொட்டுப் பார்த்திருக்கிறார்கள், எல்லா ஜில்லாக்களையும் பற்றி பேசியிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுவதற்காக. பரவாயில்லை. எப்படியிருந்தாலும் நல்லதைச் சொன்னால் அதைக் கேட்பதற்கு தயாராக இருக்கிறேன். அவர்கள் பேசும்பொழுது கல்லணையை கரிகாலச் சோழன் காலத்தில் சொற்ப செலவில் கட்டி முடித்தார்கள் என்று சொன்னார்கள். நானும் சொல்லுவேன். காவேரியிலுள்ள "அப்பர்" அணைக்கட்டு அந்தக்காலத்தில் சொற்பச் செலவில் கட்டப்பட்டதுதான். ஆனால் அந்தக்காலத்திய நிலைமையையும் இப்பொழுது இருக்கும் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அந்தக்காலத்தில் சொற்ப செலவில் கட்ட முடிந்திருக்கலாம். ஆனால் இந்தக்காலத்தில் கூலியை குறைத்துக் கொடுத்தால், உடனே எதிர்க்கட்சியில் உள்ளவர்களே இதை எதிர்த்து கிளர்ச்சி செய்யும்படி ஊழியர்களை தூண்டி விடுவார்கள். கரிகாலச் சோழன் காலத்தில் இப்படிப்பட்ட கட்சிகளையே பார்த்தது கிடையாது. அந்தக் காலத்தில் மக்கள் ஆக்க வேலையில் ஈடுபட்டு ராஜாக்களுக்கு பக்கபலமாக பணியாற்றி வந்தார்கள். அம்மாதிரி நிலைமை

இப்பொழுது இல்லை. ராஜா மண்வெட்டியை எடுத்துக்கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், சொன்னபடி வருவான். ஆனால் இப்பொழுது பல கோடி ரூபாய் செலவு செய்து மக்களுக்கு அள்ளிக்கொடுத்து அணைக்கட்டுகளை கட்ட வேண்டியிருக்கிறது.

**Sri C. N. ANNADURAI :** அந்தக்காலத்தில் கடவுளை தொழிலாளியாக வந்தபொழுது சரியாக வேலை செய்யவில்லை என்று புராணம் சொல்லுகிறது.

**Sri P. G. KARUTHIRUMAN :** உங்களுக்குத்தான் புராணத்தில் நம்பிக்கையில்லையே ?

**The Hon. Sri P. KAKKAN :** நமது 'சீப் வீப்' கருத்திருமன் அவர்கள் சொல்லியபடி அவர்களுக்கு புராணத்தில் நம்பிக்கையில்லை. ஆனால் வேண்டும்போது அதை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவார்கள். வேண்டாதபோது விட்டுவிடுவார்கள். கனம் அண்ணாதுரை அவர்கள் பேசும்போதுகூட பகீரதன், பிரயத்தனம் செய்த புராண வரலாற்றினை எடுத்துச் சொன்னார்கள்.

**Sri A. GOVINDASAMY :** உங்களுக்கு அதில் நம்பிக்கை இருக்கிறது.

**The Hon. Sri P. KAKKAN :** எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்றால், அதை நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. கனம் கருணாநிதி அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். செய்ததைச் சொல்லிவிட்டால் தங்கள் கட்சிக்கு பலம் குறைந்துவிடும் என்ற காரணத்தினால் அவர்கள் செய்ததை சொல்லாமல் விட்டு விட்டார் போலும். உள்ளதை உள்ளவாறு சொல்லி உங்கள் கட்சிக்கு பலம் தேடிக்கொள்ளுவதாயிருந்தால் பரவாயில்லை. நம்முடைய அரசாங்கம் அதிகப்படியாகவே செய்திருக்கிறது என்பதை உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக நாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகமான தொகையை பெற்றிருக்கிறோம். " அனுமதி கேட்டிருக்கிறோம் " என்று நாங்கள் சொல்லுவதாக அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். அனுமதி கேட்காமல் என்ன அடித்தா கேட்பது ? நாங்கள் எவ்வளவு எதைச் சொல்லி எதை உரைத்தாலும் எதிர் தரப்பிலுள்ளவர்களுக்கு நம்பிக்கை வருவதில்லை. (குறுக்கிடு.)

**DEPUTY SPEAKER : Hon. members should not interrupt.**

**The Hon. Sri P. KAKKAN :** சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து உதவியை பெற்றிருக்கிறோம். குறிப்பாக நமது தாயகத்தோடு சேர்ந்த கன்னியாகுமாரியில் உள்ள கண்மாய்கள் தூர் அடைந்து நீர்மட்டம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவைகளை மிகவும் ஆழப்படுத்தி, ஒரு போகம் விளைவதை இருபோகமாக விளையும்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அது மட்டுமல்ல, எங்கெல்லாம் பி.டபிள்யூ.டி. ஏரிகள், கண்மாய் இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் தூரெடுத்து செப்பனிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. பி.டபிள்யூ.டி. கண்மாய்களில், ஏரிகளிலே பல வகைகள் உண்டு. கனம் அங்கத்தினர் பெரியகருப்பனம்பலம் சொல்லிய மாதிரி ஏ-1, ஏ-2 என்று இரண்டு பிரிவுகள் உண்டு. ஏ-1 கண்மாய்களை பி.டபிள்யூ.டி. மூலமாக செப்பனிடுவது உண்டு. ஏ-2 என்பது 200 ஏக்கருக்கு குறைவாக தண்ணீர் பாயக்கூடிய ஏரியா. அதை கலெக்டர் அவர்கள் பார்த்து செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இருந்தாலும், அப்படிப்பட்ட 200 ஏக்கருக்குள்ளாக பாயும் ஏரிகள். கண்மாய்கள் செப்பனிடப்பட வேண்டியிருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தால், அவைகளை தூரெடுத்து செப்பனிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும். எதிர்க்கட்சித் தலைவர் கனம் ராமசுவாமி முதலியார் அவர்கள் ஏரிகளுக்கு வரக்கூடிய கால்வாய்களை செப்பனிட



வேண்டுமென்று சொன்னார்கள். அவைகளை அரசாங்கம் அதிக கவனத்தோடு பார்த்துக்கொண்டு வருகிறது. வரத்துக் கால்வாய்கள் மண்மேடிட்டு இருந்தால், அவைகளையெல்லாம் அப்புறப்படுத்தி, மழை பெய்யும்போது ஆறுகளில் இருக்கும் தண்ணீரை ஏரிகளுக்கு கொண்டுவருவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்துவருகிறது. கண்மாய்கள், சிறு ஏரிகளைப்பற்றி கனம் ராமச்சந்திரன் போனமுறை சொன்னார். ஏரிகளுக்கு பின்னால் இருக்கக்கூடிய நிலங்களுக்கு எவ்வளவு தூரம் தண்ணீர் கொடுக்கமுடியும், " காட்ச்மெண்டு ஏரியா " எவ்வளவு என்பதையெல்லாம் பரிசீலனை செய்துபார்த்து, அதுபோக வீணாக இருந்தால் மீதம் உள்ள நிலங்களை அங்கு உள்ள மக்களுக்கு கொடுப்பதுபற்றி பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கிறது. அந்தக் கண்மாயை நம்பி வாழும் மக்களுக்கு பாதகம் இல்லாமல் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. வரத்துக்கால், கண்மாய்கள் இவைகளையெல்லாம் எந்த முறையில் செப்பனிட வேண்டுமோ, அதையெல்லாம் அரசாங்கம் கவனித்துக்கொண்டு வருகிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** சர்க்கார் பல காரியங்களை செய்திருப்பதாகவும், செய்யப்போவதாகவும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அநேக அங்கத்தினர்கள் சில முக்கியமான திட்டங்களைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த பிராந்தியங்களிலுள்ள சட்டசபை அங்கத்தினர்களைப்போட்டு, அந்தக் கமிட்டி கூட்டத்திற்கு என்ஜினியர்களையும் வரவழைத்து, கலந்து விவாதித்து எந்தெந்த திட்டங்கள் சாத்தியமோ அவைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு அப்பொழுதே அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**The Hon. Sri P. KAKKAN :** ஒவ்வொரு பட்ஜெட் விவாதத்தின் போதும் அங்கத்தினர்கள் பேசுவதையெல்லாம் அரசாங்கம் குறிப்பெடுத்து, அவைகளைப் பரிசீலனை செய்து எவைகளெல்லாம் சாத்தியமோ, சாதகமாக இருக்கிறதோ அவைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுகிறது. ஆதலால், அதற்காக எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டி போடவேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் இதற்காக நீர்ப்பாசன அட்வைஸரி கமிட்டி போட்டிருக்கிறோம். மாகாண ரீதியிலும் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தக் கமிட்டியிடத்தில் அங்கத்தினர்கள் தங்களுடைய குறைகளை சொல்லி நிவர்த்தி செய்துகொள்ளலாம். அதற்காக தனியாக ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்றால், அது இயலாது. அதற்காக ஒரு தனி கமிட்டி அமைப்பது நலமாக இருக்காது. அப்படிச் செய்தால் அரசாங்கத்தினிடம் நம்பிக்கை இல்லை என்றுதான் நினைக்கவேண்டியிருக்கும். ஜில்லாவிலுள்ள எல்லா எம்.எல்.ஏக்களும் இந்த அட்வைஸரி கமிட்டி கூட்டத்திற்கு போகலாம். அங்கே உங்களுடைய குறைகளை சொல்லிக் கொள்ளலாம். அப்படிச் சொல்லியும் கவனிக்கப்படாவிட்டால், பிறகு அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால், அரசாங்கம் அதை கவனிக்கும் என்பதை மிகவும் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நல்லசிவம் அவர்கள் பேசும்பொழுது பவானி ஆற்று நீர்ப்பாசன குறைகளைப்பற்றி சொன்னார்கள். அங்கே உள்ள குளங்களையெல்லாம் செப்பனிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டுதான் இருக்கிறது. வரத்துக் கால்வாய்களையும் செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டுதான் இருக்கிறது. 1-20 p.m. அவர் சோஷலிஸ பாணியில் ஒரேமாதிரி வரி ஏற்படுத்த வேண்டும் என்ற தொனியில் பேசியிருப்பது சரியல்ல. லோயர் பவானி அணைக்கட்டு பிரதேசத்திலும், தஞ்ஜாவூரிலும் ஒரே ரேட் வைத்தால் அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போல் இருக்கும். எங்கு நிலத்தின் வளப்பினை அதிகமாக இருக்கிறதோ, அதிகப்படியான விளைவு இருக்கிறதோ, அதற்குத் தகுந்த மாதிரிதான் ரேட் போட முடியும். காடாரம்ப பிரதேசத்

[Sri P. Kakkan] [26th March 1958

திற்கும், மற்ற இடங்களுக்கும் ஒரே ரேட் போட முடியாது. இடத்திற்கு தகுந்தாற்போல்தான் ரேட் இருக்க முடியும். புதியதாக நீர்ப்பாசன திட்டம் நிறைவேற்றப்பட்ட இடத்திற்கும் மற்ற இடங்களுக்கும் ஒரே ரேட் போடுவது சாத்தியமல்ல. மாகாணம் பூராவும் ஒரேமாதிரியான ரேட் போட முடியாது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். கீழ் பவானி அணைக் கட்டுப் பிரதேசத்தில் விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரையிலும், கோவை ஜில்லாவிலுள்ள பவானி, கோபிச்செட்டிப்பாளையம் தாலூக்காக்களைச் சேர்ந்த விவசாயிகளும், இதர தாலூக்காக்களிலுள்ள விவசாயிகளும் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்தினார்கள். சென்ற வருஷம் ஒரு மகாநாடு நடத்தினார்கள். சமீபத்தில்கூட ஒரு மகாநாடு நடத்தினார்கள். பயிரின்மீது வரி விதிக்கக்கூடாது என்றும், நிலங்களின் தரங்களை நிர்ணயித்து நிலத்தின்மீது வரி விதிக்க வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்தது. அதேமாதிரி அரசாங்கம் நிலங்களை தரவாரியாகப் பிரித்து வரி விகிதத்தை நிர்ணயித்தது. நஞ்சை நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாய் வரி விதிக்க வேண்டுமென்றும், தோட்ட நிலங்களுக்கு 17-3/4 ரூபாய் வரி விதிக்க வேண்டுமென்றும், புஞ்சை நிலங்களுக்கு (ட்ரை லாண்ட்ஸ்) $11\frac{1}{4}$ ரூபாய் வரி விதிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் தீர்மானித்தது. விவசாயிகள் மகாநாடு நடத்தினார்கள். அந்த விவசாயிகளுடன் கலந்தாலோசித்துத்தான் அரசாங்கம் இந்த விகிதங்களை நிர்ணயித்திருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்த விகிதங்களைப்பற்றிக் குறை கூறுவது சரியல்ல. அங்கே எந்த நிலங்களிலும் எதை வேண்டுமானாலும் பயிர்செய்துகொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று இப்போது சொன்னால் அதை எவ்வாறு அனுமதிப்பது? சமீபத்தில் நாங்கள் ஓரளவிற்கு அனுமதித்திருக்கிறோம். ஆற்றங்கரையில் நிறையப் பம்புகளை வைத்து விட்டால் கால்வாயில் எல்லா இடங்களிலும் தண்ணீர் போகாது. கடைக் கோடியில் இருக்கும் நிலங்களுக்கு பாதகமில்லாத முறையில் கிணற்றுப் பாசனம் இருக்குமானால் அதை ஓரளவு அனுமதித்திருக்கிறோம். பருத்தி போன்ற மிகவும் லாபகரமான பயிர்களுக்கு $11\frac{1}{4}$ ரூபாய் விதித்தால் அதைக் கொடுப்பதில் அந்த விவசாயிகளுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? ஸ்ரீ. கருத்திருமன் அங்குள்ள விவசாயச் சங்கத்தின் காரியதரிசி. அந்த விவசாயிகள் இந்த விகிதங்கள் நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பு பெரிய போராட்டம் நடத்தினார்கள். ஸ்ரீ சேனாபதி கௌண்டர், ஸ்ரீ கருத்திருமன் முதலியவர்களுடனும், மற்ற விவசாயிகளுடனும் சேர்ந்து கலந்தாலோசித்துத்தான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம். கீழ் பவானி ஆயக்கட்டுதாரர்களுக்குக் கெடுதல் செய்ய நாங்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு நாங்கள் கெடுதல் செய்வதாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம் நினைக்கக்கூடாது. தங்கள் கட்சிக்கு பலம் தேடுவதற்காக பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் இந்த 'விகிதங்களைக்குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடாது. காங்கிரஸ் அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கும் விகிதம் அதிகமானது என்று சொல்லவேண்டும் என்ற நோக்கத்துடன், காங்கிரஸ் அரசாங்கத்தார் $11\frac{1}{4}$ ரூபாய் விதிக்கிறார்கள்; 10 ரூபாய்தான் விதிக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அரசாங்கத்தார் ஒன்றிற்குப் பத்துத் தடவைகள் சிந்தித்ததுடன், விவசாயிகள் மகாநாட்டின் தீர்மானத்தைப் பரிசீலித்துத்தான் இந்த விகிதத்தை நிர்ணயித்திருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஸ்ரீ நேசமணி கன்னியாகுமரி ஜில்லா சம்பந்தப்பட்ட முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களை குறிப்பிட்டார்கள். நெய்யாற்றங்கரை "லெப்ட் பாங்க் கானல்" லைப்பற்றிச் சொன்னார்கள். அதையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றுதான் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். அது திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் அந்த ஜில்லா இருந்தபோதே அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்வதென்றால், அது லாபகரமான திட்டமாக இருக்குமா என்று மந்திரிகளும், கனம் அங்கத்தினர்களும் நிர்ணயிக்க முடியாது. அதைத் தீர்மானித்து அபிப்பிராயம் கூறுவதற்கு எஞ்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறும் அபிப்பிராயத்தை அறிந்த



26th March 1958] [Sri P. Kakkan]

பிறகுதான் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாமா வேண்டாமா என்று முடிவுசெய்யமுடியும். ஆகவே உடனடியாக எந்தத் திட்டத்தையும் எடுத்து கொள்ளமுடியாது. சிற்றாறு, பட்டணங்கால் ஏரிகளைப்பற்றி ஸ்ரீ நேசமணி குறிப்பிட்டார். அது நல்ல திட்டம். அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்காவிட்டாலும், பின்னராவது எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும். ஆகவே அந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யும். வீணாகப் போகும் தண்ணீரை மக்களுக்கு பயனளிக்கும்படி செய்வதற்கான திட்டங்களை வகுப்பதில் அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஸ்ரீ சுப்பையா முதலியார் இன்று ஆத்திரத்தோடு பேசினார். மக்களுக்கு இருக்கும் கஷ்டத்தை விளக்குவதற்காகத்தான் அவர் அவ்வாறு பேசினார் என்று நினைக்கிறேன். சில திட்டங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை என்று சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூறினார்கள். அரசாங்கம் லாபகரமான திட்டங்களை முதலில் நிறைவேற்ற விரும்புகிறது. அப்படிச் செய்வதுதான் சரி. நஷ்டம் ஏற்படக்கூடிய திட்டங்களை எடுத்துக்கொண்டால் "லாபகரமான இதர திட்டங்கள் இருக்கும்போது அவைகளை ஆரம்பித்தீர்களே" என்று சொல்வார்கள். ஆகவே நாங்கள் ராஜ்யத்திலுள்ள லாபகரமான திட்டங்களையே முதலில் எடுத்துக்கொள்ளுகிறோம். எனவே, திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதை ஜில்லா மனப்பான்மையுடன் பார்க்கக்கூடாது என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவில் என் பரம்பிக்குளம் திட்டத்தை இப்போது எடுத்துக்கொள்கிறோம் என்றால், அந்தத் திட்டத்தில் மழை பெய்யும் பகுதிகள் எல்லாம் நம் ராஜ்யத்தில் இருக்கின்றன. எனவே அத்திட்டம் நமக்கு மிகவும் சாதகமான திட்டம். இந்தக் காரணத்தால்தான் அந்தத் திட்டத்தை முதலில் எடுத்துக்கொண்டோம். 3 லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கராக்களில் தண்ணீர் பாய்வதற்கு வகைசெய்யக்கூடியது அந்தத் திட்டம். மிகவும் வரண்ட பிரதேசங்களாகிய பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை முதலிய தாலூகாக்கள் அந்தத் திட்டத்தால் பயனடையும். கனம் நிதி அமைச்சர் கோயம்புத்தூர் வாசியாக இருப்பதால் கோயம்புத்தூருக்குப் பயனளிக்கும் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்றும் இதர திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்றும் ஸ்ரீ. சுப்பையா முதலியார் குறிப்பிட்டார். இது மிகவும் வருந்தத்தக்கது.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : நான் அவ்வாறு சொல்லவில்லை. பஞ்சம் தாண்டவமாடுகிறது, இரக்கம் காட்டுங்கள் என்று தான் சொன்னேன்.

**The Hon. Sri P. KAKKAN** : ஸ்ரீ சுப்பையா முதலியார் என்று தவறுதலாகச் சொல்லிவிட்டேன். ஸ்ரீ. சுப்பையா நாயக்கர் அவ்வாறு சொன்னார்.

ஓரியாறு திட்டத்தைப் பொறுத்த வரையில், அது சம்பந்தமாக எஞ்சினியர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டோம் என்று ஸ்ரீ. சுப்பையா முதலியாரிடம் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அது கொஞ்சம் லாபகரமில்லாத திட்டம்தான். பம்பையாறு திட்டத்தை எடுத்துக்கொண்டால், அது அதிகப் பயனளிக்கும் திட்டமாக இருக்கும் என்று தோன்றுகிறது. நீர்ப்பாசன வசதியுடன் மின்சார வசதியும் கொடுக்கக்கூடிய திட்டங்களை முதலில் எடுத்துக்கொள்வது நல்லது. ஏனென்றால் அப்படிப்பட்ட திட்டங்கள் அதிக லாபகரமானவை. எனவேதான் சில திட்டங்களை இப்போது எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறோம். அதற்காக நாங்கள் பாராமுகமாக இருப்பதாக யாரும் நினைக்கவேண்டாம் என்றும் ஆத்திரப்படவேண்டாமென்றும் கனம் அங்கத்தினர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்புக்குரிய அங்கத்தினர் ஸ்ரீ. கே. அப்பாவு பிள்ளை அவருடைய தாலூகா சம்பந்தப்பட்ட திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். ஸ்ரீ. முனி ரெட்டி அவர்களாலும் அந்தத் திட்டங்கள் குறிப்பிடப்பட்டன. சின்னாறு திட்டம் சம்பந்தமான இடங்களை நானே நேரில் பார்த்தேன். அந்தத் திட்டம் பலனளிக்கக்கூடிய திட்டம். அதை நிறைவேற்றுவதற்கு கொஞ்சம் அதிகமாகப் பணம் செலவாகக்கூடும் என்றாலும் சேலம் ஜில்லா வறண்ட பிரதேசமாக இருப்பதால், அதை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ. அப்பாவு பிள்ளை எழுந்தார்).

DEPUTY SPEAKER : This is not question hour. The Hon. Minister will explain everything in his speech.

THE HON. SRI P. KAKKAN: ஸ்ரீ. அப்பாவு பிள்ளை என்ன சொல்ல விரும்புகிறார் என்பது எனக்குத் தெரியும். அந்தத் திட்டம் தர்மபுரி தாலூகாவிற்குத் தானே பயன்படும் என்று கேட்க விரும்புகிறார் என்று நினைக்கிறேன். ராஜ்யம் முழுவதையும் மனதிற்கொள்ளவேண்டுமே தவிர, ஜில்லாக் கண்ணோட்டத்துடனோ தாலூகாக் கண்ணோட்டத்துடனோ இந்தத் திட்டங்களைப் பார்க்கக்கூடாது. அந்தத் திட்டம் கனம் அங்கத்தினரின் பிரதேச எல்லைக்குள்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

சேனாபதித் திட்டத்தைப்பற்றியும், தொட்டஹள்ளித் திட்டத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்டது. அவை ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டன. அவை அவ்வளவு லாபகரமானவைகளாகத் தெரியவில்லை. ஆகவே தான் அவைகளை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. என்னைப் பொறுத்தவரையிலும், அந்தத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு வந்து அவைகளை நேரில் பார்க்க வேண்டுமென்று சொன்னால் நான் வருவதற்குத் தயாராயிருக்கிறேன். அந்தத் திட்டங்களை நன்றாகப் பரிசீலித்தபிறகுதான் கைவிட்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, அங்கே இருக்கும் ஒரு கண்மாயைப் பற்றி குறிப்பிட்டார்கள். அந்தக் கண்மாயைப் பார்ப்பதற்கு நான் சென்றிருந்தபோது அங்குள்ள கிராம மக்கள் சொன்னதை நான் கேட்டேன். அது சம்பந்தமாக நிபுணர்களிடமிருந்து ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அது வந்தபிறகுதான் எதையும் சொல்லமுடியும்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ. கருணாநிதி அவர்கள் நந்தன் கால்வாயைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே நந்தனார் பெருமையைப் பற்றி கூறினார். அவர் இங்கே ஒருவிதமாகப் பேசுவார், வெளியில் வேறொரு விதமாகப் பேசுவார். வெளியில் சென்று நந்தனாரை சிதம்பரத்தில் எரித்துவிட்டார்கள் என்று சொல்லுவார்.

குடவனாறு திட்டம்பற்றி குறிப்பிடப்பட்டது. அது பற்றி முடிவு செய்வது இலகுவான காரியம் அல்ல. அதை நிபுணர்கள் பரிசீலித்து அபிப்பிராயம் தெரிவித்த பிறகுதான் நான் பதில் சொல்ல முடியும். ஆகவே அது சம்பந்தமாக சர்க்கார் பிற்பாடு முடிவு தெரிவிக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

1–30 p.m. கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, சிறு சிறு திட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, வறண்ட பிரதேசங்களில் எடுத்துக் கொள்ளவெண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலேதான் வீடூர் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே வீடூர் பிராந்தியமாக, வறண்ட பிரதேசமாக, பின்தங்கிய பிரதேசமாக இருப்பவைகளுக்குப் பயன்படவேண்டும் என்பதற்காகத்தான் வீடூர் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அமராவதி திட்டமும் அதே மாதிரிதான். அந்தப் பிரதேசமும் மிகவும் வறண்ட பின்தங்கிய பிரதேசம்தான். அதன் காரணமாகத்தான் அமராவதித் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டதே தவிர, ஏற்கெனவே செழிப்பாக இருக்கும் பகுதியை இன்னும் செழிப்பாகச்





செய்ய வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த வகையில் வறண்ட பிரதேசங்களைச் செழிப்பாக்கும் வகையிலே என்னென்ன செய்ய வேண்டும் என்பதிலே அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீமான் சிதம்பர பாரதி அவர்கள் வைகை அணைக் கட்டுத் திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது வைகை அணைக் கட்டுத்திட்டம் கட்டுவது மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் நன்மைக்காகத்தான் என்று அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டத்தின் மூலம் 20,000 ஏக்கராக்கள் பாசன வசதி அடையும் என்று மதிப்பிட்டு திட்டம் வகுத்தார்கள். இப்பொழுது தண்ணீர் வரும் டன்னலை கீழே ஆழப்படுத்தி, மின்சாரத்திற்கு தண்ணீர் எடுத்துவந்து கீழே விழும்படி செய்தால் பெரியாற்றுக்கால் மூலமாக 4,000 ஏக்கராக்களுக்கு மேல் பாசன வசதி கிடைக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவுக்கு உபயோகப்படுகிறதா என்று பொதுவாகக் கேட்பதைவிட்டு, இந்தத் தாலுகாவுக்கு உபயோகப்படுமா, அந்தத் தாலூகாவுக்குப் பயன்படுமா என்று நாம் பார்க்கக்கூடாது. சிவகங்கை தாலூகாவில் 7,000 ஏக்கராக்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறார்கள். சிவகங்கை தாலூகாவில்தான் கனம் அங்கத்தினருடைய தொகுதியும் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, அங்கு 7,000 ஏக்கராக்களுக்குப் பயன்படுகிறது. மிகவும் கஷ்டப்படுகிற மக்கள், பின் தங்கிய மக்கள் வாழும் பகுதி, பிறமலைக்கள்ளர் என்னும் மக்கள் வாழும் பகுதியாகிய திருமங்கலம் தாலூகாவுக்காக இத்திட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொல்லலாம். அங்கே 10,000 ஏக்கராக்களுக்குத் தண்ணீர் பாய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே, விவசாயத்திற்கு அதிக அக்கறை செலுத்தி விவசாய அபிவிருத்திக்காக அதிக உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த வகையில் திருமங்கலம் தாலூகாவில் 10,000 ஏக்கராக்களுக்கும், ஏற்கெனவே நஞ்சையாக இருந்தாலும் hard case ஆக இருக்கும் 3,000 ஏக்கராக்களுக்கும், சிவகங்கை தாலூகாவில் 7,000 ஏக்கராக்களுக்கும் பாசன வசதி செய்வதோடுகூட, மேலும் 4,000 ஏக்கராக்களுக்கு இப்பொழுது அதிகப்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொன்ன அந்தத் தாலூகாவும் இதில் அடங்கியிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏதோ என்னுடைய தொகுதி—மந்திரியினுடைய தொகுதி—என்பதற்காக அதிகமாகச் செய்ததாக கனம் அங்கத்தினர்கள் நினைக்கக்கூடாது. ஏற்கெனவே என்ன உதவி செய்யப்பட்டதோ அதைத்தான் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது—சிதம்பர பாரதி அவர்கள் ஏதோ ஒரு சில பகுதிகளை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாக நினைக்கவேண்டாம். எப்பொழுது அதிகத் தண்ணீர் வைகையில் வரும் என்று தெரிகிறதோ, அந்தந்த சமயங்களில் எந்த எந்தக் கண்மாய்களை நிரப்ப முடியுமோ அப்படி நிரப்ப ஏற்பாடு செய்கிறார்கள். வரத்துக்கால்களைச் செப்பனிட்டால்தான் நமக்குப் பெருவாரியாக இருக்கும். ஏரிகள் பயன்படும் என்ற வகையில் அந்த வகையிலும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. லக்ஷ்மீபதிராஜ் அவர்களுடையதும் வரண்ட தாலூகாதான். ரொம்ப நாளாக பாலூர்-பெரம்பலாறு திட்டத்தைப்பற்றி 1945-ல் சட்டசபை மெம்பராக இருந்த காலத்திலிருந்தே நானும் பேசிக் கொண்டு வந்திருக்கிறேன். நிதி நிலை காரணமாக இத்திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருக்கிறது. மின்சாரம் கிடைக்கும் திட்டம் இது. இருந்தாலும், அமராவதி திட்டத்தை எடுத்துக்கொண்டதால் அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவில்லை. அமராவதித் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. மேற்படி பாலூர்-பெரம்பாலாறு திட்டம்பற்றி சம்மந்தபட்ட அதிகாரிகளும் நானும் நேரில்

[Sri P. Kakkan] [26th March 1958

சென்று பரிசீலனை செய்து பார்த்து, ஒரு முடிவுக்கு வருவோம் என்று நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சர்க்காரானது விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் உதவி செய்யவேண்டுமோ அவ்வளவு தூரம் உதவி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் மத்திய சர்க்காரிலிருந்து நாம் அதிகப்படியான பணம் பெற்றிருக்கிறோம். மதிப்பிற்குரிய நமது பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே, "சிறிய பாசன அபிவிருத்தியை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும், அதற்கு உதவி செய்யவேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஆகையால், எந்தெந்த சிறிய பாசனத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதைப் பரிசீலனை செய்வதோடு கனம் அங்கத்தினர்கள் சொன்ன நல்ல ஆலோசனைகளையும் பரிசீலனை செய்து, எந்தெந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளுவது சாத்தியமோ அவைகளைப்பற்றி மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச்சொல்லி, அங்கிருந்து எவ்வளவு உதவி பெற முடியுமோ அதைப்பெறுவதிலே இந்த அரசாங்கம் எப்பொழுதும் பின்வாங்காது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பாலாறு திட்டத்தைப்பற்றி திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். இதுபற்றி மைசூர் ராஜ்யத்திற்கும் நம்முடைய ராஜ்யத்திற்கும் அக்ரிமெண்ட் இருக்கிறது. அதேமாதிரிதான் காவிரி திட்டத்தைப் பற்றியும் இவ்விரு ராஜ்யங்களுக்கும் இடையே அக்ரிமெண்ட் செய்திருக்கிறோம். ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இரண்டு ராஜ்ய சர்க்கார்களும் கலந்து பேசவேண்டும். அப்படிக் கலந்து பேசியும் உடன்பாடு ஏற்படவில்லையானால், மத்திய சர்க்காரிடம் சொல்லியோ, ஸோனல் கவுன்ஸிலில் பேசியோதான் ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும். அற்காக கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் டில்லிக்குச் சென்று, அதுபற்றி பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். சாத்தியப்படுமானால் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர, சாத்தியமில்லாவிட்டாலும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் அது முடியாத காரியம். கனம் அங்கத்தினர் திரு. வி. கே. கோதண்டராமன் அங்கு வெற்றிபெற்று வந்துவிட்டார் என்ற காரணத்திற்காக அங்கு எடுத்துக்கொள்ளவில்லை என்ற முறையில் சொன்னால் அது சரியல்ல. அப்படி நினைக்கக்கூடிய ஸ்தாபனம் காங்கிரஸ் ஸ்தாபனம் அல்ல என்று அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித்தருவதற்காகப் போராடியபோது இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று யாரும் பேதம் பார்க்கவில்லை. அப்பொழுது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் இருந்தார்கள். எல்லோருக்கும் சேர்ந்துதான் சுதந்திரமும் வோட்டுரிமையும் வாங்கிக்கொடுத்திருக்கிறது காங்கிரஸ் ஸ்தாபனம். ஆகவே, காங்கிரஸ் கட்சியினர் ஒரு இடத்தில் வெற்றிபெறவில்லை, வேறொரு கட்சியினர் வெற்றிபெற்றுவிட்டார், ஆகவே, அந்த இடத்திற்கு ஒன்றும் செய்யக்கூடாது என்ற மனப்பான்மை கொண்டது காங்கிரஸ் ஸ்தாபனம் அல்ல. அந்த எண்ணம் இந்த அரசாங்கத்திற்குக் கொஞ்சங்கூட இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எல்லோருக்காகவும் பாடுபட்ட ஸ்தாபனம். விடுதலை வாங்கிக் கொடுத்த ஸ்தாபனம். அப்படியிருக்க ஏதோ நாங்கள் ஒரு குறிப்பிட்ட அங்கத்தினரிடத்திலுள்ள விருப்பு, வெறுப்பு காரணமாக எதும் செய்வதோ செய்யாமலிருப்பதோ கிடையாது. ஏனென்றால், நாங்கள் மக்களுக்காக, மக்களுடைய நன்மையைக் கருதிச் செய்கிறோம். குறிப்பிட்ட அங்கத்தினர்களுக்காகச் செய்யவில்லை. கனம் அங்கத்தினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் தொகுதி என்பதற்காக அங்குள்ள மக்களுக்கு ஒன்றும் செய்யமாட்டோம் என்று சொல்லக்கூடிய கட்சியைச் சேர்ந்த அரசாங்கம் இது அல்ல என்பதையும் உங்கள் மத்தியில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எதை எதைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொண்டு வருகிறோம்.



26th March 1958] [Sri P. Kakkan]

இன்றையதினம் இந்த விவாதத்தில் பல அங்கத்தினர்கள் கலந்து கொண்டு நல்ல முறையில் ஆலோசனை கூறியதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை சபை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். அத்துடன் கனம் அங்கத்தினர் ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்ட விஷயத்திற்கும் சேர்த்துத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு வெட்டுப் பிரேரணையை அவர் வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

SRI A. V. P. ASAITHAMBI: On a point of information. இதர அமைச்சர்கள் எல்லோரும் இங்கே இல்லாமலிருப்பதற்குக் காரணம் அமைச்சர்களுடைய அலுவலகங்களிலே ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறும்போது, தெரிவித்தார்கள். இம்மாதிரி அவர்களுடைய வீடுகளிலும் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர்கள் சார்ந்திருக்கும் கட்சியினர் பதவிக்கு வந்தால் அவர்கள் வீடுகளிலும் ஒலிபெருக்கி வைத்துக் கொள்வார்களேயொழிய நாங்கள் அப்படி வைத்துக்கொள்ள மாட்டோம்.

DEPUTY SPEAKER: Mr. Nallasivam is not in his seat. His cut motion is, therefore, deemed to have been withdrawn. I shall put the Demand to vote. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,56,37,500 under Demand VIII—Irrigation."

The Motion was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is Mr. Shanmugam pressing his cut motion to Demand XXXV?

SRI P. U. SHANMUGAM: I am pressing.

DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 3,49,72,500 under Demand XXXV—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: I shall put the Demand to vote. The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 3,49,72,500 under Demand XXXV—Capital Outlay on Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-38 p.m.

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 409 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 26th March 1958, page 472 supra.]

(a) & (b) Provision has been included in the Budget Estimate for the current year in respect of the following units which were sanctioned in previous years and have either started working already or are being established during the current year. The provision in the budget and the amount sanctioned as grant and loan by the Government of India are as follows :—

| | *Provision in Budget Estimate for* 1957–58. | *Amount sanctioned by the Government of India during* 1957–58. | |
|---|---|---|---|
| | | *Grant.* | *Loan.* |
| | RS. | RS. | RS. |
| 1 Five tanneries in Tiruchirappalli, Tanjore, South Arcot, Salem and Coimbatore districts at the rate of Rs. 24,020 each. | 1,20,100 | .. | .. |
| 2 Service-*cum*-Training Centre for training and finishing leather at Ambur, North Arcot district. | 2,11,800 | 10,000 | .. |
| 3 Fancy Leather Goods Manufacturing Unit, Pallavaram (Chingleput district). | 86,000 | 10,900 | .. |
| 4 Footwear Unit, Pallavaram (Chingleput district). | 1,28,800 | 8,360 | .. |
| 5 Footwear Unit, Perambur, Madras. | 4,74,800 | 16,000 | 1,00,000 |
| 6 Footwear Unit, Triplicane, Madras. | 98,600 | 7,000 | 34,000 |
| 7 Footwear Unit, Erode, Coimbatore district. | 37,700 | 8,000 | .. |
| 8 Footwear Unit, Madurai .. .. | 1,28,800 | 8,360 | .. |
| 9 Footwear Unit, Salem .. .. | 1,28,800 | 8,360 | .. |





## APPENDIX II.

[Vide answer to starred question No. 417 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 26th March 1958, page 481 supra.]

### STATEMENT I.

***Statement showing the taluk wise figures of area under paddy, sugarcane and dry crops in North Arcot district for the year 1951–52 to 1956–57.***

PADDY.

| *Name of the taluk.* | *Area under paddy in the taluk in* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1951–52. | 1952–53. | 1953–54. | 1954–55. | 1955–56. | 1956–57. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. | 27,560 | 29,247 | 32,481 | 30,313 | 33,903 | 41,713 |
| 2 Arkonam .. .. .. | 31,698 | 47,312 | 54,372 | 51,444 | 71,430 | 81,407 |
| 3 Chengam .. .. .. | 27,522 | 23,907 | 36,872 | 34,039 | 35,380 | 44,976 |
| 4 Cheyyar .. .. .. | 47,157 | 63,021 | 71,982 | 78,943 | 91,974 | 93,683 |
| 5 Gudiyattam .. .. | 19,334 | 20,847 | 30,786 | 36,229 | 33,887 | 35,960 |
| 6 Polur .. .. .. | 50,495 | 43,437 | 63,107 | 60,292 | 73,282 | 76,783 |
| 7 Tirupattur .. .. | 13,310 | 12,305 | 25,954 | 29,122 | 27,077 | 27,504 |
| 8 Tiruvannamalai .. .. | 24,745 | 25,032 | 42,815 | 45,562 | 63,351 | 62,408 |
| 9 Vellore .. .. .. | 12,725 | 15,333 | 23,554 | 25,340 | 23,499 | 24,782 |
| 10 Wallajah .. .. .. | 29,073 | 46,365 | 62,329 | 56,183 | 66,314 | 80,137 |
| 11 Wandiwash .. .. | 33,435 | 53,806 | 53,115 | 56,251 | 76,707 | 76,890 |
| District total .. | 317,054 | 380,612 | 497,367 | 503,718 | 596,804 | 646,243 |

SUGARCANE.

| *Name of the taluk.* | *Area under sugarcane in the taluk in* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1951–52. | 1952–53. | 19 3–54. | 1954–55. | 1955–56. | 1956–57. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. .. | 602 | 264 | 304 | 1,195 | 598 | 473 |
| 2 Arkonam .. .. .. | 500 | 159 | 198 | 325 | 312 | 178 |
| 3 Chengam .. .. .. | 544 | 223 | 385 | 724 | 559 | 433 |
| 4 Cheyyar .. .. .. | 579 | 277 | 253 | 614 | 587 | 229 |
| 5 Gudiyattam .. .. .. | 6,230 | 2,929 | 4,572 | 7,174 | 7,740 | 7,730 |
| 6 Polur .. .. .. .. | 636 | 244 | 392 | 608 | 660 | 395 |
| 7 Tirupattur .. .. .. | 5,017 | 2,340 | 2,809 | 4,512 | 4,629 | 4,603 |
| 8 Tiruvannamalai .. .. | 755 | 362 | 424 | 1,074 | 930 | 471 |
| 9 Vellore .. .. .. | 3,238 | 1,620 | 2,016 | 3,903 | 5,435 | 2,837 |
| 0 Wallajah .. .. .. | 2,715 | 1,056 | 1,631 | 2,988 | 2,753 | 2,028 |
| 1 Wandiwash .. .. .. | 590 | 252 | 380 | 982 | 909 | 519 |
| District total .. | 21,406 | 9,726 | 13,364 | 24,099 | 25,112 | 19,896 |

STATEMENT 2.

*Statement showing the taluk wise figures of area under dry crops in North Arcot district in the year 1951–1952.*

| Taluk. (1) | Cholam. (2) | Cumbu. (3) | Ragi. (4) | Korra. (5) | Varagu. (6) | Samai. (7) | Maize. (8) | Green-gram. (9) | Red-gram. (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni | 3,678 | 2,297 | 4,428 | 35 | 2,428 | 2 | 14 | 25 | 1,914 |
| 2 Arkonam | 3,005 | 4,250 | 12,224 | 698 | 2,769 | 81 | .. | 138 | 1,838 |
| 3 Chengam | 13,414 | 7,956 | 9,413 | 335 | 7,313 | 12,607 | 43 | 38 | 2,8[illegible]4 |
| 4 Chevyar | 6,940 | [illegible]639 | 8,146 | 41 | 10,026 | 6 | .. | 367 | 3,042 |
| 5 Gudiyattam | 14,504 | 2,094 | 9,882 | 41 | 340 | 577 | 107 | 608 | 4,358 |
| 6 Polur | 9,971 | 9,290 | 9,931 | 153 | 5,563 | 2,773 | 177 | 101 | 3,897 |
| 7 Tiruppattur | 23,241 | 19,836 | 9,724 | 114 | 2,968 | 17,921 | 9 | 326 | 7,138 |
| 8 Tiruvannamalai | 8,558 | 8,867 | 5,275 | 254 | 19,642 | 1,201 | .. | 68 | 4,253 |
| 9 Vellore | 17,004 | 4,030 | 7,735 | 83 | 917 | 2,096 | 263 | 252 | 4,319 |
| 10 Wallajah | 11,196 | 4,043 | 11,025 | 63 | 2,840 | 10 | 1 | 462 | 4,846 |
| 11 Wandiwash | 7,179 | 3,731 | 8,271 | 359 | 23,332 | 192 | .. | 5[illegible]7 | 3,[illegible]88 |
| Total .. | 118,690 | 67,[illegible]33 | 96,054 | 2,176 | 78,138 | 37,466 | 614 | 2,902 | 42,087 |

| Taluk. | Black-gram. (11) | Bengal-gram. (12) | Horse-gram. (13) | Gingelly. (14) | Groundnut. (15) | Caster. (16) | Cotton. (17) | Total. (18) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni | 25 | .. | 123 | 2,004 | 32,326 | 21 | 4 | 49,324 |
| 2 Arkonam | 160 | 41 | 873 | 3,702 | 25,550 | 10 | 5 | 54,844 |
| 3 Chengam | 771 | 13 | 6,839 | 3,3[illegible]7 | 26,000 | 211 | 87 | 91,271 |
| 4 Chevyar | 320 | .. | 243 | 8,793 | 3[illegible],951 | 358 | 42 | 78,114 |
| 5 Gudiyattam | 22 | 3 | 1,520 | 235 | 46,221 | 653 | 189 | 81,414 |
| 6 Polur | 688 | 9 | 1,070 | 4,510 | 39,446 | 265 | 24 | 87,868 |
| 7 Tiruppattur | 323 | 10 | 20,135 | 402 | 26,834 | 905 | 52 | 129,939 |
| 8 Tiruvannamalai | 1,312 | .. | 685 | 1,150 | 56,427 | 49 | 59 | 107,800 |
| 9 Vellore | 79 | 6 | 2,487 | 402 | 31,348 | 184 | 74 | 71,279 |
| 10 Wallajah | 135 | .. | 266 | 2,678 | 49,336 | 183 | 3 | 87,087 |
| 11 Wandiwash | 613 | 5 | 784 | 6,221 | 57,323 | 409 | 19 | 112,543 |
| Total .. | 4,648 | 87 | 34,525 | 33,494 | 429,762 | 3,248 | 559 | 951,483 |

*Statement showing the talukwise figures of area under dry crops in North Arcot district in the year 1952–53.*

| Taluk. (1) | Cholam. (2) | Cumbu. (3) | Ragi. (4) | Korra. (5) | Varagu. (6) | Samai. (7) | Maize. (8) | Green-gram. (9) | Red-gram. (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni | 4,042 | 2,682 | 4,886 | 7 | 2,429 | 5 | 6 | 37 | 1,128 |
| 2 Arkonam | 9,124 | 5,252 | 15,658 | 1,179 | 3,930 | 185 | .. | 164 | 1,665 |
| 3 Chengam | 10,782 | 5,894 | 14,066 | 344 | 7,365 | 11,834 | 52 | 65 | 2,[illegible]62 |
| 4 Cheyyar | 6,136 | 657 | 8,768 | 35 | 13,621 | 10 | .. | 318 | 2,737 |
| 5 Gudiyattam | 23,524 | 4,147 | 10,675 | 64 | 448 | 932 | 134 | 706 | 4,600 |
| 6 Polur | 7,637 | 7,693 | 12,730 | 146 | 6,460 | 1,975 | 106 | 125 | 2,561 |
| 7 Tiruppattur | 29,367 | 28,135 | 10,121 | 133 | 2,646 | 21,366 | 12 | 490 | 8,709 |
| 8 Tiruvannamalai | 8,589 | 7,489 | 7,645 | 255 | 7,7[illegible]5 | 1,139 | .. | 23 | 3,197 |
| 9 Vellore | 20,[illegible]20 | 4,625 | 9,[illegible]66 | 68 | 7[illegible]3 | 2,213 | 270 | 334 | 4,318 |
| 10 Wallajah | 16,844 | 5,007 | 12,419 | 77 | 2,795 | 12 | .. | 4[illegible]4 | 4,717 |
| 11 Wandiwash | 4,476 | 2,551 | 11,840 | 124 | 9,734 | 126 | .. | 484 | 2,830 |
| Total .. | 141,341 | 74,132 | 117,756 | 2,432 | 57,951 | 39,757 | 580 | 3,170 | 38,724 |

| Taluk. | Black-gram. (11) | Bengal-gram. (12) | Horsegram. (13) | Gingelly. (14) | Groundnut. (15) | Caster. (16) | Cotton. (17) | Total. (18) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni | 36 | .. | 204 | 1,225 | 29,661 | 25 | .. | 46,364 |
| 2 Arkonam | 266 | .. | 390 | 2,323 | 15,593 | 9 | 3 | 55,761 |
| 3 Chengam | 957 | 10 | 8,171 | 568 | 23,722 | 151 | 24 | 86,207 |
| 4 Cheyyar | 383 | .. | 200 | 2,661 | 36,159 | 320 | 7 | 72,012 |
| 5 Gudiyattam | 44 | 3 | 2,806 | 530 | 37,364 | 727 | 281 | 86,985 |
| 6 Polur | 923 | .. | 1,616 | 644 | 39,727 | 191 | 3 | 82,497 |
| 7 Tiruppattur | 617 | 11 | 23,000 | 232 | 26,706 | 810 | 16 | 1,52,365 |
| 8 Tiruvannamalai | 949 | .. | 840 | 476 | 61,134 | 38 | 35 | 99,564 |
| 9 Vellore | 116 | 1 | 3,088 | 641 | 25,569 | 179 | 52 | 72,090 |
| 10 Wallajah | 103 | .. | 193 | 1,832 | 38,752 | 146 | 2 | 83,304 |
| 11 Wandiwash | 407 | .. | 471 | 1,619 | 59,777 | 392 | 17 | 94,848 |
| Total .. | 4,801 | 25 | 40,979 | 12,756 | 394,164 | 2,988 | 441 | 931,997 |

*Statement showing the talukwise figures of area under dry crops in North Arcot district in the year 1953–54.*

| Taluk. (1) | Cholam. (2) ACS. | Cumbu. (3) ACS. | Ragi. (4) ACS. | Korra. (5) ACS. | Varagu. (6) ACS. | Samai. (7) ACS. | Maize. (8) ACS. | Green-gram. (9) ACS. | Redgram. (10) ACS. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Arni | 3,949 | 4,427 | 3,789 | 41 | 4,766 | 20 | 1 | 36 | 1,635 |
| 2 Arkonam | 4,687 | 4,272 | 16,662 | 942 | 8,568 | 308 | .. | 100 | 1,537 |
| 3 Chengam | 10,355 | 8,377 | 12,683 | 938 | 20,804 | 18,962 | 114 | 54 | 2,238 |
| 4 Cheyyar | 5,474 | 478 | 8,653 | 64 | 16,086 | 26 | .. | 437 | 2,557 |
| 5 Gudiyattam | 20,539 | 2,589 | 9,583 | 126 | 1,261 | 2,031 | 270 | 779 | 4,997 |
| 6 Polur | 8,924 | 10,859 | 11,644 | 146 | 16,207 | 3,683 | 210 | 574 | 2,855 |
| 7 Tirupattur | 26,320 | 29,249 | 12,219 | 251 | 3,494 | 28,681 | 55 | 429 | 8,866 |
| 8 Tiruvannamalai | 11,218 | 13,857 | 7,804 | 356 | 22,952 | 2,752 | .. | 79 | 4,097 |
| 9 Vellore | 17,244 | 3,871 | 8,659 | 181 | 2,199 | 4,102 | 358 | 413 | 3,973 |
| 10 Wallajah | 15,605 | 4,365 | 18,291 | 181 | 9,521 | 40 | .. | 561 | 5,986 |
| 11 Wandiwash | 3,956 | 3,859 | 14,110 | 185 | 16,832 | 168 | .. | 580 | 2,845 |
| Total .. | 128,271 | 86,203 | 119,097 | 3,411 | 122,690 | 60,773 | 1,0?8 | 4,042 | 41,586 |

| Taluk. | Black-gram. (11) ACS. | Bengal-gram. (12) ACS. | Horse-gram. (13) ACS. | Gingelly. (14) ACS. | Groundnut. (15) ACS. | Castor. (16) ACS. | Cotton. (17) ACS. | Total. (18) ACS. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Arni | 31 | .. | 144 | 1,020 | 25,811 | 62 | .. | 45,732 |
| 2 Arkonam | 188 | .. | 503 | 1,174 | 12,089 | 11 | .. | 51,041 |
| 3 Chengam | 1,037 | 1 | 12,789 | 1,894 | 12,392 | 284 | 31 | 102,953 |
| 4 Cheyyar | 418 | .. | 467 | 1,081 | 27,702 | 344 | 11 | 63,798 |
| 5 Gudiyattam | 56 | 33 | 3,756 | 545 | 34,936 | 1,224 | 379 | 83,104 |
| 6 Polur | 535 | 1 | 1,737 | 3,554 | 26,217 | 194 | 8 | 87,348 |
| 7 Tirupattur | 311 | 3 | 24,231 | 822 | 23,416 | 1,061 | 18 | 159,4?6 |
| 8 Tiruvannamalai | 1,253 | .. | 2,698 | 1,413 | 26,205 | 82 | 89 | 94,855 |
| 9 Vellore | 161 | 1 | 4,444 | 299 | 22,657 | 372 | 83 | 69,017 |
| 10 Wallajah | 87 | .. | 610 | 733 | 25,009 | 252 | 3 | 76,244 |
| 11 Wandiwash | 599 | .. | 1,164 | 969 | 46,411 | 401 | 29 | 92,108 |
| Total .. | 4,676 | 39 | 52,543 | 13,504 | 282,845 | 4,287 | 651 | 925,626 |

*Statement showing the talukwise figures of area under dry crops in North Arcot district in the year 1954–55.*

| Taluk. (1) | Cholam. (2) ACS. | Cumbu. (3) ACS. | Ragi. (4) ACS. | Korra. (5) ACS. | Varagu. (6) ACS. | Samai. (7) ACS. | Maize. (8) ACS. | Green-gram. (9) ACS. | Redgram. (10) ACS. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Arni | 3,238 | 3,387 | 3,491 | 32 | 2,385 | 14 | .. | 37 | 1,441 |
| 2 Arkonam | 1,316 | 2,741 | 12,951 | 724 | 6,866 | 105 | .. | 113 | 1,722 |
| 3 Chengam | 8,661 | 8,164 | 10,918 | 795 | 13,524 | 17,789 | 146 | 69 | 2,882 |
| 4 Cheyyar | 4,599 | 489 | 7,540 | 61 | 10,278 | 13 | .. | 444 | 2,972 |
| 5 Gudiyattam | 15,554 | 942 | 8,117 | 56 | 1,206 | 1,648 | 173 | 652 | 5,133 |
| 6 Polur | 6,463 | 7,991 | 10,737 | 155 | 8,836 | 3,415 | 294 | 180 | 3,335 |
| 7 Tiruppattur | 21,040 | 20,254 | 12,729 | 404 | 3,017 | 24,922 | 60 | 342 | 6,551 |
| 8 Tiruvannamalai | 5,529 | 8,919 | 6,907 | 206 | 13,908 | 2,627 | .. | 125 | 3,991 |
| 9 Vellore | 15,688 | 3,155 | 8,090 | 223 | 2,107 | 3,982 | 322 | 478 | 3,822 |
| 10 Wallajah | 12,426 | 3,930 | 12,244 | 69 | 6,794 | 86 | .. | 663 | 5,733 |
| 11 Wandiwash | 3,772 | 6,323 | 10,930 | 270 | 16,377 | 301 | .. | 1,064 | 3,333 |
| Total .. | 98,286 | 66,295 | 104,654 | 2,995 | 88,298 | 54,852 | 995 | 4,167 | 40,905 |

| Taluk. | Black-gram. (11) ACS. | Bengal-gram. (12) ACS. | Horsegram. (13) ACS. | Gingelly. (14) ACS. | Groundnut. (15) ACS. | Castor. (16) ACS. | Cotton. (17) ACS. | Total. (18) ACS. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Arni | 35 | .. | 152 | 785 | 29,769 | 22 | .. | 44,788 |
| 2 Arkonam | 158 | .. | 351 | 750 | 14,6 8 | 9 | 11 | 42,425 |
| 3 Chengam | 832 | 5 | 6,320 | 1,482 | 26,884 | 233 | 19 | 101,723 |
| 4 Cheyyar | 403 | .. | 219 | 265 | 37,625 | 436 | 19 | 65,363 |
| 5 Gudiyattam | 44 | 1 | 1,206 | 392 | 41,629 | 1,195 | 259 | 78,197 |
| 6 Polur | 477 | 1 | 1,340 | 532 | 39,2?8 | 224 | 3 | 83,281 |
| 7 Tiruppattur | 224 | 8 | 20,260 | 841 | 31,592 | 862 | 94 | 143,200 |
| 8 Tiruvannamalai | 1,515 | .. | 824 | 764 | 54,787 | 84 | 36 | 100,222 |
| 9 Vellore | 128 | 5 | 2,112 | 465 | 27,527 | 294 | 43 | 68,441 |
| 10 Wallajah | 99 | .. | 175 | 761 | 34,659 | 197 | 7 | 77,793 |
| 11 Wandiwash | 771 | 2 | 669 | 838 | 53,122 | 559 | 134 | 98,465 |
| Total .. | 4,686 | 22 | 33,628 | 7,875 | 391,500 | 4,115 | 625 | 903,898 |

### Statement showing the talukwise figures of area under dry crops in North Arcot district in the year 1955–56.

| Taluk. | Cholam. | Cumbu. | Ragi. | Korra. | Varagu. | Samai. | Maize. | Green-gram. | Redgram. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. .. .. .. | 3,280 | 3,415 | 3,034 | 1 | 2,105 | 4 | 5 | 186 | 1,366 |
| 2 Arkonam .. .. .. .. .. .. | 1,128 | 2,917 | 10,881 | 381 | 3,447 | 70 | .. | 204 | 1,625 |
| 3 Chengam .. .. .. .. .. .. | 9,147 | 8,123 | 11,809 | 835 | 11,480 | 13,540 | 99 | 69 | 2,913 |
| 4 Cheyyar .. .. .. .. .. .. | 3,866 | 3,379 | 4,930 | 17 | 5,987 | 18 | .. | 417 | 2,626 |
| 5 Gudiyattam .. .. .. .. .. | 14,819 | 1,111 | 8,610 | 17 | 5 3 | 824 | 136 | 687 | 4,178 |
| 6 Polur .. .. .. .. .. .. | 6,540 | 8,219 | 8,788 | 152 | 5,263 | 3,634 | 314 | 275 | 3,344 |
| 7 Tirupattur .. .. .. .. .. | 25,002 | 24,980 | 10,963 | 225 | 2,305 | 22,703 | 62 | 407 | 7,145 |
| 8 Tiruvannamalai .. .. .. .. .. | 3,857 | 7,471 | 6,729 | 129 | 4,947 | 719 | .. | 289 | 2,507 |
| 9 Vellore .. .. .. .. .. .. | 11,080 | 3,391 | 7,165 | 127 | 1,894 | 3,487 | 167 | 274 | 2,163 |
| 10 Wallajah .. .. .. .. .. .. | 11,425 | 3,867 | 9,390 | 43 | 3,290 | 24 | .. | 696 | 5,171 |
| 11 Wandiwash .. .. .. .. .. | 3,384 | 2,847 | 8,273 | 90 | 7,244 | 131 | .. | 709 | 2,875 |
| Total .. | 93,528 | 66,720 | 90,572 | 2,017 | 48,5?5 | 45,154 | 783 | 4,213 | 35,853 |

| Taluk. | Black-gram. | Bengal-gram. | Horse-gram. | Gingelly. | Groundnut. | Castor. | Cotton. | Total. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. .. .. .. | 40 | 9 | 245 | 982 | 25,837 | 28 | 4 | 40,541 |
| 2 Arkonam .. .. .. .. .. .. | 151 | .. | 414 | 1,533 | 20,107 | 9 | 2 | 42,869 |
| 3 Chengam .. .. .. .. .. .. | 682 | 30 | 9,765 | 2,066 | 33,399 | 259 | 46 | 104,281 |
| 4 Cheyyar .. .. .. .. .. .. | 361 | .. | 210 | 1,283 | 36,198 | 266 | 18 | 56,576 |
| 5 Gudiyattam .. .. .. .. .. | 119 | 1 | 2,294 | 466 | 37,735 | 1,100 | 446 | 73,106 |
| 6 Polur .. .. .. .. .. .. | 612 | 13 | 1,306 | 2,172 | 4 ,869 | 193 | 3 | 81,697 |
| 7 Tirupattur .. .. .. .. .. | 278 | 14 | 23,680 | 561 | 83,431 | 1,197 | 257 | 143,230 |
| 8 Tiruvannamalai .. .. .. .. .. | 1,196 | .. | 1,525 | 715 | 61,929 | 45 | 53 | 92,111 |
| 9 Vellore .. .. .. .. .. .. | 98 | 1 | 2,062 | 364 | 25,381 | 301 | 40 | 57,995 |
| 10 Wallajah .. .. .. .. .. .. | 116 | .. | 384 | 1.229 | 37,325 | 177 | 101 | 73,178 |
| 11 Wandiwash .. .. .. .. .. | 595 | 2 | 1,075 | 2,141 | 51,226 | 385 | 141 | 81,118 |
| Total .. | 4,248 | 70 | 42,980 | 13,512 | 393,457 | 3,960 | 1,110 | 846,702 |



### Statement showing the talukwise figures of area under dry crops in North Arcot district in the year 1956–57.

| Taluk. | Cholam. | Cumbu. | Ragi. | Korra. | Varagu. | Samai. | Maize. | Green-gram. | Redgram. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. .. .. .. | 2,480 | 2,879 | 2,550 | 1 | 533 | .. | .. | 120 | 1,136 |
| 2 Arkonam .. .. .. .. .. .. | 8?3 | 2,616 | 10,783 | 325 | 1,498 | 81 | 1 | 152 | 1,448 |
| 3 Chengam .. .. .. .. .. .. | 9,173 | 7,285 | 10,619 | 549 | 7.970 | 10,896 | 119 | 140 | 3,318 |
| 4 Cheyyar .. .. .. .. .. .. | 3,833 | 137 | 4 460 | 5 | 2,777 | .. | .. | 487 | 2,716 |
| 5 Gudiyattam .. .. .. .. .. | 15,121 | 1,098 | 7,589 | 20 | 244 | 710 | 166 | 690 | 4.808 |
| 6 Polur .. .. .. .. .. .. | 6,822 | 6,800 | 9,?09 | 176 | 2,670 | 3,275 | 309 | 266 | 3,459 |
| 7 Tiruppattur .. .. .. .. .. | 27,180 | 22,396 | 12,511 | 192 | 2,329 | 23,868 | 69 | 496 | 7,047 |
| 8 Tiruvannamalai .. .. .. .. .. | 3,721 | 5,634 | 6,234 | 68 | 2,617 | 381 | .. | 101 | 4,070 |
| 9 Vellore .. .. .. .. .. .. | 12,980 | 3,097 | 8,?62 | 165 | 1,957 | 3,289 | 181 | 281 | 2,628 |
| 10 Wallajah .. .. .. .. .. .. | 10,132 | 2,119 | 7,933 | 27 | 1,562 | 2 | .. | 608 | 5,094 |
| 11 Wandiwash .. .. .. .. .. | 3,399 | 2,434 | 7,910 | 61 | 4,604 | 56 | .. | 687 | 2,918 |
| Total .. | 95,624 | 56,495 | 89,160 | 1,589 | 28,761 | 42,068 | 845 | 4,028 | 38,842 |

| Taluk. | Black-gram. | Bengal-gram. | Horse-gram. | Gingelly. | Groundnut. | Castor. | Cotton. | Total. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) |
| | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. | ACS. |
| 1 Arni .. .. .. .. .. .. | 21 | 10 | 233 | 610 | 28.110 | 27 | 3 | 38,713 |
| 2 Arkonam .. .. .. .. .. .. | 70 | .. | 483 | 1,739 | 23.576 | 7 | 5 | 43,607 |
| 3 Chengam .. .. .. .. .. .. | 511 | 2 | 10,976 | 547 | 40,233 | 231 | 38 | 102,107 |
| 4 Cheyyar .. .. .. .. .. .. | 327 | .. | 333 | 1,133 | 39,345 | 221 | 14 | 55,788 |
| 5 Gudiyattam .. .. .. .. .. | 35 | 5 | 2,120 | 323 | 40,805 | 969 | 495 | 75,198 |
| 6 Polur .. .. .. .. .. .. | 475 | 9 | 1 565 | 624 | 42.003 | 203 | 2 | 78,367 |
| 7 Tiruppattur .. .. .. .. .. | 302 | 8 | 25,812 | 453 | 31.385 | 884 | 322 | 155 264 |
| 8 Tiruvannamalai .. .. .. .. .. | 943 | .. | 1,668 | 383 | 70,868 | 39 | 54 | 96,781 |
| 9 Vellore .. .. .. .. .. .. | 102 | 4 | 1,986 | 315 | 26,002 | 323 | 36 | 62,168 |
| 10 Wallajah .. .. .. .. .. .. | 132 | .. | 347 | 499 | 41,547 | 122 | 16 | 70,140 |
| 11 Wandiwash .. .. .. .. .. | 667 | 8 | 1,356 | 1,102 | 53,830 | 360 | 80 | 79,472 |
| Total .. | 3,635 | [illegible] | 46,879 | 7,668 | 437,704 | 3,386 | 1,065 | 857,595 |

STATEMENT 3.

*Statement showing the extent of cultivable land which remains uncultivated in North Arcot district.*

| Years. | Cultivable land which remains uncultivated (acres). * | Years. | Cultivable land which remains uncultivated (acres). * |
|---|---|---|---|
| (1) | (2) | (1) | (2) |
| 1951–52 .. .. .. | 535,641 | 1954–55 .. .. .. | 503,290 |
| 1952–53 .. .. .. | 622,592 | 1955–56 .. .. .. | 499,059 |
| 1953–54 .. .. .. | 502,818 | 1956–57 .. .. .. | 476,386 |

* This comprises

1 Cultivable waste.

2 Permanent pastures and other grazing lands.

3 Land under miscellaneous tree crops and groves not included in net area sown.

4 Current fallows.

5 Other fallow lands.

APPENDIX III.

[Vide answer to starred question No. 418 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 26th March 1958, page 482 supra.]

(*a*) A sum of Rs. 16,379·09 has so far been collected in connexion with the Flag Day, 1957, according to the reports received from the Collectors of districts, and the Secretary, Madras State Soldiers', Sailors' and Airmen's Board.

(*b*) The amount collected is remitted to the Central Flag Day Committee, Ministry of Defence, Government of India, which in turn allots to this State, a certain percentage of the collections to be credited to the Madras State Ex-Services Personnel Benevolent Fund. This fund is spent on the following objects :—

(1) free monthly grants towards the maintenance of ex-servicemen and their dependants;

(2) lump-sum grants to the disabled ex-servicemen to enable them to start a career;

(3) pocket money to ex-servicemen suffering from tuberculosis/leprosy while undergoing treatment in the Sanatoria;

(4) transport charges to ex-services tuberculosis/leprous patients in the Sanatoria to visit their homes once a year, on the recommendations of the Medical Superintendents of the Sanatoria concerned.





(5) short-term loans repayable in easy instalments with interest at 3 per cent per annum;

(6) immediate free relief grants of small amounts in cases of deserving persons as spot-assistance; and

(7) maintenance charges at Rs. 50 per mensem in respect of each disabled ex-servicemen undergoing training in the Queen Mary's Technical School, Kirkee.

APPENDIX IV.

[Vide answer to starred question No. 420 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 26th March 1958, page 484 supra.]

*Statement showing the amount allotted districtwise under the Intensive Manuring Scheme for 1956–57 and 1957–58 (Paddy and Sugarcane).*

| District. | Amount allotted. | | | |
|---|---|---|---|---|
| | 1956–57. | | 1957–58. | |
| | Paddy. | Sugarcane. | Paddy. | Sugarcane. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | RS. | RS. | RS. | RS. |
| Chingleput .. .. .. | 4,00,000 | .. | 4,00,000 | .. |
| Coimbatore .. .. .. | 1,00,000 | 1,40,000 | 1,00,000 | 1,40,000 |
| Kanyakumari .. .. | .. | .. | 2,00,000 | .. |
| Madurai .. .. .. | 6,50,000 | 1,00,000 | 6,50,000 | 1,00,000 |
| North Arcot .. .. | 80,000 | 1,50,000 | 80,000 | 1,50,000 |
| Ramanathapuram .. | 50,000 | .. | 50,000 | .. |
| Salem .. .. .. | 50,000 | 1,50,000 | 50,000 | 1,50,000 |
| South Arcot .. .. | 4,00,000 | 3,00,000 | 4,00,000 | 3,00,000 |
| Tanjore .. .. .. | 21,00,000 | 1,30,000 | 21,00,000 | 1,30,000 |
| The Nilgiris .. .. | .. | .. | .. | .. |
| Tiruchirappalli .. .. | 7,00,000 | 2,30,000 | 7,00,000 | 2,30,000 |
| Tirunelveli .. .. | 4,00000 | .. | 4,00,000 | .. |
| Total .. | 49,30,000 | 12,00,000 | 51,30,000 | 12,00,000 |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## THIRD SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

### Volume XI (Nos. 1 to 6).


PAGES

A

Accident—

Question re State Transport Bus — at Parasali .. .. .. 356-358

Agrarian trouble—

Question re extent of 'nanjai' land not cultivated with kuruvai crop due to agrarian trouble in Tirumangalam and Manachanallur areas in Lalgudi taluk .. .. .. .. .. .. .. 77-79

Alagirisamy, Sri M.—

Demand for Grant re Irrigation and Capital Outlay on Irrigation. 526-527

Ammonium sulphate—

Question re quantity of — allotted to each district from 1952-57 .. 263-264

Anandanayaki, Srimathi T. N.—

Demand for Grant re Harijan Uplift .. .. .. .. .. .. 305-306

Anbazhagan, Sri K.—

Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 454-455

Demand for Grant re—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 23

Harijan Uplift .. .. .. .. .. .. .. 280

Labour including Factories .. .. .. .. .. .. 406-410

Police .. .. .. .. .. .. .. .. .. 122, 133, 146-147, 150

Animal Preservation Bill, 1958—

*See* Bills.

*See* Papers laid on the table of the House.

Annadurai, Sri C. N.—

Demand for Grant re—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 57-63, 67, 68, 69

A—*cont.*

PAGES

**Annadurai, Sri C. N.**—*cont.*
Demand for Grant *re*—*cont.*
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 334–340
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. 342
Police .. .. .. .. .. .. .. .. .. 533–539
.. .. .. 134–140
145, 146
**Annamalai, Sri S. M.**—
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. .. 433
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 441–442
**Appavoo Pillai, Sri K.**— .. 320–323
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 499–501
**Appropriation (Vote on Account) Bill, 1958**—
*See* Bills.
**Asaithambi, Sri A. V. P.**—
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. ..
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 53, 54
Police .. .. .. .. .. .. .. .. .. 276–279
**Authimoolam, Sri D. S.**— .. .. .. 149, 150
Demand for Grant *re* Irrigation and Capital Outyay on Irrigation. 529–530

B

**Bhaktavatsalam, the Hon. Sri M.**—
Bill—Children (Amendment) Bill, 1958 .. .. .. .. 457–460
Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 463–464
**Bills**— .. .. .. 94, 95, 104
119, 140–157
Animal Preservation Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. 266
Appropriation (Vote on Account) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. 266
Children (Amendment) Bill, 1958—
Referred to Joint Select Committee .. .. .. .. .. 457–464
Co-operative Societies (Amendment) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. 183
Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958—
Report of the Joint Select Committee presented and Bill dropped .. .. .. .. .. .. .. .. 267
Entertainments Tax (Amendment) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. 374
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. 183



B—*cont.*

PAGES

**Bills**—*cont.*
General Sales Tax (Emergency Provisions) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. .. 266
Indian Stamp (Madras Amendment) Bill, 1958—
Considered and passed .. .. .. .. .. .. .. 432–457
Prohibition (Amendment) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. .. 374
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958—
Message from the Council *re* .. .. .. .. .. .. .. 374
**Bills laid on the table of the House**—
Animal Preservation Bill, 1958 .. .. .. .. .. .. .. 465
Appropriation (Vote on Account) Bill, 1958 .. .. .. .. 71
Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. .. .. 71
**Block Development Officers**—
Question *re* reservation for Graduates in Agriculture of posts of—in Community Development areas and National Extension Service areas .. .. .. .. .. .. .. .. .. 80–81
**Bridge**—
Question *re* bridge across Agniyar in Sethu road in Pattukkottai taluk, construction of .. .. .. .. .. .. .. 4–5
**Bus service**—
*See* Transport.
**Business Advisory Committee**—
*See* Committees.

C

**Capital Outlay on Public Health**—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. .. 183–242
**Chandrasekara Nayagar, Sri A. E.**—
Demand for Grant *re* Community Development Projects, National Extension of Service and Local Development Works .. .. 42–44
**Chandrasekharan, Sri W. P. A. R.**—
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 501–503
**Chidambara Bharathi, Sri R.**—
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 515–517
**Children (Amendment) Bill, 1958**—
*See* Bills.
**Chinnadurai, Sri P. S.**—
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 443–445
Demand for Grant *re*—
Labour including Factories .. .. .. .. .. .. .. 414–419
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 224–227
Police .. .. .. .. .. .. .. .. .. .. 127–130
Dispute in the textile mills in Coimbatore regarding bonus for 1956, calling Minister's attention to .. .. .. .. .. .. 93–94
**Chinniah Gounder, Sri N. P. M.**—
Demand for Grant *re* Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. 29–31

C—*cont.* PAGES

Civil Supplies Department—
*See* Papers laid on the table of the House.

Colleges—
Question *re*—
Engineering College in Tanjore district, resolution of Tanjore District Board *re* opening of .. 81-83
Engineering Colleges to be opened by the Central Government, location of some—in Madras State .. 81-83
Medical College in Tanjore district, opening of a .. 83-84

Committees—
Business Advisory Committee, recommendation *re* order of Demands for Grants for discussion .. 8-9
Estimates Committee, election of fourteen Members to .. 375
House Committee, election of eleven Members to .. 375
Privileges Committee, election of fifteen Members to .. 374
Public Accounts Committee, election of fourteen Members to .. 376
Question *re* Foodgrains Enquiry Committee's report, Government's views *re* .. 247-248

Community Development Project—
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 526-527
Question *re* amount of assistance received from the Central Government and amount spent during 1955-56 and 1956-57 towards .. 85

Community Development Projects, National Extension Service and Local Development Works—
Demand for Grant *re* .. 9-70

Co-operative looms—
Question *re* looms brought into the co-operative fold in 1956-57, percentage of .. 257

Co-operative Societies—
Question *re*—
Handloom Weavers' Co-operative Societies in Shencottah town, application for loan from .. 256
Number of—closed since 1952 .. 253-256
Number of—for the benefit of Government servants .. 256

Co-operative Societies (Amendment) Bill, 1958—
*See* Bills.

Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956—
Question *re* exemption of lands on which crops like sugarcane, plantain and betelvines are raised from .. 92

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958—
*See* Bills.
*See* Papers laid on the table of the House.

D

Demand for Grant *re*—
Capital Outlay on Public Health .. 183-242



PAGES

D—*cont.*

Demand for Grant *re*—*cont.*
Community Development Projects, National Extension Service and Local Development Works .. 9-70
Harijan Uplift .. 267-350
Irrigation and Capital Outlay on Irrigation .. 488-551
Labour including Factories .. 377-432
Medical .. 183-242
Police .. 94-158
Public Health .. 183-242

Demands for Grants for further expenditure in the year 1957-58—
Presentation of .. 183-184

Deputy Speaker—
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. 54, 70, 71
Harijan Uplift .. 287, 297, 308, 320, 326
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 241-242
Police .. 114, 118, 120

Duraiswami Reddiar, Sri A. S.—
Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. 206-208

E

Education—
Question *re* progress of Basic— .. 367-369

Educational concessions—
Question *re* grant of—to Harijan Christian students .. 363

Electricity—
Question *re*—
Supply of—for running pumpsets in wells owned by more than one person .. 259-260
Supply of—to agriculturists for irrigation purposes during daytime .. 261

Electricity Board, State—
Question *re* payment of Provident Fund amounts to workers transferred to .. 481

Ellappan, Sri P. S.—
Demand for Grant *re* Harijan Uplift .. 328-330

Elumalai, Sri T. P.—
Demand for Grant *re*—
Harijan Uplift .. 311-312, 313

PAGES

E—*cont*.

**Elumalai, Sri T. P.**—*cont*.
Demand for Grant *re*—*cont*.
Labour including Factories .. .. .. .. .. .. 397–400

**Engineering College**—
*See* Colleges.

**Entertainments Tax (Amendment) Bill, 1958**—
*See* Bills.

**Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958**—
*See* Bills.

**Estimates Committee**—
*See* Committees.

**Ex-Services Personnel Benevolent Fund**—
Question *re* amount collected on the Flag Day on 7th December 1957 and purpose of — .. .. .. .. .. .. .. 482–483

F

**Factories**—
Question *re* factory for the manufacture of films at Ootacamund, starting of a .. .. .. .. .. .. .. .. 358–359

**Finger-Print Bureau, Central**—
Question *re* number of Government servants deputed for training in — .. .. .. .. .. .. .. .. 181

**Fisheries Department**—
*See* Papers laid on the table of the House.

**Food**—
Question *re*—
Rice movement from one State to another within the same food zone .. .. .. .. .. .. .. .. 467–468
Southern Food Zone, States comprising the — and purpose of constitution .. .. .. .. .. .. .. .. 468–472

**Foodgrains Enquiry Committee**—
*See* Committees.

**Forest wealth**—
Question *re* steps taken to improve — after 1st November 1956 .. 181

G

**General Sales Tax (Emergency Provisions) Bill, 1958**—
*See* Bills.

**General Sales Tax Rules, 1939**—
*See* Papers laid on the table of the House.

**Gopala Gounder, Sri K.**—
Demand for Grant *re* Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. 31–32

**Govindasamy, Sri A.**—
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 23
24–27, 70



PAGES

G—*cont*.

**Govindasamy, Sri A.**—*cont*.
Demand for Grant *re*—*cont*.
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 308
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 200, 220
224
Police .. .. .. .. .. .. .. .. .. 130–132
156

**Grants**—
Question *re* amount of — to institutions outside the State .. .. 364–365

**Gypsies**—
Question *re* representation from — in Chengam taluk .. .. 248–249

H

**Haja Sheriff, Sri K. S. G.**—
Demand for Grant *re* Labour including Factories .. .. .. 413–414

**Harijan Welfare Department**—
Question *re* number of non-Gazetted officers receiving a salary of more than Rs. 150 in the — .. .. .. .. .. .. 6

**Harijans**—
*See* Midday meals.

**Health Centre, Primary**—
Question *re*—
Opening of a — at Kadaladi (North Arcot) .. .. .. 76
Taking over of — at Vedaranyam, by Government .. .. 359

**Hemalatha Devi, Srimathi**—
Demand for Grant *re* Police .. .. .. .. .. .. .. 124–125

**Hindu Religious and Charitable Endowments (Administration) Department**—
*See* Papers laid on the table of the House.

**Hospitals and dispensaries**—
Question *re*—
Dispensary at Mailam (Tindivanam taluk), opening of a .. 88
Government Headquarters Hospital, Cuddalore, construction of new ward in .. .. .. .. .. .. .. .. 365

**Hostels**—
Question *re* students admitted in Slater Hostel and M. C. Rajah Hostel, Madras, number of Arunthathiyar students admitted in .. .. .. .. .. .. .. .. .. 483–484

**House Committee**—
*See* Committees.

I

**Indian Stamp (Madras Amendment) Bill, 1958**—
*See* Bills.

**Industrial disputes**—
Dispute in textile mills in Coimbatore regarding bonus for 1956, Minister's attention called to .. .. .. .. .. .. 93–94

PAGES

I—*cont.*

**Industrial disputes—*cont.***

Question *re* Salem Magnesite Syndicate, Salem, retrenchment of workers in .. .. .. .. .. .. .. .. 92–93

**Industrial Training Institute, Thyagarayanagar—**

Question *re* financial aid given by State and Central Governments to — and industries run .. .. .. .. .. .. .. 165–168

**Intensive Manuring Scheme—**

Question *re* allotment districtwise for — (paddy and sugarcane) for 1956–57 and 1957–58 .. .. .. .. .. .. 484–485

**Iron and steel—**

Question *re* request to Centre for increase in — allotment to small-scale industries .. .. .. .. .. .. .. 485–486

**Irrigation—**

Question *re*—

Draining of waste water around Puthantharuvai in Tirunelveli district into an irrigation tank .. .. .. .. .. .. 7

Kallagam Odai Scheme in Lalgudi taluk, investigation of .. 173

Lift Irrigation Schemes for Kanyakumari district, sanctioning of .. .. .. .. .. .. .. .. .. .. .. 165

Mettur Irrigation Scheme, extent of lands irrigated in Madras State under .. .. .. .. .. .. .. .. .. .. 6–7

Special Minor Irrigation Schemes, amount allotted districtwise for 1956–57 and 1957–58 .. .. .. .. .. .. .. 252–253

Special Minor Irrigation Schemes in North Arcot, allotment and amount spent during 1956–57 and 1957–58 .. .. .. 251–252

Irrigation and Capital Outlay on Irrigation—

Demand for Grant *re* .. .. .. .. .. .. .. .. 488–551

Irusappan, Sri T.—

Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 525–526

J

**Jagannathan, Sri M.—**

Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 447

Demand for Grant *re*—

Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 268–272, 349

Labour including Factories .. .. .. .. .. .. 392–394

Medical, Public Health and Capital Outlay on Public Health .. 210–212

Police .. .. .. .. .. .. .. .. .. .. 107

**Juvenile Court Rules, 1930—**

*See* Papers laid on the table of the House.

K

**Kakkan, the Hon. Sri P.—**

Demand for Grant *re*—

Harijan Uplift .. .. .. .. .. .. .. .. .. 267, 268, 269, 274, 320, 340–340



PAGES

K—*cont.*

**Kakkan, the Hon. Sri P.—*cont.***

**Demand for Grant *re*—*cont.***

**Irrigation and Capital Outlay on Irrigation** .. .. .. .. .. 488–489, 542–551

Difficulties of ryots in Tirunelveli district, statement *re* .. .. 488

**Kalyanasundaram, Sri M.—**

**Demand for Grant *re*—**

**Labour including Factories** .. .. .. .. .. .. 419–424

**Police** .. .. .. .. .. .. .. .. .. 95, 107, 142, 145, 153, 156, 157

**Kandasami, Sri R.—**

**Demand** for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 279–281

**Kandaswami Mudaliyar, Sri M. R.—**

**Demand** for Grant *re* Labour including Factories .. .. .. 405–406

**Karia Gounder, Sri T.—**

**Demand for Grant *re*—**

**Labour** including Factories .. .. .. .. .. .. 390–391

**Police** .. .. .. .. .. .. .. .. .. 121–124

**Karunanithi, Sri M.—**

**Demand for Grant *re*—**

Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 504–507

**Medical, Public Health and Capital Outlay on Public Health** .. 222

Karuthiraman, Sri P. G.—

Demand for Grant *re*—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. 39

Medical, Public Health and Capital Outlay on Public Health .. 199, 226

Police .. .. .. .. .. .. .. .. .. .. 95, 107

hader Sheriff, Sri S.—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. .. 213–215

olanthai Ammal, Srimathi—

Demand for Grant *re*—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 44–47

Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. 531–532

**othandaraman, Sri V. K.—**

**Bills—**

**Children (Amendment) Bill, 1958** .. .. .. .. .. 460–462

**Indian Stamp (Madras Amendment) Bill, 1958** .. .. .. 440–441, 449

**Demand for Grant *re*—**

**Community Development Projects, National Extension Service and Local Development Works** .. .. .. .. .. .. 23

**Harijan** Uplift .. .. .. .. .. .. .. .. 308–311

**Irrigation and Capital Outlay on Irrigation** .. .. .. .. 511–513

**Police** .. .. .. .. .. .. .. .. .. .. 114

PAGES

L

**Labour Gazette—**
Question *re* publication of — .. .. .. .. .. .. 249–250

**Labour including Factories—**
Demand for Grant *re* — .. .. .. .. .. .. 377–432

**Lakshmikantham, Srimathi P. K. R.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 330–331

**Lakshmipathi Raj, Sri P. S. K.—**
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 34–37
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. 509–511
Labour including Factories .. .. .. .. .. .. 384–386
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 218–220, 222

**Lands—**
Eviction of salt workers from Government poramboke lands in Tiruchendur taluk, Minister's attention called to .. .. .. 372–374
Question *re*—
Acquisition of — in Mulligoor village (Ootacamund taluk) .. 261–262
Extent of — under cultivation of paddy, sugarcane and dry crops in North Arcot .. .. .. .. .. .. .. 481–482
Government waste — in North Arcot, extent of .. .. .. 363–364
Poramboke — assigned to Harijans in 1955–56 and 1956–57 in South Arcot and Villupuram taluk .. .. .. .. 370–371
Tenements built by Harijans on the sides of Perumpallam odai from Erode town to Marapalayam, number of .. .. .. 91–92

**Lazar, Sri S.—**
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 437–440, 450–451
Demand for Grant *re*—
Labour including Factories .. .. .. .. .. .. 387–390
Police .. .. .. .. .. .. .. .. .. 110

**Lift Irrigation Schemes—**
*See* Irrigation.

**Local Development Works—**
Question *re* number of — in Tanjore district (for which people had paid their contribution) not taken up .. .. .. .. 87–91

M

**Magnesite mines—**
Question *re* taking over of — leased to the Magnesite Syndicate, Limited, Salem .. .. .. .. .. .. .. 176–177

**Mahalingam, Sri N.—**
Demand for Grant *re*—
Labour including Factories .. .. .. .. .. .. 394–397
Police .. .. .. .. .. .. .. .. .. 110–114



PAGES

M—*cont.*

**Mani, Sri K. B. S.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 297–299

**Manickam, Sri P. G.—**
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 37–39
Harijan Uplift .. .. .. .. .. .. .. 315–317

**Manickasundaram, Sri V. S.—**
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 442–443
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 39
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 513–515

**Manickavelu, the Hon. Sri M. A.—**
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 432, 433, 447–448, 449, 450–451, 452, 456–457
Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. .. 185, 186, 202, 231–241
Eviction of salt workers from Government poramboke lands in Tiruchendur taluk, statement *re* .. .. .. .. .. 372–374

**Manure—**
Question *re*—
Green —, collection by ryots from unreserved forests .. .. 173–174
Green —, number of cart-loads seized in Chengam taluk in 1957 and fine collected .. .. .. .. .. .. .. 174–176

**Marisappan, Sri M. K.—**
Demand for Grant *re*—
Labour including Factories .. .. .. .. .. .. 403–404
Police .. .. .. .. .. .. .. .. .. 133–134

**Marimuthu, Sri A. R.—**
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 23, 40–42, 70
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 185, 186–189, 241

**Marudachalam, Sri N.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 283–284

**Matha Gowder, Sri J.—**
Demand for Grant *re* Labour including Factories .. .. .. 381–384

**Matter of urgent public importance—**
Difficulties of ryots in Tirunelveli district, calling attention to .. 487–488
Dispute in textile mills in Coimbatore regarding bonus for 1956, calling attention to .. .. .. .. .. .. .. 93–94

Matter of urgent public importance—*cont.*
  Eviction of salt workers from Government poramboke lands in Tiruchendur taluk, calling attention to .. .. .. .. .. 372–374

Medical—
  Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. .. 185–242

Medical College—
  *See* Colleges.

Messages from the Council—
  *See* Bills.

Midday meals to poor students—
  *See* Schools.

Motor Vehicles Rules, 1940—
  *See* Papers laid on the table of the House.

Motor vehicles tax—
  *See* Papers laid on the table of the House.

Muni Reddi, Sri M.—
  Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 517–520

Munusami, Sri S. R.—
  Demand for Grant *re* Police .. .. .. .. .. .. .. 125–127

Munusami Gounder, Sri P. M.—
  Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. .. 189–192

Muthiah Chettiar, Sri M. A.—
  Demand for Grant *re*—
    Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 49–51
    Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 520–523

Muthukumaraswamy, Sri M. C.—
  Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 297, 318–319

N

Nagaraja Monigar, Sri S.—
  Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 156

Nallasivam, Sri K. R.—
  Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 489, 490–494

Nesamony, Sri A.—
  Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 494–497

Non-Gazetted Officers—
  Question *re* Memorandum to Planning Commission *re* scales of pay and emoluments of — and last grade staff of State Government. 74–75

PAGES

P

Pakkirisami Pillai, Sri S.—
  Demand for Grant *re* Labour including Factories .. .. .. 377–380

Palanisami, Sri M. K.—
  Demand for Grant *re*—
    Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 32–34
    Labour including Factories .. .. .. .. .. .. 400–403

Palaniswami, Sri K. P.—
  Demand for Grant *re*—
    Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 52–53
    Harijan Uplift .. .. .. .. .. .. .. 281–285

Palaniswamy Gounder, Sri K. G.—
  Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 524–525

Pamani river—
  Question *re* pumping of — water for irrigation purposes .. .. 474

Panchayat Union—
  Question *re* resolutions passed at the fifth conference of the general body of the State Union of Panchayats in December 1957 .. 79–80

Panchayats—
  Question *re* Panchayat for Ovanur village (Tiruthuraipundi taluk), constitution of .. .. .. .. .. .. .. .. 2
  *See* Papers laid on the table of the House.

Papers laid on the table of the House—
  Bills—
    Animal Preservation Bill, 1958 .. .. .. .. .. .. 465
    Appropriation (Vote on Account) Bill, 1958 .. .. .. .. 71
    Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. .. 71
  Civil Supplies Department, review of activities for the first half-year 1957 .. .. .. .. .. .. .. .. 350
  Cultivating Tenants Protection and Payment of Fair Rent Amendment) Bill, 1958, report of Joint Select Committee on .. 465
  Fisheries Department, report on activities during the half-year ended 30th September 1957 .. .. .. .. .. .. 242
  General Sales Tax Rules, 1939, notification *re* insertion of certain rules and forms in .. .. .. .. .. .. .. 465
  Government Reception Homes, notification *re* amendment to rules for management of .. .. .. .. .. .. .. 465
  Hindu Religious and Charitable Endowments (Administration) Department, report on activities for the half-year ended 30th September 1957 .. .. .. .. .. .. .. .. 158
  Juvenile Court Rules, 1930, notification *re* addition of rule 9 to .. 465
  Motor Vehicles Rules, 1940, notification *re* amendment to .. .. 350
  Motor vehicles tax, notification *re* exemption of jeep Nos. 54142–14080 from .. .. .. .. .. .. .. .. 350

PAGES

P—*cont.*


**Papers laid on the table of the House—*cont.***

Panchayats, notification *re* amendment of rules relating to the strength of .. .. .. .. .. .. .. .. 465

Sales tax system in Madras, decision taken on Dr. Lokanathan's report on the simplification and improvement of .. .. .. 350

Transport Department, review of the activities during the first half of 1957 .. .. .. .. .. .. .. .. 158

Peons—

Question *re* enhancement of daily allowance of— .. .. .. 371–372

Peria Karuppan Ambalam, Sri P. M.—

Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 503–504

Periasami, Sri M. P.—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. 326–328

Perumal, Sri A.—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 314–315

Police—

Demand for Grant *re*— .. .. .. .. .. .. .. 94–158

Question *re* Railway Police Officers and staff in Madras State as on 1st January 1958, strength of .. .. .. .. .. 181–182

Ponnammal, Srimathi A. S.—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 293–295

Ponnian, Sri K.—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. 272–273

Poramboke lands—

*See* Lands.

Ports—

Question *re*—

Names and improvement of minor—in Madras State .. .. 169–170

Tuticorin Port, visit of the United Kingdom Technical Mission during July 1957 .. .. .. .. .. .. .. 258–259

Prime Minister's visit—

Question *re* expenditure of Government in connection with—to Madras on 6th January 1958 .. .. .. .. .. .. 361–362

Privileges Committee—

*See* Committees.

Prohibition—

Question *re* penalty for—offences .. .. .. .. .. 170–172

Prohibition (Amendment) Bill, 1958—

*See* Bills.

Public Accounts Committee—

*See* Committees.

Public Health—

Demand for Grant *re* Public Health .. .. .. .. .. 183–242




PAGES

P—*cont.*


**Pudukkottai—**

**Question *re* formation of a new district of—by bifurcating the present Tiruchirappalli district .. .. .. .. .. 365–367**

**"Puthiya Samudayam"—**

**Question *re* screening of documentary film entitled .. .. .. 266**


Q


**Questions—**

**Admissibility of—, Speaker's observations .. .. .. .. 182–183**

**Questions and Answers—**

**Annamalai, Sri S. M.—**

Question *re*—

Electricity supply to pumpsets owned by more than one person. 259–260

Primary Health Centre at Kadaladi (North Arcot), opening of .. .. .. .. .. .. .. .. 76

Village Officer in North Arcot, nomination as a counting agent by a candidate standing for election to the House of the People .. .. .. .. .. .. .. 85

Annamalai Muthuraja, Sri G.—

Question *re* Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, exemption of lands on which sugarcane, plantain and betelvines are raised .. .. .. .. .. .. 92

Annamalai Odayar, Sri S. A. M.—

Question *re* lands in Mulligoor village (Ootacamund taluk), acquisition of .. .. .. .. .. .. 261–262

Asaithambi, Sri A. V. P.—

Question *re* Prime Minister's visit to Madras on 6th January 1958, expenditure of Government in connection with .. .. 361–362

Authimoolam, Sri D. S.—

Question *re* Community Development Programme, amount of assistance received from the Central Government and amount spent during 1955–56 and 1956–57 .. .. .. .. .. 85

Chinnadurai, Sri P. S.—

Question *re* Foodgrain Enquiry Committee Report, Government's views *re* .. .. .. .. .. .. .. .. 247–248

Daniel, Sri T. T.—

Question *re*—

Scholarships to Harijan students, amount spent in 1956–57 and in Kanyakumari district in 1957–58 .. .. .. .. 266

State Transport Bus accident at Parasali .. .. .. 356–358

Govindasamy, Sri A.—

Question *re*—

Buses from Radhapuram of Villupuram taluk to Kanchanur, representation from villagers for plying of more .. .. 251

Government Headquarters Hospital, Cuddalore, construction of new ward .. .. .. .. .. .. .. .. 365

Poramboke lands assigned to Harijans in 1955–56 and 1956–57 in South Arcot and Villupuram taluk, extent of .. 370–371

**Questions and Answers**—*cont.*

Govindasamy, Sri A.—*cont.*

Question *re*—*cont.*

Prime Minister's visit to Madras on 6th January 1958, expenditure of Government in connection with .. .. .. .. 361–362

Stamp vendors, prevention of appointment of village headmen as .. .. .. .. .. .. .. .. .. 369

State Union of Panchayats, resolutions passed at the Fifth Conference of the General Body held in December 1957 .. 79–80

Jagannathan, Sri M.—

Question *re*—

"Puthiya Samudayam", screening of documentary film .. 266

Untouchability (Offences) Act, 1955, appointment of officers at the district, taluk and village levels for enforcement of .. 265

Untouchability (Offences) Act, 1955, implementation of .. 264–265

Untouchability (Offences) Act, 1955, number of cases of offences committed during 1955–56 .. .. .. .. .. 264

Untouchability (Offences) Act, 1955, steps taken to give wide publicity to .. .. .. .. .. .. .. .. 265

Kalyanasundaram, Sri M.—

Question *re*—

Labour Gazette, publication of .. .. .. .. .. .. 249–250

Magnesite mines leased to the Magnesite Syndicate, Limited, Salem, taking over of .. .. .. .. .. .. .. 176–177

Motor transport workers, legislation to regulate wages and working conditions of .. .. .. .. .. .. .. .. 172–173

Non-Gazetted Officers and last grade staff of State Government, memorandum to Planning Commission *re* scales of pay and emoluments of .. .. .. .. .. .. .. 74–75

Pudukkottai, formation of a new district of—by bifurcating the present Tiruchirappalli district .. .. .. .. 365–367

Salem Magnesite Syndicate, Salem, retrenchment of workers in .. .. .. .. .. .. .. .. .. .. 92–93

Kothandaraman, Sri V. K.—

Question *re*—

Ammonium sulphate allotted to each district from 1952 to 1957, quantity of .. .. .. .. .. .. .. .. 263–264

Co-operative societies closed since 1952, number of .. .. 253–256

Government waste lands in North Arcot, extent of .. .. 363–364

Green manure, collection by ryots from unreserved forests .. 173–174

Green manure, number of cart-loads seized in Chengam taluk in 1957 and fine collected .. .. .. .. .. .. 174–176

Gypsies in Chengam taluk, representation from .. .. .. 248–249

Intensive Manuring Scheme (paddy and sugarcane), allotment districtwise for 1956–57 and 1957–58 .. .. .. .. 484–485

Lands under cultivation of paddy, sugarcane and dry crops in North Arcot, extent of .. .. .. .. .. .. .. 481–482

Special Minor Irrigation Schemes, amount allotted districtwise for 1956–57 and 1957–58 .. .. .. .. .. .. 252–253

Special Minor Irrigation Schemes in North Arcot, allotment and amount spent during 1956–57 and 1957–58 .. .. .. 251–252



**Questions and Answers**—*cont.*

Lazar, Sri S.—

Question *re*—

Express bus service between Tiruchirappalli and Madras, introduction of .. .. .. .. .. .. .. .. .. 475

Harijan Christian students, grant of educational concessions to .. .. .. .. .. .. .. .. .. .. 363

Kallagam Odai Scheme, Lalgudi taluk, investigation of .. 173

Municipal towns having town-bus service, number of .. .. 475–476

'Nanjai' land not cultivated with kuruvai crop due to agrarian trouble in Tirumangalam and Mamachanallur areas in Lalgudi taluk, extent of .. .. .. .. .. .. 77–79

Planting of posts and digging of holes in roads, prohibition of .. .. .. .. .. .. .. .. .. .. 479–481

Southern Rice Zone, States comprising the—and purpose of constitution .. .. .. .. .. .. .. .. .. 468–472

Tuticorin Port, visit by the United Kingdom Technical Mission during July 1957 .. .. .. .. .. .. .. 258–259

Manickam, Sri P. G.—

Question *re*—

Elementary schools in Talavadi firka, number of—and students in .. .. .. .. .. .. .. .. .. .. 360–361

Ex-service Personnel Benevolent Fund, amount collected on the Flag Day on 7th December 1957 and purpose of .. .. 482–483

Harijan Village Officers, construction of houses free of cost for .. .. .. .. .. .. .. .. .. .. 5–6

Municipal towns having town-bus service, number of .. 475–476

Slum clearance and Town-planning schemes in Coimbatore district, amount allotted for 1957–58 .. .. .. .. .. 360–361

Slum clearance scheme, allotment for—for 1957–58 .. .. 476–479

Tanneries and centres for production of leather goods, amount allotted to .. .. .. .. .. .. .. .. .. 472–474

Tenements built by Harijans on Government poramboke lands on the sides of Perumpallam odai from Erode town to Marapalayam, number of .. .. .. .. .. .. 91–92

Marimuthu, Sri A. R.—

Question *re*—

Bridge across Agniyar in Sethu road in Pattukkottai taluk, construction of .. .. .. .. .. .. .. .. 4–5

Local Development Works (for which people had paid contribution) not taken up in Tanjore district .. .. .. .. 87–91

Mettur Irrigation Scheme, extent of lands irrigated in Madras State under .. .. .. .. .. .. .. .. .. 6–7

Pudukkottai, formation of a new district of—by bifurcating the present Tiruchirappalli district .. .. .. .. 365–367

Road between Pattukkottai and Vadugudi, formation of .. 4

Nesamony, Sri A.—

Question *re* State Transport bus accident at Parasali .. .. 356–358

**Questions and Answers**—*cont.*

Palanisami, Sri N. K.—

Question *re*—

Block Development Officers in the Community Development areas and National Extension Service areas, reservation of posts for Graduates in Africulture .. .. .. .. .. 80–81

Daily allowance of peons, enhancement of .. .. .. .. 371–372

Foodgrains Enquiry Committee report, Government's views *re*. 247–248

Forest wealth, steps taken to improve — after 1st November 1956 .. .. .. .. .. .. .. .. .. .. 181

Iron and steel allotment for small-scale industries, request to Centre for increase in .. .. .. .. .. .. .. 485–486

Lift irrigation schemes for Kanyakumari district, sanctioning of .. .. .. .. .. .. .. .. .. .. 165

Motor Transport Workers, constitution of a tripartite committee to enquire into the condition of .. .. .. .. 172–173

Rice movement from one State to another within the same food zone .. .. .. .. .. .. .. .. .. 467–468

Workers transferred to State Electricity Board, payment of Provident Fund amounts to .. .. .. .. .. 481

Ramaswamy Pillai, Sri T. S.—

Question *re*—

Basic Education, progress of .. .. .. .. .. .. 367–369

State taxes, incidence *per capita* .. .. .. .. .. 369–370

State Transport bus accident at Parasali .. .. .. .. 356–358

Rasheed, Sri A. A.—

Question *re*—

Factory for manufacture of raw films at Ootacamund, starting of .. .. .. .. .. .. .. .. .. .. 358–359

National Highways in Madras City, repairing of .. .. .. 1–2

Sarathi, Sri M. P.—

Question *re*—

Central Finger-Print Bureau, number of Government servants deputed for training in .. .. .. .. .. .. .. 181

Co-operative Societies for the benefit of Government servants, number of .. .. .. .. .. .. .. .. .. 256

Grants to institutions outside the State, amount of .. .. 364–365

Non-Gazetted Officers receiving a salary of more than Rs. 150 in the Harijan Welfare Department, number of .. .. 6

Railway Police Officers and staff in Madras State as on 1st January 1958, strength of .. .. .. .. .. .. 181–182

Vellore Municipality, misappropriating funds of .. .. .. 2–3

Sathiyavanimuthu, Dr. Srimathi—

Question *re*—

Scheduled Caste students, complaint against the Director of Harijan Welfare regarding ill-treatment of .. .. .. 355

**Questions and Answers**—*cont.*

**Sathiyavanimuthu, Dr. Srimathi**—*cont.*

**Question** *re*—*cont.*

**Slater Hostel and M. C. Rajah Hostel, Madras, number of Arunthathiyar students admitted in** .. .. .. .. .. **483–484**

**Settanatha Karayalar, Sri K.**—

**Question** *re*—

**Handloom Weavers' Co-operative Societies in Shencottah town, application for loan from** .. .. .. .. .. .. **256**

**State Transport bus accident at Parasali** .. .. .. .. **356–358**

**Selvarajan, Sri M. S.**—

**Question** *re*—

**Draining of waste water around Puthantharuvai in Tirunelveli district into an irrigation tank** .. .. .. .. .. .. **7**

**Free midday meals to Harijan pupils in High Schools, subsidy from the Harijan Welfare Fund** .. .. .. .. .. **260–261**

**Looms brought into the co-operative field in 1956–57, percentage of** .. .. .. .. .. .. .. .. **257**

**Midday meals to poor students, number of High Schools providing — and students benefited** .. .. .. .. .. **76–77**

**Subbiah, Sri V.**—

Question *re*—

**Block Development Officers in Community Development areas and National Extension Service areas, reservation of posts for Graduates in Agriculture** .. .. .. .. .. .. .. **80–81**

**Electricity supply to agriculturists for irrigation purposes during daytime** .. .. .. .. .. .. .. .. **261**

**Subramaniam, Sri M. P.**—

**Question** *re*—

**Amount allocated from the Central Road Fund to Madras State and amount spent** .. .. .. .. .. .. .. .. **263**

**New bus routes and extensions of existing routes granted from 1st October 1956 to 30th June 1957, number of** .. **262**

**Wells sunk under Rural Water-supply Scheme and other schemes in Attur taluk (Salem district) during 1955–58, number of** .. .. .. .. .. .. .. .. .. .. **263**

**Thiagaraja Pillai, Sri M. D.**—

**Question** *re*—

**Community radio set assembled by State Broadcasting Department during 1950–57, number of** .. .. .. .. **177–178**

**Radio sets required for panchayat boards, number of** .. .. **178–180**

**Vedarathnam, Sri A.**—

**Question** *re*—

**Basic Education, progress of** .. .. .. .. .. .. **367–369**

**Engineering College in Tanjore district, resolution of Tanjore District Board** *re* **opening of** .. .. .. .. .. **81–83**

**Engineering Colleges to be opened by the Central Government, location of some — in Madras State** .. .. .. .. .. **81–83**

**Industrial Training Institute at Thyagarayanagar, financial aid given by State and Central Governments and industries run.** **165–168**

**Medical College in Tanjore district, opening of a** .. .. **83–84**

PAGES

Q—*cont.*


**Questions and Answers—*cont.***

**Vedarathnam, Sri A.—*cont.***

Question *re—cont.*

Minor Ports in Madras State, names and improvement of .. 169–170
Pamani river, pumping of — water for irrigation purposes .. 474
Panchayat for Ovanur village (Tiruthuraipundi taluk), constitution of .. .. .. .. .. .. .. 2
Primary Health Centre at Vedaranyam, taking over of — by Government .. .. .. .. .. .. .. .. 359
Prohibition offences, penalty for .. .. .. .. .. 170–172
Smallpox, outbreak of — at Vedaranyam taluk .. .. .. 73

Veerappa Kounder, Sri P.—

Question *re*—

Dispensary at Mailam (Tindivanam taluk), opening of a .. 86
Road from Sathamangalam to Kaduvetti (Tindivanam taluk), formation of .. .. .. .. .. .. .. .. 3–4

William, Sri M.—

Question *re* State Transport bus accident at Parasali .. .. 356–358

R

**Radio sets—**

Question *re*—

Number of community — assembled by State Broadcasting Department during 1950–57 .. .. .. .. .. .. 177–178
Number of — required for panchayat boards .. .. .. 178–180

Railway Police—

*See* Police.

Rajathi Kunchithapatham, Srimathi—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. .. 299–302

Ramachandran, Sri K.—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. .. 186
194–197, 241

Ramalinga Padayachi, Sri S.—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. .. 200
202–204

Ramasubbu, Sri K.—

Difficulties of ryots in Tirunelveli district, calling Minister's attention to .. .. .. .. .. .. .. .. .. 487–488

Ramaswami, Sri K. L.—

Demand for Grant *re*—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 27–29
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. 497–499

Ramaswamy Mudaliyar, Sri V. K.—

Bills—

Children (Amendment) Bill, 1956 .. .. .. .. .. 462–463
Indian Stamp (Madras Amendment) Bill, 1956 .. .. .. 436–437
449, 454




PAGES

R—*cont.*


Ramaswamy Mudaliar, Sri V. K.—*cont.*

Demand for Grant *re*—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 23
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 539–542
545
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 227–231

Ramaswamy Pillai, Sri T. S.—

Demand for Grant *re*—

Harijan uplift .. .. .. .. .. .. .. .. 312–313
331–334
Labour including Factories .. .. .. .. .. .. 410–413

Ramasami Thevar, Sri S.—

Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 132–133

Rasheed, Sri A. A.—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. 200–202

Reception Homes, Government—

*See* Papers laid on the table of the House.

Rice—

*See* Food.

Roads—

Question *re*—

Amount allocated from the Central Road Fund to Madras State and amount spent .. .. .. .. .. .. .. 263
National Highways in Madras City, repairing of .. .. .. 1–2
Prohibition of planting of posts and digging of holes on .. 479–481
Road between Pattukkottai and Vadagudi, formation of .. .. 4
Road from Sathamangalam to Kaduvetti (Tindivanam taluk), formation of .. .. .. .. .. .. .. .. 3–4

Rulings and observations of the Chair—

Bill—

A Bill introduced can be withdrawn at any stage .. .. .. 267

Debate—

A Member should not make a charge against another Member in the House .. .. .. .. .. .. .. .. 313
It is not proper to refer to particular individuals during a debate. 103–104
385
Members should not pass adverse remarks against the judgment of the Supreme Court as being "absurd" or "perverse" .. 402
There is nothing wrong in quoting an extract from a newspaper .. 104
When the Minister for Home referred to the action of the Editor of a newspaper and called it blackmailing, the Speaker observed that normally it was not desirable to refer to newspapers by name but that since reference had been made to a newspaper by name during the debate, the Minister had to defend himself, but he suggested that in doing so words like "blackmailing" need not be used .. .. .. .. .. .. .. 150–151

PAGES

R—*cont.*

**Rulings and observations of the Chair**—*cont.*

Decorum—

A Member cannot quote anything which decries a Member of the House. He cannot directly do it; he cannot also do it indirectly by quoting an extract from a newspaper which disgraces him .. .. .. .. .. .. .. 106

*Catching the Speaker's eye*—Whenever a Member wants to put a supplementary question, he should raise his hand and not rise in his place .. .. .. .. .. .. .. 93

The expression 'you' (நீங்கள்) refers to the Chair and should not be used when the Chair is not referred to .. .. .. 281

*Time-limit for speeches*—When the Chair rings the bell, Members must obey the Chair. When the Chair rules that the time allotted to a Member is over, the Member must accept it. To question the rulings of the Chair is objectionable .. .. 489–490

Demand for Grants—

Cut Motions—Members could refer to a cut motion given notice of but not actually moved inasmuch as it would have been circulated to them .. .. .. .. .. .. .. 508

The Opposition Parties together might agree to the moving of any one cut motion on a Demand for Grant and inform the Speaker about it .. .. .. .. .. .. .. 52

Ministers need not make a speech while moving a Demand for Grant. A copy of it will be given to the Members about 45 minutes before the Demand is moved .. .. .. 52

On the Demand for Grant relating to Labour including Factories, the discussion should relate to Labour and not Government employees .. .. .. .. .. .. .. .. 378

Objectionable expression—

காலித்தனம் (Vagabondism)—Use of the expression deprecated. 133

Questions—

Admission of—The Speaker has got full powers to amend a question and admit it in the form he chooses subject to the conditions laid down in rules 30 and 31 of the Assembly Rules. It would not be correct on the part of any Member to raise any point about questions admitted in an amended form in the open House, but such matters might be discussed with the Speaker in his chamber .. .. .. .. .. .. 182–183

Members should not express their opinions during question-time. 78, 255

Members should not put supplementary questions containing insinuations .. .. .. .. .. .. .. 255, 473

**Ryots in Tirunelveli district**—

Difficulties of —, Minister's attention called to .. .. .. 487–488

S

**Salem Magnesite Syndicate, Salem**—

*See* Industrial disputes.

**Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1953**—

*See* Bills.

**Sales tax**—

*See* Papers laid on the table of the House.



PAGES

S—*cont.*

**Sami Sahajananda, Sri**—

Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 292–293

**Sankaran, Sri V.**—

Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 445–447

**Santhanam, Sri P. S.**—

Demand for Grant *re*—

Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. 47–49

Harijan Uplift .. .. .. .. .. .. .. 295–297

**Sarathi, Sri M. P.**—

Demand for Grant *re* Labour including Factories .. .. .. 386–387

**Sasivarna Thevar, Sri T. L.**—

Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 107–110

**Sathiyavanimuthu, Dr. Srimathi**—

Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 118–121, 157

**Sattanatha Karayalar, Sri K.**—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. 186, 200, 215–218, 242

**Scheduled Caste students**—

Question *re* complaint against the Director of Harijan Welfare regarding ill-treatment of — .. .. .. .. .. .. 355

**Scholarships**—

Question *re* amount spent on scholarships to Harijan students in 1956–57 and in Kanyakumari district in 1957–58 .. .. .. 266

**Schools**—

Question *re*—

Elementary schools in Talavadi firka, number of — and students in .. .. .. .. .. .. .. .. .. 360–361

Midday meals to Harijan pupils in high schools, subsidy from the Harijan Welfare Fund .. .. .. .. .. .. 260–261

Midday meals to poor students, number of high schools providing — and students benefited .. .. .. .. .. 76–77

**Selvaraj, Sri M.**—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. 204–206

**Selvarajan, Sri M. S.**—

Eviction of salt workers from the Government poramboke lands in Tiruchendur taluk, calling Minister's attention to .. .. .. 372–374

**Senapathi Gounder, Sri A.**—

Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. 208–210

**Slum Clearance Schemes**—

Question *re*—

Allotment for — for 1957–58 .. .. .. .. .. .. 476–479

Amount allotted for 1957–58 for — in Coimbatore district .. 360–361

PAGES

S—*cont.*


**Smallpox—**
Question *re* outbreak of — in Vedaranyam taluk .. .. .. 73

**Somasundaram, Sri M. K.—**
Demand for Grant *re*—
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 323–325
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 192–194, 216

**Soundaram Ramachandran, Dr. Srimathi T. S.—**
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation .. 507–509

**Southern Rice Zone—**
*See* Food.

**Speaker, Mr.—**
Announcement *re*—
Business Advisory Committees recommendation *re* order of Demands for Grants for discussion .. .. .. .. .. 8
Message from the Council *re*—
Animal Preservation Bill, 1958 .. .. .. .. .. 266
Appropriation (Vote on Account) Bill, 1958 .. .. .. 266
Co-operative Societies (Amendment) Bill, 1958 .. .. .. 183
Entertainments Tax (Amendment) Bill, 1958 .. .. .. 374
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 .. .. .. .. .. 183
General Sales Tax (Emergency Provisions) Bill, 1958 .. 266
General Sales Tax (Emergency Provisions) Bill, 1958 .. ..
Prohibition (Amendment) Bill, 1958 .. .. .. .. .. 374
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 .. 374
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. .. 22, 23, 24, 51, 52
Harijan uplift .. .. .. .. .. .. .. .. .. 267, 268, 276, 281, 311, 313, 314, 320, 330, 342, 348, 349, 350
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 489, 525
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 186, 210, 216, 222
Police .. .. .. .. .. .. .. .. .. .. 94, 95, 97, 104–107, 109, 110, 130, 133, 145, 146, 150, 151, 156–158
Estimates Committee, election of Members to .. .. .. .. 376
House Committee, election of Members to .. .. .. .. 375
Privileges Committee, election of Members to .. .. .. 374–375
Public Accounts Committee, election of Members to .. .. .. 376
Questions, admissibility of .. .. .. .. .. .. 182–183




PAGES

S—*cont.*


**Srinivasa Iyer, Sri R.—**
Bill—Indian Stamp (Madras Amendment) Bill, 1958 .. .. 433–436, 452, 455–456
Demand for Grant *re* Police .. .. .. .. .. .. 106, 114–118

**Srinivasa Padayachi, Sri P. R.—**
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. .. 56–57
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 532

**Stamp-vendors—**
Question *re* prevention of appointment of village headmen as — .. 369

**Subbiah, Sri V.—**
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. .. 54–56
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 532–533

**Subbiah Mudaliar, Sri A. R.—**
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation. 527–529

**Subramaniam, Sri R.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. .. 273–276

**Subramaniam, the Hon. Sri C.—**
Bill—Cultivating Tenants' Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 .. .. .. .. .. .. .. 267
Business Advisory Committee's recommendations *re* order of Demands for Grants for discussion .. .. .. .. .. 8
Demand for Grant *re*—
Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. .. .. .. .. .. 9–22, 24, 63–70
Medical, Public Health and Capital Outlay on Public Health .. 183, 194
Police .. .. .. .. .. .. .. .. .. .. .. 104, 105
Demands for Grants for further expenditure in the year 1957–58, presentation of .. .. .. .. .. .. .. .. .. 183–184
Estimates Committee, election of fourteen Members to .. .. 375
House Committee, election of eleven Members to .. .. .. 375
Privileges Committee, election of fifteen Members to .. .. .. 374
Public Accounts Committee, election of fourteen Members to .. 376


## T


**Tanneries—**
Question *re* amount allotted to — and centres for production of leather goods .. .. .. .. .. .. .. .. .. 472–474

**Taxes—**
Question *re* incidence of State — *per capita* .. .. .. .. 369–370

**Textile mills in Coimbatore—**
*See* Industrial disputes.

PAGES

T—*cont.*

**Thiagarajan, Sri N. R.—**
Demand for Grant *re* Medical, Public Health and Capital Outlay on Public Health .. .. .. .. .. .. .. 198–200

**Town-Planning Schemes—**
Question *re* amount allotted for 1957–58 for — in Coimbatore district .. .. .. .. .. .. .. .. .. 360–361

**Transport—**
Question *re*—
Buses from Radhapuram of Villupuram taluk to Kanchanur, representation from villagers for plying of more .. .. 251
Express bus service between Tiruchirappalli and Madras, introduction of .. .. .. .. .. .. .. .. 475
Motor transport workers, constitution of a tripartite committee to enquire into the condition of .. .. .. .. .. 172–173
Motor transport workers, legislation to regulate wages and working conditions of .. .. .. .. .. .. .. 172–173
Municipal towns having town-bus service, number of .. .. 475–476
New bus routes and extensions of existing routes granted from 1st October 1956 to 30th June 1957, number of .. .. .. 262

**Transport Department—**
*See* Papers laid on the table of the House.

U

**United Kingdom Technical Mission—**
*See* Ports.

**Untouchability (Offences) Act, 1955—**
Question *re*—
Appointment of officers at the district, taluk and village levels for enforcement of .. .. .. .. .. .. .. 265
Implementation of .. .. .. .. .. .. .. .. 264–265
Number of cases of offences committed during 1955–56 under .. 264
Steps taken to give wide publicity to .. .. .. .. 265

V

**Vedamanickam, Sri P.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 302–305

**Vedarathnam, Sri A.—**
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation .. 511

**Vellore Municipality—**
Question *re* misappropriation of funds of— .. .. .. .. 7–8

**Veluchami, Sri T.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 288–290

**Venkataraman, the Hon. Sri R.—**
Demand for Grant *re* Labour including Factories .. .. .. 377, 378, 424–431
Dispute in textile mills in Coimbatore regarding bonus for 1956, statement *re* .. .. .. .. .. .. .. .. 94



V—*cont.*

PAGES

**Village Officer(s)—**
Question *re*—
Houses for the Harijan Village officers, construction of — free of cost .. .. .. .. .. .. .. .. 5–6
Nomination of — in North Arcot as a counting agent by a candidate standing for election to the House of the People .. 85

**Vinayakam, Sri K.—**
Demand for Grant *re*— .. 284–288
Harijan Uplift 297
Police .. .. .. .. .. 109

**Viswanathan, Sri K. R.—**
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 290–292

W

**Wells—**
Question *re* number of — sunk under Rural Water-supply Scheme and other schemes in Attur taluk (Salem district) during 1955–58 .. 263

61236.